215227
to
215238

அரும்பதர்மம்

வை

4 14

23 7-4-1938

A.O

215227

215227

187

Registered No. M. 2913

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்.

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
தாதாசாரியர் கோபாலதேசிகாசாரியர்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
29 APR 1938
MADRAS

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 / 23 | கும்பகோணம் கலி5040 ஈச்வர-ஸூ பங்குனி-மீ 25உ 1938 ஸூ ஏப்ரல்-மீ 7உ | வ 14

## ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0.
தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

## திருவாங்கூரின் பிற்போக்கு!

நரிமனுக்குத் தடை.

திருவாங்கூர் ஸமஸ்தானத்தில் காங்கிரஸுக்கு எதிர்ப்பு அதிகமாயிருப்பது வெளிப்படை. அந்த ஸமஸ்தான அதிகாரிகள் காங்கிரஸ் வேலைகளை அங்கு தடுக்க ஏற்பட்டிருக்கிறார்கள்.

ஸ்ரீமான் நரிமன் என்ற காங்கிரஸ்காரர்கள் திருவாங்கூரில் பொதுக்கூட்டத்தில் பேசக்கூடாதென்று தடைசெய்யப்பட்டிருக்கிறது.

ராஜீபக்கைதியின் கேஸுக்காக ஸ்ரீமான் நரிமன் திருவாங்கூர் கோர்ட்டுகளில் ஆஜராகக்கூடாதென்றும் தடுக்கப்பட்டு விட்டது. நரிமன் ராஜீயக்குற்றத்திற்காக தண்டனை அடைந்தவரென்பதே இதற்குக்காரணமாம்.

## சட்ட சபைத்தலைவருக்குத் தடை.

## ஐரோப்பா பிரயாணம் நின்றது.

காரியக்கமிட்டியின் ஆக்ஞை.

சென்னை சட்ட ஸபைத்தலைவரான கனம் புலுசு ஸாம்பமூர்த்தி, சட்டஸபை வேலைகளைக் கற்றுவர ஐரோப்பாவிற்குப்போக வேண்டுமென்ற தீர்மானத்தை கனம் பிரதம மந்திரி வெகு கஷ்டப்பட்டு நிறைவேற்றி வைத்தார்.

ஆனால் கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் காரியக்கமிட்டியார், கனம் ஸாம்பமூர்த்தி ஐரோப்பாசெல்லக்கூடாதென்று உத்திரவு செய்து ராஜாஜியின் காரியத்தைக்கவிழ்த்து விட்டார்கள். பிரயாணம் நின்று போய் விட்டது.

## காரியக்கமிட்டிக் கூட்டம்.

கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் பல முக்கிய விஷயங்கள் தீர்மானிக்கப்பட்டன. வங்காளத்திலும், அஸ்ஸாமிலும் இதரக் கக்ஷிகளுடன் சேர்ந்து, காங்கிரஸ் மந்திரி ஸபை அமைக்க அநுமதி கொடுக்கப்பட்டது.

மத்ய மாகாண மந்திரி, தர்மாக்கைதியை விடுதலை செய்த விஷயத்தில் மந்திரியின் செய்கை மன்னிக்கப்பட்டு விட்டது.

காந்திஜி மறுபடியும் கல்கத்தா வந்து பந்தோபஸ்துக்கைதிகளின் விடுதலை விஷயத்தில் கவலை செலுத்தி வருகிறார்.

## ஸுப்பராயன் மனைவி பிரதிநிதி.

மதுரை — திருநெல்வேலி ஜில்லாக்களின் தொகுதியில் ஜார்ஜ் ஜோஸப் காலமானதால் காலியான இந்தியா சட்டஸபை மெம்பர் பதவிக்கு டாக்டர் ஸுப்பராயன் மனைவியான ஸ்ரீமதி ராதாபாய் என்பவளை பிரதிநிதியாக காங்கிரஸ் நியமித்திருக்கிறது. அவள் போட்டியின்றி ஜயித்துவிட்டாள்

## காவிரியில் ஜலம்.

ஏப்ரல் 17உ முதல் வெண்ணாற்றில் 6 தினங்களும், 24உ முதல் 6 தினங்கள் வரையில் காவிரிநதியிலும் கோடைகாலத்தை உத்தேசித்து ஜலம்விட நிச்சயித்திருப்பதாக இஞ்சினீர் இலாகா அதிகாரி வெளியிட்டிருக்கிறார்.

## சென்னை வாலிகளுக்கு ராணுவப் பயிற்சி.

கார்ப்பரேஷன் தீர்மானம்.

29உ நடந்த சென்னை கார்ப்பரேஷன் கூட்டத்தில், சென்னை வாலிகளில் வயது வந்தவர்களும் ஆரோக்கியமுள்ளவர்களுமான பிரஜைகளுக்கு குறைந்தது மூன்று மாதமாவது ராணுவப்பயிற்சியளிக்க வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேறியது.

விஷப்புகை விபத்தைத்தடுப்பதற்காக முகமூடியணியும் பயிற்சியும் கொடுக்கப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

## 5 ஹிந்து போலீஸாரின் கதி

பசுக்கொலையைத்தடுத்ததாகக்குற்றம்.

வங்காளத்தில் பக்ரீத் பண்டிகையின் போது மஹம்மதிர்கள் பசுக்கொலை செய்வதற்காகக்கொண்டுபோன பசுக்களை பலாத்காரமாக பிடுங்கி விடுவித்தகுற்றத்திற்காக ஐந்து ஹிந்து கான்ஸ்டேபிள்களை அந்த வேலையிலிருந்து தள்ளிவிட்டார்களாம்!!

## "பிரம்மஸ்ரீ" பட்டம் வேண்டுமாம்.

மலையாளத்திலுள்ள கம்மாளத் தொழிலாளர்கள் தங்கள் பெயருக்குமுன்பு 'பிரம்மஸ்ரீ' என்ற பட்டத்தைச் சேர்க்கும்படி சர்க்கார் இலாகாக்களுக்கு உத்திரவிடவேண்டுமென்று சென்னை மந்திரி கனம் முனிஸாமிப் பிள்ளையிடம் முறையிட்டுக்கொண்டார்களாம். நீங்கள் விச்வ கர்மாக்களானால் ஏன் பூணூல் போடவில்லையென்று மந்திரி வினவினாராம். இப்புலைத்தானுக்குப் பயந்து முன்னோர்கள் பூணூல் போடுவதை நிறுத்திவிட்டதாக இவர்கள் பதில் கூறினார்கள்.

## கல்வி முறையை மாற்ற யோஜனை.

சென்னை ஸர்க்கார் முயற்சி.

சென்னை கவர்ன்மெண்டார் இந்த மாகாணக் கல்வி முறையில் மாறுதல் செய்ய ஒரு யோஜனைக்கூட்டம் நடத்தினார்கள். 4-வது பாரம்வரையில் படித்தமாணவர்களை கம்பெனிகளில் குமாஸ்தா வேலைக்குப் போகும்படி பயிற்சி செய்விக்கவும், மேல் படிப்புக்குப் போக விரும்புவோரை அந்த வழியில் தயாரிக்கவும் சில திட்டங்கள் அக்கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டனவாம். இக் கூட்டத்திற்கு, பிரபல கம்பெனிக்காரர்களும், வியாபார நிபுணர்களும் வந்திருந்தனராம்.

முக்கிய கவனிப்பு.
(3-வருஷத்திற்கு உத்திரவாதமுள்ளது)
அசல் தங்க நகைகளைப்போன்ற "கன்னூஸ் ப்ளேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்கவும்.
தயாரிப்பவர்:— என். கண்ணுசாமி பத்தர், பெரியதெரு, கும்பகோணம்.

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

## புருஷார்த்தங்கள்.

[N. ஸாம்பசிவ அய்யர் B. A. B. L.]

ஸ்வப்னவஸ்தையில் தோற்றும்படியான வஸ்துக்கள் ஜாக்ரதவஸ்தையில் எவ்விதம் இல்லாததாக நமக்குத் தெரியவருகிறதோ அவ்விதமே ஜாக்ரத வஸ்தையில் நமக்கு சத்யமாகத் தோற்றும்படியான இந்த பிரபஞ்சமானது ஞானோதயம் ஏற்படும் காலத்தில் இல்லாததாகத் தோற்றுமென்று அனுபவித்த பெரியோர்கள் நமக்குச் சொல்லியிருக்கிறார்கள். சாதாரணமாக ஞானோதயம் ஏற்படாமலிருக்கும் காலத்திலேயே கொஞ்சம் விசாரித்துத் தெரிந்துகொண்டவர்கள் இந்த பிரபஞ்சத்தையும் அதில் நடக்கும் காரியங்களையும் ஊன்றி கவனித்தால் அது எவ்வளவு சாரமற்றதென்பதை உணரலாம். நமக்குத் தெரிந்த சிநேகிதர்கள் சில வேஷங்களைப் போட்டுக்கொண்டு ஓர் நாடகம் நடத்தப் போகிறார்கள் என்று நன்கு தெரிந்தே நாடகத்திற்குப்போகிறோம். அவ்விதம் அங்கு போன பிறகு அந்த விஷயங்களையெல்லாம் மறந்து நடிக்கும் அவர்களுடைய சாமர்த்யத்தினால் வாஸ்தவமாக எந்த நாடகத்தை அவர்கள் நடிக்கிறார்களோ அந்த விஷயங்கள் வாஸ்தவமாக நடப்பதாகவே நாம் நினைக்கிறோம். சந்தோஷமான காரியங்கள் நடிக்கப்படும் காலத்தில் நாமும் சந்தோஷப்படுகிறோம். துக்கமான காரியங்கள் நடிக்கப்படும் காலங்களில் நாமும் துக்கப்படுகிறோம். கொஞ்சம் நாம்புத்தளர்ச்சி யடைந்தவர்கள் தேம்பித்தேம்பி அழுவதைக்கூடப் பார்த்திருக்கிறோம். எவ்விதம்நமக்கு அங்கு நடிப்பவர்கள் வேஷதாரிகளென்றும், எந்த நாடகத்தை அவர்கள் நடிக்கிறார்களோ அது வாஸ்தவமல்லவென்றும் நமக்கு வியக்தமாகத் தெரிந்தாலும்கூட அந்தசமயம் நம்முடைய ஸ்வரூபத்தை மறந்து நாம் சில சேஷ்டைகளை செய்கிறோமே அவ்விதமே வாஸ்தவமாக நம்முடைய ஸ்வரூபம் இன்னதென்று நமக்கு வியக்தமாகத் தெரிவதற்கு வேண்டிய சாதனங்கள் மிகுதியாக இருந்தபோதிலும் இந்த பிரபஞ்சத்தில் பலவிதமான மனிதர்களுடன் நாம் சம்பந்தப்பட்டுப் பழகும் காலத்தில் அவர்கள் இந்த உலகமாகிற நாடகமேடையில் அவரவர்களுடைய கர்மாவிற்குத் தகுந்தபடி வேஷங்களைப் போட்டுக்கொண்டு அவர்களுடைய ஜீவ்யமாகிற நாடகத்தை நடத்தும்போது அதை நாம் வாஸ்தவமென்று எண்ணி அவர்கள் ஏதோ நம்முடன் பெரிய விஷயத்தை சாதிப்பதற்காக ஏற்பட்டவர்கள் போல நினைத்து பிரதிதினமும் நாம் ஏமாந்துபோகிறோமென்பதில் ஏதாவது சந்தேகம் உண்டோ.

ஒருவன் பிறக்கிறான். வியாபகம் அடைந்தவுடன் தன்னுடையதல்லாதவைகளை யெல்லாம் தன்னுடையதாகவே நினைத்து ஏதோ தான் இல்லாவிட்டால் அவைகள் இருக்க முடியாதென்றும் தான் தான் தன்னுடைய உலகத்தை கீழே விழாமல் காப்பாற்றுவதாகவும் பெண் பிள்ளைகளையும் வீடு முதலிய சொத்துக்களையும் தன்னுடையதென்று சொல்லித்திரிகிறான். பிராரப்தத்தால்ஏற்பட்ட சரீரம் கீழேமரித்து விழுந்தவுடன் உடனே இவைகளைக்கொண்டு சாம்பலாகச்செய்வதைத் தவிர தன்னுடையதென்று சொல்லி அவைகளுக்காக பட்டபாடெல்லாம் பட்ட வஸ்துக்கள் எல்லாம் அப்படியே இருக்க, இவனை மாத்திரம் காண்பதில்லை. தேகத்தை விட்டு பிராண வாயு கிளம்பினவுடன் தன்னுடைய சகல சௌக்கியங்களுக்கும் ஆஸ்பதமாகக் கருதி வந்த தன் மனைவியே அந்த தேகத்தை பார்த்து நடுக்கமுற்று இரவில் அந்த மரித்த தேகத்துடன் தனியாகயிருக்க பயப்படுகிறாள். இந்தசின்னவிஷயத்தைமாத்திரம் நாம் கவனித்தால் நம்முடையதென்று பல விஷயங்களைக்கொண்டாடுவது எவ்வளவு மதியீனமென்று நன்கு விளங்குகிறது. மரித்த பிறகு அவ்விதமான கதி ஏற்படுகிறதென்பது ஒரு பக்கம் இருக்கட்டும். உயிருள்ள காலத்திலேயே இனி உயிருடன் இருக்கப்போவதில்லை யென்று ஏற்பட்டவுடனேயே அவரவர்கள் தங்கள் தங்கள் சௌகர்யங்களைத் தேடுவதுதான் முக்கியமாகக் காணப்படுகிறதே தவிர மரிப்பவனைப்பற்றி அவ்வளவு கவலை ஒருவருக்கும் இருப்பதாகத் தெரியவில்லை. அதிலும் மரிக்கும் அவஸ்தையில் இருப்பவன் கொஞ்சம் அசௌக்கியத்தை அடைந்து பிறருடைய உதவியையும் சிசுருஷையையும் அபேக்ஷிக்கும் பக்ஷத்தில் அவனால் ஏராளமான சௌகர்யங்களை அடைந்தவர்கள் கூட அவன் சீக்கிரத்தில் மரணத்தை யடைந்து விட்டால் நலமாகயிருக்குமென்று நினைப்பதையும் காண்கிறோம். இந்நிலையில் இனி நமக்கு அவனால் எவ்வித சௌகர்யமும் ஏற்படக்கூடியதில்லை யென்று தீர்மானமானவுடன் மனைவி முதல் சுற்றத்தார்கள் வரையில்வெகு கவலையுடன் தேகஸ்திதியைப்பற்றி வைத்யர்களை ப்ரச்னம் பண்ணும்படியான விந்தையையும் இன்னும் கொஞ்ச நாட்கள் தாங்குமென்று அவர்கள் பதிலளித்தால் முகத்தில் ஏற்படும்படியான துக்கக் குறியையும் கவனித்து ஆலோசனை செய்யும் பக்ஷத்தில் தீவிரமான வைராக்யத்தையடைய ஓர் பெரிய ஹேதுவாகும். ஸ்ரீசங்கர பகவத் பாதாள் "பவஸாகே தோஷானுஸந்தியதாம்" என்று சொன்னபடி அனுபவத்தில் ஏற்படும்படியான ஒவ்வொரு விஷயங்களையும் பார்த்துப் பார்த்து இந்த ஸம்சாரத்தில் உண்மையான சௌக்யம் லேசமும் இல்லையென்று நாம் உணர வேண்டும். தன்னுடைய கௌரவத்திற்கு ஏதாவதுகொஞ்சம் குறைவு ஏற்படும் படியான வார்த்தைகளைக் கேட்டவுடன் அதிகமான ஆத்திரத்தையடையும்படியான மனிதர்கள் தங்களால் அத்யந்த பிரியத்துடனும் அவர்களுடைய சுக துக்கங்களை தங்களுடையதாகவே பாவித்து அனுபவிக்கப்பட்ட நெருங்கினபந்துக்களால் மரண காலத்தில் தங்களுக்கு ஏற்படக்கூடிய மரியாதைகளை அனுபவத்தில் உணர பல முறைகளில் அவகாசம் ஏற்பட்டும் தெரியாதது போலவே ஜீவ்யத்தை நடத்திக்கொண்டு போவதைப் பார்த்தால் மாயையினுடைய பலம் எவ்வளவு திருடமானதென்பது தான் வியக்தமாக ஏற்படுகிறது.

ஆகையால்தான் இந்த விஷயங்களை விசாரிக்க வேண்டும். விசாரித்த விஷயங்களை நன்கு உணரவேண்டும். உணர்ந்த விஷயங்களை அனுபவத்திற்குக் கொண்டுவரவேண்டும் என்று சொல்லப்படுகிறது. ஒவ்வொருவருடைய ஜீவ்யத்திலும் முக்யமாக ஓர் லக்ஷ்யம் அவச்யமாகயிருக்கவேண்டும். ஆர்யாவர்த்தத்தில் ஜனித்த நமக்கு அந்த லக்ஷ்யம் எப்படிப்பட்டதாகஇருக்கவேண்டியதென்று ஒருவரும் சொல்ல வேண்டியதில்லை. விடுதலை அல்லதுமோக்ஷம்என்பதே நம்முடைய லக்ஷ்யம். எந்த காரணத்தைக் கொண்டோ நமக்கு இந்த பூமியில் ஜனனம் ஏற்பட்டிருப்பதாக வைத்துக்கொள்வோம். மேலே சொன்னபடி இந்த பூமியில் ஜன்மா ஏற்படுவதால் சுகலேசமும் இல்லை யென்பது அனுபவத்தில் தெரிந்த விஷயம். சப்தப்ரமாணத்தைக்கொண்டு நம்முடைய ஸ்வரூபமோ சுத்தானந்த ஸ்வரூபமென்று தெரிகிறது. ஆகையால் இங்கு பூமியில் நாம் இருக்கும் வரையில் கர்மபலனாக நமக்கு ஏற்படக்கூடிய அனுபவங்கள் எப்படியிருந்த போதிலும் நம்முடைய ஜீவ்யத்தை நம்முடைய புத்தியினால் எவ்விதம் நடத்த வேண்டும். நாம் விடுதலை அடைய வேண்டியதற்குச் செய்யவேண்டியவைகளென்ன? இந்த இரண்டு கேள்விகளுக்கும் பதில் கண்டு பிடிப்பதே புருஷார்த்தங்களுடையதத்வங்களை அறிவதாகும் அதை அடுத்த ஸஞ்சிகையில் கவனிப்போம்.

### ஆரண்யேச்வரம்.
(கீழத்திருக்காட்டுப்பள்ளி.)
லக்ஷார்ச்சனை பூர்த்தி.

திருவெண்காட்டிற்கு மேல்புறம் மிகவும் ஸமீபமாயுள்ள இத்திவ்ய க்ஷேத்திரத்தின்கண் திருக்கோயில் கொண்டு வீற்றிருக்கும் ஸ்ரீ ஆரண்ய ஸுந்தரேச்வர ஸ்வாமி ஸமேத ஸ்ரீ அகிலாண்டேச்வரி அம்பிகைக்குச் சென்ற பல வருஷங்களாக வழக்கமாக நடந்து வருவது போல இவ்வாண்டிலும் ஸ்ரீமஹா சிவராத்திரி புண்யகாலந்தொடங்கி நடைபெற்றுவந்த லக்ஷார்ச்சனை வைபவமானது நாளது ஈசுவர ஞு பங்குனி மீ 12உ வெள்ளிக்கிழமை தினம் நன்கு பூர்த்தியாயிற்று.

மேற்படி வைபவத்திற்காக பல அன்பர்கள் வேண்டுகோளின்பேரில் வழக்கம் போலவே இவ்வருஷமும் இலந்துறை "ஸமரஸ ருடீரம்" ப்ரம்மஸ்ரீ சிவாசார்ய கங்காஜடேச சர்மா அவர்கள் விஜயம் செய்து ஸ்ரீ ஆரண்ய சுந்தரேச்வர ஸ்வாமிக்கு விபூதி அபிஷேகமும், ஸ்ரீபஞ்சாக்ஷர ஸஹஸ்ரநாமார்ச்சனையும், ஸ்ரீ அகிலாண்டேச்வரி அம்பிகைக்கு சந்தனக் காப்பு திவ்யாலங்காரமும், அர்ச்சனை முதலியவைகளையும் மிகவும் சிறப்பாக நடத்தி நிறைவேற்றி வைத்தது அனைவராலும் போற்றத்தக்கதே.

பிறகு தர்சனத்திற்காக வந்திருந்த ப்ராம்மணர் முதலிய ஸமஸ்தமானவர்களுக்கும் பல சித்ரான்னங்கள் முதலிய திவ்ய ப்ஸாதங்களின் விநியோகங்களும் நன்கு நடைபெற்றன.

'ஸேவார்த்தி'

### பம்பாய் ஆலயப்பிரவேச மசோதா.
வைஸ்ராய்க்கு ஆக்ஷேபத் தந்தி.

பம்பாய் சட்டஸபையில் நிறைவேறியுள்ள ஆலயப்பிரவேச மசோதாவுக்கு அநுமதி கொடுக்கக்கூடாதென்றும், பிரபல வியாபாரிகளும் வக்கீல்களும், வித்வான்களும், வேறு பலரும் வைஸ்ராய்க்குத் தந்திமூலம் அறிவித்திருக்கிறார்கள்.

### மாகாணப் பிரிவினை.
சென்னையில் அங்கீகாரம்.

சென்னை சட்ட ஸபைகளில் பாஷா வாரியாக மாகாணங்களைப்பிரிக்க வேண்டுமென்றதீர்மானம் மந்திரிகளின் ஆதரவுடன் நிறைவேறிவிட்டது. இந்த சிபார்சு இந்தியா மந்திரிக்கு அனுப்பப்பட்டு சீக்கிரமாக நடவடிக்கை எடுக்கும்படி கேட்கப்படுமாம்.

### காய கல்ப சிகித்ஸை.

சென்னையில் சில பிரபல வைத்யர்கள் சேர்ந்து காயகல்பமுறையை அபிவிருத்தி செய்து அநுஷ்டானத்திற்குக் கொண்டு வர ஒரு கமிட்டியை ஏற்படுத்தியுள்ளார்கள்.

### ஆம்பூர் ஹிந்து முஸ்லீம் கலஹம்.
காங்கிரஸ் கமிட்டித்தலைவர் கைதி.

ஸமீபத்தில் ஆம்பூரில் நடந்த ஹிந்து முஸ்லீம் கலஹ ஸம்பந்தமாக அவ்வூர் காங்கிரஸ் கமிட்டித்தலைவர் கைதி செய்யப்பட்டிருக்கிறார். இன்னும் சிலர் செய்யப்படுவார்களாம். ஏன்?



## வாரக்குறிப்புகள்.

(வே. ஸொ. சர்மா.)

ஸர்க்காருக்கென்ன அக்கரை? இந்திய ஸர்க்கார் பிரதிநிதியாக இருந்து ஸர்க்கார் எனும் அரசாங்க மெம்பர் தாஸ் திருத்தத்தில் மிகப்பிடிவாதம் செய்து நிறைவேற்றினார்! இப்படி இவர் நாளில் நல்லதொன்று செய்ய முயலுவாரா? முடியுமா?

தோற்றாலும் வீரர் வீரரே! ஸ்ரீயுத பஜோரியா, கஸ்னவி முதலிய தீரர் கொடிய சத்துருக்களுடன் போர் புரிந்ததை எதிரிகளே போற்றினால் நாமென்ன சொல்வது?

அற்பத்தனமா? வழக்கமா? சாரதாச்சட்டத்திருத்தத்தை எதிர்க்க சில அங்கத்தினர் லஞ்சம் வாங்கியதாக சிலர் பேசியது மிகத் தவறு!

பலர் விரும்பாததால் பிரிடிஷார் போவரா? ஸ்வாத பாஷை அபிமானத்தை விட்ட சட்ட சபை அங்கத்தினர் ஸங்க்யை அதிகமென்று ஓர் அதர்ம சட்டம் செய்யலாமா? என்று கேட்டார் ஒருவர்.

வேஷதாரிகள்! ஆனே எனும் அங்கத்தினரும் ஏனையோரும் சாரதாச்சட்ட விஷயமாக பொது ஜன அபிப்ராயத்தைத் திரட்டுங்களென்றனர். வாய் கிழிய ஜன நாயகப் பேச்சு! அநுஷ்டானம் ஹிட்லர் செயல்!!

செலவு உங்களுடையதே! கல்கத்தா நகரஸபை நீந்தல் பந்தயத்தில் வெற்றி பெற்றவனுக்கு தங்கப்பொத்தான் தந்தது. அரசாங்கம் இந்த அக்ரமச்செயலுக்கு பொது பணம் கூடாது! அங்கத்தினரே ஏற்றுக்கொள்க என்றது. நமது மந்திரி அப்படிச்செய்தால் பலர் உபசாரம் ஒழியும்!!

பொருப்பில்லாமை!! பாம்பேயில் ருத்ரயக்ஞம் ஒன்று நடந்ததென்று ஓர் பத்திரிகை பிரசுரிக்கிறது! இது என்ன? எவருக்கேனும் விளங்குகிறதா? பத்ராசிரியரேனுமறிவாரா? அறிந்தாலதை விளக்குவாரா?

காய கல்ப மோஹம்! ஸ்ரீமாளவ்யா காய கல்பத்தால் சிறுவரானார். நம் மாகாணம் சப்பையா? ஓர் கூட்டம் கூடிற்று! ஓர் கமிட்டி ஏற்படுத்தியது?

பெயரை மாற்றினால் போதுமா? வியபிசாரிகளை மீட்டு கிருஸ்தவர் சாலைக்கு அனுப்பு என்றுசட்டம் நிறைவேற்றிற்று. இந்தக்களைப் போன்ற கற்புக்கு அங்கு இடமுண்டா? கிருஸ்துவாரகாமலிருக்கவே பஞ்சமரை மேலே தூக்குகின்றனர்? எனிதை கவனிக்கவில்லை?

ஜனநாயகம் பயனில்லை? என நிரூபிக்க காங்கிரஸ் மந்திரிகள் செயலே போதும்! நாகபுரியில், அலகாபாத்தில், லக்ஷ்மணபுரியில் மற்றும் பலஇடங்களில் நடக்கும்அடிதடி,மேதாவிகள் ஆக்ஷி சிறந்ததென காண்பிக்கிறது!

இணக்கமா? மயக்கமா! பெண் மக்களுக்கிணங்கி தேவதாசிகளையும் வியபசார சட்டத்தில் சேர்த்து விட்டதாக ஓர் மந்திரி பெருமையாகப்பேசினார்! அவரே தன் வீட்டையும் ராஜாஜிவீட்டையும் பெண்கள்முற்றுகையிட்டதாக கூறினார்! ஏமார்ந்தார் என்பதற்கு நாகரீகமான மறுமொழி "இணக்கமா"?

மந்திரி முன்னே சமாதி! தேச க்ஷேமத்திற்காக ஓர்யோகி சென்னை மந்திரி முன்னே நிர்விகல்ப ஸமாதி செய்தாராம்!

தலைகுனிய வேண்டும்! திருச்சியில் மத பரிபாலன ஸபை செயலைக்கண்டிக்க ஓர்கூட்டம் கூடிற்று. காங்கிரஸ் மந்திரிகளைத் தாங்கும் பெரியமனிதர் அதைக்கலைத்தனர்? நல்ல பெருமை அவர்களுக்கு!!

கண்டிப்பும் தைர்யமுமில்லை! "தேசிய ஸேவை வகுப்பு வாத விரோதி! என்ஜாதிக்கு எத்தனை பேருக்கு உத்தியோகம் கொடுத்தாய்" என்று சிலர் கேட்க, பயந்து காங்கிரஸ் மந்திரி பதில் கூறுவது கோழைத்தனம்!

பழய நிலைக்கு வருக! மாகாணம் பாஷா வாரியாகப் பிரிக்க வேண்டுமென்று ஓர் தீர்மானம் சென்னையில் செய்யப்பட்டது. வீணாக ஆக்ஷி செலவை வளர்க்காமல் ஆங்காங்கு தனித்தனி ஆக்ஷி பழைய முறையில் வந்தால் நலமே!

கைத்தறி கடன் மசோதா! ஒன்று கொண்டு வரும்படி ஓர் கிளர்ச்சி ஆரம்பிக்கிறது! இன்னும் பல எதிர்பார்க்கலாம்!

கிருஸ்துவ கலாசாலையில்! எல்லோரும் பைபிள் படிக்க வேண்டும். திருநெல்வேலி போர்ட், தேசியப்பாட்டை மஹம்மதியர் பாடவேண்டாமென்கிறது.

## ஆலயப்பிரவேச மசோதா.

சாரதா சட்டத்திற்கு எதிர்ப்பு.

காஞ்சியில் கண்டனக் கூட்டங்கள்.
காங்கிரஸ்வாதிகளின் விஷமம்.

சின்ன காஞ்சீபுரம் ஸநாதன பிரமுகர்கள் நகரவாசிகள் பெரும்பாலருடன் ஸ்ரீ ஆஞ்சநேய சுவாமி கோவிலில் 28—3—38 ஞாயிற்றுக் கிழமை மாலை 4-மணிக்கு ஓர் பொதுக் கூட்டமாகக்கூடினர். அவ்வமயம் ரிடையர்டு தாசில்தார், ராவ்சாகிப் E. ஆறுமுக முதலியார் தலைமைவகித்தார்.

தெய்வ வணக்கத்திற்கு பிறகு அவைத் தலைவர் பொதுக்கூட்டத்தின் நோக்கத்தை நன்கு விளக்கி ஆலய வழிபாட்டின் பெருமையையும், தீண்டாதவர், ஆலயங்களில் பிரவேசிப்பதினால் ஏற்படும் கேடுகளையும், நிரூபித்தார்.

கற்றறிந்த பண்டிதர் பலர் விக்ரஹ ஆராதனையின் பெருமையையும் கோயில்களில் விக்ரகங்களை ஸ்தாபித்து ஜீவகலையுடன் விளங்கச்செய்யும் ஆகமசாஸ்திரங்களின் பெருமையையும், தீண்டார் பிரவேசிப்பதால் மூர்த்தி சோபையற்று கரைந்து விளங்கி நாட்டிற்கே சொல்லொண்ணு கஷ்டங்களையும், வறுமையையும் உண்டாக்குகிறதென்பதையும் நன்கு விளக்கினர். பண்டைய அரசர்கள் சீரும் சிறப்பும் பெற்றதும், நாட்டு மக்கள் வறுமையற்று இன்புற வாழ்ந்ததும் கலைகள் ஓங்கி நின்றதும் தெய்வவழிபாட்டின் மேன்மையினால் தான் என்றும் நன்கு நிரூபித்தனர். நகரவாசிகள் பலர் ஊக்கத்துடன் கேட்டு ஆனந்தித்தனர்.

பிறகு காஞ்சீபுரம் சநாதனதர்ம சேவாசங்க காரியதரிசி ஸ்ரீமான் கே. ராமச்சந்திர சர்மா சபையின் சார்பாக தீண்டாதார் ஆலயப் பிரவேசத்தை எதிர்த்துக் கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றினர்.

இத்தறுவாயில் டாக்டர் சீனிவாசன் சில காங்கிரஸ்காரர்களுடன் கூட்டத்தில் பிரவேசித்து தீர்மானங்கள் நிறைவேற்றுவதை மறுத்தார். ஸ்ரீமான் சர்மா இக்கூட்டமானது ஸநாதநப் பற்றுள்ளவர்களின் நோக்கத்திற்குரியது என்றும், காங்கிரஸ்காரர் தலையிடுவது முற்றும் தவறு என்றும், கூறினர். குழப்பம் அதிகரிக்கும் சமயம் கூட்டம் கலைந்தது.

பின்னர் போலீசார் வந்தபின் எதிர்கக்ஷிக்காராகிய காங்கிரஸ்காரரை கூட்டத்தில் தலையிடாது வெளியேற்றி அதேயிடத்தில் அமைதியுடன் பச்சையப்பா காலேஜ் ரிடையர்டு ஸம்ஸ்கிருத புரவஸர் ஸ்ரீமான் உபய வேதாந்த வி. அநந்தாசாரிய ஸ்வாமி தலைமையில் கூட்டம் நடந்தது.

அவைத்தலைவர் காங்கிரஸ்காரர்கள் குறுக்கிட்டதை நன்கு கண்டித்து கீழ்க்கண்ட தீர்மானங்களை ஸ்ரீமான் சர்மா அவர்களால் பிரரேபிக்கச்செய்து கூட்டத்தினிடையே நிறைவேற்றினர்.

"சிருஷ்டிகாலம் முதற்கொண்டு பகவானின் அவதார ரகஸ்யங்களை அறிந்த பகவானுக்கு ஆலயங்களமைத்து விக்ரகங்களைப் பிரதிஷ்டைசெய்து மகரிஷிகளால் பூஜிக்கப்பட்டு மஹாராஜாக்களாலும், பின்பு கோடிக்கணக்கான திரவியங்களை வாரி இறைத்து கோயில்கள் நிர்மாணிக்கப்பட்டு, சைவ வைணவ சமயத்தார் ஆகம சாஸ்திரங்களை சம்பிரதாய கட்டுப்பாடுகளுக்கிணங்கி இன்று வரையிலும் கையாண்டுவரும் பழக்கத்தில் இதை மீறி தீண்டாதாருக்கு ஆலயங்களைத் திறந்து விடுவதால் தெய்வ சான்னித்யம் குறைந்து தர்மாசாரம் சீர்குலைந்து ஜனங்கள் மதப்பற்றில்லாது சீர்கேட்டையும் பெருங்கேட்டை விளைவிக்கிறது. இம் மசோதாவானது சமீபத்தில் வைஸிராய் கவுன்ஸிலில் பெரும்பான்மையான ஹிந்துக்கள் எதிர்ப்பால் நிராகரிக்கப்பட்டதை மெம்பர்களுக்கு நன்கு கவனத்திற்கு கொண்டுவருகிறது. மாட்சிமைதங்கிய விக்டோரியா மஹாராணியாலும், 'மதவிஷயத்தில் அரசாங்கம் தலையிடாது' என்று வாக்களிக்கப்பட்டிருக்கும் உறுதிமொழியைப் பின்பற்றி அரசாங்கத்தார் பிரஜைகளுடையவும் க்ஷேமத்தைக் கோறி ஆலயப்பிரவேச மசோதாவானது திரும்பவும் பிரேரேபிக்கப்பட்டால் நிராகரிக்கும்படி கவர்ன்மெண்டாரை வேண்டுகிறது.

இக்கூட்டம், சாரதா சட்டத் திருத்தமும் பெரும்பாலான ஜனங்களுக்கு கஷ்டத்தை விளைவிப்பதால் பெண்களின் மணவயதை 8 அல்லது 10 வயதுக்குள் என்றும், அல்லது 12 வயது அதாவது கடைசியாக பெண்கள் புஷ்பவதிகளாய் மாறுமுன்னும் என்று சட்டம் செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறது.

மேலும் இக்கூட்டமானது சட்ட சபை மெம்பர்கள் மத விரோதமான பிரச்னைகளை எழுப்பி சட்டமாக்க முயன்று மகாராணியாருடையதும் மற்றும் பல சாஸனங்களையும் பொருட்படுத்தாது இருப்பது, ஏற்றதல்லவென்றும், மத சம்பந்தமானவைகளில் அரசாங்கம்தலையிட்டுசட்டமாக்கக்கூடாதென்றும் மே.த மதருஸ்கவர்னர் அவர்களையும் மே.த. வைஸிராய் அவர்களையும் வேண்டுகிறது.

இங்ஙனம் நிறைவேற்றிய தீர்மானங்களை கவர்மெண்டாருக்கு உடனே அனுப்புவதாகத்தீர்மானிக்கப்பட்டு தலைவருக்கு நன்றி கூறி அரசர்க்கு வாழி கூறி கூட்டம் இனிது முடிவுபெற்றது.

வி அனந்தாச்சாரியார் சபைத்தலைவர்.

### ஸ்ரீ நாராயண தீர்த்த குரு ஸ்வாமிகள் திருப்பந்துருத்தி.



இவரது திவ்ய சரித்திரம் இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

# ஆர்யதர்மம்.

ஈச்வர-௵ பங்குனி-௴ 25௳

## தைர்யமிழக்காமல் எதிர்த்து நிற்போம்.

எதிர்பார்த்தது நடந்துவிட்டது. தாஸ் மசோதாவானது சட்டமாகிவிட்டது. சென்னை சட்டஸபையில் அதர்ம மசோதாக்கள் தலைநீட்டிவிட்டன. இப்போது தேசத்தில் பிரிடிஷ் கவர்ன்மெண்டார் இருந்துவரும் நிலைமையில் இத்தகைய மத விருத்தமான அநேகச் சட்டங்களுக்கு அவர்கள் ஆதரவளிக்கவேண்டியவர்களாகவே இருக்கிறார்கள். ஜனநாயக முறையை அநுஸரித்து மாகாண ஸ்வயஆக்ஷி அளித்துவிட்டார்கள். இதில் மற்ற ஸ்வாதந்திரியங்களை அவர்கள் தங்கள் கையில் சிக்கவைத்துக்கொண்டு, மத விஷயத்தில் மட்டில், "எப்படித் தொலைந்தாலென்ன" என்ற அலக்ஷ்ய புத்தியுடன் பூர்ண ஸ்வாதந்திரியமளித்துவிட்டார்கள். மெஜாரிடிக் கக்ஷியார் எதை நினைத்தாலும் அப்படியே நிறைவேற்றிவிட ஸௌகர்யமுண்டு. காங்கிரஸ்காரர்கள் மெஜாரிடி பலத்துடன் கவர்ன்மெண்டை பிடித்துக்கொண்டிருப்பதுடன் அவர்களுடைய செய்கைகளில் கவர்னர்கள் பிரவேசிப்பதில்லையென்று உறுதிமொழியும் வாங்கிக்கொண்டுவிட்டார்கள். ஆகையால் மாகாணங்களில் ஆக்ஷி நடத்தும் காங்கிரஸ்காரர்களின் விருப்பப்படி ஆடுவதே தற்போது பிரிடிஷ் கொள்கையாயிருப்பதால் தாஸ் மசோதாவுக்கு இதுவரையில்லாத பெரிய சலுகையைக்காட்டி இந்தியா கவர்ன்மெண்டார் அதை நிறைவேற்றிவிட்டார்கள். இவ்விஷயத்தில் சீர்திருத்தக்காரர்களைவிட கவர்ன்மெண்டாரே அதிகம் பொறுப்பாளிகளாக இருக்கிறார்கள். கவர்ன்மெண்டாரின் அந்த அநீதியான செய்கையானது கோடிக்கணக்கான மதாபிமானிகளின் மனதில் பெரிய பீதியையும், எதிர்கால வாழ்க்கையைப்பற்றிய மிகுந்த கவலையையும் உண்டு பண்ணியிருப்பதில் ஆச்சர்யமில்லை.

மத விஷயமான கஷ்டங்கள் பெரும்பாலும் ஹிந்து மதத்தினருக்கு மட்டும் ஸங்கேதமாகச்செய்யப்படுகிறதே யல்லது, கிறிஸ்துவர், மகம்மதியர், சீக்கியர்கள் போன்ற மத விஷயத்தில் கவர்மெண்டாரோ, சீர்திருத்தக்காரர்களோ கை வைக்க பயந்திடுகிறார்கள். அந்த மதங்களின் ஹிக்குப் போவதில்லை. இவ்வுர் நமது மதத்தினரின் மனதில் பெரிய கவலையை உண்டு பண்ணியிருக்கிறது. எல்லா மதத்தினரும் சேர்ந்து கொண்டு ஹிந்து மதத்தைக் கொலை செய்ய முற்பட்டிருக்கும் அக்கிரமம் சொல்லத்தரமில்லை. தாஸ் மசோதாவை மகம்மதியர்கள் வெகு பலமாக எதிர்த்தார்கள். ஆயினும் ஷௌகத்அலிமுதலியவர்கள் மகம்மதியர்களை இந்த மசோதாவிலிருந்து விலக்கிக்கொள்ளத் தனியான மசோதாவொன்றை கொண்டு வரப்போவதாகச் சொல்லியிருக்கிறார். அந்த மசோதா சீக்கிரத்தில் வலாம். கவர்மெண்டாரும் அதை ஆதரித்து மகம்மதியர்களை விலக்க ஸம்மதிப்பார்கள். ஹிந்துக்களான சீர்திருத்த வாதிகளும் மஹம்மதியர்களுக்குப்பின்பலவாக நின்று தாளம்போடுவார்கள்.

ஹிந்து மதத்தை அழிப்பதற்குப்பிற மதத்தினருடைய உதவியைக் காங்கிரஸ்காரர் தேடும் கொடுமையையும் வெட்கக்கேடையும் என்னென்று சொல்லுவது? பம்பாய் சட்ட ஸபையில் துருஷ்கர்களுடைய வோட் பலத்தைக் கொண்டே ஆலயப்பிரவேச மசோதா நிறைவேறியிருக்கிறது. இந்தியா சட்ட ஸபையில் தாஸ் மசோதாவும் அப்படியே. சென்னை சட்ட ஸபையில் எம். ஸி. ராஜா மசோதாவுக்கு ஒரு மஹம்மதிய மெம்பர் பலத்த ஆதரவு காட்டினார். தீண்டாமைக்குக் கண்ணீர் சொரிந்தார். அதை அகற்றித் தீரவேண்டுமென்றார். இவருடைய மத விஷயத்தைப்பற்றி ஹிந்துக்கள் இம்மாதிரி பேச இவர் ஸம்மதிப்பாரா? எப்படியும் நமது ஹிந்து சீர்திருத்தக்காரர்கள் இதரமதத்தினரின் பின் பலத்தைக் கொண்டு ஹிந்து மதத்தை நசுக்க முற்பட்டிருப்பதைக் கிளர்ச்சி மூலமுமோ, சட்ட மூலமோ தடுக்க நாம் முற்படவேண்டியதவச்யம்

இனி ஸநாதநிகளாகிய நாம் செய்யவேண்டியதென்ன? தாஸ் மசோதா நிறைவேறிவிட்டது. ஆலயப்பிரவேச மசோதாவும் நிறைவேறிவிடுவது நிச்சயமே. சென்னை மாகாணத்தில் மாகாண ஸ்வய ஆக்ஷிக்கு நமது தேவாலயங்களும் தர்மங்களும் முதல் பலியாகக் கொடுக்கப்பட்டுவிட்டன. ஆயினும் நாம் தைர்யத்தை இழக்கக்கூடாது. தார்மிகர்கள் கோழைமனதுகொண்டு எதிலும் அதைர்யமும் அச்ரத்தையும் அடைவது வழக்கமாயிருக்கிறது. இவர்கள் நமது தர்மங்களின் பூர்வ சரித்திரங்களை நினைத்துப் பார்த்து தைர்யம் கொள்ளவேணும். நமது புராணாதிகளில் நம் முன்னோர்பட்ட கஷ்டங்களும், அவர்கள் தர்மரக்ஷணத்தில் காட்டிய உறுதியும் நமக்கு என்ன போதிக்கின்றன? எவ்வளவோ பயங்கரமான ஆபத்துக்களையும் கடந்து அவர்கள் ஸ்வதர்மத்தை ரக்ஷித்து வந்தார்கள். ஆபத்காலங்களில் நாம் ஸமாளித்துக்கொள்ளவேண்டிய வழியையும் சற்றுக் கொடுத்திருக்கிறார்கள். தற்காலத்திய நம்மைப்போல் ஒவ்வொரு கஷ்டகாலத்திலும் அவர்கள் அலக்ஷ்யமோ மனக் குழப்பமோ காட்டியிருந்தால் நமது தர்மங்கள் இன்று அடியோடு மறைந்துபோயிருக்குமல்லவா? ஆகையால் ஆபத்காலத்தில் தர்ம ஸங்கோசம் செய்துகொண்டு, ஆபத்து நீங்கியபின் மறுபடி பூர்ண தர்மத்தை அநுஷ்டிக்க அவர்கள் நமக்கு வழிகாட்டியுள்ளார்கள். சாரதாச் சட்டத்தையோ, ஆலயப்பிரவேசச் சட்டத்தையோ இன்றில்லாவிடினும் ஏதாவது ஒரு காலத்தில் மாற்றக்கூடிய நல்ல நிலைமை ஏன் ஏற்படக்கூடாது? ஆக்ஷி நடத்தும் கக்ஷியாரில் எல்லோரும் ஒரே மாதிரியான வழியிலேயே செல்ல வேண்டுமென்ற நியமமில்லையல்லவா? ஜஸ்டிஸ் கக்ஷி செய்ததை காங்கிரஸ்மந்திரிகள் மாற்றவில்லையா? அது போல் பிற்காலத்திலும் சாரதாச்சட்டத்தை மாற்றவேண்டிய நிலைமை ஏற்படலாம், தீர்ந்து போன விஷயமாகக்கருதப்பட்ட பல விதாராஜ்யக்கார்யம் கூட வெகு காலங் கழித்துத் திருத்தப்படுவதைப்பார்த்திருக்கிறோம். வங்காள ப்ரிவினை போன்ற விஷயங்களை உதாரணமாகப் பார்க்கலாம். ஆகையால் நமது தார்மிகர்கள் தற்கால ஆபத்து நிலைமைக்கு ஏற்றபடி நடக்க நேரிட்டாலும், இந்த மசோதா விஷயமாக நமது எதிர்ப்பைச் சிறிதும் தளர்த்தாமல் ஓயாக்கிளர்ச்சி செய்து கொண்டே வரவேண்டியது அவச்யமாகும்.

கும்பகோணம் ஸ்ரீ மடம் ஏஜெண்ட் அவர்கள் சிலதினங்களுக்கு முன் வெளியிட்ட அபிப்ராயத்தை அநுசரித்துஒவ்வொரு கிராம நகரங்களிலிருந்தும் ஏராளமான கையெழுத்துக்களை வாங்கியனுப்புவது அவச்யமானது. கண்டனக்கூட்டங்களையும் நடத்தி ஆக்ஷேபத்தை வலுப்படுத்திக்கொண்டிருக்க வேண்டுவது அவச்யமாகும். அதர்மச்சட்டங்களை அங்கீகரித்து நாம் பின் வாங்கிவிட்டது போல் தோன்றக்கூடிய அச்ரத்தையையும், கோழைத்தனத்தையும் காட்டிக்கொள்வது மிகுந்த அபாயத்திற்கிடமளிக்கும்.

## குறிப்புகள்.

### சென்னை அஸெம்பிளியில் அதர்ம மசோதா!

சென்னை சட்டஸபையில் எம். ஸி. ராஜாவால் கொண்டுவரப்பட்டிருந்த தீண்டாதார் அசௌசார்ய நிவிர்த்தி மசோதாவானது தனிக்கமிட்டியின் பரிசீலனைக்கு விடப்பட்டிருக்கிறது. இத்துடன் அவரால் கொண்டுவரப்படவிருந்த ஆலயப்பிரவேச மசோதாவையும் பிரேரிபிக்க ஸபையின் அநுமதி கிடைத்து அது பிரேரேபிக்கப்பட்டுவிட்டது. ஸ்ரீமான் ராஜாவும் மற்றவர்களும் வழக்கம் போல் கிளிப்பிள்ளை தோரணையில் பழய பல்லவிகளையே திருப்பிப்பாடினர். இந்தியா சட்டஸபையில் தாம் இந்த மசோதாவைக் கொண்டு வந்ததும் பொதுஜன அபிப்ராயம் அறிய அது அனுப்பப்பட்டதென்றும், அதிலிருந்து தேசத்தில் இந்த மசோதாவுக்கு நல்ல ஆதரவு இருப்பதாகத் தெரிந்து விட்டதென்றும் ஸ்ரீமான்ராஜாசொன்னார். இந்தியா கவர்ன்மெண்டார் இந்த மசோதா விஷயமாகப் பொதுஜன அபிப்பிராயம் திரட்டியதில் சீர்திருத்தக்காரர்களுடைய விஷமம் கலந்திருந்ததாக அப்போதே நினைக்கப்பட்டது. முக்யமாக இந்த மசோதாவை ஆதரிப்பவர்களையே தேடிப்பிடித்து அபிப்ராயம் சேகரிக்கப்பட்டதாக புகார் ஏற்படவில்லையா? மசோதாவைக் கண்டிப்பவர்களுக்கு இது அதிகம் அறுப்பப்படவில்லை. இது எப்படியிருப்பினும், இந்தியா கவர்ன்மெண்டார் இந்தியா முழுவதும் சேகரித்த அபிப்பிராயத்தில் அதிகம் பேர் ஆதரவு காட்டியிருக்கலாம். ஆனால் இப்போது சென்னை சட்டஸபையில் வந்துள்ள இந்த மசோதாவானது நமது மாகாணம் ஒன்றை மட்டும் பாதிப்பதாயிருப்பதால், இப்போது இந்த மாகாணத்தியவர்களுடைய அபிப்ராயத்தை சேகரித்து முடிவுசெய்வதே நியாயமாகும்.

சென்னை மாகாணத்தில் அபிப்ராயம் திரட்டப்பட்டால் இந்த மசோதாவுக்கு எதிரானவர்களே அதிகமாயிருப்பார்களென்பது தெளிவான விஷயம். ஆகையால் இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன் இந்தியா கவர்மெண்டார் வாங்கியுள்ள அபிப்ராயத்தை வைத்துக்கொண்டே முடிவு செய்துவிடலாமென்பது பயங்கொள்ளித்தனமாக வேயிருக்கிறது.

இந்த மசோதாவுக்கு எதிர்ப்பேயில்லையென்று சிலர் பேசியதை பிரதம மந்திரியே அங்கீகரிக்கவில்லை. பலத்த ஆக்ஷேபமிருப்பதாகவே அவர் தெரிவித்தார். ஆயினும் நமது காங்கிரஸ் மந்திரிகள் எவருக்குப்பயப்படவேண்டும்? தங்கள் இஷ்டப்படி கைதூக்குகிறவர்களும், தலையாட்டுகிறவர்களும் மெஜாரிடியாயிருக்கையில் மந்திரிகள் ஒருவரையும் லக்ஷ்யம் செய்ய வேண்டியதில்லையல்லவா? ஆகையால் இந்த மசோதாவை கரையேற்றிவிடத்தயாரென்று பிரதம மந்திரி கூறிவிட்டார்



இத்துடன் ஆலயப்பிரவேச மசோதாவுக்கு அநுமதி கிடைத்தது. தற்போதிய சட்டஸபையில் இத்தகைய மசோதாக்கள் நிறைவேறுவதில் அதிசயமில்லை தான். ஆனால் ஏதோ நியாயப்படி தாங்கள் நடப்பதாக நடிப்பது எதற்காக? எம். ஸி ராஜா மசோதாவுக்குப் பொது ஜன ஆதரவு இருப்பதாக வெளிப்பட்டு விட்டபடியால் அதை அங்கீகரிக்கவேண்டுமென்றார். ஆனால் ரங்கய்யரின் ஆலயப்ரவேச மசோதா விஷயமாக இந்தியா கவர்மெண்டார் சேகரித்த அபிப்ராயங்களில் மிக மிகப்பெரிய மெஜாரிடியார் ஆலயப்பிரவேசத்தை எதிர்ப்பது வெளியாயிருக்கிறதே. அதைக்கொண்டு பார்த்தால் இந்த ஆலயப்பிரவேச மசோதா இப்போது தலை நீட்டவே நியாயமில்லையல்லவா?

ஆனால் தர்மம், நீதி, வியவஸ்தை ஆகியவை இப்போது மறைந்து விட்டன.

இந்த இரண்டு மசோதாவையும் தக்கபடி எதிர்த்து நாம் கிளர்ச்சி செய்வோமாக.

### இப்போது என்ன சொல்வார்கள்?

திருவாங்கூர் ஸம்ஸ்தானம் ஆலயப்பிரவேச அக்கிரமத்தை செய்ததும், நமது காங்கிரஸ் வாலாக்கள் அந்த தேசத்தை 'முற்போக்கு தேசம்' என்றும், அரசனையும், மந்திரியையும், விசாலநோக்கமுள்ளவர்களென்றும் சிலாகித்துத்தள்ளிக் குதித்தார்கள். அரசனுக்குப் பாராட்டுகள் கணக்கில்லாமல் பாடப்பட்டன. இப்படி புகழ்பெற்ற அந்த ராஜ்யமானது தற்போது மிகவும் பிற்போக்கான தேசமாகக் காணப்படுவதைப் பார்த்து அந்தக் காங்கிரஸ்வாதிகளே ஏமார்ந்து நிற்கின்றனர். திருவாங்கூர் ஸம்ஸ்தானத்தில் காங்கிரஸ் வாசனையே வீசக்கூடாதென்று உத்திரவு போடப்பட்டிருக்கிறது காங்கிரஸ் கிளை ஸபைகளும், காங்கிரஸ் கூட்டங்களும் சட்டப்படி தடைசெய்யப்பட்டுவிட்டன. காங்கிரஸ்வாதிகள் மேல்மீதுராஜத்வேஷக்கேஸும் நடத்தப்படுகிறது.

இப்போது பிரபல காங்கிரஸ் தலைவரான ஸ்ரீமான் நரிமன் திருவாங்கூரில் அவமானப்படுத்தப்பட்டுவிட்டார். அவர் பொதுக்கூட்டமெதிலும் பேசக்கூடாதென்று தடுக்கப்பட்டார். நரிமன் ராஜ்யக்கைதியாக தண்டனையடைந்தவரென்கிற காரணத்தினால் திருவாங்கூர் கோர்ட்டில் வக்கீலாக ஆஜராகி வாதிக்கக்கூடாதென்றும் தடைசெய்யப்பட்டுவிட்டார். திருவாங்கூரை முற்போக்கென்று கூச்சலிட்டுவந்த காங்கிரஸ் வாதிகள் தற்போது தலைகுனிந்து வெட்கத்தால் முணுமுணுக்க ஆரம்பித்திருக்கிறார்கள். திருவாங்கூரை ஸ்துதிபாடி நான்கு நாள் ஆகவில்லையே? அதற்குள் அதே வாயால் அந்த ஸம்ஸ்தானத்தை திட்டவேண்டியிருக்கிறதே என்று ஸங்கடப்படுகிறார்கள்.

ராஜீய கார்யத்தில் திருவாங்கூர் இவ்வாறு நடப்பது ராஜ்ய வாதிகளுக்குப் பிடிக்கவில்லையானால் மத ஸமூஹ ஸம்பந்தமாக அந்த தேச அரசன் செய்த அநீதி தார்மிகர்களுக்குப் பிடிக்காததில் தப்பு என்ன? ஆலயப்பிரவேசத்தை அநுமதித்ததற்காக காங்கிரஸ் வாலாக்கள் அரசனைப் பாராட்டியது யுக்தமானால் காங்கிரஸை நசுக்க கங்கணம் கட்டியதற்காக தார்மிகர்கள் அந்த அரசனை ஏன் வாழ்த்தக்கூடாது? ஒன்றில் நியாய மிருப்பதாயும் மற்றொன்றில் அநியாய மிருப்பதாயும் காங்கிரஸ்காரர்களுடைய அபிப்ராயப்படி நினைக்கலாம். ஆனால் இரண்டும் ஜனங்களுடைய உரிமைகளில் புகுந்து வியவஸ்தா நாசம் செய்வதென்பதை நிஷ்பக்ஷபாதமாக வியவஸ்தாவாதிகள் கண்டிப்பார்கள்.

### கிராப்புக்கு சீக்யர் எதிர்ப்பு.

நாபா, பாட்டியாலா, போன்ற சில சீக்ய ஸம்ஸ்தான அரசர்கள் நவீனப் போக்கின்படி, தலை மயிரை கிராப்செய்து கொண்டோ மொட்டையடித்துக் கொண்டோ சிகையை எடுத்துவிட்டார்களாம். இது சீக்ய ஸமூஹத்தில் பெரிய அமளியை உண்டாக்கியிருக்கிறது. இதைக் கண்டிப்பதற்காகப் பெரிய சீக்ய மஹாஸபை நடைபெற்றது. சிகையை எடுத்த அரசர்கள் சீக்யமதத்திற்கு விரோதமாக நடந்திருப்பதாயும், இதைக் கண்டிப்பதாயும், இந்தியா கவர்ன்மெண்டார் இதில் பிரவேசித்து சிகை வைத்துக் கொள்ளும்படி அவர்களை வற்புறுத்தவேண்டுமென்றும், சிகை வைத்துக்கொள்ள மறுக்கும் அரசர்களை ராஜ்யத்திலிருந்து விலக்கிவிடவேண்டுமென்றும் சீக்கியர் தீர்மானம் செய்தார்கள். சீக்யரின் இந்த மத உணர்ச்சியையும், ஆசார சிரத்தையையும் நாம் பெரிதும் பாராட்டுகிறோம். ஆனால் உணர்ச்சியற்ற நமது ஹிந்து ஸமூஹம் இதைக் கவனிக்குமா? ஹிந்துக்களுக்கு சிகையானது ஓர் உயர்ந்த மத சின்னமாக ஏற்பட்டிருக்கிறது. தெய்வ பித்ருகார்யங்கள் பலவற்றில் சிகையும் ஸம்பந்தம் பெற்றிருக்கிறது. சிகையில்லாதவன் செய்யும் எந்த தர்ம கார்யமும் சாம்பல் ஆஹுதிபோல் பிரயோஜனமற்றதாகிறது. சிகைச்சேதம் செய்து கொண்டவன் அசுத்தனென்றும், அர்ஹனல்லவென்றும் நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஹிந்துக்களின் உயர்ந்த நாகரிகத்திற்கும் சிகை ஒரு உதாஹரணமாயிருக்கிறது இத்தகைய சிகையானது இப்போது பிராம்மண அப்பிராம்மண ஹிந்து குடும்பங்கள் எல்லாவற்றிலும் சிறுவர்களால் வெட்டப்பட்டு விகாரமான நிலைமையே எங்கும் தென்படுகிறது.

சிகையை வெட்டிக்கொண்டவனின் முகம் பெரிய மாறுதலை அடைந்துவிடுகிறது. அவனுடைய முக இயற்கை அழகு அழிந்து விகாரரூபம் தோன்றுகிறது. சிகாச்சேதத்தினால், என்ன லாபம், என்ன பிரயோஜனம் என்பதைக்கூட கவனியாமல் ஆட்டுமந்தைகளைப்போல் ஒருவனைப்பார்த்து மற்றொருவனாக இந்தியா முழுவதும் இந்த கோரவேஷம் பரவிவிட்டது. மதாசாரியர்களும், மாதா பிதாக்களும், கண்டிக்கப் பயப்படுகிறார்கள். கிராப்காரர்களுக்கு பள்ளிக்கூடங்களும், காலேஜ்களும், அவ்விடத்திய உபாத்யாயர்களும் பின் பலமாயிருக்கிறார்கள்.

ஹிந்து ஸமூகத்திற்கு ஸ்வய மதிப்பு சிறிதாவது இருக்கிறதா? கிறிஸ்தவாதி மதஸ்தர்களின் வழக்கமாகிய கிராப் வழக்கத்தை ஹிந்துக்கள் கைகொண்டது நியாயமா? கிறிஸ்துவர்களோ மஹம்மதியர்களோ ஹிந்துக்களின் ஆசார வழக்கங்களையும் உடை, உடுத்தல் உணவு வழக்கங்களையும் அநுஸரிப்பார்களா? ஒரு நாளும் இல்லை. அவர்கள் தங்கள் வழக்கங்களிலேயே உறுதி காட்டுகிறவர்கள், ஹிந்துக்களாகிய நாமோ நபும்ஸகர்களாயும் ஸ்வாபிமானமற்றவர்களாயும், பிறரைப் பார்த்து எதையும் பழக்கிக்கொள்ளும் துர்பல மனப்போக்கு படைத்திருக்கிறோம். இந்திய தேசாபிமானிகளாக பாவிக்கும் அநேக ஹிந்துத்தலைவர்களின் தலையில் நமது தேச சின்னமாகிய சிகை கிடையாது. நெற்றியில் புண்ட்ரம் சூன்யம். ஆனால் பேசுவதோ தேசாபிமானம். என்னே! வெட்கக்கேடு! சீக்கியர்கள் சிகாச்சேதத்தைக்கண்டிப்பது போல் நாம் கண்டித்தால்நமது ஹிந்து பிரமுகர்களே கைதட்டி நம்மை பரிஹஸிப்பார்கள். ஆயினும் இந்த அவிவேகிகள் சீக்கியரின் மதாபிமான உணர்ச்சியையும் உறுதியையும் கவனிக்கட்டும். சிகாச்சேதம் செய்து கொள்ளுவோரை தண்டிக்கச்சட்டமியற்றக்கூடிய இந்திய ஹிட்லர் ஒருவர் தோன்றுவாரா?

ஓர் ஸநாதநி.

### ஆத்தன்குடி.

ஸநாதன தர்ம மஹா ஸபை.

அமாவாஸைக்கூட்டம்.

இன்று இச்சபை, சபையின் உபதலைவர் திருவாளர் சு. வீர. கதிரேசன் செட்டியார் அவர்கள் தலைமையில் தமிழ்ப்பண்டிதர் ஜெ. சாமிநாதய்யரவர்கள் கடவுள் வாழ்த்துப்பாட ஆரம்பமாயிற்று. தலைவரவர்கள் முன்னுரையில் சமீபத்தில் பம்பாயில் நடந்த ஸநாதந தர்மிகளின் ஊர்வலத்தைக்கலைப்பதின் நிமித்தம் காங்கிரஸ்காரர்கள் கையாண்ட கொடுஞ் செயல்களைப்பற்றியும், இனியும் சனாதனிகள் கட்டுப்பாடான முறையில் சபைகள் ஏற்படுத்திக்கொண்டு மத விருத்தமான சட்டங்களை எதிர்த்து எத்தகைய போராட்டத்திற்கும் தயாராக வேண்டிய நிலைமை பற்றியும் விரிவுரை நிகழ்த்திய பின்னர், ஷடங்க வேதம், தற்கால நிலைமை புருஷார்த்தம் என்பன பற்றி பி. எஸ். சுப்பிரமண்ய கனபாடிகள், ஜோஸ்யம் திருவேங்கடமய்யங்கார், ஆர். எம். சுப்பிரமண்யசாஸ்திரிகள் முறையே உபந்யசித்த பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் முடிவுபெற்றது.

எம். திருவேங்கடமய்யங்கார்.

### மதுரை.

வர்ணாசிரம ஸ்வராஜ்ய ஸங்கம்.

கண்டனக்கூட்டம்:

மதுரைவாஸிகள் 3-4-38 ஒரு பொதுக் கூட்டமாக ஸ்ரீ ஸ்ரீநிவாஸமஹாதேசிக ஸ்வாமிகள் தலைமையில் கூடி கீழ்க்கண்ட தீர்மானங்களை முறையே நிறைவேற்றினார்கள்.

1. இக்கூட்டம் 31-3-38 சென்ட்ரல் அஸெம்பிளியில் நிறைவேற்றிய பி. தாஸ் சாரதாசட்டத்திருத்தம் 25 கோடி, ஸநாதன தர்மப் பற்றுள்ள ஹிந்துக்களுக்கு பெரிய கஷ்டத்தை உண்டுபண்ணி ஸமாதானக் குறைவு ஏற்படுத்துவதால் மே. த. வைஸிராய் அவர்களையும், மே. த. கவர்னர் ஜனரல் அவர்களையும் ஆதரவுகாட்டாது நிராகரிக்கவேண்டுகிறது.

2. மதுரை வாசிகள் தங்களுடைய நன்றியை ஸ்ரீமான் பெஜோரியா அவர்களுக்கு பி. தாஸ் மசோதாவை எதிர்த்துப் போராடியதின் பொருட்டுத் தெரிவித்துக்கொள்ளுகிறார்கள்.

இந்த நகரவாசிகள் மதறாஸ் சட்ட ஸபையில் அங்கீகரித்த M. C. ராஜாவால்கொண்டு வரப்பட்டிருக்கும் ஆலயப்பிரவேச மசோதா ஹிந்துக்களுக்கு இடர் விளைவிக்க ஏதுவானதால் தற்பொழுது சட்டசபையிலேயே ஆதரவு காட்டாது நிராகரிக்குமாறு மதறாஸ் கவர்ன்மெண்டாரை வேண்டுகிறார்கள்.

ஸ்ரீ ஜகத்குரு

விஜயயாத்திரை முகாம்.

காகிநாடா.

171

## மந்திரிகள்மீது கார்யக்கமிட்டியின் ஆதிக்யம்.

### புலுசு பிரயாணம் நின்றதேன்?

சென்னை அஸம்ப்ளித் தலைவரான ஸ்ரீமான் புலுசு ஸாம்பமூர்த்தி ஐரோப்பாசென்று,ஜன நாயக ஆக்ஷியுள்ள நாடுகளில் நடைபெறும் சட்டஸபை முறைகளை அறிந்துவரும்படி சென்னை காங்கிரஸ்மந்திரிகள் ஏற்பாடு செய்தனர். இதற்காகச் சட்டஸபையில் கனம் பிரதம மந்திரி பணம்கேட்டு வெகு சிரமப்பட்டு அநுமதி வாங்கினர்.

எதிர்கக்ஷி மெம்பர்களில் சிலர் ஆக்ஷேபித்துப் பலர் அரைகுறையாக ஆதரித்தும், எல்லோருக்கும் திருப்தி யேற்படும்படி கனம் ராஜாஜிசெய்து பகீரத பிரயத்னமெடுத்துக் கொண்டார். ஆயினும் என்னபிரயோஜனம்? கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் கார்யக்கமிட்டி அங்கிருந்து சென்னை மந்திரி ஸபைக்கு உத்திரவு அனுப்பிவிட்டது. கனம் ஸாம்பமூர்த்தி ஐரோப்பா போகக்கூடாதென்று உத்திரவு போட்டு விட்டது. பாவம்!! கனம் பிரதம மந்திரியும், கனம் புலுசுவும் என்ன செய்வார்கள்? பிரயாணத்தை நிறுத்த வேண்டியதாயிற்று.

இவ்வாறு மந்திரி ஸபையும், சட்டஸபையும் தங்களுக்கு உசிதமென்று தோன்றிச் செய்ய முற்பட்ட ஒரு கார்யத்தில் கார்யக்கமிட்டி காடியை விட்டடித்துக்குழப்பம் விளைவிப்பது நியாயமா? சட்ட ஸபையில் இந்த விவாதம் நடக்குமுன்னேயே காங்கிரஸ் தலைவர் இதைத்தடுத்திருக்கலாமே? அதை விட்டு, எல்லாச்சடங்கும் நடந்து முடிந்தபின்பு இவ்வாறு கனம் பிரதம மந்திரியைக்கட்டுப்படுத்தியது பரிபவமல்லவா?

கனம் சாஸ்திரியார் முதலிய எதிர் கக்ஷியார் மந்திரிகள், கார்யக்கமிட்டி போன்ற வெளிஸ்தாபனங்களின் கீழ் வேலை செய்வது ஜனநாயக முறைக்கு ஏற்றதல்லவென்று அடிக்கடி புகார்சொல்லி வருகிறார்கள். கனம் மந்திரிகள் இதை ஆக்ஷேபிப்பது வழக்கம். ஆயினும் தங்கள் விஷயத்திலேயே இம்மாதிரி கார்யக்கமிட்டி செய்துவிட்டதை மந்திரி எப்படி ஸஹிக்கிறாரோ தெரியாது.

இதில் முக்கியமாக ஜன நாயகதத்வ முறை நசுக்கப்பட்டு விட்டதைக் குறிப்பட வேண்டும். சட்ட ஸபையிலுள்ள மெம்பர்கள் யாவரும் மந்திரிகளும் புலுசுவின் ஐரோப்பிய பிரயாணத்தை ஆதரிக்கிறார்கள். தீர்மானமும் நிறைவேறியிருக்கிறது. இப்படியிருக்க இதைக்கார்யக்கமிட்டி தமது விசேஷாதிகாரத்தைக்கொண்டு மாற்றுவது ஜனநாயக முறைக்கு ஏற்றதா? சட்ட ஸபைத்தீர்மானத்தின் கதியென்ன?

சட்டஸபை முடிவின்மீது கவர்னர்கள் அதிகாரம் செலுத்தினால்மட்டும் அது அந்யாயமாம்! ஆனால் கார்யக்கமிட்டி தமது விசேஷாதிகாரத்தை பிரயோகித்து சட்டஸபைத் தீர்மானத்தைக் கவிழ்ப்பதுமட்டும் யோக்யமா!

சென்னை சட்டஸபைக்கும் மந்திரிகளுக்கும் இத்தகைய அகௌரவத்தை, அநீதியைக் கார்யகமிட்டி செய்ததைப்பற்றி சட்டஸபை மெம்பர்களும், மந்திரிகளும் முணுமுணுப்பதில் தோஷமென்ன? ஸ்வயமதிப்புக்கு விரோதமான கார்யத்தை மந்திரிகள் ஸஹிக்க முடியுமா?

---

## திருவல்லிக்கேணித்தமிழ்ச்சங்கம்.

### கம்பர் திருநாட் கொண்டாட்டம்.

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கத்தின் ஆதரவில் 16-3-38௳ புதன்கிழமை 6.30 மணிக்கு விசேஷ அலங்காரத்துடன் விளங்கிக்கொண்டிருந்த கொட்டகையின் கீழ் நவன உத்ஸவபங்களாவில் கம்பர் திருநாள் ஆரம்பமாகியது. காரியதரிசி கடவுள் வாழ்த்துப்பாட சங்கத்தலைவர், அட்வகேட் கே. எஸ். கிருஷ்ணசாமியய்யங்காரவர்கட்கு உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுத்து அவரை அன்று தலைமை வஹிக்குமாறு வேண்ட அவரும் அங்கீகரிக்க, தென்திருப் பேரை மஹா வித்வான் ஸ்ரீ அநந்தகிருஷ்ணய்யங்காரவர்கள் வாழ்த்துசுலோகத்தைத் தலைவர் படிக்க, புதுக்கோட்டை வித்வான் கநகராஜய்யரவர்கள் வாழ்த்துப்பாடல்களைக்காரியதரிசி பாட, கம்பராமாயணப்பாடல்களில் சிலவற்றை ஸ்ரீமான் ஆர். சந்தானகிருஷ்ணய்யங்காரவர்கள் இன்னிசையுடன் பாட, முன்னுரையாக அய்யங்காரவர்கள் சில வார்த்தைகள் பேச, ஸ்ரீஉப. வே வித்யாரத்நாகரம் கொடவாசல் நரசிம்மாசார் ஸ்வாமி "கம்பரின் கருத்து" என்ற விஷயம் பற்றி மிகவரியதோர் பிரஸங்கம் செய்ய அவரையும் சபைக்கு விஜயம் செய்திருந்த டாக்டர் சாமிநாதய்யரவர்களையும் தமது முடிவுரையில் அவைத் தலைவர் மிகவும் கொண்டாடியதுடன் கம்பரினும் சிறந்த கவியில்லை. என்றும், இத்தமிழ்ச் சங்கத்தை மிகவும் பாராட்டியும் பேசினார். சங்கத்தலைவர் வந்தனோபசாரம் வழங்க கொண்டாட்டம் இரவு 9.30 மணிக்கு இனிது நிறைவெய்தியது. 17–18 தேதிகளில் ராயப்பேட்டையிலும் இந்தக் கொண்டாட்டம் நடைபெற்றது.

ப. ரெ. திருமலை ஐயங்கார்.
காரியதரிசி.

---

## மதருஸ் அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்.

மதருஸ் சட்ட ஸபையில் ஜாதிப்பிறப்பு உரிமையைத் தகர்க்கும் மசோதாவையும், ஸ்ரீமான் எம். ஸி. ராஜாவால் 30-3-38 புதன்கிழமை ஆலயப்பிரவேச மசோதாவிற்கு ஆதரவு காட்ட பிரேரேபிக்கப்பட்டதுமான இவ்விரு மசோதாக்கள் பெரும்பாலான ஹிந்து சமூஹத்தாருக்கு கேட்டை விளைவிப்பதால் மே. த. கவர்னர் அவர்களை இவ்விரு மசோதாக்களையும் நிராகரிக்கும்படி வேண்டுகிறது.

---

## ஒரிஸா மந்திரிகளின் கோபம்.

### கவர்னர் நியமனத்தில் ஆக்ஷேபம்.

ஒரிஸா மாகாணத்தின் கவர்னர் ரஜாவில் சென்றதால் அவருக்குப் பதிலாக ஸீனியரான ஸிவில் ஸர்விஸ் அதிகாரி ஒருவர் ஆக்டிங் கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் நேற்றுவரையில் மந்திரிகளின்கீழ் வேலைபார்த்துவந்தவர் அத்தகையவரை மந்திரிஸபையின் தலைவராகச்செய்ததில் மந்திரிகளுக்கு ஆக்ஷேபமிருக்கிறது தங்கள்கீழ் வேலைசெய்து வந்தவர் திடீரென்று தங்களுக்கு மேற்பட்டவராக வருவதால் நிர்வாஹத்தில் குழப்பமேற்படக் கூடுமென்று மந்திரிகள் நினைக்கிறார்கள். ஆகவே இந்தநியமனத்தை அவர்கள் பலமாக ஆக்ஷேபித்தார்கள். இது கார்யகமிட்டிக்கும் அறிவிக்கப்பட்டது. அங்கும் இதைக்கண்டித்து ஒருதீர்மானம் செய்யப்பட்டு இந்த நியமனத்தை ரத்து செய்ய வேண்டுமென்று கோரப்பட்டிருக்கிறது.ராஜிநாமாவும் ஜோலாமாம்.

---

## ஜாதிப்பித்து மதப்பித்து!

### மந்திரியின் உபதேசம்.

சென்னையில் ஓர் பாடசாலையின் வர்ஷாந்திரக்கூட்டத்தில் கல்வி மந்திரியான கனம் ஸுப்பராயன் பேசுகையில் மாணவர்கள், ஜாதிப்பித்து மதப்பித்து பிடித்து அலையாமல் விசால நோக்கத்துடன் வாழவேண்டுமென்று உபதேசித்தார். மத சிரத்தையை மதப்பித்து என்று இவர் தோஷங் கூறுவது இவருடைய மதத்வேஷத்தையே விளக்குகிறது. இத்தகைய நாஸ்திகக்கொள்கையுள்ள மந்திரியின் மேற்பார்வையில் வித்யா இலாகா இருந்துவருவதில் நன்மையுண்டா?மதப்பித்து வேண்டாம். ஆனால் யாவருக்கும் காங்கிரஸ் பித்துப் பிடித்தாலல் போதும் போலும்?

---

## திருவல்லிக்கேணி ஸ்ரீராம நவமீ மஹோற்சவக் கொண்டாட்டம்.

### அறிக்கை.

திருவல்லிக்கேணி தமிழ்ச்சங்கத்தின் சார்பில் ஸ்ரீராமநவமி மஹோத்ஸவக்கொண்டாட்டத்தை முன்னிட்டு அடியில் கண்ட விபரப்படி ஸ்ரீ அஹோபில மடத்தில் உபன்யாசங்கள் நடைபெறும். 8-4-38 (காலை 8மணி) 'ஸ்ரீவால்மீகியின் கவித்திறன்'' ஸ்ரீமான் குறிச்சிஸ்ரீநிவாசவேதாந்தாசாரியார், மாலை6மணி "இராமாவதாரம்" வித்வான் கோ. அரங்கசாமி அய்யங்கார், 9௳ "கங்காவதரணம்" (மாலை 4 மணி) புராணம் ராகவாசாரியார், 10௳ (மாலை மணி 4) "சீதாகல்யாணம்" ஸ்ரீ உபவே பரவஸ்து ஸ்ரீநிவாஸாசார்ஸ்வாமி; 11௳ (மாலை 6 மணி "பரதன் மாண்பு" ஸ்ரீமான் வ. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார்; 12௳ (மாலை 6மணி) "சுக்ரீவஸக்யம்" ஸ்ரீமான் வி. கே. பார்த்தசாரதி ஐயங்கார்; 13௳ (மாலை 4 மணி) "அகத்தியனார்" ஸ்ரீமான் ப. ரெ. திருமலை அய்யங்கார்; 14௳ (மாலை 6 மணி "பிராட்டி வைபவம்" ஸ்ரீ உப. வே. கோபாலரங்காசார் ஸ்வாமி; 15௳ (மாலை 4 மணி) "மாருதிப்ரபாவம்" உபய பாஷா பண்டிட் ஸ்ரீநிவாஸமூர்த்தி அய்யங்கார் 16௳ மாலை 4 மணி ஸ்ரீவிபீஷண சரணாகதி ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்காரவர்கள் 17௳ (மாலை 4மணி) ஸ்ரீராமபட்டாபிஷேகம் ஸ்ரீமான் சேட்லூர் ராஜகோபாலசாரியார்.

ப. ரெ. திருமலை ஐயங்கார்,

---

## குடந்தை முனிசிபல் எலக்ஷன்

### காங்கிரஸில் பிளவும், போட்டியும்.

குடந்தையில் எல்லா வார்டுகளிலும் நடக்கப்போகிற எலெக்ஷனுக்கு, காங்கிரஸ் அட்ஹாக் கமிட்டியென்கிற ஸர்வாதிகாரி பிரமுகர்கள் அனேகம் பேரைப்பொறுக்கியிருக்கிறார்கள். இதில் பலர் சிறுவயதினர். அநுபவமில்லாதவர்கள். தகுந்தவர்கள் பலர் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள். இதனால் காங்கிரஸில் பிளவு.அனேகர் நிற்க விரும்பவில்லை. வேறு சிலர் சொந்த ஹோதாவில் நிற்பார்களாம். காங்கிரஸ்காரர்களிலே அதிகவரியை சிலர் ஆதரிக்கிறார்கள். சிலர் எதிர்க்கிறார்கள். வோட்டர்கள் வரிக்குறைவையே விரும்புகிறார்கள்.

மேலும் அட்ஹாக் கமிட்டி தெய்வத்திடம் வரன் கேட்கப் பிரியப்படாத அநேக பிரமுகர்கள், நீண்டகால அநுபவமுள்ளவர்கள் அங்காங்கு பலவார்டுகளில் அபேக்ஷகர்களாக நிற்க முன்வருவார்களென்றும் தெரிகிறது.

எப்படியும் காங்கிரஸ்காரர் போட்டியில்லாமலே ஜயித்துவிடலாமென்ற கனவு பலிக்காதென்று சொல்லப்படுகிறது.

ஒரு வோட்டர்

---



## ஆரியத்தாய்க்கு ஓர் வேண்டுகோள்.

### ஆரியப் புதல்வர்களே! தூக்கத்திலிருந்து எழுமின்.

[V, ராமச்சந்திர அய்யர் திருவிடமருதூர்]

(சென்றவாரத் தொடர்ச்சி.)

தாயே ஆர்யா!

"வர்ணாச்ரம தர்மங்களுக்காக உடல், பொருள், ஆவியைத் தத்தம் செய்ய முன்வந்துள்ள ஆரியத்தவப்புதல்வர்களை ஆசீர்வதித்து தர்மஸ்வரூபிணியாகிய நீ, தலைசிறந்து விளங்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்."

தர்ம துரோகிகளாகிய அரக்கர்களைக்கொல்வதாகவே கங்கணம் கட்டிக்கொண்டு, கூரிய அம்பும், வளைந்த நெடிய கோதண்டமும் தோள்மேல் தாங்கிய நாடு முழுதும் கால் நடையாகவே சஞ்சரித்துநின்ற வீர ராமனின் தோற்றத்தையும்;' சாதுர்வர்ணம் மயாஸ்ருஷ்டம்' நான்கு வருணங்களும் என்னால் உண்டு பண்ணப்பட்டன வென்றும், அந்நான்கு வருணத்தவர்களின் தர்மங்களை ரக்ஷிக்கக்கடமைப்பட்டவன் நானே என்றும், தர்மம் குன்றி அதர்மம் பெருகும் காலத்தும், சாதுக்களை ரக்ஷிப்பதற்கும், தர்ம துரோகிகளாகிய அரக்கர்களை அடியோடு நாசம் செய்து தர்ம தேவதை நாட்டில் தாண்டவம் புரியும்படி நிலைநாட்டவும் ஒவ்வொரு யுகங்களிலும், நானே அவதரிப்பேன்,' என்றுஉறுதி கூறி, கர்ஜித்து மறைந்த கிருஷ்ணனின் உரு ஒளித்தோற்றத்தையும் கண்கூடாகக் கண்டு களிப்போமா? அக்காலமினி என்று வரும்!-என்று சநாதநிகள் கண்ணுங் கண்ணீருமாய்நிற்கின்றார்கள். இத்தருவாயில் ஆரியத்தாயே அஞ்சாது ஆசி கூறுவாயாக.

அன்று இரணியாக்ஷன் என்னும் கொடிய அரக்கன் வலிமையினால் உன்னைப்பாயாகச்சுருட்டிக்கொண்டு போய் கடலில் ஒளிந்துகொண்ட காலத்தும், ரக்ஷிப்பதையே கடமையாகக்கொண்ட திருமால், வராக அவதாரமெடுத்து. கொடிய அரக்கனைக்கொன்று தர்மஸ்வரூபிணியாகிய நீ என்றும் சீரும், சிறப்பும் பெற்று விளங்கும்படி திரும்பவும் நிலைநாட்டவில்லையா? தர்ம தேவதையாகிய உனக்கு இடர் விளைவதைக்கண்டு எனது ஆண்டவன் வாளாயிருந்து விடுவாரா? ஒருக்காலுமிரார்.

ஆஹா........ஹா அதோ பார்! தர்ம தேவதையாகிய நீ, எங்காங்கு நாட்டில் களித்துக்குதித்துச் சந்தோஷமாய் சீருடன் வாழ விரும்பி விசித்ர பந்தல்களமைத்து சீரிய ஒழுக்கமும், தூய நடையையும் உடைய காசி முதல் கன்யாகுமரி வரையிலுள்ள சனாதன பண்டிதர்கள் கூட்டங் கூட்டமாய் ஒன்று சேர்ந்து பரிஷத் நடத்தி மங்கள ஒலியுடன், வேதகோஷத்துடன், உன் திரு விழாவைக் கொண்டாடி வருகிறார்கள். உன் திருக்கோயில்களை அலங்கரித்து உன் திருவுருவத்திற்குமாலை சூட்டி மங்கள ஹாரத்தி எடுத்து இன்னிசை பாடி வருகின்றனர்'

தர்மதேவதையாகிய தாயே நீ தலை தூக்கிநிமிர்ந்து ஆரியத்தவப்புதல்வர்களாகிய சனாதனப்பண்டிதர்களின் ஆசீர்வாதமாகிய அரிய சொற் பொழிவுகளை ஆபரணங்களாகப்பூண்டு வீற்றிருப்பாயாக.

ஆஹா! தாயே! இதென்ன ஆச்சர்யம் கண்ணனும் தன்னுடைய அழகிய திருக்கரங்களில் ஏந்திய வேணுவை விடுத்து சமீபத்தில் அழகிய தோகையை விரித்து ஆடிக்கொண்டிருந்த மயில் கூட்டங்களையும்,தன்னையும்மறந்து தன் வாயில் பாதி மெளவிய புற்களுடன், திருமேனி அழகைக்கண்டு பிரமித்துநிற்கின்ற பசுக்கூட்டங்களையும் பொருட்படுத்தாது, திருக்கரங்களில் ஏந்திய திருமணப்பத்திரிகையுடன் உன் அழகிய திருமுக மண்டலத்தின் சோபையில் பவழம் போன்று குவிந்து, காணப்படும் சிவந்த உதடுகள் மலர்ந்து, முத்துப் போன்ற பற்கள் தெரிய, தவழும் புன்சிரிப்பை எதிர்பார்த்த வண்ணம் கடைக்கண்ணால் நோக்குகின்றானபார்!

ஆதலால் தாயே கண்ணனின் பத்திரிகையை ஏற்று மணக்கோலத்துடன் விளங்கி,தர்ம தேவதையாகிய நீ ஆர்யதர்மப்பத்திரிகையை அகிலமெங்கும் பரப்பி,அரக்க நெஞ்சமுள்ள ஆரியப்புதல்வர்களையும்,அன்புடைய நெஞ்சத்தவரும் வர்ணாச்ரம தர்மங்களில் பற்றுள்ளவராய நீடித்து நின்று தழைத்தோங்கும்படி அருள்புரிவாயாக.

---

## புராணக் கதை.

### ஹேமாங்கன் அல்லது தீர்த்ததான பலன்.

(ஸ்ரீ வத்ஸ ஸோமதேவ சர்மா.)

ஸ்காந்தம், வைஷ்ணவ காண்டம், வைசாக மாஹாத்மியத்தில் அம்பரீஷனுக்கு நாரதர் கூறியது.

உலகைப்படைத்த பரமன் எல்லோருக்கும் எல்லா காரியத்திற்கும் அநுகூலமாக வைசாகத்தைப் படைத்தார். அச்சமயம் திருமால் ரமா தேவியுடன் வானவர் சூழ வையகத்தே வீடு வீடாக வருகிறார். அதிகாலை, அதி காலை, வைசாக ஸ்நானம் மஹாத்மிய படனம்,, ஜலம் குடை பாதுகை விசிறி தத்யன்னம் சந்தனம் முதலிய தானம் முதலிய செய்வோரை லக்ஷ்மீ கடாக்ஷித்துச் செல்கிறாள். அதில்லாவிடத்தே இருக்கும் தநத்தை வீணாக இருப்பானேனென்று கொண்டு செல்கிறாள்!

எல்லா தானங்களையும் விட காலத்திற்கேற்றதும் சுலபமும் அதிக பலனை அளிக்க வல்லதும் தீர்த்த தானமே. சூரிய வம்சத்திலே ஹேமாங்கன் என்ற அரசன் உத்தம தார்மிகன். ப்ரதிதினம் தானம் செய்யாமலிரான். ஸ்வல்பமாக தானம் செய்ய அறியாதவன். சுருங்கச்சொல்லின் அவன் செய்யாத தானமே இல்லை! ஆனால் எங்கும் எல்லோருக்கும் எளிதில் கிடைக்குமென, குரு வஸிஷ்டர் சொல்லியும் தீர்த்த தானம் மாத்திரம் செய்யாதிருந்தான்.

அன்றியும் மற்ற தானங்களையும் கூன் குருடு, நொண்டி முடம் முதலியவர்க்கே செய்தான்! இதிலும் குரு சொல்லை மீறி போலிக்கருணையால் தர்ம ஸூக்ஷ்மத்தை அறியாமல் அபாத்ர தானமே செய்தான். ஜலமளிக்காதவர் சாதகபாகபிறப்பர் என்ற புராணச்சொல்லையும் அலக்ஷ்யம் செய்தான்! இறந்தபின் மும்முறை சாதகமாகவும் கழுகாகவும் நாயாகவும் பல்லியாகவும்பிறந்தான்.

மிதிலாபுரியில் ச்ருதகீர்த்திஎனும்மன்னன் மாளிகையில் பல்லியாக இருந்தார் ஹேமாங்கன். அங்கு தற்செயலாக ச்ருததேவரென்னும் மாமுனி வந்தார். வேந்தன் விதிப்படி பூஜை செய்து அவர் காலைக்கழுவிய நீரைத் தன் தலை மீது தளித்துத் தன் மனைவிக்கு அளித்தான். அதில் ஓர் திவிலை இப்பல்லி மீது விழ அதற்கு பூர்வ ஜன்மஜ்ஞானம் உண்டாயிற்று. தன்னைக் காக்கும்படி கதறிற்று. நீயாரென அவர் வினவ தனது வரலாற்றைக்கூறி இவ்வளவு புண்யம் செய்திருந்தும் இப்பிறவி பெறக் காரணம் யாதென்றது.

ஞானக்கண்ணாலுணர்ந்து ச்ருதிதேவர் கூறுகிறார். வேந்தே!வேதம்வகுத்தது தர்மம். அதை விளக்கவந்தவை தர்ம சாஸ்த்ர இதிஹாஸ புராணங்கள் அதில் கூறப்படும். தர்ம ஸூக்ஷ்மங்களை சிறிதென்றோ புராண தர்மமென்றோ அலக்ஷ்யம் செய்யலாகாது. தீர்த்த தானம் சுலபமானதென்று அதைச்செய்யாதொழிந்தனை. ஆதலால் குனிந்து பாரிலுள்ள ஜலத்தைப்பருக முடியாத சாதகமாகப்பிறந்தனை. புராணத்தை நம்பாதது முதல் குற்றம்.

மேகத்தையே எதிர்பார்த்து நின்றாய்! குருவே ப்ரத்யக்ஷ தைவம்! அதிலும் பிரும்மநிஷ்டர், வஸிஷ்டர். அவர் சொல்லையும் அலக்ஷ்யம் செய்தாய்! அதற்கீடான பாபம் வேறில்லை! தைவாபசாரம் நேரிட்டால் குரு கருணையால் அதை அகற்றலாம். குருவுக்கு அபசாரம் செய்திடின் தைவமும் கைவிடும் என்பதை அறியாயா? வஸிஷ்டர் சொற்படி நடவாவது இரண்டாங்குற்றம்!

எண்ணிறந்த தானம் செய்தாய்! அபாத்ரத்தில் அளித்ததால் சாம்பலில் செய்த ஆஹுதி போலாயிற்று! அங்கஹீனர் தயா பாத்ரமேயன்றி தானபாத்ரமல்ல? வாஸனை நிறைந்த புஷ்பங்களை அளிக்கின்றனதென்று முட்செடியைப் பூசிக்கலாமா?அச்வத்தத்தை அலக்ஷ்யம் செய்யலாமா? குருடர் கூட்டமாயிருந்தாலும் எதிரிலுள்ள பொருளைப் பார்ப்பரோ? ஸத்பாத்ரத்தைவிட்டு அஸத்பாத்ரத்தில் தானம் செய்தது மூன்றாம் குற்றம்.

அந்தணர் அதிலும் வேதியர். அதிலும் தபோ நிஷ்டர், அதிலும் ஞானி, ஸத்பாத்ரம்! ஞானி திருமாலின் உருவேயாம். அங்களிப்பது அக்ஷய பலனை அளிக்கும். தர்சனமாத்ரத்தால் நம்மைப் பாவநமாக்கும் ஸாதுக்களையல்லவோ பூஜிக்கவேண்டும். அஸத்பாத்ரதானம், அவர் செய்யும் தீய கார்யங்களுக்குதவுவதால் தாதாவையும் அப்பாபத்திற்குள்ளாக்கும். தானம்செய்வது பெரிதல்ல! ஸத்பாத்ரத்தில் அதுசேரவேண்டும்!

உனது நிலைக்கிறங்கினேன்! எனது தீர்த்த தான பலத்தில் சிறிதளவு உனக்களிக்கிறேனென்று ச்ருததேவர் தத்தம் செய்தார்! உடனே பல்லி உடல் வீழ்ந்தது. திவ்யதேஹம் தோன்றிற்று. முனிவரைப்பணிந்து வானுலகு சென்றார். பலகாலம் அங்கு தங்கி பின்னர் ககுஸ்தனுக்குச் சுதனாகப்பிறந்தான் ச்ருத கீர்த்தி எனும்மிதிலாதிபன் மீண்டும் வைசாகபெருமைக் கேட்க ச்ருததேவர் விஸ்தாரமாக வர்ணித்தார்.

[*விரைவில் பக்தர் வேண்டுகோள்படி வைசாக மாஹாத்மியம் எனும் நூல் தமிழில் வெளியாகும். இவ்வாண்டு வைசாக விரதத்தை, அதன்படி அநுஷ்டித்து தார்மிகர் நன்மை பெறலாம்.]

---

## ஜமீன்தாரி ஒழிப்பு மசோதா.

### சென்னைகவர்னரின் அனுமதி மறுப்பு.

இம்மாகாணத்தில் ஜமீன்தாரி முறையை ஒழிப்பதற்காக ஒரு மெம்பரால் சென்னை சட்ட ஸபையில் கொண்டு வரப்பட்டுள்ள மசோதாவுக்கு சென்னை கவர்னர் அநுமதி கொடுக்க மறுத்துவிட்டார்.

---

மூகபஞ்சசதியின் இரண்டாம் பாகம்.
"கடாக்ஷ சதகம்"
Mr. G. V. கணேசய்யர், B.A, B.L.,
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷக் குறிப்புகளுடன் கூடியது.
தபால்செலவு வேறு] [விலை அணா 0—8—0
மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—
ஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட்,
டவுன்ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

215227

158

# வெளியூர்ச் செய்திகள்.

## பெத்தநாயகன் பாளையம்.

### ஓர் விவாகம்.

சேலம்ஜில்லா ஆத்தூர் தாலூக்கா பெத்தநாயக்கன் பாளையத்தில் நிகழும் ஈஸ்வர-ஸ்ரீ பங்குனி-மீ 4வ (17-3-38) குருவாரம் சேங்காலிபுறம் ப்ரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷதர் அவர்களின் குமாரத்தி சௌ. சுபத்திரைக்கும் மகாதானபுரம் ரிடையர்ட் டிஸ்டிரிக்ட்போடு இஞ்சினீயர் ஸ்ரீமான் துரைசாமி அய்யர் அவர்களின் த்விதிய குமாரன் இ. வி. நாகரத்தினத்திற்கும் வழுவற்ற வைதீக கர்மாக்களுடன் கூடிய விவாக மஹோத்சவம் மிகச் சிறப்புடன் நடைபெற்றது.

இம் மேலான விவாகத்தை மஹாகிஷ்டர்களும் ஆஹிதாக்னிகளுமான ப்ரம்மஸ்ரீ தண்டாங்கோரை அப்பாதுரை தீக்ஷதர் என்கிற ரகுநாதவாஜபேயி, சேங்காலிபுரம் நாராயண வாஜபேயர், மணக்கால் ச்ரௌத ரத்னம் முத்து ச்ரௌதிகர், கும்பகோண மடம் ஆஸ்தான வித்வான் கவிரத்ன பஞ்சாபிகேச சாஸ்திரிகள், கடலங்குடி நடேசசாஸ்திரிகள் அம்மணூர் வெங்கட்டராம சாஸ்திரிகள் காளியாக்குடி நடேசசாஸ்திரிகள் மதுரை M. N. சுப்ரமண்ய சாஸ்திரிகள் முதலியவர்களும் சேலம் ரிடையர்ட் ஜட்ஜ் ஸ்ரீமான் சுந்தரய்யர், பிரபல வக்கீல் Y. K. சேஷய்யர் மற்றும் தீக்ஷதாவர்களின் ஆப்த நண்பர்கள் பலர் பற்பல விடங்களிலிருந்தும் விஜயம் செய்திருந்து நடத்திக்கொடுத்தனர்.

மாங்கல்யதாரண காலத்தில் கும்பகோணம் ஸ்ரீமடம்ஆசார்யாளால்அனுப்பப்பெற்றிருந்த பவுனுடன் அம்பாள் பிரசாதமும், சேர்ந்தமங்களம் அவதூத ஸ்வாமிகள் அனுப்பியிருந்த ப்ரசாதமும் தம்பதிகளுக்கு ஆசீர்வதித்து அளிக்கப்பட்டது.

விவாகமத்யத்தில் ஆஹிதாக்னிகளில் சிலரும் கவிரத்ன பஞ்சாபிகேச சாஸ்திரிகளும் தர்மத்தை குறித்து சில உபன்யாசங்களும் ப்ரம்ஹஸ்ரீ கடலங்குடி நடேசசாஸ்திரிகள் அனந்தராம தீக்ஷதர் இவர்களால் ருக்மணி கல்யாண வைபவமும் ஷை யார் சகோதரர் ப்ரம்ஹஸ்ரீ நாராயண தீக்ஷதர் அவர்களால் விவாஹதர்மம் என்பதை குறித்த உபந்யாசமும் காளியாக்குடி நடேசசாஸ்திரிகள் அவர்களால் சீதாகல்யாண காலக்ஷேபமும் வெகு அழகாகச் சொல்லப்பட்டது. இத்துடன் திப்பிராஜபுரம் ஜெயராமஅய்யர் வாய்ப்பாட்டு மகாதானபுறம் கிட்டப்பா அய்யர் பில்லாங்குழல் கச்சேரிகளும் நடைபெற்றன.

அவ்வூர் வேதவித்துக்களான சந்நியாசிகள் அவர்கள் முன்னிலையில் ப்ரம்ஹஸ்ரீ சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷதாவர்கள் குசேலோபாக்யானம் உபன்யசித்தனர்.

கல்யாண இரண்டாவது தினத்தில் செங்கற்பட்டு நியமாத்யயன வேதபாடசாலை வாத்தியார் கிருஷ்ண மூர்த்தி கனபாடிகளுக்கு ப்ரம்ஹஸ்ரீ அனந்தராம தீக்ஷதாவர்வர்களால் தர்மமாக ஸீமந்த முகூர்த்தம் செய்துவைக்கப்பட்டது ஓர் விசேஷமாகும்.

சனாதனதர்மம் குன்றிவரும் இக்கலியில் இப்போக்கொத்த வைதிக நியமங்களுடன் கூடிய சாஸ்திரோக்தமான விவாகம் நடந்தானது ஆஸ்திகர் அனைவருக்கும் பரம ஆனந்தத்தை யளித்தது.

V. சிவராமய்யர், காரியதரிசி.

## சென்னை.

### ஸ்ரீ கீதா ச்ரவண பக்த ஸபை.

ஸ்ரீமத் கீதா சார்யனது அருளையும் ஸ்ரீ பகவத் பாத அநுக்ரஹத்தையும் முன்னிட்டு (28—2—32) ஆரம்பிக்கப்பட்ட இச்சபையின் அருமாண்டுவிழா. (10—4—38) ஈச்வர-ஸ்ரீ பங்குனி-மீ 28வ பானுவாரம் காலை 8-மணிக்கு சென்னை முத்தியால் பேட்டை பவழக்காரத் தெரு 109 நெ. ஸ்ரீ இராமாநுஜம் செட்டியார் ஹையர் எலிமெண்டரி பாடசாலையில் நடைபெறும். பிரம்ம ஸ்ரீ ஸாஹித்ய வாங்கமுக பூஷணம் தர்ம ஸேவா துரந்தர பஹோபதேசக ஸ்ரீ வத்ஸ ஸோமதேவ சர்மா அவர்கள் ஸ்ரீ கண்ணன் தலைமையில் ஸ்ரீ பாகவத உபன்யாஸம் செய்வார்.

### ஸ்ரீ தேவீ பாகவத உபன்யாஸம்.

சென்ற தாத்ரு-ஸ்ரீ மாசி-மீ 3வ ஆரம்பித்த ஸ்ரீ கர்க்க ஸம்ஹிதை பூர்த்தியாகி நாளது ஈஸ்வர-ஸ்ரீ பங்குனி-வ (11-4-38) இரவு மேற்மாம்பலம் ராமநாதன் தெரு, ஸ்ரீ பஞ்சநாத பவனத்தில் ஸ்ரீ தேவீபாகவத உபன்யாசம் பிரும்மஸ்ரீ தர்மஸேவா துரந்தர ஸ்ரீ வத்ஸ ஸோமதேவ சர்மா அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு, பிரதி திங்கள், செவ்வாய்களிலும் இரவு 8-மணிக்கு உபன்யாஸம் நடைபெறும் பக்தர்கள் ச்ரவணம் செய்து ஸ்ரீ தேவியினருளைப்பெற பிரார்த்தனை.

மாம்பலம் ஊராக ஆரம்பித்தது முதல் ஸ்ரீ சர்மா அவர்களால் ஸ்ரீமத் ராமாயணம், ஸ்ரீபாகவதம், ஸ்ரீ ஹரிவம்சம், ஸ்ரீகர்க்க ஸம்ஹிதை முதலிய புராணங்கள் விஸ்தாரமாகக் கூறப்பட்டன.

### ஓர் நன்றி யறிவிப்பு.

எனது குமாரத்தி சௌ. சுபத்திரையின் விவாக வைபவத்திற்குச் சிற்சில அசௌகர்யங்களால் தாங்கள் வர முடியாமலிருக்கும் விஷயத்தை அன்புடன் எனக்கு அறிவித்துள்ள எனது ஆப்த நண்பர்கள் அனைவர்க்கும் ஆர்யதர்மத்தின் வாயிலாக அன்பார்ந்த நன்றியறிதலை அறிவித்துக்கொள்ளுகிறேன்.

சேங்காலிபுரம், அனந்தராம தீக்ஷிதர்.

### கயத்தூர்.

(நன்னிலம்)

நன்னிலம் தாலுக்கா கயத்தூர் என்னும் கிராமத்தில் அக்ரஹாரத்தின் மேல் பக்கமாய் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி, ஜகத்குரு ஸ்ரீசங்கராச்சாரியஸ்வாமிகளின் அனுக்ரஹத்தால் ஷையூர் வாசியான P.S. சீனிவாசய்யரால் ஸ்ரீ சித்தி விநாயகமூர்த்தி ஆலயம் நூதனமாக ஸ்தாபனம் செய்திருப்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

ஷை விநாயக பகவானிடம் வனங்குடி—சின்னப்பண்ணை ஸ்ரீ S. ரூமய்யா நாயுடுஅவர்கள் ரொம்ப பக்தியாயும், அளவுகடந்த நம்பிக்கையும் வைத்திருந்தார். ஷை நாயுடுகள் அவர்களின் இஷ்டப்பட்ட காரியங்கள் ஸ்ரீ கணேச மூர்த்தி கிருபையால் நிர்விக்னமாக முடிந்தபடியால் பகவானிடத்தில் அன்பு ஏற்பட்டு ஷை நாயுடுகாரின் குமாஸ்தா ஸ்ரீமான் R. மார்க்கண்டய்யர் அவர்களின் முயற்சியால் ஷை விநாயகமூர்த்திக்கு அதே ஊரில் நாயுடுகள் சொந்த நிலத்தில் 300 குழி நிலம் ஸமர்ப்பித்து அந்த நிலத்தின் வரும்படியைக் கொண்டு ஒரு காலம் பூஜையும் மீதியைக் கொண்டு பகவானுடைய அபிஷேகம் முதலிய செலவுகளுக்கு உபயோகப்படும்படி செய்தார்கள்.

P. S. சீனிவாசய்யர், கயத்தூர்.

## இந்தியன் காண்ட்ராக்ட் ஆக்ட் 176 வது பிரிவுப்படி வயிர நகைகள் ஏல நோட்டீஸ்.

கும்பகோணம் பச்சையப்பமுதலித்தெரு கடலக்குடி கிருஷ்ணய்யங்கார் குமாரர் K. ரெங்கசாமிய்யங்காரிடம் மாயவரம் தாலூகா திருக்களாச்சேரியில் இருக்கும் ரத்தினமுதலியார் ஸ்வீகார குமாரர் T. R. சொக்கலிங்க முதலியார் 1. கும்பகோணம் டபீர் கீழத்தெருவில் இருக்கும் சுப்பண்ண அய்யர் குமாரர் S வெங்கட்டருமய்யர் 2. இவர்களால் 6—6—34ல் இதனடியில்கண்ட நகைகளை அடகாக வைத்து அவைகளின் பேரில் ஷை தேதியில் ரூ. 1000 கடன்வாங்கிக்கொண்டு அதற்கு மாதம் 1-க்கு ரூ. 100-க்கு ரூ. ¾ விதம் வட்டியுடன் கொடுப்பதாக எழுதிக்கொடுத்திருக்கிற நகை அடகுக்கச்சாத்தில் கண்டபடிக்கு அதில் வரவு வைத்திருக்கிறபடி 3-6-37ல் ரூ.2—0—0 போக பாக்கி தொகைகளைக் கொடுத்துவிடும்படி நோட்டீஸ் கொடுத்தும் ஷையார்கள் கொடுக்காமல் இருந்துவந்தும் ஷையார்கள் பேரில் ஷை கடன் தொகைக்காக கும்பகோணம் டிஸ்டிரிக்ட் முன்ஸீப் கோர்ட்டு O. S 47 / 38 நம்பரில் ரூ. 1332—8—0 க்கு தாவாசெய்து 24—3—38ல் சிலவு தொகை பின்வட்டியுடன் தீர்ப்பாகி இருக்கிற தொகையை இன்னும் கொடுக்காமல்இருந்து வருகிறபடியால் இந்தியன் காண்ட்ராக்ட் ஆக்ட் 176-வது பிரிவுப்படி ஷை K ரெங்கசாமி அய்யங்கார் அவர்களுக்குள்ள பாத்தியப்படி கும்பகோணம் பெரியதெரு செ. ச. குப்புசாமி செட்டியார் அவர்கள் காசுக்கடையில் 9—4—1938 தினம் பகல் 3-மணிக்கு மேல் 5-மணிக்குள் பஹிரங்கமாக ஏலம் போடப்படும்.

ஷை ஏல நகைகளை ஏலம் போடு முன் பார்க்கவும் விவரம் தெரிந்துகொள்ளவும் விரும்புகிறவர்கள் அடியில் கையொப்பமிட்டவரிடம் நேரில் வந்து தெரிந்துகொள்ளவும்.

### நகைகள் விவரம்.

(1) வயிரகடுக்கன் ஜதை 1-க்கு உருப்படி 2-க்கு உத்தேசம் 2¼ காரட் மதிப்பு ரூ. 500.

(2) ஒத்தக்கல் வயிரமூக்குத்தி ஒன்றும் உத்தேசம் செண்டு 98 அகில் வயிர சன்னம் 3 உத்தேசம் செண்டு 36 கொத்து முத்து உள்பட மதிப்பு ரூ. 250.

K. ரெங்கசாமி அய்யங்கார்,
29, பச்சையப்ப முதலித்தெரு,
கும்பகோணம்.

தர்ம சாஸ்திரச் சுருக்கம்.

(மூன்றும் பதிப்பு)

பிராம்மணர்களின்கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், "வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராம்மண குடும்பங்களிலும்இருக்கவேண்டியதவசியம்.

விலை ரூ. 1—8—0 வி. பி. பிரத்யேகம்.

கிடைக்குமிடம் :—

பப்ளிஷர்.
தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
கீழவிடையல், திருச்சிரா P. O.

Printed by S, Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram,

ஆர்யதர்மம்
ஸ
H 15
23
14-4-1938

215314

619
679
215314
199
OFFICE OF THE ... MADRAS 29 APR 1938

Registered No. M. 2913

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்.

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
...தாதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

| | | | | |
|---|---|---|---|---|
| 4 / 23 | | கும்பகோணம் கலி 5040 பஹுதான்ய-ஞூ சித்திரை-மீ 2உ 1938 ஞூ ஏப்ரல்-மீ 14உ | | ஒல / 15 |

## ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0.

தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

## காந்தி கவர்னர் ஸந்திப்பு.

வங்காள பந்தோபஸ்துக் கைதிகள் விடுதலைப்பக்கமாக காந்திஜி மீண்டும் பெரிய முயற்சி செய்துவருகிறார். சிறைமந்திரியுடன் அடிக்கடி பேசிவருகிறார்.

வங்காள கவர்னரையும் கண்டு 2 மணிநேரம் அவருடன் காந்திஜி பேசினார்.

பலாத்காரக் கைதிகள் சிலரை ஜயிலில் கண்டு அவர்களுடைய மனப்போக்கையும் அவர் அறிந்தார்.

## கூட்டத்தில் இடி

7பேர் மரணம்.

கோளத்தில் நீலேச்வர மென்றவூரில் கோவிலில் கதாகலியென்ற உத்ஸவம் நடைபெறுவதைப் பார்க்கக்கூடியிருந்த கூட்டத்தில் இடிவிழுந்தது. இதனால் 7பேர்உடனே இறந்தார்கள். 50பேர்காய மடைந்தார்கள். இறந்தவர்களின்தொகை இன்னும் அதிகமிருக்கலாமென்று நினைக்கப்படுகிறது.

## தாஸ் மசோதா

ராஜாங்கசபையில் நிறைவேறியது.

சாரதாச் சட்டத்திருத்தமான தா... சோதாவானது காங்கிரஸ் ... ஸ்ரீமான் ராம...

## ஹைதராபாத்தில் கலஹம்

2 பேர் கொல்லப்பட்டனர்.

ஹைதராபாத்தில் ஏற்பட்ட ஹிந்துமுஸ்லிம் கலகத்தில் 2பேர் கொல்லப்பட்டும், அநேகர் காயம்பட்டும் போயினர். இன்னும்கலகம் அடங்கியபாடில்லை.

## ஸர் ஸி. பி. யின் திவான் பதவி

... நீடிப்பு.

திருவாங்கூரில், ஸர். ஸி. பி. ராமஸ்வாமி ஐயரின் திவானுத்யோகத்தை இன்னும் 5வருஷத்திற்கு மஹாராஜா நீடித்திருக்கிறார். இதைப்பற்றி திருவாங்கூர் காங்கிரஸ்கமிட்டியார் சிலதினங்களுக்குமுன் கூடிய கூட்டத்தில் பலமாகக்கண்டித்து ஓர் தீர்மானம் செய்தனர். ஸர். ஸி. பி. யின் ஆட்சியில் பிரஜைகளின் நியாயமான உரிமைகள் பறிக்கப்படுவதாயும், அவருடைய நிர்வாஹத்தால் அந்தேசத்தில் பெரிய அதிருப்தி ஏற்பட்டுவிட்டதாயும் தீர்மானத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. வேறுசில தனிப்பட்டவர்களும் இந்த உத்திரவை ஆக்ஷேபிக்கிறார்கள்.

## மதுரை காங்கிரஸ் காரர்களுள் அடிதடி

போலீஸ் வரவழைக்கப்பட்டது.

மதுரைகாங்கிரஸ் கமிட்டியின்கூட்டம் சிலதினங்களுக்குமுன் நடந்தபோது அபேதவாதியொருவர் காரியதரிசிப் பதவியிலிருந்து விலக்கப்பட்ட காரணமாக கலஹமும் அடிதடியும்நேர்ந்தது. அந்தஅபேதவாதி வெளியே தள்ளப்பட்டு அடிக்கப்பட்டார். அவரிடமிருந்த காங்கிரஸ்தஸ்தாவேஜி... மாகப் பிடுங்கிக்கொ... நில்லே...

காங்கிரஸ் தலைவர்களில் சிலர்லண்டன்செல்வார்களாம். ஸமஷ்டி திட்டவிஷயமாக காங்கிரஸாரும் பிரிடிஷ்மந்திரிகளும் கலந்துபேசி ஸமாதானம் செய்துவைப்பதே ராஜப்பிரதிநிதி சீமைசெல்வதின் காரணமென்று கூறப்படுகிறது.

## இந்தியா சட்டஸபை

கால நீடிப்பு.

தற்போதுள்ள இந்தியாசட்டஸபையின் காலகெடுவானது வருகிற அக்டோபர்மாதத்தில் பூர்த்தியாகிவிடுகிறது. ஆயினும் இப்போது எலக்ஷன் நடைபெறுமென்று தோன்றவில்லை. இந்தஸபையே இன்னும் ஒருவருஷம் நீடித்திருக்குமென்றும் கவர்னர்ஜெனரல் உத்திரவு பிறப்பித்துள்ளார்.

## ஸ்ரீமான் டி. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் காலமானர்.

குடந்தையில் பிரபலவக்கீலாக விளங்கிவந்த ஸ்ரீமான் டி. கிருஷ்ணஸ்வாமிஅய்யங்கார் அவர்கள் 56வயதில் இரவு காலமானார். சிலமாதமாக இவர் நோயுற்றிருந்தார். இவ்வூரில் ஸ்கூல், காலேஜ், பாங்கு, டவுன்ஹால்போன்ற பலபொதுஸ்தாபன நிர்வாஹங்களில் ஸம்பந்தம்பெற்றுத் திறமையாக நிர்வாஹம் நடத்தியவர். வக்கீல்ஸங்கத்தில் தலைவராக இருந்து நன்மதிப்பைப்பெற்றவர். இவர் மரணம்மிகவும் வருந்தத்தக்கதே. இவருடையகுமாரர் ஸ்ரீமான் கே. ஆராவமுதய்யங்கார் அவர்கள்இவ்வூரில் அட்வகேட்டாக இருந்துவருகிறார்.

## THE INDORE PROCLAMATION.

The Committee of the Varnashrama Swarajya Sangha having carefully considered the Holkar's reply to the representation of orthodox Hindus for cancelling the Proclamation making all temples the common property of all Hindus whatever be the previous practice of vested rights, has issued the following statement to the Press.

The Holkar's published reply runs thus:—"I had considered the question in all aspects before issuing the declaration regarding temple-entry and have come to the conclusion that no civilised state or country can keep a section of people under the burden of untouchability and deny them privilege given to other Hindus".

It pains me to see a section of people still unwilling to advance with the times. I am unable to consider your request to withhold the order and would ask you all to join me in eradicating the blot of untouchability which is no way contrary to the true tenets of Hindu religion.

H. H. The Maharaja Holkar has no doubt laid the Hindu public under obligation by explaining the reasons for the act. But if he had previous to the issue of proclamation arranged for acquainting the people with what he proposed to do, he would have either created a favourable public opinion or have acted differently. Now it is a case of finding reasons for what has been done. And these reasons are not satisfactory at all.

In the first place, H. H. the Holkar is wrong in saying that there was any privilege claimed any-body. For in the institution of separate temple for separate sections of the Hindu people, there is no question of privilege or disability at all, beyond, of course, what arises from the institution of property which no doubt secures to some the right of exclusive ownership as against others. Certainly it cannot be His Highness's intention to abolish the right of property individual or corporate through a Proclamation.

As for the question of 'Untouchability' Hinduism recognises in its compartmental life mutual untouchability. And if there has been any religious tinge imported into it, it is a matter of individual consciences with which the state as state, has no right to interfere. He regrets that there is a section still unwilling to advance with the times. The Committee feels that the directions of advance that the times are now making are not always in the best interests. For instance there is the tendency to do away with kingship altogether and establish a republic in its place. Would the Holkar be prepared to advance with the lines in that direction? But Hindu religion and Hindu sociology would for their part deprecate it.

The days of autocratic rule, of proclamations and firmans, are just carrying to an end. During the short time they may be permitted to hold unfettered power let ... Kings use it tyrannically for the sake of ...lause or lime-light publicity. ...appens to be born ...

## Exit. The last Horror of Hinduism and its last Baron.

The Marriage Bill of Mr. Das was passed by the Central Assembly on 31—3—1938 and with it passes away into the Limbo of the Unseen, the chastity of Hindu women which is perhaps the last of the horrors of Hinduism. I advisedly call chastity, the last of the horrors of Hinduism because upon the ashes of departed chastity rises co instanti Varna Sankara as prophesied in the Gita and the only other major horror of Hinduism namely, caste, automatically evaporates into thin air without any effort. Untouchability and exclusion of Panchamas from the temples, which are the only remaining horrors of Hinduism will discreetly take to their fast heels without the grass rods of Mr. M. C. Raja or the velvet spurs of the premier which by a curious combination of circumstances were waved and brandished by them on the same day in the Madras Legislative Manufactory without the least necessity for such exhibitions. I offer my heartiest congratulations, to the Holy Non Official Trinity Viz., Mr. Sarda, Mr. Navalrai and Mr. Das; to the official Trinity Mr. N. N. Sarkar, Mr. Craig and the unnameable; to the three Nirguna Brahmams at the front, at the back and at the sides for their glorious silent and bloodless campaign of success. Mr. Mussoloni had to exhaust all the forces of fire, air, earth and water for removing the anachronism of a black Abysinian Empire, Mr. Hitler had to make a spectacular march for drawing the Austrian rat into the bowels of the German cat. But for silencing the invertebrate Sanatani dog a cudgel of words is all that was found necessary. In all seriousness I advise Mr. M. C. Raja, the Madras Ministry and its masters behind, to call off the two bills of Mr. M. C. Raja as costly surplusages and save public time, money and energy. The Roumanian Patriarch ministry resigned yesterday with a solemn declaration that it has served out its purpose. Has the Congress Ministry any farther purpose to serve. I think not. Farewell Chastity.

Rao Sahib N. Natesa Aiyar.

## What next Who next When next and Where next.

(Rao Sahib N. Natesa Aiyar.)

We had thought that it was reserved to the omniscient and omnipotent Sleepy Hollow of the West Coast to condemn as fools its previous rulers and to proclaim to the world that its present monarch has acquired encugh faith, tolerence and strength to shed what he considers excrescences in Hindu Religion and to abide by the eternals and to regard and respect as brothers the large section of humanity known as Panchamas whom blinded by foolishness or recklessness his predecessors though otherwise wise and illustrious had unjustly excluded from God's places, for centuries. We however learn that another star has recently risen in the vast Hindu firmament which threatens to eclipse the Travancore Horizon with its own superior effulgence. The report goes, that the young Maharaja of Indore has not only thrown open the State Temples to Panchamas but has given them free permission to occupy whatever house-sites are vacant wherever they may be, whether in the midst of the habitations of the caste-Hindus or temple squares or Mutts. So far back as February 1937 it was stated by me.

"There appears to be a right royal race among the Indian monarchs and Dewans for world advertisement, a fierce competition among them to jump a single bound to historic name and fame".

Little did I know then that the infection will spread so fast into the North over the heads of the numerous intervening states and that in this hurdle-heroics the first prize will be drawn by far off Indore. There is perhaps no matter for surprise. As is the father so is the son. The father cut-visvamitra-ed in creating a new race of Sharmista and the son has excelled the creator himself. The saying:—

"How can false ruby have birth in a mine of true rubies" stands disestablished now.

A mere repetition of the West coast proclamation will be dull, prosaic and unromantic. It ought to be blazoned in attractive colors, albeit of a butterfly or a chamelion. Novelty, spectacularity angularity, sensation, electrification and galvanization, what is life without these? The Indore proclamation supplies these to satiety. No wonder, the rag, the tag and Bobtail stand sucked into the eddies and whirlpools of admiration, idolization and deification. Statues will of course follow. The name of His Highness will remain engraved in letters of gold set with emeralds and diamonds in the legislative chambers of Indore and outside. A Cracsus is ever ready to undertake the job and to go down to posterity.

Years back Mussoloni declared.

"In a conflict between the State and Religion the State always goes to the wall-States have no right to create new gospels and dogmas, to overthrow old doctrines and put in their place new ones.........A State which does not wish to spread religious disturbance must guard against intervention in matters religious. He who breaks or weakens the religious unity of a people commits the crime of "Lese-nation".

Legislators, all the world over, in the first flush of power, the crimson glow of ...n, cannot but bring in a crop of icona... bills for reforming Hindu Religion out ...existence.

(continued from 3 column.)

way deed a deed which sets at nought ancient conventions, traditions, ideals and usages. Let a Brahmana woman marry a Vaisya or preach co-education or companionate marriage or the necessity for divorce at will. Let a Jadav or Ranga Aiyer bring a bill for transforming a Panchama into a Sudra or Brahmana. Bring an Agricultural Debt Relief Bill, Industrialist Debt Relief Bill, Caste destruction Bill, Gamblers' Debts Relief Bill, Drunkards' Debts Relief Bill. Preach the blessings of Week-ends, Living-tallies and Sex-equalities and Socialism. People will carry you over their shoulders. You will become Devis, Parivrajikas, Maharishis and uncrowned kings and queens.

Will they be mere nine-days wonders or more, to be followed by five-days wonders ...one hour wonders. We utter a timely ...climax has to be reached ...ise from its ...of the ...

...ated by ...



# ஸ்ரீமந் நாராயண தீர்த்த ஸ்வாமிகளின் சரித்திர சுருக்கம்.

## தோற்றுவாய்.

இம்மகான் வடதேசத்தில் ஸ்ரீ வெங்கடாசலபதியைக் குல தெய்வமாகப்பெற்ற மறைவர் குலத்தில் அவதரித்து சகலசாஸ்திரங்களும் கற்றுணர்ந்து பிர்ம்மசரியத்துடனிருந்து ஸ்ரீ சக்ர நாராயண தீர்த்த சுவாமிகளிடம் ஸன்யாஸாச்சிரமம் பெற்று முக்தி ஸாதகஹேதுவான ஸ்ரீ பாகவதகிரந்தத்தை அடிக்கடி மனனம் செய்து வந்தவுடன் பிர்மநிஷ்டராக விளங்கி க்ஷேத்திரங்கள் தோறும் சென்று ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவின் நாமசித்தாந்தங்களைப் பரவச்செய்து பரமசாந்தராக சஞ்சரித்து வந்தார்கள்.

இப்படி பல தலங்களை நாடிவருகிற சமயம், சோலைசூழ்ந்த திருவிடமருதூரின் கண் நமது குருசுவாமிகளுடன் உபதேசம் பெற்றவர்கள் ஐந்து பேர்கள், அவர்களில் போதேந்திரசுவாமி கோவிந்தபுரத்துக்கும், ஐயாவாள் திருவிசநல்லூரிலும். சதாசிவப்பிர்மம் நெரூரிலும், சோமசுந்திரம் செட்டியார், மைசூரிலும், ஜீவன் முக்தியை அடைந்தார்கள்.

நாராயணதீர்த்த சுவாமிகள் திருவிடமருதூர் ஸ்தலத்தை விட்டு அகன்று பஞ்சநதியால் சூழப்பட்ட திருவையார் என்னும் திவ்யக்ஷேத்திரத்தில் மேட்டுத்தெருவில் விளாமரத்தடியில் வீற்றிருந்தார் சிலகாலம், அங்கிருந்து தன் கிருஷ்ணதியான நிஷ்டைக்கு சரியான இடத்தைக் சாரவேண்டுமென்று எண்ணி விளாங்குடி இலுப்பைதோப்பில் ஒரு விருக்ஷத்தினடியில் வந்து தங்கினர், சிலகாலம் சென்று அதைப்பிறந்து சிவஸ்தலங்களில் சிறந்ததும் கொள்ளிடத்தின் வடபாலுள்ள திருமழபாடியின் ஒரு புறத்தமர்ந்திருந்தார்.

சுவாமிகள் இப்படி இருக்க, திருவையாற்றின் கண் பாசிலாமறையவர் குலத்து அவதரித்தவனும், வறுமைமிருந்தவனும், இன்னோரிடத்து அருமையும் அடக்கமுமுள்ள வேதியர் ஒருவர் மழபாடியின்கண் மன்னியிருந்த இம்மகானைக்கண்டார். ... அவர் பசி ... று அவருவிவாஉணவுஊட்ட ... திருவையார் நண்ணி, மனை தோறும் ... பிக்ஷையால் கிடைக்கும் தண்டுலத்தை அனல் மூட்டி ... முதாக்கினர்.

சுவாமிபசித்திருப்பாரோ ... அவசரத்துடன் பயபக்தி விஸ்வாஸத்தோடு மழபாடி சுவாமி ஆஸ்ரமத்தையடைந்து பலதரம் சாஷ்டாங்கமாக வணங்கி, அமுது உண்ணவேணுமென்று பலமுறை பிரார்த்தித்தார்.

அவ்வந்தணர் உய்யும்பொருட்டு அம்மஹான் அவ்வுணவில் காகத்திற்கு இட்டு தன்பசிக்கு சிறுதளவு உண்டு, கிருஷ்ண யோக நிஷ்டையில் அமர்ந்திருந்தார், அதன் பிறகு அவ்வந்தணர் (தவஞானிச்சேட மருந்ததன் அவை ஞானமெல்லாம் ஆறும்) என்ற ஆன்றோர் வாக்கிற்கிணங்க அம்மகான் உண்டு மிருந்தசேடத்தைத்தான் உண்டு அவர் யோகத்தைக்கண்டு அனுதினமே அவருக்கு அருமைத்தொண்டுபல செய்து வந்தார்.

## மழபாடியுள் மகான் மகிமை.

இவ்வண்ணம் சிலநாள் கழிந்தன, ஒருநாள் வழக்கம்போல் திருமனைகள்தோறும் தண்டுல மேற்று அனல்மூட்டி அடிசிலாக்கி அதிவேகமாய் ஆச்சிரமத்தை நோக்கி நடந்தார்.

கொள்ளிடம் கடக்கும் போது கதிரவன் அனல்தாக்கி நதியின் மணலின் மேல் கானல்நீர் ஓடக்கண்டும் மகான் பசித்திருப்பாரோ என்று மணலின் வெப்பத்தை பொருட்படுத்தாது இறங்கி நடந்து நதிகடந்து சென்றார். அப்போது, அவருக்கு வெய்யலினாலும் மணல் சூட்டினாலும் யாதொரு வருத்தமும் அடையவில்லை அதி சீக்கிரமாக ஆச்ரமத்தையடைந்து, சுவாமியின் பசிதீர்க்க எண்ணி அவரைப்பார்த்தார், அப்பொழுது சுவாமி மெய்வேர்த்தும் முகம் வாடியும் பெருமூச்சு ... உள்ளங்கால் வெப்பத்தில் நடந்ததுபோல் ... பட்டிருந்ததைக்கண்டார்கள் ...

...நின் கொண்டு இத்துடன் போவதும், உனக்கு வேண்டியதொன்றை இப்பொழுதே கேட்டுக்கொள்ளென்று அப்பூரணஞானிபுகன்றார். அது காலை வேதியர் ஏழையடியேன் வறுமை நீங்க சொர்ணமளித்தால் போதுமென சொன்னார்.

அப்பொழுது சுவாமி அவரை நோக்கி இப்பொருள் கேட்பதற்காகவா வெய்யலில் கொள்ளிட சுடுமணலில் உடல் வேர்வை சொறிய நடந்திங்கு வந்தாயென வருந்தி பொருளினை எவரும் இன்னல்களை எடுத்து அம்மறையோனுக்கு முகட்டினர். சிலநாள் சென்று திருப்பூந்துருத்திக்கு வருவோம் நீ அவ்விடம் வரக்கடவாய் எனப்புகன்றார்.

பிராமணன் தன்னைவிட்டகன்றவுடன் தான் அந்த இடத்திலிருந்து புறப்பட்டு கொள்ளிடம் முதலிய பல நதிகளைக்கடந்து தென்திசையை நோக்கி சென்றுகொண்டிருந்தார். ஆதித்தன் மறையவே நடபாதைக்கு அருகாமையிலுள்ளதாயும்

அந்தணர்கள் மிகுதியாயுள்ளதாயுமுள்ள நடுக்காவேரி என்னும் கிராமத்தை நண்ணி, அவ்வூர் பிள்ளையார் கோவிலில் இரவு தங்கி யோகத்திலமர்ந்தார். அன்றிரவு கனவில் சங்கு சக்கரம் அங்கையில் ஏந்தி மகாவிஷ்ணு தோன்றி தான் உலகத்தைக் காக்கும் பொருட்டு முன் எடுத்த பல ரூபங்களையும் காட்டி இந்த கலியுகத்துக்கு உலகமுய்யும் பொருட்டு எடுத்த அவதாரமாகிய அலர்மேலுமங்கை சமேதராய் ஸ்ரீனிவாசப் பெருமாள் காக்ஷிகொடுத்தார். சுவாமியை நோக்கி பெருமான் சொன்னதாவது "நாளைகாலை இங்கு தோன்றும் வராகத்தைப் பின்தொடர்ந்து அது காட்டுமிடத்தையடைவாய்" என்று மறைந்தார். துயில் நீங்கி கண்டகனவை எண்ணி ஆதித்தன் உதயத்தை அதி ஆவலாய் எதிர்பார்த்த வண்ணமாய் நிஷ்டையிலமர்ந்திருந்தார்.

பொழுது புலர்ந்தவுடன் முன்பு கனவில் கண்டதுபோல் ஒரு வராகம் தன்னருகில் தோன்றிற்று. உடனே அதன்பின் செல்ல அவரை அழைத்துக்கொண்டு வரகூரென்னும் கிருமத்து அந்தணர் வீதியில் உள்ள நடுபாலில்லத்து உள்புகுந்தது.

உட்புகுந்த சுவாமிதன்னை இங்கு அழைத்துவந்த பன்றியைப் பலகால் தேடிக் காணாது அழைத்துவந்தவர் பக்தர்களின் பொருட்டு தசாவதாரம் எடுத்தவர் ... அம்பரம் பரந்தவரும் அகிலத்தை உதரத்தில் காப்பவரும் உந்தியில் ... பற்றவருமான மஹாவிஷ்ணுவேயென்றுணர்ந்து சிரமேல் கைகூப்பி கண்ணீர் மல்கி கருணைக்கடலாகிய கடவுளை மத்ஸ்ய, கூர்ம, வராக என்ற வந்தனத்தை அஷ்டபதியின்படி படிக்கும் பத்ய சுலோகம் முதலியவைகளால் துதித்தார். தான் முன்புகண்ட அவதாரங்களுள் கலியுகத்தில் ஸ்ரீனிவாச வெங்கடரமண அவதாரமே உயர்வு என்று உணர்ந்தார்.

அதன் பிறகு அவ்விடத்தில் எழுநாள் நிஷ்டையிலிருந்து எட்டாவதுநாள் ஸ்ரீவெங்கடாசலபதியை அவ்வில்லத்தில் அமைக்கப்பெற்றிருந்த திருக்கோவிலில் மூர்த்திகரிக்கச் செய்தார்.

அதன் பிறகு அவ்விடத்தில்தானே இருந்து காலந்தவறாது பூஜைகளை நடத்தியும் புரட்டாசி மாசங்களில் உள்ள சனிவாரங்களில் உற்சவாதிகளைச் செய்தும் அவ்வூர் மகாஜனங்கள் பலருக்கும் தான் கனவில் கண்டதுமுதல் வெங்கடபதியின் மகத்துவம் முடிய பலருக்கும், எடுத்துப்போதித்தார்.

அதில இவருக்கு சிலர் சிஷ்யரானார்கள். சிலநாள் சென்றவுடன் ஒருநாள் இரவு கனவில் கிருஷ்ணபரமாத்மா தோன்றி நம்முடைய லீலைகளையும் குணங்களையும் பலபேர் எடுத்துரைத்திருந்தபோதிலும், நீ உன் வாக்கினால் பாடவேண்டுமென்று வாக்களித்து மறைந்தார்.

பொழுது புலர்ந்தவுடன் கடவுள் கனவிலிட்ட இக்கினையை முடிக்கக் கருதி ஸ்ரீகண்ணபிரான் குணங்களை எல்லாம் எழு... துடங்கி பாகவத கிரந்தத்தைப் பிறித்தார். உடனே ... லயா) என்ற வாக்கியம் ஒரு ஏட்... என்ற பதம் மற்றொருடே ... பரவசாகிய ...



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

# ஆ ர் ய த ர் ம ம்.

பகுதான்ய-ஸு சித்திரை-மீ 2உ

## சென்னையில் ஆலயப்பிரவேச மசோதா!

சென்னை சட்டஸபையில் ஸ்ரீமான் எம். ஸி. ராஜாவின் ஆலயப்ரவேச மசோதா ஆஜர் செய்யப்பட்டுவிட்டதை ஏற்கனவே அறிவித்திருக்கிறோம். இந்த மசோதா ஸம்பந்தமான மற்றச் சடங்குகள் மறுபடி சட்டஸபை கூட்டத்தில் வருமென்பது நிச்சயப்பட்டில்லையாயினும் அவ்விஷயத்தில் தாமதம் ஏற்படாதென்பதுமாத்திரம் நிச்சயமே. ஆலயப்பிரவேசக் கிளர்ச்சியை மூர்க்கத்தன்யமாக முன்னணியில் நின்று நடத்திய ஸ்ரீமான் ராஜகோபாலாசாரியரும், காங்கிரஸ் கக்ஷி மெம்பர்களும் இப்போது கவர்ன்மெண்டை நடத்துகையால் இந்த மசோதாவின் நிலைமை எப்படியாகுமென்பதைப்பற்றி ஸந்தேகத்திற்கு இடமில்லை. ஆயினும் காங்கிரஸ் மந்திரிகள் கவர்ன்மெண்டை நடத்துகிறவர்களென்ற தோரணையில் எல்லா விதக்கொள்கையுள்ள ஜனங்களின் உரிமைகளையும் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பதால் இதில் மிகுந்த ஜாக்ரதை காட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இம்மாதிரியே கனம் பிரதமமந்திரி தமது நிர்வாஹகாலத்தில் பக்ஷபாதம் காட்டமுடியாதென்பதைச் சில விஷயங்களில் வெளிப்படுத்தியும் வருகிறதாகத் தெரிகிறது.

ஆலயப்ரவேச கிளர்ச்சிக்கு எதிரான அபிப்ராயம், பொதுவாக இந்தியாவிலும், விசேஷமாகச் சென்னையிலும் எவ்வளவு வலுப்பட்டதென்பதை கனம் பிரதமமந்திரி தமது அநுபவத்தில் நேரில் நன்கு அறிந்... 1934ல் காந்திஜி செய்த ஆலயப்... ...ரண முடிவிலிருந்தும் ...ருப்

மேலும் ஆலயப்பிரவேச விஷயமாக ஏற்கனவே இந்தியா கவர்ன்மெண்டாரும், கனம் ராஜகோபாலாசாரியார்போன்றவர்களும் வெளியிட்டுள்ள முக்ய அபிப்பிராயங்களும் இப்போது கவனிக்கப்படத்தக்கவை. 1934-ம் வருஷத்தில் இந்தியா சட்டஸபை எலெக்ஷன் விஷயமாக ஸ்ரீமான் ராஜகோபாலாசாரியரும், மற்றவர்களும் பிரசாரம் செய்கையில் ஆலயப்பிரவேச விஷயமாக ஜனங்கள் உறுதிமொழியை எங்கும் கேட்க முன்வந்தார்கள். ரங்கய்யர் மசோதாவை நிறைவேற்றக்கூடாதென்றும் ஒருமுகமாக வற்புறுத்தினர். அதன்மேல் கனம் ராஜகோபாலாசாரியார் 1934 ஆகஸ்ட்மீ 16உ மதுரையிலிருந்து ஓர் அறிக்கையை வெளியிட்டு, அதில் ஆலயப்பிரவேச மசோதாவை இந்தியா சட்டஸபையில் நிறைவேற்றவேண்டியதில்லையென்ற முடிவுக்குக் காங்கிரஸ்காரர் ஸம்மதிப்பதாயும் பற்பல மதஸ்தர்களடங்கிய சட்டஸபையில் மதஸம்பந்தமான இந்த மசோதாவை வியாதிப்பது உசிதமில்லையென்று தாம்முடிவு செய்திருப்பதாயும் பத்திரிகைகளில் கனம் ஆசாரியார் சொல்லியிருந்தார்.

இப்படி ரங்கய்யர் மசோதாவை வாபீஸ் பெற அப்போது இவர் கூறிய காரணம் இப்போதும் மறைந்துவிடவில்லை. சென்னைசட்டஸபையில் முஸ்லீம்கள், கிறிஸ்தவர், பௌத்தர், நாஸ்திகர் போன்ற பற்பல ஜாதி மதஸ்தர்கள் இப்போது நிறைந்திருக்கிறார்கள்.

அவர்களுடைய வோட் பலத்தால் மதஸம்பந்தமான இந்த மசோதாவை நிறைவேற்றுவது நியாயமென்று கனம் மந்திரி நினைக்கிறாரா? ஸநாதனிகளுடையவும், பண்டிதர்களுடையவும் சம்மதி பெற்றே தாம் ஆலயப்... சீர்திருத்தம் செய்யப்போவதாகச்சில வா... ...க்கு முன் கனம் ஆசாரியார் பேசியிரு...ர். இதை எந்த வழியில் அவர் செய்யப்போகிறாரென்பதும் வெளிப்படவில்லை.

மேலும் இந்தியா கவர்ன்மெண்டார் ரங்கய்ய மசோதா விஷயமாகக் கொண்டிருந்த மனோபாவத்தையும் சென்னை சர்க்கார் அலக்ஷ்யம் செய்வதற்கில்லை. 1934 ஆகஸ்டு 23உ யன்று இந்தியா சட்டஸபையில் ரங்கய்யரின் ஆலயப்பிரவேச மசோதா விஷயமாக கவர்மெண்டு தரப்பில் பேசிய ஸர். கிரெயிக் அந்த மசோதாவுக்கு எதிராக 863பேர் அபிப்ராயம் தெரிவித்திருப்பதாயும், 40 பேரே ஸாதகமாக பேசியிருப்பதாயும், மசோதாவை எதிர்த்து 1262 மனுக்கள் வந்திருப்பதாயும் குறிப்பிட்டார்.

தவிரவும் ஸர்கிரெயிக் பேசுகையில், ஆலயப்பிரவேச மசோதாவை இந்தியா கவர்ன்மெண்டார் பலமாக எதிர்ப்பதாயும், தேசஜனங்கள் இதை விரும்பாததே காரணமென்றும், வைதிக வகுப்பினரன்றி, வக்கீல் சங்கங்களும், பிரபல சட்ட நிபுணர்களும் கூட இதை எதிர்ப்பதாயும், ராஜீய காரணத்தை முன்னிட்டே ஆலயப்பிரவேசத்தைச் சிலர் ஆதரிப்பதாயும், அப்படி ஆதரிப்பவர்களும் கோவில்களுக்குப் போகும் வழக்கமுள்ளவர்களல்லவென்றும், தீண்டாதார்களில்கூடப் பலர் இதை வேண்டவில்லையென்றும், முக்யமாக சென்னை முதலிய ஸ்தலங்களான கவ... ஆலயப்பிரவேசத்தை ...பிட்டிருப்

...கொரு கக்ஷியிலும் உள்ள நியாயம் இன்றும் இருந்துவருகிறதென்பதை சென்னை மந்திரிகள் மறுக்கமுடியாது.

காங்கிரஸ் மெஜாரிடி ஏற்பட்டுவிட்டதற்காக இவ்விஷயத்தில் ஜன அபிப்பிராயம் மாறுதலடைந்து விட்டதென்று சாதிக்க முடியாது. திருவாங்கூர் விளம்பரத்தை உதாரணமாகக் கொள்ளக்கூடாதென்பதை கனம் மந்திரியே ஒப்புகிறார். எலெக்ஷன் ஸமயத்திலும் ஜனங்களிடம் இந்த உத்தேசத்தைக் காங்கிரஸ்காரர்கள் அறிவிக்கவில்லை. மதஸம்பந்த மசோதாக்கள் வராதென்றும், சீர்திருத்தத்தை உடைப்பதே நோக்கமென்றும் உறுதிகூறியிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் மறக்கால் கனம் பிரதமமந்திரி மிகுந்த ஜாக்ரதையுடன் நடந்துகொள்ள வேண்டியது அவச்யமென்பதை மட்டும் இப்போது ஞாபகப்படுத்துகிறோம்.

## குறிப்புகள்.

### நாகபுரியில் காங்கிரஸ்காரர் துராக்ரஹம்!

ஹிந்துப்பெண்ணை மானபங்கம் செய்த குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டிருந்த மஹம்மதியனை மத்யமாகாண காங்கிரஸ் மந்திரிஸபை விடுதலை செய்த விஷயமாக நாகபுரி ஹிந்துக்களிடையில் தோன்றிய ஆத்திரமும், அதனால் விளைந்த விளைவும் யாவரும் அறிந்ததே. அந்த தவறைப்பற்றிக் காரியக் கமிட்டி விசாரணை நடத்த முற்பட்டிருக்கிறது

இந்த ஸந்தர்ப்பத்தில், கல்லைப் புறக்கின்றனர் ... ... கண்டதைப் ... பெரிய ... செய்துவிட்டது. ஒரு ஹிந்து ... பலாத்காரம் செய்ததற்காக தண்டிக்கப்பட்டுள்ள ஒரு மஹம்மதியனை விடுதலைசெய்து அவனுக்கு மீண்டும் ஸர்க்கார் உத்யோகத்தை மந்திரிகள் கொடுத்திருக்கிறார்கள்

அவன் ராஜீயக் கைதியல்ல. அப்படியிருந்தும் மந்திரிஸபை அவனை விடுவிக்க முற்பட்டதற்கு எவ்வித நியாயமும் இல்லை. ஹிந்துப்பெண்ணை மானபங்கம் செய்ததற்காகத் தண்டிக்கப்பட்டவனை விடுவிக்க எவ்வித ராஜீய காரணமும் சொல்லமுடியாது. இதனால் ஹிந்துக்கள் வருத்தமடைய நேருமென்பதும் அந்த மந்திரிகளுக்குத் தெரிந்ததே. அப்படியிருந்தும் அவர்கள் வகுப்பு பக்ஷபாத நோக்கத்துடனேயே இதில் நடந்துகொண்டதாக ஹிந்துக்களுக்கு தோன்றுவதில் பிசகென்ன?

இந்தக் குற்றவாளியை விடுதலைசெய்த விஷயமாக எல்லைப்புற ஹிந்துக்களிடையே விசேஷ ஆத்திரம் ஏற்பட்டிருக்கிறது. அதைப்போல் நாகபுரி ஹிந்துக்களும் இந்த எல்லைப்புறக் காங்கிரஸ் மந்திரிகளின் செய்கையை ஆக்ஷேபிக்க 10உ யன்று ஒரு பொதுக்கூட்டத்தை நடத்தினர். இதில் காங்கிரஸ்காரர்களுக்கு ஏன் வயிற்றெரிச்சல்? ஹிந்துக்கள் தங்கள் வகுப்பு கௌரவத்தையும், உரிமையையும் பாதுகாத்துக்கொள்ளும் முயற்சிகளில் காங்கிரஸ்காரர்கள் ஏன் விஷ...ம் செய்யவேண்டும்? காங்கிரஸ்காரர்கள் ...? இவர்களுடைய சரித்... ...? ...ங்கள்



# சாரதா சட்டத்தை மாற்றும் சக்தி யாரிடம் உள்ளது?

## நம்மிடமே உள்ளது!

சாரதா சட்டத்தை மாற்றும் சக்தியாரிடம் உள்ளது? நம்மிடமே உள்ளது.

இனி கெவர்ன்மெண்டிடம் போய் புகார் செய்துகொள்வதில் பயனில்லை. அவர்கள் என்ன சொல்லுகிறார்கள். "நாங்கள் தான் உங்களுக்கு ஸ்வராஜ்யம் கொடுத்து விட்டோமே. நீங்களே செய்து கொள்ளுங்கள்." என்று சிரித்துக்கொண்டு சீர்திருத்தக்காரர்களையும் நாட்டு பிரஜைகளையும் தனி தனித் தூண்டிவிட்டு வேடிக்கைப் பார்க்கிறார்கள்.

ஆகையால் நமக்குப் பிரதிநிதிகளாய் நம்மிடம் சட்டசபைக்கு ஓட்டுப்பெற்ற பிரதிநிதிகளை நாமிட்ட ஆணையைச் செய்யும்படிக்கோர நமக்கு ராஜபாட்டையான உரிமையுண்டு.

ஒவ்வொரு தேசத்திலும் நகரங்களிலும் கிராமங்களிலும் க்ஷேத்திரங்களிலும் உடனே கூட்டங்கள் கூடி அதர்மப்பேயை விரட்டுவோமாக.

தியாக புத்தியுடன் தைரியமாய் நின்றும், ஸதாசாரங்களைக் கெடுக்கும் சட்டத்தை அலக்ஷ்யம் செய்து இடையூறுகளை விலக்குவோமாக.

சாரதா சட்டம் விவாஹத்திற்கு சம்பந்திடும். விவாஹவிதி அறநூல் (தர்மசாஸ்திரம்) களில் விதிக்கப்பட்டவை. இது பொருள் நூலில் (அர்த்தசாஸ்திரம்) விதிக்கப்பட்டதல்ல. விதிப்படி விவாஹம் செய்து கொள்வது, செய்து கொள்ளும் ஜீவன்களுக்கும் பின் ஜனிக்கும் ஜீவன்களுக்கும் இஹபர ஆத்மச்ரேயஸ் ஸாதகமாகிறது. இது கேவலம் குடும்ப இன்பத்திற்காக மாத்திரம் ஏற்பட்டதல்ல.

இஹபர ஆத்மச்ரேயஸ்ஸை உத்தேசித்த விதிப்பதே அறநூல் (தர்மசாஸ்திரம்).

அறநூலில் சொல்லப்பட்டவைகளே மதஸம்பந்தமானவை.

விவாஹம் அறநூலில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் அதுமதஸம்பந்தமானது.

அரசாங்க சட்டசபையானது இம்மாதிரி விஷயங்களில் தலையிடும் க்ஷணமே ஹிந்துக்களெல்லோரும் ஒருங்கே நின்று இச்சட்டங்களைக் கிள்ளியெறியவேண்டும். லௌகிகர்களுடைய சட்டசபைகள் நம்முடைய மத விஷயங்களில் கர்மை நிர்பந்திக்கும்படி விடும்முறையே தவறு.

நம் மதவிஷயமான ஸந்தேஹமிருந்தால் ஆயுள் முழுவதையும் சாஸ்திரங்களுக்கே அர்ப்பித்த முதிர்ந்த பண்டிதர்களுடைய ஸமாஜத்தில் நம் ஸந்தேகங்களைத் தெளிந்துகொள்ளவேண்டும்.

அவ்விதம் 1928 வருஷத்தில் ஸ்ரீ காசிமாநகரில் சுமார் 1500 பண்டிதர்களடங்கிய ஒரு மஹாஸம்மேளனமும் 1937-ம் வருஷத்தில் சென்னைமாநகரில் சுமார் 500 பண்டிதர்களடங்கிய ஒரு பரிஷத்தும் கூடி சாரதா சட்டம், தேவாலயப் பிரவேசச்சட்டம் விதவாவிவாஹசட்டம், வேதியர் சீமை செல்லுதல், முதலிய விஷயங்கள் நமது ஹிந்து மதத்திற்கு அதாவது அந்தந்த வர்ணத்தில் ஜெனித்தவர்களுடைய ஆத்ம க்ஷேமத்திற்குப் பங்கமானவையென்று திட்டமாய் ஏகமனதுடன் தீர்மானித்திருக்கிறார்கள்.

கௌதம மஹரிஷி, கௌதமதர்ம...

ப்ராக்ருதோ:—प्रागंभ्रगतो ...

வேண்ம...

ப்ராம்ம விவாஹகாலத்தில் செய்யப்படும் கந்தர்வபூஜையில் வரும் வேத மந்திரம் "இக் கன்னிகையின் சரீரத்தைவிட்டு நீ வேறிடம் செல்" என்று கந்தர்வனை ப்ரார்த்திக்கிறது.

ஸ்திரீ சரீரத்தில் கந்தர்வனிருக்க அதிகாரகாலம் அக் கன்னிகைக்கு வெட்கம் ஏற்பட்டது முதல் ருதுவாகும்வரையில் என்று எல்லா சாஸ்திரங்களும் அறிவிக்கின்றன. ஆகையால் அந்த ஸமயம் தான் ப்ராம்ம விவாஹத்திற்கு காலம்.

ஸகல வர்ணத்தார்களும் இதேகாலத்தில் செய்தால் ச்ரேயஸ். வேதியர்களுக்கோ அவ்விதம் செய்யத்தவறினால் மஹாபாபம்.

லோகமாதாவான ஸீதாதேவிக்கு விவாஹம் ருதுவாவதற்கு முன்னே என்று உலகப் பிரசித்தம்.

இதுவரைக்கும் சாரதாசட்டத்தினால் வந்திருக்கும் கேடுகள் எவை?

1. கல்யாணமாகாமல் ஏங்கி நிற்கும் வயதான பெண் பேதைகளை ஒவ்வொரு ஊரிலும் சாரதாசட்டம் ஏற்பட்ட இந்த ஸ்வல்பகாலத்திலேயே காண்கிறோம்.

2. ஹிந்து மதத்தில் ஸ்வபாவமாய் இவ்வளவு காலத்திற்குள் பெண்களுக்கு விவாஹம் செய்துவிடவேண்டும். அதற்கு மேல் போக கூடாது என்ற காலவரையிருந்ததினால் சாரதா சட்டம் ஏற்படும்வரை ஹிந்து மதத்தில் விவாஹமாகாமல் நின்று போய்விட்ட பெண்களே அரிது. அந்த காலவரையை எடுத்துவிட்டு சாரதா சட்டம் இத்தனைவயதிற்குமேல்செய்தாகவேண்டுமென்ற பொறுப்பு ஒருவருக்குமில்லாமல் போய் 14 வயதிற்கு மேல் வரன்தேட ஆரம்பித்து அது முடிவதற்குள் அநேக ... ...ர்கதியாய்ப் போவதற்கு வெகுவாக இடமேற்படுகிறது. இம்மாதிரி கஷ்டம் வெள்ளைக்காரர்களிடத்திலும், ஆங்கிலோ—இந்தியர்களிடத்திலும் சகிக்கமுடியாத நிலைமையில் இருப்பதைக் காணலாம்.

3. நமக்கு பாணிக்கிரஹணம்வேறு ருதுசாந்தி முகூர்த்தம் வேறு என்று ஸ்பஷ்டமாய் ஏற்பட்டிருக்க, இது தெரிந்த சீர்திருத்தக்காரர்கள் குழந்தைப் பருவத்திலேயே ஹிந்துக்கள் சாந்திமுகூர்த்தம் செய்துவிடுகிறார்கள் என்று ஹிந்துக்களுக்கு அபாண்டமான அவமானத்தையும் அபவாதத்தையும் இந்தச் சட்டமூலமாய் ஏற்படுத்திவிட்டார்கள்.

இந்தச் சட்டத்தின் பெயரே—Child Marriage Restraint Act—அபாண்டமான ஆபாஸத்தை பிரசாரப்படுத்துவதாயிருக்கிறது. இதர தேசஸ்தர்களுக்கு Marriage என்பதற்கு ஸ்திரீ புருஷர்களுடைய சேர்க்கையே என்று அர்த்தமாகும். ஆகையால் Child Marriage என்று பெயர் வைப்பதே நம் ஹிந்துக்களுக்கு அவமானமான வார்த்தை. நமது பாணிக்கிரஹணம் என்பது இங்கிலீஷில் Betrothal என்பதற்கு சமானமேயாகும். இது Marriage அல்ல. ஆகையால் இந்த சாரதா சட்டக்காரர்கள் நம்முடை குலத்தையே அந்நியாயமாய் இகழ்ந்து நம்முடைய மதத்தையும் ஆத்மசுத்தியையும் கெடுத்துவருகிறார்கள்.

4. மனதில் காமம் உதிப்பதற்கு முன் 8-வது வயதில் உபநயனம் செய்து மந்திரத்யானத்தில் மனதை ... பரியந்தம் அநுஸரித்து வந்தால் ... காரணமோ ... கா...

# ஆலயப்பிரவேச சட்டம்.

(2)

ஆலயப்பிரவேசசட்டம் ஏன் அதிக்கிரமம்?

ஆலயத்தில் ஈசுவர சான்னித்யத்தையும் அனுக்கிரஹத்தையும் கோருவோர்களே ஆலயத்திற்குச் செல்லவேண்டும்.

ஆலயத்தில் ஸாந்நித்யமிருக்குமென்று போதிக்கும் சாஸ்திரம் ஆகமசாஸ்திரம். அந்த ஆகம சாஸ்திரத்தில் இன்னன்ன விதிப்பிரகாரம் ஆலயத்தை ரக்ஷித்தால்தான் அங்கு ஈசுவர ஸாந்நித்ய மிருக்குமென்று சொல்லுகிறது. அதில் நம்பிக்கை இல்லாதார் பிராம்மணராயினும் சண்டாளனாயினும் ஆலயத்தில் பிரவேசிக்க அதிகாரியாகமாட்டான்.

அந்த ஆலய ஸம்பந்தமான விதிகளில் சண்டாளர்கள் முதலியவர்களும், செல்லக்கூடாத அநேகப் பொருள்களும் ஜீவர்களும் இன்னின்ன இடத்தைத் தாண்டிச்சென்றால் தெய்வ ஸாந்நித்யத்திற்குக் குறை ஏற்படுமென்று அறிவிக்கின்றன.

எந்த சண்டாளனும் நிஜமான ஹிந்துமத பக்தனயிருந்தால் அந்த ஈசுவர ஸாந்நித்யத்திற்குக் குறைவு ஏற்படுத்திவிட்டுத் தானும் பிறரும் அந்த அநுக்கிரஹத்தைப் பெறாமல் நஷ்டப்படும்படிச் செய்யமாட்டான்.

தனக்கேற்பட்ட விதிப்படி நடந்து கோபுர தர்சனம் உத்ஸவதர்சனத்தினால் வேதியரைவிட அதிகமான ஈசுவர கிருபையைப் பெறுவான். இவ்விதமே நந்தனர் சிவமயமானர்.

ஆகையால் பறையர்களுக்கும் மற்ற எல்லா வர்ணத்தார்களுக்கும் ஈசுவர ஸாந்நித்யத்தையும் ஈசுவர அநுக்கிரகத்தையும் நாசம் செய்யும் இந்தச் சட்டத்தை சகல ஹிந்துக்களும் ஒன்று சேர்ந்து எதிர்க்கவேண்டியது கடமையாகும்.

[illegible] கோவில்களில் புகுந்து இருப்பதை நாம் [illegible]க்கப் பிரயத்னப்பட வேண்டிய சமயத்தில் அவைகளையே உதாஹரணமாகக் காட்டி மற்றும் ஸாந்நித்யத்தைக் குறைக்கும் அனுசாரங்களைப்புகவிடுவது மிகவும் குரூரமான குற்றம். எந்த ஆகம சாஸ்திரத்தில் நம்பிக்கையினால் இவ்வளவுவிஸ்தாரமானஈசுவரனுடைய ஆலயங்களைக் கட்டினர்களோ எந்த விதிப்படி ஸாந்நித்யத்தை ரக்ஷிக்க அளவற்ற ஸ்திராஸ்திகளை அர்ப்பணம் செய்திருக்கிறார்களோ அவர்களுடைய நம்பிக்கைக்கு விரோதமாக ஆகம சட்டத்தை மீறிய காரியங்களைச்செய்வது நிச்சயமாய் தெய்வநம்பிக்கைக்குத் துரோகமாகும். அவ்விதமிருப்பது யோக்யமான பறையர்களுக்கோ ஏனையவர்களுக்கோ ஒருவருக்கும் ஏற்காது.

நம் நாட்டில் நம்மதத்தில் நம்பிக்கையற்றுப்போனப் பறையர்களோ மற்றவர்களோ மிகவும் குறைவு. எல்லா ஜாதிகளிலும் நிஜமான ஈசுவர பக்தியும் நிறைந்தவர்கள் இன்னும் இருக்கிறார்கள். அவர்கள் என்றும் இருப்பார்கள். தேவாலய ஸாந்நித்யத்தில் நம்பிக்கையில்லாதவர்களே கோவிலில் பறையர்களைப் புகுத்தப் பிரயத்னப்படுகிறார்கள். அப்படி அவர்வார்த்தையைக் கேட்டுக்கொண்டு உள்ளேபோகும் பறையர்களும் அதே மாதிரி நம்பிக்கையற்ற சிறுபான்மையோர்களாகவே இருப்பார்கள். இவ்விதம் நம்பிக்கையில்லாதவர்கள் உலகத்தில் ஸ்வய மரியாதையை மாத்திரம் உத்தேசித்து பக்திக்காக ஏற்பட்ட கோவில்களுக்குள் புகுவோர்கள் தங்கள் ஸ்வய மரியாதையை [illegible]த்தாய் விட்டதென்று தீர்மானமானவுடன் பின்னால் கோவி[illegible] [illegible]தினால் அவர்களும் கோவிலுக்கு வருவதை [illegible] [illegible]ரத்தில் நம்பிக்கையுள்ளவர் [illegible] [illegible]கோவிலுக்குள் [illegible]

# விதவா விவாஹம் ஏன் தப்பு?

(3)

உலகஸ்ருஷ்டியில் ஸ்திரீ புருஷர்கள் சமமாகவோ அல்லது அநேகமாய் பெண்பிறப்பு அதிகமாகவோ ஏற்பட்டிருக்கிறது. ஜனகணிதப்பிரகாரமும் இது உறுதிப்படுகிறது. இப்படிப் பெண்கள் அதிகமாயிருந்தும் நமது சாஸ்திரமுறையின் ஏற்பாட்டின்படி ஒரு கன்னிகையாவது விவாஹஸம்ஸ்கார மின்றி நின்றுவிட்டாளென்பது இல்லாமல் நடந்துவருகிறது. இந்த நிலைமையில் மேல்நாட்டு வழக்கத்தை அநுஸரித்து நமது நாட்டில் இப்புது முறையைக் கைக்கொண்டால் எத்தனை விதவைகளுக்குக் கல்யாணமாகிறதோ அத்தனைப்பெண்கள் கல்யாணமாகாமல் நின்று போய்விடுவது நிச்சயம். இந்த அலங்கோலத்தை மேல் நாடுகளிலேயே பிரத்யக்ஷமாய்ப்பார்க்கலாம். நாம் ஒருபதிக்கு அர்ப்பணமாகிவிட்டோம். இனி அந்தபக்தியோடு வைராக்யத்துடன் நமது திரிகரணங்களை நடத்திக்கொள்வதே மோக்ஷகாரணம். என்ற உபதேசத்தைக்கொண்ட விதவைகளாக நாட்டில் சில பெண்கள் இருக்கும் ஏற்பாடுநல்லதா? தான் கல்யாணம்பண்ணிக்கொள்வதே லக்ஷ்யமாகக் கொண்டு ஒவ்வொரு நாளும் புதுக்கணவனைத்தேட பிரயத்னப்பட்டுக் கைகூடாமல் ஏங்கிநிற்கும் முதிர்ந்த பெண்களின் கணக்கைப் பெருக்கும் ஏற்பாடு நாட்டிற்கு நல்லதா? இவ்விரண்டில் எந்த ஏற்பாட்டில் மானமும் மரியாதையும் கெட அதிகஹேது உள்ளது. அதை ஆலோசித்துக் கொண்டால் விதவா விவாஹம் ஏன் தப்பென்பது தெரியவரும்.

குலம் சுத்தமாயிருந்தால் அக்குலத்தில் பிறந்தவன் தன் பிதுருக்களுக்குத்தன் கடமையைச்செய்து அவர்கள் கன்மங்களை ஒழிக்கத்தானும் ஸஹாயம் செய்தவனுகிறான்.

புருஷர்களுடைய கெட்ட நடத்தையால் தங்கள் ஜன்மம் மாத்திரம் நரகத்திற்கு ஆளாகிறது. ஸ்திரீகளுடைய கெட்ட நடத்தையால் குலமே பாழாகிறது. ஆகையால் ஸ்திரீகளின் பாதிவ்ரத்தியத்தில் நமது ஹிந்துஸமூஹம் அதிக கவனத்தைச் செலுத்திவருகிறது. स्त्रीषुदुष्टासु वार्ष्णेय जायतेवर्णसंकरः என்னும் கீதாவாக்கியத்தினால் வர்ணங்களின் பரிசுத்தி குலத்தினாலேயே என்று ஏற்படுகிறது.

ஒருவர்ணத்தில் ஒருஜீவனையும், மற்றொருஜீவனை மற்றொரு வர்ணத்திலும் பகவான் ஏன் பக்ஷபாதமாய் ஸ்ருஷ்டித்தார்? என்ற சங்கை ஏற்படாமலிருக்க चातुर्वर्ण्यंमयासृष्टं गुणकर्मविभागशः என்ற கீதாவாக்கியத்தினால் அந்தந்த ஜீவர்களுடைய பூர்வ குணங்களையும் கர்மாக்களையும் அநுஸரித்து நான்கு வர்ணங்களும் என்னால் ஸ்ருஷ்டிக்கப்பட்டன என்று பகவான் சொல்லியிருக்கிறார். இந்த கீதாவாக்கியத்தினால் வர்ணங்கள் பகவானுடைய ஸ்ருஷ்டியே தவிர மனுஷ்யகல்பனை அல்ல வென்பது மீண்டும் தெளிவாகிறது.

ஒரு புருஷனுக்கே திரிகரணங்களையும் அர்ப்பித்து ஸ்திரீயிடம் பிறக்கும் ஸந்ததிபூர்ண பரிசுத்தமாகும்.ஒரு பதியையே தெய்வமாக நினைக்கும் விரதமே பாதிவ்ரத்யவிரதம். அந்தபாதிவ்ரத்யமே ஸ்திரீ ஜன்மம் கடைத்தேற முக்யமான மார்க்கமென்பது நம் ஹிந்துசாஸ்திர விதி விதவா விவாஹமென்னும் [illegible]இந்த கடைத்தேறும் லாபத்தை நாசமாக்குவதால் [illegible]ட்டில் அணுக வொட்டாமல் செய் [illegible]ஸ்திரீ புருஷர்களின்



என்னே! அஹிம்ஸாதர்மம்? ஹிந்து மஹாஸபை ஆதரவில் நடந்த அந்த நாகபுரிக் கூட்டத்தில் காங்கிரஸ் ஹிந்துக்கள் நுழைந்து கூச்சலிட்டனர். முஷ்டியுத்தம் செய்தனர். கல்மாரி பொழிந்தனர். வாய்வசவுக்கு அளவில்லை. செருப்புவீச்சும் நடந்தது.

இவ்வளவு முரட்டுத்தனம் செய்து அக்கூட்டத்தைக் கலைத்து அவ்விடத்திலேயேகாங்கிரஸ் கூட்டத்தை நடத்தி மந்திரிஸபையிடம் நம்பிக்கையிருப்பதாகத் தாங்களே முடிவு செய்துகொண்டனர்.

ஹிந்து ஸபையார் [illegible] சென்று கூட்டம் நடத்திக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றினர்கள்.

இவ்விஷயத்தில் காங்கிரஸ்காரர் நடந்துகொண்டது ஹிந்து ஸமூகத்திற்கே வெட்கத்தைக் கொடுக்கக்கூடியது. தங்கள் வகுப்புக் கற்பாசிகளின் மானத்தை காக்க இவர்களுக்கு சிரத்தையில்லையா? மஹம்மதிய குண்டர்களால் மானமிழந்து தவிக்கும் நமது பெண்மணிகளின் கண்ணீர் இவர்களைத் துன்புறுத்தாமல் விடுமா?

இம்மாதிரி பயங்கொள்ளித்தனமானபலாத்காரத்தினால், மந்திரிஸபைகளைக் காப்பாற்ற முற்பட்டிருப்பதிலிருந்து அதன் துர்பலமும், பொதுஜன ஆதரவின்மையுமே நன்கு வெளியாகிறது. இந்த உபாயத்தால் நீண்டகாலம் மந்திரிஸபையைக் காப்பாற்றிவிட முடியாது.

பிரதம மந்திரியின்
எச்சரிக்கை!

சென்ற வாரம் சென்னை காங்கிரஸ் மந்திரிகளுக்கு ஸ்ரீமான் ஜி. ஏ. நடேசன் முதலிய [illegible] விருந்து நடத்தினர்கள். அந்த விருந்தின் உத்தேசம் யாதென்று நாம் கவனிக்கவேண்டியதில்லை. அச்சமயம் நமது பிரதம மந்திரி கனம் ஸி. ராஜகோபாலாச்சாரியார் பேசியிருப்பதில் ஒரு அம்சம் முக்கியமாய் கவனிக்கத்தக்கதென்பதையே இங்கு குறிப்பிட விரும்புகிறோம். விருந்திட்டவர்களில் அநேகர் மிதவாதக்கக்ஷியைச்சேர்ந்தவர்கள். வேறு கக்ஷியினரும் இருக்கலாம். ஆதலால் அங்கு நமது பிரதம மந்திரி கக்ஷி விஷயத்தைப்பற்றி சமத்காரமாகப் பேசியிருக்கிறார். நமது மாகாணத்தில் தற்போது காங்கிரஸ் ஆக்ஷி நடக்கிறது. மற்ற கக்ஷிகள் இருக்குமிடம் தெரியவில்லை. ஆனாலும் ஒரு ஸமயம் காங்கிரஸுக்குப்பதிலாக வேறு கக்ஷி ஆக்ஷி நடத்த நேரலாம். அதை உத்தேசித்தே இப்போதே மற்ற கக்ஷியாரைப் பலப்படுத்திக்கொண்டு தயாராக இருக்க முயற்சிக்க வேண்டுமென்று கனம் ஸி. ஆர் கூறினர்.

மேலும் அவர், காங்கிரஸ் கக்ஷியாரும், தமக்குப் பதிலாக வேறு ஒரு தலைவரை ஏற்படுத்திக்கொள்ள முயற்சிக்கவேண்டுமென்றும் சொன்னர். இவ்விரண்டு பேச்சின் அர்த்தம் பலவிதமாக நினைக்கக்கூடியதாயிருப்பினும், கக்ஷித்தோரணையில் காங்கிரஸும், தலைவர் தோரணையில் தாமுமே இருப்பதாயும், இதை எதிர்த்துநிற்கக்கூடியது ஏதுவுமில்லையென்று அவர் சொன்னதாக நினைக்க இடமிருக்கிறது. ஆகையால் காங்கிரஸை எதிர்த்து வேறு கக்ஷி கிளம்பமுடியுமா வென்று அவர் அறைகூவி அழைத்ததாக தோன்றக்கூடும் [illegible] தம் கக்ஷியிலும், தம்மைத்தவிர [illegible] பிக்கை பெற்ற [illegible]

தாம் தலைவர் பதவியிலிருந்து விலகிக்கொள்ளும் உத்தேசத்துடன் வேறுதலைவரை ஏற்படுத்திக் கொள்ளும்படியும் யோஜனை சொல்லியிருக்கலாம்.

இருந்தாலும், கக்ஷியென்றால் காங்கிரஸ் ஒன்றுதான், மற்றது தலைநீட்டாது. தலைவனென்றால் தாமொருவரே, மற்றவருக்குப்பொருத்தமில்லை யென்றஅர்த்தம் இவர்பேச்சில் தொனிக்கும்படி பேசியிருப்பது [illegible] கக்ஷிகளாலும் காங்கிரஸ்[illegible]யாலும் அதி[illegible] [illegible]க்கப்படக் கூடியதாயிருக்கும்.

## B. தாஸின் மசோதா.

### ஆஸ்திகர்களின் கடமை

1. இப்பவும் இந்தியா சட்டஸபையில் (Central Assembly) Mr. B. Das அவர்களால் சாரதாசட்ட சீர்திருத்த ஸம்பந்தமாய் கொண்டுவரப்பட்டிருந்த பில் பொறுக்குக்கமிட்டியின் (Select committee) பரியாலோசனைக்கு விடப்பட்டு ஷை கமிட்டியின் ரிபோர்ட்டும் வெளிவந்து சட்டமாகிய விஷயம் தங்களுக்குத் தெரிந்ததே.

2. சாரதாசட்டத்தையே ரத்து செய்ய வேண்டுமென்று கிளர்ச்சிசெய்து வருவது ஒருபுறமிருக்க ஷை சாரதாசட்டத்தை இன்னமும் கடுமையாக பிரயோகம் செய்வதற்காக B. Das என்பவரால் கொண்டுவரப்பட்டிருக்கும் சீர்திருத்தங்கள் நமது பூர்வீக ஆசாரங்களிலும் தலையிடுவதுடன் ஒவ்வொருவரும் அவரவர் மதவிதிகளின்படியோ பூர்வீக ஆசாரங்களின் படியோ முன்னேர்கள் அநுஷ்டித்துவந்ததும் வருவதுமான [illegible]தர்மம் குலதர்மம் இவைகளின்படியே [illegible]காரமதைத் தடுத்து ஒவ்வொருவருக்கும் [illegible] என்பதில் உள்ள ஸ்வாதந்திரியத்தையும் [illegible] அபஹரிக்கக்கூடியதாயிரு[illegible]லும் M. C. ராஜா எல்லோருக்கும் தெரிந்த[illegible] நம் பஞ்சமர்கள்

3. மதராஸ் சட்டஸபையி[illegible] இவை வால் கொண்டுவரப்பட்டிருக்[illegible] சட்டங் ஆலயப்பிரவேசசட்டம் மற்[illegible] யாவரும் போன்ற மதத்தில் தலையிடுவதத[illegible] [illegible]க்கள் விவாதத்திற்கு வந்திருப்பது[illegible]பையோ அறிந்த விஷயமே. [illegible] வித

4. ஆகையால் இந்தியா சட்ட[illegible] என்று மதராஸ் சட்டஸபையோ மேற்கட[illegible] மெம்மான சட்டங்கள் செய்யக்கூடாத[illegible] கிளர்ச்சிசெய்தும், மற்றும் சட்டஸபை[illegible] பர்கள் மதத்திலும் பூர்வீக அநுஷ்டா[illegible] களிலும் தலையிடுவதான சட்டங்[illegible] இயற்றக்கூடாது என்று கண்டு ஓட்ட[illegible] டம் கையெழுத்துவாங்கி சம்பந்தப்ப[illegible] சட்டஸபை அக்கிராசனதிபதிகள், கவர்[illegible] ஜெனரல் அந்தந்த ஓட்டர்கள் வஸிக்கும் தேசத்திற்கு ஸம்பந்தப்பட்ட சட்டஸ[illegible] மெம்பர்கள் இவர்களுக்கு அனுப்பியும் [illegible] றும் வேண்டும் முயற்சிகளைச் செய்தும் மேற்கண்டதுபோன்ற சட்டங்களை ரத்துசெய்ய வேண்டிய தீவிர முயற்சிகளை செய்ய வேண்டியது ஒவ்வொரு மதாபிமானிக்கும் ஏற்பட்ட கடமையாக இருக்கிறது.

5. இதுவிஷயத்தில் தாங்கள் [illegible] மத்திலும் [illegible]

## விளம்பரம்.

சென்னை மாகாணத்தில் ஸனாதந தர்ம பிரசாரம் செய்ய வாக்மிகளாயும் அனுஷ்டாதாக்களாயும் ஊக்கமுள்ளவர்களாயுமிருக்கிற பண்டிதர்கள் தேவை. யோக்யதானுசாரமாய் ஸம்பாவனை செய்யப்படும். அடியில் கண்ட விலாசத்துக்கு எழுதிக்கொள்ளவும்.

என். நடேசய்யர்
அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வ
ராஜ்ய ஸங்க கார்ய அத்யக்ஷர்.
55 தமிழ் சங்கம் ரோட். மதுரை.

ஓட்டர்களிடம் கையெழுத்து வாங்கவேண்டியபாரம் வகையறுக்களை A. குப்புஸாமி அய்யர் C/o போஸ்ட்மாஸ்டர், திருவடமருதூர். விலாசத்திற்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

K. குப்புஸ்வாமி அய்யர்,
ஸ்ரீகாரியம் & ஏஜண்டு,
ஸ்ரீ காஞ்சீகாமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்யஸ்வாமிகள்
ஸ்ரீமடம்.

## காரியக்கமிட்டிக்கும் மந்திரிகளுக்கும் தகராறு.

மத்யமாகாண மந்திரிகளுக்கும், காங்கிரஸ் காரியக்கமிட்டிக்கும் தகராறு ஏற்பட்டிருப்பதாகப் பத்திரிகைகளில் விவரம் காணப்படுகிறது.

ஜாபர்ஹுஸேன் என்ற கைதி விடுதலை [illegible]யமாகக் காரியக்கமிட்டி மாஜி [illegible]கோர்ட் ஜட்ஜான ஸர் மன்மாதமுகர் [illegible]யைக்கொண்டு விசாரணை நடத்தத் தீர் [illegible]னித்திருக்கிறது. ஆனல் மத்யமாகாண [illegible] மந்திரிகளும் இந்த [illegible]ணையை ஆக்ஷேபிக்கின்றனர். இது [illegible]ளுக்கு கௌரவக்குறைவென்று நினைக் [illegible]கள். கவர்ன்மெண்ட் தஸ்தாவேஜிகளை [illegible] விசாரணைக் கர்த்தாவிடம் காட்ட [illegible]தென்று கவர்னரைக்கொண்டு மந்திரி [illegible]றுக்கும்படி செய்துவிட்டார்களாம். [illegible] காரியக்கமிட்டி நெருக்கடிசெய்தால் [illegible]கள் ராஜிநாமா செய்யநேரிடுமென்றும், [illegible]மந்திரிஸபை அமைக்க காங்கிரஸ் [illegible]கள் மறுத்து ஸத்யாக்ரஹம் செய்யக் [illegible]டென்றும் சொல்லப்படுகிறது.

## ஸ[illegible]ரில் காங்கிரஸ் அமளி.

[illegible] என்ற [illegible] பலர் கைதி.

[illegible]யிலுள்ள காங்கிரஸ் வாதிகள் சிவபுராணம் [illegible]விடத்தில் காங்கிரஸின் வர்ஷாந்திர [illegible]நாட்டைச் சென்றவாரம் நடத்தினர் [illegible] தேசியக் கொடியை பொ[illegible] களில் நாட்டக்கூட[illegible] போ[illegible] மூன்றாம்[illegible]

## வாரக்குறிப்புகள்.

(வெ. ஸோ.. சர்மா.)

வேநராஜ்யமா இந்தூர் ராஜா தான் சீர்கெட்ட பின் இந்து ஸமூகம் தன்னைப்பழிக்குமோவென அஞ்சி வெள்ளைக்காரி மனம் ஒன்றோடு நின்றார். தேசீயவாதிகள் சீர்திருத்தக்காரர் முதலியோர் தலையெடுக்கவே அநாசாரக்கடலில் அதிவேகமாக ஆழமுழுக ஓடுகிறார். சமூக நன்மையை நாடி ஜாதிப்ரஷ்டராக்குவதென்றோர் முறை கிராமங்களிலுமுண்டல்லவா? அப்படிச்செய்வோரை அவ்வரசன் 500 ரூ அபராதமும் ஓர்மாத சிறையும் விதித்து சிக்ஷிப்பராம்!

தேசாபிமானமா? பேயா? லாகூரில் ஆயுர்வேத கலாசாலைமாணவர் வேலை நிறுத்தம் முதலிய துராசாரங்களைக் கற்றுஉபாத்தியாயரை அடித்து துன்புறுத்தினர். வங்காள மாணவர் தலைவருக்கு உபசாரமளிக்க இடமளிக்காததால் வேலை நிறுத்தம் செய்கின்றனர். தேசாபிமானமாஇது? பேபிடித்தமா?

கல்லாதாரிடையே நற்குணம்! விருதா நகரிலே ஜாதிக்கட்டை மீறி படக்காக்ஷிக்குச் சென்ற பெண்களுக்கு ஜாதிபஞ்சாயத்தார் 8 அணு அபராதம் விதிக்க காங்கிரஸ் கூட்டமதைக்கண்டிக்கிறது!

இத்தகைய வேலையில் இறங்குக! அ. இ. கா. கமிட்டி அந்நிய நாட்டுக்கம்பெனியார் இங்கு கொள்ளை லாபம் சம்பாதிக்க அதற்கு வரி விதிக்க அதிகாரம் நமக்கு வேண்டுமென்கிறது. இது போன்ற வேலையை விட்டு தர்மத்தை அழித்து கசப்பை வளர்க்கலாமா?

நல்ல எச்சரிக்கை! ஜின்னா வலையில் சிக்கும் காங்கிரஸை அழகாக டாக்டர் மூஞ்சே எச்சரிக்கிறார். 21. நிபந்தனைகள் யாவை? ஹிந்து சமூக மகாஸபையை கலக்காமல் நிபேசாதே! காந்திஜீக்கோ காங்கிரஸிற்கோ நாம் ... தும் அதிகாரமில்லை! இல்லை தான்.

அணுகலாமா? நமது தார்மிகர் ஒன்றுகூட... பலத்த கக்ஷி ஏற்பட்டு காங்கிரஸை பணிய... க வைக்கும் வரை காக்காமல் சாரதாச்சட்... கா தீண்டாமை அகற்றல் முதலிய ஆபத்... னும் ளால் மகா ஜனங்கள் படுந்துயரை அ. இ... லவா? கமிட்டி முன்னும் ராஜப்பிரதிநிதி முன்... ஓர் கோஷ்டி பேட்டி கண்டால் நலமல்... ஹாஷி பதில் தெரிந்ததே! ...ருவர்

மதமும்குணமுமில்லாகுற்றம்! ...ஸசாரணை யார்பூர் காங்க்ரஸ்காரர் ஒருவருக்கெ... இது தடியடி, நிந்தை! மதுரையில் போலீஸை... லியன முடைந்து மற்றும் பலஇடங்களில்... ல்லையா? போன்றசெயல் மதகல்வி குணம் மு... ல்மயங் இல்லாததால் வருந்தீங்கை காட்டவி... காவிலை

போலிதுதியை நம்பாதே! துதியா... போ குபவன் மனிதன் என்றதுவேதம்! ...ரம்! க்கெடுத்த ஸர் ஸி. பி' யைவானளாவ... வலை! ற்றினர்! உருவச்சிலை! வரவேற்பு! பத்தம் டீகச்சேரி! மாலை! மற்றோர் ஐந்தாண்டுகள் மயங்கினின்றார் பாவம்!! காங்காஸ்... கூடாதென்றதுதான் அதஃ பாதாளத்திகள். ... ...னார். தர்மம்செய் துநிங்கம்பாகும் மாதிரி நம்பிக்கையிருந்தாள்கூற்று காதில் கள். இவ்விதம் நம்பிக்கையில்லா... மரியாதையை மாத்திரம் உத்தேசித்து பக்தர்... கோவில்களுக்குள் புகுவோர்கள் தங்கள் ஸ்வய பரியாதை... ...க்காய் விட்டதென்று தீர்மானமானவுடன் பின்னால் கோவி... ...கநிலை அவர்களும் கோவிலுக்கு வருவதை ...த்திரத்தில் நம்பிக்கையுள்ளவர் ...கோவிலுக்குள்

...டுசெய்ய அ. க. வ. ஸ்வராஜ்ய ஸங்கத்திற்குமுத்யால் பேட்டைஸபை எழுதிஇருப்பதை அதிகாரிகள் கவனிக்கவேண்டும்?

நன்றியுடனழைக்கிறேம்? ஸர்கஸ்வானி வடநாட்டுப்பத்திரிகை தார்மிகரைப் பரிஹஸம் செய்து படம் போட்டிருப்பதை நமக்கு அனுப்பித்தானும் பஜோரியாவும் செய்தவேலையை கடிதமூலம் தெரிவித்ததற்கு நன்றி செலுத்தி இம்மாகாணத்தில் சுற்றுப்பிரயாணம் செய்யும்படி அவர்களை அழைத்துளேன். ஆஸ்திகர் ஆதரிக்கவும்.

ஓர் உத்தமர் வருகை? சிலாசாஸநஇலாகா உபதலைவராக வங்கத்திலிருந்து அஸாம் பீஹார், மத்யமாகாணம் முதலிய இடங்களில் பல காடுகளில் சென்று மஹரிஷிகளை தர்சித்து சென்னையில் தலைவராக வேலைபார்க்க ஞாயான்றுவந்த ஸ்ரீமான் T. N. ராமசந்திரன் M A. அவர்களை பல நண்பர் ரயிலடியிலே வரவேற்றனர். இவர் 8 பாஷைகளை அறிந்து பல நூல்களை வெளியிட்டவர். தந்தை சொல்லை மதித்து சீமை செல்லாமல் அதனுல் வரும் ஆயிரக்கணக்கான ரூபாயை த்யாகம் செய்தவர். அபிநவ வியாஸ பிரும்மஸ்ரீ ச்லோகாரண்யம் நாராயணாயஜ்வா அவர்களின் புத்ரர்

### காஞ்சீபுரத்தில் எலக்ஷன் பொதுக்கூட்டம்.

காங்கிரஸ் கக்ஷிக்காரர்களுக்கு நல்ல பதில்.

நேற்று சோமவாரம் இரவு 7½ மணிக்கு பெரிய காஞ்சீபுரம் ஸ்ரீ ஏகாம்பர ஸந்நிதி வீதியில் பொதுக்கக்ஷி ஓட்டர்களால் ஓர் எலக்ஷன் கூட்டம் சேர்க்கப்பட்டது. காங்கிரஸ் முடிவு ...தியர், ஸனாதநிகள் முதலிய மஹாஅச்சயப... ள் வந்து கூடியிருந்தனர். பட்டு வியாபாரி... பனைன கோட்டு இவ்வூர் பிரபல பட்டு, மளிவேனு முதல், முனிஸிபல் கவுன்ஸிலரு கோஷத்திர... பாளையம் ஸ்ரீமான் தங்க கப்பட்டு, ...யார் ஸபையோருடைய காதை யெடுனிடையே அக்ராஸனாராக நியமித்து தேசகூட்டம் கூடியிருக்கும் விஷயத்கள் அனுத்துக்கூறி பழயகாங்கிரஸில் உழைரம சுயா சேவைக்காக பல கஷ்ட நஷ்டங்களும் ஸ்ரீபவிக்கவும், அகில இந்திய வர்ணுச் தரிசியா ராஜ்ய ஸங்கம் கார்யக்கமிட்டி மெம்ன் எம்பி ஸனாதன தர்மஸேவா ஸங்கம் கார்ய "எலர்நனவரும் வயோவிருத்தருமான ஸ்ரீமாஹம்ம. கே. ராமச்சந்திர சர்மா அவர்களை ...ர்க்ஷனும் ஓட்டர்கள் கடமையும்" என் ...விஷயத்தைப்பற்றி பேசச்சொன்னர்.

ஸ்ரீமான் சர்மா அவர்கள் மேல் நாட்டு முனிஸிபாலிட்டிகளுக்குள்ள ஸ்தான ஆக்ஷி... ஸ்வதந்திரங்களைப்பற்றியும், இங்குள்ள முனிஸிபாலிடிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் நாமகர்த்த ஸ்வதந்திரங்களைப்பற்றியும், இத்தேச கவிரத்னமாகிய காளிதாஸப்ரபிருதிகளினுலே மிக்க மேன்மையாக வர்ணிக்கப்பட்டுள்ள நகர வர்ணன சிறப்பை ஆமோதித்தார்ப்போலவே விளங்கி சில வருஷங்களு... வன் பிளானிங்கு (Town Plan-... செய்துபோன ...யிடம் பிறகு...டங்களாலும், ஒழுங்கீனமான ஸ்தல தாக்ரமங்களாலும் (Encroachments) சீர்குலைந்திருப்பதைப்பற்றியும், முற்கால எலக்ஷன்களில், அந்தந்த தொழிலாளர்கள் ஸமூகப் பேட்டைகளில் தங்கள் ஜாதிக்கு யார் நாட்டாண்மைக்காரர்களோ, அல்லது பெரிய தனக்காரர்களோ அவர்களைத் தெரிந்து எடுத்து வந்ததால் அவரவர் தொழில்களுக்கு அனுகுணமான வஸதிகளைச்செய்து கொள்ள வஸதிகள் இருந்தனவென்றும், அக்காலத்தில் பல வர்த்தகப்பிரபுக்கள் செயர்மான்களாக இருந்த போது நகர பரிபாலனம் மிகச் சிறப்பாகவும், வீண் செலவுகள் இல்லாமலும் நடந்து வந்ததென்றும் சுமார் இரண்டரை லக்ஷம் ரூபா செலவாகும் இவ்வூருக்கு நெருப்பு ஆபத்துக்கள் நேர்ந்தால் அதையணைக்க ஒரு நெருப்பு இஞ்ஜின் வாங்க வழியில்லையென்றும், பிரபல உற்சவங்களும், பாணவேடிக்கைகளும், கண்ட இடங்களெல்லாம் கட்டடதொட்டிகளும், மாடு தொட்டிகளிருக்கும் இவ்வூருக்குப் பலஸமயங்களில் நெருப்புஆபத்து நேரிட்டு வருகிறதென்றும், பெரிய இரண்டு ரதங்கள் தீக்கு இரையாயினதென்றும், ஆயிரக்கணக்கான ரூபா ஐரோப்பிய முறை ஆஸ்பத்ரிகளுக்குச் செலவிடப்படுகின்றனவே ஒழிய உஷ்ண தேச வைத்ய முறையில் (Tropical Medicines) ஒரு ஔஷத சாலையாவது இல்லையே யென்றும், வயிறு கூழுக்கழுகிறது, கொண்டை பூவிர்க்கழுகிறதென்கிற வசனம்போல் இவ்வூருக்கு பார்க்க இல்லாத குறைதான் பெருங்குறைபோலிருக்கிறதென்றும், முனிஸிபல் தோட்டிகள் தெருவு கூட்டுகிறவர்கள் இவர்களுக்கு மிக்க குறைவான சம்பளம் கொடுக்கப்படுவதால் அவர்களுக்கு உடுக்கக் கந்தையும், குடிக்கக் கஞ்சியும் கூடக் கிட்டு... கர்க உழைப்பதாக ஒலமிடும் காங்கிரஸ் கவுன்ஸிலர்கள் என்ன செய்தார்களென்றும், உற்சவகாலங்களில் ஸ்வாமிதர்சனம் செய்பவருக்கிடையூராகக் கொடிகளையாட்டியும், படங்களைக்காட்டியும் ஜேக்கூச்சல் போடுவதில்தான் இவர்கள் ஊக்கம் காட்டிவருவதாயும் இவர்களது அஹிம்ஸாதர்மம் வாசாகைங்கர்யம்தானென்றும் அதற்கு திருஷ்டாந்தமாக பம்பாயில் மாதவபாக்கில் நடந்த அக்ரமங்களையும் எடுத்துக் கூறினர். காங்கிரஸ் பிரபுகர்கள் வாய்பொத்தி பேசாது நின்றனர்கள்.

ஓட்டுக்கொடுக்கும் விஷயத்தில் பண்டைகாலவழக்கப்படி அந்தந்த ஜாதியாருடைய பெரியதனக்காரர்களுக்கே ஓட்டுக் கொடுக்குர் படிக்கும், மதச்சிரப்பு ஆலயச்சிரப்பு இவ்விரண்டினுல் தான் புகழ்பெற்ற இவ்வூரில் மதாசாரப் புரக்ஷி செய்யும் காங்கிரஸ் முதலிய கக்ஷிக்காரர்களுக்கு ஓட்டுக்கொடாமல் மதாசார விருத்தமான வழக்கங்களைக் கண்டித்து பண்டையகாலத்து வழக்கப் பழக்கங்களை ஆதரிப்பதாகப் பிரமாணம் செய்யும் எந்த ஜாதியாருக்கும் மதஸ்தருக்கும் ஓட்டுக்கொடுக்கலாமென்றும், சில தினங்களுக்கு முன் ஆட்டக்கொட்டகையில் பவழக்கொடி ஆட்டம் பார்க்கப்போன பெண்மணிகளுக்கு நேர்ந்த கதியை உத்தேசித்தும் எலக்ஷனில் கக்ஷி போராட்டங்கள் வலுப்பதை உத்தேசி... ஸ்திரீ ஓட்டர்கள் தங்கள் ஸ்வதந்திர... நிலைத்துக்கொள்வது நலமே தெய்வமாக நினைக்கும் ... விரத்யமே ஸ்திரீ ஜன்மம் கடை... மென்பது நம் ஹிந்துசாஸ்திர விதி விதவா விவாஹ... ...இந்த கடைத்தேறும் லாபத்தை நாசமாக்குவதால ...ட்டில் அணுக வொட்டாமல் செய் ...ஸ்திரீ புருஷர்களின்



### சாரதா சட்டமும் ஸனாதனிகளின் கடமையும்.

சாரதா பால்ய விவாஹத் தடைச் சட்டத்திற்கு தாஸ் கொண்டு வந்திருக்கும் திருத்தமசோதா அதி விரைவாக மத்திய அஸெம்பிளியில் சட்டமாக ஆகிக்கொண்டு வருகிறது. ஸனாதனிகளின் கக்ஷியை எடுத்துரைத்த ஸ்ரீ பஜோரியாவின் மிக நியாயமானதும், தேசத்தின் பெரும்பாலோருடைய ஆதரவைப்பெற்றதுமான ஆக்ஷேபணைகளுக்கு சர்க்கார் தரப்பிலும் காங்கிரஸ் தரப்பிலும் செவிசாய்க்காதது மிக வருத்தத்தை கொடுக்கக்கூடிய விஷயமே! தோல்வி நிச்சயமாயிருந்தும் ஸ்ரீபஜோரியா தைர்யத்தைக் கைவிடாமல் அதி ஊக்கமாயும், ஆத்திரத்துடனும், அர்த்தபுஷ்டியுள்ள வாதங்களை, எதிர்க்கக்ஷியினர்கள் பிரமிக்கும்படியாக சலிக்காமல் சரமாரியாய்ப்பொழிந்தது, ஸனாதனிகளுக்கு மிகவும் திருப்தியை அளிக்கிறது. ஸனாதனிகளாகிய நாம் ஸ்ரீபஜோரியாவிற்கு மனமார்ந்த நன்றியைச்செலுத்தக்கடமைப்பட்டிருக்கிறேம்.

தற்சமயம் நாம் செய்ய வேண்டியது என்னவென்பதைப் பற்றிச்சிறிது யோசிப்போம். இது ஓர் நெருக்கடியான சமயம். நம்மைச்சரியான முறையில் பரீக்ஷிக்கவே இச்சட்டம் வந்திருக்கிறது. நாம் வாக்கு மட்டில் வீரர்களா, அல்லது கிரியாம்சத்திலும் கூட வீரர்களா என்பதைக்காண்பிக்கவே இந்தச்சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

சில வருஷங்களுக்கு முன்பு, பொது ஜன உரிமைகளைக் காப்பாற்றி சுய ஆட்சி பெறுவதற்காக காங்கிரஸ் செய்த பகீரதப்பிரயத்தனங்களையும் ஸனாதனிகளாகிய நாம் அறிவோம் உப்புசசட்டத்தை மீறி சத்யாக்ரஹம் செய்தார்கள். மறியல்கள் செய்தார்கள்; தடியடி பெற்றார்கள்; துப்பாக்கி முனைக்கும் எதிரில் நின்றார்கள். சிறைவாசம் செய்தார்கள்; போலீஸார் படுத்தின துன்பங்களுக்கு உள்ளானார்கள்; உயிரையும் பலி கொடுத்தார்கள். இவ்வளவும் எதற்காக? இவ்வுலகில் மட்டும் சுகித்து வாழ்வதற்கு உபயோகப்படக்கூடிய பெறுத உரிமைகளைப்பெறவே. தங்களிடமில்லாத உரிமைகளைக்கைப்பற்ற காங்கிரஸ்காரர் இவ்வளவு கஷ்டப்பட்டால், ஸனாதநிகளாகிய நம்மிடமிருக்கின்ற உரிமைகளைப் பிறர் அபகரிக்காமல் காப்பாற்றும்பொருட்டு நாம் எவ்வளவு கஷ்டப்படவேண்டாம்? இந்த மண்ணுலகில் சுகித்து வாழ்வதற்கு மட்டும் ஏதுவாயிருக்கின்ற உரிமைகளைக்கைப்பற்ற காங்கிரஸ்காரர்கள் தங்கள் பிராணன்களையும் பலி கொடுத்தார்களென்றால் இவ்வுலகில் மட்டுமல்ல, இதற்குபிறகுள்ள பரலோக வாழ்விலும் நமக்கு சாதகமாயிருக்கும். ஸஹதர்மசாரிணியாக நம் தர்ம பத்னியை சரியான முறையில் நாம் அடைய, உயிரையும் இழக்க அவசியம் ஏற்பட்டால், இழக்கவேண்டாமா? அவ்விதம் பிராணனை விடநேரிடினும், ஏதாவது ஓர் மகத்தான காரியம் செய்து விட்டதாகக் கருதப்படுவோமா?

சற்றும் இல்லவேயில்லை. நம் கடமையை செவ்வனே செய்ததாகக் கருதப்படுவோம். ஆதலினுல் ஸனாதநிகளாகிய நமக்கு இந்த அதர்மச்சட்டத்தை எல்லாவகையிலும் மீறுவதைத்தவிற வேறு... கிராமங்கள் சோ...

அதை நாம் பூர்ண பலத்தோடு எதிர்த்துமீறவேண்டும், அவ்விதம் மீறுவதால் ஏற்படும் கஷ்ட நிஷ்டூரங்களை, எல்லாம் வல்ல இறைவனிடம் பரிபூர்ண நம்பிக்கை வைத்து, சாந்தமாகவும் பொறுமையாகவும், நற்காலம் கூடிய சீக்கிரம் வருமென்ற தீவிர நோக்கத்துடனும், சகிக்கவேண்டும். பொருள் நஷ்டம், பண நஷ்டம், சிறைவாஸம்' நியாயஸ்தலங்களுக்கு பகிரங்கமாயிழுத்துச்செல்லுதல் இவைகளைக் கொண்டு சோர்வடையாமல், பகவான் நம்மைச் சோதிக்கிறானென்றும், அவன் மேல் ஏற்கனவே இருக்கும் நம்பிக்கையை அடிக்கடி ஸ்திரப்படுத்திக்கொண்டு, அஞ்சா நெஞ்சர்களாக இருக்கவேண்டும். எக்காரணத்தைக்கொண்டும் நாம், சாஸ்திரங்களுக்கும், பிராசீனவழக்கத்திற்கும் விரோதமாயும், இந்த அநீதிசட்டமிலாச் சட்டத்திற்கு அனுசரணையாகவும் பால்ய விவாஹத்தைக் கைவிட்டு அதர்ம விவாஹத்தை செய்யக்கூடாது. ஆகையினுல் சனாதநிகளே! சாஸ்திர ஸம்மதமுள்ள பால்ய விவாஹங்களை ஏராளமாய் நடத்துங்கள்! தர்ம சேவையில் உங்களுக்கு காங்கிரஸ் அல்லது அரசாங்கம் இடையூறுகள் செய்தால் அவைகளை பொறுமையுடன் ஏற்றுக்கொள்ளுங்கள்! தமிழ் நாட்டில் மிக உற்சாகத்துடனும் அதி ஊக்கமாகவும், ஸனாதந தர்மத்திற்கு சேவை செய்து வருகின்ற பிரம்மஸ்ரீ சாஸ்திர ரத்னம் தேதியூர் சுப்ரமண்ய சாஸ்திரிகள் அவர்களும், மதுரை ராவ்சாகிப் என். நடேசய்யர் போன்ற உத்தம ஸனாதநிகளும், இந்த சட்டத்தை எதிர்த்துப்போராட வேண்டிய ஏற்பாடுகளைசெய்வார்களென்றும் சனாதனிகள் எதிர்பார்க்கிறார்கள். சிறைவாசத்திற்கோ அல்லது அபராதத்திற்கோ பயந்து அதர்ம விவாஹத்தை நடத்துவோமாகில் சரித்திரம் நம்மை கடமை தவறினவர்களென்று கூக்குரலிடும். தர்மவிவாகங்களை இ... யூறு இல்லாமல் மங்களமாய் ... எல்... வல்ல இறைவன் அருள்புரிவாராக.

டி. ராமஸ்வாமி அய்யங்கார், மதுரை.

### சேங்காலிபுரம்.

ஸ்ரீராம நவமீ

சேங்காலிபுரம் ஸ்ரீராமாயணம் பிரும்மஸ்ரீ அப்பாஸாமிசாஸ்திரியள் அவர்கள் கிருஹத்தில் பங்குனிமீ 19வ வெள்ளிக்கிழமை முதல் ஸ்ரீ வால்மீகி ராமாயணம் மூலபாராயணம், பிராம்மண ஸந்தர்ப்பணம், பிரஸங்கபானு, பிர்ம்மஸ்ரீ வைத்திநாதசாஸ்திரியள் அவர்களால் ஸ்ரீராமவதாப் பிரவசனமும் பிரதிதினமும் விமர்சையாக நடைபெற்றது.

25வ வியாழக்கிழமை பிரும்மஸ்ரீபுண்டரீகாக்ஷசாஸ்திரியள் அவர்களால் அழகாக உபந்யாஸம் செய்யப்பட்டது.

26வ வெள்ளிக்கிழமை ஸ்ரீராமநவமியன்று காலை 6மணிமுதல் 1 மணிவரையில் வேதபாராயணம் ஸஹஸ்ர நாமார்ச்சனம், அவதாரஸர்க்க பாராயணம், ... ஸாமி சாஸ்திரி...

### கடலாடி

ஸ்ரீமத் சங்கரஜயந்தி.

வடாற்காடு ஜில்லா போளூர் தாலுக்கா தக்ஷிண ஸ்ரீசைலக்ஷேத்திரமான கடலாடி கிராமத்தில் அக்கிரஹார வீதியில் 6-வருஷ காலமாக நடைபெற்றுவரும் ஸ்ரீசங்கரஜயந்தி மஹோற்சவம் நாளது வெகுதான்யஸூ சித்திரைமீ 22வ வைசாக சுத்தபஞ்சமி [4-5-1938] புதவாரத்தன்று காலையில் உபநிஷத் பாராயணமும் உஞ்சவிருத்தி பஜனையும் ஸ்ரீமதாசார்யாள் பூஜையும் பிராம்மண சந்தர்ப்பணையும் மாலையில் உபன்யாசமும் இரவு திவ்விய நாம சங்கீர்த்தன பஜனையுடன் பெரியோர்களைக் கொண்டு நடத்துகிறபடியால் ஷை மகோற்சவத்திற்கு பக்தர்கள் அனைவரும் தங்களாலியன்ற பொருள் உதவிசெய்தும் இஷ்டமித்திரர்களுடன்வந்து தரிசித்தும் ஸ்ரீகுரு பிரசாதத்தை அடையக் கோருகிறோம்.

ஷை மஹோற்சவத்தை முன்னிட்டு [7-5-38] சனிக்கிழமை யன்று ஆரணி வக்கீல் பிரம்மஸ்ரீ N. தேவராஜ ராவ் B. A. B. L. அவர்களால் "ஸ்ரீசங்கர விஜயம்" காலக்ஷேபம் நடைபெறும்.

ஒரு நிருபர்.

### திருக்கணித பஞ்சாங்கம்.

பஹுதான்யவருஷத்திய, ஸௌர, சாந்திரமான பமத்திய, ஸ்திதபூமத்ய திருக்கணித பஞ்சாங்கத்தின் பிரதியொன்று வரப்பெற்... இராமப்பாணமட்டுவல் ஸ்ரீமான் ...ப்ரமண்ய அய்யரால் கணிக்கப்பட்ட... ...இவர் ஸ்ரீமான் ஸ்ந்திரேச்வர சிரௌதி... ...ன்குமாரர், "ஜ்யோதிர்பூஷணம், பிரம்ம ஸ்ரீ டி. எஸ். விச்வநாத சிரௌதிகள் B. A. அவர்களின்சிஷ்யர், ஷையாருடைய மேற்பார்வையிலேயே இந்தப்பஞ்சாங்கம் கணிக்கப்பட்டதென்று தெரிகிறது. ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடிபீடம் ஸ்ரீஆசார்யஸ்வாமிகள் முதலான அநேக பெரியோர்களுடைய ஆசீர்வாதத்தைப்பெற்றது. இதில் அவச்யம் வேண்டியவைகளான எல்ல முக்ய அம்சங்களும் அடங்கியிருக்கின்றன. திருக்கணித ரீதியாக தர்மகாலங்களை நிர்ணயித்துக்கொள்ள மிகுந்தஉபயோக முள்ளதாகும்.

இதன் விலைஅணு 4. தில்லைவாஸம், மட்டுவில், சாவகச்சேரி (இலங்கை) என்றவிலாஸத்தில் ஆசிரியரிடம் விலைக்குக்கிடைக்கும்.

### தர்ம சாஸ்திரச் சுருக்கம்.

(மூன்றாம் பதி...

...பிரா

215314



209




# வெளியூர்ச் செய்திகள்.

## சென்னை

## ஆகாய விளம்பரம்.

இப்போது வியாபார விளம்பரங்கள் பலவிதமாய் வெகுஆடம்பரமாய் செய்யப்படுவதை சகலரும் பார்த்திருக்கின்றனர். இவ்விதமிருக்க சென்றவாரம் சென்னையில் ஒருஆச்சரியம் நடந்தது. அதாவது ஒருஏரோபிளேன்' வந்து ஹைகோர்டிற்கு எதிரில் வெள்ளைநிறமாய் ஆகாயத்தில் Pears Soap (பியர்ஸ் சோப்) Sunlight Soap (ஸன்லைட் ஸோப்) என்றுஎழுதி விளம்பரப்படுத்திற்று. சகலரும் அதைப்பார்த்து ஆச்சரியப்ப... ளர். அவ்வெழுத்துக்கள் சுமார் அரைமணி... தென்பட்டன. அவை ஒவ்வொருஎழுத்... சுமார் ஒருபர்லாங்குதூரம் இருக்குமென்... ஜனங்கள் சொல்லிக்கொண்டார்கள்.

காற்று அடிக்கும்போது சற்று மங்கிக்கொண்டு வந்து மேகம்போல் காணப்பட்டன. கடைசிவரை எழுத்தால் ஸ்வரூபம் அவ்விதமேயிருந்தது. இவ்விதம் நடந்தது இதுதான் முதல் தடவையாகும். இப்படி சீமையில் வெகுவாய் விளம்பரம் செய்யப்படுகிறதென்று சொல்லுகின்றனர். நாம் கேள்விப்பட்டிருக்கும் அல்லது பார்த்திருக்கும் கிட அக்ஷரம் போல் இவ்வெழுத்துகள் ஒவ்வொன்றாய் வரிசையாய் எழுதப்பட்டன. இது சென்னை முழுவதும் காணப்பட்டதாம் இம்மாதிரி சித்ரம் போட்டு வெளிப்படுத்திய நோட்டீஸ்களும் அட்டைகளும் வைகுவாய் ஊர்முழுவதும் பிரசாரம் செய்யப்பட்டன. இப்படி ஆகாயத்தால் விளம்பரம் செய்வதானால் எவ்வளவோதூரம் செய்யக்கூடும். இது திருப்திகரமாயிருந்தால் இவ்விதம் அநேக விளம்பரங்கள் சீக்கிரம் நடந்தேறும் என்பதில் ஸந்தேகமேயில்லை. இந்த ...வம் இரண்டு நாட்கள் மாலை 5-மணிக்கு ...

...க்கம்"

...காலக்ஷேபங்களும் நடந்தன. கோவில் டிரஸ்டிகள் உத்ஸவத்தை ரொம்ப விமர்சையாகவும் ரமணீயமாகவும், சிரத்தையுடன் நடத்தியதும், தேசாந்திரிகளுக்கு உணவாதி வசதிகள் அளித்து உபசரித்ததும் போற்றத்தக்கது. பக்தர்கள் தெரிசித்து பகவத் அநுக்ரஹத்துக்கு பாத்திரர்களானார்கள். ஏராளமான ஜனங்கள் உத்ஸவத்துக்கு வந்திருந்தார்கள்.

திருத்தேரில் தேசியக்கொடி விளங்கியதும் ரம்யமாயிருந்தது. ஒரு நிருபர்.

## அனந்தப்பூர்.

அத்வைத ஸபா.

சுமார் 18 மாத காலமாக நடந்துவந்த மஹாபாரத பிரவசனம் 9—4—38ல் ...பெற்ற, புநிஷ்டிர பட்டாபிஷேக ...ற்சவம் சிறப்பாக கொண்டாடப்...து. இதுசமயம் பிராம்மண சந்தர்ப்...ம் வெகுவாக செய்யப்பட்டது. ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளவர்கள் ஸ்ரீ மஹாபாரத பிரவசனம் செய்துவந்த பிரும்மஸ்ரீ பண்டிட் சுந்தர சாஸ்திரிகளவர்களுக்கு, 'பாரத ரத்னகர' என்ற பட்டத்தை அளித்து ஸ்ரீமுகம் அனுப்பி அனுக்ரகித்தார்கள். வேதவியாசரால் அருளிச்செய்யப்பட்டு ஐந்தாவது வேதமென வழங்கிவரும் ஸ்ரீ மஹாபாரதமானது பிரும்மஸ்ரீ பண்டிட் சுந்தரசாஸ்திரிகளால் நன்கு பிரவசனம் செய்யப்பட்டு ஜனங்களுக்கு பேரானந்தத்தை உண்டுபண்ணி தர்மத்தின் மேன்மையை நிரூபித்தது புகழத்தக்கது. என். கே. வெங்கடேசன்.

## இலந்துறை.

(கும்பகோணம் தாலுகா)

அச்வத்த விவாஹம்.

இவ்வூர் கீர்த்திமான் ஆற்றின் ஸ்நான கட்டத்தில் உள்ளூர் ப்ரம்மஸ்ரீ பஞ்சாபகேச சிவாசார்யர் அவர்களால் வைத்து வளர்க்கப்பட்ட அச்வத்தவ்ருக்ஷ (அரசமர) ங்களுக்கு ஷியாரால் நாளது ஈச்வர ஷு பங்குனிமீ 24உ (6-4.38) அன்றயதினம் உள்ளூர் "ஸ...." ப்ரம்மஸ்ரீ சிவாசார்யகங்கா...க்ஷதையில்

# மதிப்புரை.

## சதாபிஷேகமலர்.

ஸ்ரீ அஹோபிலமடம் 41-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மதித்யாதிபரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய, ஸ்ரீ வண்சடகோப, ஸ்ரீ அழகியசிங்கஸ்வாமிகளுடைய 84-வயது திருநக்ஷத்திர பூர்த்தி மஹோத்ஸவத்தை முன்னிட்டு இப் புஸ்தகம் வெளியிடப்பட்டிருக்கிறது. ஆயிரம் பூர்ண சந்திரபிம்பங்களை ஒருவர் தர்சிக்கவேண்டுமானால் 84-வயது காலம் அதற்கு வேண்டியிருக்கும். ஆகையால் 84-வயது பூர்த்தியை "சதாபிஷேக" மென்று ... வது வழக்கம். இதைக்கொண்டே இப்புஸ்தகத்திற்கு "சதாபிஷேக" மலர் என்ற பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ ஸ்வாமிகளின் சிஷ்யகோடிகள், தங்களுடைய ஆசார்யரான ஸ்ரீ ஸ்வாமிகளுடைய ஸர்வோத்க்ருஷ்டமான, குணவிசேஷங்களை அனுபவிப்பதற்கு இந்தப் புஸ்தகம் மூலமாக ஓர் அரியசந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொண்டார்கள்.

இப் புஸ்தகத்தில், ஸ்ரீ ஸ்வாமிகளே அருளிச்செய்த "ஸ்ரீ லக்ஷ்மிநரஸிம்ம த்யான ஸோபானம்" முதலிய சிறந்தக் கிரந்தங்கள் அச்சிடப்பட்டிருப்பதுடன் ஸ்ரீ ஸ்வாமிகளைப் பற்றி பிரஸித்த வித்வான்களும் ஆஸ்திக லௌகிக பிரமுகர்கள் பலரும் சுலோகரூபமாயும், பாட்டாகவும் வியாஸமாகவும் செய்துள்ள வாழ்த்துரைகளும் அநேகம் அடங்கியிருக்கின்றன. ஸுமார் 50 பிரமுகர்களால் எழுதப்பட்ட 50 ஸ்தோத்ரங்கள் இதில் அடங்கியிருக்கின்றன. அவைகளால் ஸ்ரீ ஸ்வாமிகளின் திவ்யகுணங்கள் வெகு விரிவாக் வெளியிடப்பட்டிருக்கின்றன.

பதிப்பாசிரியர்கள் சொல்லியிருப்பது போல் இந்த முக்யநூலின் மூலமாய், இப்போதிய சிஷ்யர்களுக்கும், பின்காலத்தியவர்களுக்கும், இந்த ஸதாசார்யகுணங்களில் ஈடுபாடு உண்டாகி பகவத்கடாக்ஷத்திற்கு பாத்ரமாக இப்பிரசுரம் உபயோகப்படுமென்பது நிச்சயமே.

...ன் மஹிமையால் பெரியதர்ம...த்தில் இத்

ஆர்யதர்மம்
4 16
23
21-4-1938

215258

620

620

215228

213

Registered No. M. 2913

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)

குருவாரந்தோறும் வெளியாகும்.

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

OFFICE OF THE REGISTRAR
29 APR 1938
MADRAS

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 23 | கும்பகோணம் கலி5040 பகுதான்ய-ஞு சித்திரை-மீ 9உ 1938 ஞு ஏப்ரல்-மீ 21உ | வல 16

## ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0.
தனிப் பிரதி அணு 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணு. 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்

## வாரக்குறிப்புகள்.

வே. ஸோ. சர்மா.

குழந்தையும் தைவமும்! கொண்டாடுமிடத்தே என்பர். இப் பழமொழியின் பிற்பகுதி உபநிஷதர்த்தமாம். நம்பு! அப்யஸி! தைவத்தைக் காண்பாய். லாலாபேட்டை மலைமீது பிணங்கிலிருந்து ஓர் பக்தர் வந்து தங்கி தர்மகைங்கரியம் செய்கிறார். அவருக்கு அடிக்கடி திவ்ய ஒளி தோன்றுகிறதாம்!! அன்னதானபலனோ இது?

மைசூரில் அமளி!! தேசிய கொடி ஏற்றத்தை அரசாங்கம் தடுக்க ஸத்யாக்ரஹாதி முழக்கம் கிளம்பிவிட்டது!! அரசாங்கமும் கச்சங்கட்டிக்கொண்டிருக்கிறது. பொதுவாக சாந்தி இல்லாதது வருந்தத்தக்கது.

ஹிட்லர் நாடகம்! நெப்போலியன் கைஸர். ஸார். சிவாஜி இவர்களைப்போல் வீர உலகம் ஹிட்லர் நாடகத்தை கண்டுகளிக்கும். பணம் புத்துசெய்யும். பலம் பலசெய்யும். எங்கும் இவர் செயலை ஆமோதித்து வாக்களிக்கப்பட்டது. கால சக்ரத்தைக்கவனிப்போருக்கிது ஆச்சர்யமல்ல.

புத்தி வருமா? ஆலய அதிகாரிகள் அக்ரமம் நாளுக்கு நாள் அதிகரித்திருக்கிறது. மந்திரி அவர் புச்சம் அநேகர்களுக்கு உத்தம பகவத் சின்னங்களை உபயோக்க ஆரம்பித்து விட்டனர். சில ஸத்பாத்ரங்களுக்கே உரிய பிரசாதங்களை அபாத்ரத்தில் வழங்குகின்றனர். ஓர் மந்திரி தயிலையில் மன்னார் குடியில் பரிவட்டம் கட்டப்பட்டது. அவர் அதை வேண்டாமென தடுத்தார்.

அன்யத்துணி வேண்டாம்! சிகை!! அப் பரிவட்டத்தை பக்தி ஸ்வதேச மதாபிமான மற்றவர் தலையில் வைக்கக்கூடாதென்று அந்தர்யாமியான பகவான் தான் அவரை அப்படி கூறச்சொன்னார். அதற்கு காரணம் அது அன்யநாட்டுத்துணி என்பதாம். அன்யரைப் போல் தலையை மொட்டை யடித்த அவர் தலை ஏற்குமோ இதை?

பிரதம மந்திரி முழிக்கிறார்? அண்டமானிலிருந்து விடப்பட்ட ஓர் கைதி சென்னை மந்திரியை அணுகி உத்யோகம் கேட்டார். அவரும் சிறிது சம்பளத்தில் வேலை தேடிக் கொடுத்தார் [illegible] வேலை கொடுக்கும் வரை அவர் வீட்டு வாயிலில் பட்டினி கிடப்பதாக படுத்தார். போலீஸை அழைத்து அவரை கைதி செய்தார். வேலை தேட அலைவாரா? தன் வேலையைக்கவனிப்பாரா? ஸத்யாக்ரஹம் தாரக்மானதிற்கு வருந்துவாரா? காங்கிரஸ்வாலா மிரட்டலுக்கு அழுவாரா? எதிரி நகைப்பதற்கழுவாரா? கஷ்டம்! கஷ்டம்!!

7. ஜபம் பலிக்கவில்லை; மந்த்ர ஜபமும் அக்ஷரலக்ஷம் ஜபம் பாதி தர்பணம் அதில்பாதி ஹோமம் அதில்பாதி அந்நதானம் செய்தால் தான் பலிக்குமென்பர். இந்திய சட்டஸபை மீது யூனியன் ஜாக் பறக்க ஓர் தேசியவாதி அகற்ற, போலீஸ்காவலுடன் அது மறுபடி பறக்கிறது. தேசியவாதிகள் ஜபம் பலிக்கவில்லை.

ஸத்யாக்ரஹஸபை துவக்கலாமா? சாரதா திருத்தத்திற்கு வைஸ்ராய் ஸம்மதிப்பது கெஜட்டில் வரப்போகிறது. அச்சட்டமில்லாமலே அவர் குறிப்பிட்ட வயதிற்குமேல் மணம் செய்பவரைப்பற்று கவலை இல்லை. கன்யாதானம் செய்வோர் கதி என்ன? போலீசுக்கு லஞ்சம் கொடுக்க நேரிடும். ஆதலால் அ. இ. வ. ஸ்வராஜ்ய சங்கம் வைதிக விவாஹத்தைச் செய்து சிறைக்குப் போக ஓர் கோஷ்டியை தயார்செய்வேண்டும். அதில் முதல் அங்கத்தினராக அடியேன் தயார்.

அரங்கேத்துபடி:– வைசாக மாஹாத்ம்யம் எனும் சிறுநூலை தமிழில் வெளியிட்டு பௌர்ணமியன்று ஸ்ரீ சங்கரமடத்தில் பகவத்பாதர் முன்னிலையில் படித்து அரங்கேத்துபடி செய்யப்பட்டது. 1½ அணு ஸ்டாம்பநுப்பி 154. தம்புசெட்டி வீதியில் நூலைபெறலாம்.

இதற்கோர் ஸபையா? லண்டனில் கடவுளில்லா காங்ரஸ் ஒன்று கூடப்போகிறதாம்! நமது கண்ணுக்குப் புலப்படாத மூளை இல்லை என்று கூற மற்றோர் ஸபை கூடினால் அழகாயிருக்கும்.

ஏன் முயற்சிக்கவில்லை? டில்லி சட்டசபைக்கு காலியான ஓர் ஸ்தானத்திற்கு ஓர் தார்மிகரை நிறுத்தாத காரணம் யாதோ? நம் தலைவர் ஸ்ரீ நடேசய்யர்வாள் நிற்பரென பலர் கருதினர்.

## தர்ம சாஸ்திரச் சுருக்கம்.

(மூன்றம் பதிப்பு)

பிராம்மணர்களின்கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், "வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராம்மண குடும்பங்களிலும்இருக்கவேண்டியதவசியம்.

விலை ரூ. 1—8—0 வி. பி. பிரத்யேகம்.

கிடைக்குமிடம் :—

பப்ளிஷர்.
தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
கீழவிடையல், திருச்சிரா P. O.

## 11-4-38-ஞு திங்கட்கிழமை கும்பகோணத்தில் அமுலிலிருந்த மொத்தவிலையின் விபரம்.

| | |
|---|---|
| நெல்லு முதல்தரம் வெள்ளைசிறுமணி125 பவுண்டு உள்ள மூட்டை | ரூ 3-4-0 |
| ஷை இரண்டாந் தரம் நெல்லூர்சம்பா 125 பவுண்டு உள்ள மூட்டை | ரூ 2-14-0 |
| அரிசிமுதல்தரம் வெள்ளைசிறுமணி 190 பவுண்டு உள்ள மூட்டை | ரூ 8—0-0 |
| ஷை இரண்டாம் தரம் நெல்லூர்சம்பா 190 பவுண்டு உள்ள மூட்டை | ரூ 7—0-0 |
| தேங்காய் எண்ணை 36 பவுண்டு நிறை | ரூ 4—6-0 |

☞ தாசில்தார்.

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

# தேசிகன் தேன்மொழிகள்.

## தைவமும் புருஷகாரமும்.

### அனுவசிய விசாரம்.

ஒரு நாள் ஒரு சிஷ்யன் தனக்கு ஏதேனும் ஹிதோபதேசம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஆவலுடன் ஸ்ரீ மஹாஸ்வாமிகளவர்களிடம் வந்து வணங்கி நின்றான். ஆனால் தன் அபிப்பிராயத்தை வெளியிடச் சக்தியற்றவனாக இவன் இருப்பதைப் பார்த்து மிகவும் கருணை கூர்ந்து ஸ்ரீமஹாஸ்வாமிகளவர்கள் தானே பேசத்தொடங்கினார்கள்.

ம:- நீங்கள் எப்பொழுதும் போல வேதாந்த கிரந்தங்களை வாசித்து வருகிறீர்களென்று நம்புகிறேன்.

சி:- ஒரு நியமமாய் வாசிக்கிறேனென்று சொல்வதற்கில்லை. என்னமோ விட்டு விட்டு கொஞ்சம் கொஞ்சம் வாசிக்கிறேன்.

ம:- அப்படி வாசிப்பதிலும் அநேக ஸந்தேஹங்கள் ஏற்பட்டிருக்குமல்லவா?

சி:- அதற்கு வேண்டியபடி கூட அக்கரையாய் வாசித்தேன் என்று சொல்வதற்கில்லை.

ம:-வேதாந்த சாஸ்திரப் பிரக்கிரியைகளில் நுழையும் போது ஏற்படக்கூடிய ஸந்தேஹங்களை நான் சொல்லவில்லை. நன்கு விஷயப் பரியாலோசனையைச் செய்யப்புகும் போதே யாருக்கும் ஸாமான்யமாய்த் தோன்றக்கூடிய அநேகப்பொது ஸந்தேஹங்கள் இருக்குமல்லவா?

சி:- ஆம். அப்படியும் அநேக ஸந்தேஹங்கள் உண்டு.

ம:- அவைகளில் ஒரு ஸந்தேஹத்தை எடுத்துச்சொல்லி, அதற்கு நான் ஸமாதானம் யோஜித்து வைத்திருக்கிறீர்களென்று சொல்லுங்கள்.

சி:- அவைகளில் அடிக்கடி தொந்தரவு செய்து கொண்டு ஸமாதானத்தை அபேக்ஷிக்கிற ஒரு ஸந்தேஹத்தைத் தெரிவிக்கிறேன். ஆனால் ஸமாதானத்தை நான் தெரிந்து கொண்டதாயில்லை. தாங்களே ஸமாதானத்தைச்சொன்னால் கேட்டுகிருதார்த்தனாவேன்.

ம:- என்ன? சொல்லுங்கள்.

சி:- தைவத்திற்கும் புருஷ காரத்திற்கும் அநாதிஸித்தமாயிருக்கிற விரோதம் என்ற விஷயம் தான். அவ்விரண்டுகளின் எல்லை எது வரையில்? அவைகளின் விரோதத்தை எப்படி பரிஹரிக்கிறது?

ம:- நீங்கள் கேட்கிறபடி ஸந்தேஹம் ஏற்பட்டால், ஸந்தேஹமும் மிகப்பெரிது தான். அதற்கு ஸமாதானமும் எவ்வளவு புத்திசாலிக்கும் தட்டுப்படுவது சிரமம் தான்.

சி:- ஏன்? நான் கேட்டமாதிரியில் என்ன தவறு! என் சந்தேஹத்தை மாத்திரம் சொன்னேனே தவிர, அது எப்படி சிரமப்படுத்துகிறது என்றுகூட நான் சொல்லவில்லையே.

ம:- நீங்கள் ஸந்தேஹத்தை இன்னதென்று சொல்கிறமாதிரியிலேயே அந்த சிரமம் ஏற்பட்டுத்தீரும்.

சி:- அதெப்படி?

ம:- இரண்டு பதார்த்தங்கள் இருந்தால் தான், விரோதம் என்பது இருக்கமுடியும். ஒரே பதார்த்தமிருந்தால் விரோதத்திற்கு இடமே கிடையாது.

சி:- இங்கேதைவம், புருஷகாரம், என்று இரண்டு பதார்த்தங்கள் இருக்கின்றனவே?

ம:- இந்த எண்ணம் தான் ஸந்தேஹம் மனதில் உதிப்பதற்கே காரணம்.

சி:- என் எண்ணத்தில் என்ன இருக்கிறது! நான் எண்ணினாலும் எண்ணவிட்டாலும், இவ்விரண்டு பதார்த்தங்களும் தனித்தனியே இருக்கின்றன [illegible] நான் மறக்க முடியுமா?

ம:- இதுவும் ஒரு பிசகு.

சி:- எப்படி?

ம:- நம் மதத்தின் தத்வங்களை நன்கு அறிந்திருக்கிறீர்கள். தைவம்என்பது நீங்கள் இதற்கு முன் செய்திருக்கும் கர்மாக்களின் பலன்களின் ஸமூகத்தைத்தவிர வேறு இல்லாததால் உங்களுக்கு வெளிப்பட்டதல்லவென்பதை நீங்கள் நன்கு தெரிந்து கொண்டிருப்பீர்கள். அப்பலனை அவரவர்களுக்கு சேர்ப்பிக்கும் பொறுப்பைமாத்திரம்பகவான் வஹிப்பதால், அப்பல ரூபமான தைவம் அவரால் உண்டு பண்ணப்பட்டதில்லை. உங்களாலேயே ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது. இப்பொழுது அதாவது கர்மா செய்யும் காலத்தில் உபயோகிக்கும் ஸாதனத்தை புருஷகாரம் என்கிறோம்.

சி:- இன்னமும், அவ்விரண்டும் எப்படி வெவ்வேறு இல்லையென்று தெரியவில்லை.

ம:- இப்படி கவனியுங்கள். தைவம் என்பது சென்ற காலத்திய கர்மா, புருஷ காரம் என்பது நிகழ்காலத்திய கர்மா. காலத்தினால் வித்யாசமிருந்தாலும், கர்மா என்ற முறையில் இரண்டும் ஒன்றே தான். இரண்டும் ஒன்றாயிருந்தால் பரஸ்பரம் விரோதம் ஏற்பட நியாயமில்லை.

சி:- எப்படியும் காலத்தினால் வித்தியாசமிருக்கத்தானே இருக்கிறது? அதை உபேக்ஷிக்க முடியுமா?

ம:- உபேக்ஷிக்கச்சொல்லவில்லை. சற்று ஆழ்ந்து யோஜித்துப்பாருங்கள் என்றுதான் சொல்கிறேன். நிகழ்காலம் நம் முன் இருக்கிறது; நம் புருஷகாரத்தினால் அதை மாற்றிக்கொள்ள யத்னம் செய்யலாம். சென்ற காலம் சென்றதே; நம்திருஷ்டிக்கு எட்டாததினால் அதற்கு "அதிருஷ்டம்" என்ற பெயருண்டு. [illegible] இரண்டு பதார்த்தங்களுக்குள் இருக்கும் பல தாரதம்யத்தைத்தீர்மானிக்க முடிய வேண்டுமானால், அவ்விரண்டும் நம் முன் தோன்றுகிருந்தால் முடியாது. நிகழ் காலத்திய புருஷகாரம் மாத்திரம் முன் நின்றும், சென்ற காலத்திய தைவம் முன் தென்படாமலுமிருக்கின்றது. இரண்டு மல்லர்கள் நம் முன் பிரத்யக்ஷமாய்த் தென்பட்டாலும், அவர்களுக்குள் பலாபலம் தீர்மானிப்பது சாத்யமில்லை. ஒருவனுக்கு சரீர கனம் இருக்கலாம், மற்றவனுக்கு சரீர லாகவம் இருக்கலாம். ஒருவனுக்கு தசை பலமிருக்கலாம், மற்றவனுக்கும் பிடிமானம் இருக்கலாம். ஒருவனுக்கு அப்யாச சௌகர்யமிருக்கலாம், மற்றவனுக்கு பரபரப்பில்லாமலிருக்கும் தன்மையிருக்கலாம். இவ்விதமாக ஒவ்வொரு அம்சங்களையும் எடுத்துக்கொண்டு யுக்திக்கு மேல் யுக்தி கற்பித்துக்கொண்டு இவன் தான் ஜயிப்பான் என்று வியவஹாரம் செய்யலாம். ஆனால் இவ்வம்சங்களே ஸமயத்திற்குபயோகப்படாமல் பிரதிகூலமாகவும் ஆகிவிடலாமென்பதை அனுபவத்தில் பார்க்கிறோம். ஆகையால் பலத்தின் தாரதம்யத்தைத்தீர்மானிக்க, நிச்சயத்தைக்கொடுக்கக்கூடியதாயும் யுக்திக்கு பொருந்தியதாயும் ஸாத்தியமாயும் இருக்கும் வழி ஒன்றுதான். அதாவது, அவ்விருவர்களையும் மல்லயுத்தம் செய்யச் சொல்லிப் பார்க்கவேண்டியதுதான். இப்படி இரண்டும் பிரத்யக்ஷ லித்தமாயிருக்கும்போதே இப்படியானால், புருஷகாரத்திற்கும் அதிருஷ்டமாயிருக்கிற தைவத்திற்கும் உள்ள தாரதம்யத்தை யுக்தியினால் தீர்மானித்து விடலாமென்பது எப்படி ஸாத்தியப்படும்?

சி:- தீர்மானிக்க வழியேயில்லை என்று தாத்பர்யம்.

ம: இந்த வழிதான் இருக்கிறதே. இரண்டு மல்லர்களும் யுத்தம் செய்தால், யார் பலிஷ்டன் என்பது தீர்மானமாகி விடுகிறது.

சி:- பலாபலம் சண்டை முடிந்துதானா தெரியவேண்டும்? அப்பொழுது தெரிந்து கொள்வதில் என்ன பிரயோஜனம்?

ம:- தெரிந்துகொள்ள வேண்டுமென்றே அப்பொழுது தோன்றுது?

சி:- சண்டைக்கு முன் தீர்மானிக்க ஸாத்தியமில்லை, சண்டைக்குப்பின் தீர்மானிக்க அவசியமில்லை, என்றல்லவா ஆகிறது?

ம:- அப்படியேதான். ஆகையால் இந்தபல தாரதம்ய சர்ச்சையே நிஷ்பிரயோஜநமாகும்.

சி:- அப்படியானால், தைவம் நடத்துகிறபடி நடக்கிறதென்று இருந்துவிடலாமா?

ம:- அப்படியல்ல. புருஷகாரம் நடத்துகிறபடி நடக்கவேண்டும்.

சி:- அதென்ன?

ம:- முன் உபயோகித்த புருஷகாரத்தின் பலன் அல்லவா தைவம் என்பது? முன் உங்கள் புருஷகாரத்தை உபயோகப்படுத்தி அதன் பலனாகிய தைவத்தை ஸம்பாதித்துக் கொண்டீர்கள். இப்பொழுது உங்கள் புருஷகாரத்தையே செலுத்தி, அந்த பழைய பலன் பாதகமாயிருந்தால் மாற்றவும், ஸாதகமாயிருந்தால் விருத்தி செய்யவும், நீங்களே செய்து கொள்ளவேண்டும். எப்படியும் ஸுகத்தை ஜாஸ்திப்படுத்தவோ துக்கத்தைக் குறைக்கவோ இப்பொழுது புருஷகாரத்தைச் செலுத்தித்தான் ஆகவேண்டும்.

## எத்தாப்பூர்.

### ஸ்ரீ ஸர்வதோமுக மஹாயாகம்

ஸ்ரீ ஜகத்குரு பரமாசார்யாளுடைய அனுக்ரகத்தினாலும், பிரபுக்களுடைய உபகாரத்தினாலும் பரம புண்யமான மாயூரம் முதலிய காவேரி தீரங்களில் கருட சயனம் முதலிய வெகு யாகங்களை நடத்தினவர்களும் கும்பகோணத்தில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு சங்காசார்ய ஸ்வாமிகளவர்களுடைய திவ்ய மடத்தில் வாஜபேயமென்ற மகா யாகத்தை அனுஷ்டித்தவர்களும் சேங்காலிபுரம் பிரும்மஸ்ரீ ஸ்வாமி தீக்ஷிதர்வாள் அவர்களின் ஜேஷ்ட குமாரருமான பிரும்மஸ்ரீ நாராயணவாஜபேயீ அவர்களுக்கு சேலம் ஜில்லா எத்தாப்பூர் என்ற பிரஸித்தமான ஸ்ரீராம சமுத்திரம் அக்கிரகாரத்தில் ஸர்வதோமுகம் என்ற மகாயாகத்தை ஸ்ரீ ஸர்வேஸ்வரனுடைய கிருபையால் நடத்தி வைப்பதாக ஏற்பாடு செய்திருப்பதால் ஆஸ்திகர்கள் உபகரித்து யாக தெரிசனம் செய்து ஸ்ரீ எக்ஞேசுவரப் பிரஸாதத்திற்கு பாத்திரர்களாகும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

இப்படிக்கு,

T சுந்தரமய்யர், ரிடையர்ட் டிஸ்டிரிக்ட் ஜட்ஜ், சேலம்.

Y. K. சேஷய்யர், அட்வகேட் சேலம்

சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர்.

ராவ்சாகிப் S. விஜயராகவாச்சாரியார், கவர்மெண்ட், பிளீடர் சேலம்.

T. S. ராமனுதய்யர், மிராசுதார், பெத்தநாயக்கன்பாளையம்.

ஆர். முத்துசாமி அய்யர், மிராசுதார், ஆனையாம்பட்டி.

T. L. சுப்பைய்யர், அட்வகேட். மிராசுதார், திருக்களாவூர்.

மூகபஞ்சசதியின் இரண்டாம் பாகம்.
"கடாக்ஷ சதகம்"
Mr. G. V. கணேசய்யர், B.A, B.L.,
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷக் குறிப்புகளுடன் கூடியது.
தபால்செலவு வேறு] [விலை அணு 0—8—0
மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—
ஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட்,
டவுன்ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.



215

உ

# ஸ்ரீமந் நாராயண தீர்த்த குரு ஸ்வாமிகளின் சரித்திர சுருக்கம்.

(சென்றவார தொடர்ச்சி).

பகவான் தனதுபக்தனை நாராயண தீர்த்தரை நோக்கி உலகத்தார் உய்யும் பொருட்டு தரங்கிணியை உன் மூலமாயும் சிஷ்ய கோடிகள் மூலமாயும் பரவச்செய்யக் கடவாய். நீ இவ்வுடலோடு மாசி மாதமாயும், சுக்ல பக்ஷமாயும், அஷ்டமி திதியாயும், குரு வாரமாயும், கார்த்திகை நக்ஷத்திரமாயும்கூடி எந்த வருஷத்தில் சம்பவிக்குமோ அப்பொழுது சோதியாய் மாறி நம்மிடம் அடைவாய் என்று அருளிச்செய்து கிருஷ்ண ரூபத்தோடு மறைந்தார்.

அதன் பின் வரகூரில் தன்னால் ஸ்தாபிக்கப்பட்ட வேங்கடபதியின் விடைபெற்றுக்கொண்டு மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையே உள்ளதாயும் திருவையாற்றைச் சேர்ந்த ஏழுதலங்களுள் கொல்லன்துருத்தியே சிவலிங்கமாக விளங்குவதும் அப்பர் ஸ்வாமிகள் திருமடங்கண்டு நீண்ட நாள் வசித்து வந்ததும், மூவராலும் பாடல் பெற்றதும், காவிரியின் தென் கரையில் விளங்குவதுமாகிய திருப்பூந்துருத்தியை அடைந்தார்.

இங்கு இவ்வாறு இருக்க, முன் சொன்ன வேதியர் சொர்ணத்தின் ஆசையால், சுவாமி திருப்பூந்துருத்தியில் நிஷ்டை கூடியிருப்பதைக் கேள்விப்பட்டு அவ்விடம் அடைந்து வணங்கி பயபக்தியுடன் ஒருபுறம் நின்றார். அவ்வேதியரின் குறிப்பறிந்து சுவாமி அவன் மனதின் கண் உள்ள மும்மலமடிய பின் வருமாறு சம்பாஷிக்கலானார். "நீ இவ்வாறு பொருளின் மேல் இச்சையாக இருந்தால் எவ்வாறு பிறவாதிருக்கும் சங்கற்பம் அடைவாய்" என்றார்.

அந்தணன்:- சுவாமி சங்கற்பம் என்றால் என்ன?

சுவாமி:—மாணிக்கத்தைக் கல்லாய்ப் பார்த்தவனுக்கு அதனால் பயம்தோன்றாது. அது நல்லது என்கிற புத்தி உண்டாவதில்லை. ஆகையால் ஒருவன் நவின் உண்மையை எதார்த்தமாய் பார்ப்பதே, உயிர் உய்யும் வழியாம்.

அந்தணன்:— எதார்த்தமான குணம் யாது?

சுவாமி:- பொருள் ஈட்டுங்காலும், காக்குங்காலும் செலவிடுங்காலும், அனுபவிக்குங்காலும், இழந்துவிடுங்காலம், அடுத்தடுத்து பெருந்துன்பத்தைத் தரும். அது பயங்களுக்கெல்லாம் இருப்பிடமாகும்; சதாகாலமும் துக்கத்தை வளர்ப்பிப்பதாகவும், மிகவும் கர்வத்தைக்கொடுக்கிறதாகவும் சற்குணத்தைக் கெடுக்கிறதாகவும், லோபிகளுடைய சித்தத்தில் வணங்குவதாகவும் பந்துக்களுடைய பகைப்பை உண்பெண்ணுகிறதாகவும் முக்தி வழியைக் கெடுக்கிறதாகவும், அந்தக்கரணத்துக்கு மலினத்தைக்கொடுக்கிறதாகவும்,இதுவேயன்றி அரசர்களாலும் சோரர்களாலும் அக்னியினாலும் தாயாதிகளாலும், பயத்தைக்கொடுக்கக்கூடியது. தங்கமானது, பயத்தினால் மூழ்கி அனர்த்த துக்கத்திற்கெல்லாம் மூலமாய் இருக்கிறபடியால் சற் புருஷர்களுக்கும் சுகங்கொடுக்க மாட்டாது.

அந்தணன்:— பொருள் ஏன் சுகம் கொடுக்கமாட்டாது?

சுவாமி:-சற்புருஷர்களுக்கு தனலாபம்வருமேயானால் அஃது இவர்களுக்கு லோபத்தைக்கொடுக்கும். லோபத்தினால் விவேகங் கெட்டுப்போம்; விவேகம் கெட்டுப்போனால் அவர்கள் நசித்துப் போவார்கள், சொர்ணமானது, கிடையாமல் போனால் மனது துக்கத்தை உண்டாக்கும். கிடைத்ததென்றாலோ அவர்களை லோபம்தகிக்கும். நாய் பெற்ற தெங்கம் பழம் போல், தனக்கும் பிறருக்கும் உதவாமலே இருக்கும். ஆகையால் சதா விசனத்தைக் கொடுக்கிற தங்கம் எவனுக்குத்தான் சுகத்தைக்கொடுக்கப் போகிறது. மனுஷ்யனுக்கு தனமானது போகத்தினால் மதம் கொடுக்கும். தானம் செய்தால் பிறப்பைக் கொடுக்கும். இந்த இரண்டு வகையினும் நல்ல கெதி கூடாமல் வியர்த்தமாய்ப் போகின்றது. ஆகையால் தனத்தினால் மதம் விருத்தியாகும்; மதத்தினால் நினைவு கெட்டுப்போம். நினைவு கெட்டால்; புத்தி கெட்டுப்போம், புத்தி கெட்டால் தானும் கெட்டுப்போவான். தனமானது சுகங் கொடுக்குமென்கிற ஆயாஸத்தினால் திடமாய் ஆலிங்கனம் செய்யப்பட்டு அந்த தனம் சம்பந்தத்திலே சதா காலமும் இருந்து பார்த்திருக்கும் மூடர்களுடைய பிராணனை தனம் போகிறபோது கூடவே கொண்டு போய் விடும். தனசம்பன்னன் அந்தகன் போல் முன் பின் தோன்றாமல் சற்புருஷர்களால் தள்ளப்பட்டு துன்மார்க்கங்களில் சுழன்றும், துன்மார்க்கர்கள் கூட்டுறவோடு கூடி அடிக்கொரு முறை தடுமாறப்பட்டு முடிவில் அந்தகார கூபத்தில் விழுவான். இப்படிப்பட்ட தனசம்பன்ன குருடனுக்கு தரித்திரமானமையே யாம்.

மேலும் லோபமும் குரோதமும் டம்பமும் மதமாத்சர்யமும் தனங்கிடைத்த மாத்திரத்தினால் வர்த்திக்கும்.

அந்தணன்:— இப்படி உண்டாக்கும் தனம் எப்படி சித்த நிர்மலத்தைக் கொடுக்கும்.

சுவாமி:— "ஏ வேதியனே தங்கத்தைத் தேடி அலைந்தால் நீ இரும்பை சுமக்க நேரிடுமன்றோ!"

அந்தணன்:-ஆச்சர்யப்பட்டு, "அடியேன் தங்கத்தையடைந்தால் இரும்பைஏன் சுமக்கநேரிடும்"?விளங்கச்சொல்லவேண்டும்.

சுவாமி.— வேதியனே பெண்ணுக்காக நோயையும் மண்ணுக்காக முள்ளையும் தங்கத்துக்காக இரும்பையும் ஆசையுள்ளவன் சுமப்பான். பணத்தால் உலகம் படுந்துயரைப் பார்மின்; அஃது குணத்தாரும் வீழுங்குழி. பொருளின் லக்ஷணமோ இவ்வாறிருக்கின்றது. பொருளில்லாவிட்டால் எந்த காரியமும் கீர்த்தியும் இன்பமும் இல்லாதிருக்கிறது.

அந்தணன்:- தரித்திரனுடைய ரக்ஷணம் பின்னர்எப்படி?

சுவாமி:- மனுஷ்ய சஞ்சாரமில்லாத வனத்திலும், மனுஷ்யர் வாழ்கிற பட்டணத்திலும் கள்ளர் சஞ்சரிக்கிற இடத்திலும், மனுஷ்யர் கூடியிருக்கிற இடத்திலும் மனுஷ்யர் இல்லாதிருக்கிற இடத்திலும் தரித்திரமடைந்தவன் சொஸ்தமாய் சகல ஜனங்களாலும் ஆதரிக்கப்பட்டு சுகமாய் இருப்பான்.

அந்தணன்:- (மகானை நோக்கி,) இப்பொழுது பொருளின் இலக்கணத்தை முற்றும் அடியேன் உணரப்பெற்றேன். அதில் விருப்பமற்று வெறுப்பு உற்றேன்.

ஆயினும் என் பிதுர்க்களுக்காக செய்யவேண்டிய ஈமக் கடனுக்கும் இம்மையில் செய்த பாபத்தை நீக்கச்செய்யவேண்டிய பிராயச்சித்தத்திற்கும் சிறு பொருள் வேண்டு",மென்று விண்ணப்பித்தார்.

சுவாமி மறையோன் கையை நீட்டும்படி செய்து தன் செங்கையிலுள்ள உயர்மூலிகை ஒன்றை அவன் நீட்டிய கையில் ஈந்து சேமித்துக் கொள்ளுமென்று சொன்னார். அதுயேற்றுக் கொண்டு அவ்வந்தணன் அவரை நோக்கி அடியேன் கேட்டது சொர்ணமன்றோ? பச்சிலை தந்ததின் காரணம் என்னவென்றான்.

சுவாமியானவர் சீலம்குமந்தணரே உலகமாகிய முகத்துக்கு நேத்திரம்போல் விளங்கும் தஞ்சையைத் தலை நகராகக்கொண்டு ஞாலம்புகழ் அமர்சிங்கு என்னும் ஓர் அரசன் அரியணை அமர்ந்து செங்கோல் செலுத்தி வருகிறான். அவன் வேதாகம முறை வழுவாமல் 32. அறங்களையும் செய்து பக்தி விஸ்வாசத்தோடு இருந்தும் பூர்வஜென்ம வினைப்பயனால் அந்நரேந்திரன் நற்றிருக்கையில் ஓர் சிலந்தி உண்டாகி மிகவும்துன்புறுத்திக் கொண்டிருக்கிறது. இம்மூலிகை அவன் கையிலுள்ள சிலந்திக்கு சிறந்த ஔடதமாகும் அதனைத் துன்புறுத்தும் சிலந்தியில் பிழியச்சுகமாகும். உன் நினைவின்படி சொர்ணமளிப்பான் என்று சொன்னார். அவ்வுரை கேட்டு வணங்கி வேதியரும் அன்புடன் அரசன் அரண்மனையை அடைந்து அவன் சிலந்தியாணியை மூலிகையால்நீக்கி பொருள்பெற்றுச்செல்லுகையில் மன்னவன் மறையவரை நோக்கி இம்மருந்து உமக்கு ஈந்த மகான்யார் என்று கேட்டார். தஞ்சையாளும் இறைவனே இப்பஞ்சைக்கு பச்சிலைப் பறிந்தளித்தது, நாராயணகுரு நற்றவரென நாமம். அம்மஹான் இருப்பிடம் பூந்துருத்தி யெனப்புகன்று போயினர்.

இப்படி இருக்க செட்டக்கோவிலில் வாழ்ந்து வந்த ஒரு குடித்தனக்காரன் அரசாங்க கிஸ்திக்காக தன் ஆட்டைவிற்று கொடுக்கலாமென்று அதை ஓட்டிக்கொண்டு அருகிலுள்ள கண்டியூர் சந்தைக்கு விற்க வந்தான்.

அங்கு விலைபோகவில்லையாதலால், ஆட்டை ஓட்டிக்கொண்டு திருப்பூந்துருத்தி வழியாகச் சென்றான். ஆட்டின் வளப்பத்தைக் கண்ட அவ்வூர் சேணியர் அதன் இறைச்சி மேல் இச்சை கொண்டு அதை விலை பேசினார்கள். விலை தணிந்திருக்கிறதே என்று குடியானவன் ஓட்டிப்போவேனென்றான். அதுகண்ட சேணியர்கள், அவ்வாட்டை மந்திரத்தால் உயிர் நீங்கும்படி வீட்டி கொன்றனர். ஆடு சவமாகயிருப்பதைக்கண்ட அக்குடியானவன், கண்ணில்லான் பெற்றிழந்தானெனக் கடுந்துயரம் மனதில் கொண்டு மண்ணில் கிடக்கும் செத்த ஆட்டை தூக்கிக் கொண்டு நாராயணகுரு வசிக்கும் ஆஸ்ரமத்தின் வழியாகச் சென்றான் மகான் மன வருத்தங்கொண்ட அவனைத் தன்பால் அழைத்து இறந்த ஆட்டைச்சுமந்து போவானேன் என்றார். குடியானவன் அடிபணிந்து சுவாமி கிஸ்திக்கு ஆட்டை விற்க வந்தேன் இவ்வூர் நெசவுத்தொழில் சேணியர் மோசடியாக விலையைக் குறைத்துக்கேட்டார்கள்.

(தொடரும்.)



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.
பகுதான்ய-ஹூ சித்திரை-மீ 9உ

## வரதக்ஷிணை வழக்கத்திற்கு காரணம் யார்?

வரதக்ஷிணை வழக்கமானது ஹிந்துக்கள், மஹம்மதியர், கிறிஸ்தவர் முதலிய ஸகல வகுப்புக்களிலும் பரவி நிற்கிறது. ஆங்கிலேயர் முதலியவர்களிலும் சிற்சிலவிடங்களில் அந்த வழக்கமிருப்பதாக அறிகிறோம். ஆயினும், எல்லா விஷயத்திலும் ஹிந்து ஸமூகத்தையே தாழ்த்திக் குறைசொல்லும் மனோபாவம் ஹிந்துஸமூஹத் தலைவர்களுக்கு இருப்பதுபோல், வரதக்ஷிணை வாங்கும் விஷயத்திலும் ஹிந்து ஸமூஹமே வழிகாட்டியிருப்பதாக இவர்கள் வெகுகாலமாகக் குறைகூறிவருகிறார்கள். இதைப்பற்றி நம்மவர்களே செய்த கிளர்ச்சியால் அன்னியர்களும் நம்மைக் கேவலமாக நகைக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு நம் சீர்திருத்த வாதிகளே முற்றிலும் ஜவாப்தாரிகள். ஹிந்து ஸமூஹ மதாசாரப்பெருமைகளும், உரிமைகளும் தற்போது உலகில் தாழ்வாகக்கருதப்படுவதற்கு நம்ஸமூஹத்துரோஹிகளே பெரிதும் காரணமாகயிருந்து வரவில்லையா?

வரதக்ஷிணையை ஒழிக்கப்பாடுபடும் வேஷதாரிகள் பிரஸங்க மேடையில் வாய்கிழியப் பேசினாலும் அவர்கள் இந்த வழக்கத்தை ஒழித்ததாக யாராவது சொல்லமுடியுமா? ரஹஸ்யமாகவோ, வேறு வித முறைகளாலோ தங்கள்லாபத்தை அவர்கள் இழப்பதில்லையென்பது பலரும்அறிந்தரஹஸ்யமே. ஆகவேஇவர்களுடையமாயைபிரசாரத்தின்உண்மை வேஷமானது பிறருக்கு நம்மை பரிஹஸிக்க இடமளிக்கிறதேயல்லாது வேறு பிரயோஜனமில்லை.

நமது சாஸ்திரங்களின் அபிப்பிராயப்படி வரதக்ஷிணை பெறுவது தவறு என்றகேள்வி சிலரிடம் இருந்துவருவதை நாம் அறிவோம் இவ்விஷயத்தில் சாஸ்திர அபிப்பிராயத்தை நிர்ணயிப்பது எளிதானதல்லவாயினும் நிர்பந்தமுறையில் பேரம் பேசிப் பெண் வீட்டுக்காரனிடம் பணம் பறிப்பதை சாஸ்திரமோ, விவேகமுள்ள மனிதனோ ஒரு நாளும் அங்கீகரிக்க முடியாதென்பது தெளிவு. பெண் வீட்டுக்காரன், தான் இஷ்டபட்டு தமது பெண்ணுக்கு ஸ்திரீதனமாக ஏராளமான திரவியங்களைப் பரிசு அளிப்பது சாஸ்திரத்தில் தடுக்கப்படவில்லை இந்த வழக்கம் முன் காலங்களில் அவரவர் சக்திக்கு இயன்றமட்டில் ஹிந்து குடும்பங்களில் வழக்கத்திலிருந்து வந்ததாகத்தெரிகிறது. இதைத் தவிர முன் காலங்களில் இந்த வரதக்ஷிணைக் கொடுமை நம்மில் சிறிது கூடக்கிடையாதென்பது திண்ணமே.

இப்போது ஏற்பட்டுள்ள நிர்ப்பந்த வரதக்ஷிணை முறைக்கு நமது சாஸ்திரமோ, நமது பிராசீன வழக்கமோ சிறிதுகூட ஜவாப்தாரியன்று. ஆங்கிலப்படிப்பும், ஆங்கில நாகரிகமும் பரவியபிறகே இந்தக் கெட்ட வழக்கம் தாண்டவமாடுகிறது. இங்கிலீஷ் படிப்பும் ஸர்க்கார் உத்யோக மோஹமும் அதிகரிக்கவே, பிள்ளை வீட்டுக்காரர்கள், தங்கள் பிள்ளைகளுக்கு வரதக்ஷிணை மூலம் விலை ஏற்படுத்த ஆரம்பித்தார்களேயன்றி அதற்கு முந்தி நம்தேசத்தில் இந்த வழக்கமிருந்ததா?

இன்றைக்கும் இங்கிலீஷ் படித்தவர்களிடையே தான் இந்த துர்வழக்கம் வியாபித்து நிற்கிறதேயல்லாதுமற்றவர்களிடையில்கிடையாது. வேதாத்யயனம் செய்தவனோ, ஸம்ஸ்கிருதம் படித்தவனோ, பிராசுதாரோ, வரதக்ஷிணைகேட்க முன்வரக்காணோம். அவர்களை விரும்பி வரதக்ஷிணை கொடுப்பவர்களும் ஒருவருமில்லை. ஆகையால் ஆங்கிலம் படித்தவர்களும், ஆங்கில நாகரிகத்தில் மூழ்கிக் கிடப்பவர்களும் ஸமீபகாலமாக இந்த துர்வழக்கத்தைப் பரப்பியதற்குக் காரணமாகிறார்களென்பது மறுக்கமுடியாது. ஆகையால் இவ்விஷயத்தில் பொதுவாக ஹிந்து ஸமூஹத்தையோ, நமது சாஸ்திரத்தையோ, பழைய வழக்கத்தையோ தோஷம் கூறவழியில்லை.

இதைப்பற்றி இவ்வளவு தூரம் நாம் எழுத நேர்ந்ததற்குக் காரணமுண்டு. சில தினங்களுக்குமுன் சென்னையில் முஸ்லீம் ஸ்திரீகளின் கூட்டமொன்று நடந்தது. [illegible] ங்களிலிருந்தும் மஹம்மதிய ஸ்திரீகள் வந்திருந்ததுடன் சில ஹிந்து ஸ்திரீகளும் அங்கு போயிருந்தார்களாம்.

தலைமை வகித்த மஹம்மதிய ஸ்திரீ வரதக்ஷிணை விஷயத்தைப் பிரஸ்தாபித்தார். மஹம்மதிய ஸமூஹத்தில் வரதக்ஷிணைக் கொடுமை பரவியிருக்கிறதை அவள் பகிரங்கமாக ஒப்புக்கொண்டாள். ஆனால் அந்த தோஷம் ஹிந்துக்களுடைய ஸஹவாஸத்தால் மஹம்மதியர்களிடம் பரவிவிட்டதாக அவள் சாதித்தாள். ஹிந்து ஸமூஹத்திருத்தக்காரர்கள் இதைக்கண்டு தலை குனிவார்களா? ஸந்தோஷிப்பார்களா என்று தெரியவில்லை. மஹம்மதியர்களிடமிருக்கும் கெட்ட வழக்கங்களுக்குக்கூட ஹிந்து ஸமூகத்தையேகாரணமாகக்கூறும் கொடுமையை ஸ்வஜனத்துரோகிகளாகிய நம் சீர்திருத்தக்காரர்கள் ஸஹிக்கிறார்களா? இவர்களுக்கு ரோஷமிருக்கிறதா? ஹிந்து ஸமூகத்தைக் கீழ்படுத்தி இவர்கள் பேசி காட்டிக் கொடுத்ததையே அந்த முஸ்லீம் ஸ்திரீயும் திருப்பிச்சொல்லிவிட்டாள். உண்மையில் இவளுடைய பேச்சுக்குச்சிறிதாவது ஆதாரமுண்டா? ஹிந்துக்களிடமிருந்து வரதக்ஷிணை முறை, மகம்மதியர்களிடம் பரவியதாக இவள் கூறுவதற்கு என்ன ஆதாரமுளது? மகம்மதியர்களிடமிருந்துதான் நம்மிடம் அது பரவியதென்று ஒருவர் சொன்னால் அதை எப்படி மறுப்பது? கீழே சொல்லியது போல் ஆங்கில படிப்பு வருமுன் நம் தேசத்தில் நமக்குள் இந்த வழக்கமிருந்ததாக நிரூபிக்கமுடியுமா? தங்கள் ஸமூகத்திலுள்ள குப்பைகள் பிற ஸமூகத்திலிருந்து பரவியதாகச்சொல்லியாவது தம் ஸமூகத்தை உயர்த்திப்பேசும் இந்த ஸ்திரீ போன்றவர்களுடைய ஸ்வாபிமானத்தை அங்கு வீற்றிருந்த முத்து லக்ஷ்மி ரெட்டி முதலியவர்கள் கவனித்தார்களா? இது அவர்களுடையபுத்தியில் ஸ்வாபிமான உணர்ச்சியை அடித்து ஊட்டியிருக்குமா? மஹம்மதியஸ்திரீகளில்பரவியிருக்கும் படுதா வழக்கமும் ஹிந்துக்களிடமிருந்தே பரவியதாக அந்தமஹம்மதிய ஸ்திரீ சொல்லியிருக்கலாமே. அதற்கும் இந்த பௌருஷமற்ற, ரோஷமற்றநமது சமூகம் தலையாட்டி விடும். ஸமூகத்திருத்த வாதிகளின் கெட்ட பிரசாரம் எவ்வளவு ஆபாஸமாக ஹிந்து ஸமூஹத்தைக்கேவலப்படுத்திவருகிற தென்பதை அவர்கள்சீக்கிரத்தில் உணர்வது நல்லது.

# குறிப்புகள்.

## அடங்காமையை ஆதரித்த பலனே!

சென்னையில் ஓர் விசித்திர ஸம்பவம். சச்சிதானந்தம் என்ற ராஜியக்கைதி ஒருவன் அந்தமான் தீவில் இருந்தான். அவனை விடுவிக்கும்படி பிரதம மந்திரி கனம். ஸி. ஆர். சிபார்சு செய்தார். அவன் விடுதலை பெற்றதும் அவனுக்கு பிழைப்புக்கு வழி தேடி கொடுத்தார். காங்கிரஸ் சட்டஸபை காரியாலயத்திலேயே உத்யோகம் கொடுக்கப்பட்டது. ஆயினும், அவனுக்கு 25 ரூ சம்பளம் போதவில்லை. கனம் மந்திரியிடம் போய் தாம் காங்கிரஸ் வாதியாகையால் 100 ரூபா சம்பளம் கொடுக்க வேண்டுமென்றான். ஸத்யாக்ரஹம் செய்தான். மந்திரி வீட்டை விட்டு விலகமறுத்தான். காங்கிரஸ் பக்தனாக கருதப்பட்ட அவனை அடக்கியாள மந்திரியால் முடியவில்லை. உடனே போலீஸ் உதவியை நாடினார். அவர்கள் வந்து அவனை பலாத்காரமாக தூக்கிஅப்புறப்படுத்த வேண்டியதாயிற்று. அவன் மீது கேஸ் கொடுக்கப்பட்டது. கோர்ட்டிலும் அவன் சண்டித்தனம் செய்தான். துடுக்காகப்பேசினான் [illegible] க்ஷி கூறிய மந்திரி, பொய் சொன்னதாயும் அவரை ஜயிலில் வைக்க வேணுமென்றும் கோரினானும்! இந்த விநோதங்கள் விரிவாகப் பத்திரிகைகளில் வெளிவந்திருக்கின்றன.

இச்சம்பவம், தீட்டிய மரத்திலேயே கத்திகூர் பாய்வதென்ற பேச்சுக்கு ஒத்ததாகயிருப்பதை வெளிபடுத்தியிருக்கிறது. ராஜிய கிளர்ச்சிகளில் தலைகால் தெரியாமல், சிறுவர்களைத்தூண்டிவிட்டு ப்பலவழிகளிலும் அடங்காமையை ராஜீயத்தலைவர்களே கற்று கொடுத்து விட்டார்கள்.

இந்த அடங்காமை விஷம் பிறர் மீது பிரயோகிக்கப்படும் காலத்தில் ராஜீயத் தலைவர்கள் படும் ஸந்தோஷத்திற்கு அளவில்லை. அதற்குப்பரிந்து எவ்வளவோ கக்ஷி பேசுவார்கள். பத்திரிகைகளில் ஆர்பாட்டம் செய்வார்கள். அடங்காமை பிரஜா உரிமையென்று வாதாடுவார்கள். ஆனால் இந்த சண்டித்தனத்தை ராஜீயத் தலைவர்களிடமே அந்தச் சிறுவர்கள் பிரயோகிக்க ஆரம்பித்தால் அப்போது அவர்கள் ஸஹிக்கமுடியவில்லை. அடக்குமுறையை பிரயோகிக்க பின்வாங்குவதில்லை. தாங்கள் செய்தால் அதற்கு ஸத்யாக்ரஹமென்று பெயர். பிறர் அதை தங்கள்மீது செய்தால் அதற்கு தூராக்ரஹமென்றோ பலாத்காரமென்றோ பெயரிடுகிறார்கள். ராஜீயப் பிரசாரம் காரணமாகச் சிறுவர்களிடம் அடங்காமை அதிகரித்துவிட்டது. தாய் தந்தையர்களுக்கோ, உபாத்யாயர்களுக்கோ, வேறு பெரியோர்களுக்கோ சிறுவர்கள் இப்போது அடங்கி நடப்பதில்லை. இந்தியாவிலுள்ள பள்ளிக்கூடங்களிலும், காலேஜ்களிலும் தினம் தினம் நடந்துவரும் அடங்காமைக் கிளர்ச்சிகளை ராஜீயத்தலைவர்களாலேயே அடக்க முடியவில்லை.

அலஹாபாத் மாணவர்கள் பண்டித நேருவைக்கூட மதியாமல் நடந்துகொண்ட விஷயம் யாவரும் அறிந்த விஷயமே. ஆது



லால், ராஜீயத்தலைவர்கள் இனிமேலாவது சிறுவர்களைக் கெடுக்காமலிருக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இதற்கு சென்னை ஸம்பவம் ஒரு படிப்பினையாகும்.

தாங்கள் உயர்ந்ததாக நினைத்த ஸத்யாக்ரஹம், உபவாஸம் போன்ற உபாயங்களையே இப்போது, தலைவர்கள் உபத்திரவமாக நினைக்கவும், அவைகளில் வெறுப்புக்காட்டி அடக்கவும் முற்பட வேண்டி யிருப்பதை சிறிது சிந்தித்துப்பார்க்க வேண்டாமா?

## காந்திஜீ வார்த்தையை கஸ்தூரிபாய் கேட்கவில்லை!

பர்ப்பாயில் காந்தி ஸேவாஸங்கத்தின் கூட்டம் நடக்கையில் ஸ்ரீமான் காந்தியும், படேலும், பேசுகையில், பூரி ஜகந்நாதர் கோவிலில் தீண்டாதாரை பிரவேசிக்க அநுமதியாததைப்பற்றி பலமாகக் கண்டித்துப் பேசினார்கள். பஞ்சமர்கள் பிரவேசிக்க உரிமையில்லாத கோவில்களில் தாம் போக இஷ்டப்படவில்லையென்றும், அந்தக்கோவில்கள் தமக்கு வேண்டாமென்றும் காந்திஜீ பொதுக்கூட்டத்தில் அறிவித்தார்.

இதன் பிறகு அங்கு ஒரு விசேஷ ஸம்பவம் நடந்ததாக ஸ்ரீமான் மஹாதேவ தேசாய் சென்றவாரம் ஹரிஜனபத்திரிகையில் குறிப்பிட்டிருக்கிறார். காந்திஜியின் மனைவி ஸ்ரீமதி கஸ்தூரிபாயும், மஹாதேவதேசாயின் மனைவியும் பூரிஜகன்னாதர் கோவிலுக்குஸ்வாமி தர்சனம் செய்யப்போகவிரும்பினார்களாம். காந்திஜீக்கு இதுதெரிந்து, அவர் தமதுமனைவி அக்கோவிலுக்குப்போகக்கூடாதென்று கட்டளையிட்டார். தீண்டாதார் போக அவகாசமில்லாத கோவிலை பஹிஷ்கரிக்கவேண்டுமென்ற தமது கொள்கையை கஸ்தூரிபாய் மீது வற்புறுத்தினார். ஆனால் இது பலிக்கவில்லை. ஸ்ரீமதி கஸ்தூரிபாய், மஹாதேவதேசாயின் மனைவியுடன் கோவில் சென்று ஸ்வாமி தர்சனம் செய்துவிட்டார்கள். தேசாயியின் மனைவியோ தனது கணவனிடம் சொல்லிக் கொள்ளாமலே கோவில் போனாளாம். இவ்விருவரும் இம்மாதிரி காந்திஜீ அபிப்பிராயத்திற்கு மாறாகக் கோயில் சென்றதால் காந்திஜிக்கு அதிக வருத்தமும், கோபமும் ஏற்பட்டு அவரது சரீரநிலை கெட நேர்ந்ததாம். அவருடைய ரத்தக் கொதிப்பும், ரத்த ஓட்ட வேகமும் அதிகரிக்க இந்த ஸம்பவம் ஒரு காரணமாயிருந்ததென ஸ்ரீமான் தேசாய் ஹரிஜனபத்திரிகையில், எழுதியிருக்கிறார்.

காந்திஜீயோ, அவருடைய மனைவியோ, ஒரு கோவிலை ஆதரிப்பதாலும், பஹிஷ்கரிப்பதாலும் அந்தக்கோவிலுக்கு உயர்வோ, தாழ்வோ ஏற்பட்டுவிடுவதற்கில்லை. ஆகையால் காந்திஜீயின் கொள்கையைப்பற்றிக் கவலைப்படுவார் எவரும் இருக்கமாட்டார்கள். காந்திஜிக்கு, புண்ய க்ஷேத்ரங்கள், புண்ய தீர்த்தங்கள் ஆகியவைகளில் நம்பிக்கை கிடையாதென்று வெகுகாலமாகத் தெரிந்த விஷயமே. இந்தியாவில் அவர் பலதடவை சுற்றுப் பிரயாணம் செய்தும் கங்கைமுதலிய ஒரு புண்ய தீர்த்தத்திலாவது அவர் முழுகியதாக யாராவது கேள்விப்பட்டதுண்டா? காசியில் சூர்யக்கிரஹண காலத்தில் இவர் தங்கியிருந்தும், பத்து லக்ஷக்கணக்கான ஹிந்துக்கள் அச்சமயம் கூடி நீராடுகையிலும் இவர் கிரஹணஸ்நானம்கூடச் செய்யாமலிருந்ததை சில பத்திரிகைகள் குறிப்பிட்டன. விக்ரஹாராதனையில் நம்பிக்கையுள்ளவராக காந்திஜீ ஒரு ஸமயமும் காட்டிக் கொள்ளாதவராயிருந்தும், திருவாங்கூர் கோவிலில் கட்டுப்பாடுக்காக பஞ்சமருடன் சென்று இவர் ஸ்வாமிதர்சனம் செய்தார். இத்தகையவர் பூரிகோவிலை பஹிஷ்கரித்ததால் என்ன அந்த கோவிலுக்கு இளப்பம் நேர்ந்துவிட்டது?

ஆயினும் இவருடைய முரட்டுப்பிடிவாதக் கொள்கையை இவருடைய மனைவியே பொருட்படுத்தி கௌரவிக்கவில்லையென்றால் இந்தியாவிலிருக்கும் கோடிக்கணக்கான ஆஸ்திக ஜனங்கள் அங்கீகரியாததில் அதிசயமென்ன?

## கௌன்ஸிலர் பதவிக்கு மட்டும் யோக்யதை வேண்டாமா?

தென்னிந்தியாவெங்கும் முனிஸிபல் எலெக்ஷன் வந்து விட்டது. கௌன்ஸிலர் ஸ்தானத்தைப் பெறத்தீவ்ரமான போட்டி எங்கும் காணப்படுகிறது. தனிப்பட்டவர்களின் போட்டிநிற்க, காங்கிரஸ் காரர்களுக்குள்ளேயே பிளவும் போட்டியும் அதிகமிருப்பதாகத்தெரிகிறது. முக்யமாக அட்ஹாக் கமிட்டி யெனப்படுகிற ஸர்வாதிகாரபீடத்தின் யதேச்சாதிகாரத்தீர்ப்பினால் காங்கிரஸ் வாதிகளே வெறுப்பு அடைய நேர்ந்திருக்கிறது. இந்தக் கமிட்டியார் தாங்கள் ஒரு சிலராகக் கூடிக்கொண்டு அபேக்ஷகர்களைத் தங்கள் மனம்போனபடி நிர்ணயித்து அவர்களை ஆதரிக்கும்படி வோட்டர்களுக்கு ஆக்ஞையிடுவது வழக்கமாயிருக்கிறது. அபேக்ஷகர்களைப் பொறுக்குவதிலோ, அவர்களுடைய அர்ஹதையை அறிவதிலோ அந்தந்த ஸ்தலபிரமுகர்களைக் கலப்பது அகௌரவமாக இந்தக் கமிட்டியாரால் கருதப்படுகிறது. இது ஸ்தலத்தாரைமிகுந்த அலக்ஷ்யம் செய்வதாயிருக்கிறது. ஆகையால் கல்வியோ, அநுபவமோ, ஸமூஹ அந்தஸ்தோ ஒன்றுமில்லாதவர்களை அபேக்ஷகர்களாகப் போட்டுவிட்டு, வோட்டர்கள் அவர்களையே தேர்ந்தெடுக்க வேண்டுமென்று கட்டளையிடுகிறார்கள். அபேக்ஷகர்கள் அந்தஸ்தானத்திற்கு உரிய யோக்யதை பெற்றிருக்கிறாரா, தமது கடமையைச்செய்ய ஆற்றல் பெற்றவரா? வோட்டர்களின் ஆதரவைப் பெற்றவரா? இத்யாதி முக்ய விஷயங்களை இக்காலத்தில் சிறிதும் லக்ஷ்யம் செய்வதில்லை.

இப்போது காங்கிரஸ் அபேக்ஷகர் பொறுக்கப்பட்டிருப்பதில் இத்தகைய ஊழல் மிகவும் அதிகமாயிருப்பதாகக் காங்கிரஸ் வாதிகளே குறைகூறுகிறார்கள்.

ஒரு ஸ்தானத்தை ஒருவர் வஹிக்க வேண்டுமானால் அதற்கேற்ற யோக்யதை அவரிடம் இருக்கவேண்டியது அவசியமாகும். கவர்னர் முதலாக கிழத்தர குமாஸ்தாவேலை வரையில் ஒவ்வொரு உத்தியோகத்திற்கும் யோக்யதையைக்கவனித்தே நியமனம் செய்கிறார்கள். ரவின்யூ, போலீஸ், கல்வி, நீதிபோன்ற ஒவ்வொரு இலாகாவுக்கும் அதற்கேற்ற படிப்பும், தேர்ச்சியும் இருக்கிறதா வென்று பரீக்ஷைசெய்தே உத்யோகம் கொடுக்கிறார்கள். அந்த யோக்யதை இல்லாதவனை நியமிக்க மறுக்கிறார்கள்.

ஆனால் சட்டஸபை மெம்பர் பதவிக்கும் முனிஸிபாலிடி மெம்பர் பதவிக்கும் ஒரு யோக்யதையும் வேண்டியதில்லை. அவன் மனிதனாக இருப்பதே போதுமென்று செய்யப்பட்டிருக்கிறது.

முனிஸிபாலிடியிலும், சட்டஸபையிலும் மெம்பர்கள் சிறந்தபடிப்பினாலும், மிகுந்த அனுபவத்தினாலுமே பேசமுடியும். பொதுவானபடிப்பும், சட்டஞானமும், அவர்களுக்கு அவச்யமாகும். சிக்கலாயும், துரூஹமாயுமுள்ள அநேகவிஷயங்களைப்பற்றி அவர்கள் பேசவும் முடிவுசெய்யவும் வேண்டியவர்கள். அத்தகைய ஸ்தானத்தில் கக்ஷிக் கட்டுப்பாட்டிற்காக அனுபவமற்றவர்களை உட்காரவைத்து வோட்வாங்குவது ஜனநாயக முறையை பரிஹாசம் செய்வதாகும்.

சட்டஸபை, முனிஸிபாலிடி மெம்பர்கள், கௌரவம் வாய்ந்த வோட்டர்களின் பிரதிநிதிகளாயிருந்து அவர்களுடைய ஸௌகர்யா ஸௌகர்யங்களை நிர்ணயிக்கும் பெரிய பொறுப்பேற்ற கடமைகளைச் செய்யவேண்டியவர்களாயிருப்பதால் அவர்களுக்கு நல்ல படிப்பும் விஷயஞானமும் இருக்கவேண்டியது அவச்யமாகும்.

ஆகையால் இவ்விஷயத்தில் கவர்மெண்டார் தகுந்த சட்டமொன்றை இயற்றுவது உசிதமாகும்.

வெறும் தலையாட்டிப் பொம்மைகள், வோட்டர்களுக்குப் பிரதிநிதிகளாக வராமல் தடுக்க, அபேக்ஷகர்களுக்கு இன்னன்ன அர்ஹதைகள் இருக்கவேண்டுமென்று நியமம் ஏற்படவேண்டியது அவசியம். குறைந்த பக்ஷமாக இவ்வளவு படிப்பு இருக்கவேண்டுமென்று நிர்ணயம் ஏற்படவேண்டும். லோகல் போர்டு சட்டங்களை மட்டுமாவது படித்துத்தேறியவர்கள் தான் முனிஸிபாலிடிக்கு அபேக்ஷகர்களாக நிற்கலாமென்று சட்டம் செய்யாவிட்டால் முனிஸிபாலிடி முதலியவை வெறும் பொம்மைக் கூட்டமாகவே ஆகிவிடும்போல் தோன்றுகிறது. தற்போது எங்கும் அபேக்ஷகர்கள் பொறுக்கப்படும் விதத்திலிருந்து மேற்கண்ட நியமத்திற்கு இப்போது அவசியம் அதிகமாயிருக்கிறது.

காங்கிரஸ் மந்திரிகள் இதைக்கவனிப்பார்களா?

ஒரு வோட்டர்.

## பம்பாயிலும் கலஹம்.

பம்பாயில் கள்குடித்துவிட்டுச் சேட்டாடிய சிலருக்குள் தோன்றிய கலஹமானது, பெரிய ஹிந்து முஸ்லீம் கலஹமாக மாறியது. 8 பேர் கொல்லப்பட்டுப்போனார்கள். பலர் காயமடைந்தனர். கத்திக்குத்து நின்றபாடில்லை. 400பேர் வரையில் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள்.

## ஜனத்தொகையைக் குறைக்க. யோஜனை.

பம்பாயில் கூட்டம்.

இந்தியாவில் ஜனத்தொகை அதிகரித்து ஜீவனத்திற்கு கஷ்டம் அதிகமாகி வருகிறதாம். ஆதலால் ஜனத்தொகையை இனி வளரவிடாமல் தடுக்க பம்பாயில் ஒரு யோஜனை மஹாநாடு நடந்தது. பிரதம மந்திரியும் விஜயம்செய்து பேசினார். ஆனால் அவர் கர்ப்பத்தடையை ஒப்பவில்லை.

வேறு பலர் பேசுகையில் கர்ப்பத்தடை முதலிய முறைகளால் ஜனத்தொகையைக் குறைக்க முயலவேண்டுமென்று பேசினார்கள்.

## மந்திரி, வைஸ்ராயைத் தாக்குகிறார்.

கல்கத்தாவில் நடைபெற்ற முஸ்லீம் ஸபையில் வங்காள பிரதமமந்திரி கனம் ஹக் பேசுகையில் வைஸ்ராய், காங்கிரஸ்காரரிடமே அதிக அபிமானம் காட்டுவதாயும், காங்கிரஸ் மந்திரிகளையே அவர் அடிக்கடி புகழ்வதாயும் மஹம்மதிய மந்திரிகளை வைஸ்ராய் பாராட்டுவதே கிடையாதென்றும், தங்களை அவர் அலக்ஷ்யம் செய்வதாயும் காந்திஜீயைக் கூப்பிட்டு அவர் கலந்து பேசுவதாயும், மஹம்மதியத்தலைவர்களுடன் அவர் யோஜிப்பதேயில்லையென்றும் ஆகவே அவர் பக்ஷபாதம் காட்டுவதாயும் குறைகூறிப் பேசினார்.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரா முகாம்.
டெக்கி Teki.
East Godavari.

# புருஷார்த்தங்கள்

2.

முன்னொரு ஸஞ்சிகையில் மாயையினுடைய பலத்தால் நம்முடைய நிஜமான ஸ்வரூபத்தை நாம் அறியாமலும் கர்மபந்தத்தில் அகப்பட்டு விழிக்கிறோமென்றும் எந்த அவஸ்தையிலும் நாம் கோறுவது சுகமென்றும் அந்த சுகத்தில் இச்சையே புருஷார்த்தங்களென்ற தத்வத்தில் அடங்கியிருப்பதாகவும் விக்ஞாபிக்கப்பட்டது.

நாம் காலையில் விழித்ததுமுதல் ஊரெல்லாம் சுற்றித்திரிகிறோம். கடைசியாக அலைந்தலைந்து சிரமத்தையடைந்து வீட்டை அடைந்து சுகமாகத் தூங்குகிறோம். அப்படியே நாம் நம்முடைய சொந்தவீட்டை விட்டுக் கிளம்பி பல ஜன்மங்களாகிற வெளி விடுதிகளில் தங்கித்தங்கி கஷ்டத்தை அனுபவிக்கிறோம். வெளியில் புறப்பட்டுவிட்டால் ஆங்காங்கு ஏற்படும் வேலைகளை ஆழ்ந்து கவனிக்க ஆரம்பித்தவுடன் அந்தக் காலங்களில் எவ்விதம் நமக்கு வீட்டிற்குப்போக வேண்டுமென்ற ஞாபகம்கூட இல்லாமல் போகிறதோ அவ்விதமே அந்தந்த ஜன்மங்களில் ஏற்படும் அனுபவங்களில் உழன்று நிற்கும்கால் நம்முடைய சொந்த வீடாகிய மோக்ஷத்தை மறந்து கூட நிற்கிறோம். வெளியில் கிளம்பினவன் விடுதிகளில் இருக்கும் காலத்தில் அவனுக்கு சிரமங்கள் ஜாஸ்தியாக ஏற்பட்டால் அந்தக்காலத்தில் தன்னுடைய வீட்டின் ஞாபகம் ஏற்படுவதுபோல ஒவ்வொரு ஜன்மத்திலும் பரம கஷ்டங்களை கர்மவசத்தால் அனுபவிக்கும்படி நேருங்கால் அந்த சமயத்திலாவது எப்படியாவது இந்த சம்சாரமாகிற பந்தத்திலிருந்து விடுதலையடையவேண்டுமென்ற ஞாபகம் ஏற்படுகிறது. வெளி விடுதிகளில் கர்மவசத்தால் மிகுதியான உபசாரங்களைப் பெற்றிருக்கும் சிலர் அந்த சுகத்தினால் எப்படி தன்னுடைய சொந்த வீட்டைக்கூட ஞாபகத்திலிருந்து விலக்கிக்கொள்ளுகிறார்களோ அதேமாதிரி ஓர் ஜன்மத்தில் பூர்வ ஜன்ம புண்ய கர்ம பலனாக ஒருவன் சௌக்யங்களை அனுபவிக்க நேர்ந்தால் அந்த சிற்றின்ப சுகத்தை அனுபவிப்பதில் பேரின்பத்தை யடையக்கூடிய தன்னுடைய சொந்த வீட்டின் ஞாபகம் கூட இல்லாமலிருப்பதையும் அனுபவத்தில் பார்க்கிறோம்.

अधनोऽयं धनं प्राप्य माद्यन्नुच्चैः न मां स्मरेत्
इति कारुणिको नूनं धनं मे भूरि नाददात् ॥

என்று குசேலர் சொன்னபடி பேரின்பத்திலிருந்து நழுவினவர்களாக சம்சாரமாகிற சாகரத்தில் உழன்று கஷ்டப்படும் மானிடர்களுக்கு ஏதோ தெரிந்தோ தெரியாமலோ செய்த புண்ய வசத்தால் ஓர் ஜன்மாவில் அநித்யமானதும் சிற்றின்பமானதுமான சுகானுபவம் ஏற்பட்டால் உடனே இதுவே நமக்குப் போதுமென்று நினைப்பதுபோல சகலத்தையும் மறந்து மதாந்தர்களாய் நிற்கிறோம்.

ஆகவே மானிடர்களாய்ப் பிறந்தவர்களுக்குப் பேரின்பமே முக்யலக்ஷ்யம். எந்தக் காரணத்தைக்கொண்டும் அதை நாம் மறக்கலாகாது. சிற்றின்பமும் லக்ஷ்யம்தான். ஆனால் அது ஔபசாரிகமாக மாத்திரம் லக்ஷ்யமாகக் கருதப்படுமே தவிற வாஸ்தவத்தில் அதை லக்ஷ்யமாகக் கொள்ள முடியாது. அதுவே ஐஹிகமான சுகம் (pleasure) ஆமுஷ்மிகமான சுகம் (happiness) என்றும் இருவையாகக் கருதப்படுகிறது. சிற்றின்பமென்பது அர்த்தம் காமம் என்ற இரு புருஷார்த்தங்களாலும் தெரிவிக்கப்படுறகிது. இந்த மூன்று புருஷார்த்தங்களுக்கும் அடிப்படையான அஸ்திவாரம் தர்மம். இதுவே அஸ்திவாரமானதால் முதல் புருஷார்த்தமாக குறிக்கப்படுகிறது. எவ்விதம் யோகமார்க்கத்தில் பிரவர்த்திக்கும் ஒருவன் அந்த வழியில் போகப்போக நடுவில் ஏற்படக்கூடிய அணிமாத்யஷ்ட சித்திகளில் ஈடுபட்டு மயங்காமல் மேலே போனால் மாத்திரம் நான்காவது புருஷார்த்தம் லபிக்குமோ அவ்விதமில்லாமல் எந்த சித்திகளிலாவது அகப்பட்டுக்கொண்டு அதிலியே ரமிக்க ஆரம்பித்து விட்டால் மேலே போக வழியில்லாமல் போவதுடன் சிரமப்பட்டு ஏறின படியிலிருந்து கீழே இறங்கவும் நேருமோ அதுபோல் தர்மமென்ற முதல் புருஷார்த்தமாகிற அஸ்திவாரத்தின் மேல் இரண்டு மூன்று புருஷார்த்தங்களாகிற கட்டிடங்களை கட்டினாலும் அவைகளிலேயே ஈடுபட்டு நிற்காமல் அவைகளை பட்டும் படாமல் அனுபவித்துக்கொண்டு எந்த இன்பமானது மேலான இன்பமோ எது துக்கத்துடன் சம்பந்தப்படாத இன்பமோ எந்த இன்பத்திற்கு எல்லை கிடையாதோ எந்த இன்பத்தை அடைந்து விட்டால் மறுபடி அதை விட்டு நழுவுதல் ஏற்படாதோ அப்பேர்ப்பட்ட நான்காவது புருஷார்த்தத்திற்கு பாடுபடுகிறவனே புத்திமான். அந்தப்பேரின்பத்தின் பெருமை தெரியாததால் இன்பம் தான் வேண்டுமென்று நினைக்கிறோம். அதுதெரிந்தால் இதை நினைக்கவே மாட்டோம்.

ஆகையால்தான் மனுஷ்யனுக்கு முக்யமாக ஜீவ்ய லக்ஷ்யமாக நான்கு புருஷார்த்தங்கள் விதிக்கப்பட்டு அவைகளை சேவிக்கும் வழிகளும் குறிக்கப்பட்டது. எல்லாவற்றிற்கும் தர்மமே அடிப்படையாகக் கொள்ளத் தகுந்தது. தர்மமே அனுஷ்டிக்கத் தகுந்தது. தர்மத்திற்கு விரோதமான எந்த விஷயமும் எக்காரணத்தைக்கொண்டும் கையாடத்தக்கதில்லை. தர்மமான வழியிலேயே இரண்டாவது புருஷார்த்தமான அர்த்தம் சம்பாதிக்கப்படவேண்டியது. தர்மமாக விவாஹம் செய்யப்பட்ட பத்நியுடன் தர்ம வழியில் சம்பாதிக்கப்பட்ட அர்த்தத்தைக் கொண்டு மூன்றாவது புருஷார்த்தமான காமம் சேவிக்கப்படவேண்டியது. இவ்விதம் அனுஷ்டிக்கப்பட்டால் அவைகள் சித்தத்திற்கு எவ்வித கெடுதலும் உண்டுபண்ணாது. இவ்விதம் அனுஷ்டானம் செய்துவந்தால் அதுவே கர்மயோகமாகப் பரிணமிக்கும். நாம் செய்யும்தர்மத்தை நமக்கு இந்தப்பலன் வேண்டுமென்று எண்ணாமல் ஈச்வரன் அவனுடைய இஷ்டப்படி கொடுக்கட்டுமென்று அவனிடத்தில் அர்ப்பணம் பண்ணிவிட்டால் நம்மிடத்தில் உள்ள அழுக்குப்போய் பேரின்பம் கிடைக்கும். அந்த தர்மமே அப்போது அர்த்தகாமங்களுக்கு சாதனமாக இருப்பதுடன் பேரின்பத்திற்கும் சாதனமாக ஏற்படும்.

குசேலருடைய சரித்திரமே புருஷார்த்தங்களுடைய தத்வங்களை அறிந்துகொள்வதற்குத் தகுதியுள்ளதாக இருக்கிறது. தர்மானுஷ்டானமே அவருடைய கொள்கை. யாசிக்கும் பொருட்டு அவர் பத்நியால் கிருஷ்ணர் சமீபம் அனுப்பப்பட்ட காலத்தில்

अयंहि परमो लाभः उत्तमश्लोक दर्शनं

என்று அவருடைய புத்தியானது கிருஷ்ண தர்சனத்தில் நாடிற்றே யொழிய வேறில்லை. பின்பு தேவர்களுக்குக்கூட துர்பலமாக உள்ள சம்பத்தானது கிடைத்தகாலத்திலும் கூட அது அவருடைய மனோபாவத்தை மாற்றவில்லை. அதில் அகப்பட்டு மயங்காமல் அவ்வளவு சுகத்தையும் பரம வைராக்யத்துடனும் கிருஷ்ணபக்திக்கு எவ்வித இடஞ்சலன்னியிலும் அனுபவித்துவந்தார். அதன் பலனாக நான்கு புருஷார்த்தங்களையும் நன்றாக அடைந்து பரம கீர்த்தியை அடைந்தார்.

N. சாம்பசிவ அய்யர் B.A.,B.L.,
நாகை.

## 5 ஆயிரம் சம்பளமா?

திருவாங்கூரில் ஆக்ஷேபம்.

திருவாங்கூர் திவான் ஸர். ஸி. பி. ராமஸ்வாமி அய்யருக்கு மாதம் 5 ஆயிரம் சம்பளம் கொடுக்கப்படுவதை அவ்வூர் காங்கிரஸ் ஸபை வெகு பலமாகக்கண்டித்து மஹாராஜாவிடம் விண்ணப்பம் செய்து கொண்டிருக்கிறது.

## காங்கிரஸ்காரர் துஷ்டச்செயல்.

நாகபுரியில் மீண்டும் கலவரம்.

14உ யன்று நாகபுரி ஹிந்துக்கள் மீண்டும் ஒரு பொதுக்கூட்டம் நடத்தி ஹிந்து ஸமூகத்தின் உரிமையைப் பாதுகாப்பதைப் பற்றி பேசினார்கள். ஜின்னாவின் 21 நிபந்தனைகளில் ஏழு புதிய நிபந்தனைகளை பலமாகக்கண்டித்தனர்.

இச்சமயம் காங்கிரஸ் வாதிகள் சிலர் கூட்டத்தில் கல்லெறிந்தார்கள். இதனால் சில ஹிந்துச் சிறுவர்கள் படுகாயமடைந்தனர். இதன் பயனாகக் கூட்டத்தினர் காங்கிரஸ் மீது மிகுந்த ஆத்திரமடைந்தனர்.

காங்கிரஸ்காரர்கள் அங்கு செய்து வரும் காலித்தனங்களை பஹிரங்கப்படுத்த 24உ யன்று பெரிய ஊர்வலம் நடத்தப்போவதாக ஹிந்து ஸபைக்கார்யதரிசி ஸ்ரீமான் வர்மா அறிவிக்கிறார்.

## ஒரு ஹிந்து கொல்லப்பட்டார்.

சென்னையில் ஸம்பவம்.

ஏற்கனவே ஹிந்து முஸ்லீம் கலவரம் நடந்த விடமாகிய சென்னை சூளைப்பிரதேசத்தில் 14உ இரவு ஸினிமா பார்த்துவிட்டுத் திரும்பி வந்த இரு ஹிந்துக்களை அநேக மஹம்மதியர்கள் சேர்ந்து அடித்து ஹிம்ஸித்தனர். நடராஜன் என்பவனைக் கத்தியால் குத்திக் கொலைசெய்தனர். 3 மஹம்மதியர்கள் பிடிபட்டிருக்கிறார்.

## திருவாங்கூர் திவான் பதவி.

சென்னையில் ஆக்ஷேபக்கூட்டம்.

திருவாங்கூர் திவான் ஸர். ஸி. . பியின் உத்யோக காலநீடிப்பையும், அங்கு காங்கிரஸ் இயக்கம் அடக்கப்படுவதையும் கண்டிக்கச் சென்னைக் காங்கிரஸ்காரர்கள் ஸ்ரீமான் கே. பாஷ்யத்தின் தலைமையில் கூட்டம் நடத்தினார்கள்.

## வங்காளக் கைதிகள் விடுதலை.

காந்திஜீ அறிக்கை.

ஸ்ரீமான் காந்தி வங்காளத்திலுள்ள ராஜீயக் கைதிகள் பந்தோபஸ்துக் கைதிகள் விடுதலை விஷயமாக கவர்ன்மெண்டுடன் நடத்திவந்த ராஜீப்பேச்சு முடிந்துவிட்டது. காந்திஜீ இது விஷயமாக வெளியிட்டுள்ள அறிக்கையில் இன்னும் ஒரு மாதத்திற்குள் வங்காள ஸர்க்கார் இவ்விஷயமாக உத்திரவு பிறப்பிப்பார்களென்று சொல்லியிருக்கிறார்.

காந்திஜீ டெல்லி சென்று, பிறகு வார்தா போனார்.



## A NEW PARTY.

*Madras, 11th April, 1938.*

There was a public meeting held at the Ranade Hall yesterday at 6 p. m. to form a new political party with Dewan Bahadur Govindass Chathur Bhujadas in the chair.

In proposing the Chairman Dr. Subramania Ayyar said that that meeting was, he took it, one of the expressions of the discontent prevailing in the country against the ideals and policies of the Congress Ministry. Though the Congress aimed at Swaraj, its swaraj was only of the Western brand. It did not purport to be based on right social organisation with Government as one of its specialized responsible organs. While old India had also its democratic ideal it did not mean rule by all and sundry. It only meant rule with the intelligent consent of the people. This the King was to obtain before he put into force any important measure or policy. But now, with India, economically and culturally inter-penetrated by Western Nations, in the actual process of slow but steady colonisation by them, there was no chance, he said, for Indians to acquire any substantial political power except perhaps to destroy the Dharmic foundations already crumbling Indian society. This they have done already in regard to sacred institutions of marriage and that a vindictiveness worthy of a better cause.

A party with a new orientation was therefore necessary. But that new party should be a universalist party with a clear formulation of principles, and a difinite programme. Whether the party that was proposed to be inaugurated that day would fulfil this condition, he could not of course anticipate. But that there was need for one could not be gainsaid.

The Chairman pointed out that the cause of sanatanist was in great danger at the hands of the ministry in power and that unless strong steps were taken, still greater dangers must be expected. The cause of Dharma was invulnerable from all stand points and it would be a pity to let it down at this crisis.

The Organising President Dr. K. V. Subba Rao said in the course of a long speech that Swaraj and all the great things that the country was looking forward to, would only come from the restoration of the ancient paths. He regretted that the Sanatanists have been doing very little for the cause. They have been pleading in Press and Platform and that although among Matathipathies and Maharajahs there were people trying to help the country along right lines and check the evil forces that are rampant, there were others who are either indifferent or inimical. Copies of memorandum he has prepared was then distributed.

Mr. T. S. Ramaswami Iyer speaking on the necessity of a new political party narrated the circumstances under which the National Congress was working as one united body determined to destroy the Dharmic institutions of this country. He said that working along the same lines, those who wanted to preserve these institutions should sink their internal difference if any and work as one solid whole. As General Secretary of the Varnashrama Swarajya Sangha he can assure them with Sangha's full co-operation. There were still Maharajas and Matathipathies who were prepared to help. India on Dharmic lines and it was their duty to seek their assistance with their leadership.

Messrs. M. Ananda Rao and B. S. Nagarajiah also spoke in general support of the movement. After some of the members present had affixed their signatures to the memorandum of the organiser subject to certain reservations, the meeting terminated.

## மைலாப்பூர்.

ஸ்ரீ கபாலீச்வரர் பிரும்மோத்ஸவம்.

இந்த பிரும்மோத்ஸவம் இந்தமாதம், அதாவது ஏப்ரல் மாதம், 5உ ஆரம்பமாகி 14-ம் தேதியோடு பூர்த்தியாயிற்று. இது சென்ற மாசிமாதக் கடைசியிலேயே ஆரம்பித்து பங்குனிமாத பர்வத்தோடு முடிய வேண்டியது. ஆனால் அந்த பக்ஷத்தில் அல்லாப்பண்டிகை வந்துவிட்டதால் இவ்வுத்ஸவம் நடக்கவில்லை. ஏனெனில் அல்லாப்பண்டிகையின் கடைசி தினத்தில் அல்லா விழுவதென்று மைலாப்பூர் திருக்குளத்தில் பட்டணத்திலுள்ள எல்லா அல்லாவும் வருவதால் அன்றையதினம் இவ்வுத்ஸவத்தின் 7 அல்லது 8வது நாளாய் வருவதால் இந்து முஸ்லீம்களுக்குத் தகரார் ஏற்படுமென்று நம்மவர்கள் இவ்வுத்ஸவத்தை பின்னிட்டு வைத்துக்கொண்டார்கள். இந்த மாதிரி இது மூன்றுவது வருஷம். இதற்கு முன் சென்ற வருஷமும் அதற்கு முன் வருஷமும் இவ்வாறு நடந்தேறியது.

அதிகார நந்திஸேவை.

இந்த பிரும்மோத்ஸவத்தின் மூன்றுவது நாள் அதிகாலையில் இவ்வுத்ஸவம் நடப்பது வழக்கம். இதில் ஸ்ரீ கபாலீச்வரர் வெள்ளி அதிகார நந்திவாகனத்தின்மீது ஆரோஹணித்து ஸகல வைபவத்தோடும் மற்றுமுள்ள பரிவார தேவதைகளோடும் வீதிகளில் பவனிவருவது வழக்கம். இதை தர்சிக்க ஏராளமான ஜனங்கள் அதிகாலையில் ஸ்நானாதிகளை முடித்துக்கொண்டு பட்டு முதலிய மடிவஸ்திரங்களை தரித்துக்கொண்டு குடும்ப சகிதர்களாய் திரள் திரளாக வந்து தர்சிப்பார்கள். அதிகாலை 6-மணிக்குமுன்பே கோபுரவாசல் தர்சனம் கிடைக்கும். இவ்விதம் புறப்பட்ட பகவான் மறுபடியும் கோவில் வந்து சேர பகல் 12 மணிக்கு மேலாகும். ஆகவே இது காஞ்சீபுரம் கருடசேவையை ஒத்திருக்கும். ஆனால் இதில் ஒரு பெரும் விசேஷம் யாதெனில் புகைச்சுருட்டு நாற்றம் கொஞ்சமும் கிடையாது. இடைவிடாது சுருட்டுக் குடிப்பவர்கள்கூட அன்று அதை அடியோடுவிட்டு தர்சனத்திற்கு வருவார்கள். இவ்வாறே ரத உத்ஸவம் காலையிலும் நடைபெறும். நாம் பார்த்தவரையில் சென்னை வாசிகள் வைகுண்டம் அல்லது கைலாசம் சென்றாலும் அங்கேயும் புகைச்சுருட்டு பிடிப்பதை விடவேமாட்டார்கள், என்று தோன்றினாலும் இவ்விதம் இரண்டு காலை உதயங்களில் மாத்திரம் சுருட்டு பிடிக்காமலிருப்பது மிகவும் ஆச்சரியப்படவேண்டியதே.

ஆறுபத்துமூவர் உத்ஸவம்.

இது 8ம்நாள் நடைபெறுவது. அன்றுமாலை சுமார் 3 மணிக்குமேல் பகவான் அறுபத்துமூன்று நாயன்மார்களோடு வீதியில் புறப்பட்டுவருவது வழக்கம். இவ்வருஷம் செவ்வாய்க்கிழமையன்று அந்த ஸமயத்தில் ராகுகாலம் வந்துவிட்டபடியால் ஸ்வாமி புறப்படவே மாலை 6மணிக்குமேல் ஆகிவிட்டது. இந்த உத்ஸவத்தில் வேறு விசேஷம் யாதெனில் சிந்தாத்திரிப்பேட்டையிலிருந்து ஒரு சுப்ரமண்யஸ்வாமி காலையிலேயே மயிலாப்பூர் ஸந்நிதியிலுள்ள ஒருமண்டபத்தில் எழுந்தருளுவார். அவருக்கு அங்கேபகலில் அபிஷேகாதிஷோட சோபசார பூஜை நடந்தேறியதும் அஸ்தமனமானதும் ஸகல வைபவங்களோடு இந்த நான்கு வீதிகளையும் சுற்றிக்கொண்டு சிந்தாத்திரிப்பேட்டை செல்வார். அப்போது இவரது அலங்கார வைபவங்களை தர்சிக்க பத்து ஆயிரம் கண்களிலிருந்தாலும் போதாது. எல்லாம் ஒரே டயமண்டு முதலிய விலைமதிக்கமுடியாத ரத்தனங்களே. அவரது சிறிய முகம் ஒன்று தவிர மற்றதெல்லாம் முன்னும் பின்னும் ரத்னமயமாகவேயிருக்கும்.

இதன் மத்தியில் புஷ்ப அலங்காரங்களும் ஏராளம். கால்லைட்டுகளும் தீவட்டிகளும் பல. இதை தர்சிப்பதே நமக்கு ஜன்ம ஸாபல்யமென்று தோன்றும். அதிகார நந்திஸேவை, ரத உத்ஸவம், அறுபத்து மூவர் உத்ஸவம் இவைகளின் படங்கள் 'ஹிந்து' பத்திரிகையில் வெளியாயிருக்கின்றன.

## ஆந்தகுடி

ஸ்ரீ ராமநவமீ உத்ஸவம்

நாகப்பட்டணம் தாலுகா (சிகார்) ஆந்தகுடியில் மிருதங்கம் S. ராமமூர்த்தி அய்யர் அவர்களின் கிரகத்தில் ஈஸ்வரஞூ பங்குனி மீ 26உ முதல் ஸ்ரீராமநவமி உத்ஸவம் தொடங்கி, ஈசுவரஞூ சித்திரைமீ 1உ முடிய, அநுதினமும் உத்ஸவ சம்பிரதாயப்படி பஜனை திவ்யநாம சங்கீர்த்தனத்துடனும், அடியிற்கண்ட விபரப்படிக்குள்ள சங்கீதக்கச்சேரிகள், ஹரிகதாகாலக்ஷேப, உபந்யாசங்களுடனும் அதிவிமர்சையாய் நடைபெற்றது. ஷை S. ராமமூர்த்தியய்யர் என்பவர், சங்கீதவித்வான் மகா-ா-ா-ஸ்ரீ E. சேதுராமையர் அவர்களின் சிஷ்யராவர். ஷை சேதுராமைய்யர் அவர்களும் உத்ஸவத்திற்கு வந்திருந்து நடத்தினார்கள்.

ஆந்தகுடியிலுள்ள பிரமுகர்களில் பலர் அவரவர்களாலியன்ற பொருளுதவியுஞ் செய்து, சிரத்தையோடிருந்து உத்ஸவத்தை நடத்திவைத்ததும், அயலூரிலிருந்துவந்த அனைவர்களுக்கும் அன்னபானாதிகள் தந்து தக்கபடி உபசரித்ததும் போற்றத்தக்க விஷயமாகும். நாஸ்திகம் மிகுந்துவரும் இக்கலி [illegible] ஸ்ரீராமநவமி உத்ஸவத்தைக் கொண்டாடிய ஆந்தகுடி மஹாஜனங்களுக்கு ஸ்ரீராமபிரானின் திருவருளால் சர்வாபீஷ்டமும் உண்டாகுமாக. இதில் சிரத்தை கொண்டு முயற்சித்த மிஸ்டர் S. ராமமூர்த்தி அய்யருக்கு ஸ்ரீராமபிரானின் அநுக்ரஹம் பரிபூர்ணமாயிருந்து தொழிலில் அபிவிர்த்தியும், இடைவிடா பக்தியும், சிரேயஸ்ஸும் உண்டாகுமாக.

30உ காலை 8மணிமுதல் 10மணிவரையில் காக்கழனி Mr. A. கிருஷ்ணமூர்த்தி அய்யரால் ராமாயணத்தில் போதிக்கப்பட்டிருக்கிற தர்மங்களைப்பற்றியும், அதிலுள்ள, த்வைத, அத்வைத, விசிஷ்டாத்வைத சித்தாந்தங்களைப்பற்றியும் உபந்யசிக்கப்பட்டது.

சங்கீதவித்வான்களனைவரும் அபிமானமே பெரிதாகக்கொண்டு விஜயஞ்செய்து, அவரவர்களின் சொந்த உத்ஸவம்போல் பாராட்டிச் செய்த கச்சேரிகள்யாவும் வெகு அத்புதமாயும் கேட்பவர்களுக்கு செவிரஞ்சனமாயும் அமைந்ததைக் கருத, யாவும் ஸ்ரீ ராமனின் திருவருளென்றே நினைக்கவேண்டியதாகும்.

ஒரு நிருபர்.

## சென்னை.

தார்மிக ஹிந்து தலை சீவப்படுமாம்! பாரதபுத்ரன் என்று கையெழுத்திட்டு காங்கிரஸிற்கு விரோதமாக தேர்தலில் வேலை செய்தால் உன்தலை சீவப்படும் என ஓர் மொட்டைக் கடிதம் வந்துள்ளது. ஆசிரியர் போலீஸ் கமிஷனர், மந்திரி, காந்தி முதலியவருக்கு தெரிவித்திருக்கிறார்.

ஸ்ரீ ராமாயண நவாஹம்! கோபாலபுரம் வேணுகோபாலஸ்வாமிகோவிலில் ஸ்ரீவத்ஸ ஸோமதேவசர்மா அவர்களால் உபன்யஸிக்கப்பட்டது.

ஸ்ரீதேவீ பாகவதம்! மாம்பலம் பக்தஜநங்களது பிரார்த்தனைப்படி ஸ்ரீகர்க ஸம்ஹிதை பூர்த்தியாகி பிரதி திங்கள் செவ்வாயிலும் ஷை உபன்யாஸம் ஸ்ரீ ஸோமதேவசர்மாவால் ஆரம்பிக்கப்பட்டது.

நமது நிருபர்.

# 'ஆர்யதர்மம்'தான் உத்தம தர்மம்.

ஆர்யதர்மம் என்பது ஆர்யர்களின் தர்மமென்றும் அல்லது ஆர்யமான (சிரேஷ்டமான) தர்மமென்றும் அர்த்தம். இந்த பதத்திற்கு கொடேஷன் கொடுத்திருப்பதால் இது ஒரு விசேஷத்தைக் காட்டுகிறது. அதாவது ஆர்யதர்மங்களை வெளியிடும் பத்திரிகை என்றும் அர்த்தமாகிறது. இவ்விதம் பத்திரிகையும் உத்தமமானது என்று ஏற்படுகிறது. ஆர்யர்களின் தர்மமாவது: வேதங்களால் ஏற்பட்டதாயும் அவர்களால் இடைவிடாது அனுஷ்டிக்கப்படும் தர்மமாகவே இருக்கும்.

மேலும் இதையே 'சாஸ்த்ரவிஹிதஜன்யோ தர்ம:' என்று கூறுகின்றனர். அதாவது சாஸ்திரங்களால் ஏற்பட்ட கர்மங்களை அனுஷ்டிப்பதால் ஏற்படுவது தர்மமெனப்படும். அப்படியே சாஸ்திரங்களில் தடுக்கப்பட்ட கர்மங்களை அனுஷ்டிப்பதால் ஏற்படுவது அதர்மம் எனப்படும். ஆகவே அதர்மத்தை விட்டுவிட்டு தர்மத்தையே அனுஷ்டிக்க வேண்டும் என்பது சாஸ்திரங்களின் கருத்து. இவ்விதம் அனுஷ்டிப்பவர்கள் ஆரியர்கள். அவர்கள் ஒருக்காலும் தர்மமார்க்கத்தை விட்டு எள்ளளவேனும் வழுவமாட்டார்கள். அதுவே அவர்களது கடமையாகும். இந்தக் கடமையும் தர்மமெனப்படும். இந்த தர்மத்தை மிகவும் சிரத்தையோடு நாம் விடாமல் அனுஷ்டித்தும் காப்பாற்றிவந்தால் அதுவும் நம்மைக் காப்பாற்றும். ஆதலால்தான் 'தர்மோ ரக்ஷதிரக்ஷித:' என்று பெரியோர்கள் கூறுவார்கள். இதை ...... ஸ்ரீ ...... வனவாசத்திற்கு ...... வன்காட்டிற்குச் செல்லும் தனது அருமை மைந்தனை ஸ்ரீ ரகுநாதனைக் குறித்து 'யம் பாலயஸி தர்மம் த்வம் த்ருத்யாச நியமேநசஸ வை ராகவ சார்த்தூல தர்மஸ்த்வாம் அபிரக்ஷது' என்று மங்களாசாஸனம் செய்தாள். அதாவது அப்பா! நீ எந்த தர்மத்தை தைர்யத்தோடும் கண்டிப்போடும் காப்பாற்றி வருகிறாயோ அதே தர்மம் உன்னைக்காப்பாற்றுவதாக. என்று கூறினாள். ஆதலால் தர்மத்தை நாம் தைர்யத்தோடும் கண்டிப்பாயும் நடத்தி வர வேண்டும். அதற்கு எவ்வளவு இடையூறு ஏற்பட்டாலும் நாம் தைர்யத்தைக்கைவிடாது அதை அவசியம் நடத்தியே தீரவேண்டும். இந்த தீர்மானம் தான் நமக்கு அவசியம் வேண்டியது. இக்காலத்தில் சீர்திருத்தக்காரர்கள் தாங்கள் செய்வதே தர்மமென்றும் நாம் எவ்வெந்த விஷயங்களை நம்முடையதென்று வைத்துக்கொண்டிருக்கிறோமோ அதையெல்லாம் தங்களுடையதாக எடுத்துக்கொண்டு தாங்கள் செய்து வரும் வர்ண ஸங்கரத்தையே மேலானதென்று ஏற்படுத்துகிறார்கள். 'ஸங்கரம்' என்பதற்கு நன்றாய்ச் செய்வது என்று பொருள் கூறுகின்றனர். அத்தோடு தாங்கள் செய்வதே நன்கு செய்வதாய்க் கூறுகின்றனர். நாம்செய்வதெல்லாம் சரியாய் செய்வதாய் எண்ணுவதில்லை. இவ்விதமெல்லாம் வேஷம் போட்டு பலவாறாய் நம்பவர்களை ஏமாற்றி வருகிறார்கள் என்பது நமக்கு நன்றாய்த் தெரிந்ததே.

ஆதலால் நாம் நமக்குப் பிறப்பு உரிமையாய் ஏற்பட்டதாயும் ஸ்ரீமத் ஸர்வேச்வரனுடைய தயவால் எப்போதாவது குறைவு நேரிட்டகாலத்தில் ஸ்வயம் அவதரித்து அப்போதைக்கப்போது காப்பாற்றப்பட்டதாயும் ஒரு காலமும் அழிவையடையாததாயும் சாச்வதமாயும் இருக்கும் ஸத்தர்மத்தை சிறிதும் மனந்தளராது அனுஷ்டிப்பதால் பரிபூர்ண தைர்யத்தை யடையவேண்டும். இதனால் நமக்கு எவ்வித இடையூறு ஏற்பட்டாலும் குறைவு ஏற்பட்டாலும் லக்ஷ்யமேயில்லை. தர்மத்தை யனுஷ்டிப்பதே நமது முக்ய லக்ஷ்யமாயிருக்கவேண்டும். இவ்விதமனோ தைர்யத்தோடு நாம் ரக்ஷித்துவரும் தர்மமே நம்மை அவச்யமாய் ரக்ஷிக்கும் ஸந்தேஹமேயில்லை. இப்போது காலரீதியாய் நாம் பல மற்றவர்களாயும் இருந்தாலும் தைவ பலத்தையே முன்னிட்டு மிகவும் தைர்யமாய் ச்ரேஷ்ட தர்மத்தையே அனுஷ்டிக்க வேண்டும்.

அப்படியானால் நமக்கு மனிதஸஹாயம் ஏற்படாவிட்டாலும் தைவஸஹாயம் கட்டாயமாய் உண்டாகும். ஈச்வரனும் ஒருக்காலும் நம்மை கைவிடமாட்டார். தர்மஹானி ஏற்பட்டிருக்கும் இக்காலத்தால் நமது ஆர்யர்களின் ஸமூஹம் மிகவும் குறைந்ததாயும் கொஞ்சமேனும் மனந்தளராது நாம் ஸத்தர்மத்தையே அனுஷ்டிக்க வேண்டும். இந்த தத்வத்தையே மற்றவர்களுக்கும் உபதேசிக்கவேண்டும். இவ்விதம் நாம் செய்துவந்தால் நமக்கு ஈச்வர அனுக்ரஹம் அவச்யம் உண்டாகும். இதுவே நமக்குப் போதுமானது. இந்த தீர்மானத்தோடு நாம் அனுஷ்டித்துவரும் ஆர்யதர்மம்தான் உத்தமமானது.

இந்த தர்மத்தையும் இதன் ஸ்வரூபத்தையும் நன்கு விளக்கிக்காட்டி சுமார் 23 வருஷ காலம் நல்ல தேசஸேவை செய்துவரும் இந்த 'ஆர்யதர்மம்'தான் ச்ரேஷ்டமானது. இக்காலத்தில் பத்திரிகை நடத்துவதே மிகுந்த கஷ்டமாயிருக்கும்போது காலத்திற்கேற்றதாய் இல்லாத இந்த ஆர்யதர்மம் என்னும் பத்திரிகை, இவ்வளவுகாலம் ...... எவ்வளவு ச்லாக்யமானது? ஆதலால் இதற்கு தைவானுக்ரஹம் பரிபூர்ணமாய் இருக்கிறதென்பது ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறதல்லவா? அத்தோடு ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காமகோடிபீடம் பரமாசார்யாளின் அனுக்ரஹமும் பரிபூர்ணமாயிருக்கிறதென்பதும் ஸ்பஷ்டமானதே.

ஆதலால் இவ்வித அனுக்ரஹங்களால் ஸ்ரீமத் ஸர்வேச்வரனுடைய ஸ்வரூபமான ஸத்தர்மமான ஆர்யதர்மமும் அவ்வித தர்மத்தை இடைவிடாது பிரகாசம் செய்து உலகிற்கு அபிமானத்தான தர்மஸேவைசெய்து வரும் 'ஆர்யதர்மம்' என்னும் இப்பத்திரிகையும் இன்னும் அதிக காலம் மேன்மேலும் விருத்தியடைந்து ஸகல ச்ரேயஸ்களையும் அடைந்து நமக்கும் அவைகளை உண்டாக்கும்படி ஸ்ரீமத் ஸர்வேச்வரன் அனுக்ரஹிப்பாராக.

'வித்யானந்தம்.'

---

## தஞ்சாவூர் ஜில்லா, நாகப்பட்டணம் தாலூகா நாகப்பட்டணம் டவுன் மார்க்கெட்டில் 11—4—38 திங்கட்கிழமை அமுலிலிருந்த சில மொத்த விலைகளுக்கு ஜாப்தா.

| | |
|---|---|
| முதலாந்தரம் வெள்ளை சிறுமணியன் அரிசி 190 பவுண்டு கொண்ட 1 மூட்டை | ரூ 8-6-0 |
| இரண்டாந்தரம் கட்டைச்சம்பா ஷை | ரூ 7-10-0 |
| நெல் முதல்தரம் வெள்ளை சிறுமணியன் 64 பவுண்டு | ரூ 1-10-0 |
| இரண்டாந்தரம் கட்டைச்சம்பா ஷை | ரூ 1-6-0 |
| தேங்காய் எண்ணெய் 38 பவுண்டு | ரூ 4-12-0 |

தாசில்தார்.

---

## TOUR PROGRAMME.

(Subject to slight alterations.)

OF

**Rao Sahib N. Natesa Aiyar, Advocate 55, Tamil Sangam Road, Madura. (Working President, A. I. V. S. Sangha and President, The Madras Provincial Varnashrama Swarajya Sangha.)**

| | |
|---|---|
| 25—4—1938 | Dindigal. |
| 26—4—1938 | Palni, Kalayamputhur, Karathoor and Kadathoor. |
| 27—4—1938 | Udumalpet and Villages. |
| 28—4—1938 | Pollachi and Villages. |
| 29—4—1938 | Kollengode. |
| 30—4—1938 | Trichur. |
| 1—5—1938 | Guruvayur. |
| 2—5—1938 | Kudalmanickam and Irinjallakuda. |
| 3 & 4-5-1938 | Kaladi. |
| 5—5—1938 | Palghat Noorani etc., |
| 6—5—1938 | Coimbatore. |
| 7—5—1938 | Gobichettipalayam. |
| 8—5—1938 | Bhavani, Sankridrug and Tiruchengode. |
| 9—5—1938 | Salem and Ettapur. |
| 10—5—1938 | Ettapur. (Salem District) |
| 11—5—1938 | Night Trichy (via Salem and Namakkal) |
| 12—5—1938 | Melmangalam (evening) (via. Dindigal, Nilakotta Periyakulam.) |
| 13—5—1938 | Melmangalam. |

---

### புத்தக வரவு

### ஸ்ரீ வைசாக மஹாத்மியம்.

ஸ்ரீ பாத்மம் முதலிய புராணங்களைத் தமிழில் எழுதிய ஸ்ரீமான் ஸ்ரீ வத்ஸ ஸோம தேவசர்மா அவர்களால் எழுதப்பட்டது.

ஸ்ரீ வேதவியாசபகவானால் வகுக்கப்பட்டதாக 18 புராணங்களில் மிகப்பெரிதான ஸ்ரீஸ்கந்த புராணத்தில் ஸ்ரீவைஷ்ணவ கண்டத்தில் 7-வது கண்டமான வைசாகமஹாத்மியம் என்ற பாகத்தை ஷை புஸ்தகத்தில் ஸ்ரீமான் அவர்கள் வெகு எளிதாக யாவரும் அறியும்படி எழுதிவெளியிட்டிருக்கிறார். வைசாக மாதத்தில் செய்யப்படும் ஒவ்வொரு தர்மங்களின் தான மஹிமையை கதைஉதாரண பூர்வமாய் இதில் விளக்கப்பட்டிருக்கிறது.

ஆஸ்திகர்களனைவருக்கும் அவச்யமானது. ஸ்திரீகளுக்கும் இவைகள் படிப்பது அவச்யமாகும். 154 தம்புசெட்டித்தெரு சென்னை என்ற விலாசத்தில் அணா 4க்கு விலைக்குக் கிடைக்கும்.

---

### ஸம்ஸ்கிருத பண்டிதர்கள்.

### வெள்ளைக்காரரின் அபிமானம்.

டாக்டர் தாமஸ் என்ற வெள்ளைக்காரர் ஸம்ஸ்கிருதத்தில் பெரிய பண்டிதர். இவர் இங்கிலாந்து யூனிவர்ஸிடியில் ஸம்ஸ்கிருதப் பிரொபஸராக இருப்பவர். இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்துவருகிறார். பல ஸம்ஸ்கிருத பித்வான்களை ஸந்தித்துப் பேசி வருகிறார். அவர்களுடைய திறமையைக் கண்டு அதிசயப்படுகிறார்.

பண்டிதர்களின் திறமைக் கேற்றபடி இந்தியரால் அவர்களுக்கு மதிப்போ, ஜீவன ஸௌகர்யமோ ஏற்படாததைக் கண்டு மிஸ்டர் தாமஸ் மிகவும் வருத்தப்பட்டு அபிப்பிராயம் வெளியிட்டிருக்கிறார்கள்.

இந்தியாவில் இதைக் கவனிப்பவர்கள் யாராவது உண்டா?

---



221

# சட்ட விலங்கிட்டதாயின் கட்டளை.

## பிரும்ம பலமே பலம்.

### உழைப்பாளிகளின் ஊக்கமே வீரம்.

நூற்றுக்கணக்கான பண்டிதரத்னங்களும் ஆயிரக்கணக்கான ஆஸ்திகர்களும் பக்திசிரத்தையோடும், நிஷ்பக்ஷபாதமாகவும், பஹிரங்கமாகவும், சாந்தமாகவும், ஒப்புயர்வற்ற நீதிமுறையோடும், பூர்வபக்ஷ சித்தாந்த ரீதியாயும் சமீபகாலத்தில் மதுரையில் பாரதமாதாவுக்கு ஏற்பட்டிருந்த அதர்மமென்னும் விஷஜுரத்திற்கு தார்மிக வீர்யம் என்னும் ஔஷதியை பிழிந்து புகட்டினார்கள். பாரதாம்பா சந்தோஷமாய் உட்கொண்டு புன்சிரிப்பு சிரித்துக்கொண்டாள். அதுசமயம் பற்பல பகட்டான நவீன பெயர்களோடு நிரியும் குறுகிய அறிவும், அற்பசக்தியும் கொண்ட அதார்மிக இயக்க அரக்கிகளுக்கு அஸ்தியில் ஜுவரம் கண்டு, அதார்மிக, அலௌகிக மதவிரோத சட்டங்களென்னும், ருசியுள்ள அபத்ய பக்ஷணம் செய்துவிட்டு இன்னும் தலை தூக்காமல் ராஜீய நெருக்கடி என்னும் ஸ்மசானக் கட்டைகளை கட்டிக்கொண்டிருக்கின்றனர்.

ஆஸேது ஹிமாசலம் வரை வசித்துவரும் தார்மிகர்களை பலவந்தமாய் அசாஸ்திரீயமான வழியில் செல்லும்படி நிர்பந்திக்கும் விஷசட்டங்களைக்கொண்டு தார்மிகத் தாய்க்குப் பொன்விலங்கிட்டு விட்டார்களே! இது அடுக்குமா?

எலக்ஷனில் ஓர் சனாதனிவீரர் தாரத்தியடித்த சாரதாவின் ரோஹிணிசட்டம் பறந்துபோய் அதற்கு பதில் நிர்பந்தஸ்வரூபமான தாஸ் சட்டம் ஆகாயத்தில் சுழலுகிறது. அதை ஓர் தார்மிக அம்பால் தூளாக்கவேண்டும். அதற்குக் காலம் வரும். யார் அறிவார்! கன்னிகைகளுடைய துயரம் விடாது. தார்மிக விதவா ஸ்திரீகள் உயிரையும் நியாகம் செய்து தர்மத்தை ரக்ஷிப்பர். அவர்களல்லவோ தார்மிகபெண் தொண்டர்ப்படை. 'ஸ்திரீமூலம் தர்மம்' என்பதை அறியாதார் யார்? ஹே! நவீன நாகரீகமே! ஹே! ஸ்திரீகள் மகாநாடுகளே! கன்னிகாதானமென்பது தொலையவேணுமா! கன்னிகைகளுக்கு அவர்களிஷ்டப்பட்டும் கலியாண உரிமை இல்லையா? இது ஸ்திரீகள் சுதந்தரமா? ஸ்திரீகள் விலங்கா? கன்னிகைகளுக்குத் தகுந்த சமயத்தில் தகுந்தபுருஷனை தேடித்தரும் பாக்கியம் தந்தைக்கு இல்லையா? நான்கு வேதங்களுக்கு மில்லையா? ஓர் சட்டதாஸருக்கும் மேஜிஸ்ட்ரேட்டுக்குமா உண்டு. பெண்ணின் கற்புக்கும் ஒழுக்கத்திற்கும் ஜவாப்தாரி தகப்பனும் புருஷனும் இல்லையா? ஓர் சர்க்கார் உத்தியோகஸ்தரா? இந்தச் சட்டம் அமுல் நடப்பதை ஜனங்கள் ஏற்பாரா? என்னே விந்தை!

அதிருக்கட்டும் ஆலயப்பிரவேச மத சட்டம் ராஜீயவானத்தைப் பிளந்துகொண்டிருக்கிறது. ஆலயத்தின் உயிராகிய ஆகமத்தை அழித்து அதன்மேல்தான் சுயராஜ்ய கட்டடம் கட்டவேணுமாம்! இது ஆகம தகனமா, அல்லது ஹரிஜன இஷ்ட தேவதா பூஜாக்ரம தகனமா என்பதை ஹிந்துமத அறிவுள்ள ஹரிஜனங்கள் சொல்லட்டும்? ஏன் பாமர ஹரிஜனங்களுக்கு சாமான்ய தேவதா பூஜா வைபவங்கள் விலக்கப்பட்டு ஆகம மழிக்கும் "புனித"த் தொழிலுக்கு கையாளாகவேண்டும்? இதனால் அவர்களுக்கு மதம் பரவுமா? நாஸ்திக்யம் வருமா? இதனால் அவர்கள் அன்யமதம் போகமாட்டார்களா? அன்னிய மதஸ்தர்கள் நம்மதம் ஏராளமாய் வந்து விடுவார்களா?

திருவாங்கூரில் அப்படி கோவில் திறந்த காரணமாய் இதுவரை எத்தனைகோடி அன்னியமதஸ்தர்கள் இவர்களது "புனிதமான" ஹிந்து சமூக "மத"த்தில் வந்து அடைக்கலம் புகுந்தாய்விட்டது? டாக்டர் கஸின்ஸ்துரை தமது புனித "குலபதி ஜபராம்" என்ற நாமதேயத்தோடேயே விளங்குகிறார்? ஹரிஜன் யாத்ரீக கோஷ்டிகள் திருவாங்கூர் போவது ப்ரக்ஞையற்று சயனித்திருக்கும் பத்மநாப சுவாமியை தரிசிக்கவா? அல்லது வேறூர்களிலிருக்கும் ப்ரக்ஞையுள்ள விழித்திருக்கும் மூர்த்திகளை கெடுக்கும் பிரசாரத்துக்கா? நெஞ்சில் விரல்வைத்து சத்தியமாய் சொல்லட்டும்! யாருடைய பணச்செலவு?

இதெல்லாம் ஓர் ஜெயமாக எண்ணி, ஜெகத்துக்குச் சின்னமாக கல்லுருவம் அமைக்கப்போகிறார்களாம்! அமைக்கட்டுமே? அது எதைக்காட்டும்? இவர்களது நாஸ்திக்யத்தை உலகம் அறிந்து நகைக்கும்! அல்லது கடவுளருளால் வெடித்துத் தூளாகும்!

அதார்மிக கார்யங்கள் தாமாகவே விஷந்தலைக்கேறி அழிந்துவிடும் என்பது நிச்சயமாயினும், தார்மிகர்கள் வாளாயிருப்பது சரியல்ல. கடமையைச்செய்து பலனை கடவுளிடம் அர்ப்பணம் செய்யவேணும். தார்மிகப்ரசார கோஷ்டி உடனே அமைக்கப்படவேண்டும். எல்லா இடங்களுக்கும் பரவிச் சென்று தர்மாதர்ம விளக்கம்செய்து அதர்மத்தை ஞானத்தால் ஜெயித்து சாந்தத்தையும் அமைதியையும் ஸ்தாபிக்கவேண்டும். இல்லையேல் எங்கும் போரும் அமைதிக்குறைவும் காணப்படும்!

அகில பாரதவர்ஷீய தர்மத் தாண்டவத்தால் கிளம்பிய அற்ப தூசிகளான அதார்மிக கோஷ்டிகள் திடுக்கிட்டுத் திகைத்துப்போய் ப்ரசாரவலிமையற்று ராஜீயப்பதவியென்னும் கல்லைக் கட்டிக்கொண்டு துன்பக்கடலைத் தாண்டுகிறார்களாம்! பஹிரங்கமாய் தங்கள் தூர்வாதம் தோற்கடிக்கப்படவே வேறுவழியில்லாது எஞ்சிய ஒரேவழியான சட்டமியற்றும் தொழிலை அதார்மிக வழியில் தேச ஒற்றுமை ஒழியும் ரீதியில் தார்மிகர்களை அடக்கும் ரீதியில் துணிவுடன் செய்கிறார்கள்! இனிவரும் அடுத்த எலெக்ஷனில் அதார்மிகர்களுக்கு இடமேயிருக்காது என்று அறிவர். இதனால்தான் ஒற்றுமை பங்கம் பண்ணிக்கொண்டாகிலும் தங்கள் வாக்குறுதியை புறக்கணித்து அதார்மிக கடுமையான மத சட்டங்களை அடுக்குகிறார்கள். இந்த சட்ட காஷ்டங்கள் தான் தனது கோர சொரூபத்தைக் காட்டித்திரியும் அதர்மப்பேயை தகிக்கப்போகிறது. அதற்கு தார்மிக தீவ்ரப்ரசார அக்நி எங்கே? அதோ பம்பாயில் காவீரமடம் யதீஸ்வரர் குருவாயூரில் மூட்டின ஹிருத்தாபாக்னியை கிளப்புகிறார். ஜோதி பரவுகிறது!

ராஜீய சட்டசபைகளில் மத சட்டங்களை புகுத்தும் செயலை தூரத்தியடிக்க சகல மதஸ்தரும் ஒன்றுசேரவேணும்! தியாகிகள் வரவேணும். சாரதாசட்ட வாளாயுதமும் ஆலயப்ரவேச வேலாயுதமுமே இப்போது தார்மிகத்தாயின் தேகத்தைக் குத்திக் குத்தி ரக்த வெள்ளம் ஓடுகிறது! பரிஷத் போடுவதும் பத்திரிகை போடுவதும் அந்த ரணத்திற்கு தற்கால சமனமாகிறதே ஒழிய வேறில்லை. தகுந்த கோஷ்டிகள் சேர்ந்து நேரடியான பிரயத்னமூலம் எதிரியை ஜெயிக்கவேணும்! ப்ரசாரம் வலுக்கும்! த்யாகிகள் தோன்றுவர்! பாமரர் உண்மை அறிவர்! சகலரும் உய்வர்! ப்ரசாரம் செய்யவும் பத்திரிக்கைகள் வழங்கவும், மகஜர் சேகரிக்கவும், தூர்வாதங்களை ஒவ்வோரிடத்திலேயும் கண்டிக்கவும் லௌகிக, வைதிக ப்ரமுகர்கள் சீக்கிரம் வெளிவரவேண்டும்.

பாயவத ராமநாத சாஸ்திரி,
தாராங்கலம்.

---

### ஓர் ஸந்தேஹம்.

ஆஸ்திக சிரோன்மணிகளுக்கு ஓர் விக்ஞாபனம் ஒரு பிராம்மணன் பத்துவருஷகாலமாக வேத விஹித கர்மாக்களையும், நித்ய விஹித கர்மாக்களையும் பித்ருகார்யங்களையும் விட்டு விட்டு குடும்பத்திலேயே இருந்து வருகிறான். ஆனால் அவனுக்குச் சித்தத்தில் யாதொரு கோளாறும் இருப்பதாகத் தெரியவில்லை. தற்சமயம் அவனுடைய தாயார் தேஹாந்திரப்ராப்தியை யடைந்துவிட்டாள். அவளுடைய ஔர்த்துவதேஹிக கர்மாக்களை கர்மபாதித்யனாகிய அவன் தனக்கு யாதொரு பிராயச்சித்தம் செய்துகொள்ளாமல் செய்யலாமா? அங்ஙனம் யாதொன்றும் செய்யாமலேயே நடத்தலாமா? அல்லது அதற்கு சாஸ்திரங்களில் ஏதாவது பரிஹாரமிருக்கின்றதா? இவ்விஷயத்தைத் தீர ஆலோசித்து ஆஸ்திக சிரோமணிகளான தாங்கள் இப்பத்திரிகை மூலமாகவே கூடிய சீக்கிரம் எழுதியனுப்பவேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஓர் ஆஸ்திகன்.

---

### திருப்பூந்துருத்தி

ஸ்ரீநாராயண தீர்த்தகுரு ஸ்வாமி ஸந்நிதியில்

மாதா மாதம் பருவத்தன்று நடந்து வரும் பஜனை திவ்யநாம ஸங்கீர்த்தனம், நடுக்காவேரி பிரும்மஸ்ரீ இராமஸ்வாமி பாகவதரவர்கள் தலைமையின் கீழ் கோதண்டபாணி வாலிப சங்கத்தாரால் நடைபெறும் தினங்கள்:—

| | | |
|---|---|---|
| சித்திரை-மீ | 2உ | வியாழன் |
| ,, | 31உ | வெள்ளி |
| வைகாசி-மீ | 30உ | ஞாயிறு |
| ஆனி-மீ | 27உ | திங்கள் |
| ஆடி-மீ | 26உ | புதன் |
| ஆவணி-மீ | 24உ | வெள்ளி |
| புரட்டாசி-மீ | 22உ | சனி |
| ஐப்பசி-மீ | 22உ | திங்கள் |
| கார்த்திகை-மீ | 22உ | புதன் |
| மார்கழி-மீ | 21உ | வியாழன் |
| தை-மீ | 22உ | சனி |
| மாசி-மீ | 22உ | ஞாயிறு |
| பங்குனி-மீ | 21உ | திங்கள் |

---

### காந்தி — வைஸ்ராய் ஸந்திப்பு.

ஸ்ரீமான் காந்தியும், வைஸ்ராயும் டெல்லியில் 15உ ஸந்தித்துப்பேசினார்கள். ஸமஷ்டி விஷயமாகக் காங்கிரஸ் காரர்களின் மனோபாவத்தை முடிவாகத்தெரிந்துகொண்டு பிரிடிஷ் மந்திரிகளிடம் அறிவிப்பதே இந்த ஸம்பாஷணையின் நோக்கமெனச்சொல்லப்படுகிறது.

---

### டவுன் ஹைஸ்கூல் பழையமாணவர் சங்கம்.

### 9வதுவருஷக் கொண்டாட்டம்.

குடந்தை டவுன்ஹைஸ்கூலில் பழய மாணவர்ஸங்கத்தின் 9 வதுவருஷக்கொண்டாட்டம் சென்னைஷெரிப்பு ஸ்ரீமான்ராவ்பஹதூர் ஜி. எ. நடேசன் அவர்களின் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. நகரின்பிரபலஸ்தர்கள் அநேகர் விஜயம்செய்திருந்தனர்.

215228



## நாகூர்.

### பிராம்மண ஸங்கம்.

1938-ஞூ ஏப்ரல்-மீ 6வ கருப்பூர் பிர்ம்மஸ்ரீ சுப்பிரமணிய அய்யர் அவர்களால் இச்சங்கத்துக்கென்றே புதிதாக தஞ்சையில் எழுதச்சொல்லி வாங்கி அனுப்பப்பட்ட ஸ்ரீ கோபாலகிருஷ்ணபரமாத்மாவின் திவ்ய படத்தின் பிராண ப்ரதிஷ்டா வைபவம் ஆகம விதிப்படி வேதகோஷம் உபநிஷத் பாராயணம் முதலிய வைபவங்களுடன் நன்கு நிறைவேறியது. மேலும் இச்சங்கத்தைச் சார்ந்த அனைவரும் பரம சுகிர்தத்தை அடையவேணுமென்கிற நன் நோக்கத்துடன் காலை 8 மணிமுதல் கொண்டு பகல் 1 மணிவரை ஷை வைபவம் பூர்த்தியாகும் வரை வேத பிராம்மணர்களோடு கூடவே இருந்து பக்திசிரத்தையுடன் அவ்வைபவத்தை பூர்த்திசெய்வித்து எல்லோரையும் கிருதார்த்தர்களாகச் செய்த ஆஸ்தீக பூஷணம் பிர்ம்மஸ்ரீ N. A. பட்டாபிராமய்யர் அவர்களின் விசேஷ சேவையும் அதன் பின்னர் நடந்த விசேஷ பிராம்மண சந்தர்ப்பணையும், அன்றிரவு நடந்த திவ்யநாம சங்கீர்த்தனத்தோடு கூடிய பகவத் பஜனமும், இவ்வைபவத்திற்கேற்பட்டதான பூரா செலவுகளையும் தானே ஏற்றுக்கொண்டு பூர்த்திசெய்த பிரும்மஸ்ரீ கருப்பூர் சுப்பிரமணிய அய்யர் அவர்களின் நற்சிந்தையும் தர்ம பிரவர்த்தியும் ஈண்டு குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

### ஸ்ரீராம நவமி

இச்சங்கத்தார் 6—4—38 முதல் 9-4-38 முடிய நான்கு நாட்கள் ஸ்ரீராமநவமி மகோத்ஸவத்தை மிக்க விமரிசையாகக் கொண்டாடினார்கள். 8—4—38 வெள்ளிக்கிழமையன்று இச் சங்கக்கட்டிடத்தில் இச் சங்கத்து சபாநாயகர் பிரும்மஸ்ரீ A. S. இராமசுவாமி அய்யர் அவர்களால் இரவு 7-மணிக்கு ஸ்ரீ ராம ஜனன கட்டம் வாசிக்கப்பட்டு பிரபு ஸ்ரீ ராகவனுக்கு பானகபூஜா மஹோத்ஸவமும், ஸஹஸ்ரநாம அர்ச்சனங்களும் நடந்தேறி விதைரானம் செய்து, இவ்வுத்ஸவத்திற்கு விஜயம்செய்திருந்த ஆஸ்தீகர்கள் அனைவருக்கும் பகவத்பிரஸாதங்கள் வழங்கப்பட்டன. 9—4—38 ஆஞ்சநேயசுவாமி உத்ஸவம் நடைபெற்றது.

### புது வருஷம்.

ஷை சங்கத்தில்13-4-38வ வருஷப்பிறப்பு புண்யதினத்தன்று பகல்4மணிக்கு பிரும்மஸ்ரீ சௌரிசாஸ்திரிகள் அவர்களால் புதுப்பஞ்சாங்கம் வாசிக்கப்பட்டு பரந்தாமனுக்கு பானக பூஜா மஹோத்ஸவமும் நடத்தப்பட்டது.

அதுசமயம் பிரும்மஸ்ரீ பி. கணபதி அய்யர் அவர்கள் வருணதர்மம் என்பதைப் பற்றி சொற்பொழிவாற்றினார்கள்.

இச்சங்கத்தார் மேல் பூர்ண அன்பு கொண்டுள்ளவரான கருப்பூர் பிரும்மஸ்ரீ சுப்பிரமணிய அய்யர் அவர்களுக்கும் இச்சங்கத்தாருக்கும்எல்லாம்வல்ல கடவுள்பரம மங்களத்தைஅருள்பாலிக்குமாறுஅனவரதமும் துதிசெய்கிறோம்.

என். நாராயணசாமி காரியதரிசி.

---

முக்கிய கவனிப்பு.

(3-வருஷத்திற்கு உத்திரவாதமுள்ளது)

அசல் தங்க நகைகளைப்போன்ற "கன்னூஸ் ப்ளேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்கவும்.

தயாரிப்பவர்:— என். கன்னுசாமி பத்தர் பெரியதெரு, கும்பகோணம்.

## மன்னார்குடி.

### பிராம்மண சமாஜம்.

இவ்வருஷம் பங்குனிமீ இந்நகர் ஸ்ரீராஜகோபாலஸ்வாமிக்கு பிரும்மோத்ஸவம் வெகு விமரிசையாக நடந்தேறியது. ஒவ்வொரு தினங்களும் விசேஷமான பெரிய மேளக்கச்சேரிகளுடன் உத்ஸவம் மிகச்சிறப்பாய் நடந்தேறியது. ஷை உத்ஸவம் 18நாட்களிலும் வழக்கம்போல் வேதபாராயணங்கள் நடந்தேறின. இதில் ஸ்மார்த்த யஜுர்வேத பாராயணம் சென்றவருஷம்போல் விசேஷமாய் நடந்ததுடன் இவ்வருஷம் இந்நகரிலுள்ள ஆஸ்திகர்கள் விசேஷமாய் பணவுதவி செய்ததோடு பிராம்மண ஸந்தர்ப்பணைகளையும் வெகுசிறப்பாக நடத்திவைத்தார்கள். காலம் குரூரமாயிருந்தாலும் தர்மகாரியங்களில் சிறிதளவும் மஹாஜனங்களுக்குக் குறைவில்லை எனபது குறிப்பிடத்தக்கது. இந்நகரிலுள்ள பாங்குகளிலும் சென்றவருஷம்போல் வேத பாராயணத்துக்கு பணங்கொடுத்து உதவிசெய்தார்கள். பிராம்மண ஸந்தர்ப்பணைகளும் வெகுஉத்ஸாஹமாயும் நடத்திவைத்தார்கள். ஆதலால் ஸ்ரீராஜகோபாலஸ்வாமி பரிபூர்ண கிருபாகடாக்ஷத்தால் இதில் ஈடுபட்ட ஆஸ்திகர்களுக்கு கடவுள் அருள்புரியவேண்டுமென்று மிகவும் பணிவுடன்கேட்டுக்கொள்ளுகிறேன்.

### ஸ்ரீராம நவமீ

ஸ்ரீராமநவமிமுதல் இந்நகரில் திருப்பாக்கடல் தெருவில் பிரும்மஸ்ரீ சிமிழி வெங்கட்டராமசாஸ்திரிகள் அவர்கள் 5 நாளைக்கு ஸ்ரீராம சரித்திரத்தை வெகு விமரிசையாக பிரவசனம் செய்து வருகிறார்கள். இந்நகரிலுள்ள ஜனங்களும், வெகு உத்ஸாஹமாய்க்கேட்டு ஆனந்தப்படுகிறார்கள். இதோடு கீழ 2ம் தெரு விஷநிவர்த்தி விக்நேச்வார் ஆலயத்தில் வருஷப்பிறப்பு முதல்கொண்டு பிரதி தினம் இரவு 7மணி முதல் 9மணிவரை பிரும்மஸ்ரீ ராமபத்திராசாரிய ஸ்வாமி அவர்களால் ஸ்ரீமத் ராமாயண கதாகாலக்ஷேபம் நடத்தப்படும். அதையும் ஆஸ்திகர்கள்வந்து கேட்டு ஆனந்தமடையுமாறு வேண்டுகிறேன். இம்மாதிரி அடிக்கடி தர்மகாரியங்களிலும் புராண பிரவசனங்களும் நடந்துகொண்டிருக்கும்படியும் நடத்தும்படியும் ஈசன் அருள்புரியவேண்டுமென்று ஸ்ரீ ராஜகோபால ஸ்வாமியை பிரார்த்தித்துக் கொள்ளுகிறேன். இவ்வருஷம் வேதபாராயணத்துக்கு வசூல் சுமார் கையெழுத்தானது 205—0—0. வசூலாயிருப்பது 165. பிராம்மணதக்ஷிணை ரூ 138 காலை ஆகாரமும் மற்றும் இதரச் சிலவுகளும் சுமார் ரூ. 42. ஆகமொத்தம் சிலவு ரூ. 180. வசூலாகவேண்டியது 40 ரூபாயும் கிடைத்தால் இவ்வருஷம் 25ரூபாய் அதிகமும் சென்றவருஷம் மீதியுள்ள ரூ. 50-ம் சேர்ந்து 75ரூபாயாகும். இதை மஹாஜனங்களுக்கு மிகவும் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

என். விஸ்வநாத சாஸ்திரி.
காரியதரிசி.

---

ஸ்ரீ மஹாபாரதச் சுருக்கம்.
(ஆதிபர்வம்.)

ஸ்ரீமான் சேங்காலிபுரம் பஞ்சாபகேசய்யரவர்களால் மூலத்திலுள்ளபடியே சுருக்கமாக எளியநடையில் எழுதப்பட்டது. பாரதக் கதைகளை இலகுவில் அறிய இன்றியமையாததென்று மேதாவிகளால் புகழப்பெற்றது.

விலை அணு 0 12 0

கிடைக்குமிடம்:- ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட், டவுன்ஹைஸ்கூல்ரோடு, கும்பகோணம்.

## நாச்சியார்கோவில்.

### பிராம்மண ஸபை.

பாரத புண்யபூமியின்கண் பற்பல நன்மைகளுக்கு ஸாதனங்களான ஸநாதநதர்மம் முதலிய ஸத்விஷயங்களில் ஈடுபட்டு அவைகளை எங்கும் பரவச்செய்து பேருதவி புரிந்தே சான்றோர்க்கணிகலனுதலின் அதற்கிணங்க உத்தமகுணபரணாலங்கிருதர்களான இவ்வூர் ஆஸ்திக மஹாஜனங்கள் 14—4—38 பஹுதான்ய-ஞூ சித்திரை-மீ 2வ குருவாரம் மாலை ஸ்ரீ.உ.வே. நடாதூர் ஸ்வாமிகளின் தலைமையில் சேர்ந்து ஸ்ரீபகவத் கிருபையை முன்னிட்டு உத்தியோகஸ்தர் அங்கத்தினர் நிர்ணயாதி பலவித தீர்மானங்களுடன் "ஸ்ரீபிராம்மண மஹாஸபை" என்று மகுடஞ்சூட்டப்பெற்ற ஸங்கத்தை ஸ்தாபித்து விளங்கச் செய்திருப்பது புகழத்தக்கது.

ஒரு நிருபர்.

## ஆத்தன்குடி.

### ஸநாதனதர்ம மகாசபை.

வெகுதான்ய-ஞூ சித்திரை-மீ 2வ வியாழக்கிழமை இரவு 6–30 மணிக்கு கடவுள் வாழ்த்துக்குப்பின், பிரும்மஸ்ரீ பி. எஸ். சுப்பிரமணிய கனபாடிகள் தலைமையில் ஸ்ரீமான் ஜெகதீசய்டர், கதிரேசன் செட்டியார் இருவரும் முறையே, ஸ்ரீராமதீர்த்தர் விஜயம், தெய்வீக கணக்கர் என்பவைகளைப் பொருளாகக்கொண்டு சொற்பொழிவாற்றினர். இவ்வருஷ ஆண்டுவிழாவை இம்மாதக்கடைசியிலாவது அல்லது வைகாசிமாதம் முதல் வாரத்திலாவது தக்க பெரியார் தலைமையில் நடத்தவேண்டியதைப்பற்றியும், கொடுமையான சாரதாச்சட்டத்தை மீறியே ஆகவேண்டிய அவசியத்தைப்பற்றியும், தர்மசம்ரக்ஷணத்தை உத்தேசித்து ஸநாதனிகள் எவ்வித த்யாகங்கள் செய்யவும் முன்வரவேண்டிய காலம் வந்துவிட்டதென்றும் பேசப்பட்டது. வந்தனோபசாரத்துடன் சபை இரவு 8 மணிக்குக் கலைந்தது.

ஒரு நிருபர்.

---

## வித்வான் காலமானார்.

கும்பகோணத்தில் பிரஸித்திபெற்ற வித்வானக விளங்கிவந்த ஸ்ரீ முஷ்ணம் கனபாடி ஸ்ரீமான் வீராகவசாரியர்ஸ்வாமி சென்றபுதன் கிழமை இரவு குடந்தையில் காலஞ்சென்றார். இவர்வேதத்திலும் லக்ஷணம்முதலியவைகளிலும் பாண்டித்ய முள்ளவராயிருந்ததுடன் தர்க்க வேதாந்தங்களிலும் நல்ல பண்டிதராயிருந்தார் விசிஷ்டாத்வைத ஸபையின் பரீக்ஷாதிகாரி, மிகுந்த ஸாத்விகர், எல்லோருடைய நன்மதிப்பைப் பெற்றவர். இவருடைய பிரிவு பெரிய நஷ்டமே.

---

## விளம்பரம்.

சென்னை மாகாணத்தில் ஸநாதந தர்ம பிரசாரம் செய்ய சிறந்த வாக்குள்ளவர்களாயும் அநுஷ்டாதாக்களாயும் ஊக்கமுள்ளவர்களாயுமிருக்கிற பண்டிதர்கள் தேவை. யோக்யதானுசாரமாய் ஸம்பாவனை செய்யப்படும். அடியில்கண்ட விலாசத்துக்கு எழுதிக்கொள்ளவும்.

என். நடேசய்யர்
அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க கார்ய அத்யக்ஷர்.
55 தமிழ் சங்கம் ரோட். மதுரை.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

223
ஆர்யதர்மம்
4 23 6
21-4-1938

ஆர்யதர்மம்

4 ... ௵ 17

23

28-4-1938

215229

621

215229

221

Registered No. M. 2913

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)

குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோ[illegible]தேசிகாசாரியர்

OFFICE OF THE [illegible] OF [illegible]
28 APR 1938
MADRAS

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4
23 | கும்பகோணம் கலி5040 பஹுதான்ய-ஷூ சித்திரை-மீ 16உ 1938ஷூ ஏப்ரல்-மீ 28உ | ஸ 17

## ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0.
தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா. 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்

## வரதக்ஷிணைத் தடை மசோதா.

பீஹார் சட்டஸபையில் ஸ்ரீமான் சுக்லா சிங் என்பவர், வரதக்ஷிணை வாங்குவதைத் தடுக்க ஒரு மசோதாவைக் கொண்டுவரப் போவதாக அறிவித்திருக்கிறார்.

நேரிட வரதக்ஷிணை வாங்கினாலும், அல்லது அதற்கான ஸாமான்களைப் பெற்றாலும் இந்த மசோதாவின்படி அது குற்றமாகும்.

வரதக்ஷிணைப் பெறுவோர்க்கு 6 மாதம் காவல் தண்டனையும், ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கவேண்டுமென்று இந்த மசோதா சொல்லுகிறது.

## ஸ்ரீரங்கம் கோவில் போர்டார் வசமாயிற்று.

ஸ்ரீரங்கம் தேவஸ்தானம் தற்கால நிலைமையில் நிர்வாஹம் ஸரியாக இல்லாத காரணத்தால் தேவஸ்தானபோர்டார் அதைத் தங்கள் வசத்தில் வைத்துக்கொண்டு ஓர் நிர்வாஹ அதிகாரியை நியமித்துவிட்டார்கள்.

## காந்தி--ஜின்னா ஸந்திப்பு.

ஸ்ரீமான் காந்தியும், ஜனாப் ஜின்னாவும் ஸமீபத்தில் பம்பாயில் ஸந்தித்துப் பேசுவார்கள். இந்தியாவில் இந்து—மஹம்மதியர்களிடையில் சாச்வதமாக ஓர் ஒற்றுமையை உண்டுபண்ணவேண்டிய விஷயத்தைப்பற்றி இருவரும் ஆலோசிப்பார்கள்.

## ஜெயிலிலும் ஹிந்து முஸ்லீம் சண்டை.

காச்சியைச்சேர்ந்த கெயிர்பூர் சம்ஸ்தான ஜெயிலில் கைதியாக இருக்கும்சிக்கியரைமஹம்மதிய மதத்தில் சேர்த்துவிட முஸ்லீம்கள் முயற்சித்தனர். ஹிந்துக் கைதிகள் இதை ஆக்ஷேபித்துத் தடுத்தனர். இதன் பயனாக இருவகுப்பாருக்கும் சிறையில் சண்டை நடந்தது. போலீஸார் வந்து அடக்கினர்.

## சென்னை கார்ப்பரேஷன் எலெக்ஷன்.

### காங்கிரஸ் தோல்வி.

சென்னையில் 8 டிவிஷன்களில் நடந்த எலெக்ஷனில் காங்கிரஸ்காரருக்கு 4 டிவிஷன்களில் தோல்வியேற்பட்டது. பலத்த காங்கிரஸ் பிரசாரம் நடந்தும் பலனில்லை.

## ஷாஹித்கஞ்ச் ஸத்யாக்ரஹம் நிறுத்தப்பட்டது.

லாகூரில் பலமாக நடந்துவந்த மேற்படி ஸத்யாக்ரஹத்தை முஸ்லீம்கள் நிறுத்திவிடத் தீர்மானித்திருக்கிறார்கள். முஸ்லீம் லீகும், பஞ்சாப் பிரதம மந்திரியும் சொல்லிய ஆலோசனைக்கிணங்கி இம்முடிவு செய்யப்பட்டது.

ஸீக்கியர்களுடன் இவ்விஷயமாக ராஜி பேசப்படுமென்று தெரிகிறது.

## அபிஸீனியாவின் கதி.

அபிஸீனியாவை இத்தாலி வசப்படுத்திக்கொண்டு அங்கு தனது ஸாம்ராஜ்யத்தை ஸ்திரப்படுத்தி யிருந்தபோதிலும், மற்றதேசங்கள் இதை அங்கீகரிக்கவேண்டி யிருந்தது. தற்போது ஐரோப்பாவிலுள்ள நிலைமையில் பிரிட்டன் பிரான்ஸ், முதலிய ஸகல தேசங்களும் இதாலியின் மனம்கோணாமல், அதற்கு இணங்கிநடக்க வேண்டிய நிலைமையில் இருப்பதால், அவையாவும் அபிஸினியா இதாலிக்குச் சொந்தமென்றதை அங்கீகரித்துவிட்டனவாம். அமெரிக்காவும் இதை ஏற்றது.

## பம்பாய் கலகம்

### அடங்க வில்லையாம்.

பம்பாயில் ஏற்பட்ட ஹிந்து முஸ்லீம்கலகம் இன்னும் நன்கு அடங்கவில்லை. கடைகள் மூடப்பட்டுக்கிடக்கின்றன. 2 ஆயிரம் பேர் வரையிலும் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இதுவரையில் 11 பேர்கள் கொல்லப்பட்டனர்.

## துருக்கியில் பூகம்பம்.

### 800 பேர் மரணம்.

துருக்கியில் சென்ற 19உ யன்று பலத்த பூகம்பம் ஏற்பட்டதன் காரணமாக இதுவரையில் 800 பேர் கொல்லப்பட்டுப்போனதாகத்தெரிகிறது. 18 கிராமங்கள் அழிந்துவிட்டனவாம். 50 ஆயிரம் ஜனங்கள் வீடில்லாமல் தவிக்கின்றனராம்.

## புறுக்கள் மூலம் பிரசாரம்

### ஜர்மனியில் ஏற்பாடு.

ஜர்மனி, ஆஸ்திரியாவை வசப்படுத்திக்கொண்ட ஸமாசாரத்தைப் பலநகரங்களிலும் கிராமங்களிலும் பரப்புவதற்காக ஜர்மன் அதிகாரிகள் ஆயிரக்கணக்கான புறுக்கள் மூலமாக நோட்டீஸ்களை விநியோகித்தார்களாம். அந்தப்புறுக்கள் குறிப்பிட்டவிடங்களில்போய்நோட்டீஸ்களைப்போட்டனவாம்.

## சேலத்தில் கல் வீச்சு.

### அரசியல் மஹாநாட்டில் கலவரம்

சேலம்ஜில்லா ஓமலூர்தாலுக்கா அரசியல் மஹாநாடு ஸம்பந்தமான ஊர்வலத்தின்மீது, முஸ்லீம்களும் சு. ம. க்களும் கல்மாரிபொழிந்தனராம். அந்தஊர்வலத்தில் கனம்ஸுப்பராயனுமிருந்தார். கல்எறிபவர்கள் எந்தக்கக்ஷியாராயிருந்தாலும் இனிமேல் கண்டிப்பாகக் கைதிசெய்யப் படுவார்களென்று கனம் மந்திரி எச்சரித்தார்.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:—T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

# தேசிகன் தேன்மொழிகள்.

## தெய்வமும் புருஷகாலமும்.

### 2 தேய்வம் வழிகாட்டும்.

சிஷ்யன்:— புருஷகாரத்தை எவ்வளவு நன்றாய் உபயோகித்தாலும், உத்தேசித்த பலனைக் கொடுக்கவிடாமல் தைவம் அநேக ஸந்தர்ப்பங்களில் குறுக்கேவந்து கெடுத்து விடுகிறதே?

ம: மறுபடியும் தைவத்தின் லக்ஷணத்தை மறந்தே பேசுகிறீர்கள். தைவம் என்பது உங்களுக்கு வெளிப்பட்டதாய் இருந்துகொண்டு உங்கள் புருஷகாரத்தைக் கெடுக்கக் கூடிய சக்திவாய்ந்த ஒரு தனி பதார்த்தமேயில்லை. அது வாஸ்தவத்தில் ஏற்கனவே உங்களிடத்திலேயே இருக்கிறது.

சி: இருக்கலாம். இருந்தாலும், புருஷகாரத்தினுடன் விரோதித்துக்கொள்ளும் ஸமயத்தில் தானே அது இருப்பதாகவே தெரிகிறது? பழைய பலன்கள் எவை என்று தெரியாமலும், அவைகளை அறிந்துகொள்ள ஸாதனமில்லாமலும், இருக்கும்போது அப்பலன்களை எப்படி மாற்றமுடியும்?

ம: ஏதோ சில மஹான்களைத்தவிர மற்றவர்களுக்கு தெரியாதென்பது வாஸ்தவமே. ஆனாலும் இந்த அறியாத்தன்மையே நமக்கு ஒரு பெரும் அநுகூலம். இந்த ஜன்மத்திலோ, எண்ணிறந்த இதற்கு முன்னுள்ள ஜன்மங்களிலோ, நாம் செய்திருக்கும் கர்மாக்களின் பலன்கள் பலவிதமாயும் அனந்தமாயுமிருக்கின்றன. அவைகளெல்லாம் நம் அறிவில் தோன்ற வாரம்பித்துவிட்டால், நாமே திடுக்கிட்டுப்போய், அவைகளை மாற்றப் பிரயத்தினம் செய்வதையே விட்டுவிடத்தோன்றும். இப்பிறவியிலேயே மறதி என்பது பரம தயாளுவான பகவானால் நமக்கு அளிக்கப்பட்டிருக்கிற ஒரு பெரிய வரன் என்றே சொல்லவேண்டும். முன் நடந்த எல்லா ஸம்பவங்களையும் மறக்காமல் ஒவ்வொரு க்ஷணத்திலும் அவைகளை மனதில் சுமப்பதானால் பெரும்பாரமாகும். அப்படியே வரும்காலம் ஸம்பந்தமாக ஆசாஸ்தி அதாவது க்ஷேமத்தையே எதிர்பார்த்தல் என்ற விசேஷ சக்தியும் நம்மிடம் இருந்து வருகிறது. அது இருப்பதினால்தான் தைர்யமாய் புருஷகாரத்தை உபயோகப்படுத்த முடிகிறது. இவ்விதமாக, சென்ற கால மறதியும் வருங்கால ஆசாஸ்தியும் நமக்கு கிடைத்திருக்கும் இரண்டு பெரும் பாக்கியமாயிருப்பதால் அவைகளை அலக்ஷ்யம் செய்வதற்கில்லை.

சி: சென்ற கால விஷயமான மறதி இப்பொழுதுள்ள புருஷகாரத்திற்கு இடஞ்சல் செய்யாமலும், வருங்கால ஆசாஸ்தி இப்பொழுதுள்ள புருஷகாரத்திற்கு ஒரு உத்ஸாஹத்தைச்செய்வதாகவும், இருக்கலாம். இருந்தாலும், அநேக ஸந்தர்ப்பங்களில் நம் புருஷகாரத்திற்கு பிரதிபந்தகமாய் தைவம்நிற்கிறதென்பதையும் மறுக்க முடியாது.

ம: புருஷகாரத்திற்கு தைவம் பிரதிபந்தகம் என்று சொல்வது சரியல்ல. வாஸ்தவத்தில் புருஷகாரத்தை எதிர்ப்பதுபோல் தோன்றிக்கொண்டு, பலன் கிட்டவேண்டுமானால் இப்பொழுது புருஷகாரத்தை எவ்வளவுதூரம் உபயோகிக்கவேண்டுமென்பதையே நமக்கு தைவம் சொல்கிறது. ஸாதாரணமாய் ஒரு பலனை உத்தேசித்து ஒரு கர்மா விதிக்கப்பட்டிருக்கும். ஆனால் அக்கர்மாவை எவ்வளவு ஊக்கமாய், எவ்வளவுகாலம், எத்தனை தடவை செய்யவேண்டுமென்று நமக்குத் தெரிகிறதில்லை. முதல் தடவையில் பலன் கிட்டாத விஷயத்தில், இதற்கு விருத்தமான வழியில் நம் புருஷகாரத்தை இதற்குமுன் உபயோகப்படுத்தியிருக்கிறோம் என்றும், அவ்விதம் முன் உபயோகப்படுத்தியிருக்கிற புருஷகாரத்தின் பலனை ரத்துசெய்துகொள்ள வேண்டுமென்றும், அப்புருஷகாரத்தின் பலாபலத்திற்குத் தக்கபடி இப்பொழுது நாம் பிரயத்தினம் செய்யவேண்டுமென்றும், நாம் ஸுலபமாய் ஊஹித்துக்கொள்ளலாம். ஆகையால், தைவம் செய்வதாகத் தோன்றுகிற தடையானது வாஸ்தவத்தில் இப்பொழுது செய்யவேண்டிய பிரயத்தினத்தின் அளவைத் தீர்மானிக்கவே உபயோகப்படுகிறது.

சி: பிரயத்தினம் செய்ய வாரம்பித்த பிற்பாடல்லவா தடை ஏற்படுகிறது? அப்படியிருக்க, அத்தடை பிரயத்தின ஆரம்பகாலத்தில் நமக்கு எப்படி உபயோகப்படும்?

ம: முதலிலேயே உபயோகப்படவேண்டுமென்ற அவசியமில்லை. முதலில் தடையேற்படும் என்ற எண்ணமே இல்லாமல்தான் பிரவிருத்தி ஆரம்பிக்கவேண்டும். நம் எண்ணம் தடையன்னியில் நிறைவேறும், நம் புருஷகாரத்திற்குபிரபந்தகமே கிடையாது, என்று எண்ணிக்கொண்டுதான், பிரயத்தினம் செய்யவேண்டும். பிரயத்தினம் பலிக்காமல் போனால், அப்பொழுதுதான் இதற்கு முன் விபரீதப் பிரயத்தினம் செய்திருப்பதாகவும் அதினால் பிரதிபந்தகம் ஏற்படுகிறதென்றும், தெரிந்துகொண்டு, இப்பொழுது இருமடங்கு ஊக்கத்துடனும் விடாமுயற்சியுடனும் பிரயத்தினம் செய்யவேண்டுமென்று தெரிந்துகொள்ளவேண்டும். அந்தப் பிரதிபந்தகமும்நம்மாலேயே செய்யப்பட்டிருக்கிறபடியால், அதை நிவிருத்தி செய்யவும் நமக்கு சக்தி உண்டென்பதை நன்கு உணரவேண்டும். மறுபடி பிரயத்தினம் செய்தும் கூட பலன் ஏற்படாத விஷயத்தில், அப்பொழுதும் அதைர்யப்பட நியாயமில்லை. தைவம் என்பதே புருஷகாரத்தின் கார்யமாயிருப்பதால, புருஷகாரத்தைவிட பலவந்தமாக இருக்கமுடியாது. இப்பொழுது பலிக்கவில்லையேயென்றால், முன் பிரயத்தின பலனை மாற்றக்கூடியபடி இப்பொழுது பிரயத்தினம் செய்யவில்லை என்று தான் ஏற்படும். அதாவது, தைவமும் புருஷகாரமும் தனித்தனி பதார்த்தங்கள் இல்லாததினால், அவைகளுக்குள் தாரதம்யத்திற்கு இடமில்லை. முன்னுள்ள ஊக்கத்திற்கும் இப்பொழுதுள்ள ஊக்கத்திற்கும் தான் தாரதம்யம்.

சி: அப்படியானாலும், முன் எவ்வளவு ஊக்கத்துடன் ஒரு கர்மாவை செய்திருக்கிறோமென்பது இப்பொழுது பிரயத்தினம் செய்த பிற்பாடு தானே தெரியும்?

ம: இப்பொழுது புலப்படாத அதாவது அதிருஷ்டமான, எல்லா விஷயங்களிலுமே அப்படித்தான். உதாஹரணமாக, ஒரு மரத்தூணில் இறக்கப்பட்டிருக்கிற ஓர் ஆணியை எடுத்துக்கொள்வோம். அதைப் பார்க்கும்போது, தூணுக்கு வெளியில் நீட்டிக்கொண்டிருக்கிற சுமார் ஒரு அங்குல நீளம் நம் பார்வைக்குத் தெரியவரலாம். ஆணியின் மீதி பாகம் மரத்திற்குள் பதிந்திருப்பதால், அந்த பாகம் எவ்வளவு நீளம் என்று நாம் பார்க்க முடியாது. ஆகையால் நாம் ஸம்பந்தப்பட்ட மட்டில், அந்த பாகம் அதிருஷ்டம் ஆகும். தூணுக்கு அழகாக பூச்சுக்கொடுத்திருப்பதால், அப்பாகத்தைப் பிடித்துக்கொண்டிருக்கும் மரம் என்ன மரம் என்று தெரிவதற்கும் இல்லை. இதுவும் அதிருஷ்டமே யாகும். இவ்வாணியை வெளியில் எடுக்கவேண்டுமானால் எத்தனை இழுப்பு இழுக்கவேண்டும், ஒவ்வொரு இழுப்பும் எவ்வளவு பலமாயிருக்க வேண்டும், என்று சொல்லுங்கள் பார்ப்போம்.

சி: அதை இப்பொழுது எப்படிச் சொல்கிறது? மரத்திற்குள் பதிந்திருக்கும் நீளம் தெரிந்தாலல்லவா இப்பொழுது வேண்டிய இழுப்பின் எண்ணிக்கையையும் பலத்தையும் தீர்மானிக்க முடியும்?

ம: வாஸ்தவமே. மரத்திற்குள் போயிருக்கும் நீளம் அகஸ்மாத்தாய் ஏற்பட்டதில்லை. ஆணியை மரத்திற்குள் அனுப்பின அடிகளின் எண்ணிக்கையின்பேரிலும், அந்த ஒவ்வொரு அடியின் பலத்தின் பேரிலும், அவ்வடிகளை ஏற்றுக்கொண்ட மரத்தின் தன்மையின் பேரிலும், அல்லவா அவ்வளவு நீளம் உள்ளே சென்றிருக்கிறது?

சி: ஆம்.

ம: ஆகையால் இப்பொழுது நாம் இழுக்கவேண்டிய இழுப்பின் எண்ணிக்கையும் பலமும், அவ்வாணியை மரத்திற்குள் செலுத்தின அடிகளின் எண்ணிக்கையையும் பலத்தையும் பொருத்திருக்கிறதல்லவா?

சி: ஆம்.

ம: ஆனால், மரத்திற்குள் இருக்கும் நீளம் இப்பொழுது கண்ணுக்குத் தெரியாமலும் தெரிந்து கொள்ள முடியாமலும் இருப்பதால் அதிருஷ்டமாயிருக்கிறது. அப்படியே முன் ஏற்பட்ட அடிகளும் முன் ஏற்பட்டவை யென்ற காரத்தினாலேயே அதிருஷ்டங்களாகின்றன. அல்லவா?

சி: ஆம்

ம: மரத்திற்குள் போயிருக்கும் நீளம் தெரியாத காரணத்தினாலாவது, மரத்திற்குள் அனுப்பிய அடிகளின் எண்ணிக்கையும் பலமும் தெரியாத காரணத்தினாவது, ஆணியை வெளியில் எடுக்கப்பிரயத்தனம் செய்யாமலே இருந்து விடுகிறோமா? இப்பொழுது கொடுக்கும் இழுப்பின் எண்ணிக்கையையும் பலத்தையும் கிரமமாக ஜாஸ்தி படுத்திக்கொண்டு ஆணியை எடுத்துவிடப் பிரயத்தனம் செய்கிறோமா?

சி: கார்யம் நடக்கவேண்டுமானால், பிரயத்தனத்தைத்தான் ஜாஸ்திப் படுத்துகிறோம்.

ம: இதே நியாயத்தை எல்லாப் பிரயத்தனங்களிலும் அனுசரிக்க வேண்டும். ஸாத்தியமான வரையில் பிரயத்தினம் செய்தே தீரவேண்டும். கடைசியில் உங்கள் ஸங்கல்பமே நிறைவேறும்.

## நவாஹம்.

சைதாபேட்டை டாட்ஹண்டர் நகரில் ஸ்ரீ ராமநவமி உத்ஸவத்தை முன்னிட்டு உடையாளூர் ராமாயணம் பிரம்மஸ்ரீ அப்புஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களால் ஏப்ரல் 7உ முதல் பிரதி தினம் நகர மண்டபத்தில் இரா 8 மணி முதல் 10 மணி வரையில் அவதார முதல் பட்டாபிஷேகமுடிய 9 உபந்யாஸங்கள் மிகச்சிறப்பாய்நடைபெற்றது. ஸு. நி.


## தர்ம சாஸ்திரச் சுருக்கம்.

(மூன்றாம் பதிப்பு)

பிராம்மணர்களின்கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், "வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராம்மண குடும்பங்களிலும்இருக்கவேண்டியதவசியம்.

விலை ரூ. 1—8—0 வி. பி. பிரத்யேகம்.

கிடைக்குமிடம் :—

பப்ளிஷர்.

தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
கீழவிடையல், திருச்சிரா P. O.




உ

# ஸ்ரீமந் நாராயண தீர்த்த குரு ஸ்வாமிகளின் சரித்திர சுருக்கம்.

(சென்றவார தொடர்ச்சி).

"நான் அதற்குச்சம்மதியாது ஆட்டை ஓட்டினேன். அவர்கள் அப்போது மந்திரத்தால் ஆட்டைக்கொன்று வீழ்த்தினர்" என்றான்.

சுவாமிகள் குடியானவனை நோக்கி "இவ்வாட்டின் விலையைக்குறைத்துக்கேட்ட காரணம் என்ன" என

குடியானவன்:— மகானுபாவரே, அது கரட்டாடாயும், கணுக்கால் உள்ளதாயும் இருந்தபடியால் என்றான்.

நம் மகான் நடந்ததை வினவில் பயனில்லை என்று எண்ணி ஆட்டைக் கீழே போடச்சொன்னார்.

அதன்பிறகு தம் அங்கையால் ஆட்டின்மேல் ஜலத்தைப் புரோக்ஷித்தார். உடனே ஆடு உயிர்ப்பெற்றெழுந்தது. "நடந்த கூலியும் கிஸ்திப் பணமும் கிடைக்கும், வீடுபோய்ப் பார்" என்று சொல்லி அவன் அங்கையில் சிறிது மண்ணை அளித்து அனுப்பினார். குடியானவன் தன் இல்லம் அடைந்து வேண்டும் பணமிருக்கக்கண்டு மகிழ்ந்தான். இஃது இவ்வாறிருக்க ஆடு பிழைத்த சேதியைச் சேணியர்கள் கேட்டு, ஞானியைச் சோதிக்க எண்ணினார்கள். தங்களில் ஒருவனைப் பிணச்சடங்குகள் செய்து பாடையில் கட்டி அப்பொய்க்கோலத்தோடு சுவாமிகள் முன் வந்து ஆட்டைப் பிழைப்பித்த அருள் குருவே இவன் இறந்து போனான். உயிர்ப்பிச்சை வேண்டும் எனக் கெஞ்சுவதுபோல் வஞ்சக நெஞ்சத்தோடு நடித்தார்கள். ஞான குருசுவாமிகள் உண்மையை உணர்ந்து செத்தவன் செத்தவன்தான் என்று மும்முறை உரைத்தனர். அவ்வுரையைக்கேட்ட சேணியர்கள் சுவாமியைப் பலவாறு நிந்தித்துப் பிரேதரூபமாய் ஆசந்தியில் படுத்திருப்பவனை அகத்துக்கு வாவென்று அழைத்தார்கள். செத்தவன் செத்தவனே என்ற மகான் வாக்கின்படி அச்சேணியன் பிரேதரூபமாயிருக்கக்கண்டு மெத்த வருத்தங்கொண்டு திருடனைத் தேள் கொட்டியதுபோல ஒருவருக்கு முரையாமல் பிரேதத்தை அடக்கம் செய்தார்கள். புத்திரனை இழந்த தாய் அம்மகானை நண்ணிப் பலவாறு புலம்பினாள். அப்போது சுவாமி அவ்விடம் விட்டு அகன்று அருந்தவம் புரிய அடவியை அடைந்து ஐம்புலனடக்கி ஒரு மரத்தடியில் அமர்ந்திருந்தார்.

இவ்வாறு இவருடைய கீர்த்தி உலகமெங்கும் பரவவே பல பெரியார்கள் வந்து சேவித்துத் தங்கள் குறைபாடுகளை நீக்கிக் கொண்டு செல்வது வழக்கமாயிருந்தது.

அம்மகான் தினந்தோறும் பஞ்ச பஞ்ச உஷக்காலத்தில் எழுந்து நியம நிஷ்டைகள் முடித்து ஆட்டுக்குக் கரும்பும் தழைகளும் கொடுத்து வளர்த்துவந்தார்.

இவர் கொடுத்த மூலிகையினால் சிலந்தி நீங்கிச் சுகமடைந்து அமர்சிங்க மன்னன் ஒரு நாள் பின்வருமாறு தனக்குள் எண்ணலாயினன்.

நமது கையில் எக்காரணம் பற்றியோ தீராத சிலந்திப்பெரு நோய்தோன்றிற்று. நமது அரண்மனையிலுள்ள வைத்தியரும் பிரபலமான சித்தர்களும் என்னைக் கைவிட்டபிறகு ஓர் அந்தணர் பச்சிலையோடு வந்து என் நோயைக்கண்டு நான் இதைத்தீர்ப்பேனென்று விண்டு, மூலிகையைக்கொண்டு, பிழியப்பண்டு வருத்திய சிலந்தி அடியோடு நீங்கி இருந்த இடத்தில் வடுவில்லாமலேயே சுகமடைந்தது. அதன் பிறகு இப்பச்சிலை ஏது என்று அந்த மறையவரைக் கேட்க அவர் என்னை நோக்கி "அரசே நான் ஓர் ஏழைப் பிராமணன். என் இருப்பிடம் திருவையாறு. சில ஆண்டுகளுக்கு முன் எனது ஊரிலிருந்து பக்தர்கள் கூட்டம் கூட்டமாகத் திருப்பூந்துருத்திக்குச் சென்றுகொண்டிருந்தார்கள். அவர்களை எங்குச் செல்கின்றீர்களென்று கேட்க, அவர்கள் திருப்பூந்துருத்தி என்னும் திவ்யஸ்தலத்தின் கண்ணே வடதேசத்துப் பெரியவர் வந்துளாரென்று சொன்னார்கள். அந்தச்சொல் என் காதில் வீழ்ந்தவுடன் அளவிலா ஆனந்தங்கொண்டு அக்கூட்டத்தோடே அம்மகானிருக்குமிடம் அடைந்தேன்.

அவருடைய தேஜஸையும் அருளோடுகூடிய முகத்தையும் நிட்டைகூடியிருக்கிற நிலைமையையும் கண்ணாரக்கண்டு ஆனந்தித்தேன். அதுமுதல் நான் திருவையாற்றிலிருந்து சுவாமிக்கு இச்சையுடன் உச்சிகால உணவு ஊட்டிவந்தேன்.

ஒருநாள் கொள்ளிடத்தில் செல்லுங்கால் எனக்குப் பொடி சுடவில்லை, அப்பொழுது அதிக ஆச்சர்யமடைந்து சுவாமியைப் பார்த்தேன். அவர்கள்மேல் வெப்பம் நிறைந்து காவிரியோடும் மணலில் நடந்த குறிப்புக்களெல்லாம் தோன்றின. நான் அதைக்குறித்துக் கேட்கச் சுவாமி என்னை நோக்கி "அப்பா என் பசிதீர்க்க நீ உணவு கொண்டு வந்தாய். வெப்பத்தால் உனக்குறும் இன்னலை நாம் அடைந்தோம். இதுமுதல் உன் தொண்டை நிறுத்தி உனக்கு வேண்டியதைக்கேள்" என்று இயம்ப, நான் மகானை நோக்கி பொன்வேண்டுமென்று புகன்றேன். சிலகாலம் சென்று பூந்துருத்திக்கு வாவென்று மொழிந்து மறைந்தார். அதுபோலக் கொஞ்சகாலம் சென்று பூந்துருத்தியில் கண்டேன். என்னைக் கண்டதும் மகான் பொன்னால் வரும் இன்னலை எல்லாம் எடுத்துரைத்து எனக்கு நித்தியா நித்திய வஸ்து விவேகம் உண்டாகும்படி சில அருள்மொழிகளை அறைந்தார். நான் மறுபடியும் சங்கடனுக்காகப் பொருள்தரவேண்டுமென்று இறைஞ்ச, மகான் சின் முத்திரை தரித்த கையால் சிறந்த பச்சிலையை எனக்கு ஈந்து, உங்கள் ஆட்சியையும் உங்களைச் சிலந்தி வருத்துவதையும் எனக்குச் சொல்லி அதற்கு இதை ஔடதமாகக் கொண்டு நோய் தீர்த்துச் செம்பொன் பெறு என்று திருவாய் மலர்ந்தருளினாரென்று சொன்னாரல்லவா? நாம் அடைந்த இன்னலை அதிதூரத்திலிருந்து அருள் கண்ணாலறிந்து அதற்கு ஔடதமாகிய மூலிகையை அந்தணர்வசமனுப்பி வெவ்விய நோயை நீக்கிய அம்மகானைக் கண்ணாரக்கண்டு அவர் உபதேச மொழியைக் காதால் கேட்டு அவருக்கு வேண்டிய சவுகரியங்களை நாம் அவசியம் செய்யவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் செய்நன்றி மறந்த தோஷத்திற்குள்ளாவோம். ஆகையால் நாளைய தினம் சதுரங்கசேனையோடு திருப்பூந்துருத்தி போவோம் என்னும் நினைப்போடு கொலுமண்டபம் புகுந்து அரியணை அமர்ந்தான்.

அதன்பிறகு அமைச்சரை நோக்கி "மந்திரீ, நாளை அதிகாலையிலே சிலந்தி நீக்கிய மகானை திருப்பூந்துருத்தி போய்க் காணவேண்டியிருப்பதால், நீர் அதன்பொருட்டு பாதபூஜை பணிவிடை முதலியவற்றுக்கு வேண்டிய பொருள்களையும் சதுரங்க சேனைகளையும் பலவித வாத்தியங்களையும் தயாராக இருக்கும்படி செய்வீர்" என்று ஆக்ஞாபித்தான். மறுநாள் அதேபோல் அரசன் அதிகாலையில் பூஜைத் திரவியங்களோடும் தன் மனைவியோடும், மந்திரி பிரதானிகள், சதுரங்க சேனைகள் புடைசூழ, மங்கள முரசம், வீரமுரசம், கொம்பு, தம்பட்டம், பேரிகை, எக்காளம் முதலிய வாத்தியங்கள் சப்தகடல் முழங்குவது போல் சப்திக்க பூந்துருத்தியை அடைந்தான்.

அடைந்து ஐந்து தினங்கள் காத்திருந்து அந்த நாராயண குருவைக் காணமுடியாமல் மனம் வருந்தி இருந்தான். அவ்விஷயத்தை யறிந்த மகான் அம்மன்னன் முன் தரிசனங்கொடுத்து யார் என்று கேட்டிட, அடியேன் தஞ்சை அமர்சிங்கன் என்னும் மன்னன். தங்களைக் காணவேண்டுமெனும் அவாவின் மிகுதியால் இங்கு வந்தேன். தங்கள் கிருபாகடாக்ஷத்தால் உணவு உண்ண உதவுவதாயும், வறியோர்களுக்கு அவாக் கெட பொருள் நல்குவதாயும் செங்கோல் பிடிப்பதாயும் ஆலிங்கனத்துக்கு ஆதாரமாயிருப்பதாயும் உள்ள அங்கையில் சிலந்தி ஏற்பட்ட கடுந்துயரம் நீங்கி உங்களை வணங்க பாக்கியம்பெற்றேன். தங்கள் அருள் நோக்கத்தால் கிருதார்த்தனானேன், தேவையானதைச் சொன்னால் நடத்திவைப்பேன் என்றான்.

அதுகேட்ட நாராயணகுரு நான் ஒன்றும் வேண்டேன் என்றார். அருகிருந்த ஆடு எழுந்து பின்கால் ஒன்றால் கோடு இழுத்துக்கொண்டு சுவாமி இருக்கும் நான்கு திக்கிலும் உள்ள நிலத்தைச் சுற்றிவந்தது. ஆடு வலம்வந்த இடத்தை அய்யனுக்கு மன்னன் ஈந்து அதில் அவர் தங்கவும் பூசை செய்யவும் ஒருமண்டபத்தைக் கட்டிக்கொடுத்துக் குருவினிடம் விடைபெற்றுத் தஞ்சை சேர்ந்தான்.

அம்மண்டபத்திலமர்ந்த அப்பெரியார் கிருஷ்ண யோக நிஷ்டை கூடி அஷ்டமாசித்திகளைப்பெற்று, உலகத்தாருடைய இன்னல்கள் பலவற்றையும் தீர்த்துவந்தார். அதுசமயம் தொண்டமண்டலத்தில் வேளாளர் மரபில் பொன்னப்பமுதலியார் என ஒருவர் இருந்து வந்தார். அவருக்கு வெகுகாலம் புத்திரப்பேறு இல்லாமல் மனக்கவலையடைந்து நாளும் வருந்தி வந்தார். சிலர் அவரிடம் வந்து நாராயண குருவின் மகிமையையுரைத்து அவரிடம் ஏகும்படி செய்தார்கள்.

அவ்வுரை கேட்ட பொன்னப்பமுதலியாரும் அவர் தன் மனைவியும் புத்திரப்பேற்றை எண்ணி நாராயணகுரு ஆச்சிரமம் நண்ணிப் பலதரம் வலம் வந்து நமஸ்காரம் பண்ணினார்கள்.

(தொடரும்.)



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

# ஆர்யதர்மம்.

பகுதான்ய-ஸு சித்திரை-மீ 16உ

## காந்தி, ஜின்னா ஸம்பாஷணை.

ஹிந்து, முஸ்லீம் ஒற்றுமையை உண்டு பண்ணுவதற்கான வழியைக்கண்டு பிடிக்க ஸ்ரீமான் காந்தியும், ஜனப் ஜின்னாவும் 28உ யன்று பம்பாயில் ஸந்தித்துப்பேசப்போவதாக நிச்சயப்பட்டிருக்கிறது. இந்த ஸம்பாஷணை விஷயமாக ஸ்ரீயுத காந்தி ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். ஜின்னாவும், தாமும் கலந்து பேசும் விஷயத்தைப்பற்றி அவர் அதில் பிரஸ்தாபித்து, வழக்கம் போல குழப்பமுண்டு பண்ணக்கூடிய நிலைமையில் பேசியிருக்கிறார். சிறிது காலமாகவே காங்கிரஸ் தலைவர்கள் இவ்விஷயமாகப்பெருமுயற்சி செய்து வருகிறார்களாயினும், ஹிந்து ஸமூகத்தினர் இதில் சம்சயமும் அச்சமும் கொண்டிருப்பது ஸ்பஷ்டமானது. வழக்கம் போல் ஹிந்து ஸமூக உரிமைகள் புறக்கணிக்கப்படுமென்ற அச்சம் தேசமுழுவதும் பரவிநிற்கிறது. ஹிந்து ஸமுதாயத்தலைவர்களான டாக்டர் மூஞ்சே, பாய் பரமானந்தர் முதலியவர் பொது ஜனங்களுக்கும், காங்கிரஸாருக்கும் போதிய அளவு எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். இந்த நிலைமையில் இந்தப் பெரிய விஷயத்தைப்பற்றி காந்திஜி ஹிந்து ஸமூகத்திற்கு பூர்ணமான உறுதி கூறவேண்டியது அவச்யமாயிருந்தும் இந்த அறிக்கையில் அவர் அவ்விதம் ஒன்றும் கூறாமல் பட்டும், படாததுமாயும் ஏதேதோ சொல்லியிருக்கிறார். இது ஹிந்து ஸமூஹத்திற்குச் சிறிதும் தைர்யமளிக்கக்கூடியதல்ல. காந்திஜி தாம் இவ்விஷயமாகக் கொண்டுள்ள நோக்கத்தைத்தெளிவாகச்சொல்லி ஹிந்து ஸமூகத்தின் அச்சத்தை நிவர்த்தி செய்யவேண்டியது அவச்யமாகிறது.

காங்கிரஸ்காரர், முஸ்லீம்களை நெருங்கி வலுவில்ராஜிக்கு அழைப்பதாலேயே முஸ்லீம்கள் அதிக பிகுவைக்காட்டி, தங்களுடைய 14 பிரேரணைகளை இப்போது 21 ஆகப் பெருக்கிக்கொண்டுவிட்டார்கள். இந்த 21 பிரேரணைகளையும் ஒப்பாவிடில் ராஜி கிடையாதென்று ஜனப் ஜின்னா கல்கத்தா லீக் கூட்டத்தில் தெளிவாக வற்புறுத்தியிருக்கிறார். ஹிந்து ஸமூஹத்தை அலக்ஷ்யமாயும், பயமுறுத்தியும் அவர் அங்கு பேசியிருப்பதுடன் வேறுபல முஸ்லீம்களும் ஹிந்து ஸமூஹத்திற்கு இணங்கி ஒன்றையும் விட்டுக்கொடுக்கப் போவதில்லையென்பதை வியக்தமாகச் சொல்லியிருக்கிறார்கள். இவ்வளவு பிகு உள்ளவர்களுடன் ராஜிபேசுவதால் நாம் விட்டுக்கொடுத்து அவர்கள் இஷ்டப்படி தலைவணங்கவே நேருமென்று பலர் பீதியுற்றிருக்கின்றனர். இதற்கெல்லாம் காந்திஜி அறிக்கை தைர்யம் கொடுப்பதாக இல்லை. ஆயினும் முஸ்லீம்களின் பிடிவாதத்திலிருந்து தாம் எவ்வித கார்யத்தையும் சாதித்துவிடமுடியாதென்பது காந்திஜிக்கு நன்கு தெரியுமாதலால் அவரும் நம்பிக்கையற்ற நிலைமையில் தெய்வத்தின்மீதே பளுவைத்தள்ளி வேதாந்த முறையில் பேசவேண்டியவராயிருக்கிறார். இந்த ஸம்பாஷணையில் ராஜ்ய அம்சத்தைவிட மத அம்சமே அதிகமுள்ளதென்று காந்திஜி கூறுவதால் ஹிந்துக்களின் கவலை அதிகரிக்க இடமேற்படுகிறது. இந்த ஸம்பாஷணையானது இரண்டு ராஜ்யவாதிகளிடையில் நடப்பதாகத் தாம் கருதவில்லையென்றும் ராஜ்யகாரணத்திற்காக இந்த ராஜிப்பேச்சு நடப்பதாயிருந்தால் தமக்கு அதில் வெற்றியுண்டாகுமென்ற நம்பிக்கையில்லையென்றும் காந்திஜி கூறுகிறார். ஆகையால் வகுப்புத் தீர்ப்புபோன்ற ராஜ்யவிஷயத்தில் ஸரியான வெற்றியேற்படுமென்ற நம்பிக்கை அவருக்கே இல்லையென்று தெரிகிறது.

மதஸம்பந்தப்பட்ட விஷயங்களில் ஜின்னாவுடன் ராஜிபேசத் தமக்கு பாத்யமுண்டென்று காந்திஜி வாதிக்கிறார். ஹிந்துமதம் விசாலமான நோக்கமுள்ளதென்றும், அதில் பல அரிய தத்வங்கள் அடங்கியிருப்பனவாகவும் காந்திஜி சொல்லிவிட்டு அந்த ஹிந்துமத ஸம்ரக்ஷணத்தில் தமக்கும் ஆசையுள்ளதென்பதைச் சொல்லிக்கொள்ளுகிறார். ஆயினும் ஹிந்துமத விஷயமாக எவ்வித ராஜிபேசுவதாயிருந்தாலும் ஹிந்து ஸமூஹத்தலைவர்கள் பலருடன் காந்திஜி பூர்வாலோசனை செய்திருக்கவேண்டியது நியாயமாகும். இத்தகைய ரஹஸ்ய ஸம்பாஷணைகளை ஹிந்துமஹாஸபையார் ஆக்ஷேபித்திருந்தும்கூட காந்திஜி அவர்களுடைய ஆலோசனையைக்கேட்டு அவர்களைத்திருப்தி செய்ய முயற்சிக்கவில்லை. தாம், ஒருவருடைய, அல்லது ஒரு ஸமூஹத்தினருடைய பிரதிநிதியாக இருந்து இந்தப் பேச்சை நடத்தவில்லையென்றும், வைதிக ஹிந்து ஸமூஹத்தார் தம்மை ஒருக்காலும் பிரதிநிதியாக ஏற்கமாட்டார்களென்பது தமக்குத் தெரியுமென்றும் அவர் கூறிக்கொள்ளுகிறார். ஆயினும், காந்திஜிக்கு தேசத்தில் இருந்துவரும் செல்வாக்கு, அந்தஸ்து இவைகளைக் கொண்டு பார்த்தால், இவரே ஹிந்துஸமூஹப் பிரதிநிதியென்று ஸுலபமாக யாவரும் நினைத்துவிடக்கூடியதே. ஆகவே இவர் தனிப்பட்ட ஹோதாவில் பேசினாலும், பிற்காலத்தில் இதன் முடிவு எல்லா ஹிந்துக்களையும், கட்டுப்படுத்தக்கூடியதாக ஆகிவிடும்.

இந்த பயத்தினாலேயே வங்காள ஹிந்துக்கள் இந்த ரஹஸ்ய ஸம்பாஷணையை ஆக்ஷேபிப்பதுடன், காங்கிரஸாரல்லாத ஹிந்துக்களின் அபிப்ராயத்தைக் கலக்காமல் காந்திஜி எவ்வித முடிவும் செய்துவிடக் கூடாதென்று காந்திஜிக்கு எச்சரித்திருக்கிறார்கள்.

ஹிந்து — முஸ்லீம் ஸமரஸம் போன்ற பெரிய ராஜ்ய ப்ரச்னையைத் தீர்த்து வைக்கும் ஆத்ம சக்தி காந்திஜிக்குப்பூர்ணமாக இருப்பதாக நினைக்கப்பட்டாலும், அவர் காங்கிரஸ் வாஸனையுடன் இந்த விஷயத்தை பரிசீலிக்காமல் ஹிந்து என்ற பொது நோக்கிலேயே நடந்து கொள்வது விரும்பத்தக்கதாம்.

அப்படியின்றி இவர் காங்கிரஸ்காரர் விருப்பப்படி ராஜ்ய நன்மையைக்கருதி ஹிந்து ஸமூஹ விரோதமான ராஜியைச் செய்தால் இந்தியாவில் ஒருநாளும் அமைதி நிலை பெறாது.

எப்படியும் நல்ல பக்வ காலம் வருவதற்கு முன்னாலேயே, முஸ்லீம்களின் பிகுவான மனோநிலைமையில் இந்த ராஜியப்பேச்சு ஆரம்பிக்கப்பட்டிருப்பதால் இது காங்கிரஸ்காரர் எதிர்பார்க்கும் பலனை அளிக்குமாவென்பது ஸந்தேஹமே.

## குறிப்புகள்

### வரதக்ஷிணை மசோதா.

பீஹார் சட்டஸபையில், வரதக்ஷிணைத் தடை மசோதாவொன்றை ஒரு மெம்பர் கொண்டுவந்திருப்பதாகத் தெரிகிறது. ஸமூஹச் சீர்திருத்த விஷயத்தில் விசேஷக் கவலை காட்டுவதாகப் பாசாங்குசெய்கிற சட்டஸபை மெம்பர்கள் இந்த மசோதாவை அங்கு நிறைவேற்றிவிடக்கூடும். மேலும் அங்கு காங்கிரஸ் ராஜ்யம் நடைபெறுகிறது. காங்கிரஸ் மந்திரிகள் செய்த நன்மைகளின் ஜாப்தாவில் இதையும் சேர்த்துப்பேசவேண்டுமல்லவா? பீஹாரில் மட்டும் இந்த மசோதா வந்திருப்பதாக நினைத்துவிடக் கூடாது. மற்ற மாகாணங்களிலும், முக்யமாக நமது மாகாணத்திலும் இது நீட்டக்கூடும். ஆகவே இத்தகைய மசோதா விஷயமாக நம்மவர்கள் கொள்ளவேண்டிய கொள்கை என்ன? வரதக்ஷிணைக் கொடுமைக்கு ஆளானவர்களும் ஆளாகவேண்டியிருப்பவர்களும் இந்த மசோதாவை வரவேற்று ஆதரிப்பது இயற்கையே. தென்னிந்தியாவில் வரதக்ஷிணைக்கொடுமை கோரமாகத் தாண்டவமாடுவது உண்மையே. இதைத் தடைசெய்யத் தக்கதான ஒரு பரிஹாரத்தைக் கண்டுபிடிக்க வேண்டியது அவச்யமென்பதும் பலர் ஒப்பிய விஷயம். ஆயினும் சட்டஸபைகளில் இம்மாதிரி விஷயங்களைப்பற்றிச் சட்டம் செய்துவிடுவது விரும்பத்தக்கதா? அது தகுந்த பலனளிக்குமா? இத்யாதி விஷயங்களை நாம் ஜாக்ரதையாக பரிசீலிக்கவேண்டும்.

வரதக்ஷிணை விஷயமானது சாஸ்திர ஸம்பந்தப்பட்ட மதவிஷயமல்லவாகையால் அதைப்பற்றிச் சட்டமியற்றுவதில் தவறு இல்லையென்று பலர் நினைக்கக்கூடும். ஆயினும் ஸமூஹத்திலுள்ள பழக்க வழக்கங்களைச் சட்டமூலம் தடைசெய்துவிடலாமென்பது அநுபவத்தில் பிரயோஜனப்படாது. அச்சட்டத்தினால் பலவிதத் துன்பங்களும் ஏற்படக்கூடும். வரதக்ஷிணைச் சட்டமியற்றிவிட்டால் பிள்ளைவீட்டுக்காரன் பணம் பறிப்பதைத் தடுத்துவிடமுடியுமா? வீட்டிற்குள் இருந்தபடியே ரஹஸ்யமாகப் பணம்பெற்றுக் கொண்டுவிடுவதை இந்தச் சட்டம் எப்படித் தடைசெய்யும்? ரஹஸ்யமுறையில் பணம் வாங்குவதையும், கொடுப்பதையும் நினைக்கும்போது இந்தச் சட்டமானது முற்றிலும் பிரயோஜனமற்றதாகிவிடும். வெறும் பெயரளவிலேயே இது இருக்கக்கூடும். இவ்வாறு சட்டம் நன்மை பயக்காததுடன், பலவிதத் தீங்குகளை உண்டாக்கக்கூடியதாயுமிருக்கும். வரதக்ஷிணை வாங்கியவன்மீது போலீஸாரோ, மூன்றாவது மனிதனோ கேஸ் கொடுத்தால், அவர்கள் உண்மையாகவே நடக்கிறார்களாவென்பதை எப்படிக் கண்டுபிடிப்பது? வரதக்ஷிணை பெற்றதை எவ்விதத்திலும் ருஜு செய்வதென்பது ஸாத்யப்படுமா? வேண்டாத நன்மையையும், துராசையையும், த்வேஷத்தையும் கொண்டு போலீஸ்காரனோ, மூன்றாவது மனிதனோ பல்விதப்பொய்க்கேஸ்களைக் கொடுக்கலாமல்லவா? இதனால் குடும்பங்களில் பெரிய கஷ்டங்கள் அதிகரிக்கும். வரதக்ஷிணைப் பேயுடன் லஞ்சப்பேயும் சேர்ந்துகொண்டு தாண்டவமாடக்கூடும்.

பீஹார் மசோதாவில் வரதக்ஷிணையோ அதையொட்டிய ஸாமான்களோ பெறுவதுகூடக் குற்றமாக்கப்பட்டிருக்கிறது. இதையும் சட்டமூலமாகவரையறுப்பது மிகவும்தீங்கானது. பெண்ணுக்கு அவச்யமான நகைகளும், திருமங்கல்யம், புடவைகள் முதலியவைகளையும் பெறுவதில் குற்றம் ஏற்படக்கூடும். இந்தமாதிரி பலவிதத்திலும் இந்த மசோதாவை விமர்சித்துப் பார்த்தால் இதனால் வரதக்ஷிணை முறை ஒழியாததுடன், வேறுபல புதியக் கஷ்டங்களுமே விளையக்கூடும்.

ஸமூஹத்திலுள்ள சில பழக்க வழக்கங்களைச் சட்டமூலமல்லாது ப்ரசாரமூலம் சீர்திருத்துவதே சிறந்த மார்க்கமாகும். ஜனங்களுடைய மனோநிலைமை உண்மையாக மாறுதவரையில் இத்தகைய சமூஹச் சட்டங்களால் சிறிதுகூடப் பிரயோஜனம் ஏற்படாதென்பது திண்ணம். மேலும் இத்தகைய விஷயங்களில் காவல் தண்டனையோ, அபராத தண்டனையோ விதிப்பது மிகுக்ரூரமானது. உண்மையில் நிரபராதிகளாயிருப்பவர்களும் தண்டனைப்பட நேரும்.

வரதக்ஷிணை பெறுவது ஆங்கிலப்படிப்புள்ளவர்களிடையிலேயே அதிகமிருப்பதால், அத்தகையவர்களிடையில் பலத்த பிரசாரம் நடத்தி இந்த வழக்கத்தை ஒழிப்பதே மேலானது.



231

### உண்மையான ஜனப்பிரதிநிதிகளா? முனிஸிபல் எலெக்ஷன் ஊழல்.

தற்போது தென்னிந்தியாவெங்கும் நடைபெற்றுவரும் முனிஸிபல் எலெக்ஷன் கூற்றிலிருந்து விநோதமான பல ஸம்பவங்கள் வெளியாகிவருகின்றன. ஜனநாயக முறை, எலெக்ஷன்முறை என்பவைகளிலுள்ள ஆபாஸங்களைப் பற்றி ஏற்கனவே பலரும் அறிந்ததாயினும், ஜனநாயகத்தை நடத்திவைக்க ஸக்யமாகவும், மனப்பூர்வமாகவும் பாடுபடுவதாக டம்பம் பேசித் திரிபவர்களின் உண்மை ஸ்வரூபம் வெளியாவதற்கு இது ஓர் தக்க ஸந்தர்ப்பமாயிருக்கிறது. ஜனப்பிரதிநிதியாக வருகிறவன் வோட்டர்களில் மெஜாரிடியாருடைய ஆதரவைப்பெற்றவனாக இருக்கவேண்டுமென்பது ஜனநாயகத்தின் அடிப்படையான கொள்கை. ஆயினும் இது உண்மையில் இப்போது அழிக்கப்பட்டு வருவதாகவே நினைக்கவேண்டியிருக்கிறது.

தென்னிந்திய முனிஸிபல் எலெக்ஷனில் வோட்டர்களுடைய அபிப்பிராயத்தைக் கேளாமலேயே ஒரு சிலர் சேர்ந்துகொண்டு அபேக்ஷகர்களை நிர்ணயிப்பது ஸாதாரண வழக்கமாகிவிட்டது. இது ஒருவகையில் வோட்டர்களையும், ஜனநாயக தத்வத்தையும் அவமதிப்பதாயிருக்கிறது. இது ஒருபுறமிருக்க அபேக்ஷகர்கள், தங்களுக்குள்ளேயே ஸௌகர்யமாகப் பேசி முடித்து ஸம்மானங்கள் பெற்றுக்கொண்டு ராஜிபேசி,கௌன்ஸிலர் ஸ்தானத்தைப் பெறுவது வெகுஸஹஜமாகி வருகிறது. இதிலும் வோட்டர்கள் அவமதிக்கப்படுகிறார்கள். அபேக்ஷகர்கள் செய்துகொள்ளும் ராஜியானது வோட்டர்களுக்குத் தெரிவிக்கப்படுவது கிடையாது. இது என்ன ஜனநாயக முறையென்று நமக்குத் தெரியவில்லை. ஜனங்களுக்குத் தெரியாமலே ஜனப்பிரதிநிதியை ஸிருஷ்டித்து விடுவது விசித்ரமான ஜனநாயகமல்லவா? இந்த ராஜி வேலையால் உண்மையானபிரதிநிதி ஒதுக்கப்படவும், போலிப்பிரதிநிதி ஏற்படவும் காரணமுண்டாகிறது.

ராஜிமூலம் வந்த பிரதிநிதியானவர் ஜனங்களுடைய ஆதரவைப் பெற்றவரென்று எப்படிச் சொல்லமுடியும்? எலெக்ஷன் நடந்தால் வோட்டர்கள் ஒருமுகமாக ஒருவரை ஆதரிக்க இஷ்டப்பட்டிருக்கலாம். ஆனால் ராஜி மூலம் பிரதிநிதி ஏற்படுகையில் அந்த அபேக்ஷகர் ஒதுக்கப்பட்டு, ஜன அபிப்பிராயம் பெறாதவர்கள் பிரதிநிதிகளாக வந்துவிடுகிறார்கள்.

தென்னிந்தியாவில் இப்போது பலவிடங்களில் இந்த ஊழல் நடப்பதாக தஞ்சையிலிருந்து வெளிவரும் "தக்ஷிணதீபம்" பத்திரிகை அறிவிக்கிறது. வோட்டர்களுடைய ஆதரவு தனக்குக் கிடைக்காதென்றும், எலெக்ஷன் நடந்தால் தனக்குத் தோல்வி ஏற்படுமென்றும் நிச்சயமாக அறிந்த அபேக்ஷகர்கள் **பலர் எதிர் அபேக்ஷகர்களுடன் ப்ரதிப்ரயோஜன மூலம் ராஜிபேசி** கௌன்ஸிலர் ஸ்தானத்தைப் பெறுவதாக அப்பத்திரிகையில் காணப்படுகிறது.

கும்பகோணம் முதலிய வேறு பலவிடங்களிலும் இந்த ஆபாஸ நிலைமை ஏற்பட்டிருப்பதாக நாம் அறிந்துள்ளோம். தனது வார்டில் ஒரு வோட்டுக்கூடத்தனக்குக்கிடைக்காதென்று தெரிந்தவுடன் ராஜி மூலம் ஸ்தானத்தைப்பிடித்துக் கொண்டு விட்டவர்கள் பலர் இருக்கிறார்கள். இம்மாதிரி வோட்டர்களுக்கு விருப்பமில்லாதவர்களே அவர்களுக்கு பிரதிநிதியாக வரும்படி செய்திருப்பது மிகவும் விகாரமானது. சட்டத்திலுள்ள இந்த ஊழலை நிவர்த்திக்க வேண்டியது அவச்யமானது. இல்லையேல் இந்த ஜன நாயகம் அர்த்தமற்றதாகும். அபேக்ஷகர்களுள் ராஜி நடந்தாலும், முடிவான அபேக்ஷகர்களுக்கு நான்கிலொரு வோட்டர்களுடைய ஆதரவாவது இருக்கிறதா வென்று எலக்ஷன் மூலம் அறிய வேண்டும். இல்லையேல் அந்த ராஜி அபேக்ஷகர்களை விலக்கிவிட வேணும். இந்தச்சீர்திருத்தம் செய்யாத வரை முனிஸிபாலிடிகள் உண்மைப் பிரதிநிதி ஸ்தாபனங்களாகா.

இப்போதைய எலெக்ஷனில் இந்தக்கீழ்த்தரமான ராஜி மூலம் பதவி பெற்றவர்கள் தங்களைப்பருமைபடுத்திக்கொள்ள இடமில்லை. அந்தக்கக்ஷியாரும் இதை ஆர்ப்பாட்டத்துடன் வெற்றியாகப்பேசுவது அர்த்தமற்றதாகும்.

ஒரு வோட்டர்.

### வைதிக ஸங்க குருகுலம்.

20 மாணவர் தேவை.

விரைவில் செங்கல்பட்டு ஜில்லா சாத்தஞ்சேரியில் ஓர் குருகுலமாரம்பிக்கப்படும். அதற்கு தற்சமயம் 20 மாணவர் சேர்க்கப்படுவர். கீழ்க்கண்ட விலாஸத்திற்கு வைகாசிமீ 30உக்குள் விண்ணப்பம் செய்து கொள்ளவேண்டும்.

நோக்கமும் விதியும்.

1. குறைந்தது ஓராண்டாவது, தர்ம சாஸ்திரம் ஸதாசாரம் அநுஷ்டான முறை பிரவசனம் முதலியவைகளைப்பற்றி பயிற்சி அளிக்கப்படும்.
2. ஸ்வாநுஷ்டானத்துடன் பயிற்சி பெற்றவர் சங்க சார்பாக தலைவர் குறிப்பிடுமிடங்களில் பிரசாரம் செய்யவேண்டும்.
3. ஆங்கிலத்தில் S. S. L. C. பாஸ்செய்து ஸம்ஸ்கிருதம் உபபாஷையாக படித்த பிரும்மசாரியாக இருக்கவேண்டும். இவ்வகையில் 10 பேர் பொறுக்கி எடுக்கப்படுவர்.
4. நன்கு வேதாத்யயநம் செய்து சிறிது காவ்யக்ஞாநமும் உள்ளவராக 10பேர் சேர்க்கப்படுவர்.
5. பயிற்சி காலத்தில் மாணவர் ஆகாரவஸதியுடன் மாதம் ரூ 10 ஒவ்வொருவருக்கும் உபகாரச் சம்பளமாக அளிக்கப்படும்.
6. பிரசார காலத்தில் யோக்யதைக்கேற்றபடி மாதச்சம்பளமுண்டு.
7. குணத்திற்கும் கல்விக்கும் பிரஸித்த பண்டிதர்களிடமிருந்து சிபார்சு கடிதமனுப்பவேண்டும்.
8. தலைவரானும் சங்க பண்டிதரானும் பொறுக்கி எடுக்கப்பட்டவருக்கே பிரவேசமுண்டு.

வைதிக சங்கம் தலைவர் 34, கச்சேரி ரோட், மைலாப்பூர், சென்னை.

## வாரக்குறிப்புகள்.

(ஸ்ரீவத்ஸ வெ. கோ. சர்மா.)

ஹிந்து ராஜ்யமாம்? சுவதந்த்ரமில்லாத கூடிய முஸ்லீம்லீக் தலைவர் ஸ்ரீமான் ஜின்னா ஹிந்து ராஜ்யம்! அதன்கீழ் தாங்கள் எப்படி இருப்பதென்கிறார்? முழு முஸ்லீம் ராஜ்யத்தில் இந்துக்களில்லையா? தேசிய ஸபையார் அவர்களுக்கு பயந்து இடங்கொடுத்துஇப்படிப் பேசும்படி செய்துவிட்டனர்! இனியும் செய்கின்றனர்! அதனால் வரும் கஷ்டத்தைப் பின்னரறிவர்!

சோத்து ஜாப்தாகோடு!! ஐக்யமாகாணத்தில் அரசாங்க உத்யோகம் விரும்பிநுழையும்போது அவர்களுக்கு என்னென்ன சொத்திருக்கிறதென்று ஜாப்தா கொடுக்கவேண்டும்! விவாஹாதிகளில் பரிசு வாங்கக்கூடாதென உத்தரவாம்! இதை ஏமாற்றி லஞ்சம் வாங்க வழிதேடவே முயலக்கூடும்! ஆதலின் இளமையிலேயே தர்ம உபதேசத்தின் மூலம் இதைத்தடுக்க முயலுவதே அறிவுடைமை!

டேண் கோடுமையால் மாண்டார்! சென்னையில் ஓர் போலீஸ் உத்யோகஸ்தரான வெள்ளையர் தன்னைத்தானே சுட்டிறந்தார்! காரணம் தன் மனைவியுடன் சண்டையாம்! கண்மூடித்தனமாய் தலைக்குமீறி அவர்களுக்கு இடமளித்த நாகரீகத்தின் பலன் இது? இந்த நாகரீகமே இக்கால இந்தியரால் விரும்பப்படுவது!

இதிலும் நல்வழியில் செல்லலாம்! மைலை கபாலீச்வரர் ஆலய விடாயாத்தி உத்ஸவத்திற்கு தற்கால காலக்ஷேபங்களும் கச்சேரிகளும் ஆலய செலவில் நடக்கிறது! இதிஹாஸ கதைகளைக் கொண்டு ஆலய அமைப்பின் சிறப்பு! உத்ஸவத்தின் உட்கருத்து! ஸேவாபக்தி! ஆத்ம ரஹஸ்யம்! முதலியவைகளை விளக்கி பக்திரஸத்துடன் சில மத உபன்யாஸங்களை நடத்தலாமன்றோ?

கிருஷிக்கும் ஆபத்தா? தற்கால யந்த்ர தந்திரங்களால் பலருக்குப் பிழைப்பு கெட்டது. கோய் வலுக்கிறதென கண்கூடாகக் காண்கிறோம்! மேடைமீது குடிசைத்தொழில்! கைக்குத்தரிசி! பேசப்படுகிறது. இச்சமயம் மின்சாரத்தால் பயிரிட்டால் நல்ல லாபமென சிலர் பிரசாரம் செய்வது விந்தையாயிருக்கிறது!

ஒன்றுசேருதல் வேண்டும்! நமது தலைவர் சுற்றுப் பிரயாணம் தார்மிகர்மனதை சிறிது ஸந்தோஷப்படுத்தும். வங்கத்தில் ஓர் ஸம்ஸ்கிருத கலாசாலை தலைவரான ஸ்ரீமான் ஸ்ரீஜீவ நியாயதீர்த்தர் தர்மப்ரசாரம் செய்ய தென்னாடு வருகிறார்! இவ்விருவரும், இதர ப்ரபல தார்மிக ஸ்ரீமான் T. L. சுப்பய்யர், S. மஹாலிங்கய்யர், அக்நிஹோத்ரம் ஸ்வாமிகள் போன்றவர்களும் சேர்ந்தால் மிக்க பயனை அளிக்கும்!

மதுரை வ. ஸ். சபை!! மேமீ 12, 13உ கூடுவதை நடப்பதாகத் தெரிகிறது! அவஸரமும் அவச்யமும் ஏற்பட்டிருப்பதால் அது மாகாணஸபையாகி தக்க முயற்சியுடன் தர்மகைங்கரியம் செய்ய முன்வரும்படி வேண்டுகிறோம்!!

ஓர் திருத்தம்! வைசாக மாஹாத்மியம் 4 அணா என்று பிசகாக வெளியாகியது. 1 அணாதான் அதன்விலை. 1¼ அணா ஸ்டாம்பனுப்பி வெளியூரார் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.
நர்ஸப்பூர்.
West Godavari.

# வரதக்ஷிணை வழக்கம்.

(வித்யானந்தம்.)

நமது உத்தமபத்திரிகையான 'ஆர்யதர்ம'த்தில் ஆசிரியர் அவர்கள் மேற்கூறிய விஷயத்தைப் பற்றி ஒரு தலையங்கம் எழுதியிருப்பது மிகவும் சிலாகிக்கத்தக்கதே. இந்த வழக்கமானது ஏற்படுத்தியதானாலும் அந்த வழக்கம் உண்டானதானாலும், மிகவும் வெறுக்கத்தக்கதே. அந்த வியாஸத்தில் கூறியிருக்கிறபடி இதெல்லாம் மேல்நாட்டு நாகரிகத்திலேயே உண்டாயிற்றென்பதில் கொஞ்சமும் ஸந்தேஹமேயில்லை. ஏனெனில் மேல்நாடுகளில் பொருளையே தேடவேண்டும். பொருளில்லாவிடில் ஒரு காரியமும் ஆகாது. அப்படி பொருளில்லாமையினாலேயே வெகு குடும்பங்களில் பெண்கள் கல்யாணம் ஆகாமல் Missகளாய் நின்றுவிட்டார்கள். அவர்களுக்கு ஸ்வாதந்திரியம் வேறே கொடுத்ததினால் அவர்களில் சிலர் ஒருவனுக்கு அடங்கியிருக்க இஷ்டப்படாமலும் இவ்வாறு கல்யாணம் ஆகாதவர்களாய் நின்றுவிட்டார்கள். இன்னும் விதவாவிவாஹம் ஏற்பட்டு அந்த யோஹத்தால் வெகு விதவைகளுக்குக் கல்யாணமாகக் கன்னிகைகளுக்கு விவாஹம் ஆவது அரிதாகிவிட்டது. இது முதலிய காரணங்களாலேயே சீமைகளில் வெகு ஸ்திரீகள் கல்யாணம் ஆகாமல் ஆயுள்வரை நின்றுவிட்டனர். இந்த ஆசாரம் நமது புண்ணிய பூமியிலும் இறக்குமதியாகி வெகுவாய்ப் பரவிவிட்டது. ஆதலால் நவநாகரிகமே இதற்குக் காரணம் என்று கூறுவது மிகையாகாது. ஆதியில் நம்மவர்களுக்குள் சில வகுப்புகளில் பெண்கள் குறைவாயிருக்க அப்போது ஸ்திரீதனம் என்று பெண்ணின் மஞ்சள் குங்குமத்திற்காக ஏதோ வெகு கொஞ்சம் கொடுப்பது வழக்கமாயிருந்தது. மற்றவர்களில் கிடையவே கிடையாது. அவரவர்கள் வெகு ஸந்தோஷத்தோடு பரஸ்பரம் ஸம்பந்தம் செய்துவந்தனர். இவ்வழக்கம் இப்படியே கொஞ்சம் கொஞ்சமாய்ப் பரவி மற்ற சமூகங்களிலும் வியாபிக்க ஆரம்பித்தது

அப்போது கன்யாசுல்கமே வலுத்து நின்றது. ஆனால் அதையும் பலர் வெறுத்தனர். இருதிறத்தாரும் பரஸ்பரம் ஒன்றும் பணம் வாங்காமல் மிகுந்த ஸந்தோஷத்துடன் செய்து வைக்கும் விவாஹமே சிரேஷ்டமானது. அது போக இப்போதிருக்கும் நிலைமை சீமையை விட வெகு கேவலமாயிருக்கிறது. பிள்ளைகளுக்கு நாம் கொடுக்கும் வரதக்ஷிணை என்பது வரம்பு கடந்து இருக்கின்றது. பிள்ளையைப் பெற்றவர்கள் கண் தெரியாமல் கேட்பதை நினைத்தால் நமது மனம் நடுங்கா நடுக்கமுறுகின்றது. ஆனால் பிள்ளைகளோ இக்காலத்தில் விவாகம் செய்துகொள்ள அடியோடு பயப்படுகின்றனர். அவர்கள் பி. ஏ. எம். ஏ. பாஸ் பண்ணியிருந்தாலும் இப்போதிருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தினால்தானே சாப்பாட்டிற்கு மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் போது ஒரு பெண்ணையும் ரக்ஷிப்பதென்பது தான் அவர்களுக்கு பெரிய கவலை. அதனாலேயே அவர்கள் விவாஹங்களை வெறுக்கின்றனர். ஆனால் இவர்களுக்கு உத்தியோகம் கிடைப்பது எப்படி. அதுவும் கஷ்டமாகிவிட்டதே. அதற்கும் நம்மவர்களே காரணம் என்கிறார்கள். எப்படியோ வரதக்ஷிணை கொடுத்தாலும் பிள்ளை வீட்டுக்காரர்களுக்குச் சில நாள் சாப்பாட்டிற்கு அநுகூலமாயிருக்குமென்றும் அதற்குப்பிறகும் நாம் தான் அவர்களுக்குச்சாப்பாடு போட வேண்டுமென்றும் பெண் வீட்டார் கருதுகின்றனர். எப்படியோ வரதக்ஷிணை கொடுத்து விவாகம் செய்துவிட்டால் அத்தோடு பெண் வீட்டுக்காரர் 'திவால்' ஆகிவிடுகின்றனர். இக்கஷ்டத்தை உணர்ந்தே அநேகம் பெண்களும் தங்களை தீயிட்டுக்கொள்ளுவது முதலிய பல கஷ்டங்களுக்கு உள்ளாயினர். வடதேசத்தில் ஸ்நேஹலதா' என்னும் ஒருபெண் தனது தாய் தந்தையர் கஷ்டப்பட்டதைக்கண்டு இவ்விதம் செய்து கொண்டாள் என்பதை சரித்திர மூலம் அறிகிறோமல்லவா? இருந்தாலும் நாம் அவச்யம் விவாகம் செய்தே தீரவேண்டுமென்ற நிர்ப்பந்தத்திற்குட்பட்டிருப்பதால் பிள்ளை வீட்டுக்காரர் நம்மை இவ்விதம் துன்புறுத்துகின்றனர். இந்த துராசாரத்தை ஒழிக்கவும் பலத்த கண்டனம் முதலியவைசெய்ய வேண்டியதோடு நமது ஸநாதனநண்பர்களும் ஆர்ய ஸபையாரும் இவ்விஷயத்தில் அவசியம் கங்கணம் கட்டிக் கொள்ள வேண்டும். கான்பரன்ஸ் காலங்களில் இதைப்பற்றி வெகுவாய் உபந்யஸிக்க வேண்டும். ஜனங்களுக்குப் போதிக்க வேண்டும். பணம் வருகிறதென்றால் யாருக்குத்தான் ஆசையிருக்காது ஆனால் தர்ம மார்க்கத்தில் வருகிறதாவென்று பார்க்க வேண்டும். இந்த வரதக்ஷிணைக்கு தர்ம மார்க்கம் என்பதுஎள்ளளவும் கிடையாது. பார்க்கப்போனால் பணக்காரர்கள் தவிர சாமான்யரெல்லாம் வயிறு எரிந்து கொண்டே தான் வரதக்ஷிணை கொடுக்கின்றனர். அவர்கள் சாப்பாட்டிற்கே தாளாறு ஏற்பட்டிருக்கும் போது இந்த தொல்லையும் ஏற்பட்டால் எப்படி ஸமாளிப்பது?

இது இல்லாமல் அவரவர் சக்திக்குத் தகுந்தபடி ஏதோ கல்யாணம் செய்து நடத்தினால் போதும் என்றிருந்தால் அது எவ்வளவு திருப்தியாயிருக்கும். எவ்வளவு ச்ரேயஸிற்கு இடமுள்ளதாயிருக்கும். அதில்லாமல் பெண் பெற்றவர்களை இவ்வாறு ஆயிரக்கணக்கான ரூபாய்களை வரதக்ஷிணையாகக் கேட்டு அதன்மூலம் அவர்களைத் தலை தூக்கவிடாது நசுக்குவது தர்மபூமியாகிய நமது பாரதநாட்டில் தர்மமல்ல. ஆதலால் தர்மசிந்தையுள்ள நமது நண்பர்கள் அனைவரும் இக்கொடிய வழக்கத்திற்கு உட்படாமல் இருப்பதோடு மற்றவர்களையும் இக்கொடிய வழக்கத்திலிருந்து திருப்பி உதவிசெய்வதோடு ஆங்காங்கு சபைகளிலும் இக்கொடிய வழக்கத்தையகற்றத்தகுந்த முயற்சிகள் செய்தாலன்றி நமது தேசத்திலும் ஏழைக் குடும்பங்களில் பணமில்லாததால் வெகு பெண்கள் கல்யாணமாகாமலே நின்று விடுவார்கள். அப்போது சீமைமாதிரி நமது கன்யாமடங்களும் அதனால் அநாதைக் குழந்தைகளின் வாஸஸ்தானங்களும் அதிகரிக்கும். நமது தேசத்திற்கும் தர்மத்திற்கும் இது உசிதமானதல்ல. நமது பூமியில் எல்லாம் தர்மமயமாகவேயிருக்கவேண்டும். இகபர ஸாதகமான இம்மாதிரி விஷயங்களில் வியாபாரம் என்பதும் சிறிதும் கூடாது. இந்த தத்வங்களை நன்குணர்ந்த நம்மவர்கள் எவ்வித உபாயத்தாலும் இந்த வரதக்ஷிணை என்னும் பேயை நமது தேசத்தைவிட்டு மறுபடி அது எவ்விதத்திலும் இங்குவந்து புகாவண்ணம் வேண்டிய ஸத்ப்ரயத்னங்கள் செய்து நமது ஆர்யதேசத்தையும் ஏழை நண்பர்களையும் காக்க நன் முயற்சியோடு முன் வருவார்களாக. 'ஆர்யதர்மம்' முதலிய ஸநாதனப் பத்திரிகைகளும் இவ்விஷயத்தில் பரிபூர்ண ஆதரவுகாட்டி பலத்த முயற்சியெடுத்துக் கொள்ளுமாக. ஸ்ரீமத் ஸர்வேச்வரரும் அருள்புரிவாராக.

# மதிப்புரை.

மூன்று வேதிகளின் ஸந்த்யாவந்தனம்
மூன்றாவது பதிப்பு.

தேவநாகரம், தமிழ், இவற்றில்மூலமும், தமிழில் பதவுரை, கருத்துரை விசேஷ உரை இவையுமுள்ளது. கிளேஸ் காபி ரூ. 1-8-0 ரப்பு காபி ரூ 1-4-0. புஸ்தகம் கிடைக்குமிடம்:— கடலங்குடி, நடேசசாஸ்திரிகள், 72. பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

ப்ரம்ஹஸ்ரீ கடலங்குடி நடேசசாஸ்திரிகள் அவர்களால் தமிழில் உரை எழுதி வெளியிடப்பட்ட மூன்றாவது பதிப்பு ஸந்தியாவந்தன புஸ்தகமொன்று வரப்பெற்றோம்' எல்லா வைதிக கர்மங்களிலும் ஸந்தியாவந்தனமே சிறந்ததென்றும், அதை அனுஷ்டிப்பதாலேயே ப்ராம்ஹண்யம் நிலைக்கின்றதென்றும் அதனாலேயே எல்லாவிதமான புருஷார்த்தங்களையுமடையலாமென்றும் ஆரிய, சாஸ்திரங்கள் ஒருங்கே கூறுகின்றன. அச்சிறந்த கர்மத்தை அதில் உபயோகிக்கப்படும் மந்திரங்களின் கருத்தறிந்து அனுஷ்டிப்பதே சிறந்ததாகும். ஸம்ஸ்கிருத பாஷையில் அதிகப்பரிச்சயமற்றவர்களும் அவற்றின் கருத்தைச் சுலபமாயுணருமாறு இப்புஸ்தகத்தில் எளிய நடையில் தமிழில் உரை எழுதப்பட்டிருப்பது போற்றத்தக்கதேயாகும்.

இப்புஸ்தகத்தில் ஒவ்வொரு விஷயமும் ஆக்ஷேப சமாதானத்தை முன்னிட்டே விளக்கப்பட்டிருப்பது படிப்பவர்க்கு மிக்க பயனளிக்கக்கூடியதாயிருக்கின்றது. தேவநாகர எழுத்துத்தெரியாதவர்களுக்கும் உபயோகப்படுவதற்காக மந்திரங்கள் தமிழ் எழுத்திலும் அச்சிடப்பட்டிருக்கின்றன' ருக்வேதிகள், யஜுர்வேதிகள், ஸாமவேதிகள் ஆகிய மூவருக்குமுபயோகப்படுகின்ற பொதுவாக பல விஷயங்களும், அந்தந்த வேதக்காரர்களுக்கு மாத்திரமுபயோகப்படுகின்ற விஷயங்களும் தெளிவாய் எழுதப்பட்டிருக்கின்றன.

ப்ரம்ஹஸ்ரீ சாஸ்திரிகள் அவர்களால் வெளியிடப்பட்ட முதலாவது, இரண்டாவது பதிப்புகள் செலவாகி மூன்றாவது பதிப்பு வெளிவந்ததிலிருந்தே ஆஸ்திகர்இப்புஸ்தகத்தைஎவ்வளவுநன்குபோற்றிஆதரிக்கின்றனர் என்பது நன்கு புலனாகும். ஆகவே இம்மூன்றாம் பதிப்பையும் ஆஸ்திகர் போற்றி ஆதரிப்பரென்பதில் தடையில்லை. இப்பதிப்பில் புஸ்தகத்தின் விலை குறைக்கப்பட்டிருப்பதை நாம் போற்றுகிறோம்.

# விளம்பரம்.

சென்னை மாகாணத்தில் ஸநாதந தர்ம பிரசாரம் செய்ய சிறந்த வாக்குள்ளவர்களாயும் அனுஷ்டாதாக்களாயும் ஊக்கமுள்ளவர்களாயுமிருக்கிற பண்டிதர்கள் தேவை. யோக்யதானுசாரமாய் ஸம்பாவனை செய்யப்படும். அடியில்கண்ட விலாசத்துக்கு எழுதிக்கொள்ளவும்.

என். நடேசய்யர்
அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க கார்ய அத்யக்ஷர்.
55 தமிழ் சங்கம் ரோட். மதுரை.



# WERE I A CONGRESS MINISTER.

## Chapter II.

(*Rao Sahib N. Natesa Aiyer.*)

The office of congress minister sits jauntily over my head. I carry with me an air of hate without looking positively haughty. My colleagues rise and receive me with open arms and with the abandon born of mutual love perfected by mutual trust. We bare our bosoms to one another without the least reserve or restraint or embarassment. The last recorded confessions of Professor Huxley to his priest could not have been more sincere or more full. Not all the 51 bulls which dragged the chariot of our President Bose can draw out of me what all was then revealed to me regarding our policy towards Sanatanists and Panchamas towards Moslims, Christians I.C.S., P.C.S., and the Police. It will ever remain buried in my heart till fire burns it into ashes. Not so the disclosure of what follows.

2. We plunged ourselves into the problem of early marriage. It was felt by us to be the most burning question of the hour. I pointed to my colleagues that no modern Indian Legislation has created in the country a greater alarm, perturbation, discontent and consternation than the Sarada Act, the Navalrai Act and Das Act. I took to their notice the fact of the numerous resólutions and representations which were passed by the people and public bodies not one hundredth of which has found mention in the papers or found their way to the Legislative Chamber. I showed them that the implicit faith which the believing Hindus had placed in the policy of the British Rule is being rudely shaken and replaced by a feeling of distrust and aversion bordering upon disaffection. Above all, they were made aware of the marriages of several thousands of girls below 10 years just before Sarada Act became law in 1930 and Navalrai's Act became law now and the marriages that are still going on in spite of them. Will it be right to suppress or repress this overwhelming popular feeling merely for the purpose of placating a few misguided people in the Atlantic and elsewhere. After all it is only the Brahmanas who are primarily affected by them and they constitute but a bare 3 p.c. of the population. Does it not smack of a secret grudge against them—a section which will fly into the innermost recesses of their homes at the sound of a mere pop-gun? Shall I tell you what I observed at this time. The ringing and sublimating sincerity which every utterance of my colleagues breathed, was matched only by the colossal and confounding ignorance betrayed by almost every one of them regarding the principles and practice of early marriage. I reserve them for succeeding chapters. I can scarcely believe what I saw and heard. What amazed me most was "*How can so much ignorance exist side by side with so much common sense*". But the very next moment I found myself bombarded by perhaps a more embarassing question "Who is responsible for keeping them and the rest of our party in this ignoble ignorance and for perpetuating it. The maddening answer writ large in crimson and red is—the cruel and culpable negligence of the Sanatani Brahmana and his doubly inexcusable failure to preach and practise even the elementary principles on which the ancient institution of early marriage stands. I had to hang my head in shame. I wept bitterly. But it was all too late: Tears Gangesful cannot wash away the huge mountains of misconception and non-conception which had gathered meanwhile. Had there been but one little hero of Harlarn at the dykes, the flood gates of irreligion would not have so readily opened. By the side of this spectacle the opening of the Austrian door to Germany looks a mere child's play. The galaxy of statesmen, politicians and legislators now holding the reins of Government no less than their immediate prodecessors would not have been what they are. The map of India would have been totally different. The only punishment that can be thought of for this crime of the Sanatanis is perhaps their total annihilation and it is calmly awaiting them in the ante chamber. The wages of Sin is death.

At the outset I carefully refrain, from inflicting upon my colleagues quotations from our Sruthis and Smritis. It would have been a false move and a fatal move. I begin by making a fervent appeal to their stout common sense which I found to be not of the pumpkin type and to the logic of hard and observed facts. I start in this way.

Here is a religious system (you may call it a social system if you like, it does not affect my reasoning) which is part of a civilization that has admittedly endured at the lowest estimate for full four or five thousand years and which even to-day accounts 300 million members amongst them. Has it produced any evil effects in the past? Was it ever attacked as a source of evil before now. Was there ever an attempt to pull it down? Assuming that it had evil effects in the past and was in consequence attacked, how comes it that it has survived them all. Must there not be present in it some element of greatness and goodness and fitness which has given it an abiding vitality strong and powerful enough to repel all of them these thousands of years. Otherwise would it not have shared the fate of the ancient Assynian, Babylonian, Egyptian, Grecian and Roman civilizations and tumbled down long ago like a house of cards. On the other hand has it not routed and absorbed the other opposing systems. What is this element? Is it alive still or dead? Is it not worth preservation? Do we carry our nationalism in such a fragile boat that we must also join in the modern understandable attempts to kill it instead of protecting it and revitalizing it. Now that we are at the helm, how far shall we be true to ourselves and to the great nation to which we belong if we fail to consider and answer these questions before straightaway taking part in what fair future historians will not fail to describe as murder of an institution by the very descendants of the illustrious people who brought it into being. Has any thought been bestowed by us upon this aspect for at least a tiny small hour. If not, will it be even now too late to cry halt and suspend further action.

I tell them over and over again that I do not belong to that school of thought which blindly claims infallibility for every ancient institution. The great Indian poet has himself admitted its unsoundness and declared

पुराणमित्येव न साधुसर्वम्

To argue that whatever is ancient is necessarily sound is certainly fallacious. But to argue at the same breath as is uniformly attempted now, "ergo, whatever is ancient is necessarily unsound" is more fallacious and mischievous. I enter an emphatic protest against it with all the vigour which my frail pen can command. My colleagues agree thus far. I ask them "beyond its age is there any other ground for condemning the early marriage institution." With one voice they say 'Yes'. Not one ground but a hundred grounds exist and they give me a long catalogue. I find in it a mere repetition of the old stories of increasing maternal mortality, infantile mortality, tuberculosis, consumption and weak and puny offspring and early widowhood matters which have been discussed thread bare these 9 years and more and found to be baseless either on facts or in theory. I undertake to satisfy them later on if necessary. I approach them now with what must necessarily appeal to them more effectively. I however do so only after silencing them for the moment by pointing to them that in spite of the heavy maternal and infantile mortality and the other alleged devastating effects of early marriage, instead of our numerical strength going down to zero point as it must have been if the position adumbrated were correct, we have been and are multiplying alarmingly and that our forbears the victims of this cruel institution have been unlike the modern generation, giants intellectually, physically and morally.

I proceed to lay before them copious extracts from the writing and speeches of western savarts and scientists in support of early maniage knowing full well that they will find a readier acceptance. So low have we fallen that no principle of ours can pass as good unless it stands the western crucible and test tube. Whatever does not possess the hall mark of the west imprinted in it is taboo and cannot secure a pass-port.

(1) The age of 11 is most dangerous rock that founders the ship of chastity in the ocean of life. 90 p.c. of the girl perverts begin their career of hell at 11. 84 p.c. of the girls mature at 11 and 12 and at least 50 p.c. of them cease to be virgins and indulge in prostitution." *Justice Ben Lyndsay.*

(2) "It is recognized that a girl becomes sexually a woman at puberty; at that epoch she receves her initiation into adult life and becomes a wife and a mother. To declare that the act of intercourse with a woman who by the natural instincts of man is regarded as old enough for all the duties of womanhood is a criminal act of rape......can only be considered as an abuse of language." *Havelock Ellis,*

(3) "Virginity no longer exists in Britain." *Portington. F.R.S., F.I.C.*

(4) "At this age (puberty), youths and maidens are ripe for mating—the boy or girl is an adult and mating should occur without delay." *Norman Harch.*

(5) "Only 4 out of 133 men and 5 out of 120 women denied having had premarital sexual experience; in 20 p. c. of the cases conception had taken place while 25 of the women confessed to having given birth to children; we must do something to bring the time of legal marriage close to that of the first sexual experience."

*Dr. Walter Gremlin of Germany.*

(6) "A very large per centage of school going boys and girls knows carnally not less than 6 girls and 5 boys before settling into married life. All girls pet more or less in addition to indulging in the comparatively innocent pastime of hugging and necking.

(N.B:—Petting means anything short of "going the limit.")

"...In co-educational schools there is a deal of romantic pairing off with progressive intimate petting.'

N.B:—These figures err more on the downward side if we remember that boys and girls get very often afflicted with bad memory in matters of this kind.

(7) "Biologically every girl becomes *sexually mature* at the time of her first period. Every succeeding period causes more or less emotional disturbances which is shown by the depression which usually accompanies it. More and more the girl becomes sex conscious, more and more she wants to know. There is many a girl who would admit, were she to speak the truth, that

(continued on page 8.)

she has been tempted to allow some man to be intimate with her, not so much from wickedness of heart, but just to satisfy an almost overpowering curiosity."

*Mr. Palington F. R. S., F. I. C.*

(8) Early marriage is by far the best, unless it be that unmarried motherhood is infinitely better than married motherhood, that chastity is a crime and unchastity is the goal of legislation and that the keenness of the girls in playing the game of unmarried motherhood must be encouraged. *Substance of the Report of British Medical Science.*

(9) No English girl generally goes to her husband's bed chamber now with that innocence and purity which used to characterize her mother and grand mother of the ancient days. *Bankruptcy of marriage.*

I read many more extracts. For want of space and time I desist from quoting them. What has been stated above about the mental and physical outfit of girls even in a cold climate clearly establishes the perfect wisdom in our country of early marriage which is the bedrock of morality. From Dr. Ballard in France to General Metaxus in Greece, the cry all over Europe is for early marriage as the sole means of saving Europe from the prevailing immorality and sin. Given similar opportunities and similar conditions, a Hindu girl must be more than human to be able to resist what may be called abiological marriage. "A touch of nature makes the whole world kin". These citations have no subconscious bias behind them and are bound to convince all who have not sealed up their minds. If however as stated by the novelist Sarat Chandra Bose in his "Sesha Prasna,,

"Chastity as an ideal is unhealthy, inglorious and futile-a hopeless failure," these citations may have to be rejected as worthy of the scrap heap only and not for human eyes or ears. Surely chastity must be chased away from every Hindu home so that its mothers, sisters and daughters may roam about free as air and flit from carcass to carcass. Only the other day I read in a responsibl paper that the wife of a mayor of an American city was a grandmother at 28, herself and her daughter having been married at 13. She wants to be a great grand mother before 40. There is many a woman in Southern India whose grand daughter is herself a grand mother. Will not Mr. Navalrai, Mr. Das and their tribe throw away these back washes of Europe and America and follow the mayoress in the swing back of the Pendulum.

*(To be continued)*


மூகபஞ்சசதியின் இரண்டாம் பாகம்.
"கடாக்ஷ சதகம்"

Mr. G. V. கணேசய்யர், B.A., B.L., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷக் குறிப்புகளுடன் கூடியது.

தபால்செலவு வேறு] [விலை அணா 0—8—0

மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—

ஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட்,
டவுன்ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.


# ஆலயப்பிரவேச மசோதா கண்டனம். பலவிடங்களில்.

## திருவிடமருதூர்.

சென்ற 13-4-38ல் சைத்ரவிஷு புண்ய காலத்தன்று இவ்வூரில் மகாதானத்தெரு ஸ்ரீ ராம பஜனை மடத்தில் சென்னை சட்டஸபையில் ராவ்பகதூர் எம். ஸி. ராஜாவால் கொண்டு வரப்பட்டிருக்கும் Civic Disabilities Removal Bill. Temple Entry Bill. இவ்விரண்டையும் கண்டனம் செய்வதற்காக ஒரு பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. அப்பொழுது வலங்கிமான் பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள் தலைமை வகித்தார். ஷெடியார் மேலே கூறிய பில்கள் சாஸ்திரவிருத்தமானவைகள்; நம் பூர்வீககுல தர்ம ஆசாரங்களுக்கு விருத்தமானவை என்றும் அவைகளைச் சட்டமாகாமல் தடுக்கவேண்டியது நமது கடமை என்றும் கூறினார்கள். பின்பு மகா-ள-ள-ஸ்ரீ எ. குப்புசாமி அய்யரின் ப்ரேரணையின் பேரில் ஷெடி பில்களை இவ்வூர் வாசிகள் பலமாக எதிர்ப்பதாகவும் பில்களைச் சட்டமாக்கக்கூடாதென்று கனம் சென்னை பிரதம மந்திரியைகேட்டுக்கொள்வதாகவும் ஒரு தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது. கூட்டத்தின் மனப்பான்மையைக்கனம் பிரதம மந்திரி அவர்களுக்கு அன்று தினமே தந்தி மூலம் அறிவிக்கப்பட்டது. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்களின் ஆக்ஞையா பிரகாரம் இவ்வூரில் கனம் பிரதமமந்திரி அவர்களுக்கும் இன்னும் நிர்வாக சம்பந்தமான பல அதிகாரிகளுக்கும் இவ்வூர் வாஸிகள் ஓர் பெரிய மஹஜர் தயார் செய்து அனுப்புவதாகத்தெரிகிறது. (ந. நி.)

## ஜம்புகேஸ்வரம்.

இவ்வூர் ஆஸ்திக மகா ஜனங்கள் சென்னை சட்ட ஸபையில் கொண்டு வரப்பட்டிருக்கும் Civic Disabilities Removal Bill, Temple Entry Bill. அகில இந்தியா சட்ட ஸபையில் சமீப காலத்தில் நிறைவேறிய B. Das Amending Bill to the Child Marrige Restraint Act முதலிய சீர்திருத்த மசோதாக்களை பலமாகக் கண்டித்தும் கவர்மெண்டார் மத ஸம்பந்தமான கார்யங்களில் பிரவேசிக்கக் கூடாதென்றும் சென்னை சட்ட ஸபையில் ஆலோசனைக்கு வந்திருக்கப்பட்ட எம். ஸி. ராஜாவின் மசோதாக்கள் சட்ட மாகாமலிருக்க வேண்டியஏற்பாடுகள் செய்யும் படிக்கும் கனம் சென்னை கவர்மெண்ட் பிரதம மந்திரி அவர்களைக்கோரியும் ஓர் பெரிய மஹஜர் செய்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது. ந. நி.

## தியாகராஜபுரம்.

தஞ்சை ஜில்லா நாரசிங்கன்பேட்டைக்கு அருகிலுள்ள தியாகராஜபுரம் மஹா ஜனங்கள், சென்னை பிரதம மந்திரி அவர்களுக்கும் கனம் ராஜன் அவர்களுக்கும் இத்தொகுதியின் சட்டஸபைபிரதிநிதியான மகா-ள-ள-ஸ்ரீ அம்மாபேட்டை வெங்கட்டராமய்யர் அவர்களுக்கும் இச் ஜில்லாவின் சென்னை Legislative Council ல் உள்ள பிரதிநிதிகளுக்கும் சென்னையிலுள்ள இரு சட்ட ஸபைகளின் அக்ராஸனாதிபதிகளுக்கும் மேன்மை தங்கிய கவர்னர் அவர்களுக்கும் மேன்மை தங்கிய வைஸ்ராய் அவர்களுக்கும் மத்திய ஸர்க்காரிலுள்ள ராஜாங்கஸபை அக்ராஸனாதிபதிக்கும் சட்ட ஸபை அக்ராஸனாதிபதிக்கும், இச் ஜில்லாவின் மத்திய சட்ட ஸபைப்ரதிநிதியான ஸ்ரீமான் கே. சந்தானம் அவர்களுக்கும் இன்னும் அகில இந்தியா காங்கிரஸ் ஸபை பிரசிடெண்ட் ஸ்ரீஜத் ஸுபாஷ்சந்திரபோஸுக்கும். மத்திய சட்ட ஸபையில் நிறைவேறிய B. Das. திருத்த மசோதாவையும் சென்னை சட்ட ஸபையில் எம். ஸி. ராஜாவால் ப்ரேரேபிக்கப்பட்டிருக்கிற Civic Disabilities Removal Bill முதலியவைகள் குலாசாரத்திற்கு விருத்தமானவைகளென்றும் ஹிந்துமதாபிமானிகளின் உணர்ச்சிகளைப் புண்படுத்துவைகளாகயிருப்பதாகவும் ஷெடி மசோதாக்கள் சட்டமாவது தங்களுக்குக்கெடுதலை ஏற்படுத்துவதாகவும் மஹஜர் செய்து கொண்டிருக்கிறார்கள். ந. நி.

## கிருஷ்ணராஜபுரம்.

திருச்சி ஜில்லாவைச்சேர்ந்த சித்தலாவாய் ரயில்வே ஸ்டேஷனுக்கருகிலுள்ள கிருஷ்ணராஜபுரம் கிரும வாசிகள் சென்னை கனம் பிரதம மந்திரி முதலான பல அதிகாரிகளுக்கும் ராஷ்ட்ரபதி ஸ்ரீஜத் சுபாஷ் சந்திரபோஸ் அவர்களுக்கும் இச் ஜில்லா சட்ட சபை பிரதிநிதிகளுக்கும் சென்னை சட்டஸபையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் எம். ஸி. ராஜாவின் இருமசோதாக்கள் நிறைவேறாமல் தடுக்கும் படிக்கேட்டுக்கொண்டு மனு செய்து கொண்டிருப்பதாகத்தெரிகிறது. ந. நி.

## பேல்மங்கலம்.

### ஆஸ்திக மஹாஜனசபை.

19—4—38 மாலை 4-மணிக்கு அக்கிராசனர் பிரம்மஸ்ரீ பிளாஞ்சேரி சுப்பிரமணிய அய்யரின் கீழ் சபைகூடிற்று. திரளான ஜனங்கள் விஜயஞ்செய்திருந்தனர். ஹிந்து சமூகத்தையும், முக்கியமாய் பிராம்மண ஸமூகத்தையும் பதிவ்ரதா தர்மத்தையும் வேரறுக்கக்கூடிய B. தாஸ் M. C. ராஜா பில் முதலியவைகளைக் கண்டித்து தீர்மானங்கள் நிறைவேறின.

கும்பகோணம் மடத்திலிருந்து வந்த பாரங்களில் மகா ஜனங்களிடத்தில் ஏராளமான கையெழுத்துக்கள் வாங்கி கனம் வைஸ்ராய் கவர்னர், பிரதிநிதிகள் எல்லோருக்கும் அனுப்பப்பட்டது. ஆஸ்திக மகா ஜன சபையின் ஆதரவின்கீழ் மே, மாசத்தில் மதுரை ஜில்லா வர்ணாச்ரம ஸ்வராஜ் ஸங்க ஐந்தாவது ஸம்மேளனத்தை நடத்தத்தீர்மானித்து வந்தனோபசாரத்துடன் மாலை 6 மணிக்கு சபை இனிது பூர்ணமானது. ஸம்மேளனத்தின் விபரம் அடுத்தபத்திரிகையில் விரிவாக வரும்.

சிவராமகணபதி கனபாடிகள் கார்யதர்சி.

## திருவிடமருதூர்.

### ஸ்ரீ சங்கர ஜயந்தி உத்ஸவம்.

பிரதி வருஷம் இவ்வூரில் நடைபெறும் ஸ்ரீ ஆதி சங்கரபகவத் பாதாள் ஜயந்தி உத்ஸவம் வருகிற சித்திரை ௴ அமாவாசை தினம் ஆரம்பமாகும். வருஷா வருஷம் போல் உபநிஷத் வேத பாராயணங்களும் பஜனைகளும் ஸ்ரீ ஆசார்யமூர்த்திக்கு அர்ச்சனை ஆராதனங்களும், தர்ம உபந்யாசங்களும் பிராம்மண ஸந்தர்ப்பணாதிகளும் பிரும்மஸ்ரீ என். எஸ். மணி சாஸ்திரிகள் அவர்களின் கிரஹத்தில் நடைபெறும். அன்பர்கள் அனைவரும் விஜயம் செய்யக்கோரப்படுகிறது.

ஜி. சங்கரநாராயண வாஜபய்யர்.



# கர்ம பூமியும், கர்மாவும்.

தற்போது சீர்திருத்தக்காரர்கள் "ஸர்வ லோக கௌரவத்திற்காக, தேவதைகளை ஆராதித்து மந்திர பூர்வ கர்மாக்களை செய்யவேண்டுவதேன்?" எனக்கேட்டு கேலி பண்ணுகிறார்கள். காந்தி எழுதின "அநாஸக்தி யோகம்" என்னும் நூலில் "யக்ஞம்" என்றால் மானிடர்கள் எல்லோரும் ஒருவர்க்கொருவர் நிஷ்காமமாக பரோபகாரம் செய்தல்" என்றும், தேவர்கள் என்றால் உலகிலுள்ள "ஸர்வ பூதங்கள்" என்றும் அர்த்தம் கூறியுள்ளார்.

வேறு சிலர் எல்லோருக்கும் பொதுவானவும், விட்டு விடக்கூடாததுமான அவச்யம் வேண்டின கர்மாக்களை மட்டும் செய்தால் போதுமென்கிறார்கள். வேறு சில பேர்கள் "சிரார்த்த கர்மா"வில் "யன் மே மாதா" என்கிற மந்திரத்தை வெட்டிப் புதைக்க வேண்டுமென்கிறார்கள்! இவ்விதம், பலர் பலவாறாகத் தோன்றினபடியெல்லாம் பிதற்றுகிறார்கள். செவிகொடாமல் மௌனமாயிருந்துவிட்டால் நிர்பந்தமாக அரசியல் சட்டங்களை நிறைவேற்றி தார்மிகர்களையும் அவ்வழியை அநுசரிக்கும்படி செய்கிறார்கள். அஹோ! கலியின் ஆளுகை ஸஹிக்க முடியவில்லையே! ராக்ஷஸா: கலிமாச்ரித்ய ஜாயந்தே ப்ரம்மயோனிஷு | ப்ராம்மணானேவபாதந்தே தத்ராபிச்ரோத்ரியான் தவிஜான்|| என்றபடி. குலத்திற்குள்ளேயே கோடாரிக் காம்பு பிறந்து விட்டது சாந்தம் பாபம்!

இது நிற்க, இப்பூவுலகம் ஒரு மானிட சரீரத்தைப்போல ஓர் பிரம்மாண்ட சரீரமாகும். அதாவது மானிட சரீரம் பிண்டமென்றும், லோகத்தை அண்டமென்றும் கூறுவர். மானிட சரீரத்தில் உத்க்ருஷ்ட நிக்ருஷ்ட அவயவங்கள் இருப்பதுபோல் அண்டத்திற்கும் உளது. நாம் வலது கையால் செய்யும் சுப கார்யங்களை இடது கையால் செய்வதில்லை முகத்தைப்பார்ப்பது போல் ப்ருஷ்டத்தைப் பார்ப்பதில்லை. பாதங்கள் செய்வதைக்கைகளோ மூக்கோ செய்வதில்லை; ஆனாலும் உத்க்ருஷ்டமோ நிக்ருஷ்டமோ ஆகிய உறுப்புக்களின் பிரவ்ருத்தி "ஹ்ருதய"த்தாலேயே ஸாதிக்கப்படுகிறது. எல்லா அவயவங்களிலும் 'ஹ்ருதயம்' இரத்தத்தை நிறப்பி வலுவையும் பிரவ்ருத்தி ஸாமர்த்தியத்தையும் கொடுக்கிறது. இது போலவே அண்டமாகிய லோகசரீரத்தினது "ஹ்ருதயம்' நமது பாரதகண்டமேயாகும். இப்பாரத கண்டம் பூவுலகிற்கு "ஹ்ருதயம்" என அதன் இயற்கை அமைப்பினாலேயும்கூடப் புலப்படும். எவ்வாறெனில்:— பிண்ட "ஹ்ருதயம்" தாமரை மொக்கு போல் கீழ் நோக்கி விலா எலும்புகளாலும், கெட்டியான மாம்ஸங்களாலும் முற்றும் பத்திரமாக பாதுகாக்கப்பட்டு அமைந்திருப்பது போல், அண்ட ஹ்ருதயமாகிய பாரதகண்டமும் நாபிஸ்தானமாகிய பூமத்தியரேகை (Equator) க்கு உத்தரவிதானத்தில் ஆழிகளாகவும், ஹிமயகிரி முதலிய பர்வதங்களாகவும், ஸிந்து, யமுனை, கங்கை, பிர்ம்மபுத்ரா முதலிய புண்ய நதிகளாகவும் சூழப்பட்டு அயல் தேசங்களாகிய மலேச்ச ராஜ்யங்களிலிருந்து யாதுமோர் அசுத்தியாலும் பாதிக்கப்படாமல் காப்பாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், பாரத கண்டமே அண்டத்தினது "ஹ்ருதயம்' என்றும் அதனாலேயே இக் கண்டம் கர்ம பூமியும் மற்ற தேசங்கள் போக பூமியுமாகும். கர்ம பூமி என்றால் கர்மம் செய்ய லாயக்கான பூமி என்று பெயர். கர்மம் என்றால் கேவலமாகிய "லௌகிக கர்மா" மாத்திரமன்று. ஆனால் லோக க்ஷேமத்துக்காகவும், பிரஜைகளுக்கு ஆஹாராதிகளைக் கொடுத்து யதோசிதமான சுகத்தைப்பெறுவதற்காக, தத்தத்விஷய அதிஷ்டானமான தேவர்களை ஆசப்ரபூர்வமாய் பிரார்த்திக்கவும், ஆராதிக்கவும் செய்வது தான் கர்மம் என்ற பதத்தால் விவரிக்கப்படுகிறது. இது கேவலம் ஞானாதிகாரிக்கு விதிக்கப்பட்டிருக்கிற ஏகதெய்வப்ரார்த்தனை, ஸ்மரணாதிகளால் ஸாதிக்கப்படுவதில்லை. அத்துவைத பாவனை பிரபஞ்சாதீதஞானிக்கு மட்டுந்தான் அதிகாரம். பிரபஞ்சாதீதர்கள் சமதமாதிகளும், அஹிம்ஸாதி ஷட்கமுமுடையவர்களாகையால் பிரபஞ்ச விஷயங்கள் ஒன்றுமே இச்சிக்கமாட்டார்கள். மற்ற அனதிகாரிகள் வேதாந்த சாஸ்திரங்களாகிய உபநிஷத், வ்யாஸ சூத்திரம், கீதாபாஷ்யம் இவைகளை முகஸ்தமாகக் கற்றுக்கொண்டாலும் ஞானிகளோ ஆநந்தர்களோ மகாத்துமாக்களாக ஆகமாட்டார்கள். பிரபஞ்சத்தை பலவாறாக கற்பித்து வீக்ஷிக்கின்ற அஞ்ஞானிகளுக்கு தத்தத் கற்பனை விஷய அதிஷ்டான தேவர்களையும் கற்பித்து ஆராதிக்கவேண்டினதுதான். பற்பல விஷயங்கள் தோன்றுவிட்டால் அநேகம் தேவர்களும் ஒன்றாகவே தோன்றும். ஆனால், ப்ரக்ருதத்தில் எல்லோருமே ஞானிகளாய்விட்டால், யாதுமோர் உலகவியவஹாரமோ ஸ்ருஷ்டியோ அவச்யமில்லை. இது ஒரு பொழுதும் ஸம்பவியாது. இராஜ்யத்தை ஆளுவது சக்ரவர்த்தியாகவும், பற்பல டிபார்ட்மெண்டுகளின் மேதாவிகளும், நமக்குவேண்டியதே. அதுபோல் தேசகாலாவஸ்த தக்கநுகூலமான ஸ்ருஷ்டியும், அன்னமும், வெளிச்சமும், காற்றும், அக்கினியும், திசைகளும், மற்றும் உலக வ்யவஹாரத்துக்கு அநுகூலமாக பலிப்பதற்கும், நமக்குச் செய்யும் உபகாரத்தை நன்றி பூர்வமாக ஸ்மரிப்பதற்கும் நாம் தத்தத்விஷய அதிஷ்டான தேவதைகளை திருப்தி பண்ணி வைக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இது பாரதிய பிராம்மணர்களுடைய த்ரிகாலஸந்த்யாவந்தனாதி நித்திய நைமித்திய கர்மாக்களாகவும், பஞ்சயக்ஞங்களாலும், மற்றும் ஸம்ஸ்கார கர்மாக்களாலும் ஸாதிக்கப்படுகின்றன. பிராம்மணர்கள், பஞ்சமாபூத அதிஷ்டான தேவதைகளையும், சூரிய சந்திராதிகளையும் அஷ்ட திக்பாலர்களையும், ஆராதிப்பதுபோல் உலகத்தில் மற்றெவ்விடத்தும் யாரும் செய்வதில்லை செய்யவேண்டிய அவச்யமுமில்லை. ஹ்ருதயத்தின் வேலையை மற்ற அவயங்களுக்குச் செய்யமுடியாது. செய்யவேண்டிய அவச்யமுமில்லை. அதிகாரமுமில்லை. அவ்விதம் ஆராதிக்கவேண்டின விதிகளையும், முறைகளையும் பிராம்மணர்களுக்குப்புராதன ஆரிய இருஷிகள் சர்ண பரம்பரையாக போதிபித்திருக்கிறார்கள்.

(தொடரும்.)

எம். ஏ. வெங்கடேச்வா அய்யர்.

# ஜின்னாவின் கர்ஜனை.

### ஹிந்து ராஜ்யம் கூடாது.

கல்கத்தாவில் முஸ்லீம் லீக்கின் விசேஷக் கூட்டம் ஜனாப் ஜின்னாவின் தலைமையில் நடைபெற்றது. அவர் தமது பிரஸங்கத்தில் ஹிந்து ஸமூகத்தை, முக்கியமாகக் காங்கிரஸை வெகுதூரம் அலக்ஷ்யமாயும் பயமுறுத்தியும் பேசினார்.

ஹிந்துக்கள் ராஜ்யம் ஏற்படும்படிவிட மஹம்மதியர்கள் ஒருக்காலும் ஒப்பப்போவதில்லையென்றும் அது வெறுங் கனவுதான் என்றும் ஸரியான சமரசம் செய்து கொண்டு மஹம்மதியர்களுடைய மதம், கலை, பாஷை இவைகளைக் காப்பாற்றிக்கொடுக்காவிடில் இந்தியாவில் ஒரு நாளும் சமாதானம் நிலைத்திருக்காதென்றும் அவர் கர்ஜித்தார்.

# துறவிகளின் உள்ளம்.

(V. ராமச்சந்திர அய்யர், திருவிடமருதூர்)

முற்றும் துறந்த உள்ளத்தோடு கூடியவர்கள், கேவலம் உடலில் உயிர்தரிப்பதற்கு மட்டுமே வேண்டிய சாதனங்களைக் கொண்டு உயிர் வாழ்ந்து ஈசனின் பேரருள் கிடைக்கும் காலத்தை எதிர்பார்த்த வண்ணம் வாழ்கிறார்கள். அப்படி வாழ்பவர் நிலைமை எத்தகையது என்று விசாரிக்கப்புகுமிடத்து பட்டினத்தடிகள்:—

"மாத்தான வத்தையும் மாயா
புரியின் மயக்கத்தையும்
நீத்தார் தமக்கோர் நிட்
டை யுண்டோ
வேர்த்தார் குளித்துப் பசித்தார்
புசித்து விழிதுயின்று
பார்த்தா ருலகத்தவர் போலிருப்பர்
பற்றற்றவரே"

என்று கூறியுள்ளார்.

அகப்பற்று, புறப்பற்றுகளை அறவேநீக்கி விளங்குபவர் மனம் முதலில் தூய்மையை அடைந்து ஒப்பற்ற தெய்வமாகிய பரம்பொருளை உள்ளத்தினுள்ளே வீற்றிருக்கச் செய்யவேண்டிய ஆஸனமானது தயாராகின்றது. பின்பு பகவானின் உரு ஒளித்தோற்றத்தில் பற்றுதல் அதிகரிக்க, அதிகரிக்க, சாந்தமும், அமைதியும் குடிகொண்டு, துறவியின் மேனியும் உள்ளத்தின்சிறப்பும் நன்கு எல்லோரும் அறியும்படி பல அடையாளங்களுடன் பொலிவுடன் பிரகாசிக்கின்றது. இஃது,

பொருளுடையோரைச் செயலினும்,
வீரரைப் போர்க்களத்தும்,
தெருளுடையோரை முகத்தி
லுந்தேர்ந்து தெளிவதேபோல்
அருளுடையோரைக் குணத்
திலன்பில்
இருளறு சொல்லினுங்கா
ணத்தகும்—கச்சி ஏகம்பனே

என்றவாறு அறியக்கிடக்கிறது. மற்றும், "அகத்தினழகு முகத்தில் தெரியும்" என்னும் ஆன்றோர் வாக்கும், நன்கு நிரூபிக்கிறது.

இங்ஙனம் பேரின்பத்திலீடுபடும் ஆன்மாக்களின் உள்ளங்களை முகத்தில் தோன்றும் பொலிவுகாரணமாகக் கண்ணாடிபோல் காண்பிக்கும், பகவானின் பேரருளை வியந்து, துறவிகள் பகவான் பிரதிபிம்பங்களென்றே எண்ணி, பகவான்தான் நமக்கு இவ்வாறு தன்னுடைய ஒப்பற்ற சக்தியால் நிரூபிக்கிறானென்று கொள்ளவேண்டும். பகவான்பாலுள்ள பேரன்பே இத்தகைய முகப்பொலிவையும், தூய உள்ளத்தையும் உண்டாக்குகிறதென்றால், பகவான் அருள் எதைத்தான் செய்யாது, என்று ஆச்சரியப்படவேண்டியிருக்கிறது.

மேலும் 'நான் அப்பரம் பொருள்; அப்பரம் பொருள் என்னுள்ளத்தினுள்ளே உறைகின்றான்" என்ற நோக்கத்தோடு உடல் பொருள், ஆவியைப் பகவான்பால் அர்ப்பணம் செய்து வாழ்கின்ற துறவியின் உள்ளமே திருக்கோயிலாகக் கொண்டு பகவானும் எழுந்தருளுகிறார். துறவிகளின் அரியபெரிய செய்கைகளைச் சரித்திரங்களில் கேட்டு நாம் இன்றும் போற்றிவருகின்றோம். அதற்குக் காரணம் ஒப்பற்ற துறவிகளின் உள்ளத்தினுள்ளே வீற்றிருக்கும் தெய்வத்தின் செயலே என்று நாம் கண்டுகொள்ளுகிறோம்.

ஆதலால் துறவிகளின் உள்ளச்சிறப்பை அளவிட்டுக் கூறமுடியாததேயாகும். ஔவையாரும் "தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே", என்றார். துறவிகள் தூய உள்ளமே ஈசன் இருப்பிடமன்றோ!

215229


மார்சலியே



சுவாஸப்பைகளில் கபமாக மாறி Bronchitis என்ற வியாதியை உண்டுபண்ணுவது. அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து நிவர்த்திசெய்துகொள்ளுங்கள். எச்சமயத்திலும் வெகு துரிதமாக ஸ்வஸ்தப்படுத்துவது

அமிர்தாஞ்சனம்





## வெளியூர்ச் செய்திகள்.

### திப்பிருஜபுரம்.

#### உபந்நியாஸம்.

இவ்வூரில் சென்ற 26-3-38 ல் ஸ்ரீ மடம் ஆஸ்தான வித்வான் மஹோபதேசிக கவிரத்னம் பிரம்மஸ்ரீ ப. பஞ்சாபகேச சாஸ்திரிகள் அவர்கள் கர்ம யோகத்தைப்பற்றி உபன்யஸித்தார்கள். அதில் முதல் பாகத்தில், பிறப்பையடைந்த ஸகலஜனங்களுக்கும் மரணமுண்டென்பது திண்ணம். இவ்வுலகிலிருப்பது போல் பரலோகத்திலும் சுகமாயிருக்க வேண்டி, சாஸ்திரங்களில், கர்மா பக்தி, ஞானம், என்கிற மூன்று விதிஸாதனங்கள் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. சித்தத்தில் தோஷமுள்ள ஜனங்கள், சிரேயஸ்கரமான சிறந்தஸாதனங்கள் அனுஷ்டிப்பதற்கு அருகர்களாகமாட்டார்கள். நம்போன்றவர்கள் அதிகமான சித்த தோஷமுள்ளவர்களாகையால் முதற்படியான கர்மயோகத்தைத் தான் அனுஷ்டித்தாக வேண்டுமென்றும், அதற்குத் தான் அதிகாரிகளென்றும் கீதையில் அர்ஜுனனைப்பார்த்து "கர்மண்யேவாதிகாரஸ்தே,, கர்மயோகத்தில் தான் உனக்கதிகாரமென்று ஸ்ரீபகவானுங்கூறியிருக்கிறார். ஆகையால்கர்மானுஷ்டானமே அவச்யமென்றும் அவையும் அந்தந்த ஜாதிக்கோ ஆச்ரமத்திற்கோ, எந்த கர்மாவை எந்த மாதிரி எந்த சமயம் செய்ய வேண்டுமென்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றதோ அந்தப்படி பயனில் விருப்பமின்றி ஸ்ரீ பகவத் பிரீத்யர்த்தமென்று மாத்திரம் ஸங்கல்பித்துச் செய்ய வேண்டும். அவ்விதம் செய்யப்படும் நிஷ்காமகர்மா தான் சித்தசுத்தியை யுண்டுபண்ணிமேல்படியை யடைவதற்குற்ற யோக்யதையை யளிக்கும். ஆகையால் அவரவர்களும் காமனையின்றி தங்களுக்கு விதிக்கப்பட்ட கர்மாக்களை சக்திக்கியன்ற வரையில் அநுஷ்டித்து சிரேயஸைப்பெறவேண்டுமென்றும் பின்னும் பல அரிய விஷயங்களையும் நிரூபித்து ஸபையிலுள்ளோர்களுக்கு அதிக திருப்தி யுண்டு பண்ணி மிகவும் ஸந்தோஷப்படும்படி செய்து வெகு அழகாய் அந்த உபன்யாஸத்தை முடித்தார்கள்.

நமது நிருபர்.

#### மற்றொரு உபந்நியாஸம்.

9-4-38 சனிக்கிழமை ப்ரும்மஸ்ரீ மந்த்ரமூர்த்திக்ருஷ்ண சாஸ்த்ரிகள் ஈச்வரனுடைய ஆனந்த தாண்டவ தத்வரஹஸ்யம்-உபன்யஸித்தாவது-மோக்ஷங்களுக்கு-அர்த்தம்-கர்மானுஷ்டானம் மூலகாரணமென்றும்-தர்மானுஷ்டானஸ்வரூபம் வேதாதி சாஸ்திரங்களால் தெரிந்துகொள்ள வேண்டுமென்றும் வேதாதிகளுக்கு மூலகாரணமாயுள்ளதான மாத்ருகை ஒன்றும்-அகாராதி-ஹகாரம்வரையிலுள்ள-49-அக்ஷரங்களை -தாண்டவகாலத்தில் டமரு என்ற உடுக்கில் நின்றும்-14-ஸூத்ரங்களாகவெளியிட்டதில்- ஏதாவது-ஒரு அக்ஷரமே, ஸர்வபுருஷார்த்தங்களையும் கொடுக்குமென்றும்-12-வது எழுத்தை- அவசரமாய்உச்சரித்த மாத்திரத்தில் மூடனை ஸத்யவ்ரதனென்னும் ரிஷிகுமாரன்-முக்குண அவித்யாதோஷத்தில் நின்றுவிடுபட்டு ஜீவன் முக்தனாக ஆய்விட்டான் என்றுவிஸ்தாரமாய்உபன்யஸித்து மிகவும் கொண்டாடத் தகுந்ததாகயிருந்தது.

ஒருநிருபர்

### திருப்பூந் துருத்தி.

ஸ்ரீ நாராயண தீர்த்தகுருசுவாமிகள் சந்நிதானத்தில். வெகுதான்ய-ஸு சித்திரை-மீ 2உ வியாழக்கிழமை பருவத்தன்று நடுக்காவேரி பிர்ம்மஸ்ரீ இராமசாமி பாகவதரவர்கள் தலைமையின் கீழ் கோதண்டபாணி வாலிபர் சங்கத்தாரால் பஜனை திவ்யநாம சங்கீர்த்தனம் மெய்வரிசையாக நடந்தது.

இவ்வருஷம் உபயம் நன்னிலம் தாலூக்கா முடிகொண்டான் P. O. ஆலங்குடி கி. மு. நாராயணசாமி அய்யர் உபயமாக நடைபெற்றது. அய்யாவர்களும் கூட இருந்து மெய்வரிசையாக நடத்தினர்.

### திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.

#### திருவகத்தியனார் திருநாட் கொண்டாட்டம்.

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கத்தினதாவில் திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபில மடத்தில் திருவகத்தியனார் திருநாட் கொண்டாட்டம் தமிழ் வருடப்பிறப்பான 13-4-38உ புதன்கிழமை மாலை 5 மணிக்கு ஆரம்பமாகியது. கனம் மந்திரி டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் அவர்கள் தலைமை தாங்கினர்.

காரியதரிசி கடவுள் வாழ்த்துப்பாட, சங்கத்தலைவர், ராஜன் அவர்கட்கு உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுக்க, குருச்சி ஸ்ரீநிவாஸவேதாந்தாசாரியார் வடமொழிவாழ்த்துப்பாடி விளக்க, டாக்டர் ராகவன் அனுப்பிய வடமொழி சுலோகங்களைத் தலைவர் படிக்க புராணம் ராகவாசாரியார் தாமியற்றிய வடமொழி வாழ்த்தைப்பாட, புதுக்கோட்டை மகாராஜா காலேஜ் வித்வான் கநகராஜய்யாவர்களனுப்பிய தென்மொழிப்பாக்களையும் தாமியற்றிய வாழ்த்துப்பாக்களையும் காரியதரிசி பாட, எம்பெருமான் சாத்திக்கொண்டிருந்த மாலையை ராஜனுக்குத் தலைவரளிக்க அவரும் முன்னுரையாக, தமிழின் பதார்த்தத்தையும், அதன் தொன்மையையும், அதன் சக்தியையும், தமிழர் மாண்பையும் அவரது நன்றிபோற்றுந்தகைமையையும் அகத்தியனாரின் ஆற்றல்களையும், அவர் தொண்டினையும், நமது தற்காலரீதியையும், இனிச்செய்ய வேண்டியவற்றையும் குறித்துரைத்தார். சாத்தூர் கிருஷ்ணய்யங்கார் சீடர் சங்கீதம் பாடினர். காரியதரிசி 'அகத்தியனார்' என்றகட்டுரையைப்படித்தார். தலைவர் பின்னுரையில் விரிவாக நமது கடமைகளை நன்கு எடுத்துரைத்து மேன் மேலும் நற்காரியங்கள் செய்யுமாறு தூண்டினர். காரியதரிசி வந்தனோபசாரம் வழங்க கொண்டாட்டம் இரவு 8–15 மணிக்கு நிறைவெய்தியது.

ப. ரெ. திருமலை ஐயங்கார் காரியதரிசி.

### அப்தபூர்த்திக் கொண்டாட்டம்.

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கக் காரியதரிசி ஸ்ரீமான் ப.ரெ. திருமலை ஐயங்காரவர்கள் கனிஷ்ட குமாரன் சிரஞ்சீவி ஸ்ரீநிவாஸனது இரண்டாவது அப்தபூர்த்தி விழாக்கொண்டாட்டம் அவரது இல்லத்தில் 23-4-38உ சிறப்பாகநடந்தது. அதையநுஸரித்து சங்கத்தின் சார்பில் மாலை 6–30மணி முதல் 8மணி வரையில் சங்க வித்வான் ஸ்ரீ.உ.வே. ஸ்ரீரங்கம் சடகோபாசார் ஸ்வாமியால ஸ்ரீ அஹோபில மடத்தில் "திருவோணத்தான்" என்ற விஷயம் உபந்யஸிக்கப்பெற்றது. குறிப்பிட்ட சில ஸஜ்ஜனங்களுக்கு இரவில் விருந்து நடந்தது. ராவ்சாஹிப் ஆர். ராமஸ்வாமி அய்யங்கார் சாத்தூர் கவர்ன்மெண்டு பிளீடர் சுந்தரராஜய்யங்கார், தேவகோட்டை வக்கீல் திருவேங்கடத்தய்யங்கார் முதலியோர்வந்தது மிகவும் பாராட்டத்தக்கது.

ஒரு நிருபர்.


முக்கிய கவனிப்பு.

(3-வருஷத்திற்கு உத்திரவாதமுள்ளது.)

அசல் தங்க நகைகளைப்போன்ற "கன்னூஸ் ப்ளேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்கவும்.

தயாரிப்பவர்:— என். கண்ணுசாமி பத்தர் பெரியதெரு, கும்பகோணம்.


Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam, Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram,

237

ஆங்கீரஸ
4 ஸ்ரீ
23 18

5-5-1938

215230

1067
215230
28 MAY 1938
MADRAS
241

Registered No. M. 2913

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 23 | கும்பகோணம் கலி5040 பகுதான்ய-ஞூ சித்திரை-மீ 23உ 1938ஞூ மே-மீ 5உ | வா. 18

## ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0.
தனிப் பிரதி அணா 1.

**விளம்பர விகிதம்**

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா. 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்

## வாரக்குறிப்புகள்.

(வே. ஸோ. சர்மா)

ஸ்ரீ சங்கரஜயந்தியில் சங்கரோபதேசம்! ஆங்காங்கு ஸ்ரீசங்கராமாநுஜ ஜயந்திகொண்டாடப்படும். அவர்கள் கூறிய உபதேசத்தைப் படிப்பதும் அதன்படி நடப்பதுமே உயர்ந்த குருபக்தியாம்! இச்சமயம் ஸ்ரீமதாசார்யாருத்திரவுப்படி ஆதி சங்கார் வெளியிட்ட பாஷ்யாதி உயர்நூல்களிலிருந்து 1300 உபதேசம் நிறைந்த 'ஸ்ரீ சங்கரோபதேசரத்னம்' என்ற நூலை 'ஒரு ரூபா'யுக்குக் கொடுக்க அ. க. வி. ஸப. முன்வந்துளது. 154. தம்புச்செட்டி, சென்னையில் பெறலாம்! இது இந்த விலாஸத்தில் தான். ஓர் மாதம் வரை தான்.

ஸமாதான மேற்படவில்லை! அலஹபத்தில் எல்லா சாரண இயக்கத்தையும் ஒன்று சேர்க்க ஓர் மஹாஸபை கூடி பலநாள் யோசித்தும் வீணே கலைந்தது. அஹங்காரத்தை முதலில்விட்டால் ஸந்தி ஏற்படுவதில் கஷ்டமேற்படாது. சண்டையுமிராது.

நல்ல சண்டை! பம்பாயில், படித்தவர் நாணயமற்றவரா? படிக்காதவரா? என்று பெருத்தவாதம் நடந்தது. தற்கால படிப்பினுல் தான் இந்த சண்டை நிகழ்ந்தது! முற்கால கல்வி சிறந்தது.

அதிக இடமளித்தால்ஆபத்து! பல முறை பலர் கூறியும் இதவும் வர்ணாச்ரமத்தைச் சார்ந்ததோ என்று காங்கிரஸ் மூளையில் ஏறவில்லை. சென்னையில் ஓர் முஸ்லீம் மந்திரிக்கு மாத்திரம் நீலகிரி வாஸம் செய்ய இடமளித்ததேன்? அவர் ஸொந்த செலவானுல் எயருமாசேஷபிக்கமாட்டார்? புதுமாப்பிள்ளை மந்திரி ரெட்டியாருக்கும் சலுகை.

நல்ல செய்தி! பாட்னாவிற்கருகே ஹிந்து மஹம்மதியர் பகைமையைவிட்டு ஒருவர் பண்டிகையில் மற்றவர் கலந்து ஒற்றுமையையும் நட்பையும் காட்டினராம்!

எட்டவாடாவில் ஓர் ஸதீ! தன் கணவனிறப்பது நிச்சயமென அறிந்த பின் ஓர் ஸதீ அழகாக ஆடை உடுத்தி தானே தனக்கு தீயிட்டிறக்க இருவர் உடலும் [illegible] விவாஹ ஸபையார் கவனிப்பாரா?

திருப்பூரில் தேர்தல் சண்டை! கத்திக்குத்து, கல்வீச்சு, முதலியன நடந்ததாம்! என்ன காங்கிரஸ் ஆக்ஷியின் பயன்?

இதில் காட்டுவரா? நமது காங்கிரஸ் நண்பர் தீர்க்காலோசனையை விட்டு சிறங்கிற்கு மேலே மருந்து போடும் வேலையிலேயே செல்கின்றனர். உஷ்ணத்தை நீக்கமுயல்வதில்லை! ஸ்வஜாத் வேஷம், தர்மத்ரோஹம், இவ்வைகளை கவனிப்பதில்லை! காமத் எனும் ஓர் ஐ ஸி எஸ் வெள்ளை ஐ. ஸி. எஸ். நடத்தையால் ராஜிநாமா செய்ததைக் கவனித்து நடப்பாரா?

இங்கும் ஊழல்! ஸினிமாவைப் பார்த்து சோற்றுக்கில்லாத பலர் புது புதுமாதிரியாக படித்தவர் சென்னையில் திருடுகின்றனர்! ஸி. ஐ. டி. மற்ற போலீஸ்களிடமும் காங்கிரஸ் ஊக்கத்தைக் காட்டி இவைகளை ஏன் தடுக்கக்கூடாது?

மற்றும் பல கஷ்டமுண்டாகும்! பிடிவாதத்துடன் ஒரேமுச்சில் நிறைவேற்றிய கடன் மசோதாவில் அநுபவ கஷ்டங்களை அகற்ற பல திருத்தம் செய்யப்போகின்றனராம்!

எந்த நூற்றுண்டிவர்? கோவை நீலகிரி கல்வி மஹாநாடு கூடிற்று. இதில் தலைமை பூண்ட ஓர் மலையாளி ஆங்கிலரால் நம் கல்வியில் கறைகண்டோம்!! பழையன ஒழிந்தன என்கிறார்!

இந்தூர் ராணியும் பஞ்சமரும்! ஆலயப்ரவேசத்தை எதிர்க்கின்றனராம். பழைய 400 பஞ்சம குடும்பம், அது தங்கள் வம்சத்தை அழிக்குமென்று அருகில் போவதில்லையாம்? பத்திரிகைப் பொய் அளவில்லாததென ஓர் பண்டிதர் பத்துநாள் தங்கி பிரசாரம் செய்து எழுதுகிறார்.

கண்டனக் கூட்டம்!! ஆலயப்ரவேச மசோதா சாரதாசட்டம் முதலியவைகளைச் சென்னையில் பல இடங்களில் கண்டித்து கை எழுத்து வாங்கனுப்பினேன். திருவண்ணாமலை வரை முக்ய இடங்களில் இங்ஙனம் நடத்த சிறிய சுற்றுப்பிரயாணம் செய்ய உத்தேசம். நண்பர்கள் கூட்டத்திற்கேற்பாடு செய்யவும்.

ஸ்ரீ சங்கரஜயந்தி: சென்னை ஸ்ரீசங்கரமடத்தில் சனிக்கிழமைமுதல் பாஷ்ய பாராயணமும் சரிதமும்; ஸ்ரீவத்ஸ ஸோமதேவசர்மா நடத்துகிறார். வேதபாராயண அபிஷேக ஸஹஸ்ரநாமார்ச்சனைகள், [illegible] சேர்களும நடக்கின்றன. புதனன்று பிராமண ஸமாராதனையும் மாலை கிராமப்ரதக்ஷிணமும் நடக்கும்.

### சென்னை.

ஸ்ரீ சங்கரஜயந்தி மஹோத்ஸவம் ஒவ்வோர் பேட்டையிலும் மிகச் சிறப்பாக நடக்கின்றன.

மருவூர் ஸ்ரீ கணேசசாஸ்திரிகள் மைலாப்பூர் ஹிந்து பெண் கலாசாலையிலும் முத்யால் பேட் தர்ம சிவாசார்யர் மடத்திலும் பூஜை உபன்யாஸங்களை நடத்துகிறார்.

மாம்பலம்! பஞ்சாக்ஷபவனத்தில் ஸ்ரீ வத்ஸ ஸோமதேவசர்மா அவர்கள் ஸ்ரீ பகவத்பாத சரித உபன்யாஸத்தையும் ஸ்ரீ ஹரிஹரய்யர் கிருஹத்தில் ஸஹஸ்ரநாமார்ச்சனையுடன் ஆசார்ய பூஜையையும் செய்தார். ஆங்குள்ள அத்யயன ஸபையார் ஷஷ்டி உத்ஸவத்தை நடத்துகிறார்கள்.

ஓர் விசித்ரவாதம்! ஓர் வைஷ்ணவ பெரியார் (லௌகிகத்தில்) மதாபிமானத்துடன், திருநாமம் பகவானது திருவடி வடிவல்லவா? அதை அர்ச்சையில் அமைப்பது அநீதியல்லவாவென ஆக்ஷேபிக்கிறார்.

சூளை சண்டை ஓயவில்லை! ஹிந்து முஸ்லீம் சண்டை நாளுக்குநாள் அதிகமாகிறது. ஓயவில்லை.

வேதாந்தஸபை! சூளையிலுள்ள ஓர் அப்ராமணமடம் ஸ்ரீ சங்கரஜயந்தியை முன்னிட்டு பல உபன்யாஸம் நடத்துகிறது.

உபன்யாஸ முடிவு! ஸ்ரீ வத்ஸ வே. ஸோமதேவசர்மா வெளியூர் செல்வதால் ஸகல உபன்யாஸங்களும் நின்று ஜூன் 15உ ஆரம்பமாகும். ந. நி.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:—T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

# தேசிகன் தேன் மொழிகள்.

## தெய்வமும் புருஷகாரமும்.

3. சாஸ்திரங்களின் உபயோகம்.

*சிஷ்யன்:* எவ்வளவு பிரயத்தனம் செய்தாலும் சில காரியங்கள் பலிக்காமலே போகிறதில்லையா?

ம: அது சரியல்ல. ஒரு விஷயம் என்று இருந்தால், அது அனுபவிக்கப்படுவதற்காகவே ஏற்பட்டிருக்கிறது. அப்படியில்லையானால் அது ஜகத்தில் இருக்க நியாயமில்லை. ஆகையால் அனுபவிக்கவேண்டும். ஆகையால் அடையப்படக்கூடாததாக ஒரு விஷயமும் கிடையாது. ஆனால், இப்பொழுது நாம் இருக்கும் ஸ்திதியில் அடையமுடியாமலும், இப்பொழுது நமக்கு இருக்கும் யோக்கியதையில் அடையக்கூடாமலும், அநேக விஷயங்கள் இருக்கின்றன. அடையக்கூடிய தன்மை, அடயக்கூடாத தன்மை, என்பது அவ்விஷயத்தைச்சேர்ந்த லக்ஷணமில்லை நம் ஸாமர்த்தியத்தையே பொருத்திருக்கிறது.

சி: ஒரு பிரயத்தினம் பலிக்கிறதா இல்லையா யென்பது கடைசியில் தானே தெரியும்! இப்பொழுது நமக்குள்ள யோக்கியதையில் எவ்வித விஷயமாக பிரயத்தனம் செய்யலாம் என்றுவது, அவ்விஷயத்தையடைய எவ்விதமான பிரயத்தனம் செய்யவேண்டு மென்றுவது, முன் கூட்டி எப்படித் தெரிந்து கொள்ள முடியும்?

ம: உங்கள் கேள்வி மிகவும் நியாயமே. உங்கள் கேள்விக்கு பதில் சொல்வதே தர்ம சாஸ்திரங்களின் உத்தேசமாகும். நம் அதிகார சம்பத்துக்களை பரிசீலனம் செய்து எந்தந்த அதிகாரமுள்ளவன் எந்த எந்த கர்மா செய்யலாம் என்று அவை தீர்மானிக்கின்றன. நம் யோக்கியதைகள் பல விதமாயும் பலவாகவும் இருப்பதால் கர்மாக்களும் பலவிதமாயும் பலவாகவும் இருக்கின்றன. கர்மாக்களை தீர்மானிக்கவே, அதாவது, பாதகமேற்படாமல் பிரயோஜனப் படக்கூடிய மாதிரியில் எப்படி யொருவன் புருஷகாரத்தைச் செலுத்தவேண்டு மென்று உபதேசிக்கவே, சாஸ்திரத்தின் முக்கிய காரியம். அவ்விதம் தீர்மானிக்கப்பட்ட கர்மாவைத்தான் ஸ்வதர்மம் என்கிறார்கள். புருஷகாரத்தை நிர்பந்தம் செய்வதற்காக சாஸ்திரம் ஏற்படவில்லை. இஷ்டப்படி நடக்கலாம். ஆனால் எது நல்லது, எது கெட்டது, என்று சொல்லும் பொருப்பைமாத்திரம் சாஸ்திரம் வஹிக்கிறது; மற்றப் பொருப்பும் பூராவும் நம்மையே சேர்ந்தது. தெய்வம் நம்மாலேயே ஸம்பாதிக்கப்பட்டிருப்பதால், தெய்வத்தை தூஷிப்பதில் பிரயோஜனமில்லை. நம் கர்மாவுக்குத் தக்கபடி பலன் கொடுக்கும் பொருப்பை மாத்திரம் ஈசுவரன் வஹிப்பதால், ஈசுவரன் பேரில் குற்றம் சொல்வதற்குமில்லை. நம் யோக க்ஷேமம் நம்கையிலேயேயிருக்கிறது. அதையுண்டு பண்ணவோ, நன்குபடுத்தவோ கெடுக்கவோ, நமக்கே ஸ்வாதந்திரியம். இது ஒரு விதத்தில் நமக்குள்ள பாத்தியதையாகும். அதுவே விசேஷப்பொருப்புமாகும்.

சி: தெரிந்து கொண்டேன். இருந்தாலும் அநேக ஸந்தர்ப்பங்களில் அவ்வளவு ஸ்வாதந்திரியம் வஹிக்க இடமில்லாமல் போய் விடுகிறதே. ஒரு காரியம் செய்வது தப்பு என்று நன்கு தெரிந்த போதிலும், சிலவேளைகளில் அதைச் செய்யத் தோன்றுகிறது. அப்படியே, மற்றொரு கார்யம் நல்லது என்று தெரிந்த போதிலும், சில வேளைகளில் அதைச்செய்யச் சக்தியற்றவனாயிருக்கிறேன் ஆகையால் புருஷகாரத்தை உபயோகிப்பதில் இடஞ்சலாக ஒரு சக்தி இருப்பதாகத் தோன்றுகிறது. அந்த சக்தி பலவத்தாமாயிருக்கிற நிலைமையில், என் யோக க்ஷேமம் என் கையில் இருக்கிறதென்றால் எப்படி! அந்த சக்திக்குத் தானே தெய்வம் என்று பெயர்.

ம. வெவ்வேறாகிய இரண்டு பதார்த்தங்களைக்கலந்து பேசுகிறீர்கள். தாங்கள் சொல்கிற சக்தி வேறு, தெய்வம் என்பது வேறு. ஒரு கருவியை நீங்கள் முதல்தடவை உபயோகிக்கிறீர்களென்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது சிரமத்துடனும் கொஞ்சம் தவறுதலாகவும் உபயோகப்படுத்த ஏற்படும். மறுதடவை அதே கருவியை உபயோகிக்க ஏற்பட்டால், சிரமமும் தவறுதலும் குறையும். அடிக்கடி உபயோகித்துவந்தால், சிரமமன்னியில் ஸுலபமாய் உபயோகிக்கத் தெரிந்துவிடும். அதாவது, அப்யாஸம் ஜாஸ்தியாக ஜாஸ்தியாக, ஸாமார்த்தியமும் ஸுலபத்தன்மையும் ஜாஸ்தியாய் வரும். அடிக்கடி உபயோகிப்பதால், மறுபடியும் உபயோகிக்கவேண்டுமென்ற எண்ணமும் தோன்றும். முதல் தடவை திருடுகிற பையன் பிரயத்தினத்தின் பேரிலும் பயத்துடனும் திருடுவான். அடுத்த தடவையில் பிரயத்தின சிரமமும் பயமும் குறையும். அடிக்கடி ஸந்தர்ப்பங்கள் ஏற்பட்டால், திருடுதல் பழக்கமாகி சிரமமன்னியில் ஏற்பட்டுவிடும். பிறகு இப்பழக்கம் திருட அவசியமில்லாத ஸமயத்திலும் திருடும்படி தூண்டும். இதைத்தான் வாஸனை என்று சொல்கிறார்கள். நமக்கு இஷ்டமில்லாத கார்யத்தில் நம்மை பிரவிருத்திக்கும்படிச் செய்கிறதாக நீங்கள் சொன்ன சக்தி இந்த வாஸனையே. இதிலும் நாமாக ஸம்பாதித்துக்கொண்டதுதான். ஆனால் இது தெய்வம் ஆகாது. நல்ல கார்யமோ, கெட்ட கார்யமோ அதற்குபலன் ரூபமாயுள்ள ஸுகத்தையோ துக்கத்தையோ கொடுக்கக்கூடிய ஸம்மானமோ தண்டனையோதான் தெய்வத்தைச்சேர்ந்தது. ஒரு கார்யத்தைச் செய்ததினால் மனதில்ஏற்படும் ருசி, அதே கார்யத்தை மறுபடியும்செய்வதில் ஸௌகர்யம், அதேகார்யத்தைச்செய்யவேண்டு மென்ற தோற்றம், இவை ரூபமான வாஸனை யென்பது தெய்வத்தை விட வேறே தான். ஸாதாரணமாய் முன் செய்த கர்மாவின் பலனான ஸம்மானமோ தண்டனையோ விபரீதப்பிரயத்னமில்லாதபோனால் ஏற்பட்டே தீரும். வாஸனையை மாற்றிக்கொள்ளவும் நிக்கிரஹம் செய்யவும் நமக்கு ஸ்வாதந்திரியம் உண்டு.

சி: நமக்கு இருக்கும் வாஸனைகளும் எண்ணிக்கையில் அடங்காதே. அவைகளை எப்படி நிக்கிரஹம் செய்ய முடியும்?

ம: வாஸனை என்பது எப்பொழுதுமே வெளிப்பட்டு விடப் பிரயத்தினம் செய்யும் நல்லதோ கெட்டதோ, எல்லா வாஸனைகளுக்கும் இந்த ஸ்வபாவம் உண்டு. இந்த வாஸனாஸரித் என்ற நதியில் நல்லது கெட்டது என்ற இரண்டு விதபிரவாஹங்கள் இருக்கின்றன. பூரா நதியையும் அணைபோட்டுத் தடுக்கப்பார்த்தால் ஆபத்து ஏற்படலாம், ஆகையால் அப்படி ஒரேயடியாய் தடுக்கும்படி சாஸ்திரம் சொல்லவில்லை. நல்ல வாஸனாப் பிரவாஹ வேகத்தை உபயோகித்துக்கொண்டும் கெட்ட வாஸனாப் பிரவாஹத்தை எதிர்த்தும் பிரயத்தனம் செய்என்று சாஸ்திரம் சொல்கிறது. நம் மனதில் இவ்வாஸனை இப்பொழுது கிளம்புகிறது என்று நமக்குத்தெரிகிற முறையில்நாம் அவ்வாஸனைக்குப் பாதினம்என்று எப்படிச் சொல்லமுடியும்? அவ்வாஸனைக்கு இடம் கொடுக்கலாமா வேண்டாமா என்று தீர்மானிக்கிற பொருப்பு நமக்கேஇருக்கிறது எந்த வாஸனைகள் நல்லது, எந்த வாஸனைகளுக்கு இடம் கொடுக்கலாம், எந்த வாஸனைகள் கெட்டது, எந்த வாஸனைகளுக்கு இடம் கொடுக்காமல் தடுக்க வேண்டியது, என்று சாஸ்திரங்கள் விபரமாய்ச்சொல்கின்றன. அப்யாஸத்தினால் எல்லா வாஸனைகளையும் நல்லதாகச்செய்து, நம்மை கெடுக்கக்கூடிய கெட்ட வாஸனைகள் ஏற்படாமல் செய்தும் விட்டால், அதன் பிறகு நல்ல வாஸனைகளையனுசரித்து நடக்க வேண்டிய பொருப்பிலிருந்தும் நம்மைவிடுவிக்க ஸாதனங்கள் எவை என்று சாஸ்திரங்கள் சொல்லிக் கொடுக்கின்றன. படிப்படியாக எவ்வித வாஸனைக்கும் உள்படாமல் இருக்கக்கூடிய நிலைமையை அடையலாம். அந்நிலைமையில் நம் மனது வாஸனை யற்று ஸ்படிகம் போல் சுத்தமாகி விடும். எவ்வித கர்மாவும் செய்வதற்குக்காரணம் இராது. அப்படியாய் விட்டால், கர்மபலன்களிலிருந்து விடுதலையும் அவசியம் ஏற்படும். அப்பொழுது தெய்வம், வாஸனை, இரண்டுமே மறையும். பிறகு ஸ்வாதந்திரியம், பூர்ணமாக சாசுவதமாக மிஞ்சி நிற்கும். இந்தவிடுதலையையே மோக்ஷம் என்கிறார்கள்.

## கும்பமேளா விபத்துக்களும் அதிகாரிகளின் அஜாக்ரதையும்.

பிரஸித்திப்பெற்ற புண்ய க்ஷேத்திரமாகிய ஹரித்வாரத்தில் நடந்த கும்பமேளா என்ற புண்யகாலத்தில் நீராடப் பத்து லக்ஷம் ஜனங்கள் அங்கு கூடியதாகத் தெரிகிறது. இச்சமயம் அங்கு பக்தஜனங்களுக்குப் பலவிதத்திலும் ஏற்பட்ட பயங்கரக் கஷ்டங்களைப் பத்திரிகைகளில் படிக்கும்போது எவரும் மனம் நடுங்காமலிருக்கமுடியாது. பத்திரிகைகள் இச் செய்திகளை பிரபலமாக வெளியிட்ட போதிலும் அதிகாரிகள் இதில் அஜாக்ரதையோ அச்ரத்தையோ, காட்டியதைக் கண்டிக்கக்காணோம். ஸமீபத்தில் தென் இந்தியாவில் மஹோதய புண்யகாலத்தை முன்னிட்டு, ரயில்வே, போலீஸ், சுகாதாரம் முதலியபலவழிகளிலும் ஜனங்களுக்குமிருந்த அஸௌகர்யம் நேர்ந்ததைப்பற்றிப் பத்திரிகைகளில் ஏராளமான புகார்கள் வெளிவந்தன.

கும்பமேளாவில் ஏற்பட்டுள்ள விபத்துகளைக் கவனித்தால் அங்கு அதிகாரிகள் தங்கள் கடமைகளை ஒழுங்காகச் செய்தார்களென்று சொல்ல முடியவில்லை. ரயில்விபத்து நேர்ந்து பல யாத்ரிகர்கள் மாண்டார்கள். வேறு பலர் பலத்த காயமடைந்தார்கள். பயங்கரமான தீவிபத்து ஏற்பட்டுப் பெரும் சேதம் விளைந்து பல ஏழைகள் தவிக்க நேர்ந்தது. போலீஸாருக்கும், ஜனங்களுக்கும், பெரிய சச்சரவு நேரிட்டதால் பலர் காயம் அடைந்தார்கள். திருட்டுக்களுக்கும் அளவில்லையாம். இத்துணை துன்பங்களுடன் காலரா என்ற தொத்து நோயும் பாவி நூற்றுக்கணக்கான யாத்ரீகர்கள் மரணம் அடைந்தார்கள். இந்த மாதிரி அநேகக்கொடிய கஷ்டங்களால் யாத்ரீகர்களுடைய உயிருக்கும் பொருளுக்கும் பெருத்த சேதமேற்பட்டிருக்கிறது. இதிலிருந்து அங்கு, ஸுகாதாரம், போலீஸ், ரயில்வே, முதலிய எவ்வழியிலும் தகுந்த ஏற்பாடு செய்யப்படுவதில்லையென்பது விசதமாகிறது. ஆடம்பர விளம்பர மூலம் ஜனங்களைக்கொண்டு போய் குவிக்கும் ரயில்வே கம்பெனியார் ஸரியான ஏற்பாடு செய்திருந்தால் ரயில் விபத்தும் மரணமும் ஏற்பட நியாயமில்லை. ஸுகாதார ஏற்படும் கவனிக்கப்படவில்லையென்று தெரிகிறது

இந்தப் பெரிய ஸந்தர்ப்பத்தில் இவ்வளவு பெரிய கூட்டம் வருமென்பது அதிகாரிகளுக்குத் தெரிந்திருக்க வேண்டும். அப்படியிருந்தும் அவர்கள் நல்ல ஏற்பாடு செய்திருந்ததாக அநுபவத்தில் தெரியவில்லை. தென்னிந்தியாவிலிருந்து அனேகர் அங்கு சென்று கஷ்ட நஷ்டமடைந்திருப்பதாக நாம் அறிகிறோம். சென்னை ஸர்க்கார் இதைத்தீர விசாரித்து தகுந்த நஷ்ட ஈடு வாங்கித் தர முயற்சிக்க வேணும்.

காங்கிரஸ் மந்திரிகளின் ஆக்ஷிக்குள்பட்ட ஹரித்வாரத்தில் இவ்வளவு பயங்கரமான நிலைமை ஏற்பட்டதற்கு நாம் வருந்தாமலிருக்கமுடியவில்லை.

— ஒரு நிருபர்.





परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.
பகுதான்ய-ஹு சித்திரை-மீ 23உ

## ஆசார்ய உபதேசங்களை மறவோம்.

நேற்று வைசாக சுத்த பஞ்சமீயும், திருவாதிரையும் கூடிய புதன்கிழமையானது, தர்மத்தை உயிராகக் கொண்ட நமது பாரத தேசத்திற்கு ஓர் மகத்தான புனித தினமாகும். அத்வைத விசிஷ்டாத்வைத, ஸம்பிரதாய ப்ரவர்த்தகர்களான ஸ்ரீமத்பகவத் பாத ஸ்ரீ சங்கராசார்யாளும், ஸ்ரீ பகவத் ராமாநுஜரும் அன்று அவதரித்த ஸுதினமாகும். இவ்விரு மஹாசார்யாளுடையவும் ஜயந்தி மஹோத்ஸவம் இவ்வருஷம் ஒரே தினத்தில் சேர்ந்து வந்திருப்பது நம் தேசத்திற்கு ஓர் சுபஸூசகமாகத் தோன்றுகிறது. இப்புண்ய தினமானது இந்தியா முழுவதும் பரவி நிற்கும் இரு ஸம்பிரதாயஸ்தர்களாலும் எங்கும் விசேஷமாகக் கொண்டாடப்பட்டு அவ்வாசார்ய சிரேஷ்டர்கள் நமக்குப்பல வழிகளிலும் செய்துள்ள ஐஹிகாமுஷ்மிகப் பேருபகாரங்களை ஆஸ்திகர்கள் ஸ்மரித்து கிருதஞ்ஞதை காட்டியிருப்பது கொண்டாடக்கூடியதே.

மிகக் கொடிய கலியின் தாண்டவத்தால் எங்கும் அதர்மம் தானாகவே தலையெடுத்து பரவி வருமின்னாளில் கூட பாரத தேசத்தில் வேதங்களுக்கும் வைதிக வர்ணாச்ரம தர்மங்களுக்கும் இன்னும் உயர்ந்த மஹிமையும், அநுஷ்டானமும் இருந்து வருவது நம் ஆசார்ய சிரேஷ்டர்களின் மஹிமையால் தான் என்போம்.

கணக்கற்ற அவைதிக மதங்கள் பரவி பாரத தேசத்தைக் கவிழ்க்க முயற்சிக்கையில் இவ்வித ஆசார்ய சிரேஷ்டர்கள் அவதரித்து துர்மதங்களை வெருட்டியடித்ததாலன்றோ இன்று நாம் தைர்யமாக ஸ்வதர்மாநுஷ்டானத்தைச்செய்து வர முடிகிறது. எவ்வளவு துர் உபதேசங்கள் ஏற்பட்டபோதிலும் இன்னமும் நம்மவர்கள் அதர்ம மார்க்கத்தில் பிரவிருத்திக்காமல் தடுத்து வைத்திருப்பது நம் ஆசார்யர்களின் மஹிமையன்றோ?

தர்மம் குன்றி, அதர்மம் தலையெடுக்கும் காலத்தில் பகவான் அவதரித்து தர்மாரக்ஷணம் செய்கிறானென்பது நமது மதக்கொள்கையாகும். அதனால் பகவான் மனித உருவத்தில் உலகில் தோன்றி சாஸ்திரமென்கிற தமது இருதிருக்கைகளால் நம்மை உத்தாரணம் செய்கிறானென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. இச்சாஸ்திரமொழி முற்றிலும் உண்மை யென்பதற்கு இந்த ஆசார்யர்களைவிட வேறு உதாஹரணம் வேண்டுமோ? இவர்கள் அவதரித்து, மறைந்துபோய் எவ்வளவோ காலமாகிவிட்டபோதிலும் இன்றுகூட அவர்களுடைய உத்தம உபதேசங்கள் தேசமெங்கும் மூலை முடுக்குகளில்கூட பரவிநிற்கவில்லையா? இதொன்றாலேயே அவர்கள் தெய்வாம்சம் பொருந்தியவர்களென்பது நிச்சயமாகப் புலப்படக்கூடியதே.

இவ்வாறு நாம் நமது ஆசார்ய சிரேஷ்டர்களின் குணநிசயங்களைப்பற்றி ஒருபுறத்தில் பெருமையாகப் பேசியபோதிலும், சிலவிடங்களில் இவர்களுடைய உபதேசங்களும் அநுஷ்டானங்களும் மீறப்படுவதையும் நாம் வருத்தத்துடன் பார்த்துவருகிறோம். அவைதிக மதக்கொள்கையை வேரறுக்க நம்பூர்வாசாரியர்கள் எவ்வளவோ பாடுபட்டுச் செய்துள்ள கார்யங்களை இப்போது நம்மவர்களே வீணாக்க முற்பட்டிருக்கிறார்கள். வைதிக மதத்திற்குள்ளேயே அவைதிக மத வாஸனைகளைப் பலர் புகவிட்டு அதை அழிக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

ஸ்ரீசங்காசாரியாளுடையவோ, ஸ்ரீராமாநுஜருடையவோ பெயரைச்சொல்லிக்கொண்டும் அவர்களுடைய சிஷ்யர்களென்ற வேஷம் தரித்துக்கொண்டும் அநேகர் அவர்களுடைய உபதேசங்களைப் பாழாக்கி வருகிறார்கள். வைதிக ஸம்பிரதாயத்தைச் சேர்ந்தவர்களாலேயே வேதத்திற்கு அப்ராமாண்யம் கற்பிக்கப்படுகிறது. வேதம், பௌருஷேய மென்றும், அது ஸமீபகாலத்தில் உண்டாக்கப்பட்டதென்றும் ஓர் பெரிய விபரீதவாதம் இக்காலத்தில் நம்மவர்களிலேயே பரவி நிற்கின்றது. நம்வீட்டுச் சிறுவர்களுக்கு இது ஒருபாடமாகக் கற்பிக்கப்படுகிறது. வேதம் அபௌருஷேயமென்றும், அது அநாதியென்றும் ஓர் முக்யமான அடிப்படையான உண்மையை ஸ்தாபிக்க ஸ்ரீசங்கரரும், ஸ்ரீராமாநுஜரும் பட்ட பாடென்ன? அவர்களுடைய கிரந்தங்கள் முழுவதும் இந்த ஒருவிஷயத்தில் அவர்கள் எவ்வளவு சிரத்தை காட்டியுள்ளார்கள்? இதைக் கவனிக்கும்போது, தற்காலத்தியவர்கள் நம் ஆசார்யஸூக்திகளுக்கு த்ரோஹம்செய்யத் தலைப்பட்டிருப்பதன் அந்யாயத்தை எப்படி வர்ணிப்பது? நம் ஆசார்யர்களால் துரத்தப்பட்ட பௌத்தாதி அவைதிக மதக் கொள்கைகளை நம்மவர்களே சிறுகச் சிறுக நமது மதத்தில் இப்போது புகவிட்டு வருகிறார்கள். வைதிகமதமென்ற வேஷத்தில், அவைதிகக் கொள்கைகள் யாவும் நம்மதத்தில் புகுத்தப்படுகின்றன.

இத்தகைய அபாய நிலைமை தோன்றியுள்ள இக்காலத்தில் நமது ஆசார்ய சிரேஷ்டர்களின் உறுதியான கொள்கைகளை நாம் தெளிவாகவும் தைர்யமாகவும் பொது ஜனங்களுக்கு போதிக்க வேண்டியது கடமையாகிறது. ஆசார்ய ஜயந்தி மஹோத்ஸவங்களில் வீண் ஆடம்பரங்களையும், அர்த்தமற்ற கார்யங்களையும் நிறுத்தி விட்டு, ஆசார்யர்கள் வெளியிட்டுள்ள உபதேசங்களையும் அநுஷ்டானங்களையும் ஸம்ரக்ஷிப்பது மிக முக்யமான கைங்கர்யமாகும்.

## குறிப்புகள்

### காங்கிரஸும் பேச்சு ஸ்வதந்திரமும்.

நாகபுரி ஹிந்துப் பிரமுகர்கள் சென்ற வாரம் காங்கிரஸின் தற்காலப்போக்கைக் கண்டித்து ஓர் பெரிய ஊர்வலம், கூட்டம் முதலிய ஆர்ப்பாட்டங்களைச் செய்ததாகப் பத்திரிகைகள் அறிவிக்கின்றன. காங்கிரஸ மந்திரிகள், ஹிந்து ஸமூஹ உணர்ச்சிக்கும், நன்யத்திற்கும் குறைவு ஏற்படும்வழியில் இந மஹம்மதிய துர்மார்க்கக் கைதிகளை விடுதலைசெய்ததை நாக்பூர் ஹிந்துக்கள் பலமாக ஆக்ஷேபித்தனர். இதற்காக ஹிந்து ஸமூஹத்தினர் நடத்திய பொதுக் கூட்டங்களில் காங்கிரஸார் புகுந்து கலவரம்செய்தும், பேசவொட்டாமல் தடுத்துக் கூச்சலிட்டும், கல்லெறிந்தும் ஆபாஸமான துஷ்கார்யங்களைச் செய்தது யாவரும் அறிந்ததே. இம்மாதிரி காங்கிரஸ்வாதிகள், இதர கக்ஷியாருடைய கூட்டங்களில் பலாத்காரமாகப் புகுந்து விஷமம் செய்யும் அக்கிரமத்தைக் கண்டிக்கவே மேற்படி நாகபுரிக்கூட்டம் நடந்தது. அக்கூட்டத்தில், காங்கிரஸ்காரர்கள் இந்தியாவெங்கும் பொதுக்கூட்டங்களில் விகாரமாக நடந்துகொள்ளுவதைப் பல பிரபல ஹிந்துக்கள் கண்டித்துப் பேசினர்.

இந்த விஷயம் நாகபுரியை மாத்திரம் பற்றியதன்று. இந்தியாவில் எந்தப் பக்கத்தில் பார்த்தாலும் காங்கிரஸ்காரர்கள் எதிர் கக்ஷியார் கூட்டங்களைக் கலைப்பதும், பேச்சைக் கூச்சலிட்டுக் தடைசெய்வதும் வெகு ஸாதாரணமாயிருக்கிறது. பார்க்குக்கூட்டம், மைதானக்கூட்டம் போன்ற சந்திக்கரைக் கூட்டங்களில் தங்களுக்குத்தான் உரிமையிருப்பதுபோலவும், இதரக்கக்ஷியார் அத்தகைய பொதுக்கூட்டமேதுவும், எங்கும் நடத்த பாத்யமற்றவர்கள் போலவும் காங்கிரஸ் வாலாக்கள் பாத்யங்கொண்டாடுகிறார்கள். இதனாலேயே எங்கும் பொதுக்கூட்டங்களில் காங்கிரஸ்காரர் விஷமம் செய்வது அதிகரித்துவிட்டதை அநுபவத்தில் யாவரும் அறிவர். ஆதலால் நாகபுரி ஹிந்துக்கள் பேச்சு ஸ்வதந்திரத்தை ஸ்தாபிக்கச்செய்த முயற்சியைப்போல் தேசமெங்கும் செய்வது அவச்யம்.

பேசுவது சிவதர்மம், இடிப்பது பிள்ளையார் கோவில், என்பதைப்போல், காங்கிரஸ்வாதிகள், பிரஜா உரிமை, பேச்சு ஸ்வதந்திரம் எழுதும் ஸ்வதந்திரம் முதலியவைகளுக்காக பெரியத்யாகம் செய்வதாகப்பறையடித்துக் கொள்ளுகிறார்கள். வெள்ளை அதிகார வர்க்கம், காங்கிரஸ்காரர்களுடைய பேச்சு ஸ்வதந்திரம் முதலானவைகளுக்குப் பங்கம் உண்டு பண்ணுவதாக கூச்சல் போட்டு வந்தார்கள்.

ஆனால் இப்போது அவர்கள். அதிகாரத்திற்கு வந்த பின் நடப்பதென்ன? பிரஜைகளின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றனவா? அவரவரிஷ்டப்படி மனஸ்சாக்ஷியை அநுஸரிக்க இடமளிக்கப் படுகிறதா?

ஒன்றும் இல்லை. வெள்ளை அதிகார வர்க்கத்திற்கு பதிலாக காங்கிரஸ் கறுப்பு அதிகாரவர்க்கம் வந்திருக்கிறது. வேறு வித்யாஸமெதுவும் இல்லை. வெள்ளைக்காரர், காங்கிரஸ்காரரின் உரிமைகளைப்பறித்ததாகக் குற்றம் சொல்லப்பட்டார்கள். காங்கிரஸ்காரரோ தம் இனத்தாரின் உரிமைகளையே பறிக்கப் பின் வாங்குவதில்லை. வெள்ளை அதிகார வர்க்கம் ராஜ்ய அடக்கு முறையைச் செய்தது. காங்கிரஸ் ஆக்ஷியோ மத அடக்குமுறையை அநுஷ்டிக்கிறது. பண ஸ்வதந்திரம், நில ஸ்வதந்திரம், மத ஸ்வதந்திரம் எல்லாம் நிர்தாக்ஷிண்யமாகப் பறிக்கப்படுகிறது.

இதெல்லாவற்றையும்விட மஹம்மதியர் முதலிய விஜாதீயர்களுக்கு விட்டுக்கொடுத்து தம் இனத்தைத்தாழ்த்துவது எவ்வளவு ஆபாஸம்! இந்த அநியாயத்தை எடுத்துச் சொல்ல நாகபுரி ஹிந்துக்களுக்கு உரிமையில்லையா? இதில் ஏன் காங்கிரஸ்வாதிகளுக்கு இவ்வளவு துராக்ரஹம்?

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.
பீமவரம்.
West Godavari.

உ

# ஸ்ரீமந் நாராயண தீர்த்த குரு ஸ்வாமிகளின் சரித்திர சுருக்கம்.

(சென்றவார தொடர்ச்சி).

இவ்விதமாகத் தம்பதிகள் சந்ததியை வேண்டிப்பற் பல தொண்டுகள் செய்வதை மகான் கண்டு காரணம் என்ன வென்று வினவினர். அதற்கு அவர்கள் சுவாமி எங்களுக்குப்பின் எங்களுடைய குடி விளங்கவும் இறந்தபின் ஈமக்கடன் புரியவும் பிறர்களுக்கும் விருந்தினர்களுக்கும் உபசரிக்கவும் ஓர் உத்தம மகனைத் தந்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அம்மொழி கேட்ட மகான் அருட் கண் நோக்கி செம்மையாக உங்களுக்கு மூன்று குழந்தைகள் ஜனிக்கும். உம் குலம் விளங்க இரு குழந்தைகளை எடுத்துக்கொள்ளும். சடை முடியுடன் கடைப்பிள்ளை பிறக்கும் அதனை நம்பரபு விளங்கத் தடையில்லாமல் என்னிடம் கொடுக்க வேண்டுமென்று சாற்றி மஞ்சள் வந்திரித்துப் பொன்னப்ப முதலியார் மனைவி கையில் ஈந்தார். உத்தரவு பெற்றுத் தம்பதிகள் விடுற்று இன்புற்று இருந்தார்கள். குருபரன் மொழி தப்பாமல் வருஷத்துக்கு ஒன்றாய் காலம் தப்பாமல் மூன்று குழந்தைகள் பிறந்தன. அவர் முன்பு இசைத்தது போலவே மூன்றாவது குழந்தை சடை முடியுடன் இருக்கக்கண்டு அவரிடம் ஒப்புவித்தார். அந்தக் குழந்தைக்கு நமசிவாயம் என நாமஞ் சூட்டி ஆட்டின் பால் கொடுத்து அருந்தவ முனிவர் பெருந்தகையுடன் குழந்தையை வளர்த்து வந்தார். சுவாமி பொன்னப்ப முதலியாரை நோக்கி உங்கள் மரபில் சடை முடியுடன் குழந்தை உதித்தால் நம்முடைய ஆச்ரமம் விளங்கத் தர வேண்டுமென்று ஆக்ஞாபித்தார். பொன்னப்ப முதலியாரும் ஒப்புக்கொண்டு விடை பெற்று வீடு நோக்கினர். நமசிவாயம் என்னும் குழந்தை நற்பருவம் எய்தி மகானிடம் பற்பல நூற்கற்று உயர் உய்யும்படி யதார்த்தமாய்ச் சுவாமியினிடம் விசாரணை செய்து சகலவித சாதனமும் அடைந்தார். நாராயண குரு சுவாமிகள் நமசிவாய முதலியாரால் செய்யப்பட்ட பல தொண்டுகளையும் ஏற்றுக்கொண்டு அவரைக்கிருதார்த்தராக்கும் பொருட்டு சில காலம் புவியில் இருந்தார். சாயுஜ்ய பதவி யடையும் சமயம் வந்தவுடன் அமர்சிங்க மன்னனுக்கும் மற்றுமுள்ள அந்தணர்களுக்கும், தம் சிஷ்யர்களுக்கும் அறிவித்தார். மகான் மோக்ஷ காலத்தைக் காணப் பல தேச அரசர்களும் சிறந்த அந்தணர்களும் அவ்வூருக்கு வந்துகூடினர். குறித்த சமயம் வந்தவுடனே யாவரும் காணும் படியாய் இவர் உடலோடு தமக்கென்று உள்ள ஆலயத்துக் கர்ப்பக்கிரஹத்தை யடைந்தார். அதன் பிறகு இப்பெரியார் பசியு நீர் கேட்டலும் பயமும் வெகுளியும், உவகையும் வேண்டலும், நினைப்புமுறக்கமும், நரையு நோய் படுதலும், மரணமும் பிறப்பும், மதமுமின்பமும், அதிசயமும் வியர்த்தலும், கேதமுங்கையறவும், ஆகிய 18 குலங்களோடு கூடிய இவ்வாழ்க்கை யுடனே ஜோதி ஸ்வரூபமாய்க் கொஞ்ச நேரம் வெளியிலுள்ளோர் கண்களுக்குப்புலப்படும்படி காக்ஷி தந்தார். அப்பொழுது அது அங்குள்ளவர்களுக்குக் கற்பூரக்குன்று எரிந்தால் உண்டாகும் ஜோதி போலவும் தோன்றிற்று. சற்றுநேரத்திற்கெல்லாம் ஜோதி மேலே கிளம்பி மறைந்தது. அப்படி ஜோதி தோன்றி மறைந்த சமயம் மாசி மாதம் சுக்ல பக்ஷம் அஷ்டமி திதி கார்த்திகை நக்ஷத்திரம் குரு வாரம் கூடிய சுபதினமாம்.

சந்யாஸம் தந்த சற்குரு உயிருடன் சமாதி முக்கு மறைந்தபின் நமசிவாயத் தம்பிரான் மடத்தைப் பாதுகாத்து வந்தார்.

இப்படி அவர் காத்துக்கொண்டுவரும் சமயத்து அவர் மரபில் முன் சுவாமிகள் சொன்னதுபோல் சடையோடுகூடிய மகவொன்றுதித்தது. அந்தக்குழந்தையை ஈன்றோர்கள் ஜீவன் முக்தி சமாதியில் அமர்ந்த நாராயணகுருசாமி மடத்திலுள்ள நமசிவாயத் தம்பிரானிடம் ஒப்புவித்தார்கள். அவ்வண்ணமாக அந்தக்குழந்தை தக்க பிராயம் அடைந்தவுடன் மகான் அருளியதை அப்புத்திரனுக்கு அருளிச்செய்து அம்பலவாணத் தம்பிரானென்று பெயர்வைத்துத் தனக்குப் பின் வைத்துக்கொண்டார். பக்தி விஸ்வாஸத்துடன் மடத்தைச் சிலகாலம் பார்த்து வந்தார். இவ்விதமாக இருக்கும் சமயத்தில் நமச்சிவாயத் தம்பிரான் இறுதிக்காலம் வருமுன்னே அம்பலவாண தம்பிரானை அழைத்துத் தனக்கு பரிபக்குவமான தசை வந்ததென்றும் தன்னுடைய உடலை சூரியபுஷ்கரணிக்கு அருகில் சமாதி செய்ய வேண்டுமென்றும் சொன்னார். பின்னும் அவரைப் பார்த்து இம்மடத்தில் ஜீவன்முக்தி சமாதியிலிருந்து மோக்ஷலோகத்துக்கு நம்மை ஒரு வித்தாக செய்த அம்மகானின் ஆலயத்துக்கு அனுதினமும் செய்யவேண்டிய கைங்கர்யங்களை நீ தவறாமல் செய்துவரவேண்டும், மேலும் மாசிமாதம் சுக்லபக்ஷம் அஷ்டமிதியன்று நமதுகுரு நாராயணகுரு சுவாமிகள் ஸ்தூல தேகத்தோடு ஜீவன் முக்தி சமாதியில் இருக்கினார்கள். ஆகையினால் அன்றையதினம் அந்த இடத்தில் அபிஷேக அலங்கார ஆராதனைகள் செய்து அடியார்களுக்கு அமுதளிக்கவேண்டும். அன்றிரவு அம்மகானால் இயற்றப்பட்ட ஸ்ரீ கிருஷ்ணலீலா தரங்கிணி யென்ற உத்தம கிரந்தத்தைச் சத்திய பக்தர்களுடன் சேர்ந்து நித்தியவாழ்வை நாடும்பொருட்டு பஜனை செய்யவேண்டுமென்றும் ஆக்ஞாபித்து பரமபதவியையடைந்தார்.

அதன்பின் அம்பலவாணத்தம்பிரான் நமசிவாய சுவாமி சொன்னவண்ணமே அவருடைய உடலைச் சூரிய புஷ்கரணிக்கு அருகாமையிலுள்ள மாமரத்தடியில் அடியார் கூட்டங்கள் புடைசூழ அநேக சங்கவாத்தியங்கள் ஒலிக்க கற்பூர தீபாராதனையோடு அடக்கம் செய்தார்கள்.

அதன்பிறகு அம்பலவாண தம்பிரான் நாராயணகுரு சுவாமிகளுக்கு செய்யவேண்டிய கைங்கர்யங்களைக் குறைவறச்செய்து பிரதி வருஷம் மாசிமாதம் சுக்கிலபக்ஷம் அஷ்டமிதிதி தினம் மஹாகுருபூஜை வழக்கம்போல் தவறாமல் செய்துவந்தார். அம்பலவாண தம்பிரான் தான் இவ்வாறு செய்து இறக்காலத்து சிதம்பரத் தம்பிரானிடம் மடத்தைக் காத்துவரும்படி ஒப்புவித்து பரமபதவிசெற்றார். சிதம்பரத் தம்பிரான் அம்பலவாணத்தம்பிரானுக்குச் செய்யவேண்டிய கிரியைகளைச் செய்து மடத்தைச் சீர்திருத்திப் பூஜை முதலியவைகளை எல்லாம் குறைவறக் கவனித்து வந்தார். தமக்குப்பின் இவ்வாச்சிரமத்தைக் கவனிக்க தம் மரபில் உதித்த ஒரு சீலம் வாய்ந்த குழந்தை வேண்டுமென்று நாளும் நித்திரை உணவு இல்லாமல் நாராயணகுருவைப் பிரார்த்தித்து வந்தார். ஒருநாள் அவ்வூர் ஆதியப்பமுதலியாருக்கு சடையுடன் ஒரு ஆண்குழந்தை பிறந்திருப்பதாகச் சிலர் சொல்லக்கேட்டார். அம்மொழியைக்கேட்ட சிதம்பரத்தம்பிரான் ஆனந்தமடைந்து ஆதியப்பமுதலியாரையடைந்து நின் மகவை ஆச்சிரமத்துக்கு தரவேண்டுமென்று கேட்டார். அவ்வுரைகேட்ட ஆதியப்ப முதலியார் சடையோடு பிறந்திருக்கின்ற அக்குழந்தையை ஆச்சிரமத்துக்குச் சிலதுகாலத்துக்குள் கொண்டுவந்து கொடுப்பதாக வாக்களித்தார்.

அவ்வுரை கேட்ட சிதம்பரத்தம்பிரான் ஆனந்தங்கொண்டு ஆச்சிரமத்துக்குச் சென்று முன்போல கைங்கரியங்களைச்செய்து கொண்டிருந்தார். இவ்வாறு நிகழுங் காலத்தில் ஒருநாள் ஆதியப்ப முதலியார் திடீரென்று மரணமானார். அவர் இறந்து சிறிது காலத்துக்கெல்லாம் சிதம்பர சுவாமி ஆதியப்பமுதலியார் மனைவியிடம் சென்று நின்புத்திரனை உன் பர்த்தா உயிரோடிருக்கும் போது எங்களிடம் நாராயணக்குருசுவாமி ஆஸ்ரமத்துக்கு அடிமையாகக் கொடுப்பதாக வாக்களித்தார். அதன்படி நீதர வேண்டுமென்று கேட்டார். அம்மொழி கேட்ட அவ்விதவை சுவாமியை நோக்கித் தாங்கள் சொல்வது அடாத காரியம். எனக்கு இருப்பதோ ஒரு குழந்தை தான். நானோ பர்த்தாவையிழந்து வருங்காலத்துப் புத்திரனைக்கொண்டு சந்தோஷிப்பவள். எனக்கு ஈமக்கடனைச் செய்ய வேண்டியும் அந்திய காலத்தில் என்னைக் காப்பாற்ற வேண்டியும் வளர்க்கும் இக்குழந்தையை தாங்கள் கேட்பது நியாயமாகுமா. என்னை மறுபடியும் துக்க சாகரத்தில் அழுத்தவா—என்னைக்கேட்கிறீர்கள், புத்திர சோகம் நிரந்தரம். ஆகையால் என் புத்திரனை விட்டு அரைக்கணமும் பிரிந்திருக்க என்னால் முடியாது. மேலும் என் கணவர் இம்மகனுக்குக்கஷ்டம் தெரியாமல் வளர்த்து வந்தபடியால், உங்களைப்போல் இக்குழந்தை இன்னல்களைச்சகித்து ஐம்புலன்களையும் அடக்கிக்காஷாய வேஷம்பூண்டு வறுமையைப்பொறுத்து பெருமையை அடையவல்லவனல்லன். ஆகையினால் எனது புத்திரனைத் தவிர வேறு எதைக்கேட்டாலும் கொடுக்கிறேன், வேறு யாரையாவது மடத்துக்கு அடிமையாக அமர்த்திக்கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டாள்.

சிதம்பர சுவாமி கைம்பெண்ணின் உரையைக்கேட்டு மனத்தில் கலக்கங்கொண்டு ஆச்சிரமத்தை யடைந்து முன்போல் தொண்டு புரிந்து வந்தார்.

இஃது இப்படியிருக்க குரு சுவாமிகள் உடலத்தோடு ஜோதி சொரூபமாய் மறைந்த அந்த கர்ப்பக்கிரகத்திலே கால காளாஸ்திரி எம எமதூதி என்றுநான்கு விஷப்பற்களோடு கூடியதும் இரட்டை நாக்குடையதும் மாதம் ஒரு முறை தன்னுடைய தேகத்தைச்சுத்தி செய்யும்பொருட்டுத் தன் தோலை உரித்து விடுவதுமான ஒரு உயர்குல சர்ப்பம் வசித்து வந்தது. அவ்வரவு ஏனைய சர்ப்பம் போல் தவளை எலி முதலியவைகளைப்பிடித்து உண்ணாமல் மலரின் மணத்தையே சுவாசித்து அதிலொழுகும் தேனைப்பருகி உடல் வளர்த்து சமாதியில் உலாவி வந்தது.

(தொடரும்.)



# குடந்தை முனிஸிபல் எலெக்ஷன்

## காங்கிரஸ் கமிட்டித் தலைவரின் தோல்வி

### காங்கிரஸிடம் அபிமானம் குறைந்து வருகிறது.

(ஓர் ராஜீயவாதி)

கும்பகோணம் முனிஸிபாலிடி எலெக்ஷன் முடிவு வெளியாகிவிட்டது. இந்த எலெக்ஷன் விஷயமான, வெற்றி, தோல்விகளின் நிலைமையையும், ஜனங்களின் மனப்போக்கையும் நாம் அறிந்தபடி இங்கு வெளியிடுவது அவசியமெனக் கருதுகிறோம்.

இந்த எலெக்ஷனில் போட்டி ஏற்பட்டு வோட் எடுக்க நேர்ந்த சுமார் 15வார்டுகளில் காங்கிரஸ்காரர்கள் தங்கள் அபேக்ஷகர்களை நிறுத்தியிருந்தபோதிலும் அவர்களில் 8பேர்களே ஜயித்தனர். பாக்கிப்பேர் தோல்வியடைந்தனர். தோற்றவர்களில் இவ்வூர் காங்கிரஸ்கமிட்டித் தலைவரும், உபதலைவரும், அட்ஹாக் கமிட்டி மெம்பர்களும் இருப்பதால் இந்தத் தோல்வி மிகவும் குறிப்பிடத்தக்கதாகிறது. இதைப்பற்றியே ஜனங்கள் அதிகம் பேசுகிறார்கள். காங்கிரஸ்காரர்களும் வருத்தமடைந்து திகைத்து நிற்கின்றனர். காங்கிரஸின் பிரதான உத்யோகஸ்தர்களே தோற்றது, காங்கிரஸ் முழுவதும் தோற்றதுபோலல்லவா? ஆகவே காங்கிரஸ்காரர்களின் ஜெயகோஷமும் மற்ற ஆர்ப்பாட்டங்களும் உள்ளுமனப்பூர்வகமான உத்ஸாஹத்துடன் நடப்பதாக இல்லை.

#### காங்கிரஸை எதிர்த்த நோக்கம்.

காங்கிரஸென்றால், எதிர்க்கப் பயமுள்ள இந்நாளில் குடந்தையில் இவ்வளவு பெரிய எதிர்ப்பு காங்கிரஸுக்கு ஏன் ஏற்படவேண்டும்? ஜில்லாபோர்டு எலெக்ஷனில் காங்கிரஸ் நிறுத்திய வெகு ஸாமான்ய அபேக்ஷகர்கூட பெரிய வெற்றியடையவில்லையா? சட்டஸபை எலெக்ஷனில் 100க்கு 100 ஜயம் கிடைக்கவில்லையா? அதேமாதிரி முனிஸிபல் எலெக்ஷனிலும் காங்கிரஸ் எல்லா ஸ்தானங்களையும் ஏன் அடைந்திருக்கக்கூடாது? காங்கிரஸுக்காகப் பயந்து ஒதுங்கியிருந்தவர்கள் கூட அத்துடன் போட்டிபோட்டு ஜயம் அடைய நேர்ந்த காரணமென்ன?

இதற்கு மூன்று காரணங்களுண்டு, குடந்தையில் ஸமீபத்தில் ரிவிஷன் காரணமாயும், சாக்கடை, ஜலவஸதி காரணமாயும் ஏராளமாக வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்த வரி உயர்வைக் காங்கிரஸ் வாதிகளில் பலர் ஆதரித்தனர். இதனால் பொது ஜனங்களுக்குக் காங்கிரஸிடம் நம்பிக்கை குறைந்தது. வேறு நல்ல கக்ஷியை அவர்கள் விரும்பலாயினர். இரண்டாவதாக, அட்ஹாக் கமிட்டியென்ற சிறிய சங்கம், ஸ்தலப் பிரமுகர்களைக் கலக்காமலும், அலக்ஷ்யம்செய்தும் தாங்களாகவே அபேக்ஷகர்களைப்பொறுக்கிவிட்டு, அவர்களையே ஆதரிக்கும்படி வோட்டர்களுக்கு ஆக்ஞையிட்டார்கள். ஸ்வய மரியாதையுள்ள கண்யமானவோட்டர்களுக்கு இந்த ஆக்ஞை மிகுந்த வருத்தத்தையும் ஆத்திரத்தையும் விளைத்ததில் அதிசயமில்லை. இதனால் வோட்டர்கள் அட்ஹாக் கமிட்டியின் ஆக்ஞைக்கு உள்பட விரும்பாமல் ஸ்வதந்திரமாக நடக்க இச்சித்தனர்.

இத்துடன் அட்ஹாக் கமிட்டியின் செய்கையால் உண்மையான சிறந்த காங்கிரஸ் ஊழியர்களும் விலக்கப்பட்டதால் அதிருப்தி அதிகரித்தது. இந்த இரண்டு காரணங்களைத் தவிர மூன்றாவது காரணம் முக்கியமானது. இப்போது காங்கிரஸ் ஆக்ஷியில் பல குறைகள் வெளிவந்துள்ளன. கடன் நிவாரணச்சட்டம், நிலவரிக்குறைவின்மை, அதிகவரி உத்தேசம் ஆகிய பலவழிகளால் ஜனங்களுக்கு சிரமம் அதிகமாகி வருகிறது. இதை எப்படி வெளிப் படுத்துவது? காங்கிரஸுக்குப் போட்டி போட்டு ஜன அபிப்பிராயத்தை வெளிப் படுத்தவேண்டியது அவச்யமாகிவிட்டது. மேலும் காங்கிரஸென்றால் அது எது சொன்னாலும் எது செய்தாலும் அப்படியே அதை அங்கீகரிக்க வேண்டுமென்ற மனப்போக்கை கலைக்கவேண்டும். காங்கிரஸ் அபேக்ஷகர்களுக்கு எதிராக நிற்கப் பயப்படும் கோழைத்தனத்தை விலக்கி தைர்யமூட்டவேண்டுமென்ற உத்தேசம் அநேக கல்விமான்களையும், அநுபவஸ்தர்களையுமுள்ள நகரத் தலைவர்களிடம் தோன்றியது.

ஆகையால், வெற்றி, தோல்விகளை மதியாது காங்கிரஸுக்கு எதிர் உண்டு என்பதைக்காட்டும் நோக்கமொன்றைக்கொண்டும் பல கனவான்கள் ஒன்றுசேர்ந்து "நகர நன்மை ஸங்கம்" என்ற ஸ்தாபனத்தை ஏற்படுத்தி அதன் பெயரால் அபேக்ஷகர்களை நிறுத்த முன்வந்தனர்.

#### ஸனாதநி அபேக்ஷகர்?

இந்த எலெக்ஷனில் மற்றொரு வேடிக்கை நடைபெற்றது. காங்கிரஸுக்கு எதிராக நின்ற மேற்படி ஸங்க அபேக்ஷகர்களில் இரண்டொருவர் ஸனாதநிகளாகயிருந்தது பற்றி காங்கிரஸ்காரர்கள் தங்கள் சூழ்ச்சிகளை யெல்லாம் செய்தனர். "ஸனாதனர் வீழ்க, வைதிகம் ஒழிக" என்று காங்கிரஸ்கார பிராம்மணர்கள், சிலர் பிச்சை வாங்கிப்பிழைக்கும் பிராம்மணச் சிறுவர்களையும், இரண்டொரு ஹரிஜன மதியர்களையும் சேர்த்துக்கொண்டு தெருத் தெருவாகச்சுற்றித் திரிந்து கத்தினர். ஆனால் இதற்குத்தக்கபடி புத்தி கற்பிக்கப்பட்டு மன்னிப்பும் மறுப்பும் கிடைத்து விட்டதால் இதை நாம் பெரிதாக்க விரும்பவில்லை.

ஆயினும் ஸனாதநிகளுக்கு முனிஸிபாலிடியில் என்ன வேலை? என்ற குதர்க்க வாதம் உபயோகப்படாது. அப்படியானால் காங்கிரஸுக்கும் முனிஸிபாலிடியில் என்ன வேலையென்று நாம் கேட்கலாமல்லவா? உண்மையில் காங்கிரஸை விட ஸனாதநிக்கு முனிஸிபாலிடியில் அதிக கார்யமுண்டு. அந்த விவாதம் இங்கு வேண்டாம். ஸனாதன ஸபைகள் தாங்கள் பிரதிநிதிகளை எங்கும் அபேக்ஷகராக நிறுத்தவில்லையென்பது கவனிக்கத்தக்கது.

#### நோக்கம் நிறைவேறிவிட்டது.

இவ்வாறு குடந்தை நகரப்பிரமுகர்கள் காங்கிரஸை எதிர்த்த நோக்கம் பலித்துவிட்டது. இவர்கள் 7, 8 ஸ்தானங்களைப் பிடித்தார்கள். போட்டியில்லாத விடங்களிலும் எலெக்ஷன் நடந்திருந்தால் இவர்கள் அதிக ஸ்தானத்தைப் பெற்றிருப்பார்கள். ஆகவே இவர்கள் காங்கிரஸுக்கு 8ஸ்தானங்களில் தோல்வி ஏற்படுத்தினார்கள். முன்னம் வரியேற்றத்திற்கு உடந்தையாயிருந்த காங்கிரஸ்வாதிகளே இப்போது வரியைக் குறைக்க உறுதி கூறவேண்டிய நிலைமை ஏற்பட்டது. காங்கிரஸுக்காவது, எதிர்ப்பாவது, என்று இறுமாந்திருந்தவர்கள் திடுக்கிட வேண்டியதாயிற்று. வீட்டுவாசலில் உட்கார்ந்தபடியே காங்கிரஸ் பெயரைச்சொல்லி வெற்றியடையலாமென்றிருந்தவர்கள் வீடு வீடாக ஏறிவேண்டியதாயிற்று. இங்குமங்கும் ஓடித்திரிய வேண்டியதாயிற்று. உள்ளூர் தலைவர்களால் கார்யஸித்தி ஏற்படாதென்று கண்டு வெளியூர் எம். எல். ஏ. க்களையெல்லாம் உதவிக்கு அழைத்து வரவேண்டியதாயிற்று. காங்கிரஸுக்கு எதிர்ப்பே இராதென்ற கனவு வீணாகியது. இதனால் காங்கிரஸின் எதிர்கக்ஷியாரின் நோக்கம் நிறைவேறிவிட்டது.

எதிர் கக்ஷியாரில் சிலர் தோற்றது நிஜமே, அது அவர்கள் எதிர்பார்த்ததே. முதற் தடவை எதிர்ப்பிலேயே காங்கிரஸை அடியோடு வீழ்த்தி விடலாமென்று அவர்கள் நினைத்து ஏமாந்தவர்களல்ல. ஜஸ்டிஸ் கக்ஷியுடன் காங்கிரஸ் போட்டி போட்டு எவ்வளவோ தடவையில் படுதோல்வியடைய வில்லையா? ஜஸ்டிஸை தோற்கடிக்க காங்கிரஸுக்கு எவ்வளவு காலம் வேண்டியிருந்தது? அது போலவே காங்கிரஸை தோற்கடிக்கவும் சிறிது காலம் வேண்டியது தான்.

இந்த எலெக்ஷனில் காங்கிரஸிடம் மூட அபிமானம் சிறிது குறைய ஆரம்பித்து விட்டதுதெளிவாகியது. அடுத்த தடவையில் வோட்டர் ஆதரவு இன்னும் அதிகம் குறைந்து ஜஸ்டிஸ் கக்ஷியின் கதி ஏற்படலாம். இப்போதே அதற்கு சூசகம் இல்லாமல் போகவில்லை.

வெற்றியடைந்ததாகச் சொல்லிக்கொள்ளும் காங்கிரஸ் அபேக்ஷகர்கள் தப்புவது தம்பிரான் புண்யமாகி விட்டது. பத்து, இருபது மெஜாரிடி வோட்டுகளிலேயே அவர்கள் ஜெயம் பெறவேண்டி வந்தது. புதிய எதிர் கக்ஷியாருக்கு மெஜாரிடி சிறிது குறைந்து விட்டாலும், அவர்களுக்குக்கிடைத்துள்ள ஏராள வோட்டுகளின் கணக்கைப்பார்த்தால் அவர்களுடையகொள்கைக்கு விசேஷஆதரவு இருப்பது தெளிவாகும். இதைக் காங்கிரஸ் வாதிகள் மறைக்காமல் எதிர்கால எச்சரிக்கையாகக்கொள்வது நலம். மேலும் ஜயித்தகாங்கிரஸ் வாதிகளில் பலருக்கு அவர்களுடைய ஸொந்தச்செல்வாக்கே ஜயகாரணமாயிற்று. காங்கிரஸல்ல. காங்கிரஸ் நிர்வாஹ அதிகாரிகள் தோல்வியடைந்ததால் இது உறுதியாகிறது.

எந்த வழியில் பரிசீலித்தாலும் வோட்டர்களிடையில் காங்கிரஸ் அபிமானம் குறைந்துவிட்டதற்கு இந்த எலெக்ஷன் முக்ய திருஷ்டாந்தமென்பதில் தடையில்லை. இந்த பெரிய மாறுதலையுண்டுபண்ணிய வழியில் புதிய கக்ஷியார் நல்ல வெற்றியடைந்தார்களென்றே சொல்லவேண்டும். யாரையும், எதையும், அஹம்பாவத்துடன் அலக்ஷ்யமாகப் பேசும் வழக்கமுள்ள காங்கிரஸ் வாலாக்கள் இந்த அபாய நிலைமையைக் கவனித்து, தங்களைத் திருத்திக்கொள்ளுவது நலம். பெரிய காங்கிரஸ் தலைவர்களும், காங்கிரஸ் அபிமானம் கார்யத்தில் குறைந்துவரும் அதிருப்திகரமான நிலைமையை பரிஹரிக்க முன்வர வேண்டும்.

மற்றபடி இந்த எலெக்ஷனில், பால்மணம் மாறாத சிறுவர்கள், ஸ்திரீகள் இவர்களை உபயோகப்படுத்தியதையும், வேஞ்சப்பேயின் தாண்டவத்தையும் வர்ணிப்பது இப்போது அநாவச்யகமானதால் அதைப்பற்றிப் பேசாமல் விட்டுவிடுகிறோம்.

---

#### அறிவிப்பு.

ஸ்ரீ சங்கரஜயந்தி உத்ஸவக் கடிதங்கள்.

ஸ்ரீ சங்கரஜயந்தி உத்ஸவங்கள் அங்காங்கு நடக்கப்போவதை வெளியிடும்படி நமக்கு அநேகக் கடிதங்கள் கிடைத்திருக்கின்றன. அவை பெரும்பாலும் இந்த வாரத்திலேயே வந்திருப்பதாலும், அக்கடிதங்களை வெளியிடுமுன் ஜயந்தி உத்ஸவம் நடந்துவிடுமாதலாலும், காலாதீதமாக பிரசுரிப்பதில் பிரயோஜனமில்லையென்று நிறுத்தி விட்டோம். நடந்தவற்றை சுருக்கமாக எழுதியனுப்பினால் பிரசுரிக்கிறோம். மானேஜர்.

# "ஆர்யாசார ரஹஸ்யம்."

(பிராணயாமம்.)

(பிரும்மஸ்ரீ T. V, தர்மராஜ கனபாடிகள் வேதபாடசாலை திருக்கோகர்ணம்.)

(ஆர்யர்காள்! பிரும்மஸ்ரீ கு. ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் அவர்களைப் பத்திராதிபராய்க் கொண்டு நடந்து வந்த "பிரும்மவித்யா" என்னும் பத்திரிகையில் நமது மத விஷயமாக பல உண்மைகள் பதிந்துகிடக்கின்றன. அவ்விஷயங்களை நமது, "ஆர்யதர்மத்தில்" வெளியிட்டால் (மதாசாரப் பத்திரிகை உலகிற்கு) உபகாரமாக இருக்கும் என்று நம்பி, சமயம் நேர்ந்தபோது ஒவ்வொன்றாக வெளியிடலாம் என்று எனது சிற்றறிவிற் கெட்டியதாலும், அப்பத்திரிகை நடந்து சுமார் 40-வருடங்களுக்கதிக மிருக்கலாமாகையாலும், அதில் காணப்படும் விஷயங்கள் மிகவும் நமது (வைதிக) மதத்திற்கு அவசியமானபடியாலும், அவ்விஷயங்களை எடுத்து (தற்காலத்திற்கு ஒவ்வாத சிற்சில வரிகளை விலக்கி) வெளியிட முன்வந்தேன். இதிலும் என் அறியாமல் ஏதேனும் சொற்குற்றமிருந்தால் பிரும்மஸ்ரீ "ஆர்யதர்ம" பத்திராதிபர் அவைகளைத் திருத்தி வெளியிடும்படி வேண்டுகிறேன்.)

ஐயா! இப்பொழுது பிராணயாமத்தைப் பற்றி எழுதவேண்டியது முறை. "பிராணயாமம்" என்னும் நற்கிரியை எல்லாக் கன்மங்களுக்கும் அங்கம். ஒவ்வொரு கன்மங்களிலும் தர்மசாஸ்திரக்காரர் "பிராணனை அடக்கு" எனத் தொடக்கத்திற்றானே சொல்லுகிறார்களே அன்றி "ஓம்பூ:" முதலிய மந்திரங்களைச் சொல்லு என்று சொல்லவில்லை. ஆதலால் இதன் பயன் பிராணனை அடக்குதலேயன்றி வேறில்லை இப்பிராணயாமத்தால் மனிதருக்கு ஆயுள் விருத்தியாகும். எங்ஙனமெனில் உலகத்தில் மனுஷ்யர்கள் பிரார்த்திக்கவேண்டிய வஸ்துக்களுள் ஆயுளே முதன்மைபெற்றது அஃது ஒன்றில்லாவழி மற்றேதும் பயன் படுவதில்லை. ஆதலாற்றான் வைத்தியத்தில் "ஆயுளையே முதலில் பிரார்த்திக்கவேண்டும். தானில்லாவிடம் மற்றேதிருந்தென்ன" என்று சொல்லப்பட்டது. ஆதலால் பிராணயாமத்திற்கு நியதமான பலன் ஆயுட்பெருக்கமே. உலகத்தில் யோகிகளும் வைத்யரும் ஆராய்ந்து நிச்சயித்தபடி ஸ்வாஸம் அதிகம் செலவழியா வழியேயாகும் அது ஆயுட்பெருக்கத்துக் கிடம் என்பதுண்மை. உலகில் ஒவ்வொரு ஜந்துவும் பிறக்கும் காலத்திற்றானே அதனது கன்மத்துக் கேற்றபடி ஒருவித ஆயுள் ஏற்பட்டிருக்கிறது. ஆயின் ஆயுள் என்பது யோகிகள் நிச்சயித்தபடி ஒரு தினத்திற்கு இருபத்தோராயிரத்துநூறு (21100) சுவாஸமே. இஃது ஒரு தினமாக ஆயுளிற் கணக்கிடப்படுகிறதேயன்றி ஸூர்யன் சஞ்சாரத்தைக்கொண்டு ஆயுளுக்குக் கணக்கேற்படவில்லை. இந்த சுவாஸத்தை புத்திமானாகவுள்ளவன் கிரமமாய்க்காப்பாற்றி வருவானானால் அது அவனுக்கு ஏற்பட்ட ஆயுள் கெளிக்கணக்கான தினங்களில் அதிகம் இருக்கக்கூடுமாகையால் அவன் தீர்க்காயுளுள்ளான் எனக் கணக்கிடப்படுவான். இவ்விதம் நாடோறும் அப்பியாஸம் செய்து மிகுதிபிடித்த சுவாஸங்கள் எண் பெருகி, இவனது ஆயுளை வளர்க்கும். ஒரு பிராணயாமத்தை முறைப்படி சாமான்னியமாய் அனுஷ்டித்தாலும் அதனால் பதினாறு சுவாஸங்கள் சங்கிரகிக்கப்படுகின்றன. இனி தினந்தோறும் செய்யவேண்டியதாக விதிக்கப்பட்ட நற்கருமங்களைப் பூர்ணமாக அனுஷ்டிக்கும் அந்தணர்க்குத் தினந்தோறும் (100) பிராணயாமங்கள் ஆகும். எல்லா கன்மங்களை விட்டு சந்தியாவந்தனமாவது செய்து வருபவனுக்குத் தினம் மூனாறு தடவைகளில் (தடவைக்குப் பதினான்காக) நாற்பத்திரண்டு ஆகும். இனி 100 பிராணயாமங்களுக்கு இருபது விநாடிகளும் மூன்றில் ஒருபாகமும் ஆயுள் கிடைக்கின்றது. இவ்விதம் ஏழாவது வயதுமுதல் தனது ஆயுள்வரையில் செய்தால் சரீர ஆரோக்யமும் ஆயுள் விருத்தியும் ஏற்படும்.

சுமார் 100 வயது கன்மத்தால் பெற்றவன் மறுபடி வருஷம் ஒன்று ஜீவிக்கலாம். இஃது அதி சுலபத்தில் ஆயுளை சம்பாதிக்கும் வழி. அனேக யோகிகள் அப்பியாஸ பலத்தால் தினக்கணக்காக சுவாஸத்தைக் கூட்டித் தமக்குக் கன்மவசத்தால் கிடைத்த சொற்பவாயுளை வெகுகாலம்வரையில் காத்து வந்து அதே சரீரத்தில் பல சித்திகளையும் பெற்றுவருகிறார்கள்.

ஆரியர்களே! அநாரியர் அறியாததும், ஆரியர்மட்டும் அறியக்கூடியதும், அனுஷ்டிக்கக்கூடியதுமான, இந்த ஆயுளளிக்கும் கற்பகத்தை ஒழித்திடல் அறிஞர்களுக்கு அழகா! இஃதிங்ஙனமிருக்க, சிலர் இதன் உண்மையறியாது கூறும் கூற்றுக்களாவன:- உலகத்தில் சுவாசத்தை அடக்கி வருவதால் ஆயுள் விருத்தியடைவது நிச்சயமல்ல. மேலும் ஓடித் திரிந்துகொண்டிருப்பவனும் நீண்ட ஆயுளைப் பெற்று இருக்கக் காண்கிறோம். பிராமணரல்லாத மற்றவர்க்குப் பிராணயாமமின்மையால் அவர்களிலுமனேகர் தீர்க்காயுளைப்பெற்று நிற்றலால் அது நம்பத்தகுந்ததல்ல, என்பதும், பிராணயாமம் செய்கிறவர் நீடித்து ஜீவிப்பதும் நியமமல்ல என்பதுமே.

இதற்கு விடை வருமாறு:— உலகத்தில் அவரவர் சம்ஸ்காரங்களுக்கேற்றபடி கன்மாக்களும், அதிகாரங்களும் ஆன்றோர்களால் அன்றே பிரிக்கப்பட்டு, வழங்கி வருகின்றன. இவற்றுள் அரசர்க்கும் வாணிபருக்கும் பிராணயாமமுண்டு. மற்றவர்க்கு வேறு வழியில் தொழிலதிகமாகவே, அது கொண்டே பிராணயாமமன்றியே ஆயுள் கிடைக்க வழி இருக்கின்றது. அங்ஙனமே ஸ்திரீகளும் தன்னறத்தை விடாதொழுகின் அவருக்கு அது மிகவும் நற்கதியும், நல்லாயுளும் கொடுக்கவல்லதே. உலகவியல் இது:— எவனுக்கு சித்தத்தில் சிந்தை அதிகமில்லையோ, அவனுக்குச் சுவாஸம் (கயில் லோனுக்குச்சிலவழிவதுபோல) சிலவழியும் மனதில் சிந்தை அதிகரித்தால் உஷ்ணம் பெருகி சுவாஸம் மிகவும் லேசாக ஓடும். இது அறிவுக்குப் புலப்படா. நறுமணம் வீசும் நன்மலர்களை முகர்ந்தால் சுவாஸம் சிறிது தடைப்படும். கடுமையான வேலை செய்யுமிடமும் சுவாஸம் கட்டுப்படும். ஓடுவதாலும் (ஓடுகிறவரையிலும்) சுவாஸம் கட்டுப்படும். ஓடுவது, குதிப்பது, நீந்துவது இவையெல்லாம் மூச்சை அடக்கியே முடிக்கவேண்டியவை. ஓடுவதால் சுவாஸம் அதிகம் தொலைவதாக எண்ணி அவனுக்கு ஆயுள் குறையவேண்டுமெனப் பூர்வ பக்ஷியார் கூற்று அவலமானதாகும். இனி ஓடி நின்றவுடன் வேகமாக சுவாஸம் ஒழிந்துபோக வில்லையோவெனில் அக்காலத்தில் செல்லவேண்டிய சுவாஸத்திற்கு வேகம் மட்டும் அதிகமாவதால் ஓடினகாலத்தில் தடைப்பட்ட சுவாஸங்கள் அவ்வளவும் தொலையாது மிகுதிபடத் தடை ஏது? ஒரே வேளையில் இரண்டு சுவாஸம் வெளியேறாதது உண்மையல்லவா? ஆயின் சிலகாலங் கணக்கிட்ட ஓட்டம் ஆயுளைக்கொடுக்கத் தடை இல்லை. இனி எதையும் ஓர் அளவு மீறிச் செய்தால் அது விபரீத பயனைக்கொடுக்க சுவாஸக் குழல்களை அலங்கோலப்படுத்திவிடும். நல்லுணவு கிடைத்தவழி அதை அளவுமீறி அகாலத்தில் உட்கொண்டால் அது விபரீதப்பயனைத் தாவில்லையா? ஆகையால் எதற்கும் ஓர் அளவும் காலமும் வேண்டும். ஆயின் முற்கூறிய பூர்வ பக்ஷியார் முதல்ஹேது இனி ஒப்பத்தக்கதல்ல. இனி முன் வர்ணத்தவரின் வேறானவர்க்குப் பிராணயாமப் பயனும் வேண்டுமானால், பிராணயாமம் அவர் செய்யவும் செய்யலாம். செய்வதும் உண்டு. ஆயின் பிராணயாமத்தால் ஆயுள் பெருகத் தடை ஏதுமில்லை. எவ்வித வழக்கமும் பாலியத்தில் செய்தாலன்றி பயன்படாதாதலால் அதைப் பாலியத்தில் அதாவது, ஏழாவது வயதிற்றானே தொடங்கும் வழக்கம் நம் நாட்டில் ஏற்பட்டு வருகிறது. வயதாய் சரீரம் நிடப்பட்டால் பிறகு மேல்கூறிய வழக்கஞ்செய்வது சாத்யமல்ல. குழந்தைப் பருவம் ஒழிந்தவுடனே குமாரப் பருவத்திற்றானே இதைத் தொடங்கவேண்டியே ஏழாவது வயதில் உபநயனம் செய்வித்தல் ஆரியர் வழக்கம் அக்காலமே புத்தி பரிபாகமடைந்துவரத் துவக்கி, மெல்ல விஷயங்களைக் கண்டறிய அவாநிலையுற்றுத் திரியும். அச்சமயம் அதற்கு நேர்ந்த எவ்விஷயமும் அனுஷ்டானத்திற்கு வந்து புத்தியில் நன்கு பதியும். ஆயின் அதி சுலபமாய் ஆயுள் பெருக்கம், ஆரோக்யமிகுதி, ஆன்மரக்ஷை, முதலிய பல பயன்கள் அடைவதை எப்புத்திமான் தவிர்த்திடுவர்.

அப் பிராணயாமம் "ஸகர்ப்பம்" என்றும், "அகர்ப்பம்" என்றும் இருவகைப்படும். அதில் மூன்று அம்சங்கள் உண்டு. அவை 'ரேசகம்', 'பூரகம்', 'கும்பகம்', எனப்படுவன. இவ்விருவகைப் பிராணயாமங்களின் இயல்பும், அதன் பயன்களும், அதன் உள் வேற்றுமைகளும், முறையே பின்னால் எழுதுவாம்.

(பிரும்மவித்யா)

(தொடரும்.)

## கட்டாய ஹிந்தி.

### 125 பள்ளிக்கூடங்களில் அநுஷ்டானம்.

சென்னை கவர்மெண்டார் தமிழ் ஜில்லாக்களிலும் மலையாளத்திலும் 125 பள்ளிக்கூடங்களில் கட்டாய ஹிந்தியை அநுஷ்டானத்திற்கு கொண்டு வர உத்திரவு செய்து விட்டார்கள்.

ஹிந்தி உபாத்தியாயர்கள் சம்பளத்திற்காக 20 ஆயிரம் ரூபாய் கிராண்டாக ஒதுங்கிவைக்கப்பட்டிருக்கிறது.

குடந்தை டவுன் ஹைஸ்கூலிலும் இது அநுஷ்டானத்திற்கு வரும்.

## காந்தி, ஜின்னா ஸம்பாஷணை.

ஹிந்து, முஸ்லிம் ஒற்றுமைத்திட்டங்களைப்பற்றி ஸ்ரீமான் காந்தி பம்பாய் போய் ஜின்னாவைச்சந்தித்துப்பேசினார். முக்ய விஷயங்களைப்பற்றி பூர்வாங்க ஆலோசனை நடந்தது. மேற்கொண்டு பேச்சுநடத்த வேண்டியதற்கான அடிப்படையான அம்சங்கள் ஆலோசிக்கப்பட்டன. இதன்மேல், இருவரும், இரு ஸமூஹத்தினரின் அபிப்பிராயங்களைத்தெரிந்துகொண்டு பிறகு கலந்து பேசுவார்களாம். மே மாத மத்தியில் மீண்டும் ராஜிப்பேச்சு நடக்கும்.

ஸுபாஷ்சந்திர போஸை ஜின்னாவுடன் பேச காந்திஜீ அழைத்திருக்கிறார். காந்திஜீ எல்லைப்புறச் சுற்றுப்பிரயாணத்திற்குச் சென்றிருக்கிறார்.



# ஆலயப்பிரவேசக் கண்டனக்கூட்டம்.

## கும்பகோணம்.

சென்னை சட்டசபையில் பிரேரேபிக்கப்படுவதாக இருக்கும் ஆலயபிரவேச மசோதா பொதுஜன ஸமூஹ ஸௌகர்யத்தடை நிவாரண மசோதா, இந்தியா சட்டசபையில் சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட பால்ய விவாகத்தடுப்பு திருத்தசட்டம் இவைகளை ஆக்ஷேபித்து, பொது ஜனங்களால் மகஜர்கள், சென்னை பிரதம மந்திரி, டாக்டர் ராஜன், இரண்டு சட்டசபைத் தலைவர்கள், பிரதிநிதிகள், கவர்னர், வைஸிராய், இந்தியா சட்டசபை பிரதிநிதி, காங்கிரஸ் தலைவர் சுபாஷ் சந்திரபோஸ் இவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

மேலும் நகர தேவஸ்தானங்களின் சார்பாகவும் மத விஷயங்களில் அரசாங்கம் தலையிடக்கூடாது என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மகஜர்கள் அனுப்பப்பட்டு வருகின்றன.

மேற்படி மகஜர்களில் ஸ்ரீமான் K. R. M சிங்காரம் செட்டியார், T. S. ராஜகோபாலய்யங்கார், O N. சுப்ரமண்ய அய்யர், P. O. சிவராமய்யர் முதலானவர்களும் கையெழுத்து செய்திருக்கிறார்கள்.

மதவிஷயங்களில் புகுந்து சட்டங்கள் செய்வதற்கு தேர்ந்தெடுக்கப்படாதவர்களும் அதிகாரம் பெறாதவர்களும், பலதரப்பட்ட அபிப்ராயபேதங்கள், மதங்கள் இவைகளை அனுஸரிப்பவர்களும் அடங்கிய சட்டசபைகள் தனிப்பட்ட ஒரு மதத்தில் தலையிடுதல் சரியல்லவென்பது நாளுக்குநாள் அதிகமாக உணரப்பட்டு, ஆக்ஷேபங்களும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

ஆர். நடராஜன்.

## ஸூர்யனார் கோவில்.

இப்பவும் ஆடுதுறைக்கடுத்த ஆதித்யபுரமென்னும் ஸூர்யனார்கோவில் கிராமத்தின் மஹாஜனங்கள் சென்னை சட்ட சபையில் பிரேரேபிக்கப்பட்டிருக்கிற பஞ்சம ஆலயப்ரவேச மசோதா இவைகளைச் கண்டித்துச் சென்னை கவர்ன்மெண்டாருக்கும் மத்திய சர்க்காருக்கும், கவர்ன்மெண்டார் மத விஷயங்களில் தலையிடக்கூடாதென்று அநேக கையெழுத்துகள் அடங்கிய மஹஜர்கள் அனுப்பியிருக்கிறார்கள்.

## திருவிசநல்லூர்.

சரித்திரப் பிரஸித்தமான ப்ரம்மஸ்ரீ அய்யர்வாளால்வாசம் செய்யப்பெற்றதும் கும்பகோணத்திற்கு மூன்று மைல் கிழக்கே காவேரிநதி தீரத்திலுள்ளதுமான திருவிசநல்லூர் கிராமவாசிகள் சென்னை சட்டசபையில் விவாதத்திற்கு வந்திருக்கிற ஆலயப்பிரவேச மசோதாவை பலமாக ஆக்ஷேபித்தும் சர்க்கார் மதசம்பந்தமான காரியங்களில் ப்ரவேசிக்கக்கூடாதென்றும், கனம் சென்னை ப்ரதம மந்திரி அவர்களுக்கும், கனம் ராஜன் அவர்களுக்கும், சென்னை சட்டசபை அக்கிராஸனாதிபதி அவர்களுக்கும் மேன்மை தங்கிய கவர்னர் பிரபு அவர்களுக்கும், டில்லி சட்டசபை அக்கிராசனாதிபதி அவர்களுக்கும், வைஸிராய் அவர்களுக்கும் முறையே மஹஜர் செய்துகொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

ஒரு நிருபர்

## அக்ரஹாரக் கொந்தகை.

இவ்வூர் வாசிகள், சென்னை சட்டசபையில் ராவ்பகதூர் M. C. ராஜா அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் பஞ்சம ஆலயப்ரவேச மசோதா ஆசாஸ்திரீயமென்றும், மதத்தில் தலையிடுவதாகவுமிருப்பதால் மேற்படி மசோதா சட்டமாகாதிருப்பதற்கு வேண்டிய முயற்சிகளை தேடும்படி வேண்டிக்கொண்டு, சென்னை கனம் பிரதம மந்திரி அவர்களுக்கும் அந்தத் தொகுதியின் சட்டசபை பிரதிநிதி அவர்களுக்கும், அகில இந்தியா காங்கிரஸ் பிரஸிடண்ட் அவர்களுக்கும் மேன்மைதங்கிய சென்னை கவர்னர் அவர்களுக்கும் மஹஜர்செய்துகொண்டிருக்கிறார்கள்.

ஒரு நிருபர்.

## திப்பிராஜபுரம்.

கும்பகோணத்திலிருந்து நாலு மைலுக்கருகிலுள்ள திப்பிராஜபுரம் கிராமத்தில் வசிக்கும் ஜனங்கள் சென்னை சட்டசபையில் ஆலோசனைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கும் மதவிரோத மசோதாக்களை ஓர் பொதுக்கூட்டத்தில் கண்டித்தும், மஹஜர் மூலம் மேற்படி மசோதாக்களுக்கு தங்களுடைய ஆக்ஷேபணையை, சென்னை சர்க்காரிலுள்ள கனம் பிரதம மந்திரி அவர்களுக்கும் இன்னும் அநேக உத்தியோகஸ்தர்களுக்கும், உத்தியோகபற்றில்லாத சட்டசபை பிரதிநிதிகளுக்கும் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

ந. நி.

## தென்னல்குடி.

இக்கிராமவாசிகளும் அருகாமையிலுள்ள விட்டலூர் கிராமவாசிகளும் சமீபத்தில் மதராஸ் சட்டசபையில் ஆலோசனைக்கு வந்திருக்கிற M. C. ராஜாவின் மசோதாக்களை சட்டமாகக்கூடாதென்று மத்திய சர்க்காருக்கும் சென்னை கவர்மெண்டாருக்கும் மனுச்செய்துகொண்டிருக்கிறார்கள்.

ந. நி.

## கோவிந்தபுரம்.

தஞ்சை ஜில்லா ஆடுதுறை ரயில்வேஸ்டேஷனுக் கருகாமையிலுள்ள கோவிந்தபுரம் என்னும் கிராமத்து மஹாஜனங்கள் சென்னை சட்ட ஸபையில் ராவ்பகதூர் எம். ஸி. ராஜாவால் கொண்டு வரப்பட்டிருக்கும் ஆலயப்பிரவேச மசோதாவை மிகவும் கண்டித்து சென்னை கனம் பிரதம மந்திரி அவர்களுக்கும் கனம் ராஜன் அவர்களுக்கும் மேன்மை தங்கிய கவர்னர் அவர்களுக்கும் மகஜர் செய்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

ந. நி.

## தியாகஸமுத்திரம்.

தஞ்சை ஜில்லா ஸ்வாமிமலைக்கடுத்த தியாகசமுத்திர வாஸிகள் சென்னை சட்ட ஸபையில் எம்.ஸி. ராஜாவினால் கொண்டுவரப்பட்ட ஆலயப்பிரவேச மசோதாவைக் கண்டித்து சென்னை கனம் பிரதம மந்திரி அவர்களுக்கும் கனம்Dr. ராஜன் அவர்களுக்கும் நமது மேன்மை தங்கிய கவர்னர் அவர்களுக்குமஹஜர்செய்திருப்பதாகத்தெரிகிறது

ந. நி.

## நல்லூர்.

தஞ்சை ஜில்லா பாபநாசத்திற்கு சமீபத்திலுள்ள நல்லூர் கிராம ஜனங்கள் சென்னை சட்ட ஸபையில் எம். ஸி. ராஜாவினால் கொண்டுவரப்பட்ட ஆலயப்பிரவேச மசோதாவைக் கண்டித்து சென்னை பிரதம மந்திரி அவர்களுக்கும் மேன்மை தங்கிய வைஸிராய் அவர்களுக்கும் அகில இந்திய நேஷனல் காங்கிரஸ் அக்ராஸனாதிபதி அவர்களுக்கும் மஹஜர் செய்திருப்பதாகத்தெரிகிறது.

ந. நி.

## குளத்தங்கநல்லூர்.

திருச்சி ஜில்லாவில் ஜெயங்கொண்டம் சமீபத்திலுள்ள குளத்தங்க நல்லூர் வாஸிகள் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள் கையெழுத்தடங்கிய ஒரு மஹஜர் சென்னை சட்ட சபையில் எம். ஸி. ராஜாவால் கொண்டுவரப்பட்ட Civic Disabilities Removal Bill of the Temple Entry Bill இவைகளைக்கண்டித்துப் பிரதம மந்திரி அவர்களுக்கும் வைஸிராய் அவர்களுக்கும் கனம் Dr. ராஜன் அவர்களுக்கும் மஹஜர் செய்திருக்கிறார்கள்.

ந. நி.

## மஹாதானபுரம்.

திருச்சி ஜில்லாவைச்சேர்ந்த மஹாதானபுரம் மாயனூர் இவ்விரண்டு கிராம வாஸிகள் அநேகம் கையெழுத்தடங்கிய ஒரு மஹஜரைச் சென்னைசட்டஸபையில்ஆலோசனைக்கு வந்திருக்கும் ஆலயப்பிரவேச மசோதாவைத் தடுக்க வேண்டுமென்று பிரதம மந்திரி அவர்களுக்கும் வைஸிராய் சென்னை கவர்னர் இவர்களுக்கும் மஹஜர் செய்திருப்பதாகத்தெரிகிறது.

ந. நி.

## கிருஷ்ணராயபுரம்.

### ராமாயண உபந்யாஸம்.

மேற்படி கிராமத்தில் பாஷ்ய பாவக்ஞ ஸ்மிருதி பூஷண வாசுர் பிரம்ம-ஸ்ரீ வெங்கிடராம சாஸ்திரிகளவர்களால் பங்குனிமீ 12உ முதல் வால்மீகிராமயணமானது ஆரம்பிக்கப்பட்டு பங்குனிமீ 22உ ராமஜனனமானது நடந்தது. மேற்படி சாஸ்திரிகளுடைய உபந்யாசத்திற்கு பக்கத்துக் கிராமங்களில் நின்றும் அநேக ஜனங்கள் கூட்டம் கூட்டமாகவந்து சிரவணாநந்தத்தை அடைகிறார்கள்.

S, ராமசுந்திரேஸ்வரன்.


## விளம்பரம்.

சென்னை மாகாணத்தில் ஸனாதந தர்ம பிரசாரம் செய்ய சிறந்த வாக்குள்ளவர்களாயும் அனுஷ்டாதாக்களாயும் ஊக்கமுள்ளவர்களாயுமிருக்கிற பண்டிதர்கள் தேவை. யோக்யதானுசாரமாய் ஸம்பாவனை செய்யப்படும். அடியில்கண்ட விலாசத்துக்கு எழுதிக்கொள்ளவும்.

என். நடேசய்யர்
அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க கார்ய அத்யக்ஷர்
55 தமிழ் சங்கம் ரோட். மதுரை.

## மேலயூர்.

கும்பகோணத்திலிருந்து காரைக்கால் போகும் ரஸ்தாவிலுள்ள மேலயூர் கிரும மஹா ஜனங்கள் ராவ்பஹதூர் M. C. ராஜாவால் சென்னை கீழ் சட்டஸபையில் ப்ரேரேபிக்கப் பட்டிருக்கிற ஆலயப்ரவேச மசோதாவை பலமாகக் கண்டித்தும் ஷை மசோதாக்களைச் சட்டமாக்கக்கூடாதென்றும் சென்னை கனம் பிரதமமந்திரி அவர்களுக்கும், சட்டசபை பிரதிநிதிகளுக்கும். இத்தொகுதியின் அகில இந்திய சட்டசபை பிரதிநிதியான கே. சந்தானம் அவர்களுக்கும். மேன்மை தங்கிய வைஸிராய் பிரபு அவர்களுக்கும், ஸ்ரீஜத் சுபாஷ் சந்திரபோஸுக்கும் அநேகம் கையெழுத்துக்களடங்கிய மகஜர்கள் மூலம் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். மகஜர்களின் எண்ணிக்கையில் பிராம்மணரல்லாதார்களே அதிகமென்று தெரிகிறது.

நமது நிருபர்.

## முடிகொண்டான்.

நன்னிலம் டவுனுக்கு அருகாமையிலுள்ள தனவந்தர்களாகிய முடிகொண்டான் கிரும த்தின் மகாஜனங்கள் பொதுக்கூட்டத்தின் மூலமாகவும், மகஜர் மூலமாகவும், மதசம்பந்தமான காரியங்களில் தலையிடுவதான, சென்னை சட்டசபையில் ஸிலெக்ட் கமிட்டிக்கு விடப்பட்டிருக்கும் Civic Disabilities Removal Bill யும் ஷை சபையில் ஆலோசனைக்கு வந்திருக்கும் பஞ்சமர் ஆலயப்ரவேச மசோதாவையும் கண்டித்தும் ஷை மசோதாக்களை சட்டமாக்கக்கூடாதென்றும் கவர்ன்மெண்டார் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். கீழ்கண்டவர்களுக்கு அநேகம் கையெழுத்துக்களடங்கிய மஹஜர்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

1. சென்னை கனம் பிரதம மந்திரி அவர்கள், 2. கனம் T. S. S. ராஜன், 3. சென்னை சட்டசபை அக்கிராஸனாதிபதி, 4. சென்னை Legislative Council அக்கிராசனாதிபதி. 5. இத்தொகுதியின் சென்னை சட்டசபை பிரதிநிதி, 6. இச் ஜில்லா Legislative Council பிரதிநிதிகள், 7. மேன்மைதங்கிய சென்னை கவர்னர் அவர்கள், 8. மேன்மை தங்கிய கவர்னர் ஜனரல் அவர்கள், 9. இச் ஜில்லாவில் அகில இந்திய சட்டசபை பிரதிநிதி, 10. அகில இந்திய சட்டசபை அக்கிராஸனாதிபதி, 11. அகில இந்திய ராஜாங்க சபையின் அக்கிராஸனாதிபதி, 12. அகில இந்திய காங்கிரஸ் அக்கிராஸனரான ஸ்ரீஜத் ஸுபாஷ் பாபு.

## தேவஸ்தான டிரஸ்டிகளின் ஆக்ஷேபம்.

கீழ் கண்ட தேவாலயங்களின் தர்மகர்த்தாக்கள் (Trustees) சென்னை சட்ட சபையில் ஆலோசனைக்குக்கொண்டு வரப்பட்டிருக்கும் எம். ஸி. ராஜாவின் பஞ்சம ஆலயப்பிரவேச மசோதாவை பலமாகக் கண்டித்து கனம் சென்னை பிரதம மந்திரி ஸி. ராஜகோபாலாசாரி அவர்களுக்கு மனுச்செய்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

1. ஸ்ரீ சாரங்கபாணி பெருமாள் தேவஸ்தானம் கும்பகோணம். 2. ஸ்ரீ ஆதி கும்பேச்வர ஸ்வாமி தேவஸ்தானம். 3. ஸ்ரீசோமநாத சுவாமி தேவஸ்தானம் 4. ஸ்ரீ காசி விச்வநாத சுவாமி தேவஸ்தானம். 5. ஸ்ரீ காளஹஸ்தீச்வரர் தேவஸ்தானம். 6. ஸ்ரீ கைலாசநாதர் தேவஸ்தானம். 7. ஸ்ரீ ராஜகோபால சுவாமி தேவஸ்தானம். 8. ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம். 9. ஸ்ரீ கன்னிகா பரமேச்வரி தேவஸ்தானம். 10. ஸ்ரீ சோமேச்வரர் தேவஸ்தானம். 11. திருக்கணித்தட்டை ஸ்ரீ வேதபுரீச்வரர் தேவஸ்தானம். 12. திருவள்ளியங்குடி ஸ்ரீ கோலவல்லிராமன் தேவஸ்தானம். 13. சௌகார்பேட்டை ஏகாம்பரேச்வரர் தேவஸ்தானம். 14. ஆலங்குடி ஆபத்சகாயேச்வரர் தேவஸ்தானம். 15 முடிகொண்டான் ஸ்ரீ காசி விச்வநாத சுவாமி தேவஸ்தானம். 16. கடகம்பாடி ஸ்ரீ வாசுதேவஸ்வாமி தேவஸ்தானம். 17. மாதிரிமங்கலம் ஸ்ரீ கைலாசநாதர் தேவஸ்தானம். 18. புலியூர் வியாப்ர பரமேச்வரர் தேவஸ்தானம். 19. அகரக்கொந்தகை ஸ்ரீ கைலாஸநாதர் கோதண்ட பெருமாள் தேவஸ்தானங்கள். 20. தாடாளங்கோயில் (சீர்காழி) ஸ்ரீ ருமஸ்வாமி பெருமாள் தேவஸ்தானம். 21. காஞ்சிபுரம் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானம்.

## சென்னைமாகாண முனிஸிபல் தேர்தல் முடிவு.

சென்னை மாகாணத்திலுள்ள முக்கிய நகரங்களில் முனிசிபல் தேர்தலில், காங்கிரஸ்காரர்களும், காங்கிரஸ் அல்லாத இதரர்கள் கைப்பற்றிய ஸ்தானங்களின் எண்ணிக்கை பின்வருமாறு:—

உடுமலைப்பேட்டை:— மொத்த ஸ்தானங்கள் 20. இருபது ஸ்தானங்களும் காங்கிரஸ் கைப்பற்றியது.

விருதுநகர்:— மொத்த ஸ்தானங்கள் 24. காங்கிரஸ் 22. இதரர்கள் 2.

திருப்பூர்:— மொத்த ஸ்தானங்கள் 16. காங்கிரஸ் 11. இதரர்கள் 5

கண்ணனூர்:— மொத்தஸ்தானங்கள் 24. காங்கிரஸ் 17. இதரர்கள் 7.

தலைச்சேரி:— மொத்த ஸ்தானங்கள் 24. காங்கிரஸ் 11. இதரர்கள் 13.

மங்களூர்:— மொத்தஸ்தானங்கள் 32. காங்கிரஸ் 28. இதரர்கள் 4.

கூனூர்:— மொத்த ஸ்தானங்கள் 12 இதரர்கள் 12.

அனந்தபூர்:— மொத்த ஸ்தானங்கள் 16. காங்கிரஸ் 9. இதரர்கள் 7.

நெல்லூர்:— மொத்த ஸ்தானம் 28. காங்கிரஸ் 18 இதரர்கள் 10.

ராஜமகேந்திரம்:— மொத்த ஸ்தானங்கள் 32 காங்கிரஸ் 19 இதரர்கள் 13.

இந்துப்பூர்:— மொத்த ஸ்தானங்கள் 16. காங்கிரஸ் 9 இதரர்கள் 7.

செங்கல்பட்டு.— மொத்த ஸ்தானங்கள் 16. காங்கிரஸ் 2. இதரர்கள் 14.

நாகப்பட்டணம்:— மொத்தஸ்தானங்கள் 28. காங்கிரஸ் 19. இதரர்கள் 9.

கும்பகோணம்:— மொத்த ஸ்தானங்கள் 32. காங்கிரஸ் 24. இதரர்கள் 8.

கடலூர்:— மொத்த ஸ்தானங்கள் 32. காங்கிரஸ் 16. இதரர்கள் 16

ஸ்ரீரங்கம்:— மொத்த ஸ்தானங்கள் 20 காங்கிரஸ் 12. இதரர்கள் 8.

கரூர்:— மொத்த ஸ்தானங்கள் 16. எல்லா ஸ்தானங்களையும் காங்கிரஸே கைபற்றியது.

சித்தூர்:— மொத்த ஸ்தானங்கள் 20. காங்கிரஸ் 15. இதரர்கள் 5.

மாயவரம்: மொத்த ஸ்தானங்கள் 24 காங்கிரஸ் 21. இதரர்கள் 3.

தஞ்சாவூர்:— மொத்த ஸ்தானங்கள் 32. காங்கிரஸ் 20 இதரர்கள் 12.

விழுப்புரம்:— மொத்த ஸ்தானங்கள் 12 காங்கிரஸ் 9. இதரர்கள் 3.

காஞ்சீபுரம்:— மொத்த ஸ்தானங்கள் 32 காங்கிரஸ் 21, இதரர்கள் 11

பழனி:— மொத்த ஸ்தானங்கள் 16. காங்கிரஸ் 12, இதரர்கள் 4.

எல்லூர்:— மொத்த ஸ்தானங்கள் 32. காங்கிரஸ் 17. இதரர்கள் 15.

தேவக்கோட்டை:— மொத்த ஸ்தானங்கள் 32. காங்கிரஸ் 32. முழுதும் கைப்பற்றியது.

ஸ்ரீவில்லிபுத்தூர்:— மொத்த ஸ்தானங்கள் 24. காங்கிரஸ் 19. இதரர்கள் 5.

ஈரோடு:— மொத்தஸ்தானங்கள் 24. காங்கிரஸ் 16. இதரர்கள் 8.

உதகமண்டலம்:— மொத்தஸ்தானங்கள் 20. காங்கிரஸ் 8. இதரர்கள் 12.

வேலூர்:— மொத்த ஸ்தானங்கள் 32. காங்கிரஸ் 26. இதரர்கள் 6.

போடியநாயக்கனூர்:— கா. அ. கமிட்டி நியமனம் 11. தேர்தல் 10.

## நாகூர்.

### லக்ஷார்ச்சனை.

புன்னாகவனம் என்னும் திவ்ய க்ஷேத்ரமாகிய நாகூரில் மேல அக்ரஹாரத்தில் திருக்கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் மூலக்கடவுளாகிய ஸ்ரீசித்தி சித்தி விநாயக பெருமானுக்கு அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகமும் மண்டலாபிஷேகமும் நடந்த விபரம் 17-3-38 பத்திரிகை மூலம் தெரிந்த விஷயம் மண்டலாபிஷேக தினம் முதல் லக்ஷார்ச்சனை நடந்து வந்து நாளது சித்திரை மீ 17உ சுக்கிர வாரம் லக்ஷார்ச்சனை பூர்த்தியாகிறது வெகு விமர்சையாய் மகன்யாஸ ருத்ர ஜபங்களுடன் அபிஷேகமாகி சந்தனகாப்பு அலங்காரத்துடன் மோதகத்தால் சஹஸ்ரநாம அர்ச்சனைகள் நடந்து தீபாராதனை நைவேத்தியம் நடத்தி நாகூர் மேல் அக்ரஹாரம் வி. நாகரெத்னமய்யர் உபயம். சுமார் இருநூறு ஜனங்களுக்கு சந்தனம், புஷ்பம், தாம்பூலம், விநியோகங்கள் கொடுக்கப்பட்டு. வெகு சிறப்பாக நடந்தது.

டி. வீராசாமி அய்யர்.

## ஒரிஸா மந்திரி ஸபை ராஜீநாமா.

ஒரிஸா மாகாணக்காங்கிரஸ் மந்திரிகள் 5உ யன்று தங்கள் பதவிகளை ராஜிநாமா செய்துவிடத் தீர்மானித்து விட்டார். காங்கிரஸ் மந்திரிகளின் கீழ் வேலை பார்த்து வந்த ஒரு ஸிவிலியனை ஆக்டிங் கவர்னராக நியமித்ததே இதற்குக் காரணமாகும். வேறு மந்திரி ஸபை நியமிக்கப்படலாமாம். அந்த கவர்னர் நீங்கிய பின் காங்கிரஸ் மந்திரிகள் மறுபடியும் பதவி வகிப்பார்களாம்.

## கல்கத்தா கார்ப்பரேஷன் நிர்வாஹம்.

### காங்கிரஸ்மீது அதிருப்தி.

கல்கத்தா ஹிந்துக்களின் கூட்டமொன்று 23உ நடைபெற்றதில் காந்தி, ஜின்னா ஸம்பாஷணை தோரணை கண்டிக்கப்பட்டது. ஹிந்துக்களைக் கலக்காமல் காந்திஜீ எவ்வித முடிவும் செய்யக் கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது.

கல்கத்தா கார்ப்பரேஷனில் காங்கிரஸ் கௌன்ஸிலர்கள் ஸரியாக நிர்வாஹம் நடத்தவில்லை யாகையால் வரிசெலுத்துவோர்கள், காங்கிரஸல்லாத மெம்பர்களை அடுத்த எலெக்ஷனில் தேர்ந்தெடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப் படுகிறது.

முக்கிய கவனிப்பு.

(3-வருஷத்திற்கு உத்திரவாதமுள்ளது)

அசல் தங்க நகைகளைப்போன்ற "கன்னூஸ் ப்ளேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்கவும்.

தயாரிப்பவர்:— என். கன்னுசாமி பத்தர் பெரியதெரு, கும்பகோணம்.



## கர்ம பூமியும், கர்மாவும்.

(சென்றவாரத் தொடர்ச்சி)

நமது பார்த்திவ அண்டத்தைப் போலவே அநேககோடி அண்டங்கள் ஆகாயத்தில் மிதந்து ஸஞ்சரிக்கின்றன. அவற்றுளுள் சில அப்பு உலகமும், சில தேயோ உலகமும், சில வாயுஉலகமாயும்ஆகும் அவைகளில்முறையே பிதுர்தேவதைகள், தேவர்கள், ஸித்தர்கள், கிம்புருடர்கள், கந்தர்வர்கள், பூதபிரேத பிசாசுக்கள் முதலிய எண்ணிறந்த ஜீவகோடிகள் வஸிப்பதற்க்கு அநுகூலமாயும் அமைக்கப்பட்டிருக்கின்றன. மேல் நாட்டு கல்வியில் பயின்ற சீர்த்திருத்தக்காரர்கள் பூராவும் ஆரியஸமாஜிகளோ, பிர்ம்மஸமாஜிகளோ, பிர்ம்மவித்தியாசங்கத்தினர்களோ, இராமகிருஷ்ண மிஷன் சங்கத்தினர்களோ, அல்லது சிறுபிராயத்திலேயே இங்கிலீஷ் கல்வியில் பயின்றவர்களோ ஆகிறபடியால் ஹிந்துமத ஸநாதன தர்மங்களை உள்ளபடி அறிய சாவகாசம் இல்லாமையால் புநர்ஜன்மாவையும், ஜன்மாந்திர கர்மாவையும், லோகாந்திர கமனங்களையும் தப்பாக எண்ணி, இப்பார்த்திவ அண்டமும் அதிலிருக்கிற புல் பூண்டு, கீட, பசு, பறவை, மநுட பரியந்தம் தான்ஜீவான்மாக்கள் என எண்ணுகிறார்கள் போலும்! ஆனால் ஜீவான்மாக்கள் ஜீவித யாத்திரையில் மாநிட சரீரம் தான் எல்லை என்று நினைக்ககூடாது. இது பார்த்திவ சரீரம். இதற்கப்பாலும் ஜலிய தேகம், ஆக்னேய தேகம், வாயவ்யதேகம் என அநந்தம்கோடிதேகங்களுமிருக்கின்றன.

நமது ஆரிய ரிஷிகளுக்கு பௌதீகத்திலும் போகத்திலும் தாத்பரியமும், இச்சையும் இல்லாமையால் பிரக்ருதிஸம்பந்தமாகிய ஆராய்ச்சியில் மனம் செல்லவில்லை. ஆனால் கேவலமாக ஆத்மீக விஷயத்தில் மாத்திரம் தாத்பரியமுள்ளவர்களாய் ஜீவான்ம, பரமாத்மாக்களுடைய தன்மையைப்பற்றி சர்ச்சை பண்ணி நூலாகிய பஞ்சீகாண பூதங்களிலும் தத்தத் ஸ்தூலா பூதாம்சமாக நிருச்யாத்ருச்ய சரீரிகளும் அசரீரிகளும் இருப்பதாக அறிந்தார்கள். ஆனால் மேல் நாட்டாரோ வென்றால், போக பூமியில் வஸிப்பவர்களாகையால் ஐஹிக சுகங்களை மாத்திரம் விரும்பினவர்களாய் நாஸ்திகர்களாகி பிரக்ருதியிலிருக்கிற "மூல ருடி" பதார்த்தங்களை (Elements) ஒவ்வொன்றாகக்கண்டு பிடித்து இது வரையில் சுமார் 82, பதார்த்தங்களைக்கண்டார்கள். அதாவது:— "ஜலவாயு", முதல்" யுரேனியம்" வரையில் (Hydrogen Uranium) இன்னமும் எவ்வளவோ "ருடி" பதார்த்தங்களை பார்க்க மிச்சமிருக்கிறது. இவ்விஷத்தில் சிரமம் அதிகரிக்கவே நாஸ்திகத்தன்மையும், அந்த காரமும் அதிகரிக்குமே யொழிய, ஸந்துஷ்டி ஒரு பொழுதும் ஒவ்வாது. இக்காரணம் பற்றியே ப்ராசியும் 'ப்ரதீசியும்' நேர் விருத்த மென ஆஸ்திகர்கள் கூறுவது. இயற்கை "மூலருடி" பதார்த்தங்கள் தாமஸப் பிரகிருதியின் தமோகுணாம்சகமான தூல பூதங்களின் கிஞ்சித் பாகம் மாத்திரம் தான். ஜீவான்மாக்களோ வென்றால் மூலப்ரகிருதியின் ஸத்துவ இராஜஸ அம்சங்களுமாகும். ஒவ்வொரு அண்டத்திலிருக்கும் சரீரிகளுக்கும் ஸார்வத்ரிகக்ஷேமம் வரவேண்டுமானல் பரஸ்பரம் அண்டங்களும், ஜீவான்மாக்களும் உதவ வேண்டும். இவ்வாறானல், நம் பூலோக க்ஷேமத்துக்காக மற்றுமுள்ள அண்ட நிவாஸிகளின் தயவு அவச்யம் வேண்டி யிருக்கிறது. அந்த ப்ரீதி பிராம்மணர்களுடைய பாகியப்ரதாவிசுத்தி பூர்வகமான கர்மாநுஷ்டானங்களாலேயே விளைகிறது. பிராம்மணர்கள் மட்டும் தான் யக்ஞாதிகாரிகள். இதற்கு "கீதை" அத்தியாயம் 3, சுலோகம் 10 முதல் 15 வரையில் பிரமாணம்.

ஆகையால் லோகக்ஷேமத்துக்காகவும் ஐஹிகாமுஷ்மிக ஸத்கதி அடையும் பொருட்டும் பிராம்மணர்கள் எவ்வளவிற்கு ஸாத்தியமோ அவ்வளவு சக்திக்கு இயன்றளவு நித்திய நைமித்திகாதி கர்மாக்களைச் செய்ய வேண்டியது. "ஆசாரம்" கர்மத்துக்கு அங்கமாவதால் எத்துணை நுண்ணிய ஆசாரத்தையும் விடகூடாது. இதனால் தான் "ஸர்வாகமானாமாசார: ப்ரதம: பரி கல்பிதே: ஆசாரப்பவோதர்ம: தர்மஸ்ய ப்ரபுரச்யுத:" என்று கூறப்பட்டது. துச்சமான சிறிய ஆசாரங்கள் கூட கர்மாக்களை ச்ரத்தா பக்தியுடன் செய்யத்தூண்டுகிறது. ஆசாரங்கள் உபேக்ஷையாக லோபிக்கப்பட்டால் மற்ற கர்மாக்களும் க்ரமேண லோபிக்கப்படுவது திண்ணம். உதாஹரணமாக:— பிராம்மணர்களுக்கு வஸ்திரங்கள் தைத்து உடுக்கக்கூடாது. ஸோமனுடைய இரண்டு புச்சங்களும் வெளியில் தெரியக்கூடாது. இந்த விதிப்படி வேஷ்டியின் புச்சங்களை உருட்டித்தைக்கவோ ஸ்திரீகளுக்கு ரவிக்கை, பாவாடை தைத்து உடுக்கவோ கூடாது. போஜன பதார்த்தங்களை வாயில் போட்டு மிஞ்சினதை இலையில் வைக்கக்கூடாது. வைத்தால் உச்சிஷ்ட தோஷம். "ஆஹாரசுத்தௌ சித்தஸ்ய விசுத்திர்பவது ஸ்வத:1 அபக்ஷஸ்ய நிவ்ருத்தாது விசுத்தம் ஹ்ருதயம் பவேத்1 என்றபடி ஆஹாரம் பண்ணுவதும் கால தேச பதார்த்த அவஸ்தா சுத்தமாகவே இருக்க வேண்டும். ஆசார கர்மாக்களை உபேக்ஷையாலும், அலக்ஷ்யமாகவும் லோபித்தால் தததுஸாரமாக அந்தக்கரண மலம் அதிகரித்து பாபமும் வ்ருத்தியாகி அதற்கேற்ப யோனிகளில் மறு பிறவியை அடைவதும் திண்ணம்.

நிர்பந்தத்தினலோ, அசக்தியாலோ தர்ம கர்ம லோபம் நேர்ந்தால் தீவ்ரமாமான பக்தி சிரத்தைகள் இருக்குமானல் பச்சாத்தாபத்தால் மனம்நொந்து வருந்துவான். இப்பச்சாத்தாபமே ஓரளவு பிராயச்சித்தமாகும். கடவுள் அதை ஏற்றுக்கொண்டு மன்னிப்பு அளிப்பார். வென்னீரில் ஸ்நானம் செய்து, ஷர்ட்டு, பனியன்களை அணிந்து கொண்டு தர்ப்பணம், சிரார்த்தம் முதலிய கர்மாக்களை செய்தல், புஜித்தல், மாடி மீதும், மேஜை மீதும் வைத்து புஜித்தல் முதலிய அநாசாரர்கள் கர்மாக்களின் அருமையையும்,பெருமையும் ஆவச்யமும் தெரியாமல் அலக்ஷ்யமாக கேலி பண்ணுவதும், நகைத்து தூஷணம் செய்வதும் வழக்கம்தான். இதற்கு எள்ளளவும் கூட செவி கொடுக்காமலிருப்பது நலம். இக்கலியுகத்தில் தார்மிகர்களுக்கு கொஞ்சம் கஷ்டமாகவே தோன்றும். "தார்மிஷ்டா: பரிஹீயந்தே பாபியான் வர்த்ததேஜநா: "தர்மஸ்ய பலஹானிஸ்யாத், அதர்மஸ்சபலாயாத்1l என்றிருந்தாலும், வைராக்யத்துடன் கர்மநிஷ்டையுள்ள தார்மிகர்களுக்கு இதொரு பொருட்டல்ல. இவற்றால், லோக க்ஷேமத்துக்கு கர்மமும், அக்கர்மாதிகாரிகள் ஆசாரபாராளாகிய பிராம்மணர்களும் இவர்கள் வஸிக்கலாயக்கான பாரத கண்டம் கர்மபூமியுமாகிறது.

எம். ஏ. வெங்கடேச்வா அய்யர்.

## திருச்சி ஆயுர்வேத ஸபா.

இச்சபையினதாவில் 24-4-38 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணிக்கு ஆண்டார் தெருவு பாரத்வாஜ ஆயுர்வேத ஔஷத சாலையில் டாக்டர் வி. ராஜகோபால சாஸ்திரிகளின் தலைமையில் மாதாந்திரக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. அப்பொழுது ஸ்ரீரங்கம் டாக்டர் P. G. கணபதி சாஸ்திரிகள். வைத்யபூஷணம் "காய கல்பம்" என்பதைப்பற்றி ஸம்ஸ்கிருதத்தில் உபன்யஸித்தனர். எல்லா வைத்ய சகோதரர்களும் ஷை சர்ச்சையில் கலந்து கொண்டனர். மாலை 6-30 மணிக்கு வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

ஏ. ராகவராவ், செகரெட்டரி.

## மேல்மங்கலம்.

### மதுரை ஜில்லா வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க ஐந்தாவது ஸம்மேளனம்.

ஆஸ்திக மகா ஜன சபையின் ஆதரவின் கீழ் மதுரை ஜில்லா வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க ஐந்தாவது ஸம்மேளனம் மே மீ 12, 13ம் தேதிகளில் மதுரை ஜில்லா, பெரிய குளம் தாலுகா, மேல்மங்கலம் கிராமத்தில் நடைபெறும்.

அது சமயம் திருநெல்வேலி அட்வகேட் பிரம்மஸ்ரீ ஆர். கிருஷ்ணசாமி அய்யர் M. A. B. L. அவர்கள் அக்கிராஸனம் வஹிக்க அன்புடன் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் மதுரா ரிடையர்ட் ஸப் ஜட்ஜ் பிரம்மஸ்ரீ R. வெங்கடாசலமய்யர் B. A, B. L. அவர்கள் ஸ்ரீ ஹனுமத்வஜாரோஹணம் செய்வார்கள். தஞ்சாவூர் ஜில்லா திருக்கருகாவூர் பிரம்மஸ்ரீ T. L. சுப்பய்யர் B A., B.L. அவர்கள் மகாநாட்டைத்திறந்து வைப்பார்கள். சங்கத்தின் நோக்கத்தை ஆதரிக்கின்ற ஆஸ்திகர்கள் யாவரும் விஜயம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. பிரதிநிதிகளுக்கும், பண்டிதர்களுக்கும் போஜன வசதி செய்யப்பட்டிருக்கிறது சுருதி,ஸ்மிருதி,இதிஹாஸ புராணங்களை ஏற்றுக்கொள்ளும் பிரதிநிதிகள் தான் ஷை ஸம்மேளனத்தின் நடவடிக்கைகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

வி. எஸ். ராமசாமி சாஸ்திரி. பி.ஏ.,பி.எல்,
ராமேஸ்வரம் தேவஸ்தான ஸம்ஸ்கிருத
காலேஜ் மாஜி பிரின்ஸ்பால்,
உபசாரனைக்கமிட்டித் தலைவர்.

## ஒரு ஸந்தேகம்.

ஆபஸ்தம்ப ஸூத்திரத்தில் மாத்ரு ஸபிண்டீகாணத்தில் பித்ராதி வர்ணம் வரிக்கவேண்டியதற்கு பிதா மகாதி வர்ணமாக வைத்து ஸபிண்டீகாணத்தை நடத்தி விட்டார்கள்.

அப்படி வைக்கலாமாவென்று கேட்டதிற்கு பித்ரு பார்யா பரஸ்பரமோ என்று சொல்லி விட்டு ஸபிண்டீகாணத்தைப் பூர்த்தி செய்து விட்டார்கள். ஆகையால் தர்மசாஸ்திரம் தெரிந்த பெரியோர்கள் ஷை ஸபிண்டீகரணம் செய்ய வேண்டிய கிரமத்தையும் ஷை ஸபிண்டிகரணம் செய்திருக்கிறது ஸார்த்தமாகுமா? அல்லது மறுபடியும் ஸபிண்டீகரணம செய்யவேண்டுமா? என்கிறஸந்தேஹத்தை நமது பத்திரிகை மூலம் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஒரு நிருபர்.

## தர்ம சாஸ்திரச் சுருக்கம்.

(மூன்றும் பதிப்பு)

பிராம்மணர்களின்கர்மாநுஷ்டானங்களை விவரிக்கும், "வைத்தியநாத தீக்ஷிதீயம்"

என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராம்மண குடும்பங்களிலும்இருக்கவேண்டியதவசியம்.

விலை ரூ. 1—8—0 வி. பி. ப்ரத்யேகம்.
கிடைக்குமிடம் :—

பப்ளிஷர்.
தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
கீழவிடையல், திருச்சிரா P. O.

## ஸர்வதோமுகயாகம்.

### தேதி மாறுதல்.

### ஏத்தாப்பூர்.

ஸர்வதோமுக மஹாயாகமென்னும் இம் மஹா யாகமானது, தெய்வாதீனமாய் பத்திரிகையில் போட்ட தேதிகளில் நடத்த முடியாமல் கீழ்க்கண்ட தேதிகளில் முறையே நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

ஸர்வதோமுக மஹாயாகம் பகுதான்ய வருஷம் வைகாசி மாதம் 1-ந்தேதி (14—5—38) ஆரம்பம். சாலாப்ரவேசம் தீக்ஷை சனிக்கிழமை. (15—5—38)ல் வைகாசி மாதம் ஞாயற்றுக்கிழமை 2-ந்தேதி ப்ராயணீயேஷ்டி. (16—5—38), 3-ந்தேதி திங்கள்கிழமை வேதிகரணங்கள். (17-5-38) 4-ந்தேதி அக்னீஷோமீயவபா யாகங்கள், (4 திக்குகளிலும்). (18—5—38), 5-ந்தேதி ஸுத்யாஹஸ்ஸாம்ஸ்தோத்ர சஸ்திரங்களும். (19—5—38) 6-ந்தேதி காலை 7-மணிக்கு அவப்ருதமும். என, ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

## அங்குலீயகப் பிரதானம்.

கும்பகோணம் கடைத்தெருவு ராமசுவாமி கோவிலில் பிக்ஷாண்டார் கோவில் வேதமூர்த்தி பிரும்மஸ்ரீ பாகவத கௌஸ்துபம் கோபாலபாகவதர் அவர்களால் பாலசுப்பிரமண்யம் பிரதர்ஸ் அவர்கள் பின்பாட்டுடன் ஸ்ரீமத் ராமாயணம் கதாகாலக்ஷேபமாக நடந்துவருகிறது.

ஷை கதையில் 26—4—38 திங்கள் மாலை 6-மணிக்கு 'அங்குலீயகப் பிரதானம்' என்னும் காலக்ஷேபம் விமர்சையாக நடத்தப்பட்டது. ஏராளமான ஜனங்கள் விஜயம் செய்து வருகிறார்கள். ஷை பாகவதர் அவர்களுக்கு மகா-ா-ா-ஸ்ரீ (வாலீஸ்) ராயர்வாள் அவர்களால் ஒரு வெள்ளி பேழையும் மைசூர் கிருஷ்ண அய்யர் அவர்களால் ஒரு மோதிரமும் சன்மானிக்கப்பட்டது. ஒருநிருபர்.

## தர்சன விசேடம்.

திருவையார் ஸ்ரீ பஞ்சநதீஸ்வரஸ்வாமி (மௌனப்ரதக்ஷிணம்) ஸப்தஸ்தானஉத்ஸவம் நாளது பகுதான்ய-ஹூ வைகாசி-மீ 1உ இரவு புறப்பட்டு மறுதினம் 2உ (15-5-38) ஞாயிற்றுக்கிழமை திருப்பூந்துருத்திக்கு ஷை பல்லக்கு வரும் சமயத்தில் "ஸ்ரீ தீர்த்த நாராயண குருஸ்வாமிகள் ஜீவசமாதியில் பக்தாபிமானிகள் தர்சனம்செய்து ஸ்ரீ பகவானின் இஷ்ட காம்யார்த்தங்களை பெற்றுய்ய வேண்டுகிறேன்.

அரியநாயக முதலியார்.

குறிப்பு:— ஷை சன்னிதானத்தில் அன்பர்களுக்கு வேண்டிய சௌகரியங்களும்செய்து கொடுக்கப்படும்.

## வைதிக தர்ம ஸங்கம்.

### சௌள அக்ஷராப்யாஸ மஹோத்ஸவம்.

பகவானது பரிபூர்ண க்ருபையை முன்னிட்டு அந்தரங்க கைங்கர்ய ஸபை ஸ்ரீபாதராஜர் பரமஹம்ஸபிக்ஷு ஸ்ரீசிவப்ரகாச ஆனந்தகிரி ஸ்வாமிகள் அவர்களது ஆக்ஞையைத்தாங்கி ஸகல ஜீவராசிகளுக்கும் வேதபுருஷனது பரிபூர்ண அநுக்ரஹம் ஏற்படும் பொருட்டு, ஐந்து வயதுள்ள வைதிக தர்ம ஸங்க வேதபுருஷனுக்கு நாளது பகுதான்ய ஹூ வைகாசிமீ கஉஉ (25-5-38) புதன்கிழமை உத்திரட்டாதி நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில், உதயாதி 9- நாழிகைக்கு மேல் 14- நாழிகைக்குள் கடக லக்கினத்தில் சௌளம் அக்ஷராப்யாஸம் ஆகிய ஸம்ஸ்காரங்கள் செங்கல்பட்டு ஜில்லா, பாலாற்றங்கரைபணையூர் என்றகிராமத்திற்கடுத்த தபோவனத்தில் நடப்பதால், மஹா ஜனங்கள் எல்லோரும் வந்திருந்து நடத்தி வைத்து வேதபுருஷனுடைய அநுக்ரஹத்தை அடையும்படிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

வைகாசிமீ 10உ (23-5-38) திங்கட்கிழமை— தபோவன த்வஜாரோஹணம், வனசங்கரி பூஜை.

„ 11உ (24-5-38) செவ்வாய்க்கிழமை— 4-வது அப்தபூர்த்தி ஹோமம்.

„ 12உ (25-5-38) புதன்கிழமை — சௌளம், அக்ஷராப்யாஸம்.

„ 13உ (26-5-38) வியாழக்கிழமை— ஆச்ரம ஆரம்ப ஸங்கல்பம், ப்ருஹ்மசாரி ஹோமம்.

„ 14உ (27-5-38) வெள்ளிக்கிழமை ஸ்ரீசூக்த ஹோமம்.

கே. கிருஷ்ணமூர்த்தி சர்மா, (கோமல்) ஸ்ரீகார்யம் ஆர். ராதாகிருஷ்ணய்யர் பி ஏ. பி எல் (தஞ்சாவூர்) ராஜகுலகர்ணி என் ராமனுதய்யர் பி ஏ. எம எல். செங்கற்பட்டு குலகர்ணி.

## பணையூர்.

## வைதிக தர்ம ஸங்கம்

### தர்மப்ரசார வித்யாலயம்.

நாளது பகுதான்ய-ஹூ ஆடி-மீ 1உ முதல், செங்கல்பட்டு ஜில்லா பாலாற்றங்கரையிலுள்ள பணையூர் என்ற கிராமத்திற்கடுத்த தபோவந ஆச்ரமத்தில், தர்மப்ரசாரத்தின் பொருட்டு 20மாணவர்களுக்கு வித்யாப்யாஸம் செய்துவைக்கப்படும். ஆகையால் வைதிக தர்மபிரசாரத்தில் ஈடுபட ஆவலுள்ள பிரும்மசாரிகள் வைகாசிமீ 30உக்குள் கீழ்க்கண்ட விலாஸத்திற்கு எழுதி விபரங்கள் தெரிந்து கொள்ளலாம்.

### விபரம்.

1. குறைந்தது ஒரு வருஷமாவது தர்ம சாஸ்திரம், ஸதாசாரம் அனுஷ்டான முறைகள் பிரவசனம் முதலியவைகளைப்பற்றி பயிற்சி அளிக்கப்படும்.

2. ஸ்வானுஷ்டானத்துடன் பயிற்சி பெற்றவர்கள் ஸங்கத்தின் சார்பில் குறிப்பிட்ட இடங்களில் குறைந்தது 3 வருஷ காலமாவது தர்மபிரசாரம் செய்ய நியமிக்கப்படுவார்கள்.

3. ஸம்ஸ்கிருதத்தை எடுத்துக்கொண்ட S. S. L. C. படித்த மாணவர்கள் 11 பேர்கள் வேண்டும். பூர்ணமாக அல்லது உபயுக்தமாகவாவது வேதாத்யனம் செய்து காவ்யஞானமுள்ள பிரும்மசாரிகள் பத்து பேர்கள் வேண்டும்.

4. பயிற்சி காலத்தில் மாணவர்களுக்கு ஆகார வசதியுடன் மாதம் ரூ. பத்து உபகாரமாக அளிக்கப்படும்.

5. பிரசார காலத்தில் யோக்யதைக்குத் தக்கபடி ஸம்பானம் அளிக்கப்படும்.

எழுதவேண்டிய விலாசம் என். ராமனுதய்யர் பி ஏ. எம் எல். நகாஸங்கம், குலகாணி.
செங்கல்பட்டு.

## மைசூரில் அமளி.

மைசூர் ஸமஸ்தானத்தைச்சேர்ந்த விதுராஸ்வாதம் என்ற இடத்தில் காங்கிரஸ்காரர்கள் நடத்திய கூட்டத்தைக் கலைத்து விடும்படி போலீஸ்உத்திரவு செய்தனர். ஜனங்கள் இதைக்கேளாததுடன், போலீஸ் அதிகாரிகளையும் தாக்க ஆரம்பித்தார்களாம். போலீஸார் துப்பாக்கிப் பிரயோகம்செய்ததில் சிலர் இறந்து போனார்கள். பலர் கைதி செய்யப்பட்டிருக்கிறார்கள். ஸமஸ்தான மெங்கும் 144பிரிவுப்படி தடை உத்திரவுபோடப்பட்டு வருகிறது.

## காங்கிரஸ் நடத்தையைக் கண்டிக்க.

### நாகபுரி ஹிந்துக்கள் ஆர்ப்பாட்டம்.

நாகபுரியில் ஹிந்துக்கள் நடத்திய சில கூட்டங்களில் காங்கிரஸ்காரர் நுழைந்து கலஹம் செய்தும், பேசவொட்டாமல் தடுத்துக் கூச்சல்போட்டும் பல அட்டூழியங்கள் செய்ததைக் கண்டிப்பதற்காக அவ்வூர் பிரபல ஹிந்துக்களின் ஆதரவில் ஓர் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. காங்கிரஸைக் கண்டித்துப் பெரிய கோஷத்துடன் ஊர்வலம் விடப்பட்டது. கருப்புக்கொடி தாங்கிச்செல்லப்பட்டது. காங்கிரஸ் ஒழிய வேணுமென்றும், ஹிந்து தர்மம் ஜயிக்க வேண்டுமென்றும் ஊர்வலத்தில் கோஷம் செய்துகொண்டு போனார்கள். பிறகு டவுன் ஹாலில் நடைபெற்ற பெரிய கூட்டத்தில், காங்கிரஸ்காரர்கள், பேச்சு ஸ்வதந்திரத்தையும், பிரஜா உரிமையை நாசமாக்கி வருவதைக் கண்டித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## காங்கிரஸ் ஸோல்ஜர்கள்.

பம்பாய் மாகாண மிதவாதிகளின் மஹாநாட்டில் தலைமைவகித்த ஸ்ரீமான் சந்தாவர்க், தற்கால காங்கிரஸ் மந்திரிகளின் நிர்வாஹத்தைப் பலவழியிலும் குற்றங்கூறியும், கண்டித்தும் பேசினார். காங்கிரஸ் மெம்பர் வோட்டர்களுக்குக் கொடுத்த வாக்குறுதியொன்றையும் நிறைவேற்றிவைக்க வில்லையென்றும் அவர்களில் பலர் வெறும் பொம்மைகளே யென்றும், படிப்போ, மேதையோ அவர்களுக்குக் கிடையாதென்றும், சட்டஸபைக் காங்கிரஸ் மெம்பர்கள் ஒரு ஸர்வாதிகாரியின் கீழ் வேலைபார்க்கும் ஒரு ஸோல்ஜரைப்போல், மந்திரிகள் வெளியிடும் ஆக்ஞைப்படி ஆடிவரும் பேர்வழிகள்தானென்றும் கண்டித்தார்.

## அடங்காப்பிடாரிக்கு ஒரு வருஷ தண்டனை.

சென்னையில் சச்சிதானந்தம் என்ற பழய ராஜீயக்கைதி சென்னையில் மந்திரி வீட்டிலும், கோர்ட்டிலும் நடத்திய திருவிளையாடல்கள் காரணமாக அவனுக்கு மாஜிஸ்டிரேட் ஒரு வருஷ காவல் தண்டனை விதித்தார். எதிரி மன்னிப்பு கேட்கவோ, ஒழுங்காயிருப்பதாக உறுதி கூறவோ ஸம்மதிக்கவில்லை.

## கடன் ஸமரஸச் சட்டம் திருத்தப்படும்.

வியவஸாயக் கடன், சட்டத்திற்கு ஏற்றதாக இருக்கும்படி பழைய கடன் ஸமரஸச் சட்டத்தைத் திருத்துவதற்காகச் சென்னை ஸர்க்கார் யோஜனைசெய்து வருகிறார்கள்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram,

253

ஆர்யதர்மம்

ஸ்
4 19
24

11-5-1938

[illegible]

1000 /1,000

25231

255

REGD No. M. 2913. ARYA DHARMAM.

# ஆர்யதர்மம்.

(தமிழ் வாரப்பத்திரிகை.)

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

சந்தா விபரம்.
[தபால் செலவுள்பட]
ஜீவிய சந்தா .... ரூ. 50
ஒரு வருஷ சந்தா ரூ. 3
ஆறுமாத சந்தா ரூ. 1½
தனிப்பிரதி ஓரணா.
மாதிரிப் பிரதிக்கு எழுதவும்.

விளம்பர விகிதம்.
ஒரு முழுப்பக்கம்
ஒரு தடவை ரூ. 20
அரைப்பக்கம்
ஒரு தடவை ரூ. 12
ஒருபத்தி ஒருதடவை ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு
ஒரு தடவை அணா 8
நீண்டகால விளம்பரங்களுக்குத் தனி சார்ஜ்.

| பு-24 | கும்பகோணம் பிரமாதி-ஞூ சித்திரை-மீ 28உ 1939-ஞூ மே-மீ 11உ | ஸ-19 |

## "யாகம் செய்வது ஜீவஹிம்ஸையாம்"

### "கொலைபாதகமான" காரியத்துக்கு இடம் தராதே

திருச்சியில் யாகம் நடத்த ஆக்ஷேபணை.

திருச்சி ஜில்லா, திருவானைக்காவல் ஸ்ரீ ஜம்புலிங்கேஸ்வரர் கோவிலுக்குள் ஒரு யாகம் நடத்த ஸ்ரீ ராமசாமி தீக்ஷதர் என்ற அறிஞர் விரும்பினர். கோவில் தர்மகர்த்தா அதற்கு அனுமதி அளித்தார். மூன்று தினங்கள் யாகம் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன, யாகம் ஆரம்பிக்கப்பட்டது.

இதையறிந்த ஒரு சில நாஸ்திகர்கள் கோவில் தர்மகர்த்தாவிடம் சென்று, ஒரு மகஜரை நீட்டினர்கள். "யாகம் செய்வது ஜீவ ஹிம்ஸையாகும்" கொலைபாதகமான யாகம் நடத்தக்கூடாது எனவே கோவிலில் யாகம் நடத்த இடம் தரக்கூடாது" என்று கர்ஜித்தார்கள். தர்மகர்த்தா உடனே யாகத்தை நிறுத்திவிடவேண்டுமென்று உத்திரவு போட்டார். யாகம் நடுவில் நிறுத்தப்பட்டது.

## இந்தியாவுக்கு விடுதலை வேண்டுமா?

### ஒரு ஹிட்லர் தோன்றவேண்டுமாம்

ஜர்மனி ரேடியோ பிரசாரம்

"இந்தியா விடுதலையடையவேண்டுமானால் அஹிம்ஸை உபதேசம் உதவாது. ஜெர்மனி சுதந்திரமடையவேண்டுமென்று ஆண்டவன் விரும்பியதும் ஒரு ஹிட்லரை அளித்தார். அதுபோல, இந்தியாவுக்கும் சுதந்திரம் கிடைக்கும் நாள் நெருங்கினால் ஒரு ஹிட்லர் உங்கள் நாட்டில் பிறப்பார். உள்நாட்டுக் குழப்பங்களும்ஒழியும். தேசம் விடுதலை அடையும்"........

இந்தச் செய்தியை ஜெர்மனி ரேடியோவில் யாரோ ஒருவர் ஹிந்துஸ்தானியில் பேசினராம். இதை வங்காள சட்டசபை மெம்பர் முகமது பரூர் என்பவர் ரேடியோவில் கேட்டாராம். உடனே அவருக்குக் கோபம் வந்துவிட்டதாம். பத்திரிகைகளுக்கு தாம் கேட்ட ரேடியோப் பிரசங்கத்தின் சாரத்தை அனுப்பிவிட்டார்.

ஜெர்மனி ரேடியோவில் மகாத்மா காந்தியடிகளைத் தாறுமாறாகத் தூஷிக்கிறார்களாம்.

"ஏ காந்தி! எங்களைத் தூற்றுவது சரியல்ல. அஹிம்சையை அனுஷ்டிக்கும்படிக் கூறுகிறீர். இதையெல்லாம் இந்தியாவிலிருந்து கொண்டு சொல்லலாம். உலகில் அஹிம்ஸையினால்ஒரு காரியமும் செய்யமுடியாது. உங்கள் நாட்டு ஜாதிச்சண்டைகளை உங்கள் அஹிம்சையினால் தீர்த்துவைக்கிறதுதானே! பேசுகிறீர்களே! அஹிம்சை, அஹிம்ஸை யென்று. அதன் மூலம் என்ன சாதித்துவிட்டீர். பலாத்காரம் ஒன்றினால் தான் உருப்படியாக எக்காரியத்தையும் சாதிக்கலாம்" என்று ஜெர்மனி ஆகாசவாணியில் பிரசாரம் செய்கிறார்கள் நாஜிக் கட்சியினர்.

## வேலூரில் ஹிந்து-முஸ்லிம் கலவரம்.

வேலூரில் மேமீ 2 தேதி பௌர்ணமி புஷ்பப்பல்லக்கு ஊர்வலம் கிளம்பியபொழுது முஸ்லிம்கள் கலவரம் செய்தார்கள். ஒரு பகுதியிலிருந்து கற்களும் ஜோடுகளும் ஊர்வலத்தில் விழுந்தன. ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் சச்சரவு ஏற்பட்டது. பல ஹிந்துக்களைத் தலைக்கர்கள் தாக்கினார்கள். போலீசார் ஸ்தலத்துக்கு வந்து தடியடி பிரயோகம் நடத்திக் கலவரத்தை நிறுத்த முயன்றார்கள். போலீஸ் அதிகாரிகள் மீதும் கற்கள் விழுந்தன. உடனே போலீசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தார்கள். நிலைமை மோசமாயிருந்ததால் மீண்டும் துப்பாக்கிப்பிரயோகம் செய்யவேண்டியிருந்தது. இதனால் ஒருவர் இறந்தார். ஹிந்துக்களுக்குச் சொந்தமான வீடுகளுக்குத் தீ வைக்கப்பட்டது. போலீசார் விரைந்து சென்று முஸ்லிம்களின் காலித்தனத்தை அடக்கினார்கள். கலவரத்தை ஒட்டிப் பலரை அதிகாரிகள் கைது செய்திருக்கின்றனர். 5 பேர்களுக்குமேல் வெளியில் நடமாடக்கூடாதென்றும், தடிகளையோ ஆயுதங்களையோ, எடுத்துச் செல்லக்கூடாதென்றும் சப் மாஜிஸ்திரேட் 144வது பிரிவுப்படி தடை உத்திரவைப் பிறப்பித்திருக்கிறார். இந்தத் தடையுத்திரவு 2 மாதங்கள் அமுலிலிருக்கும்.

வேலூரைச் சேர்ந்த வெள்ளப்பாடியில் சில மோட்டார் பஸ்களைச் சில முகமதியர்கள் வழிமறித்து, அவற்றிலிருந்தோரை தாக்கினார்கள். இதனால் 25 பேர்கள் படுகாயமுற்றார்கள். இவர்களை ஆஸ்பத்திரிக்குப் போலீசார் அனுப்பியிருக்கிறார்கள். சென்னை மாகாண போலீஸ் இலாகா டெப்டி இன்ஸ்பெக்டர் ஜனரல் திரு. பிஷப் துரை 5 தேதி வேலூருக்கு வந்து முகாம் போட்டிருக்கிறார். சென்னை, செங்கற்பட்டு, சேலம் முதலிய ஜில்லாக்களிலிருந்து ரிசர்வ் போலீஸ் படைகள் வேலூருக்கு வந்திருக்கின்றன.

மசூதிக்கு முன் மேளதாளங்கள் நிறுத்தப்படவில்லையென்று முகமதியர்கள் கூறுகிறார்கள். ஹிந்துக்கள் மசூதியிலிருந்து முதலில் கற்களும் ஜோடுகளும் ஊர்வலத்தில் விழுந்தன என்று சொல்லுகிறார்கள். போலீசார் விசாரித்து வருகிறார்கள்.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

# செய்தித் திரட்டு.

## புதிய கட்சி.

"பார்வேர்டு பிளாக்" என்ற முன்னேற்றக் கட்சி ஒன்றை ஸ்ரீ ஸுபாஷ் சந்திர போஸ் ஆரம்பித்திருக்கிறார். தீவிர வாதிகளையும் ஏகாதிபத்தியக் கொள்கையை எதிர்ப்பவர்களையும் ஒன்று சேர்த்து குறைந்த பக்ஷத் திட்டத்துடன் வேலை செய்ய இந்தப் புதிய கோஷ்டி பாடுபடும். இது காங்கிரஸ் அமைப்பையும், அதன் கொள்கையையும், வேலைத்திட்டத்தையும் ஏற்றுக்கொள்ளுமாம். மகாத்மா காந்தியிடம் மரியாதை செலுத்துமாம். பலாத்காரமற்ற ஒத்துழையாமை என்ற அவரது ராஜியக்கொள்கையில் பூரணமாக நம்பிக்கை வைக்குமாம். இந்த கட்சியை ஆதரித்துக் கல்கத்தாவில் 20 ஆயிரம் பேர் கூடியிருந்த ஒரு மாபெரும் கூட்டத்தில் தலைவர் ஸுபாஷ் பாபு பேசினார். ஸ்ரீ ஸுபாஷ் பாபு புதிய கட்சிக்கு முதலில் ஒரு லக்ஷ ரூபாய் வசூலித்துக்கொடுக்கவும் காரிகள் முடிவுசெய்திருக்கிறார்கள். சீக்கிய வகுப்பினர் சார்பாக ஆயிர ரூபாய் பண முடிப்பு தலைவரிடம் கொடுக்கப்பட்டது.

## ஹைதராபாத் ஸத்யாக்ரஹம்.

ஹைதராபாத் சத்யாக்கிரஹம் இன்னும் முடிந்தபாடில்லை. இந்தியாவின் பல பாகங்களிலிருந்து சத்யாக்ரஹம் புரிவதற்குத் தொண்டர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். உஸ்மானாபாதில் ஒரே சமயத்தில் 100 தொண்டர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். சிறையில் தொண்டர்கள் பல விதத்தில் இம்சிக்கப்படுகிறார்களாம். மேமீ 3உ யன்று ஒரு ஹிந்து தொண்டரும் 5உ ஒரு ஹிந்து தொண்டரும் சிறையில் காலமானார்கள்.

## தியாகிகள் தினம்.

மேமீ 10 தேதியை 1875 ஷு நடந்த இந்தியச் சுதந்திரப்போரில் தங்கள் உயிரை அர்ப்பணித்த "தியாகிகளின் தினமாக"க்கொண்டாடும்படி அகில ஹிந்து மகா சபை அறிக்கை வெளியிட்டிருக்கிறது. ஓர்

## ஒரு மாணவருக்கு கௌரவம்.

ஸ்ரீமான் எஸ். கே. ஐயங்கார் என்பவர் எம். எஸ். ஸி. பட்டம் பெற்ற ஒரு தென்னிந்தியர். இவருக்கு மே. த. வைஸிராய் 1939–1940 ஷுக்கு "லின் செண்ட் மாஜி ஸ்காலர்ஷிப்" என்ற உபகாரச் சம்பளத்தை அளித்திருக்கிறார். டோராண்டோவில் ரஸாயன சாஸ்திர ஆராச்சிக்காக இந்த உபகாரச்சம்பளம் ஆண்டுதோறும் அளிக்கப்படுகிறது.

## ஸ்ரீமத் சங்கராச்சாரியார் படம்.

ஸ்ரீ சங்காராசாரியார் சரிதையைப் படம் பிடிக்க வேண்டி ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இதற்காக பாட்டுக்களைத் தயாரிக்க வித்வான் ஸ்ரீ பாபநாசம் சிவனை ஏற்பாடு செய்திருக்கின்றனர். பண்டித ஸ்ரீ வத்ஸ சர்மா தமிழ் வசனத்தைத் தயார் செய்திருக்கிறார். ஸ்ரீ சங்காராச்சாரியார் பாத்திரத்திற்கான ஒரு நடிகரை ஏற்பாடு செய்ய ஸ்ரீ ஜகதீச சக்ரவர்த்தி சமீபத்தில் சென்னைக்கு வருவாராம். இது அரோரா படக் கம்பெனியின் தயாரிப்பாம்.

## விற்பனை வரி மசோதா.

விற்பனை வரி மசோதா சம்பந்தமாக பொறுக்குக் கமிட்டி ஏற்கனவே பல திருத்தங்களைச் செய்தும், மேமீ 8உ கூடப்போகும் சட்ட சபைக் கூட்டத்தில் இன்னும் 100 திருத்தங்களுக்கு மேலாகவே அனுப்பப்பட்டிருக்கின்றன.

## பிள்ளைக்காக பிதா பிரிந்தார்

தன்னுடைய இளங்குமாரன் நோயுற்றுக் கிடந்ததாகவும் அவனுக்குச் சிகிச்சை செய்வதற்காக 100 ரூபாய் வேண்டியிருந்ததென்றும், அந்தத் தொகை கிடைக்காததால் பம்பாயிலிருந்த ஒரு சிப்பாய் துப்பாக்கியினால் சுட்டுக் கொண்டு தற்கொலை புரிந்து கொண்டான்.

## வைசிராய் நிர்வாக சபை.

மேமீ 4தேதி வைசிராய் நிர்வாக சபையில் வர்த்தக இலாகா மெம்பர் ஸ்தானத்தை சென்னை திவான்பகதூர் ஸர். ஏ. ராமசாமி முதலியார் ஏற்றுக்கொண்டார்.

## சினிமா காங்கிரஸ்.

ஸ்ரீ எஸ். சத்தியமூர்த்தி அய்யர் பம்பாயில் கூடிய அகில இந்திய சினிமா காங்கிரஸில் தலைமை வகித்தார்.

## ஒரு சந்நியாசியின் வெறி.

ரங்கூனில் ஒரு பௌத்த சந்நியாசி ஒரு நாட்டுக்கோட்டை செட்டியாரையும், ஒரு சைனாக்காரனையும், இரு பர்மியர்களையும் தாக்கிப் படுகாயப்படுத்தினான். போலீஸார் வருவதற்குள் சந்நியாசி மறைந்து விட்டான்.

## ஒரு யுவனின் தற்கொலை முயற்சி.

தேஜ்பூர் என்ற நகரில் ஒரு வாலிபன் சினிமா படத்தைப்பார்த்து ஒரு நடிகை மீது மோகங் கொண்டான். அம்மாதிரி தனக்கு ஒரு பெண்ணை விவாகம் செய்விக்க வேண்டுமென்று தனது பெற்றோர்களிடம் முறையிட்டும் பயனில்லை. இதற்காக விஷமுண்டு தற்கொலை செய்து கொண்டான். ஆனால் விஷம் அவனை மாய்க்கவில்லை. போலீசார் அவன் மீது தற்கொலை செய்து கொள்ள முயற்சி செய்ததாக வழக்குத்தொடர்ந்தார்கள். முடிவில் ருசு இல்லாததால் வாலிபன் விடுதலை அடைந்தான்.

## ஸ்ரீமான் எஸ். ஸத்தியமூர்த்தி.

### குடந்தைக்கு 14 தேதி விஜயம்.

டெல்லி சட்ட சபை அங்கத்தினரும், பிரபல காங்கிரஸ் தலைவருமான ஸ்ரீமான் எஸ். சத்தியமூர்த்தி, பி. ஏ. பி. எல், 14 தேதி காலை கும்பகோணத்திற்கு விஜயம் செய்வார். குடந்தையில் பலவிடங்களில் அவர் பிரசங்கம் செய்வார்.

கொடவாசல் நகர இரண்டாவது அரசியல் மகாநாடு இம்மாதம் 15உ நடைபெறும். இம்மகாநாட்டில் ஸ்ரீ சத்தியமூர்த்தி தலைமை வகிப்பார். பிரபல காங்கிரஸ் தலைவர்கள் மகாநாட்டில் கலந்து கொள்வார்கள்.

## ஞாபக சக்தி யாருக்கு அதிகம்?

### ஒரு தென்னிந்தியரின் அறைகூவல்

### ஒரு பிராமணரின் ஞாபக சக்திக்கு புகழ்மாலை.

பர்மா தேசத்தில் மெய்மியோ என்ற இடத்தில் ராணுவ ஆடிட் இலாகாவில் ஸ்ரீ வி. சுந்தரேசன் என்ற ஒரு பிராமண இளைஞர் வேலைபார்த்து வருகிறார். இவர் ஒரு தென்னிந்தியர். இவருக்கு அபார ஞாபக சக்தி உண்டு. "தன்னைக்காட்டிலும் ஞாபக சக்தியில் சிறப்பு வாய்ந்தவர்கள் உலகில் யாராவது இருந்தால் போட்டியிட வரலாம்" என்று அறைகூவி அழைத்திருக்கிறார்.

81 எண்கள் அடங்கிய ஒரு தொகையைப் 10 நிமிஷத்திற்குள் மனப்பாடம் பண்ணிய திரு. பெட்ரோவிச் என்னும் பெல்கிரேட் வாசியை நமது சுந்தரேசன் தோற்கடித்து விட்டார். பல பிரமுகர்கள் முன்னிலையில் பரீட்சை நடந்தது.

90 எண்களடங்கிய ஒரு தொகையை மனப்பாடம் செய்யுமாறு இவரை சபையினர் கேட்டனர். பத்தே நிமிடத்தில் ஸ்ரீ சுந்தரேசன் ஒரு தவறுகூட இல்லாமல் ஒப்பித்து விட்டார்! உலகத்திலேயே ஞாபக சக்திக்கு மிகப்பிரஸித்திபெற்றவர் ஹெர் எச். ஆசிக் என்ற ஜர்மனியர். இவர் 6 லக்ஷம் விலாசங்களை வெகு எளிதில் மனப்பாடம் பண்ணி ஒப்பித்துவிடுவாராம். இப்போது இவருக்குப் போட்டியாக ஒரு இந்தியர் கிளம்பியிருக்கிறார்.

## 6 ஸ்தானங்களுக்கு 17 ஆயிரம் மனுக்கள்.

### வேலையில்லாத் திண்டாட்டம்.

### "ரயில்வே கார்டு வேலைக்குப் போட்டி"

பம்பாய் ஜி. ஐ. பி. ரயில்வேயில் ஆறு "கார்டு" வேலைகள் காலியாக இருந்தன. இதற்கு இந்தியாவின் நானுபாகங்களிலிருந்து 17,000 பேர்கள் விண்ணப்பம் செய்து கொண்டார்களாம்.


## தர்ம சாஸ்திரச் சுருக்கம்.

பிராமணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும் "வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராமண குடும்பங்களிலும் இருக்கவேண்டியதவசியம்.

விலை ரூ. 1—8—0 வி. பி. ப்ரத்யேகம்.

கிடைக்குமிடம்:—

பப்ளிஷர்.
தர்மசாஸ்திரச் சுருக்கம்.
கீழவிடையல், திருச்சிரை.
ஆர்யதர்மம் ஆபீஸ், கும்பகோணம்,




257

## ஸதி அல்லது உடன்கட்டை ஏறுதல்

### சாஸ்திரத்தின் கருத்தென்ன?

### அது நின்றது சட்டத்தினாலா?

27—4—39ல் வெளிவந்த வியாஸத்தில், உடன்கட்டையேறுதல் உயர்ந்த தர்மமாக நமது சாஸ்திரத்தில் பிரசம்ஸை செய்யப்பட்டிருக்கிறதென்றும், ஸ்வேச்சாமரணத்தை சிற்சில விஷயங்களில் நமது சாஸ்திரம் தர்மமாக அங்கீகரித்திருக்கிறதென்றும், ஸதியை நமது சாஸ்திரம் நிர்ப்பந்தமாக விதிக்கவில்லையென்றும், வேறு சில விஷயங்களையும் குறிப்பிட்டோம்.

ஸதியானது நம் தேசத்தில் கட்டாய தர்மமாக இருந்தது போலவும், அது வெகு அதிகமாகப் பரவியிருந்தது போலவும் பிரிட்டிஷ் சட்டத்தினாலேயே இந்தக் கொடுமையான வழக்கத்தைத் தடுத்ததாயும் பாதிரிமற்ற சீர்திருத்தக்காரர்களோ சொல்லிக் கொள்ள நியாயமில்லை. உண்மையில் நமது சாஸ்திரமே ஸதியை மனப்பூர்வமாக ஆதரிக்கவில்லையென்பது கவனிக்கத்தக்கது. எல்லா ஸ்திரீகளும் ஸதி செய்யவேண்டுமென்று சாஸ்திரம் நிர்பந்திக்கவில்லை. ஆயுள் வரையில் பிரம்மசர்யத்தினால் காலம் கழிக்க விருப்பமில்லாத மிகுந்த வைராக்ய சாலினியும், மிக்கமன உறுதியுள்ளவளுமான ஸ்திரீயே அதற்கு அதிகாரியாகப் பொறுக்கப்பட்டிருக்கிறார். இத்தகைய ஸ்திரீ நூற்றில் ஒருவள்கூட இருப்பது துர்லபமே.

மேலும், கர்ப்பிணிகள், குழந்தைக்காரிகள், ருதுவாகாதவர்கள், ரஜஸ்வலையாயிருப்பவர்கள், ராஜஸ்திரீகள், மனோதைர்யமற்றவர்கள் ஆகியவர்கள் உடன்கட்டையேறக் கூடாதென்று சாஸ்திரம் தடைசெய்துவிட்டது. இந்த வழியில் பார்த்தால் பெரும்பாலோரான ஸ்திரீகள் ஸதியிலிருந்து ஒதுக்கப்பட்டுவிட்டது தெளிவாகும். பாலர்கள் நிறைந்த குடும்பத்தைக் காப்பாற்றவேண்டிய நிலைமையிலுள்ள ஸ்திரீகளும் விலக்கப்பட்டிருக்கிறார்கள். உயிருடனிருந்து பிரம்மசர்யத்தினாலும், பகவத் பக்தியாலும் இறந்துபோன பர்த்தாவிற்கு ஹிதம்செய்து கொண்டு காலம் கழிக்க விரும்புகிற பதிவ்ருதா சிரோமணிகளுக்கும் ஸதி அவச்யமில்லையென்று சாஸ்திரம் கூறுகிறது. ஆதலால் சாஸ்திரமே லக்ஷத்தில் ஒருவளுக்குக் கூட ஸதியை அங்கீகரித்ததாகத் தெரியவில்லை.

மேலும் உடன்கட்டையேறுதலைப்பற்றி மிதாக்ஷரையில் விக்ஞானேச்வரர் செய்துள்ள வியவஸ்தையும் முக்யமாக கவனிக்கத் தக்கது.

ஸதியென்பது, கேவலம் காம்யமென்றும், அதாவது மோக்ஷத்தை விரும்பாமல், அல்பமாயும், அஸ்திரமாயுமுள்ள ஸ்வர்க்கபலத்தை விரும்புகிற ஸ்திரீகளுக்கே விதிக்கப்பட்டுள்ளதே யல்லாது மோக்ஷத்தை விரும்புகிற ஸ்திரீகளுக்கு ஏற்றதில்லையென்றும் விக்ஞானேச்வராதிகள் முடிவு செய்திருக்கிறார்கள்.

"तस्मादुह न पुरायुषः स्वर्गकामी प्रेयात्"

என்ற சுருதியானது, ஆயுள் முடிவதற்குள் வலுவில் பிராணனை மாய்த்துக்கொள்வதைத் தடுப்பதால், உடன்கட்டையேறுதலே சாஸ்திர விருத்தமென்ற ஆக்ஷேபத்தை விக்ஞானேச்வரர் செய்துகொண்டு, மோக்ஷத்தை விரும்புகிற அதிகாரி, ஸ்வர்க்கத்திற்காக ஆசைப்பட்டு நியாயமான ஆயுளின் அளவுக்கு முன்னால் சரீரத்யாகம் செய்வதையே மேற்படி சுருதி தடுக்கிறதென்று அர்த்தம் கூறிவிட்டு,

"तस्मात् अनित्याल्पसुख रूप स्वर्गार्थं आयुष्येयो नकर्तव्यइत्यर्थः। "अतश्चमोक्षम निच्छन्त्याः सर्वा स्त्रियाः अनुगमनं युक्तं॥"

என்ற வாக்யத்தால் "மோக்ஷத்தை விரும்பாமல் கேவலம் அல்பமாயும், அஸ்திரமாயும் உள்ள ஸ்வர்க்கத்தை விரும்புகிறவளுக்குத்தான் அநுகமனம், அல்லது உடன்கட்டையேறுதல் தகும்" என்று நிர்ணயம் செய்திருப்பதிலிருந்து மோக்ஷார்த்திகளான ஸ்திரீகளுக்கு உடன்கட்டையேறுதல் கூடாதென்பது ஸ்பஷ்டமாக விளங்குகிறது. இந்த விக்ஞானேச்வர அபிப்பிராயத்தையே ஸ்மிருதி முக்தாபலத்தில் ஸ்ரீ வைத்யநாத தீக்ஷிதர் ஆதரித்து

"इदंच मुमुक्षु विषये स्वाप्यमेव"

என்ற வாக்யத்தால் மோக்ஷம் விரும்புகிற ஸ்திரீகளுக்கு அநுகமனம் தடுக்கப்பட்டுள்ளது என்பதைச் சொல்லியிருக்கிறார். ஹிந்து மதமானது, யாவரும், அல்பாஸ்திரமான ஸ்வர்க்க பலத்தை விரும்பாமல், நித்யமாயும் ஆனந்த ரூபமாயுள்ள மோக்ஷத்தை அடையவே முயற்சிக்கவேண்டுமென்று போதிக்கிறது.

அல்பாஸ்திர காம்யங்களில் ப்ரவிர்த்திப் போதை நிந்திக்கிறது. அதன்படி யாவரும் சாச்வத மோக்ஷ ஸ்ரேயஸ்ஸை அடையவே விரும்புகிறார்கள். ஆதலால் காம்யமான அநுகமனத்தை ஆத்மஞானம் பெற்ற ஸ்திரீகள் விரும்பமாட்டார்களென்பது தெளிவு.

இவ்வாறாக சாஸ்திரத்தின் கருத்தை நாம் பரிசீலித்தால் உடன்கட்டையேறும் தர்மமானது எந்த நிலைமையில் வைக்கப்பட்டிருக்கிறதென்பது விளங்கும்.

மேலே நாம் காட்டிய சாஸ்திர சர்ச்சைகளை கவனித்தால், சீர்திருத்தவாதிகளோ, பாதிரிகளோ, கர்மையும், நமது சாஸ்திரங்களையும் ஏளனம் செய்யக் காரணமிருக்கிறதாவென்பது புலப்படும். இவ்வளவு சாஸ்திர நியமங்களையும் மீறி நம் தேசத்தில் ஸதி அதிகம் தாண்டவமாடினதாயும், சீர்திருத்தக்கார கருணாமூர்த்திகளே இதைத் தடுத்ததாயும் பெருமைபேச நியாயமிருக்கிறதா?

ஹிந்துக்களின் மதத்தத்வங்களையும், பழக்க வழக்கங்களையும் தூஷணைசெய்து பாமரர்களை மதமாற்றம்செய்யும் உத்தேசத்துடன் வந்த பாதிரிகளே இந்தியாவில் ஸதி மரணம் அதிகமிருப்பதாக ஆர்ப்பாட்டம் செய்தார்கள். மதியக்கமுற்ற இந்தியர்களும் சிலர் ஏமாந்தார்கள்.

ஸர் வில்லியம் பெண்டிங் காலத்தில் இந்தக் கூக்குரல் அதிகமாக்கப்பட்டது. அவர் வெளியிட்ட அறிக்கையொன்றில் கூறியதைக் கவனித்தாலே இந்தியாவில் ஸதி மரணம் வெகு குறைவாயிருந்ததாகவே தெரிகிறது. தென்னிந்தியாவில் இந்த வழக்கமிருந்ததாக கவர்ன்மெண்டாரே கூறவில்லை. வங்காளத்திலும், வேறு சில விடங்களிலும் இந்த வழக்கமிருந்ததாக ஸர் பெண்டிங் அறிக்கையில் கூறப்பட்டது. கோடிக் கணக்கான ஹிந்துக்களுக்குள்ள அந்த மாகாணத்தில் ஏதோ வெகு சில தொகையுள்ளவர்களே ஸதிமரணம் செய்ததாக ஸர் வில்லியம் கூறியிருந்து தெரிகிறது.

இதைக்கொண்டு இந்தியா முழுவதும் இந்த வழக்கம் பரவியிருப்பதாகப் பாதிரிகள் புரளிசெய்துவிட்டார்கள். மனிதர்களுடைய புத்திபோக்கைச் சட்டம் அடக்கிவிட முடியாது. வெறுப்பினால் தற்கொலை செய்து கொள்ளுகிறவர்கள் இன்றைக்கும் கணக்கில்லாமலிருக்கிறார்கள். ஐரோப்பா முதலிய எந்த தேசத்திலும் இது அதிகமாயிருக்கிறது. தற்கொலை செய்துகொள்ளுவதை சட்டத்தினால் தடுத்துவிட்டார்களா? உயிர் தோழனான பர்த்தா இறந்தபிறகு வெறுப்புற்று வாழ்க்கைவிடும் உத்தமிகளுடைய மனதை யார்தான் மாற்றமுடியும்? இந்த ரீதியில் அக்காலத்தில் சிலர் உடன்கட்டை யேறியிருக்கலாம்.

இன்று ஸர்க்கார் சட்டம் செய்துவைத்துக் கொண்டிருக்கையில்கூட சிற்சிலவிடங்களில் ஸதி மரணம் ஏற்படுவதைப் பார்க்கிறோம். ஆதலால் ஸதி போன்றவைகளைத் தடுக்கச் சட்டம் பிரயோஜனப்படாது.

சாஸ்திரவிதியைக்காட்டி, மத ஸம்பந்தமான நிர்ப்பந்தத்தால் ஒன்றைத் தடுப்பதே ஸ்திரமாயிருக்கக்கூடியது.

அந்த வழியில் பார்த்தால் சாஸ்திரமானது ஸதி மரண விஷயத்தில் விசேஷ பந்தோபஸ்து செய்திருக்கிறது. அந்த சாஸ்திரத்தை யனுசரித்து ஜனங்கள் இப்போது ஸதியை விட்டார்களேயல்லாது சட்டத்திற்குப் பயந்தல்ல. சாஸ்திரமே ஸதியை பூர்ணமாக அநுமதிக்கவில்லையென்பது காட்டப்பட்டது.

ஆதலால் ஹிந்துக்கள் சாஸ்திர விதியை அநுஸரித்துத் தாங்களாகவே நிறுத்திவிட்ட ஸதியை, சட்டமூலமாக பிரிட்டிஷார் தாங்களாகத் தடுத்துவிட்டார்களென்று பெருமை சொல்லிக்கொள்ள வழியில்லை. கவர்ன்மெண்டார், மத விஷயத்தில் பிரவேசித்துச் சட்டம் செய்யலாமென்பதற்கு இந்த ஸதிச் சட்டம் ஓர் உதாரணமாக இருக்க நியாயமே இல்லை. சாஸ்திரமே ஸதியை பூர்ணமாக அநுமதிக்கவில்லையன்றோ? ஸதிச் சட்டமானது ஏறக்குறைய மதத்தை அநுஸரிப்பதாகவே இருக்கிறது.

## ஸ்ரீ வைதிகவர்த்தினீ ஸபா புதுக்கோட்டை

### ஐந்து பிரசங்கங்கள் நடக்கும்

ஏற்கனவே நடந்து வரும் ஸ்ரீ சங்கர ஜயந்தி மஹோத்ஸவம் 9–5–39 செவ்வாய்க்கிழமை பூர்த்தி அடைகிறது. பிரிகிருதம் வாசுர் ஸ்ரீ பாஷ்ய பாலக்ரு ஸ்மிருதி பூஷணம் வி. எஸ். வெங்கடராம சாஸ்திரிகள் இங்கு விஜயம் செய்திருக்கிறார். இன்னும் சில தினங்கள் இங்கு தங்குவார்கள். அடியிற்கண்ட விஷயங்களைப்பற்றி ஹை ஸ்கூல் மகாராஜா கல்லூரியில் தினசரி மாலை 7 மணி முதல் 8½ மணிவரை உபந்யஸிக்கப்படும். 10–5–39 முதல் 14–5–39 வரை தினப்படி. ஸ்மிருதி ப்ரஸ்தானம், உபநிஷத்ப்ரஸ்தானம், ஸூத்ரப்ரஸ்தானம், பிரமாணங்கள், த்ரிவித ஷட்தர்சனம் முதலிய பிரசங்கங்கள் நடைபெறும். ஹை உபந்யாஸங்களுக்கு ஸ்ரீ. வி. வெங்காச்சாரியார் அக்ராஸனம் வகிப்பார்.

## ஸ்ரீமுகபடனம்

7–5–39 செங்கற்பட்டு பொன்னேரியால் ஹை ஆசார்யாளின், ஸ்ரீ காமாக்ஷி அம்பாளின் கும்பாபிஷேக ததகைங்கர்ய, விஷயமான ஸ்ரீமுகம்படனம் நடைபெற்றது, பொன்னேரி மஹா ஜனங்களுக்காக அவ்வூர் பென்ச்மாஜிஸ்ட்ரேட் ஸ்ரீ. வி. சுப்பிரமணிய அய்யர் அவர்களிடம் ஸ்ரீமுகபடனம் செய்து ஸ்ரீமடத்தின் பிரதிநிதியால் கொடுக்கப்பட்டது. ஸ்ரீமுகத்தை அவ்வூர் மஹா ஜனங்கள் ஸ்ரீமுகத்தை மிகவும் மரியாதையுடன் ஏற்றுக் கொண்டார்கள். ஸ்தலத்திலேயே பணம் வஸூலாயிற்று. இன்னும் வசூல் செய்யப்படுமெனத் தெரிகிறது.



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां ।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பிரமாதி-ஸூ சித்திரை-மீ 28உ

## ஸ்ரீ சுபாஷ் போஸ் ராஜிநாமா.

காங்கிரஸ் தலைவர் ஸ்ரீமான் சுபாஷ் சந்திரபோஸ் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி முன்பாகத் தமது பதவியை ராஜிநாமா செய்துவிட்டார். திரிபுரம் காங்கிரஸுக்குப் பிறகு பந்த் தீர்மான விஷயமாக எவ்வளவோ வாதப் பிரதிவாதங்கள் நிகழ்ந்தன. ஆயினும் காந்திஜியும், போஸும் கலந்து பேசுவதால் எல்லா வேற்றுமைகளும் மறைந்து ஸமரஸம் ஏற்பட்டுவிடுமென்று நம்பப்பட்டது. ஸமாதானம் செய்துவைப்பதில் ஸமர்த்தராக நினைக்கப்படும் காந்திஜி எப்படியும் நெருக்கடி தீர ஒரு வழியைக் கண்டுபிடிப்பாரென்றும் தேசமெங்கும் எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும் அந்த எண்ணம் நிறைவேற இடமில்லாமல் போய்விட்டதிலிருந்து இரு பிரிவினருக்கும் அடிப்படையான கொள்கையிலேயே அதிக வேறுபாடுகளிருப்பது ஸ்பஷ்டமாகிறது. போஸ் ராஜிநாமாவினால் காந்தி கோஷ்டியாருக்கு வெற்றியா, தோல்வியாவென்பது அவரவர் மனோபாவத்தை பொறுத்ததாகும். போஸ் ராஜிநாமாவை காந்திஜி வெற்றியாகக் காட்ட ஒரு பிரிவினர் முயற்சிப்பது வாஸ்தவமாயினும், உண்மையில் காந்தீயத்திற்குத் தோல்வியென்று சில ராஜீயவாதிகள் நினைக்க இடமில்லாமற்போகவில்லை.

தலைவர் தேர்தல் முதலாக இன்றுவரையில் நடந்துள்ள ஸம்பவங்களை ஊன்றி கவனித்தால் ஜநநாயக தத்வத்திற்காகப் பாடுபடுகிற காங்கிரஸின் முறைக்கு முரண் ஏற்பட்டிருப்பது தெளிவாகிறது,

ஜநநாயகக்கொள்கையைவிட "ஒரு மனிதர் ஆட்சி"யே காங்கிரஸில் ஓங்கியிருப்பது விளங்குகிறது.

தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முறையிலேயே ஓட்டர்களுடைய உரிமைக்கும், உணர்ச்சிக்கும் மாறாகக் கார்யங்கள் நடந்திருக்கின்றன. போட்டியபேக்ஷகர்கள் ஏற்பட்டு அவர்களுள் ஒருவரை தெரிந்தெடுப்பதே உண்மையான ஜநநாயகமாயிருக்கும். அப்படியின்றி காரியக்கமிட்டியாருடைய, அல்லது காந்திஜியினுடைய இஷ்டத்திற்கு இசையக்கூடியவர்களையே போட்டியின்றி நியமிக்கும்படி முயற்சிசெய்யப்பட்டது. காந்திஜியின் அபிப்ராயம் தெரிந்திருந்தும்கூட, ஸுபாஷ் அதற்கு உட்பட மறுத்ததும், காந்திஜியின் விருப்பத்திற்கு மாறாக வோட்டர்கள் நடந்துகொண்டதும் காந்தீயத்திற்கு ஒரு தோல்வியென்று நினைக்கக் கூடியதாயிருந்தது.

ஆயினும் திரிபுரத்திலும் தலைவர்கள் தங்கள் வழியை நிலைநிறுத்திக்கொள்ளவே வேலை செய்தார்கள். அங்கு செய்யப்பட்ட முடிவும் காந்தியத்திற்கு வெற்றிபோல் மேலுக்குத் தோன்றினாலும், காங்கிரஸின் மூலாதாரக் கொள்கையாகச் சொல்லப்படும் ஜனநாயகத்திற்கே தோல்வியாகுமென்று நினைக்கப்பட்டது. காங்கிரஸ் தலைவரே கார்யக் கமிட்டியை அமைக்கவேண்டுமென்ற சட்ட நியமும் தலைகீழாக மாற்றப்பட்டது. தங்கள் கொள்கையையும் பிடிவாதத்தையும் நிலை நிறுத்திக்கொள்ளவே காந்தீடக் கக்ஷியார் பாடுபட்டார்களேயல்லது, ஸாதாரண நீதி முறையைக்கூட அவர்கள் அநுசரிக்க மறுத்துவிட்டார்களென்று புகார் ஏற்பட்டது.

கார்யக்கமிட்டியை நியமிக்கும் அதிகாரத்தை காங்கிரஸ் மெம்பராகக்கூட இல்லாத காந்திஜியிடம் ஒப்படைக்கப்பட்டது. காந்திஜி, தாம் காங்கிரஸ் கார்யங்களில் ஸம்பந்தப்படவில்லையென்றும், அதன் தீர்மானங்களுக்குத் தாம் ஜவாப்தாரியல்லவென்றும் சொல்லிவருகிறார். ஆயினும் முற்றிலும் அவருடைய அபிப்ராயத்தையநுஸரித்தே காங்கிரஸ் நடைபெற்றுவருகிறதைப் பச்சைக் குழந்தைகூட அறியாமலிராது. ஹிட்லரையும், முஸோலினியையும் "ஸர்வாதிகாரிகள்" என்று காங்கிரஸ் தலைவர்கள் வெறுக்கிறார்களாயினும், காங்கிரஸிலும் அந்த நிலைமையே வேண்டுமென்று அவர்கள் விரும்பி அதையே திரிபுரத்தில் ஸ்தாபித்தார்கள்

ஆயினும் கல்கத்தாவில் போஸைக் கண்ட பிறகு காந்திஜி பந்த் தீர்மானப்படி தாம் நடக்கமுடியவில்லையென்பதைக் — காட்டிக் கொண்டிருக்கிறார்.

தாம் சொல்லும் கார்யக்கமிட்டி மெம்பர்களை போஸின் பொறுப்பிலேயே நியமிக்க வேண்டுமென்றும் தமது பொறுப்பில் தாம் செய்யமுடியாதென்றும் காந்திஜி கூறியிருக்கிறார். பந்த் தீர்மானப்படி காந்திஜிக்கு அந்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தும் இந்த ஸங்கடத்தில் ஸம்பந்தப்பட அவர் மறுத்துவிட்டார். அப்படியானால் திரிபுரத்தில் பந்த் தீர்மானத்தை கொண்டுவந்து நிறைவேற்றியதன் கருத்தென்ன? காந்திஜி பொறுப்பேற்க மறுத்த காரணமாகவே ஸ்ரீ போஸ் ராஜிநாமா செய்திருக்கிறாரென்று தெரிகிறது. காந்திஜி கூறும் கார்யக்கமிட்டி மெம்பர்களை வைத்து கமிட்டியை அமைக்கவும், அதன்படி தாமும் நடக்கவும் தயாராயிருப்பதாக போஸ் தெளிவாகக் கூறியிருந்தும் காந்திஜியின் அபிப்ராயம் காரணமாகவே போஸ் விலக நேர்ந்திருக்கிறது. ஆதலால் ஜனநாயக தத்வத்திற்கோ, காங்கிரஸ் கட்டளைக்கோ ஸ்ரீமான் போஸ் முரணாக நடந்துகொண்டாரென்று அவர் மீது பழிசொல்ல இடமில்லை.

காங்கிரஸில் ஒரு மனிதருடைய அபிப்ராயமும், எழுத்தும், பேச்சும், ஆதிக்யம் பெற்று வருவதை அபேதவாதிகள் போன்ற தீவிரக்காரர்கள் ஆக்ஷேபிப்பதில் அர்த்தமில்லாமல் போகவில்லை. ஆதலால் கல்கத்தாவில் காந்திஜி நடந்துகொண்டதிலிருந்து காங்கிரஸில் நீதி, ஸத்யம், அஹிம்ஸை ஆகிய தர்மங்களில் நம்பிக்கை குறைந்து வருவது மறுக்க முடியாது.

காங்கிரஸ்காரர்கள் அஹிம்ஸையைப்பற்றி எவ்வளவு பேசினாலும், இனி காங்கிரஸ்குள்ளேயே எதிர்கக்ஷியை அடக்கவேண்டிய நிர்ப்பந்தம் அதிகரித்து வருகிறபடியால் ஸத்யம், அஹிம்ஸை இவைகள் பெயரளவில் தான் இருக்கமுடியும்.

## குறிப்புகள்.

### ஹைதராபாத் சத்யாக்ரஹம்

ஹைதராபாத் சமஸ்தானத்தில் வசிக்கும் ஹிந்து பிரஜைகளின் குறைகளை அதிகாரிகள் நன்கு கவனித்துத் தக்க நன்மைகளைச் செய்யவில்லையென்று வருத்தப்பட்டு சமஸ்தானத்திலிருக்கும் ஹிந்துக்கள் சத்யாக்ரஹம் சென்ற பல மாதங்களாகச் செய்துவருவது நேயர்களுக்குத் தெரிந்த விஷயம்.

இந்த சத்யாக்ரஹத்துக்கு இந்தியாவிலிருக்கும் ஹிந்துக்களின் போஷாதரவு பலவிதத்தில் காட்டப்பட்டுவருகிறது. இதுவரையில் ஆயிரக்கணக்கில் தொண்டர்கள் சிறை சென்றிருக்கிறார்கள். தினசரி பல பாகங்களிலிருந்து தொண்டர்கள் ஹைதராபாத் சமஸ்தானத்துக்கு வந்து சத்யாக்ரஹம் செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த சத்யாக்ரஹ இயக்கத்தை நிறுத்த வேண்டி சமஸ்தானத்து அதிகாரிகள் பல விதத்தில் இன்னல்கள் விளைவித்து வருகிறார்கள். சிறையில் தொண்டர்களுக்குக் கசையடி கொடுக்கப்பட்டு வருகிறது. இன்னும் பலவித இடுக்கண்களுக்கு அவர்கள் உட்படுத்தப்பட்டு வருகிறார்கள். சிறையில் ஹிந்து சத்யாக்ரஹத் தொண்டர்களைச் சரிவர கவனியாததால் இதுவரையில் அறுவர் இறந்து போயிருப்பதாக இன்று செய்தி கிடைத்திருக்கிறது. இந்தச் செய்தியைக் கேட்டதும் இந்தியாவிலிருக்கும் கோடிக் கணக்கான ஹிந்துக்களின் நெஞ்சு துடிக்குமென்பதில் ஐயமில்லை. நிரபராதிகளான ஹிந்து தொண்டர்கள் ஹிந்துமத உரிமைக்காக உயிர்தியாகம் செய்தவரை எம் முழு மனதுடன் போற்றுகிறோம்.

இந்த அறுவரின் அகால மாணத்தைப் பற்றி சத்யாக்ரஹி சமிதித்தலைவர், "மே. த. வைஸிராய் பிரபுவுக்கும்," "அகில இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை அக்கிராசனாதிபதி ஸ்ரீ பாபு ராஜேந்திர பிரசாதுக்கும்," "மகாத்மா காந்திக்கும்" "ஹைதராபாத் சிறையில் அபூர்வமான சந்தர்ப்பங்களுக்கிடையே ஆறு சத்யாக்ரஹிகள் மாணமடைந்திருக்கிறார்களென்றும், இவர்களது சவங்களில் காயங்களும், சிராய்ப்புகளும் காணப்பட்டனவென்றும், சிறை அதிகாரிகள் இவர்களைக் கொடுமையாக நடத்தியிருக்கவேண்டுமென்பதற்கு இதுவே போதுமான அத்தாட்சிகளாகுமென்றும், உடனே விசாரணை நடத்தவேண்டியது மிகவும் அவசியமென்றும்", தந்தி அனுப்பியிருக்கிறார்.

இந்த வேண்டுகோளை அதிகாரிகள் புறக்கணிக்காது அங்கீகரித்து உடனே விசாரித்துத் தக்கதுசெய்வார்களென்று நம்புகிறோம்.

இந்தியாவிலே எல்லா சமஸ்தானங்களுக்கும் தலைசிறந்து விளங்கும் ஹைதராபாத் சமஸ்தானத்தில் - மகாகனம் டாக்டர் ஸர் அக்பர் ஹைதாரி என்ற சிறந்த பிரதமமந்திரி ஆட்சியில் - இம்மாதிரியான சம்பவங்கள் நடைபெறுவது வருந்தத்தக்கது.

ஹைதராபாத் சமஸ்தானத்தில் வசிப்பவர்கள் பெரும்பாலோர் ஹிந்து மக்களென்பதை நேயர்கள் அறியவேண்டும். ஹைதராபாத் அரசர் முகமதியர். ஒரு முகமதிய அரசர் தனது பெரும்பாலான ஹிந்து மக்களை எவ்விதம் பரிபாலித்து வருகிறாரென்பதை உலகுக்கு இந்த சத்யாக்ரஹம் காட்டி விட்டது. ஹைதராபாத் சமஸ்தானத்தில் ஹிந்துக்களுக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களைப்பற்றி பின்னால் விவரமாக விவரிப்போம்.

(எல். எஸ். மணி.)



## உள்ளூர் வர்த்தமானம்.

[நமது நிருபர்]

கும்பகோணம், மே 10உ

### ஆசிரியர்களின் வேண்டுகோள்

ஆசிரியர்களுக்கு சம்பள வெட்டு அமுலுக்கு தொடர்ந்து செய்வதை ரத்துசெய்யும்படி குடந்தை முனிஸிபல் ஆசிரியர் சங்கத்தினர் தீர்மானம் செய்து அனுப்பியுள்ளார்கள். ஆரம்ப இலவசக்கல்வி திட்டத்தில் சுமார் 50 ஆயிரத்துக்குமேலாக அதிகப்படி தொகை மீதம் இருக்கிறதென்றும், முனிஸிபல் வரவு செலவுகணக்கை முடிப்பதில்கணக்குசரிக்கட்டிசெய்யக்கூடவகையில்லாதிருக்கையில் ஆபீஸ் உத்தியோகஸ்தர்களுக்கு மாத்திரம் சம்பள வெட்டு செய்வதை நிறுத்தப் பட்டிருக்கிறதென்றும், 1938ஸூ முதலாக சம்பளவெட்டை உபாத்தியாயர்களுக்கு நிவர்த்தி செய்யவேண்டுமென்றும் தீர்மானத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

### இரவாஞ்சேரி காலித்தனம்.

இரவாஞ்சேரியில் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர் ஜனாப் எஸ். எ. ரஹீமை முஸ்லீம்கள் பலமாகத்தாக்கப்பட்டதை வாசகர்கள் அறிந்திருப்பார்கள். போலீஸ் அதிகாரிகள் வழக்கம் போல் சம்பவம் நடந்த பிறகு விசாரணை செய்தனர். இதனையொட்டி ஆறு துலுக்கர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். எதிரிகளை அடையாளம் காட்ட 5ந்தேதி விசாரணையும் நடைபெற்றது.

### முனிஸிபல் சபைகளுக்குப்புதிய உத்திரவு.

சென்னை மாகாண முனிஸிபாலிடிகளின் பணங்களை இனி இம்பீரியல் பாங்கியில் போடும் படி உத்திர விட்டிருக்கிறார்கள் என்று சென்ற வாரம் நம் பத்திரிகையில் பிரசுரிக்கப் பட்டிருக்கிறது. அது தவறு. "கவர்ன்மெண்டுடிரஷரியில் தான்(கஜானாவில்) போட்டு வைக்க வேண்டும்" என்று உத்திர விட்டிருக்கிறார்கள்.

### அரசியல் மகா நாடுகள்.

கும்பகோணம் தாலூகா அரசியல் மகாநாட்டிற்கு தலைமை வகிக்க வேண்டுமென்று ஸ்ரீமான்களான குமாரஸாமி ராஜா, ஓமாந்தூர் ராமசாமி ரெட்டியார், எஸ். சீனிவாச ஐயங்கார், முத்து ராமலிங்க தேவர் முதலியவர்களை வரிசையாக எழுதி கேட்பதாய் 3உ கூடிய வரவேற்பு கமிட்டித் தீர்மானித் திருக்கிறது. மகாநாடு ஆடுதுறையில் கூடும். குடந்தை அரசியல் மகாநாடு 14உ கூடுகிறது.

### நகர காங்கிரஸ் கமிட்டியில் பிளவு

நகர காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் 4உ நடைபெற்றது. கூட்டத்தில் இரவாஞ்சேரியில் அக்கிரமமாய் முகமதிய காலிகளினால் தாக்கப் பட்ட ஜனாப் ரஹிமுக்கும் இதர்களுக்கும் அனுதாபம் காட்டுவதாக" ஒரு தீர்மானம் நிறைவேறியது. கூட்டத்தில் பல விஷயங்கள் விவாதிக்கப் பட்டன, சிலர் கமிட்டியிலிருந்து ராஜிநாமா செய்திருப்பதாகத் தெரிகிறது. காங்கிரஸ் கமிட்டியில் பிளவு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

## ராமகிருஷ்ண வித்யாலய சங்கீத பாடசாலை

### திறப்பு விழா.

(14-5-39) ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு கும்பகோணம் 8-வது வார்டு சோலையப்பமுதலிதெரு (மினிஸிபல் ஸ்கூலுக்குப்பக்கத்திலுள்ள) •156/3 நெ. கட்டிடத்தில் ஸ்ரீ எஸ். சத்தியமூர்த்தி அவர்கள் விஜயம் செய்து சங்கீத பாடசாலை ஒன்றையும் புத்தகசாலை ஒன்றையும் திறந்து வைப்பார். அவ்வமயம் ஷை கட்டிடத்திற்கு பக்கத்தில் தேசியக்கொடி ஒன்றும் ஏற்றி வைப்பார். வைபவத்திற்கு நகரசபைத்தலைவர் டாக்டர் M. V. தியாகராஜய்யர் அவர்கள் தலைமை வகிப்பார்.

## அய்யலூர் ரயில் விபத்து.

### நீதிபதிகளின் விசாரணை முடிவு. அரசாங்கத்தின் அறிக்கை

1938 ஸூ ஆகஸ்டுமீ 20 தேதி இரவு அய்யலூர் ஸ்டேஷனுக்கருகில் நடந்த கோர ரயில் விபத்தைப்பற்றி நேயர்கள் அறிந்திருப்பார்கள்.

இந்த விபத்தைப்பற்றி முழு விசாரணை நடத்தும்படி மதுரை- திருச்சி ஜில்லா கலெக்டர்களுக்கு அரசாங்கத்தார் உத்திரவிட்டனர்.

இதனை ஒட்டி விசாரணை சென்ற பல மாதங்களாக நடைபெற்றது. ரயில்வே இன்ஸ்பெக்டர் ஒரு தனி விசாரணை நடத்தின விஷயத்தைப்பற்றி இந்தியா சர்க்கார் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்.

"இந்த விபத்தில் மொத்தம் 33 பேர்கள் இறந்தார்களாம். (இதில் 23 பேர்கள் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார்களாம்.) இதர்கள் ஆஸ்பத்திரிகளில் மாண்டார்களாம் 93 பேர்கள் விபத்தில் காயமுற்றார்களாம்.

"ரயில்வே உத்தியோகஸ்தர்கள், ரயில் என்ஜின் டிரைவர், ரயில்வே கம்பெனியார் முதலியவர்கள்மீது இந்த விபத்தின் காரணத்தைச் சுமத்தமுடியாது.

"விபத்திற்குப் பிறகு எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் துரிதமாகவும் பலனடையக்கூடியதாகவும் இருந்திருக்கின்றன. சொத்துக்கள் கொள்ளையடிக்கப்படவில்லை. விபத்தில் இறந்தவர்கள் எண்ணிக்கையை உண்மையாகச் சொல்லப்படவில்லை என்று கூறும் வதந்திகளுக்கு ஆதாரமேயில்லை,

"காயமுற்றவர்களுக்கு வைத்திய வசதிகள் சரிவர செய்யப்பட்டிருந்தன ........."

என்ற மேலேகண்ட விஷயங்களை விசாரணை நடத்திய நீதிபதிகள் சர்க்காருக்கு தெரிவித்துள்ளார்கள்.

இந்த விபத்துக்கு சர்க்கார் அனுதாபம் காட்டி வருத்தம் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அறிக்கையில் பல விஷயங்கள் சிபார்சு செய்யப்பட்டிருக்கின்றன. அவைகளை அரசாங்கம் அதிகாரிகளுடன் கலந்து ஆலோசிப்பார்கள்.

### நீதிபதிகளின் யோசனை அதிகாரிகள் கவனிப்பார்களா ?

நீதிபதிகள் முடிவாகக் கூறியிருப்பதாவது:-

1, ஒவ்வொரு பிரயாண ரயில்வண்டிகளில் போர்டபிள் விளக்கும், டெலிபோனும் எடுத்துச்செல்லவேண்டும்,

2. வைத்திய சிப்பந்திகள் விபத்து நடந்த இடத்திற்குத் துரிதமாக வந்துசேர ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டும்,

3. விபத்து நிவாரணம்பற்றித் தக்க நிபுணர்களை வைத்துக்கொண்டு சர்க்கார் விதிகளைச் செய்யவேண்டும்.

4. பர்மனெண்டுவேயில் ஏற்பட்ட சேதத்துக்கு எவ்வாறு திறமையாக கவனம் செலுத்துகிர்களோ அந்த அளவாவது விபத்தில் காயமுற்றவர்களுக்கு நிவாரணமளிக்க வேண்டும்,

எங்கள்முன்பு கொடுக்கப்பட்ட சாட்சியங்களிலிருந்து இந்தக்கோளாறுகளுக்கெல்லாம் காரணம் அவசர சந்தர்ப்பங்களில் ரயில்வே கம்பெனியார் செய்திருக்கும் ஏற்பாடுகளில் உள்ளக் குறைகளேயாகும்.

## "ஹிந்து" நிருபர் மூழ்கி மாண்டார்

### மன்னார்குடியில் பரிதாபகரமான சம்பவம்

7தேதி மாலை மன்னார்குடி ஹரித்ரா நதி. குளத்தில் திருச்சிநைப்பள்ளி, குளித்தலை "ஹிந்து" பத்திரிகை நிருபரான ஸ்ரீமான் கே. கிருஷ்ணமூர்த்தி நீராடப் போனார். கால்சருக்கி அவர் குளத்தில் மூழ்கிப் போனார்.

மறுதினம் குளக்கரையில் வைக்கப்பட்டிருந்த அவரது வேஷ்டி, ஷர்ட்டுகள் மூலம் உண்மை தெரிந்தது. 7தேதி காலை சவம் குளத்தில் மிதந்து வந்தது. போலீசார் விசாரித்து "மூழ்கி இறந்ததாக" முடிவு செய்தார்கள். ஒருவர் மீதும் சந்தேகமில்லாததால் பிரேத சோதனை நடைபெறவில்லை. இறந்தவருக்கு 35வயது. இரண்டு குழந்தைகளிருக்கின்றன.

## சு: ம. காலாடித்தனம்

### லால்குடி காங்கிரஸ் கூட்டத்தில் கல்வீச்சு.

"கல்" 4 ரூ. ஏலம் போயிற்று

லால்குடி தாலூக்கா காங்கிரஸ் தொண்டர்கள் சங்க ஆதரவில் லால்குடி தாலூக்கா முழுவதும் காங்கிரஸ் பிரசாரம் நன்கு செய்தவருகிறார்கள். அநேகப் பொதுக் கூட்டங்களை நடத்தி, அதில் காங்கிரஸ் மந்திரி சபையினர் நாட்டுக்குச்செய்த நன்மைகளை விவரித்தார்கள்.

மனக்கால், லால்குடி, பூவாளூர் முதலிய இடங்களில் நடந்த மாபெருங் கூட்டங்களில் சுடமரியாதை காலிகள் கலவரம் உண்டாக்க முயன்றும் முடியவில்லை. லால்குடி போலிசார் ஸ்தலத்துக்குவந்து சு. ம. காலிகளை கூட்டத்திலிருந்து அப்புறப்படுத்திவிட்டார்கள். பூவாளூரில் ஒரு சு. ம. காலாடி பரமக்குடி ஸ்ரீ கே. ஏ. முத்துஸ்வாமி என்ற காங்கிரஸ் தலைவர்மீது ஒரு பெரிய "கல்லை" வீசி எறிந்தான். அவர் பலத்த காயமுற்றார். இந்த அயோக்கியத்தனத்தைப் பொதுமக்கள் வெட்கம் கூறி வெட்கம் என்று எறிந்த சு ம. "கல்லை" ஏலம் விட்டார்கள், அதைக் கூட்டத்தில் 4 ரூபாய்க்கு ஒருவர் வாங்கினர். இதைப் பார்த்ததும் சு. ம. காலிகள் வெட்கமுற்று ஓடிவிட்டனர்.

### குத்தியதாக வழக்கு.

மோதிலால் தெருவு கேசவலு நாயுடு என்பவர் ராமகிருஷ்ண நாயுடுவை 3உ இரவு கத்தியால் முதுகில் குத்தி விட்டான். எதிரி கைது செய்யப்பட்டிருக்கிறான். போலீஸார் விசாரணை செய்து வருகிறார்கள்.

# புத்தக விமர்சனம்.
# REVIEWS
॥ पुस्तकपरामर्शः ॥

["ஆர்யதர்மம்" வாரப்பதிப்பில் மதிப்புரைக்காக அனுப்பப்படும் புஸ்தகங்கள், பத்திரிகைகள் யாவும் பிரதி திங்கட்கிழமைக்குள் ஆசிரியர் விலாசத்துக்கு அனுப்பவேண்டும். ஒவ்வொன்றிலும் இரண்டு பிரதிகள் அனுப்பப்படவேண்டும். "மதிப்புரை" விஷயமாக தர்க்கங்கள்—ஆக்ஷேபணைகள் பிரசுரிக்கப்படமாட்டாது. கடிதப்போக்கு வரத்தும் நடத்தப்படமாட்டாது. ஆசிரியர்:]

## ஸம்ஸ்க்ருத—தமிழ் அகராதி.

## (Sanskrit—Tamil Dictionary.)

ஆசிரியர்:— ஸ்ரீ. கே. ஈ. வெங்கடேச சர்மா.
கிடைக்குமிடம்:— ஸ்ரீ. கே. ஈ. துரைசாமி ஐயங்கார், ஸம்ஸ்க்ருத புஸ்தகசாலை, 29 ரங்க நாதம் தெரு, மாம்பலம் சென்னப்பட்டனம்.

விலை ரூ. 7. மூன்றுபாகங்கள் கொண்டது. சுமார் 1800 பக்கங்களுடையது.

நமது பார்வைக்கு (உயிரெழுத்துக்களடங்கிய) முதற்பாகம்மட்டும் (520 பக்கங்கள்) வந்திருக்கிறது. சிறந்த பதிப்பு. கோர்த்தியான பைண்டு. உயர்ந்த காகிதம். நல்ல அச்சு. அகராதியின் முதல் பாகம் விலை ரூ. 2

தமிழ்நாட்டில் வடமொழிப் புத்தகங்களைப் படிப்பவர்களுக்கு அர்த்தம் பார்த்துக் கொள்ளப் பூர்த்தியான அகராதி இதுவரையில் வெளிவரவில்லையாம். அந்தப் பெருங்குறையைத் தீர்க்கவே இந்த அகராதி அச்சிடப்பட்டு வெளிவந்திருக்கிறது. "இந்த அகராதி அனைலக்ஷப்பதங்கள்- அநேக அர்த்தங்களுடன் கூடினது. வெகுவாய் இதில் வாராத புது வடமொழிப்பதமாவது- அர்த்தமாவது வேறு இராது- சுருக்கமாய் விவரித்திருக்கிறோம்"-...............என்று ஆசிரியர் முகவுரையில் கூறியிருப்பது முதல் பதிப்பைப் பார்த்தவுடனேயே நன்கு தெரிகிறது.

"அகராதி" எவ்வளவு ஆயிரம் பக்கங்கள் இருந்தாலும், அதை ஒரே பெரிய புத்தகமாக பைண்டுசெய்து வெளியிட்டால் நன்றாயிருக்கும். முதல் பாகம், இரண்டாம் பாகம், என்று பலபாகங்களாகப்பிரிப்பது சரியன்று. அன்பர்கள் சந்தேகத்துக்கு அகராதியைப் புரட்டினால் ஒரே புத்தகத்தில் விஷயங்கள் யாவும் இருக்க வேண்டுமென்பது என் அவா. புத்தகத்தின் முதல் (உள்) பக்கத்தில் அதிக "விலாசங்கள்" கொடுத்திருப்பதைச் சற்று குறைத்திருந்தால் பார்வைக்கு நன்றாக இருந்திருக்கும். இரண்டாம் பதிப்பிலாவது இந்தக்குறைகளை பதிப் பாசிரியர் நிவர்த்தி செய்வாரென்று நம்புகிறோம்.

இந்த அகராதி தமிழ் நாட்டிலுள்ள எல்லா புஸ்தகசாலைகளில் வைக்கப்பட வேண்டுமென்று சிபார்சு செய்கிறோம். கல்வி அதிகாரியின் கவனத்துக்கு இந்த அகராதியை கொண்டுவர விரும்புகிறோம்.

(லால்குடி எல். எஸ். மணி)

---

## இலங்கையில் தமிழரின் கதி.

## ஒரு ஆசிரியரின் வேண்டுகோள்.

### "உயிரைக்கொடுத்தாயினும் உரிமைக்குப் போராடுக!"

ஆசிரியர் சுவாமி சுத்தானந்த பாரதியார் இலங்கை இந்தியர் நிலை குறித்துப் பின் வருமாறு குறிப்பிடுகிறார்:—

"இலங்கையில் தமிழர் நிலை வர வர இரங்கத் தக்கதாயிருக்கிறது. இலங்கை, தமிழர் நிலமேயாம். பிறர் அதில் வந்து குடியேறித் தமது ஆட்சியை நிலைநாட்டினர். அந்தோ! தமிழரின் ஏமாற்றத்தை என் சொல்வது! ஆஹா! அவர்கள் பணத்தையும் போட்டு, மாடுபோல் உழைத்து, பயனையெல்லாம் அன்னியருக்குக் கொடுத்துச் சிறுமைப் படுகிறார்களே! இந்த விதிக்கு என் செய்க! அந்தோ! தமிழர் வஞ்சகமற்று உழைக்கின்றனர்! அவரிடம் வேலை வாங்கிக்கொண்டு "போடாகூலி" யென்று அன்னியர் விரட்டியடிக்கின்றனர்! தமிழனுக்கு இனியொரு வீராவேசம் பிறக்க வேண்டும்! தனது முதலைப் பிற நாடுகளிற்போட்டு ஏமாறாது, இனி தமிழ் நாட்டிலேயே தொழிலும் செல்வமும் பெருக்க முயலவேண்டும்.

கதிர்காமம் தமிழர் க்ஷேத்திரம். முருகன் தமிழர் கடவுள். அக்கோயிலும் ஊரும் சிங்களவர் கையில் உள்ளன. நமது வேதாகமங்கள் எங்கே? தமிழர் ஆயிரக்கணக்கான காணிக்கை போட்டு வருகின்றனர். கதிர்காமத்தைத் தமிழர் ஆட்சிக்குட்படுத்த என் முயற்சி செய்யலாகாது? வட நாட்டாராயிருந்தால் பெரிய கிளர்ச்சி செய்வர். இலங்கைத் தமிழர் தமது உரிமைகளைப் பிரசாரம் செய்ய வேண்டும்! நியாயத்தை எடுத்துச் சொல்ல வேண்டும்! உயிரைக்கொடுத்தாயினும் உரிமையைக்காத்துக்கொள்ள வேண்டும்! இலங்கைச்சட்ட சபைகளில் தமிழ்ப் பிரதிநிதிகள் முனைந்து நின்று பணி செய்ய வேண்டும். இன்றேல் அனைவரும் தாய்நாட்டைச் செழிப்புறுத்துவதில் முனைய வேண்டும்! அந்தோ! நமது மலைகளிலெல்லாம் இங்கே அந்நியர் தோட்டங்களே காண்கின்றன. தமிழர் உலகில் முன் சிறுமைப்பட்டு பிறருக்குழைத்து, உடல் மெலிகின்றனர். நலிகின்றனர். இந்நலிவு தீர வீர இளைஞர் தொண்டு செய்க!"

---

## சென்னை.

### ஸ்ரீ கிருஷ்ணதாஸ பாண்டவ பட்டாபிஷேகம்.

சென்னை ஸ்ரீ லக்ஷ்மீபுரத்தில் சென்ற 2 மாதகாலமாக பிரும்மஸ்ரீ வே. ஸோம தேவ சர்மா அவர்கள் உபன்யஸித்து வந்த ஸ்ரீவேதவ்யாஸ மஹாபாரதம் பூர்ணமாகி நாளது ஞாயிறன்று காலை வேதபாராயணத்துடன் அபிஷேகார்ச்சனையும் புதிய லக்ஷ்மி ஹாலில் பிராமண ஸமாராதனைகளும் ஏழைகளுக்கு அன்னமும் இரவு 8 மணிக்கு உபன்யாஸமும் நடைபெறும்.

ஸ்ரீமுக படனம்:— ஸ்ரீ காமாக்ஷி அம்பாளுக்கு வெள்ளிரதமும் கும்பாபிஷேகமும் நடத்த ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளால் அநுக்ரஹிக்கப்பட்ட ஸ்ரீமுகம் மைலாப்பூர் மாம்பலம் ஏகாம்பரேச்வரர் கோவில் அக்ரஹாரம் முதலிய இடங்களில் படிக்கப் பட்டது.

ஸ்ரீஜகத்குரு அதர்சனம்:— ஸ்ரீ காஞ்சிக்கு எழுந்தருளிய ஸ்ரீ ஜகத்குரு தரிசனத்திற்காக சென்னையிலிருந்து பிரபல குருபக்தர்களும வைதிகத் தலைவர்களும் சென்று வந்தனர். ராமேச்வரம் சென்று வியாஸபூஜையை குடந்தையில் நடத்தி நவராத்ரிபூஜைக்கு ஸ்ரீ காஞ்சிக்கு ஜகத்குரு விஜயம் செய்வாரெனத் தெரிகிறது.

---

## தேசஜனங்களின் பாராட்டு

### ஸ்ரீசுபாஷ். சந்திரபோஸுக்குக் கௌரவப்பட்டம்

### "தேச கௌரவ" சுபாஷ் பாபு.

கல்கத்தாவில் ஸ்ரீஜத் சுபாஷ் சந்திரபோசைப் பாராட்டவேண்டி மேமீ 7உ ஒரு மாபெருங்கூட்டம் கூடிற்று. சுமார் 30 ஆயிரம் ஜனங்கள் கூடியிருந்தார்கள்.

கூட்டத்துக்குக் கல்கத்தா நகரபரிபாலன சபை மேயர் தலைமை வகித்தார்.

பல கட்சிகள் சார்பாக பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் பேசி இருப்பது குறிப்பிடத்தக்கது. ஆங்கிலோ-இந்தியப் பிரஜா உரிமை சங்கத்தலைவர் மிஸ்டர் கிப்பனும் ஸ்ரீசுபாஷை ஆதரித்துப் பேசினர். தேசமக்களின் பிரதிநிதிகளடங்கிய அந்த மாபெருங்கூட்டத்தில், வங்க முடிசூடாமன்னரும், அரும்பெரும் தியாகியுமான ஸ்ரீஜத் சுபாஷ்சந்திரபோசுக்கு அவருடைய தியாகங்களை மெச்சி, "தேச கௌரவ" என்ற கௌரவபட்டத்தை நீண்ட கரகோஷத்தினிடையில் வழங்கினார்கள்.

"ஸ்ரீ சுபாஷ் பாபு, காங்கிரஸ் தலைவர் பதவியை ராஜினாமா செய்ததைப் பாராட்டுவதாகவும், அவருக்கு லக்ஷக்கணக்கில் பணம் உதவுவதென்றும், அவரது புதிய கட்சிக்கு ஆதரவு காட்டுவதென்றும், வங்காள மகா ஜனங்களின் இஷ்டத்துக்கு விரோதமாக காங்கிரஸ் காரியக்கமிட்டியில் பதவி வகித்த டாக்டர் ராயையும், டாக்டர் கோஷையும் கண்டிப்பதாகவும்," தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. "வாழ்க சுபாஷ்" என்ற கோஷத்தினிடையில் கூட்டம் முடிவுபெற்றது.

---


வே. ஸோ. சர்மாவின் பிரசுரங்கள்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| | 2 | 0 | 0 |
| சங்கரோபதேசம். | 0 | 12 | 0 |
| பத்ம புராணம். | 0 | 6 | 0 |
| மார்கண்டேயபுராணம் | 0 | 6 | 6 |
| வாமன புராணம். | 0 | 0 | 0 |
| வைகுண்ட ஏகாதசி | | | |

ஸ்ரீஜனார்தன ப்ரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட், டவுன் ஹைஸ்கூல்ரோடு,கும்பகோணம்.




# ஸ்ரீ சங்கரஜயந்தி மஹோத்ஸவம்.

## கல்கத்தாவில் ஆஸ்திகப் பிரசாரம்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி மே. த ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் 1935ஹு இந்நகருக்கு விஜயம் செய்திருந்தார்கள். அச்சமயம் ஸ்ரீ K. K. S. அய்யாவர்கள் முதன்மையாயிருந்து ஷை ஆசார்ய கைங்கரியம் நடத்தி வந்தார்கள். மற்றுமுள்ளவர்களுடைய சிரத்தா பக்தியும் அதிகரித்தே வந்தது. அந்த வருஷம், அநேக ஆண்டுகளாய் நடந்துவந்த ஸ்ரீ சங்கர ஜயந்தி மஹோத்ஸவம், ஷை ஆசார்யாளனுக்ரக பலத்தால் மிகவும் விமரிசையாய் நடைபெற்றது. இவ்விதமே, ஸ்ரீராதா கல்யாணம், ஸ்ரீ ஸீதாகல்யாணம் முதலிய உத்ஸவங்கள் நடந்துவருகின்றன. 20-4-39ல், ஷை ஜயந்தி மஹோத்ஸவம் ஆரம்பிக்கப்பட்டு தினந்தோறும், காலை மாலை வேதபாராயணம் ஸ்ரீ மதாசார்யபாதாளுக்கு, மஹந்யாஸ பூர்வம் அபிஷேகம் பூஜை ஸஹஸ்ரநாமார்ச்சனை, திவ்ய நிவேதனங்கள், திவ்யோபசாரங்கள்,ஆதரவுடன் நடைபெற்றன. தின்சரி நாஸ்திக மத கண்டனம், ஸ்ரீ மதாசார்யாவதாரம், ஸந்யாஸஸ்வீகாரம், மண்டனமிச்ர ஸம்வாதம் ஸ்ரீ மதாசார்யாளுக்கு ஞான ஸாம்ராஜ்ய பட்டாபிஷேகம், என்னும் ஐந்து பிரிவுகளாக ஸ்ரீ சங்கர விஜயத்தைப்பிரித்து அம்மனூர் வேதாந்த விபூஷணம், வேதாந்த சிரோமணி ஸ்ரீ ஏ. ஆர். வெங்கட்டராம சாஸ்திரிகளவர்கள் உபன்யஸித்தார்.

பல பிரமுகர்கள் கல்கத்தாவில் ஆஸ்திகப் பிரசாரம் செய்து தர்மகாரியங்களைச் செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

அநேக வருஷ காலமாய் இந்த ஊரில் ஸ்ரீ ராமகிருஷ்ணமூர்த்திகளுக்கு சனி ஏகாதசி தினங்களில் பஜனை நடந்து வருகிறது. ஷை மூர்த்திகளுக்கு ஸ்திரமான ஒரு ஆலயம் நிர்மாணம் செய்ய ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

[குறிப்பு:— கல்கத்தாவிலிருக்கும் ஆஸ்திகபிமானிகள் அனைவரும் "ஆர்யதர்மம்" அங்கு அதிகம் பரவவேண்டி உதவி செய்ய முன் வர வேண்டும். "சந்தாதாரர்கள்" சேர்த்துக்கொடுக்கும் படி அவர்களைக் கேட்டுக்கொள்கிறோம் மானேஜர்]

## மதுரை

மதுரையில் தர்மசாஸ்திர ஸபை, வைதிக ஸமாஜம் இச்சபைகளின் ஆதரவில் ஏப்ரல்மீ 20உ முதல் 24உ முடிய 5 தினங்களில் ஸ்ரீ சங்கரஜயந்தி மஹோத்ஸவம் கொண்டாடப் பெற்றது. ப்ரதிதினம் காலையில் ஸ்ரீசங்கர மடத்தில் ஆசார்யாளுக்குப் பூஜையும், பாஷ்ய பாராயணமும், வேதபாராயணமும், மாலையில் ஸனாதன தர்மவித்யாலயத்திலும் ஜயந்திசுவர மண்டபத்திலும் வித்வான்கள் ஆசார்யாளின் அவதார மஹிமையைப்பற்றியும் உபதேசங்களைப் பற்றியும் உபந்யஸித்தார்கள். ஸ்ரீசங்கரஜயந்தி தினத்தன்று ஸ்ரீ சங்கர மடத்தில் ஈச்வரனுக்கும் ஸ்ரீ மீனாக்ஷி ஸுந்தரேஸ்வரர் கோவிலில் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்கும் விசேஷ அபிஷேகங்களும் ஸ்ரீசங்கர மடத்தில் ப்ராம்மண ஸந்தர்ப்பணையும் இரவில் ஆசார்யாள் ஊர்வலமும் நடைபெற்றன.

மாஜி ஸப் ஜட்ஜ் ஸ்ரீ R-வேங்கடாசலமய்யாவர்கள் ஸ்ரீ பகவத்பாதாளின் சரித்ரத்தைச் சுருக்கமாய்ச் சொல்லி நமது தபஸினாலும் வைராக்கியத்தினாலும் நாம் மேன்மையடைய முயலவேண்டுமென்று பேசினார். ப்ரும்மஸ்ரீ ராவ்ஸாஹிப் N. நடேசய்யாவர்கள் நமது தேசத்தில் பரவியிருந்த துர்மதங்களை கண்டித்து அத்வைத ஸித்தாந்தத்தை ஸ்ரீபகவத்பாதாள் ஸ்திரமாக ஸ்தாபித்த விஷயத்தைத் தெளிவாக எடுத்துரைத்தார். முன்னிப்பள்ளம் ஸ்ரீ யக்ஞ தீக்ஷிதர் வர்ணாச்ரம தர்மங்களை சாஸ்திரத்தில் சொல்லியபடி அனுஷ்டிப்பதே மோக்ஷத்தையடைவதற்கு முதல்படியாக ஸ்ரீ பகவத்பாதாளின் உபதேசமென்று உபந்யஸித்தார். ப்ரும்மஸ்ரீ வி. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்கள் மாயையின் ஸ்வரூபத்தைப்பற்றி யோகவாஸிஷ்டம் உபநிஷத் ஸாரங்களை எடுத்துப்பேசினார். ப்ரும்மஸ்ரீ ஸாம்பசிவ சாஸ்திரிகள் ஸுகமடைவதற்கு ஸ்வதர்மானுஷ்டானமே மார்க்கமென்று ஸ்தாபித்தார். ப்ரும்மஸ்ரீ ஸீதாராம சாஸ்திரிகளவர்கள் ஸகுணோபாஸனையின் மூலம் நிர்குணோபாஸனை அனுஷ்டித்து ஞானமும் மோக்ஷமும் அடையலாமென்று ஸ்ரீபகவத்பாதாளின் உபதேசங்களைத் தெளிவாய் உபந்யஸித்தார்கள். ப்ரும்மஸ்ரீ சிவராம கிருஷ்ண சாஸ்திரிகளவர்கள் ஸ்வதர்மத்தை பக்தியுடனும் ச்ரத்தையுடனும் அனுஷ்டிக்க வேண்டுமென்று கூறினர்.

## ஸ்ரீரங்கம்

ஸ்ரீரங்கம்- ஸ்ரீ சங்கர குரு குலத்தில் ஸ்ரீ சங்கர பகவத் பாதாசார்யாளுடைய ஜயந்தி மஹோத்ஸவம் நான்கு தினங்கள் கொண்டாடப்பட்டது. அவ்வமயம் ப்ரதிதினமும் காலையில் ஏகாதச ருத்ராபிஷேகம் ப்ரஸ்தானத்ரயபாஷ்யபாராயணமும் சங்கர விஜய பாராயணமும் ஸஹஸ்ரநாமார்ச்சனை விசேஷ நைவேத்ய நீராஜனங்கள், பிராம்மண ஸந்தர்பணம் முதலியனவும் நடந்தன. பழூர் வேதாந்த பாடசாலா அத்யக்ஷர், மிமாம்ஸா சதுர' எஸ். வி. சுப்ரமணிய சாஸ்திரிகள் "ஆசார்யாளின் அவதார மஹிமை" என்னும் விஷயத்தைப்பற்றியும் ஜம்புகேச்வரம் ஸ்ரீ ஜகத்குரு வித்யாஸ்தானம் அத்யக்ஷர் பிர்ம்மஸ்ரீ போலகம்ராமசாஸ்திரிகள் "எல்லா மதமும் சம்மதம்" என்ற விஷயத்தைப்பற்றியும் பண்டிட் கணபதி சாஸ்திரிகள் "ஸ்ரீ மதாசார்யாள் சரித்திரம்" என்ற விஷயத்தைப்பற்றியும், திருவிசநல்லூர் பிர்ம்மஸ்ரீ குருஸ்வாமி சாஸ்திரிகள் "வித்யாரண்ய ப்ரபாவம்" விஷயத்தைப்பற்றியும் புதுக்கோட்டை ஸ்ரீ பஞ்சாபகேசய்யர் பாகவதார்த்த ஸங்கிரகம் என்ற விஷயத்தைப் பற்றியும் உபந்யஸித்தார்.

## திருக்கோவிலூர்

திருக்கோவிலூர்:— இவ்வூர் ஆரிய தர்மாபி விருத்தினி பிராம்மண ஸபையரால் சங்கர ஜெயந்தி மஹோத்ஸவம் வெகு விமரிசையாகக் கொண்டாடப் பட்டது.

ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதாசார்ய ஸ்வாமிகள் பிம்பத்தை அலங்காரத்துடன் ஊர்வலமாகக் கொண்டாடப் பட்டது.

ஆசிரியர் ராமசடகோப அய்யங்கார் ஆசார்ய பக்தி என்பது பற்றி உபந்யஸித்தார்.

## நாகூர்.

### வஸந்த உத்ஸவம்.

மேல அக்ரஹாரத்தில் ஸ்ரீ பஜனை மடத்தில் 22-4-39 முதல் ஆரம்பமாகி 30-4-39 வரையில் வசந்த உத்ஸவமும் ஸ்ரீ சங்கர ஜயந்தி உத்ஸவமும் வழக்கம் போல் அதி விமர்சையாய் நடைபெற்றது.

அதில் 22-4-39ல் சென்னை காயனபடு கீர்த்தனபடு ஸ்ரீமதி வி. சால்வதிபாய் அம்மாளுக்கு நாகூர் நாகப்பட்டணம் மஹாஜனங்கள் சார்பாக நாகை வக்கீல் பிர்மஸ்ரீ P, S. சிவராமய்யர். வரவேற்பு பத்திரம் வாசித்து அளித்தார்.ஸ்ரீமதி சால்வதிபாய் அம்மாளின் "ராமதாஸ் சரித்திரம்" கதா காலக்ஷேபம் நடந்தது. 23-4-39ல் சௌ குஞ்சுமணியின் புல்லாங்குழல் கச்சேரியும், பிர்மஸ்ரீ ஹரிஹர பாகவதர் அவர்களால் பிரக்லாத சரித்திரம் கதாகாலக்ஷேபமும், 24-4-39 சங்கரஜயந்தி அன்று பஜனை திவ்ய நாமங்கள் உத்ஸவமும், 25-4-39ல் சேலம் வாகவி பிர்ம்மஸ்ரீ வெங்கடேச பாகவதர் அவர்களால் ஸ்ரீ வெங்கடேச கல்யாணம் கதையும், 26-4-39ல் கும்பகோணம் பிர்ம்மஸ்ரீ T. N. ரெகுநாத பாகவதர் அவர்களால் ஸ்ரீ ராம பட்டாபிஷேகம் கதா காலக்ஷேபமும், 27-4-39ல் காளியாகுடி ஸ்ரீ நடேச சாஸ்திரிகள் அவர்களால் ஸ்ரீமத் ராமாயண பிரவசனமும், மன்னார்குடி பிர்ம்மஸ்ரீ ராமய்யா பாகவதர் அவர்களால் சுபத்திரா கலியாணம் கதா கலேக்ஷபமும் 28-4-39ல் வசந்த உத்ஸவமும், 29-4-39ல் விடயாத்தி உத்ஸவமும், சேலம் வாகவி பிர்ம்மஸ்ரீ வெங்கிடேச பாகவதர் அவர்களால் மாருதி விஜயம் கதையும் நடத்தப்பட்டது.

## மயிலாடுதுறை (மயூரம்)? 

மணக்கால்.

### ஸனாதன தர்ம உபன்யாசங்கள்.

மணக்காலில் பிரும்மஸ்ரீ பாஷ்ய பாவஜ்ஞ ஸ்மிருதிபூஷண, வாகூர் வி. எஸ் வெங்கட்டராம சாஸ்திரிகள் சென்ற சில மாத காலமாய் ஸ்தோத்ரபத்தியைப் பற்றியும், ஸ்ரீ சங்கர பகவத் பாதாளின் திவ்ய சரித்திரத்தையும், சிவ பக்த விலாசத்தையும் தினந்தோறும் இரண்டுமணி நேரம் உபன்யஸித்து வந்தார்கள். அது பிரமாதி ஹு சித்திரைமீ 17உடன் முடிவடைந்தது.

---


மூகபஞ்சசதியின் இரண்டாம் பாகம் "கடாக்ஷ சதகம்"

Mr. G. V. கணேசய்யர், B. A., B. L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷக் குறிப்புகளுடன் கூடியது.

தபால் செலவு வேறு] [விலை அணா 0 8 0

கிடைக்குமிடம்:—
ஸ்ரீஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட், டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

முக்கிய கவனிப்பு.
3 வருஷத்திற்கு உத்திரவாதமுள்ளது அசல் தங்கநகைகளைப்போன்ற "கன்றூாஸ் ப்ளேட் ரோல்ட்கோல்ட்" நகைகளையே வாங்குங்கள்.
தயாரிப்பவர்:—என். கன்றுசாமி பத்தர் பெரியதெரு, கும்பகோணம்.

# அயல்நாட்டுச் செய்திகள்.

## பிரிட்டனில் கட்டாய ராணுவப்பயிற்சி.

கட்டாய ராணுவப் பயிற்சி மசோதாவை மேமீ 4உ பிரிட்டிஷ் பிரதம மந்திரி மகா கனம் சேம்பர்லேயின் பார்லிமெண்டில் சமர்ப்பித்தார். இம்மசோதா சட்டமாவதன் காரணமாக இவ்வருஷம் 2லக்ஷம் பேரும், மூன்று வருஷத்திற்குள் 8 லக்ஷம் பேரும் ராணுவப் பயிற்சி பெருவரென்று பிரதம மந்திரி சபையில் கூறினர். கட்டாயப்பயிற்சி திட்டத்தில் சேருவோர்க்கு முதல் ஆறு மாத காலம் வரை தினசரி ஒரு ஷில்லிங் கொடுக்கப்படும், அவர்கள் படையில் சேருகையில் சம்பளம் நிர்ணயிக்கப்படும். ராணுவப்பயிற்சி பெறுவோரின் குடும்பத்தினருக்கு வாரமொன்றுக்கு 17 ஷில்லிங் விசேஷப்படியாகக் கொடுக்கப்படும்.

## திவாலராவிடம் பிரிட்டன் பணிவு.

கட்டாய ராணுவப் பயிற்சி மசோதாவை வட அயர்லந்தில் அமுலுக்குக் கொண்டுவர முதலில் அரசாங்கத்தினர் நினைத்தார்கள். ஆனால் தலைவர் ஏமன் திவாலராவின் விரோதத்தை பிரிட்டிஷார் பெற விரும்பவில்லை. இதற்காக இம்மசோதா வட அயர்லாந்து விஷயத்தில் செல்லக்கூடியதாயிராது. புதிய முறையில் மசோதா திருத்தியமைக்கப்படும். இந்த மசோதா வட அயர்லந்தில் அமுலுக்குவந்தால் தென் அயர்லந்துக்கும் வட அயர்லந்துக்கும் தகராறு ஏற்படும். அம்மாதிரி சச்சரவை சர்க்கார் விரும்பவில்லையென்று பிரதம மந்திரி கூறினர்.

## ரஷ்யாவில் இனி செய்தித் தணிக்கை இல்லை.

ரஷியாவிலிருந்து செய்திகள் உலகின் பல பாகங்களுக்கு நேரடியாக இது வரையில் வந்ததில்லை. ரஷ்யப் புரட்சி ஏற்பட்டது முதல் செய்தி ஸ்தாபனங்களுக்கும், பத்திரிகை நிருபர்களுக்கும் ஒருவிதத் தடையுத்திரவை ஏற்படுத்தி யிருந்தார்கள், ரஷ்யாவிலிருந்து வெளிப் போகும் செய்திகளை தணிக்கை செய்து வந்தார்கள். மேமீ 6உ முதல் அம்முறை ரத்துச் செய்யப் பட்டு விட்டதாக அறிவிக்கப் பட்டிருக்கிறது. நிருபர்கள் ரஷ்யாவுக்கு விரோதமாகப் பிரசாரம் செய்வதாகத் தெரிந்தால் அவர்களை அதிகாரிகள் நாடு கடத்தி விடுவார்களாம்.

## ஆப்பிரிக்காவில் இந்தியர்களுக்கு அநீதி

ஆசியாக்காரர் உரிமைகளை கட்டுப் படுத்துவது பற்றிய மசோதா இந்திய சர்க்கார் முறையீட்டின் விளைவாக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறது. இந்த மசோதாவைப் பற்றி யூனியன் சட்ட சபையில் விவாதித்தபொழுது உள்நாட்டு மந்திரி கனம் சுட்டா போர்டு என்பவர் கூறியதாவது:—

"ஆபிரிக்காவில் மற்றஜாதிகளுடன் சம்பந்தமில்லாமல் தனியாக வசிக்க தங்களுக்கு வசதி அளிக்க வேண்டு மென்றி வெள்ளையர் கேட்டுக்கொண்டார்கள். இதை இந்தியர்கள் ஆக்ஷேபித்தார்கள். ஏனெனில் இப்படிப் பிரிப்பது இந்தியர்களை அவமதிப்பு செய்வது போலாகும் என்று இந்தியர் கூறிகிறார்கள். இந்த மசோவுக்கு எதிர்ப்பு இருந்து வருகிறது. இற்காக நான் வேறொரு மசோதாவை மீண்டும் கொண்டு வருவேன். ஐரோப்பியர்கள் வசிக்கும் பிரதேசங்களில் மேற் கொண்டு இந்தியர் குடியேறுவதைத் தடுக்க வேண்டு மென்பதே என்கருத்து"........ என்று கூறினர்.

"ஆபிரிக்காவில் சென்ற சில வருஷங்களில் ஐரோப்பியப் பிரதேசங்களில் குடியேறும் இந்தியர் தொகை மிக அதிகமாய் விட்டதென்றும், இனி இந்தியர்களுக்கு அனுமதி கொடுக்காமல் தடுக்க" சர்க்கார் நடவடிக்கை எடுத்து வருவதாக நில இலாகா மந்திரி கனம் கெம்ப் கூறினர்.

## சீனு ஜப்பான் யுத்தம்.

சங்கிங் மீது ஜப்பான் விமானங்கள் குண்டுகளை வீசியதன் பலனுக ஜனங்கள் ஆயிரக் கணக்கில் மாண்டார்கள்.

## ஜெர்மனி-போலந்து தகராறு.

ஜெர்மனி-போலந்து தகராறு முற்றி வருகிறது. இதர தேசங்களை கபளீகாம் செய்தது போல் போலண்டையும் அமுக்கி விட ஹிட்லர் நினைத்தார். ரஷ்யா, பிரிட்டன், பிரஞ்சு முதலிய தேசங்கள் எச்சரிக்கை செய்யவே ஹிட்லர் பின் வாங்க வேண்டியிருந்தது. போலந்தும் சாணுகதியடையும் என்று நம்பினர். ஆனால் போலந்து சர்க்கார், "சமாதானம் பெற கௌரவத்தைப் பலியிடோம்" என்று கூறிவிட்டார்கள். "டான்ஸிக் மூலம் வெளிநாடுகளுடன் வியாபாரமும் கப்பல் போக்குவரத்தும் நடத்தும் விஷயத்தில் தனக்குள்ள உரிமைகளை போலந்து ஒரு நாளும் விட்டுக்கொடுக்கப் போவதில்லையென்று"............... போலந்து வெளிநாட்டுமந்திரி கனம் பெக் தெரிவித்தார். இந்த அறிக்கையைப்பற்றி ஹெர் ஹிட்லர் யோசித்து வருகிறார். ஒரு துளி ரத்தம் கூடச்சிந்தாமல் டான்ஸிக்கைத் திரும்பி ஜர்மனி பெற்றுவிடக்கூடுமென்று அரசியல் வாதிகள் கூறுகிறார்களாம்.

## யுத்தத்துக்கு ஆரம்பம்.

ஜெர்மனியின் துருப்புகள் போலந்தின் எல்லைக்கருகில் திரட்டப்பட்டு தயாராய் நின்றுகொண்டிருக்கின்றன. யுத்த தளவாடங்களும், விமானங்களும் அங்கு ஏராளமாய் வைக்கப்பட்டிருக்கின்றன. எந்த விநாடியிலும் யுத்தம் ஆரம்பிக்கப்படலாம்.

## ஜப்பானின் கர்வம்.

'ஜப்பான், ஜெர்மனி, இதாலி" இந்த மூன்று தேசங்களும் செய்து கொண்டிருக்கிற உடன்படிக்கை ஒருநாளும் முறிந்து போகாதாம்.

ஜப்பானுக்கும், இத்தாலி, ஜர்மனிக்கும் பொருளாதாரத்துறையிலுள்ள உறவு பலப்படுத்தப்பட்டிருக்கிறது" என்று கனம் அரிடா—ஜப்பானிய அந்நியநாட்டு மந்திரி மேமீ 5உ ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

## அமெரிக்கா உதவி யாருக்கு?

"ஜனநாயக ஆட்சிக்குட்பட்டநாடுகளுக்கு மட்டும் தான் யுத்த காலத்தில் அமெரிக்கா அரசாங்கம் பலவிதத்தில் உதவும்"........... என்று பிரபல அமெரிக்கா தேசத்து ஆசிரியரான வுட்வர்டு பம்பாயுக்கு விஜயம் செய்த பொழுது கூறினர்.

"எந்த யுத்தத்துக்கும் அமெரிக்கா பயப்படப்போவதில்லை. அமெரிக்கா யுத்தத்திற்கு தயாராயிருக்கிறது. ஆனால் அமெரிக்கா யுத்தத்தை விரும்பவில்லை சமாதானத்தையே தலைவர் ரூஸ்வல்டும், அமெரிக்கர்களும் விரும்புகிறார்கள்.

"சமீபத்தில் யுத்தம் நேரிடாது. யுத்த மூலமாக எவ்வித நஷ்டமேற்படக்கூடும் என்பதை எல்லா தேசத்தினரும் நன்கு அறிந்திருக்கிறார்கள்." என்று ஆசிரியர் வுட்வர்டு அறிவித்தார்.

## ரஷ்யாவை எதிர்க்க.

ரஷ்யா தேசத்தை எதிர்க்கவேண்டி ஹிட்லர் ஒருதிட்டம்போட்டிருந்தார். இந்தத்திட்டத்திற்குப் போலந்தை ஆதரவு தரச்சொல்லியிருந்தார். போலந்து மறுத்துவிட்டது. இந்தமாதிரியான திட்டம் போலந்தை அடியுடன் கவிழ்த்துவிடுமென்று சர்க்கார்நினைத்து ஹிட்லருக்கு கையை விரித்தார்கள். அதனுல்தான் போலந்துமீது ஹிட்லருக்குக் கடுங்கோபம்.

## அரசர்-அரசி

### அமெரிக்கா விஜயம்

மக்களின் பிரிவுபசாரம்

மாட்சிமை தங்கிய ஆருவது ஜார்ஜ் அரசர் சக்கரவர்த்தி தனது மனைவியுடன் அமெரிக்கா தேசத்துக்கு 7 தேதி இங்கிலாந்திலிருந்து "எம்பரஸ் ஆப் ஆஸ்திரேலியா" என்ற கப்பலில் புறப்பட்டார்கள்.

இவர்களுக்குப் பிரிவுபசாரம் நடத்த ஆயிரக் கணக்கில் மக்கள் கப்பல் துறைக்கு வந்திருந்தார்கள்.

அமெரிக்காவில் அரசர் தம்பதிகளுக்கு மகத்தான வரவேற்பு அளிக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

அரசரின் கடல் பிரயாணம் இனிது முடிவு பெறவேண்டி எல்லாவித சவுகரியங்களும் செய்யப்பட்டிருக்கின்றன. அரசர் செல்லும் கப்பலுக்குப் பாதுகாப்பளிக்கவேண்டி பல யுத்தக்கப்பல்கள் தொடர்ந்து சென்றன.

அமெரிக்கா ஐக்கிய குடியரசுத் தலைவர் ஜனதிபதி ரூஸ்வெல்ட் ராஜாங்க மரியாதைகளுடன் அரசர் அரசியை வரவேற்பார். அரசர் விஜயத்தைக்கேட்டு கனடாவிலும் அமெரிக்காவிலும் அளவிளா ஆனந்தம் அடைந்தார்கள்.



# வெளியூர்ச் செய்திகள்.

## காஞ்சியில் ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்.

### மகத்தான வரவேற்பு.

2—5—39 முதலாக ஸ்ரீ ஸ்வாமிகள் பெரிய காஞ்சிபுரத்தில் விஜயம் செய்திருந்து 5—5—39 மாலை வரதராஜப் பெருமாள் தரிசனத்திற்கு வந்திருந்தார்கள். வழக்கப்படி பதினுறுகால் மண்டபம் வரையில் ஸ்ரீ சடாரி எழுந்தருளச்செய்து மரியாதைகளைத் தேவஸ்தான தர்மகர்த்தாக்கள் நன்கு நடத்திவைத்தார்கள். சுவாமிகள் தரிசனத்துக்குப் பிறகு ஸ்ரீ சங்காசாரியார் ஸ்ரீ உ-வே அண்ணங்காசாரியாரின் வேதவேதாந்த வைஜயந்தி பாடசாலைக்கு விஜயம் செய்தார். பாடசாலை புஸ்தகசாலையை பார்வையிட்டார். பாடசாலை நன்கு நடக்கும் முறையைக்கேட்டுப் பரமானந்தமடைந்து இப்படியே மேன் மேலும் அபிவிருத்தியுடன் நீடூழி காலம் நடந்துவரவேண்டுமென்று சுப வார்த்தை அளித்தார்கள்.

## திருவானைக்காவல்

### ஸ்ரீ சங்கர ஜயந்தி

திருச்சி ஜில்லா திருவானைக்காவலென்னும் ஸ்ரீ ஜம்புகேசுவா க்ஷேத்திரத்தில் ஸ்ரீசங்கா மடத்தில் பிரமாதிஹு சித்திரைமீ 7உ (20—4—39) வியாழக்கிழமை முதல் 5 தினங்கள் ஸ்ரீசங்கா ஜயந்தி மஹோத்ஸவம் விமரிசையாய் நடைபெற்றது. பிரதிதினம் பாஷ்யபாராயணமும் வேதபாராயணமும், மஹான்யாஸ புரஸ்ஸரமான அபிஷேகாதி பூஜைகளும், பிராம்மண சந்தர்ப்பணமும் விசேஷமாக நடந்தன. பிரதிதினம் மாலையில் உபன்யாஸங்கள் நடந்தன.

## ஸ்ரீ நரஸிம்ம ஜயந்தி

சித்திரைமீ 19உ மாலை ஸ்ரீ ஆசார்யமடத்தில் ஸ்ரீ நரஸிம்ம ஜயந்தியை உத்தேசித்து சேங்காலிபுரம் ஸ்ரீ வைத்யனாத சாஸ்திரிகளால் ஒரு உபந்யாஸம் நடைபெற்றது. பூஜைகளும் விமரிசையாய் நடைபெற்றது. முடிவில் பிரஸாதங்கள் வழங்கப்பட்டன. ஓ-நி.

## யாகானுஷ்டானம்

2—5—39ல் திருவானைக்காவல் ஜகத்குரு ஸ்ரீசங்காசாரியாள் வேதாந்த வித்யாஸ்தானம் ஸ்ரீ மடத்தில் புதுக்கோட்டை ஸ்ரீமஹாராஜா வேத சாஸ்திர பாடசாலை அத்தியாபகர் குடுமியாமலை ஸ்ரீபஞ்சாபகேச கனபாடிகள் ஸாவித்ராக்னி சயன ஸஹித நிரூட பசு பந்த யாகம் நடத்தினர். அவ்வமயம் அநேக பண்டிதோத்தமர்களும் ஆஸ்திக மஹாஜனங்களும் விஜயம் செய்திருந்தார்கள். வபா யாகமான பிறகு ஸ்ரீமதாசாரியாால் அனுக்ரஹிக்கப்பெற்ற சால்வை விபூதி மந்த்ராக்ஷதை பிரஸாதங்களை ப்ரும்மஸ்ரீ பாஷ்ய பாவஞ்ஞஸ்மிருதி பூஷணம் வஸ்வா வெங்கட்டரும சாஸ்திரிகள் ஸம்ஸ்கிருதத்தில் உபந்யாஸம் செய்து அளித்தார்கள். சேங்காலிபுரம் ஸ்ரீ பிரஸங்கபானு வைத்தியனாத சாஸ்திரிகள் ஸாவித்ராக்னி சயந மகிமையும் மோக்ஷஸாதனமான ஞானத்திற்கு கர்மானுஷ்டானம் அவசியம் என்பதைப் பற்றியும் உபந்யஸித்தார்.

## சிதம்பரம்

### ஸ்ரீராமபட்டாபிஷேகம்

இவ்வூர் வேதபாடசாலையில். பிக்ஷாண்டார் கோவில் ஸ்ரீமத்ராமாயண கதாம்ருதவர்ஷக ப்ரஸங்காத்னம் வேதமூர்த்தி ஸ்ரீ பாகவத கௌஸ்துபம் கோபால பாகவதர் அவர்களால் இரண்டுமாதகாலமாக நடத்தப்பட்டுவந்த ஸ்ரீமத்ராமாயணம் மேமீ 5உ நன்கு முடிவுபெற்றது. ஸ்ரீராமபட்டாபிஷேகம் 5—5—39 வெள்க்கிழமை இரவு 7-30 மணிக்கு விமரிசையாக நடத்தப்பட்டது. ஏராளமான ஜனங்கள் கூடி விசேஷ சன்மானங்கள் செய்து பாகாகவதரை பெருமைப் படுத்தினர்கள்.

## சிந்தாதிரிப்பேட்டை

### ஸ்ரீ சங்கர ஜயந்தி

ஸ்ரீ சங்கரஜயந்தி உத்ஸவமானது 24-4-39 சித்திரைமீ 11உ ஸோமவாரம் ஆரம்பமாகி சித்திரைமீ 17உ (30—4—39) ஆதிவாரம் பூர்த்தி யடைந்தது. ஒவ்வொரு தினத்திலும் காலை ஸ்ரீ சங்கா பகவத்பாதாள் மடத்துக்கு ஷோடசோபசார பூஜையும், ஸஹஸ்ர நாம அர்ச்சனையும், வேத பாராயணமும் உபநிஷத் பாராயணமும், தீபாராதனை மந்த்ர புஷ்பத்துடன் நடந்தேறியது. சாயங்காலங்களில் ஷோடசோபசார பூஜை, ஸஹஸ்ரநாம அர்ச்சனை, தீபாராதனை, மந்த்ரபுஷ்பம், இதுகள் முடிந்தவுடன் [illegible] பிரும்மஸ்ரீ குருஸாமி சாஸ்திரிகளால் அவர்களால் ஸ்ரீ ஆதிசங்கருடைய சரித்திரத்தைப்பற்றி உபந்யஸித்தார்.

(30—4—39) ஞாயிற்றுக்கிழமை தினம் விசேஷ பூஜை, ஸஹஸ்ரநாம அர்ச்சனைகள் உபநிஷத் பாராயணம், மந்திரபுஷ்பத்துடன் முடிவடைந்தது அன்றைய தினம் பகலில் பிராமண ஸந்தர்ப்பணையும் ஏழைகளுக்கு அன்னமுமளிக்கப்பட்டு உத்ஸவம் பூர்த்தியடைந்தது. (ஓ-நி.)

## நெரூர்

### ஸ்ரீ சங்கர ஜயந்தி

ஆதி கரூர் என்று விளங்கும் கெர்ப்பபுரி க்ஷேத்திரத்தை சேர்ந்த நெரூரில் 24-4-39 தேதி ஸ்ரீ சங்கர ஜயந்தி உத்ஸவமும், 28—4—39 ஸ்ரீ சதாசிவ பிரம்மேந்திர ஆராதனை வெகு விமரிசையாய் நடைபெற்றது. உத்ஸவ தினங்களில் ஸ்ரீ விஸ்வனாதர் விசாலாக்ஷியம்மனுக்கு அபிஷேகம் சஹஸ்ரநாம அர்ச்சனைகளும் (30-4-39) ஞாயிற்றுக்கிழமை அன்று ஆதி சங்கராராதனையும் சந்தர்பானுசாரம் பக்தர்களால் உபன்னியாயங்களும் சத்கதா காலக்ஷேபங்களும் சங்கீத கச்சேரிகளும் நடைபெற்றது.

## மைலாப்பூர்

### ஸ்ரீமத் பாகவதம்.

மைலாப்பூர் வேங்கடேச அக்ரஹாரத்தில் சென்ற மூன்றுமாத காலமாய் ஸ்ரீமத் பாகவதத்தைப்பற்றி சேங்காலிபுரம் ஸ்ரீ. அனந்தராம தீக்ஷிதர் பிரசங்கங்கள் நிகழ்த்திவந்தார், மே-மீ 6 தேதி கோவிந்த பட்டாபிஷேகம் நடைபெற்றது. பிரபல நீதி வழக்கறிஞர்களான திருப்புகழ்மணி ஸ்ரீ டி. எம். கிருஷ்ண ஸ்வாமிய்யர், ஸ்ரீ கே. பாலசுப்பிரமணிய்யர் முதலியவர்கள் பாகவதரைப் பாராட்டிப் பேசினர்கள். பாகவதருக்கு ஆஸ்திகர்கள் சார்பாக ஒரு பணமுடிப்பு அளிக்கப்பட்டது. தினசரி ஆயிரக்கணக்கில் ஆஸ்திகர்கள் பாகவதத்தைக் கேட்கவந்திருந்தார்கள்.

(ஒரு நிருபர்.)

## மதுரை தர்மசாஸ்திர ஸபை வருஷோத்ஸவம்.

24—4—39 மதுரை ஸ்ரீ மீனாக்ஷி ஸுந்தரேசுவாாள் கோவில் ஜயந்தீசுவா மண்டபத்தில் மதுரை தர்மசாஸ்த்ர ஸபையின் வருஷோத்ஸவம் நடைபெற்றது. மாஜி ஸப் ஜட்ஜ் ஸ்ரீ R. வேங்கடாசலய்யாவர்கள் அக்கிராஸனம் வஹித்தார்கள்.

பகவத் பூஜையும் உபநிஷத் பாராயணமும் நடந்தபிறகு ஸனாதன தர்மவித்யாலயத்தில் படிக்கும் பெண் குழந்தைகள் பகவத் ஸ்தோத்திரங்களை வடமொழியிலும் தமிழிலும் கானம் செய்தார்கள். அக்குழந்தைக்குத் தலைவர் பகவத் ஸ்தோத்திர புஸ்தகங்கள் பரிசளித்தார். ஸபைக்கனுப்பப்பட்டிருந்த ஸ்ரீசிருங்கேரி மடத்து ப்ஸாதங்கள் வேத கோஷத்துடன் ஸபைக்காரியதரிசியிடம் கொடுக்கப்பட்டன பின்னர் ப்ரும்மஸ்ரீ சிவராம கிருஷ்ண சாஸ்திரிகளவர்கள் "கர்ம பக்தி, ஞானம், எவ்வாறு மோக்ஷத்திற்கு ஸாதனம் என்கிற விஷயத்தைப்பற்றித் தெளிவாய் அநேக சாஸ்திரப் ப்ரமாணங்களுடன் உபந்யஸித்தார்கள். பக்தியுடனும் ச்ரத்தையுடனும் நாம் ஸ்வதர்மத்தை சாஸ்திரத்தில் சொல்லியபடி அனுஷ்டிப்பதன் மூலம் நமக்குச் சித்தசுத்தி ஏற்பட்டு நாம் ஞானத்தையடைந்து மோக்ஷம் பெறலாமென்றும் நமது நல்வழிக்கு ஸாதுக்களின் ஸங்கம் ஒரு முக்ய ஸாதனமென்றும் அநேக உதாரணங்களுடன் எடுத்துரைத்தார்கள்.

காளையார் கோவில் ப்ரும்மஸ்ரீ காளீசுவா தீக்ஷிதாவர்கள் வேதார்த்தங்களை உணர்ந்த மஹாவித்வான்கள் கூடியிருந்ததால் அந்த ஸபையில் ஸகல தேவதைகளும் ஸாந்நித்யம் செய்திருக்கிறார்களென்றும், நமது ச்ரேயஸ்ஸுக்காக அதுபோன்ற ஸபைகள் அடிக்கடி கூடவேண்டுமென்றும் பேசினர்கள்.

பிறகு காரியதரிசி ஆண்டு அறிக்கையை வாசித்தார். தலைவர் முடிவுரையில் நமது மதத்துக்கு விரோதமான முயற்சிகளெல்லாவற்றையும் தர்மசாஸ்திரஸபை மூலமாக நாம் இடைவிடாமல் கண்டிக்கவேண்டுமென்றும் சாரதாச்சட்டம், ஆலயப்பிரவேசச் சட்டம் முதலிய சட்டங்களை ஒழிக்க நாம் ஊக்கத்தைக் கைவிடாமல் வேலைசெய்யவேண்டுமென்றும் கூறினர். நமது ஆலயங்கள் முதலிய பொது ஸ்தாபனங்கள் சாஸ்த்ரங்களை அனுஸரித்துக் நன்கு நடக்கும்படி நமது ஸபை ஸதா கவனித்து வரவேண்டுமென்றும் கூறினர்.

ராவ்ஸாஹிப் N. நடேசய்யாவர்கள் ஸபையின் சார்பாக தலைவருக்கும் வித்வான்களுக்கும்வந்தனோபசாரம் கூறினர்.

மூகபஞ்சசதியின் முதல் பாகம்.
" ஆர்யா சதகம் "
Mr. G. V. கணேசய்யர், B.A., B.L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது, மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.
100 பக்கங்களுக்குமேல் கொண்டது. தபால் செலவு வேறு] [விலை அணு 0—8—0
ஆர்யதர்மம் சந்தாதார்களுக்கு விலை அணு 6.
கிடைக்குமிடம்:—
ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட் டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

215231

## அறிக்கை.

"ஆர்ய தர்மம்" வாரப் பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டி அனுப்பப்படும் செய்திகள், கட்டுரைகள் யாவும் ஒரே பக்கத்தில் மசியினுல் மிகச்சுருக்கமாக எழுதி பிரதி திங்கட்கிழமைக்குள் காரியாலயத்துக்கு அனுப்ப வேண்டும். ஆசிரியுருக்குச் செய்திகளை குறைக்கவோ, கூட்டவோ பூர்ண உரிமையுண்டு.

மாற்றுப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் பிரசுரிக்க வேண்டிய கட்டுரைகள் யாவும், ஆசிரியர், "ஆர்ய தர்மம்", கும்பகோணம் என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.

பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டிய அனுப்பப்படும் விளம்பரங்கள் பிரதி திங்கட்கிழமைக்குள் மானேஜர், "ஆர்ய தர்மம்", கும்பகோணம் என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.

மானேஜர்,
"ஆர்ய தர்மம்"
கும்பகோணம்.

## ஒரு வேண்டுகோள்

"ஆர்ய தர்மம்" வாரப்பத்திரிகை புதிய முறையில் வரவேண்டுமென்று பல நேயர்கள் விரும்பி நமக்குக் கடிதமூலமாயும் நேரிலும் சொல்லிவருகிருர்கள். ஆர்யதர்மம் நாளடைவில் புதிய முறையில் அதிகப் பக்கங்களுடன் வெளிவர ஏற்பாடு செய்யப்படும். தமிழ்நாட்டிலிருக்கும் ஆர்யதர்மத்தின் நண்பர்கள் சந்தாதாரர்கள் சேர்த்தும், பண உதவி செய்தும், பத்திரிகையை ஆங்காங்கு பரவும்படி செய்தால் விரைவில் ஆர்யதர்மம் புதிய தோற்றத்தில் வரக்கூடுமென்பதில் ஐயமில்லை.

ஆசிரியர்.

### துப்பாக்கிப் பயிற்சியினுல் விளைந்த விபரீதம்.

லாகூர் டி. ஏ. வி. கல்லூரியில், சர்வகலா சாலை ராணுவப் பயிற்சிப் படையைச் சேர்ந்த மாணவர்கள் துப்பாக்கிப் பிரயோகப் பயிற்சி செய்து கொண்டிருக்கையில், குறிதவறி தேசராஜ் என்ற மாணவர்மீது துப்பாக்கிக் குண்டு பாய்ந்துவிட்டது. அவர் உடனே இறந்துபோனுர். அவருக்கு அனுதாபம் காட்டவேண்டி கல்லூரி மே-மீ 6ந்தேதி மூடப்பட்டது.

### "பேட்டி" இல்லை.

சர்க்கார் இலாகாக்களில் தினசரி சம்பளம் வாங்கிக்கொண்டு வேலை செய்யும் இலங்கை வாசிகளல்லாதவர்களை வேலையிலிருந்து நீக்கிவிட அதிகாரிகள் முடிவுசெய்திருக்கிறுர்கள். இதனை ஒட்டி பேச விரும்பும் இந்தியரின் தூதுகோஷ்டிக்குக் கவர்னர் பேட்டி அளிக்க மறுத்து விட்டார்.

நாங்கள் கில்பாய்தான்களை தயார் செய்து சரஸமான விலைக்கு விற்கிறோம். வேண்டியவர்கள் விலை விபரங்களுக்கு எழுதவும்.

R. Pndrinthm Chetty,
109-111, Naskarpara Road,
GHUSURI, HOWRAH.

உண்மை அறிஞர் உணர்ந்தனர்.
மேன்மையான தன்மை படைத்தது
ஸைன்டிபிக் டி.டி மிஸ்கீ பெருங்காயம்
இரஸாயன தத்துவப்படி
இதிலடைக்கப்பட்டிருக்கும் சாதனங்கள் (22·20 சதம் இரும்புச் சத்து)
இரத்த புஷ்டியை வளர்க்கிறது,
— அத்துடன் —
அறு சுவை யுண்டிக்கோர் நறு மணம் கொடுக்கின்றது!
அஜீரணத்தை அகற்றுகின்றது!!
வெகுமதி கூப்பன்களுடன் விற்கப்படுகிறது.
விலை ரூ. 1—14—0. பவுண்டு.

### கராச்சியில் காங்கிரஸ் வெற்றி.

கராச்சி நகரபரிபாலன சபைக்கு மே-மீ 6ந்தேதி மேயர் தேர்தல் நடைபெற்றது. ஸ்ரீ. ஆர். கே சித்வா (சட்டசபை மெம்பர்) என்பவர் காங்கிரஸ் சார்பாக நிறுத்தப்பட்டார். இவருக்கு 43 வாக்குகளும் இவருக்கு எதிராக நின்றவருக்கு 7 வாக்குகளும் கிடைத்தன. காங்கிரஸ்காரர் ஒருவர் மேயராகத் தேர்ந்தெடுக்கப்படுவது கராச்சியில் இது தான் முதல்தடவை. ஸ்ரீ நாராயணதாஸ் பீட்டர் என்ற காங்கிரஸ்காரர் உதவி மேயராகப் போட்டியின்றியே தேர்ந்தெடுக்கப்பட்டார். தேர்தல் முடிவை கேட்டு கராச்சிநகரவாசிகள் ஆனந்தமுற்றுர்களாம்.

### குரும்பல்.

திருத்துறைபூண்டியைச்சேர்ந்த குரும்பல் அக்கிரஹாரத்தில் மதுரை ஸ்ரீமான் ஆர். வெங்கட்டராமய்யர் அவர்கள் கிருஹத்தில் ஒரு மாத காலமாய் சேங்காலிபுரம் ஸ்ரீ ராமாயணம் பிரம்மஸ்ரீ அப்பாஸாமி சாஸ்திரி அவர்களால் ஸ்ரீவால்மீகி ராமாயணம் உபன்யாஸம் செய்யப்பட்டு சென்ற மீ 13௳ ஸ்ரீ ஸீதாராமசந்திர பட்டாபிஷேக மஹோத்ஸவம் நடைபெற்றது. பிரதிதினமும் காலையில் மூலபாராயணமும் இரவு சாஸ்திரியார் அவர்கள் உபன்யாஸமும் நடந்தன. (ஒ. நி.)

திவான்பகதூர். ராமநுஜாசாரியார். அவர்கள் எழுதியது.

| | | | |
|---|---|---|---|
| திருவாய்மொழி (3 வால்யூம்) | 7 | 8 | 0 |
| கீதார்த்தசங்கிரப் பாட்டுகள் | 0 | 6 | 0 |
| ஸ்ரீமத் கீதாபாஷ்யம் (3 வால்யூம்) | 3 | 0 | 0 |
| யதீந்த்ரமத தீபிகை. | 4 | 0 | 0 |
| ராமாயணசாரம் (பைண்ட்) | 1 | 8 | 0 |
| ஷை (ராப்பர்) | 1 | 4 | 0 |
| சித்திர ராமாயணம் (பூஜையில் இருக்கக்கூடியது). | 1 | 0 | 0 |
| ராமாயணஸாரம்,(ராப்பர்),சித்திர ராமாயணம், இரண்டும் சேர்ந்து. | 2 | 0 | 0 |

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனர்தந அச்சுக்கூடம் லிமிடெட், டவுன் ஹைஸ்கூல் ரோடு கும்பகோணம்,

### ஸ்ரீ வித்யோல்லாஸினீ ஸபா.

சென்னை.

மேற் கண்ட சபையின் பதினோராமாண்டின் கடைசிக் கூட்ட மொன்று [1-5-39] திங்கட் கிழமை மாலை நடை பெற்றது. உபாத்தியாயர்களும் பல ஸம்ஸ்கிருத அபிமானிகளும், மாணவர்களும், இதரப் பிரமுகர்களும் குழுமியிருந்தனர். அவ்வமயம் ஸ்ரீ ஜி. ராஜமன்னுர் செட்டியார் தலைமை வகித்தார்.

திருமழிசை ஸ்ரீ உ. வே. வித்வான் உபன்யாஸ ரெத்தினம் ஸ்ரீ நிவாஸாச் சாரியார் "மாணவர்கள் விடுமுறை நாட்களில் செய்ய வேண்டிய தென்ன" என்பதைப் பற்றி ஓர் பிரசங்கம் செய்தார். தலைமை ஆசிரியர் ஸ்ரீ உ. வே. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் (ந்யாய சிரோமணி) 'ஸ்ரீராமாயணமும் ஆசார்யானு வர்த்தனமும்' என்ற விஷயத்தைத் தக்கமேற்கோளுடன் உபந்யாசம் செய்தார். உதவி யாசிரியர் ஸ்ரீ இராகவாச்சாரியார் (வ்யாகரண பண்டிட்) "வ்யாகரணங்கற்க வேண்டியதின் முக்கியம்" என்ற விஷயத்தைப் பற்றி "உலகில் பிறந்தவர்களுக்குள் முமுக்ஷுக்களுக்கு முக்கியமான பலன் மோக்ஷஸித்தி தான். அம்மோக்ஷத்தையடைய வேதாந்த ஞானம் அவசியமாகும் வேத மறியாவிடில் வேத ஞானமுண்டாகாது. அவ்வேதத்தையும் அர்த்தத்துடன் கற்கவேண்டும். அவ்வேதத்தின் பொருளை அறிவதற்குரிய சாதனங்களுள் முதன்மையானது வ்யாகர்ணமாகும்.

ஆதலால் இப்படிப் பட்ட வ்யாகரண சாஸ்திரத்தை யாவருங் கற்க வேண்டும் என்று ஓர் சொற் பொழிவு நிகழ்த்தினுர். பின்னர் மாணுக்கர்களால் கவனம் செய்யப் பட்ட சுலோகங்கள் படிக்கப் பட்டன. பின்பு மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப் பட்டன. யாவருக்கும் சந்தன தாம்பூலம் வழங்கப் பட்டபின் வைபவம் இனிது முடிவு பெற்றது.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

ஆர்யதர்மம்
4 ஸ 20
23
19-5-1938

215232

25232
28 MAY 1938
MADRAS

Registered No. M. 2913

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)

குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

புஸ்தகம் 4 | ஸஞ்சிகை 23 | கும்பகோணம் கலி5040 பஹுதான்ய-ஞு வைகாசி-மீ 6உ 1938ஞு மே-மீ 19உ | வல 20

## ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0 தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்

## காந்தி—கவர்னர் ஸந்திப்பு.

பம்பாயில் தற்போது எல்லா காங்கிரஸ் தலைவர்களும் தங்கியிருக்கிறார்கள். காந்திஜீ எல்லைப்புறத்திலிருந்து பம்பாய் வந்தார். பம்பாய் கவர்னரைக் கண்டு அவர் நெடுநேரம் பேசினார்.

சட்டமறுப்பு காலத்தில் பறிமுதல் செய்யப்பட்ட நிலங்களைத் திருப்பிக்கொடுக்கும் விஷயத்தில் ஸிவில் ஸர்வீஸ் உத்யோகஸ்தர்கள் இடைஞ்சல் செய்வதாகத் தெரிகிறது. இதைப்பற்றியே கவர்னருடன் காந்திஜீ பேசியதாவும், கவர்னர் தலையிட்டு ஸிவில் ஸர்விஸ்காரர்களைக் கண்டிக்கவேண்டுமென்று காந்திஜீ அவரிடம் கூறியதாயும் நம்பப்படுகிறது.

## ஜின்னா—போஸ் ஸம்பாஷணை.

ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையைப்பற்றி காங்கிரஸ் தலைவர் ஸ்ரீமான் போஸ-ும், ஜின்னாவும் ஜின்னா வீட்டில் கலந்து பேசி வருகிறார்கள். இந்தப் பேச்சைப்பற்றிப் பலவிதமான ஹேஷ்யங்கள் வெளிவருகின்றன.

## வந்தேமாதரத்திற்கு எதிர்ப்பு.

பாட்னாவில் ஓர் பள்ளிக்கூடத்தில் வந்தேமாதரம் பாட்டுப் பாடப்படுவதை ஆக்ஷேபித்து 150 மஹம்மதிய மாணவர்கள் பள்ளியிலிருந்து வெளியேறி விட்டனர். இந்தியாவெங்கும் இந்த எதிர்ப்பு பரவிவருகிறது.

## மாளவியாஜீக்கு கருப்புக்கொடி.

பண்டித மாளவியா தமது பேத்திக்கு பிராம்மணஜாதிக்குள்ளேயே அவாந்தர வகுப்பில் கலப்பு விவாஹம்நடத்திய காரணமாக அநேக பொது ஜனங்கள் அதிருப்தியும் வெறுப்பும் காட்டும் அறிகுறியாக மாளவியாஜீயின் வீட்டிற்கெதிரில் கருப்புக்கொடி பிடித்து ஆக்ஷேப ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

## படங்களுக்குப் பணம் கிடையாது.

முனிஸிபாலிடி முதலிய பொது ஸ்தலங்களில் பிரமுகர்களுடைய படங்களை வைக்க முனிஸிபாலிடிகளின் பொதுப் பணத்திலிருந்து செலவு செய்யக்கூடாதென்று சென்னை ஸர்க்கார் உத்திரவு போட்டிருக்கிறார்கள். ஆனால், காந்திஜீ, ராஜ சக்ரவர்த்தி இவர்கள் விஷயத்தில் இந்த உத்திரவு ஏற்காது.

## மீண்டும் ஜஸ்டிஸ் பத்திரிகை?

பிராம்மணரல்லாதார் கிளர்ச்சிக்கு ஆதாரவாக நடந்துவந்த ஜஸ்டிஸ், பத்திரிகைக்கு நல்ல ஆதரவு இல்லாதலால் அது இதுவரையில் நின்றிருந்தது. ஆனால் அது மறுபடியும் ஸமீபத்தில் வாரப் பத்திரிகையாக வெளிவருமாம். இது எந்த நிலைமையைக் காட்டுகிறதென்பதை காங்கிரஸ்காரர் யோஜிக்கவேண்டும்.

## திருநெல்வேலியில் காங்கிரஸ்மீது அதிருப்தி.

### நகரத்தில் ஹர்த்தால்.

திருநெல்வேலி நகர ஸபைக்கு காங்கிரஸ் கக்ஷியார் நிறுத்தியுள்ள சேர்மன் விஷயமாக பொது ஜனங்களுக்கு மிகுந்த அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. காங்கிரஸின் செய்கையைக் கண்டிக்க நகரத்தில் பூர்ண ஹர்த்தால் நடந்தது. ஸ்ரீமான் முத்துரங்க முதலியார்போன்ற தலைவர்கள் கூட்டத்தில் பேச முடியாமல் திரும்பிப்போக வேண்டியதாயிற்று.

## ஆர்ய சமாஜஸ்தாபகரின் அபத்தக்குறிப்பு.

இந்தியாவெங்கும் ஆர்ய ஸமாஜம் என்ற ஸ்தாபனம் ப்ரதான நகரங்களிலிருந்து வருவதும் அதைச்சேர்ந்தவர்கள் விதவா மறுமணம், கலப்பு ஜாதி விவாஹம் பிறமதஸ்தர்களை இந்து வாக்குதல் முதலிய சாஸ்திரீய விருத்த காரியங்களில் யும்மரமாய் ஈடுபட்டு வருவதும் யாவரும் அறிந்ததேயாம். ஆர்ய சமாஜஸ்தாபகரான தயானந்த சரஸ்வதியால் எழுதப்பட்டு சமாஜிகளால் பிரமாணமாய்க் கொண்டாடப்படும் சத்யார்த்த பிரகாசம் என்ற நூலில் ஸ்ரீ வைஷ்ணவ சமயாசாரியரான ஸ்ரீராமநுஜரின் ஆசார்யருக்கு ஆசார்யரும் பிரும்மண சிரேஷ்டருமான ஸ்ரீமந்நாதமுனிகள் போன் (பௌத்ரருமான) ஸ்ரீயாமுனாசார்யரை முகம்மதிர் என்பதாகக்குறிப்பிடப்பட்டிருப்பதாய் சொல்லப்படுகிறது. இவ்வறியாமைக்குறிப்பை கண்டித்து சென்னை காலணாப்பேப்பரான தார்மீக' ஹிந்து 8-5-38 ஞாயிறு வெளியீட்டில் ஓர் வியாசம் வெளிவந்திருப்பது குறிப்பிடத்தக்கதாம்.

யதார்த்தவாதி.

## விளம்பரம்.

சென்னை மாகாணத்தில் ஸநாதந தர்ம பிரசாரம் செய்ய சிறந்த வாக்குள்ளவர்களாயும் அநுஷ்டாதாக்களாயும் ஊக்கமுள்ளவர்களாயுமிருக்கிற பண்டிதர்கள் தேவை. யோக்யதானுசாரமாய் ஸம்பாவனை செய்யப்படும். அடியில்கண்ட விலாசத்துக்கு எழுதிக்கொள்ளவும்.

என். நடேசய்யர்,
அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க கார்ய அத்யக்ஷர்
55 தமிழ் சங்கம் ரோட், மதுரை.

புதுக்கோட்டை
A. ஸ்ரீநிவாஸராகவய்யங்கார் பிரசுரங்கள்.
ஸ்ரீ சூக்தபாஷ்யம். 1 8 0
பதினொரு கில்லரை ரஹஸ்யங்கள் ஸாரஸாரம் முதலியன 1 8 0
கிடைக்குமிடம்:—ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட், கும்பகோணம்

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:—T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

# விஷ்ணு ஆலயங்களும் வைஷ்ணவர்களும்

(பாவஸ்து ஸ்ரீநிவாஸாசாரியர்.)

பலவிதத்திலும் சிறப்புற்ற பாரத வருஷத்தில் (இந்தியாவில்) ஸ்வயம், வியக்தம் (தானாக வெளியானது) தெய்வம், சைத்தம், மானுஷம் எனப் பிரிவுள்ள பல க்ஷேத்திரங்கள் உள. வடஇந்தியாவில் சில க்ஷேத்திரங்கள் பெருமைபெற்றிருப்பினும் பாஞ்சராத்திரம், வைகாநஸமென்னும் வைஷ்ணவ சாஸ்திரப்படி அவ்விடங்களில் பூஜோத்ஸவங்கள் நடப்பதாய்த் தெரியவில்லை. தென்னிந்தியாவில்தான் ஆழ்வார்கள் பாடல்பெற்ற திவ்ய தேசங்களில் பெரும்பாகமும் நூற்றுக்கணக்கான வேறு ஸ்தலங்களுமுண்டு.

சொல்லப்புகின் கோவிலில்லாத கிராமமே இல்லையென்னலாம். இவைகள் பெரும்பாலும் நம் பூர்வாசாரியர்களால் சீர்திருத்தப்பட்டு கீழ்கூறின பாஞ்சராத்திர வைகானஸ சாஸ்திரங்களின் கிரமப்படி ஆராதனங்களும் உத்ஸவங்களும் அந்தந்த ஸ்தலங்களின் வஸதிக்குத் தக்கபடி நடைபெறுகின்றன.

ஆனாலும் முன்காலத்திலிருந்தபோல் அரசர்கள் அபிமான மின்மையினால் ஸ்ரீரெங்கம் முதலான சில முக்கிய ஸ்தலங்களில் தவிர ஏதோ ஒரு வகையிற்றான் அவைகள் நடத்தப்படுகின்றன. இதற்கு மற்றோர் காரணமுளது. அஃதாவது திவ்யதேசங்களில் உள்ளவர் பெரும்பாலும் உத்தியோகம் முதலிய வியாஜங்களால் சென்னை முதலான நகரங்களுக்கும் வேறிடங்களுக்கும் சென்றுவிட்டது தான். பொருள் சம்பாதிக்கும் பொது வழிகளில் பிரவேசமில்லாதவர்களே ஸ்தலங்களிலிருந்துகொண்டு புராதனமாகப் பெரியோர்கள் செய்துவந்த ஸன்னதி கைங்கர்யங்களை யதாசக்தி செய்துகொண்டு அவைகளில் கிடைக்கும் ஸ்வல்பமான வருமானத்தில் சிரமப்பட்டு குடும்பங்களை நடத்துகிறார்கள்.

இந்நிலைமையில் இவர்களைத் தாங்க முடியாததும் தடுக்க முடியாததுமான பெருத்த தொந்திரவுகள், தொத்துநோய்கள்போல் எங்கும் பரவி தலைதூக்கமுடியாமல் செய்கின்றன.

அவையெவையென்று கேட்பீர்களோ அவைகள்தான் வடகலை, தென்கலை வியாஜ்ஜியங்கள். இவைகளை ஸமயங்களில் ஊரிலுள்ளவர்கள் கொஞ்சமேனும் விட்டுக்கொடுப்பதில்லை. தவக்கமன்னியில் துவக்கி விடுவார்கள். பின்பு அவ்வூர்களிலிருந்து வெளியேறி உத்தியோகத்திலிருக்கும் அவர்களே ஷை வியாஜ்ஜியங்களை சீமை அப்பீல் வரை செல்லவேண்டிய பொருளுதவி செய்ய வேண்டியிருக்கிறது.

ஆயினும் ஊரிலுள்ளோரே பொறுப்பாளிகளானதால் இவ்வியாஜ்ஜிய ஸம்பந்தமாகவே காலத்தில் பெரும்பாகத்தை செலவிடுவதால் சிறிய வருமானத்திலும் சிதைவேற்படுகிறது. அவச்யமான அவசரங்களில் அகத்திலுள்ள பண்டங்களையும் அகமுடையாளின் அணிகளையும் தணிந்த விலைக்குவிற்கவும் துணிந்துவிடுகிறார்கள்.

இவ்வளவு சிரமத்தில் ஒரு நீதிஸ்தலத்தில் அனுகூலமானால் அப்பீல் செய்ய பிறர் பின் வாங்குவதில்லை. ஒருவருக்கிறுதியில் கிடைக்கும் தீர்மானம் மற்றொருவருக்கு மற்றோர் வியாஜ்ஜியம் துவக்கக் காரணமாகிறது.

அனுகூலமான தீர்ப்புப் பெற்றவரே தமக்கே இனி அனுகூலமெனக் கருதி வேறொரு வியாஜ்ஜியத்தை விளைப்பதுமுண்டு.

இஃதெல்லாம் ஒரே ஊரில் நடப்பதைப் பற்றியவை. ஒரு ஸ்தலத்தில் ஒரு வகுப்பார்க்கு ஒரு வியவஹாரமனுகூலம், மற்றொரிடத்தில் அவ்வகுப்பார்க்கே அத்தகைய வியவஹாரம் பிரதிகூலம். இப்படியானால் இதற்கென்ன முடிவு? வியாஜ்ஜியங்களை யாரம்பிப்பவர்களுக்கு ஆயுஷ்யஹோமாதி (வயதை வளர்ப்பதற்குறிய வைதிக சடங்கு) களால் வயது வளர்ந்தாலும் முடிவைப்பார்த்து விடுகிறார்களென்று முற்றிலும் சொல்லமுடியாது இரு கலையார்க்கும் பொதுவாகவிருக்கும் திவ்யதேசங்களில் கலஹமுள்ள விடங்களைக் காட்டிலும் தெய்வ ஸான்னித்தியம் குறைந்திருப்பதாகத் தெரியவில்லை. உதாஹரணமாகத் திருப்பதியை பார்த்துக்கொள்ளுவோம்.

ஆகையால் இரு திறத்தாரும் சேர்ந்து ஸகோதரர்கள்போல் நேசித்து உலகத்திற்கு தாயுந்தந்தையுமான ஸ்ரீய:பதியின் கைங்கர்யங்களைச் செய்துவந்தால் அப்பெருமானின் திருவுள்ளம் எத்தகையவின்பமெய்தி நிற்குமென நிபுணர்கள் நிரூபிக்கவேணும்.

சாஸ்திரங்களைக் கொண்டு தானே ஆலயங்களையும் தெய்வங்களையும் நம்புகிறோம். அதே சாஸ்திரங்களில் ஒருவரை யொருவர் "நிற்கின்றதெல்லாம் நெடுமால்" என்று நேசிக்க வேண்டுமென்றும் பரஸ்பரம் முரண்படுவது பாகவதபசாரமென்னும் கொடிய பாபமென்றும் தெய்வத்தின் முன் துவேஷிப்பது, அத்தெய்வத்தை யலக்ஷியம் செய்கிறதென்கிற அபசாரமாகுமென்றும் அறைகின்றன. இவை யெல்லாவற்றையும் புறக்கணித்து காமக்ரோதங்களால் ஒருவர்க்கொருவர் பூசலிட்டு பூஜோத்ஸவாதிகளைத்தடுப்பதும் செல்வாக்கிருந்தால் சண்டைச்சிலவிற்கோ பொருளை பொருட்படுத்தாமல் எடுப்பதும் பொருத்தமாகுமா?

ஆகியும் ஸ்வயம்வ்யக்தமுமான ஸ்ரீரங்கத்திலேயே சில வருஷங்களுக்கு முன் திருவாராதனமில்லாமல் ஒரு வாரம் போல் ஸன்னிதியில் திருக்காப்பு சேர்ந்திருந்ததாயும் கேழ்விப்படுகிறோம். இந்தப்பாவம் இதற்குக்காரணமானவர்களை லகுவாக விட்டு விடுமா? தென்கலையோ வடகலையோ திருமண் காப்பு சாற்றிக்கொள்ளாததற்காக திருக்கதவு சாற்றி திருவாராதனம் நின்று விட்டால் இதனினும் அநீதி வேறுண்டோ? தகரார் தீரும் வரை நிலகமிட்டிருந்தால் திருமால் திருமேனியை விட்டுத்திருநாட்டுக்குத்திரும்பி விடுவாரோ? பலவிடங்களில் சில சமயங்களில் இத்தகைய சம்பவங்கள் நடக்கின்றன. நான்கு புறத்திலும் காட்டிய மாடும் நவ நாகரீகத்தின் நடுவில் நிற்குமிக்காலத்திலும், சீர்திருத்தக்காரர்கள் ஆலயப்பிரவேசம், தீண்டாமை ஒழிப்பு முதலிய கொடுஞ்சட்டங்களைக் கொண்டு வரும் இக்காலத்திலும், பிராம்மணர்களுக்கு அதிலும் வைஷ்ணவர்களுக்கு வஸதியே யில்லாத இக்காலத்திலும், வீணே வியவஹாரங்களை விளைவிக்கும் வீம்புக்காரர்களிடம் வினயத்துடன் நாம் விண்ணப்பிப்பதொன்று. இப்போது காங்கிரஸ்காரர்கள் அரசாளும் ஸமயத்தில் ஆலயங்களில் ஐந்தாவது ஜாதிகள்புகுந்து அக்ரமம் செய்வார்களேயானால் என் செய்யப்போகிறீர்கள். ஆனால் ஒன்று தான் சொல்லலாம். "அவர்களுக்கும் திருமணைப் போட்டு கக்ஷியில் சேர்த்துக்கொள்வோம்" என்று. இப்படியேதிருச்சியிலுள்ள ஒருஸபையில் இப்போது முதல் மந்திரியாயிருப்பவர் முன் அந்நியர்களின் ஆலயப்ரவேசத்திற்கு அவஸரப்பட்டபோது தீர்மானம் செய்ததாகவும் வடகலையார் வரும் கோயிலில் பஞ்சமர் வரக்கூடாதென்றும் தென்கலையார் கோயிலில் யார் வந்தால் என்ன என்றும் இரு வகுப்பிலும் சிலர் சொன்னதாயும் கேழ்விப்பட்டோம். இவையெல்லாம் தண்டதானை செங்கோலுடைய திருவரங்கச் செல்வன் திருவுள்ளத்திற்குத்தீராத சீற்றத்தைத் தருவனவன்றோ ஆகையால் இனியாகிலும் இனிய மனத்துடன் "தொண்டீரெல்லீரும் வாரீர் தொழுது தொழுது நின்றார்த்தும்,, என்னும் காரிமாறன் கருத்துக்கும் எல்லாரும் வாழ வேணுமென்ற "லோகாஸ்ஸமஸ்தா: ஸுகிநோபவந்து" என்கிற வாக்யத்தை பாராயணங்களின் முடிவில் அனுஸந்திப்பதற்கு இணங்கக்கோபித்துக்கொள்ளாமல் நாம் எல்லாரும் ஏகோபித்து இத்தனை அடியாரானுர்க்கு இரங்கும் நம் அரங்கனையபித்தனைப் பெற்றும் பாழாகாமல் அப்பரமனைப்பயிலும் திருவுடையராய் இந்த லீலா விபூதியை அவன் நித்ய வாஸம் பண்ணும் நித்ய விபூதியாகச்செய்து நிரந்தரானந்த பரிதர்களாய் நிற்போம், இந்த ஸாமரஸ்யத்திற்குச் சிலர் சங்கிக்கும் பெருத்த தடை ஒன்றிருக்கிறது. திவ்ய தேசங்களில் பெரும்பாலும் தென்கலையார் வ்யாபித்திருப்பதால் வடகலையாரிடமுள்ள சில திவ்ய தேசங்களுக்காக அவர்கள் எப்படி விட்டுக்கொடுக்க முடியுமென்று. காலக்ரமங்களில் எவ்வளவு மாறுதல்களைக் காண்கிறோம். கலாபகாலங்களில் ஆலயங்களே எவ்வளவோ ஆபத்திற்குள்ளகப்பட்டு சிலகாலம் கழித்துவிடுபட்டதாகக் கேழ்விப்படுகிறோம். பிறர் பரிஹஸிக்கும்படி இப்போதிருக்கும் நம் நிலை முன் இருந்ததாகத் தெரியவில்லை. ஆலய ப்ரவேசம் முதலான அக்ரமச் சட்டங்களின் ஆரம்பங்களெல்லாம் நாம் செய்யும் அஸஹ்யாபசாரங்களின் பயனே என்று நம் துணிபு. ஆகையால் ஆக்ஞாபிக்கும் நம் ஈச்வரன் ஆபத்துக்களை விளைவித்து ஆட்டிவைக்குமுன் அனைவரும் ஒன்றுகி அவரவர்களின் ஆசாரங்களை பரிபாலனம் பண்ணிக்கொண்டே அரங்கனையடைந்து அரிய ஸேவைகளை அனுஷ்டித்தால் அவனுள்ள முகந்து செய்யேல் தீவினையென்றருள் செய்வன்.

## "ஸ்ரீ" என்ற மரியாதைப்பதம்.

சென்னை கவர்ன்மெண்டார் பிறப்பித்துள்ள ஓர் உத்திரவில், மகா-ள-ள-ஸ்ரீ, காரு, முதலான பலவித மரியாதைப் பதங்களுக்குப் பதிலாக இனிமேல் "ஸ்ரீ" என்ற ஒரே எழுத்தைப் பெயருக்குமுன் சேர்த்துச் சொன்னால் போதுமென்று கூறியிருக்கிறார்கள்.

## பிரதம மந்திரிகள் கூட்டம்.

காங்கிரஸ் மாகாணங்களில் உள்ள பிரதம மந்திரிகளின் கூட்டம் பம்பாயில் நடைபெற்றது. காங்கிரஸ் எலெக்ஷன் அறிக்கையை அநுஸரித்து எல்லா மாகாணங்களிலும் ஒரே விதமான ஆக்ஷிக்கொள்கையைக் கையாளவே இக்கூட்டம் நடைபெற்றது. விவஸாயம், நிலவரி, பேச்சு ஸ்வதந்திரம்போன்ற பிரஜாவுரிமைகள் இவைகளைப்பற்றி ஆலோசனை நடந்தது.


## தர்ம சாஸ்திரச் சுருக்கம்.

(மூன்றாம் பதிப்பு)

பிராம்மணர்களின்கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், "வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராம்மண குடும்பங்களிலும்இருக்கவேண்டியதவசியம்.

விலை ரூ. 1—8—0 வி. பி. பிரத்யேகம்.

கிடைக்குமிடம் :—

பப்ளிஷர்.

தர்ம சாஸ்திரச் சுருக்கம்.

கீழவிடையல், திருச்சிரா P. O.




# மதுரை ஜில்லா

## வர்ணாச்ரம ஸ்வாராஜ்ய சங்க ஐந்தாவது ஸம்மேளனம், வரவேற்புப் பத்திரிகை.

மித்திர தேவதையும் வருண தேவதையும் நமக்குச் சுகத்தைக்கொடுப்பவர்களாக; அர்யமா என்ற தேவர் நமக்கு இன்பத்தை அளிப்பாராக; தேவேந்திரனும், வியாழ பகவானும் நமக்கு மகிழ்ச்சியைத்தருவார்களாக பெரிய திருவடிகளுடனும், மகிமையுடனும் விளங்குபவரான மகாவிஷ்ணு பகவான் நமக்கு எல்லாவித நன்மைகளையும் அளிக்கத்தடவுபுரிவாராக.

பகுமை வாய்ந்த பெரியோர்காள்!

ஸநாதன தர்மத்தைக் காப்பவர்களான உங்கள் யாவருக்கும் மேல்மங்கலம் என்ற இந்த கிராமத்தில் நல்வரவாகுக.

முன் காலத்தில் இவ்வூருக்கருகில் பிருகு மகரிஷியின் ஆசிரமம் அவருடைய சிஷ்யகணங்களுடன் விளங்கி வந்ததாகப் புராணங்களிலிருந்து தெரிய வருகிறது. இக்கிராமத்தோரமாக வராகநதியெனத் திருப் பெயர் கொண்டு யமுனையாறே வற்றாப்புனலுடன் செல்லுகிறது. இவ்வூருக் கருகில் மிருகண்டு மகாமுனிவரின் ஆசிரமம் ஓர் மலைச்சாரலில் அமைந்திருந்தது; இக்காலத்திலும் அப்பருவதத்திற்கு முருகமலை யென்று அம்மகானின் திருப்பெயரால் நாமதேயம் விளங்குகிறது.

மேலும் இவ்வூரின் முன்பக்கலில் பகவான் ஸ்ரீரங்கநாதர் அரவணையில் பள்ளி கொண்டு திருத்தேவியாருடன் உறக்கமில்லாமல் எல்லோரையும் காப்பதற்காகவே விழித்துக் கொண்டிருக்கிறார்: ஈசானிய மூலையில் வாராகநதிக்கரையில் ஸ்ரீபெரியநாயகி மாயாபாண்டியேசுவரர் என்ற திருநாமங்களுடன் பார்வதி பரமேசுவரர்கள் விளங்குகிறார்கள். கிராமத்தின் நடுவில் அழகிய கோயில் கொண்டு ஸ்ரீ வெங்கடாசலபதி தொண்டர்கள் வேண்டிய வரன்களைக் கொடுத்தருளுகிறார். ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேசுவரரின் ஆலயம் வாராகநதிக்கரையில் இருந்து ஜீர்ணமாகிவிட்டபடியால் தர்ம சீலர்களான இவ்வூர் மஹாஜனங்களால் அதிகமான பணச்செலவுடன் அவ்வாலயம் புதிதாகக் கட்டப்பெறுகிறது.

கலி புருஷனால் ஆக்ரமிக்கப்பட்ட இக்காலத்திலும் இவ்வூரில் அநேக மாணவர்கள் வேதம் கற்பிக்கப்பெறுகிறார்கள். வெகு சிஷ்யர்கள் தேவபாஷையும் கற்றுக்கொள்கிறார்கள். சொந்த கிராமத்தைப் புகழ்ந்து கொள்வதில் நான் மிகவும் கூச்சம் அடைகிறேன். அப்படியிருந்தும் பெரியோர்களான உங்களுடைய முன்னிலையில் இவ்விஷயங்களை அவசியம் தெரிவித்துக் கொள்ள வேண்டுமென்று, இக்கிராமத்து அசேஷ வித்வன் மகாஜனங்களின் பிரதிநிதியாக நான் மிகவும் வணக்கத்துடன் விக்ஞாபனம் செய்து கொள்கிறேன்.

நற்குலத்தில் உதித்தவர்களும் வடமொழியிலும் ஆங்கிலத்திலும் தமிழிலும் தேர்ச்சி பெற்றவர்களும், பெரிய பட்டங்கள் பெற்றவர்களும், புகழத்தகுந்தவர்களுமான, பிரும்மஸ்ரீ கிருஷ்ணசாமிஐயரவர்கள் இச்சபைக்கு தலைவராக இருக்க இசைந்திருக்கிறார்களென்பது நமக்குப்பெரும்பாக்கியமே.

மேலும் அகில பாரதவர்ஷ ஸநாதன தர்ம ஸ்வாராஜ்ய சங்கத் தலைவர்களும் ராஜரிஷி போன்றவர்களும் தர்மாநுஷ்டானங்களை ஒழுங்கு தவறாமல் அநுஷ்டித்து வருபவர்களுமான ஸ்ரீமான் ஸர்வசாஸ்திரி N. நடேசய்யரவர்கள் எங்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி எங்களை அநுசரணம்செய்வதற்காக இங்கு விஜயம் செய்திருக்கிறார்கள் என்பதனால் நாங்கள் எங்களுடைய மனக்கோரிக்கைகள் எல்லாம் நிறைவேறினவர்களாகவே இருக்கிறோம்.

இதைத்தவிர நீதிபதிஸ்தானம் வகித்துப் பென்ஷன் பெற்றவர்களான பிரும்மஸ்ரீ வெங்கடாசல ஐயரவர்களும், வள்ளலும் வாக்குவல்லவரும் பெரிய மிராசுதாருமான பிரும்மஸ்ரீ டி. எல். சுப்பய்யரவர்களும், மற்றும் சிறந்த பண்டிதர்களும், இங்கே விஜயம் செய்துஇச்சபையை அலங்கரிக்கிறார்கள் என்பதனால் நாங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம்.

உங்களுடைய கார்யங்களை விட்டுவிட்டும் யாத்திரையின் சிரமத்தைப்பாராட்டாமலும் ரயில்வேஸ்டேஷனுக்குவெகுதூரத்திலேதோ ஒரு மூலையில் இருக்கும் இக்கிராமத்துக்கு மகாபண்டிதர்களான நீங்கள் தயவுடன் விஜயம் செய்திருக்கிறீர்கள் என்று மிகவும் ஆநந்தம் அடைகிறோம்.

இப்பொழுது தீண்டத் தகாதவர்களான சண்டாள ஜனங்கள் கோவில்களில் நுழைவதற்குப் பம்பாய் சட்ட சபையில் சட்டமூலம்அநுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அவ்வூரில் தர்மசீலர்கள் அநேகர்இந்த அநீதியை சகிக்காமல், (H. E. the Governor) கெவர்னர்அவர்களிடமும், H. E. the Viceroy ராஜப்பிரதிநிதியவர்களிடமும், வினயத்துடனும், உறுதியுடனும், தகுந்த முகாந்திரங்களுடனும், ஆக்ஷேபங்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களுடைய இந்நன் முயற்சி பயனுள்ளதாக வேண்டுமென்று தீனர்களாகிய நாங்கள் சிரஸில் கை கூப்பிக்கொண்டு கிருபாநிதியாகிற பரமேசுவரனைப் பிரார்த்திக்கிறோம்.

மேலும் டில்லி நகரில் இருக்கிற மஹாஜன சபை (All India Legislative Assembly) யில், பெண்களுக்கு விவாஹம் நடத்துகிற விஷயத்தில் ஏற்கனவே ஏற்பட்ட அக்கிரமச்சட்டம் இப்பொழுது அதிகதீங்கைவிளைவிக்கக்கூடியதாகச்செய்யப்பட்டதென்று, பத்திரிகைகள்மூலம் யாவரும்அறிந்த விஷயமே. அதைக்குறித்து நம்முடைய ஆக்ஷேபணைகளைத் தந்திகளை அனுப்பிச் சீக்கிரமாகவே தெரிவிக்க வேண்டும்.

பாபத்துக்கு பயந்து தர்மமே கெதியென்று இருக்கும் நாம் இன்னும் என்ன அநர்த்தம் நேரிடுமோவென்று அச்சங்கொண்டு நடுங்கிக்கொண்டிருக்கிறோம். ஆனால் முன்பு பலதடவைகளில் பௌத்தர்களாலும் சமணர்களாலும் தாக்கப்பட்டிருந்தும் அந்த இன்னல்களையெல்லாம் தாண்டி இப்பொழுதும் யாதொரு கலக்கமுமின்றி ஒளிர்கிறதாதலால் நித்தியமான ஸநாதநதர்மத்துக்குக் கூடிய சீக்கிரம் நற்காலம் வரும் என்று மிகவும் உறுதி கொண்டிருக்கிறோம், பண்டிதர்களான பெரியோர்கள்! கிராமவாசிகளான எங்களால் செய்யவேண்டியகடமைகளை எங்களுக்குக் கற்பித்தும், இச்சபையில் உசிதமான தீர்மானங்களை நிறைவேற்றியும், நீங்கள் எங்களை உற்சாகப்படுத்தவேண்டும் என்று மிகவும் வணக்கத்துடன் கைகூப்பி வேண்டிக் கொள்கிறோம்.

மறுபடியும் தங்களுக்கு நல்வரவு கூறுகிறோம். உங்களை உசிதப்படி உபசரிப்பதற்குக் கிராமவாசிகளான எங்களுக்குத் தெரியாது. ஆனால் உங்களை யாராதிப்பதில் எங்களுக்கு மிகவும் அவா உண்டென்பதையும், மற்ற இடங்களில்இருப்பவர்களைக்காட்டிலும்,பிரீதி விஷயத்தில் நாங்கள் கீழ்ப்பட்டவர்களல்லவென்றும் உரத்தகுரலுடன் மிகவும் வணக்கமாகத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். நாங்கள் உங்களுக்குச்செய்கிற உபசாரணை குறைவாயிருப்பினும், கிருபை கொண்ட மனத்துடன் தாங்கள் அதைப்பெரிதாக்கருத வேண்டுமென்றும் பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

உங்களுக்குஸ்ரீ சுந்தரேசுவரர் நன்மைசெய்வாராக; தாமரைக்கண்ணனான மகாவிஷ்ணு உங்களால் விரும்பப்பட்ட வரங்களைத்தந்தருள்வாராக; எல்லாத்தேவதைகளும் உங்களுக்கு இதம் புரிவார்களாக; ஸ்ரீமாயாபாண்டியேசுவரர் உங்களுக்கு எல்லாவிதமான மங்களங்களையும் கொடுப்பாராக.

ஆஸ்திக மகாஜனங்கள், மேல் மங்கலம்.

## சென்னை.

1. அதர்ம சட்ட எதிர்ப்பு:—மாம்பலம் பிராம்மண ஸபையினுதரவில் கிருஷ்ணகுமார் என்றவிடத்தில் காலை 8-மணிக்கு சில மாணவர்கள் விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணத்துடன் ஊர்வலமாக வர ஸ்ரீ வத்ஸ. ஸோமதேவ சர்மா அவர்கள் அதர்ம சட்டங்களை விவரித்து அவை அழியும்படி பகவத் பிரார்த்தனைசெய்தார். ஏகோபித்து அதர்ம சட்டக் கண்டன தீர்மானம் நிறைவேற்றது.

2. ஸ்ரீசங்கராசார்ய மடத்தில்கண்டனம்:—ராஜமான்ய ஸ்ரீ T. S. ராவஸ்வாமி அய்யரவர்கள் கூட்டத்தின் கருத்தை விளக்கி ஸ்ரீ. N. சீனிவாஸாசார்யாரை தலைமை வஹிக்கும்படி வேண்டினார். தஞ்சை வக்கீல் ஸ்ரீ. ராதாகிருஷ்ணய்யர்வாளும் ஸ்ரீ. ஸோமதேவ சர்மாவும் பேசிய பிறகு, தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றது.

3 ஓர் உபாயம்.—அ. இ. வ. ஸ்வாராஜ்ய ஸங்ககாரியதரிசி ஸ்ரீமான் பாண்டே ஹரித்வாரத்தில் ஓர் மஹா புருஷனைக்கண்டு இச்சட்டங்கள் ஒழிய ஓர் உபாயம் வேண்ட அவர் அனைவரும் நித்ய கர்மாநுஷ்டானத்திற்கு பிறகு பிரதிதினம் காலை மாலையில் தத்தம் இஷ்ட தேவதையை ஜப ரூபமாகவோ ஸ்துதி ரூபமாகவோ ஸங்கல்ப புரஸ்ஸரமாக வேண்டும்படி உத்திரவிட்டதாக ஸ்ரீ. T. S. R. அய்யர்வாள் அந்த ஸபையில் கூறினார்.

## ஸ்ரீபராங்குச பக்த ஸபா கும்பகோணம்.

(12—5—38)

ஷை ஸபையினுதரவில், சென்ற வருஷம் போல் இவ்வருஷமும், ஸ்ரீசாரங்பாணிஸ்வாமி சைத்ரோத்ஸவத்தில் அத்தியாபக ஸ்வாமிகளை எழுந்தருளப் பண்ணிவைத்து ஸம்பாவனை செய்யப்பட்டது. ஆனரெரி மாஜிஸ்திரேட் ஸ்ரீ உபயவே ஆர். நீலமேகாசார்யர் ஸ்வாமிகள் ஸபையில் தலைமைவஹித்து ஸம்பாவனையை நடத்தினர். ஸ்ரீ உபயவே வக்கீல், பக்ஷி, வெங்கடாசார் ஸ்வாமி முதலாக பலர் பிரஸன்னமாயிருந்தனர். சித்திரையில் சித்திரை நாளானபடியால் ஸ்ரீமதுரகவிகளின் பெருமை, ஸ்ரீ உ. வே. இளையவில்லி தி. ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமியால் எடுத்துரைக்கப்பட்டது. கார்யதர்சிகளான ஸ்ரீ உ. வே. டி. ஆர். அனந்தாசாரியர், ஸ்ரீ உ. வே. சிரோமணி ப. ஸ்ரீநிவாஸாசாரியர், இவர்கள் கோஷ்டிக்கு எழுந்தருளி சிரத்தையுடன் கைங்கர்யத்தை நடத்திவைத்த ஸ்வாமிகளின் பெருமையையும், தலைமைவஹித்து ஸம்பாவனை நடத்திவைத்தவரின் சீர்மையையும் சிறப்பித்துக் கூறி வந்தனோபசாரமும் கூற இரவு 8-மணிக்கு ஆரம்பித்த ஸபை 9-மணிக்கு மிகுந்த உத்ஸாஹ சந்தோஷத்துடன் இனிது நிறைவேறியது.

இங்ஙனம்,

ந. நி.



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥


ஆர்யதர்மம்.

பகுதான்ய-ஸூ வைகாசி-மீ 6உ


## மத உரிமையை ரக்ஷிக்கப் புதிய கக்ஷிவேண்டும்.

ஸமீபத்தில் சென்னை லெஜிஸ்லேடிவ் அசெம்ப்ளியில், ராவ்பஹதூர் ஸ்ரீமான் M. C. ராஜா அவர்களால் ஜாதி ஜனஸமூக சம்பந்தமான அஸௌகர்ய நிவாரண மசோதாவும், ஆலயப்பிரவேச மசோதாவும், பிரேரேபிக்கப்படுவதாக அறிகிறோம். இவ்விரு மசோதாக்களின் நோக்கங்கள், ஹிந்துமத சம்பிரதாயங்களுக்கும் அபிப்பிராயங்களுக்கும் முற்றிலும் விரோதமானவைகளாகவும், தொன்று தொட்டுவரும் ஆசாரங்கள், மாமூல்கள், வழக்கங்கள் இவைகளின் நன்மதிப்பை அழிப்பவைகளாகவுமிருக்கின்றன.

இந்த மசோதாக்கள், "தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள்" என்று பெயர் கொடுக்கப்பட்டிருப்போர் உள்பட ஹிந்துமதத்தை அனுஸரித்துவரும் எல்லா ஜாதி சமூகங்களுடையவும், பிரத்யேகமாக ஒவ்வொரு நபருடையவும் பரமார்த்த பிராப்தி, நல்வாழ்வு முதலிய ஸௌகர்யங்களைத்தாக்கி, முற்றிலும் வெறுக்கத்தக்க வழிகளில் செலுத்தக்கூடியவைகளே. ஆகவே மத திருஷ்டியில் இந்த மசோதாக்கள் அத்யந்தம் ஆக்ஷேபிக்கக்கூடியவை. ஜனஸமூகங்களின் மத, ஆசார சம்பந்தமான விஷயங்களில் சட்டசபைகள் தலையிடுதல் மத கொந்தளிப்புக் கொடுமையாகும். இச்சட்ட நிரூபணங்கள், ஆலயங்களை பரிபாலித்து வருவதற்கென்று மூலதனம், மான்யம் முதலியவைகளைக் கொடுத்தவர்களின் ஆதி உத்தேசம், இஷ்டம் இவைகளை முற்றிலும் பங்கப்படுத்துகின்றன. சட்டசபை அங்கத்தினர்கள் எல்லா சமூகங்களுக்கும் ஒரேமாதிரியாக இருக்கும் ராஜ்யத்துறையிலும், லௌகிக அம்சங்களிலும் மாத்திரம், பொதுஜன சௌக்கியத்தை முன்னிட்டு சட்டங்கள் செய்ய தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே ஒழிய, மதவிஷயங்களில் சட்டங்கள் செய்வதற்காக ஏற்பட்டவர்களல்ல. ஆகையால் மதவிஷயங்களில் அவர்கள் ஈடுபடுவது நியாயமல்ல.

ஒவ்வொருவருக்கும் உரிமையான மதானுஷ்டான சுதந்திரத்தைக் காப்பாற்றுவது ஒவ்வொரு அரசாங்கத்திற்கும் முதல் கடமையாகும். இந்த சுதந்திரம், இந்தியாவிலும் குறிப்பாக தென்னிந்தியாவிலும் தொடர்ந்து வந்திருக்கும் அரசாங்கங்களால் சரிவர மகாஜனங்களுக்கு அளிக்கப்பட்டுவந்திருக்கிறது. மேற்சொல்லிய மசோதாக்களின் ரீதிகளில் சட்டங்கள் கொண்டுவரப்படுவது "ஜாதி ஹிந்துக்களுக்கும்," மசோதாக்களில் சொல்லப்படுகிற "தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள்" என்போர்களுக்குமிடையே இடைவிடாத சச்சரவுகளையுண்டுபண்ணும். தவிர ஹிந்து ஜன ஸமுதாயத்தின் ஸ்நேஹ கட்டுப்பாட்டையும் அழித்துவிடும்.

இந்தியா சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட "1930-ஸூத்ய பால்ய விவாஹத்தடுப்புச் சட்டத்தின் திருத்த மசோதா" சமீபத்தில் சட்டமாக்கப்பட்டிருப்பதையும் ஹிந்துக்களாகிய நாம் பலமாக ஆக்ஷேபிக்கிறோம். இந்த "பால்ய விவாகத் தடுப்புச்சட்ட திருத்த"த்தையும், ஏற்கனவே இருந்துவரும் "பால்ய விவாக தடுப்புச்சட்"டத்தையும் முற்றிலும் ரத்து செய்ய சென்னை சட்டசபையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றும்படி கனம் பிரதம மந்திரி அவர்களை நாம் கேட்டுக்கொள்ளவேண்டும்.

இந்த மாகாணத்தின் கோடிக்கணக்கான ஹிந்து மகா ஜனங்களுக்கு அவர்கள் விரும்புகிறபடி பரிபாலனம் செய்வதற்கான பொறுப்பேற்றுக்கொண்டிருக்கும் காங்கிரஸ் ஆட்சியின்கீழ் ஹிந்துக்களுக்கு வரையற்ற மதசுதந்திரம் அளிக்கப்படவேண்டும். மீண்டும், சட்டசபைகளில் காங்கிரஸ் கக்ஷியார் ஷை மசோதாக்களை எதிர்த்து அவை சட்டமாகாதபடி தக்க ஏற்பாட்டைச் செய்யுமாறு கனம் பிரதம மந்திரி அவர்களை நாம் கேட்டுக்கொள்ளவேண்டும்.

பாரதமாதாவின் புனித பாரத புத்திரர்கள் மதவிஷயங்களில் பரிபூர்ண சுயேச்சையை ரக்ஷிக்கும்பொருட்டு, ராஜீய கக்ஷியினர்கள் யதேச்சாதிகார முறையில் சட்டங்கள் செய்வதை ஆக்ஷேபித்து, பொதுக்கூட்டங்கள் மூலமாயும், மகஜர்கள் மூலமாயும், டெபுடேஷன்கள் மூலமாயும் சட்டசபைகள் மதத்தில் தலையிடுவதை நிறுத்த முயற்சிக்கவேண்டும்.

தவிர, மதவிஷயங்களில் பூர்ண சுயேச்சையளிப்பதை அடிப்படையான கொள்கையாக கொண்ட எல்லா மதத்தினர்களும் கொண்ட அகில இந்திய தேசீயக்கக்ஷி ஒன்றும் உடனே ஏற்படவேண்டும். அது, மதானுஷ்டானங்களில் இருந்துவரும் சுதந்தரத்தை தகர்க்க விரும்பும் எந்த ராஜீயகக்ஷியையும் சட்டசபைகளிலும் வெளியிலும் எதிர்த்துப் போராடி, ராஜ்யத்தில் முற்போக்கான கொள்கையை ஆதரித்து, மத சுதந்திரத்தை நிலைநாட்டி, தேசத்திற்கு அமைதியையும் க்ஷேமத்தையும் நிலைநாட்டுவதற்கு தயாராகவேண்டும். இதை ஆலோசித்து தேச மகாஜனங்கள் தாமதமின்றி அகில இந்திய ஸ்தாபனம் ஒன்றை நிறுவமுயற்சிப்பார்கள் என்று நம்புகிறோம்.

## குறிப்பு.

### கண்டிக்க உரிமையுண்டா?

இந்தியாவில் பற்பல ஜாதிமதஸ்தர்களிருக்கிறார்கள். ஒவ்வொருவருடைய கொள்கையும் ஆசாரமும் மிகவும்வேறுபட்டிருக்கிறது. பழக்க வழக்கங்களும் அடியோடு வேறுபட்டவைகளே. ஒரு மதஸ்தர்களுடைய கொள்கையும், ஆசாரமும் மற்றொரு மதஸ்தருக்குப் பிடிக்காமலிருப்பது இயற்கையே. ஒரு மதத்தினருடைய கொள்கையின்படி, மற்றொரு மதத்தினருடைய ஆசாராதிகள் ஆக்ஷேபகரங்களாயும், பரிஹாஸாஸ்பதமாயும் இருக்கலாம். ஆயினும் இன்றுவரையில் ஒரு மதத்தினர் மற்றொரு மதத்தினருடைய தர்மங்களையும் ஆசாரங்களையும் கூட்டம் போட்டுக் கண்டிப்பதென்பது அதிகமில்லை. கிறிஸ்தவர்கள் கூட்டம்போட்டு மஹம்மதிய மத தத்வங்களைக் கண்டிக்க முடியாது. மஹம்மதியர்கள் கிறிஸ்தவ மத தத்வங்களைக் கண்டிப்பதில்லை. ஆனால் ஹிந்துமதத்தைப் பற்றியவரையில் இந்தவியவஸ்தை கிடையாது. எந்தமதத்தைச் சேர்ந்தவனாயிருந்தாலும் ஒருவன் ஹிந்துமத தத்வங்களை இகழ்ந்துபேசினால் கேழ்பார் கிடையாது. ஹிந்துக்களுடைய தர்மாசாரங்களைப்பற்றியார்வேண்டுமானாலும், எப்படிவேண்டுமானாலும் கூடிக் கண்டிக்கலாம். போலும்!

வைதிக மதமான்து யாகத்தில் பிராணி ஹிம்ஸையை தர்மமாக விதிக்கிறது. வேதம் அதை உயர்ந்த தர்மமாக கட்டளையிடுகிறது. வைதிக மதத்தை ஸ்தாபித்த மனு, வியாஸ, பாராசாதி ஸகல ரிஷிகளும் யாகப்பிராணி ஹிம்ஸையை வைதிகதர்மமாக அங்கீகரித்தார்கள். நமது வேதங்களில் யாகப்பிராணி ஹிம்ஸை விதிக்கப்பட்டிருப்பதை வேத பாஹ்யர்களான பௌத்தாதிகள் கூட மறுக்கவில்லை. வேதம் ஹிம்ஸையை விதிப்பதால் தான் அதை பௌத்தர்கள் ஒப்பவில்லை. ஆதலால் வேதத்தில் யாகபலிவிதிக்கப்படவில்லை என்பது முழுபூஷணியைச்சோற்றில் மறைக்கவிரும்பும் மூடர்களுடைய வாதமேயாகும். வைதிக மதத்திற்கும், இதரர்களுக்கும் யாக பசு ஹிம்ஸை விஷயமாக ஏற்பட்ட விவாதத்தை ஸ்ரீவியாஸ பகவான் பிரம்ம சூத்ரத்தில் எடுத்து விசாரித்து அந்த ஹிம்ஸையானது உத்தம தர்மமென்று நிரூபித்து பிற மதஸ்தர்களுடைய துர் கக்ஷியை தூரத்தியடித்துள்ளார். ஸ்ரீ சங்கர, ராமானுஜ, மத்வாசாரியர்களும் அந்த பிரும்மஸூத்ர பாஷ்யத்தில் யாக பசு ஹிம்ஸையை வைதிக மதத்தின் தர்மமென நிர்ணயித்தனர்.

ஆகவே வைதிகமதத்தினர் யாகபசுஹிம்ஸையை ஆக்ஷேபிக்க வழியில்லை. அந்தஹிம்ஸையை ஒப்பாதவன் வைதிகமதத்தில் இருக்க முடியாது. இப்படி வேதத்தையும் வைதிகமதத்தையும், அதன் ஆசார்யர்களையும் அநுஸரிக்கும் நமது ஆசாரங்களை பிறமதஸ்தர்கள், கண்டிக்க என்ன உரிமை உள்ளது? நமக்கு உபதேசம்செய்ய இவர்கள் யார்? மஹம்மதியர் பசுகுர்பானி செய்வதை ஹிந்துமதஸ்தர்கள் கூட்டம்போட்டுக் கண்டிக்கலாமா? கண்டித்தால் அதற்கு அர்த்தமுண்டா? ராஜசக்ரவர்த்தியின் மகுடாபிஷேக காலத்தில் எருதுகளை பலிகொடுப்பது வழக்கம். கிறிஸ்தவமதத்தின் அங்கீகாரத்தைப் பெற்றதெனக் கூறப்படுகிறது. இதைக் கண்டித்து இந்தியாவிலுள்ள ஒருசிலர் கூச்சல்போட்டதை சீமைப்பாதிரிகள் லக்ஷ்யம் செய்யவேஇல்லை.

சேலம் ஜில்லாவில் நடக்கும் யாகத்தில் பிராணி ஹிம்ஸை செய்யக்கூடாதென்று சிலர் சேர்ந்து கூட்டம்போட்டுக் கூச்சலிட்ட ஸமாசாரம் பத்திரிகைகளில் வந்திருக்கிறது. இம்மாதிரி நமது தர்மங்களைக் கண்டிக்க இவர்களுக்கு என்ன அதிகாரம்? வேதத்தை நம் பாதவர்கள் கூடிக்கொண்டு வைதிக மதத்தைத் திருத்த என்ன பாத்யமிருக்கிறது? வைதிகர்கள் தங்களுக்கு தர்மமாயும் சாஸ்திரீயமாயும் விதிக்கப்பட்ட காரியங்களைச் செய்யவேண்டியவர்கள். பிற மதஸ்தர்களுடைய பிரீதிக்கோ பரிஹாஸத்திற்கோ அஞ்சக்கூடாது.

அப்படியிருக்க நமது மதத்தில் நம்பிக்கையில்லாத பேர்வழிகள் நம்மைக்கண்டிக்க என்ன பாத்யம்? அவர்களுக்கு யாகம் பிடிக்கவில்லையானால் அவர்கள் அதைச்செய்ய வேண்டாமே? பிறரைக் கண்டிக்க இவர்களுக்கு அர்ஹதையென்ன? மாம்ஸ ஆஹாரப்பழக்கமுள்ளவர்களும், பௌத்தக் கொள்கையுள்ளவர்களும் கூடி வைதிக மதத்தைக் கண்டித்து அஹிம்சாவாதிவேஷம் போடுவது மிக்க ஆபாஸமானது, வைதிக மதத்தினரிலேயே தற்போது பௌத்தக்கொள்கையுள்ளவர்கள், பலர் உண்டு. அவர்கள் வேத பாஹ்யர்களுடன் கூடிக்கொண்டு, வைதிக மதத்தைத்தாக்கச் செய்யும் முயற்சியை நாம் முதலில் தடுக்கவேண்டியது அவசியமாம்.



### "வந்தேமாதரம்,, எதிர்ப்பு.

"வந்தேமாதரம்,, என்ற தேசீய கீதத்தை முஸ்லீம்கள் மத உணர்ச்சி காரணமாக எங்கும பலமாக எதிர்க்கப்புறப்பட்டிருப்பது வலுவடைந்து வருகிறது, முஸ்லீம்களின் எதிர்ப்புக்குப்பயந்து இந்த கீதத்தைப் பலவிடங்களில் காங்கிரஸ்காரர்கள் கைவிட்டு வருவதும் யாவரும் அறிந்ததே. சென்னை சட்ட சபையில் நெடுநாளாக பாடி வந்த அந்த கீதத்தைக்காங்கிரஸ்காரர்கள் விட்டொழித்தனர். அநேக பள்ளிக்கூடங்களிலும் பொதுஸ்தலங்களிலும், பொதுக்கூட்டங்களிலும் கூட காங்கிரஸ்காரர்கள் இதை நழுவவிட ஆரம்பித்துவிட்டனர். ஆகவே இவ்விஷயத்தில் முஸ்லீம் கிளர்ச்சி வெற்றியடைந்துவிட்டதாகச் சொல்லலாம்.

வந்தேமாதரம் என்றதை ஸ்தாபிக்க ஆதியில் ஹிந்துக்கள், முக்யமாக வங்காளிகள் செய்த தியாகத்தை நினைக்கும் போது இப்போது அது காங்கிரஸ்காரர்களாலேயே அவமதிக்கப்படுவது மிக வருந்தத்தக்கது. இவ்விஷயத்திலும் வேறு பல விஷயங்களிலும் முகம்மதியர்கள் சிறிதும் விட்டுக்கொடாமல் ஹிந்து மத வாஸனையே தங்களுக்கு ஆகாதென்று பட்டவர்த்தனமாய் விரோத பாவம் காட்டி வருகையில் கூட, காங்கிரஸ்காரர்கள் அவர்களைப்பின் தொடர்ந்து ஓடி ராஜிபேசத்துடிப்பது எவ்வளவு கேவலம்?

வந்தேமாதரம் என்பதை மஹம்மதியர் பொதுவாக நினைக்காமல் அதைச் சொல்லுவதும் கேழ்பதும்கூட பாவமென நினைக்கையில் ஹிந்துக்கள் மட்டும் "அல்லாஹூ அக்பர்" என்றகோஷத்தை வெட்கமின்றி கூச்சலிடுவது எதெற்காக? ஸமீபத்தில் நடந்த எலெக்ஷன்களில் ஒவ்வொரு ஊர்களிலும், ஹிந்துச் சிறுவர்கள், முக்கியமாகப் பிராமண ஸமூஹத்தைச் சேர்ந்தவர்களே கூட்டங்கூட்டமாக "வந்தேமாதரம்" "அல்லாஹூ அக்பர்' என்று கத்திக்கொண்டு சுற்றியதைப் பார்க்காதவரில்லை, காங்கிரஸ்காரர்களுடைய கூட்டங்களிலும் "அல்லாஹூ அக்பர் என்ற கூச்சலை வாலண்டியர்கள்போட்டுவருகிறார்கள். இதுமிக வெட்ககரமானது வந்தேமாதரம் என்பதை மஹம்மதியர் பாவச் சொல்லாக நினைக்கையில் அல்லாஹூ அக்பரை மட்டும் ஹிந்துக்கள், விடாமல் கத்தி வருவது பௌருஷத்திற்கு ஏற்றதாயில்லை. ஆகையால் மஹம்மதியர்களுக்கான கோஷத்தை நிறுத்துவதே நியாயம்.

நியாயவாதி.

## வாரக்குறிப்புகள்.

(ஸ்ரீ வத்ஸ வெ. ஸோ. சர்மா)

இன்னும் திருந்தலாம்! தேசீயஸபையின் குமார்க்க பிரவேசத்தால் பற்பல கஷ்டங்கள் விளைகின்றன! புலவா [illegible] ராஜினாமா? [illegible] எனும் மந்திரி காரியதரிசி ராஜினாமா! ம—மாகாணத்தில் 4 மந்திரிகள் ராஜினாமா? திருநெல்வேலியில் பொதுக்கூட்டத்தில் தலைவர் பேச முடியாமல், கூச்சலும் குழப்பமும் தோன்ற தலை குனிந்து போதல், சென்னை நகர ஸபை 2½ லக்ஷ கட்டட கண்டனம் முதலியன. அச்சபையின் கலகலப்பைக்காட்டவில்லையா? தர்மத்தில் தலையிடாதிருந்தால் இன்னும் தப்பிக்கலாம்?

கடலில் கறைத்த காயம்! நீல் சிலை எடுத்தேன்! கைதிக்கு மோர் கொடுத்தேன்! செக்கிழுப்பதை நிறுத்தினேன்! மகா-ஈ-ஈ-ஸ்ரீ. என்பதை ஸ்ரீ என்றாக்கினேன்! சிறை அதிகாரிக்கு சலாம் நிறுத்தினேன்! ஒருவன் பணத்தைப்பிடுங்கி இன்னொருவனுக்குத் தந்தேன்! கடன்காரனுக்கு நாமமிட வழி காட்டினேனென்றால் இவை எந்த மட்டில் தேச க்ஷேமமளிக்கும்? பயனுள்ள உறுவான வேலையெங்கே? எங்கே!!

தேச ஸபையா? நாஸ்திகர்கள் கூட்டமா? என ஸந்தேஹிக்கும்படி நாளுக்கு நாள் தலைவர் மிக மோசமாக நடக்கின்றனர். பிரதம மந்திரி ஸபை ஸமூக சீர்திருத்தத்தை கவனிக்கப்போவதாக தலைவர் கூறினார்! இதுவரை இப்பெயரைக்கொண்டே பற்பல அதர்ம சட்டங்களை இயற்றி நாட்டைக் கெடுத்தனர் இனியும் என் செய்வாரோ?

யார் சொன்னாலுமில்லை! ஸர். பி. சிவஸ்சுவாமி அய்யர்வாள் மாணவர் அரசியலில் கலப்பதும் ஸத்யாக்ரஹப் பெயரால், அடங்காப்பிடாரியாயிருத்தலையும் பலமாகக்கண்டித்துப்பேசுகிறார். நாம் சொன்னால் வைதிகர் என்றும் அவர் போன்றோர் கூறினால் மிதவாதமென்றும்பதில் கூறிநாட்டைக்கெடுப்பதறியாமையாகும்! நாட்டின் நலத்திற்காக தோன்றிய தேசீய ஸபையே நாட்டை அழிக்க ஆரம்பித்து விட்டது!! தர்மமே காடு!

கன்யாப்பெண் கைதியானாள்! தென்னாட்டிலே ஓர் கன்னிகை, ஆனால் வயது 20 கல்யாணமாகும் வரை, கன்னிகை தானே. ஓர் குழந்தையைப்பெற்று அதை ஆழக்குழி தோண்டி புதைத்து விட்டாள். நாயும் நரியும் அதைக்காட்டி விட்டது. போலீஸ் புலி அவளைசிறையில் அடைத்தது. அவள் சிக்ஷிக்கப்படுவது நிச்சயம்! குற்றவாளி யார் என அலசிப்பார்த்தால் சீர்திருத்தத்தின் பெயரால் சீரைக்கெடுப்பவரேவன்றோ?

அநுஷ்டிப்பரா? வாயாரப்பலர் பேசுவது வழக்கம். சொற்படி நடத்தலரிது! நீதிபதி ஒருவர் வழக்குகளை நெடுங்காலம் இழுத்துச் செல்வதால் உண்டாகும் தீமையைக் கூறினார். 3ஆண்டிற்கு மேல் பிராம்சரி செல்லாதென்பது போல் 3முறைக்குமேல் ஓர் வழக்கை ஒத்திப்போடலாகாதென சட்டம் செய்தால் நலமல்லவா?

மதுரை ஸபை காட்டும் வழி:—மிக மிக அரியதே! அநுபவ ஸாத்யமான பல வழிகளைத் தலைவர் காட்டினார். பெயரே மறந்துபோகாமலிருக்க அடிக்கடி ஸபை கூடி கலையவேண்டியதுதான். ஆனால் ஏதேனும் ஓர் வேலையையேனும் கைகொண்டு சென்ற ஆண்டிற்கு இந்த ஆண்டு எவ்வளவு விருத்தியானேனும் என கவனிப்பது மிக மிக அவச்யம். அதிகாரி மனதை இழுக்கும் திட்டமே தேவை.

போதாது! போதாது:—அதர்ம சட்டத்தை எதிர்க்கும் தினம் சிற்சிலஇடங்களில் கொண்டாடப்பட்டது. தக்க பெரியார் தாழ இறங்கி வரவில்லை. பொது மக்கள் ஊக்கத்தைக் கவரும்படி ஊர்வலம் பஜனை முதலியன நடைபெறல்வேண்டும். உபதேசத்துடன் நிற்காமல் நானும் சிறிது செய்தேனெனக் கூறுவது குற்றமோ என அஞ்சுகிறேன் சில மாணவர்களைக் கொண்டு காலையில் மாம்பலத்தில் ஊர்வலம்வந்து கண்டனம்கூட்டம்கூட்டி [illegible] கூட்டம் [illegible] இருந்தது.

மாளவ்யாவுக்கு மறுப்பு:—வித்யாதானத்தில் சிறந்த மாளவ்யா மன்னவர்களால் புகழப்படுபவர்! சிஷ்ட ஸம்ப்ரதாயத்தை மீறியதால் அவருக்கும் கருப்புக்கொடி முதலிய வைபவங்கள் நடந்தனவாம். தர்மத்ரோஹி எவராயினும் வெறுக்கப்படுவர் என்ற உணர்ச்சியை உண்டுபண்ணினால் அதர்மம்குறையும்!!

## குடந்தை ஸ்ரீ சாரங்கபாணி உத்ஸவம்.

### வேதகோஷ்டி ஸம்பாவனை.

கும்பகோணம் ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமி சைத்ரோத்ஸவம் இவ்வருஷம் கூடியவரை நன்றாக நடந்தது. மானேஜிங் டிரஸ்டி ஸ்ரீமான் ஹரிராவ் M. A, B. L, அவர்கள் நேரில் காரியங்களைக்கவனித்து நடத்திவந்தார்.

இந்த உத்ஸவத்திற்கு மிகுந்த சோபையை அளித்துவரும் வேத—பிரபந்த கோஷ்டிகளும் இவ்வருஷம் மிகச் சிறப்பாக நடந்தன. வழக்கம்போல் அய்யங்கார் தெரு, பாட்டாசார் தெருவில் ததீயாராதனங்களும் செவ்வனே நடைபெற்றன.

9-வது உத்ஸவம் இரவு அய்யங்கார் தெரு வேதபாராயண கோஷ்டி ஸம்பாவனையை உத்தேசித்து, வைதிக லௌகிக பிரமுகர்களடங்கிய பெரிய ஸபையொன்று நடந்தது. வாஜபேயம் ஸ்ரீ. ஸ்ரீநிவாஸதாதாசாரியாரின் பிரேரணையின்மேல் மஹாமஹோபாத்யாய, பண்டிதராஜ ஸ்ரீ ஆர். வி. கிருஷ்ணமாசாரிய ஸ்வாமி அக்ராஸனம் வகித்து, வேத, வேத பாராயணச் சிறப்பைப்பற்றிப் பேசினார். ஸ்ரீமான்களான கனபாடி அனந்தாசாரியார், அண்ணாத்துரை கனபாடிகள் முதலியவர்கள் வேத மஹிமையைப்பற்றிப் பேசியபின் 56ஸ்வாமிகளுக்கு ஸம்பாவனைகள் செய்யப்பட்டு ஸபை பூர்த்தியாகியது.

ஸ்ரீசாரங்கபாணி தேவாலயத்தின், வேத, பிரபந்தகோஷ்டி மிராசுதார்களான பாட்டாசாரியார்களுடைய தெருவிலும் அன்று மாலை 7மணிக்கு கோஷ்டி ஸம்பாவனை நடைபெற்றது. அங்கும் மஹாமஹோபாத்யாய ஸ்ரீகிருஷ்ணமாசார்ய ஸ்வாமிகள் தலைமை வகித்தார். ஸ்ரீமான்களான, என். ராஜகோபாலாசாரியார் B .A .B. L. சிரோமணி வ. ந. ஸ்ரீராமதேசிகாச்சாரியார், சி. ர. ஸ்ரீநிவாஸ பாட்டாசார்யார் முதலியவர்கள் பேசியபின் 25அத்யாபகர்களுக்கும்,சுமார் 50 வேதபாராயண காரர்களுக்கும் ஸம்பாவனை செய்யப்பட்டது.

கோவில் மானேஜிங்டிரஸ்டி ஸ்ரீமான் ஹரிராவ் அவர்கள் கடைசியாகப் பேசுகையில், இவ்வருஷ உத்ஸவத்தினால் பாராயணக்காரர்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமத்தைப் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்றும் இனிமேல் இத்தகைய அகாலஉத்ஸவம் நடைபெறாமல் பார்த்துக்கொள்ளுவதாயும் கூறினார். ஸ்ரீமான் சக்கிரபாணி பாட்டாசார்யரால் எல்லோருக்கும் உபசாரவார்த்தைகள் கூறப்பட்டதும் ஸபை பூர்த்தியாகியது.

நமது நிருபர்

## சாமி வெங்கடாசலம்

### ராஜிநாமா?

சென்னை கார்ப்பரேஷனில் காங்கிரஸ் கக்ஷிக் கட்டுப்பாட்டை மீறியகுற்றத்திற்காக ஸ்ரீமான் சாமிவெங்கடாசலம் கார்ப்பரேஷன் மெம்பர் பதவியையும், இந்தியா சட்டஸபை மெம்பர் ஸ்தானத்தையும் ராஜி[illegible]மென்று நம்பப்படுகிறது.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்,
குடிவாடா.
Gudivada.

## அதார்மிக மசோதாக்கள் எதிர்ப்பு.

### குடந்தையில் கூட்டம்.

மாகாண வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தினுடைய ஆக்ஞையை அநுஸரித்து அதார்மிக மசோதாக்களை எதிர்ப்பு தினம் 12-5-38-ல் குடந்தை அய்யங்கார் தெருவில் நடத்தப்பட்டது. ஸபைக்கு ஸ்ரீசாரங்கபாணி உத்ஸவ வேத பாராயணத்தை முன்னிட்டு வந்திருந்த அநேக வைதிக சிரேஷ்டர்களும் பல லௌகிக பிரமுகர்களும் அடங்கிய பெரிய கூட்டமொன்று பந்தலில் நடைபெற்றது.

மஹாமஹோபாத்யாய அபிநவபட்டபாண ஸ்ரீ ஆர். வி. கிருஷ்ணமாசாரியஸ்வாமி தலைமை வஹித்தார். கூட்ட ஆரம்பத்தில் தலைவர் ஸனாதன தர்மத்தின் தத்கால நிலையை விளக்கி ஷை தினம் கொண்டாடப்பட வேண்டிய தற்கான அவச்யத்தையும் நிரூபித்தார். மத்ய சட்ட ஸபையில் நிறைவேற்றப்பட்ட சாரதாச்சட்டத்திருத்தம், பம்பாய் சட்டசபையில் நிறைவேற்றப்பட ஆலயப்பிரவேசத் தீர்மானம் சென்னை சட்டசபையின் ஸெலக்ட் கமிட்டியில் பரிசிலனையிலிருக்கும் தீண்டாமை விலக்கு மசோதா இவைகளைக்கண்டித்துத்தீர்மானங்களை அக்னிஹோத்ரம் ராமாநுஜதாதாசாரியார் பிரேரித்தார். தஞ்சை திருச்சி தொகுதிக்கு இந்தியா சட்டசபை பிரதிநிதியானகே. சந்தானம் M. L. A. அவர்கள் வாக்காளர்களுடைய அபிப்பிராயத்திற்கு விரோதமாக சாரதாச்சட்டத்திருத்த மசோதாவை ஆதரித்து ஓட்டு செய்து ஓட்டர்களுக்குத் துரோகம் செய்ததைக்கண்டித்தும் காங்கிரஸ் கக்ஷி மத விஷயங்களில் கண்டிப்பான நடுநிலைமை வஹிக்க வேண்டுமென்று கோரியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஷை தீர்மானங்களை பிரேரித்து ராமாநுஜ தாதாசாரியார் பேசியதின் ஸாராமாவது:— சாரதாச்சட்டம் ஆரம்பித்து பலவருஷங்களாகி விட்டன, ஸாதமாகவும், பாதகமாகவும் ஆயிரக்கணக்கான கூட்டங்கள் நடைபெற்றுவிட்டன. ஆனாலும் இந்திய ஸம்பிரதாயப்படி விவாஹம் வேறு ஸ்திரீபுருஷ ஒற்றுமை வேறு, என்ற உண்மையை சீர்திருத்தக்காரர்கள் உணர்ந்து பேசவில்லை. பால்ய விவாஹத்தால் சரீரம் கெட்டுவிடுமென்று கூறுவது அர்த்தமற்ற பேச்சு. சாரதாசட்டத் திருத்தத்திற்கு மிஸ் ராத்போன் போன்ற வெளியார் தலையீடே முக்ய காரணம். வெளியாரின் ஆலோசனைக்குத்தலைவணங்கி தேசிய தலைவர்களாக, வேஷம் போடும் கோஷ்டி ஸநாதனமான ஆசாரத்தை கெடுக்கமுற்பட்டது மிகவும் கண்டிக்கத்தக்கது. நமது ப்ரதிநிதியான ஸந்தானம் தஞ்சை திருச்சி ஜில்லாக்களில் சாரதாசட்டத்திருத்தத்திற்கு பெரும்பாலோர் விரோதமான அபிப்பிராயமுள்ளவர்களென்பதை அறிவார். ஆனாலும் அவர் அவ்வபிப்ராயத்தை மதிக்காது ஓட்டர்களை அலக்ஷியம் செய்து விட்டார். இது ஜன நாயக தத்வத்திற்கு முற்றிலும் மாறானதே. ஸ்ரீமான் அண்ணாத்துரைகனபாடி ஸ்ரீமான் டி. சாரங்கபாணி அய்யங்கார் இவர்கள் தீர்மானங்களை ஆதரித்தனர். தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. அக்ராஸனாதிபதியின் முடிவுரையுடன் கூட்டம் முடிவடைந்தது.

தீர்மானங்களை வைஸ்ராய் [illegible] அதிகாரிகளுக்கு அனுப்ப அக்ராஸனாதிபதி வேண்டிக்கொள்ளப்பட்டார்.

நமது நிருபர்.

## மதராஸ்.

### ஆர்ய ஸமாஜிகளுக்கு போலீஸ் எச்சரிக்கை.

சென்னையில் மிக தீவிரமாக ஸநாதனதர்ம பிரசாரம் செய்துவரும் காலணாப் பேப்பரான தார்மீக ஹிந்து வெளியீடொன்றில், ஆர்ய சமாஜிகள் விஷயமாய் ஓர் வியாசம் வெளி வந்திருந்ததாயும் அதில் சமாஜத்தார் போக்கு கண்டனம் செய்யப்பட்டிருப்பதாக ப்ரஸ்தாபித்துக்கொண்டு சில ஆரிய சமாஜிகள் சைனாபஜார் மார்க்கமாய்ச் சென்றுகொண்டிருந்த தார்மிக ஹிந்து ஆசிரியர் ஸ்ரீமான் து. க. ஜகன்னாதாசாரியாரிடம் விவாதத்துக்கு வந்து தகாராறு பண்ண யத்தனித்ததாயும் அது சமயம் அங்கு வந்துகொண்டிருந்த (ப்லிம் டைரக்டர்) ஒருவர் மத்யஸ்தம் செய்யச்செல்லவே அவரிடமும் ஆர்ய சமாஜிகள் தாறுமாருய்ப் பேசியதாயும் அதன்மேல் கலகமுண்டாய் தெருவில் பெருங்கூட்டம் கூடிவிட்டதெனவும் அதன்மேல் தார்மீக ஹிந்து ஆசிரியர், டைரக்டர் வகையறுவால் போலீஸில் சமாஜிகள் நடத்தையைப்பற்றி புகார்கூறி (கம்ப்ளேண்ட்) எழுதி வைக்கப்பட்டதாயும் போலீஸாரால் ஆர்ய சமாஜிகள் எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறார்களெனவும் தெரிகிறது. ந. நி.

## ஸ்ரீ பெரும்பூதூரில் டாக்டர் ராஜன்.

### ஸம்ஸ்கிருத காலேஜ் வர்ஷ விழா.

ஸ்ரீ பெரும்பூதூர் உடையவர் உத்ஸவம் விமர்சையாய் நடைபெற்று முடிவெய்தியது இம் மகோத்ஸவ மத்தியில் அவ்வூர் ஸம்ஸ்க்ருத காலேஜ் வருடாந்திரக் கூட்டம் மந்திரி கனம் டாக்டர் ராஜன் தலைமையில் நடைபெற்றது. ஸ்ரீமான்கள் ரிடையர்ட் ஹைக்கோர்ட் ஜட்ஜ் திவான் பகதூர் வி. பாஷ்யமையங்கார், ராஜாங்கசபை உபதலைவர் அட்வொகேட். வெங்கடசாமி நாயுடு, திருவல்லிக்கேணி தேவஸ்தான டிரஸ்டியான வக்கீல், ஸி. நரஸிம்மாசாரியார் ஸ்ரீ பெரும்பூதூர் டிரஸ்டி, ராவ்பகதூர் ரங்கநாதஞ் செட்டியார் முதலியோரும் மற்றும் முதலியோரும் மற்றும் பல பிரமுகர்களும் விஜயம் செய்திருந்தனர். மந்திரி கோவிலுக்குச் சென்று மரியாதைகளைப் பெற்றுக்கொண்டு கலாசாலை வந்துசேர்ந்தார் ப்ரதிவாதி பயங்கரம் உ. வே. அண்ணங்கராசாரியாரால் ஓர் உபந்யாஸம் செய்யப்பபட்டது. முடிவில் மந்திரி ராஜன் தேவஸ்தான நிர்வாஹ அதிகாரி பீடத்தில் தானிருப்பதையும் மறந்து யோசனைகள் சொல்லி குறைகளிருந்தால் நிர்வாக சீர்திருத்தம் செய்யவேண்டிய வழியைவிட்டு சாதாரண காங்கிரஸ் நாலணா ஆசாமிபோல் கோயிலையும் மதத்தையும் புளிசெய்து நையாண்டிபண்ணி பேசியது மிகவும் வேடிக்கையாயிருந்தது. இதை யறிந்தே காலேஜ் ப்ரின்ஸ்பால் வைஸ் ப்ரின்ஸ்பால் கூட்டத்துக்கு விஜயமாகாததும் குறிப்பிடத் தக்கதாம். ந. நி.

### ஓர் முக்யமான நாடகம்.

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த ஸ்ரீ ஸங்கல்ப்ப சூர்யோதயம் என்ற நாடகத்தை சென்னை புரசவாக்கத்தில் கூடிய சீக்கிரமாக ஓர் தினம் நடித்துக் காட்டுவார்களெனவும் நடிகர்களாக பல பிரபல வக்கீல்களும் சேர்ந்திருப்பதால் நாடகம் மிகரமணீயமாயிருக்குமெனவும் தெரிவதுடன் ஸ்ரீதேசிக ஸூக்தி ஸம்ரக்ஷணீ பத்திராதிபர் உ. வே. பரவஸ்து ஸ்ரீநிவாஸாசாரியார், ஸ்ரீ தேசிக பக்தசபா செகரெட்ரி ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ ராகவாசாரியார் முதலியோர்களால் நாடகம் நடத்தவேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாயும் தெரிகிறது.

ந. வி. நி.

## தேவஸ்தான போர்டு, கவர்மெண்டு விநோத ஒப்பந்தம்.

சென்னை ரிலிஜியஸ் எண்டோமெண்டு ஏற்பட்டு பல வருடங்களாகியும் கோயில்கள் விஷயமாய் போர்டுசெய்து வரும்வேலைகள் நியாயமான முறையில் திருப்திகாமாயில்லையென பெரும்புகார் பரவியிருப்பது ப்ரத்யக்ஷமாகும். போர்டையே எடுத்துவிடவேண்டுமென ஓர் அபிப்ராயமும் சட்டத்தைத் திருத்தியமைத்து சரிவர நடந்துவருமாறு செய்ய வேண்டுமென ஓர் அபிப்ராயமும் பத்திரிகைகளிலும் பிரஸ்தாபிக்கப்பட்டு வருகையில் போர்டுக்கும் கவர்மெண்டுக்கும் ஓர் ஒப்பந்தம், நடைபெற்றிருப்பதாயும் அதில் சர்க்காரிடம் வாங்கியுள்ள கடனுக்காக ஆறுமாதத்துக்கு ஓர் தடவை 11167-ரூ வீதம் 40 தவணையாக 20-வருடத்தில், கொடுத்து தீர்த்துவிட வேண்டுமெனவும் எந்தத் தவணையில் கெடுத் தவறினாலும் தற்போதுள்ள நாலேநால் வட்டிரத்தாய் 10 வட்டி விகிதம் கொடுத்துவர வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டிருப்பதாயும் தெரிகிறது. கடனைத் தீர்க்க 20 ஆண்டு தவணை கொடுத்திருப்பதால் போர்டை எடுத்துவிட யோசனையில்லையென்பது தெளிவாகிறதால் சீர்திருத்தம்செய்து நிர்வாகம் ஒழுங்காய் நடைபெறச் செய்வார்களா என ப்ரஸ்தாபமாயிருப்பதுடன் பொது ஜனங்கள் குறைந்த வட்டியே வாங்கவேண்டுமெனக் கட்டுப்பாடு செய்யும் காங்கிரஸ் கவர்மெண்டு தாங்கள் ஒப்பந்தமூலம் போர்டிடமிருந்து தவறிய தவணையிலிருந்து தண்ட வட்டி வாங்க முன்வருவது மிகவும் விநோதமாயிருக்கிறது.

(நமது விசேஷ நிருபர்)

உயர்ந்த புஸ்தகம்!

உயர்ந்த புஸ்தகம் !!

ஸ்ரீநகர விமர்சனம்.

ஆர்யாத்விசதி or ஸ்ரீ லலிதாஸ்தவ ரத்னம்.

[பிர்மஸ்ரீ அருட்கவி ந. சுப்பிரமண்ய அய்யர் அவர்கள் எழுதிய தமிழுரையுடன் கூடியது.]

விலை 0—12—0. தபாற்செலவு வேறு.

கிடைக்குமிடம்:—

ஸ்ரீஜனார்த்தன அச்சுக்கூடம், லிமிடெட் டவுன்ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

ஸ்ரீ மஹாபாரதச் சுருக்கம்.

(ஆதிபர்வம்.)

ஸ்ரீமான் சேங்காலிபுரம் பஞ்சாபகேசய்யாவர்களால் மூலத்திலுள்ளபடியே சுருக்கமாக எளியநடையில் எழுதப்பட்டது. பாரதக் கதைகளை இலகுவில் அறிய இன்றியமையாததென்று மேதாவிகளால் புகழப்பெற்றது.

விலை அணா 0 8 0

கிடைக்குமிடம்:- ஸ்ரீ ஜனார்த்ன பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட், டவுன்ஹைஸ்கூல்ரோடு, கும்பகோணம்.



## ஸ்ரீ சங்கர ஜயந்தீ மஹோத்ஸவம்.

### புது மாம்பலம்.

சில ஆண்டுகளாக ஸத்வித்யா ப்ரகாசினீ சபா அத்யக்ஷர் ப்ரம்மஸ்ரீ, கடலங்குடி நடேச சாஸ்திரிகள் அவர்களின் ப்ரேரணையின் பேரில் மேற்படி சபையோரால் நடத்தப்பட்டுவரும் ஸ்ரீ சங்கர ஜயந்தீ மஹோத்ஸவமானது இவ்வாண்டிலும் 4-5-38 முதல் 8-5-38 முடிய ஐந்து தினங்கள் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சென்ற ஆண்டில் நடந்த உத்ஸவத்தின் முடிவில் தீர்மானித்தபடி இந்நகரவாசி ப்ராம்மண ஆஸ்திக மஹா ஜனங்கள் பலர் சேர்ந்து காலையில் ப்ரதி தினமும் வேத அத்தியயன கிளாஸ் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு பெரியோர்களும் சிறுவர்களுமாக சுமார் 50 பேர்கள் வேத அத்தியயனம் செய்து வருகின்றனர்கள். அவர்களுக்கு அன்றுமுதல் இன்றுவரை ஸ்ரீ ருத்ரம், சமகம், புருஷஸூக்தம், ஸ்ரீ ஸூக்தம், துர்கா ஸூக்தம், தைத்திரிய உபநிஷத் அருணம் முதலியன முறைப்படி அத்தியயனம் செய்து பூர்த்தியாகி இருப்பதுடன், மேலும் அவச்யமான வேதபாகங்களும் அத்தியயனம் செய்விக்கப்பட்டும் வருகிறது. இதற்கென வேத அத்தியயன சபை என்று ஒரு சபை நிருவப்பட்டிருக்கிறது. ஷை ஸத்காரியத்தைப் பாராட்டி ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கர பகவத் பாதாசார்யார் அவர்களால் ஸ்ரீ முகமும் அனுக்ரஹிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாண்டில் ஜயந்தீ மஹோத்ஸவ காலத்தில் ப்ரதி தினமும் காலையில் நடந்த ஆசார்ய பூஜா காலத்தில் வேத அத்தியயனம் செய்துவரும் மாணவர்கள் 50 பேர்களும் ஸ்நாந ஸந்தியாவந்தநாதி நித்ய கர்மாக்களை முடித்துக்கொண்டு பக்தியுடன் வேத அத்தியயனம் செய்து வந்ததானது கண்கொள்ளாச்சேவையாகவும். கலியை இந்நகரைவிட்டு விரட்டக்கூடியதாகவும் இருந்தது என்பதில் யாதுமையமில்லை. ஷை உத்ஸவபூர்த்தியான 5-வது தினத்தில் (8-5-38) ப்ரம்மஸ்ரீ, கடலங்குடி நடேச சாஸ்திரிகளின் முயற்சியால் வழக்கம்போல் அத்வைத சபையானது நடத்தப்பட்டது. அப்பொழுது ப்ரம்மஸ்ரீ, சாஸ்திரிகளவர்களும் மைலாப்பூர் ஸம்ஸ்கிருத காலேஜ் மீமாம்ஸா ப்ரொபஸர் ப்ரம்மஸ்ரீ, பாலசுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்களும் ஜிக்ஞாஸாதிகரணத்தில் ஸம்ஸ்கிருத பாஷையில் புராதனமுறைப்படி வாக்கியார்த்தம் சொல்லினர். அச்சமயம் சபைக்கு விஜயம் செய்திருந்த ப்ரம்மஸ்ரீ, கல்யாண சுந்தரசாஸ்திரிகள், ப்ரம்மஸ்ரீ, குருஸாமி சாஸ்திரிகள், ப்ரம்மஸ்ரீ, ராஜகோபால சாஸ்திரிகள், ப்ரம்மஸ்ரீ, நாராயண அய்யர் அவர்கள் இந்நால்வரும், ஜன்மாத்யதிகரணம், சாஸ்திரயோநித்வாதிகரணம், ஸமன்வயாதிகரணம் இவை விஷயமாக வாக்கியார்த்தம் சொல்லினர். முடிவில் ப்ரம்மஸ்ரீ, கடலங்குடி சாஸ்திரிகள் அவர்கள் வடமொழியில் நடந்த விஷயங்கள் யாவையும், அச்சமயம் அங்கு விஜயம் செய்திருந்த யாவர்க்கும் விளங்குமாறு தெள்ளிய நடையில் தமிழில் விளக்கினர். இத்துடன் சபை முடிந்து, யாவரும் மாலை ஸந்தியாவந்தனாதிகளை முடித்துக்கொண்டு, பகவத்பாதாசார்யாள் அவர்களின் படத்தையும், ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதி ஸ்வாமிகள் அவர்களின் படத்தையும் அழகிய விமானம் ஒன்றில் வைத்து, ஏராளமான புஷ்பங்களாலும் அலங்கரித்து, மேளவாத்தியத்துடனும், முற்கூறிய அத்தியயன சபா மாணாக்கர்களின் வேத பாராயணத்துடனும், இந்நகர்வாஸிகளும்; யஜுர்வேத ஸாமவேதங்களின் கரைகண்டவர்களுமான வேதவித்துக்களின் வேத பாராயணத்துடனும், பரம பாகவதோத்தமர்களும், சென்னை பிருந்தியத்திற்கு பஜனமார்க்கத்தின் ஆசார்யபூதர்களுமான ப்ரம்மஸ்ரீ, ராமச்சந்திரஹரி அவர்களின் தலைமையில் ஏராளமான பக்தர்களுடன் நடந்த பஜனத்துடனும், ஊர்வலமானது ஆரம்பிக்கப்பட்டு வழக்கம்போல் சில வீதிகளில் ஊர்வலமும் நடத்தப்பட்டு, இரவு 10-மணிக்கு உத்ஸவம் பூர்த்தியடைந்தது. இந்நகரவாஸியும், ஆஸ்திக சிகாமணியும் ரிடையர்ட் இன்ஜினீயருமான மகா-ா-ா-ஸ்ரீ, K. R. கிருஷ்ணஸாமி அய்யர் அவர்களும், மகா-ா-ா-ஸ்ரீ, மெடிகல் காலேஜ் ப்ரொபஸர் வீரராகவ அய்யர் அவர்களும், ஆடிட்டர் சுப்பிரமணியம் அவர்களும், ஆத்தகுடி முத்துகிருஷ்ணய்யர் அவர்களும் கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்களும், ஆகிய மற்றும் பல கனதனவான்களும், ஷை அத்தியயன சபையில் சேர்ந்து வேத அத்தியயனம் செய்து வருவதுடன், இம் மஹோத்ஸவத்தில் கலந்துகொண்டு, ஜயந்தியை மிக்க ஊக்கத்துடன் நடத்தி வைத்ததைப்போற்றுதார் இல்லை. இம் முறைப்படி ப்ரதி வருஷத்திலும் இந்த ஜயந்தியை நடத்துவதென ஸத்வித்யா ப்ரகாசினீ ஸபையோரால் முடிவில் தீர்மானமும் செய்யப்பட்டது.

ஸத்வித்யா ப்ரகாசினீ ஸபாத்யக்ஷர்,
கடலங்குடி நடேச சாஸ்திரிகள்.

## ஸ்ரீ சங்கர ஜெயந்தி.

கும்பகோணம் ராஜா தர்ம வேத பாடசாலையில் மேமீ 4வ (புதன்கிழமை) காலை 8-மணிக்கு ஸ்ரீ சங்கர ஜெயந்தியை முன்னிட்டுகாலை அபிஷேகமும், மாலை 5 மணிக்கு ப்ரம்மஸ்ரீ சாஸ்திர திலக, திருவையார் விஸ்வநாத சாஸ்திரிகளவர்களால், ஆதி சங்கருடைய அவதாரம், என்பதைப்பற்றி உபன்யாஸம் நடத்தப்பட்டு தாம்பூலம், பிரஸாதங்கள் வழங்கி நன்கு நடந்தேறியது.

ஓர் நிருபர்.

## காட்டுமன்னார் கோவில்.

### ஸத்காலக்ஷேபம்.

2-5-38 திருக்கோடிகாவல் பிரம்மஸ்ரீ, ஸீதாராம சாஸ்திரிகளால் பிராம்மண ஸபையின் ஆதரவில் ஸ்ரீ விபீஷண சரணாகதி விசேஷ தத்வார்த்தங்களுடன் உபந்யாஸம் செய்யப்பட்டது. மகா ஜனங்கள் சிரவணானந்தம் அடைந்து உசிதமான ஸன்மானம் செய்தார்கள்.

### ஸ்ரீ சங்கர ஜயந்தி.

4-5-38 இப் புண்ய தினத்தில் ஸ்ரீ ஆசார்ய ஜயந்தியை இவ்வூரில் பலர் கொண்டாடினர் ஆங்காங்கு பானக பூஜை சரித்திரப்பிரவசனங்கள் முதலியவை நடந்தேறின.

### ஆலயப்பிரவேசாதி கண்டனம்

28-4-38 ஸந்நதி வீதி ரங்கவிலாஸத்தில் ஓர் பொதுக்கூட்டங்கூடி ஆலயப் பிரவேசாதிகளைக்கண்டித்து, ஸ்ரீஆசார்ய மடத்திலிருந்து வந்திருந்த மகஜர் பாரங்களில் கையெழுத்துச் செய்து பிரதம மந்திரி முதலான பன்னிரு அதிகாரஸ்தானத்தவர்களுக்கு அனுப்பப்பட்டது. "இம்மாதிரி மகஜர்களால் என்ன பயன்" என்று அறியாமையால் கேட்பவர்கட்குஸபை காரியதரிசியால் தக்க பதிலளிக்கப்பட்டதும் அவர்கள் அங்கீகரித்து நம்பிக்கையுடன் கையெழுத்திட்டனர்.

### ஓர் யோசனை.

ஜனங்களுக்கு தர்ம ருசிகுறைந்து வருவது கேள்வியின்மையால் என்று தெரிவதால் "இக்கோடைகாலத்தில் தர்மப் பிரசாரம் செய்தால் பிரவிருத்தி யேற்படும்" என்று பிரதிப்பிரயோஜனம் கருதாமல் சேஷதர்மத்தை உபந்யஸிக்க பிராம்மண ஸபை காரியதரிசி இசைந்துள்ளார். ஈசன் அருள்கூட.

### ஸ்ரீ சிருங்கேரி ஸ்வாமிகளின் விஜயம்.

ஆவணி சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள் 8-5-38 காலை இவ்வூருக்கு விஜயம் செய்தார்கள். அசேஷ கிராம மஹா ஜனங்கள் பூர்ண கும்பம் தாங்கி மேளவாத்யம் சத்ர சாமரங்களுடன் ஊருக்கு வெளியிலேயே வரவேற்று ஊர்வலமாக வந்து ஸ்வாமி தர்சனம்செய்துவித்து ஜாகையில் கொண்டுவிட்டார்கள். பிராம்மணசபைகாரியதரிசியால் "ஸ்வாகதப் பத்திரிகை" வாசித்து ஸமர்ப்பிக்கப்பட்டது. 9-5-38 ஸபையின் சார்பாக உள்ளூர் மஹா ஜனங்கள் பிக்ஷை நடந்தது இரவு மஹா ஸ்வாமிகளால் "மனுஷ்ய ஜன்மம்" என்னும் விஷயம்பற்றி இரண்டு மணிநேரம் அத்யத்புதமாய் உபந்யாசம் செய்யப்பட்டது. இங்கிருந்து இரண்டொரு நாளில் சிதம்பரம் செல்வார்கள். ந. நி.

## திருவல்லிக்கேணியில் சாரதாச்சட்டக் கண்டனம்.

### பிரபல ஸநாதநிகளின் வீரகர்ஜனை.

அகில இந்திய பிராஹ்மண மஹா ஸபை, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம், சென்னை வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கம் இவற்றின் ஆதரவில் சாரதாச்சட்டம், அதன் திருத்த சட்டம் இவற்றைக் கண்டிப்பதற்காக 11-5-38வ புதன்கிழமை மாலை 6-மணிக்கு திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபில மடத்தில் வைதிகர்களின் கூட்டம் ஆரம்பமாகியது.

கடவுள் வாழ்த்துக்குப் பின்னர் காரியதரிசி பேசுகையில் கூட்டத்தின் நோக்கத்தை விளக்கி பல தடவைகளில் இங்ஙனம் முன்செய்ததை ஞாபகப்படுத்தியும், நாம் வாளாயிருந்தால் சம்மதி தந்ததாக ஆகுமாதலின் நமது அபிப்ராயத்தைத் தெரிவிக்கவேண்டியது அவசியமென்றும்கூறி ஸ்ரீ. அட்வொகேட் ஆர். கேசவய்யங்காரவர்களை யம். ஏ., பி. எல்., அக்ராஸநம் வஹிக்குமாறு வேண்டிக்கொண்டார்.

தலைவர் முன்னுரையாகக் கூறியதின் சாராம்ஸமாவது:—

இன்று விஷயங்களைக் காரியதரிசி கூறிவிட்டார். பிறருக்கும் நன்றாய்த் தெரியும். ஏற்கனவே செய்திருந்த சாரதாச்சட்டத்தை மிகக் கடுமையாக சமீபத்தில் செய்திருக்கிறார்கள். நாமெல்லாம் தர்ம பீருக்கள், அவர்களுக்கும் பீதிதான். தருமம் வந்துவிடுமோவென்பது அவர்களது பீதி. சாரதாச்சட்டம் அடியோடு ஒழிய நாம் பாடுபடவேண்டும். எல்லாரும் சேர்ந்து ஒரு காரியத்தைச் செய்யவேண்டும். நமது சரித்திரத்தில் இங்ஙனம் ஒன்றுபடாதிருந்ததே நமது கஷ்டங்களுக்கெல்லாம் மூலகாரணம். தர்ம காரியங்களில் வோட் எடுப்பதிற் பயனில்லை. அவை பிரத்யக்ஷ ஸாத்யமில்லை. சப்தமே நமக்கு ப்ரமாணம். இது விஷயத்தில் நீங்கள் என்ன தீர்மானஞ் செய்கிறீர்களோ அதனைத் தெரிவியுங்கள். அதற்குள் சமீபத்தில் காலஞ்சென்ற புரொபசர் கே. சுந்தரராமய்யரவர்கள் மரணாநுதாபத்தை நாம் தெரிவித்துக்கொள்வோம். பரம ஆப்தராகயிருந்து நன்கு உழைத்தவர். அநேகருக்கு அவரது பழக்கமிருந்திருக்கும், வெகு நன்றாக 1915-ம் வருஷமுதல் அவரைத் தெரியும். 1916-ல் ஒரு லீவில் அங்குசென்று அவருடன் கூடவே யிருந்தேன். தார்மிகர், ஸத்யசந்தர், தீவ்ரமான கொள்கையுடையவர்.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## அநுதாபத் தீர்மானம்.

(7-ம் பக்கம் தொடர்ச்சி)

இந்தக் கூட்டமானது புரொபஸர் சுந்தாராமய்யாவர்கள் மாணத்தைக குறித்து மிகவும் துக்கப்பட்டு அநுந்தாபத்தைக் காட்டுவதுடன் அதனை அவர் குமாரர் திவான்பஹதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரியாருக்குத் தெரிவித்துக் கொள்கிறது. இத் தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது.

அட்வொகேட் ஸ்ரீ.ஸி. நாஸிம்மாசாரியாவர்கள் பேசுகையில் சாரதா ஆக்டு யாவருக்கும் தெரியும் என்றும், பிரவுடையானதின் பேரில் விவாஹம் செய்ய அநுமதிக்கிறது என்றும், தர்ம சாஸ்திர விருத்தமென்றும், புதுச்சேரி முதலிய இடங்களில் கலியாணங்கள் செய்வதையும் தடுத்து சிக்ஷைகளைக் கடுமையாக்கி நிருத்தச்சட்டம் வந்திருக்கிறதென்றும் கூறி, பாலிய விவாஹத்தால் பலவித நன்மைகள் உண்டு என்றும், பரம்பரையாக இங்கு அநுஷ்டானத்திலிருந்து வருவதென்றும், இது ராஜகிய விஷயமல்லவென்றும், பல மதஸ்தர்கள் கூடியுள்ள சட்டசபையார் இதனைச் சட்டமாக்கியது பொருத்தமல்லவென்றும், மேற்கொண்டு நடக்கவேண்டியதற்குத் திட்டம் வகுத்து அதனை நிறைவேற்றவேண்டுமென்றும், தீவிரப் பிரசாரம் செய்வதில் சற்றும் பின்னடையாது முன்ஜாக்ரதையுடன் உழைப்பின் எல்லா நன்மைகளும் உண்டாகும் என்றும் மிக அழுத்தமாக எடுத்தியம்பினர்.

பிரம்மஸ்ரீ, கௌஸிகிய நாதாசாரியாவர்கள் மதுரவாணி என்ற சம்ஸ்கிருத பத்திரிகையில் ஒருவன் பால்ய விவாஹத்தையும், பிரவிடா விவாஹத்தையும் தான் முறையே செய்துகொண்டு அவனது அநுபவங்களை அப்படியே தெரிவித்துள்ளதைப் படித்து விளக்கி, உலகத்திலனைவரும் வைதிகசிரத்தை உள்ளவர்களென்பதை கிரஹணாதி சமயங்களில் மஹாஜன சம்மேளனத்தினாலே நன்கு அறியலாமென்றும், சாரதாச்சட்டத்தைத் தொலைக்க வழிதேடவேண்டுமென்றும் இதில் பிராஹ்மணர்கள்போலவே இதரரும் ஒத்தாசைக்கு வருவார்களென்றும் மிக உருக்கமாகக் கூறினர்.

அட்வொகேட் ஸ்ரீ. வி. கே. பார்த்தசாரதி ஐயங்காரவர்கள் பேசியதின் சாராம்ஸமாவது:—

விக்டோரியா மஹாராணியார் முதற்கொண்டு மத சம்பந்தத்தில் நுழைவதில்லை என்று வாக்குக் கொடுத்திருக்கின்றனர். இப்பொழுது கலியாண விஷயத்தில் சட்டம் செய்திருக்கிறார்கள். நாளைப் பூணூல் தரித்துக்கொள்ளக் கூடாது என்று ஒரு சட்டம் செய்து, அதிருப்பதால் கழுத்தில் சுருக்கிட்டுக்கொண்டு தற்கொலை செய்துகொள்ள ஹேதுவாகலாம் என்று காரணமுங்காட்டமுன் வரலாம். கிரிஸ்தவர்கள் மஹம்மதியர்களுக்கு இங்ஙனம் வாமுயற்சி செய்வாருண்டா? தாழ்த்தப்பட்டவர்களை உயர்த்தவேண்டும் என்று கிளர்ச்சி நடந்துவருகிறது. உண்மையில் உயர்ந்தோர் தாழ்த்தப்படுவதே இதன் பலமாகக் காண்கிறோம். கண்டனம் மாத்திரம் போதாது. நிர்ப்பந்தமுண்டானால் அஹிம்சையான சத்யாக்ரஹம் செய்யவும் தயாராகவேண்டும். சங்கங்களைப் பலப்படுத்தவேண்டும்.

ஸ்ரீமான் என். ஸ்ரீநிவாஸாசாரியாரவர்கள் பேசுகையில் வெள்ளைக்காரருக்கு ஆர்ஜவமில்லை என்றும், நம்மவராலேயாதான் நமக்கு இடைஞ்சல்கள் வருகின்றனவென்றும், ஆக்ஷேபணையை நாம் தெரிவிக்கவேண்டியது மிக அவசியமென்றும், பிரசாரம் நன்குசெய்யவேண்டுமென்றும், நன்கு நம் விஷயங்களை வற்புறுத்தவேண்டுமென்றும் விளக்கினர்.

பிரம்மஸ்ரீ, யம். யம். அநந்தாவ் கூறியதின் சாராம்சம் பின்வருமாறு:—

எல்லா சங்கங்களும் ஒன்று சேர்ந்து உழைத்தல்வேண்டும். சங்கம் ப்ரபலமானால் அதன் வார்த்தையை அதிகாரவர்க்கத்தினரும் செவிசாய்ப்பர். எல்லோரும் சேர்ந்து எதிர்க்கவேண்டும். முதலில் நம்மையும் நன்கு சீர்திருத்திக்கொண்டு பிரசாரம் செய்தால் அதிக நன்மை உண்டாகும்.

ஸ்ரீமான்கள் டி. யஸ். ராமஸ்வாமி அய்யரவர்களும், யஸ். லக்ஷ்மீ நரஸிம்மாசாரியாரும் ஆமோதித்துப் பேச பின்வரும் தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது.

"இந்தக் கூட்டம் வைதிக தர்மத்துக்கு முற்றும் விரோதமாயும் அதனை அழிக்கவும் ஏற்பட்டுள்ள பால்ய விவாஹத் தடை சட்டத்தையும் அதின் திருத்தத்தையும் பலமாகக் கண்டிப்பதுடன் அதனுடைய சீக்ரமான ரத்தையும் அழுத்தமாகவேண்டுகிறது. வாக்காளர்களை அவர்களது சட்டசபைப் பிரதிநிதிகள் இதனை உடனே ரத்து செய்யப் பாடுபடவேண்டுமென்று வற்புறுத்தவேண்டுமென்றும் மதசம்பந்தங்களில் நுழைவதில்லை என்ற வாக்குறுதியையும் அவர்களிடம் பெறவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறது.'

தலைவர் முடிவுரையாகக் கூறியதாவது:—

ஸநாதநிகளுக்கு எங்கும் மெஜாரிடியிருப்பதாக இங்கு அநேகர் பேசினார்கள், வஸ்துஸ்திதியை அபலாபம் பண்ணலாகாது. இப்பொழுதுள்ள நிலைவேறுபட்டே இருக்கிறது. கருப்புத்தோல், வெள்ளை மனசு, ராஜ்யவாதிகளிலநேகர் ஹ்ருத்ய சுத்தமுள்ளவர்கள். அவர்களை முற்றும் குறைகூறுவதிலும் பயனில்லை. சமீபத்தில் நடந்த தேர்தலிகளின் பெரும்பான்மை போட்டியின்றியே ஸ்தானங்கள் கிடைத்திருப்பதை நேரில்கண்டும் உலகம் முழுமையும் சநாதனிகள் நிரம்பியுள்ளார்கள் என்று எண்ணுவது நம்மையே நாம் ஏமாற்றிக்கொள்வதாக ஆகாதா? அவர்கள் எங்கிருந்தோ வந்தவர்களல்ல. புத்தர் பிள்ளையே ஜாதி போகாது என்கிறார். குறளாசிரியர் "அந்தணர் நூற்கும்..............மன்னவன்கோல்" "மறப்பினு மோத்துக்கொளலாகும்" என்கிறார். எல்லாம் தர்மத்தைப் பொறுத்தது. வரிவசூல் செய்வதற்குத்தான் கலியில் ராஜாயிருப்பான் என்று ஸ்ரீபாராசரே கூறுகிறார்.

இராமாயணத்தில் எல்லாத தர்மங்களையும் காணலாம். க்ஷத்திரியனான தசரதன் பதினாறுவயது நிரம்பாத ஸ்ரீராமனுக்கு விவாஹம் செய்விக்கவேண்டுமென்று சோகிக்கிறான். 'ப்ரியாஸீதா' என்ற சுலோகக் கருத்தைப் பாருங்கள். மொகலாய ஆட்சியிற் கூட தற்போதுள்ள சங்கடமில்லை. சாஸ்திர நம்பிக்கை குறைந்து வருகிறது. பிரசாரம் நன்கு செய்யவேண்டும். ஸத்யத்தையும் தர்மத்தையும் கடைப்பிடித்து ஒழுகவேண்டும். தர்மமூலம் விவாஹம், அது பிசகினால் எல்லாம் அழிந்துவிடும். பிராசீன முறைப்படியே நாம் விவாஹாதிகளைச் செய்துவரவேண்டும்.

காரியதரிசி வழங்கிய வந்தனோபசாரத்துடன் சபை இரவு 8-மணிக்கு நிறைவெய்தியது.

ப. ரெ. திருமலை ஐயங்கார், காரியதரிசி.


முக்கிய கவனிப்பு.

(3-வருஷத்திற்கு உத்திரவாதமுள்ளது)

அசல் தங்க நகைகளைப்போன்ற "கன்னூஸ் ப்ளேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்கவும்.

தயாரிப்பவர்:— என். கண்ணுசாமி பத்தர் பெரியதெரு, கும்பகோணம்.


## பிராமணச் சிறுவர்களின்

### கெட்ட பழக்க வழக்கங்கள்.

"வித்யானந்தம்"

இப்போது நாம் காலஸ்திதியை அநுசரித்து ஆங்கிலம் கற்றுக்கொண்டிருக்கிறோம். இதனால் நமது பழக்க வழக்கங்களும் அடியோடு மாறி விதம் விதமான நாகரீகங்களையும் அடைந்துவருகிறோம். இவ்விதம் ஆதியில் மகம்மதியர்கள் நமது தேசத்தை ஆண்டுவந்தபோது நாம் அவர்களது பாஷையைக் கற்றுவந்தோம் என்பதை மகாகவியான ஸ்ரீ வேங்கடாத்வரி என்பவர் நன்கு விளக்கியிருக்கிறார். ஆகவே யார் அரசர்களாய் இருக்கிறார்களோ அவர்களது பாஷை உலகில் விருத்தியாவது சகஜமே. இப்போது ஆங்கிலம் விருத்தியாயிருப்பது ஒருபுறமிருக்க அதனால் ஏற்படும் நவநாகரீகங்களால் நமது ஜனங்கள் கெட்டுப்போவதுதான் மிகவும் வருந்தத்தக்கது. ஆதியில் கிருஸ்துவப் பாதிரிகள் ஆதிக்யத்தால் நமது சிறுவர்கள் வெகுவாய் கிருஸ்துவ மதத்தில் பிரவேசிக்கும்போது தமது 'பிரும்மவித்யா' முதலிய பத்ரிகையாலும் துண்டுப்பிரசாரத்தாலும் வெளிப்படையான உபந்யாஸங்களாலும் மிகவும் உபகரித்து நமது மதத்தை நிலைநாட்டின மகாவித்வான் பிரும்மஸ்ரீ ஸ்ரீமத் ஸ்ரீநிவாஸ தீக்ஷிதர் அவர்கள் வெகு கிரந்தங்கள் இயற்றியதோடு 'கலிபரிதேவன சதகம்' என்றொரு சிறு கிரந்தத்தையும் இயற்றியிருக்கிறார்கள். அதில் இக்கலிகாலத்தில் அப்போதிருந்த அக்ரமங்களை வர்ணித்திருக்கிறார் என்று சொல்லமுடியாமல் அவைகளைக் குறித்து அழுதிருக்கிறார் என்றே சொல்லவேண்டும். அப்போதிருந்த ஸ்திதிகளைப் பார்த்த அந்த மகானுக்கே மனம் தாளவில்லையென்றால் இப்போதிருக்கும் நிலைமைகளை, அவர் எவ்விதம் பொறுத்திருப்பார். அந்தக் கிரந்தத்தால் அவர் வெகு அக்ரமங்களைக் கூறியிருந்தாலும் பிராம்மணப் பிள்ளைகளைப்பற்றிக்கூறும்போது, 'க்ருத்தாத்ரிகோஜ் ஜ்வலசிகா: ஸ்புடபுச்சகச்ச பாஸ்வத் கடீதட நிவேஷ்டித யஜ்ஞஸூத்ரா: I கேலந்தி ஹந்த சாஸமு: விகதவ்யவஸ்தம்யே சிரிணும் ச ஜடிநாம் மகிநாம் தநூஜா: II என்று துக்கித்திருக்கிறார். அதாவது நல்ல உபவாஸம் ஆகார நியமம் முதலிய வெகு உத்தம அநுஷ்டானங்களையுடையவும் ஜடாதாரிகளாய் இருந்து வெகு தர்மத்தை சாதித்தவர்களாயும் அனந்தமான யாகாதிகள் செய்து அதனால் மிகவும் பரிசுத்தர்களாயும் இருக்கும் மகான்களுடைய பிள்ளைகளெல்லாம் பிடரிவரை தலைமயிரை வெட்டிக்கொண்டு வால்விட்டு கச்சம் கட்டிக்கொண்டு அதன்மீது பூணல் எப்போதும் விழுந்திருக்க அதைச் சிறிதும் லக்ஷ்யம் செய்யாதவர்களாய் நீசர்களோடு சேர்ந்து அவர்களது தூராசாரங்களைக் கைக்கொண்டு அலைந்து திரிகிறார்கள் என்று கருத்து. இக்காலத்து நடவடிக்கைகளைப் பார்க்கும்போது இது எவ்வளவோ ஸ்வல்பமானதே. இதைப் பார்த்தும் அவருக்கு மனம் சகியாது இவ்விதம் வர்ணித்திருக்கிறார். இது அப்போதிருந்த காலஸ்திதி. இப்பவோ அதைவிட பதினாயிரம்பங்கு கெட்டுவிட்டதென்பது நமக்கு நேரில் புலப்படக்கூடியதே.

அதிலும் முக்யமாய் நமது சிறுவர்கள் பலவிதமாய்க் கெட்டுப்போயிருந்தாலும் பீடிபிடிப்பதை நன்கு கைக்கொண்டுவிட்டார்கள். இதுவும் பாடசாலைகளில் படிக்கும்போது ஏற்படும் கெட்ட சகவாஸத்தாலேயே உண்டாயிற்றென்பதை எவரும் மறுக்க முடியாததே.

(தொடர்ச்சி 9-ம் பக்கம்)



(8ம் பக்கம் தொடர்ச்சி)

காப்பி குடிப்பதுமாதிரி இது சீமை முதலிய சீதள தேசங்களுக்கு அனுகூலமானாலும் மிகவும் உஷ்ணமான இத் தேசத்திற்கே மிகவும் வேண்டப்படாததேயாம். இதை உணராமல் பிராம்மணச் சிறுவர்கள் தங்கள் ஆகாரம் முதலியவைகளுக்குக்கூட நேர் விரோதமான இவ்வழக்கத்தைப் பிடித்துக்கொண்டு அச்சமில்லாமல் சுற்றிவருவதே அதிகமாய் வருந்தத்தக்கது. இது பால்யம் முதல் ஆரம்பமாகி வயது ஆக ஆக வளர்ந்துகொண்டே போகின்றது. அதனால் வயது சென்றவர்களாலும் இந்த பீடி பிடிக்கும் வழக்கம் விடமுடிகிறதில்லை. இவ்வாறு நல்ல பெரியோர்களின் வம்சங்களிலேதான் இந்த கெட்டவழக்கம் ஆரம்பித்திருக்கிறது. அவர்களின் பிள்ளைகளே முதலில் கெடுகிறார்கள். இதுவும் மேனாட்டு நாகரீகமாய் கருதப்படுகிறது. இவ்விதம் அவ்விடத்திய நாகரீகங்களெல்லாம் நமது ஆர்யதர்மங்களையும் ஆசாரங்களையும் ஒழிப்பவைகளாய் இருக்கின்றன. இவைகளே நமது சிறுவர்களின் மனதில் வெகு லகுவாய்ப் புகுந்து வேரூன்றி விடுகின்றன. பிறகு இவைகள் போவது கட்டையோடுதான். நமது தேசத்திற்குச் சற்றும் பொருத்தமில்லாத இந்த கெட்ட வழக்கங்கள் எல்லாம் வந்து அடைக்கலம்புக சிறுவர்களே பாத்திரம்போலும். அதனால் தான் புதிதாகவந்த எந்த ஸ்தாபனமும் சிறுவர்களை முதலில் கைப்பற்றிக்கொள்ளுகிறது. எதிலும் சிறுவர்களின் சமாஜம் ஒன்று தனியாய் இருக்கிறது. அதில் சிறுவர்களுக்கே உபதேசம் செய்கின்றனர். ஏனெனில் அவர்களின் மனதில்தான் இந்த ஆபாஸங்களெல்லாம் நிலைநாட்டப்படுகின்றன. ஆனால் ஆர்யதர்மம் மாத்திரம்தான் நமது சிறுவர்களுக்கு வேம்பாயிருக்கின்றது. மற்ற இப்போதைய சங்கங்களெல்லாம் நம்மவருக்குப் பெரும்விருந்தே. இதில் அடையாறு சொஸைடியும் முக்யமானதே. இது நமது தர்மங்களை உபதேசிப்பதுபோல 'பிரும்ம ஞான சங்கம்' என்று பெயர்வகித்து நம்மவருக்கு மேனாட்டு விஷயங்களையே நன்றாய்க் குத்திவிடுகிறது.

இதிலும் அநாசாரங்கள் அனந்தம். இவை சிறுவர்களுக்கே ஆரம்பமாகி பிறகு வயது சென்றவர்களுக்கும் இன்றியமையாதவையாகின்றன. இந்த சொஸைடி பாதிரிகளின் கூட்டங்களைவிட வெகு சாமர்த்தியமாய் ஆரம்பிக்கப்பட்டு 'தமனு ப்ரவிச்ய மேதாவீ க்ஷிப்ரம் ஆத்மவசம் நயேத்' என்ற வாக்கியத்தின்படி மேனாட்டு வழக்கங்களையே நம்மவைபோல் நமக்கு ஹிதம்போல் போதிக்கின்றது. இவ்விதம் நமது ஆர்யமதத்திற்கு விரோதமாய் வெகு சொஸைடிகள் ஏற்பட்டு அதை நாசம் செய்வது ஒருபுறமிருக்க எல்லா அநாசாரங்களுக்கும் சிகரம் போன்ற இந்த பீடி பிடிக்கும் வழக்கத்தை நமது சிறுவர்கள் கைக்கொண்டதே மிகவும் துக்ககரமானது. முன்பு நாம் குறிப்பிட்டிருக்கும் பீடிகளில் 'நமஸ்தே பீடி' என்று நன்று வெளிவந்திருப்பதாய்த் தெரியவருகிறது. இவ்விதம் புதியது புதியதாய் பீடிகள் வெளிவருதும் நமது சிறுவர்களை உத்தேசித்துப்போலும். அத்தோடு மற்றவர்கள் கூட்டத்திலோ அல்லது வண்டி முதலிய பொது இடங்களிலோ பீடி பிடித்தால் நமக்கு அசௌகரியமாய் இருக்கிறதென்றால் அவர்கள் பிறருக்கு அசௌகர்யப் படுத்தக்கூடாதென்று உடனே நிறுத்திவிடுகிறார்கள். ஆனால் பிராம்மணப்பிள்ளைகளோ இவ்வாறு செய்வதில்லை. பிடிவாதமாய் அப்படியே பிடிக்கிறார்கள். அதிலும் இவர்களுக்கு பயமில்லை. பெரியோர்களிடம் அச்சமும் இல்லை. ஆதிகாலங்களில் பொடி போடும் வழக்கம் ஏற்பட்டபோது சிறுவர்கள் பிறருக்குத் தெரியாமலே வெகு நாள் உபயோகித்து வந்தனர். பிறகு அவர்களும் பெரியவர்கள் ஆனவுடன் அது பெரியவர்கள் வழக்கமாகி ஸஹஜமாகி விட்டது. ஆனால் அவர்கள் அக் கெட்ட வழக்கத்தைப் பிறருக்கு உபதேசிப்பதில்லை. அவர்களும் தங்களுக்குப் பெரியோர்கள் மத்தியில் இதை இழிவாய் நினைப்பார்கள். இவைகளெல்லாம் பெரியோர்களால் வியசனங்கள் என்று கருதப்படுகின்றன. இந்த வியசனங்கள் பிசாசு போல் மனிதரை பிடித்துக்கொண்டு விடவே மாட்டேன் என்கின்றன. அந்த மாதிரி பீடி பிடிப்பதும் வியசனமானாலும் இது மிகவும் இழிவாயும் நமது ஆசாரங்களை அடியோடு அழிப்பதாய் இருப்பதாலும் நமது பிராம்மணச் சிறுவர்கள் இந்த துர்வழக்கத்துக்கு முதலே ஆளாகக்கூடாது அப்படி ஸகவாஸ தோஷத்தால் ஆளாகி விட்டாலும் அதை அடியோடு விட்டு விட முயலவேண்டும். இது நமக்கு எவ்வளவு தூரம் வெட்கக்கேடு என்பதை உணரவேண்டும். இவ்விதம் உணர்ந்து நமது பிராம்மணச்சிறுவர்கள் இது முதலான சகல துர் நடத்தைகளையும் அடியோடு போக்கி விட்டு மிகவும் உத்தமமான நமது நன்மைக்கு ஹேதுவான ஆர்ய ஆசாரங்களைக்கடைப்பிடித்தால் நமது மதம் மேன் மேலும் விருத்தியாகி சகல நன்மைகளும் உண்டாகுமாதலால் நமது பிராம்மணச்சிறுவர்கள் பீடி பிடிப்பது முதலிய சகல கெட்ட நடத்தைகளையும் அடியோடு ஒழித்து விட்டு சுகம் பெறும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

## ஆர்யர்களின் ஆசார ரஹஸ்யம்.

### (பிராணயாமம்)

பிரும்மஸ்ரீ, T. V. தர்மராஜ கனபாடிகள், வேதபாடசாலை திருக்கோகர்ணம்.

(முன் தொடர்ச்சி)

இனி அந்நாடிகளை மனதால் பாவித்து அவைகளை சுத்திசெய்யவேண்டி, அதே யோக நூலாசிரியர் அவற்றின் நிலையை ஒருவாறு வருமாறு குறித்தார். அவற்றுள் "சுழுமுனை" என்னும் திவ்யநாடி ஒன்றுளது; அது முதுகு எலும்புடன் சேர்ந்து மேலே செல்வது, அதி சூக்குமமாயுள்ளது. நிர்மயமானது. அதற்கு "வைணவி" என ஒரு பெயருண்டு. அதை முக்திமார்க்கமென்பர். கபாலத்தின்மேலும் 12 அங்குலம் சென்று, துவாதசாந்தஸ்தானத்திலுள்ள விந்து, சதாசிவன் திருவடிகளில் முடிவுபெற்றது. புலன்களுக்கு அகப்படாதது. யோகிகளின் உயிர்நிலை சீர வேதாகமங்களிலும் புகழ்பெற்றது. இந்நாடி ஸ்தானம் மேற்றிசையார் எப்பாடுபட்டும் எத்தனைப் பிணமறுத்தும் துணியப்பெறாத சுவாஸ வித்யாஸத்திற்கு மூலகாரணம் (நமது நாசியில் ஒவ்வொரு மூர்த்தத்திற்கு ஒருமுறை சுவாஸம் மாறிமாறி இடதுபுரம் வலது புரங்களில் சஞ்சரித்து வருவதனுபவம்) நாசியில் இக்காலத்து பாமரரும் அனுபவிக்கக்கூடிய சுவாஸ வித்யாஸத்தால் இதன் உண்மையை ஊகிக்கலாம் (அதனாற்றான் பிராணவாயு நாசியில் மாறிவரும் என்பதைச் சரீரத்தில் பிராணன் சஞ்சரிக்கும் வழியைச் சொல்லுமிடம் கூறிடுவாம்.) வேதத்துள் "இருதயத்துள்ள நாடிகள் நூறும், என்றும். அவற்றுள், ஒன்று கபாலத்தைக் கடந்தது. அதன்வழி செல்பவன் அமிர்தனுவான் (முக்தி பெறுவான்) மற்றைவழி செல்பவன் பலவிடம் பிறப்பான்"

சுருதி சொல்லுவதாவது:—

சதம் சைகாச ஹிருதயஸ்ய நாட்ய: | தாஸாம் மூர்த்தானம பிநிஷ்ஸிருதைகா | த்யொர்த்தவமாயன் அம்ருதத்வமேதி விஷ்டங்ங்யா உத்கிரமணேன பவந்தி II

என்பதாதி பல வசனங்களுள், இங்கு கபாலத்தைக் கடந்தது என்றதனால் இந்நாடி கபாலத்தின் மேலும் வியாபித்தது வெளிப்படை. ஒன்றென்றது சுழுமுனையைக் குறித்தது. அந்நாடியின் இடது புறத்துள்ள நாடிகள் நான்கு. அவை "இடை, காந்தாரீ, சங்கினீ, ஹஸ்த்திஜிஹ்வா, என்பன. இவை முறையே இடதுபுறத்து மூக்கு, கண், காது, கால் இவற்றின் அளவு நீண்டன. அங்ஙனம் வலதுபுறத்திலும் நான்கு நாடிகள் உள. அவை பிங்களா, பூஷா, பயஸ்வினீ, யசஸ்வினீ, என்பன. அவை முறையே வலது புறத்து மூக்கு, கண், காது, கால் இவற்றை வியாபித்தன. "சரஸ்வதி" என்னும் நாடி நாவில் பரவியது. இந்நாடி கந்தம் தொடங்கி நா. வரையில் பிராணஸ்தானமாய் 'வம்பிகை' முதலிய யோகங்கட்கு மிகவும் உபயோகமுள்ளதாயும், நாதோபாஸ்தி செய்பவர்க்கு நாதமார்க்கம் காட்டும் கருவியாயும் இருப்பது. "விசுவோதரை" என்னும் நாடி" கந்தம்முதல் துந்தம்வரை நீண்டது. அலம்புஸை "கந்தம்முதல் குதம்வரை உள்ளது. "குஹூ" என்பது கந்தம் முதல் ஆண்குறி வரையில் இருப்பது. "அரணை" என்பது சரீரம் எல்லாம் வியாபித்து நிற்பது. இங்ஙனம் பதினான்கு நாடிகளின் இடத்தைக் குறித்தோம். (இதன் விரிவை அறிய விரும்புவோர் யோக சாஸ்திரத்தைக் கண்டு தெளிக.) இந் நாடிகள் ஒரு கொடி வடிவங்கொண்டு சரீரத்தை வியாபிப்பதில்லை. இவற்றுள் சுழுமுனையைத் தவிர்த்து மற்றவை எல்லாம் பல கிளைகளால் வியாபிக்கின்றன. இவற்றின் கிளைகள் மிக சூட்சுமங்கள். கண் முதலிய புலன்களை வியாபிக்கும் நாடிகள் அவற்றின் வழி கவரவேண்டிய விஷயங்களைக்கவர்ந்து மனத்திடம் சேர்க்கும். ஆயின், நம் முன்னோர்கள் அறியாத நாடி மார்க்கத்தை மேனாட்டார் அறிந்தார் என்பதும், வெற்றுரையே யென்க. பிராணயாமக் கிரமத்தில் முக்கியமாய் எவரும் இடை, பிங்களை, சுழுமுனைகளின் ஸ்வரூபம் அறியவேண்டும். அவற்றுள் இடை என்பது, கபப்பிரதானமானதும், சந்திரநாடி எனப்பெயர் பெற்றதுமாம். பிங்களை என்பது பித்தப் பிரதானமானதும், சூர்யநாடி என்றும் சொல்லப்படும். வைத்யத்தில் பிங்களை வாதநாடி என்றும், இடை பித்தநாடி என்றும், சுழுமுனை கபநாடி என்றும்கூறப்பட்டது. ஆயினும், சூர்யன், சந்திரன், அக்னி, எனும் மூன்று தேயுக்களுக்கும் ஆதாரம் எனவே இம்மூன்று நாடிகளும் யோகத்தில் துணியப்பட்டன. ஆயின், சுவானுபவத்தால் உயிருடனுள்ள சரீரத்தை நன்கு சோதித்த மகானுபாவராகிய யோகிகள் அனுபவம் இவ்விஷயத்தில் பிரமாணமாவதுபோல் ஸ்தூல சோதனம் செய்த வைத்யானுபவம் பிரமாணமாகாது.

ஆதலால் யோகிகள் கண்டெடுத்த ஜீவரெத்தினமாகிய பிராணயாமத்துக்கு பூரணப்பயன் சித்திக்கவேண்டுமாயின் யோகிகள் கண்ட வழியே அனுஷ்டிக்கவேண்டும். வைத்தியர் கொண்டவழி கூடாது. அதை அனுசரித்தே சாஸ்திரங்களில் முத்திரைகளின் பேதங்கள். சொல்லப்பட்டன. பிரும்மசாரியானவன் பெரு விரலாலும், பவித்திர விரலாலும் பிராணயாம முத்திரையைக் கூட்டுவான். என்றும் கிருஹஸ்த்தன் பெருவிரலாலும், மற்ற நான்கு விரல்களாலும் முத்திரையைக் கூட்டுவான் என்றும் வேதானுசாரி நூல்கள் விதிக்கின்றன. பிரும்மசாரி கொள்ளும் முத்திரையைப்பற்றிப் பின்னால் எழுதுவாம். (தொடரும்)

(பிரும்ம வித்யா)

215232



279

## திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.

### ஸ்ரீ நரஸிம்ம ஜயந்தி. ஸ்ரீ மதுரகவியாழ்வார் உத்ஸவக் கொண்டாட்டம்.

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபில மடத்தில் 12-5-38உ வியாழக்கிழமை மாலை 6-30 மணிக்கு ஒரு சதஸ்கூடிற்று.

'இன்பத்திலிறைஞ்சுதலில்' என்ற பாசுரத்தைக் கடவுள் வாழ்த்தாகக் காரியதரிசி பாடி 'அன்று சித்திரையிற் சித்தியான மதுரகவியாழ்வார் தினம் என்றும் ஏற்கனவே தெரிவித்திருந்த பிரகாரம் தலைவர் உபந்யஸிப்பர் என்றும் சொன்னர்.

ஸ்ரீ. ஆர். கேசவய்யங்காரவர்கள் 'ஸ்ரீ அஹோபில நரஸிம்ஹன்' என்ற விஷயம்பற்றி மிக வரியதோர் உபந்யாஸம் செய்தார். அவதாரங்களிற் சிறந்ததை ஏழை, இடையன், இளிச்சவாயன் என்று இராமன், கிருஷ்ணன், நரஸிம்ஹன் என்று பெரியோர் கூறுவரென்றும், நாங்கலந்த சிங்காவதாரத்தில் பகவானது திவ்ய மங்கள விக்ரஹ வ்யாப்தி நன்கு விளக்கப்படுவதுடன், விருத்த தர்மங்களுக்குள் வைசிஷ்ட்யம் உண்டு என்பதைத் தெரிவிக்கின்றதென்றும், சிங்கன் என்பதற்கு அருள்மாரி என்பது பொருள் என்றும், பிராசீனர்களெல்லாம் இவ்வவதாரத்தில் விசேஷ ஈடுபாடுடையவர்கள் என்றும், விசேஷண விசேஷ்யங்கள் ஒன்றும் நிலைமைச் செவ்வெனக்கூறுவதே சாரீரக சாஸ்த்ரம் என்றும், பிரதாநப்ரதிதந்த்ரமே அனைத்தையும் ஒன்று சேர்ப்பதென்றும் எடுத்துரைத்தார்.

காரியதரிசி வழங்கிய வந்தனோபசாரத்துடன் ஸதஸ்ஸு இரவு 8-15-மணிக்கு இனிது நிறைவெய்தியது.

### ஸ்ரீ பாஷ்யகாரர் மஹோத்ஸவக் கொண்டாட்டம்.

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் அடியிற்கண்ட விபரப்படி ஸ்ரீ பாஷ்யகாரர் மஹோத்ஸவக் கொண்டாட்ட மஹோபந்யாஸங்கள் சங்கத்தலைவர் ஸ்ரீ. ஆர். கேசவய்யங்காரவர்களால் திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபிலமடத்தில் நடத்தப் பெற்றன. அநேக ஆஸ்திகர்கள் வந்து சிரவணஞ் செய்தனர். சிலருக்கு விசேஷ மதாபிமானம் உண்டாகியிருக்கிறது. சிலர் வடமொழி தென்மொழிகளை நன்கு பயில ஆரம்பித்திருக்கின்றனர். நல்லுணர்ச்சி உண்டாக்கப்பட்டிருக்கிறது. இதர அதிகரண விஷயங்களையும் நிதானமாகக் கேட்க அனைவரும் ஆவல் கொண்டிருக்கின்றனர். அய்யங்காரவர்களும் மிகுந்த சிரமமெடுத்துக்கொண்டு மிக அரிய விஷயங்களை மிக எளிய நடையில் யாவரும் உணருமாறு எடுத்துரைத்தார்.

25-4-38உ ஸ்ரீ பாஷ்ய உபோத்காதம்; 26உ சாஸ்த்ரயோநித்வாதிகரணம்; 27உ ஆநந்தமயாதிகரணம்; 28, 29உ அபசூத்ராதிகரணம்; 30உ ஸ்ம்ருத்யதிகரணம்; 1-5-38உ ஆரம்பணாதிகரணம்; 2உ பாராதிகரணம்; 3உ பலாதிகரணம்; 4உ ஜகத்வ்யாபாரவர்ஜாதிகரணம்.

ஆரம்பதினத்தில் ஸ்ரீ. ராவ்ஸாஹிப் - ஆர். ராவஸ்வாமி அய்யங்காரவர்களும் சாற்றுமுறையன்று கனம் ஜஸ்டிஸ், கே. யஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்காரவர்களும் தலைமை வஹித்தார்கள்.

ப. ரெ. திருமலை ஐயங்கார் காரியதரிசி.

## ஆழ்வார் திருநகரி.

### தேவஸ்தான டிரஸ்டி நியமனம்.

இந்நகர் ஸ்ரீ ஆதிநாதர் ஆழ்வார் தேவஸ்தானத்துக்கு சமீபத்தில் நடைபெற்ற டிரஸ்டி நியமன எலக்ஷனில் பெரும் போட்டியாயிருந்து இறுதியாக 20—4—38ல் தூத்துக்குடி தேவஸ்தானக் கமிட்டி மீட்டிங்கில் மொத்தம் மெம்பர்கள் 11ல் போட்டி அபேக்ஷகர்களில் ஒருவரான ஸ்ரீ வைகுண்டம் வக்கீல் ஸ்ரீமான் டி. எஸ். தாத்தாச்சாரியாரை ஐவரும் இவ்வூர் ஸ்ரீமான் லக்ஷ்மீ தெய்வச்சிலை ஐயங்காரை அறுவர்களும் ஆதரித்ததால் பின்னவர் ஐந்து வருடங்களுக்கு டிரஸ்டியாயிருப்பாரென அறிவிக்கப்பட்டிருப்பதாய்த் தெரிகிறது.

### வைகாசி மகோத்ஸவம்.

இவ்வூர் தேவஸ்தானத்தில் 1—6—38 வைகாசி 19ல் ஸ்ரீ நம்மாழ்வார் வைசாக மகோத்ஸவ துவஜாரோகணமாகும். ஐந்தாம் உத்ஸவம் நவதிருப்பதி கெருடசேவை வைபவம் அதி விசேஷமாகும். 7ல். நம்மாழ்வார் உடையவர் சேர்த்தியில் திருமஞ்சனம் மிக முக்யமாகும். 9ல் ரதோத்ஸவம் இம்மஹோத்ஸவத்தில் மதசம்பந்தமான பல அரிய உபந்யாசங்களும் பிரபல நாதசுரம் சங்கீதக் கச்சேரிகளும் நடைபெறுமெனத் தெரிகிறது.

நமது விசேஷ நிருபர்.

## ஆத்தங்குடி ஸநாதன தர்ம ஸபை.

### அகில இந்திய தினம்.

வெகுதான்ய-ஹு சித்திரை-மீ 30உ இச்சபையின் ஆதரவில் அதார்மிகச் சட்டங்களையும் மசோதாக்களையும் கண்டிக்க ஒரு பொதுக்கூட்டம் ஜெ. ஸாமிநாதய்யாவர்கள் தலைமையில் நடைபெற்றது:

அடியிற்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டன.

1. ஹரித்வாரில் சமீபத்தில் நடந்த அகில இந்திய ஸநாதனதர்ம மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி கூட்டப்பட்ட இக்கூட்டமானது சில காங்கிரஸ்காரர்களும் சீர்திருத்தக்காரர்களும் சட்டத்தின் மூலம் இந்துமதத்தின் தர்மங்கள், ஆசாரங்கள் மற்ற மதப்பழக்க வழக்கங்களில் தலையிட்டுச்செய்த நடவடிக்கைகளையும், செய்துகொண்டிருக்கும் நடவடிக்கைகளையும் கண்டிக்கிறது. மேலும் சட்டசபைகளில் அதார்மிகச்சட்டங்கள், மசோதாக்கள் இவைகளைக் கொண்டு வருகிறவர்களும் அல்லது உதவுவோர்களுமான சட்டசபை அங்கத்தினர்களிடம் நம்பிக்கையில்லாத தன்மையை மிகவும் அழுத்தமான முறையில் தெரிவிக்கிறது.

2. இந்தக் கூட்டம் எம். ஸி. ராஜாவினால் சென்னை சட்டசபையில் கொண்டுவரப்பட்ட ஆலயப்பிரவேச மசோதாவைக் கண்டிக்கிறது. இரு சட்டசபை அங்கத்தினர்களையும் கவர்மெண்டாரையும் இந்த மசோதாவுக்கு ஆதரவளிக்காமலிருக்குமாறும் அதனால் ஹிந்து மதத்திற்கு ஒரு கொடிய ஹானி ஏற்படாதிருக்குமாறும் செய்யவேண்டுகிறது.

3. இந்துமதத்திற்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கும் கேட்டையுத்தேசித்து இக் கூட்டமானது மாகாணத்திலுள்ள எல்லா சனாதனிகளையும் சட்டசபைகளில் அவர்களுடைய செல்வாக்கு உணரும்படியாக அவர்களை அமைத்துக்கொள்ளும்படி வேண்டிக் கொள்ளுகிறது.

மேற்கண்ட மூன்று தீர்மானங்களையும் பிரேரேபித்து P. S. சுப்பிரமணிய கனபாடிகள் S. ராமஸ்வாமி அய்யங்கார், M. திருவேங்கிடமய்யங்கார் முறையே பேசியபின் கூட்டம் முடிவுற்றது.

M. திருவேங்கிடமய்யங்கார், காரியதரிசி.

## மதிப்புரை.

### தமிழ் ஸம்ஸ்கிருத அகராதி

இப்பெயர் கொண்ட நூல் ஒன்று வரப்பெற்றோம். இது ப்ரும்ம ஸாயுஜ்ய புத்தகாலயப்பிரசுரம் 6ம் பதிப்பு மோக்ஷ வழி— ஸம்ஸ்கிருத தமிழ் அகராதி ஸம்ஸ்கிருத ஸ்வபோதினீ முதலிய புத்தகங்களின் ஆசிரியரான ஸ்ரீமான் நே. ஈ. வெங்கடேச சர்மா அவர்களாலேயே எழுதிவெளியிடப்பட்டது. விலை 1—0—0 ஸம்ஸ்கிருதம் கற்கும் மாணவர்களுக்கு தமிழ் பாஷையிலிருந்து மொழி பெயர்க்க உதவியாயிருக்கும் வண்ணம் இந்நூல் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதில் தமிழ் பதங்களை அகாராதிக்கிரமத்தில் பாகுபாடு செய்து அவைகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு ஸம்ஸ்கிருத பத மட்டும் கொடுக்கலாம். ஒரே அர்த்தமுள்ள பல பதங்கள் கொடுப்பது ஸம்ஸ்கிருத பதங்கள் கத்ய, பத்யங்கள் கவனம் செய்பவர்களுக்கும் பேச விரும்புவோர்க்கும் மிக உபயோகமாக இருக்கும். ஒரு பதம் ஞாபகத்தில் வராவிட்டாலும் மற்றொன்று வரலாம். இந்நூல் பெரும்பாலும் நாமலிங்கானுசாஸனம். என்பதையே ஆதாரமாகவுடையது. வைத்யத்திற்கு வேண்டிய செடி, கொடி, மூலிகை, மரங்கள் முதலியன விசேஷமாக கூறப்பட்டிருக் கின்றன. படிப்பவரின் சௌகர்யத்தை முன்னிட்டு எழுத்துக்களும் தேவ நாகர, தமிழ், தெலுங்கு இதுகளில் முதலிலும் அமைக்கப்பெற்றிருக்கிறது. ஆங்கிலக் கல்லூரிகளில் வடமொழி கற்கும் மாணவர்களுக்கு இது ரொம்பவும் அபகரிக்கக்கூடியது. ஸம்ஸ்கிருத பாஷையை அப்யசிக்க விருப்பமுடையவர்களிடமிருக்கவேண்டிய புஸ்தகங்களில் இதுவும் ஒன்றாகும். அழகான எழுத்து 1க்கு 16 க்ரௌன் சைஸ். 232 பக்கங்கள் கொண்டது வேண்டியவர்கள் நே. ஈ. துரைஸாமிஅய்யங்கார். ஸம்ஸ்கிருத புத்தகவியாபாரம். 21. ஸ்டேஷன்ரோட். வில்லிவாகம் என்ற இடத்தில்பெறலாம். (ஆர்யதர்மம் ஆபீஸிலும் கிடைக்கும்) (மேலக்காவேரி. சிரோமணி. கே. ஆர். வைத்தியநாதசாஸ்திரி.)

### ஸந்தேக விடை.

5-5-38-ல் வந்த மாத்ருஸபிண்டீகரண ஸ்திரீம்ருதாஹே ஸ்திரியோபோஜ்யா: பிதாஸ்தீர ஸபிண்டனே பித்ராதேரேவஹோமஸ்யாத் பிண்டதாந்து வர்க்கயோ:

இந்த வசனத்துக்கு அர்த்தம் விவரிக்குமிடத்தில் "பிதிருக்கள்" என்பதற்கு தகப்பன் உயிரோடிருப்பவர்களுக்கு பிதா மஹாதிகள் வரணமும், பிதா இல்லாதவர்களுக்கு பிதா முதல் வரணமென்றும் ஸ்பஷ்டமாய்க் கூறியுள்ளார். வர்க்கத்வயத்துக்கு பிண்டதானமுள்ள ஆபஸ்தம்பஸூத்திரத்தில் ஸ்திரீ ஸபிண்டீகரணத்தில் பித்ராதிகள் தான்வரணம். ஸ்திரீவர்க்கத்தில் ஸம்யோஜனம் (பர்த்திரு பிண்டஸம்யோஜனம் தவிர) மூன்று பிண்டவிதியுள்ள ஸத்யாஷாட ஸூத்திரத்தில் தகப்பன் இல்லாவிட்டாலும், தாய் ஸபிண்டீகரணத்தில், பிதா மஹாதிகளுக்கு ஹோமமும் பிதா மஹ்யாதிகளுக்கு வரணபோஜன பிண்டதானாதிகளும் செய்து அவர்கள் பிண்டத்தில் ஸம்யோஜனம் ஏற்பட்டிருக்கிறது. பிரகிருதம் ஆபஸ்தம்பஸூத்திரத்தில் தகப்பன் இல்லாதவன் மாதாஸ பிண்டீகரணத்தில் பிதா மஹாதிவரணம் செய்து ஸபிண்டீகரணம்செய்தது ஆசாரவிருத்தமாயும் அசாஸ்திரீயமாயும் ஏற்படுகிறது. பண்டிதர்களே சரணம்.

வி. உமாமகேச்வர சாஸ்திரிகள்,

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

281

[illegible]

4 21
23

26-5-1938

215233

1070
215233
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 MAY 1938
MADRAS
283

Registered No. M. 2913

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

புஸ்தகம் 23 | கும்பகோணம் கலி5040 பகுதான்ய-ஞு வைகாசி-மீ 13உ 1938ஞு மே-மீ 26உ | ஸம்சிகை 21

## ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0.
தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்

## தேவஸ்தானச்சட்டம் திருத்தப்படும்.

சென்னை ஹிந்துமத தர்மஸ்தாபனச் சட்டத்தைத் திருத்தியமைப்பதற்கான மசோதாவொன்று மந்திரியால் தயாரிக்கப் பட்டுவிட்டது. இது சீக்கிரத்தில் கெஜட்டில் பிரசுரமாகும். ஆகஸ்ட்மாதக் கூட்டத்தில் ஆலோசனைக்குவரும்.

## காங்கிரஸ் கார்யக்கமிட்டி.

### மந்திரி ராஜீநாமா.

பம்பாயில் நடந்த கார்யக்கமிட்டி கூட்டம் முடிந்துவிட்டது. மத்யமாகாண மந்திரியான ஷெரீப் என்பவர் துர்மார்க்க கைதியை விடுதலை செய்த விஷயமாகக் குற்றம் சாட்டப்பட்டிருப்பதால் அவர் ராஜீநாமா செய்து விடவேண்டுமென்று கமிட்டி முடிவு செய்தது. அவரும் ராஜீநாமா செய்துவிட்டார்.

## இந்தியருக்கு கவர்னர் பதவி.

ஒரிஸா கவர்னர் பதவிக்கு ராஜப்பிரதிநிதி நிர்வாஹஸபை மெம்பரான ஸ்ரீமான் ஸர். ஜகதீசப்பிரசாத் நியமிக்கப்படலாமென்றும், இதன்மூலம் இந்தியர்களைக் கவர்னர்பதவியில் நியமிப்பதான கொள்கை விஸ்தரிக்க இடமேற்படுமென்றும் சொல்லப்படுகிறது.

## தீண்டாதாருடன் பந்திபோஜனம் செய்யாதது குற்றம்.

தேவகோட்டையில் காங்கிரஸ் முனிஸிபல் சேர்மனுக்கு விருந்து நடைபெற்றது. அதில் தீண்டாதாரும், ஜாதி ஹிந்துக்களும், தனித் தனியான இடங்களில் விருந்துண்டார்கள். காங்கிரஸ் கௌன்ஸிலரான ஒரு தீண்டாதாரை வீட்டின் தாழ்வாரத்தில் ஒதுப்புறமான இடத்தில் உட்காரவைத்து சாப்பாடு போட்டதாயும், ஜாதி ஹிந்துக்கள் மட்டும் வீட்டிற்குள் வேறு நல்ல இடத்தில் சாப்பிட்டதாயும், இம்மாதிரி தீண்டாதாரை அவமானப் படுத்தியதை ஆக்ஷேபித்து அடுத்த முனிஸிபல் கூட்டத்தில் விவாதம் நடைபெறுமென்றும் தெரிகிறது.

## ஹிந்து — முஸ்லீம் ஸமரஸம்.

லக்ஷ்மணபுரி ஹிந்துக்களின் கண்டனம்.

இப்போது நடைபெறும் ஹிந்து முஸ்லீம் ஸமரஸப் பேச்சு முறையைக் கண்டிக்க லக்ஷ்மணபுரி ஹிந்துக்களின்கூட்டமொன்று 17உ. யன்று நடைபெற்றது. ஹிந்து ஸபைத் தலைவர்களைக் கலந்துகொள்ளாமலே காங்கிரஸ்காரர்கள் இந்த ராஜிப்பேச்சை நடத்திவருவதால், இது ஹிந்துக்களைக் கட்டுப்படுத்தாதென்றும் முஸ்லீம்களுக்கு அதிகச் சலுகை காட்டும் விஷயமாக காங்கிரஸின் போக்கைக் கண்டிப்பதாயும், ஹிந்துக்கள் காங்கிரஸ் கவர்ன்மெண்ட்களை எதிர்க்க நேருமென்றும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

## மத்திய மாகாண மந்திரி ஸபை ராஜீநாமா செய்யவேண்டும்.

### வக்கீல்களின் கோரிக்கை.

நாகபுரி ஜில்லா வக்கீல் ஸங்கக்கூட்டத்தில், மத்ய மாகாண காங்கிரஸ் மந்திரி ஸபை ஒழுங்குத்தவறுகடந்துவருவதால் அது உடனே ராஜீநாமா செய்யவேண்டுமென்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. உத்யோகம், ஸ்தல ஸ்தாபன நியமனம்போன்ற பல விஷயங்களில் மந்திரி ஸபையானது உத்தியோக வேட்டையை முக்கிய நோக்கமாகக்கொண்டு வேலை செய்வதாகத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

## ஹிந்தி ஸத்யாக்ரஹம்.

125 பள்ளிக்கூடங்களில் கட்டாய ஹிந்தி பாடம் ஏற்பட்டிருப்பதை ஆக்ஷேபிக்கச்சிலர் ஸத்யாக்ரஹம் செய்யப் போகிறார்களாம். சென்னையில் பிரதம மந்திரி வீட்டு வாசலிலும். கல்வி மந்திரி வீட்டு வாசலிலும் ஒரு கும்பல் ஸத்யாக்ரஹம் செய்யவேண்டுமென்றும் நாமக்கல் தாலூக்காக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. மதுரையிலும் இம்மாதிரி தீர்மானமொன்று செய்யப்பட்டது.

## விளம்பரம்.

சென்னை மாகாணத்தில் ஸநாதந தர்ம பிரசாரம் செய்ய சிறந்த வாக்குள்ளவர்களாயும் அநுஷ்டாதாக்களாயும் ஊக்கமுள்ளவர்களாயுமிருக்கிற பண்டிதர்கள் தேவை. யோக்யதானுசாரமாய் ஸம்பாவனை செய்யப்படும். அடியில்கண்ட விலாசத்துக்கு எழுதிக்கொள்ளவும்.

என். நடேசய்யர்,
அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க கார்ய அத்யக்ஷர்
55 தமிழ் சங்கம் ரோட், மதுரை.

தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
(மூன்றாம் பதிப்பு)
பிராம்மணர்களின்கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், "வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராம்மண குடும்பங்களிலும்இருக்கவேண்டியதவசியம்.
விலை ரூ. 1—8—0 வி. பி. பிரத்யேகம்.
கிடைக்குமிடம் :—
பப்ளிஷர்.
தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
கீழவிடையல், திருச்சிரா P. O.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:—T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

# ஆர்யர்களின் ஆசார ரஹஸ்யம்.

(பிராணாயாமம்)

T. V. தர்மராஜகனபாடிகள், வேதபாடசாலை
திருக்கோகர்ணம்.

(முன்தொடர்ச்சி.)

ஆர்யர்காள்! முன்னே பிராணாயாமத்தில் பிரும்மசாரிகள் வைக்கவேண்டிய முத்திரையைப்பற்றி எழுதுவதாக சொன்னேமல்லவா? அதைப்பற்றி ஈண்டு சில விவரிப்போம். தர்மசாஸ்திரக்காரர் ''அங்குஷ்டத்தாலும், அனுமிகையாலும் முத்திரையை பிரும்மசாரி சேர்த்திடுவான்'' என்று முத்திரை கூறினர். அங்குஷ்டம் பித்தம் நிறைந்தவிடமேயாகையால் அதைத் தென்புறத்தில் சேர்த்தலால் அப்புறம் உஷ்ணம் அதிகப்படும். வலதுபுறமுள்ள நாடியைச் சூர்யநாடி என்பர். அதன்வழி சரீரத்துஷ்ணம் வெளிச்செல்வதாக யோகிகள் கொள்கை. அதில் முயற்சியுடன் அதிகம் வலது மூக்கின் வழியே மூச்சைவிட்டால் இயற்கையில் உஷ்ணம் அதிகமாகும். சரீரத்தின் உட்புறத்திலுள்ள உஷ்ணம் பெருக அதை சுவாஸம் வெளியிட்டுத்தள்ள வலதுபுறத்து நாடி வெகு சகாயம் செய்கிறது. இடதுபுறத்து நாடி சந்திரநாடி என்றும் கபநாடியென்றும் பெயர் பெறும் என்று சொன்னேம், அந்நாடியின் நுனியுடன் அனுமிகை நுனிசேர்ந்தால் கபம் அதிகம் வெளிப்படும். தன்னினத்தை தாமியக்குமாதலின் என்க. ஆதலாற்றான் மூச்சுக்காற்றுப்படும் கண்ணாடியில், இருபுறத்திலும் நிறம் வேறுபடுகின்றது. அங்கு நிறம் வேறுபடுவது கபபித்தவேற்றுமையால்தான். இவ்விரண்டின் நடுவில் நீர்மயமாயுள்ளது வைணவியான சுழிமுனை. வித்தியாப்பியாசம் இடைவிடாது செய்வதே பிரம்மசாரிகளுக்கு இன்றியமையாததாகவே அவர்க்கு கன்மங்கள் குறைத்து விதிக்கப்பட்டன. போஜனம் வேண்டியபடி என்றும் சொல்லப்பட்டது. அது பக்குவமில்லாமல் எல்லையற்றதாயின் அதிக விபரீதமாய் ரோகங்களையும் விளைவிக்கும். ஆகவே அதனால் உண்டாகும் பெரிய சத்தை தேகத்தில் ஜரிக்கும்படி செய்யவேண்டியது மிகவும் அவசியம். அவ்விதம் உட்கொண்ட அன்னமெல்லாம் எவ்வித புருடமுயற்சியுமின்றி ஜீர்ணமாகி விடாதென்று கருதி இந்த முத்திரை பித்தத்தை பெருக்கவே பிரும்மசாரிகளுக்கு விதித்தது. ''பித்தம் சென்றபடி மனம்'' என்பதால் பித்தம் நன்னிலையிலிருந்தால் மனமும் நன்னிலை பெறும். ஆகவே அவர்களுக்கு மேற்குறித்த முத்திரையால் பித்த சுத்தியும் மன உல்லாசமும் கூடும் என்பது கருத்து. இனி வித்தியாப்பியாசியே பிரும்மசாரியானால் அவனுக்கு அதிக உஷ்ணமுள்ள சரீரமவாவப்படுமாகவே மேல்கண்ட முத்திரை அவனைக் குறித்து விதிக்கப்பட்டது. தேகத்தில் முறையே உஷ்ணம் பெருகுவதால் கேவலம் மனம் சுத்தி பெருவது மாத்திரமல்ல. சரீரத்தில் நல்ல குணத்தையும் கொடுக்கும். சுக்கிலம் எனும் விந்து மெதுவாய் அஸ்தியில் அடங்கும். தேகம் வலுக்கும். குருசிச்ருஷை முதலிய செய்வதற்கும் படிப்பதற்கும் தேகத்தில் சோம்பல் உண்டாகாது. ஆயின் வருணாச்ரமங்களை அனுசரித்து ஏற்படுத்தின இந் நிர்ப்பந்தம் அதிகப் பயனளிக்கத்தக்கதே. மேற்கண்டபடி சரீரத்தில் சுக்லம் சேர பலம் பெருகும். புத்தி பிரகாசமும் கைகூடும். வித்தையை நன்கு பயில்வதற்கு ஏதும் தடையில்லை. குருகுலவாஸம் விட்டாலும் பிரும்மசாரியாய் விவாகம் செய்துகொள்ளாதவரை சரீரத்தில் சுக்லத்தை உறையச்செய்ய இதே முத்திரை வேண்டும்.

சுச்கிலத்தை ஒருவாறு வெளிவிட்டால் பிறகு அடிக்கடி விட்டேவரவேண்டும். அது யௌவனப் பருவத்தில் அடக்கப்பட்டால் மிகவும் குறைவையுண்டாக்கும். ஆதலால் அந்த சுக்கிலத்தைக் கட்டவேண்டுவது யோகிகளுக்கு அவசியம். அதுகொண்டே இதே முத்திரையை யோகிகளும், சந்நியாசிகளும் அனுஷ்டிக்கிறார்கள். ஆயின் பிரும்மசாரிகள் முத்திரை அங்குஷ்டமும், அனுமிகையும் சேர்ந்தது. கிருஹஸ்தருக்கு அங்குஷ்டம் வலது புறம். மற்ற நான்கு விரல்கள் ஒருபுறமாக வைத்து முத்திரை ஏற்பட்டது. முன் அங்குஷ்டமெனும் பெருவிரலின் பயன் சொல்லப்பட்டது. மற்ற விரல்களை அதற்கெதிரில் சேர்ப்பது, வலது புரத்தில் அங்குஷ்டத்தைச் சேர்ப்பதினால் உண்டாகும் அதிக உஷ்ணத்தைச் சமனஞ் செய்யவே. ஆதலால்தான் அவர்கள் உஷ்ணம் சுக்லத்தை அஸ்தியில் சேரவிடுவதில்லை, அவர்களுக்குச் சுக்லம் வேண்டியதாகையால் அவ்வித முத்திரை கூறப்பட்டது. சந்நியாஸிகளுக்கும் பிரும்மசாரிகளுக்கும் ஒன்றுபோல் முத்திரை. மேற்கண்ட முத்திரைகளைக் கொண்டு செய்யப்படும் பிராணாயாமம் மூவகைப்படும் ரேசகம், பூரகம், கும்பகம், என மூன்று வேற்றுமைகள் அதற்குண்டு. அதில் 'ரேசகம்' என்பது பிராணனை மெதுவாக வெளிப்படச் செய்வது. பூரகம் என்பது அந்தப் பிராணவாயுவை நாசிவழி உட்செலுத்துவது. கும்பகம் என்பது பூர்ண கும்பத்தில் நீர் நிறைந்ததுபோல் சரீரதில் வாயு நிறைந்து நிற்கும் பிராணாயாமாவஸ்தை.

ஐயா! ஈண்டு ரேசகம் முதலியவைகளைப் பற்றி நன்கு நிரூபித்து அவற்றின் பயனையும் நிரூபிப்பாம். முன் பிராணாயாமத்தின் பொதுவியல் கூறுமிடத்தே, வெளியின்று நல்ல காற்று உட்புறம் சென்று, சரீரத்திற்குபகாரம் செய்யும் என்று கூறினேமல்லவா? அங்ஙனமே உட்புறமிருந்து வெளிவரும் காற்று உட்புறம் நிறைந்த மலங்களை வெளியாக்கிச் சரீரத்திற்கு உபகாரம் செய்யும் என்பது யாவரும் அறிந்தவிஷயம் என்றேம். இங்ஙனம் இயற்கையில் அமைந்திருப்பினும் சில சமயம் மனிதன் எவனும் பல தொழில் செய்வானுகையால் கெட்ட காற்றை உட்கொள்ளவும் உட்புறமிருந்து நல்லகாற்றை வெளிவிடவும் நேர்ந்துவிடுகிறது. இங்ஙனம் வேறு நல்வழி இன்றி உலகம் ஆயுளிழப்பதைக்கண்டு கருணாமூர்த்தி உலகத்தாருக்கு இந்த ரேசகம் முதலிய முப்பகுதி கூடிய பிராணாயாம மருந்தைத் தந்தருளினர். இவற்றுள் ரேசகத்தின் பயன்வருமாறு:—

உட்காற்றை வெளியில் செலுத்திடல் 'ரேசகம்' எனப்படும் இதனால் உள் மலம் வெளியாகும் என்பது எல்லோருமறிந்த பயன். மற்று, கவிழ்ந்து குவிந்து தூங்கும் இருதய மலரை நிமிர்த்தி மலர்த்திடல் முதலிய சில நற்பயன்கள் யோக நூலால் அறியலாம். இது சம்பவிக்கக்கூடும் என்பதைப் பிரமாணங்கொண்டு விசாரித்திடுவாம். (தொடரும்.)

## ஓர் வேண்டுகோள்.

### ஒன்று சேர்ந்தாலே போதும்.

ஸநாதன தர்மத்தில் வாஸ்தவமான பற்றுடையோர் அனைவரும் இனியாவது உறங்காது விழிமின். எழுமின். சேர்மின். ஐக்யத்தைக் காட்டுமின். அன்போடிருமின். அழுங்கை அகற்றுமின். வெல்வது வேண்டி வெகுளியை விரட்டுமின். அடிமைத்தனத்தை அறவே ஒழிமின். வேத விதிவிலக்குகளைப் பற்றுமின். வீண்வாதத்தை விடுமின். தக்க தலைவரைத் தேர்மின். அவர் சொற்படி அங்ஙனே கேண்மின். சென்றதைக் குறித்து வருந்தன்மின். நன்மை புரிவோரை ஏளனஞ் செய்யன்மின். ஊக்கமது கைவிடேல். சோர்வை அகற்று. பிராசீன கர்மாநுஷ்டானங்களை விடாது தேஜஸ்விகளாக ஆகவேண்டும். வருமானத்தில் கூடுமான பாகத்தை தர்மப்ரசாரத்துக்காக சமர்ப்பித்து உழைப்போர்க்கு உற்சாக மூட்டல்வேண்டும்; பல சபைகளும் ஒரே மூகமாக நின்று தர்ம சாஸ்த்ர விருத்தமான சட்டங்களை அறவே அகற்றுவதற்கு அரும்பாடு படல் வேண்டும். ஆடிக்கொருநாள், தைக்கொருநாள் என்றில்லாமல் வாராவாரம் ஆங்காங்கு தர்ம ப்ரசாரம் கிரமமாகச் செய்ய ஏற்பாடு செய்யுங்கள். நெற்செய்யப் புற்றேயும். 'ஆர்யதர்மம்'; 'இந்துநேசன்' என்ற இவ்விரண்டு கண்களை நன்கு கவனியுங்கள். பேச்சளவில் நில்லாது காரியத்திற் கண்வையுங்கள். ஒன்று சேருங்கள். தீவினையகற்று இன்சொல்லே எதையும் சாதிக்கவல்லது. அஞ்ஞானத்தைப் போக்கடித்து ஞானத்தைப்புகட்டுமின். மூத்தோர் சொல் வார்த்தை யமிர்தம். சக்கர நெறிநில். திருமாலுக் கடிமைசெய்.

ப. ரெ. திருமலை ஐயங்கார்.

## அகில இந்திய அதார்மிகச் சட்டக் கண்டன தினக் கூட்டம்.

### காஞ்சீபுரம்.

ஹரித்வாரத்தில் கூடிய ஸனாதன ஸம்மேளனத்தின் தீர்மானத்திற்கிணங்க இவ்வூரில் வியாழக்கிழமை மாலை ஸ்ரீ தேவராஜ ஸ்வாமி ஆலய நூற்றுக்கால் மண்டபத்தில் ஸ்ரீமான், உ.வே.பிரதிவாதிபயங்கர, அண்ணங்கராசார்ய ஸ்வாமிகளின் அக்ராஸனத்தின்கீழ் ஒருபெரிய ஆஸ்திக ஹிந்து மஹாஜனங்கள் கூட்டம் கூடிற்று. அக்ராஸனரும் மற்றும் பல கனவான்களும், பண்டிதர்களும் அதார்மிகச் சட்டங்களையும் மசோதாக்களையும் கண்டித்துப்பேசினர்.

பல மதஸ்தர்களும் ஜாதிக்காரர்களு மடங்கிய ஸ்தாபனங்களான சட்டசபைகள் ஹிந்து மத விரோதமான சட்டங்கள் செய்ய ஞாயமில்லையென்றும் 2. மிஸ்டர் M. C. ராஜாவின் ஆலய ப்ரவேச மசோதாவும், சில ஜாதிகள் மீதுள்ள ஸமூக நிர்பந்த நிவர்த்தி மசோதாக்களும் ஹிந்துதர்ம சாஸ்திரங்களுக்கும், ஆகம சாஸ்திரங்களுக்கும், ஆசாரங்களுக்கும் முற்றும் விரோதமாக இருப்பதாலும், அத்தகைய மசோதா சிலகாலத்திற்கு முன்புதான் வைஸிராய் சட்டசபையில் பலமாக எதிர்க்கப்பட்டு தள்ளி விடப்பட்டதாலும் அவைகளை உடனே வாபீஸ் செய்ய உத்தரவு செய்ய வேண்டுமென்றும் 3. மதவிஷயங்களிலும் ஆசார விஷயங்களிலும் கவர்ன்மெண்டுக்கிருந்த ஆதிக்யத்தை சட்டஸபைகளுக்குத் தள்ளிவிட்டதை ஆக்ஷேபிப்பதாயும், மத உரிமைகளை மறுபடியும் ஏற்படுத்திக்கொடுக்கும்படிக்கு கவர்ன்மெண்டை வேண்டுவதாயும், 4. காங்கிரஸ் கக்ஷியார் முக்யமாய் ஹிந்து ஸமூகத்தின்மேலேயே துவேஷம்கட்டிவருவதால் ஆஸ்திக ஹிந்துக்கள் அக்கக்ஷிக்கு எவ்வித சலுகையும் காட்டக் கூடாதென்றும், ஸனாதன தர்ம ஸம்ரக்ஷணார்த்தம் ஒரு அகில இந்தியாநிதி ஏற்படுத்தும்படிக்கும், மேற்படி தீர்மானங்களை கவர்ன்மெண்டுக்கும் பத்திரிகைகளுக்கும் அனுப்பும்படிக்கும் தீர்மானிக்கப்பட்டு ஸபாநாயகருக்கும் ஆலய தர்மகர்த்தர்களுக்கும் வந்தனம் கூறப்பட்டு ஸபை ஸனாதநதர்மகி ஜே என்ற கோஷத்துடன் கலைந்தது.

நமது நிருபர்.



285

# மதுரைஜில்லா வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க ஐந்தாவது ஸம்மேளனம்.

## மேல்மங்கலம்.

நடவடிக்கை விபரம்.

ஏற்கனவே பத்திரிகையில் அறிவிக்கப்பட்டிருந்தபடி மேல்மங்கலம் கிராமம் ஆஸ்திக மஹாஜன சபையின் ஆதரவின்கீழ் மே-மீ 12, 13-ம்உகளில் ஸம்மேளனம் விசேஷ உத்ஸாஹத்துடன் அதி விமரிசையாக நடந்தேறியது. அகிலபாரதீய வர்ணாஸ்ரம ஸ்வராஜ்ய ஸங்கக் கார்யகமிட்டித் தலைவர் பிரும்மஸ்ரீ N. நடேசய்யரவர்களின் நன்முயற்சியாலும் கிராமமஹாஜனங்களின் முயற்சியாலும் எல்லாம் திருப்திகரமாயும் மிகுந்த முன்னேற்பாடுடனும் இனிது நடைபெற்றது.

ஸம்மேளனத்திற்கு கும்பகோணம் ஸ்ரீமான்கள் S. மஹாலிங்கய்யர் G. V. வெங்கட்டராமய்யர், தேவகோட்டை S. சுப்பிரமணிய அய்யர், திண்டுக்கல் V. R. விஸ்வநாதய்யர், தியாகராஜ தீக்ஷதர், M. ஸ்வாமிநாதய்யர், சோளவந்தான் M. ராமகிருஷ்ணய்யர் M. வெங்கடாசலமய்யர், மதுரை V. K. ஸ்ரீனிவாஸாசார்யார், C. S. விஸ்வநாதய்யர், K. S. சோமசுந்தரசாஸ்திரிகள் முதலிய பிரமுகர்களும், மதுரை பிரம்மஸ்ரீகள் M. N. சுப்பிரமணிய சாஸ்திரிகள், கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள், சீதாராமசாஸ்திரிகள், G. A. விஸ்வநாதசாஸ்திரிகள், கொடிமுடி ராஜகோபால சாஸ்திரிகள், முள்ளிப்பள்ளம் யக்ஞ தீக்ஷதர், சோளவந்தான் சங்கரசாஸ்திரிகள், தென்கரை நாராயணசாஸ்திரிகள் கலியம்புத்தூர் K. R. ஸதாசிவப்ரம்மம், ராயசாஸ்திரிகள் முதலிய பண்டிதர்களும் பெரியகுளத்திலிருந்து அநேகம் வக்கீல்களும் உத்யோகஸ்தர்களும் ஜில்லாவின் நாலுபாகங்களிலிருந்து பொதுஜனங்களும் ஏராளமாக விஜயஞ்செய்திருந்தனர்.

மே-மீ 12உ ஸந்தியாவந்தனத்திற்குப் பிறகு மாலை 6½ மணிக்கு ஷை கிராமம் ரங்கநாதஸ்வாமி கோவிலிலிருந்து பூர்ணகும்பம் உபநிஷத்கோஷம் மங்களவாத்தியங்களுடன் தலைவர்களுக்கு மாலை சூட்டப்பட்டு முக்கிய தெருக்கள் வழியாக ஊர்வலமாக ஸம்மேளனக்கொட்டகைக்கு அழைத்துவரப்பட்டு ஸுமங்கலிகளால் மங்களஹாரத்தி எடுக்கப்பட்டது. மஹாநாட்டுக் கொட்டகையானது வாழைமரங்களாலும், மாவிலைத்தோரணங்களாலும், வேதவாக்கியங்கள் எழுதிய அட்டைகளாலும் அலங்கரிக்கப்பட்டு விளக்குகளால் ஜோதிமயமாய் விளங்கியது. பகவானுடைய திருவுருவப்படங்கள் சபையில் வரிசையாய் அலங்கரிக்கப்பெற்றிருந்தன.

கொட்டகைக்கு முன்னணியில் ஸ்தாபிக்கப்பெற்ற பெரிய ஸ்தம்பத்தில் விளங்கிய ஹனுமத்வஜத்தை மதுரை ரிடையர்டு ஸப் ஜட்ஜு ஸ்ரீமான் R. வெங்கடாசலமய்யர் B. A., B. L. அவர்கள் ஏற்றுவித்து அரியதோர் பிரசங்கம் செய்தார்கள். பிறகு பாலிகைகளாலும் பாலர்களாலும் பகவத்ஸ்தோத்ர கானம் செய்யப்பட்டு ஸபை ஆரம்பமாயிற்று. அதுசமயம் ஸ்ரீகாஞ்சிகாமகோடிபீடாதிபதிகளின் ஆசீர்வாத ஸ்ரீமுகம் வாசிக்கப்பெற்று மந்திராக்ஷதை பிரசாதங்கள் ஸபையோருக்கு வழங்கப்பெற்றது.

பிறகு பிரும்மஸ்ரீ V. S. ராமசாமி சாஸ்திரிகள் B. A. B. L. (மாஜி பிரின்ஸ்பல் ராமேஸ்வரம் தேவஸ்தான ஸம்ஸ்கிருத காலேஜ்) அவர்கள் வரவேற்பு பிரசங்கத்தை ஸம்ஸ்கிருதத்திலும், மேல்மங்கலம் மிராசுதார் ஸ்ரீமான் M. S வெங்கட்டராமய்யர் அவர்கள் தமிழிலும் வாசித்து பிரதிநிதிகளை உத்ஸாஹத்துடன் வரவேற்றார்கள்.

பிறகு திருக்கருகாவூர் பிரும்மஸ்ரீ T. L. சுப்பய்யர் B. A. B. L. அவர்கள் வழக்கம் போல் கம்பீரமாயும் ஆவேசத்துடனும் தர்ம ஸ்வரூபம் காயத்ரீ வைபவம், பிராம்மண்யம் என்னும் விஷயம்பற்றி அரிய பிரசங்கம் செய்து ஸம்மேளனத்தைத் திறந்து வைத்தார்கள்.

பிறகு பிரும்மஸ்ரீ V. S. ராமசாமி சாஸ்திரிகளால் பிரும்மஸ்ரீ R. கிருஷ்ணஸ்வாமி அய்யர் M. A. B. L. அவர்கள் அக்கிராஸனம் வஹிக்க பிரேரேபிக்கப்பெற்று ஸ்ரீமான் K. ராமய்யங்கார், S. மஹாலிங்கய்யர் முதலிய பலரால் ஆதரித்துப்பேச பலத்த கரகோஷங்களுக்கிடையே பூஜ்யாளான பிரும்மஸ்ரீ R. கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்கள் அக்கிராஸனம் வஹித்து அவை அடக்கத்துடன் கூடின தமது அரிய பிரசங்கத்தை தமிழிலும், ஆங்கிலத்திலும் செய்தார்கள்.

அத்யக்ஷாளுடைய பிரசங்கமானது அமைதியாயும் ஆழ்ந்த கருத்துக்கள் நிறைந்ததாயும் சபையோரின் உள்ளத்தைக் கவர்ந்ததாயுமிருந்தது. இரவு 9½ மணிக்கு பிரசங்கம் முடிந்து போஜனத்திற்குமேல் 10½ மணிக்கு விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டம் நடைபெற்று சபை 13-ம்உ காலை 8 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

13-ம்உ காலை 8 மணிக்கு மீண்டும் சபை கூடிற்று. ஆரம்பத்தில் அயலூரிலிருந்து சபைக்கு வந்திருந்த வாழ்த்துச் செய்திகள் வாசிக்கப்பெற்று தர்ம விரோதமான மசோதாக்களைக் கண்டித்து அரும்பெரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்று காலை 11½ மணிக்கு சபை கலைந்தது.

மீண்டும் மாலை 1½ மணிக்கு சபை கூடி மேல்மங்கலம் ஆஸ்திக மஹாஜன சபையின் வருஷாந்திர அறிக்கை, காரியதரிசியால் வாசிக்கப்பெற்று சபையோரால் அங்கீகரிக்கப் பெற்றது. 2 மணிக்கு மறுபடியும் ஸம்மேளனம் ஆரம்பமாகி பாக்கியுள்ள தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பிரமுகர்களும், வித்வான்களும் தீர்மானங்களை பிரேரேபித்தும், ஆமோதித்தும் பேசினார்கள். தேவகோட்டை ஸ்ரீமான் S. சுப்பிரமணிய அய்யாவர்கள் எதிர்கக்ஷியாரின் வாதத்தை எடுத்துப் பேசினார்கள்.

அக்கிராஸனாதிபதி அவர்கள் ஒவ்வொரு தீர்மானத்தையும், ஓட்டுக்கு விடுமுன் அவைகளை விளக்கிக் கூறுகையில் அமைதியுடனும், யாவரும் ஒப்புக்கொள்ளும்படிக்கும் மறுபடியும் கேள்விக்கிடமில்லாமலும் கருத்துக்களை வெளியாக்கி அதர்மத்திற்கு அணுவளவும் விட்டுக்கொடுக்காமல் சனாதன தர்மதத்வத்தை வெளியிட்டு வந்தது எதிர்கக்ஷியாருள்பட யாவருக்கும் ஆச்சர்யத்தை விளைவித்தது. முக்கியமாய் அத்யக்ஷாள் அபூர்வமான சக்தி அம்சமாயும் ஆசார்யாளின் அம்சமாயும் விளங்கினார்கள்.

தீர்மானங்களும் பிரசங்கங்களும் இரவு9 மணிக்கு முடிந்தவுடன் அக்கிராஸனாதிபதி அவர்கள் தத்வங்கள் நிறைந்த தமது முடிவுரையை விளக்கி யாவரும், தம்முடன் ஒற்றுழைத்ததற்குநன்றிபாராட்டினார்கள். பிறகு உபசாரக்கமிட்டித்தலைவர் பிரும்மஸ்ரீ V.S ராமசாமி சாஸ்திரிகள், M. S. வெங்கட்டராமய்யர், M. S. ஹரிஹரய்யர் இவர்கள் அத்யக்ஷகர்களுக்கும், வாலண்டியர்களுக்கும் வந்தனோபசாரம் சொன்னார்கள்.

சோளவந்தான் M. ராமகிருஷ்ணய்யர் சங்கா சாஸ்திரிகள் முதலியோரால், சபையை வெற்றிகரமாயும் சிரத்தையுடனும் நடத்தின ஆஸ்திக மஹா ஜன சபை அத்யக்ஷர் பிரும்மஸ்ரீ பிலாஞ்சேரி சுப்பிரமணிய அய்யாவர்களுக்கும். கிராம மஹாஜனங்களுக்கும் உபசார மொழிகள் சொல்லப்பெற்று சனாதன தர்ம கோஷங்களுக்கிடையே சபை இரவு 10½ மணிக்கு இனிது பூர்ணமானது.

இத்தஸம்மேளனத்தை ஆரம்பத்திலிருந்து முடிவுவரை வெற்றிகரமாய்நடத்திக் கொடுத்த பிரும்மஸ்ரீ N. நடேசய்யாவர்களை யாவரும் பாராட்டினார்கள்.

V S. ராமசாமி சாஸ்திரிகள்.

# வாரக்குறிப்புகள்.

ஸ்ரீவத்ஸ. வெ. ஸோ. சர்மா.

வழி காட்டியது யார்? தேசியஸபை அங்கத்தினர் தலைவர் தேர்தலில் த்ரோஹம் செய்துவிட்டார்கள்! ஸத்யம் செய்துவிட்டு அதை மீறலாமா? என்று கேட்கிறார்கள். தர்மத்திற்குச்சிறிதும் அஞ்சாமல் தர்ம ஸேதுவை மீற வழி காட்டியவர் யார்? காங்கிரஸ் தலைவரன்றோ? பிறர் செய்யும் போது மாத்ரம் அது குற்றமா? இவர் ஒரு அடி தாண்டினால் பின் வந்தவர் பத்தடி தாண்ட மாட்டாரா?

இரு திருத்தம் வேண்டும்? தேர்தலில் ஒரே மனிதர் இரண்டு ஸ்தானங்களுக்கு நிற்பதாலும் ஒருவர் தேர்தலான பின் தனது பெருமையைக்காட்டுவதற்காக உடனே ராஜிநாமாசெய்வதாலும் அரசாங்கத்திற்கு அல்லது பொதுஜன வரிப்பணத்திற்கு எவ்வளவு நஷ்டமுண்டாகிறது! இதைக்கவனித்து விதியை நிறுத்த தேசிய ஸபை முன் வருமா?

பணத்திற்காக பதவியா? வங்க தேசிய ஸபை சட்ட ஸபைத்தலைவர் அப்பதவியளித்தால் காங்கிரஸ் ப்ரசாரத்திற்கு இவ்வளவு பணம் மாத மாதம் தருகிறேனென்று கூறியபடி கொடாததால் கார்ய கமிட்டி அவர் மீது நடவடிக்கை எடுத்தது. உத்யோகங்களுக்கு உத்தம குணமும் யோக்யதையுமுள்ளவரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமே யல்லாது லஞ்சம்கொடுப்பவரை எடுக்கலாகாது. இதை பலமுறை வாயால் கூறும் அச்சபை அனுஷ்டித்தலவச்யம்!

ஏனதிகமாகிறது? ஜமீன்தாரிகள் கொலை சமீபகாலந்தொட்டு அதிகமாகி வருகிறது. இதற்குக் காரணம் யாதென நாம் கூறாமலே விளங்கும். அனுபவத்தில் இத்தகைய ஆபத்துகளைப்பார்த்த பின் பேனும் அபேத வாதம் முதலிய துஷ் பிரசாரத்தை தேசிய ஸபை விடவேண்டும். செய்வோரைக்கண்டிக்க வேண்டும்!

கோயிலைக் கெடுக்காதீர்? வஸந்தோத்சவம் முதலிய விடாஜங்களைக்கொண்டு சில ஆலயங்களில் பாட்டு, நாட்டியம் முதலியன நடத்தப்படுகின்றன? ஆலய ஸேவைக்கு தாஸி கூடாதென எந்தக் காரணத்தால் மறுக்கிறார்களோ அந்தக்காரணத்தை இவைகள் விருத்திசெய்வதை ஏன் தர்மகர்த்தாக்கள் அறியவில்லையோ?

அசுத்தியைத் தடுக்கலாகாதா? சென்னை மைலை ஸ்ரீ கபாலீச்வரர் ஆலயம் பலரால் பீச்சாகக்கருதப்படுகிறது. ஆங்கு மாலைவேளையில் காற்றுவாங்க உட்கார்ந்து வைத்திலை பாக்கு. எச்சில் துப்புவது போன்ற பல அக்ரமங்கள் நடக்கின்றன. தர்ம கர்த்தாவோ ரிஸீவரோ இதை கவனிப்பாரா?



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

# ஆர்யதர்மம்.

பகுதான்ய-ஸூ வைகாசி-மீ 13உ

## ஸநாதநிகள் யோஜிக்கவேண்டிய விஷயம்.

தற்காலம் நமது ஸநாதந தர்மாபிமானிகள் அவஸரமாக யோஜிக்கவேண்டிய விஷயத்தைப்பற்றி இங்கு பிரஸ்தாபிக்க விரும்புகிறோம். நமது தர்ம தத்வங்களை ஜனங்களிடையே பரவும்படி பிரசாரம் செய்வது மிக்க அவச்யமாயினும், அதைவிட இப்போது நமக்குச் சட்டமூலமாயும் வேறுவழியிலும் ஏற்படும் கஷ்டங்களை நிவிருத்தித்துத் தற்காப்புச் செய்துகொள்ளும் வேலையே வெகு முக்யமான கார்யமாகும். மாகாண ஸ்வய ஆக்ஷியும், அதில் காங்கிரஸ் நிர்வாஹமும் ஏற்பட்டபின் நமக்குப் பலவழிகளிலும் நாளுக்குநாள் புதியபுதிய சிரமங்கள் ஏற்படுவது நிச்சயமாகிவிட்டது. இத்தகைய நிலைமையிலிருந்து தப்பித் தற்காப்பு செய்து கொள்ளவேண்டிய விஷயத்தையே நம்மவர்கள் முக்யமாக கவனிக்கவேண்டும். காங்கிரஸ்காரர்கள், மிகுந்த தியாகத்தினாலும் பலத்த பிரசாரத்தினாலும் பொது ஜனங்களுடைய ஆதாவைப்பெற்று நிர்வாஹத்தை நடத்திவருவதால் தங்களுடைய வேலைத்திட்டப்படியே நடப்பார்களென்பது நிச்சயம். அவர்கள் ஸமூஹ, ராஜ்ய, மத விஷயங்களில் எதைச் செய்தாலும், பொதுஜன ஆதரவின்மேலேயே அதைத் தாங்கள் செய்வதாகவும், சொல்லிக்கொள்ள இடமுண்டு. ஆகையால் மாகாண ஸ்வய ஆக்ஷியின் தத்வப்படி இப்போது எந்தக் கக்ஷியார் நம்மை ஆளுகிறார்களோ அவர்களிடமே நமது குறைகளை வெளியிட்டுப் பரிஹாரம் பெறவேண்டிய நிலைமையிலிருக்கிறோம். ஸநாதநிகளாகிய நாம் செய்யும் பிரசாரங்களும், கிளர்ச்சிகளும் தற்கால ராஜாங்க நிர்வாஹிகளை வசப்படுத்த வேண்டுமானால் அதற்கேற்ற எவ்வித உபாயத்தையும் நாம் கையாளவேண்டியது அவசியமே. இவ்விஷயமாக நமது தலைவர்களிடையே சிறிதுகாளாக யோஜனை ஏற்பட்டிருக்கிறது.

இப்போதுள்ள நிலைமையை அநுஸரித்து நாமும் சில மாறுதல்களைச்செய்து கொள்ள வேண்டியது அவசியமென்று பலர் நினைக்கிறார்கள். நாம் காங்கிரஸ் ஸ்தாபனத்தில் சேர்ந்து நமது கொள்கைகளை வற்புறுத்துவது நலமென்று பலருக்குத் தோன்றுவது இயற்கையே. இதற்குச் சொல்லப்படும் நியாயங்களும்நல்ல அர்த்தபுஷ்டியுள்ளவைகளென்றே அவர்கள் கருதுகிறார்கள். இதுவரையில் நாம் தனித்து நின்று பிரசாரம் நடத்தியதில் பலன் இல்லாமல் போகவில்லையாயினும், அது பரிபூர்ணமானதென்று சொல்ல முடியாது, மனித பலமும் பணமும், கிடைப்பதில் நாம் அடைந்துள்ள அநுபவமும் இச்சமயம்யோஜிக்கத்தக்கது. சுத்த வைதிக தோரணையிலுள்ளவர்களுடைய உதவியால் மட்டும் ஸநாதனிகள் தமது பிரசாரத்தை ஸாதித்துவிட முடியாது. நடுத்தர நிதியிலுள்ள ஜனங்கள் பற்பலதொழில் ஜீவனங்களில் அமர்ந்திருப்பதால் அவர்களும் நமக்குப் பூர்ண உதவியளிக்க முடியாதவர்களாயிருக்கிறார்கள்.

வேறு சிலர் "நமக்கென்ன" என்று உதாஸின புத்தியுடன் ஒதுங்கி நிற்பவர்கள். மற்றும் பலர் ஸநாதநப் பற்றுள்ளவர்களாயினும், காங்கிரஸ் காரர்களுக்கும், நவீனமுற்போக்கு, அபிப்பிராயங்களுக்கும் பயந்து உள்ளே பதுங்கியிருப்பவர்கள். அவர்கள் நமது தர்மங்களையும் ஆசாரங்களையும் பஹிரங்கமாக ஆதரித்துப்பேசக் கூச்சப்படுகிறார்கள். மதாசாரியர்களாக விளங்குகிறவர்களிலும் பலர் இந்த அபாய காலங்களில் தைர்யமாகமுன்னின்று நமக்கு வழிகாட்ட முன்வந்தபாடில்லை. இவ்வளவு அநாதாவுக்கு இடையில் நாம் செய்து வந்தது அதிகமாயினும், இப்போதுள்ள நிலைமைக்கேற்றபடி நாம் புதிய வழியில் புகுந்து ஏன் முயற்சிசெய்து பார்க்கக்கூடாதென்று சிலர் நினைக்கிறார்கள்.

அவரவர் இஷ்டப்படி மத உரிமை ஸ்வதந்திரம் வேண்டுமென்பதிலேயே ஸநாதனிகள் காங்கிரஸை எதிர்க்கவேண்டியிருக்கிறது. இந்த ஒரு அம்சத்தில்தான் காங்கிரஸிலிருந்து ஸநாதனிகள் வேறுபட்டிருக்கிறார்கள். நாமும் காங்கிரஸில் சேர்ந்து மதவிஷயத்தை வற்புறுத்தினால் நல்லபலன் ஏற்படுமென்று ஸநாதனிகளில் சிலர் நினைக்கிறார்கள். நமது கக்ஷிக்கூட்டங்களிலேயே நமது வாதங்களைச் சொல்லுவதைவிட தற்கால ராஜாங்க நிர்வாஹிகளாகிய காங்கிரஸ்காரர்களிடையில் நேரில் இருந்து நமது நியாயங்களை வற்புறுத்துவதில் நல்ல பயன் ஏற்படலாமல்லவா? எல்லாக் காங்கிரஸ்காரரும் திருத்தாவிடினும் அங்கு நமது கக்ஷியை ஆதரிக்கும் சிலரையாவது நாம் ஸஹாயமாகப் பெறக்கூடும்.

காங்கிரஸிலேயே தற்போது அபேதவாதிகள் போன்ற சிறுபான்மைக் கக்ஷியார் இருக்கவில்லையா? அதுபோல் ஸநாதனிகளும் ஒரு சிறு பிரிவினராக இருக்கலாமல்லவா? காங்கிரஸில் சேருவதற்காக நாம் ஸநாதனக் கொள்கைகளைச்சிறிதும் விட்டுக்கொடுக்கவேண்டிய அவச்யமில்லை. காங்கிரஸ் மெம்பர் ஸ்தானத்திற்கான உறுதிமொழியில் ஸநாதன விருத்தமான அம்சமில்லை. ஸநாதனிகள் காங்கிரஸ் நிர்வாஹஸ்தானங்களை ஏற்கவேண்டிய அவச்யமுமில்லை. தற்காலம் ஸாதாரணமெம்பாகவே இருந்துவந்தால் போதும். எந்த நிமிஷத்திலும் நாம் காங்கிரஸைவிட்டுப் பிரிய நமக்கு ஸ்வதந்திரமிருக்கிறது. நமது கக்ஷிகளுக்கு அங்கு நல்ல பலன் ஏற்படவில்லையெனத் தெரிந்தால் உடனே காங்கிரஸில் சேர்ந்த ஸநாதனிகள் அதிலிருந்து விலகி விடத் தடையொன்றுமிராது. ஆதலால் அதிகாரச் சக்தியும், பலமும் பெற்றுள்ள காங்கிரஸில் ஸநாதனிகள் தற்கால நிலைமையை அநுஸரித்துச் சேர்ந்து நம்மை பலப்படுத்திக்கொள்ளுவது ஸமயோசிதவேலையென்று நம்மில் ஒரு சாரார் நினைக்கிறார்கள். வேறு சிலர், காங்கிரஸில் நாம் சேருவதால் பிரயோஜனமேற்படாதென்றும், நமது பலஹீனமே அதன் மூலம் வெளிப்பட்டு நமக்கு அதிக சிரமமேற்படுமென்றும், காங்கிரஸின் கௌரவமும் சக்தியும் அதிகரிக்கவே இது இடமளிக்குமென்றும், இப்போது காங்கிரஸ்கக்ஷி நிர்வாஹம் நடத்துகிறதுபோல், பின்னொருகாலத்தில் வேறு ஒருகக்ஷி வாலாமென்றும் ஒவ்வொரு சமயத்திலும் ஒவ்வொரு கக்ஷியில் நாம் சேருவதும், பிரிவதுமாயிருப்பது உசிதமாயிராதென்றும் நம் தலைவர்கள் கருதுகிறார்கள்.

இவ்விஷயத்தில் உள்ள உசிதானுசிதங்களைப்பற்றி நாம் இப்போதும் ஒன்றும் சொல்லவில்லையாயினும் இதில் ஸமயோசித ரீதியை அநுஸரித்து எல்லோரும் ஏகமனதாக ஓர் முடிவை உடனே செய்யவேண்டியது அவசியம்.

## குறிப்புகள்.

### ஜின்னு வீட்டில் காங்கிரஸ் தலைவர்?

ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையைப்பற்றி காந்திஜி ஜின்னுவுடன் பேசியதைத் தொடர்ந்து காங்கிரஸ் தலைவர் ஸ்ரீமான் போஸூம் ஒரு வாரமாகப் பேச்சு நடத்தி வருகிறார். இதைப்பற்றிப் பலவித ஊஹங்கள் வெளிவந்த வண்ணமா யிருக்கின்றன. இந்த ராஜி முயற்சி அநேகமாகப் பலிக்காதென்று சிலர் எண்ணுவதாயும் தெரிகிறது. காங்கிரஸ் தலைவர்களுக்குள்ளேயே இந்தஎண்ணமிருக்கிறதாம்.

எப்படியும் இந்தராஜி முயற்சி நல்ல அஸ்திவாரத்துடன் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக நினைக்கமுடியவில்லை. முஸ்லிம்கள் பிகுவும், பயமும் காட்டி ஆகாசம் பார்த்துக்கொண்டிருக்கையில் காங்கிரஸ்காரர்கள், நடுநடுங்கி எப்படியாவது அவர்களுடன் ராஜியாகிவிட வேண்டுமென்கிற பயங்கொள்ளித்தனத்தை வெளிப்படுத்துவதாகவே இது இருக்கிறது. தாங்கள் ராஜியைக் கோரவில்லையென்றும் காங்கிரஸ்காரர்களே தங்களை வலுவில் நிர்ப்பந்தமாக அழைத்ததாகவும் அநேகம் தடவையில் ஜின்னு சொல்லியிருக்கிறார். இப்போதும் அவர் அப்படியே சொல்லப்போகிறார். பொது ஜனங்களும் இப்படியே நினைக்கக் காரணமிருக்கிறது. ஜின்னு வீட்டிற்குப் போய் காந்திஜியும் போஸூம் ராஜி பேசுவது காங்கிரஸின் துர்பலத்தை வெளிப்படுத்தும், வைஸ்ராய்களையும், கவர்னர்களையும் அவர்களிருப்பிடத்தில் காந்திஜி போய் பேட்டி காணுவதுபோல் ஜின்னுவீட்டில்போய் பேட்டி கண்டது காங்கிரஸுக்கோ, காந்திஜீக்கோ ஹிந்து ஸமூஹத்திற்கோ கௌரவமளிக்கக் கூடியதா? இதனால் முஸ்லீம்கள் அதிக பிகுவும், தைர்யமும் கொள்ள இடமளிக்கப் பட்டுவிட்டது.

காந்திஜியிருக்குமிடத்தைத் தேடி ஜின்னு வந்திருந்தால் அப்போது நிலைமை வேறு வேறு. அல்லது இருவரும் பொதுவானஸ்தலத்தில் ஸந்திக்க ஏற்பாடு செய்திருக்கலாம், இதன்றி ஜின்னு வீட்டைத் தேடி காங்கிரஸ் தலைவர்கள் வலுவில் நுழைந்து ராஜி பேசப்புகுந்தது ஹிந்து ஸமூகத்திற்கே, தலைகுனிவான கார்யமென்று ஹிந்து ஸபைத்தலைவர்கள் நினைப்பதில் நியாயமில்லாமல் போகவில்லை. இதனால் முஸ்லீம்களின் கோரிக்கைகள் அதிகமாகவும் பிகுவாகவும் ஆகி ராஜி முயற்சி கைகூடாமல் போகவே நேரும். ஆகையால் காங்கிரஸ்காரர்கள் இதில் இவ்வளவு ஆவலும், அவஸரமும் காட்டியது அகாலமென்று ஹிந்துத்தலைவர்கள் நினைக்க வேண்டியிருக்கிறது.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.
குடிவாடா.
Gudivada.



287

### ஸத்யாக்ரஹம் கூடாதாம்?

தமிழ் தேசத்தில் கட்டாய ஹிந்தியை எதிர்த்து உண்ணாவிரதமும், ஸத்யாக்ரஹமும் நடத்த ஒரு சிலர் முயற்சித்து வருவதைக்கண்டித்து ஸ்ரீமான் காந்தி ஓர் வியாஸம் வெளியிட்டிருக்கிறார். இதைச்சில பத்திரிகைகளும் ஒத்துப்பாடி ஆதரிக்கின்றன. காந்திஜியின் வழக்கமானது "மாமியார் உடைத்தால் மண்கலம்,, என்கிற பழமொழிக்குஒத்ததாகவே காணப்படுகிறது. ஸத்யாக்ரஹச்சண்டித்தனமோ, பட்டினி ஹடமோ அல்லதுவேறு எந்த ஆர்ப்பாட்டமோ காங்கிரஸ்காரர் செய்தால் பாதகமில்லை. மற்ற கக்ஷியார் செய்தாலோ அது பலாத்காரமாயும், அமைதிக்கும் பங்கம் விளைவிப்பதாயும் ஆகி விடுகிறது. இதுதான் காந்திஜியின் விநோத வாதம்.

ஹிந்திக்காக பட்டினியோ. ஸத்யாக்ரஹமோ செய்தால் அது வடிக்கட்டின பலாத்காரமேயாகுமென்று காந்திஜி சாதிக்கிறார். தங்கள் மனசாக்ஷிக்கு விரோதமானவற்றை எதிர்க்க மேற்கண்ட சண்டித்தனங்கள் உயர்ந்த ஆயுதமென்றும், சிறந்த அஹிம்ஸா வழியென்றும் காந்திஜியே ஜனங்களுக்குப் போதனை செய்தார். இதை அநுஷ்டானத்திலும் கொண்டு வந்து காங்கிரஸார் வழிகாட்டிவிட்டனர். தங்களுடைய எதிரிகளை எதிர்க்க இந்த உபாயத்தைக்கையாண்ட காங்கிரஸ்காரர்கள் இப்போது தங்கள் மீதே இது பிரயோகிக்கபடுவதைஏன் ஸகிக்கவில்லையோ

ஹிந்தி ஸத்யாக்ரஹம் நியாயமா, அல்லவா என்பதைப்பற்றி நாம் கவனிக்கவில்லை. ஆனால் இதில் தனக்கொரு நியாயம்பிறருக்கு ஒரு நியாயம் பேசும் விந்தையே கவனிக்கத்தக்கது. அஹிம்ஸைக்கும் பலாத்காரத்திற்கும் காந்திஜி கூறும் வியாக்யானத்தையே யாவரும் ஒப்பவேண்டுமா?

சாந்தமாகவும் வியவஸ்தையுடனும் வாழ்ந்துவந்த ஜனங்களிடையில் நெருப்பைவைத்து எரியவிட்டபின் அது தங்களையும் தாக்க ஆரம்பித்தபோது போலி நியாயங்களைப்பேசி அதை அமுக்கப்பார்ப்பது ஸாத்யமா? வியவஸ்தாநாசம் செய்வோரின் கதியானது முடிவில் இத்தகையதே என்பது எச்சரிக்கையாகக் கொள்ளத்தக்கது.

### காசி அகில இந்திய வர்ணாசிரம ஸ்வராஜ்ய ஸங்கம்.

(பண்டிதராஜ் ஸ்ரீ. ராஜேஸ்வர சாஸ்திரிகள்) எழுதுகிறார்.

தொன்றுதொட்டு வெகு காலமாகக் கையாண்டுவரும் சாஸ்திரீய பழக்க வழக்கத்திற்கு மாறாக பிராம்மண வருணத்தில் பிறந்த பண்டிட் மதன்மோஹன் மாளவியா தன்னுடைய பேத்தியை உட்பிரிவினை வகுப்பாராகவும், சாஸ்திரீயமாகக்கொண்டு கொடுத்து, ஸம்மந்தம் செய்யத்தகாத வகுப்பாராகவும் மதிக்கப்பட்டுவரும் கார்பிராம்மண வகுப்பினர் ஒருவருக்கு மணஞ்செய்து கொடுத்திருக்கிறார். இந்த மணச்சடங்கானது பிராம்மண வருணத்தைக் கடந்ததாக இல்லாத காலத்திலும், ஹிந்துமத சட்டத்துக்கு விரோதமாயும் பிராம்மண உட்பிரிவு ஜாதிக்கொள்கைக்கும், கட்டுப்பாட்டுக்கும் முற்றிலும் முரண்பட்டதாயிருக்கிறது.

சில வருஷங்களுக்கு முன்பு பண்டிட் லெக்ஷ்மிகாந்தபட் செய்த இம்மாதிரியான கல்யாணத்தை பண்டித மாளவியாவே கண்டித்து மாளவியா வகுப்பிலிருந்து, விலக்கி ஜாதிப்பிரஷ்டம் செய்யத் துணிந்தார். இத்துடன் நில்லாது தானேநேரிட ஹைகோர்ட்டுக்கும் சென்று, பண்டிதபட் செய்கைக்கு எதிராக நியாயம்பெற சாக்ஷியாக நின்றார்.

இங்ஙனம் வாதாடிய பண்டிட் மாளவியாவே அவரது வயது முதிர்ந்த காலத்தில் இன்று மனச் சாக்ஷிக்கும், சாஸ்திரீய கட்டுப்பாட்டுக்கும் விரோதமாக நடக்கத் துணிந்ததைக்கண்டு நாம் வருந்தவேண்டியிருக்கிறது. என்னே விபரீதச் செயல்!

### மேல்மங்கலம் கிராமத்தில் 1938-ம் வருஷம் 12, 13உகளில் நடந்த மதுரைஜில்லா வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க ஐந்தாவது ஸம்மேளனத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

கன்னிகைகளை ருதுவாவதற்கு முன்பே விவாஹம் செய்துகொடுத்தல், பிராம்மணர்களுக்கும், மற்றும் சில இதர ஜாதியார்களுக்கும் சாஸ்திரீயமான நிர்பந்தமும் அவசியமுமாதலால்,

சாரதாச்சட்டத்தையும், தற்காலம் அது சம்பந்தமான வேறு திருத்தங்களையும் கண்டிப்பதுடன் மதசம்பந்தமான நடவடிக்கைகளில் அவரவர்கள் மனச்சாக்ஷிப் பிரகாரம் நடப்பதே பிரஜைகளின் உரிமை என்பதை ஏற்றுக்கொள்ளுகிறவைகளான ராஜீய ஜன ஸமூஹங்களெல்லாமும், அந்தச்சட்டத்தைக் கூடிய சீக்கிரத்தில் ரத்துசெய்யும்படி தீவ்ரமான முயற்சி செய்யவேண்டுமென்று, இந்த ஸம்மேளனம் தீர்மானம் செய்கிறது.

H. E. Viceroy அவர்கள் கிருபைசெய்து ஷை சட்டத்தை ரத்துசெய்யவோ, அல்லது அந்தச் சட்டத்தின் அதிகாரத்திலிருந்து மேலே குறித்திருக்கிற ஜாதியார்களை விலக்கவோ வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று, அவர்களை இந்த ஸம்மேளனம் பிரார்த்திக்கிறது.

சாஸ்திர விதிப்படிக்கும் தொன்றுதொட்ட பூர்வீக வழக்கப்படிக்கும் முன்போலவே (வரக்கூடிய கடுமைகளை கவனிக்காமலே) விவாஹங்களை சாஸ்திர விதியின் பிரகாரம் நடத்துவதைத்தவிர ஸநாதனிகளுக்கு வேறு கதியில்லை என்பதை இந்த ஸம்மேளனம் வற்புறுத்துகிறது.

கும்பகோணம் அட்வகேட் எஸ். மஹாலிங்கய்யர் அவர்களால் இத்தீர்மானம் பிரேரிக்கப்பட்டு சோளவந்தான் பிரும்மஸ்ரீ சங்கா சாஸ்திரிகளால் ஆமோதிக்கப்படடும் மதுரை பிரும்மஸ்ரீ கிருஷ்ணமூர்த்திசாஸ்திரிகளாலும் மதுரை பிரும்மஸ்ரீ ஜி. எ. விஸ்வனாதசாஸ்திரிகளாலும் ஆதரிக்கப்பெற்றும் தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது.

சைவ வைஷ்ணவ ஆகமங்கள் தந்திரங்கள் முதலிய சாஸ்திரங்களில் கட்டளை இட்டிருக்கிறபடி, மந்திர பூர்வகமாகச் சுத்தி செய்யப்பெற்றவையான தேவாலயங்களில் அவர்ணர்கள் சாஸ்திரங்களில் குறிப்பிட்டிருக்கும் இடங்களைத் தாண்டிச் செல்லக்கூடாதென்று வரையறுக்கப்பட்டிருப்பதால், அந்த வரையறுப்புகளை மாற்றுதலோ, அவைகளுக்கு விரோதமாக நடத்தலோ, தேவாலயங்கள் எந்த உத்தேசத்துடன் அமைக்கப்பட்டனவோ அந்த உத்தேசத்தை உபயோகமற்றதாகச் செய்வதுடன், அவர்ணர்களின் இஹலோக பரலோக நன்மைக்கும் பொதுவாக தேச க்ஷேமத்திற்கும் அளவிடக் கூடாதபடி தீங்குகளை விளைவிக்கும் என்பதே இந்த ஸம்மேளனத்தில் ஆலோசித்துத் தீர்மானித்த அபிப்பிராயம் என்பதை இச்சபையோர்கள் வற்புறுத்துகிறார்கள்.

Bombay. பம்பாய் சட்டசபையில் தீர்மானித்திருக்கிற ஆலயப்ரவேச மசோதாவுக்கு (H. E. the Viceroy) ராஜப்பிரதிநிதி சம்மதி கொடுக்கக்கூடாதென்றும், மற்ற மாகாணங்களிலும் இதுபோன்ற மசோதாக்களின் விஷயமாக யாதொரு மேல் நடவடிக்கைகளும் நடக்கவொட்டாமல் தடை செய்யவேண்டுமென்றும் இச்சபையோர் (H.E. the viceroy) ராஜப்பிரதிநிதி அவர்களை பிரார்த்திக்கிறார்கள்.

இந்தச்சபையின் மேற்கண்ட தீர்மானங்களை கவர்ன்மெண்டார் அமுலுக்குக் கொண்டுவரத் தயங்கினால் ஜனங்களுக்குள் அதிகக் குழப்பமும் அமைதி இன்மையும் ஏற்படுமென்றும் (கவர்ன்மெண்டாரே தடுப்பதற்குக் கடமைப்பட்ட) கலகங்கள் நடக்கும் என்பதையும் இச்சபையோர் முன்னதாகவே கவர்ன்மெண்டாருக்கு எச்சரிக்கை செய்கிறார்கள்.

கும்பகோணம் ஜி. வி. வெங்கட்டராமய்யர் அவர்களால் பிரேரிக்கப்பட்டும், முள்ளிப்பள்ளம் பிரும்மஸ்ரீ யக்ஞ தீக்ஷதர் அவர்களால் ஆமோதிக்கப்பெற்றும் தேவகோட்டை S. சுப்பிரமணிய அய்யாவர்களாலும், திண்டுக்கல் பிரம்மஸ்ரீ தியாகராஜ தீக்ஷதாவர்களாலும் ஆதரிக்கப்பட்டும் ஏகமனதாய் நிறைவேறியது.

"தீண்டாமை" என்பது ஹிந்துசாஸ்திரங்களில் சந்தேகமற ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதென்றும், அதுசம்பந்தமான கட்டளைகளை மீறுதலால், ஜாதிஹிந்துக்களுடையவும் அவர்ணர்களுடையவும் ஆத்மக்ஷேமத்திற்குத்தீங்கே விளையுமென்பதை இச்சபையார் உறுதியாகக் கூறுகிறார்கள்.

திண்டுக்கல் மகா-ா-ஸ்ரீ M. ஸ்வாமினாதய்யரவர்களால் பிரேரிக்கப்பட்டும் பிரம்மஸ்ரீ கொடிமுடி ராஜகோபால சாஸ்திரிகளால் ஆமோதிக்கப்பட்டும் மதுரை மகா-ா-ஸ்ரீ V. K. ஸ்ரீனிவாஸாசார்யார் அவர்களால் ஆதரிக்கப்பட்டும் ஏகமனதாய் நிறைவேறியது.

தேவாலயங்களில் அந்த்யஜர்கள் போகக் கூடாதென்று தடுக்கப்பட்டிருக்கிற இடங்களில் இதர மதஸ்தர்களையும் போகவிடக்கூடாதென்று கோவில் டிரஸ்டிகள் மானேஜர்களை வகையறுக்களை இந்த ஸம்மேளனத்தார் கோருகிறார்கள்.

இந்த பிரஸ்தாவத்தைத் திருக்கருகாவூர் T. L. சுப்பய்யரவர்கள் பிரேரித்தும், மதுரை பிரும்மஸ்ரீ சீதாராம சாஸ்திரிகளால் ஆமோதிக்கப்பட்டும் திண்டுக்கல் மகா-ா-ாஸ்ரீ R. பாலசுப்பிரமணிய அய்யரவர்கள் ஆதரித்தும் தீர்மானமானது.

அபிப்பிராயபேதமன்னியில் நிறைவேறியது.

காச்சிநகரில் நடந்த "Congress" காங்கிரஸ் சபையில் தீர்மானித்த பிரகாரம், காங்கிரஸ் என்பது ராஜீய விஷயங்களை மட்டும் கவனிக்கக்கூடியதான பொதுஜனக்கூட்டமாதலால் "தீண்டாமை விலக்குதல்" "ஆலயப்ரவேசம்" முதலான மத ஸம்பந்தமான வ்யவஹாரங்களிலும் ஸமூஹமுன்னேற்றம், மதமுன்னேற்றம் முதலான வேறு விஷயங்களிலும் தலையிடுவதையும் இந்த சபையார் பலமாகக்கண்டிக்கிறார்கள்.

இந்த பிரஸ்தாபத்தை திண்டுக்கல் மகா-ா-ா-ஸ்ரீ V. R விஸ்வநாதய்யரவர்கள் பிரேரணை செய்தும் மதுரை மகா-ா-ாஸ்ரீ வி. எஸ் விஸ்வனாதய்யரவர்கள் ஆமோதித்தும், பிரும்மஸ்ரீ K. R. ஸதாசிவப்ரம்மம் அவர்கள் ஆதரித்தும் தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது.

விவசாயிகளின கடன் நிவாரணச்சட்டமானது அளவிடக்கூடாததான தொந்தரவையும், தீங்கையும், அதிருப்தியும் மேன்மேலும் விளைவிக்கக்கூடியதாகவும், நன்மையைக்காட்டிலும், கெடுதலையே அதிகமாகத்தாக்கூடியதாயும், முடிவில் வியவசாயிகளின் கௌணியத்தையும் விவசாயத்தொழிலையுமே நாசம்

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கம் தொடர்ச்சி).

செய்துவிடக்கூடியதாயும் இருக்கிறதென்று இந்த ஸம்மேளனத்தார் அபிப்பிராயம் கொள்கிருர்கள்.

மதருஸ்மந்திரிகள், அந்தசட்டத்தை ரத்து செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் நடத்தவேண்டுமென்றும், அல்லது கடன் கொடுத்தவர்களுக்கும் வாங்கினவர்களுக்கும் பாஸ்பரம் ஸமாதானமும், ஒற்றுமையும் ஏற்படக்கூடியதான காரியங்களைச் செய்யவேண்டுமென்றும் பிரார்த்திக்கப்படுகிருர்கள்.

மகா-ா-ா-ஸ்ரீ ராவ்சாஹிப் N. நடேசய்யாவர்களால் பிரேரிக்கப்படும், தென்கரை பிரம்மஸ்ரீ நாராயண சாஸ்திரிகளால் ஆமோதிக்கப்பட்டும், சோளவந்தான் மகா-ா-ா-ஸ்ரீ M. ராமகிருஷ்ணய்யரவர்களால் ஆதரிக்கப்பட்டது.

"அந்தச் சட்டத்தை ரத்து செய்வதற்கு, அல்லது" என்கிற வார்த்தைகளை தீர்மானத்திலிருந்து எடுத்துவிடவேண்டியதென்று திருத்தப் பிரேரணையை திண்டுக்கல் மகா-ா-ா-ஸ்ரீ M. ஸ்வாமிநாதய்யர் அவர்கள் பிரேரித்தார்கள்.

இதைத் தேவகோட்டை மகா-ா-ா-ஸ்ரீ S. சுப்பிரமணிய அய்யரவர்கள் ஆமோதித்தார்கள். ஆனுல் அந்தத் திருத்தப் பிரேரணை பெரும்பாலான ஜனங்கள் ஒத்துக்கொள்ளாததால் நிறைவேறவில்லை.

முன் தீர்மானமே பெரும்பாலான ஜனங்கள் ஒத்துக்கொள்ளப்பட்டு நிறைவேறியது.

ஸநாதனக் கொள்கைக்கும், கோட்பாடுகளுக்கும்; முற்றிலும் விரோதமாகவும், அவைகளைப் பலவாறுய்த் தூஷித்தும், பத்திரிகைகள் மூலமாகவும் "சினிமாக்கள் மூலமாகவும், சில ஜனங்கள் நடபடிக்கைகள் நடத்திவருவதால், அம்மாதிரியான காரியங்களைத் தடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று ஜனத்தலைவர்களை இந்தச் சம்மேளனத்தார் கேட்டுக் கொள்ளுகிருர்கள். மேலும் அவ்விதமான பத்திரிகைகளையும் சினிமாக்களையும் பஹிஷ்கரிக்க வேண்டுமென்றும் அவர்கள் பிரார்த்திக்கப்படுகிருர்கள்.

மதுரை மகா-ா-ா-ஸ்ரீ K. S. சோமசுந்தர சாஸ்திரிகளால் பிரேரிக்கப்பட்டும், மதுரை பிரும்மஸ்ரீ M. N. சுப்பிரமணிய சாஸ்திரிகளால் ஆமோதிக்கப்பட்டும் தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது.

ஸநாதன தர்மங்களின் உரிமையைக் காப்பதற்காக ஜில்லா ஸ்தாபனங்களிலும், சட்ட சபைகளிலும் ஸநாதனிகள் போதுமான மெம்பர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும், அதைக்குறித்து முதல்படியாக ஹிந்துக்களின் சாஸ்திரப்படிக்கும், தொன்று தொட்டு நடந்துவரும் வழக்கப்பிரகாரமும், இருந்தவந்த வர்ணாச்ரம தர்மத்திற்கு விரோதமாகப் பிரேரணைகளைத் தாங்களாகவும் கொண்டுவருவதில்லை என்றும், வேறு யாரும் அவ்விதமாக பிரேரணைகளைக் கொண்டுவந்தாலும், அவைகளையும் எதிர்க்கிறதாக வாக்குறுதி செய்கிறவர்களான அபேக்ஷகர்களைப் தேர்தலில் ஆதரிக்கவேண்டுமென்றும், இந்த ஸம்மேளனத்தார் அபிப்பிராயப்படுகிருர்கள்.

மேலே குறிப்பிட்டிருக்கிற பிரகாரம் வாக்குறுதி செய்தவரான சென்னம்பட்டி மகா-ா-ா-ஸ்ரீ அழகர்சாமி நாயடு அவர்களை ஆதரித்து சமீபத்தில் நிகழ்கிற ஜில்லாபோர்டு எலெக்ஷனில் சோளவந்தான் தொகுதிக்காக ஷை நாயடு அவர்களையே தெரிந்தெடுக்கும்படிக்கும் வாக்காளர்களை இந்த ஸம்மேளனத்தார் கேட்டுக்கொள்ளுகிருர்கள்.

மதுரை மகா-ா-ஸ்ரீ M. வெங்கடசலமய்யரவர்களால் பிரேரிக்கப்பட்டும் மதுரை C. S. விஸ்வநாதய்யரவர்களால் ஆமோதிக்கப்பட்டும், மேல்மங்கலம் பிரம்மஸ்ரீ தக்ஷிணமூர்த்தி சாஸ்திரிகளால் ஆதரிக்கப்பட்டும் ஷை தீர்மானமானது ஏகமனதாக நிறைவேறியது.

எல்லா வித்யாஸ்தானங்களிலும் மதசம்பந்தமான உபதேசங்களை ஒவ்வொருவருடையவும், ஆத்மலாபத்திற்காகவும், ஜனஸமூஹத்தின் க்ஷேமத்திற்காகவும் கற்பித்தல் இன்றியமையாதது என்று இந்த ஸம்மேளனத்தார் அபிப்ராயம் கொள்ளுகிருர்கள்.

V S. ராமசாமிசாஸ்திரிகளால் பிரேரிக்கப்பட்டும், பெரியகுளம் R. வெங்கட்டராமய்யரவர்களால் ஆமோதிக்கப்பட்டும், திருவேடகம் பிரம்மஸ்ரீ சாமிகனபாடிகளாலும், திண்டுக்கல் பிரம்மஸ்ரீ த்யாகராஜ தீக்ஷிதரவர்களாலும் ஆதரிக்கப்பெற்றும் தீர்மானம் நிறைவேறியது.

பிராசீனமான ஹிந்து வித்யாஸ்தானமானதும், மிகவும் பிரசித்திபெற்றதுமான மதுரை காலேஜை மதாாஸ் யுனிவர்ஸிடியார் 1-வது கிரேட் காலேஜாக ஏற்றுக்கொள்ளாததைப் பற்றி இந்த ஸம்மேளனத்தார் மிகவும் வருந்துகிருர்கள்.

மறுபடியும் அந்தக் காலேஜ் 1-வது கிரேட் காலேஜாக ஆகும்படி எல்லோரும் தாராளமாகப் பண உதவிபுரியும்படி மஹாஜனங்களை இந்த ஸம்மேளனத்தார் கேட்டுக்கொள்ளுகிருர்கள். மதுரை மகா-ா-ா-ஸ்ரீ P. S. கிருஷ்ணஸ்வாமி அய்யவர்களால் பிரேரிக்கப்பட்டும் மகா-ா-ா-ஸ்ரீ M. S. வெங்கட்டராமய்யரவர்களால் ஆமோதிக்கப்பெற்றும், பெரியகுளம் பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய அய்யரவர்களால் ஆதரிக்கப்பெற்றும் தீர்மானமானது ஏகமனதாக நிறைவேறியது.

ஹிந்து மஹா ஜனங்களையும், முக்கியமாய் பிராமணர்களையும், ஸம்ஸ்கிருதக் கல்வி விஷயத்தில் அதிகக் கவனம்செலுத்தும்படி இந்த ஸம்மேளனத்தார் மன்றுடிக் கேட்டுக்கொள்ளுகிருர்கள்.

பிரம்மஸ்ரீ, R. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளால் பிரேரிக்கப்பட்டும், மகா-ா-ா-ஸ்ரீ அருணாசலமய்யரவர்களால் ஆமோதிக்கப்பட்டும், கலயம்புத்தூர் பிரம்மஸ்ரீ, ராமசாஸ்திரிகளால் ஆதரிக்கப்பட்டும், தீர்மானம் நிறைவேறியது.

ஹிந்துமாதர்களின் தர்மகோட்பாடுகளுக்கு ஒத்ததாகவே, ஹிந்துக் கன்னிகைகளுக்குக் கல்வி கற்பிக்கப்பட வேண்டுமென்று, இந்த ஸம்மேளனத்தார் அபிப்ராயம்கொள்ளுகிருர்கள்.

வித்யாசாலைகளில் (ஆண் பிள்ளைகளையும் பெண்களையும்) சேர்த்துக் கல்வி கற்பித்தல், ஸநாதன தர்மத்திற்கும், தகுதிக்கும் ஒவ்வாததால், அவ்விதம் படிப்பித்தலை இந்த ஸம்மேளனத்தார் மிகவும் கண்டிக்கிருர்கள்.

மகா-ா-ா-ஸ்ரீ, ராவ்சாகிப் நடேசய்யாவர்களால் பிரேரிக்கப்பட்டும், மகா-ா-ா-ஸ்ரீ, M. S. சுந்தரேசய்யரவர்களால் ஆமோதிக்கப்பட்டும், வத்திலக்குண்டு பிரம்மஸ்ரீ, மகாலிங்க சாஸ்திரிகளாலும் சோளவந்தான் பிரம்மஸ்ரீ, சங்கரசாஸ்திரிகளாலும் ஆதரிக்கப்பட்டும்தீர்மானமானது. ஏகமனதாய் நிறைவேறியது.

ஸநாதன தர்மத்தைப் பிரசாரம் செய்பனவான், தர்மாராஜ்யம், ஆர்யதர்மம், (Truth,) முதலான பத்திரிக்கைகளை எல்லாவிதத்தாலும் ஆதரிக்கவேண்டுமென்று இந்தஸம்மேளனத்தார் ஸநாதன தர்மிகளை மன்றுடிக் கேட்டுக்கொள்ளுகிருர்கள். அக்கிராசனதிபதியவர்களால் பிரேரிக்கப்பட்டது.

விவாஹங்களில் "வாசுல்கம்" வாங்குவது ஜன சமூகத்திற்கு மிகவும் கெடுதியை விளைவிப்பதால் அந்த வழக்கத்தை இச்சம்மேளனத்தார் மிகவும் கண்டிப்பதுடன். அதை அறவே ஒழிக்கும் படிக்கும் மகா ஜனங்களை கேட்டுக்கொள்கிருர்கள்.

அக்கிராஸநாதிபதியவர்களால் பிரேரிக்கப்பட்டது.

டில்லி Imperial சட்ட ஸபையில் குழந்தை விவாஹத் தடையென்று Mr. Das கொண்டு வந்த பிரேரணையைப் பிறர்களின் கேலி பரிஹாசங்களையும், வசைச் சொற்களையும்கவனிக்காமல் தைர்யத்துடன் எதிர்த்துச் சண்டை செய்தவரான "Hon" பஜோரியா M. L. A. என்பவருக்கு இந்த ஸம்மேளனத்தார் மனமார்ந்த வந்தனமளிக்கிருர்கள்.

அக்ராஸநாதிபதியவர்களால் பிரேரிக்கப்பட்டது.

"பால்ய விவாஹத்தடைச்சட்டம்" "ஆலயப்ரவேச மசோதா" இவைகளைத் தடுப்பதற்காக சீக்கரமாகவேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்றும், ஸநாதநிகளுக்கு இவ்விஷயத்தில் நல்லதோர் உபாயத்தைத் தெரிவிக்கும்படிக்கும், அகில பாரதீய வர்ணாச்ரமஸ்வராஜ்யசங்கத்தின் கார்ய நிர்வாகக் கமிட்டியை இந்த சம்மேளனத்தார் பிரார்த்திக்கிருர்கள். அக்கிராசநாதிபதியவர்களால் பிரேரிக்கப்பட்டது.

மகா-ா-ா-ஸ்ரீ புரொபஸர் K. சுந்தரராமய்யரவர்கள் தேகவியோகமானதால், நமது தேசத்திற்கு நஷ்டம் ஏற்பட்டதைப் பற்றி இந்த ஸம்மேளனத்தார் துக்கமடைவதுடன் அவருடையகுமாரரான மகா-ா-ா-ஸ்ரீ திவான் பகதூர் K. S. ராமசாமி சாஸ்திரிகளுக்கும், அவர்களுடைய குடும்பத்தார்களுக்கும், அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிருர்கள்.

அக்காஸநாதிபதியால்பிரேரிக்கப்பட்டது.

நமது ஜில்லாவில் ஒவ்வொரு நகரத்திலும் கிராமத்திலும் அகிலஇந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்துக்கிளைச்சங்கங்களை நியமிக்கும் படிக்கும், அவைகளை ஜில்லா சங்கங்களுக்கு உபச்சபைகளாகச்சேர்க்கும்படிக்கும் இந்த ஸம்மேளனத்தார் நமதுஜில்லாவாசிகளைக்கேட்டுக்கொள்ளுகிருர்கள்.

திண்டுக்கல் பிரம்மஸ்ரீ தியாகராஜ தீக்ஷிதர் அவர்களால் பிரேரிக்கப்பட்டும் மதுரை மகா-ா-ா-ஸ்ரீ K. S. சோமசுந்தர சாஸ்திரிகளால் ஆமோதிக்கப்பட்டும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

## இவ்வருஷத்திய உபாகர்ம.

நாகப்பட்டணம் ஸேதுராம தீக்ஷதர் எழுதுகிருர்.

இவ்வருஷ உபாகர்ம தினத்தன்று காயத்ரீ ஜெபம் செய்யவேண்டும் என்று எல்லா பஞ்சாங்கங்களிலும் போடப்பட்டிருக்கிறது. அதன் காரணம் என்னவென்ருல் 18 நாழிகைக்குள் பௌர்ணமிக்கும் பிரதமைக்கு ஸந்தி. (அதாவது சேர்க்கை). ஏற்படுமேயானுல் அன்றையதினமே காயத்ரீ ஸமித் ஹோமம் செய்யவேண்டும் என்று ஸ்மிருதியில தெரிவித்து இருக்கிறது.

ஸம்யிஸம்ஹவதஃ ஸப்தாஷ்வபூர்வேயந்தி நாஷூதி । தத்ரைவோபாகர்ம கார்யம் ஸாவித்ரீ ஹோமபூர்வகம் ॥

இவ்வருஷம் உபாகர்ம தினத்தன்று பௌர்ணமி 14-40 தான் இருக்கிறது. ஆகையால் உபாகர்மாவும் காயத்ரீஜபமும் ஒரேநாள் என்கிற விஷயத்தில் ஆக்ஷேபமில்லை. அன்றயதினம் உபாகர்மா செய்தபிறகுதான் காயத்ரீஜெபம் செய்யவேண்டும் என்று சாஸ்திர ஸம்மதமாக தெரியவருகிறது.

தத்ரைவோபாகர்ம கார்யம் ஸாவித்ரீ ஹோமபூர்வகம்

என்கிற சத்தஸ்வாரஸ்யத்தினுலும்

ஸ்ராவண்யாம் பௌர்ணமாஸ்யாம் து ஹோமம் குர்யாத் என்பதால்

உபாகர்மாவுக்குப் பிறகுதான் காயத்ரீஜெபம் செய்கிறது சாஸ்திர ஸம்மதம் என்று தெரியவருகிறது. அது விஷயத்தில் ஸந்தேகமிருந்தால் வித்வஜ்ஜனங்கள் தெரிவிக்கும்படி வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.



# ஆலயப்பிரவேச மசோதாக்கண்டனம்.

## பில்லூர்.

நன்னிலம் தாலூகாவைச்சேர்ந்த பில்லூர் கிருமவாசிகளும் அதற்கருகாமையிலுள்ள கீரனூர், நைதபாசல், போழக்குடி கிருமஸ்தர்களும் சென்னை சட்டசபையில் ப்ரேரேபிக்கப்பட்டிருக்கிற பஞ்சம ஆலயப்ரவேச மசோதா இவைகளைக் கண்டித்து சென்னை கவர்ன்மெண்டாருக்கும் அநேகம் கையெழுத்தடங்கிய மஹஜர்கள் அனுப்பியிருக்கிருர்கள். ஓ. நி.

## வெங்கடகிரி.

சித்தூர்ஜில்லாவிலுள்ள வெங்கடகிரி ஸம்ஸ்தானத்தைச் சேர்ந்த வெங்கடகிரி நகரவாசிகள் சென்னை கனம் பிரதம மந்திரி முதலான பல அதிகாரிகளுக்கும் M. C. ராஜாவால் கொண்டுவரப்பட்ட மசோதாவை நிறைவேருமல் தடுக்கும்படிக்கு மனு செய்துகொண்டிருப்பதாகத் தெரிகிறது. ஓ. நி.

## சோழபுறம்.

கும்பகோணம் தாலூக்கா சோழபுறம் கிருமம் மஹாஜனங்கள் சென்னை சட்டஸபையில் கொண்டுவரப்பட்டிருக்கும் Civic Disabilitions Removal Bill, Temple entry Bill, அகில இந்தியா சட்டசபையில் சமீப காலத்தில் நிறைவேறிய B. Das Amending Bill to the Child Marriage Restraint Act முதலிய சீர்திருத்த மசோதாக்களைப் பலமாகக் கண்டித்தும் கவர்ன்மெண்டார் மதசம்பந்தமான கார்யங்களில் பிரவேசிக்கக்கூடாதென்றும் சென்னைசட்டசபையில் ஆலோசனையில் வந்திருக்கப்பட்ட எம். ஸி. ராஜாவின் மசோதாக்கள் சட்டமாகாமலிருக்கவேண்டிய ஏற்பாடுகள் செய்யும்படிக்கும் கனம் சென்னை மந்திரி அவர்களைக் கோரியும் ஓர் மஹஜர் செய்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது. ந. நி.

## நாகூர்.

நாகப்பட்டணம் தாலூக்காவைச் சேர்ந்த நாகூர் வாசிகள் சென்னை பிரதமமந்திரி அவர்களுக்கும் கனம் ராஜன் அவர்களுக்கும். Legislative Council-ல் உள்ள பிரதிநிதிகளுக்கும் சென்னையிலுள்ள இரு சட்டசபைகளின் அக்கிராஸநாதிபதிகளுக்கும் மேன்மை தங்கிய வைஸிராய் அவர்களுக்கும் குலாசாரத்திற்கு விருத்தமான சட்டங்களை நிறைவேருமலிருக்கும்படிக்கு மஹஜர் செய்துகொண்டு வரப்பட்டிருக்கிருர்கள்.

## சிக்கவலம்.

நாகப்பட்டணம் தாலூக்காவைச் சேர்ந்த சிக்கவலம் கிரும ஜனங்கள் சென்னை சட்டசபையில் விவாதத்திற்கு வந்திருக்கிற ஆலயப்ரவேச மசோதாவை பலமாக ஆக்ஷேபித்தும் சர்க்கார் மத சம்பந்தமான கார்யங்களில் ப்ரவேசிக்கக் கூடாதென்று கனம் சென்னை பிரதம மந்திரிக்கும் கனம் ராஜன் அவர்களுக்கும் டில்லி சட்டசபை அக்கிராஸநாதிபதி அவர்களுக்கும் மேன்மை தங்கிய கவர்னர் பிரபு அவர்களுக்கும் வைஸிராய் அவர்களுக்கும் முறையே மஹஜர் செய்து

## குருங்குலம்.

நன்னிலம் தாலூகாவைச் சேர்ந்த குருங்குளம் கிருமத்தார்கள் ராவ்பகதூர் M. C. ராஜாவால் கொண்டுவரப்பட்டிருக்கும் பஞ்சம ஆலயப்ரவேசாமசோதா அசாஸ்த்ரீயமென்றும் ஷை மசோதா சட்டமாகா திருப்பதற்கு வேண்டிய முயற்சிகளை தேடும்படி வேண்டிக்கொண்டு அந்தத் தொகுதியின் சட்டசபை பிரதிநிதி அவர்களுக்கும் அகில இந்தியா காங்கிரஸ் பிரஸிடெண்ட் அவர்களுக்கும் மேன்மைதங்கிய சென்னை கவர்னர் அவர்களுக்கும் மனுச் செய்து கொண்டிருக்கிருர்கள். ஒரு நிருபர்.

## பேரளம்.

இவ்வூர் வாசிகள் அநேகங் கையெழுத்தடங்கிய ஒரு மஹஜரை சென்னை சட்டசபையில் ஆலோசனைக்கு வந்திருக்கும் ஆலயப்பிரவேச மசோதாவை தடுக்கவேண்டுமென்று வைஸிருய் அவர்களுக்கும் சென்னை கெவர்னர் அவர்களுக்கும் மகஜர் செய்திருப்பதாக தெரிகிறது.

## பாவட்டகுடி.

பேரளத்திற்கருகாமையிலுள்ள பாவட்டகுடி, வாளுர், காளியாக்குடி மஹாஜனங்கள் சென்னை சட்டசபையில் ஆலோசனைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கும் மதவிரோதமான மசோதாக்களைக் கண்டித்தும் மஹஜர் மூலம் ஷைமசோதாக்களுக்கு தங்கள் ஆக்ஷேபணையை சென்னை கனம்பிரதமமந்திரி அவர்களுக்கும் மஹாகனம் பொருந்திய வைஸிராய் கவர்னர் பிரபு அவர்களுக்கும் தெரிவித்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. நமது நிருபர்.

## பரித்தியூர்.

நன்னிலம் தாலூக்கா திருமதிக்குன்னம் ஸ்டேஷன் அருகாமையிலுள்ள பரித்தியூர் கிருமவாசிகள் ஆலயப்ரவேச மசோதா பொதுஜன ஸமூஹ ஸௌகர்யத்தடை நிவாரண மசோதா, இந்தியா சட்டசபையில் சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட பால்யவிவாஹத்தடுப்பு திருத்த சட்டம் இவைகளை ஆக்ஷேபித்து பொதுஜனங்களால் மஹஜர்கள் சென்னை பிரதம மந்திரி, டாக்டர் ராஜன், இரண்டு சட்டசபைத்தலைவர்கள், கவர்னர், வைஸிராய் இவர்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன.

## திருக்கண்ணங்குடி.

நன்னிலம்தாலூக்கா திருக்கண்ணங்குடி கிருமத்தில் மஹாஜனங்கள் சென்னை சட்டசபையில் பஞ்சம ஆலயப்ரவேச மசோதா இவைகளைக் கண்டித்துச் சென்னை கவர்ன்மெண்டாருக்கும் மத்திய சர்க்காருக்கும் கவர்ன்மெண்டார் மதவிஷயங்களில் தலையிடக்கூடாதென்று அநேகர் கையெழுத்தடங்கிய மஹஜர்கள் அனுப்பியிருக்கிருர்கள்.

## தலையூர்.

நன்னிலம் தாலூகா தலையூர் வாசிகள் மதவிரோதமான மசோதாக்களை ஓர் பொதுக்கூட்டத்தில் கண்டித்தும் மஹஜர் மூலம் தங்கள் ஆக்ஷேபணையை சென்னைகவர்னர் பிரதமமந்திரி இன்னும் அநேக உத்தியோகஸ்தர்

## திருவள்ளியங்குடி.

இக்கிரும வாசிகள் சமீபத்தில் மதருஸ் சட்டஸபையில் ஆலோசனைக்கு வந்திருக்கிற எம். ஸி. ராஜாவின் மசோதாக்களை சட்டமாகக்கூடாதென்று மத்திய ஸர்க்கார் சென்னை கவர்மெண்டாருக்கு மனுச்செய்திருக்கிருர்கள்.

## தியாகராயநகர்.

சென்னைமா நகரத்திற்கருகிலுள்ள புதுமாம்பலம் எனப்படும் தியாகராயநகரிலுள்ள மகாஜனங்கள் ஆலயப்பிரவேச மசோதாச் சட்டத்தை நிறைவேற்றக்கூடாதென்று மனு மூலம் மேன்மைதங்கிய கவர்னர் வைஸிராய் பிரதமமந்திரி இன்னும் சட்டசபை பிரதிநிதிகளுக்கும் தெரியப்படுத்தியிருக்கிருர்கள்.

## மதுரை.

கடம்பவன எனப்படும் தென்மதுரை நகர் மஹாஜனங்கள் சென்னை சட்ட சபையில் கொண்டுவந்திருக்கப்படும் ஆலயப்பிரவேச Civic Disabilities Removal பில்களை, பால்ய விவாகத்தடைச்சட்டத்தையும் பலமாகப் பொதுக்கூட்டங்களில் கண்டித்தும் ஷைசட்டங்கள் அசாஸ்திரீயமென்றும் கனம் பிரதம மந்திரி அவர்களுக்கும் அகில இந்தியா சட்டசபை அக்கிராஸநாதிபதி அவர்களுக்கும் அநேகங் கையெழுத்தடங்கிய மகஜர்கள் செய்துகொண்டிருக்கிருர்கள். மஹஜர்களில் அகில இந்தியா வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் மாஜி தலைவரும், மதுரை தமிழ்ச்சங்கத்துஅக்ராஸநாதிபதியும் இன்னும் அநேக பிரபலஸ்தர்களும் கையொப்பமிட்டிருப்பதுகுறிப்பிடத்தக்கது. ந. நி.

## திண்டுக்கல்.

ஹிந்து தர்ம ரக்ஷக ஸபா.

இச்சபையின் ஆதரவில் ஸ்ரீ ஜெகத்குரு மடத்தில் மேமீ 9உயிலிருந்து மேமீ 11உ வரையில் திருநெல்வேலி ஸ்ரீமான் R. கிருஷ்ணஸாமி அய்யர் M. A., B. L, அட்வகேட் அவர்கள் ஸநாதன தர்ம கொள்கைகளை ஸ்தாபிக்கும் ஆறு உபன்யாஸங்களை திண்டுக்கல் ஸ்ரீமான் M. சுவாமிநாதய்யர் அட்வகேட் அவர்கள் தலைமையில் நிகழ்த்தினுர். உபயன்யாசகர் தர்மங்களின் அரிய பெரிய நோக்கங்களை இடையிடையேவிளக்கி, குருமான சாரதாச் சட்டத்தையும், தர்மத்ரோஹமான ஆலயப் பிரவேச மசோதாவையும், எதிர்த்துக் கண்டனம் செய்தார். மேலும் ஜனங்களை எந்நிலைமையிலும் ஸ்வதர்மத்தைக் கைவிடாது தொன்றுதொட்டுவரும் தெய்வ வழிபாட்டிலும், சாஸ்திரீயமான மணச்சடங்கு முறைகளிலும், சீரும் சிறப்பும் பெற்று எந்நாளும்போல் இந்நாளிலும் தீவ்ரமாகக் கையாண்டுவரும்படி வற்புறுத்தினுர்.

பிறகு மறுநாள் மதுரை வர்ணாச்ரம ஸங்க ஆதரவில், மேல்மங்கலம் 5-வது சம்மேளனத்திற்கு அவ்விடமிருந்து பிரயாணமானுர்.

ஸபை தீர்மானங்களை கவர்ன்மெண்டுக்கு அனுப்பத் தீர்மானித்துள்ளார்கள். ஓ. நி.

முக்கிய கவனிப்பு.
(3-வருஷத்திற்கு உத்திரவாதமுள்ளது,)
அசல் தங்க நகைகளைப்போன்ற "கன்னூஸ் ப்ளேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்கவும்

# மதுரை ஜில்லா வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்.

## 5-வது ஸம்மேளனம்.

திருநெல்வேலி பிரும்ம-ஸ்ரீ
R. கிருஷ்ணஸ்வாமி அய்யர், M.A., B.L.,
அவர்களின் தலைமைப் பிரசங்கம்.

### 1. உபக்ரமம்.

இதுமாதிரி ஸ்தலங்களில் அக்ராஸனம் வகிக்கிறவர் தன்னுடைய முன்னுரையில் தனக்கு ஆக்ராஸனம் வகிக்க யோக்கியதை இல்லையென்றும் இப்பெரிய கௌரவத்தைத் தனக்கு அளித்ததற்காக மிகவும் கிருதக்ஞனாக இருப்பதாகவும் சொல்லிக் கொள்வது வழக்கம். இது ஒரு அர்த்தமில்லாத ஸம்பிரதாயமாக ஆகிவிடக்கூடாதென்ற எண்ணத்தின் பேரில் இவ்வருஷம் தங்கள் அக்ராஸனாதிபதி ஸ்தானத்திற்கு யோக்கியதையில்லையென்பதை வாஸ்தவமாகவும் மனப்பூர்வமாகவும் உபசார வார்த்தையாக இல்லாமலும் சொல்லிக்கொள்ளக் கூடியவரை தங்கள் ஸபா அதிகாரிகள் தெரிந்தெடுத்திருக்கிறார்கள். ஸாதாரணமாக பொது ஸந்தர்ப்பங்களில் அக்ராஸனம் வஹிக்கவேண்டுமானால் அவரிடம் லௌகிகமாக தனம், உயர்ந்த பதவி, ஜாஸ்தியான செல்வாக்கு, உத்தமமான ஆசாரம், தர்மத்திற்காக தியாகம், முதலான விசேஷ குணங்களை எதிர் பார்ப்பதுண்டு. இவைகளில் ஒரு அம்சமாவது என்னிடமில்லையென்பது பிரஸித்தம். ஏதோ பெரியவர்களின் அனுக்ரஹத்தினால் சாஸ்திரத்தில் திருடமான விசுவாஸம் மாத்திரம் பரம்பராதமமாக என்னிடம் ஏற்பட்டிருக்கிறது. அதைரிம் கார்யாம்சத்தில் காட்டிக்கொள்கிறேன் என்றுசொல்லிக கொள்ளவழியில்லை. இப்பொழுது நாம் சிரமப்பட்டுக்கொண்டிருக்கும் குழப்பமான ஸமயத்தில்நமக்கு நன்கு வழிகாட்டக்கூடியவராக ஒரு பெரியாரை தங்களுக்கு அத்யக்ஷராக தெரிந்தெடுத்தீர்களேயானால் எனக்கு வெகு திருப்தியாயிருந்திருக்கும். ஆனாலும் அசேதயான கல்லிலும் கூட தக்க அதிகாரிகளால் தக்க மந்திரங்களைக்கொண்டு பகவானுடைய ஸாந்நித்யத்தை ஏற்படுத்த முடியும் என்று சொல்கிரமத்தில் நானும் பிறந்திருப்பதினால், தங்கள் ஆசிர்வாத பலத்தினால், நான்கூட இந்த ஸதஸ்ஸை நடத்திவிடலாமென்ற தைர்யமேற்படுகிறது: ஆனால் அவ்வித பொறுப்பும் ஸாமர்த்தியமும் தங்களையே சேர்ந்தவை.

இந்த ஸதஸ்ஸை உபக்ரமம் செய்யும் நாளிலும் வேளையிலும் ஒருவிசேஷமிருப்பதாகவே தெரிகிறது. இதே நாளில் இதே வேளையில் தான் ஒரு சிறு குழந்தை பக்தியுடன் அழைத்ததற்காக எதிர்பார்க்கக்கூடாத ஒரு ஸ்தலத்தில் பகவான் ஆவிர்பாவம் அடைந்து பகவானாலேயே கொடுக்கப்பட்ட பலத்தை அப்பகவானையே எதிர்க்க உபயோகப்படுத்தின அபசாரத்துடன் நிற்காமல் பகவானை நம்பிய தன்னுடைய குழந்தையையே இறக்கமன்னியில் ஹிம்ஸிக்கத் தலைப்பட்ட தகப்பனை ஸம்ஹாரம் செய்தார். அப்பிரஹலாதனுடைய பக்தியில் நாற்றில் ஒருபாகமாவது நம்மில் யாரிடமாவது இருக்குமேயானால், அந்த ஹிரண்யகசிபுவின் பலத்தில்லேசலேசங்கூடயில்லாமல் தர்மத்தை அழிக்கிற கெட்ட வேலையில் இறங்கி தற்காலம் பிரவிருத்திசெய்கிறவர்கள் விஷயமாக நாம் கொஞ்ச அப்பகவானே தன் அபாரமான கருணையினால் நமக்கு அளித்து அனுக்ரஹம் செய்வாராக!

### 2 தேசீய உணர்ச்சி.

இப்புண்ய பூமியான பாரத வர்ஷத்தில் ஜனங்களுடைய தர்மத்தை பாதுகார்த்து பரிபாலனம் செய்து வந்தார்கள் க்ஷத்திரியர்கள். அவர்களிடம் சொந்தமாக என்ன தோஷங்கள் இருந்தாலும் இந்த தர்ம ஸம்ரக்ஷணத்தை செய்தே வந்தார்கள். அவர்களை ஜாடாஸ்லாக ஸம்ஹரிக்க உதவியாகயிருந்து ஸ்ரீ கிருஷ்ணபகவானே கலியின் பிரவேசத்திற்கு அவகாசமேற்படுத்திக்கொடுத்தார். அதன்மேல், அதர்மம் பரவி இருள் வெகு ஜாஸ்தியாய்க் கொண்டு வந்த ஸமயத்தில், தேசிக ஸார்வபௌமரான ஸ்ரீமத் சங்கர பகவத்பாதாசார்யார் அவதரித்து மென்மேலும் மூடிக்கொண்டு வரும் இருளை விலக்க மிகவும் பிரயத்தனம் செய்தார். அப்படியே பின்னால் வந்த ஆசார்யர்கள், ஞானிகள், பக்தர்கள் முதலிய மஹான்கள் பிரயத்தனம் செய்தார்கள். ஆனால் ஏதோ சில சிரத்தாவான்களான ஸாதகர்களுக்கு மாத்திரம் சிரேயோ மார்க்கம் தென்பட்டதே தவிர, காலத்தின் மகிமையே மேலிட்டு வந்தது. அதுவும் இதர நாகரீகங்கள் நம் தேசத்தில் நுழைய ஆரம்பித்தது முதல் தர்ம விருத்தமான கால சக்தி விசேஷமாக ஏற்பட்டுக்கொண்டே வந்தது. அதிலும் மேற்கு தேசத்திய நாகரீகம் தாக்கவாரம்பித்தது முதல் ஹிந்துக்களின் தார்மிக விருத்தியில் அவமதிப்பு ஜாஸ்தியாய் வருகிறது. முதல் முதலில் அந்நாகரீகத்தில் ஏற்பட்ட மோஹத்தினால் நம் பிராசீன பெருமையை மறக்க ஆரம்பித்தோம். ஆனால் தெய்வாதீனமாய், ஒரு தனித்த ஜனஸமூஹம் என்ற லக்ஷணத்தையே இழந்து வருகிறோமே என்ற எண்ணம் கொஞ்சங்கொஞ்சமாய் தோன்றும் காலம் வந்தது. அப்பொழுது சில தேசாபிமானிகளின் பிரயத்தனத்தினால், ஒரு தேசீய உணர்ச்சி ஏற்பட்டது. அதுவே ராஜீய விஷயத்தில் காங்கிரஸ் என்றும் பொருளாதார விஷயத்தில் ஸ்வதேசி இயக்கம் என்றும் பரிணமித்தது.

### 3. மதத்தில் அலக்ஷ்யம்.

அதே ஸமயத்தில் நம் தேசத்திலுள்ள மதஸ்தர்களும் தங்கள் தங்கள் மதங்களை பாதுகார்த்துக் கொள்ளவேண்டியதற்கு ஒரு பிரயத்தினமும் அவசியமாயிருந்தது. ஆனால் ராஜகீய விஷயத்தில் இருந்துவந்த ஊக்கத்தில் இதன் அவசியத்தை ஜனங்கள் மறந்தார்கள். நாளடைவில் ஜனங்களின் பிரதிநிதிகள் ஸம்பந்தப்பட்டமட்டில் ராஜகீயத்தில் முன் நின்ற சிலர்களிடமே பலம் ஏற்பட்டது. ஆனால் அவர்கள் நம் மதங்களில் பயிர்ச்சியாவது பக்தியாவது இராதவர்களாகவே இருந்தார்கள். அதன் பலன் எவ்விதமேற்பட்டதென்றால், ஸர்க்காரிடம் தங்களுக்கு செல்வாக்கு கிடைத்த ஸமயத்திலும், அதுவும் சட்டம் இயற்றக்கூடிய அதிகாரம் தங்கள் கையிலேயே கிடைத்த ஸமயத்திலும், நம் தேசத்தின் ராஜகீய முன்னேற்றத்தை ஸாதித்துவிடத்தக்க ஸமயம் என்று எண்ணினார்கள். ஆனால் இந்த விஸ்தாரமான பாரத கண்டத்தில் உள்ள பல மதங்களும் பல உள்பிரிவுகளும் கணக்கிலடங்காத வேற்றுமைகளும் பிரஜைகளிடம் இருந்துவருவது அம் முன்னேற்றத்திற்கு இடைஞ்சலென்று நினைத்துக் கொண்டார்கள். இவ்வித வேற்றுமைகள் இருப்பதால் இந்தியாவில் ஒற்றுமையிருப்பது ஸாத்தியமில்லை என்றும், இந்தியர்களுக்கு ஸ்வய ஆட்சி அதிகாரம் கொடுக்கபடிருக்கவோ தாமதித்துக் கொடுக்கவோ இதுவே போதுமான காரணம் [illegible]

ஆனதினால் ராஜகீயவிஷயங்களில் முன் நின்ற நவீனர்களுக்கு தேச முன்னேற்றத்திற்கு இடைஞ்சலாகத் தோன்றிய ஸமூக வகுப்புப் பிரிவுகளை எடுத்துவிட்டு இந்தியா பூராவும் ஒரே மாதிரியாகச் செய்து ஒற்றுமை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணம் உதித்தது. இதுவே ஸமூக சீர்திருத்தக்காரர்களின் கிளர்ச்சிக்குக் காரணம்.

### 4. மதத்திற்கு ஆபத்து.

ஆரம்பத்தில் ராஜகீய இயக்கத்தையும், சீர்திருத்தல் இயக்கத்தையும் கலந்துவிடாமல் தனித்தனியாகவே வைத்து ஜாக்கிரதையாய் பிரவிருத்திகள் நடந்தன. ஆனால் சென்ற சில வருஷங்களாக, அதுவும் இப்பொழுது உள்ள தலைவர்களிடம் காங்கிரஸ் சிக்கிக் கொண்டது முதல், இரண்டையும் ஒன்றாக பாவிக்கும் ஸ்வபாவம் ஏற்பட்டிருக்கிறது. தேசத்தின் ராஜீய முன்னேற்றம் என்ற வியாஜத்தினால் ராஜகீய ஸ்வாதந்திரத்தைவிட மேலாக மதித்துவந்த மதஸ்வாதந்திரயத்திற்கு ஆபத்து வந்திருப்பதை அப்பொழுதுதான், அதுவும் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் ஸாமான்ய ஜனங்கள் உணரவாரம்பித்தார்கள். மேற்கு தேசத்தவரும் ஆச்சர்யப்படும் தன்மையுடன் பொறுமையும் உபயோகமும் வாய்ந்து ஞாபகத்திக்கெட்டாத நாள் முதல் நமக்கு வழிகாட்டிவந்த தத்துவங்களையும் அத் தத்துவங்களை ஆதாரமாகக்கொண்டு அமைக்கப்பட்டிருக்கிற நம் ஸ்திரமான ஜனஸமூகத்தையும் வேறறுக்கத் தலைப்பட்டிருக்கிறார்களென்பதையும் ஜனங்கள் உணர்ந்தார்கள். இந்தியர்களின், அதிலும் ஹிந்துக்களின், மதவாழ்க்கைக்கு ஏற்பட்டுவரும் ஆபத்தை இவ்விதம் உணர்ந்தது தான் இந்த ஸபையும் இந்த ஸபையின் நோக்கத்தையே நோக்கமாய் வைத்து நம்தேசம் பூராவும் பல விடங்களில் சென்ற சிலவருஷங்களாக தோன்றிவரும் ஸபைகளும் ஏற்படக் காரணமாயிற்று.

மகம்மதியர்கள் தங்கள் மதத்தில் வைத்திருக்கும் விசேஷ ஊக்கத்தினாலும், பார்ஸிகள் தங்கள் ஸமூகம் சிறிதாகவும் கட்டுப்பாடாகவும் இருப்பதினாலும், கிருஸ்துவர்கள் தங்கள் ஸங்க ரக்ஷணஸாமர்த்தியத்தினாலும், பாதிக்கக்கூடிய நிலமையில் இல்லை. அன்னிய தேசத்தியரான அரசாங்கத்தார் தன்னையில் பலவிதமான விலக்குகளையும் பந்தோபஸ்துகளையும் பாதுகாப்புகளையும் வைத்துக் கொண்டுவிட்டபடியால் ராஜகீய விஷயத்தில் தலையிட நாலாபக்கங்களிலும் தடைகள் ஏற்படுகின்றன. அதினால் ராஜகீய விஷயத்தில் தங்கள் ஸாமார்த்தியத்தைக்காட்ட அதிகமாக ஸௌகர்யமில்லை. வேலையற்ற அம்பட்டன் பூனையைப்பிடித்து சறைப்பான் என்று தமிழில் ஒரு பழமொழி உண்டு. அதன்படி தங்களுக்குக் கிடைத்திருக்கும் பலத்தையும் புதிதாக சட்டம் செய்யக்கூடிய அதிகாரத்தையும் செலுத்துவதற்கு ஒருவர் வழிக்கும் போகாமல் தன்னை அக்கிரமமாக தாக்கினவர்களைத் தடுத்துக்கொள்ளக்கூட தன் பலத்தைக்காட்டாமலிருந்து வரும் ஸ்வபாவமுள்ள நிரபாதியான ஜனஸமூஹமே லாயக்கான இடமென்று தீர்மானித்தார்கள் போலும்.

(தொடரும்.)

## ஸ்ரீ மஹாபாரதச் சுருக்கம்.

(ஆதிபர்வம்.)

ஸ்ரீமான் சேங்காலிபுரம் பஞ்சாபகேசய்யாவர்களால் மூலத்திலுள்ளபடியே சுருக்கமாக எளியநடையில் எழுதப்பட்டது. பாரதக் கதைகளை இலகுவில் அறிய இன்றியமையாததென்று மேதாவிகளால் புகழ்ப்பெற்றது.



## காலடி.
## ஸ்ரீ சங்கர ஜயந்தீ உத்ஸவம்.

ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு மஹாஸன்னிதானத்தின் ஆக்ஞைப்படி காலடியில் ஸ்ரீ சங்கர ஜயந்தீ மஹோத்ஸவம் மேமீ 1உ முதல் 4உ வரை வெகுவிமர்சையாய் நடத்தப்பட்டது. ப்ரதிதினமும் மஹான்யாஸ புரஸ்ஸரமாய் ருத்ரபாராயணத்துடன் அபிஷேகாதிகளும், அலங்கார ஆராதனைகளும் ப்ராஹ்மண ஸந்தர்ப்பணாதிகளும் நடந்தன. ப்ரதிதினமும் இதனடியில் கண்ட விபரப்படி உபந்யாஸாதிகள் நடந்தன. இவ்வருஷம் உத்தம ஸம்பாவனையான ரூ. 70. ஸ்ரீ மஹாஸன்னிதானத்தின் ஆக்ஞைப்படி திருநெல்வேலி ப்ரஹ்மஸ்ரீ விசுவநாத சாஸ்திரிகளவர்களுக்கு கொடுக்கப்பட்டது. வருஷாந்தத்தில் பரீக்ஷை செய்யப்பட்டிருந்த வேதாந்த பாடசாலை வித்யார்த்திகளுக்கும், வேத பாடசாலை வித்யார்த்திகளுக்கும் யதாக்ரமம் பாரிதோஷிகங்கள் கொடுக்கப்பட்டன. அங்கு வந்திருக்கும் மற்ற வித்வான்களுக்கும் க்ரமப்படி ஸம்பாவனை செய்யப்பட்டது. கடைசி தினத்தில் அஸ்தமனத்திற்குப்பிறகு ஸ்ரீமத் ஆசார்யாளின் படத்தை அழகாக அலங்கரிக்கப்பட்ட ஓர் விமானத்தில் வைத்து மேளவாத்தியத்துடனும் வேதகோஷத்துடனும் ஊர்வலம் செய்துவைக்கப்பட்டது. தக்ஷிணதேசத்திலிருந்து அநேகம் வித்வான்களும், லௌகிகர்களும் வந்திருந்து உத்ஸவத்தை வெகு சிறப்பாக நடத்திக்கொடுத்து கண்டு ஆனந்தித்தார்கள். ஆலப்பிழை ப்ரஹ்மஸ்ரீ ராமய்யர் அவர்கள் அக்ஷயதிருதீயை தினத்திலும், செங்கோட்டை ப்ரஹ்மஸ்ரீ விசுவநாதய்யர் அவர்கள் சங்கரஜயந்தீ தினத்திலும் வித்வத் கோஷ்[illegible]ஸதஸ்ஸைப்[illegible]யும் சிரத்தையுடன் நேரில் நடத்திவைத்தது குறிப்பிடத்தக்கது.

### உபந்யாஸ விபரம்.

முதல்நாள்:—

வியாகரணத்தில் "ஸ்தானிவத் ஆதேசோ: நல்விதௌ" என்ற விஷயமாய் திருப்பணத்துறை சங்கரநாராயண சாஸ்திரிகள் வாக்யார்த்தம்.

விவேகசூடாமணி ச்லோகம் 1 முதல் 138 வரை வாசிக்கப்பட்டன. அதிலடங்கிய 67-வது ச்லோகம் காலடி ப்ரஹ்மஸ்ரீ வெங்கிடாசல சாஸ்திரிகள் அவர்களால் உபந்யாஸரூபமாக ப்ரவசனம் செய்யப்பட்டது.

காலடி கும்பாபிஷேக ஸமயத்தில் முன் ஆசார்யாள் அவர்கள் ஸ்தோத்ரம் செய்த ச்லோகங்களிலிருந்து 28 ச்லோகங்கள் கீதத்துடன் வாசிக்கப்பட்டன.

இரண்டாவது நாள்:—

தர்க்கத்தில் "ஸத்பிரதிபக்ஷலக்ஷணம்" என்ற விஷயமாய் மைஸூர் ப்ரஹ்மஸ்ரீ ஆடிகுப்பம் ஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகள் அவர்களால் வாக்யார்த்தம்.

காஸர்கோடு ப்ரஹ்மஸ்ரீ ராமகிருஷ்ணபட் அவர்களால் வ்யாகரணத்தில் "உத்தரபதத்வே சாபதாதி விதௌ" என்கிற வார்த்திகம் விஷயமாய் வாக்யார்த்தம்.

விவேகசூடாமணி 139 முதல் 292 வரை ச்லோகங்கள் படனம். அதிலடங்கிய 147 வது ச்லோகம் மைஸூர் ப்ரஹ்மஸ்ரீ ஸூர்ய நாராயண சாஸ்திரிகளவர்களால் உபந்யஸிக்கப்பட்டது.

காலடி ஸ்தோத்திரத்தில் 23 சுலோகங்கள் படனம்.

மூன்றுவது நாள்:—

வேதாந்தத்தில் "ஆகாசே அர்த்தாந்தரத்வாதி வ்யபதேசாத்" என்ற ஸூத்ரவிஷயமாய் காலடி ப்ரஹ்மஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரிகளும் கிருஷ்ணராஜபுரம் ப்ரஹ்மஸ்ரீ சங்கர சாஸ்திரிகளும் வாக்யார்த்தம்.

பூர்வ மீமாம்ஸையில் "உக்த்யாக்னிஷ்டோமாதிகரணம்" விஷயமாய் புதுக்கோட்டை ப்ரஹ்மஸ்ரீ ராகவசாஸ்திரிகள் வாக்யார்த்தம்.

விவேகசூடாமணி 293 முதல் 442 வரை ச்லோகங்கள் படனம். அதிலடங்கிய 303 வது ச்லோகம் மைஸூர் ப்ரஹ்மஸ்ரீ சிவஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகள் அவர்களால் பிரவசனம் செய்யப்பட்டது.

காலடி ஸ்தோத்திரத்தில் 22 ச்லோகங்கள் வாசிக்கப்பட்டன.

நான்காவது தினம்:—

வேதாந்தத்தில் "ஸர்வத்ர பிரஸித்தோபதேசாத்" என்ற ஸூத்ரவிஷயமாய் மைஸூர் ப்ரஹ்மஸ்ரீ நாராயண சாஸ்திரிகளவர்களும், காலடி ப்ரஹ்மஸ்ரீ வெங்கிடாசல சாஸ்திரிகளவர்களும் வாக்யார்த்தம்.

விவேகசூடாமணி 443 முதல் 581 வரை ச்லோகங்கள் படனம். அதிலடங்கிய 479 வது ச்லோகம் திருநெல்வேலி ப்ரஹ்மஸ்ரீ விசுவநாத சாஸ்திரிகளவர்களால் உபந்யாஸ நிரூபண ப்ரவசனம் செய்யப்பட்டது.

சென்ற வருஷத்திய வ்ருத்தாந்தப் பத்திரிகை வாசித்த பிறகு ஸம்பாவனைகளும் பாரிதோஷிகங்களும் க்ரமப்படி கொடுக்கப்பட்டன.

காலடி ஸ்தோத்ரத்தில் 12 ச்லோகங்கள் வாசித்தபிறகு தீபாராதனை நடந்து ப்ரஸாதம் கொடுக்கப்பட்டது. நமது நிருபர்.

## நாகூர்.

### வஸந்த உத்ஸவம்.

புன்னுகவன க்ஷேத்திரமாகிய நாகூரில் மேல அக்கிரஹாரத்தில் து. வீராசாமி அய்யரால் ஸ்தாபிக்கப்பட்டும் ஸ்ரீமத் ஜெகத்குரு ஸ்ரீ சங்கராசாரியாள் சுவாமிகள் அவர்கள் அனுக்கிரஹமும், பெற்று பாததூளியும் பட்டதான ஸ்ரீ பஜனை மடத்தில் 2—5—38 முதல் ஆரம்பமாகி 13–5–38 வரையில் வசந்த உத்ஸவமும் ஸ்ரீ சங்கரஜயந்தி உத்ஸவமும் வழக்கம்போல் அதிவிமர்சையாய் நடைபெற்றது. அதில் 2–5–38ல் நாகை வக்கீல், பிர்ம்மஸ்ரீ N. சாம்பசிவய்யர் அவர்களாலும் காக்கழணி பிர்ம்மஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி அய்யர் அவர்களாலும் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியின் மகிமையைப் பற்றி உபன்னியாசமும், 3–5–38 ல் சேங்காலிபுரம் பிர்ம்மஸ்ரீ வைத்தியனாத சாஸ்திரிகள் அவர்களால் குருபக்தியைப்பற்றி உபன்யாசமும், 4–5–38 சங்கரஜயந்தி அன்று ஆவடையார் கோவில் பிர்ம்மஸ்ரீ ஹரிஹர பாகவதர் அவர்களால் மார்க்கண்டேய சரித்திரம் கதாகாலக்ஷேபமும், 5–5–38ல் பிர்ம்மஸ்ரீ ஹரிஹரபாகவதர் அவர்களால் ஜலதரங்கக் கச்சேரியும் பிறகு ராமதாஸ் சரித்திரம், கதாகாலக்ஷேபமும் 6–5–38 ல் பிர்ம்மஸ்ரீ, பிளேட் வெங்கிட்டராமய்யர் அவர்களால் பாட்டுக்கச்சேரியும் 7-5-38 ல் பஜனை திவ்ய நாமங்கள் உத்ஸவமும் 8-5-38 ல் சிருநாங்கூர் பிர்ம்மஸ்ரீ R. சுப்பிரமணிய பாகவதர் அவர்களால் சந்திரகாசன் சரித்திரம் கதாகாலக்ஷேபமும், காளியாகுடி பிர்ம்மஸ்ரீ நடேச சாஸ்திரிகள் அவர்களால் ஸ்ரீமத் ராமாயண பிரவசனமும் 9-5-38 ல் வசந்த உத்ஸவமும் 10-5-38 ல் ஆஞ்சநேய உத்ஸவமும், காக்கழணி பிர்ம்மஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியய்யர் அவர்களால் ஆஞ்சநேயரின் மகிமையைப்பற்றியும் உபன்னியாசமும். 13-5-38 ல் விடயாத்தி உத்ஸவமும் போஸ்ட்டு மாஸ்டர் பிர்ம்மஸ்ரீ V. சுந்தரேச பாகவதர் அவர்களால் நந்தனார் சரித்திரம் கதாகாலக்ஷேபமும் நடத்தப்பட்டது.

நமது நிருபர்.

## ஸ்ரீ விரிஞ்சீபுரம்,
## ஸ்ரீ மதப்பய்யதீக்ஷிதர் மடாலயம்.

### ஸ்ரீ ஆசார்யாள் ஜெயந்தி.

திருவிரிஞ்சை, ஸ்ரீமார்க்கபந்து, க்ஷேத்திரம், ஸ்ரீமதப்பய்ய தீக்ஷிதர் பெரியவாள் ஸ்வஸ்தல பிரதிஷ்டை ஸ்தாபனமான ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் மடாலயத்தில் வழக்கபடி 8-ம் ஆண்டு ஜெயந்தி சித்திரைமதி (வைசாக) சுக்லபஞ்சமி புனர்வசுகூடிய 22உ புதவாரம் அக்ரஹாரத்தவர்களால் வேதோக்த முறையில் அபிஷேக அர்ச்சனை அலங்காராதிகள் நடத்திவைக்கப்பட்டது. பானக பூஜை நடந்து அக்ஷதை, அனுக்கிரகத்திற்குப் பின்பு ஸ்ரீ சங்கரஜெயந்தி இனிது முடிந்தது.

### ஸ்ரீ ஷண்முகப்பெருமாள் ஆலய ஜீர்ணோத்தாரண மஹா கும்பாபிஷேகம்.

விசேஷப் பிரக்யாதியுடைய திருவிரிஞ்சை முருகன், பிள்ளைத்தமிழ் பாடல்பெற்ற அச்சுவைப்பால் பருகிய ஸ்ரீ மார்க்கபந்து ஈஸ்வரர் சன்னதியிலுள்ள ஸ்ரீ ஷண்முகப்பெருமான் ஆலயம் செங்குந்த முதலியார் மரபில் பரிபாலனமுடையது. அன்னவர்களின் விசேஷ சிரத்தை முயற்சியால் உற்சவாதிகள் நடைபெறும்பொருட்டு புதிய ஸ்ரீ வள்ளி தெய்வயானை சுப்பிரமணியர் விக்ரகங்கள் வார்ப்படத்தில் முடித்து மற்றும் ஸ்ரீ முருகன் ஆலயத்திலிருக்கவேண்டிய நவவீரர் அருணகிரியார் தண்டபாணி சிலாமூர்த்திகளும் பிரதிஷ்டையாகவேண்டி ஷை ஆலயத்தை புதிய திருப்பணியில் விஸ்தரித்துக்கட்டி வருகிறார்கள்.

நாளது வைகாசிமீ 19உ (1—6—38ல்) விசேஷ ஏற்பாட்டில் ஷை ஆலய ஜீர்ணோத்தாரண மஹா கும்பாபிஷேகம் நடைபெறவிருப்பதை அன்பர்கள் கண்டு ஆனந்திப்பார்களாக!

### ஸ்ரீ அம்பாள் ரதம் புதுப்பிக்கப்படுகிறது

ஸ்ரீ மரகதலதாம்பிகையின் ரதம் சுமார் 20-வருஷங்களாக கிலமடைந்துள்ளதை பிரகிருத ஷை தேவஸ்தான டிரஸ்டி ஸ்ரீ. பெ. ஜெ. ஷா. மாசிலாமணி செட்டியாருடையசிரத்தை முயற்சியில் ஷை ஸ்ரீ அம்பாள் ரதம் தக்க மாமத்தில் புதுப்பிக்க ஏற்பாடுசெய்து கைங்கரிய வேலை நடந்துவருகிறது. நாளை ஆடிப்பூர உற்சவத்தில் ஷை ரதாரோகண விழா நடக்கப்பார்ப்பது. ஓர் விசேஷமாகும்.

## கனம் ஸாம்பமூர்த்தி ராஜிநாமா இல்லை.

சென்னைசட்டஸபைத் தலைவரானஸ்ரீமான் புலுஸு ஸாம்பமூர்த்தி தமது பதவியை ராஜிநாமா செய்வதாக ஸுபாஷ்போஸுக்குத் தெரிவித்ததன் மேல் அவர் பம்பாய்க்கு வரும்படி அழைக்கப்பட்டு அங்கு போய் காங்கிரஸ்தலைவர்களை ஸந்தித்தார்.

கனம் ஸாம்பமூர்த்தி சொந்தஹோதாவிலும் ஐரோப்பா செல்ல அநுமதிக்கப்படவில்லை. அவர் ராஜிநாமா செய்யமாட்டாராம்.

ஐரோப்பாபோக கனம் ஸாம்பமூர்த்தி நிச்சயித்திருந்ததை கார்யக்கமிட்டி தடுத்ததே இந்தக் கிளர்ச்சிக்குக் காரணமாம்.

K. ஸ்ரீனிவாஸ சாஸ்திரிகள்.
பிரசுரங்கள்.

| | | | |
|---|---|---|---|
| சிவகீதிமாலா. | 0 | 4 | 0 |
| ராமாஷ்டோத்னம். | 0 | 1 | 0 |
| சங்கர பகவத்பாதார். | 0 | 8 | 0 |
| தமிழ் சீக்ரோகா. | 0 | 4 | 0 |

கிடைக்குமிடம்:— ஜனார்த்தன அச்சுகூடம், லிமிடெட், டவுன் ஹைஸ்கூல் ரோடு கும்பகோணம்.

293

215233




மார்சலியே



சுவாஸப்பைகளில் கபமாக மாறி Bronchitis என்ற வியாதியை உண்டுபண்ணுவது. அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து நிவர்த்திசெய்துகொள்ளுங்கள். எச்சமயத்திலும் வெகு துரிதமாக ஸ்வஸ்தப்படுத்துவது

அமிர்தாஞ்சனம்





## மதிப்புரை.

நாம் ஆங்கில மாதாந்திர வெளியீடான 'தி பராசக்தி மாகஸைன்' "The Parasakthi Magazine" காபி கிடைக்கப்பெற்றோம். ஷை மாதாந்திர வெளியீடானது ஸ்ரீமான் R. B. ஸன்யாஸி என்பவரை எடிட்டராகக் கொண்டு நடத்தப்பட்டு வருகிறது. இஃது ப்ரஸித்திபெற்ற பல ஆசிரியர்களாலும் ஆதரிக்கப்பட்டு பொது நலத்தைக்குறித்த அநேக விஷயங்களைக்கொண்டு சிறந்து விளங்குகிறது. சிறந்த ஆசிரியர்களால் எழுதப்பட்ட புஸ்தக மதிப்புரைகளை வெளியிட்டுவருகிறது. இதனை, ஸநாதனப்பற்றுள்ள ஒவ்வொருவரும் ஆதரிக்கும் விஷயத்தில தங்களது கடமையாகக்கொண்டு உதவிபுரிந்து, நாஸ்திகம் தலைதூக்காது ஆஸ்திகம் பெருகப் பாடுபட முன்வர வேண்டுகிறோம்.

பத்ராதிபர்.

## ஸ்ரீ ராம பட்டாபிஷேகம்.

கும்பகோணம் கடைத்தெருவு ஸ்ரீ ராமஸ்வாமி கோவிலில் பிக்ஷாண்டார் கோவில் ஸ்ரீமத்ராமாயணக் கதாம்ருத வர்ஷகப்ரசங்க ரத்னம் வேதமூர்த்தி ப்ரும்மஸ்ரீ பாகவத கௌஸ்துபம் கோபாலபாகவதர் அவர்களால் இரண்டுமாதமாக நடத்திவந்த ஸ்ரீ ராமாயண ஸீரியலில் 20—5—38 வெள்ளிக்கிழமை "ஸ்ரீ ராமபட்டாபிஷேகம்" கதை நடத்தப்பட்டது. நகரில் பல ப்ரமுகர்களும் இதரவித்வான்களும் வந்திருந்து ஷை பாகவதர் அவர்களுக்கு வெள்ளிப் பாத்திரங்களும் பட்டு பீதாம்பரங்களும் இதர ஸன்மானங்களும் பொது ஜனங்களால் அளிக்கப்பட்டது. ஷை கதைகளுக்கு ஆயிரக்கணக்கான ஸ்திரீ புருஷர்கள் பல பாகங்களிலிருந்தும் வந்துகொண்டிருந்தது ஒர் காக்ஷியாகவே இருந்தது.

பாகவதர் அவர்களின் வித்வத்தும் அவர் குமாரர்கள் பாலசுப்ரமண்யம்ப்ரதர்ஸ்களின் இனிய சங்கீதகானமேயாகும்.

மறுமுறை இந்த ஊரில் ஷை பாகவதர் அவர்களால் ராமாயண ஸீரியஸ் நடத்த வேணும் என்று பொதுஜனங்கள் பாகவதர் அவர்களைக்கேட்டுக் கொள்ளுகிறார்கள். 23-5-38 திங்கள்கிழமை விடையாத்திரை முன்னிட்டு, G. பாலசுப்ரமண்யம் ப்ரதர்ஸ்களால் ருக்மணீ கல்யாணம் நடைபெற்றது.

## மேல்மங்கலம்.

### ஸம்மேளனம்.

சமீபத்தில் மேல்மங்கலத்தில் நடந்த ஸம்மேளனம் விஷயமாய் இரண்டொரு விஷயங்கள் தெரிவிக்கவேண்டியது அவசியமாய் இருக்கிறது. ஆலயப்ரவேச மசோதாவும் தீண்டாமை விலக்கு மசோதாவும் தீண்டாமை விலக்கு மசோதாவும், சட்டமாகாமல் தடுக்கவேண்டியது அவசியமென்று ஸநாதனிகள் எவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயம். எப்படி தடுப்பது என்பதைப்பற்றித்தான் அபிப்பிராய பேதங்கள் ஏற்படலாம். காங்கிரஸ்காரர்கள் சத்தியாக்ரஹம் என்று சொல்லிக்கொள்ளுகிறார்களே அதைக் கைக்கொள்வதானால் தர்மகாப்பு படை என்று ஒரு சாத்வீக சேனை ஏற்படுத்தவேண்டாமா? அப்படி ஏற்படுத்தும் பக்ஷத்தில் அந்த சேனை என்னென்ன முறைகளை அனுஷ்டிக்க வேண்டியது. ஆக இத்யாதி கேள்விகள் மேற்படி ஸம்மேளனத்தில் சில ப்ரதிநிதிகள் கிளப்ப அதற்கு மேற்படி ஸம்மேளனத்திற்கு அதிபதியாயுள்ளவர்கள் இடந்தாமல் மேற்கண்ட மசோதாக்களை கண்டன ரூபமாக தீர்மானம் ஏற்பட்டதோடு நிறுத்திக்கொண்டது மிகவும் வ்யசனிக்கத்தக்கது. ஸநாதனிகள் சாதுக்களாகவும் மூளீம்களைப் போல் முரட்டுப் பிடிவாதம் இல்லாதவர்களாய் இருக்கிற ஆஸ்பதத்தைக்கொண்டு காங்கிரஸ்காரர்கள் ஸநாதனிகளை விரட்டுகிறதும் மூஸ்லீம்களைகண்டு நடுங்குகிறவர்களுமாக இருக்கிற விஷயம் எல்லாருக்கும் தெரிந்ததே. சநாதனிகள் தாங்கள் பலவான்களாய் இருப்பதாய் உணர்ந்தும் தன்னுடைய ஸ்வபாவ பலத்தை தர்மத்தைத் தாக்கக்கூடியவர்கள் மீது ப்ரயோகிக்க வல்லவர்கள் என்றும் நிரூபணம் செய்தால் மாத்திரம் காங்கிரஸ்காரர்கள் மேற்படி மசோதாக்களை நிறுத்திக்கொள்வார்களே ஒழிய மற்றபடிக்கு அல்ல. காங்கிரஸ் ஊழியர்கள் தங்களுடைய காரியங்களை சாதிப்பதற்கு கத்திகபாடக்கள் ஒன்றும் கொண்டுவரவில்லை. மேற்படி ஆயுதங்களை சனாதனிகளும் ப்ரயோகித்துத் தங்கள் காரியங்களை சாதித்துக்கொள்ளலாம். ஆனால் ஸநாதனிகளுக்கு த்யாகபுத்தி கிடையாது. அவர்கள் தர்மஸ்தாபன விஷயமாகப் போர் செய்யத் துணியமாட்டார்கள் என்று காங்கிரஸ்காரர்கள் நினைக்கிறார்கள். நாம் நடத்திவரும் ஸம்மேளனங்களில் செய்கிற தீர்மானங்கள் காங்கிரஸ்காரர்களுடைய அபிப்ராயம் வாஸ்தவமென்றே ருஜூப்படுத்துகின்றன. ஆனால் உண்மையில் அது வாஸ்தவமல்ல.

ஸம்மேளனங்களுக்கு மேல் அதிகாரியாய் இருக்கப்பட்டவர்கள் ஸநாதனிகள் தீவிர கிளர்ச்சி செய்வதற்கு இடங்கொடுக்காத போனாலும் ஸனாதனிகள் பெரும்பான்மையோர் சத்யாக்ரஹம் செய்வதற்கு தயாராய் இருக்கிறார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. மேற்படி அக்ராஸநாதிபதி சாஸ்த்ரங்களில் பாரங்கதர் பரமசாந்தமூர்த்தி ஸ்ரீ நடேசய்யர் அவர்களோ ஸநாதனதர்மம் விஷயமாய் எவ்வளவோ பாடுபட்டு வருகிறார்கள் என்று சகலரும் ஹ்ருதய பூர்வமாய் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆனால், இவ்விடத்தில் விநய பூர்வமாய் தெரிவித்துக்கொள்ளுகிறது என்னவென்றால் அவர்கள் ராஜகிய போர் முறையில் தீவ்ரமாக முன் செல்லவேண்டுமென்பதே.

ஸம்மேளத்தின் தீர்மானங்களில் ஸத்யாக்ரஹம் முதலிய தீவிர விஷயங்கள் ஸம்பந்தமாய் ஒன்றும் இல்லாததிலிருந்து தர்மவிரோதிகளான காங்கிரஸ்காரர்கள் ஸநாதனிகளை லகுவாக நினைத்துவிடவேண்டாம். ஸ்ரீ ஜின்னாவுக்கு என்ன பூஜை செய்கிறார்களோ அதே விதத்தில் ஸநாதனிகளுக்கும் கைகூப்ப வேண்டிவரும் என்று அறிவார்களாக.

M. ஸ்வாமிநாதய்யர், அட்வொகேட்,
திண்டுக்கல்.

## துகிலி.

கலைமகள் கழகத்தின் சார்பாக 16-5-38 ல் கோட்டூர் பெண்கள் பாடசாலை கட்டடத்தில் துகிலி ஸ்ரீலஸ்ரீ, A. அக்கினிலிங்க சாஸ்திரிகள் அவர்களுடைய தலைமையில் ஸம்ஸ்க்ருத ஸ்கூல் தலைமை உபாத்தியாயர் ஸ்ரீலஸ்ரீ, K. S. வெங்கிட்டராம சாஸ்திரிகள் வியாகரணசிரோமணி அவர்களால் "ஹரதத்தாசாரியார், அவர்களுடையசரித்திரம் உபந்நியாஸம் செய்யப்பட்டது நாகை ஹைஸ்கூல் தமிழ் பண்டிட் வித்வான் ஸ்ரீ திருஞான சம்பந்த தேசிகர் அவர்களால் "தமிழர்பெருமை" என்ற விஷயத்தைப்பற்றி ப்ரஸங்கம் செய்யப்பட்டது.

ஸ்ரீ பாலசுப்ரமணிய கவிராயர் அவர்களால் 'கல்வி' என்றதைப்பற்றி ப்ரஸங்கம் செய்யப்பட்டது.

கடைசியில் P. நாகராஜ சர்மா அவர்களாலும் P. A. வைத்தினாதய்யர் அவர்களாலும் V. ஸாமினாதய்யர் அவர்களாலும் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது முடிவடைந்தது.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam

ஆர்யதர்மம்

ஸ
22

4
23

2-6-1938

215234

215234
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 JUN 1938
MADRAS
257

Registered No. M. 2913

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

பு 23 | கும்பகோணம் கலி5040 பகுதான்ய-ஷூ வைகாசி-மீ 20உ 1938ஷூ ஜூன்-மீ 2உ | ஸ 22

## ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0.
தனிப் பிரதி அணு 1.

விளம்பர விகிதம்

| | | | |
|---|---|---|---|
| பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. | 20 | 0 | 0 |
| இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணு. | 0 | 8 | 0 |

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்

## வாரக்குறிப்புகள்.

(ஸ்ரீ வத்ஸ வெ. ஸோ. சர்மா).

பல ஸபை வேண்டும்! வேலூருக்கருகில் தர்மோபகயகம், தர்ம விவாஹம் செய்து வைக்க ஓர் ஸபை உளது. இவ்வாண்டு அது ஓர் உத்ஸவ காலத்தில் செய்து வைத்த பல உபநயநாதி தர்மங்கள் சென்ற வாரம் வெளிவந்தது. அச்ரத்தையால் உள்ள வரை நீக்கி ஏழ்மையால் காலத்தில் உபநயந ஸம்ஸ்காரம் செய்ய முடியாத பலருக்கு இத்தகைய சங்கம் பலதோன்றி ஆங்காங்கு உபகரித்தல் அவச்யம்.

பிச்சைக்குப்பயந்து அடுப்பு மூட்டாதே! என்றார் ஒருவர் என ஓர் 'பழமொழியுண்டு. அங்ஙனமே குளித்தலை அதிகாரி ஏதோ ஓர் தாரை தப்பட்டை சண்டையைக்கருதி உத்ஸவத்தையே நடவாமல் நிறுத்தினர். அதே போன்ற ஓர் அதிகாரி. குமரிபாளயம் ஆடுறக்கும் சண்டையில் அதை நிறுத்தாமல் பழைய மாமூல் படி நடத்த போலீஸ் துணை உதவினர்!

இதில் ஹிந்து.ஸபை சரியே! ஹிந்து மகா ஸபையும் கூட பல தர்மங்களை உதாசினம் செய்து திருத்தக்காரருக்குத்தம்பியாய் விளங்குகிறது. என்றாலும் காந்திஜி போன்றோர் யஹம்மதியருக்குப் பயந்து நம்மை புறக்கணிப்பதை அது பலமாக கண்டிப்பதுடன் தற்சமயம் ஓர் விசேஷக்கூட்டமும் கூடுகிறது. அதைப்பூர்ணமாக ஆதரிப்போம்.

பல வகையில் தவறு! ராமேஸ்வர ஆலயத்தினுள்ளே "பவர் ஹௌஸ்" கட்டுவதை உள்ளூரார் கோபுரத்திற்கும் யாத்ரீகருக்கு மாபத்து வருமென கண்டிக்கின்றனர். அது மாத்திரமல்ல! வேலைக்காரர் என்ற வியாஜத்தினால் வெள்ளையர் மிலேச்சர் சண்டாளர் முதலியவர் உள்ளே புக இடமளிக்குமாதலால் உள்ளே கட்டக்கூடாதென ஒவ்வோர் ஊர் யாத்ரீகரும் கண்டிக்க வேண்டும்!

புதுவை தேர்தல் கொலை! தொன்றுதொட்டு பிரஸித்தமானது. முன்னவ்வளவு மோசமில்லாவிடினும் ஆண்டாண்டு கொலைக்குக் குறைவில்லை! இவ்வாண்டுமிருவர் பலியானார்கள். கொலையை நிறுத்த முடியாவிடில் அதற்குக் காரணமான தேர்தலை நிறுத்தவோ மாற்றவோ வேண்டும்!

மற்றோர் ஸங்கரமணம்! தனிப்பட்டவர் தவறுதலைப் பிறருக்கு வழிகாட்டியாயிருப்பதால் கண்டிக்கத்தான் வேண்டியிருக்கிறது. ராஜாஜி காட்டிய வழியைப் பின்பற்றி ஹரிஜன ஸேவையிலீடுபட்ட ஓர் அப்ராமணர் தன் பெண்ணை காந்தி பேரனுக்கு கொடுக்க முயல்கிறார்! மற்றும் பல கிளம்பும்! வடதேசத்தவர் இங்ஙனம் துணியார்!

நீ போகாதே. நான் போகிறேன்! சென்னை புலுஸா ஸாம்பமூர்த்தியை சீமைபோகவிடாமல் தடுத்து, சீமைசெல்லும் ஜவஹர் நேருவுக்கு தேக்கச்சேரி செய்கிறது காங்கரஸ்ஸபை! ஸாமார்த்யமாக அதை சமர்த்தநம் செய்யத் தெரியும்!

ஓர் யாசகம்! ராஷ்டபதி சீனுவுக்கு சிகித்ஸை செய்ய எல்லோரும் தாந உதவி செய்யும்படி யாசிக்கிறார்!

ஸமஷ்டி மாறுதாம்! இந்தியமந்திரி காங்க்ரஸிற்கஞ்சி அதை மாற்றப்போவதில்லை என விருந்தில் விளம்பினார்!

சரியான சூடு! சென்னை தார்மிக ஹிந்து படக்காக்ஷியின் தீமையை விளக்கி அழகாக எழுதுகிறது.

தப்புப்பிரசாரம்! கஷ்டத்தை அகற்ற அபேதவாதமே சிறந்ததெனபலர் தப்பான வழியில் பிரசாரம் செய்கின்றனர்.

பல ஸமாஜம் தேவை! பல்லாவரத்தில் ஏழைகளுக்கன்னமிடவும் பிரதி ஞாயிறிலும் மதோபன்யாஸம் செய்யவும் புதிய ஸபை அன்னதான சமாஜம் தோன்றிற்று!

ப்ரதிக்ராமமும்செய்க! அமாகலாவிலாசினி ஸபை வாக்காளரைக்கொண்டு தங்கள் ப்ரதிநிதி ஆலயப்ரவேச மசோதாவை எதிர்க்கும்படி உத்திரவிட்டது.

## விளம்பரம்.

சென்னை மாகாணத்தில் ஸநாதந தர்மப் பிரசாரம் செய்ய சிறந்தவாக்குள்ளவர்களாயும் அனுஷ்டாதாக்களாயும் ஊக்கமுள்ளவர்களாயுமிருக்கிற பண்டிதர்கள் தேவை. யோக்யதானுசாரமாய் ஸம்பாவனை செய்யப்படும். அடியில்கண்ட விலாசத்துக்கு எழுதிக்கொள்ளவும்.

என். நடேசய்யர்,
அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க கார்ய அத்யக்ஷர்
55 தமிழ் சங்கம் ரோட், மதுரை.

தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
(மூன்றாம் பதிப்பு)

பிராம்மணர்களின்கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், "வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராம்மண குடும்பங்களிலும்இருக்கவேண்டியதவசியம்.
விலை ரூ. 1—8—0 வி. பி. பிரத்யேகம்.
கிடைக்குமிடம் :—
பப்ளிஷர்.
தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
கீழவிடையல், திருச்சிரா.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:—T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

# ஆர்யர்களின் ஆசார ரஹஸ்யம்.

(பிராணயாமம்)

T. V. தர்மராஜகனபாடிகள், வேதபாடசாலை
திருக்கோகர்ணம்.

(முன்தொடர்ச்சி.)

ஐயா! இருதயமலரை நிமிர்த்தி மலர்த்திடல் முதலிய சில நற்பயன்கள் யோக நூலில் அறியலாம் என்றும், அதன் பிரமாணமும் கூறுவதாக சொன்னேனல்லவா? இருதயம் இருக்கும் அமைப்பு:—

வஷகொஶஹ தீகாஶஂஹ்ரூஷயஞூவஹ யொஃஉவழு।

"தாமரை முகுளம் போன்று கீழ்முகமாய்" என்ற வேத வாக்யத்தால் புலப்படும். அதினுட்புறம் புகுந்த உதிரம் சுத்திபெறும். அன்றி அதினுட்புறம் உதிரம் புகுந்திட இரு பக்கங்களிலும் வழியுண்டு. அவ்விருதயத்தில் உயிரனைத்தும் பிழைத்திடவேண்டி கடவுளால் அமைக்கப்பட்ட சக்தி ஒன்று விரிதல், குவிதல் என ஏற்பட்டிருக்கிறது. அந்த இருதயத்தின் இரு பக்கங்களிலும் உயிர்க்குழல்கள் இருக்கின்றன. அவை வெளிக்காற்று நிறைந்திருக்கும் சமயம் பருப்பதால் பருத்த அக்நாடிகளால் இருபுறம் கவரப்பட்ட இருதயம் சுருங்குகின்றது. அச்சமயம் அவ்விதயத்தினுள்ளிருந்த ரக்தம் நாடிகள் வழியாய் வெளிப்படுகின்றது. இனி உட்புறத்திருந்து காற்று வெளிச்சென்றால் அச்சமயம் சுவாசக்குழல் சுருங்க இதயம் விரியும். விரியவே அதனுட்புறம் நாடிகள் வழி உதிரம் நிறையும். இங்ஙனம் உயிர்க்காற்று உட்புகுந்தும், வெளியிற் போய்க்கொண்டும் இருத்தலால் சுவாஸக் குழல்கள் பருக்கவும், சுருங்கவும் இருதயம் முறையே சுருங்கவும், விரியவும், உதிரம் வெளிவரவும், உட்செல்லவும் நேரிடுகின்றது. அதனால் சரீரம் விருத்திக்கின்றது. உதிரத்துடன் மலங்களும் இதயத்தின் உட்புறம் செல்ல அங்கு ரத்தம் சுத்திபெறுவதால் அம்மலங்கள் அங்கே நிற்க அவற்றை உயிர்க்காற்று வெளியிட்டு விடுகிறது. அது கொண்டு பிராணிகள் பிழைக்கின்றன. எங்கும் இயற்கையில் அமைந்த தொழில் நடந்துவருமாயினும் தம் முயற்சியால் நல்ல காற்றுள்ள தேவாலயம், நதிக்கரை, வில்வ மரத்தடி, மலையுச்சி இவ்விடங்களில் நல்ல ஆசனங்களிலிருந்து, தனது சரீரத்துட்புறம் அமைந்த வாயுவை வெளியேற்றினால் இயற்கைக்குச் சிறிததிகமாக இதயம் விரியும். அதிகம் விரிந்திட அதிக ரத்தம் உட்புகும். பின் வெளியில் நிறைந்த நல்லகாற்றை உட்புறம் செலுத்திட இதயம் நெருங்கிக் குவிந்திட ரக்தம் உடனே சுத்திபெற்று சரீரமெல்லாம் சுழலும்.

இனிச்சிறிதுகாலம் உட்புறமே காற்றைச் செலுத்தி நிறுத்திட, அந்தக்காற்று இதய வழி ரக்தக் குழல்களிலும் சென்று, காலை நீராட்டம் முதலியவற்றாலுறைந்த ரக்தத்தையும் சுத்திசெய்விக்கின்றது. இவ்விதம் சுத்தியெய்திய உதிரம் சிரம் சேர்ந்திட அவ்விடம் மூளையில் நல்லுதிரம் தங்கியபோது அவ்விடத்திலுள்ள மனம் நன்கு பிரகாசிக்கும். இனி நல்லுதிர சம்பந்தம் பெற்ற மனம் நல்விஷயத்தைச்சிந்தித்தும் புலன்வழி சென்று வெளிப்பொருள் உண்மையையறிந்தும் ஆன்மாவுக்குபகாரம் செய்திடும். இக்கும்பகத்திற்றான் இதயம் நெருங்கி சுருங்குதல் விரிதல் எனும் தொழிலன்றி நிற்கும். அச்சமயமே நல்லுதிரம் வெளியின்று உட்சென்ற நற்காற்றினால் மேனோக்கி மூளையையடையும். அதற்காகவே மனிதர் முயலவேண்டும். மூளையில் நல்ல ரக்தம் இருக்குமளவில் எமது புத்தி நன்னிலையிலிருக்கும். புலன்கள் நல்ல விஷயங்களை அறிந்திடும் வலிபெறும்; ஆயுள் பெருகும்; உதிரம் பெய்தும், உள்மலம் ஒழியும்; சரீரம் நிர்மலமாகும். இந்நற்குணங்கள் ஒருங்கு சேர்ந்து வேறெவ்வழியிலும் அமையாவாகவே கும்பகப் பிராணயாமகுணத்தைச் சொல்லச் சொற்களெல்லாம் போதாவாம்.

இனி ரேசகம், பூரகம் இரண்டின் காலமும் எவ்வளவு அனுபவம் நிறைந்த யோகிக்கும் சமானமே. ஆயினும் கும்பகம் ஒன்றுமட்டில் தனது அபிப்பிராயத்தின் பலத்துக்குத் தக்கபடி விருத்தி செய்யவேண்டும். அதனாற்றான் ஒவ்வொரு சரீரத்திற்கும் ஆயுள் விருத்திக்கும் என்றேம்.

இனி ரேசகம் என்பதை ஒருபுறத்து நாஸித்வாரத்தானே செய்யக்கூடாது. இரண்டு நாசி வழியும் உயிர்க்கின்றேம். இரண்டிடங்களிலும் மலம் நிறையும். ஆயின் இரு நாசித்துவாரங்களிலும் ரேசக பூரகங்களை செய்தாலன்றி அவற்றின் மலம் ஒழியாது. கும்பகம் ஒனறுமட்டில் இந்நாசி வழிகடந்தது. ஆகையால் அதை அனுஷ்டிப்பவர் ஒரே வழியில் அனுஷ்டிக்கலாம். இங்ஙனம் அப்யாஸம் செய்து வரவர கும்பகம் எனும் பிராணயாமம் மலிந்திடவே அதனால் பிராணவாயு வெளியிற்செல்லாது உட்புறம் தடைப்படும் ஆகவே உள்ளே நிரைந்திருக்கும் நாளில் செல்லத்தொடங்கி காலக்கிரமத்தில் சுழுமுனை எனப்படும். மகாசூக்ஷ்ம நாடியிலும் பிரவேசிக்கும். அச்சமயம் ஜீவன் சரீரத்திலிருந்தும் ஏதும்றியாது மெய்நிலைகாடி நிற்றலாலும் சரீரத்தில் ரத்தம் ஓடாது ஆங்காங்கு நிரைவுற்றமையாலும் அச்சரீரம் வெளிப்பதார்த்தங்களை எவற்றையும் அச்சமயம் உள்வாங்காது. ஆகவே அச்சரீரத்தில் அக்னி இடினும் அச்சரீரம் கெடாது. இவ்வவஸ்தையைத்தான் ('நைமக்நிதர்ஹதி') இவனை அக்நி கொளுத்தாது என்று புகழ்ந்தது வேதம் என்க. ஆதலால் மனிதப்பிறப்பை மேம்படுத்த வேண்டி அவசியம் கும்பகப் பிராணயாமம் செய்யவேண்டும். அது ஒரே சமயத்தில் முடியாது பற்றி அதை மெதுவாய் காலக்ரமத்தில் அனுபவிக்கவேண்டும். இவ்வப்பியாஸமும் சரீரத்தின் இளமையிற்றானே ஆரம்பிக்கவேண்டுமேயன்றி வலிமையிலாதல் முதுமையிலாதல் ஆரம்பித்தால் பயன்படுவது மிகக்கடினமாம். இளமை தவிர மற்றகாலங்கள் எவ்விதத்தும் சித்தத்தை நிச்சலம்செய்யவிடாது. இனி கிரமமாய் அப்பியசிக்கப்பட்டு நாலுமாத்திரை பிரமாணமாக உள்நின்ற வாயு கால் முதல் தலைவரை நிறைந்து சுழுமுனையுட்செல்லுமென்று கண்டனர், ஆன்றோர். அச்சுழுமுனையில் வாயு நுழையும் வழி இஃதென யோகநூல் கண்டுரைத்தவாறுரைப்பாம். எங்ஙனம் எனில் கூறுதும் அச்சுழுமுனை என்னும் நாடியின் அடியில் குண்டலினி என ஓர் நாடி வடிவம் கொண்ட ஆதிசக்திபாம்பின் திருவடிவம் எய்தி நிற்கின்றனள். (பிரும்மவித்யா.)

## ஸ்ரீ காஞ்சி கருடோற்சவத்தில் ஸனாதனதர்மப் பிரசாரமும் காங்கிரஸ் விஷமத்தனமும்,

காஞ்சீபுரம் மேமீ 21உ

ஸ்ரீ தேவராஜஸ்வாமி திருத்தேர் கங்கையுண்டான் மண்டபத்தண்டை நின்றிருப்பதின் நிமித்தம் அங்கு குமிழ்ந்துள்ள ஆஸ்திக ஹிந்துக்களுக்கு சென்ற சுக்ரவாரம் சாயந்திரம் ஸ்ரீகுமரகோட்ட தேவாலயத்தின் முன் ஸ்ரீ ஸனாதன தர்ம ஸேவா ஸங்கத்தின் காரியதரிசி ஸ்ரீமான் M. K. ராமச்சந்திரசர்மா அவர்கள் ஸனாதன தர்மம் என்னவென்பதைப்பற்றியும், வருணாச்ரம தர்மத்தால் தான் தேசத்திற்கு நிஜஸ்வராஜ்யாதி ஸகலமங்களங்களும் பாரதீயர்களுக்குக்கிடைக்குமென்றும், அத்தர்மங்களைக் கெடுக்க செய்யப்பட்டுவரும் ஆலயப்ரவேசம், தீண்டாமை ஒழித்தல், விவாஹச் சட்டம் முதலியவைகளால் தேசத்தினருக்கு எவ்வித ஸௌக்யமும் உண்டாகாதென்றும், சாஸ்திர ஆதாரங்களைக்கொண்டும் மேனாட்டு அறிஞர்களுடைய அபிப்பிராயங்களைக் கொண்டும் மிக்க உருக்கமாய் உபன்யஸித்து வருவதை பல ஜனங்கள் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருக்கும் ஸமயத்தில் சில காங்கிரஸ் விஷமிகள் நுழைந்து ஆலயப் பிரவேசமாய்க் கேள்விகள் கேட்க, சர்மா அவர்கள் அவைகளுக்குத் தக்க ஸமாதானங்கள் சொல்லிவர, திருநாராயணபுரத்தில் தீண்டாதாரை விடவில்லையா வென்னும் பழைய கதையைக் கேட்க ஆரம்பித்தனர்கள். அக்கேள்விக்கும் எந்த காரணத்தால் ஒரே ஒரு தினம் குடும்பத்தார் ஆலய ஸம்ரக்ஷணமாகச் செய்த மஹத்தான ஈயாகத்தின்பொருட்டு விடப்பட்டு வருவதாயும் அதற்காக உடனே மிக்க செலவில் மஹா ஸம்ப்ரோக்ஷணாதிகளும், வாஸ்து சாந்திகளும் செய்யப்பட்டு வருகின்றனவென்றும் சொல்லிக்கொண்டிருக்கையில், ஸனாதன தர்ம பிரசாரத்தில் மிக்க ஈடுபட்டுள்ளவரும் ஸ்ரீமான் அணங்காசார்ய ஸ்வாமிகள் வேதாந்த பாடசாலை மாணவருமான ஸ்ரீமான் கோவிந்தாச்சாரியென்னும் உத்கலதேசச் சிறுவர் திருநாராயணபுர ஆலய பிரவேசம் ஸ்ரீராமானுஜரால்செய்விக்கப்பட்டதென்று சிலர் கூறுவது பிசகென்றும் அப்பெயர்கொற்ற சாஸ்திர விருத்தான விசேஷ சீர்திருத்தம் அவரால் செய்யப்பட்டிருப்பின் அவருடைய ஜீவிய சரித்திரங்களிலாவது அவர் செய்த பல கிரந்தங்களில் ஏதாவது ஒரு கிரந்தத்திலாவது கூறியிருக்குமேயென்றும் சொல்லிக்கொண்டிருக்கையில், காங்கிரஸ் விஷமிகள் அவரை சூழ்ந்துகொண்டு, நெருக்கியும், துர்பாஷணைகள்கூறியும் கைநீண்டும் ஸமயத்தில் சர்மா அவர்களும் இந்த ஆபத்தை விலக்க ஓடிவந்த ஸ்ரீமான்களான பிரபல வர்த்தகருமான கல்யாணசுந்தர முதலியார், மிஷன்ஸ்கூலைச் சேர்ந்த தேவனாத முதலியார், ஸ்ரீகுமரகோட்டம் ஆலய மனுஷ்யாள இவர்களால் தப்புவிக்கப்பட்டார். இவர்களால்கிருஸ்துவ உபதேசகர்களுக்கும் அதிகத் தீங்கு இழைக்கப்பட்டதாகத் தெரிகிறது. மஹம்மதியர் விஷயத்தில் இவர்களுக்கு இவ்வூரிலிருக்கும் மனப்பான்மையைக்கேட்கவே வேண்டுவதில்லை.

காங்கிரஸ் கொடி மும்மதஸ்தர்களுக்கும் பொதுவென்று சொல்லிக்கொண்டு மூலை முடுக்கெல்லாம் கொடிகள் ஏற்றி அஹிம்ஸா தர்மத்தையே பிருதாகக்கொண்டு நடிக்கும் இக்காங்கிரஸ்காரரின் யோக்யதையை என்னவென்று கூறுவது.

இவர்கள் கூறிவரும் "நமதே ராஜ்யம்" என்னும் வாக்குக்குத்தக எந்த கக்ஷியினருடைய கொடிகளை நாட்டவிடாமலும், ஸபைகள் சேர்ந்து பேசவிடாமலும், ஸபைகளில் நுழைந்து கலகங்கள்செய்து வரும் அரசாங்க நடவடிக்கைகளைக் கண்டிக்க ஒருவரும் இல்லைபோலும்? பிரிடிஷ் ஸாம்ராஜ்யமிருக்கும்போதே இதர கக்ஷிகளின் கதி இவ்விதமிருக்க, காங்கிரஸ் ஸாம்ராஜ்யத்தில் இதர கக்ஷிகளுக்கு அதிலும் ஸனாதனிகளுக்கு இடமேது? ஸ்ரீமான் ஜவஹர்லால் காட்டியிருக்கும் ஆர்டிக் ஸமுத்திரம்தான் நமக்கு அபயஸ்தானமா?

ஸத்யவ்ரதன்.



299

# மேனாட்டார் அதிசயிக்கும் இந்து தெய்விக நிகழ்ச்சிகள்.

(மேமீ 22உ ஸண்டே டைம்ஸ் பத்திரிகையில் பிரசுரமான விஷயம்.)

நம்மவர்கள் உலக அதிசயமென சில நூதனமானதும், பார்க்கக் கிடைப்பதற்கு அரிதானதுமான கட்டடங்களையும் குகைகளையும், சிற்பவேலைகளையுமே சுட்டிக்காட்டிப் புகழ்ந்து வந்தனர். ஆனால் மேல்நாட்டார் தம்முடைய நுண்ணறிவினால் எதையும் ரஸாயனப் பரீக்ஷையாலும், விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சியாலும், ஒப்புக்கொள்ளக்கூடிய வகையில் உள்ளங்கை நெல்லிக்கனியென அறிந்தாலல்லது ஒப்பார்கள். இதைக் கொண்டே நம்மவர்களும் இம்மாதிரியான திருஷ்டி பூர்வமான ஆராய்ச்சிக்கு உள்ளாகி பல கேள்விகள் கேட்டு கஷ்டத்துக்குள்ளாகி வருகிறார்கள். மேனாட்டினர், தெய்வீக நிகழ்ச்சிகள் பல பொருந்திய இந்தியர்களின் செயலையும் கண்டு அஞ்சி தங்கள் ஆராய்ச்சியும், நுண்ணறிவும் பயனற்றதே என்று கைவிட்டுவிட்டனர். அத்தகைய நிகழ்ச்சிகளில் பல இன்றும் உலாவி வருவதைக் குறிப்பிடுவோமாக.

### தீ மிதித்தல்.

இஃது பெரிய கட்டைகளை ஒன்று சேர்த்து எரித்து ஜுவாலைமாறி பெரிய தணல்களாக மாறியவுடன், நெடியதூரம் பரப்பி மனித சரீரத்தில் சிறிது பட்டாலும் புண் உண்டாகும் நிலையை அடையும், மனிதனே பாதங்களை ஊன்றிவைத்து நடப்பதேயாகும் இச் செயலை இங்கிலாந்தில் சர்வ சாதாரணமான ஒரு மனிதன் செய்து காட்டினான். விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சியாளர் பலர்கண்டு அதிசயித்து ஆச்சர்யமடைந்து நடைமுறையில்ஒருவராலும் செய்யமுடியாததான ஓர் அரிய செயலென்றே கொண்டு கைவிட்டனர். இன்னும் இச்செயல் ஒருவராலும் இவ்வாறு என்று அறிய முடியாமலேயே இருந்து வருகிறது.

### அலகு குத்திக் கொள்ளுதல்.

இந்தியாவில் அநேக தேவாலயங்களின் உத்ஸவ காலத்தில் பிரார்த்தனையின் பொருட்டு அநேகர் கூரிய கத்திகளையும், கூரியவேல்களையும், உடம்பில் ஒருபுறமிருந்து மற்றோர் புறமும், மாறிமாறியும் செலுத்திக்கொண்டு ஆடல்பாடல் முதலியவைகளைக் கடைப்பிடித்து நெடுந்தூரம் கால் நடையாகவேசென்று யாதொரு கஷ்டமுமின்றி பிரார்த்தனைகளை நிறைவேற்றுகிறார்கள். பிரார்த்தனை முடிந்தவுடன் அலகுகளை நீக்கி சிறிது காயம்கூட இல்லாது பூர்ண சுகமடைந்து மகிழ்ச்சியுடன் வீடு திரும்புகிறார்கள். இச்செயலையும் கண்டு மேனாட்டார் அதிசயத்துப் பிரமிக்கிறார்கள்.

(தொடரும்)

## காங்கிரஸ் நமது பிரதிநிதி ஸபை அல்ல ஹிந்துஸபைத் தீர்மானம்.

ஹிந்து மகாஸபையின் காரியக்கமிட்டிக் கூட்டம் நாஸிக்கில் 28உ நடைபெற்றது. ஜின்னா, காந்தி ஸம்பாஷணைமூலம் ஏற்பட்டுள்ள நிலைமையைப் பற்றிபரிசீலித்து முக்யமான தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. காங்கிரஸ், ஹிந்துக்களின் பிரதிநிதிஸபையாகாதென்றும், ஹிந்துக்களின் சார்பாக அது முஸ்லீம்களுடன் ராஜிபேச பாத்யமில்லை யென்றும், காங்கிரஸ் செய்யும் எந்த உடன்பாடும் ஹிந்துக்களைக் கட்டுப்படுத்தாதென்றும் தீர்மானம் செய்யப்பட்டது.

## மந்திரிகளுள் தகராறு தீர்ந்துவிட்டதாம்.

மத்யமாகாண காங்கிரஸ் மந்திரிகளுள் ஏற்பட்டிருந்த தகராறை ஸ்ரீமான் படேலும் அஸாதும் சென்று மத்யஸ்தம் செய்து தீர்த்துவைத்தனர். பிரதம மந்திரி மீது அதிருப்தியால் மற்ற மந்திரிகள் செய்திருந்த ராஜிநாமாவும் வாபீஸ் பெறப்பட்டது.

## ஸனாதநப் பத்திரிகைக்குத் தடை.

திருவாங்கூரில் வரக்கூடாதாம்.

ஸ்ரீமான் குஞ்சுனி ஆச்சான் என்பவரால் திருச்சூரிலிருந்து பிரசுரிக்கப்படும் "ஸநாதனி" என்ற மலையாள வாரப்பத்திரிகையானது திருவனந்தபுரத்திற்குள் வரக்கூடாதென்று அந்த ஸம்ஸ்தான அதிகாரிகள் உத்திரவு செய்துள்ளார்கள்.

## நேருவின் சீமைப் பிரயாணம்.

ஸ்ரீமான் ஜவஹர்லால்நேரு 2உ யன்று ஐரோப்பாவுக்குப் புறப்பட்டுப் போனார். இங்க்லாந்து, பிரான்ஸ், ரஷ்யா, அமெரிக்கா முதலிய பல இடங்களுக்கு அவர் போவார். இந்தியாவின் நிலைமையைப்பற்றி எங்கும் பிரசாரம் செய்வாராம்.

## வைஸ்ராயின் ஐரோப்பிய பிரயாணம்.

சனம் வைஸ்ராய் அவர்கள் இம்மாதம் 25உ யன்று பம்பாய் வந்து அன்றே இங்கிலாந்திற்குப் பிரயாணமாகிறார்கள். கல்கத்தா கவர்னரான லார்டு பிரபோன் வைஸ்ராயாக ஆக்ட் செய்வார்.

## காங்கிரஸ் நிர்வாஹிகள் ராஜிநாமா.

சேலத்தில் பிரபல காங்கிரஸ் ஊழியர்களான 9 பேர்கள் தங்கள் நிர்வாஹப் பதவிகளை ராஜிநாமா செய்துவிட்டார்கள். சேலம் முனிஸிபல் எலெக்ஷனில் இவர்கள் காங்கிரஸ் அபேக்ஷகர்களுக்கு விரோதமாக வேலை செய்து தோல்வி ஏற்படும்படி செய்தனராம்.

## ஹிந்து முஸ்லீம் ஸமரஸப் பேச்சு

லீக்கின் கூட்டம்.

ஜின்னா காந்தி, போஸ், இவர்கள் நடத்திய ஹிந்து முஸ்லீம் ஸமரஸவிஷயமான பேச்சுவார்த்தைகள் தாத்காலிகமாக நிறுத்தி வைக்கப் பட்டிருக்கின்றன.

சிலவிஷயங்களில் லீக்கின் அபிப்பிராயம் தெரியவேண்டி யிருந்ததால் அதற்காக பம்பாயில் 4உ யன்று அதன் நிர்வாஹஸபைக் கூட்டத்தை நடத்த ஏற்பாடுசெய்யப் பட்டிருக்கிறது.

முக்கிய கவனிப்பு

(3-வருஷத்திற்கு உத்திரவாதமுள்ளது.)

அசல் தங்க நகைகளைப்போன்ற "கன்னூரஸ் ப்ளேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்கவும்.

தயாரிப்பவர்:— N. கன்னுராமி பத்நர்,
பெரியதெரு, கும்பகோணம்.

## The Other Woman Bill (England)

(1) What is widely known as "The other woman" bill got through the third reading in the House of Commons with the Attorney-General's blessing although, it was a private member's bill.

(2) It will compel testator to make a reasonable provision for the maintenance of his own family.

(3) It arose originally from a number of cases, wherein the estate was bequeathed entirely to the other woman" leaving the wife penniless.

1. The other Woman Bill is *a shameless Bill with a shameless name and depicts a shameless society* which must be *shamelessly maintained in its shameless-ness.* The Bill could have been properly named with the greatest ease possible. But a shameless taste requires a shameless title. *The Bill proves how large the other woman looms* in lecherous and libidinous England and *how the insufferable evil is suffered to grow and grow, till it swallows up, in its abysmal jaws, England's right to live as a nation.* Even now the monstrous law which encourages the birth of the other woman remains unchanged. Even now *English law is shamelessly allowed to disgrace, the statute book and to encourage adultery openly and actively.* Even now England must recognise *the right of the 'other woman' to replace the wife.* All that the Bill provides for is that the wife should not be ousted altogether! *Why not make adultery a virtue* and lay down that an Englishman may have legitimately several wives, *one formal (to prevent bigamy!) and as many informal as he pleases* and that the formal wife will have a right to a back seat. *(Truth.)*

**Madras Local Bodies—ban on purchase of Pictures**— "No expenditure should be incurred in future from funds of the municipal councils, or local boards on purchase or installation of any portraits, pictures status or busts other than those of *Their Majesties and Mr. Gandhi,*" says a Government order issued to-day in suppression of all previous orders and rules on the subject.

The Government also direct that no proposals of any local board or municipal council to instal in their halls school or other public buildings portraits etc., even at private expense should be tabled for discussion without the previous sanction of the Government, except in the cases specified above. *(Truth)*

உயர்ந்த புஸ்தகம்! உயர்ந்த புஸ்தகம்!!

ஸ்ரீநகர விமர்சனம்.

ஆர்யாத்விசதி or ஸ்ரீ லலிதாஸ்தவ ரத்னம்.

[பிர்மஸ்ரீ அருட்கவி ந. சுப்பிரமண்ய அய்யர் அவர்கள் எழுதிய தமிழுரையுடன் கூடியது.]

விலை 0—12—0. தபாற்செலவு வேறு

கிடைக்குமிடம்:—

ஸ்ரீஜனார்த்தன அச்சுக்கூடம், லிமிடெட் டவுன்ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்ய தர்மம்.
பகுதான்ய-ஹு வைகாசி-மீ 20உ

## ஹிந்து மஹா ஸபையின் எச்சரிக்கை.

பாரததேச வாஸிகளாகிய ஹிந்துக்களின் எதிர்கால வாழ்வைப் பெரிதும் பாதிக்கக் கூடிய ஜின்னா, காந்தி ஸம்பாஷணையிலேயே ஹிந்து ஸமூஹத்தின் கவலை சென்றிருக்கிறதென்பது தற்கால இந்திய நிலைமையை அறிந்தவர்களுக்கு விசதமானது. அந்த ஸம்பாஷணையின் சில அம்சங்கள் பத்திரிகைகளில் வெளிவந்திருப்பதைப் பார்த்து உண்மையான ஹிந்து ஸமூஹ அபிமானி எவரும் கலக்கமடையாமலிருக்க முடியாது.

இந்த நெருக்கடியை யோஜிப்பதற்காக ஹிந்து ஸமூஹத்தின் ஒரே பிரதிநிதி ஸபையான ஹிந்து மஹா ஸபை தனது காரியக் கமிட்டிக் கூட்டத்தை நாஸிக்கில் கூட்டி ஸமயோசிதமான முடிவுகளைச் செய்து வெளியிட்டிருக்கிறது. முக்கியமாக இதில், தானுகவே அக்ஷதை போட்டுக்கொண்டு ஹிந்து ஸமூஹப் பிரதிநிதியாக பாவிக்கும் காங்கிரஸின் உண்மை நிலைமையை ஹிந்து மஹா ஸபைத்தீர்மானம் தெளிவாக்கியிருக்கிறது. காங்கிரஸ் தலைவர்களுடையசெல்வாக்கிற்கும் கௌரவத்திற்கும் அந்தஸ்துக்கும் சிறிதும் குறைவில்லாத ஹிந்து ஸபைத்தலைவர்கள் கூடி இந்த நெருக்கடியான நிலைமையில் காங்கிரஸின் போக்கைக் கண்டித்தும், அதன் பிரதிநிதித்வயோக்யதையை விளக்கியும் எச்சரித்துத் தீர்மானித்திருப்பதை தேசமோ, காந்திஜீ போன்றவர்களோ எளிதில் புறக்கணிக்க முடியாது.

காங்கிரஸ்காரர்கள் தங்கள் கக்ஷி பலமொன்றை மட்டும் பிரதான நோக்கமாகக்கொண்டு, முஸ்லீம்களைத் திருப்திசெய்யவே பாடுபடுகிறார்கள். அதற்காக ஹிந்து ஸமூஹ நன்மைகள் பலவற்றையும் பலி கொடுத்திருக்கிறார்கள். இவர்களுடைய கோழைத்தனத்தால், மிருந்த அபாயகரமான வகுப்புத் தீர்ப்பு ஏற்பட்டு பஞ்சாப், வங்காளம் முதலிய பலவிடங்களில் ஹிந்து ஸமூஹம் பாதாளத்தில் அழுத்தப்பட்டு வருவது பிரத்யக்ஷமாகும்.

இது போதாதென்று இப்போது ஏற்படவிருக்கும் ஸமஷ்டி திட்டத்தை நாசமாக்கக் காங்கிரஸானது முஸ்லீம் லீகுடன் உறவாடி ஒன்றுசேர முயற்சிப்பதை முக்யமாக ஹிந்து ஸபை கண்டிக்கிறது முஸ்லீம்கள் தங்கள் வகுப்பு நலத்தை மட்டும் உத்தேசித்து ஸமஷ்டியை எதிர்க்கிறார்களேயன்றி இந்தியா தேசத்தின் க்ஷேமத்தைக் கருதியல்ல. ஸமஷ்டி சட்டஸபையில் போதிய பிரதிநிதித்வம் அவர்களுக்கு இன்று ஏற்பட்டுவிட்டால் அவர்கள் ஸமஷ்டியை ஆதரிக்கத்தயார். நாலுபக்கமும் சிதறிக்கிடக்கும் ஹிந்து ஸமூஹமானது ஸமஷ்டிமூலமாக ஓர் வலுவான நிலைமையை அடையக் கூடியதாயிருப்பதை ஸஹியாமலேயே முஸ்லீம்கள் ஸமஷ்டியை எதிர்க்க முன்வந்திருக்கிறார்கள். இது தெளிவாகத் தெரிந்திருந்தும் காந்திஜீ முதலிய காங்கிரஸ் பிரதிநிதிகள் முஸ்லீம்களுடன் பணிந்து ராஜிபேசப் புறப்பட்டிருப்பதை ஹிந்து ஸமூஹம் எப்படி அங்கீகரிக்க முடியும்? இந்தியா ஓர் ஒன்றுபட்ட நாடாக நாளை ஆகக்கூடிய பெரிய நன்மையை, முஸ்லீம்களுக்காக காங்கிரஸ் வாதிகள் த்யாகம் செய்து ஸமூஹத்தை நசுக்க உடந்தையாயிருப்பதை யார் அங்கீகரிக்கமுடியும்? இவ்விஷயங்களை ஹிந்துமகாஸபைத் தீர்மானம் வெகுவாஹத் தெளிவுபடுத்தியிருக்கிறது. முஸ்லீம்களின் முகதாக்ஷிண்யத்திற்காக காங்கிரஸ் அடிக்கடி நியாயமான ஹிந்து ஸமூஹ உரிமைகளைப் பாதுகாக்கத் தவறிவிட்டதால் அது ஹிந்து ஸமூஹப் பிரதிநிதிஸபையல்லவென்றும் அந்த ஸமூஹத்தின் சார்பாகப் பேச காங்கிரஸுக்கு உரிமை இல்லையென்றும் மஹாஸபை சொல்லுகிறது.

காங்கிரஸ் ஸபையானது, முஸ்லீம்களுக்கு ஸாதகமாயும், ஹிந்துக்களுக்கு விரோதமாயுமுள்ள மனோபாவத்தின் காரணமாகவகுப்புத் தகாரறைத் தீர்க்க அர்ஹதையற்றதாகையால் அது இந்த ராஜிப்பேச்சை நடத்தக் கூடாதென்றும், இந்த ராஜியை ஆதாரமாகக் கொண்டு கவர்ன்மெண்டார் எவ்வித ராஜியத் திருத்தமும் செய்யக்கூடாதென்றும், அது ஹிந்து ஸமூஹத்தைக் கட்டுப்படுத்தாதென்றும் மஹாஸபை தீர்மானித்தது.

தேசமெங்கும், ஒரே காங்கிரஸ் மயமாகிவிட்டதாக நினைத்து, எந்த அநீதியையும் தைர்யமாகச் செய்துவரும் காங்கிரஸை, ஹிந்துஸபை இவ்வாறு எச்சரித்தது ஸமயோசிதமான கார்யமாகும். இப்படிச் செய்யாவிடில் ஹிந்துக்களின் எதிர்கால வாழ்வு அடியோடு கவிழ்ந்துவிடுவது நிச்சயம். ஆதலால் இச்சமயம் ஹிந்துஸபை, நம் ஸமூஹத்திற்கும், காங்கிரஸுக்கும் செய்துள்ள எச்சரிக்கையை நாம் பயன்படுத்திக்கொண்டு மஹாஸபையின் கையைப் பலப்படுத்தவேண்டியது அவச்யமாகும்.

## குறிப்புகள்.

### ஸனாதனப் பத்திரிகைமீது பாணம்.

திருச்சூரிலிருந்து ஸ்ரீமான் குஞ்ஜுணி அச்சான் என்ற ஸனாதன வீரரால் பிரசுரிக்கப்பட்டு வரும் "ஸனாதனி" என்ற மலையாள வாரப் பத்திரிகையைதிருவனந்தபுரத்திற்குள் வரக்கூடாதென்று திருவாங்கூர் கவர்ன்மெண்டார் ஒரு உத்திரவு பிறப்பித்திருப்பதாகப் பத்திரிகைகளில் காணப்படுகிறது. இப்பத்திரிகையானது திருவாங்கூர் ஆலயப்பிரவேசவிளம்பரத்தைத் தக்க நியாயங்களுடன் வன்மையாகக் கண்டித்து வந்தது. இதன் இடைவிடாத பிரசாரத்தினால் கோளத்தில் ஆலயப்பிரவேச இயக்கத்திற்கு எதிரான நிலைமை பலமாக ஏற்பட்டிருக்கிறது. இதன் ஆசிரியர் சென்னை வித்வத்பரிஷத்திலும், அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கக்கூட்டத்திலும், திருவாங்கூர் செய்கையைக்கண்டித்து வீரகர்ஜனை செய்ததை பலரும் மறந்திருக்கமாட்டார்கள்.

இத்தகைய கௌரவம்வாய்ந்த பத்திரிகையைத் திருவாங்கூர் கவர்ன்மெண்டார் கண்டு அஞ்சுவது இயற்கையே. அப்பத்திரிகையின் மீது இந்த அடக்குமுறையை பிரயோகிப்பதிலிருந்தே அதன் செல்வாக்கு நன்கு வெளிப்படக்கூடியதாயிருக்கிறது. திருவாங்கூர் கவர்ன்மெண்டார் இந்தபத்திரிகையைக் கண்டு ஏன் இவ்வளவு பயப்பட வேண்டும்? ஆலயப்பிரவேச விளம்பரம்தான் ஸர்வஜன ஆதரவைப் பெற்றதென்று பறையடிக்கிறார்களே? அப்படியிருக்க இப்பத்திரிகையால் என்ன ஆபத்து ஏற்பட்டு விடும்? இப்படியிருக்க இந்த அடக்கு முறை செய்யப்பட்டதிலிருந்து திருவாங்கூரில் உள்ளூர் புகைச்சல் இருந்து வருவதாகவே நினைக்க வேண்டியிருக்கிறது. அது இப்பத்திரிகையினால் கொழுந்துவிட்டெரியுமோ வென்ற பயங்கொள்ளித்தனமே இந்த அடக்கு முறைக்குக் காரணமாகும்.

திருவாங்கூரில், பேச்சு ஸ்வதந்திரம், எழுதும் ஸ்வதந்திரம் முதலான பிரஜா உரிமைகள் பறிக்கப்பட்டு வருவதாக, அதன் நண்பர்களாய் நடித்த காங்கிரஸ் வாதிகளே இப்போது புகார் கூறி வருகிறார்கள். இந்நிலைமையில் அது ஒரு ஸனாதனப்பத்திரிகை மீது பாணம் போட்டது அதிசயமல்ல.

### காங்கிரஸ் கமிட்டிகளும் ஆலயப்பிரவேச பிரசாரமும்.

மதுரையில் நடந்த தமிழ்நாடு மாகாணக் கமிட்டிக்கூட்டத்தில் ஆலயப்பிரவேச பிரசார விஷயமாக ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. தென்னிந்தியாவிலுள்ள எல்லாக் காங்கிரஸ்கமிட்டிகளும் ஆங்காங்கு ஆலயப்பிரவேசத்தை ஆதரித்து பலமாகப்பிரசாரம் நடத்த வேண்டு மென்றும், இவ்விஷயத்தில் காங்கிரஸ் மந்திரி ஸபையிடம் நம்பிக்கையிருப்பதாகத் தீர்மானிக்க வேண்டுமென்றும் மாகாணக்கமிட்டியில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இத்தீர்மானத்தை அனுசரித்து தென்னிந்தியாவில் அவர்கள் தீவ்ரமாக அதர்மப்பிரசாரம் நடத்த ஆரம்பிப்பார்கள். காங்கிரஸ் மந்திரிகள் செய்யப்போகும் ஆலயப்பிரவேசச்சட்டத்திற்கு ஆதரவு தேடவே இந்த ஸங்கேதமான ஏற்பாடு செய்யப்படுகிறது.

தீண்டாமை விலக்கென்ற பொய்வான வார்த்தையுடன் இது வரையில் செய்துவந்த பிரசாரத்துடன் நிற்காது, இப்போது நேரிட மத விஷயமான ஆலயப்பிரவேசத்தில் பொதுஜன அபிப்பிராய விருத்தமாக காங்கிரஸ், பிரசாரம் நடத்த ஏற்பாடுசெய்திருப்பது மிக்க அநீதியாகும். காங்கிரஸானது மதவிஷயத்தில் நடுநிலைமை வகிக்குமென்றும், எந்த ஜாதிமத, ஸம்பிரதாயங்களுக்கும் எதிராகபிரசாரம் செய்யாதென்றும் காரச்சித்தீர்மானம் ஸ்பஷ்டமாக இருக்கையில், இம்மாதிரியான தீர்மானம்செய்ய மாகாணக்கமிட்டிக்கு அதிகாரமில்லை. ஆயினும் எந்த அக்ரமத்தைச்செய்தாலும் கேள்வி முறையில்லாத இச்சமயத்தில் இந்த பிரசாரத்தை யார் ஆக்ஷேபிக்கப் போகிறார்கள்?

ஆயினும் இச்சமயம் ஓட்டர்களின்கடமை தெளிவாக இருக்கிறது. கடந்த இந்திய சட்ட ஸபை எலக்ஷனிலோ, மாகாணச்சட்டஸபை எலக்ஷனிலோ, காங்கிரஸ்காரர்கள் ஆலயப்பிரவேசச்சட்டம் செய்யப்போவதாக வோட்டர்களிடம் சொல்லவில்லை. இவ்விஷயமாக வோட்டர்களின் அநுமதியும் பெறவில்லை. இதற்கு மாறாகவே நடந்திருக்கிறது



301

ஆலயப் பிரவேசம்போன்ற விவாதாஸ்பமான விஷயம் சட்ட ஸபைகளில் வாராவென்றும் ராஜ்யத்திருத்தத்தை உடைப்பதும், புதிதான அரசியல் நிர்மாண திட்டத்தை ஏற்படுத்துவதே நோக்கமென்றும் வோட்டர்களுக்கு உறுதிகூறப்பட்டிருக்கிறது. வோட்டர்களிடையில் ஆலயப் பிரவேசத்திற்குப்பலமான எதிர்ப்பு இருப்பதையும் இந்தப் பேச்சைப்பேசினால் வோட்டர்களின் ஆதரவு கிடைக்காதென்பதையும் காங்கிரஸ் அபேக்ஷகர்கள் அப்போது நன்கு அறிந்துகொண்டார்கள். ஆயினும் இப்போது ஸ்தானம் பெற்ற பிறகு உறுதிமொழியைக் காற்றில் பறக்கவிட்டுவிட்டு, மதவிஷயத்தில் பலாத்காரமாகச் சட்டமியற்ற முற்பட்டிருக்கிறார்கள்.

தங்களுக்குள்ள மெஜாரிடி பலத்தைக் கொண்டு எந்த அக்கிரமத்தையும் செய்ய அவர்கள் துணிவுகொண்டு விட்டார்கள். பொதுஜன அபிப்பிராயத்தையோ, நீதியையோ அவர்கள் லக்ஷ்யம் செய்கிறவர்களாகத் தெரியவில்லை. நியாயப்படி இவர்கள் நடப்பதாயின், இப்போது ராஜிநாமாசெய்து ஆலயப் பிரவேசச் சட்டத்தை முன்னிட்டு மறுபடி வோட்டர்களுடைய அநுமதியைப் பெறவேண்டும். அப்படி அநுமதி கிடைத்தால் பொது ஜன அபிப்பிராயப்படி இவர்கள் நடக்கலாம் ஆதலால் காங்கிரஸ்காரர்கள் இந்தச் சட்டம் செய்யவோ, பிரசாரம் நடத்தவோ அதிகாரம் பெற்றவர்களல்லவென்பதை வோட்டர்கள் ஆங்காங்கு கூட்டம் கூடித்தெரிவிக்கவேண்டியது அவசியமாகும்.

### கீதானந்தம்.

திண்டுக்கல் ஹிந்து தர்ம ரக்ஷண ஸபையின் ஆதரவில் மே-மீ 24ம் தேதி மாலை 7மணிக்கு மகா-ள-ள-ஸ்ரீ திவான்பகதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள் "கீதானந்தம்" என்னும் விஷயம்பற்றி ஸ்ரீ ஜகத்குரு மடத்தில் ஓர் சொற்பொழிவாற்றினார். உபன்யாஸகரவர்கள் ஸகல ஜீவராசிகளும் துக்கரஹிதமான நித்யமான ஆனந்தத்தையே அடைய எப்பொழுதும்முயற்சித்துக் கொண்டிருக்கின்றனவென்றும், அதையே ஸ்ரீ கீதாசார்யர், தான் உபதேசித்த மூன்று மார்க்கங்களாகிய ஞானம், பக்தி, கர்மயோகங்களில் எந்த மார்க்கத்தையவலம்பித்தாலும் தாரதம்யமில்லாமல் அதே நித்ய நிரதிசயானந்தத்தைத்தான் கொடுப்பதாக வாக்களித்திருக்கிறார் என்றும் அழகாக உபன்யஸித்தார்கள்.

கார்யதர்சியால் வந்தனோபசாரம் கூறப்பெற்று ஸபை கலைந்தது.

கார்யதர்சி.

### ஜின்னா காந்தி ஸந்திப்பு.

திவான்பகதூர் கோவிந்த தாஸ் சதுர்புஜ தாஸ் அவர்களின் கண்டனம்.

சென்னை ஹிந்து மத்யக் கமிட்டித் தலைவரான ஸ்ரீமான் திவான்பகதூர் கோவிந்ததாஸ் சதுர்புஜ தாஸ் அவர்கள், ஜின்னா—காந்தி ஸம்பாஷணையைக் கண்டித்து ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அதன் விவரம் அடுத்தப் பத்திரிகையில் வெளியாகும்.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.
பெஜவாடா.
Bezwada.

## மாதா பிதாக்களுக்கு விக்ஞாபனம்.

### ஈசுவராக்ஞையும் ராஜாக்ஞையும் நமது கடமையும் ஜகதாசார்யர்களின் ஆதேசம்.

சாஸ்திரங்களின் நியமனம்.

1. நம்மை இப்பொழுது ஆளுகிற ராஜாக்களும், மந்திரிகளும் ஸபைகளும் க்ஷத்திரியர்கள் அல்ல ஆயினும் நமது சாஸ்திரப்படி மகாவிஷ்ணுவினுடையவும் அஷ்ட திக்பாலகர்களுடையவும் அம்சம் பெற்றவர்கள். (1) ஈசுவரன் அவர்களுக்கெல்லாம் ராஜா. அவர்கள் இப்பொழுது செலுத்துகிற அதிகாரம்யாவும் ஈஸ்வரனிடமிருந்துதான் அவர்களுக்கு கிடைத்திருக்கிறது. (2) அவர்கள் ஈஸ்வரனுடைய ஆக்ஞையை பரிபாலிக்கவேண்டிய ஈசுவர கிங்கரர்கள். ஸ்வய்மாக விபரீதமான ஆக்ஞைகள் செய்ய அவர்கள் அதிகாரிகளல்ல. அவ்வாறு இயற்றினால் அவைகளை நாம் அனுஷ்டிக்க வேண்டியதில்லை. ஈசுவர ஆக்ஞை தான் நமக்கு ஆக்ஞை.

2. இப்பொழுது நமது ராஜா மந்திரிகள் ஸபைகள் ஒன்றன் பின் ஒன்றாய் ஈசுவராக்ஞைக்கு விரோதமாய்ச் சட்டம்செய்து வருகிறார்கள். சாரதா நாவல்றாய் தாஸ் சட்டம் அவைகளில் ஒன்று. 8 வயதுகளிலும் தவறினால் 9,10 வயதுகளிலும் அதுவும் தவறினால் ருது கலாத்துக்கு முந்தியும் ஸ்திரீகளுக்கு விவாஹம் செய்ய வேண்டியது என்பது ஈச்வராக்ஞை. அந்த ஆக்ஞையை சுருதி ஸ்மிருதி இதிஹாஸ புராணங்களில் வெளியிட்டிருக்கிறார். அவைகள் தான் ஈசுவராக்ஞை. (3) சாரதா சட்டம் அதற்கு விரோதமாய் ஸ்திரீகளுக்கு 14 வயதுக்கு முன் விவாஹம் செய்யக்கூடாதென்று சர்ஜிக்கிறது. இந்த நெருக்கடியில் ராஜாக்ஞைக்கும் ஈசுவராக்ஞைக்கும் முரண்பாடு ஏற்பட்டிருக்கிறது. ராஜாக்ஞையை புறக்கணித்து விஹித காலத்தில் தான் விவாஹம் செய்ய வேண்டியது என்பது தான் சாஸ்திரத்தின் பரம ஸித்தாந்தம். (4) 1928-ம் வருஷத்தில் காசியில் கூடிய மஹா ஸபையும் 1937-ம் வருஷத்தில் சென்னையில் கூடிய அகில பாரதீய ஸனாதன வித்வத் பரிஷத்தும் அவ்வாறே தீர்மானித்திருக்கின்றன. ஜகதாசாரியாருடைய அபிப்ராயமும் அது தான். ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி சங்கராசார்யாளும் அவ்வாறே நியமனம் செய்திருக்கிறார்கள்.

3. இந்த நிலைமையில் ஒவ்வொரு மாதா பிதாக்களும் வதூவரர்களுடைய இதா போஷகர்களும் ருது காலத்துக்கு முந்தியாவது ஸ்திரீகளுக்கு விவாஹத்தைச் செய்ய வேண்டியது. இரு தாப்பாரும் ஒத்திருந்து நிர்பயமாய்ச் செய்ய வேண்டியது. அப்படி ஏராளமாய் விவாஹம் நடந்தால் சாரதாச்சட்டம் சீக்கிரத்தில் ரத்து செய்யப்படும். அப்படிச் செய்யாவிட்டால் நாம் அந்த சட்டத்தை முழு மனதுடன் அங்கீகரித்து விட்டதாக ஏற்பட்டு விடும். நம்முடைய பார்யைகளையும் புத்திரர்களையும் தாய்களையும் துஷ்டர்கள் அபஹரித்தால் எவ்வளவு வேகம் ஏற்படுமோ, நம்முடைய கிரஹத்தில் தீ பற்றினால் எவ்வளவு வேகம் ஏற்படுமோ, அவ்வளவு வேகத்துடன் மாதா பிதாக்கள் இது விஷயத்தில் நடந்து கொள்ள வேண்டியது. இல்லாவிடில் ஈசுவரனுக்கு பரமத்ரோஹிகளாகவும் த்வேஷ்யர்களாகவும் ஆகுவோம். பகவத் வாக்யம் எவ்வளவு கடுமை என்று கவனிக்க வேண்டியது.

4. காரக்கிருஹ வாஸமும் கர்மானுஷ்டான பங்கமும் ஏற்படக்கூடுமே என்று பயப்பட வேண்டாம். அதற்கு ஐந்து சமாதானங்கள் சாஸ்திர சித்தம்.

(a) கர்மானுஷ்டானத்தை ஜயிலிலேயே செய்ய முடியும். ராஜாங்கத்தார் அவ்விஷயத்தில் சௌகர்யம் செய்து கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஸௌகர்யம் ஏற்படாவிடில் ஸஹதேவரும் பாண்டவர்களும் செய்தபடி மானஸீகமாக செய்வதேபோதும்.

(b) ஸாக்ஷாத்காரமாகவோ மானஸிகமாகவோ செய்ய முடியாவிடினும் பாபம் இல்லை. ஏன்? மனப்பூர்வமாக கர்மாவை விடவில்லை. ராஜ நிர்ப்பந்தத்தால் நாம் அஸ்வதந்திரர்களாகயிருக்கிறோம். விஹிதகர்மாவைச் செய்யவும்விடவும் ஸ்வதந்திரமும் சக்தியுமிருந்து கர்மாவை விட்டால்மட்டும் தோஷம் ஸம்பவிக்கும் (5) ஜெயிலில் அவ்வித ஸ்வதந்திரம் இல்லை. வீட்டில் விவாஹம் செய்யும் விஷயத்திலோ அப்படிக்கல்ல. ராஜாவின் சட்டம். விவாஹத்தை வீட்டில் செய்யும் நமக்குள்ள ஸ்வதந்திரத்தை அடியோடு எடுத்துவிடவில்லை. அது என்னசொல்கிறது. நீ இஷ்டப்படி செய்தால் அபராதத்தைச் செலுத்திவிடு, அல்லது கொஞ்சகாலம் ஜயில் வாஸம்செய், இவ்வளவு தான். விவாஹத்தை ரத்து செய்கிறதில்லை. இதற்கு பயந்தால் ஈச்வராக்ஞையை மீறுகிறோம். பாபத்தை மூட்டை மூட்டையாகக் கட்டிக்கொள்ளுகிறோம்.

(c) மேலும் கர்மானுஷ்டானம் ஒரு சாதனமே யொழிய அதுவே லக்ஷ்யம் அல்ல. சித்தசுத்தியும் ஈசுவரபிரீதியும் ஞானமும் மோக்ஷமும் அதற்குப் பலன். அந்த பலனை விஹிதகாலத்தில் விவாஹம் செய்வதிலிருந்தே நாம் அடைந்துவிடுகிறோம். ஈசுவர் ஆக்ஞைப்படி நடந்துகொள்ளும்படி நம்மைக் கண்டிக்கவேண்டிய ராஜா, அவ்விதம் நாம் நடந்ததிற்காக நம்மை ஜெயிலுக்கு அனுப்பி அனுஷ்டான பங்கம் செய்தால் அந்த பாபம் அவரைத்தான் பிடித்துக்கொள்ளும். நம்மை அணுகாது. பகவத்ப்ரீதி அதை விரட்டிவிடும் பிராயச்சித்தம் அதைபஸ்மமாக்கிவிடும்.

(d) இதல்லாமலும் கர்மத்யாக பாபம் ஜயில்வாசம் செய்தவர்களை மட்டுந்தான் பாதிக்கக்கூடும். விஹிதகாலத்தில் விவாஹ ஸம்ஸ்காரம் செய்யாத பாபமோ வதூவரர்களையும் அவர்களின் குடும்பங்களையும் அவர்களின் ஸந்தானங்களையும் விருஷல விருஷலீகளாக செய்துவிடும்.

(e) பரிசுத்தமான ஸ்திரீகள்தான் எல்லா தர்மத்திற்கும் மூலவேர், விஹிதகாலத்தில் விவாஹ ஸம்ஸ்காரம் பெறாத ஸ்திரீகள் அபரிசுத்தர்கள் ஸந்ததிகளுக்கு ஒருக்காலும் பிராஹ்மண்யம் ஸித்திக்காது. கர்மாக்களும் வேதாத்யனமும் வீர்யமற்றதாய்ப் போய்விடும்.

5. விஹித வயதில் வாக்தானம் செய்து 14 வயதுக்கு மேல் பாணிக்ரஹணம் ஸப்தபதி முதலானவைகளை நடத்தலாம் என்ற கட்சிக்கு சாஸ்திரத்தில் கொஞ்சமேனும் ஆதாரமில்லை. வாக்தானம் ஆனவுடனேயே வதூவரர்கள் பார்யாபதிகளாக ஆகிறார்கள். உடனே சாரதாச்சட்டம் ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து பிடித்துக் கொள்ளும். இந்த விஷயத்தில் வாக்தத்த வதூக்கும் ஸப்தபதி முடிந்த வதூக்கும் எவ்வித வித்யாஸமும் இல்லை. வாக்தானத்துக்குப் பிறகு வரன் எக்காரணம் பற்றி வதூவை விவாஹம் செய்ய மறுத்தாலும் வதூ அவனுடைய பார்யை தான். வரன் அவளுடைய பதி தான். அவள் வேறொருவனை விவாஹம் செய்யக்கூடாது. 5 ஸந்தர்ப்பங்களில் மட்டும் பாராசர் அனுமதி கொடுத்திருக்கிறார்.

இந்த நிலைமையில் மாதா பிதாக்களும் வதூவரர்களுடைய இதா போஷகர்களும் சாரதாச்சட்டத்தை மீறி விஹித காலத்திலேயே விவாஹ ஸம்ஸ்காரத்தைச் செய்ய வேண்டியது தான் சாஸ்திர சம்மதம்.

N. நடேச ஐயர்,
அகில இந்தியவர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்க கார்யாத்யக்ஷர்.

# ஜின்னு, காந்தி ஸந்திப்பு.

## திரைமறைவில் நடப்பதென்ன?

ஜின்னுவும் காந்தியும் ஹிந்து முஸ்லீம் ப்ரச்னையைத் தீர்க்க பம்பாயில் ஸந்தித்துப் பேசுகிறார்கள். இதனால் ஏதாவது பயன் ஏற்படுமா? அல்லது வழக்கம்போல் ஹிந்து நன்மைகள் பல கெடுக்கப்படுமா? அகில இந்திய ஸமஷ்டியைப்பற்றின ப்ரஸ்தாபம் பலமாக இருக்கும் காலத்தில் இந்த ஸம்பாஷணை நடப்பதால் இதன் முக்யத்வத்தை யாரும் உணர வேண்டும். ஒவ்வொரு முக்யமான ஸந்தர்பங்களிலும் ஹிந்து முஸ்லீம் ப்ரச்னையைப் பற்றிப் பேசுவதும் முஸ்லீம்கள் பேரம் பேசி ஹிந்துக்களை ஏமாற்றுவதும் இந்திய சரித்திரத்தில் வெகு ஸஹஜமாகிவிட்டது. இப்பொழுதும் ஸமஷ்டி ஏற்படவேண்டிய ஸமயம். ஆயிரக்கணக்கான வருஷங்கள் சிதருண்டுகிடந்த இந்தியா ஒன்றுசேர இடம் ஏற்படுகிறது. இதனால் சற்றேறக்குறைய அதிகாரம் உள்ள ஹிந்து ஸாம்ராஜ்யம் ஒன்று ஏற்பட்டுவிடலாம். இது சரித்திரத்தில் வெகு நாட்கள் கழித்து காணப்படும் ஸம்பவம்.

இதை முஸ்லீம்கள் ஸஹிப்பார்களா? முஸ்லீம்கள் பல நூற்றாண்டுகள் இரத்தப் பெருக்குடன் வாள்முனையில் இந்தியாவை பலாத்காரமாக அடக்கிவந்தவர்கள். அவர்கள் ஸந்ததியில் பிறந்தவர்களாயும் அந்த வகுப்பிற்கு மாற்றப்பட்டவர்களாகவுமுள்ள இன்றைய முஸ்லீம்களிடமும் பயங்கர உணர்ச்சிகளே காணப்படுகிறது. இந்தியா சட்ட சபையில் பல நூற்றாண்டுகள் தாங்கள் இந்தியாவை ஆண்டதாக மார்தட்டுகிறார்கள். தென்னிந்தியாவிலும் வட இந்தியாவிலும் முஸ்லீம் வகுப்புவாதிகள் தாங்கள் இந்தியாவை ஆண்டதாகப் பேசுவதிலும் அர்த்தமில்லாமலில்லை. இந்த நிலையில் ஸமஷ்டியைக் குலைத்து, ஒன்றுசேரப்போகும் இந்தியாவை சிதற அடிப்பதற்காக சதிசெய்வது ஸஹஜமே. இதற்கு காந்தியையும் காங்கிரஸையும் உபயோகித்துக்கொள்ள அவர்கள் இந்தஸந்தர்ப்பத்தை உபயோகித்துக் கொள்ளுகின்றனர். வெகு கடபுடலாக நடந்துவந்த ஜின்னுகாந்தி பேச்சு திடீரென்று ஒத்திவைக்கப்பட்டதும், ஸமஷ்டியை உடைப்பதில் இருவரும் ஒத்துவந்துவிட்டதாக வெளியானதும் கவனிக்கத்தக்கது. உண்மையில் வகுப்பு ப்ரச்னையில் முடிவேற்படாதென்பது நிச்சயம். ஹிந்து முஸ்லீம் ப்ரச்னையில் திருப்திகாமான முடிவேற்படவேண்டுமானால் ஹிந்துக்கள் முஸ்லீம்களிடம் முழந்தாளிட்டு மடிப்பிச்சைக் கேட்டு அவர்களுக்கு அடிமைச் சீட்டு எழுதித் தரவேண்டுமென்று காங்கிரஸ் காரர்கள் துரதிருஷ்டவசமாக நினைக்கின்றனர். ஒவ்வொரு ஸமயமும் ஹிந்து நன்மைகளை அவர்கள் பறக்கவிட்டு விடுகின்றனர். கல்கத்தா ஸர்வ கக்ஷி மஹாநாட்டில் ஹிந்து முஸ்லீம் ப்ரச்னை விவாதிக்கப்பட்டது. அப்பொழுது தான் ஜின்னுவின் கர்ப்பத்திலிருந்து 14 பாயிண்ட்கள் பிறந்தன. லண்டன் ஸர்வ கக்ஷி மஹாநாட்டில் ஹிந்துமுஸ்லீம் பேச்சு நடத்தி வகுப்பு தீர்ப்பை ஹிந்துக்கள் பெற்றார்கள்.

இந்தியா சட்டசபையில் அரசியல் திருத்த விவாத காலத்தில் முஸ்லீம்கள் காங்கிரஸுடன் உறவாடினர். காங்கிரஸ்காரர்கள் மாஹாண ஸ்வயாக்ஷியை ஏற்கும் தீர்மானத்தை ஆதரிக்கும்படிச்செய்து ஏமாற்றி படுமோசமான வகுப்புத்தீர்ப்பை இந்தியாசட்டசபை ஏற்றுக்கொண்டு விடும்படி செய்தால் வகுப்புதீர்ப்பால் கல்கத்தா சாச்வதமாகசட்டமூலமாக முஸ்லீம் மெஜாரிடியுள்ள ராஜ்யமாயிற்று. வகுப்புத்தீர்ப்பால் மாளவ்யாபோன்ற தலைவர்களையும் காங்கிரஸ் இழந்தது. லக்ஷ்மணபுரி ஒப்பந்தத்தை முஸ்லீம்கள் லக்ஷியம் செய்யத் தயாராகவில்லை. நடுவில் மாளவ்யா போன்றவர்கள் ஒற்றுமை மஹாநாடு கூட்டியும் முஸ்லீம் தலைவர்கள் வழிக்குவரவில்லை. ஹிந்துமுஸ்லீம் ஒற்றுமைக்காக காந்திஜீ பட்டினி இருந்தார். அதன் முடிவு பயங்கர கலகங்களாகவே ஏற்பட்டது. இவைகளுக்கிடையில் ஸலீம்பூர் ராஜா, ஷௌகத் அலி போன்றவர்கள் தேசீய முஸ்லீம் கக்ஷி ஆரம்பித்து சிலர் உறவாடினர். அவர்களில் ப்ரதானரான சௌத்ரிகலிக் ஊஸ்மான்போன்றவர்கள் முஸ்லீம் லீக்கில் முஸ்லீம் வகுப்பு நலத்திற்காகப் போராடும் வீரர்களாக மாறிவிட்டனர்: தேசீய முஸ்லீம்கக்ஷி, முஸ்லீம் ஒற்றுமை கக்ஷி, அகில இந்திய முஸ்லீம் லீக் முஸ்லீம் ஸர்வ கக்ஷி, மஹாநாடு என்று பல கூறாகப் பிரிந்திருந்த முஸ்லீம் தலைவர்கள் இன்று ஒன்றுகூடி விட்டனர். ஜின்னுவின் 14 பாயிண்டுகள் அநேகமாக எல்லாம் நிறைவேறி விட்டன. இதனால் ஹிந்துக்களின் முக்கியமான பல நன்மைகள் குலைந்துவிட்டதை யாரும் மறைக்கமுடியாது. ஆனால் இன்று பேரம் பேச ஜின்னு 24 பாயிண்டுகளைச் சொல்லுகிறார். இதனால் முஸ்லீம் தலைவர்கள் ஸமாதானமாக வாழவிரும்பவில்லை என்று ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. பேச்சாரம்பத்தில் ஜின்னுவே ஸர்வாதிகாரி என முஸ்லீம்கள் கூறினர். இன்றே முஸ்லீம்லீக் நிர்வாஹ ஸபையை கலக்கவேண்டுமென்று ஜின்னு கூறியது இதை ஸ்திரப்படுத்துகிறது. அவர்களுடன் எப்படி ஸமாதனம் பேச ஆரம்பிக்கிறது. ஒவ்வொரு பேச்சுக்கும் ஒவ்வொரு ஹிந்து நன்மை பலி இடப்பட்டுவருவதால் இன்றைய பேச்சும் கவலையளிப்பது ஸஹஜமே. காந்திஜீயிடம் மதிப்பு இருந்தாலும், முஸ்லீம் தலைவர்களிடமுள்ள பதட்டம் தீரவில்லை. இந்நிலையில் காந்திஜீ ஹிந்து மஹாஸபைபோன்ற ஸ்தாபனங்களுடன் தொடர்பு வைத்துக்கொள்ளாமல் ஜின்னுவுடன் பேசுவது விருப்பத்தக்கதில்லை. ஹிந்து முஸ்லீம் ப்ரச்னை தீர்க்கப்படாதபோனாலும் ஹிந்து நன்மை கெடாமலிருக்கவேண்டிய தவச்யம் திரை மறைவில் எல்லாம் நடப்பதால் ஒன்றும் விளங்கவில்லை. 22 கோடி மஹா ஜனங்களை ஆபத்தான இடத்தில் வைத்துவிட்டு திரைமறைவில் விளையாடுவது விபரீதமாய் விடும். இதுவரை நடந்த பேச்சுக்களையாவது வெளியிடுவது அவச்யமென்று நாம் கூறுவோம்.

அக்னிஹோத்ரம் ராமாநுஜதாதாசாரியர்.

## நாம்.

உலகம் உதித்து எத்தனையோ காலத்திற்கப்பால் மனிதவர்க்கத்தின் விகாஸ முறையில் அவர்கள் பல் வெவ்வேறு பகுதியினராகப் பிரிந்து ஓரிடத்தில் நிலையாகத் தங்கியிராமல் ஆடுமாடு முதலிய வீட்டு மிருகங்களை வளர்த்துக்கொண்டும் அவைகள் மூலம் ஜீவிப்பதற்கு வேண்டிய உடை, ஆகாரம் முதலியவைகள் தேடிக்கொண்டு நெடுங்காலம் வரையில் கூட்டங்கூட்டமாய் இடமாறிக்கொண்டிருந்தார்கள். வெகுகாலத்திற்குபிறகு நீர்வளம் நிலவளம் பொருந்திய இப்புண்ணிய பூமியாகிய பாதகண்டத்தை நாடி சில கூட்டங்கள் வந்தன. இந்த நிலையில்லா வாழ்வில் வெறுப்படைந்தவர்களாய் பூமியை திருத்தி வளப்படுத்திக்கொண்டு நிலையாக தங்க ஆரம்பித்தனர். நாட்கள் பல திங்களாகி நாகரீகம் முற்ற கிராமம், நகரம், நாடு முதலியவைகள் அமைக்கப்பட்டன. நாளடைவில் வியாபாரம் பயிர்த்தொழில், கைத்தொழில் விருத்தியாகி நாகரீகத்திற் கனுகூலமான நற்றொழில்களை அபிவிருத்தி செய்தவந்தனர். நாளடைவில் மக்களிடையோ தங்களுக்கு மேம்பட்ட வஸ்து ஒன்றுஉளது. அதற்கு சக்தி அதிகம் என்ற கடவுள் நம்பிக்கை ஏற்படத்தொடங்கியது, இதுமெல்ல, மெல்ல பூத்துக்காய்க்க ஆரம்பித்தது. அண்ட சராசரங்களையும் ஆட்டிவைக்கக்கூடிய, ஆக்க, அழிக்கக்கூடிய பரம்பொருள் ஒன்று உண்டு என்ற நம்பிக்கையும் அது வணங்குவதற்கு அருகதை உளது என்றும் நம்பிக்கை அதிகமாகி அவனை துதிக்கவும் ஆரம்பித்தனர். அப்படி துதிக்க ஆரம்பித்த அத்துதிகள் அநாதிகாலந்தொட்டு கர்ண பரம்பரையாக வழங்கப்பட்டு வந்தது அவ்வப்பொழுது புதிது புதிதாக தோன்றினவைகள் சேர்க்கப்பட்டு வந்தன. தன் அறிவையும் பிறருக்குத் தெரிவிக்கவேண்டியவைகள் வெகுகாலம் அழியாமலிருக்கவேண்டியதற்கான சாதனங்களை மனிதன் கண்டுபிடித்து தனது சொந்தநன்மையையும் ஆத்மலாபத்தைக் கருதி அவற்றின்பொருட்டு எழுதுவதற்கு கற்றுக்கொண்ட மனிதன் முதன்முதல் கடவுளைப்பற்றிய துதிகளை எழுதினான். கோடிக்கணக்கான மக்களால் புனிதமாக கருதப்பட்ட இதற்குத்தான் வேத வேதாகமங்கள் என்று பெயர் ஹிந்துக்கள் தமது வேதங்களை அநாதியென்றும் அபௌருஷேயமென்றும் அதாவது ஆதியந்த மற்றதென்றும் ஒருவராலும் இயற்றப்படவில்லையென்றும் ஸர்வவியாபியான ஜோதிஸ்வரூபனை ஸாக்ஷாத் பரம்பொருளால் உணர்த்தப்பட்டுவாய்மொழியாக யுகக்கணக்காக வந்ததென்றும் சொல்லுகிறார்கள். வேதகாலத்தைப்பற்றி ஒருவரையரை கூறுவது மானிடர்களால் இயலாததாயிருக்கிறது. இவ்வளவிற்கும் காரணபூதர்களாய் இருந்தவர்களும் பரம்பொருளை தபஸ் என்னும் யந்திரத்தால் நேரில் கண்டவர்களும் மஹா தபஸ்விகளும், மஹாதாதாக்களாயும் முனிசிரேஷ்டர்கள் வாழ்ந்த இப்புண்ணிய பாதகண்டத்தின் முன்னோர்கள் யார்? நம் முன்னோர்கள்! அவர்தான் ஆரியர்கள்!! ஆம் அவர்களுடைய சந்ததிகள் நாம்!!! ஆரியர்களே! எழுமின்! நமது ஆசாரத்தை கர்ம அநுஷ்டானங்களையும் போக்கவந்திருக்கும் நாகரீகத்தையும் புதிதாக ஏற்பட்டிருக்கும் வெறியை த்வம்ஸம்செய்யுங்கள். ஜாதிமதம் முதலியவைகளை ஸமனுக்க கிளம்பியிருக்கும் போலிகளை நசுக்குங்கள். நாம்! நாம்!! ஹிந்துக்களாகிய நாம்!!! இவ்வாறுவேத ஆகமங்களையும் கர்ம அநுஷ்டானங்களையும் திரும்ப பிரசாரத்தின்மூலம் வளர்க்கவேண்டும். நாம் ஹிந்துக்கள், ஆரியர்கள் தபோபலம் உள்ளவர்கள் என்பதை மூக்காலும் மறக்கக்கூடாது!

ந. சு. வெங்கட்டராமன்.

## ஸநாதன தர்ம ஊழியர்கள்.

ஹிந்து தர்மப்ரசார நிமித்தம் தற்சமயம் அசாஸ்திரீய மசோதாக்கள் சட்ட சபையில் கொண்டு வரப்பட்டிருக்கும் சமயத்தில், ஷெமசோதாக்களுககு எதிராக ப்ரசாரம் செய்யும் பொருட்டு திருவிடமருதூரிலிருந்து ஒரு வாலிப கோஷ்டியினர் ஜூன் மீ முதல் வாரத்தில் தென்னாற்காடு, திருச்சி, வட ஆற்காடு' செங்கல்பட்டு முதலிய ஜில்லாக்களில் சுமார் ஒருமாதகாலம் பிரசார யாத்திரை செய்வதாக தீர்மானித்திருக்கிறார்கள்.

ஜி. சங்கர நாராயண வாஜபேயர்.



# வைதிக கக்ஷிஸ்தாபனம்.

## ஓர் விண்ணப்பம்.

இந்த வைதிகக்கட்சி முதலில் ஸ்ரீகாசியில் ஈசுவர வருஷம் புரட்டாசிமீ விஜயதசமியன்று (14-10-37) ஸ்ரீவிசுவேசுவார் திவ்விய சன்னிதானத்தில் (ஞானவாபியினருகில்) காசி, அலகாபாது (பிரயாகை) விசுவ்வித்தியாலயங்களுக்குச் சம்பந்தித்த சம்ஸ்கிருத ஆங்கில வித்துவான்களுடனும் மற்றும் அந்த க்ஷேத்திரத்திலுள்ள இதர வித்துவான்களுடனும் பிராரம்பிக்கப்பெற்றது. நாங்களிப்பொழுது தகுந்த விடங்களில் இக்கட்சியின் கிளைகளை ஸ்தாபித்துக் கொண்டுவருகிறோம். சிரத்தையுள்ள பெரிய மனிதர்கள் தம்தம்மிடங்களில் கிளைகளை ஸ்தாபிக்கும் விஷயத்தைக்குறித்து இந்த பார்டி பிரசிடெண்டு அவர்களுக்கெழுதி தெரிந்துகொள்ள வேண்டுமெனப் பிரார்த்திக்கப்படுகின்றனர்.

## வைதிக கட்சியின் அபிப்பிராய ஸூத்ரங்கள்.

1. வேதங்களைப் பின்பற்றும் வைதீகர்களாகிய நாம் வேதங்களிலிருந்தே அறிவையடைந்து வருகிறோம் என்றும், இந்த மனித சமூகமே இந்த சிருஷ்டியோடு கூடத்தோன்றியதென்றும், பலவித வேற்றுமைகளுடன் கூடிய பல சமூகங்களாகப் பிரிந்து எவ்வளவு காலம் வசித்துவந்திருக்கிறோமோ அதைவிட எவ்வளவோ மடங்கு அதிககாலம் சமரஸமாகச் சேர்ந்தே வாழ்ந்தோமென்றும், நம் உண்மைநிலையை அறிந்து வேதங்களையே துணையாகக்கொண்டு நடந்தோமானால் மீண்டும் அதே அமைதியும் ஒற்றுமையும் பொருந்திய வாழ்க்கையை அடையமுடியுமென்றும் இதனால் தெரிவிக்கிறோம்.

2. வேதசம்பந்தமற்ற மதங்கள் ஒவ்வொன்றும் தத்தம் கொள்கைகளையே எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நிர்ப்பந்திக்க ஆயிரக்கணக்கான வருஷங்களாக முயன்றும், மனிதசமூகத்திற்கு அவற்றுள் எதுவும் ஆத்மவழிக் கில்லாவிட்டாலும் இகவாழ்க்கையிலாவது அமைதியும் ஒற்றுமையும் உண்டாக்க முடியாமலிருப்பதாலும், தற்காலத்திய மேனாட்டு நாகரிகமும்கூட அவ்விதமே மானிடசமூகத்தின் பற்பல பிரிவினர்களுக்குள் சமரஸ மனப்பான்மையை வளர்க்கத் தவறிவிட்டதாலும், நாம் இந்த முயற்சியில் வணக்கத்துடன் ஈடுபடுகிறோம். புராதனமான நம்முடைய சமூக அரசியல் சம்பந்தமுள்ள நிலயங்களைப் புதுப்பித்து அவற்றின் உயர்வை அறிந்து ஏற்றுக்கொள்ளும் ஹிந்துவல்லாத சமூகத்தவர்களுடைய, உதவியையும் சேர்த்துக்கொண்டு பொதுநலம் நோக்கி வேலைசெய்து பார்க்க விரும்புகிறோம்.

3. வெளியே ஹிந்துவல்லாத சமூகங்களில் பெரும்பாலோர் நமக்கு எதிரிகளுண்டு என்பதை யறிவோம்; உள்ளேயும் மேனாட்டு வழியில் வைதிகவிரோதமான கல்விப்பயிற்சி பெற்ற ஹிந்து தலைவர்கள் தற்காலப் பொது வாழ்க்கையில் முன்னணியில் நின்று விரோதம் செய்கிறவர்களுண்டு. மற்றும் நமக்குத் தெரியாமலே ஒளிந்தவண்ணம் நம் தர்ம விரோதமாக நிற்பவர் பெரும்பாலும் ஹிந்து மன்னர்களுக்குள்ளும் மடாதிபதிகளுக்குள்ளும் உண்டு என்னலாம்; இவர்கள் மேலே சொல்லியபடி நம்முள்ளேதோன்றிய விரோதிகளுக்கு அறியாமல் துணை செய்கிறவர்களாகவோ, அல்லது வேததர்மங்களுக்கு விரோதமாக அவர்கள் செய்யும் பிரசாரங்களை ஆட்சேபிக்காமலும், சிலர் ஆமோதித்தும், உதவி செய்கிறவர்களாகவோ ஆகிறார்கள். ஆதலால் அறியாமையி லாழ்ந்திருக்கும் ஹிந்து சமூக மக்களைத் தட்டியெழுப்பி நெருக்கடியான நிலையை அவர்கள் அறியுமாறு செய்வதும், நமக்குள் வெளிப்படையாகவும் ஒளிந்துகொண்டு மிருக்கும் எதிரிகள் வலையில் இவர்கள் சிக்காமல் தடுப்பதும் நம் முக்கிய கடமையாகும்.

4. ஹிந்து தேசிய அரசியல் தர்மங்களைத் திறமையுடன் நடத்தினால் இந்தியா தேசம் சீர்திருந்துவதுடன் இதர தேசங்களும் இதைப் பார்த்து நடக்கவல்ல வழிகாட்டியாகவும் ஆகும். அப்படியிருக்க இந்திய தேசிய காங்கிரஸ் அவ்வித ஹிந்து தர்மங்களை ஏற்றுக் கொள்ளாமலிருந்ததுடன் நிற்கவில்லை அதன் ஆதிகொள்கையாக இருந்த மேனாட்டு தேசிய அரசியல் தர்மங்களையும் நழுவவிட்டு *வகுப்புக் கிளர்ச்சியி லீடுபட்டு சென்ற 15 வருஷ காலமாக நம்முடைய உள்விரோதிகளாகிய ஹிந்து சீர்திருத்தக்காரரென்று சொல்லப்படும் கூட்டத்தவருடன் சேர்ந்துகொண்டனர். இவர்கள் காங்கிரஸ் பெயரால் அரசியல் சம்பந்தமாகவும் பொருள் நிலைச் சீர்திருத்தத்திற்காகவும் வேலை செய்வதற்கென்று ஹிந்து பாமரஜனங்களிடம் பணமும் செல்வாக்கும் அடைந்து பிறகு அவற்றை துர்விநியோகம் செய்து அறியாமையி லாழ்ந்திருக்கும் அந்த ஹிந்து சமூகத்தினரை மததர்ம சமூகதர்ம விஷயங்களில் தவறான வழிக்கு இழுக்கிறார்கள். ஆதலால் காங்கிரஸ் தன் குறைகளையறிந்து திருந்தும் வரையில் அதன் முறைகளை ஆட்சேபிப்பதற்கு அடையாளமாக அதனுடன் ஒத்துழைப்பதை நிறுத்திக்கொள்வது நமது முக்கிய கடமையாகிறது. ஆனால் கதர் இயக்கத்தைப்போன்ற குடிசைத் தொழில் எழுச்சித் திட்டம் நமக்கும் சம்மதமான திட்டமேயாதலால் இற்தகு உடன்படுவோம்.

*(2-வது காங்கிரஸ் தலைவர் தாதாபாய் நௌரோஜி:—

"தேசிய காங்கிரஸ் என்பது தேசத்திலுள்ள எல்லா சமூகங்களும் நேரே கலந்து கொள்ளக் கூடிய பிரச்னங்களில் மாத்திரமே வேலை செய்யவேண்டும். சமூகச் சீர்திருத்தத்தையும் வகுப்பு பிரச்னங்களையும் வகுப்புக் காங்கிரஸிடம் விடவேண்டும்.")

*(3-வது காங்கிரஸ் தலைவர் பத்ருடீன் தயாப்ஜீ:—

"இந்தியா முழுவதும் சம்பந்தப்படும் விஷயங்களுள் மாத்திரமே நம் வாதங்களை ஒடுக்கவேண்டுமென்றும் அது ஒன்றே அறிவுடைமையென்றும் நடக்கத்தக்கதென்றும் எனக்குத் தோன்றுகிறது. ஒரு பாகத்தையோ அல்லது தனியே ஒரு சமூகத்தையோ மாத்திரம் சம்பந்தப்படுத்தும் விஷயங்களை ஒதுக்கவேண்டியதும் அவசியமாகும்.) [பலத்த கரகோஷம்.]

*(24-வது காங்கிரஸ் தலைவர் கனம் ஹரிகிஷன் லால்:—

"காங்கிரஸ்சபை எல்லோர் பொருட்டும் கிளர்ச்சி செய்கிறது; ஒழுங்கு முறைக்குள் வேலைசெய்கிறது; ஆதலால் இச்சபை விஷம திருஷ்டியுடனோ அல்லது ஜனங்களைத் தவறான வழியில் நடத்தியோ அல்லது வகுப்புக் கிளர்ச்சிக்கு வழிகாட்டியோ வேலை செய்ததே கிடையாது. இந்தியருள் குறிப்பிட்ட ஒரு சமூகத்துடன் ஒன்றுபட மறுத்திருக்கிறது. ஏனெனில் இச்சபை வகுப்பு வேற்றுமைகளுக்கப்பாற்பட்டது; எப்போதும் இந்த லட்சியத்திலேயே நின்று இதே கொள்கைகளை ஆதரிக்குமென்று நம்புகிறேன்.")

5. ஹிந்து மகாசபையைச் சேர்ந்த அங்கத்தினர்களில் பெரும்பகுதியினர் சீர்திருத்தக்காரரென்றும் அதனால் அவர்கள் நம் "உள் விரோதிகள்" என்றும் நமக்கு நன்றாகத் தெரியுமாதலால், அறியாமையி லாழ்ந்திருக்கும் பாமர ஹிந்துக்கள் "ஹிந்து மகாசபை" என்ற பெயரைக்கண்டு ஏமாறாமலிருக்கவும் சபையினர் வலையில் அவர்கள் சிக்காமலிருக்குமாறு செய்யவும் நாம் கவனம் செலுத்த வேண்டும். ஆயினும் ஹிந்து சமூகத்து அரசியல் உரிமைகளையும் பொருள்நிலை உரிமைகளையும் இதர அரசியல் கட்சிகள் மறித்துவிடாமல் தடைசெய்து காப்பதற்காக ஹிந்து மகாசபையார் நடத்தும் போராட்டத்தில் உண்மையான தேசதர்மத்திற்கு விரோதமின்றி அவர்களுடன் ஒத்துழைப்போம். அதுவே நம் திட்டமாகவும் ஆகும்.

6. காசி சர்வகலாசாலை போன்ற ஹிந்து கல்வி நிலயங்களில் தற்கால கல்வியுடன் கூடவாவது ஹிந்து தர்ம சம்பந்தக் கல்வியும் சேர்க்கப்படவில்லை; அதாவது, ஹிந்து சமூகத்திற்கே விசேஷ லட்சண முள்ளதாகவும் புக்தி முக்தி இரண்டையும் சேர்த்துத்தர வல்லதும் தற்கால உலகில் தோன்றி வளரும் 'வாழ்க்கைப் போராட்டம்' என்ற நோய்க்கு மருந்தாயுள்ளதுமான, ஜாதிகளுக்கேற்ற குலவித்தை போன்ற கல்வி கிடையாது. ஆதலால் அவ்வித கல்விச்சாலைகளை உண்மையான ஹிந்து கலாவளர்ச்சிக் குரியவைகளாக மாற்றவேண்டிய அவசியத்தை நம் ஜனங்களறியுமாறு செய்வது அவசியமான கடமையாகிறது.

7. வேத பூமியாகிய பாதக்கண்டமென்ற இந்தியாவும்கூட இப்போது முற்றிலும் ஹிந்துக்களுக்குச் சொந்தமாக இல்லாமல் இங்கே வாசம் செய்யும் எல்லா வகுப்பினருக்கும் பொது உடமையாகிவிட்டபடியாலும், ஜாதி ஹிந்துக்களுக்கென்று நம் முன்னோர்களால் விடப்பட்ட மடங்கள் கோவில்கள் போன்ற பெரிய தர்ம ஸ்தாபனங்களே மீதியாயிருப்பதாலும், வர்ணாச்ரம தர்மமென்ற நமது ப்ரத்யேக நாகரிகப் பயிற்சியை ரட்சித்துக் காப்பாற்றவென்றே ஏராளமான தனத்துடன் ஏற்பட்ட அந்த தர்மஸ்தாபனங்களை "உள் விரோதிகள்" ஏற்கனவே கைப்பற்றத் தொடங்கிவிட்டார்களாதலாலும், *வெளி எதிரிகளிடமிருந்து ஏற்கனவே தப்பிய நாம் இந்த உள் விரோதிகளிடமிருந்து தப்புவதே சந்தேகமோ என்ற நிலை ஏற்பட்டிருப்பதாலும், இவர்களுடைய விஷமத்தைத் தடுத்து நிற்கவேண்டிய அளவு ஏகோபித்த பலம் பொருந்திய எதிர் சக்தி நிர்மாணம் செய்வதுடன் இந்தியாவெங்கும் சிதறிக்கிடக்கும் மடங்களையும் கோவில்களையும் காலக்கிரமத்தில் ஒரு நிர்வாகத்தின் கீழ் கொண்டுவருவதும் அவசியம்; அப்போது மாத்திரமே அந்த தர்மநிதி யளித்த முன்னோர்களது எண்ணமும் நிறைவேறி தர்மமும் காப்பாற்றப்படும். இந்த தர்மங்கள் ஒரு காலத்தில் ஸ்ரீ சங்கராசாரியாரால் சிறந்த பயனளிக்கவல்ல வகையில் உபயோகிக்கப்பட்டன என்பதையும் அறியலாம். ஸ்ரீமத் ஆசாரியாள் லௌகிகதர்ம அரசாங்கத்தைப் போன்ற நிலையில் மததர்ம ஆசாரநிர்வாக ஆட்சியையும் நிர்மாணித்து உலகிலேயே அதற்கு நிகர் எங்கும் ஏற்படவில்லை யென்று சொல்லுமாறு செய்தார்.

*(எட்மண்ட் பர்க் ஹிந்து தர்மத்தைப்பற்றித் தெரிவிப்பது:—

"முகம்மதிய போர்த்துகேசிய வெறிகளிலிருந்து அவர்கள் தப்பிப் பிழைத்தனர்; தார்த்தாரிய ஆரபியர்களின் கொடுமைகளும் அவர்களை அழிக்கவில்லை; இடைவிடாமல் ஏற்பட்டு வந்த அந்நியர்களுடைய வெற்றியென்னும் கோபாக்கினியினின்று அவர்கள் வெளியேறினர்; இவற்றை யெல்லாம்விட அதிக பராக்கிரமமுள்ள எதிரியாகிய ஆங்கில ஆதிக்கத்தின் பேராசையும் கூட ஏற்பட்டது; அதையும் கடந்து விட்டனர்")

(தொடர்ச்சி 8-பக்கம் பார்க்க.)

(7-ம் பக்கம் தொடர்ச்சி.)

8. நாம் இதுவரையில் நமது தர்மப் பாதுகாப்பிற்கு எதுவும் செய்யாமலிருந்தது ஒருபுறமிருக்க இப்போது சில காலமாக மற்றொரு தீங்கும் செய்யத் தொடங்கிவிட்டோம். தேசத்திலுள்ள அரசியல்கட்சிகள் எல்லாம் அரசியல் துறையில் கருத்து வேற்றுமைகள் உடையனவாயினும் தர்ம விரோதமாகப் பிரசாரம் செய்வதில் எல்லாம் ஒன்றே. அப்படியிருக்க அவற்றுள் ஒன்றுக்கு ஓட்கொடுத்து, அதர்மத்தை வளர்க்கிறோம். ஆதலால் அவர்களுடைய அதர்ம பிரசாரங்களை ஆட்சேபிப்பதற்கடையாளமாக நாம் எவருக்கும் ஓட்கொடுப்பதை நிறுத்திக்கொள்ளவேண்டியது அவசியமாகிறது. காலக்கிரமத்தி தற்காலம் வேண்டிய எண்ணிக்கை பலம் நமக்கும் ஏற்படும்போது இந்த அரசியல் எதேச்சாதிகாரிகள் மீது, அவர்கள் 'பிருட்டிஷ் அதிகாரவர்க்கத்தை வழிக்குக்கொண்டுவர எவ்வித முறைகளை அனுஷ்டிக்கிறார்களோ அதேமுறைகளை, உபயோகிப்போம். அதாவது சக்தியை ஒழுங்குபடுத்திக் கிளர்ச்சி செய்வதன் மூலம் சநாதநிஸ்டு கட்சியினரைப்போல் அதைரியமடையாமல் பயமும் பற்றுமின்றி வேலைசெய்து 'மறைந்து நிற்கும் விரோதிகளையும்' அவர்களைச் சேர்ந்த சநாதநிகளையும் முதன் முதல் திருத்தி நம் கட்சியில் சேர்ப்போம்.

9. பல தேசங்களிலுமுள்ள பலபிரிவு ஜனங்களுக்குள்ளும் வர்ணாச்ரம தர்ம கொள்கைகள் பரவச்செய்து அவற்றால் மீண்டும் மனித சமூகம் சமாஸவாழ்க்கையை நடத்தச்செய்வது நமது லட்சியமாதலால் நமது சமூகதர்ம அரசியல் தர்ம கொள்கைகளை ஏற்றுக்கொள்கிறவர்கள் ஹிந்துமதத்தைச் சேராத சமூகங்களிருந்தாலும் அவர்களையும் வைதிகக்கட்சியில் சேர்த்துக்கொள்ள முயற்சி செய்யவேண்டும். ஆனால் அவர்களுடைய மததர்ம உணர்ச்சிகளைக் கெடுக்கலாகாது. மேலும் இவ்வித அங்கத்தினரின் உதவியைக்கொண்டு க்ஷத்ரிய தர்ம கொள்கைகளான ஆட்சி நிர்வாகம் பிரஜா சம்ரட்சணம் முதலியவற்றை 'சர்வதேச சங்கம் போன்ற நிலயங்களில் புகுமாறு செய்யவேண்டும். இந்தக் கொள்கைகளால் மாத்திரமே அவை தனிப்பட்ட தேசங்களின் சுயநலம், பயம், பற்று முதலியவை நீங்கி மேலெழும்ப முடியும். அப்போது அவை உலக சமாதானத்தைத் தோற்றுவித்துக் காக்கமுடியும்.

10. உலலே வேறு பலசமூகங்கள் வேருமின்றி அழிந்திருக்க, வேதங்களையே ஆதாரமாகக் கொண்ட நமது சமூகம் மட்டிலும் அழியாமலிருப்பதற்குக் காரணம் அபௌருஷேயமாகிய சுருதி ஸ்மிருதிகளிடம் நாம் அசைக்க முடியாத பக்தி வைத்திருப்பதுதான்; எவ்வளவு உன்னத நிலையில் உள்ளவராயினும் அவர் சுருதிஸ்மிருதிகளோடு ஒத்துவாராவிட்டால் அவரை நாம் பிரமாணமாக ஏற்றுக்கொள்ள மறுக்கிறோமாதலால் *உறுதிகெடாமல் வசிக்கிறோம். உதாரணம்:- ராமன் கிருஷ்ணன், புத்தர் ஆகிய மூவரும் அவதார புருஷர்களென்ற முறையில் அவர்களை நாம் சமமாக மதித்தபோதிலும் சாஸ்திரங்களுக்கு இணங்குவதால் ராமகிருஷ்ணர்களை பிரமாணமாகக்கொண்டு அவ்விதம் இணங்காத புத்தரை ஒப்புக்கொள்ள மறுக்கிறோம். ஆதலால் மேலே சொல்லியபடி சுருதிஸ்மிருதிகளிடம் பக்தியை நாம் நிலைபெறச்செய்து அறியாமையிலாழ்ந்திருக்கும் ஹிந்துஜனங்கள் உன்னதமாகத் தம்மை விளம்பரம் செய்துகொள்ள வலிமையுடையவர்களுடைய வலையில் சிக்காதவாறு தடைசெய்யவேண்டியது அவசியமாகிறது.

*(1928-ம் வருஷம் காசியில் கூடிய அகில இந்திய வைதிக மகாசபையில் நிறைவேறிய தீர்மானம்:—

"மனு முதலிய தர்மசாஸ்திரங்களின்படி ஜாதிமத மாற்றம் முடியாது என்றும் அவ்விதம் மாறுவதற்கு அனுமதிகொடுக்க தர்மாசாரியர்களுக்கும் பண்டிதர்களுக்கும் அதிகாரம் கிடையாது என்றும் ஏகமனதுடன் முடிவுசெய்து தீர்மானிக்கப்படுகிறது.")

11. வைதிகக்கட்சி ஸ்தாபகராகிய டாக்டர் K. V. சுப்பநாஅமாத்யா அவர்கள் தயாரித்திருக்கிற "வைதிக கட்யிசின் அபிப்பிராயங்கள்" என்ற சிறு நாலில் அடங்கிய விஷயங்கள் கட்சி அங்கத்தினர்களுக்கு உவவியாயிருக்குமென்று ஒப்புக்கொள்கிறோம். எங்களால் முடிந்தவரையில் கட்சியின் வேலைகளில் சேர்ந்துழைப்போம்.

டாக்டர் K. V. சுப்பு அமாத்யா,
ஸ்தாபகத்தலைவர்,
வைதிக கட்சி தலைமை ஆபீஸ்,
பன்கால் பார்க் ஸ்குயர்,
தியாகராஜநகர், மதராஸ்

## மதுரையில் ஸநாதனப் பள்ளிக் கூடத்தின் திறப்பு விழா.

நாளது 27-5-38 சுக்ரவாரம் காலை 7½-மணிக்கு மதுரை தமிழ்ச் சங்கம் ரோட் நி. 55 வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம் கார்யாலயத்தில் ஸநாதனதர்மப் பள்ளிக்கூடம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. பகவானைப் பூஜை செய்து வேதகோஷத்துடன் வித்வான்களுக்கும், ஸபையோர்களுக்கும் பழம் பானகம், தாம்பூலம் முதலியவைகளும் கொடுத்த பின் ஸங்கத் தலைவர் ப்ரம்மஸ்ரீ, ரர்வ்ஸாகிப் என். நடேசய்யரவர்கள் பள்ளிக் கூடத்தைத் திறந்துவைக்கையில் வித்யாப்யாஸத்தின் மகிமையையும் அது நமது ப்ராசீன ஸநாதனதர்ம முறையில் செய்யப்படவேண்டிய அவசியத்தையும்பற்றிப் பேசினார்கள். இப்பொழுது ஆரம்பிக்கும் பள்ளிக்கூடம் ஸ்திரமாய் நீடித்து நடக்கும்படிக்கும் அது நமது தேசத்தில் சிறந்த ஸர்வகலாசாலையாக அபிவிருத்தியாகும்படிக்கும் ஸபையோர்கள் அநுக்கிரஹித்து தர்மாபிமானிகளெல்லோரும் ஏராளமாய் பொருளுதவி செய்யவேண்டுமென்றும் பிரார்த்தித்தார்.

பிறகு அட்வொகேட் ப்ரம்மஸ்ரீ, N. S. விஸ்வநாத்யரவர்கள் ராமேச்வரம் தேவஸ்த்தானம் பிரின்ஸ்பல் ப்ரம்மஸ்ரீ சுப்ரமண்யய்யரவர்கள் ப்ரம்மஸ்ரீ, V. S. ராமஸ்வாமி சாஸ்திரிகளவர்கள், கதர் வஸ்த்ராலயம் ப்ரம்மஸ்ரீ, G. விஸ்வநாத சாஸ்திரிகளவர்கள் அட்வொகேட் ப்ரம்மஸ்ரீ R. நரஸிம்மய்யங்கார் அவர்கள், திருப்புகழ் வித்வான் ப்ரம்மஸ்ரீ, கிருஷ்ணய்யரவர்கள் முதலியவர்கள் ஸநாதன தர்மக் கல்வியின் மஹிமையைப்பற்றிப் பேசி பள்ளிக்கூடத்துக்குநல்வாழ்த்துக்கூறினார்கள்

பிறகு ப்ரம்மஸ்ரீ, சிவராமகிருஷ்ண சாஸ்திரிகள், ப்ரம்மஸ்ரீ, கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் ப்ரம்மஸ்ரீ, ஸ்ரீவத்ஸ ஐயங்கார் அவர்கள் இவர்கள் பள்ளிக்கூடத்தில் புதிதாய்ச் சேர்ந்த ஆண், பெண் குழந்தைகளுக்கு பகவத் ஸ்தோத்ரங்கள் பாடம்சொல்லிக்கொடுத்தார்கள். பள்ளிக்கூடத்தில் இப்பொழுது சுமார் 50 குழந்தைகள் சேர்ந்திருக்கிறார்கள். சீக்கிரத்தில் நூற்றுக்கணக்காய்க் குழந்தைகள் ஏராளமாய் இந்த ஸநாதனதர்மம் பள்ளிக்கூடத்தில் சேருவார்கள் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

மா. வேங்கடாசலம்,
காரியதரிசி தர்ம சாஸ்த்ர ஸபை, மதுரை.

## ஆஸ்திக மகாஜனங்களுக்கு ஓர் விண்ணப்பம்.

கும்பகோணம் காவேரிக்கறை சோலையப் பமுதலியார் அக்கிரஹாரம் கீழ்புறமுள்ள நாலாம் திருநாள் படித்துறையாகிய ஸ்நாநகட்டம் மிகவும் பழுதாயிருப்பதால் அதைப் புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

ஷை மகா தர்ம கைங்கர்யம் ஆஸ்திக மகா ஜனங்களுடைய பொருளாதாவின்பேரிலேயே பூர்த்தியடைய வேண்டியிருக்கிறது நதியில் ஜலம் வருவதற்குள் வேலை முடிய வேண்டிய நிர்ப்பந்தத்தை முன்னிட்டு ஆஸ்திகர்கள் அனைவரும் ஷை தொண்டில் ஈடுபட்டு நடத்துபவர்களிடம் அவரவர்களால் இயன்ற பொருளுதவியை ஆர்யதர்மம் பத்திராதிபர் மூலமாயாவது, நேரிலாவது சேர்ப்பிக்கும்படியாய் பிரார்த்திக்கப்படுகிறது.

தர்மத்தொண்டு அபிமானிகள்.

## ஆத்தன்குடி.

ஸநாதனதர்ம மகாசபை.

வெகுதான்ய ஹு வைகாசி மீ 17உ திங்கள்கிழமை காலை 9-மணிக்கு ப்ரும்மஸ்ரீ ராமஸ்வாமி அய்யங்காரவர்கள் தலைமையில் S. வெங்கட்டராம கனபாடிகள் ஸ்ரீமான் சுவீர. கதிரேசன் செட்டியார் P. S. சுப்பிரமணிய கனபாடிகள், ஜெகதீசய்யர் முதலானோர் முறையே எவ்வித தியாகமும் செய்தேனும் வைதிக மதத்தை நிலைநிறுத்தவேண்டிய அவசியம், ஸ்திரீகள் தர்மம், ஆசிரியர் சுந்தாராமனின் வாழ்க்கை என்ற பொருள்பற்றி சொற்பொழிவாற்ற (1) வைதிகமத சிரத்தை மிக்காரும் பிரபல ஆசிரியருமான கும்பகோணம் ப்ரும்மஸ்ரீ சுந்தாராமய்யாவர்களும், (2) இச்சபையின் அங்கத்தினர் ப்ரும்மஸ்ரீ மாதவய்யங்காரவர்களின் தர்மபத்தினியாரவர்களும் காலகதி அடைந்ததற்கு அநுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டபின் தலைவரவர்கள் இனிய முடிவுரைகூற வந்தனோபசாரத்துடன் சபை 10½-மணிக்கு இனிது நிறைவெய்தியது.

T. P. ஜகதீசய்யர்.

## கட்டாய ஹிந்தி.

ஸர்க்கார் இரக்கம்.

சென்னை மகாணத்தில் 125 பள்ளிக்கூடங்களில் ஹிந்தியைக் கட்டாயமாக்கப் போவதை எதிர்த்துச் சிலர் பிரசாரம் நடத்திவரும் காரணமாகச் சென்னை ஸர்க்கார் சிறிது விட்டுக்கொடுக்க ஸம்மதித்திருப்பதாய் தெரிகிறது.

மேல்கிளாஸ் பிரமோஷனுக்கு ஹிந்தி ஒரு தடையாயிராதென்றும், அதாவது ஹிந்தியில் ஒருவன் தேறாவிட்டாலும்கூட அவன் மேல் வகுப்புக்கு மாற்றப்படுவானென்றும், ஹிந்தியினால் தமிழ் பாஷைக்கு ஆதாவு குறைவதாக என்றைக்குத் தெரிகிறதோ அன்று கட்டாய ஹிந்தி முறையை எடுத்துவிடுவதாயும் பிரதம மந்திரி உறுதி சொல்லியிருக்கிறாராம்.

## பண்டித ஜவஹர்மீது கல்லெறி.

அலஹாபாத்தில் ஸ்ரீமான் நேரு தேசியக் கொடியை ஏற்றுகையில், போட்டியாக முஸ்லீம் மாணவர்கள் லீக் கொடியை ஏற்ற ஆர்ப்பாட்டம் செய்தனர். இதனால் இருதரப்பிலும் கலவரம் ஏற்பட்டு கல்வீச்சு நடந்தது.

ஸ்ரீமான் நேருமீது பெரிய கல்லு வீசப்பட்டது. ஆனால் அவர் அடிபடாமல் தப்பினாராம்.



# மதுரை ஜில்லா வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்.

## 5-வது ஸம்மேளனம்.

திருநெல்வேலி ப்ரும்மஸ்ரீ
R. கிருஷ்ணஸ்வாமி அய்யர், M.A., B.L.,
அவர்களின் தலைமைப் பிரசங்கம்.

(சென்ற வாரத் தொடர்ச்சி)

### 5. கிரஹத்தின் பரிசுத்தி.

ஹிந்துக்களின் மதானுஷ்டானம் கிரஹத்திற்கு உள்ளேயும் கிரஹத்திற்கு வெளியிலுமாக இரண்டுவகைப்படும். வீட்டிலுள்ள அநுஷ்டானம் பெண்டிட்டின் பரிசுத்தத்தன்மையைப் பொறுத்தது; அப்பரிசுத்தத்தன்மை விவாஹத்தின் சுத்தியைப் பொறுத்தது. இதர தேசங்களிலோ இதர மதஸ்தர்களின் கொள்கையிலோ விவாஹம் என்பது எப்படி பாவிக்கப் பட்டிருந்தபோதிலும், ஹிந்துக்கள் ஸம்பந்தப்பட்டமட்டில் ஒருவைதீக ஸம்ஸ்காரமேயாகும். சாஸ்திரங்களின் பிரகாரமும் வழக்கப்படிக்கும் கொஞ்சம் போக்குநீக்கு விடப்பட்டிருக்கும் ஜாதிகளில் கூட, வெறும் லௌகிக ஒப்பந்தமாக பாவிப்பது கிடையாது. அப்படியிருக்க, விவாஹத்தை சுத்த லௌகிக விஷயமாகக்கருதி இஷ்டப்படி எந்த லௌகிக அதிகாரியும் தலையிடலாமென்றும் மாற்றலாமென்றும் நினைப்பது பெரிய தவறுதலாகும்.

ஹிந்து சாஸ்திரங்களின்படி வியக்தமாய் வியபசாரம் என்று ஏற்படுகிற விதவா விவாஹத்தை அநுமதித்து 1856-ல் சட்டமாக்கினபொழுதே விவாஹத்தின் பரிசுத்த தன்மையைக்கெடுத்ததாயிற்று. பிறகு ஸ்திரீ புமானாயிருந்தால்போதும், யார்வேண்டுமானாலும் யாரைவேண்டுமானாலும் கிரஹித்துக்கொண்டாலும் அதுவும் சட்ட ஸம்மதமே என்று செய்துவிடும் நோக்கத்துடன் பல சட்டங்கள் கொண்டுவரப்பட்டும் நிறைவேற்றப்பட்டுமிருக்கின்றன. விசேஷ விவாஹச்சட்டம் என்ற ஒரு சட்டத்தை இயற்றி தன் இஷ்டப்படி ஸ்திரீயை கிரஹிப்பதற்காக, தான் பிறந்த மதத்தைக் கைவிட இடங்கொடுக்கப்பட்டது. ஜாதி முறைகளால் நன்கு நடந்துவந்த ஜனஸமூகத்தில் குழப்ப மேற்படுத்தவே ஜாதிக்கலப்பு விவாஹச்சட்டம் கொண்டுவரப்பட்டது. ஹிந்துக்களின் தர்ம சாஸ்திரங்களில் நிஷேதிக்கப்பட்டதும் ஹிந்துக்களின் ஸம்பிரதாய வழக்கங்களுக்கு விருத்தமுமான காரியங்களுக்கு சட்டமூலமாக அனுமதிகொடுக்கவே இதுமாதிரி சட்டங்கள் ஏற்பட்டன.

### 6. தர்மத்திற்குத் தண்டனை.

இத்துடன் நிற்காமல், அதர்ம பூயிஷ்டமான இந்த காலத்திலும் கூட சாஸ்திர பிரமாணத்தைஒப்புக்கொண்டுநடந்துவருவதில் பிடிவாதமுள்ளவர்களை குற்றவாளிகளாக்கி தண்டிக்கவேண்டுமென்ற அபூர்வமான யோஜனை ஹாவிலாஸ சாரதாவின் மசோதாவைக் கவனிக்க நியமிக்கப்பட்ட தனிக்கமிட்டியாரின் மூளையில்தான் உதித்தது. மத விஷயங்களில் நடுநிலைமை வஹிப்பதாகக் கொடுத்திருந்த வாக்குறுதியையெல்லாம் உதறிவிட்டு ஸர்க்காரும் ஒற்றுப்பாடத்தலைப்பட்டதின் பலனாக அச்சட்டம் நிறைவேறியது. விவாஹத்தின் வைதிகத்தன்மையைப் புறக்கணித்து, இன்னமும் மதவிஷயங்களில் மனு, பாராசர், யாக்ஞயவல்க்யர் முதலிய மஹர்ஷிகளையே பிரமாணமாக நினைத்திருக்கும் பெரும்பாலோரான ஹிந்துக்களின் பலமான எதிர்ப்பை உதாஸீனம்செய்து, பிராசீன சாஸ்திரங்களின் கட்டளைக்கு கட்டுப்பட்டு நடப்பவர்களை தண்டிப்பதற்காக இச்சட்டம் ஏற்பட்டது. பகவான் ஸ்ரீராமமூர்த்திக்கு விவாஹமாகும்போது வயது பதிமூன்று, ஸீதைக்கு ஏழாவது வயது. இச்சட்டம் இயற்றியபின் அக்கல்யாணம் நடந்திருக்குமேயானால், வஸிஷ்டர், விசுவாமித்திரர், சதாநந்தர் முதலிய மஹர்ஷிகளும் தசரதர், ஜனகர் முதலிய ராஜர்களும் கைதிசெய்யப்பட்டு "பால விவாஹம்" என்ற இந்த நவீன குற்றத்திற்காக தண்டிக்கப்படவேண்டியவர்களாயிருப்பார்கள். இப்படி ஒரு சட்டம் இயற்றிய மேதாவிகளின் அதிக பிரஸங்கித்தனத்தை என்னவென்று சொல்லுவது?

இதுவும் போதாதென்று நினைத்து. இனிகல்யாணப் பந்தலிலேயே போலீஸ்காரனைவிட்டு கல்யாணத்தை நடக்கவொட்டாமல் தடுத்துகுலையிடும்படி செய்யவும் பிரவிருத்திக்கிறார்கள். இக்காலத்திற்கு கலியே ராஜாவாக இருப்பதால், அவனை ஆராதிக்கும் வழியை இன்னம் கற்றுக்கொள்ளாத ஸாது ஜனங்கள் அவ்வரசன் விஷயத்தில் ராஜத்ரோஹம் செய்வதாகிறபடியால் கஷ்டப்படவேண்டியவர்கள்தான் போலும். நம் தேசத்தில் தத்காலம் முன்னணியிலிருப்பவர்களுக்கு வேறு வேலையில்லாததினாலும், விஷமத்திலேயே நோக்கமிருந்து வருவதினாலும், இன்னும் என்னவெல்லாம் தொந்தரவுகளை ஏற்படுத்த நினைப்பார்களோ தெரியவில்லை. இச்சட்டம் பால்யத்தில், அதிலும் பிரௌடையாவதற்குமுன் பெண்களுக்கு விவாஹம் செய்து தீரவேண்டுமென்று சாஸ்திரத்தினால் கட்டாயப்படுத்தப்படுகிற பிராஹ்மணர் முதலிய ஜாதிகளை மிகவும் பாதிக்கிறது. அதைர்யத்தினாலாவது சோம்பலினாலாவது அசட்டையினாலாவது இதுமாதிரி சட்டங்களை பொறுத்துக்கொள்வதென்று ஆரம்பித்துவிட்டால் அந்த ஜாதிகள் தார்மிகமான வர்ணவியவஸ்தையில் தங்கள் காரியங்களை கிரமப்படி நடத்தமுடியாதவர்களாக ஆகிவிடுவார்கள்.

ஏற்கனவே ஹிந்துதர்ம சாஸ்திரங்களின்படி பாதித்யத்திற்கு விதிக்கப்பட்டிருந்த தண்டத்தை விலக்கி முன் 1850-ல் ஒரு சட்டம் இயற்றியதினால் ஹிந்து குடும்பங்களின் கட்டுப்பாடு பாதிக்கப்பட்டிருக்கிறது. விதவைகளுக்கும், பெண்களுக்கும் மற்றும் சிலர்களுக்கும் புதிதாக சொத்து உரிமை கொடுக்கவேண்டுமென்று நடந்துவருகிற சட்ட இயக்கங்கள் இன்னமும் குடும்பங்களை உலைக்கவே ஸாதனங்களாகின்றன. போதாதற்கு, ஹிந்துசாஸ்திரங்களில் கொஞ்சமேனும் அநுமதிக்கப்படாத விவாஹரத்து என்ற ஒரு புதிய குழப்பத்தையும் சட்டமூலமாக ஏற்படுத்த உத்தேசிக்கிறார்கள். நம் இந்தியா தேசம் பூராவும் சாப்பாட்டுக்கு வழியன்னியில் பொருளாதாரமற்று சிரமப்பட்டுக்கொண்டும், எங்கு பார்த்தாலும் தாரித்திரியமும் வேலையில்லாத்திண்டாட்டமும் தீருவதற்கு வழியன்னியி லிருந்துகொண்டும் இருக்கிற இக்காலத்தில் அமைதியாயிருக்கும் கோடிக்கணக்கான இந்த ஜனங்களின் மத்தியில் எந்த விஷமத்தை, எந்த அதிருப்தியை, ஏற்படுத்திவிடலாமென்ற யோசனையே தத்காலத்திய மஹாத்மாக்களின் புத்தியில் வேலை செய்துகொண்டிருக்கிறது.

### 7. ஆலயப்பிரவேச விஷமம்.

இவ்விதமாக ஹிந்துக்களின் கிரஹதர்மத்திற்கு இடஞ்சல் செய்துவிட்டு, இப்பொழுது கிரஹத்திற்கு வெளியிலும் தர்மத்தை நாசம் செய்யவேண்டுமென்று தேசிய சீர்திருத்தவாதிகள் ஆரம்பித்திருக்கிறார்கள். கிரஹத்திற்கு வெளியில் தர்மம் என்பது, இப்புண்ய பூமியில் ஆஸேது ஹிமாசலம் யாத்திரார்ஹமாக எங்கு பார்த்தாலும் ஏற்பட்டிருக்கிற ஆலயங்களையும் தீர்த்தங்களையும் க்ஷேத்திரங்களையும் பொறுத்தது. ஆகையால், அந்த தேவாலயங்கள் முதலானவைகளின் பரிசுத்தத் தன்மையைக் கெடுக்கவே இப்பொழுதுள்ள பிரயத்தினம். தேவாலயங்கள் என்பது, தெருவோடு போகிறவர்கள் நிமிர்ந்து பார்த்து ஸந்தோஷித்துப் போகும்படிக்குள்ள சில்பநைபுண்ய கண்காக்ஷிகள் அல்ல. அததற்கு உரிய ஆகம சாஸ்திரங்களின்படி கட்டப்பட்டு, ஸாந்நித்யம் ஏற்படுத்தி, பரிபாலிக்கப்பட்டு வருகின்றன. அந்த ஆகம சாஸ்திரங்களை உதாஸீனம் செய்தாலும் மீறினாலும் அவ்வாலயங்கள் மதஸம்பந்தமாய் நிஷ்பிரயோஜனமாகவே ஆகும். சிற்சில ஸமூஹத்தார்களுக்கும் அத்தேவாலய ஸேவையின் பிரயோஜனம் ஏற்படவேண்டுமென்று மாத்திரம் சொல்லிக்கொண்டு அப்பிரயோஜனத்தை எப்படி அடையலாமென்று விதிக்கிற ஆகமசாஸ்திரங்களையே உதாஸீனம் செய்கிறவர்களின் புத்திநிலை எனக்கு அர்த்தமாகவில்லை.

தேவாலயத்திலுள்ள ஸாந்நித்யம், ஐஹிகஸாதனங்களால் ஏற்பட்டதல்ல. இத்தக் காரணத்தினாலேயே ஆகமங்களினால் அனுமதிக்கப்படாத சிலர்கள் ஆலயத்தில் பிரவேசிக்கலாமென்றும் அவர்கள் பிரவேசிப்பதினால் ஸாந்நித்யம் கெடாதென்றும் சொல்வதற்கு எந்த லௌகிக ஸமாஜத்திற்கும் அதிகாரம் கிடையாதென்று ஸ்பஷ்டமாகும். தத்காலத்திய அரசர் ஒருவர், எப்படியும் பிரஸித்தி யடையவேண்டுமென்று நினைக்கிற ஒரு மந்திரியின் ஆலோசனையின்பேரில், இதுவரை கறுப்பு என்று வியவஹரிக்கப்பட்ட பதார்த்தங்களையெல்லாம் இனிமேல் வெளுப்பு என்றுதான் வியவஹரிக்கவேண்டுமென்று ஒரு ராஜசாஸனம் பிறப்பிக்கலாம். ஆனால், எந்த அரசனுடையவும் எந்த தீவிரமான ஆக்ஞையும் கறுப்பு பதார்த்தங்களை வெளுப்பாக மாற்றிவிட முடியாது. தீண்டாதார் ஸ்ரீபத்மநாபஸ்வாமி கோவிலில் நுழைந்தாலும் கூட, அப்பகவான் அங்கு ஸாந்நித்யத்துடன் இருந்துதான் தீரவேண்டுமென்ற வரையில் ஆக்ஞையிட எக்காலத்திலும், அதுவும் இக்காலத்தில், எந்த அரசனுக்கும் எந்த மஹாத்மாவுக்கும் அதிகாரம் கிடையாது. அவ்விடத்திலிருந்து ஸாந்நித்யம் விலகினால் அப்பகவானுக்கு எவ்வித நஷ்டமுமில்லை. நஷ்டம் எல்லாம் நமக்குத்தான். கோவிலில் ஜாஸ்தி பக்ஷணங்கள் விநியோகம் செய்யும்படி ஏற்பாடு செய்தாலும், மிகப் பிரஸித்தர்கள் வேடிக்கை பார்க்க வந்தாலும், வாண வித்தை முதலானவைகளை ஜாஸ்திப்படுத்தி ஜனங்களை இழுக்கச்செய்தாலும், தெய்வத்தின் ஸாந்நித்யம் மறைந்து போனதற்கு இவைகள் கொஞ்சமேனும் ஈடாகமாட்டா. வாஸ்தவமாக கவனித்துப்பார்த்தால் இவ்வாலயங்களைக் கண்காக்ஷி சாலைகளாகவும் உபந்யாஸ மேடைகளாகவும் செய்து, கண்ட பேர்களெல்லாரையும் உள்ளே விடவேண்டுமென்று பிரவிருத்தி செய்கிறவர்கள் தெய்வ ஸாந்நித்யத்திலேயே நம்பிக்கை யற்றவர்கள். நம் ஆலயங்களிலிருக்கும் அத்புதமான பிராகாரங்களையும் ஐவேஜிகளையும் கண்டு வெறும் பொறாமைப்பட்டு அபஹரிக்க ஆசையுள்ளவர்களைத் தவிர வேறல்ல.

நம்மதத்தை பலாத்காரமாக உல்லங்கனம் செய்யத் தலைப்பட்டிருக்கும் திருவாங்கூர், இந்தூர்,மஹாராஜாக்களைப்பின்பற்ற மறுத்து, தார்மிக சக்கரவர்த்தி என்ற அன்வர்த்தமான பிருதை யடைந்திருக்கிற கொச்சி மஹாராஜா, திருவாங்கூர் பெரியராணி, மைஸூர் மஹாராஜா, கள்ளிக்கோட்டை ஸாமூதிரீ, கொல்லங்கோடு ராஜா முதலிய பிரமுகர்கள் தைர்யமாய் தர்மமார்க்கத்தில் இருந்து வருவது நம் பாக்கியமே.

(தொடரும்)

215234

307

# வெளியூர்ச் செய்திகள்.

## திருச்சி ஆயுர்வேத ஸபா.

ஷை ஸபாவின் மாதாந்திரக்கூட்டமொன்று பாரத்வாஜ ஆயுர்வேத ஔஷதசாலையில் 22-5-38உ மாலை 4 மணிக்கு ஆயுர்வேதபூஷணம் ஸ்ரீமான் பி. ஜி. கணபதி சாஸ்திரிகள் தலைமையில் கூடிற்று. அப்பொழுது கரூர் டாக்டர் எ. கே. ராகவேந்திராசார் அவர்கள் "ரக்த பித்தம்" என்பது பற்றி உபன்யஸித்தார். பிறகு சர்ச்சையில் மற்ற ஆயுர்வேத வைத்யர்களும் கலந்து கொண்டனர். மாலை 7 மணிக்கு மங்களகரமாக கூட்டம் முடிவுற்றது. ஏ. ராகவேந்திரன்.

## புரசவாக்கம்.
## அகில இந்திய அதார்மிகச் சட்ட எதிர்ப்பு.

### ஸநாதனிகள் மாபெருங் கூட்டம்.

இப்பொழுது ஆதிக்கத்திலிருக்கும் காங்கிரஸ்காரர்கள் இயற்றும், அதார்மிகச்சட்டங்களையும், மசோதாக்களையும் எதிர்த்து, 12-5-38 ஓர் பொதுக்கூட்டம் புரசவாக்கம் ஸ்ரீராமசாமி கோவிலில் கூடினர். அவ்வமயம் தீக்ஷமங்கலம் வால்மீகி, வாக்பூஷணம் பிர்ம்மஸ்ரீ ராமனுததீக்ஷிதர் அவர்கள் தலைமை வகித்தார். இஃது ஓர் அகில இந்திய சம்பவ தினமாகக் கொண்டாடப்பட்டது.

ஸ்ரீமான் பி. எஸ். வைத்தினுதய்யர் அவர்கள் "காங்கிரஸ்காரர்கள் தற்காலம் ராஜீயக் கொள்கைகளை," வர்ணாச்ரம தர்ம விஷயங்களில் தலையிட்டுச் சாதிக்க முற்பட்டது பற்றி நீண்டதோர் உபன்யாசம்செய்து தீர்மானங்களை முறையே நிறைவேற்றினுர். அத்தீர்மானங்களை ஸ்ரீமான் ஏ. எஸ் நடருஜய்யர் பி.எ எம். எல், அவர்கள் ஆதரித்தார். ஸ்ரீமான்கே வரதாராஜலு நாயக்கர் அவர்கள் நிறைவேற்றினுர்.

இந்தக் கூட்டமானது, காங்கிரஸ் கவர்ன்மெண்டு வரையறையைக் கடந்த கொள்கையுடன் காச்சி தீர்மானத்துக்கு எதிரிடையாகவும், மகாராணியாரின், வாக்குறுதிக்கு மாருகவும் மத விஷயங்களில் தலையிட்டு, சட்டதிட்டங்களையும், மசோதாக்களையும் கொண்டுவந்து, எந்த ஜனங்களின் ஓட்டு பலத்தால் அதிகாரப் பதவியை அடைந்தார்களோ அதே ஜனங்களுக்கு இன்னல் விளைவிக்கும் நிலைமையில் இறங்கி, ஜனங்களின் நன்மதிப்பையும் மெஜாரிட்டி பலத்தையும் இழந்து வருவதை நிரூபிக்கிறது.

B. S. வைத்தினுத அய்யர்,
உதவிக் காரியதரிசி.

## கிருஷ்ணராயபுரம்.

### ஸீதா கல்யாணம்.

மேற்படி கிராமத்தில் பாஷ்ய பாவக்ஞ ஸ்மிருதிபூஷண பிரம்மஸ்ரீ வெங்கடராம சாஸ்திரிகளவர்களால் பிரதி தினம் உபன்யாசிக்கப்பட்டு வருகிற வால்மீகி ராமாயணத்தில் ஸீதா கல்யாண கட்டமானது ரொம்பவும் அதிவிமர்சையாய் நடந்தேறியது. உபன்யாஸமண்டபமானது புஷ்பங்களாலும் தோரணங்களாலும் நன்ருக அலங்கரிக்கப்பட்டிருந்தது. பகவானுடைய திவ்ய படத்திற்கு புஷ்பமாலைகளால் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. உள்ளூரிலிருந்தும் பக்கத்து கிராமங்களிலிருந்தும் அநேக ஜனங்கள் வந்திருந்து சிரவணனந்தத்தை அடைந்தார்கள். பிறகு பிரம்மஸ்ரீ சாஸ்திரிகளவர்களுக்கு உள்ளூர் கிராம மகாஜனங்களால் சம்பாவனை முதலானதுகள் செய்யப்பட்டு இனிது முடிவடைந்தது.

பிரம்மஸ்ரீ சாஸ்திரிகளவர்கள் கல்யாண கார்யமாய் புதுச்சத்திரம் என்ற ஊருக்குப் போயிருக்கிறுர்கள்.

எஸ். ராமசுந்திரேஸ்வரன்.

## தஞ்சை கருடோத்ஸவம்.

தஞ்சை திவ்யதேச கருடோத்ஸவம் சனிக்கிழமை 21—5—38 இரவு வெண்ணாற்றங்கரை ஸ்ரீ நீலமேகப் பெருமாள் முதலாக பத்து பெருமாள்கள் திவ்ய அலங்காரத்துடன் புறப்பாடுசெய்து (22—5—38) பகல் 11-30 வரை நகர் வலமும் கருந்தட்டாங்டி வழியாக வந்தும் இனிது நடைபெற்றது. இன்று காலை (23—5—38) திவ்யதேச பெருமாள்களும் காந்தை ஸ்ரீ கண்ணபிரானும் படித்துறை வெங்கிடேசப்பெருமாளும், நவநீத சேவை மிக்க அலங்காரத்துடன் புறப்பாடானது. சென்ற 3 வருஷங்களாக இதற்காக உழைத்துவரும் தஞ்சை இராமானுஜதர்சன சபையாருடையவும் திருவாளர் சீதாராம நாயுடு, இராமானுஜலு நாயுடு அவர்களின் நன்முயற்சியும் போற்றத்தக்கதாகும். இவர்களுக்கு மிக்க உதவி செய்தும் இப்பொருது இனிது நடைபெறுதற்கு வேண்டிய ஒத்தாசை தஞ்சை அரண்மனை தேவஸ்தானத்தாரும் அதன் மானேஜர் திரு. ஜே. எம். சோமசுந்தரம்பிள்ளை அவர்களும் செய்தார்கள். விழா மென்மேலும் சிறப்புற்று துவாதச கருடசேவையாகவும் ஸ்ரீ பெருமாளின் கிருபாகடாக்ஷம் யாவருக்கும் கிடைக்கும்படிக்கும் இறைவன் அருள் புரிவாராக.

ஒரு நிருபர்.

## மதுரையில் கண் கொள்ளா அலங்கோலக் காக்ஷி.

24-5-38உ அன்று சென்னை மாகாண காங்கிரஸ் கமிட்டி மீட்டிங். அதற்குத்தான் இவ்வளவு அலங்கோலம். எங்கு பார்த்தாலும் கொட்டகைப்பந்தல்கள், அதிலும் நமது ப்ராம்மண சமூகத்தின் தேசபக்தியை சொல்லி முடியாது. இம்மதுரைமாநகரின் பிரபல அட்வகேட் ஸ்ரீ கே. ஆர். வெங்கட்டராமய்யர் அவர்களின் பாக்யமே பாக்யம். அவர் மனப்பூர்வமாய் தன்னுடைய தேசாபிமானத்தை திருகாண சுத்தியுடன் செய்தாரென்பதை நான் மிகவும் சந்தோஷத்துடன் தெறிவிக்கிறேன். பரம அத்வைத நிலையில் சமத்வத்துடன் சர்வஜாதி மதஸ்தர்களுக்கும் சமாராதனை அறுசுவை உண்டியுடன் நடத்திவைத்திருப்பார் என்பதை உடுப்பி ஹோட்டல் (Restaurant Car) அடிக்கடி போய்வந்ததைக்கொண்டு நிச்சயிக்கிறேன். அத்துடன் கூட அவர் வீட்டு வாசலில் பந்தல் ஜோடனை தீபாலங்காரம் வாசலில் தோரணம் ஆர்ச்சுவளவில் "தமிழ்நாட்டுத் திலகங்களே வருக, வருக என்ற ஸ்வாகத் முதலானதைப் பார்த்து நம்முடைய ப்ராம்மண சமூகத்தின் தேச பக்தியை இதர ஜாதியர்கள் நம்பவில்லையே என்ற துக்கந்தான் எனக்கு. ஏன் அப்படி எழுதுகிறேன் என்ருல் என் காதில் விழுகிற சொல்லைக்கொண்டு ஜில்லாபோர்டு பிரஸிடெண்ட் உத்யோகத்திற்கு பாப்பான் போடும் வேஷமிது என்று இதரர்களும், நம் சமூகத்தில் உள்ளவர்களும் நினைப்பதை உத்தேசித்துத்தான் துக்கிக்கிறேன். நம்முடைய சமூகத்திற்கு அவர்களால் ஏற்படும் கஷ்டத்தையும துளிகூட ரோஷமன்னியில் பொறுத்துக்கொண்டு அவர்களை உபசரித்தால் வேஷமென்று சொல்வது பொறுக்கக் கூடியதில்லை. எப்படியிருந்தாலும் இந்தத்தடவையாவது இத்தியாக புருஷர்க்கு பிரஸிடெண்ட் ஸ்தானம் கொடுத்து அவருடைய தியாகத்தை மேன்மைப்படுத்தும் படியாய் என் சொந்தஹோதாவில் தமிழ்நாட்டுச் சர்வர்ஸ்ரீ முத்துரங்க முதலியாரவர்களை [illegible] கொளகிறேன்.

மாஜி காங்கிரஸ் வாதி:— ஜீ. ஏ. வி சாஸ்திரி

## திருப்பூந்துருத்தி,

திருப்பூந்துருத்தி ஸ்ரீநாராயணதீர்த்தகுரு சுவாமிகள் சந்நிதானத்தில் திருவையார் சப்தஸ்தான பல்லாக்கை முன்னிட்டு வைகாசி மீ 1உ சனிஇரவு 6-30 மணி முதல் 12மணி வரையில் சுமார் 500 ஜனங்களுக்குக்குறையாமல் புளி தயிர் சாதம் அன்னமளிக்கப்பட்டது.

இவ்வருஷம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. நிருபர்.

## சென்னை மாகாண கார் விபத்துக்கள்.

### (கால்வருஷ ரிபோர்ட்டு)

இம்மாகாணத்தில் இக்கால்வருட, முடிவாகிய டிஸம்பர்மீ 31உ 1937-ம் ஆண்டுக்குள் சென்னை ஹோம், கவர்ன்மெண்டு விடுத்த ஸ்டேட்மெண்டு பிரகாரம் 53 பேர்கள் மாண்டனர். 360 பேர்கள் தெரு விபத்துக்களில் படுகாய மடைந்தனர்.

## மேல்மங்கலம்.

### ஆஸ்திகமஹாஜனசபை.

பஹுதான்யஷு வைகசிமீ 13உ மாலை 4 மணிக்கு சபை அக்ராசனர் பிர்மஸ்ரீ பிலாஞ்சேரி சுப்பிரமணிய அய்யாவர்களின் தலைமையின் கீழ் சபை கூடிற்று, ஜனங்கள் ஏராளமாக விஜயஞ் செய்திருந்தனர்

இவ்வருஷத்திற்கு சபையின் நிர்வாஹஸ்தர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். போனவருஷத்திய சபை நிர்வாஹஸ்தர்களோ சபைக்காரியங்களை திருப்திகரமாய் நடத்தி வந்ததில் மெம்பர்கள் சந்தோஷிக்க இவ்வருஷத்திற்கும் ஷை யார்களே சபைக்காரியங்களை நிர்வாஹிக்கத் தெரிந்தெடுக்கப்பட்டது.

சபைக்கு பிர்மஸ்ரீ பிலாஞ்சேரி சுப்பிரமணிய அய்யாவர்கள் அக்ராசனுதிபதியாகவும் ப. விஸ்வனுதய்யாவர்களை உப அக்ராசனுதிபதியாகவும் சிவரும கணபதி கனபாடிகள் காரியதரிசியாகவும் சு. சுப்பருமுசாஸ்திரிகள் உபகாரியதரிசியாகவும் என். ராமசுப்பிரமணிய அய்யாவர்கள் பொக்கிஷதாரராகவும் இன்னும் 18பேர்கள் நிர்வாஹக்கமிட்டி மெம்பர்களாகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

காரியதரிசியால் வந்தனேசாரம் கூறப்பெற்று சபை 6மணிக்கு இனிது பூர்ணமானது.

காரியதரிசி.

## பிழைதிருத்தம்.

20வது ஸஞ்சிகை 10. பக்கம் மதிப்புரையில் 10 வது வரியை தமிழ் பதங்களை அகாரதிக்கிரமத்தில் வகுத்து அவைகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு ஸம்ஸ்கிருத பதமட்டும் கொடுக்காமல் ஒரே அர்த்தமுள்ள பல ப்தங்கள் கொடுத்திருப்பது ஸம்ஸ்கிருதபாஷையில் கவனம் செய்பவர்களுக்கும் உதவியாயிருக்கும் என்றும்— ஆங்கிலக்கல்லூரி மாணவர்களுக்கு இதுமிகவும் அபகரிக்கக்கூடியதென்பதை உபகரிக்கக்கூடியதென்றும் திருத்தி வாசிக்கும்படி கோருகிறேம்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

[illegible]

9-6-1938

4 ௩
23 23

213235

215235
JUN 1938 MADRAS

Registered No. M. 2913

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस்து नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 / 23 | கும்பகோணம் கலி5040 பகுதான்ய-ஷு வைகாசி-மீ 27உ 1938ஷு ஜூன்-மீ 9உ | ஸ 23

## ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0.
தனிப் பிரதி அணா 1.

**விளம்பர விகிதம்**

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா. 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்

## கட்டாய ஹிந்தி ஸத்யாக்ரஹம்.

ஸி. டி. நாயகம் கைதியானர்.

சென்னையில் கட்டாயஹிந்தியை எதிர்த்து நடத்தப்படவிருக்கும் ஸத்யாக்ரஹக் கமிட்டியின் ஸர்வாதிகாரியான ஸ்ரீமான் ஸி. டி. நாயகமும், மற்றுமிருவரும் கைது செய்யப்பட்டனர். கேஸ் முடியும்வரையில் கிளர்ச்சியில் கலப்பதில்லையென்று உறுதிமொழியளித்த காரணத்தால் இருவர் ஜாமீனில் விடப்பட்டனர். மந்திரிவீட்டுவாசலில் பட்டினிஹடம் நடத்தியவர் ஜாமீனில் விடப்படவில்லை

## பிரதம மந்திரிக்கு

கருப்புக் கொடி.

கனம் ஸி. ரா. ஆசாரியார் சேலம்ஜில்லாவில் மதுவிலக்கு வேலையைக் கவனித்து சுற்றுப்பிரயாணம் செய்கையில் பலவிடங்களில் ஹிந்தி எதிர்ப்புக்கக்ஷியார் கருப்புக்கொடி காட்டி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

## ஆலயப்பிரவேசத்தால் பயனில்லை.

அபேதவாதியின் கருத்து.

தீவிர அபேதவாதியான ஸ்ரீமான் பாட்லிவாலா கட்டாக்கில் பேசியபோது காங்கிரஸ் திட்டங்களையும், காந்திஜீயின் போக்கையும் கண்டித்துப் பேசினர்.

தீண்டாதாருக்கு ஆலயப் பிரவேசத்தால் எவ்வித நன்மையும் ஏற்படாதென்றும், அவர்களுக்குப் பொருளாதார விஷயத்தில் ஸௌகர்யமுண்டுபண்ணுவதே அவச்யம் என்றும் சொன்னர்.

## கௌன்ஸிலர்கள் தெருக் கூட்டுகிருர்கள்.

ஹைதராபாத்தில் பிரபலஸ்தர்களான சில முனிஸிபல் மெம்பர்கள் தாங்களே விளக்குமாறு, தொடப்பம் முதலியவைகளைக் கொண்டு நகரத்தெருக்களைச் சுத்தம்செய்து காட்டினர்களாம். நகரத்தை சுத்தமாகவைத்துக் கொள்ள வேண்டிய வழியை இதன் மூலம் அவர்கள் பொது ஜனங்களுக்குப் போதித்தனர்.

## காங்கிரஸை எதிர்க்க ஏற்பாடு.

ஐக்யமாகாண ஜமீன்தார்களின் கூட்டத்தில் காங்கிரஸை எதிர்த்துப் பிரசாரம்நடத்த பலமான தொண்டர்படை யொன்றை ஏற்படுத்தத் தீர்மானிக்கப்பட்டது. இதில்ஆயிரக்கணக்கானவர் பிரசாரகர்களாக வேலைசெய்வார்களாம்.

## வைஸ்ராய் அங்கீகாரம்.

பம்பாய் சட்டஸபையில் நிறைவேற்றப்பட்ட ஆலயப்பிரவேச மசோதாவுக்கு கனம் [illegible]

## The Kumbakonam Mutual Benefit Fund, Ltd.,

KUMBAKONAM.

**NOTICE.**

An Extra-ordinary General Meeting of the Subscribers of the Kumbakonam Mutual Benefit Fund Limited, will be held at 8 A.M. on Sunday the 3rd July, 1938, at the Fund Office Premises No. 58 Big Street, Kumbakonam, and if necessary on the following days between the hours 8 to 10 A.M. on week days at the same premises to consider the Directors' Special propositions regarding the amepdment of the Memorandum and Articles of Association.

*N. B:*— Subscribers desirous of moving amendments to the Special Propositions are requested to forward them to the undersigned so as to reach him on or before 25—6—38.

2. The Annual General Meeting of the Subscribers of the Fund will be held at 3 P.M. on Sunday the 3rd July, 1938, at the Office premises No. 58 Big Street, Kumbakonam, for transacting the following business.

**AGENDA.**

1. Adoption of the Directors' Annual Report, the Balance Sheet and the Profit and Loss Account with the Auditors' Report for the year ending with the 15th October, 1937.
2. Appointment of Annual Auditor for the year 1937—38. (Messrs. S. Krishnamoorthy, G.D.A., and K. Narayanaswami, G.D.A., R.A., have been nominated for the place.)
3. Adoption of the Budget for the year 1938—39.
4. Election of 5 Directors in the place of the retiring Directors.

All Subscribers are earnestly requested to attend.

*The Books of the Fund will be closed for Admission, Transfer, withdrawal and re-opening from 16th June, 1938, to 9th July, 1938, both days inclusive.*

(By Order,)
V. R. Satakopa Aiyengar,
*Secretary.*

Kumbakonam,
2nd June, 1938.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:—T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

# தஞ்சைஜில்லா பிராம்மண மஹாஸபை.

## வருஷாந்திரக்கூட்டம்.

## ஸ்ரீ ஸுந்தரராமய்யருக்கு அநுதாபம்.

### கார்யதர்சியின் விபரீதச்செய்கை.

தஞ்சைஜில்லா பிராம்மண மஹாஸபையின் வருஷாந்திரக்கூட்டம் சென்ற ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணிக்கு குடந்தை டவுன்ஹால் லைப்ரரி மண்டபத்தில் நடைபெற்றது. ஸபையின் நிரந்தரத்தலைவர் பிரம்மஸ்ரீ ஆர். ஸ்வாமிநாத ஐய்யர் (மாஜி ஹெட்மாஸ்டர்) அவர்கள் அக்ராஸனம் வஹித்தார்கள். நகரத்திலுள்ள அநேக பிரமுகர்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

ஸ்ரீமான்களான, திவான்பகதூர் கே. எஸ் ராமஸ்வாமி சாஸ்திரிகள், மஹாமஹோபாத்யாய பாஷா பாரத துரந்தர ம. வீ. ராமாநுஜாசாரியர், மஹாமஹோபாத்யாய, பண்டித ராஜ ஆர். வி. கிருஷ்ணமாசாரியர், எம். ஆர். ஸ்ரீநிவாஸாசாரியர் அட்வகேட் சேங்காலிபுரம் ஸ்ரீநிவாஸய்யர், ரிடையர்டு இஞ்ஜினீயர், நடராஜய்யர், அட்வகேட் வி. ஜி. சங்கரய்யர், ஜி. வி. வெங்கடராமய்யர், எஸ். மஹாலிங்கய்யர், ஆர். கண்ணன் அய்யங்கார், அட்வகேட் ஸுப்பிரமண்ய அய்யர், ஒ. என். ஸுப்பிரமண்ய அய்யர், முனிசிபல் கௌன்ஸிலர், என். ஹரிராவ், (ஸ்ரீ சாரங்கபாணி கோவில் மானேஜிங் டிரஸ்டி) திருக்கருகாவூர் டி. எல் ஸுப்பய்யர், அக்நிஹோத்ரம் தாததேசிக தாதாசாரியர், பாகவத ரங்கநாதாசாரியர், (மாத்ருமித்திரன் ஆசிரியர்) எம். ராமராவ், அக்நிஹோத்ரம் சக்கிரபாணி பாட்டாசாரியர், நடராஜய்யர், ஸி. ர. ஸ்ரீநிவாஸ பட்டாசாரியர், கோபாலதேசிகாசாரியர், ராமாநுஜதாதாசாரியர், ஸி. ஆர். கிருஷ்ணசாமி அய்யங்கார், முதலான அநேகர் விஜயம்செய்திருந்தார்கள்.

அக்கிராஸனாதிபதிமுன்னுரையில், கூட்டத்தின் நோக்கத்தைக்கூறி விட்டு, காலஞ்சென்றபெரியாரான ஆசிரியர் ஸ்ரீ ஸுந்தரராமய்யரைப்பற்றி பிரஸ்தாபித்துஅவருடைய மரணத்திற்கு வருந்தி ஓர் தீர்மானத்தைப் பிரேரேபித்தார்.

அந்த தீர்மானத்தை யொட்டி, ஸ்ரீமான்களான, ம. வி. ராமாநுஜாசாரியர், எம். ஆர். ஸ்ரீநிவாஸாசாரியர், சேங்காலிபுரம் ஸ்ரீநிவாஸய்யர், ஆர். வி. கிருஷ்ணமாசாரியர், ஸி. ஆர். கிருஷ்ணசாமி அய்யங்கார், அக்நிஹோத்ரம் தாதாசாரியர் முதலியவர்கள் காலஞ்சென்ற பெரியவரைப்பற்றி விரிவாகப்பேசி ஆதரித்தபின் ஸபையோர் எழுந்து நின்று தீர்மானத்தை நிறைவேற்றினார்கள்.

அதன் பிறகு ஸபைக்கார்யதரிசி ஸ்ரீமான் ஸாமிநாத சாஸ்திரியார் ஸபையின் வருஷாந்திர ரிபோர்டையும், வரவு செலவு திட்டத்தையும் ஸபையில் படித்தார். வரவு, செலவு விஷயத்திலுள்ள சில குறைகளை எடுத்துக்கூறி ஸ்ரீமான் ஜி. வி வெங்கடராமய்யாவர்கள் பேசுகையில் அநேக செலவினங்களுக்கு வௌசர் இல்லை யென்றும் வரவு இனங்களிலும் சில சரியாகக்காட்டப்படவில்லை யென்றும், இருந்தாலும் ரிபோர்ட்டை ஸபை அங்கீகரிக்கலாமென்றும் சொன்னர். ஸ்ரீமான் கண்ணன் அய்யங்காரால் இந்த ரிபோர்டை அங்கீகரிக்கும்படி பிரேரேபிக்கப்பட்டது. ஆனால் ஸபையின் நிர்வாஹ விஷயங்களைப் பற்றித் தீர்மானிக்க வேண்டியிருந்தாலும், மெம்பர் களல்லாத பலரும் அங்குகூடியிருப்பதாலும், இதனால் ஓட் எடுப்பதில் சிரமமிருப்பதாயும் எடுத்துக்காட்டப்பட்டது. ஸரியான ஸபை மெம்பர்கள் யார் யாரென்று சொல்லவேணுமென்றும் கோரப்பட்டது. இச்சமயம் கார்யதரிசி புதிதாகப்பலருடையபெயரைப்படித்து அவர்களும் மெம்பர்களென்றுவாதித்தார். அவர்கள் எப்போதுசேர்ந்தார்களென்றுவினவப்பட்டதற்கு கார்யதர்சி ஸரியாகப்பதிலளிக்கவில்லை. பொக்கிஷதாரராகிய ஸ்ரீமான்ஜி.வி. வெங்கடராமய்யர் பேசுகையில், புதிதாகச் சேர்க்கப்பட்ட மெம்பர் எப்போது சேர்க்கப்பட்டார்களென்பது தமக்குத் தெரியவில்லையென்றும், அவர்களுடைய சந்தாதுகையோ பெயர் ஜாப்தாவோ இன்று வரையில் தமக்குக்கிடைக்க வில்லை யென்றும் கூறினர். கார்யதரிசியோ அவர்கள் ஸரியான மெம்பர்களென்று வாதம் செய்தார். இச்சமயம் கார்யதர்சியின்செய்கையைக் கண்டித்துக் கூட்டத்தில் சப்தம் அதிகமாகியது. கார்யதர்சி ராஜிநாமா செய்ய வேண்டுமென்றும், வரவு செலவுக்கணக்கை அவர் ஸரியாக வைக்கவில்லை யென்றும், கார்யதர்சிப்பதவியைப்பெறும் நோக்கத்துடன் அவர் இன்று சிலரை மெம்பராக்கிக்கொண்டு வந்து சூழ்ச்சி செய்திருப்பதாயும் ஸபையில் சப்தம் கிளம்பியது. இச்சமயம் கூட்டத்தை ஒத்தி வைக்கும்படி ஸ்ரீமான் மஹாலிங்கய்யர் பிரேரேபித்தார். சிலர் ஆக்ஷேபித்தனர். அக்கிராஸனாதிபதி தமது அதிகாரத்தைச்செலுத்தி கூட்டத்தை ஒத்தி வைக்க வேண்டுமென்று வேறு சிலர் சொன்னர்கள். அதன்மேல் தலைவர் கூட்டத்தை வேறு தேதிக்கு ஒத்தி வைத்தாக்கலைத்துவிட்டார். கூட்டம் கலைந்தது.

இச்சமயம் கார்யதர்சி, ஸபையின் கணக்கு புஸ்தகங்கள் முதலான ரிகார்டுகளை எடுத்துக்கொண்டு போக முயற்சித்தார். அதைப்பலர் தடுக்கவே, கார்யதர்சி ஸபை ஸம்பந்தமற்ற வேறு மனிதரிடம் அவைகளைக்கொடுத்துவிட்டு வெளியேறப் பார்த்தார். கடைசியாக அவரிடமிருந்து சில ரிகார்டுகளே கைப்பற்ற முடிந்தன. மற்ற ரிகார்டுகளை அவர் கொண்டு போய் விட்டார். இம்மாதிரி அன்று நடந்த கார்யதர்சியின் விபரீதச்செய்கைகளை யாவரும் வெறுத்துக் கொண்டு வீடு திரும்பினர்.

ஒத்திவைத்த மீட்டிங் கூடியசீக்ரம் நடந்து ஸபைநிர்வாஹிகளை தேர்ந்தெடுக்க ஏற்பாடாகிவருகிறது.

நமது நிருபர்.

## திப்பிராஜபுரம்.

### பிர்ம்மவித்யாஸபா.

சென்ற வைகாசி-மீ 1உக்குச் சரியான 14—5—38ல் சனிக்கிழமையன்று ஷை ஸபையில் ஸ்ரீமடம் ஆஸ்தானவித்வான் மகோபதேசக கவிரத்னம் பிரும்மஸ்ரீ ப. பஞ்சாபகேச சாஸ்திரிகளவர்கள் பக்தியோகத்தைப்பற்றி உபன்யஸித்தார்கள். அந்த உபன்யாஸத்தில் பாரதம், பாகவதம், சிவானந்தலகரி, கீதை மற்றுமுள்ள புராணங்கள் முதலானவைகளிலிருந்தும் சிறந்த சில வசனங்களை மேற்கோளாக எடுத்துக்காட்டி அவைகளின் கருத்தையும் நன்கு வெளியிட்டு ஸபையோர்களின் மனதை ஸ்ரீ பகவத் பக்தியில் நன்கு கவரும்படி செய்தார்கள். சிவானந்த லஹரியிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு சுலோகத்திற்குக் கூறப்பட்ட விசேஷமான 4 விதமான அர்த்தங்களைக்கேட்டு ஸகல ஜனங்களும் ஆச்சரியப்பட்டு மிகவும் ஸந்தோஷித்தார்கள். இவ்விதம் வெகு சிறப்பாய் அன்றுதினம் உபன்யாஸம் முடிவுபெற்று வழக்கம்போல் ஸ்ரீ பகவத் பிரஸாதங்களும் ஸமர்ப்பிக்கப்பட்டன.

பிறகு வைகாசி 8 (21—5—38) சனிக்கிழமையன்று ரெங்கநாதபுரம் பிர்மஸ்ரீ ஸ்ரீனிவாஸசாஸ்திரியாரவர்கள் இவ்வூரில் விஜயம்செய்து ஸ்ரீ ராமாயணம், பாகவதம் இந்த கிரந்தங்களில் 6, 7 உபன்யாஸங்களும் முடிவில் ஷை பிர்மவித்யாஸபையில் குசேல உபாக்கியானமும் உபன்யஸித்து ஸகல ஜனங்களுக்கும் அதிகமான திருப்தியையும் ஸந்தோஷத்தையும் உண்டுபண்ணினர்கள். பிறகு ஷை சாஸ்திரியாரவர்களுக்கு அசேஷ மகாஜனங்களும் விசேஷ மரியாதைசெய்து கௌரவப்படுத்தினர்கள்.

வைகாசி-மீ 13உ (26-5-38) வியாழக்கிழமை முதல் ஷை பிர்மவித்யா ஸபையின் சார்பாக ஸ்ரீ காஞ்சீகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கரபகவத்பாதாசார்யஸ்வாமிகளவர்களுடைய அனுக்கிரகத்தை முன்னிட்டு இந்தக் கிராமவாஸிகளான அசேஷ ஆஸ்திக மகாஜனங்களின் பிரார்த்தனைக் கிணங்கி ஷை ப. பஞ்சாபகேச சாஸ்திரியாரவர்களால் ஹரிச்சந்திர உபாக்கியானம் என்கிற புண்ய சரித்திரம் ஆரம்பம் செய்யப்பட்டு இரவு 8 மணிமுதல் 10 மணி வரையில் நடைபெற்று வருகின்றது. ஸகல ஜனங்களும் சிரத்தையாய் வந்து ஷை புண்ய கதையை பக்தியாய் சிரவணம் செய்து ஆனந்தத்தை அடைந்துவருகிறார்கள். இவ்விதமே ஒவ்வொருநாளும் எல்லா ஜனங்களும் வந்து இப்புண்ய சரிதத்தைக் கேட்டு ஸ்ரீ பகவத்கிருபைக்குப் பாத்திராளாகி மேன்மேலும் சிரேயஸ்ஸை யடைய வேண்டுமாய்க் கருணைக்கடலாய் விளங்கும் ஸ்ரீ கண்ணபிரானைப் பிரார்த்திக்கின்றோம்.

ந. நி.

## ஆலயப் பிரவேசக் கண்டனம்

## சிவகங்கை.

ஆஸ்திக மகா ஜனங்களின் கூட்டம்.

1-6-38-ல் பிரும்மஸ்ரீ, சுந்தர சிரௌதிகள் அவர்கள் அக்ராஸனாதிபத்தியத்தின் கீழ் நடைபெற்றது அதில் நடந்த தீர்மானங்கள்:-

1. ஸமீபத்தில் தேக வியோகமடைந்த புரொபசர் சுந்தரராமய்யரின் ஆஸ்திக சிரத்தையை மிகவும் பாராட்டுவதுடன், அவர் தேக வியோகமானதைப்பற்றி மிகவும் அநுதாபிக்கிறது.

2. கனம் M. C. ராஜாவால் சட்ட சபையில்கொண்டு வரப்போகிற பஞ்சம ஆலய பிரவேச மசோதாவானது, கோவில் நிர்மாணாதிகள், ஆலய பூஜைகள், தர்சனாதிகள் இவைகளுக்காக ஏற்பட்ட ஆகம சாஸ்திரங்களின் மூலமாக பூர்ணமாக நிஷேதிக்கப்பட்டும், அநுபவத்தில் கொஞ்சமேனும் பரம்பரையாய் ஏற்பட்ட ஆசாரத்திற்கு, ஸம்மதமில்லாமலும், முற்றிலும் விரோதமாய் இருப்பதாலும், அதை எக்காரணத்தையிட்டும் சட்டமாக ஆக்கக் கூடாதென்று தீர்மானிக்கிறது.

3. மேற்சொன்ன இரண்டு தீர்மானங்களையும், "ஆர்யதர்மம்" போலொற்ற தர்ம சாஸ்திர பிரசார பத்திரிகைகளுக்கு தெரிவிக்கும்படி சிவகங்கை வக்கீல், K. ஹரிஹர அய்யருக்கு இந்த ஸபை அநுமதிக்கிறது.

4. மேலே சொல்லிய 2-வது தீர்மானமாகிய ஆலயப் பிரவேசம் அந்த்யஜர் முதலிய பஞ்சமர்களுக்கு கூடாதென்ற விஷயத்தை கோவில் டிரஸ்டீ சிவகங்கை ராஜா அவர்களுக்கு தெரிவிக்கும்படி இந்த ஸபை சிவகங்கை வக்கில் K. ஹரிஹரய்யரை அநுமதிக்கிறது.

K. ஹரிஹர அய்யர்.



# வாரக்குறிப்புகள்.

(ஸ்ரீ வத்ஸ. வெ. வேங்க. சர்மா.)

அரியவேலை!! கல்கத்தா ஸர்வகலாசாலை ஓர்லக்ஷம்ரூபாய் செலவுசெய்து இதுவரை அச்சிலில்லாத அபூர்வ ஸம்ஸ்கிருத நூல்களை அச்சிட முயற்சிக்கிறது. ஏனைய கலாசாலைகளும் இத்தகைய வேலையிலீடுபட்டால், இம்மை சுகத்திற்கும் வழியுண்டு.

அபூர்வ நதி!! வங்காள பிர்ஹிபூரில் சிலபக்தர்களுக்கு ஸ்வப்னத்தில் ஓர்நதிதோன்றி தன்னிடம் ஸ்நானம்செய்து வேண்டியவரங்களைப்பெறலா மென்றதாம். அதுமுதல் ஆயிரக்கணக்கான ஆஸ்திகர் ஆங்கு மூழ்கி வரங்களைப் பெறுகின்றனர். பி. எஸ். ஆர். அங்கு அதிகமானவண்டி விடுகின்றனர்.

தென்னாட்டு பாக்யம் திரும்புகிறது! பற்பலஅரிய தர்மோபதேசங்களைச் செய்து கொண்டு ஸ்ரீகாஞ்சிகாமகோடி பீடாதிபதி மஹாஸ்வாமிகள் விரைவாக தமிழ்நாட்டை நாடிவருகிறார்கள். சித்தூர் மாஜூரஜனங்கள் சாதுர்மாஸ்ய பூஜைக்கழைப்பாரெனத் தெரிகிறது.

மஹந்து கண்டிக்கிறார்! பம்பேயைப் போல் பஞ்சாபும் ஆலயவிஷயமான ஓர் சட்டம் செய்யமுயல்கிறது. அதைபலமாக மஹந்துக்கள் எதிர்க்கின்றனர்.

ஆழ்ந்தயோசனை யில்லை! பம்பேஆலயத் திருத்த சட்டத்திற்கு சம்மதித்த ராஜப் பிரதிநிதி காங்கிரஸ்முகநகையை நோக்கினரே தவிர அதனால்இந்தியா விற்கும் பிரிடிஷ் ஸாம்ராஜ்யத்திற்கும் விளையும் கேட்டை கவனிக்கவில்லை.

குடையும் தடியும்கோடு! காரைக்குடி நகரஸபை குப்பைவாரும் தோட்டிகளுக்கு செருப்பு தானம்செய்ய தீர்மானித்தது. என்னபோலிகருணை.

தகவலைக்கூறின் பயனுண்டு! மதுரையில் ஓர்ஸநாதன தர்மகலாசாலை ஆரம்பிக்கப்பட்டது. என்னென்னபாடம் எப்படிக்கற்பிக்கப் படுகிறதென பிரசுரித்தல் நலம்.

ஒன்று கூட்டினல் செலவு குறையாதா? ஒவ்வொரு மந்திரியும் உபசாரப்பத்ரம் பெற ஆவலுடனிருக்கின்றனர்! ஒவ்வோர் ஸபையும் அவர் தயவைப்பெற ஆவலுள்ளவை! ஆதலின் தனித்தனி அதிக வீண் செலவு செய்வதை விட ஒன்ருக 10 பேரையும் அழைத்து உபசரித்தால் பொதுப்பணம்வீணுகாது!

மறந்து விட்டனரா? ஓர்கிளர்ச்சியை பலாத்காரத்தால் அடக்க முயற்சித்தால் அது வளருமென்பதை மறந்து ஹிந்தி சத்யாக்ரகிகளை சிக்ஷிப்பது நீதியா?

ஸஹவாஸ தோஷம்! ஓரிந்திய அரசர் நமது சக்ரவர்த்தி அரண்மனை போல் ஒன்று கட்ட முயற்சிப்பதை பத்திரிகைகள் நகைக்கின்றன. இம்மையே மோக்ஷமென கற்பித்தது யார்?

நன்கு நிரைய விதிக்கலாம்! புகையிலைக்கு வரி விதிக்கலாமா என சென்னை அரசாங்கம் யோசிக்கிறதாம்! குடிக்கடுத்தபடிகுடியைகெடுக்கும் இதற்கு அதிகவரி விதித்தால் நோய் அகலும். வண்டிகளில் புகை அகலும்!

வேண்டாம்! வேண்டாம்! தேசிய ஸபை பல துறைகளில் தலை நீட்டிப் போகிறது! ஜமீன்தாரித்வம் ஒழிய என்று பலத்த பிரசாரம் செய்வது ஆபத்து!

பெண் போலீஸ்! கான்பூரில் வேலைநிறுத்த கிளர்ச்சியிலீடுபட்டுபெண்களைசிக்ஷிக்கப்பெண் போலீஸ் நியமிக்கப்பட்டது. இந்த வேலைக்கு வரும் பெண்கள் பெண்கள்தானு?

கைக்குத்தலரிசிக்கு 5 மிஷின்! ராமநாதபுரம் போர்ட் கைகுத்தலரிசியை பிரசாரம் செய்ய 100ரூ செலவு செய்து ஐந்து மிஷின் வாங்குகிறது என்னே அறியாமை! கூலியில்லாமல் பெண்கள் கதா மிஷின் எதற்கு?

## காங்கிரஸ் நிர்வாகத்திலும் ஊழல்?

மத்யமாகாணத்திலுள்ள காங்கிரஸ் மந்திரிகளின் நிர்வாஹம் பொது ஜனங்களுக்குப் பிடிக்கவில்லை. முக்யமாகப் படித்த வகுப்பாராகிய வக்கீல்கள் தற்போதிய மந்திரி ஸபையிடம் மிகுந்த அதிருப்தியடைந்திருக்கிறார்கள். வக்கீல் ஸங்கத்தார் கூட்டம் நடத்தி, காங்கிரஸ் மந்திரி ஸபையிடம் நம்பிக்கையில்லையென்றும் அது ராஜிநாமா செய்ய வேணும், அல்லது திருத்தி யமைக்கப்பட வேணுமென்றும் ஏகமனதாகத் தீர்மானித்தார்களாம். இவ்விஷயம் பத்திரிகைகளில் வெளியாகியிருக்கிறது.

வக்கீல் ஸங்கம் இம்மாதிரி தீர்மானித்ததற்குக் காரணம் முக்யமாய் கவனிக்கத் தக்கது.

அந்த மந்திரி ஸபையார் உத்யோக வேட்டையில் கண்ணுள்ளவர்களாயிருப்பதாயும், தங்கள் இஷ்ட, மித்திர, பந்துக்களுக்குப் பக்ஷபாதமாக உத்யோகம் கொடுப்பதாயும், இதனால் லஞ்சம் முதலிய பல அநீதிகள் தலைகாட்டிவிட்டனவென்றும், நிர்வாஹம் ஊழலாகிவிட்டதாயும் வக்கீல் ஸங்கத் தீர்மானத்தில் சொல்லப்பட்டுள்ளது. வக்கீல்கள் தீர விசாரிக்காமலும், பொறுப்பில்லாமலும் இவ்வளவு பெரிய புகாரை பஹிரங்கப்படுத்த முன்வந்திருக்க நியாயமில்லை. ஆதலால் இதில் உண்மையிருக்க வேண்டுமென்பதில் ஸந்தேஹமில்லை. காங்கிரஸ் நடத்திய விசாரணையிலிருந்தும் இவை உண்மையென்பது வெளிப்பட்டிருக்கிறது.

காங்கிரஸ்காரர் தேவலோகத்திலிருந்து நேரில் இங்கு இறங்கியவர்களென்றும் அஸத்யமோ, தவறோ அவர்களிடம் அணுகாதென்றும், அவர்களுடைய ஆக்ஷியில் லஞ்சம், உத்யோகவேட்டை முதலியவை தலைக்காட்டாவென்றும், உலகிற்கே அவர்கள் ஸன்மார்க்க நிர்வாஹ வழிகாட்டிகளாயிருப்பார்களென்றும், பெருமை பேசியவர்களும், இதைக்கண்டு பிரமித்தவர்களும் இப்போது என்ன பதில்சொல்லுவார்களோ? மனித ஸ்வபாவத்தில் இயற்கையாயுள்ள துர்க்குணங்கள் காங்கிரஸ் காரரென்பதற்காக விலகிப்போகாவென்பதற்கு இதுவும் ஓர் ருஜு.

ஸ்வய நலத்தை வெறுத்து, உலக க்ஷேமத்திற்காகவே வியவஸ்தைகளையும், நியமங்களையும் ஏற்படுத்தி இன்றுவரையில் அமைதியாக நம்மைக் காத்துவந்த நம் முன்னோர்களின் வழியை நாகரிகர்கள் பழிக்கலாமேயன்றி எவ்வளவு ஜன்மமெடுத்தாலும் அவர்களைப் போல் ஆகிவிடமுடியாது என்பது திண்ணம்.

## கட்டாய ஹிந்தி எதிர்ப்பு.

### ஸ்ரீ ஸுபாஷ் போஸின் தலையீடு.

சென்னையில், கட்டாய ஹிந்தி எதிர்ப்புக் கக்ஷியார் செய்துவரும் கிளர்ச்சியின் கருத்தையும் விவரத்தையும் தமக்கு அறிவிக்குமாறு காங்கிரஸ் தலைவர் ஸ்ரீமான் போஸ் அந்தக்கக்ஷியாருக்கு எழுதியிருக்கிறாராம். அதன் மேல் அவர்கள் ஓர் பதிலைத் தயாரித்து அவருக்கு அனுப்பியுள்ளார்கள். ஸ்ரீமான் போஸ் சென்னைக்கு வரவேண்டுமென்றும் கட்டாய ஹிந்தியை எடுக்காவிட்டால் கிளர்ச்சி அடங்காதென்றும் அதிகரிக்குமென்றும் அதில் சொல்லப்பட்டிருக்கிறது.

# மதிப்புரை

## ஸ்தோத்ர ரத்னவளி.

ஸ்தோத்ரரத்னவளி என்னும் இப்புஸ்தகம் S.I Ry இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் ஆர் சுப்பரத்னயய்யரவர்களால் சிவாலயங்களில் சென்று தெரிசனம் செய்யவேண்டிய முறையில் விக்னேஸ்வரர்முதல் சண்டேசுவரர் வரையிலுள்ள மூர்த்திகளின் பெருமைகளை விளக்கும் ஸ்தோத்திரங்களைத்திரட்டி அச்சிடப்பட்டிருக்கிறது புஸ்தகம்(1க்கு8 ஸைஸ்)அழகான வெள்ளை கிளேஸ் பேப்பரில் கிரந்தம், நாகரம், தமிழ் முதலியமூன்றுபாஷையிலும் ஒன்றன்பின்ஒன்ருய் யாவரும் பாராயணமாக வாசிக்குமாறு, நல்ல அச்சில் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இப்புஸ்தகம் ஸ்ரீமான் புதுக்கோட்டை ஸ்டேட் விராலூர், டி. ராமசேஷய்யர் அவர்களால் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. மதுரஸ் பிரஸிடென்ஸி காலேஜ் வித்யா சாகர வித்யா வாசஸ்பதி புரொபஸர் பி. பி. எஸ். சாஸ்திரி பி.ஏ, (ஆக்ஸ்வர்டு) எம்.ஏ, அவர்களால் முன்னுரை எழுதப்பட்டிருக்கிறது. தர்மப்பற்றுள்ளவர்களும், தெய்வவழிபாட்டில் சிறந்து விளங்குபவர்களுமான நம்மவர் ஒவ்வொருவருக்கும் மிகவும் உபயோகமானது. மேலும் இந்தப் புஸ்தகத்தின் விற்பனையின் தேஜம் புதுக்கோட்டை ஸமஸ்தானம் விராலூர் கிராமத்திலிருக்கும் ஸ்ரீநிவாசப் பெருமாள் கோவில் ஜீர்ணோத்தாரணத்திற்கு உபயோகப்படுமாதலால் நேயர்கள் ஒவ்வொருவரும் ஒரு புஸ்தகம் வாங்கி ஆதரித்து பொருளுதவி செய்யப் பிரார்த்திக்கிறோம்.

இப்புஸ்தகத்தில் கடைசி பக்கங்களில் யாவருக்கும் உபயோகமான பலபொது விஷயங்கள், வருஷவாரிப்பெயர், நக்ஷத்திரங்கள் இன்னும் அநேக விஷயங்கள் அடங்கியுள்ளது. மிகவும் உபயோகமானது.

புஸ்தகம் ஒன்று விலை நான்கு அணா.

புஸ்தகம் கிடைக்குமிடம் :—

S. சுந்தரேசய்யர் B. A., L. T,
C/o. R. சுப்பரத்னம் அய்யர்,
ஆண்டார்தெரு, தெப்பக்குளம் P.O.
திருச்சினாப்பள்ளி.

V. S. சுவாமிநாதன்,
பப்ளிஷர் & புக்செல்லர்,
மேற்கு டவர் தெரு, மதுரை.

## திருவள்ளுவர் பட ஊர்வலம்

## போளத்தில் ஆக்ஷேபம்

### 144வது, பிரயோகம்.

நன்னிலம்தாலுக்கா போளத்தில் சிலர் சேர்ந்து, திருவள்ளுவர் படத்தை எடுத்துக்கொண்டு முக்கியவீதிகளில் ஊர்வலம்நடத்த ஏற்பாடுசெய்தனர். ஆனால்இந்தப் புதியவழக்கத்தை ஜாதிஹிந்துக்கள் ஆக்ஷேபித்தனர். இதனால்கலஹம் நேரிடுமென்றும், ஜாதிஹிந்துக்களுக்கும் தீண்டாதாருக்கும் மனஸ்தாபமும் முற்றுமென்றும் மாஜிஸ்ட்ரேட்டிடம் மனுக் கொடுக்கப்பட்டது. இதையநுஸரித்து 144வது பிரிவுப்படி ஊர்வலத்தைத் தடுத்து உத்திரவு போடப்பட்டது.

## பீஹாரில் மதுவிலக்கு மசோதா.

### கிறிஸ்தவர்களின் மத உரிமை.

பீஹாரில் காங்கிரஸ்மந்திரிகள் கொண்டுவந்துள்ள மதுவிலக்கு மசோதா விஷயமாகக் கிறிஸ்தவர்கள் செய்துவந்த கிளர்ச்சிக்கு மந்திரிகள் இணங்கிவந்தனர்.

இதன்பயனாக மாதாகோவில்களில், நிவேதனம் செய்வதற்காகச் சாராயத்தை உபயோகிக்க கிறிஸ்தவர்களுக்கு அநுமதி கொடுக்கப் பட்டிருக்கிறது. இதுஒரு மதஉரிமையாகையால் மந்திரிகள் இதில்பிரவேசிக்க மாட்டார்களென பிரதமமந்திரி உறுதியும் கூற நேர்ந்தது.



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

# ஆர்யதர்மம்.

பகுதான்ய-௵ வைகாசி-௴ 27௳

## புதிய கக்ஷியே வேண்டும்.

தேசத்தில் தற்காலமுள்ள நிலைமையில் ஸநாதந தர்மிகள் காங்கிரஸுக்குள் புகுந்து வேலை செய்வதா, அல்லது வெளியில் தனியான ராஜீயத் திட்டத்துடன் புதிய கக்ஷியமைப்பதாவென்ற விஷயப்பற்றி ஆழ்ந்த ஆலோசனை கிளம்பியிருப்பதை ஏற்கனவே நாம் பிரஸ்தாபித்துள்ளோம். இவ்விஷயமாக காங்கிரஸில் சேருவதை, ஆதரிக்கும் கனவான்களுடைய வாதங்களை நமது தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறோம். இதன் மேல் வேறு சில கனவான்கள், காங்கிரஸில் சேராமல் தனிக் கக்ஷியமைப்பதே உசிதமென நமக்கு எழுதி வருகிறார்கள். அவர்களில் ஒரு கனவான், ஸநாதந தத்வங்களை அடிப்படையாகக்கொண்டு ஒரு ராஜீயத் திட்டத்தை ஏற்படுத்தி தனியான கக்ஷியை அமைக்கும் விஷயமாக உருவான சில யோஜனைகளை எழுதியிருப்பதுபலருடையகவனத்தைப் பெறுவது அவச்யமென்று நினைத்து அவைகளின் ஸாராம்சத்தை இங்கு குறிப்பிட விரும்புகிறோம்.

அந்த கனவான் வெளியிட்டுள்ள ஆலோசனைகளில் அந்தந்த மதாசார விஷயமான பாதுகாப்புத் திட்டம் அடங்கியிருப்பதுடன் பிரஜைகளுக்கு மிக்க அநுகூலமான ராஜீயத் திட்டங்களும் இருக்கின்றன.

முதலில் அவர் காங்கிரஸில் நாம் சேருவதால் உண்டாகக்கூடிய சில சிரமங்களை வெளியிட்டிருக்கிறார் காங்கிரஸில் சேரும் ஸநாதநிகள் அதன் உறுதிமொழிகளுக்குக் கட்டுப்பட்டு இருக்கவேண்டி வருவதுடன், ஒழுங்கு நடவடிக்கைக்கு ஆளாகாமலும் இருக்க வேண்டுமல்லவா? அஸாத்யப்பட்டாதென்று அவர் நினைக்கிறார். ஸநாதநத்திற்கு விரோதமாயுள்ள திட்டங்களுடன் ஒருவர் முனிஸிபாலிடிக்கோ, சட்ட ஸபைக்கோ காங்கிரஸ் ஆதாவில் அபேக்ஷகராக நின்றால் ஸநாதநிகள் அவருக்கு வோட்போடுவதா, இல்லையா? வோட் செய்தால் ஸநாதந விரோதம். செய்யாவிட்டால் காங்கிரஸ் விரோதம். அப்போது காங்கிரஸ்காரர்கள் இவர்கள்மீது ஒழுங்கு முறை மீறிய குற்றத்திற்காக நடவடிக்கை எடுக்கக்கூடும். இம்மாதிரி காங்கிரஸில் சிக்கிக்கொள்ளுவதால் கார்யஸித்தி ஏற்படாததுடன் கௌரவக் குறைவும்நேரும். காங்கிரஸ் ஸ்தாபனங்களுக்கு நடக்கும்எலெக்ஷன்களிலும் இந்த சிரமம் நேரக்கூடியதே.

அபேதவாதிகள் காங்கிரஸில் சிறுபான்மைக் கக்ஷியாராக ஸம்பந்தப்பட்டிருப்பதற்கும், நமக்கும் மிகுந்த வித்தியாஸமுண்டு. அவர்களுக்கு, ராஜீயப் பொருளாதார விஷயம் தவிர, மதாசார விஷயத்தைப் பற்றிய பிரச்னையே நம்மைப்போல் ஏற்பட அவகாசமில்லை. ஆதலால் காங்கிரஸ் சட்டங்களுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு ஸநாதநிகள் காங்கிரஸில் இருப்பது ஸாத்யப்படாதென்று அவர் நிரூபணம் செய்கிறார்.

புதிதாக அமைக்கப்படும் கக்ஷியில், ஒரு மனிதனுக்கு அவனுடைய ஒவ்வொரு சரீர அவயவங்களும் எப்படி பரஸ்பரம் ஒத்துழைத்து வாழ்வைக் காக்க உபயோகப்படும்படி அமைக்கப்பட்டிருக்கின்றவோ, அதுபோல் ஜாதி பேதமும், பரஸ்பரம் ஒற்றுமையுடன் மனித ஸமூஹ க்ஷேமத்திற்கு அவசியமென்பது அங்கீகரிக்கப்படும். மேலும் இதே கொள்கையை முன்னிட்டு கூட்டுக் குடும்ப முறைகள் அவசியமென்று ஒப்புக்கொள்ளுவதுடன் அந்தக் குடும்ப தர்மத்திற்கு, விவாஹாதிகளும், பிரௌடையாகாத பெண்களின் பால்ய விவாகமும் ஆவசியகமென்றும், ருது சாந்தி, அல்லது கர்ப்பதான ஸம்ஸ்காரத்தை யுக்தவயது வந்தபிறகு செய்யலாமென்றும், இந்தக் கொள்கையானது ஹிந்துக்கள், அல்லது ஸநாதநிகள் மட்டுக்குமன்றி உலகத்திற்கே உபயோகப்படக்கூடிய ஓர் பொதுக் கொள்கையாகவற்புறுத்த வேண்டுமென்றும் சொல்லப்படுகிறது. இத்துடன் மத விஷயங்களில் சட்டம் செய்வதையும் இந்தக் கக்ஷி ஆக்ஷேபிக்கும். ஸாதாரண பிரஜா உரிமைகளான, ஸொத்து பாத்யம், நில, பண பாத்யம் முதலானவைகளுக்கு எவ்வித பாதகமும் ஏற்படக்கூடாது.

முக்யமாக ராஜாங்க வரி விகிதமானது பழைய சாஸ்திர விதிப்படி எவ்வழியிலும் ஆறில் ஒரு பங்குக்கு மேற்படக்கூடாதென்ற விஷயம் இக்கக்ஷியின் கொள்கையில் பிரதானமாயிருக்கும். இந்த வரி வருமானத்திற்கு ஏற்றபடி செலவினங்களைக் குறிப்பிட வேண்டுமேயல்லது அதிகச் செலவை ஏற்படுத்திக்கொண்டு அதற்காக அதிக வரிகளை விதிப்பதென்பது கண்டிப்பாக தடுக்கப்படும் வரையறுக்கப்பட்ட வருமானத்திற்குள் பட்டதாகவே செலவு திட்டமிருக்குமேயல்லது இஷ்டப்படி வரி உயர்வு இருக்காது. இம்மாதிரியும், வேறு பலவும் யோஜனைகளைக் கொண்டு புதிய கக்ஷி அமைப்பதே உசிதமென அந்த கனவான் வற்புறுத்துகிறார். "கன்ஸர்வேடிவ் கக்ஷியொன்றை அமைப்பது விஷயமாக ஏற்கனவே வெளிவந்த அபிப்பிராயங்களையே இது பெரும்பாலும் தழுவியதாயிருக்கிறது. இதில் கண்ட விஷயங்களையும் நமது தலைவர்கள் யோசிக்கக் கடவர். முக்யமாகபம்பாயில் 12௳ யன்று நடக்கப்போகும் அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கக் கார்யக்கமிட்டியார் இவ்விஷயங்களைத் தீர ஆலோசித்துத் தக்க முடிவு செய்வார்களென்று நம்புகிறோம்.

## குறிப்புகள்.

### வைஸ்ராயின் செய்கை.

பம்பாய் ஆலயப் பிரவேச மசோதாவுக்கு கனம் வைஸ்ராய் அவர்கள் தமது ஸம்மதியை அளித்துவிட்டார். இந்த மசோதா நிறைவேறி வெகு நாளாகியும் இதுவரை அவர் ஸம்மதியளியாதிருந்ததிலிருந்து ஆஸ்திகர்களுக்குச் சிறிது நம்பிக்கையிருந்து வந்தது. அதுவும் இப்போது நசித்துவிட்டது. இவ்விஷயமாக இந்தியா கவர்ன்மெண்டார் ஒரு ஸ்திரமான கொள்கையுடன் இருப்பார்களென்று நினைத்தோம். ஆலயப் பிரவேச விஷயமாகப் பொது ஜனங்களுடைய திட்டமான அபிப்பிராயமென்னவென்பது இந்தியா கவர்ன்மெண்டாருக்கு நன்கு தெரிந்ததே, இவ்விஷயமாக அவர்கள் தேசமெங்கும் சேகரித்த அபிப்பிராயங்களை கனம் வைஸ்ராய் அறியாதவரன்று. ரங்கய்யர் மசோதாவை எதிர்த்து அப்போது இந்தியா கவர்ன்மெண்டார் கையாண்ட கொள்கையென்ன? இதில் சட்டம் செய்வதைத் தாங்கள் அநுமதிக்கமுடியாதென்று ஸ்பஷ்டமாக அவர்கள் சொல்லவில்லையா? 1934-ம் வருஷத்திய இந்தியா கவர்ன்மெண்ட் நிர்வாஹ யாதாஸ்தில், காந்திஜீயின் ஆலயப் பிரவேச இயக்கத்திற்கு தேசத்தில் பெருத்த ஆக்ஷேபம் இருப்பதாக அவருடைய சுற்றுப் பிரயாணத்திலிருந்தே வெளியாகிவிட்டதென்றும், ஆலயப் பிரவேச நிமித்தமாக தேசத்தில் ஜனங்களுக்கு காந்திஜீயிடம் மிகுந்த கோபமுண்டாகிவிட்டதாயும் கவர்ன்மெண்டார் வர்ணித்திருக்கிறார்கள். இவ்வளவு தெளிவாக நிலைமையை அறிந்த இந்தியா கவர்ன்மெண்டார் இப்போது காங்கிரஸ் மந்திரிகளின் அநீதியான செய்கைக்கு ஆதரவு அளித்து உடந்தையாயிருப்பது நியாயமா?

ஆயினும் கனம் வைஸ்ராய் என்ன செய்வார்? நெருக்கடியையும், ராஜீநாமாவையும் காட்டி பயமுறுத்திவரும் காங்கிரஸ் மந்திரிகளை விரோதித்துக் கொள்ள முடியுமா? பீஹார் நெருக்கடி ஐக்ய மாகாண நெருக்கடி, ஒரிஸா நெருக்கடி, சென்னை நெருக்கடிபோன்ற பல ஸந்தர்ப்பங்களை கனம் வைஸ்ராய் ஸமாளிக்கவேண்டியிருந்தது. ஆலயப் பிரவேசமோ காந்திஜிக்கு உயிர்போன்றது. இதில் வைஸ்ராய் விசேஷாதிகாரம் செலுத்தினால் காந்திஜீயே முன்னணியில் நின்று சண்டைக்குப் புறப்படுவார்? இதை வைஸ்ராய் எப்படி ஸமாளிப்பது? ஆகையால்அமுமூஞ்சிகளான ஸநாதநிகளையும், நீதியின் உன்னதமான போக்கையும்கூட அவர் மதியாமல் காந்தியின் சண்டித்தனங்களுக்கு பயப்பட நேர்ந்ததுபோலும்? இப்படிச் செய்வது நீதியுடன் நிர்வாஹம் நடப்பதாகச்சொல்லிக் கொள்ள இடமளிக்குமா?

வைஸ்ராயின் ஸம்மதியிலிருந்து மற்ற மாகாண ஆலயப் பிரவேச மசோதாவின் நிலையும் நிர்ணயிக்கப்பட்டு விட்டதாக ஆகிறது. அவைகளுக்கும் வைஸ்ராயர் ஸம்மதி அளித்துவிட்டதாக நினைக்கத் தடையில்லை. காங்கிரஸ் கூச்சலுக்கு அஞ்சி பிரஜா உரிமையையும் நீதியையும் நாசமாக்கியபோதிலும் இந்த அக்ரமத்தை நிவிர்த்திசெய்ய நல்ல நிர்வாஹம் ஏற்படும் ஒரு காலத்தை வைஸ்ராய் எதிர்பார்ப்பதுபோல் நாமும் எதிர்பார்ப்போம்.

### குடிப்பதிலும் மத உரிமை.

பீஹார் மாகாணச் சட்டசபையில் காங்கிரஸ் மந்திரிகள் மதுவிலக்கு மசோதாவை நிறைவேற்றிவிட்டார்கள். இந்த மசோதாவைப்பற்றி அங்கு கிறிஸ்தவ மதத்தினர் பெரிய கிளர்ச்சிசெய்துவந்தனர். அதனால் மசோதாவை நிறைவேற்றமுடியாமலிருந்து வந்தது. மாதாகோவில்களில் கிறிஸ்தவ மதத்தினர் நிவேதனத்திற்காகச் சாராயத்தை உபயோகிப்பது வழக்கமாயிருக்கிறது. இந்த மசோதாவில் அதற்கு விலக்கு ஏற்படுத்தவேண்டுமென்று கிறிஸ்தவர்கள் வாதாடினர். மந்திரிகள் ஆரம்பத்தில் இதற்கு இணங்காவிடினும் இப்போது இணங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது,



கனம், பிரதமமந்திரி இதைப்பற்றிப் பேசுகையில், காங்கிரஸானது எந்த மதத்தினரின் உரிமையிலும் தலையிடுவதில்லையென உறுதிகொண்டிருப்பதாயும், அதையனுஸரித்து மத கார்யங்களுக்குச் சாராயம் உபயோகிப்பதைத் தடுக்கத் தாங்கள் விரும்பவில்லையென்றும் கம்பீரமாகப் பேசிவிட்டார். இந்தக் கொள்கை எவ்வளவு உண்மையென்பது யாவருமறிந்ததே. ஆனால் ஒன்று. கிறிஸ்தவர், மஹம்மதியர் மத விஷயத்தில் இந்தக் கொள்கை உண்மையே. ஹிந்துக்களின் மத விஷயத்திலோவென்றால் வேறுதான்.

கள், சாராயக்குடி மிக்க ஆபாஸமானதும், தீங்கிழைக்கும்படியானதுமான வழக்கமென்பது யாவரும் ஒப்பமுடிந்த விஷயம். இந்த ஸமூஹக் கெட்டவழக்கத்தை ஒழிக்க வேண்டியதிலும் அபிப்பிராய பேதமில்லை. ஆனால் மதத்தின் பெயரால் மட்டும் குடிக்கலாமா? அதையும் தடுத்து, மதத்தையே சீர்திருத்த வேண்டாமா? காங்கிரஸ் மந்திரிகள் ஏன் தீரமாக இந்த வேலையைப் பிரசாரமூலம், சட்டமூலமும் செய்யக்கூடாது? மதத்தின் பெயரால் அக்கிரமங்கள் செய்யக்கூடாதென்று கூச்சலிடுகிறவர்கள் ஏன் இந்த மத ஸம்பந்தமான குடியைத் தடுக்க பிரசாரம் செய்யவில்லை. மதத்தின் பெயரால் பிராணி பலிகூடாதென்று எங்கும் கூச்சல் போடவில்லையா? இதற்குச் சட்டம் செய்யத் துணியவில்லையா? அந்தப் பேர்வழிகள் மதத்தில் குடிப்பதையும், அதற்கு காங்கிரஸ் மந்திரிகளே பூர்ணமாக இடமளிப்பதும் விந்தையல்லவா? எல்லோருக்கும் பொதுவான நீதியுள்ள கொள்கை காங்கிரஸில் இருக்கிறதாவென்பதை அறிய இது ஓர் உதாஹரணமாகும். சென்னை மந்திரிகளும் மதத்தின் பெயரால் குடிக்கத் தந்த வஸதி செய்துகொடுத்திருப்பதை ஏற்கனவே நம்மவர்கள் அறிந்ததே.

### தேவஸ்தான டிரஸ்டிகளின் ஆக்ஷேபம்.

முன்பு ஆரியதர்மத்தில் வெளியாயிருந்த டிரஸ்டிகளைத்தவிர கீழ்க்கண்ட தேவஸ்தானங்களின் தர்மகர்த்தாக்கள் (Trustees) சென்னைசட்ட ஸபையில் ஆலோசனைக்கு கொண்டுவரப்பட்டிருக்கும் M. C. ராஜாவின் ஆலயப்பிரவேச மசோதாவை பலமாகக்கண்டித்து கனம் பிரதம மந்திரி அவர்களுக்கு மனுச் செய்து கொண்டிருப்பதாகத்தெரிகிறது.

1. புஷ்பவனேசுவர தேவஸ்தானம், பூவனூர். 2. கோடீஸ்வரசுவாமி ஆலயம், கோடிமங்கலம். 3. சொக்கநாத சுவாமி தேவஸ்தானம்,மன்னார்குடி. 4. வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம், பரவக்கோட்டை. 5. நாகநாதஸ்வாமி தேவஸ்தானம் பரவக்கோட்டை. 6. கைலாஸநாத தேவஸ்தானம் சேந்தமங்கலம். 7. வரதராஜ உன்னதபுரீசுவர தேவஸ்தானங்கள், மெலட்டூர். 8. வேதபுரீஸ்வரன் தேவஸ்தானம் தோழுந்தூர். 9. சென்னை ஸ்ரீ ஏகாம்பரநாதஸ்வாமி தேவஸ்தானம். 10. சென்னை ஸ்ரீமல்லீச்வரர் தேவஸ்தானம்.

ஜி. சங்கர நாராயண வாஜபேயர்.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.
பெஜவாடா.
Bezwada.

## ஆலயப்பிரவேச மசோதாக்கண்டனம்.

### தோழுந்தூர்.

மாயவரம் தாலுக்காவைச்சேர்ந்த தோழுந்தூர் கிரும வாசிகள் சென்னை சட்ட ஸபையில் M. C. ராஜாவினால் கொண்டு வரப்பட்ட ஆலயப்பிரவேச மசோதாவைக் கண்டித்து சென்னை கனம் பிரதமமந்திரி அவர்களுக்கும் கவர்னர், கவர்னர் ஜெனரல் பிரபு அவர்களுக்கும் கனம் Dr. ராஜன் அவர்களுக்கும் மஹஜர் செய்திருப்பதாகத் தெரிகிறது.

### வைதீஸ்வரன்கோவில்.

சீர்காழித்தாலுக்கா வைதீஸ்வரன்கோவில் கிரும ஜனங்கள் சட்டஸபையில் பிரேரேபிக்கப்பட்டிருக்கிற பஞ்சம ஆலயப்பிரவேச மசோதா இவைகளைக்கண்டித்துச் சென்னை கவர்ன்மெண்டாருக்கும் மத்தியசர்க்காருக்கும் மத விஷயங்களில் தலையிடக்கூடாதென்று அனேகங் கையெழுத்தடங்கிய மஹஜர் அனுப்பியிருக்கிறார்கள்.

### சேந்தமங்கலம்.

மன்னார்குடி தாலுக்கா சேந்தமங்கலம் கிரும வாசிகள் ஆலயப்பிரவேசமசோதாவைக்கண்டித்து மஹஜர் பிரதமமந்திரி அவர்களுக்கும் சென்னை சட்டஸபை அக்கிராஸநாதிபதி அவர்களுக்கும் மேன்மை தங்கிய கவர்னர் பிரபு அவர்களுக்கும் அனுப்பியிருக்கிறார்கள்.

### மெலட்டூர்.

பாபநாசம் தாலுக்கா மெலட்டூர் கிரும ஜனங்கள் முறையே பஞ்சம ஆலயப்பிரவேச மசோதாவைக் கண்டித்து சென்னை கவர்ன்மெண்டாருக்கும் மத்திய சர்க்காருக்கும் மத விஷயங்களில் தலையிடக்கூடாதென்று அநேகங் கையெழுத்தடங்கிய மஹஜர்கள் அனுப்பியிருக்கிறார்கள்.

### வில்லியநல்லூர்.

மாயவரம் தாலுக்கா குத்தாலத்திற்கடுத்த வில்லியநல்லூர் கிருமத்தின் மஹா ஜனங்கள் பஞ்சம ஆலயப்பிரவேச மசோதாவைக் கண்டித்தும் பால்ய விவாஹத்திருத்தச்சட்டம் இவைகளை ஆக்ஷேபித்து சென்னைப் பிரதம மந்திரி இரண்டு சட்டஸபைத்தலைவர்கள் பிரதிநிதிகள், கவர்னர், வைஸ்ராய் இவர்களுக்கு மனுச்செய்து கொண்டிருக்கிறார்கள்.

### தாராசுரம்.

கும்பகோணத்திற்கு மூன்று மைல் மேற்கேயுள்ள தாராசுரம் வாஸிகள் சட்டசபையில் ராவ்பகதூர் M. C. ராஜாவால் கொண்டு வரப்பட்டிருக்கும் ஆலயப்பிரவேச மசோதாவை மிகவும் கண்டித்து கனம் பிரதமமந்திரி அவர்களுக்கும் இன்னும் அநேக உத்தியோகஸ்தர்களுக்கும் உத்தியோக பற்றில்லாத சட்டசபை பிரதிநிதிகளுக்கும் மனு மூலம் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

### பசுபதிகோவில், ராஜேந்திரபுரம்.

தஞ்சாவூருக்கு கிழக்கேயுள்ள பசுபதி கோவில், ராஜேந்திரபுரம் கிரும வாசிகள் சென்னை சட்ட ஸபையில் ஆலோசனைக்கு வந்திருக்கும் ஆலயப்பிரவேசமசோதாவைக் கண்டித்து கனம் பிரதம மந்திரி அவர்களுக்கும் கனம் டாக்டர் ராஜன் அவர்களுக்கும் மேன்மை தங்கிய கவர்னர் வைஸ்ராய் அவர்களுக்கும் மஹஜர் மூலம் தெரியப் படுத்தியிருக்கிறார்கள்.

### மன்னார்குடி.

இவ்வூர் மஹா ஜனங்கள் அநேகங் கையெழுத்தடங்கிய மஹஜர்கள் ராவ்பகதூர் M. C ராஜாவால் கொண்டு வரப்பட்ட பஞ்சம ஆலயப்பிரவேச மசோதாவைக்கண்டித்து பிரதம மந்திரி, அகில இந்தியா சட்ட சபை அக்கிராஸநாதிபதி காங்கிரஸ் பிரஸிடெண்ட் இவர்களுக்கு மனுச்செய்து கொண்டிருக்கிறார்கள்.

## ராமநாதபுரம் ஜில்லா ஸநாதந கான்பரன்ஸ்.

(ஒரு நிருபர் எழுதுகிறார்.)

இவ்வருஷம் ராமநாதபுரம் ஜில்லா ஸநாதநதர்ம கான்பரன்ஸ் ஆத்தங்குடியில் நடத்த ஏற்பாடுசெய்து வரப்படுகிறது. அநேகமாய் 18-6-1938ல் நடைபெறலாம். மதுரை பிரம்மஸ்ரீ அட்வகேட் ராவ்ஸாஹிப் பிரம்மஸ்ரீ N. நடேசய்யர் அவர்கள் ஷை கான்பரன்ஸை திறந்து வைப்பாரென்றும் ரிடையர்ட் டிஸ்டிரிக்ட்ஜட்ஜ் பிரம்மஸ்ரீ M. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் தலைமைவஹிக்கக் கூடுமென்றும் இன்னும்பல தலைவர்கள் வந்திருந்து நடத்தி வைப்பார்கள் என்றும் தெரிகிறது.

சென்னை ராஜதானியிலுள்ள சிவக்ஷேத்திரங்களில் பெரும்பாலானவைகளுக்கு ராமநாதபுரம்ஜில்லாவில் இருக்கும் நாட்டுக்கோட்டை செட்டியார்கள் ஆகியநகரத்தார்கள் லக்ஷக்கணக்காக திரவியங்களைச் சிலவழித்து பலவருஷங்களாகத் திருப்பணிகள் இயற்றியும் கும்பாபிஷேகங்கள் செய்தும் பசுமடங்கள் கட்டியும் மிகவும்பெரிய ஸ்தலங்களில் தினப்படி பலபல பூஜா காலங்களுக்கு கட்டளைகள் ஏற்படுத்தியும் ஷை ஆலயங்களின் மேம்பாட்டில் ஈடுபட்டவர்காளாக இருக்கிறார்கள். ஆலயத்தைப் பிருசீன முறைப்படி காப்பாற்றுவதில் அவர்கள் மிகவும் ஆற்றல் உள்ளவர்கள். அநேகம் ஆலயங்களுக்கு டிரஸ்டிகளாகவும் இருக்கிறார்கள். செட்டியார்கள் நாட்டில்அப்படி சுமார் 500 குடும்பஸ்தர்களுக்கு மேல் இருக்கிறதாகத் தெரிகிறது. சமீபத்தில் சென்னை சட்டஸபையில் புகுந்திருக்கும் தீண்டாதார் ஆலயப் பிரவேச மசோதாவைக் கண்டித்து ஆக்ஷேபிக்கவும், ஹிந்து ரிலிஜியஸ் எண்டோமெண்டு ஆக்டைத்திருத்த முயற்சிப்பதில் கோவில் நிதிகள், வேறு கோவில்கள் வழிபாடு சம்பந்தமில்லாத சீர்திருத்தக்காரர்கள் கொள்கையை அனுசரித்த வழியில் விரயப்படாமல்பாதுகாக்கவும் திருப்பணிகர்த்தாக்களும் திருப்பணி டிரஸ்டிகளுமாகிய நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் கான்பரன்ஸ் ஒன்று செட்டிமார்கள் நாட்டில் காரைக்குடியிலோ,தேவகோட்டையிலோ அல்லதுவசதியான ஊரிலோ கூட்டுவதற்காக வேண்டிய முயற்சி செய்துவரப்படுகிறது. அது சீக்கிரத்தில் கைகூடுமென்றும், அச்சமயம் சிரத்தையும் செல்வமும் பொருந்திய ஆலயத்திருப்பணி செய்திருக்கும் தனவணிகர்களில் ஒருவர் தலைமை வஹிப்பார்களென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## தீண்டாதாரின் அக்கிரமப் பிரவேசம்.

### திருவெத்தியூரில் பரபரப்பு.

இராமநாதபுரம் ஜில்லா திருவெற்றியூரில் காங்கிரஸ்ஹரிஜனங்களின் அக்கிரமப்பிரவேசமும் ஹிந்து ஜனங்களின் தடையும்:—

இராமநாதபுரம் ஜில்லாவின் கீழ்பாகத்தில் திருவாடானை என்ற சிவஸ்தலத்திற்கு தென்கிழக்கில் திருவெற்றியூர் என்று ஒரு புராதன சிவஸ்தலமும் அதில் ஒரு பெரிய சிவன் கோவிலும் இருக்கிறது. அதைச் சுற்றிலும் சுமார் 10 மைல் விஸ்தீரணத்திற்குள்ள கிராமங்களிலுள்ளவர்கள் ஷை ஆலயத்தினிடத்தில் விசேஷ பக்தியும் வழிபாடுடையவர்களாகவும் இருக்கிறார்கள். அந்த ஊரிலும் பிராம்மணர்களின் வீடு இரண்டொன்றைத் தவிர வேறு கிடையாது. அந்தக் கோவிலுக்கு ஈடுபடுகிறவர்கள் எல்லோரும் பெரும்பாலும் மறவர்கள், வெள்ளாழர்கள் முதலிய பிராமணரல்லாதார்கள்தான். அந்த ஆலயத்தில் வருஷா வருஷம் பிரம்மோத்ஸவம் நடந்துவருகிறது. ஷை கோவிலுக்கு சிவகெங்கை ராஜா அவர்கள் பாரம்பரை டிரஸ்டி. அவர்களின் தேவஸ்தான டிபார்ட்மெண்டின் விசாரணையில் பரிபாலிக்கப்பட்டு வருகிறது. இந்த வருஷத்தில் மே-மீ ஆரம்பத்தில் ஷை கோவிலில் வழக்கம்போல் பிரம்மோத்ஸவம் தொடங்கியது. தொடங்கிய சில நாட்களுக்கெல்லாம் அசலூரிலிருந்து சில காங்கிரஸ்காரர்கள் வந்து கோவிலுக்கு ஸமீபத்தில் அவர்கள் வழக்கப்படி கொடிகளுடனும், கூட்டம்போட்டு ஆலய வழிபாட்டைக் கண்டனம் செய்துகொண்டும் அக்கிரம ஆலயப்பிரவேசம் செய்ய ஹரிஜனங்களைத் தூண்டிவிட்டுக்கொண்டும் மற்றபடிக்குள்ள, காங்கிரஸ்க் கொள்கைகளை பிரசாரம் செய்துகொண்டும், கிளர்ச்சிசெய்து வந்தார்கள்.

10-5-38உ 8-ம் திருநாள் தினம், இரவில் சுமார் 11-மணிக்குமேல் ஸ்வாமி வடக்கு வீதியின் மேல்பக்கத்தில் பவனி வந்து கொண்டிருந்த ஸமயத்தில் வீடுகள் விசேஷமாய் இல்லாததும் அதிகமாய் கவனிக்கப்படக் கூடாததுமான கோவில் கீழ்பக்கப், ஸன்னதிவழியாய் ஷை ஹரிஜன காங்கிரஸ் கிளர்ச்சிகாரர்களும், ஹரிஜனரில்லாத கிளர்ச்சிக்காரர்கள் சிலருடன் முன் ஏற்பாட்டுடன் தெரியாமல் உள்ளே நுழைந்து ஆலயத்தைத் தீண்டினார்கள். இதுவிஷயம் எப்படியோ உடனே ஊரிலிருக்கிறவர்களுக்கும் உத்ஸவம் பார்க்க வந்தவர்களுக்கும் தெரிந்து கோவிலுக்குள் கூட்டம்கூடி கலகம் ஏற்பட்டது. அதன் பேரில் காங்கிரஸ் கிளர்ச்சிக்காரர்கள் வெளியேற்றப்பட்டார்கள். ஷை காங்கிரஸ்காரர்கள் உண்ணுவிரதம் இருப்பதாகச் சொல்லிக்கொண்டு கோவிலில் தெற்கு வாசல் முன்பாக படுத்துக்கொண்டு ஸாஹஸம் செய்தார்கள். மறுநாள் சென்னை சட்டசபையில் இராமநாதபுரம் ஜில்லா மெம்பரில் ஒருவரும் அந்நாட்டில் கொஞ்சம் பிரபலருமான கார்மேகம் சேர்வைகாரர் என்பவர் அக்கம்பக்கத்து கிராமங்களிலிருந்து ஒரு நூறுபேர்களுக்கு மேல் ஹரிஜனங்களைத் திரட்டிக்கொண்டும், சமையல் சாப்பாட்டிற்கு வேண்டிய பதார்த்தங்கள் வண்டியில் ஏற்றிக்கொண்டும் காரைக்குடி முதலான ஊர்களிலிருந்து காங்கிரஸ் தொண்டர்களுக்குச் சொல்லிவிட்டு அவர்களுடனும் ஆரவாரத்துடனும் செட்டிகளுடனும் ஊரைச்சுற்றியும் கோவிலைச்சுற்றியும் வந்து கோவிலில் பிரவேசிக்க முயற்சித்தார்கள். இது விஷயம் அக்கம் பக்கத்து கிராமங்களுக்கு எட்டியதின் பேரில் திரண்ட மறவர்கள் முதலிய பிராமணரல்லாத ஹிந்துக்கள் கோவிலுக்குள் போய் கோவிலைக்காக்க ஆரம்பித்தார்கள். பிரமாதமான உத்ஸாஹம் ஆலயத்தை ஹரிஜனங்களிடமிருந்தும் காங்கிரஸ்காரர்களிடமிருந்தும் காப்பாற்றும் பொருட்டு ஏற்பட்டது. எந்த நிமிஷம் கலகம் ஏற்படுமோ என்று இரண்டுநாள் பயமாக இருந்தது. உடனே ஸர்க்கார் அதிகாரிகளுக்கும் தகவல் எட்டி திருவாடானை மாஜிஸ்டிரேட்டு அவர்களும் போலீசும் தேவகோட்டை ஸர்க்கிள் இன்ஸ்பெக்டரும் வந்துசேர்ந்தார்கள். கலகம் ஏற்படாவண்ணம் வேண்டிய முயற்சிகள் அவர்கள் செய்தார்கள். முதலில் உத்ஸாகத்தில் கூடிய பக்கத்து கிராம ஹரிஜனங்கள் கொஞ்சம் கொஞ்சமாய் நழுவ ஆரம்பித்தார்கள். கார்மேகம் சேர்வைகாரர் தலைமையின் கீழ் ஆரவாரம் செய்து கிளர்ச்சி செய்து வந்தவர்களுக்குத் தங்களுடைய ஜம்பம்பலிக்காது என்று தெரிந்து இரண்டுநாள்கழிந்து ஊரைவிட்டு வெளிக்கிளம்பி திருவாடானைக்குப்போய் அவ்வூர் சிவன் கோவிலில் அக்கிரமப்பிரவேசம் செய்ய முயற்சித்தார்கள். அங்கேயும் பலிக்கவில்லை. அந்த ஊரிலும் ஏராளமானபேர்கள் முன் ஜாக்கிரதையுடனிருந்தார்கள். ஆரவாரமும் ஊர்வலமும்தான் மிச்சம். இதனிடையில் 10—5—38உ ராத்திரியில் திருட்டுத்தனமாய் அக்கிரமப்பிரவேசம் செய்த சிலர்கள் ஜாதி ஹிந்துக்கள் சிலர்கள் தங்களை ஹிம்சை செய்துவிட்டதுபோல் சொல்லி சுமார் 15 பேர்கள் பேரில் திருவாடானை மாஜிஸ்டிரேட் அவர்கள் முன்பாக குற்றம்சாட்டி கிருமினல்கேஸ் செய்தார்கள். அது பொய் என்று 5 தினங்களுக்கு முன்பாக ஷை மாஜிஸ்டிரேட் அவர்களால் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது.

சிவகெங்கை ராஜா அவர்களும் அவர் சிப்பந்திகளும் பிராசீன வழக்கத்திற்கு கொஞ்சமும் ஹானிவாராமல் காப்பாற்றுவதற்காக மிகவும் முயற்சியுடையவர்களாக இருக்கிறார்கள் என்ற விஷயம் மிகவும் பெருமையுடன் கொண்டாடத் தக்கதாய் இருக்கிறது. பொது ஹிந்து ஜனங்களுடைய மனோ நிலைமை தப்பில்லை என்பதையும் காங்கிரஸ்காரர்கள் செய்யும் கிளர்ச்சி போலி என்பதையும் இது தெளிவாய்க் காட்டுகிறது. சிவகெங்கை ராஜா அவர்களின் திருவேகம்பத்து தாசில்தார் 10—5—38ல் ஆலயத்தில் அக்கிரமப்பிரவேசம் செய்து தூண்டினதற்காக திருவாடானை மாஜிஸ்டிரேட் அவர்கள் கோர்ட்டில் கிருமினல் கேஸ் போட்டு அது பெண்டிங்கிலிருக்கிறதாகத் தெரியவருகிறது.

காங்கிரஸ்காரர்களின் ஆட்சியை அந்தப் பக்கம் பிராம்மணேதரார்கள் இப்பொழுது நன்றாய்க் கண்டுகொண்டார்கள். அந்தப் பக்கத்தில் ஹரிஜன ஆலயப்பிரவேசக் கக்ஷியை எதிர்க்க விசேஷ பரபரப்பும் உத்ஸாஹமும் ஏற்பட்டிருப்பதாகவும் அதுவும் ஜாஸ்தியாய்க் கொண்டிருப்பதாகவும் தெரிகிறது.

எஸ். சுப்பிரமணிய ஐயர், அட்வகேட்.
தேவகோட்டை.

---

## ஆலயப்பிரவேச மசோதாவிற்கு ஆக்ஷேபம்.

கும்பகோணம் ஸ்ரீசக்ரபாணி பெருமாள் தேவஸ்தானம், ஸ்ரீராமஸ்வாமி பெருமாள் தேவஸ்தானம், ஸ்ரீ கௌதமேச்வரஸ்வாமி தேவஸ்தானம், ஸ்ரீ உச்சிப்பிள்ளையார்கோவில் தேவஸ்தானம், பஜார் ஸ்ரீ ஹனுமார் கோயில் தேவஸ்தானம் இவைகளின் டிரஸ்டிகள் பஞ்சமர்கள் ஆலயப்பிரவேசமசோதா பால்ய விவாக தடைச் சட்டம் முதலியவற்றை ஆக்ஷேபித்துக் கையெழுத்திட்டு, மகஜர்களை சென்னை முதல் மந்திரி அவர்களுக்கும் இந்திய சட்டசபைத் தலைவருக்கும் அனுப்பியிருக்கிறார்கள்.

இதர தேவஸ்தான டிரஸ்டிகளும் அவைகளை ஆக்ஷேபித்து மகஜர்கள் அனுப்பியிருப்பது 5-5-38 ஆர்யதர்ம பிரசுரத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது.

மற்றும், இந்நகர மஹாஜனங்களால் கையெழுத்து செய்துவரும் மகஜர்களில், வக்கீல்கள் S. V. வெங்கடராமய்யர், A. G. சங்கரய்யர் முதலியவர்களும், டாக்டர்கள் M. K. சுப்ரமண்யம், கோபாலஸ்வாமி அய்யர் முதலானவர்களும், மற்றும் பிரபல வியாபாரிகளும் பொதுஜனங்களும் கையெழுத்துச் செய்து வருகிறார்கள்,

### மதவிஷயங்களில் சட்டசபைகளின் தலையீடும் காங்கிரஸ் மகா சபையின் கடமையும்.

வேதம், தர்ம சாஸ்திரம் இவைகளை ஆதாரமாகக்கொண்டுமதானுஷ்டானங்களைச்செய்து வரும் ஒரு சாராரின் நம்பிக்கை, அனுஷ்டான சுதந்திரம், இவைகளில் வேதம், தர்ம சாஸ்திரம், ஹிந்துமதம் இவைகளில் தீவிர நம்பிக்கை அற்றவர்களாயும், எந்த சமயத்திலும் மதத்தையும், அனுஷ்டான முறைகளையும், மதநூல்களையும் புறக்கணிப்பதில் சிறந்த தியாகிகளாக உள்ள மற்றோர் சாரார் தங்கள் நோக்கத்தை கக்ஷி பலத்தைக் கொண்டும், சட்டசபைகளில் இப்பொழுது இருந்துவரும் மதநம்பிக்கையற்ற பெரும்பாலோரின் வோட் பலத்தைக் கொண்டும், சட்ட நிர்பந்தங்களைச் செய்வதை அகிலஇந்திய காங்கிரஸ் கமிட்டியும், சென்னை மாகாண காங்கிரஸ் கமிட்டியும் தடுக்கும் என்று நம்புகிறோம்.

மத நம்பிக்கையற்றவர்களின் கோட்பாடுகளையும், கொள்கைகளையும் சட்ட பலத்தால் பலாத்காரமாக, மதநம்பிக்கையுள்ளவர்களான மஹா ஜனங்களின் மேல் திணிப்பதை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியும், காங்கிரஸ் மஹா ஸபையும் தடுக்க முன்வராது ஆதரவு காட்டுமானால், காங்கிரஸ் ஸ்தாபனமும் அதன் தலைவர்களும் எவ்வளவுதூரம் இந்திய மஹாஜனங்களுக்கும் ஹிந்துக்களுக்கும்பிரதிநிதிகள் என்பதை நாம் எடுத்துக் காட்டவேண்டியதில்லை.

இந்த நிலைமையில், காங்கிரஸ் ஸ்தாபனத்திலும்கூட சிலர் மத சுதந்திரம் அளிக்கப்படவேண்டுமென்று சொல்லக்கூடியவர்கள் இருக்கலாமாயினும், ஹிந்து மகாஜனங்களின் அபிலாஷைகளுக்கு விரோதமாக எதேச்சாதிகார முறையில் காரியங்களை காங்கிரஸ் ஸ்தாபனம் சார்பாகசெய்து வருவதை தேசத்தின் மகாஜனங்கள் பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

இதே வழியில் காங்கிரஸ் ஸ்தாபனம் செல்லுமானால் அந்த ஸ்தாபனத்தையே எதிர்க்கவேண்டியதைத் தவிர வேறு வழியில்லை. ஆகவே இந்த சந்தர்ப்பத்தில் காங்கிரஸ்

(3-ம் காலம் தொடர்ச்சி.)

ஸ்தாபனமும்மதத்தில் சுயேச்சையளிப்பதை ஆலோசித்து, யதேச்சாதிகார போக்கைமாற்றிக்கொள்ளும் என்று நம்புகிறோம். மதானுஷ்டானத்தில் நம்பிக்கையுள்ளவர்களுக்கு சுயேச்சையை அளிக்க காங்கிரஸ் மகா சபை முன்வரும் என்றும் எதிர்பார்க்கிறோம்.

R. நடராஜன்.



## சென்னை மாகாண வியவசாயிகளின் கடன் நிவாரண ஆக்ட்.

(போர்ட் ஸெயிண்ட் ஜார்ஜ் கெஜட் பிரசுரம்.)

சென்னை மாகாணத்தில் கடன் பட்டிருக்கும் விவசாயிகளுக்குப் பரிகாரம் அளிப்பதற்காக நிபந்தனை ஏற்படுத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுவது என்னவென்றால்:—

1. இந்த ஆக்டை, விவசாயிகளுக்குப் பரிகாரம் அளிப்பதைக் குறித்த 1938-ம் ஹுத்திய சென்னபட்டணத்து ஆக்ட் என்று சொல்லலாம்.

2 இது சென்னை மாகாணம் முழுமையும் வியாபிக்கும்.

3. இந்த ஆக்டிலே, சங்கதியினாலாவது முன்பின் தொடர்ச்சியினாலாவது விரோதமொன்றும் இல்லாவிட்டால், (i) 'நபர்' என்பது யாதொரு தனி நபர் என்று அர்த்தமாவது மல்லாமல், யாதொரு அவிபக்த ஹிந்து குடும்பம் என்பதும் யாதொரு மருமகத்தாயம் அல்லது அலியசந்தான தாவாடு அல்லது தாவழி என்பதும் அதில் அடங்கும்; ஆனால், சட்டபடிச் சேர்ந்த ஒரு சபை என்பதாவது தருமசம்பந்தமான அல்லது மத சம்பந்தமான ஒரு ஸ்தாபனம் என்பதாவது சட்டப்படிச்சேர்ந்திராத ஒரு கம்பெனி அல்லது சங்கம் என்பதாவது அதில் அடங்காது;

(ii) 'விவசாயி' என்பது—

(a) சென்னை மாகாணத்திலே, யாதொரு மியுனிஸிபாலிடி அல்லது கன்டோன்மென்டுக்குள் இருக்கும் நிலமாயிராமல், மாகாண கவர்ன்மெண்டாரால் நிலவரி விதிக்கப்பெற்றிருக்கும் அல்லது கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்பட்ட அல்லது ஊர்ஜிதம் செய்யப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்பட்ட யாதொரு கிரான்டின்படி வரியில்லாமல் கைப்பற்றில் வைத்துக்கொள்ளப்பட்டிருக்கும் யாதொரு விவசாய நிலத்தில் அல்லது தோட்டக்கால் நிலத்தில் விற்பனை செய்யத்தக்க பாத்தியதையுள்ள யாதொரு நபர் என்று அர்த்தமாகும்; (ஷை நிலவரியில் பேஷ்கஷ் என்பதும் க்விட்ரென்ட் என்பதும் அடங்குவதாகக் கருதப்படும்;) அல்லது

(b) ஜூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னபட்டணம் 1908-ம் ஹுத்து ஆக்டின்படி யாதொரு நிலத்துக்குடையவரின் கீழ் பாயக்காரியாகவோ ரயத்தாகவோ கீழ்க்குத்தகைதாரராகவோ ஷை நிலத்தில் பாத்தியதையுடைய யாதொரு நபரென்று அர்த்தமாகும்; அல்லது

(c) ஷை நிலத்திலே, மலையாளத்துப் பாயக்காரி பாத்யதையைக் குறித்த 1929-ம் ஹுத்திய ஆக்டில் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் பாத்தியதையுள்ள யாதொரு நபரென்று அர்த்தமாகும்; அல்லது

(d) (a), (b) அல்லது (c) உட்பகுதியில் குறிப்பிட்டுள்ள எந்த நபரிடமிருந்தாகிலும் ஷை நிலத்தின் குத்தகை பெற்றிருக்கும் அல்லது ஷை நிலத்தின் கீழ்க்குத்தகைதாரராயிருக்கும் யாதொரு நபரென்று அர்த்தமாகும்:

ஆனால், யாதொரு நபர்—

(A) 1938-ம் ஹு மார்ச்மீ 31உயோடு முடிவாகும் இரண்டு அரசிறை வருஷங்களில் ஏதாவது ஒன்றில் 1922-ம்ஹுத்திய இந்து தேசத்து வருமான வரி ஆக்டின்படியாகிலும் யாதொரு இந்திய சமஸ்தானத்தின் அல்லது அன்னிய கவர்மெண்டின் வருமான வரிச்சட்டங்களின் படியாகிலும் வருமான வரி விதிக்கப்பெற்றிருந்தாகிலும்,

(B) 1937-ம்ஹு அக்டோபர்மீ 1உக்கு அடுத்து முந்தியுள்ள இரண்டு வருஷங்களுக்குள், 1920-ம்ஹுத்திய சென்னபட்டணத்து டிஸ்டிரிக்ட் மியுனிஸிபாலிடிகள் ஆக்டின்படியாவது 1919ம் ஹுத்திய சென்னை ராஜதானிப்பட்டணத்து மியுனிஸிபல் ஆக்டின்படியாவது 1924-ம்ஹுத்திய கண்டோன்மெண்டுகள் ஆக்டின்படியாவது ப்ரிடிஷ் இந்தியாவிலுள்ள வேறே எந்த மாகாணத்திலாகிலும் யாதொரு இந்திய சமஸ்தானத்திலாகிலும் இந்தியாவிலுள்ள யாதொரு அன்னிய சமஸ்தானத்திலாகிலும் மியுனிஸிபல் அல்லது பிரதேச அதிகார சபைகள் விஷயமாய் ஒழுங்கேற்படுத்தும் யாதொரு சட்டத்தின் படியாவது 1930-ம்ஹு ஆகஸ்ட்மீ 26உக்கு முன் யூனியனாயிருந்த ஒரு பஞ்சாயத்தில் 1920-ம்ஹுத்திய சென்னபட்டணத்து லோகல் போர்டுகள் ஆக்டின்படியாவது விவசாயமல்லாத வேறே யாதொரு தொழிலிலிருந்து கிடைத்த மூந்நூறு ரூபாய்க்கு மேற்பட்ட அரை வருஷ வருமானத்தின் மேல் தொழில் வரி விதிக்கப் பெற்றிருந்தாலும்,

(C) 1937-ம்ஹு அக்டோபர்மீ 1உக்கு அடுத்து முந்தியுள்ள இரண்டு வருஷங்களுக்குள், 1920-ம்ஹுத்திய சென்னபட்டணத்து டிஸ்டிரிக்ட் மியுனிஸிபாலிடிகள் ஆக்டின்படியாவது 1919-ம்ஹுத்திய சென்னை ராஜதானிப்பட்டணத்து மியுனிஸிபல் ஆக்டின்படியாவது 1924-ம்ஹுத்திய கன்டோன்மென்டுகள் ஆக்டின்படியாவது ப்ரிடிஷ் இந்தியாவிலுள்ள வேறே எந்த மாகாணத்திலாகிலும் யாதொரு இந்திய சமஸ்தானத்திலாகிலும் மியுனிஸிபல் அல்லது பிரதேச அதிகார ஸபைகள் விஷயமாய் ஒழுங்கேற்படுத்தும் யாதொரு சட்டத்தின்படியாவது 1930-ம்ஹு ஆகஸ்ட்மீ 26உக்கு முன் யூனியனாயிருந்த ஒரு பஞ்சாயத்தில் 1920-ம்ஹுத்திய சென்னபட்டணத்து லோகல் போர்டுகள் ஆக்டின்படியாவது கட்டிடங்கள் விஷயமாய் அல்லது விவசாய நிலங்களல்லாத வேறே நிலங்கள் விஷயமாய் சொத்து அல்லது வீட்டு வரி விதிக்கப்பெற்றிருந்தாலும்,

(D) ஜூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னபட்டணம் 1908-ம் ஹுத்து ஆக்டின்படி ஒரு ஜூஸ்திதியின் அல்லது அதன் யாதொரு பங்கு அல்லது பாகத்தின் நிலத்துக் குடையவராயிருந்து, அந்த ஜூஸ்திதி, பங்கு அல்லது பாகம் விஷயமாய் 500 ரூபாய்க்கு மேற்பட்ட ஒரு தொகை பேஷ்கஷாகச் செலுத்தப்பட்டாலும், 100 ரூபாய்க்கு மேற்பட்ட ஒரு தொகை க்விட்ரென்டாகவோ ஜோடியாகவோ கட்டுபடியாகவோ பொறுப்பு முதலியதாகவோ செலுத்தப்பட்டாலும், மலையாளத்துப்பாயக்காரி பாத்தியதையைக்குறித்த 1929-ம்ஹுத்திய ஆக்டின்படி ஒரு ஜன்மியாயிருந்து, 500 ரூபாய்க்கு மேற்பட்ட யாதொரு தொகையை நிலவரியாக மாகாண கவர்ன்மெண்டாருக்குச் செலுத்தினாலும்,

அந்த நபர் 'விவசாயி' என்று கருதப்படமாட்டார்; ஆனால் மேலே (C) பகுதியில் குறிப்பிட்டிருக்கும் கட்டிடங்களும் நிலங்களும் வாடகைக்கு அல்லது குத்தகைக்கு விடப்பட்டிருந்தாலுஞ்சரி சொந்தக்காரரின் அநுபோகத்திலிருந்தாலுஞ்சரி, அவைகளின் வருஷாந்த மொத்த வாடகை மதிப்பு அல்லது குத்தகை மதிப்பு 600 ரூபாய்க்குக் குறைவாயிருக்கக்கூடாது.

விவரணம்:— (C) விலக்கு நிபந்தனையின் காரியங்களுக்காக, யாதொரு கட்டிடம் அல்லது நிலத்தின் வருஷாந்த வாடகை மதிப்பு அல்லது குத்தகை மதிப்பானது—

(1) வருஷாந்த வாடகை மதிப்பை அல்லது குத்தகை மதிப்பை ஆதாரமாகக்கொண்டு வரி விதிக்கப்படுகிற பட்சத்திலே, அந்த மதிப்பென்று கருதப்படும்;

(2) மூலதன மதிப்பை ஆதாரமாகக்கொண்டு வரி விதிக்கப்படுகிற பட்சத்திலே, மூலதன மதிப்பில் ஐந்து சத வீதமென்று கருதப்படும்;

(3) வேறே எந்தவிஷயத்திலாகிலும், நிர்ணயிக்கப்பட்ட விதமாய் நிச்சயித்தறியப்பட்ட மதிப்பென்று கருதப்படும்;

(iii) 'கடன்' என்பது, யாதொரு விவசாயியினிடமிருந்து ரொக்கமாகவோ வஸ்து ரூபமாகவோ சேரவேண்டியதாயிருக்கும் யாதொரு பொறுப்பு ஈடுகாட்டப்பட்டதாயினுஞ்சரி ஈடுகாட்டப்படாததாயிருந்தாலுஞ்சரி, யாதொரு ஸிவில் அல்லது ரெவினியு கோர்ட்டாரின் டிக்ரி அல்லது உத்தரவின்படிச் செலுத்தப்படத் தக்கதாயிருந்தாலுஞ்சரி மற்றபடிச் செலுத்தப்படதக்கதாயிருந்தாலுஞ் சரி, அப்படிப்பட்ட பொறுப்பு என்று அர்த்தமாகும்; ஆனால் அதிலே (iv) பகுதியில் அர்த்தம் சொல்லப்பட்டபடியுள்ள குத்தகைத் தொகை என்பதாவது மலையாளத்துப் பாயக்காரி பாத்தியதையைக் குறித்த 1929-ம்ஹுத்திய ஆக்ட் 3 (l) (1) பிரிவில் அர்த்தம் சொல்லப்பட்டபடியுள்ள 'காணர்த்தம்' என்பதாவது அடங்காது;

(தொடரும்)

## ஸர்வதோமுக, அதிராத்ர மஹா யாக வைபவம்.

### ஏத்தாப்பூர்.

சேலம் ஜில்லா ஆத்தூர் தாலூக்கா ஏத்தாப்பூர் கிராமத்தில் அக்கிராஹாரமத்தியில் விஸ்தாரமாக அமைக்கப்பட்ட சாலையில் பரம்பரையாக யக்ஞ கர்மாக்களை, அனுஷ்டித்து வரும் சேங்காலிபுரம் ப்ரம்மஸ்ரீ, நாராயண வாஜபேயரவர்கள் சர்வதோமுக மகா யாகத்தையும், காஞ்சீபுரம் ப்ரம்மஸ்ரீ, கந்தாடை ராமசுவாமி தீக்ஷிதரவர்கள் அதிராத்ர மகா யாகத்தையும் மிகுந்த ச்ரத்தையுடன் அனுஷ்டித்தார்கள். யாகசாலை உயரமாயும், விசாலமாகவும் இருந்ததால் தினசரி ஐயாயிரம் ஜனங்களுக்கு மேல் இருந்து தரிசனம் செய்ய வசதியாக இருந்தது. வேதம், ச்ரௌதம், சாஸ்திரம், இவைகளை கற்றுணர்ந்தோர் இருநூறு பேர்கள் வந்திருந்தனர். இது வரையில் இந்த ஜில்லாவில் இம்மாதிரியான கோஷ்டிகள் சேர்ந்ததில்லை என்று நிச்சயமாகச் சொல்லலாம்.

இந்த ஜில்லாவில் ஜனங்களுக்குள்ள ஆஸ்திக்கியத்தை விருத்திசெய்து லோகத்திற்கு க்ஷேமத்தை உண்டாக்கக் கூடிய யாகாதி க்ருத்யங்களில் ஒருச்ரத்தையும் ஒத்துழைக்க ஓர் ஊக்கமும், ஊட்டியவர் ப்ரம்மஸ்ரீ, சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர் அவர்களே யாவர்.

ஷை மகாயாகத்திற்கு, முக்கியஸ்தர்களாகயிருந்தவர்கள், சேலம் வக்கீல் மகா-அ-அ-ஸ்ரீ, Y. K. சேஷய்யர், சேலம் டிஸ்ட்ரிக்ட் ரிடையர்ட் ஜட்ஜ் மகா-அ-அ-ஸ்ரீ, T. சுந்தரமய்யர் பெத்தநாயகன் பாளையம் மிராசுதார் மகா-அ-அ-ஸ்ரீ, T. S. ராமநாதய்யர், ஆனையாம்பட்டி மிராசுதார் மகா-அ-அ-ஸ்ரீ, R. முத்துசாமி அய்யர், நாமக்கல் வக்கீல், மகா-அ-அ-ஸ்ரீ, ரெங்கசாமி அய்யர் அவர்களும், இன்னும் அநேகரும் தங்கள், தங்கள் குடும்ப சமேதராய் வந்திருந்து யாகத்தை முடிவுறச் செய்தார்கள்.

சேலத்தில் ரிடையர்ட் ஜட்ஜ் மகா-அ-அ-ஸ்ரீ T. சுந்தரமய்யர் அவர்களுடைய வீட்டிலும் ஆனையாம்பட்டி, பெத்தநாயக்கன் பாளையத்திலும் நாமக்கல், உருவந்தூர் முதலானயிடங்களிலும் ஸ்ரீமத் ராமாயணம், ஸ்ரீ மஹாபாரதம், ஸ்ரீ பாகவதம், ஸ்ரீ பகவத்கீதை முதலிய க்ரந்தங்களை தன் இணையற்ற இனிய சொற்பொழிவுகளின் வாயிலாக, வேதோக்தமான கர்மாக்களில் விசேஷப் பற்றுண்டாகும்படி ப்ரம்மஸ்ரீ, சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர் அவர்கள் போதித்தனர் என்று சொல்லுவது மிகையாகாது. இதன் பலனே இவ்விரண்டு யாகங்களும் முற்றுற முடிந்தது எனலாம்.

ஷை யாக ஸங்கல்ப காலத்தில் ருத்விக்குகள் 70 பேர்களுக்கும் மதுபர்க்க பூஜை செம்மையாய் செய்யப்பட்டன. ப்ரயோக விராம காலங்களில் ப்ரம்ஹஸ்ரீ, சேங்காலிபுரம் ப்ரஸங்கபானு வைத்யநாத சாஸ்திரிகள், சேங்காலிபுரம் ப்ரம்ஹஸ்ரீ, அனந்தராம தீக்ஷிதர் அவர்கள், புதுக்கோட்டை ஆஸ்தானவித்வான் ப்ரம்மஸ்ரீ, ராகவசாஸ்திரிகள், திருப்பதி ஸம்ஸ்க்ருத கழகம் மீமாம்ஸா ப்ரபஸர் ப்ரம்மஸ்ரீ, வெங்கடேச தீக்ஷிதர், சேங்காலிபுரம் ப்ரம்மஸ்ரீ, அய்யா தீக்ஷிதர், நாராயண தீக்ஷிதர் தண்டாங்கோரை ப்ரம்மஸ்ரீ, அப்பாதுரை தீக்ஷிதர், ராஜகோபால சாஸ்திரிகள் இன்னும் அநேக வித்வான்கள் அப்போதைக்கப்போது சமயம் வாய்த்தபோதெல்லாம் தெள்ளிய நடையில் பாமரரும் பரவசமடைய உபந்யாஸம் செய்தனர். யாகசாலை நான்கு திசைகளிலும் இவ்வாறு ஆத்மார்த்தமான விஷயங்களையும், யக்ஞயாகாதி க்ருத்யங்களின் அவச்யத்தையும் வேத ப்ரமாணங்களையும் விளக்கமாக விரித்துரைத்ததானது மகா விஷ்ணுவின் உந்திக் கமலத்துதித்தோன் திசைமுகன் தன் நான்கு முகங்களாலும் உலகம் உய்ய உபதேசம் செய்வது போலவேயிருந்தது. ஜனங்களோ அங்கம் புளகிக்க ஆனந்தபாஷ்பம் பொழிய, மனங்கனிந்து உருக வீற்றிருந்த தன்மை யாகசாலை ஓர் ப்ரம்ஹலோகம்போல் விளங்கிற்று.

நல்லிச்சேரி ச்ரௌத வித்யா ரத்நாகரம் ப்ரம்மஸ்ரீ ராமநாத ச்ரௌதிகள் ஸூத்ரங்கள் சொல்வது மிக்க உருக்கமானதே. மணக்கால் ச்ரௌத வித்யா பூஷணம் ப்ரம்மஸ்ரீ முத்துஸ்ரௌதிகள் அவர்களின் யோக்யதை லோகம் ப்ரஸித்தியான விஷயம், திருச்சி நேஷனல் காலேஜ் ஹைஸ்கூல் சமஸ்கிருத பண்டிட் ராமசாமி சாஸ்திரிகள் அவர்களும் ப்ரம்மஸ்ரீ, ராமாயணம் மணி சாஸ்திரிகள், கிருஷ்ணராஜபுரம் நித்யாக்னி ஹோத்ரிகளையும் உள்ள சங்கர தீக்ஷிதர் அவர்களும் திருநெல்வேலி யக்ஞவாஜபேயரவர்களும், இன்னும் மற்ற வித்வான்களும் விஜயம்செய்து சொன்மாரியால் அமிர்தவருஷம் பொழிந்தனர். அஹோராத்ரம் இடைவிடாது வேத கோஷமும் கீதமும், மகா-அ-அ-ஸ்ரீ, ஆனையாம்பட்டி, மைசூர் சமஸ்தான வித்வான் சுப்பய்யரவர்களால் ஜலதரங்க வாத்தியமும், பெங்களூர் கிருஷ்ண பாகவதரவர்களால் ஹரிகதாகாலக்ஷேபமும், சாதுக்கள் சங்கமும், கூடிய இந்த ஒன்பது நாட்களிலும், ஏத்தாப்பூர் கிராமமானது பூலோக கைலாயம்போல் விளங்கிற்று என்று சொல்லுவது உண்மையே ஆகும்.

யாகத்திற்கு வந்த மகா ஜனங்கள் சுமார் 5000 ப்ராம்மணர்களையும் ஷை ஏத்தாப்பூர் கிராம அக்ரகார மகா ஜனங்கள் தங்கள் தங்கள் சம்மந்திகளை உபசரிப்பதுபோல் உபசரித்தார்கள்.

திங்கட்கிழமை மாலை தஞ்சாவூர் சுவாமிகள் இந்த ஊருக்கு விஜயம்செய்தார் ஒரு சனாதன தர்ம மகாநாடு ஷையாக சாலையில் சந்நிதான அக்ராசனத்தின் கீழ்கூடி, அகில இந்தியா வர்ணாஸ்ரம ஸ்வராஜ்ய சங்கங்களை ஏற்படுத்தவும், சனாதன தர்மங்களைப்பிரசாரம் செய்யத்தகுந்த ஏற்பாடுகள் செய்யலாமாகவும் தீர்மானிக்கப்பட்டது.

இன்று தோன்றி நாளை மறையக்கூடிய பகட்டுடைய நாகரீக மத்தியே கிடந்துழலும் நம் நாட்டினர்களும் சிரிங்கேரி மடாதிபதிகள் போன்ற பெரியோர்கள் யாகம், யக்ஞம், முதலான நிஷ்காம்ய கர்மாக்களில் அதிக பற்றுண்டாகும்படி போதித்து காத்து ரக்ஷித்தல் முதற்கடமையன்றோ? இச்சமயம் கும்பகோண ஸ்ரீமடத்தின் ஆதரவும் அனுக்ரகமும், உதவியும், மிகவும் பாராட்டத்தகுந்ததே.

யாகத்தில் ஸ்ரீசுப்பிரமணிய ஆஹ்வான சமயம் ஆனையாம்பட்டி கிட்டு வாத்தியார் திருப்புகழ் மேற்கோட்களுடன் சொற்பொழிவு செய்தனர்.

அவபிரதஸ்நானம் தேவ சின்னங்களுடன் கிராம மகாஜனங்களும் ஊர்வலத்துடன் வெகு சிறப்பாக நடந்தேறியது.

சம்பாவனை சமயத்தில் பிரம்மஸ்ரீ, வைத்தியநாத சாஸ்திரிகள் ருத்விக்களின் பெருமையையும், ப்ரம்மஸ்ரீ, அனந்தராம தீக்ஷிதர் தன் சுயநலத்தைக் கோராமல், உலகம் செழித்தோங்கவேண்டுமென்றும் இந்த மகா யாகத்தை மிகவும் சிரத்தையுடன் இருந்துபூர்த்தி செய்தார் என்று உபன்யாசம் செய்தார். ஏத்தாபூரில் யாகத்தை நடத்த மூலகாரணமாயும், அதற்கிசைய ஆற்றலும் பொதுக்காரியங்கள் இடையூறின்றி பூர்த்தியாகச் செய்து முடிக்க பொருந்தியதைர்யமுமுள்ள மகா-அ-அ-ஸ்ரீ, Y. K. சேஷய்யர் அவர்கள் தற்போது செய்யும் சம்பாவனையானது உபசாரமாக தோன்றும். மகாஜனங்களின் மனதையே தகுந்த சம்பாவனையாக அங்கீகரிக்கவேண்டுமென்றும், இவ்யாகங்களின் பலனாக பாலர் முதல், விருத்தர்வரை திருந்திய வாழ்க்கையுடையவர்களாக யிருத்தல் வேண்டுமெனவும் கூறினர். ரிடையர்ட் ஜட்ஜ் மகா-அ-அ-ஸ்ரீ, T. சுந்தரம் ஐயர் அவர்கள் வைதீக கிருத்தியங்களில் சிரத்தையும் நம்ம மத சம்மந்தமான இந்த யாகங்கள் இரண்டும் ஓர் புதிய உணர்ச்சியையும் உண்டாக்கும் எனவும், பெரியோர்களுக்கு முகமன் கூறி முடித்தனர்.

ஷை யாகங்களுக்கு சேலம் ரணவைத்திய நாகசுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்கள், ரித்விக்குகளுக்கு, பால், இளநீர், முதலியவைகளால் திருப்தி செய்துவைத்தனர். ஷையார் தம்பி நரசிம்மய்யர் அவர்கள் ரித்விக்குகளுக்கு சிரமந்தீருவதற்கானவிசிறி உபயம்செய்தனர்.

ஏத்தாப்பூர் (கிராம தலைவர்) (A. தண்டபாணி அய்யர்) E. K. ராமகிருஷ்ண அய்யர், K. S. லக்ஷ்மண அய்யர், A. சிவராம அய்யர், A. அய்யாப்பய்ய அய்யர்என்கிற வெங்கடசுப்பய்யர், ஷையூர் பெருமாள் கோவில் பட்டாச்சாரி திருமலைசாமி அய்யங்கார், ஷையூர் கர்ணம் சுப்பராம அய்யர், ஷையூர் கி. மு. K. S. சுந்திரய்யர், சேலம் சமஸ்கிருத பண்டிதர் சுப்பிரமணிய சாஸ்திரிகள். இன்னும் மற்ற ஏத்தாபூர் அக்ரகார மகா ஜனங்கள் எல்லோரும் சேர்ந்து ஷை யாகத்திற்கு ஒத்துழைத்தார்கள். ஷை யாகத்திற்கு ஏத்தாப்பூர் போஸ்ட்மாஸ்டர் R. கிருஷ்ணசாமி தபால் விஷயமாக ஜனங்களுக்கு வேண்டிய சௌகர்யங்களைச் செய்தார்.

ஷையாகத்திற்கு ஏத்தாப்பூர்ராமநாதசாஸ்திரிகள், K. S. சுந்திரய்யர், ஆனையாம்பட்டி P. S. கிருஷ்ணசாமி அய்யர், சேலம் முன்சீப் கோர்ட்டு கிளர்க் அப்பு அய்யர், கோட்டேர் V. வெங்கடராம தீக்ஷிதர், மற்றும் அநேக பாகவதர்கள் ஒவ்வொரு நாளும், பஜனை கோஷ்டியுடன் ஊர்வலம் வந்தார்கள்.

ஷை யாகங்களுக்கு, மதராஸ், காஞ்சீபுரம், திருக்கழுக்குன்றம், செங்கற்பட்டு, மஞ்சகுப்பம் விருத்தாஜலம், விழுப்புரம், திருவண்ணாமலை, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நன்னிலம், திருநெல்வேலி, மதுரை, திருச்சினாபள்ளி, கல்கத்தா, சேலம், ஆத்தூர், நாமக்கல், உருவந்தூர், ஆனையாம்பட்டி, சிதம்பரம் முதலிய ஜில்லாக்களிலிருந்தும், தாலூக்காக்களிலிருந்தும், கிராமங்களிலிருந்தும், இன்னும் அநேகம் ஜில்லா, கிராமங்களிலிருந்தும், அநேக பக்தர்களும், வித்வான்களும், வந்திருந்தார்கள்.

சர்வதோமுக யாகசாலையில், ஸ்ரீமத்ராமாயணம், ஸ்ரீமத் பாகவதம், முதலிய புண்ணிய சரித்திரங்கள் ப்ரம்மஸ்ரீ, சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதரவர்களால் நடத்தவேண்டுமென்று ஏத்தாப்பூர் அக்ராகாரமகாஜனங்கள் கேட்டுக் கொண்டார்கள். கூடிய சீக்கிரம் நடைபெறும்.

S. சுப்பிரமணிய அய்யர்.

---


## தர்ம சாஸ்திரச் சுருக்கம்.

(மூன்றம் பதிப்பு)

பிராம்மணர்களின்கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், "வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராம்மண குடும்பங்களிலும்இருக்கவேண்டியதவசியம்.

விலை ரூ. 1—8—0 வி. பி. ப்ரத்யேகம்.

கிடைக்குமிடம் :—

பப்ளிஷர்.

தர்ம சாஸ்திரச் சுருக்கம்.

கீழவிடையல், திருச்சிரா,




## எஸ். எஸ். எல். ஸி. ஸம்ஸ்கிருத பாடபுஸ்தகம்.

(வித்யானந்தம்)

இவ்வருஷம் முழுவதும் படித்து அடுத்த வருஷம் பரீக்ஷைக்குப் போவதற்காக ஏற்பட்ட ஷை பாடபுஸ்தகம் இப்போது வெளிவந்திருக்கிறது. இதில் வழக்கம்போல் துண்டு துண்டாகவே பாகங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இவ்விதம் படிப்பது இங்கிலீஷ் முறைப்படி அதநுகளில் சில்லரையான அறிவையுண்டாக்குமானாலும் பூர்ணமாக ஒரு கிரந்தத்தைப் படித்து அதன்மூலம் நல்ல ஞானத்தையுண்டாக்க சக்தியற்றதேயாகும். அப்படியிருந்தும் இந்த முறைதான் எங்கும் கையாளப்படுகிறது. இதுதான் [illegible] பாஷைக்கும் ஏற்பட்டு வித்வான் [illegible] முதலிய வகுப்புகளுக்கும் வெகு வாய்ப் பரவியிருக்கிறது. இப்புஸ்தகத்தில் முதலில் ராமாயணம் யுத்தகாண்டத்திடல் 16, 17, 18-ஸர்க்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவை விபீஷண சரணாகதியைக் கூறுவன. இது மேலான பாகமாயிருந்தாலும் சிறுவர் சிறுமிகளுக்கு மிகவும் கடினமாகவேயிருக்கும். ஏனெனில் விபீஷணன் தனது சகோதரனான ராவணனை விட்டுவிட்டு ஸ்ரீராமனை சரணம் அடைய வந்தபோது, ஸ்ரீராமன் அவனை அங்கீகரிக்க இஷ்டப்பட்டாலும் சுக்ரீவன்முதலியோர் அங்கீகரிக்கக்கூடாதென்று கூறுவதும் ஸ்ரீராமன் அதற்கு வேண்டிய நியாயங்களைக்கூறி யாராகிலும் சரணம் அடைந்துவிட்டால் அவரைக் காப்பாற்றுவதே மேலான தர்மம் என்று சமாதானம் கூறி அவனை அங்கீகரிப்பதுமாகிய இவ்விஷயம் மேன்மேலும் வாத ப்ரதானமாயிருப்பதால் இதை அறிந்து கொள்ளும்படி போதிப்பதும் உபாத்தியாயர்களுக்குச் சிறிதுசிரமமேயானாலும் பிள்ளைகளுக்கும் இதை மனதில் வாங்கி ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுவதும் கடினமாகவே யிருக்கலாம். இதில் உதாஹரணமாகக் கொடுத்திருக்கும் 'கபோதத்தின் (மாடப்புறாவின்) கதைக்கு சிபியின் கதை உதாகரணமென்று அப்புஸ்தகத்தின் கடைசியிலுள்ள குறிப்பில் காட்டியிருப்பது பொருத்தமாயிராதென்று தோன்றுகிறது. பிறகு மகா பாரதத்தில் 'ஏகலைவன் சரிதம்' வருகின்றது. அது குரு பக்தியை விளக்கக் கூடியதாயிருக்கலாம். பிறகு கர்ணன் பரசுராமனிடம் அஸ்திரவித்தை அப்பஸித்தல். பிறகு ரகுவம்சத்தில் நான்காவது ஸர்க்கம். இது ரகுமகாராஜனுடைய திக்விஜயத்தை வர்ணிப்பது. 'ஸராஜ்யம்' வாசிக்காதவனுமில்லை சத்திரத்தில் சாப்பிடாதவனுமில்லை என்ற ஆதிநாள் பழமொழியால் இதுவரையாவது அல்லது இந்த ஸர்க்கமாவது கொஞ்சம் எல்லோரும் படித்திருப்பார் என்பதால் இது மிகவும் பிரஸித்தமானதே. இந்த ஸர்க்கத்தை முழுவதும் வைத்திருப்பதில் நடுவில் மிகவும் சிருங்காரமான 51, 52-ச்லோகங்களை விட்டிருந்தால் சற்று நலமாயிருக்கும். இப்போது இவைகளை பாடம் சொல்லும் உபாத்தியாயர் இந்த சுலோகங்களை விடுவதற்குமில்லை அல்லது போதிப்பதற்குமில்லை. அத்தோடு பெண்பிள்ளைகளும் படிப்பதால் அந்த இடங்களில் இது மிகவும் கஷ்டமாகவே யிருக்கும். இவைகளை முன்னடியே படித்து விலக்கவேண்டியவைகளை விலக்கி, பாடம் ஏற்படுத்துவதே சிறந்த வழியாகும். அதில்லாமல் அப்படியே வைத்துவிடுவது. பல இடஞ்சல்களுக்குக் காரணமாகும். இதைப் பாடம் ஏற்படுத்துகிறவர்கள் கவனிக்கவேண்டியது மிகவும் அவசியமாகும்.

அத்தோடு சில பிரஸித்த பாடங்களையும் மாற்றியிருக்கிறார்கள். பிறகு ஸுபாஷிதங்கள் வருகின்றன. இதில் பல கவிகளுடையவும் பெரியோர்களுடையவும் சுலோகங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இதில் மூக பஞ்சசதீ சுலோகம் ஒன்றில் 'கம்பாதீரம்' என்பதற்கு பதிலாக 'பம்பாதீரம்' என்றிருக்கிறது. இது எவ்வளவு வித்யாஸமானது பாருங்கள். கம்பையென்றும் காஞ்சீயிலுள்ள ஒரு சிறு ஆறு தென்னாற்காட்டிற்கு பம்பாவென்று மாற்றப்படுகிறது. இது எவ்வளவு ஸந்தேகத்திற்கிடமானது. அப்படியே 'ஸப்தாத்னம்' என்ற தலைப்பின்கீழ் கொடுக்கப்பட்டிருக்கும் ஒரு சுலோகத்தில் 'பாதயோரல்யபாஜா' என்று காணப்படுகிறது அதற்கு அர்த்தம் விளங்கவில்லை. குறிப்பிலும் கொடுக்கப்படவில்லை முன்னுள்ள சுத்தி பத்திரத்திலும் இவை திருத்தப்படவில்லை. இன்னும் சில அக்ஷரப் பிழைகள் ஆங்காங்கு காணப்படுகின்றன. பிறகு வாக்கியங்களும் சிறு சுலோகங்களும் நிறைந்த விச்வாமித்ர சரித்திரம் இருக்கின்றது. இது மேலான தவத்தால் பிரம்மண்யத்தையடைந்த மகிமையை. வெளிப்படுத்துவதாகும், இது நமது ஆர்யமாணாக்கர்களுக்குத் தெரிய வேண்டியது. மிகவும் அவசியமானதே. நமது சிறுவர்கள் இதைப் பின்பற்றி நடந்தால் எவ்வளவோ மனோதைர்யத்தோடு அந்ய நாகரீகங்களை எதிர்க்க அனுகூலமாயிருக்கும். பிறகு விக்ரமார்க்க சரிதம். இதுவும் நமது சிறுவர்கள் படிக்கும் வழக்கத்திலுள்ளது. இவ்விதம் துண்டு துண்டான பாகங்களை யேற்படுத்தியிருந்தாலும் பெரும்பான்மையான பிசகு இல்லாமல் குறிப்பில் வெகு சந்தேகங்களை விளக்கி அச்சிட்டிருந்தால் பிள்ளைகளுக்கும் உபாத்தியாயர்களுக்கும் வெகு அனுகூலமாயிருக்கும். சில விஷயங்கள் உபாத்தியாயர்களே அறிந்துகொள்ள கஷ்டமாயிருக்கின்றன. இவைகளை நன்கு விளக்காததே கடைசியிலுள்ள குறிப்பின் குறையாகும், ஆதிகாலங்களில் பெரியோர்கள் 'எங்கு நமக்கு ஸந்தேகமோ அங்கேயே தான் அவருக்கும் ஸந்தேகம்' என்று வியாக்யான கர்த்தர்களைக் குறித்துச் சொல்லுவது வழக்கம். இந்த பழமொழியின் அர்த்தம் தான் ஷை குறிப்பில் அனுசரிக்கப்பட்டிருக்கிறது. சிறுவர்களுக்குப் பாடமாக வைத்திருக்கும் புஸ்தகமே இந்த நிலைமையில் அச்சிடப்பட்டிருந்தால் மற்ற சாமான்யர் அச்சிடும் புஸ்தகங்களைப்பற்றிச் சொல்லவேண்டியதென்ன. இதுவும் ஸம்ஸ்கிருதபாஷையின் துர்பாக்யம்போலும். எவ்வளவு பெரியோர்கள் அச்சிட்டாலும் ஸம்ஸ்கிருத புஸ்தகமென்றால் பிழைகள் தானேவந்து புகுந்து கொள்ளுகின்றனபோலும். எந்த புஸ்தகத்திற்கும் இதே கதிதான். இதுவும் ஸநாதன தர்மம்போலவே யிருக்கின்றது. இந்த மேலான தர்மத்திற்கும் பாஷைக்கும் ஏற்பட்டுள்ள ஸ்திதி எப்போது நீங்குமோ ஸ்வயம்பூவான ஸர்வேச்வரன் அருள் எப்போது கிடைக்குமோ! இனியாவது பாடங்கள் மாறுமலும் அக்ஷரங்கள் மாறுமலும் சுத்தமாய் ஸம்ஸ்கிருத பாடபுஸ்தகங்கள் வெளிவருமாறு ஸர்வேச்வரன் அருள்புரிவாராக.

பரீக்ஷையானபிறகு கேள்விகள் கடினமென்றும் பாடபுஸ்தகம் சரியில்லையென்றும் அதனால் பிள்ளைகள் தவறி விட்டார்கள் என்றும் குறைகூறி வியாஸங்கள் பத்திரிகைகளில் எழுதுவதைக் காட்டிலும் இப்போதே எழுதினால் மேல் அதிகாரிகள் தயையோடு கவனித்து ஏதாவது தங்களாலியன்ற நன்மைகளைச் செய்யக்கூடுமென்று எண்ணி எழுதலானோம்.

---

(3-ம் காலம் தொடர்ச்சி)

லூர் கோவிலை வசமாக்கிக் கொள்ள போர்டுக்கு அதிகாரமில்லையென்று தீர்மானிக்கப்பட்டது.

## க்ஷவரக்கடைகளால் விளையும் தீங்கு.

சிறிது காலத்திற்கு முன்பு நாவிதர்கள் 'ஆவணி அவிட்ட,' நன்னாளில் நமதிடையே அழகான க்ஷவரக்கத்திகளுடன் தங்கள் வேலைத்திறமையை, புத்தி சாதுர்யத்துடன் காண்பித்ததைப்பார்த்திருக்கிறோம். ஆனால் காலமுற்போக்கான, நவீன நாகரீக எழுச்சி, பழைய ஆலமரத்தடியில் அடக்கம் அமைதியுடன், ஆடம்பரமற்று, விநயத்துடனும், சாதுர்யத்துடனும் நாவிதத் தொழிலைக் கைக்கொண்டு நடத்தி வந்த பழைய நாவிதர்களை அறவே ஒதுக்கி, அந்தஸ்தாபனங்கள் இன்று நாடகமேடைகளுக்கிணங்க அழகிய நவீனப் படங்களுடனும் லீன் ஜோடனைகளுடனும் உட்காரவும், படுக்கவும், வஸதியான ஸோபாகளோடு கூட நாகரீக முற்போக்காளரான அநேக தற்கால யுவர்களால் கைப்பற்றப்பட்டது.

இந்நாகரீக அலங்கோலமானது பரிசுத்தமென்பதே இன்னதென்றறியாவண்ணம் மினுமினுப்பான பல சாமான்களையும், கையலம்பும் தட்டையுமே நிரூபிக்கிறது. நன்கு வெறுப்பைத் தரத்தக்க நிலையிலேயே இருக்கிறதென்றுகூறலாம். பிரபல நகரத்திலுள்ள நாவிதர்கள் தங்கள் கைகளை அலம்பும் விஷயத்திலும், போதுமான உதவிப்பொருள்களைகெடுதியற்ற நிலையில் அமைத்துக் கொள்ளுவதிலும் இன்னும் டாக்டர்களிடமிருந்து முறையே அநேகம் கற்கவேண்டியவர்களேயாவார்கள். கிராம நாவிதர்களோ ஆடம்பரமன்னியிலும் சுகாதார முறைக்கேற்றவாறும் உதவிப்பொருள்களைக்கையாண்டு வரும் காரணத்தினால் தான், சுகாதாரத்தைத்தேடும் நன் நோக்கமுள்ளவர்களாக மதிக்கப்படுகிறார்கள்.

ஆனால் அதிகாரிகளின் ஆதிக்யத்தின்கீழுள்ள தேசங்களில் அதிகாரிகளின் உத்திரவானது எந்த நேரத்திலும், சுகாதார முறைக்கேற்றவாறு, ஆச்சரியகரமாய் ஜனங்களால் கையாளப்பட்டு வருகிறது.

ஒரு புதிய 'நாசி டிகிரி'யின் படி பர்லினில் நாவிதர்கள் தங்களுடைய வாடிக்கைக்காரர்களுக்கு ஒரே 'பிரஷ்ஷை,' இருவர்களுக்கு மேல் உபயோகிப்பார்களேயானால் அவர்கள் மிகவும் பெரியதுகையைக் குற்றத்தின்பொருட்டுதண்டனையாகச்செலுத்தவேண்டுமென்று எச்சரிக்கப்பட்டுஅங்ஙனமே கையாளப்பட்டு வருகிறது. வாடிக்கைக்காரர்கள் அவர்களுடைய சொந்தபிரஷ்களைக்கொண்டு வரவேண்டும்; இல்லையேல், இந்திய கிராமாந்தரநாவிதர்களுக்கிணங்ககைகளைக்கொண்டே பிரஷ்இன்றி ஜலத்தினால் சுத்தம்செய்து கொள்ள வேண்டும். ஜர்மனியர்கள் இதுவே சுகாதார மென்றும், ஒரு பிரஷ் அநேகருக்கு உபயோகப்படுவதைவிட இதுசிறந்த ஆரோக்கியம்தரத்தக்க பழக்கமென்றும் உறுதி கூறுகிறார்கள்.

துரதிருஷ்ட வசமாக சென்னை பர்லின் அல்ல என்பதையே நிரூபிக்கிறோம். ஆனால் நகர நாவிதர்கள் அம்மாதிரியான கொள்கையைக் கூடிய சீக்கிரம் கையாளுவார்களா? அல்லது அதற்கு அஞ்சுவார்களா? என்பதை நன்கு கவனிப்போம்.

(இ-ஆ 31-5-38ல் "நான் ஒரு அதிகாரியானால்" என்ற தலைப்பில் ஹிந்து பத்திரிகையில் உதவித்தலையங்கமாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது) நமது நிருபர்.

## கோவில்களுக்கு நோட்டீஸ்.

சென்னை ஹிந்து மதஸ்தாபன போர்டார் இம்மாகாணத்திலுள்ள அநேக கோவில்களின் நிர்வாஹம் ஊழலாக இருப்பதுகாரணமாக அவைகளின் டிரஸ்டிகளை நீக்கி, போர்டு வசமாக்கிகொள்ள நோட்டீஸ் பிறப்பித்து வருகின்றனர். இதைக் கண்டிக்க நாகப்பட்டணத்தில் ஓர் கூட்டம் நடைபெற்றது. அவ்

215235




அநாவசியமாக ஏன் - -
- - அவஸ்தைப்படுகிறீர்கள்

அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து உங்கள் தொந்திரவை நிவர்த்தித்துக்கொள்ளுங்கள். சகலவிதமான வலிகளையும் போக்கவல்லது




அமிர்தாஞ்சனம்


## பரித்தியூர்.

### பசுபந்த யாகம்.

நன்னிலம் தாலூக்கா 96 நெ. பரித்தியூர் என்கிற சின்ன ஊரில் சென்ற ஈசுவரவருஷம் பங்குனி-மீ 20உக்கு (2-3-38) ஸ்திரவார தினம் ஒரு ஏழைப் பிரும்மணன் வைத்தினாத தீக்ஷிதருக்கு ஸாவித்ரசயனத்துடன் பசுபந்தயாகம் நடத்திவைத்ததும் ஷை யாகத்திற்கு சிவகாளிபுறம் பிர்ம்மஸ்ரீ அய்யா தீக்ஷிதர் முதலிய ஆகிதாக்னிகள் லெக்கு பேர்கள் சேர்ந்துவந்து பிரயோகங்கள் நடத்தியதும் அன்று பிரஸங்கபானுபிர்ம்மஸ்ரீ சேங்காலிபுரம் வைத்தினாத சாஸ்திரியள் கூடஇருந்து ஷை யாகம் நடந்த வைபவத்தையும் வேதங்களில் சொல்லிய சில தர்மங்களை யாவரும் அறியும்படி எளிய தமிழில் உபன்யாஸம் பண்ணியதும் பெருத்த ஆச்சரியம்.

ஸ்ரீ சங்கர ஜயந்தி வெகுதான்ய-௵ சித்திரை-மீ 21, 22, 23 செவ்வாய், புதன், வியாழன் இந்தத் தேதிகளில் ஷை பரித்தியூர் கோதண்டராம தீக்ஷதர் குடிசையில் ஸ்ரீ ஆசாரியாளுடைய ஜயந்தி உத்ஸவம், வேதபாருயணம் பாஷ்யபாடம் ஸ்ரீ ஆசார்யாளுடைய ஜனனகதனம் இவைகள்ரொம்ப உயர்வாக நடந்ததும் தவிர சித்திரைமீ 30உ (12—5—38) வியாழக்கிழமை அன்று நாஸிம்மஜயந்தி காலையில் காலம்சென்ற பிர்ம்மஸ்ரீ ராமாயணம் பரித்தியூர் கிருஷ்ண சாஸ்திரியாரவர்களால் உத்தாரணம் செய்யப்பட்ட ஸ்ரீராமன்சன்னதியில் காலை அபிஷேகம் அர்ச்சனை வேதபாராயணம் மாலையில் ஷை வைத்தினாத தீக்ஷதரால் ஸ்ரீ பாகவதம் ஏழாவது ஸ்கந்தத்திலுள்ள பிரக்லாத சரித்திரம் உபன்யாஸம் ராத்திரி கோனேரிராஜபுரம் மகா-ள-ள-ஸ்ரீ சாம்பசிவய்யர் குமாரன் கிருஷ்ணமூர்த்தியய்யர் தன் தெரிந்த பாகவதர்கள் ஸங்கீத வித்வான்கள் முதலிய அநேகம் நேயர்களை அழைத்துவந்து சேங்காலிபுரம் சிருகளத்தூர் வடவே அவெழிமங்கலம் பூங்குணம் முதலிய இடங்களிலிருந்து தர்சனத்திற்கு வந்த சுமார் 500 ஜனங்களும் ஆனந்திக்கும்படி நடத்திய பாகவத ஸம்ப்ரதாய உத்ஸவமும் நடுவில் ஆங்காங்கு கீர்த்தனங்களுக்கு அர்த்த உபன்யாஸங்களும் இந்த சின்ன கிருமத்தில் நடத்திவைத்தது ரொம்ப மெச்சத்தக்கது.

நமது நிருபர்.

## நாகூர்.

### பிராம்மண மஹாசபை.

வெகுதான்ய வருஷம் வைகாசி-மீ 5உ இச்சங்கத்தின் ஆதரவில் அதார்மிக சட்டங்களையும் மசோதாக்களையும் கண்டிக்கவும், காலஞ்சென்ற பெரியார் Prof. K. சுந்தராமஅய்யர் அவர்களின் மரணத்திற்கு அனுதாபம் காட்டவும் ஒரு அவசரக்கூட்டம் சங்க உபதலைவர் பிர்ம்மஸ்ரீ N. S. ராஜகோபாலய்யர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அடியிற்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. சென்னை சட்டசபையில் ராவ்பகதூர் M. C. ராஜா அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் "பஞ்சம ஆலயப்பிரவேச மசோதா" முதலிய மதவிரோதமான மசோதாக்கள் அசாஸ்திரீயமானதாலும், மதவிஷயங்களில் தலையிடுவதாயிருப்பதாலும் ஷை மசோதாக்களை இக்கூட்டம் பலமாகக் கண்டிப்பதுடன் ஷை மசோதாக்களை ஆலோசனைக்கே எடுத்துக்கொள்ளாமல் தடுக்க வேண்டுமென மேன்மைதங்கிய வைஸ்ராய் கவர்னர் அவர்களையும், சென்னை கவர்ன்மெண்டு பிரதமமந்திரி, சுகாதாரமந்திரி கனம் T. S. S. ராஜன் அவர்களையும் இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

2. ஆஸ்திக உலகத்திற்கு திலகம்போல் விளங்கிவந்தவரும் சாஸ்திர ஆராய்ச்சியில் மிக்கவூக்கங்கொண்டு, நமது ஆஸ்திக்ய மதத்திற்கும், சமூகத்திற்கும் வலுத்த ஆதாவாக இருந்து அறிய தொண்டாற்றிவந்தவர்களும், தார்மீகச்சிந்தை யுள்ளவர்களும், படிப்பிலும், விவேகத்திலும், ஆத்மகுணத்திலும் கர்மானுஷ்டானங்களை வெகுசிரத்தையோடுநடத்திக் காண்பித்ததிலும் முதன்மையான ஸ்தானத்தை அடைந்து மேன்மையுடன்விளங்கிய பிர்ம்மஸ்ரீ Prof K. சுந்தராமய்யர் அவர்கள் 5-5-38உ இரவு பாகதியடைந்ததைக் கேட்டு இக்கூட்டம் தாங்கொணு துக்கத்திலாழ்வதுடன் தனது ஆழ்ந்த அனுதாபத்தை அன்னவர்களின் குடும்பத்தார்களுக்கு தெரிவித்துக் கொள்வதுடன் இத்தகைய மஹநீயரின் பௌதீக சரீரம் மறைந்துபோனாலும் அவர்களுடைய கீர்த்திசரீரமானது தேசமெங்கும் அழியாமல் பரவிநின்று அவர்களுடைய உபதேசங்களைப் பரப்பிவருமென நினைத்துஒருவாறு இக்கூட்டம் மனம் தேறுதலடைகிறது.

ஷை அனுதாப தீர்மானத்தை ஷையார் குமாரர் திவான்பகதூர் பிரும்மஸ்ரீ K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களுக்கு அனுப்ப வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

ந. நி.

### ஸ்ரீசங்கர ஜயந்தி.

சென்ற வருடங்களைப்போல் இவ்வருஷமும் பிர்ம்மஸ்ரீ N. A. பட்டாபிராமய்யர் அவர்கள் கிரஹத்தில் 4-5-38 5-5-38 இரண்டு தினங்களிலும் மிக்கவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

4-5-38.... ஷையார் கிரஹத்தில் ஸ்ரீ ஆசார்யாள் திருஉருவப்படங்களை எழுந்தருளச் செய்து, ஷை சங்கத்துக்கு மெம்பர்களும் ஊரிலுள்ளபல ஆஸ்திக பிரபலஸ்தர்களும் வந்திருந்து, வெகுபக்தி சிரத்தையுடனும், உற்சாகத்துடனும், சகஸ்ரநாம அர்ச்சனைகளும் ஆராதனங்களும் செய்விக்கப்பட்டு, ருத்ரம் சமகம் முதலானவை வேதகோஷ்டிகளால் பாராயணம் செய்யப்பட்டு, பானக பூஜா, மஹோத்ஸவமும் செய்யப்பட்டு, பிரஸாதங்கள் முதலியன வழங்கப்பட்டபின், நாகூர் பிராம்மண சங்கத்துக்கு பாகவத கோஷ்டியாரால் பஜனைசெய்யப்பட்டு மிக்க குதூகலத்துடன் முடிவடைந்தது.

5-5-38உ இவ்வூர் சிவாலயத்தில் எழுந்தருளியிருக்கிற ஸ்ரீதக்ஷிணாமூர்த்திக்கு பிராமண சங்கத்தாரால் மஹா அபிஷேகம் செய்து, கருணாமூர்த்திக்கு அலங்காரம் செய்து, ஆராதனங்களும் செய்யப்பட்டது. ஷை வைபவத்திற்கு பக்தகோடிகள் அநேகம்பேர்கள் விஜயம் செய்திருந்தனர்.

எஸ். சுப்பிரமணிய அய்யர்,
சிகரெட்டரி.

### அபேதவாதிகளின் கண்டனம்.

ஹிந்து முஸ்லீம் ஸமரஸ விஷயமாகக் காங்கிரஸ், லீகுடன் நடத்திவரும் ராஜிப்பேச்சை அகில இந்திய அபேதவாதிகளின் கூட்டம் பலமாகக் கண்டிக்கிறது.


முக்கிய கவனிப்பு.

(3-வருஷத்திற்கு உத்திரவாதமுள்ளது.)

அசல் தங்க நகைகளைப்போன்ற "கன்னூஸ் ப்ளேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்கவும்.

தயாரிப்பவர்:— N. கன்னுசாமி பத்தர்,
பெரியதெரு, கும்பகோணம்.


Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

323

ஆர்யதர்மம்

ஸ

4 24

23

16-6-1938

215236

1457

215236

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 JUN 1938
MADRAS

323

Registered No. M. 2913

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)

குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

பு 25 | கும்பகோணம் கலி 5040 பகுதான்ய-ஞு ஆனி-மீ 2உ 1938ஞு ஜுலை-மீ 16உ | வெ 24

## ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0.

தனிப் பிரதி அணு 1.

**விளம்பர விகிதம்**

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணு. 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்

## வாரக்குறிப்புகள்.

(ஸ்ரீ வத்ஸ வெ. ஸோ. சர்மா.)

மத்யஸ்தமாயிருந்தாலே உசிதம்! ஜின்னு முஸ்லீம் லீகே முஸ்லீமுக்கு கதி என்கிறார். ஹிந்து ஸபையே ஹிந்துகளுக்கு (ராஜீய விஷயத்தில் மாத்திரம்) கதி என்று தொக்கி நிற்கிறதல்லவா? ஆனால் காங்கிரஸ், மத்ய மாகாண மந்திரி சண்டையில் ஓர் நீதிபதியை நியமித்தது போல் நியமித்தோ தானே பொதுவாக இருந்தோ இருவர் கக்ஷியையும் விசாரித்து முடிவு செய்தலே உசிதம் விட்டுக்கொடுத்தல் விபரீதம் என காந்திஜிக்கு தெரியாவிடினும் இது சகிக்கவில்லையா?

அடக்கம் வேண்டும்!! ஹிந்தி எதிர்ப்பு முதலிய இயக்கங்களில் தேசிய சாரணரும் அபிமானிகளும் அடங்காப்பிடாரிகளாக நடப்பது தேசிய ஸபையின் பலத்தைக்குறைக்கும் என்பதைத் தலைவர் உணர வேண்டும்! இந்தக்கலகத்தை அடக்காவிட்டால் பின்னர் இவர்களுக்கே ஆபத்தாகமுடியும். மதுரை முதலிய இடங்களில் எதிரிகள் கூட்டத்தைக் கலைக்க செய்தது அழகல்ல!

அற்பத்தனம்!! ஓர் கக்ஷியின் பலஹீனத்தைக்கண்டு ஆரவாரம் செய்வது வீரருக்கழகல்ல. குடந்தை ஸனாதனிகள் சண்டையைப் பெரிய எழுத்தில் முக்ய ஸ்தானத்தில் சில பத்ரிகைகள் ஸந்தோஷமாக வெளியிட்டது பெருந்தன்மைக்கழகல்ல!

ஊம் ராஜீநாமா!! வங்காடு குடிவார மசோதாவுக்கு கவர்னர் கையெழுத்திடாவிடில் ராஜீநாமா செய்து விடுவோமென மந்திரி ஸபை உருமுகிறது!

உண்மைதான், யாரால்! காங்கிரஸ் தேசிய ஸ்தாபனமல்ல என ஜின்னு கர்ஜிக்கிறார். அதில் சிறிது ஸத்யமுண்டு. ஆனால் சிறிது காலமாகச்சிந்திருத்தக்கார நாஸ்திகர் கையில் சிக்குண்டதால் அப்படியாயிற்று. லோக மான்யர், கோகலே, தாதாபாய், போன்றவர் காலத்திலில்லை!

ஸத்வாஸனை இல்லை!! ஸர். டி. மாதவ ராவ் பேரன் அற்பாயுளாக இறந்தார். அச்சமயம் 2 லக்ஷம் ரூபா காங்கிரஸுக்கு எழுதிக் கொடுத்தார். மதாபிமானமிருந்தால் நச்வரமான ராஜ்யத்தை விட்டு, சாச்வதமான தர்மத்திற்கு தவி தன்னைப்போல் அற்பாயுசாக இறவாமல் தர்ம பிரசாரத்திற்களித் திருப்பார்!

இருவரையும் விலக்கி அர்ச்சனை செய்க!! பல இடங்களில் அர்ச்சகரோ தர்மகர்த்தாக்களோ பரஸ்பர சண்டையிட்டு பகவானுக்கு அர்ச்சனை நடவாமல் நிறுத்துகின்றனர். அதுகாலை அதிகாரிகள் சண்டை முடிந்து வரும் வரை இவர்களை நீக்கி மூன்றுவதொருவரைக் கொண்டு காலத்திலர்ச்சனை நடத்துவது தர்மம். காசி விச்வநாதர் கோயில் அர்ச்சகர் சண்டையால் பூட்டிக்கிடப்பது லோக க்ஷேமத்திற்கல்ல!

பிழைப்பிற்கு வழியில்லை!! போலிக்கருணையால் தேசிய வாதிகள் செய்யும் அக்ரம பலத்தை விரைவில் நாடு அனுபவிக்கும்! ஹரிஜனன் என்றால் ஸர்வஸ்வத்யாகம் செய்தாவது ஆராதிக்கத்தக்கவனென்ற பைத்யக்கார நம்பிக்கை கொண்டு பல ஸபைகள் பொதுப்பணத்தால் அவர்களுக்கு இலவச துணி புத்தக சாப்பாடு கல்வி வீடு நிலம் முதலிய வைகளை அளித்து, உழுதோ வேலைசெய்தோ அவர்கள் பிழைக்காவண்ணம் கெடுக்கின்றனர்.

ஐட்லண்ட டல்லாண்டு! வானளாவ தேசிய ஸபையை பாம்பே விருந்தில் போற்றுகிறார்! எதற்கு? ஸமஷ்டியை மெதுவாக நுழைக்க!

ஸ்வாபிமானமற்ற ஜாதி எது? என்றால் நாம் கூறாமலே உலகமறியும்! அவரவர் கல்விக்கு ஆயிரக்கணக்காக தன உதவி செய்கின்றனர். பிராம்மணருக்கு பிராம்மணரோ செய்யும் உதவி இக்காலத்திலில்லை எனில்மற்றெவர்செய்யப்போகிறார்?

ஸபைக்கேற்றதல்ல! இதை அஸப்யமெனும் வடமொழி! அதைக்கூறில் சிலருக்கு கோபம் வரும்! பெரிய மனிதர் தன்னை அழைக்கும் ஸபை அல்லது ஸமூஹத்திற்கு பெருமையாக பேசுவது வழக்கம்! ஸ்ரீபெரும்புத்தூர் வைஷ்ணவ கலாசாலை, டாக்டர் ராஜ்ஜை அழைத்தது. அவர் கூறிய சொற்கள் அவரையோ அவர் போன்றவரையோ ஜன்மஜன்மத்திலும் அழைக்காதே என பாடம் கற்பித்தன

கல்விக்கேற்ற செயல்!! மைலை ஸம்ஸ்க்ருத காலேஜ் தலைவர் மஹாமஹோபாத்யாய கருங்குளம் ஸ்ரீ சாஸ்திரிகள்வாள் சென்ற குருவாரம் துரீயாச்ரமம் பெற்று ஸ்ரீ சங்கரானந்த சரஸ்வதிகளாக ஆனார்கள். இத்தகைய மஹா புருஷர்களால் அவ்வாச்ரமத்திற்கே ஓர் பெருமை எனலாம்!

முப்பதுஞ்சத்தியின் முதல் பாகம்.
"ஆர்யா சதகம்"
Mr. G. V. கணேசய்யர், B.A., B.L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.
100 பக்கங்களுக்குமேல் கொண்டது.
தபால் செலவு வேறு]. [விலை அணு 0—8—0
ஆர்யதர்மம் சந்தாதாரர்களுக்கு விலை அணு 6.
மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—
ஸ்ரீ ஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட்
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
(மூன்றாம் பதிப்பு)
பிராம்மணர்களின்கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், "வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆஹ்நிகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராம்மண குடும்பங்களிலும்இருக்கவேண்டியதவசியம்.
விலை ரூ. 1—8—0 வி. பி. பிரத்யேகம்.
கிடைக்குமிடம் :—
பப்ளிஷர்.
தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
கீழவிடையல், திருச்சிரா.

முக்கிய கவனிப்பு.
(3-வருஷத்திற்கு உத்திரவாதமுள்ளது.)
அசல் தங்க நகைகளைப்போன்ற "கன்னூஸ் ப்ளேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்கவும்.
தயாரிப்பவர்:— N. கன்னுசாமி பத்தர், பெரியதெரு, கும்பகோணம்.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:—T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்

## ஆஸ்திக அபிமானிகளுக்கு ஓர் விக்ஞாபனம்.

நம்முடைய தற்கால நெருக்கடியை தேசத்தில் தீவிர பிரசாரம் செய்து இன்னும் பாபபீருக்களான சாதுக்களுக்கு ஓர் தேறுதல் சொல்லவேண்டும். தற்காலத்தில் சனாதன தர்மத்தை அழித்து தேசோத்தாரணம் செய்து ராமராஜ்யத்தைத் ஸ்தாபிப்பதாய் பறைசாற்றிய காந்திக் கூட்டத்தார்களுடைய லீலா சேஷ்ட்டையை என்னென்று வர்ணிப்பது? இவர்கள் செய்த தியாகத்திற்கு பலன் கிடைத்ததும் கோவில்களின் ஆகமவிதியை கெடுத்தும் ஜாதி மத தர்மத்தின் பெருமையான மூலதர்மமான விவாஹ தர்மங்களை கெடுத்தும் இதையே தேசோத்தாரணமென்று சங்கேதமாய் கூட்டம்போட்டு நம்முடைய தேசத்தில் பரம ஆஸ்திக சிகாமணிகளான கோடிக்கணக்கான மெஜார்ட்டி இந்துக்களை மோசம் செய்து பேப்பர் பிரசாரத்தாலும் அதிகார ஜம்பத்தைக்கொண்டும் நமது தேசத்தை தற்காலம் ஆண்டுவருகிற கிருஸ்துவ மதஸ்தர்களுடைய அழிக்கமுடியாத சனாதன இந்து மதத்தை அழித்துவரும் நிலைமையில் நாம் இன்னும் தீர்க்க நித்திரையில் இருந்தால் ஏதோ சாபக்கேடென்றே எண்ணவேண்டும். ஆகையால் சனாதன பிரசார நிதி ஒன்று திரட்டவேண்டும் அதற்கு தியாக புருஷர்கள் ஓர் கோஷ்டியார் புறப்படவேண்டும். தற்காலத்திற்கு வெகு வேகமாய் பிரசாரம் செய்ய நான்கு ஸனாதனர்கள் தயார் செய்யவேண்டும். வெளியில் ஸனாதன பிரசாரகர் என்று தெரியவேண்டும். ஒவ்வொருகாரிலும் பதினைந்து பிரசாரகர்களுக்கு குறைவின்றி நான்கு பாகங்களாய் பிரித்துக்கொண்டு திக்விஜயம் செய்யவேண்டும். நாமகவே ஒவ்வொரு கிராமம் தவராமல் போய் பொது இடத்தில் கூட்டம் போட்டு தர்ம சாஸ்திரங்களின் பரம தாத்பர்யத்தை எடுத்து போதிக்கவேண்டும். அந்த கிராமத்தார்களால் சந்தோஷமாய் உபசரிக்கக்கூடிய தனத்தை பிரசார நிதியோடு சேர்த்துக்கொள்ளவேண்டும். அந்தந்த ஊர்களில் குழந்தைகளுக்கு போதிக்கவேண்டிய வித்தையில் ஸனாதன வித்யை போதிக்க ஓர் ஓர் பள்ளிக்கூடம் நிறுவவேண்டும். நமது புனித தேசமான பாரததேசத்தின் சீர்கேட்டுக்கு நவீன கல்வியின் விஷமே காரணம். ஆகையால் முக்யமாய் நம்முடைய சபையே ஸனாதந கல்விச்சாலைகள். இவ்விதமாயுள்ள வித்யாசாலைகளில் வேதபாகம் தவிர மற்ற பாகங்களை மற்ற இதரர்களுக்கும் பொதுவாகவே போதிக்கவேண்டும். தற்காலத்தில் நமது தேசத்தில் பரஸ்பர விரோத உணர்ச்சியை அறவே ஒழிக்கவேண்டும். இத்துடன் கூட பஞ்சமர்களை உத்தாரணம் செய்யவே புறப்பட்டதாக பாசாங்கு செய்யும் சீர்திருத்த வெறியர்களுடைய வேஷத்தை வெளியாக்குவதற்கு அவர்களுடைய தேவையையும் நாம் தெரிந்து சாஸ்திர விருத்தமன்னியில் அவர்களுக்குச்செய்யவேண்டிய உபகாரங்களை தாராளமாக செய்யவேண்டும் நாம் விரும்புவது என்னவென்றால் ஒவ்வொரு மதஸ்தர்களும் அவரவர்கள் மத பக்தியை விசேஷமாய் அனுஷ்டிக்கவேண்டுமென்பதே. அதுபோலவே இதர மதஸ்தர்களும் சட்டசபை முதலான இடங்களில் போலி சீர்திருத்த வெறியர்களுடைய ஆர்பாட்டங்களில் மயங்கி இதர மதஸ்தர்களுடைய மதம் கெடுவதில் பிரியம் காட்டுவது அடாத செய்கை என்பதை இதன் மூலம் அறிந்துகொள்ளவேண்டியது. இந்த போலி தேசபக்தர்களை காட்டிலும் நம்முடையதேசம் சீக்கிரம் சுதந்திரம் அடைந்து நாம் எல்லோருமே சகோதரர்கள்போல் வர்ணாச்ரமதர்ம விரோதமன்னியில் வாழவேண்டுமென்ற நோக்கத்தில் கொஞ்சம்கூட குறைவில்லாவர்களென்பதை இதன்மூலம் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தற்காலம் நம்முடைய மத பிரசாரத்திற்கு வேறு விசேஷ நிதியில்லாத முறையில் நம்முடைய சுபசோபன காலங்களில் அனாவசிய ஆடம்பர செலவையாவது சுருக்கி ஸனாதன பிரசார சம்பாவனையென்று தாராளமாய் ஓர் சம்பாவனை ஏற்படுத்தி அந்த சம்பாவனைகளை பூருவும் வசூல்செய்து நமது மாகாண ஸனாதனதர்ம அத்யக்ஷகருக்கு அனுப்பி நமது ஸனாதன பத்ரிகையிலும் பிரசுரம் செய்யவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஜி. எ. வி சாஸ்திரி.

## ஆர்யர்களின் ஆசார ரஹஸ்யம்.

(பிராணாயாமம்)

T. V. தர்மராஜ கனபாடிகள்
வேதபாடசாலை திருக்கோகர்ணம்.

(முன் தொடர்ச்சி)

அச்சுழுமுனையின் அடியில் எட்டுச் சுற்று சுற்றிக்கொண்டு தனது முகத்தை அச் சுழுமுனையில் காற்று நுழையும் வழியில் அடைத்துவைத்திருக்கிறது. அதில் பிராணவாயு நுழைந்திட்டால் அதைப் புசித்துவிடும். இவ் வாயுவைப் புசித்தலாற்றான் இதைப் பாம்பென உருவகப்படுத்தி அழைப்பது வழக்கம். அக்குண்டலினி எவ்வளவு வாயுவை உட்கொள்ளக்கூடுமோ அவ்வளவுக்கு மேலான காற்று உள்நிரம்ப அங்கு சுழுமுனையில் காற்றேறும். ஆதலாற்றான் முதலில் கும்பகத்தால் காயாக்னி என்றும் பித்த கோசத்தைத் தூண்டிப் பிரகாசம் செய்விக்க அதனால் கொளுத்தப்பட்ட அக்குண்டலினி மெதுவாய் அவ்விடம் விட்டு அகலநேரிடும். இனி அக்னி சம்மந்தத்தால் லேசான வாயு சுழுமுனையில் நுழையும். முதலில் காயாக்னி விருத்திசெய்தவுடன் இவனுக்குப்பெரிய பசி ஒன்றுண்டாம். அதற்கு நல்லுணவு ஏதேனும் கொடுக்கவேண்டும். அங்ஙனமன்றி ஏதேனும் விபரீதமான கள்ளு முதலிய உணவுகளை கொடுத்திட்டால் அந்தோ! நெடுநாளாய் வேண்டிப் பாடுபட்டுழைத்து எதிர்பார்த்த நல்லறிவு கெட்டு மிகக் கடையான வழியிற் சிதா நேரிடும். ஆதலாற்றான் யோகிகளுக்கு ஆசார நியமமும் சொல்லப்பட்டதறிக. வாயுவை அற்பகாலம் உட்புறம் தடுத்தால் அது சரீரமெல்லாம் வியாபிக்காது. உட்புறமெல்லாம் வியாபிக்காதொழிந்தால் அது அதிக சூக்ஷ்ம சுழுமுனையில் நுழையாது. சரீரத்தில் சுவாசம் தங்கி ஆயுட் பெருக்கம் கைகூடாது. ஆயின் கும்பகம் வெகுகாலம் நிற்கும் அப்பியாசம் செய்திடவேண்டும் இனி முடிவாகக் கூறில் பிராணாயாமம் என்பது கும்பகமே என முடியும். அது முதலிற்றானே சுலபமாகாது. அதை யப்பியசிக்கும் முறையானது தொடக்கத்தில் மூன்று மாத்திரைகள் உட்புறம் சுவாசம் இருக்கச்செய்யவேண்டும். அப்புறம் ஆறு மாத்திரைகள் பிறகு பன்னிரெண்டு மாத்திரைகள். பிறகு இருபத்தினான்கு என்பதாதி முறையால் பூர்த்திசெய்திடவேண்டும். இக்காலத்தும் வடநாடுகளில் சிலர் தண்ணீரில் முழுகி ஒரு தினம், சிலவிடம் இரண்டு தினங்கள் மூச்சடக்கி இருப்பதாய்க் கேள்வி, முற்காலத்து மாதவத்தோர் அநேக வருஷங்களுக்குப் பிறகு சமாதியை ஒத்திட்டுத் தான் ரேசகத்தை முடித்தார்களாம். ஆயின் யோகநூல்களுக்குப் பிராணனுயுள்ளது பிராணயாம ரகஸ்யமேயன்றி வேறில்லை.

பிராணயாமம் செய்த உடனே வலது காதைத் தொடவேண்டும். இங்கு யாம் எடுத்தோதியது பிராணயாமப் பயனில் ஓர் சிறுபாகமே. அதிகத்தை அறியவிரும்புவோர் யோகநூல்களையும் வைத்திய நூல்களையும் ஆராய்ந்திடல் வேண்டும். சுருதி ஸ்மிருதி, புராணங்கள், ஆகமங்கள், இவைகளிலும் இதன் மாண்பை அறியலாம். இவ்வுண்மைகளை கண்ட புத்தமதத்திலுள்ளாரும் இப் பிராணயாம விஷயத்தில் மிகவும் சிரத்தையுடன் பாடுபடுவாராயினர். இஃது நமது ஆரிய ஸ்ரேஷ்டர் அனுஷ்டிக்கும் சந்தியாவந்தனத்தின் ஒரு அங்கமாம். ஓர் அங்கம் இங்ஙனமாயின் இவ்வாறு பற்பல அங்கங்களுடன் கூடிய அங்கியாகிய ஆர்யாசாரத்தின் பெருமை அளவிலடங்கிடுமோ! ஆரியர்காள்! நமது பெருமையைக் கண்டு நட்புறுங்கள். இப் பிராணயாமம் மெதுவாய் அப்பியசித்து வரவேண்டும் என்றேம். ஆயின் இதை கைவிடாது கொண்டாடுவீராக.

(முற்றிற்று.)

## சென்னை.

1. தருவை பெரியார் ஆப்திகம்:—125 பாகவத ஸப்தாஹங்கள் செய்து ஸ்ரீ கிருஷ்ண ஸாயுஜ்யமடைந்த ஸ்ரீ தருவை லக்ஷ்மீநாராயண சாஸ்திரிகள் ஆப்திகத்தை முன்னிட்டு அவர் சிஷ்யரான ஸ்ரீ ஆஞ்சநேயர் B.A., அவர்கள் கிருபாலயத்தில் காலையில் ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மாவைக்கொண்டு ஸ்ரீ பாகவத தசமஸ்கந்த பாராயண ஆரம்பம்செய்து, முடித்து நூற்றுக் கணக்கான பக்தர்களுக்கு அறுசுவை அன்னமளித்தார். மாலையில் ஸ்ரீ சர்மா அவர்கள் அப்பெரியாரின் குணகணங்களை வர்ணித்து உபன்யஸிக்க பிரும்ம ஸ்ரீ ஹரிஹர சுப்ரமண்ய சாஸ்திரிகள், பாகவத மஹிமையைப்பற்றி உபன்யஸித்தார். இரவு போஜனத்திற்கு பிறகுபிரும்மஸ்ரீ ராமச்சந்திரஹரியின் பஜனைகோஷ்டி பஜனை நடந்தது. தஞ்சை ஸ்வாமிகளென்றும் வைதிக தர்ம கைங்கர்ய ஸபை ஆரம்பகரான ஸ்ரீ பரதராஜ ஸ்வாமிகள் விஜயம் செய்திருந்தார்கள்.

2. தர்மபிரசாரஆரம்பம்:-பதினெண்புராண ப்ரவசந ஸபை தலைவர் இரண்டுமாத விராமத்திற்கு பிறகு 15உ ஸ்ரீசங்கர மடத்தில் மஹாஸ்காந்தம், ஸேதுமாஹாத்ம்ய கண்டம். 16உ மைலாப்பூரில் ஸ்ரீ பாகவத தசமஸ்கந்தமும், 19உ கீதாச்ரவண பக்த ஸபையில் ஸ்ரீ பாகவதம் ஐந்தாம் ஸ்கந்தமும் 20, 21 மாம்பலம் பஞ்சநதத்தில் தேவீபாகவத இரண்டாம் ஸ்கந்தமும் உபன்யஸிப்பார்கள்.

3. அஸ்திவாரக்கல்!—மாம்பலத்தில் ஓர் ஆலயங்கட்ட ஸ்ரீ T. M. கிருஷ்ணஸாமி அய்யர் ஸ்ரீ K. பாலசுப்பிரமண்யய்யர் கடலங்குடி ஸ்ரீ நடேச சாஸ்திரிகள் ஸ்ரீ ராமச்சந்திரஹரிஹர முதலியோர் சென்ற குருவாரம் அஸ்திவாரக்கல் நாட்டினர்கள்.

4. ஸப்தாஹம்:—திருவல்லிக்கேணி பாண்டுரங்க நிலையத்தில் ஸ்ரீ ஹரிஹர சுப்பிரமண்ய சாஸ்திரிகளால் ஸோமவாரம் முதல் நடக்கிறது.

க. நி.

K. ஸ்ரீனிவாஸ சாஸ்திரிகள்.

பிரசுரங்கள்.

| | | | |
|---|---|---|---|
| சிவகீதிமாலா. | 0 | 4 | |
| ராமாஷ்டோத்தரம். | 0 | 1 | 0 |
| சங்கர பகவத்பாதாள். | 0 | 8 | 0 |
| தமிழ் சிக்ரேகா. | 0 | 4 | 0 |

கிடைக்குமிடம்:— ஜனார்த்தன அச்சுக்கூடம லிமிடெட், டவுன் ஹைஸ்கூல் கும்பகோணம்.



## கருங்குளம் மஹாமஹோபாத்யாய, ஸ்ரீகிருஷ்ண சாஸ்திரிகள். ஸன்யாஸம் பெற்றார்.

சென்னை மைலாப்பூர் ஸம்ஸ்கிருத காலேஜ் பிரின்ஸிபாலாக இருந்து வந்த மஹாமஹோபாத்யாய ப்ரம்மஸ்ரீ கே. எஸ். கிருஷ்ணசாஸ்திரிகளவர்கள் சென்னையில் டிஸம்பர் மாஸத்தில் நடந்த அகில பாரதீய வித்வத் பரிஷத்திற்குப்பிறகு தன்னூரான திருநெல்வேலி ஜில்லா கருங்குளம் கிராமத்திற்கு வந்து விட்டார்கள். தன் சரீர ஸ்திதியை உத்தேசித்து லீவ் எடுத்துக்கொள்ளும்படி ஏற்பட்டது. அவர்களுக்கு விசேஷ உபசாரத்துடன் வழியனுப்ப வேண்டுமென்று காலேஜ் அதிகாரிகள் பலமுறை பிரயத்தனம்செய்தும் ஸ்ரீமத் சாஸ்திரிகளவர்களுக்கு சென்னைப்பட்டணம் வரை போய்வர சரீரம் இடங்கொடுக்கவில்லை. நாளது ஜூன் 8உ ராத்திரி தனக்கு மிகவும் பலஹீனமேற்பட்டு விட்டதாகத் தோன்றினபடியால் மறுநாள் ஆபத்விதானமாக ஸன்யாஸம் பெறவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டார். ஆனால்மறுநாள் கொஞ்சம் கொஞ்சம் தெளிந்தபடியால் கிரம ஸன்யாஸமாகவே எடுத்துக்கொள்ளலாமென்று அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் தோன்றினபடியால் அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்து வந்தன. 10உ அதாவது வெள்ளிக்கிழமை காலையில் விதிவத்தாக கிரமஸன்யாஸமே நடந்தது. அவர்களுடைய வைதுஷ்யத்திற்கும் சிரத்தைக்கும் ஏற்பஸகல கார்யங்களும் நிர்விக்னமாய் அதிவிமர்சையாய் நடந்தன. சுத்தமல்லி ஸ்வாமிகளென்றுசொல்லப்படுகிற ஸ்ரீமத் பரப்ரஹ்மானந்த ஸரஸ்வதீஸ்வாமிகளவர்கள் பிரம்ம மஹாவித்யோபதேசாதிகளை கிரமப்படி செய்து வைத்தார்கள். ஸன்யாஸஸ்வீகாரத்திற்குபிறகு,ஸ்ரீமத் சாஸ்திரிகளவர்களுடைய பக்தியையும்ஸ்ரீமத் பரமாசார்யாளான ஸ்ரீமத் சங்கர பகவத்பாதாசார்யாரவர்களுடைய ப்ரம்ம ஸூத்ராதி பாஷ்யங்களைப்பிரவசனம் செய்யும் அத்புதமான ஸாமர்த்தியத்தையும் கவனித்து இவர்கள்ஸ்ரீமத்சங்கரரின் விசேஷ அனுக்ரஹபாத்திரமேயென்று சொல்லி ஸ்ரீ சங்கரானந்த ஸரஸ்வதீ என்ற யோகபட்டத்தையும் குரு ஸ்வாமிகள் அளித்தார்கள். ஸன்யாஸத்திற்கு பிறகு சரீரமும் கொஞ்சம் கொஞ்சமாக தெளிந்துவருவதாகவே தோன்றுகிறது. நம் தக்ஷிண தேசத்தார்களின் அதிருஷ்டவசத்தால் இப்பெரியார் த்ருடகாத்திரராகி இன்னம் வெகுநாள் லோக க்ஷேமார்த்தம் பாஷ்யாதி பிரவசனங்களை செய்துகொண்டு இருப்பார்களென்று யாவராலும் பிரார்த்திக்கப்படுகிறது.

### மற்றொரு பெரியார்.

கும்பகோணம் டவுன் ஹைஸ்கூலில் ஸம்ஸ்கிருத பண்டிதராகவிருந்து ஸ்ரீமத் பாகவதாதி பிரவசனத்தில் விசேஷ க்யாதிபெற்றிருக்கிற இஞ்சிக்கொல்லைப்ரஹ்மஸ்ரீ சிவராம கிருஷ்ண சாஸ்திரிகளவர்கள் ஜூன்மீ 9உ வியாழக்கிழமை தினம் திருநெல்வேலி ஜில்லா ஆழ்வார் திருநகரியில் யதாக்கிரமமாக ஸன்யாஸாசிரமஸ்வீகாரம் செய்துகொண்டார்கள். மறுநாள் கருங்குளத்தில் ப்ரஹ்மஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகளவர்கள் செய்துகொண்ட ஸன்யாஸத்திற்கும் போயிருந்து அன்று ஸாயங்காலம் தத்வஞானம் என்ற விஷயமாக அரியதோர் உபன்யாஸம் செய்தார்கள். கருங்குளம் ஸ்ரீ ஸ்வாமிகளவர்களும் தன் சரீர ஸ்திதியைப் பொருட்படுத்தாமல் உபன்யாஸத்திற்கு வந்திருந்ததுடன் கடைசியில் அதே விஷயமாக தன் வழக்கமான தோரணையில் கொஞ்சநேரம் பிரவசனம் செய்தார்களென்பதும் குறிப்பிடத்தக்கது.

நமது நிருபர்.

## திருக்கோவிலூர்.

### ஆரியதர்மாபிவிருத்தினீ பிராம்மண ஸபா.

வெகுதான்ய-ஹு சித்திரை-மீ 1உ (13—4—38ல்)ஷை ஸபையில் ஓர் விசேஷக் கூட்டம் நடைபெற்றது. அது சமயம் ஷை ஸபையின் பிரஸிடண்டு பிர்மஸ்ரீ வக்கீல் நாராயணஸாமி அய்யர் அவர்களால் டில்லி ஸபையில் ஸ்ரீமான் பி. தாஸ். அவர்களால் கொண்டுவந்திருக்கும் சாரதாச் சட்டத் திருத்த மசோதாவிற்கு கனம் வைஸ்ராய் அவர்கள் அங்கீகாரம் கொடுக்கக்கூடாதென்றும்,சென்னை சட்டஸபையில் எம். ஸி. ராஜாவால் கொண்டுவரப்பட்டிருக்கும் ஆலயப்பிரவேச மசோதாவைச் சட்டமாக்கக் கூடாதென்றும் பிரேரேபிக்கப்பட்டு ஸபையில் ஏகமனதாய் அங்கீகரிக்கப்பட்டு தீர்மானம் செய்து ஷை தீர்மானத்தையொட்டி மகா ஜனங்களால் மகஜரில் கையெழுத்து வாங்கப்பட்டி ஷை மகஜரை டில்லி மெட்ராஸ் இரு சட்டஸபைகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது.

ஸ்ரீநிவாஸ சாஸ்திரியள்.

## மஹாமஹோபாத்யாய பட்டம்.

ராஜ சக்ரவர்த்தியின் பிறந்த தினத்தில், குடந்தை நகரவாஸியான வித்வான் காபே ஸ்ரீ ராமசந்திராசாரியருக்கு மஹாமஹோபாத்யாய பிருதம் கொடுக்கப்பட்டிருப்பதை அறிந்து ஸந்தோஷிக்கிறோம்.

## ஹிந்தி எதிர்ப்பும் ஸத்யாக்ரஹமும்.

### தொடர்ந்து நடக்கிறது.

சென்னையில் பிரதமமந்திரியின் வீட்டு வாசலில் ஹிந்தி எதிர்ப்புக்காரர்களின் ஸத்யாக்ரஹம் நீடித்து நடந்துவருகிறது; தினமும் சிலர் கைது செய்யப்பட்டு வருகிறார்கள். வெளியூரிலிருந்து தொண்டர் உதவி கிடைத்து வருகிறது.

## சலுகை காட்ட முடியாது!

பம்பாய் ஸர்வகலாசாலையில், தீண்டாத ஜாதி மாணாக்கர்களின் பரீக்ஷாக்கட்டணம் வகையராக்களைக் குறைக்கவேண்டுமென்று கொண்டுவரப்பட்ட தீர்மானம் தோற்றுப் போயிற்று. ஒரு ஜாதியாருக்குமட்டும் தனியாகச் சலுகைகாட்ட முடியாதென்று தீர்மானிக்கப்பட்டது.

## தகராறு.

ராஜீயக் கைதிகள் விடுதலை விஷயமாக ஸ்ரீமான் காந்தி வங்காள மந்திரிகளுடன் பேச்சு நடத்தியது அவ்வளவாகப் பயன்படாதென்று தெரிகிறது. காந்திஜிக்கும், வங்கமந்திரிகளுக்கும் பலத்த அபிப்ராய பேதம் ஏற்பட்டிருப்பதாக சொல்லப்படுகிறது.

## குடந்தையில் கனம் கிரி.

தொழில் இலாகா மந்திரியான கனம் வேதகிரி அவர்கள் குடந்தை ஸெண்டிரல் கோவாபரேடிவ் பாங்கின் வெள்ளிவிழாவில் தலைமைவஹிக்க வந்திருந்தார். முனிஸிபாலிடியாராலும் பற்பல தொழிலாளிகளாலும் உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது.

## தீண்டாதாரின் சண்டித்தனம்.

நாஸிக்கு ஸமீபமான யோலா என்ற நகர முனிஸிபாலிடிக்குள்பட்ட எல்லாப் பொதுக் கிணறுகளிலும் தீண்டாதார் ஜலம் எடுக்க உரிமை உண்டென்று முனிஸிபாலிடி தீர்மானித்தது. ஆனால் ஜாதி ஹிந்துக்கள் இதை எதிர்க்கிறார்கள். தீண்டாதார் பலாத்காரமாக கிணறுகளிலிருந்து ஜலம் எடுக்கத் தீர்மானித்திருக்கிறார்களாம். அந்தக் கிணறுகளை ஜாதி ஹிந்துக்களும் உபயோகிக்க முடியாமல் தடுக்கவேண்டுமென்றும் அவர்கள் முடிவு செய்திருக்கிறார்களாம். என்னே ? துஷ்டத்தனம் ?

## ஹிந்து—முஸ்லீம் ஒற்றுமை.

### ஸமரஸம் முறிந்துவிட்டதா ?

ஹிந்து—முஸ்லீம் ஸமரஸ விஷயமாக ஜின்னாவும், போஸும் நடத்திய ஸமரஸப் பேச்சு பயனற்றதாகிவிட்டதாகக் கருதப்படுகிறது. இரண்டு வகுப்புத்தலைவர்களும் பரஸ்பரம் தாக்கிக்கொள்ளும் வேலையில் இப்போது இறங்கிவிட்டார்கள்.

ஜின்னா-நேரு கடிதங்களும் வெளிவந்திருக்கின்றன.

## நீண்ட சுற்றுப்பிரயாணம்?

கனம் பிரதம மந்திரி ஸி. ஆர். இந்த மாகாணத்தில் நீண்ட சுற்றுப்பிரயாணம் செய்யப் புறப்பட்டுவிட்டார். தற்போது அவர் மங்களூர் பக்கத்தில் சுற்றிவருகிறார். தமிழ்தேசம் பலவிடங்களிலும் அவர் வர ஏற்பாடு நடக்கிறது. பிரதம மந்திரி வீட்டு வாசலில் தற்போது மறியல் நடந்துவருவதை ஸமாளிக்கவே இந்த சுற்றுப்பிரயாணமென்று சிலர் நினைக்கின்றனர்.

ஸ்ரீ மஹாபாரதச் சுருக்கம்
(ஆதிபர்வம்.)

ஸ்ரீமான் சேங்காலிபுரம் பஞ்சாபகேசய்யர் வகளால் மூலத்திலுள்ளபடியே சுருக்கமாக எளியநடையில் எழுதப்பட்டது. பாரதக் கதைகளை இலகுவில் அறிய இன்றியமையாததென்று மேதாவிகளால் புகழப்பெற்றது.

விலை அணா 0 8 0

மூகபஞ்சசதியின் இரண்டாம் பாகம்.
“ கடாக்ஷ சதகம் ”

Mr. G. V. கணேசய்யர், B. A., B. L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷக் குறிப்புகளுடன் கூடியது.

தபால் செலவு வேறு] [விலை அணா 0—8—0

மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—
ஸ்ரீ ஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட்,
டவுன்ஹைஸ்கூல் ரோடு. கும்பகோணம்.

## 31-5-38-ஹு திங்கட்கிழமை கும்பகோணத்தில் அமுலிலிருந்த மொத்தவிலையின். விபரம்.

| | |
|---|---|
| நெல்லு முதல்தரம் வெள்ளைசிறுமணி125 பவுண்டு உள்ள மூட்டை | ரூ 4-0-0 |
| ஷை இரண்டாந் தரம் நெல்லூர்சம்பா 125 பவுண்டு உள்ள மூட்டை | ரூ 3—3—0 |
| அரிசிமுதல்தரம் வெள்ளைசிறுமணி 190பவுண்டு உள்ள மூட்டை | ரூ 9—2—0 |
| ஷை இரண்டாம் தரம் நெல்லூர்சம்ப 190 பவுண்டு உள்ள மூட்டை | ரூ 7—2—0 |
| தேங்காய் எண்ணை 36பவுண்டு நிறை | ரூ 4—5—0 |

ஷை தாசில்தார்.




परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

# ஆர்யதர்மம்.

பகுதான்ய-ஞூ ஆனி-மீ 2உ


## கட்டாய ஹிந்தி பயிற்சியும் அரசாங்க அமுலின் வரையறையும்.

சென்னை மாகாண அரசாங்கத்தார் செய்துள்ள கட்டாய ஹிந்தி பயிற்சி உத்திரவைப்பற்றி வக்கீல் ஸ்ரீமான் டி. ஆர். வெங்கடராம சாஸ்திரியார் வெளியிட்டுள்ள அறிக்கையானது மிகவும் கவனிக்கத்தக்கது. உத்திரவை ஆதரித்து முதல் மந்திரி ஸ்ரீமான் ராஜகோபாலாசாரியார் பிறப்பித்திருக்கும் அறிக்கையில் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசாங்கத்திற்கு, விரிவான கல்வியை அந்த ஜனங்களுக்குப்பயிற்சிசெய்விக்க பாத்தியம் உண்டென்பதில் ஸந்தேஹமில்லைபோல் தெரிவித்திருக்கிறார். இந்த அறிக்கையில் கண்ட விஷயம் சரியா என்றும் அரசாங்கத்தாருக்கு அவ்விதம் விரிவான அதிகாரம் உண்டா என்றும் ஸ்ரீமான் சாஸ்திரியார் சர்ச்சை செய்திருக்கிறார்.

ஜனநாயகங்களில், ஜனங்கள் தங்கள் பிரதிநிதிகளை சட்டஸபைக்கு அனுப்புவதற்காக தங்கள் வோட்டுகளைக் கொடுக்கும் போது தங்கள் உடல் பொருள் ஆவி இவைகள் மூன்றையும் அவர்களுக்கு அர்ப்பணம் செய்துவிடுகிறார்களா என்பது முக்கியமான கேள்வி. தங்களுடைய உரிமைகள் யாவற்றையும் அவ்விதம் தங்கள் பிரதிநிதிகளிடம் தியாகம் செய்து விட்டு தங்களை அடிமைகளாக ஆக்கிக்கொள்ளுகிறதென்கிற கொள்கை உண்மையான ஜனநாயக ஆக்ஷி நடந்து வரும் ஒரு தேசத்திலும் அனுஷ்டானத்தில் இல்லையென்பது நிதர்சனம். அவ்விதம் அனுஷ்டானத்திலுள்ள தேசங்களில் வழங்கும் அரசமுறை ஜனநாயகமல்ல. ஜன அடிமைத்தனமுள்ள ஏகசக்ராதிபத்தியமே. ஜனநாயகங்களின் முக்ய மர்மஸ்தானமானது ஜனங்களின் ஸ்வதந்திர உரிமைதான். அந்த உரிமை போய் விட்டால் ஜனநாயகத்தின் ஆத்மா போய் அது ம்ருதமாகிவிடுகிறது. அப்பால் அது ஜனநாயகமல்ல.

அரசாங்கத்தார் ஜனங்களுடைய முக்கியமான உரிமைகளில் பிரவேசித்தது ஜனங்களுக்கு நன்மை செய்யும் பக்ஷத்தில் அவ்விதமான பிரவேசமானது ஜனநாயகக்கொள்கைக்கு விருத்தமா என்று கேட்கஇடமில்லை. ஜனங்களின் ஸ்வபாவ உரிமைகளில் பிரவேசிப்பதே ஜனநாயகக் கொள்கைக்கு விருத்தம். நன்மைஏற்பட்டால் அந்தப்பிரவேசத்தை அனுமதிக்கலாமா அல்லது தீமை ஏற்பட்டால் பஹிஷ்கரிக்கலாமா என்ற கேள்விக்கு இடமில்லை. ஸ்வபாவ உரிமைகளை அனுஷ்டிப்பதில் ஜனங்களுக்கு ஸுகதுக்கங்கள் ஸம்பவிக்கலாம். அவ்விதம் சுக துக்கங்களை தங்களுக்குத்தாங்களே ஏற்படுத்திக்கொள்ளும் பாத்தியமே ஒரு முக்கியமான ஜனநாயக உரிமை.

உதாஹரணமாக, மாமிச போஜனத்தை எடுத்துக்கொள்ளுவோம். ஜனங்களின் பெரும்பான்மையோர் மாமிச பக்ஷிணிகளாகவே இருக்கிறார்கள் என்பதில் ஸந்தேஹமில்லை. அவர்கள் மாமிசம் சாப்பிட்டாலொழிய தேக வலிமை ஏற்படாதென்றும் தேசத்தைப்பாதுகாக்கும் சக்தி உண்டாகாதென்றும் ஜனங்கள் எல்லோர்களும் மாமிசம் சாப்பிட்டாலொழிய தேசத்திற்கு முன்னேற்றம் உண்டாகாதென்றும் நம்புகிறார்கள். ஆயினும் அவர்களின் பிரதிநிதிகளான அரசாங்கத்தார் எல்லா ஜனங்களும் மாமிசம் சாப்பிட வேண்டுமென்று உத்திரவு செய்ய பாத்தியமுண்டா? அவ்விதம் பாத்தியமுண்டென்று எவர்களும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். மேற்குதேசத்தார்கள் உடுத்துக்கொள்ளுவது போல் நம் நாட்டு ஜனங்கள் எல்லாரும் உடுத்திக்கொள்வது தான் தேசத்திற்கு நன்மை என்று பெரும்பான்மையான பிரதிநிதிகள் அபிப்பிராயப்பட்டால் தேசமெங்கும் அவ்விதம் உடுத்திக்கொள்ள வேண்டுமென்று உத்திரவு செய்யக்கூடுமா? இதே விதமாக இப்போதுள்ள நம் அரசாங்கத்தார் ஜனங்களெல்லோரும் ஹிந்தி பாஷை கற்றுக்கொள்ளவேண்டியது அவசியமென்றும் அது இல்லாவிடில் ஜனங்களின் கல்வி பூர்த்தியாகாதென்றும் எண்ணுவது போல் ஆங்கிலேய பாஷையாவது ஜனங்களுக்கும் அவசியமென்றும் அது உலகம் பூராவும் செலாவணி ஆகும் பாஷை என்றும் நம்புவோர்கள் பலர்கள் இருக்கிறார்கள் என்பது பிரத்தியக்ஷம். அவர்களின் பிரதிநிதிகள், அரசாங்கத்தை வகித்தால் எல்லா ஜனங்களும் ஆங்கிலேய பாஷை கற்கவேண்டுமென்று உத்திரவு இடலாமா? அவ்விதம் மாறி மாறி வரும் ஒவ்வொரு அரசாங்கமும் தங்கள் தங்கள் கொள்கைகளின் படி உத்திரவிட்டால் ஜனங்களின் கதி என்ன?

மத ஐக்யமிருந்தால் தேச ஐக்கியம் உண்டாகுமென்று பலர்கள் நம்புவது திண்ணம். நமது தேசத்தில் ஹிந்து ஸமூகத்தின் எண்ணிக்கை, மற்ற ஸமூகங்களை விட அதிகம் என்பதும், சட்ட ஸபைகளிலும் அரசாங்கத்திலும் ஹிந்து பிரதிநிதிகள் அதிகமென்பதும் நிதர்சனம். இந்த ஸ்திதியில் அரசாங்கத்தார் ஜனங்கள் யாவர்களும் ஹிந்து மதத்தையே அநுஷ்டிக்க வேண்டுமென்றும் வேறுமதங்கள் அநுஷ்டிக்கக் கூடாதென்றும் உத்திரவு செய்ய பாத்தியமுண்டா? இதே விதமான உதாஹரணங்கள் பலசொல்லலாம். அவகாசமின்மையால் விஸ்தரிக்க அவசியமில்லை.

ஆனது பற்றியே ஜனங்களுக்குள்ள ஸ்வபாவ உரிமைகளில் அரசாங்கத்தார்கள் பிரவேசிக்க பாத்தியமில்லை யென்றும் அந்த உரிமைகளை அனுஷ்டிப்பதால் தேசத்திற்கே பெரிய ஆபத்து ஏற்பட்டு விடுமென்று எல்லாரும் ஒப்புக்கொண்டாலொழிய அவைகளுக்கு யாதொரு பங்கமும் செய்யக்கூடாதென்றும் அந்த உரிமைகளை அவரவர்கள் அனுஷ்டிப்பதால் ஏற்படும் சுக துக்கங்களை அவரவர்களே அனுபவிக்கும் ஸ்வதந்திரமே ஜன நாயக ஆக்ஷியின் ஜீவாதாரமென்றும் எங்கும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

தவிரவும் நன்மை தீமை என்பதை நிர்த்தாரணம் செய்வதிலேயே பல சிரமங்கள் இருக்கின்றன. ஒருவன் செய்யும் தர்மானுஷ்டானங்களும் தபஸ்ஸுகளும் அவனுக்கு சாச்வதமான சுகம் கொடுப்பதானாலும் மற்றவர்களுக்கு அது காயக்கிலேசமாகவே தோன்றலாம். ஆகிலும் அவைகள் கூடாதென்று உத்திரவு செய்வது ஏற்குமா? ஆனதுபற்றியே நமது மதத்தில் தர்மாதர்மங்கள் யாவும் ஈசுவரன் வெளியிட்ட வேத சாஸ்திரங்களினால் நிர்த்தாரணம் செய்ய வேண்டுமென்றும் மனித புத்தியினால் நிஷ்கர்ஷிக்கக் கூடியதில்லை என்றும் ஏற்பட்டிருக்கிறது.

ஆகையால் ஜனங்களுடைய ஸ்வபாவ ஸ்வதந்திர உரிமைகளில் அரசாங்கம் பிரவேசிப்பது நியாயமல்ல. அதற்கு இடம் கொடுத்தால் ஜனநாயக ஆக்ஷி அதனுடன் ஸமாப்தியாகிவிடும். அவ்விதமான பிரவேசம் இன்று கல்வி விஷயமாய் இருப்பது, நாளை மதவிஷயமாய் ஏற்பட இடம் கொடுக்கும். பிந்தி குடும்ப வாழ்விலேயே பிரவேசிக்க ஏற்படும், ஸ்திரீ பிரஜைகள் உள்பட அரசாங்கத்தார் தங்கள் வருதியில் வைத்துக்கொண்டு குடும்ப வாழ்வையே கெடுத்துவிடக்கூடும். இவ்விதம் எல்லை இல்லாத அதிகாரங்கள் தங்கள் வோட் மூலமாய் ஜனங்கள் தங்கள் பிரதிநிதிகளுக்குக் கொடுத்து விட்டார்கள் என்று சொல்வது ஒருபோதும் ஏற்கக்கூடியதல்ல. அது ஜனநாயக முறையல்ல. ஜன அடிமை முறையே.

## குறிப்புகள்.

### மத ஸம்பந்தமற்றதில் ஸத்யாக்ரஹம் கூடுமா?

சென்னை மாகாணத்தில் கட்டாய ஹிந்தியை எதிர்த்து ஸத்யாக்ரஹம், மறியல், பட்டினி ஹடம் முதலிய சண்டித்தனங்கள் அதிகரித்து வருவதை யாவரும் அறிந்ததே. ஹிந்தி விஷயத்தில் இந்த சண்டித்தனங்களை அநுஷ்டிப்பது அநுசிதமென்றும், அஹிம்ஸைக்கு ஏற்றதல்லவென்றும், இது ஒரு பலாத்கார முறையே யென்றும் காந்திஜி கடிந்து பேசியதை ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம்.

இப்போது தமிழ்நாட்டுத் தலைவராக விளங்கும் ஸ்ரீமான் முத்துரங்க முதலியார் இவ் விஷயமாக வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் காணப்படும் ஒரு அம்சத்தை கவனிக்க விரும்புகிறோம். கட்டாய ஹிந்தியை எதிர்த்து பட்டினி, மறியல் போன்ற கார்யங்களை நடத்துவது மிக்க அநியாயமென்று காந்திஜியைப்போல் ஸ்ரீ முத்துரங்கமும் கண்டிக்கிறார். ஏற்கனவே அதிகார வர்க்கத்தின் யதேச்சாதிகாரமான கார்யங்களைக்கண்டிக்க காங்கிரஸ் ஸத்யாக்கிரஹம் முதலிய உபாயங்களைக் கையாண்டிருக்கிறது. அதே கார்யத்தை இப்போது சிலர் செய்கையில் மட்டும் காங்கிரஸ்காரர்களுக்குக்கோபம் வருகிறது. இதில் தனக்கொரு நியாயம், பிறருக்கொரு நியாயமாக காந்திஜியுள்பட காங்கிரஸ்காரர் சொல்லும் போலி வாதங்களின் போக்கை நாம் நன்கு அறியக்கூடவில்லை. ஹிந்திக்காக ஸத்யாக்ரஹம் கூடாதென்பதற்குத் தமிழ் நாட்டுத்தலைவர் புதிய காரணமொன்றையும் குறிப்பிட்டிருக்கிறார். ஹிந்தியானது மத ஸம்பந்த விஷயமற்றதாம். மத உணர்ச்சியை பாதிக்கும் விஷயத்தில் தான் ஸத்யாக்ரஹம், பட்டினி முதலிய ஹடங்களைச்செய்ய நியாயமுண்டே யல்லது ஹிந்திவிஷயத்தில் சிறிதும் நியாயமில்லை யென்கிறார். தவிரவும் இதில் மனச்சாக்ஷிப் பேச்சுக்கும் இடமில்லையாம். ஆகையால் மதஸம்பந்தமற்றதான கட்டாய ஹிந்தி விஷயத்தில் ஸத்யாக்ரஹாதி உபாயங்கள் அநீதியென்று அவர் தீர்மானிக்கிறார்.



329

இதிலிருந்து, மத உரிமை பாதிக்கப்படும் ஸந்தர்ப்பத்தில் மேற்கண்ட ஸத்யாக்ரஹாதி சண்டித்தனங்கள் முற்றிலும் நியாயமென்பதை இவர் அங்கீகரிக்கிறார். காங்கிரஸ்காரர்கள் அதிகார வர்க்கச் செய்கையை எதிர்த்து நடத்திய ஸத்தியாக்ரஹாதிகள் மட்டும் மத ஸம்பந்தமுள்ளவைகளா? மத ஸம்பந்தமற்ற ராஜீய விஷயத்தில் இவர்கள் செய்த ஸத்யாகிரஹம் நியாயமானால் இப்போது கட்டாய ஹிந்தியை எதிர்த்துச்செய்யப்படும் கிளர்ச்சி மட்டும் ஏன் தவறாகும்? மனஸ்ஸாக்ஷியையும் பிரஜா உரிமையையும் மதித்து ஸத்யாக்ரகம் செய்யலாமாயின், இப்போது நடக்கும் ஹிந்தி எதிர்ப்பிலும் இந்த நியாயத்தை ஏன் சொல்ல முடியாது?

மனஸ்ஸாக்ஷியை மதித்துப் பலர் ஹிந்தியை எதிர்க்கலாமல்லவா? ஒருவருக்குப் பிடிக்காத கார்யத்தைச் செய்யும்படி நிர்ப்பந்திப்பது பிரஜா உரிமை ரக்ஷணமாகுமா? ஆதலால் ஸ்ரீமான்முதலியாரின் வாதமானது அடியோடு அர்த்தமற்றது, பக்ஷபாதமானது என்பது விசதமானதே.

மத உரிமைகள் பாதிக்கப்படும்போது ஸத்யாக்ரஹம் நியாயமென்று ஸ்ரீமான் முதலியார் ஒப்புக்கொள்ளுகிறார். இப்போது மத உரிமையைக் குலைத்து காங்கிரஸ் கக்ஷியார் எவ்வளவோ கார்யம் செய்கிறார்கள். அவைகளை எதிர்க்க தார்மிகர்கள் ஸத்யாக்ரஹ உபாயத்தைஅவலம்பித்தால்அது உசிதமென்றே இவர் கருதுவதாகத் தெரிகிறது. தார்மிகர்கள் இம்மாதிரி செய்ய முன் வந்தால் மந்திரிகள் அடக்குமுறையைப் பிரயோகிக்காமல் தார்மிகர்களுடைய உரிமையை ரக்ஷிக்க முன் வருவாரா? உறுதியும், நியாயமான வியஸ்தையுமில்லாமல் ஸமயோசித வேஷம் போடுகிறவர்களுடைய ஹிருதயத்தையும் பேச்சையும் பொதுஜனங்கள் எப்படி நம்புவது?

### கட்டாய ஹிந்தியின் துர்க்கதி.

காங்கிரஸ் மந்திரி ஸபையார் நமது மாகாணத்தில் ஹிந்தியைக் கட்டாயமாக்கப் போவதாக வீர்யம் பேசியதன் நிலைமை தற்போது எப்படியிருக்கிறதென்பதை ஆராய்வது ரஸமாக இருக்கும். கட்டாய முறையைஎதிர்த்துத் தமிழபிமானிகளெனச் சொல்லிக் கொள்ளும் ஜஸ்டிஸ் கக்ஷியினர் சிலர் செய்துவந்த உருட்டலுக்கு மந்திரி ஸபை நடுங்கிவிட்டதாகத் தெரிகிறது. இதனால் கட்டாய ஹிந்திக்கொள்கையானது நாளுக்கு நாள் க்ஷீணமடைந்து வருகிறது. கடைசியாக அது இறந்துபோக நேர்ந்தாலும் அதிசயப் படுவதற்கில்லை. ஆரம்ப சூரத்தனத்துடன் மந்திரிகள் கட்டாய ஹிந்தியை வற்புறுத்தி வந்தபோதிலும் எதிர்கக்ஷியினர் பலம் அடைந்துவருவதைக் கண்டு, மந்திரிகள் பின்னேட்டமெடுக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

கட்டாய ஹிந்தியை எதிர்த்துச் சிலர் சாகும் வரையில் பட்டினி ஹடம் செய்யப் போவதாகப் பறையடித்தனர். பிரதமமந்திரியின் வீட்டுவாசலில் ஸத்யாக்ரஹம் செய்யவும் பலமான முயற்சி சிலரால் செய்யப்படுகிறது. இந்தத் தொல்லையைத்தவிர்க்க காங்கிரஸ் மந்திரியால் முடியவில்லை. ஆதலால் ஹிந்தி விஷயமாகச் சில வரையறைகளை ஏற்படுத்தி அதைக் கரைத்துவிட ஏற்பாடாகியிருக்கிறது. ஏற்கனவேயே எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் கட்டாயமுறை ஏற்படுத்த நினைத்தார்கள். எதிர்ப்புக்குப் பயந்து 125 பள்ளிகளில் மட்டுமென்று குறைத்தார்கள். இப்போதோ எதிர்ப்பு அதிகமாகிவிட்டதால் ஹிந்தியில் தேறாத மாணவர்கள் மேல் வகுப்புக்குப் போக அது தடையாயிராதென்றும், சிறிதுகாலம் பரிசீலனை செய்தபின் கட்டாய ஹிந்தியால் ஸ்வதேச பாஷைக்கு ஆதரவு குறைவதாகத் தெரிந்தால் கட்டாயமுறையை எடுத்துவிடுவதாயும் மந்திரிகள் ஸம்மதித்திருப்பதாகத் தெரிகிறது.

இதனால் கட்டாய முறையென்பது பெயரளவிற்கே இருக்குமேயன்றி உண்மையில் இஷ்டமுறையில் தான் அதுஇருக்கும். மேல் வகுப்பு பிரமோஷனுக்கு ஹிந்திபாடம் தடையாயிராதென்று ஏற்பட்டு விட்டால் ஒரு மாணவனும் ஹிந்தியை சிரத்தையுடன் வாசிக்கமாட்டான். ஹிந்தி பாடத்தில் தேறாது போனாலும் மேல் வகுப்புக்குப் போய்விடலாமல்லவா? ஆகையால் இனி கட்டாய ஹிந்தி முறையென்ற பெயரே ஏற்காது. ஆகையால் எதிர்ப்புக்குப் பயந்து கட்டாய முறையைத் தந்திரமாகவும், மறைமுகமாயும்எடுத்துவிட்டதாகவே ஆகிறது. இதைவிட மந்திரி ஸபையின் பயங்கொள்ளித்தனத்திற்கு என்ன ருஜுவேண்டும்?

ஹிந்தி கட்டாயமானாலும் இஷ்டமானாலும் நமக்கு எதுவுமில்லை. ஆனால் ஜஸ்டிஸ் கக்ஷியின் எதிர்ப்பையும், ஸத்யாக்ரஹப் பூச்சாண்டியையும் கண்டு அஞ்சி மந்திரி ஸபை பின்வாங்கியதே இதில் கவனிக்கத் தக்க விஷயம்.

இவ்விஷயத்தில் ஹிந்தி எதிர்ப்புக்கோஷ்டியார், பயமுறுத்தியாவது வெற்றிபெற்றது விசேஷமே. நமது ஸனாதனிகளுக்கோவென்றால் இந்த தைர்யம் இல்லை. ஸத்யாக்ரஹம் முதலான சண்டித்தனத்தை நாம் ஸங்கேதமாகக் கையாளத் தயாராக இருப்பதை வெளியிட்டால், சாரதா சட்டம் ஆலயப் பிரவேசம் முதலியவை, கட்டாய ஹிந்தியின் கதியை அடையத்தடையென்ன?

### கனம் வேதகிரியின் விநோதப் பேச்சு.

(ஒரு நிருபர்)

நமது மாகாணத்தில் காங்கிரஸ் மந்திரிகளும் அவர்களுடைய கார்யதர்சிகளும், பதவியேற்றதினம் முதற்கொண்டு பலவிடங்களில், எவ்விதக் கொள்கையோ, உறுதியான நிலையோ, திட்டமான நோக்கமோ ஒன்றுமில்லாமல் பாமர ஜனங்களைப் பிரீதி செய்துவைக்கும் தோரணையில், வாயில் வந்ததையெல்லாம் பேசிக்கொண்டிருப்பது யாவரும் கவனித்த விஷயமே.

ஆதலால் தொழில் இலாகா மந்திரியான கனம் கிரி அவர்கள் சென்றவாரம் கும்பகோணத்தில் பேசியதும் மேற்கண்ட தோரணையையே அநுஸரித்திருப்பது ஆச்சர்யமில்லை.

தம்க்கு எதிரில் கூடியிருக்கும் பாமர ஜனங்களின் மனதைக் கவர உத்தேசித்து எதை வேண்டுமானாலும் சொல்ல கனம் கிரியவர்கள் துணிந்தது மிக்க விநோதமாயிருக்கிறது. தாம் பேசுவது வெறும் மனோராஜ்யமா, அல்லது கனவா, அநுபவத்தில் வரக்கூடியதா, வந்தாலும் ஜன நன்மைக்கு அது ஏற்றதா இத்யாதி விஷயங்களைச் சிறிதும் கவனியாமல் தற்காலிகமாக நாக்கில் ஜலம் ஊறும்படி பேசிவிட்டுப் போய்விடுவதை, பொறுப்புள்ள மந்திரி ஸ்தானத்திலிருப்பவர்கள் செய்வது மிகுந்த தீங்குக்கு இடமானதென்பதை இவர்கள் கவனிப்பதில்லை,

குடந்தையில், ஜனங்களின் பொருளாதார ஸௌகர்யத்தைப்பற்றிப் பேச முன் வந்த கனம் கிரி இவ்விஷயத்தில் நிதானம் தவறி வெகுதூரம் போய்விட்டதாகத் தெரிகிறது.

கடன் நிவாரணச் சட்டத்தை இவர் ஆகாயத்தில் தூக்கி வைத்துப் பேசக் கடமைப்பட்டவரென்பது உண்மையே. ஆயினும் பணமுள்ளவர்களை பயமுறுத்தும் தோரணையில் இவர் பேசியது விரும்பத்தக்கதல்ல. வட்டியைக் குறைத்தும், தள்ளுபடி செய்தும் அந்தச் சட்டத்தினால் ஏற்பட்ட ஸௌகர்யத்தைக் கவனியாமல், சில பாங்கிகள் மந்திரிகள்மீது சீறிவிழுவதாயும், வட்டியை மட்டும் குறைத்ததற்கே இவ்வளவு ஆக்ஷேபிப்பவர்கள், முதல் தொகையைதள்ளிக் கொடுக்கவேண்டுமென்று சட்டம் செய்தால் என்ன செய்வார்களென்றும், அம்மாதிரி சட்டம் செய்ய தக்க ஸந்தர்ப்பத்தை காங்கிரஸ் கவர்ன்மெண்டார் எதிர்பார்த்துக்கொண்டிருப்பதாயும் பயமுறுத்தினார்.

இதற்குமேல் கனம் மந்திரி நுட்பமான அர்த்தசாஸ்திர தத்வத்தில் இறங்கிப் பேச ஆரம்பித்தார். மனிதன், தனது பிள்ளை, பேரன் முதலிய பின் ஸந்ததியாரை உத்தேசித்தே பணம் சேர்த்துவைக்கும் வழக்கம் இருப்பதாயும், இது அநாவச்யகமென்றும், ஜனங்கள் தங்கள் ஸொத்தை ஸர்க்கார் வசம் கொடுத்துவிட்டால், காங்கிரஸ் கவர்ன்மெண்டார் ஒவ்வொருமனிதனுக்கும் அவச்யமான உணவு உடை முதலியவைகளை ஸப்ளைசெய்து போஷிக்கத் தயாராக இருப்பதாயும், பின் ஸந்ததியாரையும் ஸர்க்கார் போஷணைக்கு உள்படுத்திவிட்டால் எவனும் பணம்சேமித்து வைக்கும் அநாகரிக வேலையில் இறங்க நேரிடாதென்றும் அந்த நிலைமை ஏற்பட்டால் கடன் நிவாரணச் சட்டம் போன்ற சட்டங்கள் ஏற்பட ஆஸ்பதமேயிராதென்றும், அத்தகைய கலத்தைத் தாம் எதிர்ப்பதாயும், தம்மைப்பற்றியவரையில் தமது ஸொத்துக்களை ஸர்க்கார்வசம் இன்றே கொடுத்துவிட்டு அவர்களுடைய போஷணைக்கு உட்படத் தயாராக இருப்பதாயும் பேசினார். மனிதனுக்குப் பலவிதத் தேவைகள் உண்டு. பசி உணர்ச்சி ஏற்படும்போது அன்னம் தேவையாயிருக்கிறது. அதுபோல் காம உணர்ச்சி ஏற்படும்போது ஸ்திரீகள் வேண்டியிருக்கிறது. இச்சமயங்களில் தங்களுடையதென்று இருந்தால் அவைகளை ஸந்தர்ப்பம் நேர்ந்தபோது உபயோகிக்க ஸௌகர்யமுண்டு. இந்த நோக்கத்துடனேயே, பணம், ஸ்திரீ, முதலிய அநுபவ பதார்த்தங்களை ஒவ்வொருவரும் தனித்தனியாக சேகரித்து வைத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது. பசி ஏற்பட்டபோது எந்த வீட்டிலாவது புகுந்து புஜிக்க முடியாது. அதுபோல் காம உணர்ச்சி ஏற்படும்போது நினைத்தவிடத்தில் நுழைய முடியாது. ஆதலால் பணஸப்ளைசெய்து குடும்ப போஷணையை ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கும் கிரி கவர்ன்மெண்டார், மனிதர்களுக்கு வேண்டிய ஸ்திரீகளையும் ஸப்ளை செய்யத் திட்டம் ஏற்படுத்தவேண்டியது அவச்யமாகிவிடும். இதை கனம் மந்திரி மறந்து பேசிவிட்டார் போலும்? இம்மாதிரியெல்லாம் பாமரரை ஏமாற்றியும், விவேகிகளை பயமுறுத்தியும் பொறுப்பற்ற நிலைமையில் பேசுவது மிக்க விபரீதமாகும்.

பணம், பெண்டாட்டி, பிள்ளை இவைகளை பிற்கால ஸௌகர்யங்களை உத்தேசித்து குடும்பத்தினர் சேமித்து ஸம்ரக்ஷித்து வரும்படி ஏற்பட்ட நமது ஆர்யாவர்த்த தர்மமுறைகளையும் நீண்டகாலமாக நடந்துவரும் சிறந்த அநுபவங்களையும் இந்த மந்திரியார் சிறிதாவது யோஜித்தாரா?

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.
பெஜவாடா.
Bezwada.

# கன்ஸர்வேடிவ் கக்ஷி தோன்றவேண்டும்.

R. நடராஜன்.

ஒரு புதிய அகில இந்திய அரசியல் இயக்கம் தற்சமயம் மிகவும் அவசரமாக தேவையாகஇருக்கிறது. அத்தகைய அரசியல் இயக்கம் ஆரம்பிக்க வேண்டிய அவச்யம் என்ன? அதன் கொள்கைகளும் வேலைத்திட்டங்களும் எவ்விதம் அமைக்கப்படலாம்? என்பதை ஒருவாறு அடியில் விவரிக்கிறோம்.

பாரத பூமியின் ராஜீய விடுதலை, தேசக்ஷேமம், அமைதி, மக்களின் வேலையில்லா பிரச்சனையை தீர்த்து ஜீவனோபாயத்திற்கான மார்க்கங்களைச் செய்து கொடுத்தல், எளியவர்களின் வறுமையை அகற்றல், தனி சொத்துரிமை பாதுகாப்பு, தொழிலாளர்களின் கஷ்டங்களை தீர்ப்பதற்கான திட்டம், மத விஷயத்தில் பூர்ண சுதந்திரம் இவற்றை லக்ஷ்யமாகக்கொண்டு, மத, ஜாதி, வகுப்பு பேதமின்றி, இந்திய மகா ஜனங்களின் எல்லா மதத் தலைவர்களும், ராஜீய வாதிகளும், பல்வேறுபட்ட வகுப்பு பிரதிநிதிகளும், நன்ருக ஆலோசித்து புதிய அரசியல் இயக்க அவச்யத்தை உணர்ந்து. ஒரு முடிவுக்கு வருவார்களென்று நம்பி, இதை அவர்களது பராமர்சனைக்கு ஸமர்ப்பிக்கிறோம்.

உலகில் மதங்கள் பல நிலவுகின்றன, அவைகள் ஹிந்து மதம், கிருஸ்தவ மதம், மகம்மதிய மதம், பௌத்த மதம் ஜைன மதம்,ஸொராஸ்தர்மதம் முதலான பலவாகும். ஒவ்வொரு மதத்திலும் கிளை மதங்களும் பல உட்பிரிவுகளும் இருந்து வருகின்றன. ஹிந்து மதத்தில் த்வைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம் முதலான கிளை மதங்களும், ப்ரம்ம க்ஷத்திரியாதி வகுப்புப் பிரிவுகளும் இருப்பது போலவே கிருஸ்தவ மதத்தில் கத்தோலிக், பிராடஸ்டண்டு கிளை மதங்களும், மகம்மதிய மதத்தில் ஷியா, ஸுன்னி என்பதாகிய வகுப்பு பிரிவுகளும், இவ்வாறே ஒவ்வொரு மதத்திலும், தனித்தனியே பொது மத கொள்கையை ஆதாரமாகக் கொண்ட கிளை மதங்களும் வகுப்பு பிரிவுகளும் இருந்து வருகின்றன,

பொதுவாக மதங்கள், மனிதனுக்கும் கடவுளுக்கும் உள்ள சம்பந்தத்தை விளக்கி, பாரமார்த்திக நன்மைகளை அடையும் பொருட்டு விதிநிஷேதங்களை போதிப்பனவாக மானிட உலகின் பரம லக்ஷ்யமாக பூர்ண சுயேச்சையை உபதேசிக்கின்றன. ஆனால் பந்தத்திலிருந்து விடுதலையில் நாட்டம் கொண்ட பகுத்தறிவு பெற்ற மனிதர்களின் மனப்போக்குகள், அவரவர்களின் அறிவு, ஆற்றல், தேசபக்தி, மனோநிடம் இவைகளுக்கேற்ப, மதச் சட்டங்களை சரிவர அனுசரித்தலையோ, அவைகளைத்தகர்தெறிந்துதேவையானவை சேர்ப்பதையோ அல்லது மனதில் தோற்றும் புதிய கொள்கைகளையுடைய மதங்களை பரப்புவதையோ விடுதலைக்கு சாதனமாக உணர்கின்றன இவ்விதம் எல்லா விதமான விடுதலை உணர்ச்சிகள் தோன்றுவதையும், இயக்கங்கள் பரவுதலையும் நாம் பூர்ணமாக ஆதரிக்கிறோம்.

ஆனல் தனிப்பட்ட மனிதன் பிறர் நலங்களைப்பாராமலும், ஒரு வகுப்பு மற்ற வகுப்புகளின் கிரமமான உரிமைகளை மதியாமலும், ஒரு இயக்கம் மற்ற இயக்கங்களின் கிரமமான உற்பத்தி, சாத்விகபிரசாரம் இவைகளுக்கிடமளிக்காமலும் தன் சுயநல அபிவிருத்தியைசுயேச்சை லக்ஷ்யமாகமதித்து, பலாத்கார வழிகளிலோ, கக்ஷி கட்டுப்பாட்டினலோ, மெஜாரிடி பலத்தாலோ, அரசியல் அதிகாரத்தாலோ, மற்றவர்களின் பிறப்புரிமை மத நம்பிக்கை, அனுஷ்டானம், சுதந்திர அபிலாஷை இவைகளை ஒடுக்க முற்படுமானல், அத்தகைய தனிப்பட்ட நபர் ஈருக பெரிய ஸ்தாபனம் உள்பட எதுவாயினும் அதைக் கண்டிக்காமல்இருப்பதுசாத்யமில்லை. அதை எதிர்த்துப்போராடி, பலாத்காரமான யதேச்சாதிகாரத்தை அறவே ஒடுக்குதல் தேசமகாஜனங்களின் கடமையாகும்.

பிரகிருதம் ராஜீய ஸ்தாபனங்கள், அனைவகளுக்கு நேர்மையாக தோன்றும் ராஜீயகொள்கை பொருளாதார அபிவிருத்தி, பொதுக்கஷ்ட நிவாரணம் முதலியகாரியங்களில் முன்னணியில் நின்று வேலை செய்வதுமுற்றிலும் விரும்பத்தக்கதே. ஆனல் அரசியல் கக்ஷிகள் மத விஷயங்களில் நிர்பந்த முறைகளை சட்டமூலமாக அமுலுக்குகொண்டு வருவது எவ்வளவு தூரம் விரும்பத்தக்கது நியாயமானது என்பதை சிறிது ஆராய்வோம்.

ஹிந்துக்கள் வேதங்களையும் தர்ம சாஸ்திரங்களையும், கிருஸ்தவர்கள்பைபிளையும், மகம்மதியர்கள் கொரானையும், பௌத்தர்கள் முதலானோர் அவரவர்களது மத நூல்களையும் தங்களது வாழ்க்கை முறைக்கு வழிகாட்டிகளாக நம்புகின்றனர்.பரமார்த்தபிராப்தி, பரலோகம் இவைகள் சம்பந்தமாகமத நூல்கள் பல்வேறு சாதனங்களை அறிவிக்கின்றன.

மானிடரின் போக்கில், மனம் போனபடி நடத்தல், சாதக பாதகங்களை ஆராய்ந்து புத்திசக்தியால் சாத்யமான லக்ஷ்யத்தை நிர்தாரணம் செய்து அதற்கேற்றபடி நடத்தல், மனசாக்ஷியின் பிரேரணையின்படி நடத்தல், அல்லது மதநூல்களின் கட்டளைப்படி நடத்தல் எனவாக பல நிலைமைகளில் ஒவ்வொன்றுமனிதனை நடத்துவதற்கு காரணமாகயிருந்துவருகிறது. இப்போதைய இந்தியாவின் போக்கில் அபேதவாதிகளும், காங்கிரஸ்ஸ்தாபனமும், சுயமரியாதை கக்ஷியும் மனம்போனபோக்கெல்லாம் நடப்பதை கொள்கையாகக்கொண்டிருக்கின்றன. ஸ்ரீஜத் சுபாஷ் சந்திர போஸ், ஜவஹர்லால்நேரு, வல்லபாய் படேல், புருஷோத்தமதாஸ் தாண்டன் இவர்களும், வி. எஸ். ஸ்ரீனிவாஸ சாஸ்திரியார், டி. ஆர். வெங்கடராம சாஸ்திரி முதலானவர்கள் தனிப்பட்ட ஹோதாவில் புத்தி சக்தியால் சாத்யமான சௌகர்யங்களைச்செய்யப்பாடு படுகின்றனர். ஸ்ரீமான் காந்தி மன சாக்ஷியை பின் பற்றுகிறார். கக்ஷி கட்டுப்பாட்டு முறை, இயக்கங்களை சிருஷ்டித்து பிரசாரம் செய்தல், பத்திரிகைகளில் தங்கள் கக்ஷியை வெளியிடும்படி செய்தல், இந்த வஸதிகள் போதிய அளவு அமையப்பெருத தேச மகாஜனங்கள் சக்திக்கேற்றபடி மதக்கட்டளைப்படி நடந்து வருபவர்களாக இருந்து வருகின்றனர். இவ்வித நிலைமையில் சில தலைவர்களுக்குத் தோன்றும்தனி சொத்துரிமையைப்பறித்தல், மதங்களையும், மதாநுஷ்டான சுதந்திரத்தையும்அழித்தல் இவைகளை கொள்கையாகக்கொண்ட ஸ்தாபனங்களும் தனி நபர்களும், தனி சொத்துரிமையை ஆதரிப்பவர்கள் மதாநுஷ்டான சுதந்திரத்தை வேண்டுபவர்கள் என்ற மாறுபாடான அபிப்பிராயத்தைக்கொண்ட இந்திய மகாஜனங்களின் பிரதிநிதிகள் ஆகக்கூடுமா?

மன சாக்ஷியைஆதாரமாகக்கொண்டு, மற்றவர்களின் மனஸாக்ஷிமதாநுஷ்டான கொள்கைகளில் நிர்பந்த முறையில்சட்டம் செய்து பிறருடைய சுயேச்சை உரிமையை அபகரிப்பது நியாயமா? இவ்வாறு பிரசாரம் செய்யும் ஸ்தாபனங்களையும், தனி நபர்களையும் எதிர்த்துப் போராடுவதற்கு புதிய ஸ்தாபனம் நிறுவ வேண்டிய காலம் இப்பொழுது ஏற்படவில்லையா? (தொடரும்.)

---

## 'ஸௌந்தர்ய லஹரீ.'

காபி ஒன்று விலை ரூ. 1—8—0

தபால் செலவு பிரத்யேகம்.

கிடைக்குமிடம்:—

ஸ்ரீ ஜனார்தந பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட், டவுன்ஹைஸ்கூல் ரோடு: கும்பகோணம்.

---

## புதுக்கோட்டை.

### ஸ்ரீ வைதிகவர்த்தினி ஸபா.

ஷை ஸபையின் ஆதரவில் 7—6—38 டவுன் ஸ்ரீ வரதராஜப்பெருமாள் கோவில் ஸன்னிதியில் ஸமகுர் ஸமஸ்தானம் பண்டிதவர ஸ்ரீ H. ஸுந்தரராஜாச்சாரியார் "மதத்ரயம்"என்ற விஷயத்தைப்பற்றி உபன்யாஸம் செய்தார்கள் ஏராளமான ஆஸ்திகர்கள் விஜயம் செய்து உபன்யாஸகருடைய பாண்டித்யத்தைக் கொண்டாடினர்கள்.

### ஸ்ரீ தக்ஷிணமூர்த்தி வஸந்தோத்ஸவம்.

புதுக்கோட்டை டவுன் வடக்கு ராஜவீதியில் மடம் கிருஷ்ணய்யர் குமாரரும்போலீஸ் ஆபீஸ் கிளர்க்குமான ஸ்ரீ தக்ஷிணமூர்த்தி சாஸ்திரிகள் மல்லாதி பவனம் என்ற தன்னுடைய மடத்தில் 59௵த்திய வஸந்தோத்ஸவத்தை மிகவும் சிறப்பாகக் கொண்டாடினர். 2—6—38உ முதல் ஆரம்பிக்கப்பட்டு 12—6—38 முடியவும் ஷை உத்ஸவம் நடந்தது. ஒவ்வொருநாளும் காலை நேரங்களில் ப்ரம்மஸ்ரீ பஞ்சாபிகேச சாஸ்திரிகள் ப்ரம்ம கீதாப்ரவசனம் செய்தார்கள். மத்யான்னங்களில் பாகவத ஸந்தர்ப்பணமும் இராக்காலங்களில் பஜனை ஸம்ப்ரதாயங்களும் நடந்தன. 12-6-38உ ஸ்ரீ சாஸ்திரிகளுக்கு விசேஷ ஸன்மானங்கள் செய்த பின்பு ஸ்ரீ தக்ஷிணமூர்த்தி ஸ்ரீ சங்கர பகவத்பாதாதி பிம்பங்களுக்கு அபிஷேகம் பூஜை அர்ச்சனைகள் நடந்து வஸந்தோத்ஸவ ஸம்ப்ரதாயங்களுடன் சிறப்பாக நடத்தியபிறகு ப்ராம்மண போஜனமும் ஏழைகளுக்கு அன்னதானமும் நடந்தன. மறுநாள் ஸ்ரீ தக்ஷிணமூர்த்தியை நன்கு அலங்கரித்த ஒரு விமானத்தில் வைத்து நான்கு ராஜவீதிகளிலும், ஸங்கீத வாத்யங்கள், பஜனை கோஷ்டிகள் ஸ்ரீ ஸ்ரீ மகாராஜா அவர்கள் ஸமஸ்தானத்திலிருந்து வழக்கமாக வாலான பிருதுகள் புடைசூழவும் கிராம ப்ரதக்ஷிணம் மிகவும் விமரிசையாக 7½ மணிக்கு. புறப்பட்டு 11 மணிக்கு வந்து சேர்ந்தது. அப்பால் ஸ்ரீ தக்ஷிணமூர்த்தி சாஸ்திரிகள் அங்கு கூடியிருந்த ஏராளமான ஆஸ்திகர்கள் முன் தன் நன்றியறிவைத் தெரிவித்துக் கொண்டும் ஆசாரிய பக்தியின் பெருமையைப்பற்றி வெகு அழகாக உபன்யாஸம் செய்தார். எல்லோருக்கும் ப்ரஸாதங்கள் விநியோகிக்கப்பட்டும் வைதீகர் ஆசீர்வாதங்களுக்குப்பின் மங்கள வாத்யங்களுக்கிடையே 59௵த்திய வஸந்தோத்ஸவம் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சென்ற 20 வருஷங்களாக மிகவும் பக்தி சிரத்தையுடன் ஸ்ரீ தக்ஷிணமூர்த்தி சாஸ்திரிகள் தன் பிதாவின் பத்ததியை யநுஸரித்து நடத்துவது மெச்சத்தக்கது.

G. மலையப்ப சாஸ்திரியார், கார்யதர்சி

---

## ஆஸ்திக மகாஜனங்களுக்கு ஓர் விண்ணப்பம்.

கும்பகோணம் காவேரிக்கறை சோலையப்ப முதலியார் அக்கிரஹாரம் கீழ்புறமுள்ள. நாலாம் திருநாள் படித்துறையாகிய ஸ்நான கட்டம் மிகவும் பழுதாயிருப்பதால் அதைப் புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

ஷை மகா தர்ம கைங்கர்யம் ஆஸ்திக மகா ஜனங்களுடைய பொருளாதரவின்பேரிலேயே பூர்த்தியடைய வேண்டியிருக்கிறது நதியில் ஜலம் வருவதற்குள் வேலை முடிய வேண்டிய நிர்பந்தத்தை முன்னிட்டு ஆஸ்திகர்கள் அனைவரும் ஷை தொண்டில் ஈடுபட்டு நடத்துபவர்களிடம் அவரவர்களால் இயன்ற பொருளுதவியை ஆர்யதர்மம் பத்திராதிபர் மூலமாயாவது, நேரிலாவது சேர்ப்பிக்கும் படியாய்ப் பிரார்த்திக்கப்படுகிறது.

தர்மத்தொண்டு அபிமானிகள்.

---



331

# சென்னை மாகாண வியவசாயிகளின் கடன் நிவாரண ஆக்ட்.

(போர்ட் ஸெயிண்ட் ஜார்ஜ் கெஜட் பிரசுரம்.)

(9—6—38 தொடர்ச்சி.)

(iv) 'குத்தகைத்தொகை' என்பது, பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னப்பட்டணம் 1908-ம்௵த்து ஆக்டில் அர்த்தம் சொல்லப்பட்டபடியுள்ள குத்தகைத்தொகை, அல்லது மலையாளத்துப் பாயக்காரி பாத்யதையைக்குறித்த 1929-ம்௵த்திய ஆக்டில், அர்த்தம் சொல்லப்பட்டபடியுள்ள குத்தகைத் தொகை அல்லதுமிச்சவாரம், அல்லது பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னபட்டணம் 1908-ம்௵த்து ஆக்டில் அர்த்தம் சொல்லப்பட்டபடியுள்ள யாதொரு பூஸ்திதியின் நிலத்துக்குடையவருக்குச் செலுத்தப்படத்தக்க க்விட் ரென்ட், ஜோடி, கட்டுபடி அல்லது பொறுப்பு முதலியவைகளுக்காக யாதொரு ஸிவில் அல்லது ரெவினியு கோர்ட்டாரின் டிக்ரி அல்லது உத்தரவு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தாலும்சரி இராவிட்டாலும்சரி, அந்தக் குத்தகைத் தொகை என்ருகிலும் மிச்சவாரம் என்ருகிலும் க்விட் ரென்ட் முதலியவை என்ருகிலும் அர்த்தமாகும்; மேலும், அதற்காகச் செலுத்தப்படத்தக்க வட்டி என்பதும்அதில் அடங்கும்; ஆனல், யாதொரு ஸிவில் அல்லது ரெவின்யூ கோர்ட் மூலமாய் அதை வசூலிப்பது விஷயமாகப் பிடிக்கும் செலவுகள் என்பதாவது 1920-ம்௵த்திய சென்னப்பட்டணத்து லோகல் போர்டுகள் ஆக்ட் 88-வது பிரிவின்படி நிலத்துக்குடையவரால் வசூலிக்கப்படத்தக்க லாண்ட் ஸெஸ் என்னும் நிலவரியின் பாகம் என்பதாவது அதில் அடங்காது; மேலும்,

(v) 'கடன்காரர்' (கடன் கொடுத்தவர்) என்பதில், அவருடைய வார்சுகள் என்பதும், சட்டசம்மதமான பிரதிநிதிகள் என்பதும், அவரிடமிருந்து ஒப்படைபெற்றவர்கள் என்பதும் அடங்கும்.

4. யாதொரு விவசாயிக்கு ஏற்பட்டிருப்பவைகளாய், அடியிற் கண்ட தலைப்புகளின் கீழ் வரும் கடன்களும் பொறுப்புகளும் இந்த ஆக்டில் கண்டதெதனுலும் பாதிக்கப்படமாட்டா:—

(a) மாகாண கவர்மெண்டாருக்குச் செலுத்தப்படத் தக்க யாதொரு தீர்வை, வரி அல்லது ஸெஸ், அல்லது கடனகவோ மற்றபடியோ அவர்களுக்குச்சேரவேண்டிய வேறே யாதொரு தொகை;

(b) மத்தியகவர்ன்மெண்டாருக்குச்செலுத்தப்படத்தக்கயாதொரு தீர்வை, வரி அல்லது ஸெஸ், அல்லது கடனகவோ மற்றப்படியோ அவர்களுக்குச் சேர வேண்டிய வேறே யாதொரு தொகை;

(c) யாதொரு பிரதேச அதிகாரஸபையாருக்குச்செலுத்தப்படத்தக்க யாதொரு வரி அல்லது ஸெஸ் அல்லது கடனகவோ மற்றப்படியோ அவர்களுக்குச்சேர வேண்டிய வேறே யாதொருதொகை;

(d) யாதொரு மியுனிஸிபாலிடியிலாவது யாதொரு கன்டோன்மென்டிலாவது 1930-ம்௵ ஆகஸ்ட்மீ 26உக்கு முன் யூனியனயிருந்த யாதொரு பஞ்சாயத்திலாவது உள்ள வீட்டுச்சொத்தின் ஈட்டின் பேரில் மாத்திரமே வாங்கப்பட்ட கடன்;

(e) யாதொரு நில அடமான பாங்க் உட்பட, கோவாபரேடிவ் ஸொஸைடீஸ் என்னும் கூட்டுறவு சங்கங்களைக்குறித்த 1932-ம்௵த்திய சென்னபட்டணத்து ஆக்டின் படி ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கும் அல்லது ரெஜிஸ்டர் செய்யப்பட்டதாகக் கருதப்படும் யாதொரு கூட்டுறவு சங்கத்துக்குச் சேரவேண்டிய எந்தத் தொகை விஷயமாயாகிலும் ஏற்பட்டுள்ள யாதொரு பொறுப்பு, அல்லது பார்லிமெண்ட் சபையாரால் ஏற்படுத்தப்பட்ட யாதொரு ஆக்டையாவது யாதொரு விசேஷ இந்து தேசத்து சட்டத்தையாவது ராயல் சார்ட்டர் என்னும் ராஜ சாஸனத்தையாவது லெட்டர்ஸ் பேடென்ட் என்னும் அதிகார பத்திரத்தையாவது அனுசரித்து ஏற்படுத்தப்பட்ட எந்த கார்பொரேஷனுக்காயினும் சேரவேண்டிய யாதொரு கடன்;

(f) நம்பிக்கைத் துரோகத்தினல் ஏற்படும் யாதொரு பொறுப்பு;

(g) கோர்ட்டாரின் டிக்ரியின்படியோ மற்றப்படியோ ஜீவனம்சம் விஷயமாய் ஏற்படும் யாதொரு பொறுப்பு;

(h) 1937-ம்௵ அக்டோபர்மீ 1உயன்று வேறே யாதொரு சொத்தையும் உடைவராயிராத ஒரு ஸ்திரீக்கு அந்தத் தேதியன்று சேரவேண்டியதாயிருந்த யாதொரு கடன் அல்லது கடன்கள்; ஆனல், அந்தக்கடன் அல்லது கடன்களின் அசலானது மூவாயிரம் ரூபாய்க்கு மேற்பட்டிருக்கக்கூடாது.

விவரணம்:— இந்தப்பகுதியின்காரியத்துக்காக, கடன்காரஸ்திரீ வசித்துக்கொண்டிருந்த வீடாவது, அதிலிருந்த எவையேனும் மேஜை, நாற்காலி முதலிய சாமான்களாவது, அவருடைய தட்டுமுட்டுச் சாமான்களாவது உடைகளாவது நகைகளாவது, அவைகளைப் போன்ற சொந்த உபயோகத்துக்குரிய உடைமைகளாவது சொத்தென்று கருதப்படமாட்டா.

(i) யாதொரு விவசாயத் தொழிலாளிக்காவது கிராமத் தொழிலாளிக்காவது சேரவேண்டிய எவையேனும் கூலித் தொகைகள். ஆனல் (e) பகுதியில் குறிப்பிட்டிருக்கும் பொறுப்புகள் கூட்டுறவு சங்கத்துக்கு ஒப்படை செய்வது காரணமாக ஏற்படுகிற பட்சத்திலே, 1937-ம்௵ அக்டோபர்மீ 1உக்கு முன் மேலே கண்டபடி ஒப்படை செய்யப்பட்டிருக்கவேண்டும். அல்லது அந்த ஒப்படையானது யாதொரு கூட்டுறவு சங்கத்தால் கொடுக்கப்பட்ட கடனை ஷை சங்கத்துக்கு ஒப்படை செய்ததால் ஏற்பட்டதாயிருக்கவேண்டும்.

5. யாதொரு மருமக்கத்தாயம் அல்லது அலியசந்தானத் தாவாடு அல்லது தாவழியல்லாத வேறே யாதொரு அவிபக்த ஹிந்து குடும்பமானது 3 (ii) பிரிவுடன் சேர்ந்துள்ள (A), (B), (C) விலக்கு நிபந்தனைகளில் குறிப்பிட்டிருக்கும் வரிகள் விதிக்கப்பெற்றாலும், அதே பிரிவுடன் சேர்ந்துள்ள (D) விலக்கு நிபந்தனையில் குறிப்பிட்டிருக்கும் நபர்களின் வகையில் அடங்கினலும், 1937-ம்௵ அக்டோபர்மீ 1உயன்று ஷை குடும்பத்தைச்சேர்ந்தவராயிருந்த எந்த நபரும் 13-வது பிரிவு தவிர இந்த ஆக்டின் இதர பிரிவுகளின் காரியங்களுக்காக விவசாயியாகக் கருதப்படமாட்டார்.

6. யாதொரு மருமக்கத்தாயம் அல்லது அலியசந்தானத்தாவாடு அல்லது தாவழியாயிராமல், 3 (i) பிரிவின் தாற்பரியப்படி "விவசாயி" யாயிருக்கும் வேறே யாதொரு அவிபக்த ஹிந்து குடும்பத்திலே, அந்தக்குடும்பத்தைச் சேர்ந்த எவராகிலும் விவசாயியாயிராவிட்டால் அப்போது, 3 (ii) பிரிவில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, ஆண் வழியில் வரும் அவருடைய குமாரர்கள், சந்ததியார்கள் ஆகிய இவர்களில் எவரும் இந்த ஆக்டின் 7 முதல் 12 வரையிலுள்ள பிரிவுகளின் காரியங்களுக்காகவும் 19 முதல் 27 வரையிலுள்ள பிரிவுகளின் காரியங்களுக்காகவும் விவசாயியாகக் கருதப்படமாட்டார்.

## II-ம் அத்தியாயம்.

### கடன்களைக் குறைப்பதும் இனிமேல் வாங்க வேண்டிய வட்டி வீதமும்.

7. இதற்கு விரோதமாய் யாதொரு சட்டமாவது வழக்கமாவது ஒப்பந்தமாவது கோர்ட் டிகிரியாவது ஏற்பட்டிருந்த போதிலும் பாதகமில்லாமலே, இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் காலத்தில் யாதொரு விவசாயியால் செலுத்தப்படத்தக்க சகல கடன்களும் இந்த அத்தியாயத்தில் கண்ட நிபந்தனைகளை அனுசரித்துக் குறைக்கப்படும்.

அந்தப்பிரகாரம் குறைக்கப்பட்டபடியுள்ள தொகைக்கு மேற்பட்ட எந்தத் தொகையும் அவரிடமிருந்தாவது அவருக்குச்சொந்தமான யாதொருநிலத்திலிருந்தாவது நிலத்தில் அவருக்குள்ள பாத்தியதையிலிருந்தாவது வசூலிக்கப்படத்தக்கதாகாது; மேலும், அவருக்கு விரோதமாய்ப் பிறபிக்கப்பட்ட யாதொரு டிக்கிரியானது இந்த அத்தியாயத்தின் பிரகாரம் குறைக்கப்பட்ட படியுள்ள தொகைக்கு மேற்பட்ட ஒரு தொகைக்குச் சம்பந்தப்படுகிற வரையில் அந்த டிக்ரியை நிறைவேற்றும் பொருட்டு அவருடைய சொத்து ஜப்தி பண்ணி விற்பனை செய்யப்படுவதற்காவது அது விஷயமாய் எந்தவிதமாகவாகிலும் நடவடிக்கை நடத்தப்படுவதற்காவது உள்ளாகமாட்டாது.

8. 1932-ம்௵ அக்டோபர்மீ 1க்கு முன் ஏற்பட்ட கடன்கள் இதன் கீழ்ச் சொல்லியிருக்கும் விதமாகக் குறைக்கப்படும்; அதாவது:—

(1) யாதொரு விவசாயிக்குக் கடன் கொடுத்த எந்த நபருக்காகிலும் 1937-ம்௵ அக்டோபர்மீ 1உயன்று செலுத்தப்படாமல் பாக்கியாயிருக்கும் வட்டி சட்டத்தின்படியாவது வழக்கத்தின்படியாவது ஒப்பந்தத்தின்படியாவது செலுத்தப்படத்தக்கதாயிருந்தாலுஞ்சரி கோர்ட்டாரின் யாதொரு டிக்ரியின்படிச்செலுத்தப்படத்தக்கதாயிருந்தாலுஞ்சரி, கடன் அல்லது இதர பொறுப்பு விஷயமாய் டிக்ரி பிறப்பிக்கப்பட்டிருந்தாலுஞ்சரி இராவிட்டாலுஞ்சரி, அப்படிப்பட்ட சகல வட்டியும் கொடுத்துத் தீர்க்கப்பட்டிருப்பதாகக்கருதப்படும்; மேலும், அசல் தொகையாவது அதில் செலுத்தப்படாமல் பாக்கியிருக்கக்கூடிய பாகமாவது மாத்திரமே ஷை தேதியன்று அந்த விவசாயியால் திருப்பிச் செலுத்தப்படத்தக்க தொகையாகக் கருதப்படும்.

(தொடரும்.)

# மதுரை ஜில்லா வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்.

## 5-வது ஸம்மேளனம்.

திருநெல்வேலி பிரும்மஸ்ரீ
R. கிருஷ்ணஸ்வாமி அய்யர், M.A., B.L.,
அவர்களின் தலைமைப் பிரசங்கம்.

(முன் தொடர்ச்சி.)

### 7. ஆலயப்பிரவேச விஷயம்.

யார்சொல்லியும் கேட்காமல் மதத்தில் உதாஸீன புத்தியுடன் ஸமீபத்தில் பம்பாய் சட்டஸபையில் இயற்றிய சட்டமும் தத்காலத்திய தெய்வப்பற்று அற்ற வித்யாப்யாஸ முறையினால் ஏற்படும் மனோநிலைக்கே அறிகுறியாகும், நம் ராஜதானியிலும் ஆலயங்களையும் அக்கிரஹாரங்களையும் கெடுத்துவிடவேண்டுமென்ற விபரீத புத்தியே இப்பொழுது முன் பின் யோஜனையில்லாமல் சென்னை சட்ட ஸபையில் அவஸரமாகக் கொண்டுவரப்பட்டிருக்கும் சட்டங்களில் மிகவும் தெளிவாகத் தெரிகிறது.

### 8. ஸத்யம் மாறுது.

மத வாழ்க்கையை, வீட்டிலோ வெளியிலோ, மாற்றவும் தடுக்கவும் செய்யலாமென்ற எண்ணத்திற்கு மூல காரணம் அவ்வாழ்க்கையின் தத்துவத்தை நன்கு அறிந்துகொள்ளாமையே. மதம் என்பது நம்மை கட்டுப்படுத்தக்கூடிய ஒரு விஷயமாகும். கட்டுப்படவேண்டிய நாமே அதை மாற்றலாமென்றால் அதன் தன்மையே போய்விடும். தவிரவும், நம் மதத்திற்கு ஸநாதன தர்மம் என்றதோர் அரிய பெயர். தன்னை ஸநாதனியென்றுமாத்திரம் ஒருவன் சொல்லிக்கொண்டு, அம்மதத்தில் மாறுதலும் இருக்கலாமென்று சொல்கிறவனுடைய மனோபாவத்தை அறிந்துகொள்ள என்னால் முடியவில்லை. "ஸநாதனம்" என்ற பதமும் "மாறக்கூடியது" என்ற பதமும் பரஸ்பரம் விருத்தமான அர்த்தங்களை போதிக்கக்கூடியவை. இவ்விரோதத்தைத் தெரிந்துகொள்ள ஜாஸ்தியான பாண்டித்யம் தேவையில்லை. அப்படியிருந்தும் ஸநாதன தர்மத்தை மாறுதலடைந்து வருகிற ஜன ஸமூஹத்தின் அவ்வப்பொழுதுள்ள அவசியங்களுக்குத் தக்கபடி மாற்றவேண்டுமென்று பிரவிருத்திக்கிற சிலர்களை தத்காலத்தில் காண்கிறோம். அவ்விதம் அவசியத்திற்குத் தக்கபடி மாறிக்கொண்டு வந்தபடியினால் தான், நம் மதம் ஸநாதனமாயிருக்கிறது, என்றதோர் அபூர்வமான நியாயத்தை ஒரு நியாயாதிபதி கண்டுபிடித்துவிட்டார். மதம் என்பது உண்மையாயிருந்தால், அதில் மாறுதலுக்கு இடமில்லை யென்ற ஸாமான்ய நியாயத்தையே இவர்கள் மறந்து நிற்கிறார்கள். இரண்டும் இரண்டும் சேர்ந்தால் நான்கு என்பது உண்மையாயிருந்தால், அதில் மாறுதலுக்கு இடமில்லை யென்ற ஸாமான்ய நியாயத்தையே இவர்கள் மறந்து நிற்கிறார்கள். இரண்டும் இரண்டும் சேர்ந்தால் நான்கு என்பது உண்மை. இதிலிருந்து அணுவளவேனும் மாற்றிச் சொன்னாலும் பொய்யேயாகும். சொல்கிறவர் எவ்வளவு பலசாலியாயிருந்தாலும், இவ்விஷயத்தில் பிரயோஜனமில்லை. இக்கணித தத்வம் போலவேதான் நம் மதமும். இரண்டும் வஸ்து ஸ்திதியைப் பொறுத்த உண்மைகள்; அதாவது பகவானால் நியமிக்கப்பட்ட தத்வங்கள்; மனுஷ்யனால் தத்கால அவசியத்தை யுத்தேசித்து ஸௌகர்யமாய் கல்பிக்கப்பட்ட ஸங்கேதங்கள் அல்ல.

ஆகையால் நம்மதம் சாசுவதமான ஸத்தியமே என்று நம்புகிறவர்களெல்லோரும் அம்மதத்தின் மதிப்பைக் குறைக்க உத்தேசித்து நடத்தப்படும் ஸகல பிரயத்தினங்களையும் தீவிரமாக ஆக்ஷேபித்து பழக்க வழக்கங்களை மாற்றுவதற்காக செய்யப்படும் எல்லா கிளர்ச்சிகளையும் நம்மால் கூடியமட்டும் எதிர்த்தே தீரவேண்டும். நம் தர்ம சாஸ்திரங்களை அனுஸரித்து நடந்தால் இவ்விதம் தண்டிப்போமென்று நவீன அரசாங்கத்தாரும், தர்ம சாஸ்திரங்களின்படி நடக்காவிட்டால் இவ்விதம் தண்டனை யேற்படும் என்று நம்மதமும், சொல்வதில் எந்த தண்டனைக்கு நாம் பயப்பட்டு எப்படி நடந்துகொள்வது என்ற தீர்மானத்தை நம் தேசத்திலுள்ள ஒவ்வொரு ஸ்திரீ புமான்களும் செய்துகொள்ளவேண்டும். தர்மத்திலும் லோகாந்திரத்திலும் பகவானிடத்திலும் நம்பிக்கை வைத்திருக்கும் யாரும் இப்பொழுது நம் சரீரத்திற்காவது தனத்திற்காவது வரக்கூடிய கஷ்டத்தை கொஞ்சமேனும் பொருட்படுத்தாமல் சாசுவதமான சிரேயஸ்ஸுக்கு பிரதிபந்தகமாயுள்ள பாதகம் ஏற்படாமல் தங்களை காப்பாற்றிக்கொள்வார்களென்பதை நான் எடுத்துச் சொல்லவேண்டியதில்லை.

நம் சட்டஸபைகளில் சட்டமாக்கப்பட்டிருப்பதும் சட்டமாக்கப் போவதாக பயமுறுத்தப்படுவதுமான விஷயங்களில் நமக்குள்ள பலவிதமான ஆக்ஷேபணைகளை ஏற்கனவே அநேகம் பெரியோர்களாலும் ஸங்கங்களாலும் அனுப்பப்பட்டிருக்கும் அபிப்பிராயம் பத்திரிகைகளில் வெகு நன்றாக பலவிதமாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. இந்த ஸதஸ்ஸிலும் லௌகிக சட்டத்திலும் தர்மசாஸ்திரத்திலும் நிபுணர்களான அநேகம் கனவான்கள் இருக்கிறார்கள். அவ்வித புதிய சட்டங்களின் ஆக்ஷேபிக்கத்தக்கத் தன்மையை தெளிவாக தங்களுக்கு எடுத்துக் காட்டுவார்கள். ஆகையால் விஸ்தாரமாக நான் எடுத்துச்சொல்ல அவசியமில்லை. முக்கியமாய் வேறு ஒரு விஷயமும் சொல்லவேண்டியிருக்கிறது.

### 9. மதப் பயிற்சி.

நம் மதத்தின் பிராமாண்யத்தைக் கெடுத்து நம் ஸ்திரமான ஜன ஸமூஹக் கட்டுப்பாட்டை குலைக்கப் பிரவிருத்தி செய்யும் இந்த நவீன இயக்கங்கள் நம்மை இத்தனை நாள் தூங்கினதுபோதும் எழுந்திருங்கள் என்று தட்டி எழுப்புகின்றன. அம்முறையில் அவைகளும் ஒரு விஷயத்தில் அனுகூலமே. இனிமேலாவது தாக்கப்படாமல் ஜாக்கிரதையாயிருக்க வேண்டுமென்றும் மத ஸம்ரக்ஷணமான பொது காரியத்தில் ஸநாதனிகள் எல்லாரும் ஐகமத்தியத்துடனிருக்க வேண்டுமென்றும் நமக்கு அவைகள் போதிக்கின்றன. ஒரு செடி காலால் மிதிபடாமலும், துஷ்ட ஜந்துக்களால் பீடிக்கப்படாமலும் இருக்கவேண்டியதற்காக, அதைச் சுற்றி பலமான ஒரு வேலி யிருக்கவேண்டியது மிகவும் அவசியமே. ஆனாலும் வேலி எவ்வளவு பலமாயிருந்தாலும், ஜலம் பாய்ச்சாமல் வேரில் நோய் பிடிக்கும்படி விட்டுவிட்டால், செடி வாடக் கூடாதென்றாவது வளர வேண்டுமென்றாவது எதிர்பார்ப்பதில் கொஞ்சமேனும் பிரயோஜனமில்லை. வேலியே யில்லாமல் போனாலும் செடி பிழைத்திருக்கலாம்; காலால் மிதிபட்டாலும் மறுபடியும் தளிர்க்கலாம். வேரு காய்ந்து நோய் கொண்டால் பிழைப்பதுஸாத்தியமில்லை. அவ்விதமே நமக்கு மத விஷயத்தில் ஏற்பட்டு வரும் கெடுதல்களை எதிர்ப்பதற்கு நாம் செய்யும் முயற்சிகளுடன் நின்றுவிடாமல், ஸநாதன தர்மத்தின் தத்துவங்களைக் குறித்து ஜனங்களுக்கு நன்கு போதிக்கவேண்டியதும் நம் கடமையாகும். அவ்வழியில்தான் நமக்கே பலம் ஸம்பாதித்துக் கொள்ளமுடியும். நமக்குள்ளேயே தடுமாறிக்கொண்டிருக்கிறவர்களுடைய புத்திக்கு தைர்யம் ஏற்படுத்தமுடியும். சில வருஷங்களாக நம்மதத்திற்கு விரோதமாக நடந்து வந்திருக்கும் தீவிரமான பிரசாரத்தின்பலனாக ஏற்பட்டிருக்கும் பலவிதமான தப்பு எண்ணங்களையும் மாற்ற முடியும்.

மேற்கு தேசத்திய நாகரீகத்தின் மேல் பளபளப்பு நம் கண்களை மங்க அடித்து, நம் பிராசீன நாகரீகத்தின் அழகையும் அத்புதத் தன்மையையும் கண்டு களிக்க கண்ணன்னியில் அடித்துவிட்டது. வாணவேடிக்கையில் ஏற்படும் தத்கால ஒளியில், உயர ஆகாசத்தில் சாசுவதமாய் பிரகாசித்துக்கொண்டிருக்கும் அத்புதமான ஜ்யோதிஸ்கள் மறைவுபட்டதாகத்தோன்றுவது போலவேஇதுவும். நம் நாகரீகத்தின் பெருமையில் நம்பிக்கையுள்ள நாம் எல்லாரும் நம் மதத்தினுடையவும் அனுஷ்டானங்களுடையவும் தத்வங்களை தெளிவாக மற்றவர்களுக்கு எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கிறோம். அம்மதானுஷ்டான வைபவத்தினாலல்லவோ இத்தனை வருஷங்களாக உள்ளிருந்தும் வெளியிருந்தும் தாக்கும் பலவித ஆபத்துக்களையும் தாங்கிக்கொண்டு அசைவற்று நம் தேசத்திலுள்ள ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் ஜன ஸமூஹ வாழ்க்கையும் பாதிக்கப்படாமலிருந்து வருகின்றன. பால்யம் முதற்கொண்டு நம் தர்மம் இன்னதென்றே தெரியாமல் உதாஸீன புத்தியுடன் இருந்து வருகிறவர்களுக்கு நம் மதத்தின் பெருந்தன்மையை அறிவது மிகவும் சிரமம் தான். ஸமீபத்தில் சட்டஸபையில் சாரதாசட்ட சீர்திருத்தத்தை மிகவும் தைர்யத்துடன் தனித்து எதிர்த்த ஸ்ரீமான் பஜோரியா அவர்கள் விஷயத்தில் மிகவும் சல்லித்தனமாய் சிலர்கள் நடந்துகொண்டதும் இம் மனப்பான்மையின் பலனேயாகும். ஆகையால், நம் தேசத்தில் இனி உரிமை பெறப்போகிற நம் சிறுவர்களுடையவும் சிறுமிகளுடையவும் புத்தி சரியான வழியில் பழக்கப்படும்படிக்கும், தாங்களும் வாஸ்தவமான ஹிந்துக்களே என்று சொல்லிக்கொள்ள நியாயமுண்டாகும்படிக்கு வேண்டிய வித்யாப்யாஸம் அவர்களுக்கு ஏற்படும்படிக்கும், கவனித்து வரவேண்டியது நம் முக்கிய கடமையாகும்.

பிரஸித்தமான வித்வான்களைக்கொண்டு நியதமாகவோ சில வேளைகளிலோ உபன்யாஸங்கள் செய்யும்படி ஏற்பாடு செய்யவேண்டியது அவசியமே. ஆனால் தத்காலத்தில் எவ்விஷடமான ஞானம் வேண்டுமானாலும் பத்திரிகைகளையே திருப்பிப்பார்ப்பது என்ற அப்யாஸம் ஜனங்களுக்கு, அதிலும் முக்கியமாய் சிறுவர்களுக்கு, ஏற்பட்டிருக்கிறபடியால் நமக்கும் சில தினசரிப்பத்திரிகைகள் மிகவும் அவசியமாயிருக்கின்றன. எவ்வித சிரமமிருந்தபோதிலும் தைர்யமாக நம் கொள்கைகளை எடுத்துச்சொல்லும் ஆர்ய தர்மம், தர்மராஜ்யம் முதலான பத்திரிகைகளுக்கு ஜாஸ்தியான பிரசாரம் ஏற்படும்படி செய்யவேண்டியதும் மிக்க அவசியம். பள்ளிக்கூடங்களிலும் பாடசாலைகளிலும், மதஸம்பந்தமான வித்யாப்யாஸம் அவசியம் கொடுக்கும்படி ஏற்பாடுசெய்யப்பிரயத்தினம் செய்யவேண்டும். அவ்விதம் செய்வது இப்பொழுதுள்ள ஸௌகர்யத்தில் ஸாத்தியமில்லையென்றாவது காலதாமதப்படுமென்றாவது தோன்றினால், பள்ளிக்கூட வாசிப்புக்கு பாதகமன்னியில், தனியாக மதவிஷயமாக போதிக்கவேண்டிய ஸௌகர்யங்களை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். நம் இதிஹாஸ புராணங்களை நல்ல வித்வான்களைக்கொண்டு நன்கு பிரவசனம் செய்யும்படி விசேஷ ஸௌகர்யங்கள் செய்துகொடுக்கவேண்டும். ஸம்ஸ்கிருத பாஷையை அவசியம் நியதமாய் அப்யஸிக்கவேண்டுமென்று வற்புறுத்தவேண்டும்.

(தொடரும்.)



# சாரதா சட்டம்

## புதிய திருத்தங்கள் விவரம்.

சாரதா சட்டம்:—அநேகர் சாரதா சட்டத்தைத் தெரிந்துகொள்ள விரும்புகின்றனர் கல்யாண மாதங்களில் வினாக்கள் பல எழல் இயல்பே. இப்பொழுது சட்டம் திருத்தி அமைக்கப்பட்டது வினாக்களுக்கு காரணம்.

முன்னர்:—சுமார் ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர் இந்த சாரதா சட்டம் சட்டசபையில் தீர்மானிக்கப்பெற்று சட்டமாயிற்று.பதினான்கு வயதிற்குக் குறைந்த பெண்ணுக்கோ, பதினெட்டு வயதிற்கு குறைந்த ஆணுக்கோ மணம் நடந்தால் நடத்தியவர்களுக்குத் தண்டனை விதிக்கப்படும். சட்டம் முன்னர் புதிதாக இருந்ததால் குற்றஞ் செய்தவர்களை மிக நெருக்க வேண்டாமென்று மாஜிஸ்திரேட்டுகளுக்கு கவர்ன்மெண்டார் அறிவித்திருந்ததாகத் தெரிகிறது.

இன்று:—இப்பொழுது சட்டத்தில் சில திருத்தங்கள் வந்திருக்கின்றன. இளமை மணத்தின் தடையை வலுப்படுத்துவதே திருத்தங்களின் நோக்கம்.

அதிகாரி:—முன்னர் ஜில்லா மாஜிஸ்திரேட் ஒருவர்தான் விசாரிக்கலாம். இப்பொழுது முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் யாவரும் விசாரிக்கலாம்.

கேஸ் ஆரம்பம்:—முன்னர் ஒருவரும் குற்றம் சாட்ட வில்லையானால், அதிகாரிகளாக இதைக் கவனிப்பதில்லை. இப்பொழுது குற்றஞ் சாட்டியதின் பேரிலோ அல்லது அதிகாரிகள் தாமாகவோ கேஸ் ஆரம்பிக்கலாம்.

இடம்:—முன்னர் கல்யாணத்தை புதுக்கோட்டை போன்ற இடங்களில் செய்தால் சட்டத்தினின்றும் தப்பிக்கலாமென்று நினைத்தனர். பிரிட்டிஷ் இந்தியா வாசிகள், பிற இடங்களில் சென்று கல்யாணம் செய்தாலும் சட்டத்தினின்றும் தப்பிக்க முடியாதென இப்பொழுது துலக்கப்பட்டிருக்கிறது.

தண்டனை:—18 வயதிற்கு மேற்பட்டு 21 வயதிற்குட்பட்ட மணமகன் 14 வயதாகாத பெண்ணை மணந்துகொண்டால் மணமகனுக்கு 1000 ரூபாய் வரை அபராதம் விதிக்கலாம்.

21 வயதிற்கு மேற்பட்ட மணமகன் 14 வயதாகாத பெண்ணை மணந்தால் ஒரு மாதம் வரை ஜெயிலோ அல்லது இரண்டுமோ விதிக்கலாம்.

இந்த மணங்களை செய்து வைப்பவர் நடத்துபவர், நடத்தச் செய்பவர் ஒரு மாதம்வரை ஜயிலுக்கும் 1000 ரூபாய் வரை அபராதத்திற்கும் அல்லது இரண்டிற்கும் உட்படுவர். மைனரான மணமகன் மணமகளை காப்பாற்றுகிறவர்கள், அம்மைனர் மணங்களை ஏற்பாடு செய்தாலும் தடுக்காமலிருந்தாலும் மேற்கண்ட தண்டனைக்கு ஆளாவார்.

இத்தண்டனை முன்னிருந்தது; இப்பொழுதும் இருக்கிறது. இனி அதிகமாக அமுலுக்கு வரலாம். கல்யாணம் நடந்த ஒருவருஷம் வரை கேஸ் கெடு கொடுத்திருக்கிறது.

தே-உ.

# சென்னை,

## வார்ஷிக பசுபந்த யாகம்.

சென்னை, திருவல்லிக்கேணி, கிருஷ்ணமாசாரியார் அவர்களால் பழைய மாம்பலம் ஸ்ரீ ஹரிதாஸ் மடத்தில் 5-6-38 (ஞாயிற்றுகிழமை பசுபந்த யாகம் செய்யப்பட்டு 500 பிராம்மணர்களுக்கு போஜனம் செய்விக்கப்பட்டது. அவ்வூர் வாஸிகளான ஆஸ்திகர்கள் மிகவும் கொண்டாடினார்கள். போஜனத்திற்கு பிற்பாடு மழையும் உபாயமாக வந்தது.

## ஸ்ரீ மஹாபாரத வனபர்வ உபன்யாஸம்.

மாம்பலம் ஸ்ரீ கோதண்டராம ஸ்வாமி வஸந்த மண்டபத்தில் உபன்யாஸிக்கப்பட்டு வரும் ஸ்ரீ மஹாபாரத உபன்னியாஸத்தில் ஆதி ஸபா பர்வம் பூர்த்தியாகி வைகாசிமீ 8உ முதல் வனபர்வ உபன்னியாஸம் ஒவ்வொரு நாளும் பகல் 3-மணி முதல் 4-மணி வரையில் நடந்துவருகிறது.

## அங்குளீயகப்பிரதானம்.

சென்னை சைதாப்பேட்டை பெருமாள் ஸன்னிதியில் உடையாளூர் பிர்ம்மஸ்ரீ, அப்புஸாமி சாஸ்திரிகள் அவர்களால் 5-மாதகாலமாய் உபன்யாஸம் செய்யப்பட்டுவரும் ஸ்ரீ ராமாயணத்தில் அங்குளீயகப் பிரதானகட்டம் 5-6-38 ராத்திரி அழகாக உபன்யாஸம் செய்யப்பட்டது.

ந. நி.

## ஸங்கீத ஸபை.

ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்தி ஸம்ரக்ஷண ஸபை ஆதரவில் 12-6-38ல் புரசவாக்கம் ஸ்ரீநிவாஸப்பெருமாள் ஸந்நிதியில் ஸ்ரீமான் ஸங்கீதவித்வான் நெரூர் ஸ்ரீநிவாஸாசாரியார் ஸ்வாமி தம் இரு சிறு பெண்களுடன் நம்மாழ்வார் அவதார சரித்ரத்தை இசையுடன் பாடினார். ஆழ்வார் அபிமானிகளான ரஸிகர்கள் அநேகர் அங்கு வந்தனர்.

## பரவஸ்து ஸ்ரீநிவாஸாசாரியார்.

10–6–38ல் சென்னை புரசவாக்கம் நெ. 29 கிருஷ்ண பவனத்தில் ஸ்ரீ உபயவே பரவஸ்து ஸ்ரீநிவாஸாசாரியார் ஸ்வாமியால் வெகு நாளாக நடத்தப்பட்டுவந்த பகவத் விஷய (திருவாய்மொழி) காலக்ஷேபம் சாத்துமுறை (பூர்த்தி) நடந்தேறியது. நம்மாழ்வார் திருநக்ஷத்ரம் திருவிசாகத்தில் முடிந்தது குறிப்பிடத்தக்கது.

N. R. ஸ்ரீநிவாஸாசாரியார்.

# ஆத்தன்குடி.

## ஸநாதன தர்ம மகா சபை.

வெகுதான்யஹு வைகாசிமீ 31உ திங்கள் கிழமை மாலை மூன்றுமணிக்கு கடவுள் வாழ்த்துக்குப்பின் ப்ரும்மஸ்ரீ M. திருவேங்கடமய்யங்காரவர்கள் தலைமையில் ஸ்ரீ. கதிரேசன் செட்டியார், ஜெகதீசய்யர் முறையே "பேரினம் சார்தல்" "நல்வழி" என்ற பொருள்பற்றி சொற்பொழிவாற்ற தலைவரவர்கள் அரிய மேற்கோளுடன் முடிவுரைகூற வந்தனோபசாரம் கூறப்பெற்று சபை மாலை 4-மணிக்கு இனிது நிறைவெய்தியது.

செகரட்டரி.

# மாத்வ ஸ்திரீயின் பஜனை.

கும்பகோணத்திலிருந்து 1935-ம் ஹுத்தில் பண்டர்பூர் க்ஷேத்திரத்துக்குப் போய், அங்கிருந்து, காசி, கயா முதலிய புண்ய ஸ்தலங்களுக்கு தீர்த்தயாத்திரைசெய்து, நமது நகருக்கே சென்ற 1937-ம்ஹு மேமீ விஜயம்செய்து, பஜனை நடத்திவந்த ஸ்ரீமதி, அம்மாளு அம்மாளின் பஜனையைப்பற்றி ஏற்கனவே பல பத்திரிகைகளிலும் வெளியாயிருப்பதை நேயர்கள் அறிந்திருப்பார்கள். ஷை அம்மாள் வழக்கம்போல், பிரதி புதன், வெள்ளி, சனிக்கிழமைகளில் விஸ்தாரமாயும், மற்றக் கிழமைகளில் இரவு 10-மணி வரை தெய்வபக்தி புகட்டும்படியான இனிய கீர்த்தனங்களாலும் அபிநயம் முதலியவற்றாலும், பல ஆயிரக்கணக்கான ஜனங்களின் முன்னிலையில், அன்ன ஆகாரமின்றி வெகு உற்சாகத்துடன் பஜனை நடத்திவந்து, சென்ற 4-6-38 சனிக்கிழமை மாலை சுமார் 4-மணிக்கு வராகக்குளம் வடகரையில் தன் பஜனை க்ரஹத்திலிருந்து புறப்பட்டு, பஜனைசெய்துகொண்டே பண்டர்பூருக்கே புறப்பட்டுப் போவதற்காக மங்கள வாத்திய கோஷங்களுடன் ரயில்வேஸ்டேஷன் சென்று ரயில்டிசத்திரத்தில் தங்கியிருந்தார்கள். அந்த அம்மாளின் பக்த பரிவாரங்களும், தொண்டர்களும், பஜனையில் பக்திசிரத்தையுள்ள சில கனவான்களும், ஊர் ஜனங்களும்சுமார் ஆயிரம்பேர் மத்தியானம் 3 மணி முதல் ராத்திரி 8–30 மணிவரையில் ரயில் புறப்படும்வரையில் கூடவே இருந்தார்கள். மதராஸ் திருவல்லிக்கேணியில் சிலகாலம் தங்கிருந்து பஜனையை நடத்தி ஸ்ரீ பார்த்தசாரதி பெருமாளை தரிசனம் செய்துவிட்டு, திருப்பதி போய்விட்டு பிறகு பண்டர்பூர் போய்ச்சேர்வார்களென்று தெரியவருகிறது. பண்டர்பூரில் ஆடி-மீ முதல் கார்த்திகை-மீ வரையில் நடக்கும் விசேஷ உற்சவத்தைப் பார்த்துக்கொண்டு அடுத்த தை-மீ இங்கு விஜயம் செய்யலாமென்று தெரிகிறது.

ஸ்ரீமதி அம்மாளு அம்மாள் பஜனை நடத்துவதற்காக வாடகையன்னியில் தன் வீட்டில் இடம் கொடுத்து சகல வசதியும் அளித்த ரிடயர்ட் ஸ்டேஷன் மாஸ்டர் ஸ்ரீமான் V. ராமராவ் அவர்களுடைய உதாரகுணம் மிகவும் கொண்டாடத்தக்கது. இந்த பஜனையில் கோலாட்டம் முதலிய கைங்கிரியம் செய்துவந்த அநேகம் ஸ்திரீகளில் சிதம்பரம் லேட் வக்கீல் S. சுப்பிரமணிய அய்யருடைய பெண்குழந்தை சுமார் 5 வயதுள்ள பவானி என்னும் பெண்குழந்தையின் கானமும், நர்த்தனமும், அபிநயமும் எல்லாருடைய மனதையும் ஆனந்த ஸாகரத்தில் மூழ்கச் செய்ததுடன் பக்தி பரவசமாகும்படி செய்திருக்குமென்பதில் சந்தேகமில்லை. ஷை பெண்ணுக்கு சர்வமங்களமும் உண்டாகுக.

T. A. நாகராஜய்யர், முனிஸிபல் ஸ்கூல்
உபாத்தியாயர், கும்பகோணம்.


திவான்பகதூர் V. K. ராமாநுஜாசாரியாரால் எழுதப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| யதீந்த்ரமத தீபிகை. | 4 | 0 | 0 |

Mr. N. E. வெங்கடேச சர்மா.

| | | | |
|---|---|---|---|
| ஸம்ஸ்கிருத ஸ்வபோதினி. | 1 | 0 | 0 |
| ஸம்ஸ்கிருத தமிழ் அகராதி. | 4 | 0 | 0 |

K. V. சுப்ரமணிய சாஸ்திரிகள்.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷேந்த்ரா: | 1 | 0 | 0 |
| ஸூனீதிகுசமாலா | 0 | 8 | 0 |

K. R. V. சாஸ்திரிகள் பிரசுரங்கள்:—

| | | | |
|---|---|---|---|
| த்யானஸ்லோகம் | 0 | 1 | 0 |
| சாஸ்வதி பூஜாகல்பம் | 0 | 1 | 0 |
| ஜவஹர்லால் நேரு | 0 | 4 | 0 |
| தாதுரூபாவளி | 0 | 4 | 6 |
| ஸப்தமஞ்சரி | 0 | 5 | 0 |

கிடைக்குமிடம்:—ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட், டவுன்ஹைஸ்கூல்ரோடு, கும்பகோணம்.



# விளம்பரம்.

சென்னை மாகாணத்தில் ஸனாதந தர்மப் பிரசாரம் செய்ய சிறந்தவாக்குள்ளவர்களாயும் அனுஷ்டாதாக்களாயும் ஊக்கமுள்ளவர்களாயுமிருக்கிற பண்டிதர்கள் தேவை. யோக்யதானுசாரமாய் ஸம்பாவனை செய்யப்படும். அடியில்கண்ட விலாசத்துக்கு எழுதிக்கொள்ளவும்.

என். நடேசய்யர்,
அகில இந்திய வர்ணாச்ரம
ஸ்வராஜ்ய ஸங்க கார்ய அத்யக்ஷர்
55 தமிழ் சங்கம் ரோட், மதுரை.

215236

335

## செங்கல்பட்டு.

### வைதிக தர்ம ஸங்கம் (கிளைஸ்தாபனம்).

தமிழ்நாடு வைதிக தர்ம சங்கத்தின் சார்பாக, செங்கல்பட்டு ஜில்லாவிலுள்ள பாலாறு நதிக்கரையிலுள்ள பனையூர் கிருமத்தில் செங்கல்பட்டு கிளைஸ்தாபனம் ஸ்ரீ சிவப்பிரகாச அநந்தகிரி சுவாமிஜீஅவர்கள் ஆதரவிலும் மேன்பார்வைமேலும் வைகாசி 2உ 3உ களில் தொடர்ந்த சில நிகழ்ச்சிக் குறிப்புகளை விமரிசையாக நடத்தியது. சங்கத்தின் முன்னேற்றத்தைக் குறித்து சங்கத்தின் 4-வது வருடாந்தரக் கொண்டாட்டமானது முறையே 'ஹோம' பூர்வமாய் ஆசி கூறப்பட்டது. இச்சங்கமானது நாஸ்திகம் தலைசிறந்து விளங்கும் இக்காலத்து மக்களுக்கு ஆஸ்திக புத்தியை நிலைநாட்டி, தர்மத்தில் பற்றுதலை அதிகரிக்கவேண்டியும், வைதிக கர்மாக்களில் சிரத்தையை அதிகரிக்கச் செய்யவும் வேண்டிய நோக்கத்துடன் ஹோம பூர்வமான கர்மாக்களைச் செய்து ஜனங்களுக்கு நம்பிக்கையை உண்டாக்கி, தேசம் ஸமாதானத்தை அடையும்படி வழிகாட்டியாய் வேத காலத்தையும், மகரிஷிகளின் தூயவாழ்வையும் நிரூபிக்கிறது.

இந்தச் சங்கம் இரண்டாவதாக பனையூர் கிருமத்தில் ஒரு குருகுல ஆசிரமத்தையும், ஒரு வானப் பிரஸ்தாசிரமத்தையும், ஸ்தாபித்தது. பாலாற்றின் வடகரையிலுள்ள 8 ஏகர் தோப்பை திருச்சினப்பள்ளி, அட்வகேட் பிரும்மஸ்ரீ பி. இராமனுதய்யர் அவர்கள் சங்கத்திற்கு நன்கொடையாக அளித்துள்ளார். அநேக சட்ட புஸ்தகங்களை பிரசுரித்தவரானவரும் மிக்க கீர்த்தி வாய்ந்தவருமான அய்யர் அவர்களுடைய நன்கொடை புகழத்தக்கதே. நன்கொடையாக அளிக்கப்பட்ட இந்த தோப்பானது அநேக மாமரங்களைக் கொண்டு பனையூர் கிருமத்திலிருந்து 6பர்லாங் தூரம் வரையில் செழுமையாய் விளங்குகிறது. தோப்பின் பாலாற்று ஒரு கரைத்தோற்றமும், மற்றொருகரையிலுள்ள கீர்த்தி வாய்ந்த 'ஜீவரம்,' கோயில்களின் தோற்றமும் எவர்களுடையமனதையும் கவரக்கூடிய தன்மையோடு கூடி அமைதியையும், மனத்தூய்மையையும் அளிக்கிறது. "காஞ்சீவரம்,' தலைநகராய் மிளிரும் இவ்விடத்தில், தெய்வீகம் ஒளியுடன் விளங்கும் என்றே கருத வேண்டியிருக்கிறது. வானப்பிரஸ்தர்கள் தனிமையான ஓர் இடத்தைத்தேடும், இடம் இதுதான் என்று நிரூபிக்கிறது. அவர்களுடைய அப்பியாச பழக்கவழக்கங்களுக்கு ஏற்றதாய் விளங்குகிறது. ஆஸ்ரமத்திற்கு சங்கத்தின் ஆதரவில் ஸ்ரீ ஆசார்யாளும் மேற்பார்வையிட்டு உதவியளிப்பார் எனக்கருதப்படுகிறது.

பிரசாரத்திற்காக ஆங்கில பாஷா அறிவோடுகூடிய 20 பண்டித யுவர்கள் இடைவிடாது கிராமங்தோறும் சென்று பிரசாரம் செய்வதே கடமையாகக்கொண்டுசங்கத்தின் கொடியோடு சஞ்சாரம் செய்யவேண்டிய நிலைமையில் பழக்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இவ்விஷயத்தில் வைதிக தர்ம சங்கம் கூடிய சீக்கிரத்தில் கவனம் செலுத்துமென்று தெரியவருகிறது.

அந்தப் பிரதேசத்திலே மூன்றுவதாக ஒரு பிரம்மசார்ய ஆசிரமம் குருகுல வழியை ஒட்டி நடத்தப்போகிறது. ஆசார்யர்களும், பிரம்மசாரியர்களும் ஒன்று சேர்ந்து குருகுல சம்பிரதாயத்தை ஒட்டி தினசரி வாழ்க்கையை நடத்தி வந்து அதிசீக்கிரத்தில் தர்மவீரர்களாய் விளங்குவார்களென்று எதிர் பார்க்கப்படுகிறது.

இந்த பிரதேசத்திலுள்ள இந்த மூன்று வித கிளைஸ்தாபனங்களும் சுவாமிஜீ அவர்களுடைய மேற் பார்வையின் மேல் சில காலம் விளங்கி சில வானப் பிரஸ்தர்களைக் கொண்டு முறையே வானபிரஸ் தாசிரமமென்று மாற்றப்படுமென்று அறிவிக்கப்படுகிறது.

இம்மாதிரியான முக்கிய நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டே தைத்திரீய உபநிஷத் 'ருக்'களைக்கொண்டு "ஆமாயாந்து பிரும்மசாரிண: ஸ்வாஹா" என்று ஸங்கல்பம் செய்யப்பட்டிருக்கிறது.

சாக்ஷாத் லோகமாதாவான ஸ்ரீ தேவியின் அனுக்ரஹமில்லாமல் எவரும் வாழ்க்கைக் குறிய ஸாதனங்களை அடையமுடியாதென்பது உலகப்பிரஸித்தமாதலால், அத்தேவியைக் குறித்தான "ஸ்ரீ ஸூக்த ஹோமம்" நன்மையைக்கோறி விதிப்படி முறையே வில்வப் பழங்களைக்கொண்டு ஹோம விதிப்படிக்கிணங்க செய்யப்பட்டது. பனையூர் வாஸிகள் கிருதயுகவாசிகளாகவே சின்னாள் காணப்பட்டார்கள். கிராமவாஸிகள் கிருதயுகவாசிகள்போல் சீரும், சிறப்பும் பெற்று தர்மப்பற்றுள்ளவர்களாய் விளங்கவேண்டுமென்பது சங்கத்தின்நோக்கமாகும். இப்பெரியநன்நோக்கத்தைக் கொண்டே சங்கம் இன்றும், என்றும் உழைக்கவூக்கமுள்ளதாயிருக்கிறது. ஸ்ரீ ஸூக்தஹோமத்தன்று மாலை சுவாமிஜீ அவர்கள் யஞ்கத்தின் அவசியத்தைப்பற்றியும் அவைகளின் அரியபெரிய பலனுகிய பெரும் பயன்களையும் இக்காலத்திலும் அடையலாமென்றும் விளக்கமாய்க் கூறினர். அது சமயம் சங்கத்தின் மெம்பர்களும் விஜயம் செய்திருந்த அநேகப் பெரியார்களும் ஆதரளித்து கூடியிருந்த மஹாஜனங்களுக்கு வழிகாட்டியாய் நின்று, ஜனங்கள் தாமஸ குணங்களின்றும் விடுபட்டு தர்மப்பற்று மேலிட்டு ஹிந்து ஸமூகமே தலைசிறந்து விளங்க ஏதுவானர்கள் என்றே சொல்லவேண்டும்.

R. ராதாகிருஷ்ண அய்யர், வக்கீல்,
ஸெகரட்டரி, வைதிக தர்ம சங்கம்,
தஞ்சாவூர்.

## சென்னை.

ஸ்ரீ ஸேது மஹாத்மியம்! பதினெண் புராணப்ரவசந ஸபையின் தலைவர் ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா அவர்கள் ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் மடத்தில் மஹாஸ்காந்தம்பிரும்ம கண்டத்திலுள்ள மேற்படி விஷயத்தை புதன்கிழமை முதல் ப்ரதிதினம் மாலையில் உபன்யஸிப்பார்.

தேவீ பாகவதம்! மாம்பலம் பஜனை சபையின்தரவில், ஸ்ரீவத்ஸ வெ. ஸோ சர்மா அவர்களால் ப்ரதி திங்கள் செவ்வாயிலும் இரவு 8 மணிக்கு நடைபெறும்.

ஸ்ரீ பாகவதம். மைலையில் விராம காலத்திற்காக நின்றிருந்த ஸ்ரீபாகவத தசமஸ்கந்தம் பிரதி புதன் வியாழன் வெள்ளி இரவுகளில் ஸ்ரீ வே.ஸோமதேவ சர்மாவால் நடத்தப்படும்.

தர்மோபநயநம். முத்யால்பேட்பிராம்மண ஸபைத்தலைவர் சென்ற குருவாரத்தன்று ஓர் ஏழை ஸ்ரீவைஷ்ணவ பிராமணச்சிறுவனுக்கு தனது சொந்த செலவில் தக்ஷிணை கொடுத்து உபநயநம் செய்து வைத்தார்.

ஸ்ரீ காமகோடி கிரஹப்பிரவேசம்! சென்னை வெங்கடரமண வைத்ய சாலை (மாம்பலகிளை) வைத்யரான பிரும்மஸ்ரீவைத்ய விசாரத ஜகத்ரக்ஷக சாஸ்திரிகள் ஸ்ரீ காமகோடி என்ற நூதந கிரஹத்தை நிர்மாணம் செய்து குருவாரத்தன்று வைதிக விதிப்படி கிரஹப்ரவேசம் செய்தார். ஸ்ரீகாமகோடி பீடாதிபதிகளது ப்ரஸாதம் முதலில் ஆசீர்வாத புரஸ்ஸரமளிக்கப்பட்டது. ஸ்ரீவத்ஸ சர்மா முதலிய பல நண்பர்கள் வந்திருந்தனர்.

நமது நிருபர்.

## திருவிடமருதூர்.

### லக்ஷார்ச்சனை.

ஸ்ரீ மத்யார்ஜுனம் என்னும் திவ்விய க்ஷேத்திரமாகிய திருவிடைமருதூரின் கண் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பிரகத்சுந்தர குஜாம்பிகா ஸமேத ஸ்ரீ ஜோதிர் மஹாலிங்க சுவாமிக்கு, குன்னியூர், மிருசுதார் ஸ்ரீமான் D. நாராயணசாமி அய்யர் என்கிற சந்தானம் அய்யர் அவர்களால் விசேஷமான அபிஷேகம் செய்யப்பட்டு தொடர்ந்த சில நாட்களாக சுவாமிக்கு லக்ஷார்ச்சனை செய்து லக்ஷ தீபமும் ஏற்றி முறையே வழிபட்டது நிலாகிக்கத் தகுந்தது.

தர்மப்பற்று குறைந்துவரும் இக்நாளில் தர்மம் ஓங்கவும், தெய்வ ஸான்னித்தியம் மேன்மேலும் சீரும், சிறப்பும் பெற்று விளங்கவும் ஸ்ரீமான் அய்யாவர்கள் ஏற்றிய லக்ஷ தீபமும், செய்த லக்ஷார்ச்சனையும் ஜோதிவடிவான பரம்பொருளை ஆன்ம கோடிகளுக்கு மெய்ப்பித்துக் காட்டி பக்தியை நிலைநாட்டியது என்றே கூறவேண்டும். கோவில் அவ்வளவு பிரகாசமாக விளங்கியது.

மேலும் ஸ்ரீமான் அய்யாவர்கள் தொடர்ந்த பல தினங்களாய் இத்திவ்ய க்ஷேத்திரத்தில் வாஸம் செய்து, ஆயிரம் அந்தணர்களை முறையே உபசரித்து, அன்னமளித்து "ஸஹஸ்ரபோஜனம்" நடத்தி வைத்ததானது பிரும்மண்யத்தில் அய்யாவர்களுக்கு உள்ள பற்றுதலும் அன்பும் தெற்றென விளங்குகிறது.

ஸ்ரீமான் அய்யாவர்கள் மேன்மேலும் தர்மத்தில் பற்றுள்ளவராய் விளங்கி ஸ்ரீ ஜோதிர் மஹாலிங்க சுவாமியின் பூர்ண அருளால் ஆயுராரோக்கிய மகதைஸ்வர்யத்தை அடைந்து நீடுழிவாழ அறிகுறியாய் ஸ்ரீ மஹாலிங்க சுவாமியின் விமரிசையான திருக்கல்யாண உத்ஸவத்திற்கு முன்பு, சுவாமிக்கு அபிஷேக அலங்கார அர்ச்சனை செய்யக் கிடைக்கப்பெற்ற அய்யாவர்கள் பெரும் பாக்கியமே பாக்கியம்!

ஒரு நிருபர்.

## திருக்கல்யாண மண்டகப்படி.

### திருவிடமருதூர்.

இவ்வூர் தேவாலயத்தில் மூர்த்திகரித்து விளங்கும், ஸ்ரீ ஜோதிர் மஹாலிங்க சுவாமியின்விமரிசையான திருக்கல்யாண உத்ஸவம் பூர்த்தியடைந்த மறுநாள் (11-6-38) ஸ்திரவாரத்தன்று இவ்வூர் (Vice Chairman) ஸ்ரீமான் ஏ. சுப்பையா செட்டியார் அவர்களாலும், அவர்கள் பந்துக்களாலும் வருஷா வருஷம் செய்யப்பட்டு வரும் மண்டகப்படி விமரிசையாக நடத்தப்பட்டு, தக்க பெரியாரால் அருட்பா காலக்ஷேபமும் நடத்தப்பெற்று இனிது நிறைவெய்தியது.

ஒரு நிருபர்.

## வல்லநாடு.

### ஆலயப்பிரவேசக்கண்டனம்.

16-5-38ல் வல்லநாடு என்ற இவ்வூரில் ஆலயப்பிரவேச மசோதா சாரதாச்சட்டத் திருத்த மசோதா ஜனசமூக சம்பந்த அசௌகர்ய நிவாரண மசோதா இவைகளைப் பொது ஜனங்களால் ஓர் கூட்டம்கூட்டி மேற்கண்ட விஷயங்களை கண்டித்து மேற்படி மசோதாக்களை சட்டமாகாவண்ணம் திருவிடைமருதூரிலிருந்து வரவழைக்கப்பட்ட பாரங்களில் எல்லா ஜனங்களும் கையெழுத்து வைத்து கனம் மேன்மைதங்கிய வைஸ்ராய், கவர்னர், பிரதம மந்திரி, ராஜன், மெம்பர், கௌன்ஸில் மெம்பர், மத்ய அஸெம்பிளி பிரஸிடெண்டு இன்னும் சிலருக்கு அனுப்பப்பட்டது.

என். தாமோதர சர்மா.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

337

ஆர்யதர்மம்
ஸ
4 25
23
23-6-1938

215237

1458-8
215237
OFFICE OF THE REGISTRAR OF BOOKS 28 JUN 1938 MADRAS
339

Registered No. M. 2913

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

பு 23 | கும்பகோணம் கலி 5010 பகுதான்ய-ஸ்ரீ ஆனி-மீ 9உ 1938ஸ்ரீ ஜுன்-மீ 23உ | ஸ 25

## ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0.
தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்
பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்ச் 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0
நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்

### ஸுபாஷ் போஸுக்குக் கல்லடி.
முஸ்லீம்களின் விஷமம்.

வங்காளத்தைச் சேர்ந்த திப்பரா ஜில்லாவில் காங்கிரஸ் தலைவரான ஸ்ரீமான் போஸுக்கு ஓர் ஊர்வலம் நடத்தப்பட்டபோது முஸ்லீம் லீகைச்சேர்ந்த சில துஷ்டர்கள் கலஹம் செய்து கல்லெறிந்தனர். ஸ்ரீமான் போஸின் தலையில் கல்லடிபட்டுக் காயம் ஏற்பட்டது.

### கல்யாண வரி.
சென்னை ஸர்க்கார் யோஜனை.

சென்னையில் காங்கிரஸ் கவர்ன்மெண்டார் ஜனங்களுக்கு ஒரு புதிய வரி விதிக்க யோஜனை செய்து வருகிறார்கள். அதாவது விவாஹம் நடத்துகிறவர்களிடமிருந்து வரி வசூலிக்க ஏற்பாடு செய்யப்படும். ஆகவே விவாகம் செய்யுமுன் லைஸென்ஸ் பெற வேண்டிவரும்.

### எங்களுக்குப் பிரதிநிதியல்ல.

அலஹாபாத்தில் நடைபெற்ற ஷியா வகுப்பு முஸ்லீம்களின் மஹாநாட்டில், அகில இந்திய முஸ்லீம் லீக் ஸபையானது தங்களுடைய பிரதிநிதிஸ்தாபனமல்லவென்றும் அதனிடம் நம்பிக்கையில்லையென்றும் தீர்மானிக்கப்பட்டது. பம்பாய் முஸ்லீம்களும் இப்படியே தீர்மானித்தனர்.

### முஸ்லீம் லீக்குக்குப் பெருமை கொடுப்பதா?
சீக்யர்களின் கண்டனம்.

ஜலந்தரில் நடைபெற்ற சீக்யரின் ராஜீய மஹாநாட்டில், காங்கிரஸானது முஸ்லீம் லீகை தழுவி ராஜி பேச முற்படுவது ஆக்ஷேபகரமென்றும், இதனால் முஸ்லீம் லீகுக்கு அனாவச்யமான கௌரவம் கொடுக்கப்படுகிறதென்றும், [illegible] முஸ்லீம்களின் [illegible] அபேக்ஷிக்கப்படுகின்றனர்; சீக்யரைக் கலக்காமல் செய்யப்படும் எந்த ராஜீயமும் உபயோகப்படாதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

### 'விடுதலைப்' பத்திரிகைக்கு அபராத தண்டனை.

ஈரோடிலிருந்து பிரசுரமாகும் "விடுதலை" என்ற சு. ம. கக்ஷிப் பத்திரிகையானது கீடமங்கலம் ராஜீய மஹாநாடு நடந்த ஸமயத்தில் ஸ்ரீமான் ஸத்தியமூர்த்தி உடையார் தீண்டாதாரைத் அன்புடன் அவமானப் படுத்தியதாக அவதூறு செய்ததான கேஸில் தஞ்சை அடிஷனல் மாஜிஸ்ட்ரேட் அந்த பத்திரிகை அவதூறு செய்திருப்பது உண்மையென்று கண்டு 200 ரூபாய் அபராதமோ, 4 மாத காவல் தண்டனையோ அநுபவிக்க வேண்டுமென்று பத்திரிகை அதிகாரிகளுக்கு தண்டனை விதித்தார்.

### ஹிந்திக்கிளர்ச்சி.
காங்கிரஸ் ஆர்ப்பாட்டம்.

ஹிந்தியை எதிர்த்து ஸத்யாக்ரஹமும் கைதுசெய்வதும் நிற்கவில்லை. இச்சமயம் காங்கிரஸ் காரர்கள் கட்டாய ஹிந்தியை ஆதரித்துப்பொது ஜன ஆதரவை அதிகரிக்க எங்கும் பிரசாரம் செய்யப் புறப்பட்டுள்ளார்கள்.

சென்னை கடற்கரையில் பெரிய ஆடம்பரத்துடன் ஓர் கூட்டம் நடைபெற்றது. பிரதம மந்திரி, தன் கக்ஷியை விளக்கிப்பேசினார்.

கூட்டத்தில் சிலர் கலவரம் செய்தனர். அவர்கள் போலீசாரால் கைது செய்யப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டனர்.

### யூதர்களுக்கு ஹிம்ஸை.

ஜர்மனியிலும் ஆஸ்திரியாவிலும் யூதர்களை ஹிம்ஸிக்கும் வேலை வெகுவாக அதிகரித்து வருகிறது. யூதர்களின் சொத்து ஸ்வதந்திரங்கள் நாசமாக்கப்படுகின்றனவாம்.

### கொச்சியில் புதிய அரசியல்.

[illegible] கொச்சி மகாராஜா [illegible] ஜனங்களுக்குப் பொறுப்பாக்ஷி கொடுக்கும் வழியில் புதிய அரசியல் சீர்திருத்தம் செய்திருப்பது தெரிந்த விஷயம். இத்திட்டம் சில தினங்களுக்குமுன் அங்கு அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.

இந்த விழாவை ஒட்டி அநேக பிரமுகர்கள் அங்கு விஜயம் செய்திருந்ததுடன் வேறு பலர் பாராட்டுச்செய்திகளையும் அனுப்பியிருந்தனர். இந்திய ஸமஸ்தானங்களில் ஜனப் பொறுப்பாக்ஷிக்கு வழிகாட்டியவர் நமது தார்மிக சக்ரவர்த்தியேயாவார்.

### காந்தி—ஜின்னா கடித போக்கு வரத்து.

ஹிந்து முஸ்லீம் ஸமரஸ விஷயமாக ஸ்ரீமான் காந்திக்கும், ஜின்னாவுக்கும் நடந்த கடிதப்போக்கு வரத்து விவரம் பத்திரிகைகளில் பிரசுரமாயிருக்கிறது. இதை ஊன்றி கவனித்தால் ஜின்னாவின் அகம்பாவமும், காந்தியின் பணிவும் நன்கு வெளியாகக்கூடியதாயிருக்கிறது. ஹிந்து ஸமூகம் இந்த அவமானத்தை ஏற்காதது நியாயமென்றே பலரும் கருதுகிறார்களாம்.

### விவாஹரத்து மசோதா வருகிறது.

ஸ்ரீமான் தேசமுக் என்பவர் டில்லி சட்டசபையில்; ஹிந்து ஸ்திரீகளின் விவாஹ ரத்து மசோதாவைக்கொண்டு வரப் போவதாக அறிவித்திருக்கிறார்.

புருஷன், குணமாகக்கூடாத வியாதியுள்ளவனாயிருந்தாலும், பைத்தியமாகயிருந்தாலும், நிர்குணனாக இருந்தாலும் அவனுடைய விவாஹத்தை ரத்து செய்ய ஸ்திரீகளுக்கு அதிகாரமளிக்க இந்த மசோதா கொண்டுவரப் பட்டிருக்கிறது.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்

# மதுரை ஜில்லா வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்.

## 5-வது ஸம்மேளனம்.

திருநெல்வேலி ஸ்ரீமத்ஸ்ரீ R. கிருஷ்ணஸ்வாமி அய்யர், M.A., B.L., அவர்களின் தலைமைப் பிரசங்கம்.

(முன் தொடர்ச்சி.)

### 10. கிரஹப் பழக்கம்.

தவிரவும் வீட்டிலேயே பையன்களுக்கும் பெண்களுக்கும் சரியான அப்யாஸங்கள் ஏற்படும்படி செய்யவேண்டிய பொறுப்பு பெற்றோர்களிக்கும் மற்றும்குடும்பத்திலுள்ள பெரியோர்களுக்கும் விசேஷமாக இருக்கிறது. நம் மதத்தின் ஸாமான்யமான அடிப்படையான அம்சங்களைக் கற்றுக் கொள்வதுடன் நம் ஸம்பிரதாய அனுஷ்டானங்களிலும் ஆசாரங்களிலும் நன்கு பழக்கம் ஏற்படவேண்டும். பள்ளிக்கூடத்து சம்பளமும் சாப்பாட்டுச் செலவும் கொடுத்துவிட பணம் அனுப்பிவிட்டோமேயானால் அத்துடன் நம் பொறுப்பு தீர்ந்துவிட்டது என்றே இக்காலத்திய பெற்றோர்கள் நினைப்பதாகத் தெரிகிறது. பணவிஷயமான பொறுப்பை விட எவ்வளவோ ஜாஸ்தியான பொறுப்பு அவர்களுக்கு உண்டென்பதை ஞாபகப் படுத்துகிறேன். பித்ரார்ஜிதமான சொத்தை வீணாக அழிக்காமல் தன் ஸந்ததிகளுக்கு வைக்கவேண்டுமென்று சட்டக் கருத்து இருப்பதுபோல, அனாதி காலம் தொட்டு நமக்கு கிடைத்திருக்கிற மதஸம்பந்தமான ஸம்ஸ்காரத்தையும் ஸம்பிரதாய ஆசார அனுஷ்டானங்களையும் கொஞ்சமேனும் நம் தவறுதலினாலாவது கெடுத்துவிடாமல் சுத்தமாகவே நம் குழந்தைகளுக்கு கொடுக்க வேண்டியதும் கடமையென்றே உணர வேண்டும்.

வீட்டிலுள்ள பழக்கம் தகப்பனார் தமையனார் இவர்களைவிட தாயார் ஸஹோதரிகள் இவர்களையே பொறுத்திருப்பதினால், ஸ்திரீகள் தங்கள் ஸ்வபாவஸித்தமான நாணத்தை பாதுகாத்துக்கொண்டு நம் மஹிமைவாய்ந்த பிராசீன ஸம்ஸ்காரத்தை பந்தோபஸ்தாக பரிபாலித்துக்கொண்டு வரவேண்டும். பொதுக் காரியங்களில் தலையிடவேண்டுமென்ற மோஹத்திற்கு அவர்கள் இடங் கொடுக்காமலும், நாகரீகம் என்று சொல்லிக் கொண்டு விதேச நடையுடை பாவனைகளைக் கைப்பற்றாமலும், தங்களை ரக்ஷித்துக் கொள்ளவேண்டியதும் மிகவும் அவசியம்.

தவிரவும் நம் குழந்தைகள் குழந்தைப் பருவம் முதல்கொண்டே, தான் இந்து தேசத்தவன் என்பதில் ஒரு கௌரவப் புத்தியும், அப்படியே தான் ஹிந்து என்பதினாலும் தான் ப்ராஹ்மணன் அல்லது ஹிந்துக்களில் இன்ன வகுப்பைச் சேர்ந்தவனென்பதிலும், இதுமாதிரி மற்ற அம்சங்களிலும் தன்னிடத்தில் ஒரு கௌரவபுத்தி ஏற்படும்படி யாகவே பழக்கப்படவேண்டும். இதுவே வாஸ்தவமான ஸ்வயமரியாதையாகும். கொஞ்சமேனும் நியாயமன்னியில் விஷமப்பிரசாரத்தை மாத்திரம் உத்தேசித்து சிலர்கள் தங்கள் பிரவிருத்திக்கு ஸ்வயமரியாதை என்று சொல்லும் ஸ்வமரியாதையல்ல இது. வாஸ்தவமாக தன்னிடத்தில் மதிப்பு ஏற்படுவதே ஸ்வயமரியாதையாகும். அம்மரியாதை நம் குழந்தைகளுக்கு பால்யம் முதலே புகட்டப்படவேண்டும். இன்னொருவனைப் பார்த்து தன் தலைமயிரைக் கத்தரித்துக்கொள்வதோ, இன்னொருவனைப்பார்த்து அவனைப்போல் உடை தரிப்பதோ, இன்னொருவனைப்பார்த்து அவனைப்போல் ஆஹாரம் உண்பதோ, அல்லது சிறந்ததாகத் தோன்றக்கூடிய எந்த விஷயத்திலோ இன்னொருவனைப்பார்த்து அவன்போல நடப்பது, மிகவும் இழிவான அடிமைத்தனம் என்பதை அவர்கள் உணரும்படிச் செய்யவேண்டும். ஒரு மனிதனுடைய தன் நிலையோ, ஒரு ஜன ஸமூகத்தின் தன் நிலையோ, அது இவ்விதமான வெளி லக்ஷணங்களில் நன்கு விளங்கும். அந்த லக்ஷணங்களை லக்ஷ்யம் செய்யவில்லையென்றால் தன்னிடம் மதிப்பு குறைந்திருப்பதென்பது நிச்சயம்; தனக்கு "தான்" என்று ஒன்று உண்டென்பதை மறந்து நிற்கத்தயாரென்று ஏற்படுகிறது.

இவ்விதமாக தன்னிடத்திலேயே மதிப்புக் குறைவதற்கு காரணம் என்னவென்று யோசித்துப்பார்த்தால் ஆஹாரதோஷமே ஸூக்ஷ்மமான காரணம் என்று நன்கு தெரிய வரும். ஆஹாரசுத்தியிருந்தால்தான் ஸத்வசுத்தியும் நன் நடத்தையும் ஏற்படும் என்பதை அறிந்துகொள்ளாமல், மூடத்தனமான அபிமானத்தை முன்னிட்டுக்கொண்டு, அசாஸ்திரீயமாய் விதேசீயமாய் இருக்கிற ஆஹாரங்களை தாய்மார்கள் குழந்தைகளுக்கு பலாத்காரமாக உட்செலுத்துகிறார்கள். ஆயுர் வேத விஷயமே தெரிந்து கொள்ளாமலும், ஹிந்துக்களின் சரீர நிலைக்கு அதுவே ஏற்றதென்பதைத் தெரிந்துகொள்ளாமலும், மருந்து என்ற பெயர் வைத்து மாம்ஸ ஸத்துக்களையும் மத்ய ஸத்துக்களையும் தத்காலத்திய நவீன வைத்தியர்கள் அநேகமாய் எல்லாரையும் உட்கொள்ளும்படி செய்து விடுகிறார்கள்.

### 11. உபஸம்ஹாரம்.

நாம் செய்யவேண்டிய காரியங்கள் வெகு பளுவாய் இருக்கின்றன. ஸநாதன தர்மமென்கிற மேலான வியவஸ்தையின் மதிப்பைக் குறைக்க உத்தேசித்து இக்காலத்தில் சிலர்களால் புதிது புதிதாக சொல்லப்படும் கக்ஷிகளை அபத்தமென்று எடுத்துக்காட்ட வேண்டியிருக்கிறது. அந்த வியவஸ்தையை வேறுடன் அறுக்க உத்தேசித்து சட்ட ஸபைகள் மூலமாகவும் மற்றும் வழிகளிலும் செய்யப்பட்டுவரும் பிரயத்தினங்களை நம் பூரா பலத்துடனும் எதிர்க்கவேண்டும். மத விஷயங்களில் பிரவேசிக்கிறதில்லையென்று ஸர்க்கார் பல தடவைகளில் கொடுத்திருக்கும் வாக்குறுதியை மீறாமலிருக்கும்படி ஸர்க்காரை கேட்டுக்கொள்ளவேண்டும். வியவஸ்தையை யழிக்கத் தலைப்பட்டு ஆர்பாடம் செய்துவருகிற சிலர்களின் இரைச்சலுக்கு காதுகொடுத்து ஏமாந்து போகக்கூடாதென்றும் ஸர்க்காரைக் கேட்டுக்கொள்ளவேண்டும். நமக்குள்ளேயே சஞ்சல புத்தியுடன் இருப்பவர்களின் புத்திக்கு ஸ்தைர்யம் எற்படுத்திக் கொடுக்கவேண்டும். இவ்வளவும் நம்மை பந்தோபஸ்து செய்து கொள்வதற்கு மிகவும் அவசியம். நம்முடைய மேல் மேல் க்ஷேமத்தை யுத்தேசித்து வேறு காரியங்களும் அவசியமாயிருக்கின்றன. இது வரை மதவிஷயமான போதனையில் அக்கரை வைக்காத குற்றத்திற்காக இப்பொழுது விசேஷ பிரயத்தினம் செய்து, நமக்குள் படிப்பாளிகளென்று சொல்லிக்கொள்கிற அநேக ஜனங்களுக்கு நம் மதத்திற்கு அடிப்படையான ஸாமான்ய தத்வங்களின்னவையென்பதையே உபதேசிக்கவேண்டியிருக்கிறது. சிறுவர்களுக்கு மதவிஷயமான போதனையும் பயிற்சியும் கொடுக்கவேண்டிய பொறுப்பையும் வஹிக்கவேண்டியிருக்கிறது. ஸநாதன தர்மக்கொள்கையை பலப்படுத்தி ஸம்ரக்ஷணம் செய்வதற்காக நம் தேசத்தில் அங்கங்கு இருக்கும் எல்லா ஸ்தாபனங்களையும் ஒன்று சேர்த்து ஏகமுகமாய் வேலை செய்யும்படி செய்யவேண்டியிருக்கிறது. ஸநாதனிகள் உதாஸீனம் செய்துவிடக்கூடிய ஓர் உபயோகமற்ற வகுப்பார் அல்லவென்பதை ஸர்க்காரும் நம் தேசத்திலுள்ள ராஜ்ய ஸபைகளும் நன்கு உணரும்படி செய்ய வேண்டியிருக்கிறது. அந்த ஸபைகளில் நாமும் புகுந்து கொண்டால் தான் நம்மை லக்ஷ்யம் செய்து காதுகொடுத்துக் கேட்பார்களென்றிருந்தால், அதற்கும் ஸித்தமாக இருக்கவேண்டியிருக்கிறது.

இவ்விஷயங்களும் மற்றும் இவைபோன்ற விஷயங்களும் நம்மால் உடனே நன்கு கவனிக்கப்பட்டு காரியாம்சத்தில் தீவிரமாக அநுஷ்டிக்கப்படவேண்டியவைகளாக யிருக்கின்றன. இவ்விஷயங்களைப்பற்றி நன்கு பரியாலோசனை செய்துவைத்திருக்கிறவர்களும், அவை விஷயமாய் தெளிவாய் எடுத்துச் சொல்ல என்னைவிட யோக்கியதை வாய்ந்தவர்களும், இந்த ஸதஸ்ஸில் வெகுபேர்கள் இருக்கிறார்கள். இவ்விஷயமாக பலவிதமாக சர்ச்சைகள் ஏற்படும். தாங்கள் எல்லாவற்றையும் நன்கு கவனித்துவந்து ஆலோசனை செய்து முடிவுக்கு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாம் எல்லாரும் இப்பொழுது ஒன்று சேரக் காரணமாகிய தர்மத்தை விருத்திசெய்ய உபயோகப்படும்படியாகவும் எல்லாரும் கேட்டு நன்கு மதிக்கும்படியாகவும் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மஹா ஸங்கத்தில் அக்கிராஸனம் வஹிக்கிறதான ஒரு பெரிய கௌரவத்தை எனக்கு அளித்ததற்காகவும் இவ்வருஷம் தங்கள் ஸபைக்கு அக்கிராஸனர் பதவிக்கு என்னைத் தெரிந்தெடுக்கும்படி செய்த தங்கள் அன்புக்கும் என் கிருதக்ஞதையை மறுபடியும் தெரிவித்துக்கொள்கிறேன். அதே அன்புடன் இந்த ஸதஸ்ஸில் மேல் நடக்க வேண்டிய காரியங்களையும் தாங்கள் கவனித்து நடத்தித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இனி விஷய பரியாலோசனைகளை தாங்கள் செய்யுங்கள். நமக்கு பிரதி பதத்திலும் வழிகாட்டியாயிருந்து நம் பிரயத்தினம் ஸபலமாகும்படி ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் பூர்ணமான அனுக்ரஹம் செய்வார்களென்பதை த்ருடமாக நம்பி காரியங்களையும் நடத்துவோமாக!

## ஸாமவேத உபாகர்மா.

இவ்வருஷம் ஆவணி-மீ 12உ ஹஸ்த நக்ஷத்திரத்திற்கு மௌட்ய ஸம்பந்தமிருப்பதால், வர்ணாச்ரம காண்டம் 128 பக்கத்தில் "ஸாமவேதி ந: | ஸிம்ம பாத்ரபதமாஸெ மௌட்யாதி தூஷிதெஸதி கந்யாமாஸெ அபரபக்ஷெ ஹஸ்த நக்ஷத்ரே உபாகரணம் குர்வந்தி" என்ற வசனத்தால் புரட்டாசி-மீ 8உ சனிக்கிழமையே ஸாமோபாகர்ம செய்யவேண்டுமென்று தோன்றுகிறது.

அப்புசாமி சாஸ்திரி.


## விளம்பரம்.

சென்னை மாகாணத்தில் ஸனாதன தர்மப் பிரசாரம் செய்ய சிறந்தவாக்குள்ளவர்களாயும் அனுஷ்டாதாக்களாயும் ஊக்கமுள்ளவர்களாயுமிருக்கிற பண்டிதர்கள் தேவை. யோக்யதானுசாரமாய் ஸம்பாவனை செய்யப்படும். அடியில்கண்ட விலாசத்துக்கு எழுதிக்கொள்ளவும்.

என். நடேசய்யர்,
அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க காரிய அத்யக்ஷர்
55 தமிழ் சங்கம் ரோட், மதுரை




# வாரக்குறிப்புகள்.

(ஸ்ரீ வத்ஸ வெ. ஸோ. சர்மா.)

பண்டித பந்த் உபதேசம்! இவர் ஓர் மந்திரி. ஸர்வகலாசாலையின் அபிவிருத்திக்காக ஏற்பட்ட ஓர் கமிட்டிக்கு இவர் செய்த இரு உருவான உபதேசம் ஒப்புயர்வற்றது. ஆத்யாத்மிக வாஸனையில்லாத கல்வி பயனில்லை. வீண் செலவில்லாமல் மிக உயர்ந்த கல்வியை நம் நாடு உலகிற்கே ஊட்டியது! இவ்விரண்டும் நன்கு அனுஷ்டிக்கப்படின் இந்தியாவின் ஜீவநாடி நன்கு ஓடும்! கல்விக்கு அன்யாய செலவு செய்தும் பலனில்லை!

நல்ல பாடம்! பாம்பே ஸர்வ கலாசாலை பஞ்சமருக்குப் பரீக்ஷை கட்டண விஷயத்தில் பக்ஷபாதமான சலுகை காட்ட முடியாதென வெகு கம்பீரமாய் தீரமாய் கூறியது! கருணையிருந்தால், சொந்த தநத்தைத் தாட்டும்! பொது மக்கள் தநத்தை இப்படி அபாத்ரவர்ஷம் செய்யும் சென்னைக்கு இது மூளையில் ஏறுமா?

எதிர் பார்த்ததே!! ஜின்னா நேரு கடிதம் வெளியாயிற்று. தற்கால தலைவர் மஹம்மதியரிடம் பயந்து நம்மதத்தை மற்ற பாத்யதைகளையும் பலிகொடுப்பர் என்பது எதிர்பார்த்ததே! நாம் சொல்லும் தர்மத்தை அவர்கள் அங்கீகரிக்காவிடினும், அவர் செயல் தவறென்பதையாவது நாம் உணர்த்தக் கடமைப்பட்டோம்!!

சென்னை மந்திரி கவனிக்க!! பாம்பே மந்திரி போலீஸ் விஷயத்தில் அநாவசியமாக வெள்ளையருக்குக்காட்டிய சலுகையை விட்டு இந்தியருடன் சமமாகநடத்துகிறது! பரதேசத்திலிருந்து வந்ததற்காகசிறிதுஸ்வல்பமேன்மை அதிகம் கொடுத்து நமது ஸங்க்யைசரியாக [illegible] வெள்ளையரை போலீஸ் நியமிப்பதில்லை என தீர்மானித்தது? வீரர் வாழி!!

சொந்தமாக நடத்தலாம்!! வடாற்காடு கலெக்டர் போர்ட் அதிகாரத்தை ஏற்று உபாத்யாயர்களது பாக்கியுள்ள பல மாத சம்பளங்களை அரசாங்கத்திடம் கடன் வாங்கி கொடுத்து 83 பாடசாலைகளை நிறுத்திவிட்டார். வேலையில்லாமல் வீட்டிற்கனுப்பிய 211 உபாத்யாயர்களை போர்ட் நற்கதி அடையும்வரை சொந்தத்திலேயே அந்த சாலைகளை நடத்தச்சொல்லி யிருந்தால் அவர்களுக்கும் சிறிது ஜீவனவழி உண்டு! கல்வியும் ஏறும்!

பல்லாரியில் பஞ்சம்!! ஏழை ஜனங்கள் அன்னவஸ்திரத்திற்கு கதறுகின்றனர்! நமது மாகாணத்தில் காங்கிரஸ் ஆக்ஷி நடக்கிறது? ஆனால் தர்மத்தை நாம் கெடுத்தால் அது நம்மை கெடுக்குமென மநுவின் சொல். ராமராஜ்யமென வாய்ப்பந்தல்போடும் மந்திரி மண்டையில் ஏறவில்லை!

பெட்ரோலுக்கு பதில்கரிவாயு! உபயோகிக்க ஓர் நிபுணர் வழிகாட்ட அதை தொழில் மந்திரி கவனிக்கிறார். யந்த்ரங்களுக்கு பெட்ரோல்போல் மனிதவுடலுக்குக்காபி ஏராளமாக செலவாகிறது. இதனால் மூழ்கும் பல குடும்பங்களுக்கு சிக்கனமான நம் நாட்டுக்கேற்ற ஒன்றை நம் பெரியார் கூறியதை நாம் மறந்தோம்! அது எது?

என்னே மூளை! மந்திரிகள், மதிக்கத்தக்க பேச்சையே பேசவேண்டும்! பாம்பே மந்திரி தீண்டாமை நீங்காவிடில் ஸ்வராஜ்யம் வேண்டாமெனப் பேசுகிறார்!! ஓராண்டில்ஸ்வராஜ்யமென பாமர ஜனங்களை உத்ஸாஹப்படுத்த கூறிய சொற்கள்போலவே இன்றும் மந்திரிகள் பேசுவதழகல்ல!! பொறுப்புடன் அர்த்தமுள்ள பேச்சை பேசுவரா?

கர்ணாமிருதம்! மன்னார்குடியில் ஓர் தார்மிகர் வாதக்ஷிணைவாங்காது மணந்தார் என்ற செய்தி ஆஸ்திகர் செவிக்கு அமிருதமன்றோ? சமூஹ தொத்து நோயை ஒழித்த பல பெரியார் பெயர் பத்திரிகைகளில் வரவேண்டும்.

# ஸினிமாக்கள் ஒழுக்கத்தை துலைக்க வந்த சாபத்தீடு.

(அக்நிஹோத்ரம் ராமானுஜதாதாசாரியார்)

ஸினிமாக்களால் ஸமூஹ முன்னேற்றம் துரிதப்படுவதாக ஒரு சாரார் கூறுகின்றனர். மற்றொரு சாரார் பல வழிகளிலும் ஸ்திரமாக உள்ள ஸமூஹக் கட்டுப்பாடு ஸினிமாக்கள் மூலம் அழிய ஆரம்பிக்கின்றது என்று கூறுகின்றனர். பக்தியை ஊட்டும் படங்களால் பாமர மக்கட்களுக்கும் பக்தி ஏற்பட ஆரம்பித்து விடுவதாக ஒரு சிலர் ஸந்தோஷப்படுகின்றனர். உண்மையில் அநுபவத்தைக் கொண்டு கவனித்தால் ஸினிமாக்களால் ஏற்படும் நன்மையைவிட தீமையே அதிகமானதென்று ஸ்பஷ்டமாகத் தெரிகிறது.

ஸினிமாக்களால் ஏற்படும் தீமைகளைப் பற்றி நம் தேசத்தினர் அவ்வளவாகக் கவலை கொள்வதில்லை. ஸினிமாத் தொழில் நம் தேசத்தில் பால்ய தசையிலேயே இருப்பதால் இதற்குள் ஒரு முடிவிற்கு வருவது ஸாத்யமன்று. பொதுவாக நாம் ஸினிமாவில் உள்ள தோஷங்களை அறிய ஸினிமா நடிகர்கள் அப்போதைக்கப்போது வெளியிடும் சில அபிப்ராயங்களைக் கவனித்தால், ஸினிமாவில் உள்ள ஆபாஸத்தனமும் அதனால் விளையக்கூடிய மஹத்தான ஆபத்தும் ஸ்பஷ்டமாகத் தெரிகிறது.

ஸமீபத்தில் ஒரு ப்ரபல ஸினிமா நடிகை பின்வருமாறு கூறினாள்.

"[illegible] ஸினிமாவைப் பார்க்க பாமர ஜனங்களேவருகிறார்கள். படமுதலாளிகள் இவர்களையே முக்யமாக நம்பி இவர்களைத் திருப்தி பண்ணி வைக்கக்கூடிய முறையில் படமெடுக்க முயற்சிக்கின்றனர். பாமர ஜனங்களுக்கு பஹிரங்கமாக அருவருக்கத்தக்க முறையில், ஸ்திரீ புருஷ நடிகர்கள் கட்டிக்கொள்வது, முத்தமிடுவது இவைகளைப் பார்ப்பதிலும், அவச்யமில்லாத ஸமயங்களில் கை கால்களை உயர்த்தும் டான்ஸிலும் பூர்ண ப்ரமை உண்டு. இதை அறிந்த முதலாளிகளும் ஸினிமாவில் ஆடும் நடிகர்களை நிர்பந்தப்படுத்தி மேற்கூறப்பட்ட முறையில் பாமர ஜனங்களை த்ருப்தி செய்விக்கக் கூடிய முறையில் நடிக்கச் சொல்லுகிறார்கள். இதனால் நாணயமுள்ள கௌரவம் பொருந்திய ஸ்திரீகளுக்கும் ஸினிமாவிற்கும் பொருத்தமில்லை என்று ஏற்படுகிறது"

அநுபவம் நிறைந்த இவ்வபிப்ராயத்தை யாரும் நன்கு கவனிக்கவேண்டும். ஸினிமா நடிகை தனக்கேற்படும் அருவருப்பைமட்டும் வெளியிட்டாளானாலும் இதன் பின்னுள்ள பல ஆபத்துகளுக்கு இது எச்சரிக்கையாகவே தோன்றுகிறது.

மேனாடுகளில் ஸினிமாத் தொழில் மிகவும் முன்னேறிவிட்டதால் அதனடியாக உள்ள தோஷங்களும் மிகவும் முன்னேறிவிட்டன. சாச்வதமான ஸமூஹ ஸமாதானத்தை விரும்புகிறவர்களும் பாமர ஜனங்களின் நன் நடத்தையில் கவலையுள்ளவர்களுமான மேதாவிகள் பலர் ஸினிமாப்படங்களை எதிர்த்து பலமாகப் போராட அங்கு ஆரம்பித்துவிட்டனர். பல மேடைகளில் ஸினிமாக்களை காண கண்டித்து ப்ரஸங்கங்கள் செய்யப்படுகின்றன.

ஸினிமாவினால் ஸமாதானமாக நடந்துவரும் உலக வாழ்க்கையே குலைந்துவிடுமென்ற பயமங்கு ஏற்பட்டிருக்கிறது. ஸினிமாவினால் ஏற்படும் ஆபத்துக்களை நினைத்து ஆஸ்திகர்களான பலர் பலமாக கவலைப்படுவது ஸஹஜமாகிவிட்டது. ஸமீபத்தில் செல்வாக்குமிருந்த மத ப்ரசாரகரான "பிளாகம்" என்பவர் டப்ளின் நகரத்தில் ஸங்கீத விழாவை ஆரம்பித்துவைத்த ஸமயத்தில் பலமாக ஸினிமாவைக் கண்டித்துப்பேசியது கவனிக்கத் தக்கது. அவர் கூறியதாவது.

"முகத்திற்கு சாயம்தீட்டி மார்புறத் தழுவி ஆணும் பெண்ணும் ஸினிமாவில் கூத்தாடுகிறார்கள். உலக மக்களின் ஸன்மார்க்கத்தை ஸினிமா குட்டிச் சுவராக்கி விடுகிறது. இது ஜனங்களது ஒழுக்கத்தைக் கெடுக்கவந்த சாபத்தீடு. ஆனால் பாபம்! பொதுமக்களுக்கு இதன் கெடுதி தெரிவதில்லை. மனக்கிளர்ச்சியுடன் அவர்கள் இதில் ஈடுபடுகின்றனர். ஆனால் அந்தோ! உலகத்தின் நாகரீகங்களெல்லாம் நாசமடைந்ததற்கு காரணமான துன்மார்க்க லீலைகளைப்போற்றிப்பின்பற்றுகிறோமென்று அவர்கள் உணரவில்லை. இருநூறு வருஷங்களாக இருந்துவந்த கொடிய சட்டங்களால் ஏற்பட்டதைவிட இந்த இருபது வருஷங்களில் ஸினிமாவினால் விளைந்த தீமைகள் அதிகம் என்பதில் எனக்குச் சிறிதும் ஸந்தேகமில்லை.

ஸினிமா தணிகை போர்டுகளால் சல்லிக்காசுகூடப் பிரயோஜனமில்லை. ஸர்க்கார் இந்த போர்டுகளை அடியோடு எடுத்துவிடலாம்"

ஸினிமாவினால் பக்திமார்க்கம் பரவுமென்று கூறுபவர்களும் ஸினிமாவினால் பல நன்மைகள் [illegible] இதை நன்கு கவனிப்பார்களா? ஸினிமாவினால் ஏற்படும் நன்மையைவிட தீமையே ப்ரபலமாக இருக்கிறதை யாரும் மறுக்கமுடியாது. மேனாட்டினர் ஸினிமாவினால் வரும்தோஷங்களை வாய்விட்டுக் கதறுவதைக் கண்டாவது நாம் உண்மையை அறிந்துகொள்ளலாகாதா? ஸினிமாத் தொழில் முன்னேறவேண்டும் என்று பிரார்த்திக்கும் பக்தர்கள் அதனால் ஏற்படக்கூடிய தீங்கிற்கு என்ன சொல்லுவார்கள்?


## தர்ம சாஸ்திரச் சுருக்கம்.

(மூன்றும் பதிப்பு)

பிராம்மணர்களின்கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், "வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராம்மண குடும்பங்களிலும்இருக்கவேண்டியதவசியம்.

விலை ரூ. 1—8—0 வி. பி. பிரத்யேகம்.

கிடைக்குமிடம்:—

பப்ளிஷர்.
தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
கீழவிடையல், திருச்சிரா.

## மூகபஞ்சசதியின் முதல் பாகம்.

"ஆர்யா சதகம்"

Mr. G. V. கணேசய்யர், B.A., B.L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.

100 பக்கங்களுக்குமேல் கொண்டது.

தபால் செலவு வேறு] [விலை அணா 0—8—0

ஆர்யதர்மம் சந்தாதாரர்களுக்கு விலை அணா 6.

மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—

ஸ்ரீ ஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட்
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.
பகுதான்ய-ஸூ ஆனி-மீ 9உ

## ஆலயப்பிரவேசத்தைப்பற்றி கனம் ஆசாரியர்.

கனம் ராஜகோபாலாசாரியர் சென்றசெவ்வாயன்று குடந்தைக் கூட்டத்தில் ஆலயப்பிரவேச விஷயமாகப் பேசியதில் சிலவற்றை நாம் ஆராய விரும்புகிறோம். கனம் ஆசாரியர் தமது சுற்றுப்பிரயாணத்தில் எங்கும் இதைப்பற்றிப் பேசாமல், கும்பகோணத்தில் மட்டும் பேசுவதற்கு முற்பட்ட காரணத்தைச் சொல்லிவிட்டு, வெகு அடக்கமான தோரணையில் ஜனங்களின் மனதைக் கவரவேண்டி மிக அநுதாபமான முறையில் பேசினார். ஆகையால், பதில் சொல்லுவோரும் ஆத்திரத்தைவிட்டு ஒத்துணரும் முறையில் இவருடைய கக்ஷி நியாயங்களிலுள்ள உசிதக் குறைவுகளை எடுத்துக்காட்டுவது தகுதியாகும். கனம் ஆசாரியர் தமது பிரஸங்கத்தில் அடிக்கடி "பயப்படாதீர்கள்" "பயப்படவேண்டா"மென்று வற்புறுத்தினார். முன்காலத்தில், சனிக்கிழமையில் க்ஷவரம் செய்துகொள்ளக்கூடாதென்று பெரியோர்கள் தடுத்துவைத்திருந்தார்கள். இப்போது ஜனங்கள் இதை லக்ஷ்யம் செய்வதில்லை. சனிக்கிழமைகளில் க்ஷவரம் செய்துகொள்ளும் மாறுதலால் எவ்விதத் தீங்கும் ஏற்பட்டுவிடவில்லை. ஜனங்களும் அதற்கு பயப்படவில்லை. அதுபோல் ஆலயப்பிரவேசம் போன்ற புதிய மாறுதலுக்கும் ஜனங்கள் பயப்படவேண்டாமென்றும், கார்யம் நடந்தபின் அது ஸாதாரணமாகி விடுமென்றும் உபதேசம் செய்தார்.

ஆலயப்பிரவேசம் செய்வதால் ஜனங்களுக்கு எந்த வகை பயம் இருக்கிறதென்று கனம் ஆசாரியார் கருதினாரோ தெரியவில்லை கலஹங்களும் அடிதடிகளும் ஏற்படுமென்பதற்காக ஜனங்கள் ஆலயப்பிரவேசத்தைக் கண்டு பயப்படவில்லை. பின் என்ன? சாஸ்திரங்களும், நீண்டகால ஸம்பிரதாயங்களும், பெரியோர்களும் காட்டிய வழியை மீற வேண்டியிருக்கிறதே யென்ற பயமே ஜனங்கள் மனதில் குடி கொண்டிருக்கிறது. இந்த பயத்தை நமது சாஸ்திரங்களும் நமது பெரியோர்களும் நமக்கு அடிக்கடி பலமாக வற்புறுத்திப்புகட்டி அசைக்க முடியாமல் ஊன்றி வைத்திருக்கிறார்கள். அந்த பயத்தை விடச்சொல்லுவது எளிதாகத்தோன்றுமாயினும் பலாத்காரமில்லாமல் எளிதில் நடக்கக்கூடியதல்ல. நீண்டகாலமாக மனதிற்கு ஏற்பட்ட த்ருடமான ஸம்ஸ்காரத்தை எளிதில் எப்படி மாற்றமுடியும்? சனிக்கிழமை க்ஷவர உதாஹரணம் பொருத்தமன்று. அதை ப்பாபமென்று கருதுபவர்கள் இன்னும் நம் தேசத்தில் லக்ஷக்கணக்காக இருக்கவில்லையா? பயத்தை ஒழிக்கவேண்டுமென்று கனம் மந்திரி போதிப்பதானது, வியவஸ்தையை மீறலாமென்று துணிவுகொள்ளத் தூண்டுவதாகவே ஆகிறது. பிரத்யக்ஷத்தில் தோஷம் தெரியாத காரணத்தால் எந்த சாஸ்திர வியவஸ்தையையும் மீறலாமென்றால், இந்தக்கக்ஷி மத விஷயத்தில் மட்டுமன்றி லௌகிக ராஜ்ய கார்யங்களிலும் பெரிய புரக்ஷியை உண்டாக்காதா?

ஸ்திரீகளுக்கு பாதிவ்ருத்யம் வெகு முக்யமானது. சாஸ்திரமும் உலகமும் இதை வற்புறுத்துகிறது. இந்த தர்மத்தை ஸம்ரக்ஷிக்க வேண்டுமென்ற பலமான பயத்தை நம் முன்னோர்கள் நமது மனதில் ஊன்ற வைத்திருக்கிறார்கள். பதிவிருதைகளை அண்டி இந்த பயத்தைக் கைவிடும்படி போதித்தால் நிலைமை எப்படியாகும்? சனிக்கிழமையில் க்ஷவரம் செய்து கொள்ளுகிறவனுக்கு எப்படி பிரத்யக்ஷமான தோஷம் கண்ணுக்குப் புலப்படவில்லையோ, அதுபோல் பதிவ்ருதா தர்மத்தை விடுவதிலும் பிரத்யக்ஷமான தோஷம் என்ன சொல்ல முடியும்? பதிவிருதா தர்மத்தைப் பயங்கொள்ளித்தனமாக அநுஷ்டிக்காமல் கைவிடுவதால் விசாலமான புத்திபோக்கும், கம்பீரமான எண்ணமும் வெளியாகுமென்று உபதேசிப்பது சரியாகுமா? ஆகவே பயத்தை அகற்றும்படி பதிவிரதைகளுக்குப் போதி[illegible] எவ்வளவு வ்யவஸ்தாநாசகாரியமோ, அவ்வளவு [illegible] ஆலயப் பிரவேசத்திலும் பயத்தை விடச் சொல்லுவதாகும். சாஸ்திர வரம்புகளையும், ஸமூஹ வரம்புகளையும் கண்டு பயப்படக்கூடாதென்று போதிப்பவர், 'ஸர்க்கார் ஏற்படுத்திய நியமங்களுக்குமட்டும் ஜனங்கள் கட்டுப்படவேண்டுமென்று எதிர்பார்க்க நியாயமுண்டா? அப்போது ராஜ்ய நிர்வாஹம் எப்படி நடக்கும்?

ஆகையால், பயத்தை விடுங்களென்று கனம் ஆசாரியர் போதிப்பது பரம அனர்த்தமாகும். பயத்தினால்தான் உலக மரியாதைகள் அழியாமல் காப்பாற்றப்பட்டு வருகின்றன. நமது ஜனங்களின் மனதில் இந்த பயம் ஊன்றிக்கிடக்கிறது. நம் முன்னோர்கள் இதை கெட்டிப்படுத்தி வைத்திருக்கிறார்கள். ஆகவே ஆலயப் பிரவேசம்செய்துவிட்டால் பிரத்யக்ஷத்தில் எவ்விதக் கேடுமில்லையென்று இவர் வாதிப்பதை ஸஜ்ஜனங்கள் லகுவாக ஏற்கமாட்டார்கள்.

காலதேச நிலைமையை அநுசரித்து, ஒரு இடத்திலுள்ள வரம்பைச்சிறிது நகர்த்திவைக்கக்கூடாதா வென்று கனம் ஆசாரியர் நினைக்கலாம். இது பெரிய மாறுதலாகாதென்றும் இவர் நினைக்கலாம். ஆயினும், அந்தக் காரியத்தைச் செய்யவோ, அதிலுள்ள உசிதாநுசிதங்களை கவனிக்கவோ எல்லாரும் அர்ஹதையுள்ளவர்களாகமாட்டார்கள். காங்கிரஸ் மந்திரிகளுக்கு ஏராளமான வோட்டர்களின் பின் பலமிருக்கிறது நிஜமே. ஆயினும் வோட்டர்கள் யாவரும் எல்லா விஷயங்களிலும் அபிப்ராயம் வெளியிடக்கூடியவர்களல்ல. சில விஷயங்களில் முடிவு கூற சிறுபான்மையோரே பூர்ண யோக்யதையுள்ளவர்களாயிருப்பார்கள். நுட்பமாயும், கடினமாயுமுள்ள ராஜ்ய விஷயங்களில்கூட வோட்டர் யாவரும் ஸ்வபுத்தியுடன் அநுமதி கொடுத்துவிட்டதாக மந்திரிகள் நினைக்க முடியுமா? ஆகையால் ஆலயப்பிரவேச விஷயமாக நிச்சயமான தீர்மானம் வெளியிடக்கூடியவர்களே அதன் நியாயாநியாயங்களை நிர்ணயிக்கமுடியும். சாஸ்த்ரமரியாதைகள் தெரியாத ஜனக்கூட்டமோ, பத்திரிகைக் கூச்சலோ உபயோகப்படாது. ஆதலால் மாறுதலை விரும்புகிறவர்கள் உண்மையில் அதைச்செய்ய அர்கதை பெற்றவர்களுடைய உதவியை நாடி விவாதித்தால் இதில் நியாயமான வழி யென்னவென்பதை ஒருவாறு கண்டுகொள்ள முடியும். அந்த வழியில் கனம் மந்திரி முயற்சிப்பாராக.

## குடந்தையில் கனம் பிரதம மந்திரி.

## ஆலயப்பிரவேசப் பிரஸ்தாபம்.

சென்னை ஸர்க்கார் பிரதம மந்திரியான கனம் ராஜகோபாலசாரியர் சென்றசெவ்வாய்கிழமை காலை 9 மணிக்கு மந்திரி ராமநாதனுடன் கும்பகோணம் வந்தார். வழி நெடுக ஜனங்கள் கூடி நின்று ஆரவாரம் செய்தனர். சில இடங்களில் கமான் வளைவுகளும் கட்டப்பட்டிருந்தன. வாணி விலாஸத்தியேட்டரில் பெரிய கூட்டம் கூடியது. ஒலிபரப்பும் கருவிகளும் அமைக்கப்பட்டிருந்தன.

மந்திரிகளுக்கு உபசாரம் நடந்த பிறகு கனம் ராமநாதன் பேசினார். மந்திரி ஸபையை ஆதரிக்கும்படி அவர் வேண்டினார்.

பிறகு கனம் ராஜகோபாலசாரியார்கட்டாய ஹிந்தி, ஆலயப்பிரவேசம் ஆகிய விஷயங்களைப்பற்றி நீண்டநேரம் பேசினார்

ஆரம்பத்திலேயே அவர் பேசுகையில், கும்பகோணம் வைதிகம் நிறைந்த ஊரென்றும், இங்கு தமக்கு எதிர்ப்பு எப்போதும் உண்டென்றும், எதிர்ப்பு இருப்பதால் தமது சீர்திருத்தக்கத்தியானது துருப்பிடிக்காமல், தீட்டிக்கொள்ள ஸௌகர்ய மேற்படுகிறதென்றும், இதற்காகவே கும்பகோணம் வந்ததாயும், தாமும் வைதிகக்[illegible]வர் தானென்றும், மேலுக்கு எப்படித் தோன்றினாலும் தமது கொள்கை வைதிகமென்றும் சொன்னார். பிறகு கட்டாய ஹிந்தியைத் தாங்கிப்பேசிவிட்டு ஆலயப்பிரவேசத்திற்கு ஆதரவுகேட்டார்.

ஆலயப்பிரவேசத்திற்கு இவ்வூரிலிருந்தே எப்போதும் எதிர்ப்பு வருவதாயும், தமது சுற்றுப்பிரயாணத்தில் ஆலயப்பிரவேசத்தைப்பற்றி எங்கும் பேசவில்லையென்றும், ஆனால் குடந்தையில் பேச அவச்யமிருப்பதாயும், இந்தக் கூட்டத்தில் இதைப் பேசுவது விரும்பத்தகாதென்று சிலர் நினைக்கக் கூடுமாயினும், தாம் அவச்யம் பேசவேண்டியிருப்பதாயும், காங்கிரஸ் திட்டத்தில் ஆலயப்பிரவேசம் முக்யமென்றும், இது பூர்த்தியாகாத வரையில் மற்ற திட்டங்கள் பூர்த்தியாகியும் பலனில்லையென்றும், பலாத்காரமாக இதைச் செய்யத் தாம் விரும்பவில்லையென்றும், கால மாறுதலையும் ஆசாரமாறுதலையும் கவனித்து பொது ஜனங்கள் தாமாகவே இதை ஆமோதிக்க வேண்டுமென்றும், பயப்படக்கூடாதென்றும், எப்படியும் ஒரு நாள் இது வந்தே தீருமென்றும், தாம் இறப்பதற்குள் இதைப் பார்க்கப்போவதாயும் வெகு அடக்கமாயும் நயமாயும் பேசினார். பிறகு கூட்டம் கலைந்தது.

மாலை 4 மணி வரையில் இவ்வூர் பிரமுகர்கள் பலருக்கு கனம் மந்திரி பேட்டியளித்துவிட்டு வெளியூர் சென்றார்.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.
குண்டூர்.
Guntur.



## குறிப்புகள்.

### ஜர்மனியில் நமது ஆசாரங்கள்.

மேமீ 31உ யன்று வெளியான சென்னை "ஹிந்து"ப் பத்திரிகையின் உபதலையங்கத்தில், க்ஷவரம் செய்துகொள்ளும் விஷயமாக ஆசரிக்கவேண்டிய ஸுகாதார முறையைப் பற்றி ஜர்மனியில் செய்யப்பட்டுள்ள ஏற்பாட்டை சிலாகித்தும், இந்தியாவின் பிராசீன கால க்ஷவர முறையைக் கொண்டாடியும் எழுதப்பட்டிருக்கிறது. இதன் விவரம் நமது ஆர்யதர்மத்திலும் மொழி பெயர்த்துப் பிரசுரிக்கப்பட்டிருந்ததைப் பலரும் படித்திருக்கலாம்.

ஜர்மனியிலுள்ள க்ஷவரக்கடைகளில், ஒருவருக்கு உபயோகித்த ப்ரஷ்ஷையே மற்றொருவருக்கு உபயோகிப்பது மிகுந்த சுகாதாரக் குறைவென்றும், அபாயகரமென்றும் சொல்லி ஜர்மன் கவர்ன்மெண்டார் உத்திரவு பிறப்பித்திருப்பதாக ஹிந்துப் பத்திரிகை சொல்லிவிட்டு, நவீன நாகரீக அலங்கோலம் காரணமாக சென்னை முதலிய விடங்களில் க்ஷவரக் கடைகள் ஏற்பட்டிருப்பதையும், அங்கு நடக்கும் ஸுகாதாரக் குறைவான காரியங்களைக் குறிப்பிட்டும் அந்தப் பத்திரிகை கண்டித்துவிட்டு, பிராசீன முறைப்படி இந்தியாவிலுள்ள க்ஷவர முறையை வெகுவாக சிலாகித்து எழுதுகிறது. வீடுகளிலும் மாத்தடிகளிலும், ஆவணி யவிட்டம் முதலிய புண்ய காலங்களில் நமது நாவிதர்கள் உயர்ந்த சுத்திமுறையை அநுஸரித்து க்ஷவரம் செய்து வந்ததை ஹிந்துப் பத்திரிகை [illegible] காட்டித், தாம் ஒரு அதிகாரியாயிருந்தால் சென்னையிலும் ஜர்மனியைப்போல் ஓர் உத்திரவுபோட முடியுமென்றும் எழுதியிருக்கிறது

இதில் முதலில் ஹிந்துப்பத்திரிகையானது தலையங்கமெழுதி நமது ஆசார முறைகளை சிலாகித்து எழுதியது முக்யவிஷயம். நாகரீகத்தின் உச்சஸ்தானத்தில் விளங்கிவருவதும், ஸகலவிதமான விக்ஞானக்கலைகளுக்கும் உற்பத்தி ஸ்தானமாயுள்ள ஜர்மனியானது, கலப்பு விவாஹம் ஸ்திரீ தர்மம், ஜாதிமுறை போன்ற பற்பல விஷயங்களில் நம் தேசத்திய ஆசாரங்களைப் பின்பற்றியிருப்பது சில நாளாக வெளிப்பட்டு வருகிறது.

நமது ஆசாரங்களை மூடநம்பிக்கை என்று பிதற்றியவர்கள் கூட இப்போது கண் விழிக்கநேர்ந்தது. ஜர்மனியின் செய்கையாலேயே தங்களை ஆர்யர்களென்று சொல்லிக்கொண்டு ஆர்யர்களின் ஆசாரங்களைப்பரப்பிக்கொண்டுமிருக்கிற ஜர்மனியான இந்த நவீன நாகரீக காலத்தில் நமக்குப்பல வழிகளிலும் பின்பலமாகி வருவது விசேஷமே.

சில வருஷங்களுக்கு முன் அங்குஒரு முக்ய உத்திரவு பிறப்பிக்கப்பட்டதாக ராய்ட்டர் தந்தியில் படித்தோம். அதாவது காபி, டீ, ஹோட்டல்களில், ஒருவர் எச்சில் பண்ணிக் குடித்த பாத்திரத்தில் மற்றொருவர் குடிப்பது மிகுந்தஸுகாதாரக்குறைவென்றும் தொத்து வியாதி பாவஹேது மென்றும் கண்டு பிடித்து, பாத்திரங்களை எச்சில் பண்ணாமலே குடிக்கவேண்டு மென்று கடுமையான உத்திரவு போடப்பட்டது.

இந்த எச்சில் தோஷமானது; எவ்வளவோ பாரம்பரையாக நமது ஜாதியின் கவனத்தைப் பெற்றது. இதில் நம் சாஸ்திரங்களும், ஆசாரங்களும் மிகவும் ஜாக்ரதையுடன் விதி செய்திருக்கின்றன. நமது குடும்பங்களில் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே ஜலம் குடிக்கப் பாத்திரமுண்டு. எச்சில் பண்ணப்பட்ட பாத்திரத்தை சுத்தி செய்யாமல் எந்த ஹிந்துவும் தொடுவதில்லை. இது நம்மில் வெகு ஸாதாரணமான ஆசாரம். ஜர்மனி இதன் தத்வத்தை அறிந்துகொண்டது. க்ஷவரக் கடைகளைப்பற்றிக் கவலைப்படும் ஹிந்துப் பத்திரிகை, காபி, டீ, சோடா[illegible] கடைகளைப்பற்றியும் கவனம் செலுத்துவது அவசியமாகும். இந்தக் கடைகளில் ஒருவன் எச்சில் பண்ணி உருஞ்சிக்குடித்த பாத்திரத்திலேயே சில நிமிஷங்களுள் அநேகர் எச்சில் பண்ணிக் குடிப்பதைப் பார்க்கிறோம். ஸோடாபாட்டில் குடிப்பதைப்பற்றி வர்ணிக்க வேண்டுமா?.

சொறி, சிரங்கு பிடித்தவர்களும், வேறு பலவித தொத்து வியாதியுள்ளவர்களும் எச்சில் பண்ணி குடித்த பாத்திரத்தில் கூச்சமின்றி வேறு பலர் குடிப்பதால் ஏன் வியாதி பரவாது? நகரங்களில் முன் காலங்களைவிட இப்போது வியாதிகள் அதிகம் பரவியிருப்பதற்குக் காப்பிக்கடைகளும் ஸோடா குப்பிப் பானங்களுமே பெரும்பாலும் காரணமெனத் தடையில்லை. ஜர்மனி இந்த ரஹஸ்யத்தை அறிந்து கொண்டு விட்டது. இந்திய நகரங்களில் விளங்கும் ஸுகாதார அதிகாரிகள் இதை இன்னும் அறிய முடியவில்லை. ஒருவர் வாய் வைத்ததில் பலபேர் வாய் வைப்பதென்றால் இதைவிட வேறு ஆபாஸம் என்ன? ஹிந்து பத்திரிகை சொல்வதுபோல் துரதிருஷ்ட வசமாக இந்தியாவானது ஜர்மனியாக இல்லை. அப்படியிருந்தால் இந்தக் காப்பிக் கடை எச்சில்களை ஒரு நொடியில் தடை செய்ய முடியும்.

எப்படியும் நமது முன்னோர் ஏற்படுத்திய சிறந்த ஆசாரமுறைகள் பெரும்பாலும் நட்[illegible] ஸுகாதார முறையை [illegible] இன்னும் பல வழிகளில் உலகம் நன்கு அறியும் காலம் வருமென்று நினைக்கிறோம்.

## கொச்சியும், திருவாங்கூரும். எது சிறந்தது?

தார்மிக சக்ரவர்த்தியின் நல்லாக்ஷிக்குள்பட்ட கொச்சியில் ஜவாப்தாரி ஆக்ஷி முறைக்கு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டிருப்பதைக் கண்டு இந்தியாவின்றி உலகம் முழுவதுமே மிகுந்த மகிழ்ச்சியடைந்திருக்கிறது. பிரஜைகளின் ஓட்டுரிமையை விஸ்தரித்தும்ஜனப்பிரதிநிதிகளிலிருந்து ஒருவரை மந்திரியாக நியமித்தும் அவரிடம் முக்யமாக கிராம நிர்வாஹத்திற்கு வேண்டிய அதிகாரம் மஹாராஜா கொடுத்திருக்கிறார். இந்தமாதிரியான ஜனப்பிரதிநிதி யாக்ஷியானது இந்தியாவிலுள்ள ஸுதேச ஸம்ஸ்தானங்களிலும் இன்றுவரையில் கொடுக்கப்படவில்லை. ஆதலால் இந்தப் பெரிய புகழானது கொச்சி மஹாராஜாவிற்கே முதல் முதலாக ஏற்படக்கூடியதென்று அரசியல்வாதி கோஷ்டியார் குதூஹலமடைந்திருக்கிறார்கள். புதிதாக அங்கு ஒரு ஹைகோர்ட்டும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமது அதிகாரத்தை பிரஜைகளிடம் யாற்ற நமது தார்மிக சக்ரவர்த்தியை விட வேறு எந்த அரசரும் துணியாததிலிருந்து இவருடைய விசால நோக்கம் நன்கு விசதமாகக் கூடியது.

இச்சமயம் திருவாங்கூர் ராஜ்யத்தையும், கொச்சியையும், சீர்தூக்கிப் பார்த்துச் சிறிது பேசுவது அவச்யமாகிறது. திருவாங்கூரில் சாஸ்திர, ஸம்பிரதாய முறைகளை அலக்ஷ்யம் செய்து ஆலயப்பிரவேச விளம்பரம் செய்ததற்காக ஸங்கேதமாகச் சிலர் அதை துதிபாட ஏற்பாடு செய்தனர். அப்படியே எங்கும் ஆர்ப்பாட்டம் செய்யப்பட்டது. இந்தப் புகழ்க் கூச்சலுக்கு மத்தியில் அங்கு பிரஜைகளின் ராஜ்ய உரிமைகள் பலமாகத் தடுக்கப்பட்டுவந்தன ஸாதாரண பிரஜா உரிமைகள் கூட [illegible]. ராஜ்யங் கூட்டங்கள் தடுக்கப்பட்டன. பேச்சு ஸ்வதந்திரமும், பத்திரிகை ஸ்வதந்திரமும் பல வழிகளில் பறிமுதல் செய்யப்பட்டன. ஜவாப்தாரி ஆக்ஷி என்று பேசினால் உடனே தண்டனை செய்தார்கள். இம்மாதிரி உபயோகமற்ற ஆலயப்பிரவேச விளம்பர மூலம் பொது ஜன மனதை பங்குவப்படுத்திக் கொண்டு, உண்மையான பிரஜா உரிமைகளையும், ஜனப்பிரதிநிதி ஆக்ஷியையும் வழங்க ஆட்டம் போட்டுவிட்டது. தன் அதிகாரத்தை விட்டுக்கொடுக்க மறுத்துவிட்டது. இந்தத்தந்திரத்தை அரசியல் வாதிகள் இப்போது தான் உணர்ந்தார்கள்.

கொச்சி அரசரோ அசாஸ்திரியமான ஆலயப்பிரவேசத்திற்கு ஸம்மதிக்கவில்லை. ஆனால் தமது அதிகாரத்தைத்தம் பிரஜைகளுக்கு மனமிரங்கிக்கொடுக்கும் பெரிய தியாகத்தைச்செய்தார். அந்த அடக்க முறைப் பேச்சுக்கிடையாது. இந்தசந்தர்ப்பத்தில்ஆலயப் பிரவேச அநீதியைச் செய்யாததற்காகக்கொச்சி அரசரைத்தூற்றி வந்தபேர்வழிகள் கொச்சியின் தியாக புத்தியையும், திருவாங்கூரின் தன்னலபுத்தியையும் ஒப்பிட்டுப்பார்த்து எவருடைய செய்கை உண்மையில் ஜனஸமூக க்ஷேமகரமென்பதை கவனிப்பது அவச்யமாகும். ஆலயப்பிரவேச விளம்பரத்தால் திருவாங்கூர் அரசர் தமது அதிகாரத்தைச்சிறிதும் விட்டுக்கொடுத்து விடவில்லை. இதில் அந்த அரசர் செய்த த்யாகமென்ன? கோவிலைக்கெடுத்தாரேயன்றி அவருடைய அதிகாரத்திற்கு குறைவும் இல்லை. [illegible] கொச்சி அரசர் [illegible] தியாகம்செய்திருக்கிறார். இரண்டு தேசத்திற்குமுள்ள வித்யாஸத்தை உலகம் கவனிக்கும். கொச்சி அரசருக்கு ஸங்கேதமாகப்புகழ்பாட ஒருவரும் முயற்சிக்கவேண்டாம். உபசாரப்பத்திரம் கொடுக்கத்தூண்ட வேண்டாம். தானாகவே உலகம் அவரைமனப்பூர்வகமாகப்போற்றும். அவரால் ரக்ஷிக்கப்பட்ட தர்மமே அவரை ரக்ஷிக்கும்.

## ஸ்பெயினில் பண்டித நேரு.

### யுத்த முனைக்கு விஜயம்.

ஸ்ரீமான் ஜவஹர்லால் நேரு ஸ்பெயின் போய் சேர்ந்து யுத்த முனைக்கும் சென்று பார்த்தார். அங்குள்ள மந்திரிகளுடன் நிலைமையைப்பற்றி விரிவாகப்பேசினார்.

ஸ்ரீ ஜனார்த்தந பிரிண்டிங் ஓர்க்ஸ், லிமிடெட், டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

எல்லாவிதமான அச்சு, பைண்டிங், ரூலிங் முதலிய வேலைகளும் சீக்கிரமாகவும் நயமான சார்ஜிலும் செய்து கொடுக்கப்படும்.

தமிழ், இங்கிலீஷ், நாகர, கிரந்த, எல்லா அக்ஷரங்களிலும் புஸ்தகங்கள் அச்சுப் போடுவதில் விசேஷமாய்ப் பலராலும் ஆதரிக்கப்பெற்றது. வேண்டிய விவரங்களைத் தெரிவிக்க ஸித்தமாய் இருக்கிறோம்.

மானேஜர்.

## ஸம்ஸ்கிருதமும் ஹிந்தியும்

### கல்விமந்திரி மனைவியின் கருத்து.

(சேங்காலிபுரம் வி. பஞ்சாபகேசய்யர்)

மலையாளப்பிரதேசத்தில் பட்டாம்பியில் ஒரு ஸம்ஸ்கிருத காலேஜ் இருக்கிறது. அதன் 27வது வருஷாந்திரக் கொண்டாட்டம் சென்ற ஜூன்மீ 3உ நடந்தது. அச்சமயம் சென்னை அரசாங்கத்தின் கல்வி மந்திரி கனம் டாக்டர் சுப்பராயனின் மனைவி ஸ்ரீமதி ராதா பாய் அம்மாள் தலைமை வகித்து அடியிற்கண்டபடி பேசியதாக "ஹிந்து"வில்பிரசுரமாயிருக்கிறது.

"ஸம்ஸ்கிருதம் கற்று நமது பூர்வீக கிரந்தங்களைப் படித்து அதன் மூலம் நமது தேசத்தின் முன் சரித்திரத்தை யறிந்து கொள்ளாவிடில் படிப்பு பூர்த்தியானதாகக்கொள்ள முடியாது. பள்ளிக்கூடங்களிலும் காலேஜகளிலும் ஸம்ஸ்கிருதம் கட்டாயமாகச் செய்யப்படாதது விசனிக்கத்தக்கது. சம்ஸ்கிருத படிப்பானது சுயேச்சையைக்குறித்து தேசத்தின் முன்னேற்றத்தை மிகவும் துரிதப்படுத்து மென்பது நிச்சயம். என்னுடைய அபிப்பிராயத்தில் ஹிந்தியைக்காட்டிலும் ஸம்ஸ்கிருதத்துக்கு மிகவும் அதிகமான முக்கியத்வம் கொடுக்கப்படவேண்டும். * * * ஸம்ஸ்கிருதம் கட்டாயமாகச் செய்யப்பட்டால், தேசத்துக்கு ஒருபொதுவான பாஷையை விருத்திசெய்வதென்பது இலகுவாய்விடும். தேசத்தின் மற்றொரு பாகத்தின்பாஷையை பொது பாஷையாகச் செய்வதிலுள்ள ஆட்சேபங்களுக்கும் இடமில்லாமல் போய் விடும்."

இப்படிப்பேசிய அம்மையார் தற்காலம் தேசத்திய முதல்தர தலைவர்களில் ஒருவரென்று ஒப்புக்கொள்ளப்பட்டவர். இந்தியாவின் பிரதிநிதியாக பார்லிமெண்டரி கமிட்டிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர். ஆங்கிலக் கல்வியில் தேர்ந்தவரென்பதும் உலகத்திலுள்ள முக்கிய தேசங்களெல்லாம் சுற்றுப் பிரயாணம் செய்து அங்கங்குள்ள நிலைமைகளையெல்லாம் நன்கறிந்தவரென்பதும் பத்திரிகை படிப்பவருக்கெல்லாம் தெரிந்த விஷயம். ஆனால் ஸம்ஸ்கிருதத்தை கற்றறிந்தவரென்பது இதுவரை வெளிப்படவில்லை. அவர் இப்படி பேசியதிலிருந்து ஸமஸ்கிருதத்தோடு இன்னும் அநேக தேசபாஷைகளிலும் அவருக்கு நல்ல பாண்டித்திய மிருக்கவேண்டுமென்று ஊகிக்கவேண்டியிருக்கிறது, கேவலம் ஸம்ஸ்கிருதம் மட்டில் கற்றவருக்கு அதன் பெருமையை மற்ற பாஷைகளோடு ஒத்திட்டுப் பார்க்கமுடியாது. ஸமஸ்கிருதத்தை விட்டு வேறு ஒன்று அல்லது பல பாஷைகளைக் கற்றாலும் அதன் ருசியை அறியமுடியாது. உலகத்திலுள்ள எல்லா பாஷைகளுக்கும் தாய் பாஷை ஸம்ஸ்கிருதம் என்பது, பல பாஷைகளோடு ஸமஸ்கிருதத்தையும் கற்று ஒப்பிட்டுப் பார்க்க சக்தியுள்ள ரஸிகர்களுக்குத்தான் தெரியும். இந்த வகுப்பில் சேர்ந்தவர்கள் மாக்ஸ் முல்லர் முதலிய மேல் தேச பாஷா விற்பன்னர்கள்.

ஆங்கில அரசாங்கத்துக்கு முந்திய காலங்களிலெல்லாம் அரசாங்கங்களால் ஸம்ஸ்கிருதம் ஆதரிக்கப்பட்டு வந்தது. சாஸ்திரங்களை நன்கறிந்தவர்களைத்தான் மந்திரிகளாக தேர்ந்தெடுப்பார்கள். சாஸ்திரங் கற்றவர்களுக்கு சன்மானங்கள் கொடுத்து ரட்சித்து வந்தார்கள். இன்னும் அதன் சின்னங்களை ஆங்காங்கு காணலாம். சுதேச சமஸ்தானங்களிலும் அதன் சின்னங்கள் மெலிந்து போய்க் காணப்படுகிறது. அரசாங்க ஆதரவால் தான் காளிதாஸர், பவபூதி, பாணர், பட்டர், ஸ்ரீ ஹர்ஷர் முதலிய கவிகள் தோன்றி ரஸமான காவ்வியங்களை இயற்றி நமக்கும், நம்பின் சந்ததியார்களுக்கும் உதவி செய்திருக்கின்றனர். அரசாங்க ஆதரவால் தான் வேதங்களும் சாஸ்திரங்களும் அச்சில்லாத காலங்களிலேயும் உலகத்தாரெல்லாம் ஆச்சரியப்படும் விதமாய் அப்படியே இதுவரை இருந்து வந்திருக்கின்றன. அரசாங்க ஆதிரவு குறையவே, எல்லாம் குறையத் தலைப்பட்டன.

காலஞ்சென்ற V. கிருஷ்ணசுவாமி அய்யர் மற்ற பாஷைகளோடு ஸம்ஸ்கிருதத்தையும் கற்றறிந்த மேதாவி, அவர் தெய்வவசத்தால் சென்னை கவர்ன்மெண்டின் மந்திரி பதவியை ஏற்றுக்கொண்டார். ஸம்ஸ்கிருத பாஷை அடக்கப்பட்டிருக்கும் துஸ்திதியைக்கண்டு துக்கித்து, அவரால்தான் அதற்கு ஒரு புத்துயிர் கொடுக்கப்பட்டது. சர்வ கலா சாலையில் பட்டங்கள் வழங்க ஏற்பாடு செய்தார். ஸம்ஸ்கிருத காலேஜ்களை ஏற்படுத்தினார். இதேமாதிரி பணத்தைச் சுரண்டும் உபயோகமற்ற ஆங்கில வைத்திய (Allopathic) முறையால் அமுக்கப்பட்டுக் கிடந்த ஆயுர்வேத வைத்திய முறையையும் உயிர்ப்பிக்க வாரம்பித்தார். இவர் இன்னும் அதிக காலம் அரசாங்கத்தை நடத்தினால், ஒரு சமயம் பவிஷ்யத் புராணத்தில் சொல்லப்பட்ட கலிகாலக் கோலங்களை பொய்யாகச் செய்துவிடுவாரோவென்றஞ்சி, ஈசுவரன் இவரை சீக்கிரத்தில் தன்னிடம் அழைத்துக் கொண்டுவிட்டார் போலும்? இவர் கொஞ்ச காலம் தோன்றியிராவிடில் ஸம்ஸ்கிருதமும் ஆயுர்வேதமும் இப்போது எந்தஸ்திதியிலிருக்கும் என்பதை ஊகிக்கக்கூடவில்லை.

பெரியவர் காந்தி, உலகமெல்லாம் தெரிந்தவர். அவர் செய்வம் அவருக்கு போதுமான ஸம்ஸ்கிருத பாண்டித்தியத்தை யளிக்கவில்லை. அதைமட்டும் அளித்திருந்தால் அவருக்கிப்போதிருக்கும் செல்வாக்கினால், ஸமஸ்கிருதம அதன் பிரதான்ய நிலைமையையடைய முயற்சித்திருப்பார்.

ஆனாலும், மேலே விவரித்தபடி ஸம்ஸ்கிருதத்தின் பெருமையைக்கண்டு சொன்னவர் தற்காலம் சென்னை அரசாங்கத்தில், முன் கிருஷ்ணசுவாமிஅய்யர் வகித்த பதவியை, அதிலும் முக்கியமாய், கல்வி மந்திரி பதவியை, வகிக்கும் டாக்டர் சுப்பராயனின் மனைவியாயிற்றே. அவர் புருஷனைக்கொண்டும் தனக்கிருக்கும் செல்வாக்கைக் கொண்டும் ஏன் ஸம்ஸ்கிருதத்துக்கு ஆதரவு தேட முடியாது என்ற சந்தேகம் பிறக்கலாம். இன்னும் விசித்திரமாக, ஹிந்தியை கட்டாயமாகச்செய்வதை யாக்ஷேபித்து; இப்போது அதிகாரத்திலுள்ளவர்களால் முன் கற்றுக்கொடுக்கப்பட்ட வித்தையை பிரயோகப்படுத்துபவர்களையெல்லாம் ஜெயிலில் போட்டுக்கொண்டு வருகிறார்களே, இது ஏன் என்ற பிரச்னைகளெல்லாம் எழலாம்.

இவைகளைப்பற்றி பரிசீலனம் செய்யும்போதுதான் தற்கால அரசாட்சியின் நுட்பங்கள் வெளிப்படும். அரசாட்சி செலுத்துவோரின் சொந்த அபிப்பிராயம் ஒன்றாயிருக்கலாம். அவர் அரசாட்சி செலுத்தும் அபிப்பிராயம் வேறாயிருக்கும். இந்தம்மாள் பட்டாம்பியில் இம்மாதிரி சொன்னார்; இதே மாதிரி அவர் ஜனப்பிரதிநிதியாக சென்றிருக்கும் மத்திய சட்டசபையில் அவரே சொல்லமுடியாது. ஏனெனில் அவர் ஒரு கக்ஷியின் அங்கமாக அங்குசென்றிருப்பதால்அக்கக்ஷித்தலைவர்கள் உத்திரவு கொடுப்பதைத்தான் அங்குசொல்ல வேண்டும். இதைத்தெளிவுபடுத்தவே, "இது என் சொந்த அபிப்பிராயம்" என்று அவர் பட்டாம்பியில் விளக்கியிருக்கிறார். இப்போது ஒரு கட்சியின் பெயரால் அரசாங்கம் நடத்தும் மந்திரி ஸபையும் சட்ட சபையும் அதன் அங்கத்தினர்கள் தங்கள் தங்கள் புத்திக்கெட்டிய யோஜனைகளை யநுசரித்து பேசவோ நடக்கவோ சுதந்திரம் பெற்றிருக்கவில்லை. ஆனால் ஜனங்களுக்கு சுதந்திரம் சம்பாதித்துக்கொடுப்பது அக்கட்சியின் கொள்கை யென்று சொல்லப்படுகிறது. மந்திரிகளும் சட்ட சபை மெம்பர்களும் தங்கள் தங்கள் புத்திக்கெட்டும் யோசனையை வெளிப்படுத்திச்சொல்ல சுதந்திரம் பெற்றிருந்தால் தான் சரியான தீர்மானம் வெளிவரு மென்பது ராமாயணம் படித்த எல்லோருக்கும் தெரியும் தசரதர் ஸ்ரீராமனுக்கு பட்டம் சூட்ட விரும்பி மந்திரிகளைக்கூட்டி ஆலோசிக்கும்போது "இது என்னுடைய விருப்பமாயிருந்த போதிலும் ஹிதமான வேறுஏதாவதுண்டாவென்று யோசிக்கவும். நடுநிலைமையிலுள்ளவர்கள் யோசித்துசொல்வதுதான் விசேஷம்" என்றார் இதெல்லாம் எடுத்துக்கொண்ட விஷயத்துக்குப் புறம்பானது. இதைத் தொடர்ந்தால் முடிவில்லாமல் மேலே போய்க்கொண்டேயிருக்கும். அதை இத்துடன் நிறுத்தி விடுவோம்.

எது எப்படியிருந்தபோதிலும் ஸம்ஸ்கிருதத்தின் பெருமையை தற்காலம் அதிகாரத்திலும் செல்வாக்கிலுமுள்ள ஒருவர் அறிந்திருக்கிறார் என்பது விசேஷ ஆறுதலைக் கொடுக்கிறது.

---

### ஸ்ரீமத் ராமாயண ஸீரியஸ்.

17—6—38 வெள்ளிக் கிழமை கும்பகோணம் ஸ்ரீ ஆதிவராகப் பெருமாள் சன்னதியில் மாஜிஸ்டிரிக்ட் ஜட்ஜு திவான் பகதூர் K. S. ராமசாமி சாஸ்திரிகள் அவர்கள் முன்னிலையில் [illegible] கோயில் ஸ்ரீமத் ராமாயண கதா[illegible] வருஷக, பிரஸங்க ரத்னம், வேதமூர்த்தி பிரும்மஸ்ரீ, பாகவத கௌஸ்துபம் கோபால பாகவதர் அவர்களால் ஸ்ரீமத் ராமாயண ஸீரியஸ் ஆரம்பம் செய்யப்பட்டது. பல பிரமுகர்கள் விஜயம் செய்திருந்தார்கள். ஷை பாகவதர் அவர்களின் வித்வத்தைப்பற்றியும், பாலசுப்பிரமண்யம் பிரதர்ஸ் அவர்களின் இனிமையான கானத்தையும் ஸ்ரீமத் ராமாயணத்தின் பெருமையையும் அதனால் நாம் அடையும் நன்மையையும் எடுத்து பிரும்மஸ்ரீ, ராமசாமி சாஸ்திரிகளவர்கள் வெகு அழகாகவும் இனிமையாகவும் உபன்யாசம் செய்தார் ஷை பாகவதர் அவர்களிடம் கும்பகோணம் மகாஜனங்கள் ரொம்பவும் அபிமானித்து மறுமுறை ராமாயணத்தை ஆரம்பம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டதின் பேரில் ஆரம்பம் செய்யப்பட்டிருக்கிறது. 17-6-38 வெள்ளிக்கிழமை ஸ்ரீராம ஜெனனம் வரை கதை நடத்தப்பட்டது.

இனி ஒரு தினம் விட்டு மறுதினம் மாலை 6-மணி முதல் 9-மணி வரையில் 24-கதைகளும் நடைபெறும் கதை முடிவில் எல்லோருக்கும் சந்தனதாம்பூலம் வழங்கப்பட்டபின் C. R. கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள் வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது கலைந்தது.

நமது நிருபர்.

---

முக்கிய கவனிப்பு.

(3-வருஷத்திற்கு உத்திரவாதமுள்ளது.)

அசல் தங்க நகைகளைப்போன்ற "கன்னூஸ் ப்ளேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்கவும்.

தயாரிப்பவர்:— N. கன்னுசாமி பத்தர்,
பெரியதெரு, கும்பகோணம்.



## சென்னை மாகாண வியவசாயிகளின் கடன் நிவாரண ஆக்ட்.

(போர்ட் ஸெயிண்ட் ஜார்ஜ் கெஜட் பிரசுரம்.)

(16—6—38 தொடர்ச்சி.)

(2) யாதொரு விவசாயி அசலைப்போல் இரண்டு மடங்குள்ள தொகையை அசலாகவோ வட்டியாகவோ இவ்விரண்டுமாகவோ எந்த கடன்காரருக்காகிலும் செலுத்தியிருந்தால், அசல் உட்பட அந்தக் கடன் முற்றிலும் கொடுத்துத் தீர்க்கப்பட்டிருப்பதாகக் கருதப்படும்.

(3) அசலாகவோ வட்டியாகவோ இவ்விரண்டுமாகவோ திருப்பிச் செலுத்தப்பட்ட தொகைகள் அசலைப்போல் இரண்டு மடங்குள்ள தொகைக்குக் குறைவாயிருந்தால், இந்தக் குறைவைப் பூர்த்தி செய்யும் தொகை மாத்திரம் அல்லது அசல் தொகை அல்லது அசல் தொகையில் செலுத்தப்படாமல் பாக்கியாயிருக்கும் பாகம் ஆகிய இவைகளில் எது குறைவாயிருக்கிறதோ அது திருப்பிச் செலுத்தப்படத்தக்கதாகும்.

(4) 22 முதல் 25 வரையிலுள்ள பிரிவுகளில் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, (1), (2), (3) உட்பிரிவுகளில் கண்டதெதனாலும், கடன்காரருக்குச் செலுத்தப்பட்டிருக்கும் யாதொரு தொகையை அவர் திருப்பிக், கொடுத்துவிடவேண்டியிருப்பதாக, அல்லது இந்த ஆக்ட் ஜாரிசெய்யப்பட்டிராவிட்டால் யாதொரு கடனாளியால் செலுத்தப்படத் தக்கதாயிருக்கும் தொகைக்கு மேற்பட்டுள்ள ஒரு தொகையைச் செலுத்த அவருக்குள்ள பொறுப்பு அதிகப்படுத்தப்படுவதாகக் கருதப்படமாட்டாது.

விவரணம்:— யாதொரு கடனானது அதைக் கொடுத்த கடன்காரருக்குச் சாதகமாகவே புதுப்பிக்கப்பட்டிருந்தாலும் ஒரு புதிய தஸ்தவேஜில் சேர்க்கப்பட்டிருந்தாலும், அந்தக் கடன்காரர் பிரதமத்தில் கொடுத்த அசல் தொகையும் பிற்பட்டு அசலாகக் கொடுக்கப்பட்டிருக்கும் தொகைகள் எவையேனும் இருந்தால் அந்தத் தொகைகளும் மாத்திரமே விவசாயி இந்தப் பிரிவின்படித் திருப்பிச் செலுத்தத்தக்க அசல் தொகையாகக் கருதப்படும்.

8. 1932-ஞு அக்டோபர்மீ 1உயன்றாவது அதற்குப் பிறகாவது ஏற்பட்ட கடன்கள் இதன்கீழ்ச் சொல்லியிருக்கும் விதமாகக் குறைக்கப்படும்; அதாவது:—

(1) ஷை கடன் எந்தச் சட்டம், வழக்கம், ஒப்பந்தம் அல்லது கோர்ட் டிக்ரியின்படி ஏற்படுகிறதோ அதன்பிரகாரம்அந்தக்கடனுக்குப் பிரயோகப்படத்தக்க வீதம், அல்லது வருஷமொன்றுக்குச் சாதாரண வட்டி ஐந்து சதவீதம் ஆகிய இவைகளில் எது குறைவாயிருக்கிறதோ அந்த வீதப்படி இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் தேதி வரையில் வட்டி கணக்கிடப்படும்; மேலும், வட்டிக்காக செலுத்தப்பட்ட சகல தொகைகளும் செல்லுவைக்கப்படும்; இந்தப்படிக் கணக்கிடப்படும் வட்டிக்காகப் பாக்கியாயிருப்பதாகக் காணப்படும் தொகை ஏதேனுமிருந்தால் அந்தத் தொகை மாத்திரமே, அசல் தொகையோடுகூட அல்லது அதில் எவ்வளவு பாகம் சேரவேண்டியதாயிருக்கிறதோ அதனோடுகூட, செலுத்தப்படத்தக்கதாகக் கருதப்படும்.

ஆனால்.ஷை கடனில் எந்தப் பாகமாவது முந்திய கடன் எதையாகிலும் புதுப்பித்ததனால் ஏற்பட்டதாகத் தெரியவந்தால் அந்தப் பாகமானது ஷை முந்திய கடன் ஏற்பட்ட தேதியன்று வாங்கப்பட்ட. கடனாகக் கருதப்படும்; அந்தக் கடனானது 1932-ஞு அக்டோபர்மீ 1உக்குமுன் வாங்கப்பட்டிருந்தால், 8-வது பிரிவில்கண்ட நிபந்தனைகளின்படி அதுவிஷயமாய் நடவடிக்கை நடத்தப்படும்.

(2) 22 முதல் 25 வரையிலுள்ள பிரிவுகளில் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, இதில் கண்டதெதனாலும், கடன்காரருக்குச் செலுத்தப்பட்டிருக்கும் யாதொரு தொகையை அவர் திருப்பிக் கொடுத்துவிடவேண்டியிருப்பதாக, அல்லது இந்த ஆக்ட் ஜாரி செய்யப்பட்டிராவிட்டால் கடனாளியால் செலுத்தப்படத்தக்கதாயிருந்திருக்கும் தொகைக்கு மேற்பட்டுள்ள ஒரு தொகையைச் செலுத்த அவருக்குள்ள பொறுப்பு அதிகப்படுத்தப்படுவதாகக் கருதப்படமாட்டாது.

10. (1) யாதொரு நபர் 3 (ii) பிரிவில் அர்த்தம் சொல்லப்பட்டபடியுள்ள ஒரு விவசாயியாயிருந்தபோதிலும், அந்தப்பிரிவில் குறிப்பிட்டிருக்கிறபடி 1937-ஞு அக்டோபர்மீ 1உயன்று யாதொரு நிலத்தில் பாத்தியதையில்லாதவராயிருந்தாலும் அந்த நிலத்தின் குத்தகையாவது கீழ்க்குத்தகையாவது பெற்றிராவிட்டாலும் அவருக்கு 8-வது, 9-வது பிரிவுகளில் கண்ட நிபந்தனைகள் பிரயோகப்படமாட்டா,

(2) 8-வது, 9-வது பிரிவுகளில் கண்டதெதனாலும்:—

(i) எந்தக் கொதுவையின்படி கொதுவை வைக்கப்பட்ட சொத்தானது கொதுவை வைத்துக்கொண்டவரின் சுவாதீனத்திலிருந்து, கொதுவை வைத்துக்கொண்டவருக்குச் சேரவேண்டியதாக வட்டி வீதம் எதுவும் குறிப்பிட்டிருக்கவில்லையோ அப்படிப்பட்ட யாதொரு கொதுவைக்காவது,

(ii) சொத்தை (பிறருக்கு) மாற்றுவதைக்குறித்த ஆக்ட் 55-வது பிரிவைச் சேர்ந்த 4-வது பகுதியில் கண்ட (d) உட்பகுதியில் எந்தப் பொறுப்பு சம்பந்தமான உத்தரவாதத்துக்காக நிபந்தனை கண்டிருக்கிறதோ அப்படிப்பட்ட யாதொரு பொறுப்புக்காவது,

(iii) 1913-ஞுத்திய இந்துதேசத்துக் கம்பெனிகளைக் குறித்த ஆக்டில் அர்த்தம் சொல்லப்பட்டபடியுள்ள யாதொரு பொதுக் கம்பெனிக்காகிலும் 1934-ஞுத்து இந்திய ரிஸெர்வ் பாங்க் ஆக்ட் 2 (e) பிரிவில் அர்த்தம் சொல்லப்பட்டபடியுள்ள யாதொரு ஷெட்யூல் பாங்கிக்காகிலும் சேரவேண்டிய எந்தத் தொகை சம்பந்தமாகவேனும் ஏற்பட்டுள்ள பொறுப்பின் விஷயத்தில் செலுத்தப்படவேண்டிய வட்டியானது வருஷமொன்றுக்கு ஒன்பது சதவீதத்துக்கு மேற்படாமலிருந்தால் அப்படிப்பட்ட யாதொரு பொறுப்புக்காவது, பாதகமுண்டாகமாட்டாது.

11. யாதொரு விவசாயியால் செலுத்தப்படத்தக்க கடனில் யாதொரு கோர்ட்டாரால் செலவுத்தொகையாக டிக்ரி செய்யப்பட்ட யாதொரு தொகையாகிலும் கொதுவை வைக்கப்பட்ட சொத்தைக் காப்பாற்றும் பொருட்டு கொதுவை வைத்துக் கொண்டவராலாவது இதர நபராலாவது நியாயமாய்ச் செலவு செய்யப்பட்ட தொகைகளாகிலும் அடங்கியிருந்தால், ஷை தொகை அல்லது தொகைகள் 8-வது, 9-வது பிரிவுகளில் கண்ட நிபந்தனைகளின்படி வசூலிக்கப்படத்தக்க தொகையுடன்கூட வசூலிக்கப் படத் தக்கவையாகும்.

12. இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளின்படிக் குறைக்கப்பட்டிருக்கும் சகல கடன்களுக்கும், அவைகளின்படி எந்தத் தொகையாகிலும் செலுத்தப்படத் தக்கதாயிருக்கிற வரையில், ஷை கடன்கள் எந்தத் தேதிவரையில் குறைக்கப்பட்டிருக்கின்றனவோ அந்தத் தேதியன்று சேரவேண்டிய அசல் தொகையின்மேல் சட்டத்தின்படியோ வழக்கத்தின்படியோ ஒப்பந்தத்தின்படியோ மற்றப்படியோ ஏற்கனவே பிரயோகப்படத்தக்கதாயிருந்த வீதப்படி மேலே கண்ட தேதியிலிருந்து வட்டிவாங்கவேண்டும்.

ஆனால் அது எந்த விஷயத்திலும் வருஷமொன்றுக்கு $6\frac{1}{4}$ சதவீதப்படியுள்ள சாதாரண வட்டிக்கு, அதாவது, மாதமொன்றுக்கு ஒரு ரூபாய்க்கு ஒரு தம்பிடி வீதப்படியுள்ள சாதாரண வட்டிக்கு அல்லது வருஷமொன்றுக்கு ரூபாய்க்கு ஒரு அணா வீதப்படியுள்ள சாதாரண வட்டிக்கு மேற்படக்கூடாது.

13 யாதொரு கடனை வசூலிப்பதற்கான எந்த நடவடிக்கையிலாகிலும், இந்த ஆக்ட் வழங்கத்தொடங்கிய யாதொரு பிறகு விவசாயிக்கு ஏற்பட்ட எந்தக் கடனுக்காவது சேரவேண்டிய சகல வட்டியையும் சாதாரணவட்டி வருஷமொன்றுக்கு $6\frac{1}{4}$சதவீதம் அதாவது சாதாரணவட்டி மாதமொன்றுக்கு ஒரு ரூபாய்க்கு ஒரு தம்பிடி வீதம் அல்லது சாதாரண வட்டி வருஷமொன்றுக்கு ஒரு ரூபாய்க்கு ஒரு அணா வீதம் கணக்கிடப்பட்ட ஒரு தொகைக்கு மேற்படாதபடிக் கோர்ட்டார் குறைக்கவேண்டும்.

ஆனால், மாகாண கவர்ன்மெண்டார் ஸர்க்கார் கெஜெட்டில் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாய் அப்போதைக்கப்போது இதை மாற்றி வேறே எந்த வட்டி வீதத்தையாகிலும் நிஷ்கரிஷை செய்யலாம்.

விவரணம்:— இந்தப்பிரிவின் காரியங்களுக்காக, 3 (ii) பிரிவில் "விவசாயி" என்பதற்குச் சொல்லிருக்கும் அர்த்தத்தை வாசிக்கையில்:— (i) அந்தப் பிரிவுடன் சேர்த்துள்ள (A) விலக்கு நிபந்தனையில், '1938-ஞு மார்ச்மீ 31உயோடு முடிவாகும் இரண்டு அரசிறை வருஷங்களில்" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, "எந்தத் தேதியில் கடன் ஏற்படுகிறதோ அதற்கு அடுத்து முந்தியுள்ள மார்ச்மீ 31உயோடு முடிவாகும் இரண்டு அரசிறை வருஷங்களில்" என்னும் சொற்றொடரை அமைத்துக்கொண்டதுபோலவும்,

(ii) அந்தப் பிரிவுடன் சேர்த்துள்ள (B), (C) விலக்கு நிபந்தனைகளில், "1937-ஞு அக்டோபர்மீ 1உக்கு அடுத்து முந்தியுள்ள இரண்டு வருஷங்களுக்குள்" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக "எந்தத் தேதியில் கடன் ஏற்படுகிறதோ அதற்கு அடுத்து முந்தியுள்ள மார்ச்மீ 31உ அல்லது ஸெப்டம்பர்மீ 30உ (ஆகிய இவைகளில் எது பிந்தியதோ அந்தத் தேதி) யோடு முடிவாகும் இரண்டு வருஷங்களுக்குள்" என்னும் சொற்றொடரை அமைத்துக்கொண்டதுபோல்வும் வாசிக்கவேண்டும்.

(தொடரும்.)

# கன்ஸர்வேடிவ் கக்ஷி தோன்றவேண்டும்.

(முன் தொடர்ச்சி)

(R. நடராஜன்.)

ஹிந்துக்கள் குறிப்பாக மனஸ்ஸாக்ஷியைக் காட்டிலும் அதிக ப்ராமாண்யத்தை வேதங்களுக்கும் தர்மசாஸ்திரங்களுக்கும் அளிப்பவர்கள். வேதங்கள் கடவுளால் உண்டுபண்ணப் பட்டவை என்றும், என்றும் அழியா நித்யத்தன்மை வாய்ந்தவை என்றும், அதன் கட்டளைகள் எப்பொழுதும் அனுஸரிக்கப்படவேண்டியவைகள் என்றும் நம்புகிறார்கள். இவ்வாறே இதர மதத்தினர்களும் தங்கள் மதங்களுக்குபுனிதத்தன்மையை அங்கீகரித்து விசேஷ கௌரவத்தை அளித்துவருகிறார்கள். இவ்விதம் பரிசுத்தத் தன்மைவாய்ந்த மதங்களின் ஜனஸங்கியைகளை கணக்கிட்டுப் பார்த்தால், உலகத்தில் கிருஸ்துவமதத்தினர் அதிகமாகவும், அடுத்தபடியாக மகம்மதிய மதம் அல்லது ஹிந்துமதம் வரக்கூடுமென்றும், பிறகு பௌத்தமதம், ஸொராஸ்தர்மதம், ஜைனமதம் இவை குறைந்த எண்ணிக்கையுடயவை எனவும் சொல்லலாம். (சில தத்வங்களை விளக்குவதற்காக ஜனஸங்கியை பிரச்னை காட்டப்பட்டது. ஜனஸங்கியாகிற மத்தில் மாறுதல் இருந்தால் அதன்படி வாசகர்கள் திருத்திக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.)

கடவுளாலும் பெரிய மஹான்களாலும் பிரஸித்திக்கப்பட்ட மதங்களில் ஒரு மதத்தை அதிக ஜனத்தொகையினர் அனுஸரிப்பவர்களாயும், மற்றொரு மதத்தை சிறுபான்மை எண்ணிக்கையாளர் பின்பற்றுபவர்களாயுமிருப்பதால், அதிக எண்ணிக்கைகொண்ட மதமே ஸத்யமானது. இதர மதங்கள் ஸத்யத்தை ஆதாரமாகக் கொண்டவை அல்ல. போதிய பரிசுத்தம் வாய்க்கப்பெறாமையால், அதிக ஜனங்களின் மனதை ஆகர்ஷித்து தன்னிடம் ஐக்யம் செய்துகொள்ள உயர் தத்வங்கள் போதியன இல்லாமல், அதை பின்பற்றுவோர்களும் குறைவாக இருக்கிறார்கள். கடவுளின் ஸங்கல்பத்தில், காலசக்ரத்தின் போக்கால் அல்லது இயற்கை க்ரமத்தால் இவ்வாறு குறைந்த எண்ணிக்கைகொண்ட மதங்கள் பெரும்பான்மை ஜனங்களை திருப்தி செய்ய தவறிவிட்டதால், அவைகள் உலகில் இருக்க உரிமைபெறவில்லை. பெரும்பான்மையோரின் நம்பிக்கையை பெறாததால் அவை உலகிலிருந்து மறையத்தக்கவை. ஆகவே உலகஜனங்களில் பெரும்பான்மையோர் அடங்கிய மதம் ஒன்றைத்தவிர மற்றவை, மதபேத உணர்ச்சியைப்பரப்பி, ஸமத்வ ஸகோதரத்வ உணர்ச்சியைத் தாக்கி, பரஸ்பரம் அமைதியின்மை சச்சரவுகளை ஏற்படுத்தக்கூடுமாதலால் அவைகள் உலகிலிருக்க அர்ஹதையற்றவை என்று பிரசாரம் செய்தல் எவ்வளவு தூரம் நேர்மையானது? ஜனஸங்கியை ஆதாரமாகக்கொண்ட மெஜாரிடி மைனாரிடி கிளர்ச்சியை மதவிஷயங்களில் புகவிடுவது எவ்வளவு உசிதமானது? ஒரு மதத்திற்குள்ளேயே மெஜாரிடி கக்ஷி பலத்தைக்கொண்டோ, அல்லது சட்டசபைகளின்மூலம் சட்டங்களை செய்தோ, மதானுஷ்டான கொள்கைகளில் நம்பிக்கையற்ற ஒரு சாரார், மதவிதிகளில் நம்பிக்கையுள்ள மற்றொரு சாரார் மீது தங்கள் அபிப்ராயத்தை பலாத்காரமாக வற்புறுத்துவது ஒழுக்கமுறைக்கேற்றதா? நியாயமானதா? என்று மகாஜனங்கள் ஆராய கடமைப்பட்டிருக்கிறார்கள்.

உலகம் பூராவும் ஒரே மதத்தை அனுசரித்தாலும் கூட, எவ்வளவு ஜனங்கள் மதகட்டளைகளை தவறாமல் அனுஷ்டிப்பது ஸாத்யமாகுமென்பதும் ஆராயற்பாலது. ஒரே மதத்தை அனுஷ்டிப்பவர்க்குள்ளும் ஒரு காலத்தில் மதக்கட்டளைகளை சரிவர பின்பற்றுபவர்கள் அதிகமாகவும், மற்றொரு காலத்தில் குறைவாகவும் இருக்கக்கூடும். ஒரு காலத்தில் மத நூல்களில் நம்பிக்கையற்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்து மதத்தை அவர்களுக்கு தோன்றிய ரீதியில் மாற்றுவது அல்லது அழிப்பது அவசியமாக கருதப்படலாம். இந்த சந்தர்பத்தில் மத நம்பிக்கையற்றவர்களாயும் ஸ்ரீமான் காந்தியைப்போல் தன் அபிப்பிராயத்திற்கு முரண்படும் அம்சங்களில் மத நூல்களை திரஸ்காரம் செய்யவும், மதாநுஷ்டானங்களை தியாகம் செய்யவும் தயாராக இருக்கும் மதநம்பிக்கையை இழந்த பெரும்பாலோர் அபிப்பிராயத்தை, மத நம்பிக்கையுள்ளவர்கள் சிறு பான்மையோராயினும், அவர்கள் மீது நிர்பந்த முறையில் திணிப்பதுபொருத்தமானதா? இப்போதைய நிலைமையில் கூட மத நம்பிக்கையற்ற ராஜ்ய வாதிகள் மதசீர்திருத்தத்தின் பெயரால் செய்யும் தவறான பிரசாரங்களுக்கு அபரிமிதமான ஆக்ஷேபங்கள் இருந்து வரவில்லையா?

பிரசார நிமித்தம் பல இடங்களில் சஞ்சாரம் செய்திருக்கும் ஸ்ரீமான் காந்தி பெரிய க்ஷேத்திரங்களிலும் தீர்த்தங்களிலும் தான் செய்ய வேண்டிய மதானுஷ்டானங்களை சாத்யமான வரையிலாவது செய்திருக்கிறாரா! ஒரு சமயம் கிரண காலத்தில் காசியில் தங்கியிருந்த அவர்கங்கையில் ஸ்நானம் செய்தாரா? பீகார் பூகம்பம் ஹிந்துக்களின் தீண்டாமை அனுஷ்டானத்தால் வந்தது என்று மனசாக்ஷியின் மேல் பளுவைத்தள்ளி மனதில் தோன்றிய அடக்கமற்ற அபிப்பிராயத்தை வெளியிட்டு மதத்தின் பேரில் பழிசுமத்தியது தேசத்தலைவருக்கு தகுதியானதா? வெள்ளம் வரும் காலங்களில் ஏற்படும் சேதங்களுக்கு காங்கிரஸ் மஹாசபையின் பிரசாரம் காரணமென்று கூறினால் அது கண்யமாகுமா! இவ்விதம் பொறுப்பற்ற முறையில் ஸ்ரீமான் காந்தி அபிப்பிராயம் வெளியிட்டதை பண்டித மதன் மோஹன் மாளவ்யாவும் ரவீந்திரநாத்டாகூரும் கண்டித்திருப்பதும் கவனிக்கப்படவேண்டும். ஸ்ரீமான் காந்தி சர்வக்ஞரா! மனம் போன போக்கெல்லாம் பொறுப்பற்ற மனசாக்ஷியின் மேல் பழியைத்தள்ளி அபிப்பிராயம் வெளியிடுவோர்களை தேசத்தலைவர்களாகக்கொள்ளலாமா?

தனிப்பட்ட மனிதன் அல்லது ஜன சமூக மதத்தின் கட்டளைகளை பூர்ணமாக அனுஷ்டிக்க சாத்யமில்லையென்பதற்காக, ஒரு மதத்தின் மூல தத்வங்களையும் கொள்கைகளையும் மாற்றவேண்டிய அவச்யம் உண்டா! அவ்விதம் மாற்றி வருவதால் மதத்தின் அடிப்பான்மையான உத்தேசம், லக்ஷ்யம் இவைகள் பார்க்கப்படாமல் இருக்க முடியுமா? ஒவ்வொரு சமயத்திலும் மதக்கொள்கை மாற்றப்படுவதால் மதத்தின் ஸ்வரூபம் நிலையாக இருக்கமுடியுமா? அல்லதுசாத்யமான வரை அவரவர்களின் சக்திக்கேற்றபடி குறைவாகவோ, ஜாஸ்தியாகவோ மதாநுஷ்டானங்களை ஆசரிப்பதில் சுதந்திரத்தை அனுமதிக்கலாமா என்பதாக பல பிரச்னைகள் எழுகின்றன.

தீவ்ரதியாக உணர்ச்சியும், தன்மை மறுப்பும், ஸஹிப்புத்தன்மையும் பெறாமல், மதாநுஷ்டானங்களை செய்வதற்கான மனோநிடம் வாய்க்கப்பெறாத நிலையில், மதக்கட்டளைகளை மாற்றப்படத்தக்கவை யென்றும், மதாநுஷ்டான சுதந்திரம் அனுவச்ய மென்றும் கூறப்படுமானால் அந்த நபரின் தலைமையில் மக்கள் முன்னேறக்கூடுமா? ஒவ்வொரு மனிதனுக்கும் வெவ்வேறான அபிப்பிராயங்களும் மனோபாவங்களும் இருக்கக்கூடுமாதலால் எந்த நபரின் புத்திமதிகளை அனுஸரித்து மதத்தில் மாறுதல்களை செய்வது? தவிர மதங்களில் மாறுதல்களை செய்ய முற்பட்டால் மஹான் இயேசு கிருஸ்து, மஹாத்மா மகமதுநபி முதலியவர்களை பின்பற்றுவார்களாக சொல்லிக் கொள்ளலாமா அல்லது நாமே மஹாத்மாக்களாக ஆகிவிடலாமா?

ஸ்ரீமான் காந்தியுள்பட எந்த நபராவது தன் பிற்கால வாழ்க்கை, தற்கால இருப்பு சம்பந்தப்பட்ட வரையிலாவது பூர்ண சுதந்திரத்துடன் காரியங்களை நடத்த வல்ல சுதந்திரம் பெற்றிருக்கிறாரா? இத்தகைய தலைவர்களின் புத்திமதியை அநுசரித்து மத புரக்ஷியும் இந்தியாவுக்குதேவையா? ஸ்ரீமான் காந்தி இந்திய மகா ஜனங்களின் பிரதிநிதியா? காங்கிரஸ் மகா ஸபை இந்தியர்களின் பிரதிநிதிஸ்தாபனமா? அபிப்ராயபேதம் ஏற்படுமிடத்தில் கிரமமான ஜீவதார உரிமை, மத நம்பிக்கை, அநுஷ்டான சுதந்திரம் இவைகளை காங்கிரஸ் மகாஸபையும், காங்கிரஸ் மந்திரி ஸபைகளும், சட்டங்களால் பறிமுதல் செய்யலாமா? காங்கிரஸ் ஸ்தாபனம் ஹிந்து மகா ஜனங்களின் கிரமமான ராஜீய உரிமைகளை பாதுகாப்பதில் சிரத்தை கொண்டுள்ளதா? இந்தியாவின் கோடிக்கணக்கான ஹிந்து மகாஜனங்களின் கிரமமான ராஜீய உரிமைகளை பாதுகாக்கப் போராடும் ஹிந்து மகா ஸபையை கலந்து ஆலோசிப்பதற்காக காங்கிரஸ் மகா ஸபை இது காறும்ஏதாகிலும் ஏற்பாடு செய்திருக்கிறதா?

ஹிந்து மகா ஸபையின் ராஜீய லக்ஷ்யங்களுக்கும் காங்கிரஸின் லக்ஷ்யக்களுக்கும் எந்த அம்சங்களில் முறண்பாடு இருக்கிறது? ஹிந்துமகா ஸபை இதர மதத்தினர்களுக்கல்லாதவிசேஷ உரிமைகளையும், சலுகைகளையும், ப்ரதிநிதித்வத்தையும் அளிக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறதா? வகுப்புவாரி பிரதிநிதித்வம் அல்லது கலப்பு தொகுதி முறை இவைகளில் காங்கிரஸின் கொள்கை என்ன?

இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் இருக்கும் ஹிந்து மகாஜனங்களின் ராஜீய பிரதிநிதிஸ்தாபனமாகிய ஹிந்து மகா ஸபையை காங்கிரஸ் உதாசீனம் செய்து வருவதின் அந்தரங்க நோக்கம் என்ன? காங்கிரஸ் இந்தியர்களின் ஏகபோக பிரதிநிதிஸ்தாபனமாகக்கூடுமா? இந்தியாவில் இதர ஸ்தாபனங்கள் இருந்து வரவில்லையா? காங்கிரஸ் பிற்கால இந்தியாவின் ஸ்திதியை நிர்ணயிக்கும் விஷயத்தில் ஏன் மற்ற ஸ்தாபனங்களைக்கலந்து கொள்ள தயங்குகிறது? ராஜீய அம்ச சம்பந்தப்பட்டவரையிலாவது காங்கிரஸ் ஹிந்துக்களின் பிரதிநிதித்வம் வாய்ந்ததா? ஹிந்துக்களின் சார்பாக காங்கிரஸாரும் காந்தியும் சமரஸப்பேச்சுக்கள் நடத்த உரிமை பெற்றவர்களா? காங்கிரஸ் ராஜீய ஸ்தாபனமா அல்லது மதஸ்தாபனமா? அல்லது இரண்டு அம்சங்களிலும் இந்தியர்களின் பிரதிநிதித்வம் வாய்ந்ததா? இவைகளை மகா ஜனங்களின் ஆலோசனைக்கு கொண்டு வருகிறோம்.

காங்கிரஸ் ஸ்தாபனமும் ஸ்ரீமான் காந்தியும் ஹிந்துக்களின் பிரதிநிதிகளாகமாட்டார்கள். ஸ்ரீகாசிமாநகரில் 1928ல் நடைபெற ஹிந்துமத பரிஷத்தின் தீர்மானங்களையும், 1937 டிஸம்பரில் சென்னையில் நடைபெற்ற ஹிந்துமத பரிஷத் முடிவுகளையும் காங்கிரஸ் மகா ஸபை அலக்ஷ்யம் செய்து, மத விஷயங்களில் சட்டங்கள் செய்வதற்கு உடந்தையாக இருந்து பலாத்காரமுறையில் ஹிந்துமதத்தை அழிப்பதில் ஈடுபடுவதால், மத நம்பிக்கை, அநுஷ்டான சுதந்திரம் இவைகளை ஒடுக்குவதன் காரணமாக காங்கிரஸ் ஹிந்து மதத்தை எதிர்க்கும் ஸ்தாபனமாகும். ஆகையால் அது மத விஷயத்தில் ஹிந்துக்களின் பிரதிநிதித்வம் வாய்ந்ததல்ல.

(தொடர்ச்சி 9 பக்கம் பார்க்க)



347

(8ம் பக்கத்தொடர்ச்சி.)

ராஜீய துறையிலோ ஹிந்து மகாஸபை கலப்புத்தொகுதி முறை அல்லது விசேஷ பாதுகாப்புகள் இன்றி ஜனஸங்கியைக்கேற்ற வகுப்புவாரி பிரதிநிதித்வத்தை கோருகிறது. மற்றபடி சலுகைகளையோ அதிகப்படியான உரிமைகளையோ விரும்பவில்லை. சில வருஷங்கள் முன் வரை இக்கொள்கைகளை ஆதரித்திருந்த காங்கிரஸ் ஸபை இப்போது அனுஷ்டானத்தில் இந்த கிரமமான உரிமைகளைக்கூட ஹிந்துக்களுக்கு அளிக்க உறுதி கூற மறுக்கிறது. ஆனால் இதேகாலத்தில் முஸ்லீம் லீகின் எந்த கோரிக்கையையும் பாரமர்சிக்க தயாராக இருக்கிறது. ஆகவே ராஜீய விஷயங்களிலும் ஹிந்துமகாஸபையை கலக்காமல் காரியங்களை செய்யும் காங்கிரஸ் ஹிந்துக்களின் சார்பாக எதிலும் கலந்து கொள்ள உரிமை பெறவில்லை.

தவிர காங்கிரஸ் மஹாஸபை புத்தகயாமடநிர்வாஹம், பஞ்சமர்களின் ஆலயபிரவேசம், வகுப்புகள் சம்பந்தப்பட்ட மத உரிமைகள் புனமாருதிகோவில் சத்யாக்ரஹம், விவாக சம்பந்தமான மதக்கட்டளை இவைகளில் ஹிந்துக்களின் கிரமமான உரிமைகளுக்கு பங்கம் விளைவிக்கும் ரீதியில் நடந்துகொண்டு வருவதோடு, பலாத்காரமான சட்ட நிர்பந்தங்கள் மூலம் ஹிந்து மத விரோதமான காரியங்களை செய்துவருகிறது.

இத்தகைய காரணங்களால் மதத்தில் சட்டங்கள் செய்து நிர்பந்தம் செய்வதை அனுமதிக்கும் காங்கிரஸ் ஸ்தாபனமும், காங்கிரஸ் அங்கத்தினர்களும் ஹிந்துக்களின் நம்பிக்கைக்கு பாத்திரமற்றவர்கள்.

காங்கிரஸ் அங்கத்தினர் விதிகளில் மத சுதந்திரம் காணப்பட்டாலும், அனுஷ்டானத்தில் மத சுதந்திரம் பறிக்கப்படுவதுடன், காங்கிரஸ் ஸ்தாபனம் சார்பாகவும் மத விரோத பிரசாரங்கள் செய்யப்படுகின்றன. ராஜீய விஷயத்தில்கூட ஹிந்துக்களின் கிரமமான உரிமைகளை பாதுகாப்பதற்கு தயங்கும் காங்கிரஸ் ஸ்தாபனம் ஹிந்துக்களின் நம்பிக்கையை இழந்துவருவது தெரியவரும். ஆகையால் ஹிந்துக்களின் நம்பிக்கையிழந்த காங்கிரஸ் ஸ்தாபனம் ராஜீய துறையில் சமரஸ பேச்சுகள் நடத்துவதும், மத விஷயங்களில் சட்டங்கள் செய்வதற்கு உடந்தையாக இருப்பதும் அக்ரமமாகும்.

இவ்விதமாக, காங்கிரஸின் போக்கை கண்டிப்பதற்காக அகில இந்திய கன்ஸர்வேடிவ் கக்ஷி ஒன்று அமைக்கப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதை மகாஜனங்களின் ஆலோசனைக்கு ஸமர்ப்பிக்கப்படுகிறது. இதில் எல்லா மதத்தினர்களும் அங்கத்தினர்களாக சேரலாம். பூர்ண மத சுதந்திரம், கலப்பு தொகுதிமுறை அல்லது ஜன ஸங்கியைக்கேற்றபடி வகுப்புவாரிபிரதிநிதித்வம் இவைகளையும் மற்ற முற்போக்கான திட்டங்களையும் கொள்கையாக கொண்டு ஒரு கக்ஷி ஆரம்பிக்கவேண்டியது அவச்யமாக இருக்கிறது.

இதை தேசமகாஜனங்களும் தலைவர்களும் ஆராய்ந்து காங்கிரஸின் முறையை எதிர்க்கும் இயக்கம் ஒன்றை ஆரம்பித்து, புரக்ஷியை விலக்கி, தேச நலத்தை பாதுகாத்து, அமைதியையும், பிரஜா உரிமையையும் மத சுதந்திரத்தையும் அளித்து, ராஜீய விடுதலைக்காக போராடுவதற்கு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

தவிர மத பாதுகாப்புவேண்டும். ஸனாதனிகளும் முஸ்லீம்களும் இதர மதத்தினர்களும் அபேதவாதிகளைப்போல காங்கிரஸில் சேர்ந்து தங்கள் கோரிக்கையை வெளியிடுவது ஸாத்யமில்லை. ஆகவே காலதாமதமின்றி புதிய கக்ஷியில் சேர்ந்து, இது முதலே வரப்போகும் எலக்ஷன்களில் காங்கிரஸை எதிர்த்துபோராடுவதற்கு தயாராகவேண்டும். மத சுதந்திரம் வேண்டுவோர் யாவரும் ராஜீய பிரச்னையில் ஒதுங்கியிருப்பதை விட்டு புதியகக்ஷிக்கு பூரண ஆதரவையும் அளிக்கும்படி கோருகிறோம்.

## திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம்.

### நம்மாழ்வார் மஹோத்ஸவக் கொண்டாட்டம்.

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கத்தின் ஆதரவில் அடியிற்கண்ட விபரப்படி நம்மாழ்வார் மஹோத்ஸவக்கொண்டாட்டமாக அரிய உபந்யாஸங்கள் நடைபெற்றன.

1—6—38 பிராட்டிவைபவம், ஸ்ரீ ஆர் கேசவய்யங்கார் 2வ 'திருவாசிரியம்', ஸ்ரீ.வி. 'நரஸிம்மாசாரியார் 3வ 'தமிழ்மறைமாட்சி' ஸ்ரீ. ஸ்ரீநிவாஸவேதாந்தாசாரியார், 4வ 'கண்ணிநுண் சிறுத்தாம்பு', ஆர். சந்தானகிருஷ்ணய்யங்கார்; 5வ 'ஸ்ரீ பாதுகாப்ரபாவம்', ஸ்ரீ பரவஸ்து ஸ்ரீநிவாஸாசாரியார், 6வ 'ஆழ்வாரும் தமிழும்', ஸ்ரீ. வி. கே. பார்த்தஸாரதி அய்யங்கார், 7வ 'ஆழ்வாரும் கம்பரும்', ஸ்ரீ. பி. ஆர். திருமலை அய்யங்கார், 8வ 'துன்பற்ற மதுரகவி', ஸ்ரீ. ஸ்ரீநிவாஸமூர்த்தி அய்யங்கார் 9வ 'திருவாய்மொழி' ஸ்ரீ. வி. நரஸிம்மாசாரியார், 10வ 'ஆழ்வார் நாயகீபாவம்' ஸ்ரீ. ஸ்ரீநிவாஸ வேதாந்தாசாரியார். 1, 3, 4, 8, 10வகளில் ராயப்பேட்டை ஸ்ரீநிவாஸப்பெருமாள் ஸந்நிதியிலும், 2, 5, 6, 7, 9வகளில் திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபிலமடத்தில் இரவு 6-30 மணி முதல் 8-30 மணி வரை மேற்கண்ட உபந்யாஸங்கள் நடைபெற்றன.

### சாந்தை திருமணம்.

இராயப்பேட்டை ஸ்ரீநிவாஸப்பெருமாள் ஸந்நிதியில் பிரதி புதன், வெள்ளிக்கிழமைகளில் சங்கக் காரியதரிசி ஸ்ரீ. ப. ரெ. திருமலை ஐயங்காரவர்களால் நடத்தப்பெற்றுவரும் ஸ்ரீ கம்பராமாயண உபந்யாஸங்களில் 17வ வெள்ளிக்கிழமை மாலை 6-30 மணி முதல் இரவு 9-20 மணி வரை 'சாந்தை திருமணம்' எனும் விஷயம் உபந்யஸிக்கப்பெற்றது. கலைக்கோட்டு மஹா முனிவரின் விருத்தாந்தத்தையும், ரோமபாத மஹா ராஜனின் குணங்களையும், அவரது புத்திரியான முகநயாள் (சாந்தை) யின் குணநிசயங்களையும், முனிவரை நகரத்துக்கு அழைத்துவந்த வைபவத்தையும் நாட்டில் பஞ்சமொழிந்து வளம் செழித்ததையும், தசரதரின் சீமந்த புத்திரியும் ரோமபாதனின் ஸ்வீகார புத்திரியுமான சாந்தையின் திருமணத்தையும் கம்ப ராமாயணப் பிரககாரம் அழகாக உபந்யஸித்தார். வழக்கம்போல் நடைபெற்று வருகின்றது.

ராம பக்தன்.

## தேவகோட்டை.

### ஸ்ரீவைஷ்ணவ ஸங்கம்.

10—6—38வ வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு தேவகோட்டை அட்வகேட் ஸ்ரீ யஸ். ஜகந்நாதய்யங்காரவர்கள் பங்களாவில் நடைபெற்ற ஒரு ஸதஸ்ஸில் 'ஸ்ரீ வைஷ்ணவ ஸங்கம், தேவகோட்டை' நிருவப்பெற்றது. வந்திருந்தோரனைவரும் அங்கத்தினராயினர். ஸ்ரீ ஆர். கேசவய்யங்கார், அட்வகேட் சென்னை, தலைமைவகித்தனர். தலைவர் தமது விரிவான முன்னுரையில் ஸ்ரீ வைஷ்ணவனின் கடமையையும், தத்வ, ஹித புருஷார்த்த முன் சிறப்பையும் ஆழ்வாரின் உயர்வையும், எம்பெருமானாரின் ஏற்றத்தையும், தேசிகனின் நோக்கத்தையும், வைஷ்ணவ தத்வத்தின் அடிப்படையையும் நன்கு விளக்கினார். நாஸ்திகரும் ஆஸ்திகராகும்படி நின்றது அவர் சொற்பொழிவு. ஸ்ரீ ப. ரெ. திருமலை ஐயங்கார் வந்தனோபசாரம் வழங்கினார். ஸபை இரவு 6½-மணிக்கு இனிது நிறைவெய்தியது.

உபநயனம்:- சென்னை பிரபல அட்வகேட்டும், திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கத்தலைவரும், 'வகுளமாலை' யின் பத்திராதிபரும், அகில இந்திய பிராம்மண ஸபை நிர்வாக மெம்பரும், பெரிய ஸனாதனியுமான ஸ்ரீ ஆர் கேசவய்யங்கார் குமாரர்கள் சிரஞ்சீவி ஸ்ரீரங்கராஜனுக்கும், பராசரனுக்கும் 9-6-38வ வியாழக்கிழமை ஸ்வாதி நக்ஷத்திரம் மிதுன லக்னத்தில் தேவகோட்டையில் ஸ்ரீ அஹோபில மடம் நாற்பதாவது பட்டத்து ஸ்ரீ அழகிய சிங்கர் பெருமாளுடன் எழுந்தருளி அநுக்ரஹித்த ஷெயார் தமையனார் வாதுய்யங்கார் கிரஹத்தில் சாஸ்திர விதிப்படி உபநயனம் செவ்வனே நடைபெற்றது. தனது 90 வயதுக்கு மேற்பட்ட ஜநக மாதாவின் கட்டளைப்படி இதனை அங்கு நடத்தியது மிகவும் போற்றத்தக்கது. அவரது பந்து மித்திரர் அநேகர் இதிற்கலந்து அநுபவித்தனர். 8வ ததியாராதனை, உதகசாந்தி மிக அற்புதமாய் நடந்தேறின. 11 தேதி இரவு 9மணி முதல் 11 மணி வரை வித்வான் ஸ்ரீ இஞ்சிமேடு வீரராகவாச்சார் ஸ்வாமியால் 'த்ரிவிக்ரம வைபவம்' எனும் விஷயம் பரக்க உபந்யஸிக்கப்பெற்றது. வந்திருந்தோர் மாணவர்களை ஆசீர்வதித்து அநுக்ரஹித்தனர்.

ஒரு நிருபர்.

## ஆழ்வார் திருநகரி கோயில்.

### போர்டில் சேர்ப்பது பற்றி ஆக்ஷேபம்.

இந்நகர் ஸ்ரீ ஆதிநாதர் ஆழ்வார் தேவஸ்தான கோபுரவாசல் மண்டபத்தில் பிரும்மாண்டமான பொதுக்கூட்டம் நடைபெற்றது ஸ்ரீரங்கம் பெரியகோயிலையும் மற்றும் ப்ரதான ஆலயங்களையும் மிக தீவ்ரமாக சென்னை ரிலிஜியஸ் எண்டோமெண்ட் போர்டார்கள் தங்களது நேர் மேல் பார்வைக்காக எடுத்துக்கொண்டு வருவதை ஆக்ஷேபித்தும் இவ்வூர் தேவஸ்தானத்துக்கு நோட்டீஸ் கொடுத்திருப்பதைக்கண்டித்தும் காஞ்சீபுரம் வஸ்து ஸ்ரீ ராஜகோபாலாசாரியாரால் மிக உருக்கமாக ஓர் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. திரளான ஸ்ரீவைஷ்ணவர்களும் மற்றும் பல பிரமுகர்களும் விசேஷமாய் விஜயம் செய்திருந்தனர். அக்கூட்டத்துக்குத்தலைமை வகித்த நெல்லை ஜில்லா சனாதன தர்ம மஹா சபை பின் மஹா சபை அங்கத்தினரான இந்நகர் ஸ்தானிகம் ஸ்ரீ ஏ டி ராமாநுஜ ஐயங்காரால் முடிவாக இந்நகர சர்க்காரில் சேர்த்துக்கொள்ள சம்மதம்தானா அல்லது எதிர்க்கிறீர்களா என்பதாக மஹாஜனங்களிடையே அபிப்பிராயம் கேட்டதற்கு ஒரே மனதாக யாவராலும் எதிர்ப்பதாகவே ஆக்ஷேபம் தெரிவிக்கப்பட்டது. இறுதியாக எதிர்ப்புத்தீர்மானத்தை பொது ஜனங்களின் கையொப்பத்துடன் போர்டுக்கும் ஆலய நிர்வாஹ மந்திரி கனம் டி. எஸ். எஸ். ராஜனுக்கும் அனுப்பி வைக்கத் தீர்மானிக்கப்படவே வந்தனோபசாரத்துடன் 7-30 மணிக்கு முடிவெய்தியது.

நமது நிருபர்.

(215237)

349

மார்சலியே



சுவாஸப்பைகளில் கபமாக மாறி Bronchitis என்ற வியாதியை உண்டுபண்ணுவது. அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து நிவர்த்திசெய்துகொள்ளுங்கள். எச்சமயத்திலும் வெகு துரிதமாக ஸ்வஸ்தப்படுத்துவது

அமிர்தாஞ்சனம்




## "கனம் பிரதம மந்திரி அவர்களுக்கு மகஜர்."

மதுரைஜில்லா மேல்மங்கலம் கிராமத்தினர் அடியிற்கண்ட கடிதத்தை பிரதம மந்திரிக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

சமீபகாலத்தில் சென்னை சட்டசபையில் (Hon) M. C. ராஜாவால் கொண்டுவரப்படும் தீண்டாதார்கள் ஆலயப்ரவேச அனுமதி மசோதாவின்மூலம் எங்களைப்போலுள்ள டிரஸ்டிகளுக்கு கோவில்களில் கீழ் ஜாதியினரை பிரவேசம்செய்ய அனுமதிக்கும்படி அதிகாரம் கொடுக்கப்பெற்றிருக்கிறது.

1. பிராசீன காலம் முதல்கொண்டு தேவாலயங்கள் அதற்குறிய ஆகமசாஸ்திரங்களின்படி கட்டுப்பட்டு தேவமூர்த்திகளில் ஸான்னித்யம் ஏற்படுத்தி பரிபாலிக்கப்பட்டு வருகின்றன. மேலும் ஆலயங்கள் பாரமார்த்திக விஷயமாக இருப்பதால் லௌகிக விஷயங்கள்போல் ஓட்டு எடுப்பது நியாயமில்லை.

2. எந்த சாஸ்திரங்கள் மூலம் ஷை கட்டடங்களை ஆலயங்களாகச் சொல்லுகிறோமோ (அவைகளுக்கு மாறாக) அதே ஆகம சாஸ்திரங்களில் கீழ் ஜாதியினர் பிரவேசித்தால் ஆலய ஸான்னித்யம் குன்றிவிடும் என்று சொல்லுகிற விஷயத்தில் மட்டும் நம்பிக்கை இல்லை என்று சொல்வது நியாயமாகமாட்டாது. கீழ் ஜாதியினரின் பிரவேசம் ஆலயங்களில் ஏற்பட்டால் அவைகள் ஆலயங்களும் ஆகமாட்டா.

3. மேலும், எங்களுக்கு கோவில் சம்பந்தமான ஆகம சாஸ்திரங்களில் பூர்ண நம்பிக்கை இருக்கிறது. நமது ஹிந்துக் கோவில்கள் அதில் ஹிந்துக்களால் (தீண்டாதார்கள் தவிர மற்ற ஹிந்துக்களால்) தரிசிக்கப்படுவதால் தேசத்திலுள்ள யாவரையும் கலந்து தீர்மானம் செய்யவேண்டிய இவ்விஷயங்களை ஒரு இடத்தில் சிலபேர் இருந்து (ஓட்டு) எடுத்து கீழ் ஜாதியினரை உள்ளே விடுவது என்று தீர்மானம் செய்வதும் நியாயமாக மாட்டாது.

4. மேலும் கீழ் ஜாதியினர் உள்ளே பிரவேசிப்பதற்கு இப்பக்கங்களில் எதிர்ப்பு அதிகமாக இருப்பதால் இந்த ஆலயப்ரவேச அனுமதி மசோதாவால் பெரிய கலஹங்கள் ஏற்படுவதற்குக் காரணமாயும், பொதுவாக தேச முன்னேற்றத்திற்கும் கெடுதல் ஏற்படக் காரணமாகிறது.

5. ஆகையால் எவ்விதத்திலும் இந்த மசோதாவிற்கு எதிர்ப்பு அதிகமாக இருக்கிறதென்பதைத் தங்களுக்குத் தாழ்மையுடன் தெரிவிப்பதுடன் ஷை மசோதாவை அமுலுக்குக் கொண்டுவாராமல் தடுக்கவேண்டிய முயற்சியையும் தாங்கள் எடுத்துக்கொள்ளவேண்டுமென்பதை நாங்கள் வணக்கமாகத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ஜடாதரேஸ்வரக் குருக்கள், சொக்கநாதர், வீரபத்திரர், மாயாபாண்டீஸ்வரர் ஷை கோவில்கள் டிரஸ்டி.

ஜ. விஸ்வநாதக் குருக்கள் (மாயாபாண்டீஸ்வரர்கோவில்).

R. ராமஸாமி அய்யங்கார் (வீத்திருந்த பெருமாள் கோவில் டிரஸ்டி).

நாணு ரெங்கஸாமி அய்யர் (ஸ்ரீ பள்ளிகொண்ட பெருமாள் கோவில் டிரஸ்டி) மேல்மங்கலம்).

பூசாரி பொன்னுச்சாமி பிள்ளை (பட்டாளம்மன், முத்தையா கோவில் டிரஸ்டி).

தருமலிங்கம் பூசாரி (அய்யனார் கோவில் டிரஸ்டி).

ரெ. சன்னாசி பூசாரி (அய்யனார் கோவில்.)

ராமலிங்கம் (பொன்ன சங்கரன் ஸ்வாமி கோவில் டிரஸ்டி.)

செ. குப்புசாமி பண்டாரம் (அம்மாபட்டி பிள்ளையார் கோவில் டிரஸ்டி.)

## அரியக்குடியில் அரிய உத்ஸவம்.

பாண்டிய நாட்டில் தென்திருப்பதி என விளங்குவது காரைக்குடிக்குச்சமீபமாகவுள்ள அரியக்குடியில் சமீபத்தில் ஸ்ரீநிவாசப்பெருமாளுக்கு ப்ரம்மோத்ஸவம் நன்கு நடந்தது. 11௨ சனிக்கிழமை அங்கு தற்போது மேலண்டை துவாரஸி மடத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பரமஹம் ஸேத்யாதி ஸ்ரீ ஆண்டவன் (ஆக்கூர்) அச்சாலகத்தில் இரவு 8மணி முதல் 9 30 மணி வரை காரைக்குடி சகோதர்களில் இளையவரான அய்யர் அதிரமணீயமான வீணைக்கச்சேரி நடத்தினார்கள். அது தேவகானம் என்பதை அன்றுதான் அனைவரும் நன்கு அறிந்தார்கள். இறுதியில் அங்கு வந்திருந்த திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கக் காரியதரிசி ஆழ்வார் மகிமையைம்பற்றி ஒரு மணி நேரம் உபந்யாஸித்தார். வேதபாராயணம் ஏககோஷ்டியாயிருந்து பகவத் கைங்கர்யம் செய்தால் இன்னும் நலமாயிருக்குமென்பது ஸாதுக்களின் அபிப்பிராயம் ஆண்டவன் அருளுவன்.

விசேஷ நிருபர்.

## ஸ்ரீநம்மாழ்வார் திருஞான முத்திரை கைங்கர்யம்.

### ஸ்ரீதேசிகவரதாசாரியாரின் விசேஷசிரத்தை.

(நமது விசேஷ நிருபர்.)

ஆழ்வார் திருநகரி ஜூன் 16௨

இந்நகர் வைசாக மஹோத்ஸவம் இம்மாத ஆரம்பத்திலிருந்து துவஜாரோகணமாய் மிக விமர்சையாய் நடைபெற்று முடிவெய்தியது. காரப்பங்காடு உ. வே. வித்வான் தேசிக வரதாசாரியாரின் பெருமுயற்சியால் பட்டணத்திலுள்ள பல தர்மிஷ்டர்களின் உதவியின் பேரில் சுவாமி நம்மாழ்வாருக்கு ரூ. 20000 பெறுமான வைரமிழைத்த திருஞான முத்திரை திருக்கை கைங்கர்யம் பூர்த்தி செய்யப்பட்டு உத்ஸவத்துக்கு முன் தினம் சமர்ப்பிக்கப்பட்டது. அன்று விசேஷ ததீயாராதன வைபவங்களும் விமர்சையாய் நடைபெற்றன. ஸ்ரீ பராங்குச பக்தராய் விளங்கும் ஸ்ரீ வைஷ்ணவ நியாய வேதாந்த வித்வான் தேசிகவரதாசாரியாரின் பக்தி சிரத்தை மிகவும் பாராட்டத்தக்கதாம்.

மூகபஞ்சசதியின் இரண்டாம் பாகம்.
"கடாக்ஷ சதகம்"
Mr. G. V. கணேசய்யர், B. A., B. L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷக் குறிப்புகளுடன் கூடியது.
தபால் செலவு வேறு] [விலை அணா 0—8—0

கூரத்தாழ்வான் அருளிச்செய்த
ஸ்ரீ ஸ்தவம்.
மூலம் நாகரத்திலும்தமிழிலும்
சிரோமணி ஸ்ரீநிவாஸராகவாசாரியரால்
எழுதிய உரையுடன்
விலை அணா 0—4—0

அல்லயன்ஸ் கம்பெனி பிரசுரங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. திருப்புகழ் பாராயண திருமுறை | 1 | 4 | 0 |
| 2. நால்வர் சரித்திரம் | 0 | 12 | 0 |
| 3. ,, காலிகோ ராப்பர் | 0 | 10 | 0 |
| 4. பாரதசாரம் | 1 | 2 | 0 |
| 5. ஸ்ரீ ராமாயண வினவிடை. | 1 | 8 | 0 |
| 6. பஞ்சரத்னம். | 0 | 12 | 0 |
| 7. ஷண்முக விஷயம், | 0 | 12 | 0 |
| 8. ஸ்ரீபாஸஷுமுக விஷயம். | 0 | 8 | 0 |
| 9. ருக்மிணி | 0 | 8 | 0 |
| 10. தேசிங்குராஜன் | 0 | 10 | 0 |
| 11. ராஜாதேசிங்கு | 0 | 5 | 0 |

மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—
ஸ்ரீ ஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட்,
டவுன்ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

351

அந்யதர்மம்

4 ௩ 26

23

17

30-6-1938

215238

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2-JUL 1938
MADRAS

215238
சென்னை-600 [illegible]

Registered No. M. 2913

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)

குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

புஸ்தகம் 23 | கும்பகோணம் கலி5040 பகுதான்ய-ஹூ ஆனி-மீ 16உ 1938ஹூ ஜூன்-மீ 30உ | ஸஞ்சிகை 26

## ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0.

தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

## வாரக்குறிப்புகள்.

(ஸ்ரீ வத்ஸ வெ. ஸோ. சர்மா.)

ஆச்சர்யம் !! ஓர் ஹிந்து, மஹம்மதியனாகி நம்மதத்தை நிந்தித்து ப்ரசாரம் செய்தான். ஸீராகஞ்ச் என்ற இடத்தே. உடனே ஆங்குள்ள அதிகாரி 144-வது சட்டத்தை உபயோகித்து அதைத் தடுத்தாராம். இதற்குமுன் இம்மாதிரி செய்தி கேட்டிருக்காததால் ஆச்சரியம் !!

அரியஸதீ ! அலஹாபாத்துக் கருகே ஓர் உத்தம யுவதி, அசட்டு வைத்யன் உன்பதி இறப்பான் என்றுகூறியதைக்கேட்டு 2-மணி கீதாபாராயணம் செய்துவிட்டு சிறு குழந்தையை ஆலிங்கனம் செய்து தொட்டிலில் விட்டு துப்பாக்கியால் சுட்டுக்கொண்டு மாண்டாள். இதைக்கண்டு புருஷர் இறந்தார். ஸதீசட்டமில்லாவிடில் சிதையில் விழுந்திருப்பாள் ! அல்லவா? ஆயினு மிருப்ரேதமுமொன்றாய் தஹிக்கப்பட்டது.

ஏழை கண்ணீர் பெருகுகிறது ! திருவாங்கூர் நேஷனல் பாங்க்முடிய அன்று சென்னை ஏழைகளும் தனிகரும் விட்ட கண்ணீர் கொஞ்சமல்ல. அதன் தற்கால நிலை மதில்மேல் பூனை போலாம் ! பொது ஜனங்களிடம் கொடுத்தால் வாராதோ என அஞ்சிவட்டியைக் கருதாது பாங்கியில் போட்டால் அங்கும் இந்த கதி ! ஜனங்களிடமோ கடன் நிவாரண மசோதா ! அர்த்தம் அநர்த்தம் !

சுயபுத்தி வேண்டாமா? மைசூர் அரசாங்கம் ஸ்வமதத்தை விட்டவர்களுக்கு சொத்தில் பங்கில்லை என்ற விதியைமீறி சட்டம் செய்ய ப்ரிடிஷ் ராஜாங்கத்தை உதாஹரணமாகக் கூறுகிறது. தர்மாபிமானமுமில்லை ! ஸ்வபுத்தியுமில்லை ! என இது காட்டுகிறது !

கர்ண கடூரம் ! ஓர் விஷயம் அநதிகாரிகளால் பலமுறை கையாளப்படின் அது அருவருக்கத்தக்கதாகிறது. அதேபோல் ஸத்யாக்ரஹம் உண்ணாவிரத மிவைகளைக்கேட்கும்போது ரஸிகர் செவி பொறுக்கமுடியாத துன்பத்தை அடையும் ! ஹிந்தி ஒழிய பட்டிணி ! காசி கோவிலில் 150 ஏழைக்குதினம் அன்னம் போடாவிடில் பட்டிணி; கசு என்ற இடத்தே அரசன் வளக்கும் புலிகளைச்சுடாவிடில் பட்டிணி ! போதுமா ?

அபூர்த்த பரம்பரை ! சென்னை நகரில் மாலை 5½-முதல் 7½-வரை யிருந்து பாட்டுக்கச்சேரி அகில இந்திய ரேடியோவால் 10½-வரை நீட்டப்பட்டது. இடையிடையே உபன்யாஸம் முதலியனவும் நடக்கிறது ! கலை என்ற வியாஜத்தால் மாணவரும் பெண்களும் அகாலத்தில் இருட்டில் தனியே செல்ல இடமளிக்கிறது !!

என்ன புகழ் ! மகாகனம் சாஸ்திரியார் பெண்கள் முன்னேற்றமென இதை வானளாவ புகழ்கிறார். எள்ளளவேனும் பாதிவ்ரத்யாதி தர்மாபிமானமிருந்தால் இப்படி புகழ்வாரா ?

என்ன உத்தேசம் ! விவாஹத்திற்கு வரிவிதிக்கக் கருதுவோர் தனவருவாயை முக்யமாகக் கருதியதாக தோன்றவில்லை ! ஏதோ விஷமபுத்தியுடன் இதை ஆரம்பிப்பதாக தோற்றுகிறது !!

அநியாயம் ! மோடாரால் கொல்லப்பட்ட ஓர்பிராமணர் சரீரத்தை சென்னை அரசாங்கம் புதைத்துவிட்டது. அதன் சொந்தக்காரர் விஷயமுணர்ந்து உடலுக்கு ஸம்ஸ்காரம் செய்ய அதை கேட்க, புதைத்த பிணத்தைத் தரமாட்டோமென, நானும் வைதிகனே என்று பேசிய ராஜாஜி ராஜாங்கம் கூறிற்று ! வைத்ய பரீக்ஷை என்று எத்தனை நாளைக்குப் புறம் புதைத்ததை தோண்டுகிறார் ?

முன்னமே விட்டிருக்க வேண்டும் ! ராஷ்ட்ரபதி ! 51 காளைவண்டியில் ஊர்வலம் வந்தவர் ! தன்னூரில் தனக்கு எதிராக சிலரிருக்க நகர ஸபை அங்கத்தினர் பதவியை ராஜிநாமா செய்தார். தலைவர் பதவிக்கு வந்தவர் வேறெந்த சிறிய வேலையையும் ஏற்கலாகாது !!

புத்தக சீர்திருத்தம் வேண்டும் !! வருஷத்தில் பாடம் நடப்பது 50 பக்கம். மிகுதி 150 பக்கம். அடுத்த வகுப்பிற்கும் பயனில்லை ! அப்படியிருக்க அதிக விலைகொடுத்து வாங்கும்படி செய்வது அநீதி ! மற்றும் பல திருத்தம் செய்யவேண்டும் ! கல்வி மந்திரி வீணே சுற்றுகிறார்.

அறியாமை ? அலஹாபாத் கலாசாலையில் ஓர் மாணவன் மற்றவன்மீது சாக்கை எறிந்தான். அது ஓர் பெண்மீதுவிழ அவள் அப்புருஷனைத் தீண்டி செவியில் ஓங்கி அறைந்தாள். அதிகாரி அப்பையனை சிக்ஷித்தார் ! அநீதி !

மூகபஞ்சசதியின் முதல் பாகம்.

[illegible]

Mr. G. V. கணேசய்யர், B A., B.L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.

100 பக்கங்களுக்குமேல் கொண்டது.

தபால் சிலவு வேறு] [விலை அணா 0—8—0

ஆர்யதர்மம் சந்தாதார்களுக்கு விலை அணா 6.

மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—
ஸ்ரீ ஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட்
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்,

தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
(மூன்றாம் பதிப்பு)

பிராம்மணர்களின்கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், "வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறு காண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராம்மண குடும்பங்களிலும்இருக்கவேண்டியதவசியம்.

விலை ரூ. 1—8—0 வி. பி. பிரத்யேகம்.

கிடைக்குமிடம் :—
பப்ளிஷர்.
தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
கீழவிடையல், திருச்சிரா.

முக்கிய கவனிப்பு.

(3-வருஷத்திற்கு உத்திரவாதமுள்ளது.)

அசல் தங்க நகைகளைப்போன்ற "கன்னூரால் ப்ளேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்கவும்.

தயாரிப்பவர்:— N. கன்னுசாமி பத்தர், பெரியதெரு, கும்பகோணம்

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:—T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

# அஹிம்ஸையில் சில சந்தேகங்கள்.

(டி. ராமஸ்வாமி அய்யங்கார் மதுரை.)

ஓர் அடங்காப்பிடாரி பையனை தான் ரூல் கழியினால் அடித்ததைப்பற்றி காந்திஜீ தன்னுடைய சுயசரித்திரத்தில் மிகவும் வருத்தப்படுகிறார். அந்த சமயத்தில் மிருகத்தனத்தைக் காட்டினதாகவும், ஆன்மசக்தியை உபயோகப்படுத்த வில்லையென்றும் அழுகிறார். ஆன்மசக்தி என்பதினால் காந்திஜி எதை எண்ணுகிறார் என்றாவது, அல்லது ஆன்ம சக்தியை எவ்விதம் காட்டியிருக்கவேண்டுமென்பதைப்பற்றியாவது, அவர் ஒன்றும் விளக்கிக் கூறவில்லை. ஒருவேளை உண்ணாவிரதத்தை சுட்டிக்காட்டியிருந்தால், மற்றொரு கேள்வி உடனே உதிக்கிறது. உபவாசத்தைப்பற்றி காந்தி அவர்களின் அபிப்பிராயம் யாதெனில், எவ்விடத்தில் உபாத்தியாயருக்கும் மாணாக்கனுக்கும் உண்மை அன்பு இல்லையோ அவ்விடத்தில் உபவாசத்தினால் யாதொரு பயனும் சித்திக்காது. மேலும் தீமையே விளையும். இப்பொழுது, கீழ்கூறப்படும் சந்தர்ப்பத்தில் ஓர் உபாத்தியாயர் எப்படி நடந்துகொள்ளவேண்டியது என்பதைப் பற்றி காந்திஜீ அவர்களிடமும், அவர் கக்ஷியைச் சார்ந்தவர்களிடமும், யோசனை கோரப்படுகிறது. வகுப்பில் ஓர் துஷ்டப் பையன் இருக்கிறான். உபாத்தியாயரின் உபதேசங்களை மதிக்கிறதில்லை. உபாத்தியாயரிடம் அன்பு, மரியாதை ஒன்றும் காட்டுவதில்லை. அவரை சாத்தியமான வழிகளில் துன்பப்படுத்துகிறான். காந்திஜீயின் கொள்கையை மேற்கொண்டால், பிரம்பையெடுத்து பையனை அடிக்கக்கூடாது. அடித்தால் அஹிம்ஸைக்கு விரோதமாக நடந்துகொண்டதாகும். உபாத்தியாயரின் உபவாசம் உபயோகப்படாது. ஏனெனில் இருவரிடையிலும் அன்பும் மரியாதையும் கிடையாது. இப்பொழுது உபாத்தியாயரின் கடமை என்ன? கடமையைச்செய்ய என்னசெய்யவேண்டும்?

ஒருநாள் காந்திஜீ, ஆபிரிக்காவில், தன்னுடைய ஓர் அறையை, தன்னுடைய ஏஜெண்ட் ஓர் விபசாரியோடு கூடியிருப்பதற்கு உபயோகப்படுத்தியதை, அறிந்தார். அவர் ஏஜெண்டை கண்டித்தபொழுது காந்திஜீயை எதிர்த்தான். வீட்டைவிட்டு அப்புறப்படுத்த முடியாது என்று தெரிந்தவுடன், காந்திஜீ போலீஸ் அதிகாரியை வரவழைத்தார். போலீஸ் உதவியை வேண்டினது, அஹிம்ஸைக்கு முரணாகும். காந்தி அவர்களும் இதை மறுக்கமுடியாது. கழியினால், துஷ்டப் பையனை அடித்ததற்கு வருத்தப்பட்ட காந்திஜீ, போலீஸ் உதவியை நாடினதைப் பற்றி சிறிதுகூட கிலேசம் அடையவில்லை. காந்திஜீயின் நடத்தை அஹிம்ஸைக்கு ஒத்ததாயிருந்ததா? இல்லாவிடில், அச்சந்தர்ப்பத்தில் எப்படி நடந்துகொண்டிருக்கவேண்டும்?

பள்ளிப் பையனாக இருக்கும்போது, தேகப் பயிற்சிக்கும் கல்விக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்று காந்திஜீ அபிப்பிராயம் கொண்டிருந்தார். ஆனால் இப்பொழுது, தன் பூர்வ அபிப்பிராயத்தை மாற்றிக்கொண்டு, தேகப்பயிற்சி அவசியம் மாணாக்கர்களுக்கு வேண்டும் என்று வற்புறுத்துகிறார். அதாவது அவருடைய தற்சமய அனுபவமுதிர்ந்த புத்தி, அவருடைய பால்ய, அனுபவமற்ற புத்தியோடு, மாறுபடுகிறது, இம்மாதிரி சிறு விஷயங்களிலேயே அபிப்பிராயங்கள், அனுபவம் அடைய மாறுகின்றன. மத விஷயங்களில் காந்திஜீ இப்பொழுது கொண்டிருக்கும் கொள்கைகளை மாற்றமாட்டார் என்பதற்கு யார் உத்திரவாதம் செய்ய முடியும்? காந்திஜீ, தன்னுடைய கொள்கைகள் பூர்ணத்வம் பெறாவிடினும், தற்சமயத்திற்கு பூரணக் கொள்கைகளாக பாவிக்கலாம் என்கிறார். அதாவது மதவிஷயங்களிலும், பாமார்த்திக துறையிலும் பரீக்ஷைகள் செய்து வருகிறார். தன்னுடைய மனச்சாக்ஷி எச்சமயமும் தவறாதது என்று அதற்கு அதிக பிராதான்யம், கொடுத்து வருகிறார். உலகத்திலுள்ள ஒவ்வொருவரும் தம் தம் மனச்சாக்ஷியிட்ட கட்டளைப்படி நடப்பதென்றிருந்தால், ஒரு க்ஷணத்திலேயே உலகம் அழிந்துவிடும். ஒருவன் உலக விஷயங்களில் எவ்வளவுதூரம் அறிந்தவனாகவோ, அறியாதவனாகவோ, காணப்படுகிறானோ, அவ்வளவுதூரம் அவனுடைய மனத்தோற்றம், மேன்மையோ கீழ்மையோ, அடைந்திருக்கும். ஆபிரிக்கா தேசத்திலுள்ள கானிபல் ஜாதியான் நரமாம்ஸம் உண்ணும்போது, தன்னுடைய மனச்சாக்ஷிக்கு ஒத்து நடப்பதாக எண்ணுகிறான். பூனை எலியைக்கொன்று தின்றாலும் தன் மனச்சாக்ஷி பிரகாரமே, தான் நடப்பதாக நினைக்கிறது. ஆபிரிக்காவில் ஒப்பந்தக் கூலிகளின்மீது மூன்று பவுன் வரிபோட்டது. ஆங்கிலேயர்களின் மனச்சான்றுக்கு கொடுமையாகத் தோன்றவில்லை. நமது புராதன பால்ய விவாஹம் சீர்திருத்தகாரர்களின் கண்களுக்கு மிருகத்தனமாக தோன்றுகிறது. அவர்களுடைய உள்தோற்றம், அந்த வழக்கம் கொடியது என்று கூறுகிறது. காரியங்களை சமாளிக்க முடியாத நிர்பந்த சமயத்தில் தங்களுடைய குற்றத்தை சீர்திருத்தக்காரர்கள் அறிய நேரிடலாம். முக்கியமாக காந்தியை இப்பொழுது கேட்பது யாதெனில், அவர் நம்முடைய தர்ம சாஸ்திரங்களை தீவிர ஆராய்ச்சி செய்திருக்கிறாரா? அப்படிச் செய்து அவைகளில் கூறப்படும் ஸதாசாரங்களை புறக்கணிக்கப்போதுமான முகாந்திரம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா? நான் காந்தி அவர்களின் பல நூல்களை படித்திருக்கிறேன். ஒன்றிலாவது சாஸ்திர சம்பந்தமான விவாதம் கிடையாது: அவைகளில் அவருடைய முடிவுகளும், தீர்மானங்களுமே காணப்படுகின்றன. அவைகளுக்கு ஆதாரம் அவருடைய சுயபுத்தியே. சுயபுத்தி ஆளைப்பொருத்து காலத்தைப் பொருத்து மாறுதல் அடையும். சுயபுத்தி நெடுந்தூரம் செல்லாது.

உதாரணமாக தீண்டாதவர்கள் படும்கஷ்டங்களின் காரணத்தை ஹிந்து மதத்தின் மேல் சுமத்துகிறார். உண்மையிலேயே தீண்டாதவர்களின் தற்சமய நிலைமை பரிதாபம் உண்டாக்கக் கூடியதே. ஆனால் அதற்கு பொறுப்பாளியார், எது? சாஸ்திரமா, வறுமையா, அல்லது குறிப்பிட்ட அறிவிலார் இழைத்த கொடுமைகளா? சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கும் தீண்டாமையை, தீண்டாதவர்களின் சௌகர்யத்தோடு கடைபிடிக்கலாம். காந்தி அவர்களிடம் எனக்கு இருக்கும் அன்பை வெளிக்காட்ட நான் விரும்பினால், அவருடைய புத்திரனுக்கோ அல்லது பேரனுக்கோ என்னுடைய புத்திரியை விவாஹம் செய்தா காட்டவேண்டும்? அவசியமானால் நான் பட்டினி கிடந்து காந்திஜீக்கு அன்னம் அளித்தால், ஒருவரும் அன்பில்லாதவன் என்று என்னைக் கூறமாட்டார்கள். சாஸ்திரங்கள் காந்திஜீக்கு அன்னம் அளிப்பதை நிச்சயமாக தடுக்கவில்லை. சாஸ்த்திரத்திற்கு எதிரான கொள்கைகளை ருசுப்படுத்தி ஸ்தாபிக்கிறவரையிலும் சாஸ்திரப் பிரகாரமே நடக்கவேண்டும். சாஸ்திரங்கள் தடுக்கின்ற பிறஜாதி விவாஹங்களை காந்தி அவர்கள் நடத்துவதால், மனித சமூகத்தை நிச்சயமாக உயர்வு அடையச் செய்வாரா? வைத்திய சாஸ்த்திரங்களும் பிறஜாதி விவாஹங்களை கண்டனம் செய்கின்றன. முந்தின சக்ரவர்த்தி கோரின விவாஹத்தை அனுமதிக்க முடியாதென்று கூறுவதற்கு இதையும் பிரிட்டிஷார்கள் ஓர் காரணமாக சொல்லவில்லையா? ராஜவம்ஸ ரத்தத்தை பரிசுத்தமற்ற விவாஹங்களினால் கெடுக்கக் கூடாது என்பதே மறுத்தவர்களின் அபிப்பிராயம்.

காசியிலுள்ள ஆலயத்தில் பாம்புகளும், எலிகளும் விக்ரஹத்திற்கு அருகாமையில் குடியேறியிருந்தால், ஆலயத்தைச் சுற்றி அசுத்தங்கள் நிறைந்திருந்தால், அவைகளுக்கெல்லாம் சாஸ்திரங்கள்தானா பொறுப்பாளிகள்? (தொடரும்


## மதரூஸ் லாஜர்னல் அச்சுக்கூடம் பிரசுரங்கள்.

| | | | |
|---|---|---|---|
| From his masters Lips | 1 | 0 | 0 |
| Hindu Ideal | 3 | 0 | 0 |
| வால்மீகி ராமாயணம் 7 காண்டம் (தேவநாகரலிபியில்) | ரூ. | அ. | ப. |
| க்ளேஸ்பேப்பர் | 5 | 0 | 0 |
| நிக்பேப்பர் | 4 | 0 | 0 |

R. S. சர்மா பிரசுரங்கள்

| | | | |
|---|---|---|---|
| ஆதித்யஹ்ருதயம் | 0 | 2 | 6 |
| கும்பேச்வர சாரங்கபாணி } ஸ்தோத்ரம் | 0 | 1 | 0 |
| நவக்ரஹஸ்தோத்ரம் | 0 | 4 | 0 |
| ஸாவித்ரீ ஸ்தோத்ரம் | 0 | 3 | 0 |
| ஹரிசந்த்ரோபாக்யானம் | 1 | 4 | 0 |
| ஸ்கந்த ஸ்தோத்ரம் | 0 | 2 | 0 |

Mr. T. R. கணபதிராமய்யர் பிரசுரங்கள்.

| | | | |
|---|---|---|---|
| பாகவதம் காலிகோபயிண்டு | 2 | 0 | 0 |
| ராப்பர் | 1 | 8 | 0 |
| " இங்கிலீஷ் | 2 | 0 | 0 |
| 7, 8, 9 ஸ்கந்தங்களில் தமிழில் | 0 | 8 | 0 |

ப்ரும்மஸ்ரீ குகதாஸ் S. V. நடராஜய்யர் பிரசுரங்கள்.

| | | | |
|---|---|---|---|
| அத்யாத்மயோகம் or ஆத்மபயிற்சி ராப்பர் | 2 | 8 | 0 |
| காலிகோ | 3 | 0 | 0 |
| சுப்ரமண்ய ப்ரஸன்ன மாலாமந்த்ரம் | 0 | 2 | 0 |

Books by Mr. S. Aiyadurai Iyer

| | Rs. | A. | P. |
|---|---|---|---|
| Adwaida Siddhantham | 0 | 8 | 0 |
| Ramayana as on illustration Yoga Sastra | 0 | 8 | 0 |
| Bharatham and Bagavatham in the light of Yoga Sastra | 0 | 4 | 0 |
| போதமத போதினி | 0 | 4 | 0 |

### ஸ்ரீ நஞ்ஜீயர் அருளிச்செய்த ஸ்ரீஸூக்தபாஷ்யம்.

ஸ்ரீலக்ஷ்மீஸஹஸ்ரநாமம், லக்ஷ்மீ அஷ்டோத்ரம், திருக்கோட்டியூர் ஸ்ரீ உ-வே ஸௌம்யநாராயணாசார்ய ஸ்வாமியின் முகவுரை, புதுக்கோட்டை A. ஸ்ரீநிவாஸராகவன் M. A. அவர்களின் ஆங்கிலமொழி பெயர்ப்புடன் கூடிய சதுச்லோகி, ஸ்ரீ குணரத்நகோசம், ஸ்ரீஸ்துதி முதலியன அடங்கியது விலை. ரூ. 1 8 0

புதுக்கோட்டை
A. ஸ்ரீநிவாஸராகவய்யங்கார் பிரசுரங்கள்.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ சூக்தபாஷ்யம். | 1 | 8 | 0 |
| பதினொரு சில்லரை ரஹஸ்யங்கள் ஸாரஸாரம் முதலியன | 1 | 8 | 0 |

கிடைக்குமிடம்:—ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங், ஒர்க்ஸ், லிமிடெட், கும்பகோணம்.




# "பஞ்சாக்ஷரத்தின் பெருமை."

(டி. வி. தர்மராஜ கனபாடிகள். வேதபாடசாலை. திருக்கோகர்ணம்.)

புண்ணிய பூமியென்று புலவரால் புகழப்பட்ட ஆரிய கண்டம் தக்ஷிணபாகத்திலுள்ளவராயும், சதுர்த்தசவித்தைக் குட்பட்டவர்களாயுமுள்ள சாம்பவர்கள் சச்சிதானந்தஸ்வரூபராயும், வேத முடிவில் நடிப்பவராயும், சத்வகுணமுடைய வைதிக சைவர்களுடைய ஹிருதய கமலத்தில் வீற்றிருப்பவராயும், அநுபவத்தாலன்றி அளவைகளால் அறியப்படாதவராயும், சிவம், சாந்தம், ஏகம், அத்வைதம், அம்பரம், தத்துவம், துரீயம் ஸ்வயம்பிரகாசம் என்கிற அனந்த திருப்பெயர்களையுடையவராயும், வேதமாதாவான காயத்திரியினிடையிலுள்ள "பர்க்க" சப்தவாச்சியராயும், சகள நிஷ்களமுடையவராயும், பக்தர்கள் நிரதிசயானந்தமாயுள்ள வீடு பெற, பிரமதகணங்கள் சூழ்ந்த திருக்கைலாயகிரியில் மால், அயன், வணங்கியேற்ற உமா சகிதராயும், ஹரிப்பிரும்மாதிகளால் ஜயிக்கத்தகாத திருபுராணுதிகளை மந்தஹாஸத்தால் தஹித்து, பிரும்மன் முதலிய பசுக்களுக்குப் பதியாயும் சிவோபாஸனையிற் சிறந்த திருமாலுக் காழிதந்தவராயுமுள்ள சாக்ஷாத் சிவபெருமானது திருவடிகளை யடைவதற்குறிய விபூதி, உருத்திராக்ஷம், பஞ்சாக்ஷரம், முதலிய சாதனங்களை யறியாது புறச்சமயத்தார் புன்மதி கேட்டழிவதைக் கருதி, மேற்கூறிய சாதனங்களிலொன்றாகிய "பஞ்சாக்ஷரத்தின் பெருமையைக் கிரமமாக வகுத்து அவர்களுக் கறிவிக்கவெண்ணி ஷை நூலைப் வேதாதிப் பிரமாணத்துடன் வரையலாயிற்று. இந்நூலைச் சாம்பவராயுள்ள ஒவ்வொருவரும் இகழாது உள்ளக் கிளர்ச்சியோடு ஏற்றுக் கொள்ளும்படி வினயத்துடன் வினவுகின்றேன்.]

ஐயா! வேதம் நான்கு. அதற்கு ருக்கு, யஜுஸ், ஸாமம், அதர்வணம், என்று பெயர். அதில் அதர்வண வேதம் தவிர மற்ற மூன்று வேதங்களும் ஆரியக்குழாங்களால் அத்தியயனம் செய்யப்படுகின்றது. ஆதலாற்றான் அமரசிம்மமென்னும் நிகண்டுக்காரர்:-"ஸ்திரியாமிருக்ஸாம யஜுஷீ, இதி வேதாஸ்த்ரயஸ்த்ரயீ என்று கூறியிருக்கிறார். தவிர வேதத்திற்கு "த்ரய:" "த்ரயீ" யென்கிற பெயரிருந்தாலும், "த்ரயீ" என்கிற பதத்திற்கு மூன்று என்று பொருள் படுதலாலும், அஃது ருக்கு யஜுஸ், ஸாமம், என்னும் மூன்று வேதங்களைக்குறித்ததேயாகும். இதனால் வேதம் மூன்றென்றான்றோர் கொள்கை யென்பது ஸ்பஷ்டமாயிற்று.

மேற்கூறிய மூன்று வேதங்களில் நடுநாயகமாயுள்ள யஜுர் வேதம் வேதவ்யாசரால் ஏழு காண்டங்களாகப் பிரிக்கப்பட்டன. அந்த ஏழு காண்டங்களுக்குள் மத்யஸ்தானமான நான்காவது காண்டத்தில், யெமதப்பன் சங்கரன் ஒருவனுக்கே பரத்வங் கற்பிக்கப்பெறப்பட்ட "ஸ்ரீருத்திரம்" என்னும் பிரச்னத்தில் "நமஸ்ஸோமாய" என்று ஓர் அனுவாகமுளது. அதில் கோடி சூர்யன் ஏககாலத் துதித்தார்ப் போலும், ஆதிசேஷன் சிரஸில் ஜ்வலிக்கும் மணி போலும், கடலாடையுடுத்த இக்காசினியின் கண்ணுள்ளதே ஜோராசிகளைக்கடைந்தெடுத்துருட்டி வைத்தார்போலும், அதி ஜாஜ்வல்யமானதாய் பிரகாசிக்காநின்ற "சிவபஞ்சாக்ஷரீ" என்னுமைந்தெழுத்து உட்புகுந்திருக்கிறது. அந்த ருத்திராத்யாயமுற்றும் பசுபதியைத் துதிப்பதற்காகவே சங்கற்பித்துக்கொண்டு வெளிவந்தமையால் அதற்கு அளாவிலா புகழ் இயற்கையாயமைந்து விட்டது. அதிலும் சாக்ஷாத்காரப்பொருளைவசப்படுத்திடும்சக்தி பெற்றபஞ்சாக்ஷரமும் கூடவமைந்திடுமாகில் அதன் மஹிமையை எவரால் தான் சொல்லமுடியும்? அஃது எண்ணிறந்த சிறப்புரைத்தானதாலன்றோ ஆரிய மதத்தவர்கள் யாவரும் இடைவிடாதோதி வருகிறார்கள். சிவபெருமானை அபிஷேகாதிகளாலர்ச்சிக்கும் பொழுது ருத்ராத் யாயமொன்றேயன்றோ முக்யமாய்ப்பயன் படுகின்றது ஷை ருத்ராத்யாயத்தை நூற்றெட்டுத் தடவை ஜபித்து சிவபிரானுக்கு மஹாபிஷேகம் செய்து வைத்தால் 'அநாவிருஷ்டி' முதலிய துர்பிக்ஷங்கள் ஒழிந்து போமென்பது ஸர்வஜனப் பிரஸித்தமன்றோ? ருத்திரப்பிரச்னத்திற்கு இவ்வளவு மகிமை வரக்காரணம் பஞ்சாக்ஷரம், சிவனுமோச்சாரணம் இதுகளின் பெருமையேயாம்.

நண்பர்களே! சற்று கவனியுங்கள்!! விசேஷ சிறப்புப்பெற்ற பஞ்சாக்ஷரத்தின் மகத்துவத்தால் உருத்திராத்யாயமும், உருத்திராத்யாயத்தின் மகிமையால் நான்காவது காண்டமும், நான்காவது காண்டத்தின் பெருமையால் இதற்கு மேலிருக்கும் ஐந்து ஆறு ஏழு இம்மூன்று காண்டங்களும், இதற்குக்கீழிருக்கும் மூன்று இரண்டு ஒன்று இம் மூன்று காண்டங்களும், ஆக ஏழு காண்டமடங்கிய யஜுர் வேதமும், யஜுர் வேதத்தின் மகிமையால் இதற்கிரு பக்கங்களிலுமுள்ள ருக்கு, ஸாமமும் இம்மூன்று வேதங்களின் பெருமையால் உபநிஷத்துக்களும், வேதாந்தங்களும் ஸ்மிருதி, புராண இதிகாஸங்களும் பரிசுத்தமாயிற்று. நண்பர்களே! பாருங்கள்! நம்மவர்களெல்லோரும் வேதங்களையும், வேதாங்கங்களையும், ஸ்மிருதி புராணாதிகளையும், முக்யப் பிரமாணமாக வெடுத்துக்கொள்ள ஹேது இருபத்திநான்கெழுத்தடங்கிய காயத்திரியும், பஞ்சாக்ஷரமுமேயன்றி வேறொன்றுமன்று. ஐயா! ஐந்தக்ஷரத்தின் சேர்க்கையால் வேத முற்றும் பரிசுத்தமாகுங்கால் அதனையோர் முறை பக்தியுடனோதுவோன் எவ்வளவு சுத்தனாகவேண்டும். இவ்வைந்தெழுத்தை ஜபித்தோர் சித்திமுக்திகளைப் பெறுவதென்ன வதிசயம்? முன் அகஸ்த்திய முனிவர் ஐந்தெழுத்தின் வலுவால் அலைகடலை ஆசமனம் செய்ததாய்ப் பாரதம் கூறுகின்றது. பஞ்சாக்ஷரத்தைப் புகழாத சுருதி புராணங்களும் உண்டோ? விசுவாமித்திரர் திரிசங்குவுக்காக பிரத்யேகப் பிரபஞ்ச ஸிருஷ்டி செய்ததும் பஞ்சாக்ஷரத்தின் பெருமையே தான். ஸனகாதி முனிவர்களுக்குத் தவப்பொருளாய் அமைந்ததும் பஞ்சாக்ஷரியே.

இஃதன்றி மகாப் பிரளயத்தால் ஸ்தாவர ஜங்கமங்களும், இந்திராதி தேவர்களும், பிரும்ம விஷ்ணுக்களும், அசுரர்களும், நாசமடைந்தபோது நித்யராயுள்ள சிவபிரானும், அவரது ஹிருதய கமலத்தில் பஞ்சாக்ஷரி என்னும் திவ்ய மந்திரமும் அதில் வேத சாத்திரங்களும் அடங்கி இருந்தது. இப்படி வெகுகாலம் சென்றபிறகு மீண்டும் உலகத்தைப் படைக்கவேண்டுமென்று கருதி தக்ஷிணத்தில் நாரணன் சிவபிரானது வலது பாகத்திலும், ஐந்துமுகப் பிரும்மன் இடது பாகத்திலும் தோன்றினார்கள். இதற்குப் பிரமாணம்:— (இலிங்கபுராணம் பூர்வபாகம் (38)வது அத்தியாயம் விஷ்ணு சிருஷ்டிப் படலம், விஷ்ணு பிரமனை நோக்கிக் கூறிய (3)வது சுலோகம்.)

இதன்பொருள்:—ஓ பிரும்மதேவனே! நான் மகான்மாவான சங்கரனது வலது பாகத்திலிருந்துண்டானேன். நீவிர் மகாதேவரது இடதுபாகத்தில் ஜனித்தீர்; ஷை (4)வது சுலோகம்:—

இதன்பொருள்:— மகரிஷிகள் எந்தனைப் பார்த்து பிரதானன், பிரகிருதி, அவ்யக்தன் பிறப்பற்றவன் என்றும், உம்மைப் புருடனென்றும் சொல்வார்கள் ஷை (5)வது சுலோகம்:—

இ—ள்:—இப்படிக்கு மகரிஷிகள் தேவாதிதேவராயும், ஸமஸ்த்த ஜகத்திற்கு மீசனும் நாசமற்றவராயுமுள்ள பரமசிவனை நம் இருவருக்கும் காரணராகச் சொல்வார்கள் என்று வெளிப்பட்ட வாக்யத்தாலும், யஜுர்வேதம் தைத்திரீயாருணசாகை (8)வது பிரச்னம் (12)வது அனுவாகம்:

இதன் பொருள்:— தேவர்களுக்குள் ஸர்வாதிகாராயும், ஸர்வக்ஞராயும், ருத்திர சப்தவாச்யருமான எந்த பரமசிவன் பிரபஞ்ச ஸிருஷ்டிக்கு முன்பாக பிரதமத்தியில ஜனித்த பஞ்சமுகப்பிரும்மனைப் பார்த்தனரோ, அந்த மஹாதேவன் நம்மவர்களை மங்களமான மதியோடு சேர்க்கக்கடவர், என்றும் பெறப்பட்ட மகாவாக்யத்தால், பிரும்ம விஷ்ணுக்குள் ஆதியில் சிவபெருமானால் ஸிருஷ்டிக்கப்பட்டவரென்பது, கரதலாமலகம். இங்ஙனம் இவ்விஷயத்தை விரித்தால் பெருகுமென்றஞ்சி சுருக்கி விடுத்தனன். பிறகு ஐந்துமுகப்பிரும்மன் ஸகாயமன்றி பிரபஞ்சத்தை ஸிருஷ்டிக்க முடியாதென்றெண்ணி பிரதமத்தில் சுத்தராமயுள்ள (10) பிரும்மனை மனதால் உற்பத்தி செய்ததும் தவிர, அம்மானஸ புத்திரர்களுக்கு பிரபஞ்ச ஸிருஷ்டி செய்ய வல்லமை வருவதற்காக சங்கரனிடம் சென்று ஏ, மகாதேவா! என் புத்திரர்களுக்கு ஸிருஷ்டி செய்யும் தன்மையை அளித்தருள வேண்டுமென்று பிரார்திக்க, உடனே சங்கரன் ஐந்து முகங்களால் ஐந்தக்ஷரத்தை அயனுக்குபதேசித்தார். சிவபிரானால் உபதேசிக்கப்பட்ட ஐந்தெழுத்துக்களைப் பிரும்மன் ஐந்து முகங்களால் மிகுந்த வணக்கத்துடன் பெற்றுக்கொண்டு வாச்ய, வாசக, பேதத்தால் ஈசனை அறிந்தார். (வாச்ய வாசகமாவது யாதெனில்:— பஞ்சாக்ஷரத்தால் பூஜிக்கப்படுகிற சிவபெருமான் வாச்யரும், வேதாதிகளால் புகழப்பட்ட பஞ்சாக்ஷரீ என்னும் மகாமந்திரம்வாசகமென்றும் சொல்லப்படும்.) பிறகு அம்மகா மந்திரத்தை தனது மானஸபுத்ரர்களுக்கு ஓதி வைத்தார். அவ்வுபதேசத்தை அவர்கள் அன்புடன் பெற்றுக்கொண்டு, பராபரனை பரமசிவன் ஸ்வரூபத்தை நன்குணரக் கருதி, தவம்புரிய விருப்பத்தோடு பொன்னங்கிரிக்கொடிமுடிக் கருகாமையிலுள்ள முஞ்சபர்வதம் சென்று காய்கிழங்குகளையும் சருகுகளையும் ஜலத்தையும், காற்றையும், புசித்துப் பதினாயிரம் வருடமும், ஆகாரமின்றி அனேக கோடி தேவ வருடமும் ஈசன் திருவருள் பெறத்தவத்தில் இருந்து விட்டார்கள். அத்தகைய உக்கிர தவத்தையும், அவர்கள் பக்தியையும் பார்த்துப் பரம காருணிகரான சிவபிரான் பிரத்யக்ஷ காக்ஷி தந்து, ஷை பஞ்சாக்ஷரத்திற்கு ரிஷி, சந்தஸ், தேவதை, சக்தி, பீஜம் ஷடங்கநியாஸம், திக்பந்தனம், விநியோகம், முதலான ரஹஸ்யங்களை நன்கு தெரிவித்தார்.

சுபம்! சுபம்!! (பிரும்ம வித்யா)


## மூகபஞ்சசதியின் இரண்டாம் பாகம். "கடாக்ஷ சதகம்"

Mr. G. V. கணேசய்யர், B. A., B. L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷக் குறிப்புகளுடன் கூடியது.

தபால் செலவு வேறு] [விலை அணா 0—8—0

கிடைக்குமிடம்:— ஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட், டவுன்ஹைஸ்கூல் கும்பகோணம்



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.
பகுதான்ய-ஹு ஆனி-மீ 16உ

## காந்திஜீயின் உபதேசம் காதில் ஏறுமா?

இந்தியாவில் வகுப்புக் கலஹங்கள் தோன்றும் ஸமயங்களில் போலீஸ் படையின் உதவியன்றி பொது ஜனங்கள் ஏற்படுத்திய "ஸமாதானப்படை"யைக்கொண்டே அவைகளை ஸமாளிக்க வேண்டுமென்று காந்திஜீ வற்புறுத்திவருகிறார். இவ்விஷயத்தை அவர் அப்போது அதிகம் ப்ரஸ்தாபித்து அது விஷயமாக சில யோஜனைகளையும் திட்டங்களையும் வெளியிட்டிருக்கிறார் ஜனங்கள் ஏற்படுத்தப்போகிற ஸமாதானப் படைக்கு இருக்க வேண்டிய பல குணங்களில் மிகவும் முக்யமாக, கடவுள் நம்பிக்கையும், கடவுள் பக்தியும் அத்யாவச்யகமென்று அவர் பலமாக வற்புறுத்துகிறார்.

ராஜ்ய பிரசாரத்தில் அமர்ந்திருப்பவர்களிடையில், தெய்வ நம்பிக்கை, பாப, புண்ய உணர்ச்சி முதலிய பாலோக சிரேயஸ்கரமான அம்சங்கள் எங்கும் காணப்படுவது அபூர்வமாகும். இந்தியாவிலும் இது அநுபவத்தில் காணப்பட்டு வரும் விஷயமே. இப்படியிருந்தும் ராஜீயத்தலைவராகவும், சிறந்த வழிகாட்டியாயும் மதிக்கப்படும் காந்திஜீ, கடவுள் நம்பிக்கையையும், பக்தியையும் அடிப்படையாகக்கொண்டே ராஜ்ய வேலைகளைச்செய்ய வேண்டுமென்று வற்புறுத்துவது சில ராஜீய வாதிகளிடையில் மிகுந்த கலக்கத்தை உண்டாக்கக்கூடியதாகும். காந்திஜீ கூறுவதாவது:—

> "ஸமாதானப்படையில் சேரும் ஸ்திரீ புருஷர்களுக்கு அஹிம்ஸையில் பூர்ண நம்பிக்கை இருக்க வேண்டும். கடவுள் இருக்கிறாரென்ற நிச்சயமான நம்பிக்கையில்லாமல் இது ஸாத்யமில்லை. கடவுள் சக்தி, கிருபையின்றி யாதும் செய்யமுடியாது. கடவுள் இருக்கிறாரென்ற நிச்சய ஞானத்தினால் தான் எந்த தைர்யமும் ஏற்படக்கூடும். கடவுள் எங்கும் இருக்கிறாரென்ற அறிவு உண்மையாக ஏற்படும் பக்ஷத்தில் எதிராளிகள் விஷயத்தில் கூட நமக்கு ஓர் மதிப்பும் ஏற்படும்"

இவ்வாறு கடவுள் நம்பிக்கையைப்பற்றி ராஜீய வாதிகளிடம் காந்திஜீ வற்புறுத்தியது போல் இதற்கு முன் எவரும் வற்புறுத்தியதில்லை யெனலாம். ஆயினும் இந்த உபதேசம் இந்திய ராஜ்ய வாதிகளிடம் எவ்வளவுதூரம் பலிக்குமென்று நாம் அறிய முடியவில்லை. கடவுளையும் அவரது கட்டளையையும், பிரத்யக்ஷத்தாலோ அநுமானத்திலோ ஒருவன் அறிவது ஸாத்யமில்லை. எந்த மதமும் அதை ஒப்பவில்லை. கடவுள் இருப்பை வேதம் அல்லது சப்த பிரமாணத்தாலும், ஆப்தவாக்யங்களாலுமே எல்லா மதங்களும் நிச்சயிக்கவேண்டியவைகளாயிருக்கின்றன. காந்திஜீயும் கடவுளை நேரில் கண்டு பேசியவரன்று. எந்த மதத்தைச்சேர்ந்தாயினும் ஒரு சாஸ்திர பிரமாணத்தைக்கொண்டே அவர் இந்த நம்பிக்கையை அடைந்திருக்க வேண்டும். ஆகவே கடவுள் நம்பிக்கையென்ற பேச்சுக்கிளம்பும் போது சாஸ்திர நம்பிக்கையும் அதை விட்டுப்பிரிக்க முடியாத நிலைமையில் ஏற்பட்டுத்தீரவேண்டும். இதை காந்திஜீ ஒப்புக்கொள்ளாமல் முடியாது. ஆயினும் கடவுளைக்காட்டும் சாஸ்திரத்தைப்பற்றிய நம்பிக்கை விஷயத்தில் மட்டும் காந்தியின் போக்கு விபரீதமாயிருப்பது யாவருமறிந்ததே. இந்த ஸங்கடம் வேண்டாமென்பதற்காகவே ஸ்ரீமான் நேரு கடவுள், மதம், சாஸ்திரம் ஆகியவற்றில் தமக்கு நம்பிக்கை கிடையாதென்று ஒரு வழியாகக் கூறி விட்டார். அவருடைய ஜீவிய சரித்திரம் பலவிடங்களில் தாம் கடவுள், மத நம்பிக்கையற்றவரென்று பெருமையாகப்பேசிக் கொள்ளுகிறார். ஆகவே இவ்விஷயத்தில் காந்திஜீயின் மேற்கண்ட உபதேசம் நேருஜீயிடமே பலிக்கவில்லை யென்று ஏற்படுகிறதல்லவா? கடவுள் நம்பிக்கையோ, அதன் மூலமான அஹிம்ஸைக் கொள்கையோ இல்லாதவர் உண்மையான ராஜீய வேலைத் தொண்டராக இருக்க முடியாதென்றால் நேருஜீயே இதற்கு முதல் உதாஹரணமாகிவிடுவார். காந்திஜீயின் கட்டளையை வேதவாக்காக மதித்து நடக்கும்படி நமக்கு உபதேசம் செய்யப்பட்ட நேருஜீ போன்றவர்கள் காந்திஜீயின் பேச்சுக்குத்தாங்கள் எவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறார்களென்று நாம் திருப்பிகேட்பதில் பிசகென்ன? நாம் அறிந்த வரையில் நேருஜீயைப்போல் தெய்வ மத நம்பிக்கையற்றவர்கள் காங்கிரஸில் ஏராளமாக இருக்கிறார்கள். தமிழ்தேசத்தில் கடவுளையும், மதத்தையும் தூற்றித்திரியும் காங்கிரஸ் தொண்டர்கள் பலரை நாம் பார்த்திருக்கிறோம். காந்திஜீயின் கொள்கைப்படி இவர்கள் உண்மையான அஹிம்ஸாவாதி காங்கிரஸ்காரர்களல்லவென்பது நிச்சயமாகிறது.

தற்போது உலகமெங்குமே கடவுள் நம்பிக்கையால் தான் அமைதியும், க்ஷேமமும் ஜன ஸமூஹத்தில் ஏற்படுமென்ற நம்பிக்கை ஏற்பட ஆரம்பித்திருக்கிறது. முக்யமாக ஐரோப்பா முதலிய மேற்றிசைகளிலேயே இந்த அபிப்பிராயம் வலுத்து வருகிறதைப் பார்க்கிறோம். இந்தியாவிலும் இயற்கையாக ஏற்பட்டிருந்த கடவுள் நம்பிக்கை மறைய ஆரம்பித்திருப்பதாலேயே பல கஷ்டங்கள் உத்பத்தியாகி அமைதி குறைந்து வருகிறது. இச்சமயத்தில் காந்திஜீயின் உபதேசம் வரவேற்கத்தக்கதே. ராஜ்ய வேலையில் ஈடுபட்டுள்ள காங்கிரஸ் வாதிகள் தங்களுடைய உத்தமத் தலைவரின் சிறந்த உபதேசத்திற்குச் செவிசாய்த்து நடப்பார்களானால் தேசத்தில் சாந்தியும் க்ஷேமமும் அதிகரித்து நாளடைவில் நன்மை ஏற்படும். நாஸ்திக புத்தியும் மறையும்.

---

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.
குண்டூர்.
Guntur.

---

## குறிப்புகள்.

### பாங்க் நெருக்கடியும் ஸர்க்கார் கொள்கையும்.

சென்னை மாகாணத்தில் ஒரு பெரிய பாங்க் தாத்காலிகமாக மூடப்பட்டிருப்பதை அநுஸரித்து எங்கும் பெரிய கவலை யேற்பட்டிருக்கிறது. இதனால் அவநம்பிக்கை கொண்ட பொது ஜனங்களால் இதர பாங்கிகளுக்கும் நெருக்கடி உண்டுபண்ணப்படலாமென்ற பயம் ஏற்பட்டதால் சென்னை பிரதம மந்திரிமுதலானவர்கள் முன்வந்து ஜனங்கள் தைர்யமாயும், ஒற்றுமையுடனும் இருக்கும்படி வேண்டி அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். திருவாங்கூர் பாங்கிக்கு ஏற்பட்ட சிரமமும் அதன் காரணமும் எத்தகையதென்பது நாம் அறியாவிடினும், பொதுவாகச் சிறிதுகாலமாகவே ஜனங்கள் மனதில்பொருளாதார விஷயமாகப் பெரிய அச்சம் ஏற்பட்டிருப்பதை இச்சமயம் ஞாபகப்படுத்திக்கொள்ளவேணும். தங்களுடைய பணமோ, நிலமோ ஸாவதானமாகக் காப்பாற்றப்பட வழியில்லையென்ற கவலை எங்கும் விசேஷமாக ஏற்பட்டிருக்கிறது. ஆயினும் பிரகிருதம் பாங்கி விஷயத்தில் பொறுப்பற்றவர்களும், விஷமிகளும், கட்டிவிடும் பொய்க்கதைகளை விவேகிகள் நம்பாதிருப்பதுடன், பொது ஜனங்களுக்கும் தைர்யம் சொல்லி ஸமாதானம் செய்யக் கடமைப்பட்டிருப்பது நிச்சயம். இந்த முக்ய அம்சத்தை கனம் பிரதம மந்திரி ஞாபகம் மூட்டியது விசேஷமே. ஜனங்களும் ஆதாரமற்ற கிலியடைந்து பாங்கிகளுக்கு வீண் சிரமம் கொடுத்து தங்களைத்தாங்களே கெடுத்துக் கொள்ளாமலிருப்பது மிக்க அவசியமானது.

இது நிற்க, இச்சமயத்தில் காங்கிரஸ் கவர்ன்மெண்டார் தங்களுடைய பொருளாதாரக் கொள்கையை வெளியிட்டு ஜனங்களுக்கு தைர்யமூட்டவேண்டியதும் அவசியமென்று நினைக்கிறோம். பொதுவாகப் பண விஷயமான காங்கிரஸ் கொள்கையாலும், கடன் தவணை ஒத்திவைப்புப் பேச்சு, கடன் நிவாரணச் சட்டம் ஆகியவைகளாலும் ஸொத்துக்காரர்களுக்கு பயம் உண்டாகியிருக்கிறது. பாங்கிகளும் இதனால் மிகுந்த கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கின்றன. கனம் மந்திரி கிரி, குடந்தையில் பேசுகையில் வட்டிக் குறைவு மட்டும் செய்ததுபோதாதென்றும், அசல் தொகையையே தள்ளிக்கொடுக்கச் சட்டம் செய்ய காங்கிரஸ் ஸர்க்கார் உத்ஸாஹமுள்ளதாயிருப்பதாயும் பேசியிருக்கிறார். அபேதவாதமும் காங்கிரஸில் வேலைசெய்து வருகிறது. நிலங்களைப்பற்றிய வரையிலும் காங்கிரஸ்கொள்கை அபாயமானதாகவே இருக்கிறது. ஆகவே பணமுள்ளவர்கள் எந்த வழியிலும் தங்கள் பணத்திற்கு பந்தோபஸ்து இருக்காதென்று நினைப்பதில் ஆச்சர்யமில்லை. இப்போது ஏற்பட்டுள்ள பாங்கி நெருக்கடியைப்போல் இன்னும் பல கஷ்டங்கள் எதிர்காலத்தில் ஏற்படக்கூடும். இதற்கு தற்போதுள்ள காங்கிரஸ் நிர்வாஹத்தின் பொருளாதாரக் கொள்கையும் ஒரு காரணமென்று பலர் நினைக்கிறார்கள். ஆதலால் கவர்ன்மெண்டை நடத்துகிறவர்கள் தாத்காலிக பரிஹாரத்துடன் நின்றுவிடாமல் சாச்வதமாகவே ஜனங்களுக்கு ஓர் நம்பிக்கை ஏற்பட வழி செய்வது அவச்யமென்று நாம் நினைக்கிறோம்.

ஒரு நிருபர்.

---



### மத மாற்றத்திற்கு தூண்டுதல்.

மைஸூர் சட்ட ஸபையில் மிக ஆக்ஷேபகாமான மசோதா ஒன்று நிறைவேறிவிட்டது. இந்த மசோதாவைக்காங்கிரஸ்காரர்கள் கூட எதிர்த்தார்களென்றால் அதன் ஆபாஸமான போக்கை விவரிக்க வேண்டியதில்லை. கிறிஸ்தவ, மஹம்மதிய மதங்களில் புகுந்து மதம் மாறிய ஹிந்துவுக்கு அவனுடைய பூர்வ குடும்ப ஸொத்தில் பாத்யமுண்டென்பதே இந்த மசோதாவின் ஸங்கிரஹமாகும். நெடுநாளாக இந்த மசோதா அங்கு விவாதத்திலிருந்து வந்தது. ஹிந்து ஸமூஹத்தினர் இதை பலமாக ஆக்ஷேபித்து வந்தனர். ஆயினும் தற்போது அந்தகவர்மெண்டாரின் பிடிவாத புத்தியினால் இது நிறைவேறிவிட்டது. பாதிரிகளின் தூண்டுதலே இதற்குக் காரணமெனத் தெரிகிறது.

மதாந்திரப் பிரவேசத்தினால் பிரஷ்டர்களாகப்போனவர்கள் பூர்வ குடும்ப ஸொத்தில் பாத்யம் கொள்ள எவ்விதத்திலும் நியாயமில்லை.

ஹிந்துக்களுடைய தாயவிபாக முறைக்கும் இது ஏற்றதல்ல. பிண்டோதகதானாதி வைதிக கார்யங்களில் ஸம்பந்தப்படக்கூடிய தாயாதியே, குடும்ப ஸொத்திற்கு பாத்யஸ்தனாக நியமிக்கப்பட்டிருக்கிறான். இதிலும் வரிசைக் கிரமம் ஏற்பட்டிருக்கிறது. இப்படியிருக்க மதத்தைவிட்டு பிரஷ்டனாகப் போனவனுக்குக் கூட குடும்பஸொத்தில் பாகம் கொடுப்பது மிகுந்த அநீதியாகும். இந்தமாதிரி மைஸூர் ஸர்க்கார்செய்தது ஹிந்துமதத்தின் அஸ்திவாரத்தையே தாக்கக்கூடியதாயிருப்பதுடன் நமது மதத்தில் செய்த துணிவுகரமான பெரிய புரட்சியுமாகும். ஒரு ஹிந்து ராஜ்யம் இம்மாதிரி செய்தது மிக்க விபரீதச் செயலாகும்.

மேலும் இந்த மசோதாவானது மதமாற்றம் செய்துகொள்ளும் மூடர்களுக்கு ஓர் தூண்டுகோலாகவும் ஆகிறதென்பதை இந்த ஸமஸ்தானம் கவனிக்காதது ஆச்சர்யமே. இப்போது நம் தேசம் முழுவதும் ஹிந்துக்கள் மதமாற்றத்தினால் ஏற்படும் பெரும் தீங்கை பலமாக உணர்ந்து வருகிறார்கள். அதைத் தடுக்கவும் பெரு முயற்சி நடக்கிறது. சுத்தி, ஸங்கடனம் இயக்கம் தோன்றியதன் காரணமும் இந்த அரசாங்கம் அறிந்ததே. தாழ்ந்த வகுப்பார் மதம் மாற்றப்படாமல் காப்பாற்றவே தீண்டாமை விலக்கு ஆலயப் பிரவேசம், போன்ற பெரிய முயற்சிகள் நடக்கின்றன. இப்படியிருக்க மத மாற்றத்திற்கு அதிக நிர்ப்பந்தங்கள் ஏற்படுத்தி ஹிந்து ஸமூகத்தைப் பலப்படுத்தவேண்டிய ஸந்தர்ப்பத்தில், ஏற்கனவேயுள்ள நிர்ப்பந்தங்களையும் தளர்த்தி மதமாற்றத்தில் ஸௌகர்யம் செய்துகொடுப்பது, விவேகமாகுமா? இது ஹிந்து ஸமூஹத்தைப் பாழ்படுத்தும் கார்யமல்லவா? இனி இந்தச் சட்டத்தின் ஸௌகர்யத்தைக்கொண்டு அநேக சிறுவர்கள் மதம் மாற்றத் துணிவுகொண்டால் ஆச்சர்யப்பட இடமில்லை. இந்த மசோதாவுக்கு மஹாராஜா தமது அங்கீகாரத்தைக் கொடாமலிருப்பதே நியாயமாகும்.

---

### பேச்சு ஸ்வதந்திரம் எங்கே?

சென்னை மாகாணத்தில் ஹிந்தி எதிர்ப்பு பிரசார கோஷ்டியாரால் காங்கிரஸ் மந்திரிகளுக்கு அதிக உபத்ரவம் ஏற்பட்டு வருகிறது. அந்த கோஷ்டியார் தமது ராஜீய விரோதிகளென்று பிரதம மந்திரி கூறிய போதிலும் ராஜீய ஸம்பந்தமற்ற வேறு சிலரும் இதில் கலந்துகொண்டிருப்பதை மறைக்கமுடியாது. எதிர்ப்பு கோஷ்டியார் கட்டுப்பாடாகப் பொதுக் கூட்டங்களில் புகுந்து காங்கிரஸ்காரர்களைப் பேசவொட்டாமல் தடுத்தும், கூச்சலிட்டும், கல்லெறிந்தும், கருப்புக்கொடி வீசியும் குந்தகம் விளைவிப்பதாகக் காங்கிரஸ் தலைவர்கள் குறை கூறுகிறார்கள். சிலதினங்களுக்குமுன் கட்டாயஹிந்திக்குப் பொது ஜன ஆதரவு இருப்பதாகக்காட்டவும்மந்திரிகளிடம் நம்பிக்கை யிருப்பதாக வெளிப்படுத்தவும் காங்கிரஸ்காரர்கள் சென்னையில்பெரிய கூட்டமொன்று நடத்தினார்கள். கனம்பிரதம மந்திரிமுதலான அநேக பிரபலஸ்தர்கள் அதில் பேசினார்கள். ஆனால் அங்கும் எதிர்கக்ஷியார் கூட்டத்தில் புகுந்து தடை வேலைகளைச் செய்தார்கள். அக்கூட்டத்தில் தலைமைவஹித்த ஸ்ரீமான் முத்துரங்க முதலியாருக்கு இது ஸஹிக்கவில்லை. இது மிக்க அநீதியாகத் தோன்றியது. ஒருகக்ஷியாருடைய பேச்சு ஸ்வதந்திரத்தை இம்மாதிரி தடைசெய்வது அக்கிரமமென்று ஆத்திரப்பட்டார். அவர் அந்தக் கூட்டத்தில் முதலில்பேசுகையில் எதிர்கக்ஷியார்ஸஹிப்புத்தன்மை காட்டவேண்டுமென்றும் மற்றொரு கக்ஷியார் தங்கள் அபிப்பிராயத்தைப் பொது ஜனங்களிடையில் தாராளமாக எடுத்துச் சொல்லக்கூடிய பேச்சு ஸ்வதந்திரத்தை ஒருக்காலும் தடுக்கக் கூடாதென்றும் உபதேசம் செய்தார்.

இது முற்றிலும் நியாயமே. ஆனால் இந்த உபதேசத்தை தமிழ் நாட்டுத் தலைவரென்ற ஹோதாவில் தமது காங்கிரஸ் சிஷ்யர்களுக்கே அவர் முதலில் உபதேசிக்கவேண்டுமல்லவா? கூட்டங்களில் புகுந்து பிறருடைய பேச்சு ஸ்வதந்திரத்தைத் தடைசெய்யும் இழிவான வேலையில் காங்கிரஸ் வாலண்டியர்கள் கியாதிபெற்றவர்களென்பதை இந்தியாவில் அறியாதவர்களில்லை. இதற்குக் கணக்கற்ற உதாஹரணங்கள்ஸநாதநிகளிடமிருக்கின்றன. சென்ற வாரத்தில் கூட வட இந்தியாவில் ஓர் ஸநாதனக் கூட்டத்தில் காங்கிரஸ் காலிகள் சிலர் புகுந்து தூராக்ரஹம் செய்த செய்தியை காந்தி சிஷ்யரான ஸ்ரீமஹாதேவ தேசாயியே வருத்தத்துடன் குறிப்பிட்டிருக்கிறார். நாகபுரி ஹிந்துக்கள் கூட்டத்தில் காங்கிரஸ்காரர் செய்த அட்டூழியங்களும்,ஹிந்துக்கள் அதை பலமாகக் கண்டித்ததும்யாவரும் அறிந்ததே. காங்கிரஸ்காரர் பிறருடைய பேச்சு ஸ்வதந்திரத்தை பறிமுதல் செய்வதாக அங்கு புகார் செய்யப்படவில்லையா? தென்னிந்தியாவிலும் இதற்குப் பல உதாஹரணங்கள் இல்லையா? ஆகையால் ஸ்வதந்திரவாதிகளென்று வேஷம் போட்டு பிறருடைய ஸ்வதந்திரமனைத்தையும் அடக்கியாள முயற்சிக்கும் காங்கிரஸ் வாதிகள் பிறருக்கு உபதேசம் செய்ய வாயுண்டா?

---

### விவாஹ ரத்து மசோதா!

இந்தியா சட்டஸபையில் ஸ்ரீமான் தேசமுகர் என்பவர் ஹிந்து ஸ்திரீகள் விவாஹ ரத்துச் செய்துகொள்ளக்கூடிய மசோதாவொன்றைக் கொண்டுவரப்போவதாக அறிவித்திருக்கிறார். புருஷன் நபும்ஸகனாக இருந்தாலும், தீராத வியாதியுள்ளவனாயிருந்தாலும் அவனைத் தள்ளிவிட இந்த மசோதா அனுமதி கொடுக்கிறது. இந்த மசோதாவானது அடுத்த கூட்டத்தில் ஆஜர் செய்யப்படுமெனத் தெரிகிறது. ஏற்கனவே இந்தியா சட்டஸபையில் இத்தகைய மசோதா அடிக்கடி வந்து மரித்துப்போயிருக்கிறதாயினும், இப்போதுள்ள நிலைமையில் இந்த மசோதா நிறைவேறுவது ஸுலபமானதே. இந்தியா கவர்ன்மெண்டாரும் மத நடுநிலைமை வாக்குறுதியைக் காற்றுவாக்கில் விட்டு விட்டுச் சீர்திருத்தக் கூச்சலுக்கு ஆதரவு கொடுக்க முற்பட்டிருக்கிறார்கள். வியவஸ்தைகெட்ட ஸ்திரீகள் ஸங்கங்களும் தேசமுகருக்கும் ஸர்க்காருக்கும் பின்பலமாக நிற்கும். சாரதாச்சட்டத்திருத்தம் போல் மிஸ்ராக்போன்போன்ற வெள்ளைக்காரிகள் ஸர்க்காரை நிர்பந்தம் செய்வார்கள்.

ஆகவே இந்த மசோதாவின் நிலைமை எப்படியாகுமென்பது தெரிந்ததே. ஆயினும் நாம் ஆக்ஷேபத்தைத்தெரிவிக்காமல் பின் வாங்கி நிற்பதிற்கில்லை. இத்தகைய மசோதாக்களால் ஏற்படும் தீமைகளை நாம் பொது ஜனங்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டியது மிக அவச்யமாகும். தற்காலம், பிடிவாத புத்தி கொண்டதும் நீதிமார்க்கம் தவறியதுமான ஆட்சியில் நமது சொற்கள் கவனிக்கப் படாமல் நமக்கு கஷ்டங்கள் ஏற்படினும், பின்னால் ஒரு நல்லகாலத்தை நாம் எதிர்பார்க்கக்கூடாததல்ல. பழையசரித்திரம் இதில் நமக்கு வழி காட்டியாயுள்ளது.

விவாஹ ரத்து விஷயமாக நமது சாஸ்திரமும் நமது தேச பரம்பரை ஆசார வியவஸ்தையும் எத்தகையதென்பது நாம் அனைவரும் அறிந்ததே. இந்த விவாஹ ரத்துப் பேச்சானது தார்மிக இந்தியாவில் ஒருபோதும் இருந்ததில்லை. பல அநாகரீகங்கள்போல் இதுவும் மேற்றிசையிலிருந்து இங்கு இறக்குமதி செய்யப்பட்ட சரக்கேயாகும். ஐரோப்பா முதலிய விடங்களிலேயே விவாஹ ரத்தினால் பல கஷ்டங்கள் அதிகரித்துவிட்டது உணரப்பட்டு வருகிறது. அங்கும் விவாஹ ரத்தானது பலவித நியமங்களுக்கு உள்படுத்தப்பட்டிருக்கிறது. நினைத்த உடனேயே விவாஹ ரத்து செய்யமுடியாது. ஆனால் தேஷ்முக் மசோதாவோ இப்படியில்லை. விவாஹ ரத்துக்கு இந்த மசோதாவில் கூறப்பட்ட காரணங்களும் அக்கிரமமானவை. இது பெரிய ஆபத்திற்கிடமானது. இதை எங்கும் எதிர்த்துக் கிளர்ச்சி செய்வோமாக.

---

### மைசூரில் விதவா விவாஹச் சட்டம்.

மைசூர் சட்டஸபையில் ஹிந்து விதவைகளின் புனர் விவாஹத்தை ஆதரித்து அதற்கு ஸௌகர்யமுண்டாகக் கூடிய சட்டமொன்று நிறைவேற்றப்பட்டது.

கிறிஸ்தவாதி மதங்களுக்குப் போகும் ஹிந்துக்களுக்கு தங்கள் பூர்வஸொத்தில் ஸம்பந்த முண்டென்றும் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது.

---

### லண்டனில் நேரு.

பண்டித ஜவஹர்லால் நேரு லண்டனுக்கு வந்தபோது ரயில்வே பிளாட்பாரத்தில் பலமான உபசரிப்பு நடந்தது. எங்கும் தேசியக் கொடி பறந்ததாம்.

காமன்ஸ் ஸபையில் அவருக்கு ஓர் உபசாரம் நடத்திவைக்கப்பட்டது. பிரபலர் பலர் வந்தனர்.

---

ஸ்ரீ ஜனார்தந பிரிண்டிங் ஒர்க்ஸ்,
லிமிடெட், டவுன் ஹைஸ்கூல்
ரோடு, கும்பகோணம்.

எல்லாவிதமான அச்சு, பையிண்டிங், ரூலிங் முதலிய வேலைகளும் சீக்கிரமாகவும் நயமான சார்ஜிலும் செய்து கொடுக்கப்படும்.

தமிழ், இங்கிலீஷ், நாகர, கிரந்த, எல்லா அக்ஷரங்களிலும் புஸ்தகங்கள் அச்சுப் போடுவதில் விசேஷமாய்ப் பலராலும் ஆதரிக்கப்பெற்றது. வேண்டிய விவரங்களைத் /தெரிவிக்க ஸித்தமாய் இருக்கிறோம்.

மானேஜர்.

# வைதிக தர்ம ஸங்கம்.

## தபோவனம் — ஆச்ரமம், பணையூர்.

செங்கல்பட்டு ஜில்லா.

உலகத்தில் ஜனங்களிடத்தில் காணப்படும் துக்கம், வருமை, ரோகம் முதலியவைகளுக்கு மூலகாரணம் பாபமென்று நமது சாஸ்திரக்காரர்கள் நிச்சயமாகக் கூறியிருக்கிறார்கள். பாபம் குறைந்தாலொழிய, ஸுகத்தையோ, ஆரோக்யத்தையோ, தன ஸம்பத்தையோ, அடைய முடியாது. ஸமஷ்டியின் பாபத்தைத் தனிப்பட்ட நிலையில் ஒருவனே ஒழிக்கமுடியாது. உலக க்ஷேமத்தை மிகவும் கருதுகிற புத்திமான்கள், சாஸ்திரம் சொல்லுகிறபடிதான் பாபத்தை யொழித்து, புண்யத்தை வளர்த்து, க்ஷேமத்தை அடையக் கூடும். அதற்கு சாஸ்திரங்களில் கூறிய வழி தர்மானுஷ்டானம், தபஸ், இவைகள் தான். ஆதலால் மேற்கண்ட விதமாய், ஜகத்க்ஷேமார்த்தம், அதிகாரிகளான சிஷ்டர்கள் ஒன்றுகூடி, தர்மம், தபஸ், இவைகளில் ஈடுபட வஸதிகள் செய்து கொள்ளும்பொருட்டு வைதிக தர்ம ஸங்கத்தின் ஆதரவில் ஓர்தபோவனம் நிர்மாணம் செய்யப்படுகிறது. செங்கற்பட்டு ஜில்லாவில் 'பாலாற்றங்கரையோரத்திலுள்ள பணையூரென்ற' கிராமத்திற்குச் சமீபத்தில் மேற்படி தபோவனம் அமைக்கப்படுகிறது. இவ்விடத்தில் சிஷ்டர்களான ஸத்ப்ராம்மணர்கள் தங்கள் ஸ்வதர்மானுஷ்டானத்துடன் ஜகத்க்ஷேமார்த்தம் தபஸில் ஈடுபடுவார்கள். இந்த தபஸும் குறிப்பிட்ட சில மந்த்ர ஜபரூபமாகவும், வைதிக அக்னியில் தேவதைகளை உத்தேசித்து செய்யப்படும் த்ரவ்யத் யாக ரூபமான ஹோமகர்மாவாகவும் அமையும். இத்துடன் நிரந்தரம் ஏகாக்ர சித்தத்துடன் பகவந்நாம புரஸ்சரணமும் உபவாஸாதி வ்ரதங்களும், சாஸ்திர விதிப்படி அனுஷ்டிக்கப்படும். இத்தகைய தபஃகர்மாவில் ஈடுபடும் ஸத்ப்ராம்மணர்கள், ப்ரம்மசாரிகள் லௌகிக வ்யவஹாரத்தை ஒழித்து வைராக்யமுள்ள முதியோர்கள், இவர்கள் தங்கியிருந்து தங்கள் சரீரத்தை ரக்ஷித்துக்கொண்டு ஸுகமாக அதில் ஈடுபடத் தகுந்த வஸதிகள் இந்தத் தபோவனத்தில் செய்யவேண்டியதாகவிருக்கிறது. உதாரணமாக ஜபசாலை, ஹோமசாலை, பூஜாக்ருஹம், பாகசாலை, நாமஜபப்ருந்தாவனம், கோசாலை, ஸந்தர்ப்பணசாலை, இவைகள் தனித்தனியே அமைக்கப்பட வேண்டியதாக விருக்கிறது. ஸமூஹக்ஷேமத்திலும், வைதிக தர்ம அபிவிருத்தியிலும் ஆவலுள்ள ஆஸ்திகர்கள் ஷை கைங்கர்யத்திற்கு இயன்ற உதவியைப் பூர்ண மனதுடன் எங்களுக்குச்செய்து கொடுத்துப் பரம பாக்யத்தை அடையவேண்டும்.

ஆச்ரமம் :— 1. இந்ததபோவன பிரதேசத்திலேயே வைதிக தர்மப்ரசாரத்தின் நிமித்தம் 20 ப்ரம்மசாரிகளுக்கு ஒரு வருஷம் வித்யாப்யாஸம் செய்வித்து பிரசார காரியத்தில் ஈடுபடுத்த உத்தேசம்.

2. உபநயனமான 8 வயதிற்கு மேற்பட்ட அதிகாரிகளான ப்ரம்மசாரிகளுக்கு நியமாத்யயனம் வருகிற ச்ராவண பௌர்ணமி முதல் ஆரம்பிக்கப்பட்டு நடத்தி வரப்படும். இந்த இரண்டு விஷயங்களின் விவரம், தனித்தனி பத்திரிகைகளில் அச்சடிக்கப்பட்டு மஹாஜனங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆஸ்திகர்களனுப்பும் உத்தம சிஷ்யர்களு மேற்றுக்கொள்ளப்படுவர்.

ஆகலால், தபோவனம், ஆச்ரமம், இந்த இரண்டிற்கும் மிகுந்தபொருள் ஸங்கத்திற்குத் தேவையாயிருப்பதால், ஆஸ்திகர்கள் பூர்ண மனதுடன் சிறிதளவாயினும் உபகரித்து ஸத்ஸங்கல்பமுள்ள எங்களது ஸங்கற்பம் இடையூறின்றி நிறைவேறி பகவானது க்ருபையால், ஜகத்பரம க்ஷேமத்தை அடையும்படி செய்யக்கேட்டுக் கொள்ளுகிறோம்.

C. S. நாகேச்வர சர்மா, அட்வகேட்,
குலகர்ணி, தபோவன் பஞ்சாயத்து,
45, பவழக்காரத் தெரு, சென்னை.

# வைதிக தர்ம ஸங்கம்.

## அந்தரங்க கைங்கர்ய ஸபை.

குருகுல பிரம்மசாரி ஆசிரமம்.
பணையூர், செங்கல்பட்டு ஜில்லா.

ஸங்கத்தின் ஆதரவில் நடத்தப்படும் ஆசிரமங்களில் ரிக், யஜுஸ், ஸாம வேதங்கள் அத்தியயனம் செய்ய ஸௌகரியங்கள் செய்து வைக்கப்படும். ஒரு வேதத்தில் அத்தியயனத்திற்காக இருபத்து ஐந்து வித்யார்த்திகள் வரையில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். ஆசிரமத்தில் ஒரு ஆசார்யரும் ஐந்து உபதேஷ்டாக்களும் இருப்பார்கள். இவர்கள் தனித்தனி தங்களுக்கான கிருஹங்களில் ஸ்வதந்திரமாக வஸித்து வருவார்கள். ஆசாரம் வித்யை ஸம்பந்தமான எல்லாவியவகாரங்களும் ஆசிரம ஆசாரியர் நியமனப்படியே நடத்தப்படும். இதர லௌகிக வியவகாரங்கள் குலகர்ணி என்ற பட்டம் படைத்த நகர ஸங்கம் அதிகாரி ஒருவரால் கவனிக்கப்பட்டு வரும். உபதேஷ்டாக்கள் ஒவ்வொருவர் வசத்திலும் ஐந்து ஐந்து வித்யார்த்திகள் ஒப்புவிக்கப்படுவார்கள். அந்த ஐந்து வித்யார்த்திகளும் உபதேஷ்டாவின் கிருஹத்திலேயே அன்னபானுதிகள் கிரஹித்து அவருடைய மேல்பார்வையில் அவருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக பாவிக்கப்பட்டு கவனித்து வரப்படுவார்கள். ஆசிரம ஆசார்யர் சிரௌத கர்மானுஷ்டானம் செய்து வருபவராகஇருப்பார்கள். அவர்கள் எந்த கோத்திரத்தில் வந்தவர்களோ அந்த கோத்திரத்து ரிஷியின் பெயரால் ஆசிரமம் விளங்கிவரும். உபதேஷ்டாக்கள் ஐவரும் அவருடைய ஆதரவின் கீழ் ஒரு மனதுடன் கூடினவர்களாய் ஆசிரமத்தின் பாரத்தை வஹிக்கவேண்டியவர்களாவர்கள்.

### ஆசிரமத்தின் லக்ஷியம்.

(1) வித்யார்த்திகளுக்கு அங்க சாஸ்திரங்களுடன் அத்யயனம் பூர்த்திசெய்து கொடுத்து, பிரயோகம் கற்பித்து, சிஷ்டர்களான கிருஹஸ்தர்களுக்கு குலாசார்யர்களாக இருக்கக்கூடிய யோக்யதையை உண்டுபண்ணி வைத்தல்.

(2) குருகுல நியமப்படி பிரம்மசாரிகளுக்கு அத்யயனம் சாஸ்திரம் இவைகளில் வித்யாப்யாஸம் செய்து வைக்கும் வித்யா குருக்களாக ஆகி ஸ்வதந்திரமாக ஜீவிக்கும்படி செய்தல்.

(3) ஸமூஹத்தில் ஆதிகாரி தாரதம்யங்களுக்குத் தகுந்தபடி சிஷ்டாசாரத்திற்கு விரோதமில்லாமல் தர்மப்பிரசாரம் வித்யாப்பிரசாரம் செய்து வருவதுடன் லௌகிகவியவஹாரங்களை சாஸ்திர மரியாதைக்கு விரோதமில்லாத வழிகளில் ஸாதித்துக் கொடுக்கக்கூடிய தர்ம ரக்ஷக குருக்களாகி ஜீவிக்கச் செய்தல்.

### ஆசிரமத்தில் பிரம்மசாரிகள் சேர்க்கப்பட வேண்டிய நியமங்கள்.

(1) வைதிக தர்ம ஸங்கத்தில் அங்கத்தினர்களாக இருக்கும் கிருஹஸ்தர்களுடைய குமாரர்கள் வித்யார்த்திகளாக சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

(2) அவர்களுக்கு 8-வது வயதில் உபநயனம் ஆகியிருக்கவேண்டும்.

(3) வித்யார்த்திகள் பிரதி வருஷமும் சித்திரைமீ 1உ முதல் சிராவண பௌர்ணமி வரையில் சேர்க்கப்படுவார்கள்.

(4) பிரதம சிராவணத்திலிருந்தே அத்யயனம் ஆரம்பிக்கப்படும்.

(5) சேர்க்கப்படும் வித்யார்த்திகளுக்கு தமிழ்பாஷை சுத்தமாக எழுதவும் படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும்.

(6) அத்யயனத்திற்கு 7 வருஷமும் சாஸ்திரங்களுக்கு 5 வருஷமும், ஆக 12 வருஷங்கள் வித்யார்த்திகள் ஆசிரமத்திலேயே ஆசார்யருடன் இருக்கவேண்டும்.

(7) அத்யயன காலத்திலேயே அதற்கு விரோதமில்லாமல் காவ்யபாடம் நடத்தப்படும். மேல் 5 வருஷங்களில் அங்க சாஸ்திரங்கள், ஸ்வஸூத்ரம், பிரயோகம், அவசியமான லௌகிக ஞானம் முதலியன தற்பிக்கப்படும்.

(8) பிரம்மசாரிகளுக்கான ஆசாரம் அனுஷ்டானங்கள் முக்கியவாக சிக்ஷிக்கப்படும்.

(9) தினமும் அனுஷ்டான காலங்களில் தண்டம் முதலியன தரித்தலும், பகலில் பிக்ஷாடனமும் அவசியமாக அனுஷ்டிக்க வேண்டும்.

(10) வித்யார்த்தியின் 20வது வயதிற்குள் விவாஹம் செய்து கொள்ள அனுமதி கொடுக்கப்படமாட்டாது.

(11) அநேகமாய் வித்யார்த்திகள் அவர்கள் ஊருக்கு ஒரு காரணத்தைக் கொண்டும் அனுப்பப்படமாட்டார்கள். ஒரு வாரத்திற்கு மேற்படாமல் வருஷத்திற்கு இருமுறை மாதா பிதாக்கள் அவசியமானல் ஆசிரமத்தில் வந்திருந்து வித்யார்த்திகளை கவனித்துப் போகலாம்.

(12) பெற்றோர்கள் ஸங்கத்திற்கு வருஷம் 1க்கு தங்களுடையதாகவோ அல்லது வஸூல் செய்தோ 12 கலம் நெல் அல்லது ரூ. 24 வது சேர்ப்பிக்கவேண்டும்.

திருக்கழுக்குன்றம் யக்ஞேச்வர தீக்ஷிதர், பிரம்மா.

ஸ்ரீவத்ஸ ஸோம தேவ சர்மா, வக்தா.
செங்கல்பட்டு நகர ஸங்கம்.
பணையூர், பாலூர் போஸ்ட்,
செங்கல்பட்டு ஜில்லா.

## ஸநாதனிகளின் கூட்டத்தில்

### காலிகளின் அட்டஹாஸம்.

அக்ராஸனர் தாக்கப்பட்டார்.

அமால்நேர் என்னுமிடத்தில் ஸநாதனிகளின் மகாநாடு நடைபெற்றது. ஆசாரத் திருத்தக்காரர்களும், காங்கிரஸ் காரர்களும் மகாநாட்டுப் பந்தலில் அநுமதியில்லாமல் பிரவேசித்துவிட்டார்கள். அநுமதிச் சீட்டு ஸம்பந்தமாகத் தகராறு முற்றிக் கலகம் நடந்தது. பலாத்காரமாக நுழைந்தவர்கள் அக்ராஸநாதிபதியை பலமாகத் தாக்கினார்கள். ஸ்ரீமத் மகாதேவதேசாய் சென்றவார "ஹரிஜனி"'ல் இந்த ஸம்பவத்தைக் குறிப்பிட்டு அஹிம்ஸா தொண்டர்படை திரட்ட வேண்டுகிறார்.


வே. ஸோ. சர்மாவின் பிரசுரங்கள்.

| | | | |
|---|---|---|---|
| சங்கரோபதேசம். | 2 | 0 | 0 |
| பத்ம புராணம். | 0 | 12 | 0 |
| மார்கண்டேயபுராணம் | 0 | 6 | 0 |
| வாமந புராணம். | 0 | 6 | 0 |
| வைகுண்ட ஏகாதசி | 0 | 0 | 6 |
| ஸ்ரீ ஸ்துதிகுசமாஞ்சலி | 0 | 1 | 0 |
| ப்ரஹ்மவை வர்த்தபுராணம் | 0 | 12 | 0 |
| கூர்மபுராணம் | 0 | 6 | 0 |
| ப்ரஹ்ம புராணம் | 0 | 12 | 0 |

Copies can be had of:—
The Sri Janardana Printing Works, Ltd.,
Town High School Road, Kumbakonam.




# சென்னை மாகாண வியவசாயிகளின் கடன் நிவாரண ஆக்ட்.

(போர்ட் ஸெயிண்ட் ஜார்ஜ் கெஜட் பிரசுரம்.)

(23—6—38 தொடர்ச்சி.)

14. 3 (ii) பிரிவில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலும் 5-வது, 6-வது பிரிவுகளில் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, விபக்தமாகவோ அவிபக்தமாகவோவுள்ள யாதொரு ஹிந்து குடும்பத்திலே ஒரு குடும்பக் கடன் விஷயமாய் பொறுப்புள்ளவர்களில் சிலர் விவசாயிகளல்லாதவர்களாகவும் மற்றவர்கள் விவசாயிகளாகவும் இருக்கிறபட்சத்திலே, கடன்கார் இதற்கு விரோதமாக எந்தச் சட்டமாவது ஏற்பட்டிருக்கபோதிலும் பாதகமில்லாமலே,—

(a) விவசாயியல்லாதவர் அல்லது அல்லாதவர்கள்மேலும் குடும்பச் சொத்தில் அவர் அல்லது அவர்களுக்குள்ள பாகத்தின்மேலும், ஷை கடனில் வீதாசாரப்படி அவர் அல்லது அவர்களுக்குள்ள பாகம் சம்பந்தமாய் மாத்திரம் நடவடிக்கை நடத்த பாத்தியதையுள்ளவராவார்; மேலும்,

(b) விவசாயியாயிருப்பவர் அல்லது இருப்பவர்கள்மேலும் குடும்பச் சொத்தில் அவர் அல்லது அவர்களுக்குள்ள பகத்தின்மேலும் ஷை கடனில் வீதாசாரப்படி அவர் அல்லது அவர்களுக்குள்ள பாகம் சம்பந்தமாய் மாத்திரம் நடவடிக்கை நடத்த பாத்தியதையுள்ளவராவர்; அந்த பாகமானது இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளின் பிரகாரம் குறைக்கப்படவேண்டும்.

## III-ம் அத்தியாயம்.

### குத்தகைத் தொகை பாக்கிகள்.

15. (1) பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னபட்டணம் 1908ம்-ஸூ 1த்து ஆக்டின்படி யாதொரு நிலத்துக்குடையவர் அல்லது கீழ்க்குத்தகைதாரருக்காவது, மலையாளத்துப் பாயக்காரி ப்ரத்தியதையைக் குறித்த 1929ம்ஸூத்திய ஆக்டின்படி யாதொரு ஜன்மி அல்லது இடையிலுள்ளவருக்காவது ஒரு விவசாயியால் செலுத்தப்படத்தக்கதாயிருப்பதும், 1345ம் பசலி வருஷத்துக்கும் அதற்கு முந்திய பசலிகளுக்கும் சேர்துவந்திருப்பதும், இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் தேதியன்று செலுத்தப்படாமல் பாக்கியாயிருப்பதுமான குத்தகைத் தொகையானது குத்தகைத் தொகையாகவே சேரவேண்டியதாயிருந்தாலுஞ்சரி அதற்காக டிக்ரி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தாலுஞ்சரி, அப்படிப்பட்ட சகல குத்தகைத் தொகையும் கொடுத்துத் தீர்க்கப்பட்டிருப்பதாகக் கருதப்படும்.

ஆனால், குத்தகைத் தொகை செலுத்துவதற்குள்ளான (இந்தப் பிரிவில் பின்னால் 'பாயக்காரி' என்று குறிப்பிடப்படும்) நபர் யாதொரு கைப்பற்று நிலம் சம்பந்தமாக 1346-வது, 1347-வது பசலிகளுக்குச் சேர்ந்துவந்திருக்கும் சகல குத்தகைத் தொகை பாக்கிகளையும் 1939-ம்ஸூ ஸெப்டம்பர்-மீ 30உ யன்றைக்காவது அதற்கு முன்பாவது செலுத்தாவிட்டால், 1345-ம் பசலிக்கும் அதற்கு முந்திய பசலிகளுக்கும் சம்பந்தப்பட்டவைகளாய், இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் தேதியன்று அதே கைப்பற்று நிலம் விஷயமாகச் செலுத்தப்படாமலிருக்கும் குத்தகைத் தொகை பாக்கிகள் 1346-வது, 1347-வது பசலிகளுக்குச் சேரவேண்டிய குத்தகைத் தொகையில் ரயத்தினாலாகிலும் பாயக்காரியினாலாகிலும் செலுத்தப்படும் பாகமானது அந்த இரண்டு பசலிகளுக்குச் சேர வேண்டிய குத்தகைத் தொகையில் என்ன சங்கியாபரிமாணமுள்ளதாயிருக்கிறதோ அதே சங்கியபரிமாணப்படித்தான் கொடுத்துத் தீர்க்கப்பட்டிருப்பதாகக் கருதப்படும்:

மேலும், யாதொரு பாயக்காரி ஷை கைப்பற்று நிலம் சம்பந்தமாய் 1347-ம் பசலிக்காகச்செலுத்தவேண்டிய குத்தகைத்தொகையை 1938-ம்ஸூ ஸெப்டெம்பர்-மீ 30உ யன்றாவது அதற்கு முன்பாவது செலுத்தியிருந்தாலன்றி மற்றப்படி, அவர் இந்தப் பிரிவின்படிக்கான அனுகூலத்தை அடைய பாத்தியதையுள்ளவராக மாட்டார்.

விவரணம்—மலையாளத்துப் பாயக்காரி பாத்தியதையைக் குறித்த 1929-ம்ஸூத்திய ஆக்டின்படி ஒழுங்கேற்படுத்தப்படும் விஷயங்களில், இந்த அத்தியாயத்தில் எந்தப் பசலி வருஷத்துக்காகிலும் சம்பந்தப்பட்ட யாதொரு உதகரிப்பானது, மலையாளத்துப் பாயக்காரி பாத்தியதையைக் குறித்த 1929-ம்ஸூத்திய ஆக்டில் அர்த்தம் சொல்லப்பட்டதாய், அந்தப் பசலி வருஷத்தின் பெரும்பாகம் அடங்கியுள்ள விவசாய வருஷத்துக்குச் சம்பந்தப்பட்ட உதகரிப்பாகக் கருதப்படும்.

உதாரணங்கள்:—(a) இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் காலத்தில் ஒரு ரயத்தாவது பாயக்காரியாவது குறித்த யாதொரு கைப்பற்று நிலத்துக்காக 1345-ம் பசலிக்கும் அதற்கு முந்திய பசலிகளுக்கும் உரிய குத்தகைத் தொகை விஷயமாய் 500 ரூபாயும், அந்தத் தேதியன்று அதே கைப்பற்று நிலத்துக்காக பசலி ஒன்றுக்கு 100 ரூபாய் வீதம் 1346-வது, 1347-வது பசலிகளுக்குரிய குத்தகைத் தொகையும் பாக்கியாக இருக்கிறது. 1938-ம்ஸூ ஸெப்டெம்பர்-மீ 30உக்குள் 1347-ம் பசலிக்குரிய குத்தகைத் தொகையை அவர் செலுத்துகிறார்; 1939-ம்ஸூ ஸெப்டெம்பர்-மீ 30உக்குள் 1346-ம் பசலிக்குரிய குத்தகைத் தொகையை அவர் செலுத்துகிறார். இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் காலத்தில் செலுத்தப்படாமலிருந்த 500 ரூபாயுள்ள குத்தகைத் தொகை பாக்கி கொடுத்துத் தீர்க்கப்பட்டிருப்பதாகக் கருதப்படும்.

(b) குறித்த யாதொரு கைப்பற்று நிலத்தின் விஷயமாய் 1345-ம் பசலிக்கும் அதற்கு முந்திய பசலிகளுக்கும் உரிய குத்தகைத் தொகை பாக்கிகளைக் குறிக்கும் 500 ரூபாயுள்ள தொகையும், அந்தக் கைப்பற்று நிலத்துக்காக 1346-வது, 1347-வது பசலிகளுக்குரிய குத்தகைத் தொகைகளும் இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் காலத்தில் செலுத்தப்படாமல் பாக்கியாயிருக்கின்றன; ஒவ்வொரு பசலிக்கும் உரிய குத்தகைத் தொகை 100 ரூபாய் ரயத்து அல்லது பாயக்காரி 1938-ம்ஸூ ஸெப்டம்பர்மீ 30உக்குள் 1347-ம் பசலிக்குரிய குத்தகைத் தொகையை நிலத்துக்குடையவருக்குச் செலுத்துகிறார்; ஆனால் 1346-ம் பசலிக்குரிய குத்தகைத் தொகையில் எந்தப்பாகத்தையாகிலும் 1939-ம்ஸூ ஸெப்டம்பர்மீ 30உக்குள் செலுத்தத் தவறுகிறார். 250 ரூபாய் மாத்திரமே, அதாவது, 1345-ம் பசலிக்கும் அதற்கு முந்திய பசலிகளுக்குமுரிய குத்தகைத் தொகையில் அரைப்பாகம் மாத்திரமே கொடுத்துத் தீர்க்கப்பட்டிருப்பதாகக் கருதப்படும்.

(c) அதே விஷயத்தில், ரயத்து அல்லது பாயக்காரி 1347-ம் பசலிக்குரிய குத்தகைத்தொகை முழுவதையும் 1938-ம்ஸூ ஸெப்டம்பர்மீ 30க்குள் நிலத்துக்குடையவருக்குச் செலுத்தவில்லை. 1345-ம் பசலிக்கும் அதற்கு முந்திய பசலிகளுக்குமுரிய பாக்கிகளில் எந்தப்பாகமும் கொடுத்துத் தீர்க்கப்பட்டதாகாது; இந்தப்பிரிவினாலுண்டாகும் அனுகூலங்களை ரயத்து இழந்து விடுகிறார்.

(d) அதே விஷயத்தில், ரயத்து அல்லது பாயக்காரி 1347-ம் பசலிக்குரிய குத்தகைத்தொகையை 1938-ம்ஸூ ஸெப்டம்பர்மீ 30உக்குள் நிலத்துக்குடையவருக்குச் செலுத்துகிறார்; ஆனால், 1346-ம் பசலிக்குரிய குத்தகைத்தொகையில் பாதியாகிய 50 ரூபாய் மாத்திரமே 1939-ம்ஸூ ஸெப்டம்பர்மீ 30உக்குள் செலுத்துகிறார். 1346, 1347 ஆகிய இவ்விரண்டு பசலிகளுக்குரிய குத்தகைத் தொகையாகிய 200 ரூபாயில் 150 ரூபாயை இந்தப்படி 1939-ம்ஸூ ஸெப்டம்பர்மீ 30உக்குள் அவர் செலுத்தியிருக்கிறார். 375 ரூபாய் அதாவது, 1345-ம் பசலிக்கும் அதற்கு முந்திய பசலிகளுக்குமுரிய குத்தகைத்தொகையில் முக்கால் பாகம் கொடுத்துத் தீர்க்கப்பட்டிருப்பதாகக் கருதப்படும்.

(2) 1345ம் பசலிக்காகச் சேரவேண்டிய குத்தகைத் தொகை பாக்கிகளை வசூலிப்பதற்கான நடவடிக்கைகள் சட்டசபையாரின் யாதொரு ஆக்டினாலாவது யாதொரு கோர்ட்டாரின் உத்தரவினாலாவது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தாலும் அல்லது அப்படிப்பட்ட நடவடிக்கைகள் தொடரப்பட்டிருந்தால் அந்தப்படி நிறுத்திவைக்கப்படக்கூடியவையாயிருந்தாலும், (1) உட்பிரிவில் கண்டதெதனாலும் ஷை குத்தகைத் தொகை பாக்கிகள் கொடுத்துத் தீர்க்கப்பட்டிருப்பதாய்ச் செய்யப்படுவதாகக் கருதப்படமாட்டாது. ஆனால், 1345-ம் பசலிக்குரிய குத்தகைத் தொகை பாக்கிகள் 1938-ம்ஸூ ஸெப்டம்பர்மீ 30உ வரையிலாவது, அந்தத்தேதிக்கு முன் 1347ம் பசலிக்குரிய குத்தகைத் தொகை செலுத்தப்படும் பட்சத்தில் 1939 ம்ஸூ ஸெப்டம்பர்மீ 30உ வரையிலாவது வசூலிக்கப்படத்தக்கதாகமாட்டா.

(3) எந்த ஒயந்தத்திலாவது பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னப்பட்டணம் 1908-ம்ஸூ 1த்து ஆக்ட் 64-வது பிரிவிலாவது இதற்கு விரோதமாய் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கிய பிறகு யாதொரு பாயக்காரியால் குத்தகைக்காகச் செலுத்தப்படும் எந்தத் தொகையாகிலும் முதலில் 1347-ம் பசலிக்காகக் அவர் செலுத்த வேண்டிய குத்தகைத் தொகைக்காகவும், அடுத்தபடியாக 1346-ம் பசலிக்காக அவர் செலுத்தவேண்டிய குத்தகைத் தொகைக்காகவும் செல்லு வைக்கப்படவேண்டுமேயொழிய, முந்திய பசலி எதற்காகவாவது செலுத்தவேண்டிய குத்தகைத் தொகைக்காகச் செல்லு வைக்கப்படக்கூடாது.

(தொடரும்).

# ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் அவர்களுக்கு ஓர் பகிரங்கக் கடிதம்.

*மாஜி காங்கிரஸ்வாதி ஜி. ஏ. வி. சாஸ்திரி.*

தங்களுடைய தியாகத்திற்கு தாங்கள் எதிர்பார்த்திராத அதிர்ஷ்ட பலனை பிரதம மந்திரி ஸ்தானம் தங்களுக்கு கிடைத்திருக்கையில் தங்களை பூர்வ பரிசயம் கொண்டு வரவேற்கவேண்டியதும் என்னுடைய கடமைதான். ஆனால் உங்களுடைய கூட்டத்தில் வந்து உங்களுடைய உபந்யாஸங்களை கேட்கும் தௌர்பாக்யம் எனக்கு இல்லை என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன். தாங்கள் ஒத்துழையாமைக் கொள்கையுடன் இருந்து ஸ்ரீ வில்லிபுத்தூரில் ராமனுதபுரம் அரசியல் மஹாநாட்டில் அக்ராஸனம் வகித்துவிட்டு மதுரை வந்து ஸ்ரீ A. வைத்தியனுதய்யர் வீட்டில் ஊழியர்கள்மீட்டிங்கில் சாரதாச் சட்டத்தை ஆதரித்தகாலத்தில் தங்களிடம் மதவிஷயத்தில் பொது ஸபையான காங்கிரஸ் ஸபை புகுவது உசிதமில்லையென எச்சரிக்கை செய்தவன் நான் ஒருவன் என்பதை உங்களுடைய ஞாபகத்திற்குக் கொண்டுவருகிறேன்.

ஆனால் நீங்களே ஒரு சமயம் ஒற்றுழையாமை காலத்தில் டில்லி அசெம்பிளியில் C. S. ரெங்கய்யர் பில்லை ஆதரிக்க ஒத்துழைத்தும் தோல்வியடைந்த விஷயம் உங்களுக்கு நன்றாய் தெரிந்திருக்கும். ஆனால் நீங்கள் ஒற்றுழையாமைக் கொள்கையைக் மாற்றிக்கொண்டு வேண்டாத சீர்திருத்தத்தை பரிபூர்ண ஒத்துழைப்பு, பக்தி ச்ரத்தையுடன் ஆட்சி நடத்திக்கொண்டு வருவதும், இனிமேல் வரப்போகும் பெடரேஷனுக்கு தோஷம்சொல்லிக்கொண்டு வருவதும் ஜனங்களை பூர்ண எதிர்ப்பிற்கு தயார் செய்வதுபோல் உங்கள் மந்திரி ஸபையின் செய்கையை விசேஷமாய் ஸ்தோத்திரம் செய்து ஜனங்களை மயக்கிக்கொண்டு வருவதை பார்த்து வருந்துகிறேன். உங்களுடைய மந்திரி ஆட்சிகாலத்தில் செய்திருக்கிற சௌகர்யங்களை ஆங்காங்கு தாங்களும் தங்கள் சகாமந்திரிகளும் வாசாமகோசரமாய் பிரசாரம் செய்துகொண்டு திக்விஜயம்செய்து கொண்டு வருகிறதைப்பார்த்து மிகவும் சந்தோஷிக்கிறேன். ஆனால் என்னுடைய உண்மையான அபிப்ராயங்களை தங்களுக்குத் தெரிவிக்கவேண்டியதும் அத்யாவச்யம் என்றெண்ணி உங்களுடைய ஞாபகத்திற்குக் கொண்டுவருகிறேன்.

உங்களுக்குமுன் அரசாட்சி நடத்தியவர்களை ஞாபகத்திற்குக் கொண்டுவருகிறேன். உங்களுக்குமுன் அரசாட்சி நடத்தியவர்களை நீங்கள் எவ்விதம்பொம்மைகளென்றும் பேசாமடந்தைகளென்றும், கைதூக்கும் பேர்வழிகளென்றும், மெஜாரிடி பலங்கொண்டு அக்ரமச் சட்டங்களை செய்வதாய்ச் சொன்னீர்களே, அதே முறைதான் தங்கள் ஆட்சி காலத்திலும் இருப்பதாக ஜனங்கள் எண்ணுகிறார்கள். அத்துடன்கூட தங்களுடைய ஆட்சிக்கு இன்னுமொரு விசேஷம்கூடச் சொல்லுகிறார்கள். அதாவது பரம தேசாபிமானியாயும் பரம த்யாகியுமாயும் மந்திரி ஸபைக்குச் சேர்த்துக்கொண்ட டாக்டர் சுப்பராயன் அவர்கள் த்யாகத்தை தெரிந்து சேர்த்துக்கொண்டதும், அத்துடன் அவர் தர்மபத்னியான ராதாபாய் சுப்பராயனை மதுரை ராமனுதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு பிரதிநிதியாக தேர்தல்செய்து சென்னை மாகாணத்தின் கௌரவத்தைக் காப்பாற்றிய பெருமையும், பிரசாரமந்திரியாக ஸ்ரீ. எஸ். ராமனுதனைச் சேர்த்துக்கொண்டதும் உங்களுடைய எதிரிகளுக்கு வாய்கூசாமல் பதில் சொல்வதற்கே. சேர்த்துக்கொண்ட உங்களுடைய யுக்தி புத்தியை பாராட்டாதவர்கள் இல்லை. ஆனால் உங்கள் கடன் மசோதாவால் ஜனங்களுடைய ஸந்தோஷமும் துக்கமும், அனுபவிப்பவர்களுக்குத்தான் தெரியுமேயல்லாது உங்களுக்கோ உங்கள் சட்டத்திற்கோ தெரியக்கூடியதல்ல. தாங்கள் இரண்டு ஜில்லாக்களில் பதுவிலக்குச் சட்டம் செய்திருப்பதற்கு கல்வி இலாகாவிற்கு பணம் இல்லாமல் ஜவுளிக்கடைகளுக்குவரி போட்டும் வட ஆற்காடு டிஸ்டிரிக்ட் போர்டில் 83 பள்ளிகள் கதவடைத்து 211, உபாத்தியாயர்களை வீட்டுற்கனுப்பியது உங்களுடைய ஆட்சியின் விசேடிங்களில் ஒன்று. ஜயில்களில் இருக்கும் கைதிகளுக்குக்கருணை காட்டுவது, மோர் கொடுப்பதாயும் சௌகர்யம் செய்வதாய் பிரசாரம் செய்திலிருந்து Bench Courtல் சிக்ஷிக்கப்பட்டவர்கள்கூட கோர்ட்டு தீர்ப்புகளின் நியாயத்தையும் கவனித்து ஜயிலுக்குப் போவதற்கே விசேஷப் பிரியம் ஏற்படுத்தி இருக்கிறீர்கள். 14–6–38ல் மெட்ராஸ் மெயில் பேப்பர் தலையங்கத்தில் எழுதியிருக்கும் யோசனையை உங்களுடைய ஆலயப்ரவேச மசோதா நிறைவேறுவதற்கு முன் பரீக்ஷைசெய்து அதில் உங்களுக்கு வெற்றி ஏற்பட்டால் அவ்விதம் செய்வதில் ஆக்ஷேபணை இல்லை. அதன்னியில் தங்கள் வசம் ஆட்சி கிடைத்திருப்பதைக் கொண்டும் மெஜாரிட்டி பலங்கொண்டும் அயல்நாட்டுக் கொந்தளிப்பால் மே. த. வைஸ்ராய் கவர்னர்கள் உங்களுடைய அநியாயச் சட்டங்களுக்கு ஆதரவு கொடுக்கிறார்களென்று இன்னும் எவ்வளவோ கோடான கோடி ஜனங்கள் மதவிஸ்வாஸத்துடன் இருப்பதைக் கெடுக்காதீர்கள். உங்களுடைய எலக்ஷன் பிரசார காலத்தில் இந்தவிதமாய் உள்ள மசோதாக்கள் கொண்டுவருவதாய்ச் சொல்லாததுடன் அனாவச்யமாய் மத பூர்வாசார விஷயங்களில் பிரவேசிப்பதில்லையென்றும் பிரசாரம்செய்து வெற்றியடைந்ததை நினைவிற்குக் கொண்டுவருகிறேன். இன்னமும் நீங்கள் உண்மையான அஹிம்ஸாவாதியும் சத்யாக்ரஹியுமானால் உங்களுடைய ஆட்சியை இந்த தேசத்தில் எல்லாரும் விரும்புகிறார்களென்று நீங்கள் பிரசாரம் செய்துவருவது உண்மையானால் தற்காலம் நீங்கள் சட்டம் செய்ய விரும்பும் சட்டங்களை இந்த தேசத்திலுள்ள ஜனங்கள் விரும்புவது உண்மையானால் நீங்கள் வெற்றியடைவீர்கள் என்ற நிச்சயம் உண்டானால் இத்தருணமே உங்களுடைய சட்டசபையைக் கலைத்து இந்த தேசத்திற்கு தற்காலத்திற்கு அவச்யமான சட்டங்களான தீண்டாமை ஒழிப்பு, ஆலயப்ரவேசம், கடன் நிவாரணச் சட்டம், கட்டாய ஹிந்தி, இவைகளை செய்யப்போவதாய் பிரசாரம் செய்து வெற்றியடைவதுதான் அழகு. அதன்னியில் நீங்கள் இந்த தேசத்தின் கோடானுகோடி தார்மிக ஆஸ்திகர்களுடைய மனதைப் புண்படுத்தும்படியான அந்நியச் சட்டங்களைச் செய்வீர்களேயானால் இந்த ஆட்சியைகெட்டவாட்சியென்று சொல்லக்கூடுமே தவிர வேறில்லை. தேசோத்தாரணத்திற்காக ஏற்பட்ட காங்கிரஸ் மஹாஸபை தற்காலம் உங்களுடைய கையில் அகப்பட்டு அதன் முயற்சிகள் வீணாக்கப்பட்டதென்றே சொல்லவேண்டும். ஆகையால் உங்களுடைய அநியாய தயாகார்யம் பரம ஆபத்தாய் முடியுமென்பதை உங்களுக்குத் தெரிவிக்க அவச்யம் கடமைப்பட்ட முறையில் நான்ஒரு காலத்தில் இந்த காங்கிரஸ் மஹாஸபையில் ஈடுபட்ட நிலைமையில் இப்பொழுது அதில் தண்டவமாடும் ஜாதித்வேஷம் மதத்வேஷம் இதுகளைக் கொண்டு உங்களுடைய ச்ரேயஸை விரும்பியும் என் மனதில் தோன்றிய யதார்த்த வசனங்களை ஒளி மறைவின்றி உங்களுக்குத் தெரிவித்ததைப்பற்றி நீங்கள் சந்தோஷிப்பீர்களென்ற நோக்கங்கொண்டே எழுதலானேன்.

வந்தேமாதரம்.

## வைதிக தர்ம சங்கம்,

ஸ்ரீ ஆசார்யபூஜா மகோத்ஸவம்.

ஸ்வஸ்தி ஸ்ரீபகுதான்ய ஆனிமீ 24உ வெள்ளிக்கிழமை, (8-7-38) ஆஷாட சுத்த சயன ஏகாதசியன்று ராத்திரி, வைதீக தர்ம ஸங்கத்து ஸ்ரீ பாதகைங்கர்ய பாராளல்பிரதி வருஷத்திலும் நடத்தப்பட்டுவரும் ஸ்ரீ ஆசார்யர் பூஜை கிரமப்படி ஸ்ரீ வேங்கடராம சாஸ்திரி என்கிற அந்தரங்க கைங்கர்ய பாரைக் கொண்டு செங்கல்பட்டு ஜில்லா, பனையூர் கிராமத்திற்கடுத்த தபோவனத்தில் நடத்தப்படும். அது ஸமயம் ஆஸ்திகர்கள் எல்லோரும் வந்திருந்து தர்சனம் செய்து ஸ்ரீ ஆசார்யாளது பரிபூர்ண அனுக்ரஹத்தை அடையும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

நமது ஸங்கத்தை அபிமானித்து ஸ்ரீபாத ராஜாது ஸ்தானம் வஹித்து அனுக்ரஹித்து வரும் பரமஹம்ஸ பிக்ஷுக்களான ஸ்ரீ சிவப்ரகாச ஆனந்தகிரி ஸ்வாமிகள் அவர்கள் இந்த வருஷம் சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தை மேலே கண்ட பனையூர் தபோவனத்தில் செய்து கொள்ளுகிறார்கள்.

பனையூர் கிராமம் செங்கல்பட்டு காஞ்சீபுரம் ரெயில் மார்க்கத்தில் 'வில்லியம்பாக்கம் ஸ்டேஷனுக்கு $1\frac{1}{2}$-மைல் தூரத்தில் பலாற்றின் தென்கரையில் இருக்கிறது.

R. ராதாகிருஷ்ணய்யர், B. A. B. L.


## அல்லயன்ஸ் கம்பெனி பிரசுரங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | திருக்குறள் நீதிக்கதைகள். | 0 | 10 | 0 |
| B. | தசகுமார சரித்ரம். | 0 | 6 | 0 |
| 1.. | திருப்புகழ் ரத்னமாலை. | 0 | 3 | 0 |
| 1 | கந்தாலங்காரம். | 0 | 2 | 0 |
| 1( | திருஞான சம்பந்தர். | 0 | 2 | 6 |
| 17 | விசாரசன்மர். | 0 | 3 | 0 |
| 18. | மூர்த்தி நாயனார். | 0 | 3 | 0 |
| 19. | திருநாவுக்கரசர். | 0 | 2 | 0 |
| 20. | நகன. | 0 | 4 | 0 |
| 21. | திருவகுப்பு. | 0 | 4 | 0 |
| 22. | பாராயண திருப்புகழ் | 0 | 2 | 0 |
| 23. | வேல், மயில் விருத்தம். | 0 | 1 | 0 |
| 24. | திருப்புகழ் விருத்தியுரை. | 8 | 0 | 0 |

மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—
ஸ்ரீ ஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட்,
டவுன்ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

Books by Dewan Bahadur K. S. Ramasami Sastrigal, B.A., B.L.

| | | Rs. | A. | P. |
|---|---|---|---|---|
| 1. | Kalidasa's Heroes | 0 | 6 | 0 |
| 2. | The scence of the soul | 1 | 8 | 0 |
| 3. | Manu, the friend of Man | 0 | 8 | 3 |
| 4. | SandilyaBakthi Sutras | 0 | 4 | 0 |
| 5. | The Gospel of Gita | 0 | 3 | 0 |
| 6. | The future of Brahmin | 0 | 2 | 0 |
| 7. | The Gita Ideal of Devotion | 0 | 4 | 0 |
| 8. | நாரத பக்தி சூத்ரம் | 0 | 2 | 0 |

Copies can be had of:—
The Sri Janardana Printing Works, Ltd., Town High School Road,




# வெளியூர்ச் செய்திகள்.

## தேவகோட்டை ஸ்ரீ வைஷ்ணவ ஸங்கம்.

அரிய பிரஸங்கம்.

13–6–38உ மேற்கண்ட ஸங்க நிர்வாஹிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். எல்லோரும் ஏகோபித்து உலகிற்கு நன்மைபுரியக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

16—6—38உ ஷை சங்கத்தின் சார்பில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அநேகர் வந்திருந்தனர். மதுரைத் தமிழ்ச்சங்க உபதலைவரும், பிரபல அட்வொகேட்டும், யம். யல் ஏ. யுமான ஸ்ரீ. டி. ஸி. ஸ்ரீநிவாஸய்யங்கார் தலைமைவகித்தார். தலைவர் முன்னுரையில் ஸங்கம் ஏற்பட்டதைக் குறித்து சிலாகித்தும், ஸ்ரீ வைஷ்ணவ லக்ஷணத்தை நன்கு விளக்கியும், வர்ணாச்ரமதர்ம நெறிக்குட்பட்டு யாவரும் நடந்து வந்தால் நாடெங்கும் க்ஷேமமுண்டாகுமென்றும் தெரிவித்தார்.

சென்னை அட்வொகேட் ஸ்ரீ ஆர். கேசவய்யங்கார் 'ஸ்ரீ நம்மாழ்வார் வைபவம்' எனும் விஷயம்பற்றி அதி அற்புதமாக உபந்யஸித்தார். ஸ்ரீ நம்மாழ்வார் ஸ்ரீ சடாரி என்றும், அஃது பகவான் திருவடி நிலை என்றும், சேதனன் திருமுடிநிலை என்றும், எம்பெருமான் ஸ்ரீ பாதுகமும் சேதனன் திருமுடியும் ஒன்றும் தத்துவமே உலகிற்கு பரம லாபத்தைத்தருவதென்றும், பரமாத்மாவும் ஜீவாத்மாவும் ஒருங்கும் நிலையே ஆழ்வார் என்றும் அன்று போல் இன்றும் ஆழ்வார் அருளிச்செயல் ரூபமாக நம்மிடையே தெய்வமாயிருந்து வருகிறாரென்றும், சரணாகதியே மோக்ஷோபாயமென்றும், யாசகம் சாமாந்ய யாசகம் என்றும் மோக்ஷ யாசகமென இருவகையாகுமென்றும் சரணாகதி தர்மம் என்பது இருப்பவன் இல்லாதானுக்கு வழங்குவதையே முக்ய நோக்கங் கொண்டதென்றும் கூறினார்.

தலைவர் முடிவுரையில் உபந்யாஸத்தின் ஸாராம்ஸத்தை கம்பராமாயணப் பாக்கள் மூலம் விளக்கி 'இன்சொல்விளைநிலமாயீதலே வித்தாக, வன்சொற்களை கட்டி வாய்மை எருவட்டி, அன்பு நீர் பாய்ச்சி அறக்கதிரீனவோர், பைங்கூழ் சிறுகாலைச்செய்,' என்ற பாட்டின் சங்கதியை நன்கு விளக்கி அனைவரையும் மகிழ்வித்தனர்.

ஒரு விசேஷ நிருபர்.

## திண்டுக்கல்லில் ஸ்ரீ கூர்மஜயந்தி கொண்டாட்டம்.

திண்டுக்கல் வேதபாடசாலை மாணவர்களால் ஜூன் மாதம் 24ம் தேதி வெள்ளிக்கிழமை மாலையில் ஷை ஜயந்தி வெகு சிறப்பாக நடந்தேறியது. பூஜை நைவேத்யங்களுக்குப் பிறகு ப்ரும்ஹஸ்ரீ கே. தியாகராஜ தீக்ஷிதர் பி. ஏ. எல். டி, அவர்கள் கூர்மாவதாரத்தின் காரணங்களைப் பற்றியும் ரஹஸ்யங்களைப்பற்றியும் விரிவாக எடுத்துரைத்து, இவ்விதமாய் பகவானின் ஒவ்வொரு ஜயந்தியைக்கொண்டாடுவதின் அவசியத்தைப்பற்றியும் அழகாகவும் உருக்கமாகவும் உபந்யஸித்தார்கள். மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் ப்ரசாதம் வழங்கிய பின்னர் கூட்டம் கலைந்தது.

ஆர், பாலசுப்ரமண்யம், கார்யதர்சி.

## திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம். திருவள்ளுவநாயனார் திருநாட், கொண்டாட்டம்.

26—6—38உ ஞாயிற்றுக்கிழமை மாலை 4-15 முதல் 7-15 வரை அடியிற்கண்ட விபரப்படி திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபில மடத்தில் உபந்யாஸங்கள் நடைபெற்றன.

முதலில் ஸ்ரீ கஸ்தூரி "அமைச்சு" என்ற விஷயம்பற்றி மிக விரிவாக எடுத்துரைத்தார். திருக்குறள் எக்காலத்துக்கு முரியநூலென்றும், அது எல்லா விஷயங்களையும் அடக்கிக்கொண்டிருக்கிறதென்றும், 'அமைச்சு' என்ற அதிகாரத்தில் எங்ஙனம். வள்ளுவர் விஷயங்கள் குறித்துள்ளார் என்பதை கிரமப்படிவிளக்கியும், கம்பர் இதனை விரித்திருக்கும் தன்மையையும் நன்கு உபந்யஸித்தார். பின்னர் 'நீத்தார் பெருமை' என்ற விஷயம்பற்றி வித்வான் ராமாநுஜாசார் கூறுகையில் வள்ளுவர் அபிப்பிராயத்தையும் அவ்வதிகார முழுமையும் எம் பெருமானுருக்கு எவ்விதம் பொருந்தியிருக்கிறதென்றும் கூறினார்.

கல்லூரி மாணவரான கஸ்தூரியின் தொண்டினைச் சிறப்பித்து காரியதரிசியும் சங்கத்தலைவரும் கூறி ஆசீர்வதிக்க வந்தனோபசாரம் வழங்க ஸபை இரவு 7-20க்கு நிறைவெய்தியது.

ப. ரா. திருமலைஐயங்கார்,

## விளங்குடி. (கும்பகோணந் தாலூகா)

கும்பாபிஷேகம்:-தேவீ தபோவனமென்றும், லீலாவிலாஸவிபினமென்றும் ப்ரஸித்தி பெற்ற அம்மங்குடி என்ற தூர்கா க்ஷேத்ரத்திற்கு மிக ஸமீபத்தில் கபித்தவனமென்றும் விளங்குடி கிராமத்தில் அசேஷ மஹாஜனங்களின் முயற்சியால் அநவரத ஸாந்நித்யமாய் விளங்கிக் கொண்டிருக்கிற ஸ்ரீ அலர்மேல் மங்கைத்தாயார் ஸமேத ஸ்ரீவெங்கடாசலபதியின் ஆலயம் ஜீர்ணோத்தாரணம் செய்யப்பெற்று நாளது பஹுதான்ய-ஞு ஆனி-மீ 2உ தொடங்கப்பெற்று 5உ மிதுன லக்னத்தில் மஹா(கும்பாபிஷேக) ஸம்ப்ரோக்ஷணம் மிகவும் ச்ரத்தா பக்தி புரஸ்ஸரமாக நன்கு நடைபெற்றது.

மத்யானம் யாஜுஷ, ஸாமவேத பாராயணத்தை பூர்த்தியாகச் செய்து முடித்த வைதீக ப்ராம்மணர்களுக்கு ஸம்பாவனைகள் நடந்ததும், ஷையூர் ஸ்ரீமான் பாலராம தீக்ஷிதரவர்கள் செய்த உபசரணை ப்ரஸங்கத்தில் இந்த க்ராமத்தின் நிலைமையையும் லோகத்தின் தத்கால ஸ்திதியையும் எடுத்து நன்கு விளக்கி இந்த கும்பாபிஷேகத்தை நடத்திவைப்பதற்காக விஜயஞ்செய்திருந்த நாச்சியார்கோவில் ஆகமசாஸ்த்ர பண்டிதர் ப்ரஹ்மஸ்ரீ உ. ப. வே. ஸ்ரீக்ருஷ்ண பட்டாசார் ஸ்வாமி அவர்களது வருகையை சிலாகித்து அவர்களை உபந்யாஸஞ்செய்யும்படி ஸபையோர் சார்பாகக் கேட்டுக்கொண்டதற்கிணங்கி, ஸ்ரீமான் பட்டாசார்ய ஸ்வாமிகள் "தர்மம்" என்பதை விஷயமாகக் கொண்டு ஸநாதன தர்மத்தின் முற்கால தற்கால நிலைமைகளை மிகவும் நன்றாக பண்டித பாமரரஞ்சிதமாய் உபந்யஸித்து ஸபையோர்களை ஆனந்தமுறச்செய்தது மிகவும் கொண்டாடத் தக்கதே.

சிறிய க்ராமமாயிருப்பினும் ஆகமரீதியாக கும்பாபிஷேக கார்யங்களும் மிகவும் நன்றாக வேத பாராயணங்களும் நடைபெற்று பூர்த்தியானதைப் பலரும் புகழ்ந்து கூறினார்கள்.

ராத்திரி ஸ்வாமி புறப்பாடும் மிக விதரணையாய் நடந்தேறிற்று.

ஓர் பக்தன்,

## கும்பகோணம் ராஜா தர்மவேத ஸம்ஸ்கிருத பாடசாலையினபிவிருத்தி

சென்ற ஏப்ரலில் கவர்ன்மெண்டாரால் வழக்கம்போல் நடத்தப்பட்ட ஸம்ஸ்கிருத சிரோமணி எண்ட்ரன்ஸ் பரீக்ஷையில் இவ்வருஷம் ஷை பாடசாலையிலிருந்து ஐந்து வித்யார்த்திகளை மேலதிகாரிகள் பரீக்ஷைக்கு அனுப்பியிருந்தார்கள். அப்பரீக்ஷையில் 5 பேர்களும் தேறியிருப்பதாக நேற்றய கெஸட்டில் பிரசுரமாயிருக்கிறது. அந்த 5 மாணாக்கர்களுக்குள் எஸ். ராமச்சந்திரன் என்ற மாணாக்கன் குறிப்பிடத்தகுந்தது. மேற்கண்ட மாணாக்கன் அதே பாடசாலையில் கிரமாந்தம் யஜுர் வேதத்தில் பூர்த்தி செய்து அதோடுகூட ஸம்ஸ்கிருத வகுப்பிலும் சேர்ந்து படித்து வந்து ஷை கவர்மெண்டு பரீக்ஷையில் எழுதிய எல்லா ஸப்ஜெட்களிலும் தேறியிருப்பது குறிப்பிடத்தகுந்தது. ஷை வித்யார்த்திமேல் படிப்பின் பொருட்டு அண்ணாமலை யூனிவர்ஸிடி, சிதம்பரத்தில் வியாகரண சிரோமணியில் சேரப்போவதாகத் தெரியவருகிறது. இம்மாதிரி புத்திசாலித்தனமான வித்யார்த்திகளை மேலதிகாரிகள் சேர்த்தால் ஷை பாடசாலையானது நல்ல அபிவிருத்திக்குவருமென்பதில் சிறிதும் ஸந்தேஹமில்லை. தவிர மேற்கண்ட வித்யார்த்தி எஸ். ராமச்சந்திரனிடம் மேலதிகாரிகளான வித்யா விசாரணைக்கர்த்தரும் தேவஸ்தானக் கமிட்டியாரும் விசேஷ சலுகை காட்டவேண்டியது மிக அவசியமாகுமென்று சோலையப்ப முதலியார் தெருவிலிருக்கும் கே. ராமச்சந்திரன் எழுதுகிறார்.

## திருவாங்கூரில் அடக்கு முறை.

பிரஜா உரிமை கக்ஷியாரின் முறையீடு.

திருவாங்கூரிலுள்ள பிரஜா உரிமைக் கக்ஷியின் கார்யதர்சி திவானுக்கு ஓர் கடிதம் எழுதியிருக்கிறார். அதில் அத்தேசத்தில் நடக்கும் அடக்கு முறைகளை வரிசையாக வர்ணித்திருக்கிறார். இந்த அடக்கு முறையால் பிரஜைகளின் ஸாதாரண உரிமைகளுக்கும், ஸொத்துக்களுக்கும், உயிருக்கும்கூட ஆபத்து வந்திருப்பதாக அவர் குறிப்பிடுகிறார். பொது கூட்டங்கள் தடுக்கப்பட்டிருக்கின்றன. ஜவாப்தாரி ஆக்ஷி என்ற பேச்சுக்கூடப் பேசமுடியாது. அச்சுச்சட்ட அமுல் கடுமையாகி பத்திரிகைகள் அடக்கப்படுகின்றன. ராஜத்வேஷத்திற்காகப் பலர் தண்டிக்கப்பட்டனர். ஸம்ஸ்தானத்திற்கு வெளியிலிருந்து பல பத்திரிகைகள் வரக்கூடாதென்று தடுக்கப்பட்டிருக்கிறது. அநேக தலைவர்கள் பஹிரங்கமாக அடிக்கப்பட்டிருக்கிறார்கள். கௌரவம் வாய்ந்த காங்கிரஸ் ஸ்திரீ யொருவளின் படுக்கை அறை இரவில் பரிசோதிக்கப்பட்டது. இவ்வாறு பல அக்கிரமங்களை அவர் எடுத்துக் காட்டி திவானுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

## ஸ்திரீ—புருஷமாணவர் அடிதடி. லாகூர் காலேஜில் ஸம்பவம்.

லாகூரிலுள்ள தயாளஸிங் கலாசாலையில் படித்துவரும் ஒரு ஸ்திரீ மாணவர் மீது, ஒரு புருஷ மாணவன் சாக்குக் கட்டியை வீசியெறிந்தான். இதற்குப்பதில் அந்த மாணவி அந்தப் புருஷனை அடித்தாள். கலவரம் முற்றிற்று. மாணவனுக்கு அபராதம் விதிக்கப்பட்டது. இதன்மேல் பல மாணவர்கள் வேலை நிறுத்தம்செய்து காலேஜ்கட்டடத்தை த்வம்ஸம் செய்தார்கள். ஜன்னல்களும், கண்ணாடிகளும், கதவுகளும் உடைக்கப்பட்டன. என்னே நாகரீகம்?

215238

363

# வெளியூர் செய்தி.

## ஏத்தாப்பூர்.

### ஸ்ரீமத் பாகவத வைபவம்.

1938ஞு மே மாதம் 28ம் தேதிமுதல் ஸ்ரீமத் பாகவதத்தை இன்றுவரையில் சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்களால் ஏத்தாப்பூர் அக்ரஹார மஹாஜனங்களின் வேண்டுகோளின்பேரில் பக்திரஸம் ததும்பும்படி உபந்நியஸிக்கப்பட்டது. ஸர்வதோமுக யாகசாலை நான்கு கொட்டகைகளிலும் ஏராளமான பக்தர்களான பிராம்மண வைசிய சூத்திரர்களும் ஸ்திரீகளும் சிரவணம் செய்து வருகின்றனர்.

ஷை பக்தர்கள் நான்கு திக்குகளிலும் வர்ணாசிரம ஆசாரத்திற்கு உட்பட்டு தனித்தனியாக அமர்ந்து ஆசையோடு சிரவணம் செய்வது மிகவும் போற்றத்தக்கது.

அவரவர் ஜாதி தர்மம் தான் அவரவர்களுக்கு உயர்ந்தது என்று தோன்றும்படி தீக்ஷிதர் அவர்கள் நடுவில் எடுத்து உறைப்பதை போற்றாதார் ஒருவரும் இல்லை.

இந்த பாகவத உபந்நியாஸத்திற்காக சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ ஸர்வதோமுகாந்தயாஜீ நாராயண அக்னிசித் வாஜபேயி அவர்களை இந்த ஊர் மஹாஜனங்களும் தீக்ஷிதர் அவர்களும் அக்னிஹோத்திரத்தோடு இங்கு வசிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டதின்பேரில் அக்கினி ஹோத்ரம் செய்துகொண்டு ஸ்ரீமத் பாகவதம் சிரவணம் செய்துகொண்டு ஆனந்தமாக வசிக்கின்றனர். அக்ரூராகமனம் முதலிய புண்ணிய சரித்திரங்களைக்கேட்ட ஷை வாஜபேயி அவர்கள் கதை முடிவில் அந்த அந்த சாரங்களை மிகவும் அழகிய சொற்களால் சம்தோஷித்து வந்தது ரொம்பவும் போற்றத்தக்கது. ஷை பாகவத உபந்நியாஸத்திற்கு அபிநவம் முதலிய பக்கத்து கிராமங்களிலிருந்து வெகு ஆஸ்திகர்கள் சிரவணத்திற்கு திரள் திரளாக வருகின்றனர்.

சிசுக்கள் முதற்கொண்டு இரவில் தூங்காமல் ஸ்ரீமத் பாகவதத்திற்கு வந்து கேட்பது மிகவும் ஆச்சரியப்படத்தக்கது.

இந்த உபந்நியாஸத்தை சிரவணம் செய்வதனாலேயே ஸனாதனதர்ம பிரசார பலன் ஏற்பட்டு தங்கள் தங்கள் அனுஷ்டானத்தை சிரத்தையுடன் செய்து வருகின்றனர்.

இப்படி புராணவாசிகை ஸனாதனதர்மத்தை போதிப்பதுதான் ஒவ்வொருவரையும் அனுஷ்டிக்கும்படிச் செய்கிறது.

ருக்மணி கல்யாண தினத்தில் ஒவ்வொரு கிருஹத்திலும் ஸ்திரீ புமான்கள் தங்கள் தங்கள் வீட்டுக் கல்யாணமாக நினைத்துக்கொண்டு கல்யாண மண்டபத்தையும் ஸ்ரீ ருக்மணி காந்தனை கோபாலனையும் அலங்கரித்தது மனதைக் கவரக்கூடியதாகயிருந்தது.

20—6—38 சோம வாரம் முதல் ஈஸ்வரானுக்கிரகத்தை முன்னிட்டு ஸ்ரீமத் ராமாயண உபந்நியாஸமும் நடக்கப்போகிறது.

தற்போது ஏத்தாப்பூர் கிராமத்தை வசிக்கின்ற ஒவ்வொரு ஆஸ்திகரும் கலிவாரத தேசமென்று கொண்டாடுகின்றனர்.

ஸ்ரீமத் பாகவத உபந்நியாஸ மத்தியில் கோயமுத்தூர் ஜில்லாவிலிருந்து பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்களை ஸனாதனதர்ம உபந்நியாஸத்திற்கு வரவேண்டுமென்று அழைத்தனுப்பினதின்பேரில் பவானி, கூகலூர், கோபிசெட்டிபாளையம், செரிஞ்சிப்பேட்டை நைஷ்டிக பிரம்மசாரி அவர்களின் மடம் முதலிய இடங்களில் ரொம்பவும் நன்றாக உபந்நியாஸங்கள் நடந்தன. ஒவ்வொரு இடங்களிலும் ஏராளமான ஆஸ்திகர்கள் வந்து சிரவணம் செய்து ஆனந்தம் அடைந்தார்கள். கோயமுத்தூர் ஜில்லா வாசிகள் சில மாதங்கள் தீக்ஷிதர் அவர்களை அங்கு தங்கி ஸ்ரீ மஹாபாரதம், ஸ்ரீமத் பாகவதம் ஸ்ரீமத் ராமாயணம் முதலிய உபந்நியாஸங்களை செய்யவேண்டுமென்று பிரார்த்தித்திருக்கின்றார்கள். ஈஸ்வரானுக்ரஹத்தால் சீக்கிரத்தில் நடைபெறுமென்று தெரிகிறது.

ஆதிநாராயணன்.

## ஆத்தன்குடி.

### ஸநாதன தர்ம மகா சபை.

9-6-38 ஆர்யதர்ம பத்திரிகையில் இராமநாதபுரம் ஜில்லா ஸநாதன தர்ம மஹாநாடு ஆத்தங்குடியில் நடைபெறும் விஷயமாய் "ஒரு நிருபர்" வெளியிட்டபடி நடைபெறுவதற்கில்லை. மஹாநாடு நடத்தும் விஷயம் ஒரு திட்டமான முடிவிற்கு வந்தபின் பத்திரிகையில் வெளியிட்டிருப்பின் பொருத்தமாக இருந்திருக்கும்.

ஆத்தங்குடி ஸநாதன தர்ம மஹா சபையின் இவ் வருஷ விழா நடைபெறவேண்டிய சந்தர்ப்பத்தில் பிரயாசை எடுத்து ஜில்லா மஹா நாடாக நடத்த தேவகோட்டை, காரைக்குடியிலுள்ள சில முக்கியஸ்தர்களைக் கலந்து ஒரு மாதகாலமாய் பெருமுயற்சி எடுத்தும் எதிர்பார்த்த பொருள் உதவி (அதிகமல்ல) இது சமயம் கிட்டுவதற்கில்லை. ஆயினும் சோர்வடைவதற்கில்லை. ஆயினும் அபிமானிகள் சிலர் வெளியிட்ட கருத்துகளினின்றும் காலதாமதத்திற்குப் பிறகாவது ஜில்லா மஹாநாடு நடைபெறலாமென்ற எண்ணமும் இருந்துவருகிறது.

எங்கள் சபையின் ஆண்டுவிழாவை நடத்த இனியும் தாமதம் செய்வதற்கில்லை. ஜூலை மாதமுதல் வாரத்தில் நடைபெறும்.

நி. ப. ஜெகதீசய்யர் காரியதரிசி.

## அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்.

### கார்யக் கமிட்டிக் கூட்டம்.

பம்பாய் பட்டினத்தில் நாளது ஜூன் மீ 12வ அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் கார்யக் கூட்டம் ஸ்ரீ ஸேட்தேவிதாஸ்ஜீ மாதவஜீ தாக்கர்ஸே அவர்கள் அக்கிராஸனத்தின்கீழ் நடைபெற்றது. அதில் மதுரை ராவ்சாஹிப் என். நடேசய்யர் அவர்கள் முதலிய 15 பேர்கள் ஆஜராகியிருந்தார்கள். அதில் சங்கத்தின் கொள்கைகளை இந்த தேசம் எங்கும் பிரசார வேலைசெய்ய ஒரு கமிட்டி நியமிக்கிறதென்றும், ஒவ்வொரு மாகாணத்திற்கும் தர்ம வீரதளம் ஒன்று தர்ம ஸம்ரக்ஷணைக்காக ஏற்பாடு செய்கிறதென்றும், சென்னையில் சென்ற டிஸம்பர்-மீ த்தில் நடந்த மகாநாட்டிற்கும், வித்வத் பரிஷத்திற்கும் சில்வான மொத்தம் ரூ. 14,000த்தில் ஏற்கனவே ஷை சங்கத்தில் கொடுத்துதவிய 5400% போக இன்னும் ரூ. 1942—0—6 கொடுக்கிறதென்றும், பம்பாயில் இயற்றியிருக்கும் தீண்டாதர் ஆலயப்ரவேச சட்டமானது சட்டசபை அதிகாரத்துக்கு மீறினதென்றும், செல்லத்தக்கதில்லையென்றும் ஒரு தர்னே போருகிறதென்றும், தர்மங்களை ரக்ஷிப்பதே இப்போது ஏற்படுத்தப்போகிற ஸம்ஸ்கிருத யுனிவர்ஸிடியில் முக்கிய கொள்கையாக இருக்கவேண்டுமென்றும், சென்னை வித்வத் பரிஷத் நடவடிக்கைகளை ஸம்ஸ்கிருதத்தில் அச்சிடுகிறதென்றும், இந்த ஸங்கத்தின் நோக்கங்களை தெளிவுற அறிவிப்பதின் பொருட்டு கீழ்க்கண்டவர்களைக்கொண்டு ஒரு கமிட்டியை ஏற்படுத்தி கவர்ன்மெண்டுக்கு ஒரு ஸ்கீம் தயாரிக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. கமிட்டியின் அங்கத்தினர்கள் மூறையே. 1. ஸ்ரீமான் பண்டிட் ராமபதி மிஸ்ரா, 2. ஸ்ரீமான் R S. ஸேத் பப்ஸந்த்லதீ, 3. ஸ்ரீமான் (பிரின்ஸ்பால்) J. P. தர்கால், 4. மனுபாய் பாண்டியா. அகில இந்திய வர்ணாசிரம சுராஜ்ய சங்கமானது, காங்கிரஸ்காரர்கள் ஹிந்து சமூகம் சார்பாக முஸ்லிம் லீக் கக்ஷியுடன் யாதொரு உடன்படிக்கையும் செய்துகொள்ள உரிமையுள்ளவர்களல்லவென்றும், அவ்வாறு ஏதாவது உடன்படிக்கையை முடிக்கத் துணிந்தால் அது ஹிந்து ஸமூகத்தையே கட்டுப்படுத்தத் தக்கதில்லை என்பதையும் உறுதி கூறுகிறது.

இந்த சங்கத்தின் மெம்பர்கள் காங்கிரஸில் சேர்ந்து அவர்களுடன் ஒத்துழைப்பதென்பதானது அனுபவத்திற்கும், பழக்கத்திற்கும், கொள்கைக்கும் மாறுபட்டதானதும், இயலாததுமான செய்கையாகும்.

## உபாகர்மாவும் காயத்திரீ ஜபமும்.

நாளது வருஷம் ஆடிமீ 27வ சிராவண பௌர்ணமி நாழிகை 14-42. மறுநாள் பிரதமை நாழிகை 18—2— இங்கு காயத்ரீ ஜபகால நிர்ணய வசனம் — ஸந்திஸ் ஸங்கவத:, என்பது — மத்யந்தின மென்பதும் ஆவர்த்தனமென்பதும் அஹஸ்ஸின் மத்யகாலத்தைக்குறிக்கும். அன்று அஹஸ் நாழிகை 31-8 - அஹஸ்ஸின் மத்தியகால நாழிகை 15-34 - பௌர்ணமி நாழிகை 14-42- க்கும் மறுநாள் பிரதமை நாழிகை 18-2 க்கும் உள்ள அந்தாளம் - 3-20 இதை சரிபாதியாகப்பிரித்து வந்தது 1-40 - இதை பௌர்ணமியின் 14-42-உடன் சேர்க்க 16 22-ஆகிறது. இப்படி விருத்திஹ்ராஸம் பண்ணிபார்க்கும் போது அஹர்மத்யமான 15-34க்குப் பின்புதான் ஸந்திகாலமேற்படுகிறது. ஆகையால் 28வயன்று தான் காயத்ரீஜபம் செய்ய வேண்டும். இதுவே இஷ்டி நியாயத்துக்கும் ஒத்திருக்கிறது. இதையநுசரித்தே வெகு வருஷங்களாக வழங்கி வருகிற கஞ்சனூர்பஞ்சாங்கத்திலும், கருங்குளம் கிருஷ்ண சாஸ்திரிகள் ராமநாதபுரம், ராமஸ்வாஸ்வாமி அய்யங்கார் கொண்டய்யங்கார் கிருஷ்ணய்யங்கார், நவநீதகிருஷ்ணய்யங்கார் ஷை வாக்கிய பஞ்சாங்கங்களிலும் 28வ காயத்ரீ ஜபம் என்று போடப்பட்டிருக்கிறது அறியவும். நாகப்பட்டணம் பிரும்மஸ்ரீ ஸேதுராம தீக்ஷிதரவர்கள் வசனத்தில் கண்ட "மத்யந்தின,, என்பதை பஞ்சதாவிபாகபக்ஷத்திலமைந்த மத்யான்ஹ காலபரமாக தாத்பர்யம் செய்து 18-நாழிகைக்கு முன் ஸந்தி ஏற்பட்டால்,, என்ற அபிப்பிராயத்துடன் 27வயே, 'உபாகர்மா காயத்ரீ ஜபம். இரண்டையும்செய்யவேணுமென்றும் ஸத்ய: சப்த ஸ்வாரஸ்யத்தால் உபாகர்மம் செய்த பிற்பாடு காயத்ரீ ஜபம் செய்ய வேணுமென்றும் (வைகாசிமீ 13வ) பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறார். கவனிக்கவும். ஸத்ய:, என்பது அன்றயதினம் செய்ய வேணுமென்பதை மட்டிலும் குறிக்குமேயல்லாது உபாகர்மோத்தரகாலத்தைக் குறிக்கு மென்பதற்கு நியாயமில்லை. திருக்கணித பஞ்சாங்கப்படி இரண்டையும் ஒரே தினத்தில் அனுஷ்டிப்பதானாலும் பிராயச்சித்த ரூபமான காயத்ரீ ஜபத்தை அதற்குறிய ஸங்கவ காலத்தில் செய்து பிறகு நித்யமான உபாகர்மாவை அதற்குறிய மாத்யான்ஹிக காலத்தில் செய்வேணும். இதுவே வெகு காலமாக வழங்கி வந்த சிஷ்டாசாரம். சிவம்.

சங்கா சாஸ்திரி, சோழவந்தான்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.